
தமிழரசு
அக் 1 1972
40 காசு



செழுமையான விளைச்சலுக்கோர் சீரான
சாதனம் எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்



செழுமையான விளைச்சலைப்பெற மிக அவசிய மானது சீரான நீர்ப்பாசனம். பம்ப் செட்களின் மூலம் வயல்களுக்குத் தடையின்றி நீர் பாய்ச்சவும், அவைகளை நல்ல முறையில் இயங்கச் செய்யவும் எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸடார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் சிறந்தவை. இவை எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

விவசாயிகளின் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டுப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

- பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்து கொடுக்கின்றனர்.
- சிறிய ஊர்களில்கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

L&T Switchgear

ஸ்விட்ச்கியர் டிவிஷன்,
லார்ஸன் அண்டு டுப்ரோ லிமிடெட்
P.O. Box 8922, பம்பாய் 72 ☐ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 ☐ Post Bag 5247, சென்னை 2.




R.R.NO: 861/55/72

# தமிழரசு




மலர்-3 இதழ்-7

1-10-1972


காந்தியடிகள் துறவு பூண வேண்டும் என்பதற்காகத் துறவு பூண்டவரல்லர். ஈரப் படுக்கையில் தானாக விரும்பி ஒரு தாய் படுக்கமாட்டாள். ஆனால் உலர்ந்த படுக்கையைத் தன் குழந்தைக்கு அளிப்பதற்காக ஈரப் படுக்கையை அவள் மனமகிழ்வுடன் ஏற்றுக் கொள்வாள் – இந்த அடிப்படையில் மக்கள் பணிபுரிவதற்காகவே காந்தியடிகள் துறவு பூண்டார்.

– சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ்.




# குளோவியம்

காதலர் பிரிந்துவிட்டால் காதலியின் மேனியிலே பசலை நிறம் பாய்கிறதாம். பசப்புறு பருவரல் என்னும் அதிகாரத்தில் வள்ளுவனார் அந்தப் பசலை நிறத்திற்கு அடிமையான பாவையரின் வேதனைகளை மிக அருமையாகச் சித்திரித்திருக்கிறார்.

மஞ்சத்திலே கொஞ்சுமொழிகள் உதிரும்; ஆடல் - பாடல் - ஊடல் - கூடல் - எல்லாமே ஒன்றையொன்று போட்டியிடும். காலையிலே எழுந்திருந்து கண்ணாடி பார்க்கும் தலைவி, கண்ணாடியிலிருப்பதும் தன் உருவம்தான் என்பதை மறந்துவிட்டுத், திடீரென்று, தன் கன்னத்தை மூடிக்கொள்வாள். பிறகுதான் அவளுக்கு நினைவுவரும்; எதிரேயிருப்பது கண்ணாடி-அதிலே தெரிவது தன் உருவம் என்று! யாரும் தன் கன்னத்தைப் பார்த்துவிடவில்லையென்ற திருப்தி ஏற்படும் அவளுக்கு. ஒவ்வொருநாளும் காலையிலே இப்படி ஒரு நிகழ்ச்சியைச் சமாளித்துத் தீரவேண்டியிருக்கிறது என்று தெரிந்து கூட, இரவு நேரத்திலே அவள் அதைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொள்வதுமில்லை; முன்னெச்சரிக்கையாக இருப்பதுமில்லை. அதனால் கன்னத்திலே பசலை நிறம் பாய்ந்த ஒரு வட்டம் உதயமாகிவிடுகிறது. யாராவது பார்த்துவிடுவார்களே என்ற வெட்கம் இருந்தாலும்கூட, அந்தக் கன்னத்தை அவள் தனக்குள்ளாக ரசிக்கத் தவறுவதில்லை. மெல்லிய விரல்களால் தடவிப் பார்த்து - ஏதோ ஒரு நடந்து போன நிகழ்ச்சியை எண்ணி அவளாகவே சிரித்துக் கொள்கிறாள். யாராவது வந்தால், கன்னத்தைத் தடவுவது போல் மறைத்துக் கொள்கிறாள். வந்தவர் போனதும், கண்ணாடியில் முத்திரை அவள் கண்ணுக்கு விருந்தூட்டிக், கருத்துக்கும் இனிமை சேர்க்கிறது.

# முதல்வர் கலைஞர்

இவளைப் போலவே, ஓர் எழிலரசியைப் பேச வைக்கிறார் திருக்குறளார். காதலன் பிரிந்துவிட்டான் காதலியிடம் விடை பெற்று! நிலவு போனதும் வானத்திற்கு இருள் நிறம் வருகிறதே அதுபோலவே இந்த நேரிழையாளுக்கும் பசலை நிறம் மேனியில் பரவி விடுகிறதாம். இந்தப் பசலை தன் உடலில் ஏறிப் பரவுவதை அவள் காண்கிறாள். காதலரின் பிரிவால் அல்லவா இந்நிறம் ஏற்பட்டது என வருந்துகிறாள். அதேசமயம் அந்த வேதனையிலும் அவளுக்கோர் பெருமிதம் ஏற்படுகிறது.

கன்னத்தில் அடையாளம் பெற்ற காரிகை, வெட்கத்தால் வேதனையுற்றாலும், அது தன் காதலன் தந்த அடையாளம் என எண்ணி மகிழ்கிறாளே; அதுபோலவே இவளும் பிரிவுத்துயரால் என் உடலில் பரவும் இந்த நிறம், என் காதலரால் ஏற்பட்டது என எண்ணுவது பெருமைக்குரியது என்கிறாள்.

அந்தக் குறள் இது—

அவர்தந்தார் என்னும்
தகையால் இவர்தந்துஎன்
மேனிமேல் ஊரும் பசப்பு

# நாட்டுப் பற்று

வீரபாண் டிய மன்னன் விடுதலைப் போரதனில்
வித்தாகத் தூக்கில் மாண்டான்,
தீரன் சிதம்பரம் தேசத்தை மீட்கவே
சிறைசென்று செக்கி ழுத்தான்,
ஏறுபோலக் குமரனும் தாய்நாட்டின் கொடிதனை
இன்னுயிரை விலைகொ டுத்தான்,
பேரொன்றும் தெரியாத எண்ணிலா வீரர்கள்
பெரும்போரில் வாழ்வி ழந்தார்.

ஆருயிர் தந்தேனும் தாய்நாடு காத்ததை
ஆராய நான்பு குந்தேன்,
அத்தனை பந்தமும் பாசமும் ஏனென்ற
காரணம் கண்டு ணர்ந்தேன்.
பாரதம் என்பது மண்ணல்ல ; நதியல்ல ;
பயிர்செய்யும் கழனி யல்ல ;
பாட்டனின் பாட்டனின் பாட்டனின் உடலெலாம்
பாதுகாக் கின்ற பேழை!

வீரர்கள் ஞானியர் பாவலர் பலகோடி
விளையாடி நின்ற திண்ணை
விளையாடி வீழ்ந்தவர் மண்ணாகி எருவாகி
விதையாகி விட்ட பண்ணை !
மாறியே மண்ணான முன்னோர்கள் இங்கெங்கும்
மணியாக விளைந்து நின்றார் !
மணிகொண்டு உணவுண்டு வாழ்வோரும் பின்னாளில்
மண்ணாகி வீழு கின்றார்.

பூக்கின்ற மலரெலாம் நம்முடை முன்னோரின்
புன்னகை இதழ்க ளன்றோ ?
பார்க்கின்ற தென்னையின் பாளைச் சிரிப்பெலாம்
பாட்டனின் பற்க ளன்றோ ?
நூற்கின்ற வெண்பஞ்சு நூலெலாம் பாட்டியின்
நுரைவண்ணக் கூந்த லன்றோ ?
ஆர்க்கின்ற கடலோர மணல்மேடை நம்முடை
அன்னையின் மடியே யன்றோ ?

அன்னையின் மீதிலே அந்நியன் கால்படல்
அவமான மாகு மன்றோ ?
ஆயிரம் தலைமுறைப் புதையலிப் பூமியை
அர்ப்பணம் செய்வ துண்டோ ?
கண்ணிலும் மேலாகத் தாய்நாட்டைக் காப்பதன்
காரணம் இதைய றிந்தேன் !
கண்மூடித் தனமான மண்ணாசை யல்லெனக்
கருதியே மதிதெ ளிந்தேன் !

கண்ணகி வள்ளுவன் கம்பனின் உடலெலாம்
கலந்ததே நமது தேசம் !
கற்புடன் வீரமும் கலைகளின் ஞானமும்
கருவுடன் வந்த வாசம் !
அன்னையின் மேனியாய் அமைவுற்ற தாய்நாட்டின்
ஆட்சியில் உரிமை சேர்ப்போம் !
அந்நியர் ஆதிக்கம் அணுவேனும் அணுகாமல்
ஆண்மையாய் நின்று காப்போம் !



கவிஞர்
குமா.பாலசுப்பிரமணியம்



# கடமையைச் செய்யும் காவல் துறை

நண்பர்கள் என்றால் யார் ? வினா எளிது ; விடை தருவது எளிதல்ல ; ஆனால் வள்ளுவர் இதனைத் தெளிவாக்கியுள்ளார். ''ஆடை நெகிழ்ந்தபோது எப்படிக் கை விரைந்து சென்று அவ்வாடையைச் சரி செய்கிறதோ அதே போலத் துன்பம் என்றதும் விரைந்து வந்து துன்பத்தைத் துடைப்பவன்தான் நண்பன்'' என்கிறார் திருவள்ளுவர். ஆம். அது எத்தனை உண்மை!

இக்கட்டான எந்தச் சூழ்நிலையையும் சமாளித்து, அதனால் தமக்கு வரும் துன்பங்களையும் ஏற்றுக் கொண்டு, துயருக்கு ஆளானவர்களைக் காப்பதே தம் கடமையெனப் பணியாற்றும் காவலர்கள், வள்ளுவர் சொன்னது போலத் துன்பத்தைத் துடைக்கும் நண்பர்களே அல்லவா?

நல்ல சமுதாயமென்னும் வயலில், களை போன்ற சமூக விரோதிகளையெல்லாம் கிள்ளியெடுத்தெறிந்து, அமைதி உண்டாக்கும் காவலர்களைச் சமூகத்தின் உயிர்நாடி என்று கூடச் சொல்லலாம்.

காவலர்களே இல்லாத ஒரு சமூகம், காவலர்களே இல்லாத ஒரு நாடு எப்படி இருக்கும் என்று சிறிது கற்பனை செய்து பார்த்தால், அப்பப்பா ! அது கடும் புலி வாழும் காட்டை விட மிகப் பயங்கரமானதாக இருக்குமே!

காவலர்களே இல்லையென்றால் — எத்தனை பொருள்களுக்குச் சேதம் ஏற்படும்? எத்தனை எத்தனை உயிர்களுக்குத் தீங்கு உண்டாகும்? எத்தனை எத்தனை போக்குவரத்து விபத்துக்கள் நேர்ந்து கொண்டிருக்கும்?

கைப்பொருள் இழந்தவன் துடிதுடிக்கவும், கைப் பொருள் பறித்தவன் துள்ளி மகிழவும் வேண்டிய சூழ்நிலைகள் உருவாகாதா? வாழ வேண்டியவன் உயிர் துறப்பதும், உயிரைக் குடித்தவன் உல்லாசமாக வாழ்வதும் போன்ற நிலைமைகள் வளராதா? வண்டியோடு வண்டி மோதுவதால் ஏற்படும் பொருட் சேதங்களும், உயிர்ச் சேதங்களும் அதிகரித்துக் கொண்டே போகாதா?

ஆம். இவற்றுக்கெல்லாம் ஒரு முடிவு காணவே காவல்

[illegible] செய்திய காவல்துறை டி. எஸ். பி. சி. சாமுவேல் அவர்களுக்காக, அவரது மனைவியாரிடம் பதக்கம் தருகிறார் முதல்வர்.



துறை பணியாற்றிக் கொண்டிருக்கிறது; இவை போன்ற அசம்பாவிதங்கள் நிகழா வண்ணம் தடுக்கவே காவல் துறை தன் கடமையைச் செவ்வனே செய்து வருகிறது.

இவை மட்டுமா? கெட்ட வழிகளில் மனத்தைச் செலுத்தத் தூண்டும் தீய பத்திரிகைகளைத் தடுக்கவும், பொய்ப் பிரச்சாரங்களைப் புகுத்தி மக்களைக் குழப்பத்துக்குள்ளாக்குவோரை ஒடுக்கவும், வன்முறைச் செயல்களில் ஈடுபடும் தீயவர்களை அடக்கவும் காவல் துறைக்கு மிகுந்த பொறுப்பு இருக்கிறது.

இத்தகு வலிமை வாய்ந்த காவல் துறையின் காவலர்க்குத் தமிழ்நாடு அரசு ஊக்கமும் ஆக்கமும் அளித்து வருகிறது. தமிழகத்தில் சிறப்பாகப் பணியாற்றிய காவலர்களுக்கும், தீயணைக்கும் படையினருக்கும் ஆண்டுதோறும் மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளின்போது முதல்வர் பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாண்டு இருபதைந்து பேர் இந்தப் பதக்கங்களையும் பரிசுத் தொகைகளையும் பெற்றுள்ளனர். இதற்கான விழா செப்டம்பர் 13-ஆம் நாள் காஞ்சி மாநகரில் மிகச் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. சீரிய தொண்டுக்கும், தீரச் செயலுக்கும் பரிசுகள் பெற்றவர் இவர்கள்தான்:

தலைமைக் காவல் அதிகாரி, முதல்வரை வரவேற்கிறார்.



1. எஸ். இராமரத்தினம் (சி. ஐ. டி., துணை சூபரின்டெண்ட்)—ரூ. 3,000.

2. ஜோசப் பீட்டர் (டி.எஸ்.பி., தர்மபுரி காவல் துறை),—ரூ. 3,000.

3. வி. எஸ். நடராசன் (கோவை டி. எஸ். பி.)—ரூ. 3,000.

4. சி. சாமுவேல் (மறைவெய்தியவர்) கலால்துறை டி.எஸ்.பி.—ரூ. 3,000.

5. எம். இலட்சுமணன் (போலீஸ் தனிப்பிரிவு டி.எஸ்.பி.)—ரூ. 3,000.

6. எஸ். அமிர்தலிங்கம் (தீயணைப்புப்படை டிவிஷனல் அதிகாரி)—ரூ. 3,000.

7. சி. ஆர். நடராசன் (கோவை போலீஸ் இன்ஸ்பெக்டர்)—ரூ. 2,000.

8. கே. எத்திராசலு (சென்னை உணவுப் பிரிவு துப்பறியும் இன்ஸ்பெக்டர்)—ரூ. 2,000.

9. ஆர். கிருட்டிணமூர்த்தி (சென்னை வேப்பேரி இன்ஸ்பெக்டர்)—ரூ. 2,000,

10. எல். ஏ. கருப்பையா (சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர்)—ரூ. 2,000.

11. டி. ஆர். சீனுவாசன் (ஆயுதப் போலீஸ் இன்ஸ்பெக்டர்)—ரூ. 2,000.

12. கே. அருணாசலம் (ஊழல் ஒழிப்புப்பிரிவு இன்ஸ்பெக்டர்)—ரூ. 2,000.

13. கே. என். விட்டல் கதிரி (ஊழல் ஒழிப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர்)—ரூ. 2,000.

14. டி. டி. வி. இராமன் (ஊழல் ஒழிப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர்)—ரூ. 2,000.

15. ஆர். மாணிக்கம் (தீயணைப்புப் படை நிலைய அதிகாரி)—ரூ. 2,000.

16. ஜி. இராசமாணிக்கம் (சப்-இன்ஸ்பெக்டர், வட ஆர்க்காடு)—ரூ. 2,000.

17. எஸ். எம். அஜீசுதீன் (ஓய்வு பெற்ற தலைமைக் காவலர்)—ரூ. 1,000.

18. வி. சண்முகம் (தலைமைக் காவலர், திருச்சி இரயில்வே)—ரூ. 1,000.

19. டி. சொக்கலிங்கம் (தலைமைக் காவலர், லஞ்ச ஊழல் ஒழிப்புத் துறை)—ரூ. 1,000.

20. எஸ். சூலுடையார் (தலைமைக் காவலர், லஞ்ச ஊழல் ஒழிப்புத் துறை)—ரூ. 1,000.

21. என். பேச்சிமுத்துப் பிள்ளை (ஓய்வுபெற்ற சி.ஐ.டி.) ரூ. 1,000.

22. ஐ. பிச்சை (காவலர், இராமநாதபுரம்)—ரூ. 1,000.

தீரச் செயல் புரிந்ததற்காகக் கீழ்க்காணும் காவல் துறை அதிகாரிகள் பரிசுகள் பெற்றனர்.

1. கே. கோபாலகிருட்டிணன் (நகர போலீஸ் உதவி ஆணையர்)—ரூ. 3,000.

2. ஜி. வி. ஜான்சுந்தர்சிங் (சென்னைப் போலீஸ் இன்ஸ்பெக்டர்)—ரூ. 3,000.

3. எஸ்.சி.சி. கெண்ட் (சென்னைப் போலீஸ் இன்ஸ்பெக்டர்)—ரூ. 3,000.

காவலர்க்கு இத்துறையில் மேலும் ஊக்கம் அளிக்கும் வண்ணம் அமைந்திட்ட இந்த விழா அண்ணா காவல் அரங்கில் நடந்தது. விழா நடைபெறும் அரங்கத்திற்கு முதல்வர் கலைஞர் அவர்கள், காவல் துறையினர் அணிவகுக்கத் திறந்த காரில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.

சாலையின் இருபுறமும் மக்கள் திரளாக நின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்து கலைஞரை வரவேற்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

ஒவ்வொரு காவலரும் பெருமிதமடைந்த இந்த விழாவுக்கு, மாநிலக் காவல் துறைத் தலைமையாளர் திரு எப். வி. அருள் தலைமைதாங்கி உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

" கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுடனும் கடமையாற்றக் கூடியவர்கள் காவலர்கள்; மக்களுக்குப் பணி புரியக் காத்திருப்பவர்கள் காவலர்கள். இந்தியாவிலேயே தலைசிறந்தவர்கள் என்கிற பெரும் புகழும் பெற்றவர்கள் நமது காவலர்கள்.

" தமிழகக் காவலர்களைத் தட்டிக் கொடுத்தும், சீரிய பல திட்டங்களை நிறைவேற்றியும் நாடும் ஏடும் புகழ நல்லாட்சி நடத்துபவர் நமது முதல்வர்.

" ஏழை விவசாயிகளுக்கு நிலப்பட்டா வழங்குவது போல ஓய்வு பெற்ற காவலர்களுக்கும் நிலம் தரவேண்டும். காவலர் பக்கமும் முதல்வர் கண்ணோட்டம் செலுத்த வேண்டும்.



ரகசிய போலீஸ் இன்ஸ்பெக்டர் திரு கருப்பையாவுக்கு முதல்வர் பதக்கம் அணிவிக்கிறார்

" வார விடுப்பில் வேலை செய்யும் காவலர்க்கு ஒரு ரூபாய் ஊதியம் தரப்படுகிறது. இதை இரண்டு ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்".

ஏற்றமும் தோற்றமும் மிக்க இந்தப் பெருவிழாவில் பரிசுகளை வழங்கி முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்:

" இன்று காவல் துறை நண்பர்களின் வரலாற்றில் ஒரு புதிய நாள்! பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளில் காவல் துறை நண்பர்கள் புரிந்த அரும் செயல்களுக்கான சிறப்புப் பதக்கங்களையும், வீரப் பதக்கங்களையும் பெற வேண்டுமென்ற ஒரு கருத்தை அண்ணா அவர்களுக்குப் பிறகு—அவர்கள் விட்டுச் சென்ற பொறுப்பை ஏற்றுக் கொண்ட நான் வெளியிட்டு, அந்தக் கருத்து உடனடியாகச் செயல்படுத்தப்பட்டு நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

" 25 காவல் துறை நண்பர்கள் இன்று விருதுகளைப் பெற்றிருக்கிறார்கள். தமிழகத்துக் காவல் துறை தலையாய பெருமை வாய்ந்த துறை என்பது இந்திய நாட்டில் அனைவரும் ஒப்புக்கொள்வார்கள்.

" இந்தியாவிலேயே தமிழ்நாட்டுக் காவல் துறையினர் ஆற்றியிருக்கிற பணிகள் மெச்சத் தகுந்தவை—போற்றத் தகுந்தவை—புகழத் தகுந்தவை.

" தலைமை அதிகாரி உருக்கமாக, 'நாங்களும் மனிதர்கள் தான், உங்கள் நண்பர்கள்தான்' என்று கூறியதைப்போல்—காவல் துறையில் இருப்பவர்கள் புதிதாகச் சட்டம், ஒழுங்கு, அமைதி இவைகளை நிலைநாட்டத் தருவிக்கப்பட்டவர்களல்ல.

" நம்மில் ஒரு சாரார்—சமுதாய நலன்களைக் காப்பாற்ற, சட்டம் ஒழுங்கு அமைதி கெடாமல் பாதுகாப்பதற்காக இந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்ற நினைவோடு நாட்டு மக்கள் காவல் துறையில் இருப்பவர்களுக்குத் தங்கள் ஒத்துழைப்பினைத் தந்தாக வேண்டும்.



"பொழுதெல்லாம் கடமையாற்றி, அல்லும் பகலும் மிகக் கடுமையான சோதனைகளுக் கிடையே தங்கள் வாழ்க்கையை ஒப்படைத்துப் பணியாற்றி வருகின்ற காவல்துறை நண்பர்களுக்கு மேலும் உற்சாகத்தைத் தர வேண்டுமென்பதற்காகவும், மேலும் அவர்கள் ஊக்கத்தோடு தங்கள் பணியை ஆற்ற வேண்டுமென்பதற்காகவும் இந்தப் பதக்கங்களைப் பரிசளிக்கின்ற விழாவினை நான் தேர்ந்தெடுத்தேன்.

" விழா நடத்துகின்ற நாளாக நான் தேர்ந்தெடுத்த நாள் எது என்பதும் உங்களுக்குத் தெரியும். கடந்த மூன்றாண்டுகளாகத் தமிழகத்தில் வெவ்வேறு நகரங்களில் செப்டம்பர் 15-ஆம் நாளான அண்ணா பிறந்த நாளில் இந்த விழா நடைபெற்றிருக்கின்றது.

" இந்த ஆண்டு இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே காஞ்சிபுரத்தில் இந்த விழா நடைபெறுவதற்குக் காரணம் உண்டு. தலைமை அதிகாரி ஒரு முக்கியமான மாநாட்டையொட்டி வெளிநாட்டிற்குச் செல்கிற காரணத்தால் இது இரண்டு நாள் முன்னதாக நடைபெறுகிறது.

" எல்லா மாவட்டங்களையும் விடச் செங்கற்பட்டு மாவட்டத்தில் எதுவுமே கொஞ்சம் முந்தி நடைபெறும் என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டு என்பதைச் செங்கற்பட்டு மாவட்ட மக்களுக்கெல்லாம் அண்ணாவின் பிரதிநிதியாக நின்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

" பரிசு, பதக்கங்கள் வழங்குவது அவைகளைப் பெற்றவர்களை ஊக்கப்படுத்துவதற்காக மாத்திரமல்ல, பெற வேண்டியவர்கள் இதுபோன்ற நற்பெயர் எடுக்க வேண்டும்; அருஞ் செயல்கள் புரிய வேண்டும் என்ற ஆர்வத்தைப் பெறவும் இந்த நிகழ்ச்சிகள் உதவுகின்றன.

" மத்தியிலே கூடத் தலைசிறந்த காவல்துறை அதிகாரிகளுக்குப் பதக்கங்கள், விருதுகள் வழங்கப்படுகின்றனவென்றும் நான் பெருமையோடு சொல்லிக் கொள்வேன், தமிழ் நாட்டில் நடைபெறுகிற இந்த விழா ஒன்றில் தான் பதக்கங்கள் பரிசளிப்பது என்று மாத்திரமல்லாமல், அவர்களுக்கு 3,000 ரூபாய், 2,000 ரூபாய் என்ற அளவிற்குப் பணமுடிப்பும் தரப்படுகிறது.

" தலைமை அதிகாரி இரண்டொரு கோரிக்கைகளையும் வைக்கத் தவறவில்லை. நிலங்களைப் பட்டா செய்து காவலர்களுக்குத் தரப்பட வேண்டுமென்பது ஒரு கோரிக்கை. நான் உடனடியாக அதை இங்கேயே பரிசீலித்து முடிவெடுக்க இயலாது என்றாலும், அது பரிசீலிக்கப்படும்.

" காவல்துறையினருக்கு வாரம் ஒருமுறை கட்டாயம் விடுப்பு உண்டு. அந்த நாளில் ஏதோவொரு முக்கியமான காரியத்திற்காக—அவசரத் தேவைக்காக அவர்கள் அந்த விடுப்பிலிருந்து விடுபட்டுப் பணியாற்றுவார்களானால் அவர்களுக்கு அந்த ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் தரப்படுகிறது என்று சொன்னார். அதைக் கேட்டு எனக்கே பரிதாபமாக இருக்கிறது. அதுவும் 20 ஆண்டுக்காலமாக இருந்து வருகிறது என்று சொன்னார். அதை எங்கே அதிகமாகக் கேட்பார்களோ என்று கருதினேன். என்னை உணர்ந்து—நிதி நிலைமையை உணர்ந்து ஒரு ரூபாயை இரண்டு ரூபாயாக ஆக்கித் தாருங்கள் என்று கேட்டார்கள். நான் இப்போதே அந்த ஒரு ரூபாய் இரண்டு ரூபாயாக நிச்சயமாக ஆக்கப்படும் 'என்று உறுதியை அளிக்கிறேன்.

பரிசும் பதக்கமும் பெற்றவர்கள் மேலும் உற்சாகத்தோடு தங்கள் பணியை நாட்டிற்கு அளிக்க வேண்டும்; பரிசுகளைப் பெற வேண்டியவர்கள் அவைகளைப் பெறும் வகையில் தங்கள் பணியை' ஆற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்".

—முதல்வரின் இந்தக் கருத்துக்கள் காவலர் முன்னேற்றத்துக்குப் பெரிதும் உதவிடும் என்பது உறுதி.

நாட்டுப் பாதுகாப்பில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, அல்லும் பகலும் அயராது பணியாற்றி வரும் தமிழகக் காவல்துறை, உலக அரங்கிலே ஓர் உன்னதமான இடத்தினை விரைவில் எய்தும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!

—பி.வி.ஜி.



# புரட்சி விழா புனித விழா

எங்கும் மகிழ்ச்சி! உவகைப் பெருக்கு!

நெடுநாளைய ஆசை நிறைவேறியதால்!

காலங்காலமாகக் கண்டு வந்த கனவு நனவாகியதால்!

உழைத்து உழைத்து ஓடாய் உருக்குலைந்தவர்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட திருப்பத்தால்! அவர்கள் எண்ணம் ஈடேறியதால்!

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயத் தொழிலாளர் குடும்பங்களில் மகிழ்ச்சி! தமிழக அரசு அவர்களுடைய ஆசைகளை நிறைவேற்றிவிட்டது.

தாங்கள் குடியிருக்கும் மனைகளைத் தங்களுக்குச் சொந்தமாக்கித்தர வேண்டும் என்பதுதான் அவர்களுடைய நெடுநாள் கோரிக்கை, அது நிறைவேறி, அண்ணா பிறழ்ந்தநாளை ஒட்டி 14—9—1972 தஞ்சை மாவட்ட விவசாயிகள் 1,24,351 பேருக்குக் கும்பகோணத்தில் குடிமனைப் பட்டா வழங்கப்பட்டது.

அங்குதான் ஒரே மகிழ்ச்சி! உவகை!

* * *

குடந்தைத் திருநகரமே விழாக் கோலம் பூண்டிருந்தது. கோட்டை கொத்தளங்கள் போன்று ஒளி விளக்குகளால் அலங்காரம்! கலைமணம் கமழும் எழிற் கோபுரங்களைக் கிற்றலே அமைப்பதில் தஞ்சை மாவட்டத்துக்காரர்கள் தனிச் சிறப்புடையவர்கள் அல்லவா அவர்கள் கை வண்ணம் அனைத்தையும் தாங்கி நின்ற கோபுரங்கள் வளைவுகள் தான் எத்தனை! எத்தனை!

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர் பெருமக்கள் பன்னெடுங் காலமாகத் தாங்கள் குடியிருக்கும் மனைகளைத் தங்களுக்கு உரிமையாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தனர். நூற்றாண்டுக் காலமாகத் தீர்க்கப்படாமலிருந்த இந்தப் பிரச்சினையால் நெஞ்சத்தில்படிந்திருந்த வேதனைகள் அன்றோடு மறைந்ததால்தான் அந்த ஏழைப் பாட்டாளிமக்களிடம் அத்தகைய மகிழ்ச்சி வெள்ளம்!

அந்த மகிழ்ச்சியை உருவாக்கியது நமது தமிழக அரசு.

* * *

தமிழ்நாடு குடியிருப்பு (உடைமையை உரிமையாக்கும்) சட்டம் 1971 என்ற சட்டத்தை 19—6—1971 அன்று தமிழ் நாடு அரசு நிறைவேற்றியது.

இச்சட்டம் 15—1—1972 அன்று செயல்படுத்தப்பட்டது. இச்சட்டத்தின்படி 19—6—1971 அன்று ஒரு விவசாயியோ, விவசாயத் தொழிலாளியோ குத்தகைதாரர் என்ற முறையிலோ, உரிமம் பெற்றவர் என்ற நிலையிலோ நிலவுடைமையாளருக்குச் சொந்தமானஎந்த ஓர் இடத்திலும் தான் உபயோகித்துவரும் மனைக்கட்டும் அதன் மேல் உள்ள கட்டடமும் 15—1—1972 முதல் அவரவர் உடைமையாகக் கருதப்படும்.

இச்சட்டம் நிறைவேறுவதற்கு முன்னரே அரசு நிலங்களை வீட்டு மனைகளுக்காகப் பட்டா வாக்கிக் கொடுக்கும் தீவிரத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

1960-ஆம் ஆண்டுமுதல் 1969-ஆம் ஆண்டு வரை வீட்டுமனை 3273 பேருக்கு வழங்கப்பட்டது.

1969–70-ஆம் ஆண்டில் மட்டும் 11,236 பேருக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டது.

1970–71-ல் மட்டும் 14,125 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. 1971–72-ல் வீட்டு மனைப்பட்டா 1,685 பேருக்கு வழங்கப்பட்டது.

சட்டம் நிறைவேற்றுவதற்கு முன்னர் அளிக்கப்பட்ட வீட்டு மனைப்பட்டாக்களைத் தொடர்ந்து இந்த ஆண்டிலும் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. நிலக்கிழார்கள், தங்கள் பட்டா நிலங்களில் குடியிருந்து வரும் விவசாயிகளின் நலனுக்காக அந்த நிலங்களை இலவசமாக அளித்தனர். அந்தக் குடியிருப்பு மனைகளைத் தஞ்சை மாவட்டம் திருவையாற்றில் 27—2—1972 அன்று நடைபெற்ற விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் 6,764 பேருக்கு வழங்கினார்கள்.

15—6—1972 அன்று திருத்துறைப் பூண்டியில் நடைபெற்ற குடியிருப்பு மனை வழங்கும் விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் 26,150 பேருக்குக் குடியிருப்பு மனைப் பட்டாக்களை வழங்கினார்கள்.

அண்ணா பிறந்த நாளை ஒட்டி 14—9—1972 அன்று குடந்தையில் 1,24,351 பேருக்குக் குடியிருப்பு மனைகளை முதல்வர் கலைஞர் வழங்கினார்.

* * *

ஒரு இலட்சத்துக்கு மேற்பட்டவர்களுக்கு வீட்டுமனை வழங்கக் குடந்தை நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில்தான் மகிழ்ச்சி வெள்ளம் பாய்ந்தோடியது.

வீட்டுமனைப் பட்டா வழங்கும் விழாவிற்கு வருகை தந்தவர்

1–10–8

களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு கே. ஏ. நம்பியார் வரவேற்றார். விழாவுக்கு வருவாய்த் துறை அமைச்சர் மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள் தலைமை ஏற்றார்கள். குடந்தைத் தொகுதிச் சட்ட மன்ற உறுப்பினர் திரு என்.காசிராமன், குடந்தை நகராட்சி மன்றத் தலைவர் திரு பாலகுருமூர்த்தி, ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு பெர்னுட்சா, குடிசை மாற்று வாரியத் தலைவர் திரு இராம அரங்கண்ணல், எம். எல்.ஏ., உணவு அமைச்சர் மாண்புமிகு மன்னை ப.நாராயணசாமி அவர்கள், வேளாண்மை அமைச்சர் மாண்புமிகு அன்பில் தர்மலிங்கம் அவர்கள் ஆகியோர் உரையாற்றிய பின் முதல்வர் அவர்கள் நிலப்பட்டாக்களை வழங்கினார்கள்.

* * *

தஞ்சை மாவட்டத்தில் வீட்டு மனைப் பட்டாக்களைப் பெற்ற 1,57,265 பேர்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் 1,00,346 பேர். பிற்பட்ட வகுப்பினர் 47,443 பேர் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

தஞ்சை மாவட்டத்தில் இப்பொழுது வீட்டுமனைப் பட்டாக்களைப் பெற்றுள்ள விவசாயத் தொழிலாளர்களைத் தவிர, தகராறு இல்லாத புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கும் 13,298 பேர்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்படும்.

தமிழ்நாடு குடியிருப்பு (உடைமை உரிமையாக்கும்) சட்டத்தின்படி வீட்டுமனை பெறும் விவசாயத் தொழிலாளியிடமிருந்து அந்த மனைக்கு உரிய தொகையைப் பல தவணைகளில் பெற வழி வகுக்கப்பட்டிருந்தது. ஆனல் இந்த விழாவில் பேசிய முதல்வர் அவர்கள் விவசாயிகளிடமிருந்து வீட்டுமனைப் பட்டாவுக்காக எந்தத் தொகையும் வசூலிக்கப்பட மாட்டாது என்றும் தஞ்சாவூர் மாவட்டம் போன்று இந்த ஆண்டிலிருந்து எல்லா மாவட்டங்களிலும் வீட்டு மனைப் பட்டா வழங்கப்படும் என்றும் அறிவித்தார்கள்.





முதல்வர் அவர்கள் ஆற்றிய உணர்ச்சி மிகுந்த உரையில் சில பகுதிகள் வருமாறு !

''மகா மகம் நடைபெறுகிற இடம் இந்தக் குடந்தை மாநகரம்.

சப்தஸ்தானம் நடைபெறுகிற இடம் இந்த விழா தொடங்கப் பெற்ற திருவையாறு நகரம்.

ஆகவே இந்த இரண்டு புனிதமான நகர்களிலும் புனிதமான இந்தப் பணி தொடங்கப் பெற்று முடிவடைவது-பக்தர்களுக்கெல்லாம் பரவசத்தை உண்டாக்குகிற நிகழ்ச்சி என்று நான் கருதுகிறேன்.

* * *

ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்குக் குடியிருப்பு மனைகளை வழங்குகின்ற இந்த நிகழ்ச்சி, அப்படி ஒன்றும் சாதாரணமான நிகழ்ச்சி அல்லதான்.

ஆனல் இந்த நிகழ்ச்சியோடு ஏழை எளிய மக்களின் துயரம் தீர்ந்து விடுகிறதா? நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்.

ஒரு நாட்டில் ஒரு பிரஜைக்குத் தேவையானவை உணவு; உடை; உறையுள்.

மூன்று தேவைகளும் நம் நாட்டிலே எல்லா மக்களுக்கும் பூர்த்தி செய்யப்பட்டு விட்டதா என்றல்-இல்லை.

அப்படிச் செய்யப்பட்டிருக்குமேயானல்-'வறுமையை வெல்வோம்' அல்லது வறுமையை விரட்டுவோம்,' என்கின்ற முழக்கங்கள் எல்லாம் இந்தக்காலத்திலே தேவைப்படாத முழக்கங்களாக ஆகி விட்டிருக்கும்.

அந்த முழக்கங்கள் இன்னும் நம்முடைய செவிகளிலே ரீங்காரம் செய்வதிலிருந்து நாம் இந்த நாட்டுக்கு முழு அளவிலே அவற்றை நிறைவேற்றிவிட்டோம் என்று மன ஆறுதல் கொள்கின்ற சூழ்நிலையிலே இல்லை.

1947-ல் இருந்து 1967 வரை தஞ்சை மாவட்டத்தில் இந்த இருபது ஆண்டுகளில் ஏழை எளியவர்களுக்கு வீட்டு மனைகளை ஒப்படை செய்த வகையில் 3,657பேர்—பயன் பெற்றார்கள்.

இது இருபது ஆண்டுக் காலத்தில்!

ஆனல் 1967-லிருந்து 72 ஆகஸ்டு முடிய ஐந்தாண்டுக் காலத்தில் வீட்டு மனை பெற்றவர்கள் தஞ்சை மாவட்டத்தில் 28,725 பேர்.

அதைப் போலவே சாகுபடிக்கான நிலங்கள் ஒப்படை செய்யப் பெற்றவர்கள் இருபதாண்டுக் காலத்தில் 2,467 பேர். ஆனல் இந்த ஐந்தாண்டுக் காலத்தில் 1967 முதல் 1972 ஆகஸ்டு முடிய சாகுபடி நிலம் பட்டாப் பெற்றவர்கள் 36,794 பேர்.

* * *

தஞ்சை மாவட்டத்தில் கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து ஐம்பத்தேழாயிரம் பேர் குடியிருப்பு மனைகளை மாத்திரம் பெறுகிறார்கள். அந்த உரிமையை அளிக்கத் தமிழ்நாடு சட்டப் பேரவையில் நமது வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், ஒரு மசோதாவைக் கொண்டுவந்து அது சட்டமாக நிறைவேற்றப்பட்டு அந்தச் சட்டம் இன்றைக்கு அமலாக்கப்பட்டு, இங்குக் கண்டீர்களே கருப்பன் என்றும் காத்தான் என்றும் மூக்கன் என்றும் ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்-உழைப்பின் கரங்களால்-நாற்று நட்ட கரங்களால்-நடவுநட்ட கரங்களால்-கழனியைப் பண்படுத்திய கரங்களால் உழுத கரங்களால் பெற்றுக் கொண்டார்களே, அந்தப் பட்டாக்களை அவர்கள் பெறுகின்ற நேரத்தில் நான் புனிதம் அடைந்தேன். நம்முடைய கைகள் புனிதம் அடைந்தன.

கும்பகோணம் மகாமகக் குளத்தில் ஆயிரம் முறை குளித்தால் புனிதம் ஏற்படும் என்று புராணிகர்கள் சொல்வார்கள். அதைவிட அதிகமான புண்ணியத்தைப் பெற்றோம் என்று என்னுடைய நெஞ்சம் பெரு மகிழ்ச்சியடைகிறது !

> வேறு மக்களிடையில் காணப்படும் தன்மைகளை விடத் தமிழர்களின் தனிப்பெரும் பண்புகள் தான் என்னிடம் பெருமளவு இருப்பதாகக் கருதுகிறேன்.
>
> —அண்ணல் காந்தியடிகள்

## கல்வித்துறையில் அரசின் சலுகைகள்

"கல்விக்காக அரசு கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து வருகிறது; ஒவ்வொரு மாணவனுக்கும் கல்விக்காக இந்த அரசு எவ்வளவு பணம் செலவழித்து வருகிறது என்பதைச் சொல்கிறேன்.

1 ஆவது வகுப்பிலிருந்து 5 ஆவது வகுப்பு வரை படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் அரசு ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ. 62 செலவழிக்கிறது.

6 ஆவது முதல் 8 ஆவது வகுப்பு வரை படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 112 செலவு செய்கிறது.

9 ஆவது முதல் 11 ஆவது வகுப்பு வரை படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 245 செலவு செய்கிறது.

கல்லூரியில் படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 660 செலவு செய்கிறது.

பாலிடெக்னிக்கில் படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ. 3,600 செலவழிக்கிறது.

பொறியியலில் படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ. 8,400 செலவு செய்கிறது.

டாக்டர் படிப்பு படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் ஏறக்குறைய 5 ஆண்டுகட்கு மட்டும் ரூ. 55,000 செலவழிக்கிறது.

இவ்வளவு செலவழிப்பதற்குக் காரணம் எதிர்காலத்தில் இந்த நாடு மிகச் சிறப்புற்றுத் திகழ வேண்டும் என்பதற்காகத்தான்!

கோடிக் கணக்கான ரூபாய்களைக் கல்விக்கு மட்டும்—வேறெந்தத் துறைக்கும் செலவழிப்பதைவிட இந்தத் துறைக்கு அதிகமான அளவில் அரசு செலவு செய்துகொண்டு வருகிறது.

அரசு அளிக்கும் சலுகைகளை மாணவமணிகள் நன்கு பயன்படுத்திக்கொண்டு வாழ்க்கையில் முன்னேற முயற்சிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

[வேட்டவலம் பள்ளித் துணைக் கட்டிடத் திறப்பு விழாவில் கல்வியமைச்சர் மாண்புமிகு நாவலர்.]





1-10—3-எ






# வன விலங்குகளைக் காப்போம்!

நமது நாட்டுக் காட்டு வளம் தனிச் சிறப்பு வாய்ந்தது. வகைவகையான காடுகள் நமது மாநிலத்தில் பரவிக் கிடக்கின்றன. முட் புதர்களையுடைய பொட்டல் காட்டிலிருந்து, ஓங்கி வானுயர்ந்த மரங்களையுடைய பசுமைக் காடுகளும், கடலைச் சார்ந்த சதுப்பு நிலக் காடுகளும், 8,600 அடி உயரமுள்ள மலையுச்சியில் பரவிக் கிடக்கும் சோலைகளும் நிறைந்தது நமது பூமி. இவ்விதம் பரவிப் பரந்து கிடக்கும் காடுகளைப் போன்று, அங்கு வாழும் உயிரினங்களும் ஒப்பற்றவை.

யானை, மான், புலி, சிறுத்தை, காட்டுமாடு போன்ற பாலூட்டிகளும், வண்ண வண்ணப் பறவைகளும், மலைப் பாம்பு, நாகப்பாம்பு போன்ற ஊர்வனவும், உடும்பு, பறக்கும் ஓணான் போன்றவைகளும், பல ஆயிரக் கணக்கான பட்டாம் பூச்சி வகைகளும் காண்போர் உள்ளம் பரவச மடையச் செய்யும். இந்த ஒப்பற்ற வகைகளுக்கு நமது நாட்டின் மாறுபட்ட நில அமைப்பும் வேறுபட்ட தட்ப வெப்ப நிலைகளும், மாறிவரும் காலநிலையும், வகை வகையான தாவரங்களும் தான் காரணம். ஒவ்வொரு வகை விலங்கும் ஒவ்வொரு வகையான சூழ்நிலையில் கிடைக்கும் உணவு, நீர், பாதுகாப்பு, வெளிச்சம், வெப்பம் முதலிய தேவைகளை வைத்து, அந்தந்தச் சூழலில் தனது வாழ்வை நடத்தித் தனது இனத்தைப் பெருக்கி வளர்ச்சியடைகிறது. மேலே கூறப்பட்டவற்றுள் ஒரு தன்மை அழிக்கப்பட்டால் அந்த வகை இனமே அழிந்து போகும்.

நமது நாட்டு வனங்களையும், வனவிலங்குகளையும் பாதுகாப்பதில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலும், வரலாற்றுக் காலத்திலும் தனிக்கவனம் செலுத்தப்பட்டு வந்திருக்கிறது என்பதற்கு நமது நாட்டு இலக்கியங்களிலும், சரித்திர ஏடுகளிலும் சான்றுகள் இன்னும் காணக்கிடக்கின்றன. பண்டை இலக்கியங்களிலும் சங்க நூல்களிலும் வனவிலங்குகளைப் பற்றி எண்ணற்ற குறிப்புகள் உள்ளன.

**பா. இரா. முகம்மது பஷீர்**
**ஐ. எப். எஸ்.**

வேடனால் துரத்திச் செல்லப்பட்ட புறாவைக் காப்பாற்றுவதற்காகச் சிபிச் சக்கரவர்த்தி தனது தொடையிலிருந்துசதையை வெட்டி வேடனுக்களித்து, புறாவைக் காப்பாற்றியதைப் பற்றிப் படித்திருக்கிறோம். முல்லைக்குத் தேர் ஈந்த பாரி வள்ளலைப் பற்றியும் தமிழ் இலக்கியத்தில் படித்து மனத்தைப் பறிகொடுத்திருக்கிறோம். தற்கால பாவலர்களுடையகவிதைகளிலும் தோகை விரித்தாடும் மயிலைப் பற்றியும், இன்னிசை பாடும் குயிலைப் பற்றியும், துள்ளி ஓடும் மானைப் பற்றியும், நவீன நடை பயிலும் பெண்களை அன்னத்திற்கு ஒப்பிட்டிருப்பது பற்றியும் வலிமைக்கு யானையைப் பற்றியும், வீரத்திற்குப் புலியைப் பற்றியும் படிக்கிறோம். அசோகச் சக்கரவர்த்தி, நாட்டிலுள்ள காடுகளையும், விலங்குகளையும் பாதுகாப்பதற்குத் தனிச் சட்டமே இயற்றினர்.

**அக்டோபர் 2-ஆம் நாள் காந்தியடிகள் பிறந்த நாள் விழாவின் தொடர்பாக அக்டோபர் முதல் வாரம் நாடெங்கும் வனவிலங்குப் பாதுகாப்பு வாரமாக கொண்டாடப்பட்டு வருகின்றது. அதையொட்டி தமிழ்நாட்டின் காட்டு விலங்குகளையும் பறவை இனங்களையும் இந்தக் கட்டுரை விளக்குகிறது.**

நமது நாட்டில் வாழ்ந்து திரிந்த சீட்டா (சிறுத்தைப் புலி), இரட்டைக் கொம்பு காண்டாமிருகம், சிவப்புத் தலை வாத்து போன்றவை முழுவதும் அழிக்கப்பட்டு இன்று நாம் புத்தகத்தில் படித்துத்தான் அறிய முடிகிறது. அவை எப்படிப்பட்ட மிருகங்கள், பறவைகள் என்று நூல் நிலையங்களிலும், அரும் பொருட்காட்சிச் சாலைகளிலும் உள்ள படங்களைப் பார்த்து அவைகளின் உருவங்களை அறிகிறோம். இப்படிப் பாதுகாக்கப்பட்ட படங்களும் அழிந்து போனால், நமது கற்பனையில் தான் இந்த மிருகங்களும், பறவைகளும் இடம் பெற வேண்டும். குருடர்கள் யானையைத் தொட்டுத் தடவிப் பார்த்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக் கற்பனை செய்தது போல், நாமும் அழிந்து போன மிருகங்களும் இப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்று கற்பனை செய்து கொள்ள வேண்டி வரும். இதைத் தவிர்ப்பதற்காவது நாம் நம்முடைய நாட்டின் ஒப்பற்ற இயற்கைச் செல்வங்களைப் பாதுகாப்பது அவசியம்.

இந்த நேரத்தில் நமது நாட்டில் இன்னும் வாழ்ந்து வரும் உன்னதமான விலங்குகளைப் பற்றி அறிந்து கொள்வது நன்மை பயக்கும். முதலில் யானையைப் பற்றித் தெரிந்து கொள்வோம். உலகத்தில் இப்பொழுது மூன்று வகையான யானை இனங்கள்தான் இருக்கின்றன.

இந்திய யானை, ஆப்பிரிக்க யானை இனம், ஆப்பிரிக்கச் சிறிய காட்டு யானை இனம் என்பவை இவை. இந்த மூன்று இனங்களிலும் ஆப்பிரிக்க யானைதான் அளவிலும், பருமனிலும் பெரியது. பண்டைக் காலந்தொட்டே நமது நாட்டவர்கள் யானையைப் பெரிதும் போற்றி வந்திருக்கின்றனர். அது சக்தி வாய்ந்தது என்றும், நுண்ணறிவுள்ளதென்றும், அதன் வலிமையை விரித்துக் கூறியுள்ளனர். யானையினுடைய பருமனை எண்ணியும், அதற்கு நுண்ணறிவு மிகுதி என்று நினைத்தும் மனிதர்கள் மிகவும் பயப்பட்டனர்.

யானைக்குக் கண்பார்வை குறைவானது. ஆனால் யானை வாசனையை நுகர்ந்து அறிவதில் திறமையும், கூர்மையான செவியையும் உடையது. ஒரு காலத்தில் நமது கானகத்தில் தன்னிச்சையாகப் பெருகிப் பரந்து வாழ்ந்து வந்த யானைக் கூட்டம், உலகப்போர்க் காலத்தில் காடுகளை அழித்ததாலும், பல யானைகளைப் பிடித்து உலகத்திலுள்ள மிருகக் காட்சிச் சாலைகளுக்கு அனுப்பியதாலும் எண்ணிக்கையில் குறைந்தது. ஆனால் குறைந்து வரும் வேகத்தைக் கண்டு திகைத்து, காப்பகங்கள் அமைப்பதன் மூலமும், காப்புச் சட்டங்களைக் கடுமையாக்கியும், இப்பொழுது யானைகளுக்குப் பாதுகாப்பு அளித்து வருகிறோம். யானைகளுடைய தந்தங்களுக்காகத் திருட்டுத் தனமாக யானைகளைச் சுடுவதும் குறைந்திருக்கிறது. மேலும் அவை கூட்டங் கூட்டமாக வாழ்வதனாலும், அடர்ந்த காடுகளில் மட்டுமே வாழ்வதாலும் தங்களை அழிவிலிருந்து காத்துக் கொள்கின்றன.

யானைகள் காட்டுத் தழைகளையும், மூங்கிலையும், பசும் புல்லையும் விரும்பிச் சாப்பிடுகின்றன. மாலை வேளையில் தண்ணீர் குடித்துத் தாகம் தணிக்கின்றன. நீர் நிலைகளிலோ ஆற்றிலோ நீந்தி விளையாடும்போது துதிக்கை மூலம் நீரை வாரி இறைத்துப் பிளிறிக்கொண்டு குளிப்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

வனவிலங்குக் காப்பகத்தைச் சுற்றிப்பார்க்கிறார் [illegible]



யானை கருவுற்றுப் பத்தொன்பது மாதங்களுக்குப் பிறகு பெண் குட்டியையும், இருபத்தொரு மாதங்களுக்குப் பிறகு ஆண் குட்டியையும் ஈனுகிறது. வனத்துறையில் யானைகளைப் பிடித்துப் பழக்கி, காட்டு வேலைகளுக்காக நிருவகிக்கப்படும் யானைக் கோட்டங்களில் வைத்திருக்கும்போது அங்கு உள்ள யானைகளும் அங்கேயே உள்ள ஆண் யானையுடன் சேர்க்கை செய்து குட்டி போடுகின்றன.

ஆண் யானைகளுக்குச் சில சமயங்களில் 'மதம்' பிடித்து விடுகிறது. 'மதம்' கொள்ளும் யானைகளுக்குக் கண்ணிற்கும் காதுக்கும் இடையிலுள்ள பகுதியில் ஒரு ''சுரப்பி'' சாதாரண காலத்திலுள்ளதை விடச் சற்றுப் பெரிதாக வீங்கி, அதிலிருந்து திரவம் வடிய ஆரம்பிக்கிறது. இத்தகைய நேரத்தில் யானை மிகவும் எரிச்சல் அடைகிறது. ஆதலால் அதன் அருகில் செல்வது அபாயகரமானதாக முடியும். மதம் ஏன் பிடிக்கிறது என்பதற்கு அறுதியிட்டு எந்தக் காரணத்தையும் சொல்ல முடியாத நிலையிலிருக்கிறோம். இனச் சேர்க்கைக்காகப் பால் உணர்வு ஏற்படும் காலங்களில் யானை மதம் கொள்ளும் என்றும் சிலர் கருதுகின்றனர். சாதாரணமாக ஆண் யானைகளுக்குத்தான் மதம் பிடிக்கிறது. ஆனால் ஒரு சில பெண் யானைகளுக்கும் மதம் பிடித்ததற்கு ஆதாரக் குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. மதப் பிடிப்பு ஒரு சில வாரங்கள் வரை நீடிக்கிறது. வருடத்தில் எந்தக் காலத்தில் குறிப்பாக மதம் பிடிக்கிறது என்றும் திட்டமாகச் சொல்ல முடியாது.

யானையுடைய தந்தத்தை ஆடம்பரப் பொருளாக உலக மக்கள் கருதுகின்றனர். பாரிய யானைகளுக்குள்ள தந்தம் நீளத்திலும், நிறையிலும் குறைவானதாக இருக்கும். பெண் யானைகளுக்குத் தந்தம் மிகமிகச் சிறிதாகவே இருக்கும். இலங்கையிலுள்ள ஆண் யானைகளில் பெருவாரியானவற்றிற்குத் தந்தங்களே கிடையாது. இப்படிப்பட்ட யானைகள் நமது நாட்டிலும் சில இருக்கின்றன. தந்தமில்லாத யானைகளை 'மக்னா' என அழைக்கிறோம்.

நமது நாட்டு மலைக் காடுகளில் காணப்படும் மற்றுமொரு உன்னத மிருகம் 'கவுர்' என்று சொல்லப்படும் காட்டு மாடுகள் (காட்டெருமை என்றும் சொல்வார்கள்). இவை தென் மாநிலங்களில் மைசூர், கேரளம் ஆனைமலை, முதுமலைக் காடுகளிலும் மந்தை மந்தையாகத் திரிகின்றன. நன்கு வளர்ந்து வயதான காளைகள் மினுமினுவென்று கருநிறமாக இருக்கும். கால்களில் குளம்பிலிருந்து முட்டு வரை வெள்ளைக் காலுறை அணிந்தது போன்று வெண்மையாக இருக்கும். அவைகளுடைய கொம்புகள் வளைந்து கூர்மையாகவும், மிக உறுதி வாய்ந்ததாகவும் இருக்கும். மூங்கில் அதிகமுள்ளக் காடுகளில் மூங்கிலின் இளந் தாளைத் தின்று வாழும். வேட்டைப்பிரியர்கள் அதிகமாக இந்த மாடுகளை வேட்டையாடி அடியோடு அழிக்கும் நிலை வந்துவிட்டது. ஆனால் இப்பொழுது காட்டு மாடுகளை வேட்டையாடுவதற்குக் கடுமையான விதிமுறைகள் கடைப்பிடிப்பதால் இம்மிருகங்கள் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டிருக்கின்றன. மேலும் முதுமலை, பந்திப்பூர் காப்பகங்களில் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருப்பதால் வெகுவாகப் பெருகி வாழ்ந்து வருகின்றன. நமது நாட்டு மாடுகளுக்கு ஏற்படும் தொத்து நோய்களும், இந்தக் காட்டு மாடுகளுக்குப் பரவி விடுகின்றன. வனவிலங்குக் காப்பகங்களில் அதைச் சுற்றியுள்ள கிராமத்து மாடுகள் உள்ளே வந்து மேய்வது தடுக்கப்படாமலிருப்பதால் பல நோய்கள் காட்டு மாடுகளுக்கும் பரவி அநேகம் மாடுகள் செத்து மடிகின்றன. இந்த நோய் பரவியது காரணமாக 1968-ஆம் ஆண்டு முதுமலையில் மட்டும் சுமார் 70–80 காட்டு மாடுகள் செத்து மடிந்தது மிகவும் வேதனைக்குரியதாகும். நாட்டு மாடுகள் காப்பகங்களில் மேய்வதைத் தடை செய்யாமல்



[illegible] வனவிலங்குக் காப்பகத்தில் ஒரு யானைக்கு [illegible]

விட்டோமானால், காட்டு மாடுகளும் மான்களும் அடியோடு அழிந்து போகும்.

நமது நாட்டில் தனிச் சிறப்பு வாய்ந்தது வெளிமான் என்று சொல்லப்படும் மான் வகையாகும். இந்த மான் இனம் நமது நாடு முழுவதும் உள்ள காடுகளில் மந்தை மந்தையாகப் பல ஆயிரக் கணக்கில் துள்ளித் திரிந்தன. ஆனால் இவைகளைக் கண்மூடித்தனமாக வேட்டையாடியதால் இப்போது ஒரு சில இடங்களில் மிகவும் குறைவாகவே இருக்கின்றன. தமிழ் நாட்டில் இப்பொழுது பாதுகாப்பளிக்கப்பட்ட கோடிக்கரை வனவிலங்குக் காப்பகத்திலும் கிண்டி மான்கள் பூங்காவிலும் மட்டுமே இந்த வெளிமான்கள் காணப்படுகின்றன. இந்த மான்கள் வெள்ளாடு போன்ற தோற்றமும் அமைப்பும் உள்ளவை என்றாலும் ஆண் வெளிமான்களுடையக் கொம்புகள் நீண்டு முறுக்கு முறுக்காக இருக்கும். அவை மிகவும் வேகமாக ஓடக்கூடியவை.

ஆண்மான்கள் காப்பி நிறமுள்ளதாக இருக்கும். பெண் மான்கள் செம்மை கலந்த த்விட்டு நிறமுள்ளவை. (பில்லாய்மான் என்றும் இவற்றைச் சொல்வார்கள்). இவை பெரும்பாலும் அடர்த்தியில்லாத திறந்த வெளிக்காட்டில் விரும்பித் திரியும். காட்டில் உள்ள வெளியிடங்களில் கூட்டங் கூட்டமாக மேய்ந்து திரியும். தமிழ் நாட்டு வனவிலங்குக் குழுவின் சின்னமாக வெளிமானும் மயிலும் இடம் பெற்றுள்ளன.

அடுத்தபடியாக நமது சிந்தனையைக் கவருவது வேங்கைப் புலி. ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் புலிகள் பல்கிப் பெருகி நாடெங்கிலும் திரிந்தன. மனிதனைவிடப் புலிகள் நாட்டை ஆக்கிரமித்துக் கொள்ளுமோ என்ற ஒரு கவலைகூட இருந்தது. ஆனால் இன்றைய நிலை காடுகளில் புலிகளைப் பார்க்க முடியுமா என்ற ஐயம் ஏற்படுமளவிற்கு அவை சுடப்பட்டும் துன்புறுத்தப்பட்டும் மிகவும் அரிதாகி விட்டன. இந்தியா என்றவுடன் புலியை இணைத்து எண்ணத் தூண்டும் அளவிற்கு நமது நாட்டில் புலிகள் மலிந்துகிடந்தன.

ஆனால் புலியினுடைய பூர்வீகம் இந்தியா இல்லை என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? என்றாலும் அதுதான் உண்மை. வரலாற்றுக் காலத்திற்கும் முற்பட்ட காலத்தில் வடஆசியப் பகுதியான சைபீரியா மஞ்சூரியா போன்ற பகுதிகளிலிருந்து இந்தியாவிற்குக் குடிபெயர்ந்து வந்து காலப் போக்கில் பிந்திய இடத்தில் நிலையாகி விட்டன. இன்றைய உத்தேசக் கணக்குப்படி சுமார் 3,000 புலிகள்தாம் இந்தியாவின் காடுகளில் இருக்கலாம் என மதிப்பிடப்படுகிறது என்றாலும் எதிர்காலம் அவ்வ



ளவு ஒளிமயமாக இல்லை என்றுதான் கூறவேண்டும்.

ரேவா வட்டாரத்தில் வெள்ளைப் புலிகள் வாழ்கின்றன. வெள்ளைப் புலியைத் தனி இனம் என்று கூற முடியாது. புலியின் உடல் கரு மஞ்சள் நிறமும், மூங்கில் இலை போன்ற கரு நிற வரிகளும் அவை காட்டுப் புதர்களுக்கிடையில் செல்லும் போதும், பதுங்கி இருக்கும் போதும் பிறருக்கு எளிதில் பார்வையில் படாதபடி ''மறைக்கும் நிறமாக'' உதவுகிறது. சிறுத்தைப் புலியைப் (சீட்டா) போல வேகமாக ஓடித் துரத்தித் தனது இரையை அடிக்காமல், புலி பதுங்கியிருந்து, மானோ, மாடோ அருகில் வந்ததும் வேகமாகக் குறி தவறாது கழுத்திலும் தோள்பட்டையிலும் தாவிப் பாய்ந்து கீழே சாய்த்து உதிரத்தை உறிஞ்சிக் குடித்துவிட்டுத் தோளின்மேல் போட்டு மறைவிடத்திற்கு எடுத்துச் செல்லும்.

புலி மிகவும் புத்திக் கூர்மையும், சூழ்ச்சியும் உள்ள மிருகம் என்று கூறப்பட்டாலும் சில நேரங்களில் தேவையற்ற பிடிவாதக் குணத்தினால் முட்டாள்தனமாகவும் நடந்து கொள்கிறது என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. ஆனால் குட்டியுடன் உள்ள பெண்புலி சாகும் வரைக்கும் போராடும். குட்டியுடன் இருக்கும் புலியை நெருங்குவது பேரபாயத்தை விளைவிக்கும். சிறுத்தையுடன் ஒப்பிடும் போது வேட்டையாடிக் கொன்ற இரையைப் புலி மிகவும் சுத்தமான முறையில் தின்னும். முதலில் குடல் அசுத்தங்களை அகற்றி வெகு தூரத்திற்கப்பால் மறைத்துப் போட்டு விட்டு, இறைச்சியை மட்டும் உண்ணும். ஆனால் சிறுத்தை எல்லாவற்றையும் குழப்பிச் சிதற அடித்து அசுத்தமான வகையில் தின்னும் இயல்புடையது.

ஆண் புலியும் பெண் புலியும் சாதாரணமாகத் தனித்தே வாழ்கின்றன. இனச் சேர்க்கைக் காலத்தில் மட்டும் கூடி வாழ்கின்றன. இந்தக் கூட்டு வாழ்க்கையும் மிகக் குறுகிய காலத்திற்குத்தான். அதன்பிறகு மறுபடியும் தனித்து வாழ ஆரம்பிக்கின்றன. ஆண் புலி, வேறொரு ஆண் புலியைத் தனது பிரதேசத்திற்குள் வர அனுமதிப்பதில்லை.

புலிக்கு இனச் சேர்க்கைக்கான குறிப்பிட்ட காலம் ஏதும் இல்லை. இனச் சேர்க்கை ஒரு சில நாட்களிலோ அல்லது ஓரிரு வாரங்களிலோ முடிந்தவுடன் ஆணும் பெண்ணும் தனித்தனியாகச் சென்றுவிடுகின்றன. கருத்தரித்த 4 மாதங்களுக்குள் குட்டியை ஈனுகின்றது. சாதாரணமாக ஒரு ஈத்தில் 3 அல்லது 4 குட்டிகளைப் போடும். ஆறுகுட்டிகள்வரை ஈன்றதற்கும் குறிப்புகள் உள்ளன. குட்டிகள் மிகச் சீக்கிரத்தில் நல்ல வளர்ச்சி அடைகின்றன என்றாலும் பிறந்து இரண்டு வருடங்கள் வரை தாய்ப் புலியுடன் வாழ்கின்றன.

புலிகளைக் கண்மூடித்தனமாக வேட்டையாடி அவை அடியோடு அழிந்து போவதைத் தடைசெய்யும் நோக்குடன் அரசு விதி முறைகளைக் கடுமையாக்கியுள்ளது. புலித் தோல்களை வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதும் எடுத்துச் செல்வதும் அறவே தடை செய்யப்பட்டிருக்கிறது.

பறவை இனத்தில் நமது கவனத்தை அதிகமாக ஈர்ப்பது நமது தேசியப் பறவையான மயில்தான். நீண்ட தோகையும், வானவில்லின் அத்தனை வண்ணங்களும் ஒளிர்கின்ற இறகுகளும், தோகையை விரித்தாடும் போது சிதறித் தெறிக்கும் வண்ண ஜாலமும் நமது பார்வையை மட்டுமல்லாது உள்ளத்தையும் கவரக்கூடியது. மயில் நமது நாட்டில் எல்லாப் பகுதியிலும் வாழ்கிறது. மற்ற விலங்குகளுக்கு மனிதனால் ஏற்படும் அபாயத்தை போன்று மயிலுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதன் வண்ண இறகுகளை வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்காகவும், மயில் எண்ணெய் எடுப்பதற்காகவும் குறவர்கள் மயிலைப் பிடித்து அழித்து வந்தனர். ஆனால் மயில் தேசியப் பறவையாக அறிவிக்கப்பட்டு அதனை வேட்டையாடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

ஆங்கிலத்தில் (Flamingo) என்றும், தமிழில் பூநாரை என்றும் அழைக்கப்படும் கொக்கு வகை நீர்ப்பறவை வட மேற்கு எல்லையில். உள்ள கட்ச் பகுதியில் கோடைக்காலத்தில் சதுப்புக் கழி நிலத்திலிருந்து ஆயிரக் கணக்கான மைல் தூரம் பறந்து வந்து தஞ்சை மாவட்டத்தில் உள்ள கோடிக்கரை முத்துப்பேட்டை சதுப்பு நிலப் பகுதியில் தங்கி வாழ்கின்றது. நீண்ட கால்களையும், நீண்ட கழுத்தையும் உடைய இந்தப் பறவையின் இரண்டு இறக்கைகளும் ரோஜா மலர் போன்ற செம்மை நிறமுடையவை. அவை மேலே பறக்கும்போது, செந்தழல் பறப்பது போன்று வானத்தையே செவ்வண்ணமாக்கிவிடும். அவை ஆழமில்லாத நீர்ப்பிடிப்பில் நின்று கொண்டு கழுத்தை வளைத்து நீருக்குள் தலையை முழுமையும் அமிழ்த்தி நீரிலுள்ள நுண் உயிரினங்களை வடித்தெடுத்து இரையாக உட்கொள்ளும். குளிர்காலம் முடிந்து கோடை காலம் ஆரம்பிக்கும் போது மறுபடியும் கட்ச் பகுதிக்குப் பறந்து சென்று விடுகின்றன.

கூழைக்கடா, செரவி, உள்ளான் போன்ற நீர்ப்பறவைகளும் குளிர் காலத்தில் வடக்கே பல ஆயிரக்கணக்கான மைல் தூரத்திலுள்ள சைபீரியா ஆப்கனிஸ்தான் முதலிய நாடுகளிலிருந்து பறந்து வந்து நமது நாட்டிலுள்ள நீர் நிலைகளில் தங்கி வாழ்ந்து விட்டு, கோடை ஆரம்பித்தவுடன் மறுபடியும் திரும்பி விடுகின்றன.

சட்டதிட்டங்களைக் கடைப்பிடிப்பதாலும் காப்பகங்களை ஏற்படுத்துவதாலும் மட்டும் நமது நாட்டில் ஒப்பற்ற விலங்குச் செல்வங்களையும், பறவைகளையும் காப்பாற்றிவிட முடியாது. நாம் ஒவ்வொருவரும் அச் செல்வங்களை அழிவிலிருந்து காப்பாற்றுவோம் என்று உறுதி எடுத்துக் கொள்வது முக்கியமாகும்.







# கேளுங்கள் கொடுக்கப்படும்!

கோ. 8 அவரையின் விதையை வாங்கி, காவல் கிணறு மகளிர் விவாதக் குழு அங்கத்தினர்கள் வீட்டுத் தோட்டம் ' அமைக்க விரும்புகிறார்கள். விதை எங்கு வாங்கலாம் ?

—மகளிர் விவாதக் குழு,
காவல் கிணறு,
திருநெல்வேலி மாவட்டம்.

கோ. 8 அவரை விதை அண்மையில்தான் வெளியிடப்பட்டுள்ளது. எல்லா வேளாண்மைக் கிடங்குகளிலும் அதற்குள் இப்புதிய ரக அவரையின் விதைகள் விற்பனைக்கு வந்திருக்க முடியாது. எனவே, இப்புதிய ரக அவரையின் விதைகளைப் பெறக் கீழ்க் கண்ட முகவரிக்கு எழுதுங்கள்.

பயிர் நிபுணர் (பயறு வகைகள்),
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

* * *

1-4-72 தமிழரசு இதழில் காளான் பயிர் செய்வதைப் பற்றிய விவரம் கண்டேன். தொட்டி எப்படி அமைப்பது? அடியில் பலகையோடு பெட்டி மாதிரியா? சைடு பலகை மட்டுமா? வைக்கோல் மேல் மண் போட வேண்டுமா? ஸ்பான் என்னும் காளான் விதை எங்குக் கிடைக்கும்? என்பன போன்ற விவரங்களைத் தெரிவிக்கவும்.

—ஆர். கே. பெத்தணசாமி,
38, கே.ஆர்.பி. நாயுடு தெரு,
பெரியகுளம்.

தாங்கள் கேட்டுள்ள கேள்விகளுக்குரிய விடைகள் 1—4—1972-ஆம் தேதிய ' தமிழரசு ' இதழிலேயே கொடுக்கப்பட்டுள்ளன. தாங்கள் அக் கட்டுரையைக் கவனமாகப் படித்தால் விளங்கக்கூடும். இருப்பினும் தாங்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க மீண்டும் கீழ்க் கண்ட விளக்கத்தை அளிக்கின்றோம்.

காளான் படுக்கை அமைக்கத் தொட்டி அமைக்க வேண்டியதில்லை. சைடு பலகையும் தேவையில்லை. தரையில் செங்கற்களை வைத்து, அதன் மேல், பலகைகளை வைத்தாலே போதுமானது. அப்பலகைகளின் மேல் தாள் கற்றைகளைக் கட்டுரையில் கூறியபடி அடுக்க வேண்டும். 2 பெஞ்சுகளை இணைத்துக்கூட அதன் மேல் தாள் கற்றைகளை அடுக்கலாம். ஆனால், தண்ணீரினால் பெஞ்சு கெட்டுவிடக் கூடும். எனவேதான் தரைக்கு மேல் சற்று உயரமாக பலகை அல்லது மூங்கில் தட்டி அல்லது செங்கற்களைக் கொண்டு மேடை அமைக்குமாறு கூறப்பட்டுள்ளது. வைக்கோல் மேல் மண் போடக்கூடாது. 'ஸ்பான்' என்னும் காளான் விதைப் பாட்டில் 2 வாங்க, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுவதுடன், ரூபாய் 2·00 முன் பணம் அனுப்பி வைக்கவேண்டும். காளான் விதைப் பாட்டிலை பார்சலில் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

பயிர் நோய் நிபுணர்,
பயிர் நோய்த் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-3.

* * *

எங்களுடைய ஒரு போக நன்செய் நிலத்தில் இந்நாள் வரை கோ. 25 நெல் சாகுபடி செய்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறோம். நெல் மகசூலும் பரவாயில்லை என்று சொல்லத்தக்க அளவில் இருந்து வருகிறது. எனினும் இவ்வாண்டு சம்பாவில் கோ. 25 ரகத்திற்குப் பதிலாகப் 'பொன்னி' நெல் சாகுபடி செய்யலாம் என்று எண்ணுகிறோம். நெல் மற்றும் வைக்கோல் மகசூல் திறனிலும், பூச்சி மற்றும் பூஞ்சாள நோய்களை எதிர்க்கும் சக்தியிலும் கோ. 25 நெல்லை விடப் பொன்னி உயர்வான ரகமா எனத் தெரிவிக்க வேண்டுகின்றேன். கோ. 25 சாகுபடி செய்யப்படும் மண் வகைகளே பொன்னிக்கும் ஏற்றதா எனவும் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

—எஸ். வெற்றிவேலன்,
ஆலங்குடி, புதுக்கோட்டை.

சம்பாவின் பின்பட்டத்தில் 'கோ. 25' நெல்லிற்குப் பதிலாகப் ' பொன்னி ' பயிரிடலாம். கோ. 25 ரகத்தின் வயது 180 நாட்கள். ஆனால் 'பொன்னி' ரகத்தின் வயது 140 நாட்களே. எனவே, குறுகிய காலத்தில் அறுவடை செய்ய விரும்பினால் பொன்னி ரகத்தைப் பின் சம்பாப் பட்டத்தில் பயிரிடலாம்.

கோ. 25 நெல்லின் வயது அதிகம் என்ற ஒரு குறையைத் தவிர, அதிக நெல் மற்றும் அதிக வைக்கோல் அளிக்கும் திறன் வாய்ந்தது. நெல் விளைச்சல் போட்டிகளில்பெரும்பாலும் கோ. 25 நெல் மகசூலுக்கே மாநில முதற் பரிசு கிடைத்துள்ளது. 1966-67-ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநில நெல் மகசூல் போட்டியில் கோ. 25 நெல் ரகமே ஏக்கருக்கு 4,544 கிலோ மகசூல்கொடுத்து முதல் பரிசைப் பெற்றுள்ளது. வேளாண்மைத் துறை பரிந்துரைக்கும் முறையில் சாகுபடி செய்தால், பொன்னியைவிட, கோ. 25 ரகம் அதிக மகசூல் கொடுக்கும் என்பது திண்ணம். தஞ்சை மாவட்டத்தில் சம்பாவில் கோ. 25 நெல் சராசரியாக ஏக்கருக்கு 75 கலம் நெல் கொடுக்கிறது. கோ. 25 நெல்லின் தண்டு பருமனாக இருப்பதால் குருத்துப் பூச்சியின் தாக்குதலுக்கு இலக்காகும். கோ. 25 ரகம் 'கொள்ளை' அல்லது 'குலைநோய்' (Blast) தாக்குதலைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்தது. வைக்கோல் முரடானது.

ஆனால், 'பொன்னி' ரகத்தின் வயது குறைவாக இருப்பினும், கோ. 25 நெல் ரகத்தைப்போல் அதிக அளவு மகசூல் அளிக்கும் என்று நம்பமுடியாது. ஆயினும் சராசரியாக ஏக்கருக்கு 60 கலம் நெல் மகசூல் வீதம் தஞ்சை மாவட்டத்தில் பொன்னி ரகம் விளைந்துள்ளது. நீர் தேங்கும் பகுதிகளுக்குப்பொன்னி ஏற்றது. கோ. 25 ரக அரிசியை விட, 'பொன்னி' ரகத்தின் அரிசி சன்னமானது. இதன் வைக்கோல், கோ. 25 வைக்கோலை விட மென்மையானது.

எனவே, வயதைப் பொருட்படுத்தாமல், மகசூலைப் பற்றியே கருதுவதாக இருந்தால், நீங்கள்

கோ. 25 ரகத்தைப் பயிரிடுவதே சிறந்தது. குறுகிய கால ரகமே தேவை என்ருல், தாங்கள் 'பொன்னி' ரகத்தைப் பயிரிடுவதே சிறந்தது. பொன்னி ரகம் குறைந்த காலத்தில் ஏக்கருக்கு 60 கலத்திற்குக் குறையாமல் மகசூல் அளிக்கும் என்பது உறுதி. கோ. 25 நெல்லிற்கு முறையான பயிர்ப்பாதுகாப்பு செய்யாவிட்டால் மகசூல் மிகவும் குறைந்துவிடும் என்பதும் உறுதி. எனவே, இவைகளை மனத்திற் கொண்டு நீங்கள் விரும்பும் ரகத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்

* * *

1972, ஜூலை 1-ஆம் நாள் வெளிவந்த 'தமிழரசு' இதழில் குறுவைச் சாகுபடி குறிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. அதில் கண்டபடி 'கருணை' ரகத்தை 26-ஆம் நாள் 6×4 அங்குல இடைவெளி விட்டு 8-8-72-இல் நடவு நட்டு இருக்கிறேம். முதல் தடவையாக யூரியா இடுவது, களை எடுப்பது, பூச்சி மருந்து அடிப்பது எல்லாம் 15-ஆம் நாள் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். ஒரே தினத்தில்தான் செய்ய வேண்டுமா? அப்படிச் செய்தாலும் களை எடுத்து உரமிட்டுப் பூச்சி மருந்து அடிக்கலாமா?

—து. ஆயிராசு,
கன்வீனர், மகளிர் மன்றம்,
காரிக்கோட்டை,
தஞ்சை மாவட்டம்.

கருணைரக நெல்லிற்கு நடவு செய்த 15-ஆம் நாளிலேயே, முதல் தடவை களையெடுத்தல், மேலுரமிடுதல், மருந்து தெளித்தல் ஆகியவைகளைச் செய்ய வேண்டும். இவ்வாறு செய்யாமல் காலந்தாழ்த்திஞல் மகசூல் கணிசமாகக் குறைந்துவிடும்.

பிலிப்பைன்சு நாட்டிலுள்ள அனைத்து நாட்டு நெல் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றுள்ள ஆராய்ச்சியின்படி குறிப்பிட்ட நாளில் களை எடுக்காமல் விட்டுவிட்டு, பிறகு காலங் கடந்து களை எடுத்தால், காலந்தாழ்த்தும் ஒவ்வொரு நாளும் ஏக்கருக்கு 12 முதல் 28 கிலோ அளவுக்கு மகசூல் குறைந்துவிடுகிறது என்பது தெரிய வருகிறது. எனவே குறிப்பிட்ட நாளில் களை எடுப்பதும், மேல் உரமிடுவதும், பயிர்ப்பாதுகாப்பு செய்வதும் மிக மிக அவசியமாகும்.

மேலுரமிட்டு விட்டு, பின்பு களை எடுத்துக், கடைசியாக மருந்து தெளிப்பது மிகவும் சிறந்தது. வயலில் உள்ள தண்ணீரை இலேசாக வடித்துவிட்டு, மேலுரமிட்டு, பின்பு களை எடுப்பதுடன், பயிர் வரிசைகளுக்கிடையில் உள்ள மண்ணை இலேசாகக்கிளறிவிடுமாறு பரிந்து



ஏறத்தாழ 37 ஆண்டுகளுக்கு முன்பாகவே, இந்தியாவின் தந்தை, அகிம்சா மூர்த்தி என்றெல்லாம் புகழப்படும் காந்தியடிகள் அவர்கள், ஏழை எளிய, சாமான்ய மக்களின் நல்வாழ்வை முன்னிட்டு, இந்திய உணவில் சோயா மொச்சையை அறிமுகப்படுத்துமாறு இந்திய உணவுச் சீர்திருத்தத்தில் ஆர்வம் கொண்டுள்ளவர்களையும், இந்திய மக்களையும் வற்புறுத்தியுள்ளார். அவர் வற்புறுத்தியுள்ளதை மனத்திற் கொண்டு, இனிமேலாவது, அவரவர் உணவில் சோயா மொச்சையைச் சேர்த்துக் கொள்வதும், சோயா மொச்சை உணவை மக்களிடையே புகுத்துவதும் அண்ணலின் கொள்கையைப் பின்பற்றி நடக்கும் அனைவருடைய கடமையுமாகும்.

ரைக்கப்படுகிறது. இவ்வாறு செய்வதால் நெற்பயிரின் வேர் வளர்ச்சி தூண்டப்படுவதுடன், கிளைப்பும் அதிகமாகும். அத்துடன் மேலுரம் மண்ணுடன் கலப்பதால், இரசாயன உரம் பயிருக்கு விரைவில் கிடைப்பதுடன், சேதமாவதும் தவிர்க்கப்படுகிறது. எனவே மேலுரமிட்டுக் களை எடுத்து, மருந்து தெளிப்பதே சிறந்தது.

* * *

எனது நிலத்தில் ஒரு அடி அல்லது இரண்டு அடி மணலும், கீழே செம்மண்ணும் உள்ளது. நிலக்கடலையோ அல்லது சவுக்கோ போட்டால் நிறையப் பட்டுப் போகிறது. வேலி ஓரங்களில் நிறையப் புற்றுகள் வளர்ந்துவிடுகின்றன. குப்பையைக் கொட்டிஞல் அதைச் செல் அரித்துச் செம்மண்ணுல் மூடிவிடுகிறது. வீட்டுச் சுவற்றுக்கும், கூரைக்கும் மரத் தொடர்பு இல்லை. என்றுலும் கறையான் செல் இரவில் சென்று வேலையை முடித்துக்கொண்டு, விடியற்காலையில் எங்கேயோ போய் மறைந்து விடுகிறது. அடுத்த மழைக்கு வீடெல்லாம் ஒழுக்காகி விடுகிறது. உயிராக இருக்கும் மரத்தின் மேலேயே அடையாகச் செல் அரித்துப் புற்று கட்டுகிறது. எறும்பு மருந்து (Gammexene) தெளித்தேன். ஒரு மழை தாங்குகிறது. இதற்கு என்ன செய்யலாம்?

—எஸ். பெரியநாயகம்,
அறந்தாங்கி,
சிதம்பரம் வட்டம்.

உங்கள் நிலத்தில் கறையான் இருக்கிறது என்பது உங்கள் விளக்கத்திலிருந்தே தெளிவாகிறது. நீங்கள் சவுக்கு அல்லது நிலக்கடலை பயிரிட, முதலில் உழவு செய்யும்போதே படைச்சாலில் ஏக்கருக்கு 20 கிலோ அளவுக்கு பி. எச். சி. 10 சதத் தூளைத் தூவ வேண்டும். மீண்டும் 15 நாள் கழித்து மறு முறை நிலத்தை உழுதுவிட்டு ஏக்கருக்கு 20 கிலோ அளவுக்கு பி. எச். சி. 10 சதத் தூளைத் தூவுங்கள். இவ்வாறு இரு முறைத் தூவிஞலே கறையான் அழிந்துவிடும். தேவையாஞல் மூன்றும் முறையும் தூவுதல் நல்லது.

வீட்டுச் சுவற்றின் ஓரத்தில் பி.எச். சி. 10 சதத் தூளை இலேசாகத் தூவி வைத்தால் கறையான் சுவற்றில் ஏருது. ஆஞல் தூவியுள்ள மருந்து தூளைக் குழந்தைகளோ, ஆடு மாடுகளோமுகர்ந்தால் ஆபத்தானது. எனவே பி. எச். சி. தூளைத்தூவி மண்ணைக் கொத்திவிட்டு கலந்துவிட வேண்டும். அல்லது சுவற்றின் ஓரத்தில் பி. எச். சி. 50 சத மருந்தைத் தண்ணீரில் கறைத்துச் சுவற்றின் ஓரத்தில் தெளித்து வைக்கலாம். அது போலவே கூரையின் மேலும் தெளிப்பது நல்லது.

உயிராக இருக்கும் மரத்தின் மேலும் பி. எச். சி. 50 சத மருந்தை தண்ணீரில் பசைபோல் கலந்து கொண்டு, மரத்தின் அடிப்பகுதியைச் சுற்றிலும் தடவி வைக்கலாம்; அல்லது அடி மரத்தின் மேல் தார் பூசி விட்டாலும் கறையான் தாக்காது.

'கெமாக்சின்' என்கின்ற மருந்து, பி. எச். சி. 10 சதம், பி. எச். சி. 50 சதம் மருந்துகளைவிட வீரியம் குறைந்தது. எனவே பி. எச். சி. 10 சதத் தூளையும், பி. எச். சி. 50 சத மருந்தையும் மேற்கண்டவாறு உபயோகிக்கலாம்.

பி. எச். சி. மருந்து கிடைக்காவிட்டால் 'ஹெப்டோகுளோர்' என்ற மருந்தை வாங்கிப் பயன் படுத்துதல் நல்லது.

## கோழி வளர்ப்பு

நான் கோழிப் பண்ணை ஒன்று அமைத்திட விழைகின்றேன். கோழிப்பண்ணை நடத்துதல் பற்றிய நூல்கள் ஏதாவது இருப்பின், அவற்றை எங்குப் பெறலாம் என்பதைக் கூறவும்.

—சி. இராசமாணிக்கம்,
கருப்பூர் கேட்,
ஓமலூர் வட்டம்,
சேலம் மாவட்டம்.

கோழிப் பண்ணையை அமைத்திடுவது பற்றிய முழு விவரமும் அடங்கிய நூல்கள் தமிழ்நாடு கால்நடைத் துறையின் உதவி இயக்குநர்கள் அலுவலகங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இவ்விரண்டு நூல்களும் (தமிழ்) விற்கப்படுகின்றன. இந் நூல்களுக்கு நீங்கள் கொடுக்கும் ஒரு ரூபாயும் ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியில் (யூனிசெப்) சேர்ந்து விடுகின்றன. இந் நூல்களை வாங்கிஞல் நீங்கள் பயனடைவதுடன் நிதியும் கொடுத்தவர்களாக ஆகின்றீர்கள். எனவே கீழ்க் கண்ட இரு நூல்களையும் வாங்கும்படிக் கேட்டுக் கொள்கின்றேம்.

1. கோழிப் பண்ணைத் துணை நூல்.

2. கிராமவாசி கோழி வளர்க்க ஓர் வழிகாட்டி.

* * *

உயர் ரகக் கோழிகள் வாங்கிக் கோழிப்பண்ணை அமைக்க விரும்புகின்றேன். உயர் இன கோழிக் குஞ்சுகள் விலைக்குக் கொடுக்கும் அரசுப் பண்ணைகளையும், தனியார் பண்ணைகளையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

—பி. ராமசாமி,
வேதாசலம் நகர்,
செங்கல்பட்டு.

உயர் ரகக் கோழிக் குஞ்சுகளை காட்டுப் பாக்கத்தில் (சென்னை—செங்கற்பட்டு நெடு நெடுஞ்சாலையில் உள்ளது) உள்ள அரசினர் கோழிப்பண்ணையிலிருந்தும், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, வேப்பேரி, சென்னை-7 என்ற முகவரியிலிருந்தும் பெறலாம்.

சென்னை நகரிலும், சென்னை நகரைச்சுற்றிலும் பல தனியார் கோழிப் பண்ணைகள் உள்ளன. அவைகளின் அனைத்திஞுடைய முகவரியும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. கிடைத்த சில தனியார் கோழிப் பண்ணைகளின் முகவரியைமட்டும் கீழே கொடுத்துள்ளோம்:—

1. அண்ணு கோழிப் பண்ணை உழவர்கள் கூட்டுறவுச் சங்கம்,
சீனிவாச நகர் அஞ்சல்,
சென்னை-63.

2. ராமு பிரதர்ஸ்,
கோழிப்பண்ணை பிரிவு,
42, வெள்ளனூரர்,
ஆவடி,
சென்னை-54.

3. ஐவரி பார்ம்,
18-ஏ, சுத்தானந்த பாரதி தெரு,
கணபதி புரம்,
தாம்பரம்,
சென்னை-59.

மேற்கண்ட முகவரிக்கு எழுதி கிடைக்கும் இனங்கள், விலை விவரம் ஆகியவைகளைத் தெரிந்து கொள்ளலாம்.

## சிறு தொழில் வளர்ச்சி

தற்சமயம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பல விவசாயிகள் முசுக்கொட்டைச் செடி பயிர் செய்து, பட்டுப் புழு வளர்ப்பதாகத் தெரிய வருகிறது. முசுக்கொட்டைப் பதியங்கள் எங்குக் கிடைக்கும்? விலை என்ன? அதை வளர்ப்பது எப்படி? என்ற விவரத்தையும் பட்டுப் பூச்சி முட்டை எங்கு என்ன விலைக்குக் கிடைக்கும்? அதை எப்படி எவ்வளவு நாள் வளர்த்து கூடு எடுப்பது, அதை விற்பனை செய்வது ஆகிய முழு விவரமும் தெரிவிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கின்றேன்.

—எஸ். ஜம்புலிங்கம்,
தாயம்பாளையம் (அஞ்சல்),
(வழி) ஊதியூர்,
கோவை மாவட்டம்.

கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பைப் பெருக்கும் நோக்கத்துடன், முசுக்கொட்டைச் செடி நடுவதற்காகப் பதியன்களை இலவசமாகப்பட்டுப்புழு வளர்ப்பவர்களுக்கு வழங்கப்படுகிறது. முசுக்கொட்டைச் செடி வளர்க்க கிணறுகள் வெட்டவும் கடன் கொடுக்கப்படுகிறது. பட்டுப்புழு வளர்ப்புக் கொட்டகை கட்டுதல், விசையேற்றங்கள் வழங்குதல், பாதி விலையில் பட்டுப் புழு வளர்ப்பதற்கான கருவிகளை வழங்குதல் போன்ற திட்டங்களும் தமிழ் நாட்டில் நடைமுறையில் உள்ளன. இத் திட்டங்களைத் தமிழ்நாடு அரசின் தொழில் வணிகத்துறை செயல் படுத்தி வருகிறது.

முசுக் கொட்டைச் செடிகளை வளர்த்தல், பட்டுப்புழுக்களை வளர்த்தல்போன்றவை குறித்துப் புதிதாகத் தொழிலில் ஈடுபட முனைவோருக்குக் கற்றுக் கொடுப்பதற்காகத் தமிழ்நாட்டில் 10 கட்புல விளக்கப் பட்டுப் பண்ணைகள் உள்ளன. அத்தகைய பண்ணை ஒன்று கோவை மாவட்டத்தில் ஹாசனூர் என்ற இடத்தில் உள்ளது. நேரில் அங்குச் சென்று முசுக்கொட்டைச் செடி, பட்டுப் புழு வளர்ப்பது பற்றிய விவரங்களை அறிந்து கொள்ளுங்கள்.

பட்டுப் புழு வளர்ப்பவர்களுக்கு சிறு புழுக்களை வழங்குவதற்காக, கோவை மாவட்டத்தில் தாளவாடி என்ற இடத்தில் பட்டுப்புழு பண்ணை அமைக்கப் பட்டுள்ளது. மேலும் கோவை மாவட்டத்தில் மதஹள்ளி, ஜெர்மலம் ஆகிய இடங்களிலும் அரசினர் பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணைகள் உள்ளன. இப்பண்ணைகளுக்குச் சென்று, அங்குள்ள அலுவலர்களை அணுகி விவரம் தெரிந்துகொள்வதே நல்லது.

முசுக் கொட்டைச் செடிகள் வளர்ப்பதற்காக, தமிழ்நாடு அரசு, அரசு நிலங்களைக் குத்தகைக்கும் விடுகிறது. மற்றும் பல்வேறு உதவிகளையும், கடன்களையும் தமிழ்நாடு அரசு பட்டுப் புழு வளர்ப்பவர்களுக்குச் செய்து வருகிறது. இதுபற்றிய முழு விவரமும் அறிய, தங்கள் மாவட்டத்தில் உள்ள உதவி தொழில் வணிக இயக்குநர் அவர்களைச் சந்திப்பது நல்லது. பட்டுப்

### சோயா மொச்சையில் பெருமகசூல் காண...

'டிபா' (Tiba) என்னும் ஒரு புதிய இரசாயன மருந்தைச் சோயா மொச்சைச் செடியில் தெளித்தால், ஒரு ஹெக்டேர் நிலத்திலிருந்துகூடுதலாகஅரை டன் அளவு சோயா மொச்சை விதை மகசூல்பெறலாம் என்று, பந்த் நகர் வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளி வரும் 'இந்தியன் பார்மர்ஸ் டைஜெஸ்ட்' என்ற ஏடு குறிப்பிட்டுள்ளது. இப்புதிய இரசாயனக் கலவையைத் தெளிப்பதால், சோயா மொச்சைச் செடிகள் குட்டையாகவும், அதிக அளவு சூரிய ஒளியைப் பெறுவதற்கு ஏற்ற வகையில் கூம்பு வடிவமாகவும் காணப்படுகின்றன. அமெரிக்காவில் இந்த இரசாயன மருந்து 10 முதல் 20 சத அளவுக்கு அதிக மகசூல் கொடுத்துள்ளதாகக் கூறுகிறுர்கள்.

பூச்சி வளர்ப்பது பற்றிய வெளியீடுகள் பெற மேற்கூறிய அலுவலரை நாடுங்கள் அல்லது கீழ்க் கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:—

இயக்குநர்,
தொழில் வணிகத்துறை,
சேப்பாக்கம்,
சென்னை-5.

* * *

## வேலை வாய்ப்பு

தமிழ்நாட்டில் படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கும் இளைஞர்கள், ஏதேனும் சிறுதொழில்கள் நடத்த விரும்பினால் அதற்கு அரசு உதவி செய்கிறதா? அவ்வாறு உதவி செய்யுமானால், அரசின் உதவி பெற யாருக்கு எழுத வேண்டும்?

—எஸ். பாப்பு,

மே/பா ஆர். ஜெபமாலைமேரி,
தோளூர்பட்டி (அஞ்சல்),
(வழி) தொட்டியம்,
திருச்சி மாவட்டம்.

படித்து விட்டு வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்கள் சிறுதொழில்கள் நடத்த விரும்பினால், அவர்களுக்கு 'சிட்கோ' எனப்படும் தமிழ்நாடு சிறு தொழில் மேம்பாட்டுக் கழகம் (Tamil Nadu Small Industries Development Corporation Limited). தொழிற்பேட்டைகளை நிறுவி வருவதுடன் கீழ்க்கண்டவாறு பல்வேறுவகையிலும் உதவி செய்கிறது.

1. சொந்த மனையில் தொழிற்கூடம் நிறுவ உதவி.

2. இயந்திரங்கள் பெற 'சிட்கோ'வின் உதவி.

3. மூலப் பொருட்கள் பெற 'சிட்கோ'வின் உதவி.

தனிப்பட்ட ஒருவருக்கு 'சிட்கோ' ரூபாய் 3 இலட்சம் வரை கடன் கொடுத்து உதவுகிறது. தவணை முறையில் கடனைத் திருப்பி அடைக்க வேண்டும். இதுபற்றிய முழு விவரங்களையும் அறிய கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்.

நிருவாக இயக்குநர்,
தமிழ்நாடு சிறுதொழில்
மேம்பாட்டுக் கழகம்,
தமிழ்நாடு சிறு தொழில் மேம்பாட்டுக் கழக அலுவலகம்,
112, அண்ணாசாலை,
சென்னை-6,

தாங்கள் திருச்சியில் உள்ள 'சிட்கோ' கிளை அலுவலகத்திலும் விவரங்களைப் பெறலாம். அந்த அலுவலகம் '1-ஏ, ஈ.வெ. ரா. சாலை, புத்தூர், திருச்சி' என்ற முகவரியில் உள்ளது.

படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கும் இளைஞர்களுக்காகத் தமிழ்நாடு அரசு ஒரு தனி திட்டத்தைச் செயல்படுத்துகிறது. அண்மையில் கூட இது பற்றி செய்தித்தாள்களில் செய்தி வெளிவாகி இருந்தது.

> **கண்ணொளி வழங்க...**
>
> கடந்த ஆண்டில் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தைக் கொண்டு வந்த இந்த அரசு, இந்த ஆண்டில் விழிஇழந்த ஏழைகட்குக் கண்ணொளி வழங்கி வாழ்வில் ஒளிகாட்ட, மாவட்டங்களில் இலவச கண்ணொளி வழங்கும் திட்ட முகாம்களை நடத்தி வருகின்றது. இலவசக் கண் சிகிச்சை முகாம்களை நடத்துவதற்காகத் தேவையான பணியாளர்களுடனும் சாதனங்களுடனும் இயங்கும் கண் சிகிச்சைப் பிரிவுகள் ஐந்தினை ஏற்படுத்த அரசு அனுமதித்துள்ளது. இதற்காக ரூ. 71.5 இலட்சம் தொடரா இனச் செலவும் ரூ. 8.6 இலட்சம் தொடர் இனச் செலவும் ஆகும். இது குறித்துத் தொடக்கத்தில் ஆகும் ரூ. 45·4 இலட்சம் செலவிற்கு "மானியம் 14" வகை செய்கிறது. இத் தொகை நாளடைவில் கண் ஒளி வழங்கும் திட்ட நிதியிலிருந்து நேர் செய்யப்படும்.
>
> (1972 - 73-ஆம் ஆண்டு துணை மதிப்பீட்டின் அறிக்கையிலிருந்து)

தாங்கள் பட்டதாரியா இல்லையா என்பதைத் தெரிவிக்கவில்லை. தொழில் நுணுக்க பட்டம் பெற்றிருந்தாலும், தொழில் நுணுக்கப்படிப்பில் 'டிப்ளமா' பெற்றிருந்தாலும், கைத்தொழில் பயிற்சி பெற்றிருந்தாலும் அவர்களுக்கு 2 ஆண்டுக் காலத்திற்குப் பயிற்சி அளிக்கப்படும். அக்காலத்திற்கு பின்கண்டவாறு ஊதியம் வழங்கப்படும்.

பட்டதாரிகளுக்கு மாதம் ரூபாய் 250.

'டிப்ளமா' பெற்றவர்களுக்கு மாதம் ரூபாய் 150.

கைத்தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூபாய் 80 முதல் 100.

(சென்னை நகரில் உள்ளவர்களுக்கு மட்டும் மாதம் ரூபாய் 90 முதல் 110 வரை கொடுக்கப்படும்).

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 600 பட்டதாரிகளுக்கும், 1,000 'டிப்ளமா' பெற்றவர்களுக்கும், 800 கைத்தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கும் மேற்கண்ட பயிற்சி அளிக்கப்படும். இரண்டு ஆண்டுக் காலத்திற்குப் பிறகுஇவர்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி இல்லையெனினும், அதற்குள் பயிற்சியாளர்களுக்குத் தனியார் துறைகளிலோ, அல்லது அரசுத் துறைகளிலோ வேலை கொடுக்க ஆவன செய்யப்படும். இளநிலைப் பொறியாளர் போன்ற பதவிகளுக்கு நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் பொழுது, இவ்வாறு பயிற்சி பெற்றவர்களையே தேர்ந்தெடுக்கப்படும்.

இப்பயிற்சியில் சேர விரும்பினால் சென்னையில் உள்ள வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அலுவலகத்தில் உள்ள வேலை வாய்ப்பு சிறப்புப் பிரிவில் (Employment Special cell) பதிவு செய்து கொள்ள வேண்டும்.

தாங்கள் தொழில் நுணுக்கப் படிப்புப் பட்டதாரி இல்லையென்றால், அடுத்த ஆண்டு இளைஞர் அணியில் சேர முயற்சிக்கலாம். அதற்கும்தாங்கள் பட்டதாரியாக இருந்தால் தான் முடியும்.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகமும் பொறியியல் பட்ட தாரிகளுக்கும், வேளாண்மைப் பட்டதாரிகளுக்கும் பயிற்சி அளித்துத் தொழிற்கூடம் துவங்க உதவி செய்கிறது. இதுபற்றிய விவரம் அறிய கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள் :

மேலாண்மை இயக்குநர்,
வேளாண்மைத் தொழில்
இயக்ககம்,
தொழிற்பேட்டை,
கிண்டி,
சென்னை-32.

இது தவிர மைய அரசுத்திட்டத்தின் கீழும் தாங்கள் சிறு தொழில் தொடங்கப் பயிற்சி பெறலாம். நாளேடுகளைப் பார்த்துக் கொண்டிருந்தால், இதுபற்றிய விவரங்கள் உங்களுக்குத் தெரியவரும்.

—ஆர். எம்.



## 10. ஆசியளிப்பது யாரோ ?




—சோம.மகாதேவன்.

வேலைக்காரனை அதட்டிப் பேசினால் கூடப் பிடிக்காதே அவனுக்கு. எளிதில் அவனுக்குக் கோபமும் வராதே.

இப்படித் தாயொரு பக்கம் பிள்ளையொரு பக்கமாகத் தவிக்க வைத்திருக்கும் போது, என்ன இருந்து என்ன செய்ய ? அவரிடம் இவனைப் பற்றிப் பேச முடியாது. இவனிடம் அவரைப் பற்றிப் பேச முடியாது. இனியும், இந்தப் பிறவியில், தகப்பனும் பிள்ளையும் கட்டித் தழுவிக் கொள்ளப் போகிறார்களா ?

அவரிடமும் சொல்லவில்லை. எப்படியோ நாலுபேர் நின்று பார்க்க, புறப்பட்டு இங்கே வந்தாகி விட்டது. இனித் திரும்பிப்போய் நிற்கும் போது, வாசலில் நின்று, அவர் என்ன சொல்லக் காத்திருக்கிறாரோ ?

சிவகாமியம்மாள் குனிந்து கண்களைத் துடைத்துவிட்டுக்கொண்ட போது, வாசலிலே சலசலப்புக் கேட்டது.

பாண்டியன் வந்து விட்டான்.

"ஐயா மகராசா ! மாட்டை அடிச்சாலும் பொறுக்காதே சாமி. உனக்கா இந்தப் பழி வந்து சேர்ந்திருக்கு" என்று வாசலில் நின்று கொண்டிருந்த கிழவி யொருத்தி, அழுகையும் குமுறலுமாகச் சொன்னது உள்ளேயும் கேட்டது.

சிவகாமியம்மாள் பதட்டத்துடன் எழுந்த போது, "அம்மா" என்றவாறு வேகமாக உள்ளே வந்தான் பாண்டியன்.

எங்காவது நேரிட்டாலன்றிச் சிவகாமியம்மாள் வாசற்படியைத் தாண்டுவதே அரிது.

ஊருக்குள்ளே, திண்ணைகளிலும் தெருவோரங்களிலும் கும்பல் கும்பலாகக் கூடி இதே பேச்சாகப் பேசிக் கொண்டிருக்கும் நேரத்தில் கண்டவர்களெல்லாம் பேசுவதை நிறுத்தி வியப்போடு பார்த்துக் கொண்டிருக்க உந்தித் தள்ளும் திகிலோடு, குனிந்த தலை நிமிராமல், இரண்டு தெருக்களையும் கடந்து, சிவகாமியம்மாள் ஊராட்சிக் கட்டடத்திற்குள் நுழைந்த போது, அங்கேயும் கூட்டம் நிறைந்திருந்தது.

அம்மாளைக் கண்டதும், சந்தடியின்றி, வெளியே போய் நின்று விட்டார்கள் கூடி இருந்தவர்கள். அத்தனைப் பேரும் வெளியூர்காரர்கள்.

அப்போதைக்குச் செய்வதின்னதென்றறியாது, கன்னையாவை மகனை அழைத்து வர அனுப்பிவிட்டு, நிலைகுலைந்து போய் உட்கார்ந்து விட்டாள் மீனாட்சியம்மாள்.

பெற்ற மனம் தவித்தது.

'கூடிக் குலாவி இருக்கவில்லை என்றாலும், பெற்றவை இரண்டும் கண்ணுக்கு முன்னால் இருந்தால் போதும்' என்ற ஆறுதலோடு இருக்கும்போது, இடையிலே இப்படியொரு தீவினை வந்து நிற்கிறதே !

என்ன நடந்ததோ ? இன்னும் என்ன நடக்குமோ ?

பாண்டியனே இப்படியும் அடித்திருப்பானா ?

I—10—6

பாசவெள்ளம் பெருக்கெடுக்க, மகனைக் கட்டித் தழுவிக் கொண்ட சிவகாமியம்மாளுக்கு, உள்ளுக்குள்ளே குமுறிக் கொண்டிருக்கும் துயரமெல்லாம் பொங்கித்தட்ட, அழுகையே முன்னால் வந்தது.

எது எப்படியோ போகட்டும். உள்ளமெல்லாம் உருக, அம்மா இப்படி அணைத்துக் கொள்ளும் பேறு கிடைத்ததே! இது ஒன்று போதுமே.

''அம்மா'' என்றழைத்தான் பாண்டியன் அந்த அன்புப் பிடியிலிருந்து விடுபடாமலே.

சிவகாமியம்மாளுக்குப் பேச முடியவில்லை.

''அப்பாவே அனுப்பி வச்சாங்களா ?'' என்று கேட்டான் பாண்டியன்.

விலகி, தலைக்குமேல் வளர்ந்து விட்ட மகனைப் பார்த்த சிவகாமியம்மாளின் கண்களில் நீர் திரையிட்டது.

''அவரோட வைராக்கியத்துக்கும், உன் துணிவுக்கும்




மத்தியிலே காலமெல்லாம் தவிக்க வச்சிட்டியேடா? கண்காணுமலாவது நிம்மதியா இருந்தாலே போதும்னு இருந்தேனே'' என்றபோது, பாண்டியன் குறுக்கிட்டு, உங்க மகன் இந்தத் தவறைச் செய்திருக்க மாட்டான்னு உங்களுக்கு நிச்சயமாத் தெரியும் இல்லையாம்மா ?'' என்று கேட்டான்.

மகனை ஏறிட்டுப் பார்த்தாள் தாய்.

அதே புன்னகை; அமைதி; இவன் செய்திருப்பானு? செய்திருக்க முடியுமா ?

''எனக்கு என்ன செய்யறதுன்னு தெரியலையே. எதுலே போய் முடியப் போகுதோ?'' என்றுள் சஞ்சலத்தோடு.

''முடிவு அப்பாவுக்குத்தான் தெரியும். என்னைப்பற்றி நான் எப்பவும் கவலைப்படலே. ஆனு, கட்டுப்பாடு, சம்பிரதாயம்ங்கிறதையெல்லாம் கடந்து, இருளடைஞ்சு போன நம்ம வீட்டிலே விளக்கேத்தி வச்சானே லிங்கம், அவனுக்கு நாம செய்யுற நன்றியாம்மா இது? பிறந்த வீட்டிலேயிருந்து, தகப்பன் மகளுக்குக் கொடுக்கிற சீதனமா ?'' என்று கேட்டான் பாண்டியன்.

''என்னைக் கேட்குறியேடா. நான் என்ன செய்யப் போறேன்?'' என்றுள், சிவகாமியம்மாள் கண்களில் நீர் வழிய,

''ஒண்ணு செய்யுங்க''.

''என்னடா ?''

''என்னுடவே இருங்க, அப்பா என்ன செய்யப் போருர்ன்னு பார்க்கலாம்.'' என்றுன் பாண்டியன்.

சிவகாமியம்மாள் விம்மலுடன் மகனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''உன்நெஞ்சு கல்லாகிப் போச்சாடா? டே பாண்டி, அவரைப் பிரிஞ்சு எனக்குன்னு தனியா ஒரு வாழ்வு இருக்குன்னு நினைக்கிறியா ?'' என்று உதடுகள் துடிக்கக் கேட்டவள், ''என் கூடவே வாடா, இது என் வீடுன்னு சொல்லி இரு.'' என்றுள் உத்தரவிடுவது போல.

''பாகம்னு பிரிச்சுக் கொடுத்துச் சொந்த பந்தமே இல்லைன்னு எழுதி வாங்கிட்டு அனுப்பிச்சிருக்காங்க. பெரியவங்க முடிவுக்குக் குறுக்கே வரலாமா ?'' என்று கேட்டான் பாண்டியன்.

''கொஞ்ச நாளையிலே உன் சித்தப்பன் எல்லாத்தையும் சுருட்டிக்கிட்டுப் போவான். அதுக்குத்தான் அடியெடுத்து வச்சிருக்கான்.''

'' சுருட்டிக்கிட்டு வேறே எங்கே போக முடியும். இங்கே தானே இருக்கப் போருரு. இருக்கட்டும். இப்ப விழுந்திருக்கிற முடிச்சை அத்து எறியும் போது தான், இவ்வளவு காலம் வாழ்ந்த வாழ்வுக்கு ஒரு எல்லைக் கோடாகவும், எடுத்துக் காட்டாகவும் இருக்கப் போகுது. அப்பத்தான் அப்பாவுக்குச் சித்தப்பனைப் பத்தி எல்லாமே தெரியப் போகுது '' என்றுன் பாண்டியன் அமைதியாக.

சிவகாமியம்மாள் கண்களைத் துடைத்துக் கொண்டு மகனை இமைக்காது பார்த்தாள்.

செய்தி காதில் விழுந்த பொழுதிலிருந்து, ஒரு வாய்த் தண்ணீரும் குடிக்காமல் அலமந்து போய் வந்து நின்றாலும், மகனைப் பார்த்துப் பேசியதில் சற்றே நிம்மதி பிறக்கிறது.

வரப்போவதை நினைத்துச்சிறிதேனும் கவலை இருக்கிறதா இவனுக்கு? இன்றைக்கும் விளையாட்டுப் பிள்ளையா ?

'' நிறையச் செலவாகுமாமேடா பாண்டி ?'' என்று கேட்ட சிவகாமியம்மாள், மடியிலிருந்து துணியால் சுற்றப்பட்ட நோட்டுக் கற்றையை எடுத்து, '' இப்ப இதை வச்சுக்கோ—தேவைப் படுறப்போ ஐயனுக் கிட்டக் கொடுத்தனுப்புறேன்'' என்றுள்.

பாண்டியன் சிரித்தான்.

''அம்மா—நான் தனியா நிக்கறதா நீங்க கலங்குறீங்க, ஆனு, அப்பாவும், சித்தப்பாவும் எனக்குப் பின்னுலே பெரிய படையே இருக்கிறதா நினைச்சுப் பயப்படுறுங்க. நியாயம்ங்கிறதை பணத்தை வச்சு மட்டும் பெற முடியும்னு நினைக்கிறீங்களா? நானும் பாகம் பிரிச்சுக்கிட்ட பங்காளி இல்லையாம்மா ? நீங்க எதை நினைச்சும் கவலைப் படாதீங்க. அப்பாகிட்டேயும், எதுக்கும் கவலைப்பட்டு உடம்பைக் கெடுத்துக்க வேண்டாம்னு சொல்லுங்க '' என்றுன்.

இப்படியொரு பிள்ளையைப் பெற்றதில், அழுவதா—சிரிப்பதா—என்பது தோன்றுமல், மகனைப் பார்த்தபடியே நின்ற சிவகாமியம்மாள், —தகப்பனுக்கும் பிள்ளைக்கும் மத்தியிலே நான்தான் சீக்கிரம் போய்ச் சேரணும். அதான் நான் தெய்வத்தை வேண்டிக்கிறது '' என்றுள் கண்களைத் துடைத்துக்கொண்டே.



தாயைப் பார்த்த பாண்டியனுக்கும் கண்கள் பனித்தன.

அம்மாவுக்குக் கெட்டதையே நினைக்கத் தெரியாது. நல்லது எதையும் அப்பாவுக்கு எதிராகச் சொல்லும் துணிவும் எப்போதும் ஏற்பட்டதில்லை. எதற்கும் 'உன் பாடு—அவர் பாடு' என்று ஒதுங்கிக் கொள்வார்கள்.

'' என்னடா பாண்டி ?'' என்று கேட்டாள் சிவகாமியம்மாள்.

'' என்னம்மா ?''

சற்றுத் தயங்கி, அரசி எப்படிடா இருக்கு? என்று கேட்டாள் பெற்றவள்.

'' கேட்கிறதுக்காவது உங்களுக்குத் துணிவு வருதான்னு எதிர்பார்த்துக்கிட்டே இருந்தேன். கேட்டுட்டீங்க. அரசி எப்படி இருக்கணும்னு நீங்க நினைக்கிறீங்க?''

'' என்னையே கேட்கிறீயா ?''

'' அரசிக்கு எந்தக் குறையும் எப்போதும் வராது. அரசி நிறைவோட வாழப் பிறந்த பெண்ணம்மா '' என்றுன் பாண்டியன்.

'' அந்த மீனம்மா கிழவி கொடுமைப்படுத்துறதா சொன்னுங்களே '' என்று கவலையோடு தான் கேட்டாள் மீனுட்சியம்மாள்.

பாண்டியன் சற்று நிதானித்து, உணர்ச்சிப் பெருக்குடன் சொன்னுன்.

''கண்ணில்லாதவங்க, காதும் கேட்காதவங்க, பேச மட்டும் தெரிஞ்சவங்க அப்படித்தான் சொல்லி இருப்பாங்க. பிறந்த மகளுக்கு இனியும் ஒரு வாழ்வு இருக்குன்னு, பெற்றவங்களே நம்ப முடியாம இருந்தப்ப, உற்றம் சுற்றம் எல்லாம் அவ னேன்னு நிக்கிற ஒரே பேரனுக்கு மனம் ஒப்பி, அமங்கலியா நின்ன உங்க மகளை மணம் முடிக்கச் சம்மதிச்சு, மாலை போட்டு ஏத்துக்கிட்டாங்களே, அந்தப் பாட்டியைக் கோயில்லே வச்சுக் கும்பிடணுமம்மா! அவங்க காலடியிலே அரசி மகிழ்ச்சியோடவே இருக்கு. எப்பவும் இருக்கும்'' என்றான்.

"கைக்குள்ளே இருக்கிற மகளைக் காணக்கொடுத்து வைக்கலையே'' என்று சொல்லிக் கண்களைத் துடைத்துக்கொண்டாள் சிவகாமியம்மாள்.

''இப்பக்கூட வந்து பார்க்கலாமே. ஆனா, அதுக்கும் துணிவு வேண்டியிருக்கு. இல்லையாம்மா?'' என்று கேட்டுச் சிரித்த பாண்டியனின் கவனம், அறையின் வாசலில் தயங்கியது.

சுவரோரமாக யாரோ நின்று கொண்டிருக்கும் நிழல் தெரிந்தது.

''யாரையும் உள்ளே அனுப்ப வேண்டாம்'' என்று கன்னியாவிடம் சொல்லி விட்டு வந்திருக்கும் போது, யார் இங்கே வந்து நிற்பது.

'யாரது' என்று கேட்டு வெளியே எட்டிப் பார்த்தபோது, பாண்டியனுக்கு வியப்பாகவே இருந்தது. இந்த நேரத்தில் இங்கே, டெய்சியை எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்.

சுற்றி இருப்பவர்கள் பேசப் பேச, மனத்திலே நிறைந்து விட்ட திகிலோடு, பாண்டியனைப் பார்த்துப் பேசினால் அல்லாது, மனது நிலை கொள்ளாது ஓடி வந்து நின்றபோது, கன்னியாவும் வழிவிட, உள்ளே நுழைந்து சிவகாமியம்மாள் இருப்பதைத் தெரிந்து திகைத்துப் போனாலும், பாண்டியனின் பேச்சிலே மெய்ம்மறந்து நின்று கொண்டிருந்தாள் டெய்சி.

பாண்டியன் பின்வாங்கி, தாயைத்திரும்பிப் பார்த்தவன், தயங்காமலே, ''உள்ளே வரலாமே டெய்சி'' என்று குரல் கொடுத்தான்.

டெய்சியின் நெஞ்சு படபடத்தது. உள்ளே நுழைந்து திகைப்புடன் தலைகுனிந்து நின்றாள்.

சிவகாமியம்மாள் அந்தப் பெண்ணையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அன்றைக்கு அவர் சொன்னது நினைவிற்கு வந்தது. சின்ன வயதிலெல்லாம் அங்கே வந்து, அரசியோடு விளையாடிக் கொண்டிருப்பாள் டெய்சி. வீட்டு வாசலிலே கை கட்டி நிற்பவன் மைக்கேல். இவள் இவனிடம் வந்து நிற்கிறாளே.

''அம்மா'' என்றான் பாண்டியன்.

''என்னடா?''

''டெய்சி சமத்துப் பொண்ணுன்னு நீங்களே சொல்லி இருக்கீங்க. அதான் இப்ப நினைவுக்கு வருது'' என்றான் பாண்டியன்.

சிவகாமியம்மாள் ஒன்றும் பேசவில்லை.

எதற்கோ சொன்னால், இவன் அதையே பிடித்துக் கொண்டிருக்கானே. இதிலும் இவனுக்கு இப்படியொரு துணிச்சலா?

தாயின் முகம் பார்த்த பாண்டியன் மேலும் சொன்னான்.

'' நாளை — பொன்னையா செத்துப்போய், இதுவே கொலை வழக்காகி, எனக்கு மரண தண்டனை கிடைக்கலாமில்லையா? இதை நினைச்சுத்தானே துடிச்சுப்போய், 'அப்பாகிட்டே கேட்காமலே மகனைப் பார்க்க வந்திருக்கீங்க. அதே துடிப்போடத்தான் டெய்சியும் வந்திருக்கு. இந்தப் பாச உணர்வு என்றைக்கும் நிலைக்க, நீங்க தானம்மா ஆசியளிக்கணும்'' என்றான்.

டெய்சியின் மெய்சிலிர்த்தது. பாண்டியனை ஏறிட்டுப் பார்த்தாள். அவன் கண்களால் என்ன சொன்னானோ?

முன்னால் வந்து, மண்டியிட்டு, சிவகாமியம்மாளின் பாதங்களைத் தொட்டு வணங்கினாள் டெய்சி.

சிவகாமியம்மாள், பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, வாய் திறந்து, ஏதோ சொல்ல வந்தபோது, வெளியே பலர் பெருங்குரலெடுத்துப் பேசுவது உள்ளேயும் வந்து மோதியது.

பாண்டியன் திகைப்புடன், திரும்பி, வெளியே செல்லக் காலடியெடுத்து வைத்த போது எதிரே ஆவேசத்தோடு வந்து நின்றான் மைக்கேல் கிழவன்.

''என்னங்க?'' என்று அமைதியாகவே கேட்டான் பாண்டியன்.

''நீங்க நினைக்கிறது ஒருக்காலும் நடக்காதுங்க. எங்க பிழைப்பிலே மண்ணைப் போடாதீங்க.'' என்று குமுறலோடு சொன்ன மைக்கேல், மகளின் பக்கமாகத் திரும்பி ''பாவி மகளே போகாதேன்னு சொல்லியிருந்தும் இங்கே வந்து நிக்கிறியா? வீட்டுக்கு வா. உன்னை வெட்டிப் போட்டாத்தான் மனசு ஆறும்'' என்றான், கோபத்தினால் உடல் பதற. '' பொறுமையா பேசுங்க. உங்க விருப்பத்துக்கு விரோதமா எதுவுமே நடக்காது'' என்று அமைதியாகவே சொன்னான் பாண்டியன்.

மைக்கேல், கோபம் குறையாமலே திரும்பினான்.

'' பேசுறதுக்கு எதுவுமே இல்லீங்க. மலைக்கும் மடுவுக்கும் போல, உங்களுக்கும், எங்களுக்கும் ஒத்து வராதுங்க. அடுத்த வாரம் இவளுக்குக் கல்யாணம் நடக்கப் போகுது. அதை நிம்மதியா நடக்க விடுங்க. நான் பிள்ளை குட்டிக்காரன்.'' என்றவன் மகளின் பக்கமாகத் திரும்பி, '' வா, வீட்டுக்கு '' என்றான் கொதிப்போடு.

டெய்சி, கண்களில் நீர்வழியப் பாண்டியனை ஏறிட்டுப் பார்த்தாள். சொல்ல நினைத்தது, உதடுகளின் துடிப்போடு உள்ளடங்கி விட்டது. தலைகுனிந்து, தகப்பனைத் தொடர்ந்து நடந்தாள்.

அழுவதா—அல்லது சிரிப்பதா என்பது புரியாமல், மகனையே பார்த்துக் கொண்டிருந்த சிவகாமியம்மாள், '' என்னடா மகனே?'' என்று கேட்டாள்.

'' அம்மா, போராடிப் பெறுவதுதான் நிலைச்சிருக்கும். இதுவும் பெரிய வீட்டிலேயிருந்துதான் தொடங்கியிருக்கு ''. என்றான் பாண்டியன் அதே புன்னகையோடு.

அப்போது, கண்கள் இரத்தம் போல் சிவந்திருக்கப் பரபரப்போடு, உள்ளே வந்துகொண்டிருந்தான் ஐயனு.

(வளரும்)





# சிறுவர் சோலையிலே

'பூங்கொடி'

ஒரு குழந்தை வருகிறது.

வயது நான்கு அல்லது ஐந்து இருக்கும்.

தன் பிஞ்சு இதழ்களைத் திறந்து மணிமணியாகச் சில சொற்களை உதிர்த்து அழகாய்ப் பாடுகிறது. அந்த மழலையின் அமுதம் நம் செவிகளில் அமுதமாய் இனிக்கிறது.

இந்த இனிய அமுதத்தை வழங்குபவர் யார் தெரியுமா?

சென்னை வானொலி நிலையத்தினர்தான்! ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலை 9·04 மணி அளவில் இந்த ''மழலை அமுத'த்தை நாம் பருகி மகிழலாம். உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டல்லவா? இந்த மயக்கத்தைப் போக்க ஓர் அழகான சோலையும் இங்கிருக்கிறது. அதுதான் 'சிறுவர் சோலை' ஞாயிறு பிற்பகல் 2-10 மணிக்கு ஒலிபரப்பாகும் இந்தச் சிறுவர் சோலை சிந்தைக்கு விருந்தூட்டும் வண்ணம் ஒலிக்கிறது.

சிறுவர்களைக் கொண்டு சிறுவர்களுக்காக நடத்தப்படும் இந்த மழலை அமுதம், சிறுவர் சோலை நிகழ்ச்சிகள் எப்படித் தயாரிக்கப் படுகின்றன?

அது ஒரு கதை!

கதையென்றால்தான் உங்களுக்கு மிகவும் பிடிக்குமே! இதோ, கேளுங்கள்!

மழலை அமுதம், சிறுவர் சோலை ஆகிய நிகழ்ச்சிகளைச் சென்னையிலுள்ள ஆறு இலட்சம் குழந்தைகளோடு பிற மாநிலங்களிலுள்ள குழந்தைகளும் விரும்பிக் கேட்கின்றன. கடல் கடந்து வாழும் தமிழ்க் குடும்பத்தினரும் இதனை வெகுவாக வரவேற்கின்றனர். நிகழ்ச்சிக்குப் பிறகு அவர்கள் எழுதுகின்ற கடிதங்கள் எல்லாம் மலைபோல் குவிந்து "வானொலி அண்ணாவை'' மலைக்க வைக்கின்றன.

ஆம். இந்நிகழ்ச்சிகளைத் தயாரித்தளிப்பவர் 'வானொலி அண்ணா' என்ற பெயருக்குள் மறைந்திருக்கும் திரு வெ. நல்ல தம்பி ஆவார். இவர் வாசிங்டனில் வாய்ஸ் ஆ·ப் அமெரிக்கா என்னும் வானொலியில் பணியாற்றியவர். நிகழ்ச்சிகளில் அவ்வப்போது பங்குபெறும் எம். எஸ். பாலசுப்புலட்சுமி. சி. வசந்தா ஆகியோர் நிகழ்ச்சி மேலும் சிறப்படைய உதவுகிறார்கள். இந்த நிகழ்ச்சிகளின் நிருவாகியாகத் திரு மு. கிருட்டிணமூர்த்தி பணியாற்றுகிறார்.

'மழலை அமுதம்' நிகழ்ச்சியில் எட்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள் பங்கு பெறுகின்றன; 'சிறுவர் சோலை'யில் 9 முதல் 15 வயது வரையிலுள்ளவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

> சென்னை வானொலியில் 'மழலை அமுதம்' 'சிறுவர் சோலை' ஆகிய நிகழ்ச்சிகளை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? இந்த நிகழ்ச்சிகள் எவ்வாறு தயாரிக்கப்படுகின்றன? இவற்றில் நீங்களெல்லாம் கலந்து கொள்ள முடியுமா? மற்ற நிகழ்ச்சிகளுக்கும் இந்த நிகழ்ச்சிகளுக்குமுள்ள வேறுபாடு என்ன? இவை போன்ற வினாக்களுக்கு விடை அளிக்கிறது இந்தக் கட்டுரை.

குழந்தைகளிடமுள்ள கலைத் திறனை வெளிக் கொணரும் நோக்கோடு இந்த நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக நிகழ்ந்து வரும் இந்தச் சிறுவர்க்கான நிகழ்ச்சிகள், புகழ்பெற்ற குழந்தை எழுத்தாளர்களால் எழுதப்பட்டு நடத்தப்படுகின்றன.

'மழலை அமுதம்' நிகழ்ச்சியில் பிஞ்சுக் குழந்தைகளின் பாட்டு, கதையோடு அவர்களே பேசக்கூடிய கிள்ளை மொழியினையும் கேட்டு மகிழலாம். 'சிறுவர் சோலை'யில், கதைப் பாடல், நாடகம், சொல்லோவியம், விஞ்ஞானப் புதிர்கள், வினாடி வினா, விடுகதை ஆகியவை ஒலிபரப்பாகின்றன. இதோடு குழந்தைகளின் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் கடிதக் கொத்தும் அவ்வப்போது நிகழ்கின்றன.

வழக்கமான நிகழ்ச்சிகள் தவிர சிறுவர், சிறுமியரின் சிந்தையைக் கவரக் கூடிய சிறப்பான இடங்களுக்குக் குழந்தைகளையே நேரில் அழைத்துச் சென்று சுவையான உரையாடல் மூலம் நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன. இவை கேட்போருக்கு நேரில் காண்பது போன்ற உணர்வை ஊட்டுகின்றன.

இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் முழுக்க முழுக்கப் பொழுது போக்கு நிகழ்ச்சியேயாகும். இது கல்வி ஒலிபரப்புப் போன்ற கற்பிக்கும் நிகழ்ச்சி அல்ல என்றாலும், இடையிடையே கருத்தறிவிக்கும் நிகழ்ச்சிகளும் இதில் இல்லாமல் இல்லை.

இந்தப் பகுதியில் சில சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன. ஆண்டுதோறும் குழந்தைகள் நாளன்று ஒரு பொது அரங்கில் குழந்தைகளைக்கொண்டு நாடகம், இசை, நடனம் முதலான கலை நிகழ்ச்சிகள் பொது மக்கள் முன்னிலையிலேயே நடத்தப்படுகின்றன. புத்தாண்டு, பொங்கல், சுதந்தர நாள் ஆகிய நாட்களிலும் இது போன்ற கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு பிறகு வானொலியில் ஒலிபரப்பப்படுகின்றன.

மூன்று மாதங்களுக்கு நடைபெற வேண்டிய நிகழ்ச்சிகளை எல்லாம் முன்னதாகவே திட்டமிட்டுத் தயாரிக்கப்படுகின்றன என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும். குழந்தைகளிடமுள்ள திறமைகளை வெளிப்படுத்தி அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து வருகிறது வானொலி நிலையம் என்றால் அது மிகையல்ல. குழந்தைகளின்




அறிவு வளர்ச்சியில் ஆர்வமுடைய இந்நிலைய இயக்குநர் திரு வி. கிருட்டிணசாமி, உதவி இயக்குநர் திரு ஆர். சேதுராமன் இந்த இரு நிகழ்ச்சிகள் மேலும் மேலும் வளர்ந்திடத் துணையாக விளங்குகிறார்கள்.

வானொலியில் பங்கு பெறும் சிறுவர்களுக்காக ஒரு சங்கம் இருக்கிறது. இதற்கு 'வானொலி சிறுவர் சங்கம்' என்று பெயர். இந்தச் சங்கங்கள் சென்னை நகரில் நாற்பதுக்கு மேல் இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் தலைமைச் சங்கமாகச் சென்னை வானொலிச் சிறுவர் சங்கப் பேரவை' பதினேறு ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இதன் தலைவர் புலவர் தணிகை உலகநாதன். இந்தச் சங்கக் குழந்தைகள் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதோடு மட்டும் நின்றுவிடவில்லை. பொது நலப் பணியிலும் ஆர்வம் செலுத்துகிறார்கள் என்றால் அவர்கள் பிஞ்சு உள்ளத்தை நெஞ்சார வாழ்த்த வேண்டாமா ?

1961-ஆம் ஆண்டு தஞ்சை மாவட்ட வெள்ள நிவாரண நிதிக்குக் கலைவாணர் அரங்கில் நடந்த கலை நிகழ்ச்சிகள் மூலமாக இந்தக் குழந்தைகள் ஆயிரம் ரூபாயை அள்ளி வழங்கினர். பாகிஸ்தான் படையெடுப்பின் போது, 'இந்தக் குழந்தைகளால் நடத்தப் பெற்ற நவமணிமாலை நிகழ்ச்சிகள் மூலமாகக் கிடைத்த நாலாயிரம் ரூபாய் தேசியப் பாதுகாப்பு நிதியில் சேர்த்தது அரிய செயலல்லவா ?

சென்னை வானொலியில் பல நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன. மகளிர், மாணவர், தொழிலாளர் போன்றோருக்கென தனி நிகழ்ச்சிகள் உண்டு. குழந்தைகளுக்காக ஒலிபரப்பப்படும் இந்த நிகழ்ச்சி ஒரு முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது. காரணம், இதில் 75 சத விகிதம் ஒலிப்பதிவு செய்யாமல் நேரிலேயே நிகழ்ச்சிகள் நடத்தப் படுகின்றன.

மழலை அமுதம், சிறுவர் சோலை ஆகிய நிகழ்ச்சிகளைக் கேட்கும் எண்ணற்ற குழந்தைகளுக்கு ஓர் ஆவல் எழுவதுண்டு. அது, நாமும் இதில் கலந்து கொள்ள முடியுமா ? என்பது தான்.

இதற்குப் பதில், சென்னை நகரைச் சுற்றியுள்ள குழந்தைகள், செங்கற்பட்டு மாவட்டம், வேலூரில் உள்ள குழந்தைகள் மட்டுமே இவற்றில் கலந்து கொள்ள முடியும் என்கிறார் வானொலி அண்ணா. ஏனைய பகுதிகளில் உள்ளவர்கள், அவர்களுக்கு அண்மையில் உள்ள திருச்சி, பாண்டிச்சேரி நிலையங்களில் கலந்து கொள்ளலாம்.

சென்னையில் கூட, எல்லாக் குழந்தைகளுக்கும் இந்த வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லிவிட முடியாது. முதலில் அவர்களுக்குக் குரல் நன்றாக இருக்க வேண்டும். இது மிகவும் முக்கியம். குரல் தேர்வுக்குப் பிறகுதான் அவர்கள் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளத் தகுதி பெறுகிறார்கள். நிகழ்ச்சிகளுக்கு முன் குழந்தைகளுக்குப் போதுமான அளவு பயிற்சி அளிக்கப்படுகிறது.

நிலையத்துக்கு வந்ததும் சில குழந்தைகள் பாடுவதற்குப் பதில் தேம்பி அழுவதுமுண்டு !



### அறுவைச் சிகிச்சைக்கு அற்புத ஒளிக் கதிர்

இஸ்ரேல் நாட்டில் பெட்டா திக்வா என்னும் இடத்தில் உள்ள பெல்லின்சன் மருத்துவ மனையில் வழக்கம் போலச் செய்யப்படுகின்ற அறுவைச் சிகிச்சை முறைக்கு மாறாகப் புதிய அற்புதமான ஒளிக் கதிர் முறையைக் கையாளுகின்றனர். இதற்கென இம்முறையில் நான்கு இயந்திரங்கள் அமெரிக்காவில் பயன்படுத்தப் படுகின்றன; ஆனால் இவைகள் விலங்கினங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டன.

இந்த மருத்துவமனையில் 33 நோயாளிகளுக்கு இப் புதிய முறை பயன்படுத்தப் பட்டது; ஏற்கெனவே இந்த முறையினால் ஏற்படுகிற விளைவுகள் திருப்திகரமாக உள்ளன. இப் புதிய முறையின் மூலம் நோயாளிக்கு அறுவைச் சிகிச்சையின் மூலம் வீணாகும் இரத்தமும் தடுக்கப்படுகிறது; நரம்புகளும், இரத்தக் குழாய்களும் பாதிக்கப்படுவதில்லை. மூளை அறுவைச் சிகிச்சை முதல், தோல் புற்று நோய் வரை இப்புதிய முறையில் மருத்துவம் செய்யப்பட்டுள்ளது இந்த முறைச் சிகிச்சையின் மூலம் புண் சீக்கிரம் ஆறாமல் இருக்கும். இதையும் சரி செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படும்.

சில குழந்தைகள் பயத்தினால் அரைகுறையாகச் சொல்லிவிட்டு ஓடிவிடுவதுமுண்டு ! இன்னும் சில குழந்தைகள் வாயே திறப்பதில்லை ! இந்தச் சமயத்தில் இவர்களைச் சாமர்த்தியமாகச் சரிப்படுத்தத் தயாரிப்பாளர் தயாராக இருக்க வேண்டும்!

நாளையத் தலைமுறையினரை, வருங்காலச் செல்வங்களைக் கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாகத் உருவாக்கும் சாதனங்களில் வானொலிக்குச் சிறப்பான இடமுண்டு. குழந்தை இலக்கியத்துக்கு அது புரியும் தொண்டு போற்றத் தக்கதாகும். குழந்தைகளையும், பெரியவர்களையும் குதுகலப்படுத்தும் இந்தக் குழந்தைப் பகுதி, குன்றிலிட்ட விளக்காய்த் திகழ்கிறது என்றால் அது வெறும் புகழ்ச்சியில்லை. உண்மை.

# BHEL OFFERS

## MEDIUM AND HIGH PRESSURE VALVES FOR OIL, STEAM & NON AGGRESSIVE FLUIDS

Quality-built from high class pore-free, fine and uniform grained cast/forged/carbon alloy and stainless steel. All valves are subjected to hydraulic, air, steam and radiographic (X-ray) tests besides exhaustive manufacturing stage inspections.

Standardised spares for minimum and economical stocking.

| |
|---|
| Pressure ranges: 10—250 kg./sq. cm. |
| Temperature ranges: Upto 550°C. |
| Sizes: 10—800 mm |

Also to A.P.I. Standards in 150, 300, 600 and 900 lbs. ratings

BHEL valves conform to Indian Boiler Regulations and are certified by the Chief Inspector of Boilers or by Lloyds Surveyor, on special request.

BHEL assures prompt deliveries of supplies. BHEL valves are backed by efficient after-sales service by their highly trained engineers and technicians.




**BHEL VALVES**
Foremost in fluid flow control

For complete details, Contact:
Commercial Manager,
BHARAT HEAVY ELECTRICALS LTD.
(A Govt. of India Undertaking)
Unit: High Pressure Boiler Plant, TIRUCHIRAPALLI-14.
Regd. Office: 5, Parliament St., New Delhi-1

BHEL/CPO-80/79-2






# வீரமகன் செண்பகராமன்

சுத்தானந்த பாரதியார்

இந்திய விடுதலை, புகழ்ப் பின்னணி படைத்தது. அந்த விடுதலைப் போரில் தமிழகம் முன்னணியில் நிற்பது. வட நாட்டில் நானாசாகிபு விடுதலைப்போர் முரசு கொட்டு முன்பே தென்னாட்டில் விடுதலைக் கொடி உயர்த்தி, நமது வீரர் ஆட்சி செலுத்தினர். முத்துவடுகநாதர், வேலு நாச்சியார், வீரத் தேவன், பெரியமருது, சின்னமருது, கட்டபொம்மு, ஊமைத்துரை, நீலமேகம், சுப்பிரமணியபிள்ளை, வேலுத்தம்பி முதலிய வீரரை நாம் மறக்க முடியாது. இவருள் வேலுத்தம்பி பத்மனாதபுரத்தருகே வேணாட்டிற் பிறந்த நாயர்; தமிழ் கற்றவர்; முருக பக்தர்; வாள் வீரர்; போர்ப்புலி; அவர் மக்கள் தலைவர்; அவர் நாவசைத்தால் நாடசையும். அவரது திறமைகளைப் போற்றிப் பாலராம வர்மா அவரைத் தமது திவானாக ஏற்றார். வேலுத்தம்பி திருவாங்கூர் அரசின் உரிமையைப் பாதுகாத்து, நமது நாட்டை நயவஞ்சகச் சூழ்ச்சியால் அடிமை செய்த கும்பினி வெள்ளையரைக் குமைக்கத் துள்ளியெழுந்தான். தன்னைக் கொல்ல வந்த வெள்ளையரைக் கொட்புற்றெழுந்து வீழ்த்தினான். இறுதியில் ஒரு துரோகி அவனைக் காட்டிக் கொடுத்தான்.

வெள்ளையர் கையில் சிக்கிய பிறகும் வேலுத்தம்பி தப்பியோடி ஒரு கோயில் மண்டபத்தில் ஒளிந்தான். அங்கும் பிரிட்டிஷ் படை சூழ்ந்தது, மிடுக்கான இடர்நிலையில் தனது கத்தியை எடுத்துத் தற்கொலை புரிந்து கொண்டான். தனது தம்பியை வெட்டச் சொல்லி இறந்தான்.

அந்தக் கத்தி திருவாங்கூர் ஆயுதக்காட்சிசாலையில் உள்ளது. அதை ஒரு போலீஸ்காரர் கையில் எடுத்துக் கண்ணில் ஒற்றி முத்தங் கொஞ்சி ''வேலுத்தம்பி, உன்போலஎனக்கொரு வீரன் உண்டாக அருள வேண்டும்'' என்று கண்ணை மூடிக் கருதுகிறார். தம் மனைவிக்கு வேலுத்தம்பியின் வீர வரிசைகளைச் சொல்லுகிறார். அந்த அம்மாள் வேலுத்தம்பி மரபில் வந்தவள். இந்த இருவரின் கருத்துருவம் ஒரு மகனாக உருவெடுத்தது. அந்த வீர மகனே செண்பகராமர்.

செண்பகராமர் 15–9–1891-ல் திருவனந்தபுரத்தில் பிறந்தார். மூன்று வயதிலேயே நன்றாகப் பேசினார். தந்தை சின்னசாமி அவருக்கு வேலுத்தம்பியின் வீர வரலாற்றைச் சொல்வதுண்டு. தாய்ப்பாலுடன் வீரக்கனலும் அவருட் புகுந்து இரத்தத்திற் கலந்தது. தாய் நாகம்மை தமிழிற் பயிற்சியுள்ளவள். வீர மறவர் கதைகளைச் சொல்லி மகனை வீறுபடுத்துவாள். செண்பகராமரின் ஐந்து வயதில் அவருக்கு ஒரு தமிழாசிரியர் அமைந்தார். அவர் பள்ளிப் புலவர். திருக்குறளை ஒவ்வொரு நாளும் ஓதிச் சிந்திப்பவர். திருக்குறட் கருத்துக்களை நண்பருக்குத் தெளிவாக விளக்குகிறவர். அவர் பேச்சைக் கேட்டுக் கேட்டுச் செண்பகராமர் மனம் குறளமுதில் ஊறித் திளைத்தது.

'' எண்ணித் துணிக கருமம்;
உள்ளத்தனையது உயர்வு; எண்ணிய எண்ணியாங்கு எய்துப
எண்ணியார் திண்ணியராகப் பெறின் '' என்ற கருத்துக்கள் அவரது மனத்திட்பத்தையும், வினைத் திட்பத்தையும் வளர்த்தன. செண்பகராமர் தமிழ்ப் பள்ளியில் இரண்டாண்டுகள் படித்தபிறகு, அரசர் உயர்நிலைப் பள்ளியிலே பயின்றார். அவருக்குக் கணக்கில் கருத்திருந்தது. சிறு வயதிலேயே கடைக் கணக்கு வைத்தல், வீட்டுத் தேவைகளை வாங்கி வருதல், தாய்தந்தையர் கட்டளையை நிறைவேற்றல்—ஆகிய அலுவல்களைத் திறம்பட ஆற்றினார். அத்துடன் தகப்பனார் நடத்தும் கபாத்து, வாள் வீச்சு, துப்பாக்கி சுடுதல் முதலிய வீரப் பயிற்சிகளில் ஊக்கங் கொண்டார். பள்ளித் தோழரைப் படை திரட்டி ''வலது, இடது'' போட்டு வழிநடைப் பயிற்சியளிப்பதுண்டு. அவர் இருந்த தெருவில் ஒரு பயில்வான் உண்டு; அவர் குஸ்தி, சிலம்பம் முதலிய வீர வேலைகள் பயிற்றினார். அங்கே செண்பகராமரும் சென்று பயின்றார்.

* * *

இந்தச் சமயம் பம்பாயில் திலகரும், பஞ்சாபில் லாலா லஜபதிராயும், வங்கத்தில் விபின் சந்திரபால், அரவிந்தர் போன்றோரும், தெற்கே சிவா, சிதம்பரம்பிள்ளை, பாரதி முதலியோரும் செய்த நாட்டுப் பணியில் அவரது கவனம் சென்றது. செய்தித் தாள்களை வாங்கிப் படித்துச் சிறுவயதிலேயே அவர் நாட்டன்பு மிகுந்தார். நாட்டன்பைச் செயலிற் காட்டவும் முனைந்தார்.

அரவிந்தரை அலிபூர், சிறையிலிட்டதும், திலகரை மாந்தலைக்கு அனுப்பியதும், சிதம்பரம் பிள்ளை கண்ணனூர்ச் சிறையில் செக்கிழுத்ததும்—லாலாஜியை நாடு கடத்தியதும் அவருக்கு ஆத்திரமளித்தன. பாரத நாட்டு விடுதலையே அவரது இளங்கனவானது. இத்துடன் நமது நாடு சாதி சமய வேறுபாடுகளால் ஊறுபட்டுழலும் மாமூல் மூடப்பிடிவாதங்களும் அவர் கண்களை உறுத்தின.

> அகில பாரதத்தில் உள்ள
> யாவரும் சமானமே!
> அனைவரும் சுதந்தரம்
> அடைவது தன்மானமே!

என்ற கருத்து அவர் உள்ளத் துடிப்பானது. இந்த வாலிபன் பள்ளிப் பிள்ளைகளைக் கூட்டித் திலகரின் தேசபக்தியைப் பற்றிப் பேசி வந்தான். தகப்பனார் ஆங்கில அரசாங்க ஊழியரா



உரிமையைத் தருவதற்குத் தியாக உணர்ச்சியும் தீரமும் அதிகம் தேவை.

யிருப்பதுகூட அவனுக்குப் பிடிக்கவில்லை. போலீஸ் தந்தை மகனைக் கண்டிப்பதுண்டு; மகனின் மனத்திட்பம் மாறவில்லை.

* * *

பதினைந்து வயதுப் பிள்ளை படிப்பை விட்டான்; அரசினர் பள்ளியில் படிப்பதும் தன்மான உணர்விற்குத் தகவில்லை எனக் கருதினான். சுதேசி இயக்கத்தில் அவன் உள்ளம் ஊக்கங் கொண்டது. ஆனால் நமது நாட்டின் சாதிமதப் பிரிவினையும், வறுமை மடமைகளும், ஒருப்படா வெறுப்புகளும் அவன் மனத்தை உறுத்தின. பழைய குட்டத்திலேயே ஊறிப் பதங்கெட்டுத் தவிக்கும் சமுதாயத்திற்குப் புதிய வாழ்வை அவன் வேண்டினான். தீண்டாமை, தீயர் குலத்துயரங்களை ஒழிக்க முற்பட்டான்.

* * *

அவன் எண்ணங்கள் எதையோ தேடித் திரியும்போது வால்டர் வில்லியம் என்ற ஜெர்மானியர் இந்த வாலிபனைக் கண்டுபிடித்தார். திருவாங்கூரில் இவர் மாணவரிடையே உரிமை வேட்கையைக் கிளப்பினார். அந்தக்காலம் வில்லியம் தலைமையில் ஜெர்மனி ஓர் உலகப் போருக்கே ஆயத்தம் செய்து கொண்டிருந்தது. கெய்சரின் ஒற்றர் உலகெங்கும் சென்று ஜெர்மனிக்கு ஆதரவு தேடினர். அப்போது பெர்லினிலும் ஹாம்பெர்க்கிலும் இந்தியச் சுதந்தர வீரர் புகலடைந்து புரட்சி இயக்கத்தை நடத்தினர். அவர்கள் வாழ்ந்த இடத்தை நான் நேரே பார்த்திருக்கிறேன். வால்டர் வில்லியம் செண்பகராமர் உள்ளத்தில் விடுதலை வேட்கையைப் பலமாகத் தூண்டினான். மலையாளத்தில் தீயர்கள் படும்பாடும், வைதிகப் பித்தரின் சாதிவெறியும் நேரே கண்ட வில்லியம் இந்திய நாட்டுக்கு இரண்டு விடுதலை இயக்கத்தை வேண்டினான். 1. பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை, 2. சமூகக் கொடுமையிலிருந்து விடுதலை. இந்த இரண்டும் செண்பகராமர் உள்ளத்தில் அழுத்தமாகப் பதிந்தன. வால்டர் வில்லியத்திடம் அவருக்குப் பற்று முற்றியது. உறவினர் கட்டுப்பாடு பிடிக்கவில்லை. மேலும் அவருக்குமேனாடுசென்று நல்ல கல்வி கற்க வேண்டும்என்ற அவா இருந்தது. ஒரு நாள் திருவனந்தபுரத்தில் கப்பலேறி இருவரும் கொழும்புக்கு வந்து சேர்ந்தனர். செண்பகராமனுக்கு வில்லியம் ஜெர்மன் மொழி பயிற்றி வந்தார். கொழும்பிலிருந்து இருவரும் ரோமுக்கு வந்தனர். அங்கே செண்பகராமன் இத்தாலிய மொழியைக் கற்றுத் தொழிற் கல்விக் கல்லூரியிற் சேர்ந்து பொறியியல் வகுப்பிற் படித்தார். இயந்திரக் கலையுடன் பீரங்கிகள் குண்டு செய்யும் வகையும் பயின்றார். ரோமில் படிப்பு முடிந்ததும் செண்பகராமர் பெர்லின் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி நடத்தி டாக்டர் பட்டம் பெற்றார்.

* * *

அப்போது இலண்டனில் ஒரு புரட்சி இயக்கம் உருவானது. சாவர்க்கார், வ.வே.சு. ஐயர், திருமலாசாரியார், வீரேந்திரர் மாதாம் காமா, சாமாஜி கிருஷ்ணவர்மா ஆகிய பல வீரப் புலிகள் இலண்டனிலும், பாரிசிலும் பெர்லினிலும் பாசறை அமைத்துப் புரட்சிக்கு எழுச்சியளித்தனர். இலண்டன் இந்திய விடுதலையில் சாவர்கார், ஐயர், திங்கிரா ஆகிய தீவிர வாலிபர் விடுதலைப் புரட்சி நடத்தத் தம்மைப் பயிற்றினர். இவர்கள் ஜெர்மனிக்கும் ரஷ்யாவிற்கும் தமது ஆட்களை அனுப்பி வெடிகுண்டு செய்யக் கற்றனர். அவர்கள் இயக்கம் வங்காளம், பஞ்சாப், மராட்டியம், தமிழகம், ஆந்திரம் நியூயார்க் ஆகிய இடங்களுக்கெல்லாம் பரவியது. இந்த இயக்கத்திற்குச் செண்பகராமர் உறுதுணையானார். அவர் பெர்லினில் அனைத்து நாட்டு இந்தியக் குழு (India International Committee) நாட்டினார். பெர்லினில் அனைத்து நாட்டு அரங்கு நடந்தது. அதில் மாதாம்காமா தயாரித்த இந்தியக் கொடி பறந்தது. அந்தக் கொடியை மாக்ஸிம்கோர்க்கியும் பார்த்துப் போற்றினார். லெனினும் இந்திய விடுதலை இயக்கத்தை ஆதரித்தார். இலண்டனில் டிங்கிராகர்சான் வில்லியைச் சுட்டான். அவன் புன்னகையுடன் தூக்குமேடை ஏறி ''நாட்டுக்காக உயிர்கொடுத்து மகிழ்கிறேன்! எந்தாய் வாழ்க!'' என்று இறந்தான். இதன் பிறகு ஐயர் பாரிஸ் சென்றுமாதாம்காமாவுடன் தங்கி போர்ப் பயிற்சி பெற்றுப் புதுச்சேரி வந்து புரட்சி இயக்கத்தைத் தொடர்ந்து நடத்தினார். பாரிசில் செண்பகராமர் ஐயரைப் பார்த்தார். திருமலாசாரியார் பெர்லினில் வசித்தார். செண்பகராமரைச் சுற்றி இந்திய சுதந்தர வீரர் கூடினர்.





* * *

1914-ஆம் ஆண்டு உலகப் போர் உறுமி எழுந்தது. செண்பகராமர், சுபாஷ் போசின் முன்னோடியாக, ஜெர்மன் துணைக் கொண்டு, இந்திய விடுதலைக்குப் பாடுபட்டார். கைசர் வில்லியம் இவரைக் கப்பல் போருக்குப் பயிற்றினார். முன்பே துப்பறிந்த ஒற்றர் வால்டர் வில்லியம் இந்தியச் சுதந்தர வீரருடன் இரகசிய உறவு கொண்டு, வழிதுலக்கினார். பெர்லினில் குடியேறிய ஆசாரியார் போன்ற வீரர், இங்கே வ.வே.சு. ஐயர் போன்ற தீரருடன் இரகசியமான வட்ட எழுத்தில் செய்திகளை அறிவித்தனர். சீன வீரர் சன்யத்சன்னுடனும் உறவு கொண்டனர். எம்டன் கப்பல் புறப்பட்டது. அதன் தலைவர் வான்முல்லர்; துணைத் தலைவர் (Vice Admiral) நமது செண்பகராமர்.

* * *

மிகச் சுறுசுறுப்பானவனை ''நீ எம்டன்டா'' என்பதுண்டு. எம்டன் நீர்மூழ்கிக் கப்பல் மின் வேகத்தில் கடலை உழுது செல்லும். யாரும் காணமுடியாமல் குறித்த இடத்தில் இருந்து குறித்த பேருக்குச் செய்தியனுப்பும். அதை யாரும் தாக்கமுடியவில்லை.

எம்டன் அட்லாண்டிக் கடலைத் தாண்டி, தென்னாப்பிரிக்காவைத் தாண்டிப், பம்பாயைத் தாண்டி, திருவனந்தபுரம் வந்து, கன்னியாகுமரியைச் சுற்றிச் சென்னை வந்து குண்டு போட்டது. நம்மவர் அஞ்சி நடுங்கினர். இதனிடையே கைசர் கிருஷ்ணாவதாரம், நமது நாட்டு விடுதலைக்கு வந்தார் என்றும் பொதுமக்களிடையே பேச்சுப் பரவியது. எம்டன் புதுச்சேரியிலிருந்து மூன்று மைல் தொலைவில் நங்கூரம் போட்டு மறைந்திருந்தது. ஐயருக்குச் செய்தி எட்டியது. ஐயர் மாடசாமியுடன் என்னை அனுப்பினார்.

மாடசாமி, அசகாய வாள் வீரர். வாள் கத்தி வீச்சில் சூரப்புலி. அலெக்சாண்டர் டூமாஸ் நாவலில் வரும் அர்த்தாங்கன் போல் வீரவரிசைகளை வியன்பெறக் காட்டும் வித்தகர். அவரே ஐயரின் வலது கை. ஐயர் அவரையே இந்தியப் புரட்சிக்காரரிடமும், செல்வரிடமும், தூதனுப்பினார். புரட்சி அறிக்கைகளைப் பரப்பி அங்கங்கே தலைமறைவாயிருந்து வேலை செய்தார் மாடசாமி. நானும் ஐயருக்கு உட்கையாயிருந்து ஆசிரியராகவும், பண்டாரமாகவும் நம்மவரிடையே புகுந்து வேலை செய்தேன். மாடசாமி, நிலம் உழுது பயிரிடுவார். வாள்பிடித்துக் களங்காண்பார். பெரிய கோட்டை கொத்தளங்களைத் தாவிச் செல்வார். படகோட்டுவார். மீன் பிடிப்பது போலத் துறைமுகங்களில் அரசியல் வலையை வீசுவார். அவருக்கு மனைவி, மக்கள், வீடு, சொத்து எதிலும் பற்றுதலில்லை. குகனைப் போல ஐயர்பணி செய்வதே அவர் இன்பம். ஐயர் கடிதம் தந்தார். மாடசாமி மீன் படகோட்ட, இரவு ஒரு மணிக்கு நானும் இன்னொருவரும் எம்டனை அடைந்து செண்பக ராமரைப் பார்த்தோம்.

ஆள் மாநிறம், கட்டுமஸ்தான கம்பீரத் தோற்றம். ஐரோப்பிய உடை, தொப்பியைக் கையில் ஏந்தி நின்று எங்களை உள்ளே ஏற்றி உடனே கடிதத்தைப் படித்து, ''சிங்கப்பூர் சென்று திரும்புவோம்; தயாராயிருங்கள்'' என்று வட்ட எழுத்தில் பதில் தந்து, ஒரு பெட்டியும் அளித்தார். அதில் பணம் இருந்தது எனத் தெரிந்தது.

மாடசாமி படகோட்டி ஒரு மைல் வந்தபோதே எம்டன் முப்பது மைல் தாவிச் சென்று விட்டது.

* * *

ஐயர் எங்களைத் தட்டிக் கொடுத்து மெச்சினார். சண்பகராமர் உதவியால் தமிழகமெங்கும் சுதந்தர உணர்ச்சி பறந்து பரவியது. புரட்சி அறிக்கைகள் வரும்; எங்கிருந்து. எப்படி என்று யாரும் அறியார்.

* * *

எம்டன் எத்தனையோ இடங்களைத் தாண்டி அந்தமான் வழியாகச் சென்று, அங்கிருந்த சாவர்க்கார் முதலிய வீரர்களுடன் உறவு கொண்டு, சிங்கப்பூர் அருகே பாய்ந்தபோது, பிரிட்டிஷ் கடல் வீரர் அதைச் சுட்டனர். கப்பல் மூழ்கியது; செண்பகராமர் கடலுள் ஆழ்ந்து, முக்குளித்து நீந்தித் தப்பி, மாறுவேடம் பூண்டு, நாடெல்லாம் சுற்றித் தமது மனைவி இலட்சுமியைக் கண்ட பிறகு, பல விடுதலை வீரரையும் கண்டு, ஜெர்மன் ஒற்றர் துணையாலே காபூல் சென்றார்.



* * *

காபூலில் எனது நண்பர் ராசாமஹேந்திரப் பிரதாவுடன் கூடி ஒரு தனி-இந்திய அரசை நாட்டினார். மகேந்திரர் ஜப்பானில் என்னுடன் சுற்றுப் பயணம் செய்தபோது பல அரிய நிகழ்ச்சிகளைச் சொன்னார். மகேந்திரர் செண்பகராமருடன் மாஸ்கோ சென்று லெனினைக் கண்டு பேசி இந்திய விடுதலைக்கு ஆக்கந் தேடினார். லெனின் அப்போது ஜாரை வீழ்த்தி உலகுக்கு ஒரு புதுமையான பொதுவுடைமையை நாட்டினான். அந்த வகையில் இந்தியா விடுதலை பெறவே செண்பகராமர் முயன்றார். ''ஜெய்ஹிந்த்'' என்னும் மந்திரநாதம் அவர் உள்ளத்திலிருந்தே புறப்பட்டது.

* * *

செண்பகராமர் சுபாஷ்சந்திர போசின் நெருங்கிய நண்பர். இருவரும் ஜெர்மன் உதவியால் விடுதலைப் புரட்சி நடத்த முனைந்தனர். இதற்கு இட்லர் உறுதுணையானார். இரண்டாவது உலகப் போர் மூண்டது. சுபாஷ், வீட்டுக் கைதியாயிருந்து, தாடி வளர்த்துக் கொண்டு தப்பிச் சென்று, காபூல் வழியே, மாஸ்கோ புகுந்து பெர்லினையடைந்து, செண்பகராமருடன் கூடினார். அப்போது அவர் வயது ஐம்பது. இருவரும்இட்லர்-நட்பைப் பெற்று இந்தியப்படை சேர்த்து (Indian National Army) போர் முரசு கொட்டியெழுந்தனர். அப்போது இங்கே கிரிப்ஸ் தூது வந்தது. இட்லர் சுபாஷை இந்திய நாட்டுத் தலைவராக்கினார். அவரை நீர் மூழ்கியில் நேராகச் சிங்கப்பூருக்கு அனுப்பினார். இதற்குள் ஜப்பான் டம்டமார் குண்டு போட்டுச் சீனத்தை வென்று உலகம் கிடுகிடுக்க இந்தியாவின் மீதும் பாய்ந்தது. சுபாஷ் போஸ் நேதாஜியாகி அங்கே வந்து இந்தியப் படையை நடத்தினார். பர்மாவிலும் மலேயாவிலும் வெற்றி பெற்று ஜப்பான் துணையால் அந்தமானில் அரசு நாட்டினார்.

இங்கே காந்தியின் ''இந்தியாவை விட்டுப் போ'' (Quit India) இயக்கம் பலமானது. சுபாஷின் நெஞ்சுரத்தால் இந்தியாவுக்குப் புதிய பலம் வந்தது. வைசிராய் வாவெல் கலங்கிப் போனார். கிரிப்ஸ் தூதும் வந்தது... 26—5—1934-ல் செண்பகராமர் ''இந்தியா விடுதலை பெறும், பெற்றுவிட்டது; என் வாழ்வின் குறிக்கோள் வென்றது. ஜெய்-ஹிந்த்'' என்று கூவி மாரடைப்பினால் இறந்தார். சுபாஷ்போஸ், ''இறுதி மூச்சுள்ள மட்டும் இந்தியாவுக்கே உயிர்த்த வீரர்'' என்று செண்பகராமரை வாழ்த்தினார். செண்பகராமர் இந்து மதப் பற்றுடையவர். பெர்லினில் இருந்து அவரது சாம்பலை, அவர் மனைவி இலட்சுமிஅம்மாள் 1966ல் நாஞ்சில்நாட்டிற்குக்கொணர்ந்து ஈமக் கடன்களை முடித்தார்.

செண்பகராமர் நிரம்பக்கற்றார்; நிரம்பப் பாடுபட்டார். இந்திய விடுதலைக்கே இறுதி மூச்சுள்ள வரையில் தொண்டு செய்து நிறைவான மனத்துடன் உடலை நீத்து, உலகுள்ள மட்டும் வாழும் புகழ் பெற்றுலாவுகிறார். ''தோன்றிற் புகழொடு தோன்றுக.''



# காந்தி இல்லம் காணவாரீர்!



சென்னை அண்ணாசாலையிலுள்ள அரசினர் தோட்டம்.

அங்கே அண்ணல் காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவில் தமிழ்நாடு அரசு அமைத்த நினைவுச் சின்னம்தான் காந்தி இல்லம்.

வெள்ளையர் காலத்திலிருந்து விருந்தினர் மாளிகையாக இருந்த 'லாட்ஜ்' என்ற மாளிகையே இப்பொழுது காந்தி இல்லமாக மாறியுள்ளது.

இப்பொழுது குடியரசுத் தலைவராக உள்ள திரு வி. வி. கிரி, முன்பு இந்த மாளிகையில் குடியிருந்திருக்கிறார். இதுபோன்ற பல முக்கியப்பிரமுகர்களின் குடியிருப்பாகத் திகழ்ந்த 'லாட்ஜ்' 1969-ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நாள் காந்தி இல்லமாக மாறியது.

இராஜாஜி ஹாலின் வாயிற் பக்கம் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள காந்தி இல்லம் சென்னைக்குச் சுற்றுலா வருவோர் காண வேண்டிய இடமாக—அண்ணல் பற்றிய அரும்பொருட் காட்சியகமாகத் திகழ்கிறது.

காந்தி இல்லத்தைத்தமிழ்நாடு அரசு ஒரு லட்சம் ரூபாய் செலவில் அமைத்துள்ளது. அண்ணல் காந்தியடிகள் தமிழகத்திற்கு வருகை தந்த நிகழ்ச்சிகளையும், அண்ணலின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை விளக்கும் படங்களையும் இங்குக் காணலாம்.

காந்தி இல்லத்தில் நுழைந்தவுடன் காந்தியடிகளின் மார்பளவு வெண்கலச்சிலை ஒன்று உள்ளது. ராய்சவுத்திரி செய்துள்ள இந்தச் சிலையைப் பார்க்கும் அயல் நாட்டவர்கள் அனைவரும் புகழ்கின்றனர்.



இளமைக் காலந்தொட்டுக் காந்தியடிகள் வாழ்க்கை நிகழ்ச்சியை விளக்கும் புகைப்படங்கள் ஏராளமாக உள்ளன.

வாழ்க்கை வரலாற்று வண்ண ஓவியங்கள் ஏராளமாக அமைந்துள்ளன.

தமிழகத்திலுள்ள நண்பர்களுக்குக் காந்தியடிகள் எழுதிய கடிதங்களும் அவர்கள் அண்ணலுக்கு எழுதிய கடிதங்களின் நகல்களும் இங்கு வைக்கப்பட்டுள்ளன.

நீலகிரியைச் சேர்ந்த மேரிபார் அம்மையார் என்பவர் காந்தியடிகளுக்கு அளித்துக் காந்தியடிகள் பயன்படுத்திய மூங்கில் பேழையும் காந்தி இல்லத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டிற்குக் காந்தியடிகள் வருகை தந்தபொழுது, அவர் பழனி முருகன் ஆலயத்திற்கு ஏறிச் சென்ற பல்லக்கும் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளது.

காந்தியடிகளுடன் தென்னுப்பிரிக்காவில் அறப்போராட்டத்தில் ஈடுபட்டு உயிர்நீத்த தமிழர்களான தில்லையாடி வள்ளியம்மை நாகப்பன், நாராயணசாமி ஆகியோரைப் பற்றி அண்ணல் எழுதியவைகளும் இங்குக் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளன.

சபர்மதி ஆசிரமம் மாதிரி வடிவம் போன்ற பல அரிய பொருள்களைத் காந்தி இல்லத்தில் காணலாம். குஜராத் மாநில ஆளுநரான மேதகு நாராயணன் போன்றவர்களும், வட இந்திய மாநிலங்களைச் சேர்ந்த ஆன்றோர்களும் காந்தி இல்லத்தைக் கண்டு மகிழ்ந்திருக்கின்றனர். அவர்களில் சிலர் பார்வையாளர் குறிப்பேடுகளில் எழுதியுள்ளவைகளில் சில செய்திகள் வருமாறு :

"நேபாளம், காஷ்மீர் ஆகிய இரு பகுதிகளைச் சார்ந்த இரண்டு உயர் காவல்துறை அதிகாரிகளுடன் இந்த இடத்தைப் (காந்தி இல்லம்) பார்வையிட்டேன். நிழற்படங்களைக் கண்டு களித்தோம். அவை மிகவும் நன்றாகக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. படத்திற்கான விளக்கங்களை ஆங்கிலத்திலும் எழுதினால் வட இந்தியருக்கும், வெளி நாட்டினருக்கும் உதவியாக இருக்கும். நாள் முழுவதும், இடையில் நண்பகல் உணவுக்காக மட்டும் ஒரு மணி நேரம் இடைவெளி விட்டுத் திறந்து வைக்கப்பட்டால் பார்வையாளர்கள் அதிக நேரம் கண்டு களிக்க முடியும். நாங்கள் 11·50-க்கு வந்தோம். நேரம் நெருங்கிவிட்டதால், அவசர அவசரமாகப் பார்த்துவிட்டு வெளியேற வேண்டியதாகிவிட்டது."

சி. தினகர், எம்.எஸ்.ஸி.,
ஐ.பி.எஸ்.,
போலீஸ் சூப்பிரண்ட்,
மைசூர் மாநிலம்.
21—12—1971,
சென்னை.

* * *

உடன் வந்தவர்கள் :

திரு ஆர். பி. சந்த் (நேபாளம்). திரு கோன் சாக் சோஸ்பெயில்.

"இன்று நான் காந்தி இல்லத்தைப் பார்த்தேன்; பெரிதும் மகிழ்ந்தேன். தமிழ்நாடு அரசு உண்மையிலேயே மிகவும் சிறப்பாக இதைச் செய்திருக்கிறது. தமிழ் தெரியாத பிறர் தெரிந்து கொள்ளும் வகையில் படங்களுக்கு விளக்கம் ஆங்கிலத்திலும் எழுதவேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோளும் கருத்துமாகும்.

பகல் 12 முதல் 3 மணி வரை இடைவெளி இருக்கிறது. அந்த இடைவெளி இல்லாமல் தொடர்ந்து திறந்து வைக்கப்பட்டால் நல்லது."

—எஸ். பி. பாசு,
கால்நடை மருத்துவத் துறையின் இணைச் செயலாளர்,
மத்தியப் பிரதேசம்.
சென்னை,
3—12—1971.

"காந்தி இல்லத்தைத் திரு ஜெயசீலனுடன் சென்று பார்த்தேன். எங்கள் வாழ்நாளில் என்றுமே காணக் கிடைக்காத அழகுமிக்க படங்களைக் கண்டு களிக்கும் வாய்ப்புக் கிடைத்தது எனக்குப் பெருமகிழ்ச்சியைத் தந்தது."

சென்னை, கே. உபநீஸ்வரன்,
16—12—1971. மலேசியா.

காந்தி இல்லத்தைக் கண்டது ஓர் இனிய வாய்ப்பு ; எதிர்பாராதது. எனவே வியப்பும் மகிழ்ச்சியும் ஆட் கொண்டன. காந்தி இல்லக் காப்பாளர் எங்களுக்கு மிகுந்த கனிவு காட்டினார் ; பெரிதும் உதவினார். அவருக்கு நன்றி.

ஜாண், வெரு உட்,
லண்டன்—டபிள்யூ-1.

* * *



"காந்தி இல்லத்தைப் பார்ப்பது மிக்க மகிழ்ச்சிக்குரியதாகும். சென்னையில் தி.மு.க. அரசு தேசத் தந்தையின் நினைவாக இக் காட்சியரங்கை அமைத்துள்ளது. காந்தியடிகளின் வாழ்க்கையைப் புதிய தலைமுறை அறிந்து கொள்வதற்கு ஏற்ற அமைப்பு இது. ஏழைகளின் தொண்டர் அவர். அவரது வாழ்க்கை வரலாற்றை எழிலுற அமைத்தவர்களுக்கு எனது நன்றி."

—ஏ. கரன்,
(உத்திரப் பிரதேசம்) செயலாளர், காந்தி—நினைவு நிதி.
சென்னை, 11—5—1970.

* * *

"காந்தியின் வாழ்க்கை வரலாறு பற்றிய பொருட்காட்சி என்றதும் பார்க்கும் ஆவலோடு நுழைந்தோம். இதனுள் நுழைந்ததும் எதிரில் சிரித்த முகத்துடன் எங்களை வரவேற்றுக் கொண்டிருக்கும் எங்கள் தந்தையைக் கண்டதும் அளவிலா ஆனந்தம் கொண்டோம். மேலும் உள்ளே சென்று அவருடைய பல வகையான புகைப் படங்களைக் கண்டதும் அவரையே நேரில் கண்டு அளவளாவிய மகிழ்ச்சியுடன் திரும்பினோம். பழைய நினைவுகளுக்கு ஒரு இருப்பிடமாக இதை அமைத்த நம் தமிழக அரசுக்கு நன்றியைத் தெரிவிக்கின்றோம்."

(மாணவர்களும், ஆசிரியர்களும்).

—என். சாரதா,
குமாரி காந்தா ராஜி, அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
பொன்னேரி.
சென்னை, 21—8—1970.

* * *

நாள்தோறும் ஏராளமான மாணவர்கள் காந்தி இல்லம் நோக்கிச் சுற்றுலா வந்த வண்ணமிருக்கிறார்கள்.

இளைய தலைமுறையினருக்கு அண்ணலைப் பற்றி அறிவூட்டும் திருக்கோயிலாகக் காந்தி இல்லம் திகழ்கிறது.

காந்தி இல்லத்தின் அமைதியான சூழ்நிலையே இங்கு வருவோரின் நெஞ்சத்தில் ஒரு நிறைவை உருவாக்கி விடுகிறது.

காந்தி இல்லத்தில் அமைந்துள்ள ஒளி அமைப்புக் கூட ஓர் இனிய நிறைவை—எழிலைக் கொடுக்கிறது.

காந்தி இல்லத்திற்கு எந்த நாளும் விடுமுறை கிடையாது.

* * *

"காந்தி இல்லத்தின் காட்சியகம் கண்ணுக்கு விருந்து என்றால் காந்தியகத்தில் அமைந்துள்ள காந்தி நூலகம் அறிவுக்குப் பெரும் விருந்தாகும்.

காந்தீய நூல்களும், காந்தியடிகள் பற்றிய நூல்களும், காந்தியடிகளின் நூல்களும் இங்கு நிரம்பியுள்ளன. காண்போரைக் கற்கத் தூண்டும் நூல் வரிசைகளும் காந்தி இல்லத்திற்குப் பெருமை சேர்ப்பன.

அண்ணலின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் தொகுத்து வைக்கப்பட்டுள்ள காந்தி இல்லம் தமிழகத்தின் புகழ்மிக்க வரலாற்றில் ஒருசின்னமாகத் திகழ்வதில் வியப்பில்லையே !

'மாறு'



# அமுதமொழி

நெஞ்சிலே கொந்தளிப்பு இருந்தாலும் வெளியே புன்னகை செய்ய என் மனத்தைப் பழக்கியிருக்கிறேன்.

* * *

சிறுபான்மையோரைப் பாதுகாக்க நான் உறுதி பூண்டிருக்கிறேன் ; இயலாவிடில் அம் முயற்சியிலேயே நான் உயிர் துறப்பேன்.

* * *

என்னுடைய வழியைத் தவிர வேறு வழியோ நல்ல வழியோ இருக்க முடியாது என்று தருக்குக் கொள்பவனல்ல நான். ஆனால் எந்த வழியைப் பின் பற்றினாலும் மக்கள் கோழைகளாகிவிடாமல் இருந்தால் போதுமானது.

* * *

தாய்நாட்டின் தொண்டுக்காக என் வாழ்வு அனைத்தையும் நான் ஒப்படைத்திருக்கிறேன். இந்தத் தொண்டு இல்லாவிடில் என் வாழ்க்கையே எனக்குத் தாங்க முடியாத சுமையாகி விடும்.

* * *

இதயம் மட்டும் தூய்மையானதாயிருந்தால் ஆபத்து நேரும் போது அதனுடன் போராடுவதற்குப் படைக்கலன்களும் மனிதர்களும் தாமே வந்து சேர்வர் என்பது எனது நம்பிக்கை.

* * *

அகத் தூய்மையைப் பக்குவமாகப் பண்படுத்த வேண்டும். அதை வளர்ப்பதற்குத்தான் கல்வி பயன்பட வேண்டும்.

* * *

ஆண்மைக்கு அழகு அகிம்சை. அதைப் பற்றிக் கோழை அறியமாட்டான்.

* * *

நோயால் செத்துப் போகிறவர்களை விட அச்சத்தால் செத்துப் போகிறவர்களின் எண்ணிக்கைதான் அதிகம். ஆகையால் யாரும் அஞ்சக் கூடாது.

உண்மைக் குள்ளேயே அழகைக் காண்கிறேன். உண்மையின் வாயிலாகவும் அழகைக் காண்கிறேன்.

* * *

எதைக் கைக் கொள்வது எதைப் புறக்கணிப்பது என்று தானாகவே தெரிந்து கொள்ளும் பகுத்தறிவு பெற்றால் மட்டும் மாணவர்களுக்குப் போதுமானது. அவர்களுக்கு அந்தப் பகுத்தறிவு வளர்ச்சியை ஊட்டுவது ஒன்றுதான் ஆசிரியர்களின் கடமையாகும்.

* * *

உண்மையான அன்பை வெறும் வாய்ப் புகழ்ச்சியின் வாயிலாக மட்டும் காட்டிவிட முடியாது. செயலின் வாயிலாகவே அதைக் காட்ட முடியும்.

* * *

பெண்களின் நிலை உயரும் போது ஆண்களின் நிலையும் உயரும். இவ்விருவரின் நிலையும் உயரும் போது மனித சமுதாயத்தின் நிலையே உயர்ந்து விடும்.

* * *

எந்தப் பெரிய இலட்சியத்தை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்வோம். அதைச் சாதிப்பதற்கு எத்தனை பேர் முன் வருகிறார்கள் என்ற எண்ணிக்கை முக்கியமல்ல. அதற்காக முன் வருபவர்கள் எத்தகைய மானப்பாங்குடையவர்கள் என்பதே வெற்றியை அறுதியிட்டுக் கூறும் அம்சமாகும் !

* * *

நாட்டின் மூலப் பொருள்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு அங்குத் தயாரித்து அனுப்பப்படும் வேறு பொருள்களை அதிக விலை கொடுத்து இறக்குமதி செய்வது வறுமைக்கு உரமிடுவதாகும்.

கடமைகளைச் செய்யாமலே உரிமைகளைத் தேடினால் அவை கானல் நீராகிவிடும்.

* * *

குறைபாடுகளைப் போக்கிக் கொள்ளாமல் உரிமைகளுக்கு மட்டும் போராடுவது எனக்குப் பிடிப்பதே இல்லை.

* * *

குழந்தைகள் எப்போதும் கண்களினால் கற்றுக் கொள்வதை விடக் காதுகளினால்தான் அதிகம் கற்றுக் கொள்கின்றன.

* * *

தாய்மொழிகளுக்குரிய உன்னத இடம் கொடுக்காத எந்தக் கல்வித் திட்டமும் கல்விப் பிரச்சினையின் விளிம்பைக் கூடத் தொடத் தகுதியற்றதாகும்.

* * *

மக்கள் அந்தந்த நாட்டுக்குரிய உயர்ந்த பண்புகளுடன் விளங்க வேண்டுமானால், அந்த நாட்டு இளைஞர்களுக்கு உயர் கல்வியை மட்டுமின்றி எல்லாக் கல்வியையும் தாய்மொழி வாயிலாகவே கற்பிக்க வேண்டும்.

* * *

எல்லையற்ற துன்பத்தைச் சமாளிப்பதற்கு எல்லையற்ற பொறுமையும், உண்மையே இறுதியில் வெல்லும் என்பதில் கொழுந்து விட்டெரியும் நம்பிக்கையுமே தேவையாகும்.

* * *

திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்றால் பணம் தர வேண்டும் என்று கேட்கும் எந்த இளைஞனையும் திருமணம் செய்து கொள்வதற்குப் பெண் மறுத்துவிட வேண்டும்.



தமிழ்ப்பித்தன்

அகமதாபாத்தில் சத்தியாக்கிரக ஆசிரமம் நிறுவிய புதிது. ஒரு பானையை எடுத்துக் கொண்டு அருகில் இருந்த கிணற்றிலிருந்து நீர் கொண்டு வரப் புறப்பட்டார் ஒரு முதியவர்.

அந்தப் பக்கமாக ஒரு வாணிகர் வந்து கொண்டிருந்தார். அவர், முதியவரின் அருகில் வந்து, '' ஐயா, நான் காந்தியடிகளைப் பார்க்க வந்திருக்கிறேன், அவரது ஆசிரமம் எங்கே இருக்கிறது ? '' என்று கேட்டார்.

'' பொறுங்கள், நான் உங்களை அவரிடம் அழைத்துச் செல்கிறேன்'' என்று முதியவர் சொல்லிவிட்டு, நீர் இறைத்துக் கொண்டிருந்தார். வாணிகரோ பொறுமையிழந்து கொண்டிருந்தார்.

'' நான் காந்தியை அவசரமாகப் பார்க்க வேண்டும்; புரிந்ததா இல்லையா ?'' என்று அடித்தொண்டையில் கேட்டார் வாணிகர்.

உடனே அந்த முதியவர்,

'' நான்தான் காந்தி ; என்ன பேச வேண்டும் ?'' என்று கேட்டார். மறுவினாடி அந்த வாணிகர் ஆச்சரியத்தில் ஊமையாகி விட்டார். உலகப் புகழ் பெற்ற காந்தியடிகள் அவ்வளவு எளிமையாக இருப்பார் என்று அந்த வாணிகர் எண்ணவே இல்லை.

* * *

காந்தியடிகள் இளைஞராக இருந்த பொழுது இலண்டன் மெட்ரிக் தேர்வு எழுதினார். அந்தத் தேர்வில்—பொது அறிவுக் கேள்வித் தாளில் ஒரு வினா தரப்பட்டிருந்தது. அதற்கு அவர் விடுத்த விடை —அப்போதே அவரது புனித உள்ளத்தை எடுத்துரைத்தது.

வினா : தங்கத்தை விடத் தங்கமானது எது ?

காந்தியடிகள் தந்த விடை : உண்மை.

* * *

காந்தியடிகள் தமிழ் நாட்டுக்கு வருகை தந்திருந்த சமயம். இராமநாதபுர மாவட்டத்தில் அமராவதிபுதூரில் ஒரு தமிழன்பர் இல்லத்தில் மாலை உணவு ஏற்பாடாகியிருந்தது. அடிகள் உண்பதற்கு அமர்ந்தார்.

அப்போது அவரைக் காண வேண்டுமென்று ஓடோடி வந்தார் ஒரு கைரேகை நிபுணர். தனக்குக் கிடைத்த நற்சான்றிதழ்களை எல்லாம் அள்ளி எடுத்துக்கொண்டு வந்து, வாசலில் நின்றார். வீட்டினுள் நுழைவதற்கு முயன்றார். எந்த நேரமும் பொதுமக்களை அன்போடு காணும் அண்ணல் உண்ணும் போதாவது நிம்மதியாக இருக்கட்டும் என்ற எண்ணத்துடன், எவரும் அவரை அணுகாது அன்பர்கள் காவல் செய்து கொண்டிருந்ததால் கைரேகை நிபுணரை உள்ளே போகவிடாமல் தடுத்து நிறுத்தி ''ஐயா உமக்கு என்ன வேண்டும் ? '' என்று கேட்டனர்.

'' நான் கைரேகை நிபுணர். பல்லாயிரம் கைரேகைகளைப் பார்த்துப் பயிற்சி பெற்றவன். காந்தியடிகளின் கைரேகையைப் பார்க்க வந்திருக்கிறேன் '' என்றார்.

அவரது ஆர்வத்தை வீணடிக்க வேண்டாம் என்ற உணர்வுடன் ஒரு தொண்டர், வீட்டினுள் சென்று, காந்தியடிகளிடம் தெரிவித்தார்.

'' ஆயிரம் ரூபாய் கொடுத்தால் என் கைரேகையை அவர் பார்க்கலாம் என்று சொல்லுங்கள் '' இவ்வாறு தெரிவித்தார் காந்தியடிகள்.

தொண்டர், காந்தியடிகளின் கருத்தைக் கைரேகை நிபுணரிடம் தெரிவித்தார். கைரேகை நிபுணருக்கு ஒன்றும் புரியவில்லை. அவர்தான் இதுவரை பணம் வாங்கியிருந்தாரே தவிர, அவரிடம் யாரும் பணம் கேட்டதில்லை. அடிகளின் பதில் அவருக்கு வியப்பாகவும் இருந்தது. வேதனையாகவும் இருந்தது.

'' ஐயா! நானோ பிச்சைக்காரன். என்னிடத்தில் ஒரு காசுகூட இல்லை. ஆனாலும் மகாத்மாவின் கைரேகைகளைப் பார்த்தே தீர வேண்டும் என்ற பைத்தியம் எனக்குத் தலைக்கு ஏறிவிட்டது. அவரது கைரேகையைப் பார்க்காமல் நான் இந்த இடத்தை விட்டுப் போகமாட்டேன் என்று அண்ணலிடம் கூறுங்கள் '' —கைரேகை நிபுணர் இவ்வாறு சொல்லியபடி அங்கே உட்கார்ந்து விட்டார்.



தொண்டர் மீண்டும் வீட்டி னுள் சென்று, கைரேகை நிபு ணர் சொல்லிய கருத்தைக் காந்தியடிகளிடம் சொன்னார்.

'' அப்படியா! ஆயிரம் ரூபாய் வாங்கியே தீர வேண்டும் என்ற பைத்தியம் என் தலைக்கு ஏறி விட்டதென்று சொல்லிவிடு ''— அடிகள் கண்டிப்புடன் கூறினார்.

தொண்டர், கைரேகை நிபுண ரிடம் வந்தார்; அடிகள் சொல்லியதை எடுத்துரைத்தார். பாவம், கைரேகை நிபுணர்! தனது முயற்சி காந்தியடிகளிடம் பலிக்காது என்பதைத் தெரிந்து கொண்டு நடையைக் கட்டி விட்டார்.

* * *

காந்தியடிகள் ஏரவாடாச் சிறையில் இருந்த சமயம்; குடல்வால் நோயினால் தொல்லைப் பட்டார். அறுவைச் சிகிச்சைக்காக மருத்துவ மனைக் குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கே ஓர் ஆங்கிலச் செவிலி, அடிகளுக்கு அன்புடன் பணி விடை செய்தாள்.

அடிகள் சிறிது குணமடைந்த வுடன் மருத்துவ மனையில் வேறொரு பகுதிக்கு அவரை மாற்றினார்கள். அவரை அழைத் துச் செல்லும் போது, அந்தச் செவிலி காந்தியடிக ளிடம் கேட்டாள்.

'' நீங்கள் பிரிட்டிஷ் பொருள் கள் பலவற்றை வெறுக்கிறீர் கள். ஆனால் இன்று பிரிட்டிஷ் மருந்துகள், அறுவைக் கருவிகள், முதலியவற்றைப் பயன்படுத்தி ஒரு பிரிட்டிஷ் டாக்டர்தான் உங்களுடைய உயி ரைக் காப்பாற்றினார். இப் போது உங்கள் மீது வெய்யில் படாமல் மறைத்து வந்த குடைகூடப் பிரிட்டிஷ் தயா ரிப்பு என்பது உங்களுக்குத் தெரியுமா? ''—செவிலி கேட் டாள்.



'' நிலைமையைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் நீங்கள் பேசுகிறீர்கள். பிரிட்டிஷ் தயா ரிப்பு என்பதற்காக நான் எந்தப் பொருளையும் வெறுக்கவில்லை. எங்களுடைய தொழிலை அழித் துக் கோடிக் கணக்கில் மக்களை ஏழைகளாக்கும் அந்நியத் துணி இறக்குமதியைத்தான் நான் வெறுக்கிறேன்''— காந்தியடிகள் பதில் தந்தார்.

ஆங்கில மக்களிடம் காந்தி யடிகளுக்கு வெறுப்புக் கிடை யாது. ஆங்கில ஆதிக்கத்திடம் தான் வெறுப்பு என்பதைத் தெரிந்து கொண்டதும் அந்தச் செவிலி மகிழ்ச்சி அடைந்தாள்.

* * *

உப்புச் சத்தியாக்கிரகம் நடைபெற்ற காலம்.

1930-ஆம் ஆண்டு ஜூன் மாதம் குசராத்தில் கராடி என்ற இடத் தில் அறப்போர்த் தொண்டர் களின் முதற்படை தங்கியிருந் தது. ஒரு மாந்தோப்பில் சிறிய குழுவில் காந்தியடிகள் தங்கி னார். அந்தக் குடில் அவருக் காகவே அமைக்கப்பட்டது.

ஒருநாள் காலையில், சிற்றூர் மக்கள் சிலர் மகிழ்ச்சியுடனும் பாட்டுப்பாடியபடியும், கைகளில் மாலை, பழம், பணம் ஆகிய வற்றை ஏந்தியவாறும் அண்ண லின் குடிலை நாடி வந்தனர். அவரது கால்களில் அவற்றை வைத்துப் பணிந்தனர். அடி களுக்குக் குழப்பமாக இருந்தது. அந்தக் கூட்டத்தில் இருந்த ஒருவர், அடிகளைப் பார்த்து,

'' அண்ணலே! எங்கள் ஊர்க் கிணற்றில் எத்தனையோ ஆண்டு களாகத் தண்ணீரே இல்லாமல் இருந்தது. நேற்றுத் தங்கள் புனிதத் திருவடி இந்த நிலத் தில் பட்டது. இன்று கிணற் றில் நீர் நிரம்பி விட்டது. அதனால்தான் தங்களை வழிபட வந்தோம் ''—என்றார்.

'' இதெல்லாம் பைத்தியக் காரத்தனம்! இது தற்செயலாக நிகழ்ந்த நிகழ்ச்சி.

''கடவுள் என்னிடம் மட்டும் அதிகக் கருணையுடையவர் என்று நினைக்காதீர்கள். உங்களுக்கு எவ்வளவு கருணை செய்கிறாரோ அவ்வளவுதான் எனக்கும் செய் கிறார். என்னால் நிகழ்ந்த அற் புதம் என்று இதனைக் கூறுகிறீர் கள். காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போன்றது இது. காக்கையா பனம் பழத் தைப் பறித்துப் போட்டது?



இதுபோன்ற பைத்தியக்கார எண்ணங்களை எல்லாம் விட்டு விட்டு, உங்கள் ஊருக்குச் சென்று, நூல் நூற்றுத் துணி நெய்யுங்கள். இந்தியத் தாய்க்கு அந்தத் துணி வேண்டியிருக் கிறது''—என்று காந்தியடிகள் கூறினார்கள்.

அதற்குப் பிறகும் அங்கே நின்று கொண்டிருக்க அந்தச் சிற்றூர்க்காரர்களுக்குப் பைத் தியமா என்ன? அடிகளுக்கு வணக்கம் செலுத்தியபடி ஓடோடிச் சென்றார்கள்.

* * *

ஒருமுறை காந்தியடிகளின் பேனா காணாமற் போய்விட்டது. எங்குத் தேடிப் பார்த்தும் கிடைக்கவில்லை. விலையுயர்ந்த பொருட்களை இனிமேல் வைத் துக்கொள்ளக் கூடாது'' என்று அப்போது காந்தியடிகள் முடிவு செய்தார். தொட் டெழுதும் பேனாக் கட்டையைப் பயன்படுத்தத் தொடங்கினார்.

'' ஒருநாள் பேனாக் கட்டை யினால் எழுதிக் கொண்டிருக்கும் போது எப்படியோ அதன் 'நிப்' வளைந்துவிட்டது. புதி தாக வேறொன்று வாங்கி வரச் சொல்லலாம் என்று நினைத்தார். ஆனால், வாங்கி வரு வதற்குள் நேரம் வீணாகி விடுமே என்ற கவலை அவருக்கு ஏற் பட்டது. மறு வினாடி........ பேனாக் கட்டையின் முனையைக் கூராகச் சீவி அதில் மையைத் தொட்டு எழுத ஆரம்பித்தார்''.

'' இதனால் நேரமும் மிச்சம். பணமும் மிச்சம்! வேலையும் முடிந்தது ''—இவ்வாறு எண்ணி மகிழ்ந்தார் காந்தியடிகள்.

அவ்வாறு உருவாக்கப்பட்ட பேனாவால் முதல் கடிதம் மவுண்ட்பேட்டன் பிரபுவுக்குத் தான் எழுதினார் என்பது குறிப் பிடத்தக்கது.

# சுகமான வாழ்வு பெற 'சோயா' மொச்சை பயிரிடுவீர்



'சோயா பீன்ஸ்' எனப்படும் சோயா மொச்சை இருபதாம் நூற்றாண்டின் விந்தை உண வாக (Wonder food of the 20th Centuary) விளங்குகிறது. சோயா மொச்சை, உலகின் முன் னேறிய நாடுகளிலெல்லாம் நெடுங்காலமாக நிலவிவந்த சாகுபடி முறையை. சமீப காலத்தில் புரட்சிகரமாக மாற்றி அமைத்துள்ளது. சோயா மொச் சை, பயறு வகையைச் சார்ந்த ஒரு பயிராகும். இப்பயறு ஊட் டச் சத்து மிகுந்ததாகவும், சிக் கனமான முறையில் சாகுபடி செய்வதற்கு ஏற்றதாகவும் இருக்கிறது. ஆயினும் உணவுப் பற்றாக்குறையும், ஊட்டச்சத்துப் பற்றாக்குறையும்பெரும் பிரச்சினை யாக உள்ள இந்தியாவில் சோயா மொச்சையைப் பெரு மளவில் சாகுபடி செய்யாதிருப் பது வருத்தப்படுவதற்குரிய செய லேயாகும். இந்திய மக்களின் உடல்நலம் செழிக்கவும், இந்தி யாவின் தொழில் வளம் பெருக்க வும் உறுதுணையாக அமைய வல் லது சோயா மொச்சையே!

சோயா மொச்சையின் பிறப் பிடம் கிழக்கு ஆசியா. இதன் விதைகள் வடிவிலும், வண்ணத் திலும் மாறுபடுகின்றன. சோயா மொச்சையில் ஏறக்குறைய 1,500 ரகங்கள் உள்ளன.

சைனாவில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே சோயா மொச் சை பயிரிடப்பட்டு வந்துள்ளது. சோயா மொச்சையை முக்கிய உணவாகப் பயன்படுத்தும் நாடு களில் முதலிடம் வகிப்பது சைனாவே! பொதுவாக ஆசிய நாடுகளில் சோயா மொச்சையை அதிக அளவில் உணவாக உப யோகிக்கின்றார்கள்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முக்கிய பயிர்களுள் 5-ஆவது இடத்தைச் சோயா மொச்சை பெற்றுள்ளது. ஆனால் அமெ ரிக்க ஐக்கிய நாடுகளுக்குத் தற் பொழுது 'டாலர்' சம்பாதித்துக் கொடுக்கும் வேளாண்மைப் பொருள்களில் முதலிடம் வகிப் பது சோயா மொச்சையே!

பரப்பளவையும், உற்பத்தியை யும் பொறுத்தவரையில், அமெ ரிக்க ஐக்கிய நாடுகளில் கோது மைக்கு மிக நெருங்கிய நிலையில் சோயா மொச்சை இடம் பெற் றுள்ளது. இதே நிலைமை தான் ஜப்பான் முதலிய அநேக நாடு களில் இருந்துவருகிறது.

ஆனால் இந்தியாவில் இதுவரை சோயாமொச்சை, குறிப்பிடத் தகுந்த அளவுக்குப் பரவவில்லை. இதன் காரணமாகவே சோயா மொச்சையின் தேவைக்கு நாம் பிற நாடுகளை எதிர் பார்த்திருக்க வேண்டிய் அவல நிலையில் இருக் கிறோம்.

தற்பொழுது இந்தியா வில் மக்கள் தொகை பெருக் கத்தின் காரணமாகவும், தொழிற்சாலைகளின் தேவை நாளும் பெருகுவதாலும் தாவர எண்ணெய் (Vegetable Oil) பற்றாக்குறை நிலவு கிறது. இப் பற்றாக்குறை யைப் போக்க இந்திய அரசு, வெளி நாடுகளிலிருந்து சோயா மொச்சை எண்ணெய், சூரிய காந்தி எண்ணெய் ஆகியவை களைப் பெருமளவில் இறக்குமதி செய்து வருகிறது. 1966—67 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் முதல் 1970-ஆம் ஆண்டுவரை 59.54 கோடி ரூபாய் மதிப்புள்ள எண் ணெய் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

சமீப காலத்தில் இந்திய வனஸ்பதி தொழிற்சாலைகளுக் காக ஆண்டுதோறும் ஏறத்தாழ 1,00,000 மெட்ரிக் டன் சோயா மொச்சை எண்ணெய் இறக்கு மதி செய்யப்பட்டு வருகிறது.

'பெண்சிலின்', 'ஸ்ட்ரெப் டோமைசின்' போன்ற நோய் தடுப்பு மருந்துகள் (Antibiotics) தயாரிக்கும் தொழிற்சாலை களுக்காக ரஷியா மற்றும் இதர வெளிநாடுகளிலிருந்து ஆண்டு தோறும் சற்றேறக்குறைய 12,000 மெட்ரிக் டன் சோயா மொச்சை விதைகளை இறக்குமதி செய்து வருகிறோம்.

இவ்வாறு சோயாமொச்சை எண்ணெய், சோயா மொச்சை விதை அல்லது சோயா மொச்சை மாவு ஆகியவைகளை இறக்குமதி செய்வதற்காக, பலகோடி ரூபாய் அந்நியச் செலாவணியை இந்தியா இழந்து வருகிறது. அத்துடன் சோயாமொச்சையின் தேவைக்கு, முழுக்க முழுக்க வெளிநாடுகளையே நம்பி இருக்க வேண்டிய இக்கட்டான நிலையில் இந்தியா இருக்கிறது. எனவே



ரூபாய் 35 இலட்சம் மதிப் புள்ள சோயா மொச்சை, ஆண்டு தோறும் சோவியத் யூனியனி லிருந்து இந்தியாவின் பெண்சி லின் போன்ற தடுப்பு மருந்துத் தொழிற்சாலைகளுக்காக இறக்கு மதி செய்யப்படுகிறது. அண்மை யில் நடத்தப்பெற்றசோதனைகளி லிருந்து, இந்தியாவில் விளையும் சோயா மொச்சையை, ஒரு தனிச் சிகிச்சை செய்த பின்பு, பெண்சி லின் போன்ற தடுப்பு மருந்து தயாரிக்கப் பயன்படுத்தலாம் என்பது தெரிய வந்துள்ளது.

இறக்குமதியைத் தவிர்ப்பதற்காகவும், இறக்குமதி மூலமாகப் பாழாகும் அந்நியச் செலாவணியை மீதப்படுத்துவதற்காகவும் இந்திய அரசு சோயா மொச்சை, சூரிய காந்தி ஆகிய புதிய பயிர்களை இந்தியாவில் பரப்பிடப் பெருமுயற்சி மேற்கொண்டு வருகிறது. 1973—74-ஆம் ஆண்டிற்குள் 4,00,000 ஹெக்டேர் நிலப் பரப்பில் சோயா மொச்சையைப் பயிரிட இந்திய அரசு திட்டமிட்டுள்ளது.

### அதிசயத் தங்க மொச்சை!

சோயா மொச்சையை, இருபதாம் நூற்றுண்டின் 'அதிசயத் தங்க மொச்சை' (Miracle Golden Beans) என்று கூறப்படுகிறது. சோயா மொச்சையில் உள்ள அதிசயம் என்னவென்ருல், இதில் உள்ள எண்ணெய், புரதச் சத்து, ஆகியவைகளின் தரம் உயர்ந்ததாக இருப்பதுடன், சோயா மொச்சை எண்ணெய் ஆயிரக்கணக்கான வழிகளில் பயன்படுகிறது; சோயா மொச்சையில் உள்ள புரதச் சத்து, உலகெங்கணும் உள்ள கோடிக் கணக்கான மக்களின் வாழ்வை வளமாக்குகிறது.

இந்தியாவில் புரதச்சத்துப் பற்ருக்குறை நிலவுகிறது. இதைப் போக்க, புரதச்சத்து மிக்க வேளாண்மை விளை பொருள்களின் மகசூலைப் பெருக்குவதுடன், புரதச்சத்தின் தேவையை ஈடுசெய்ய மாற்று உணவுப் பொருள்களை (Substitutes in food) உற்பத்தி செய்ய வேண்டியதும் மிகவும் இன்றியமையாததாகும். இப்பெரும் பணிக்குச் சோயா மொச்சை உறுதுணையாக அமையும் என்பது திண்ணம்.

மேலை நாடுகளில் பால் பெருமளவில் கிடைக்கிறது. ஒவ்வொரு வேளை உணவின் போதும், பாலைப் பல்வேறு வழிகயில் மேலை நாட்டினர் பயன்படுத்தி வருகின்றனர். ஆனல் கீழ்த் திசை நாடுகளில் அதுவும் குறிப்பாக இந்தியாவில் போதுமான அளவு பால்கிடைக்கவில்லை. அதன் காரணமாகவே இந்தியாவில் வாழும் பெரும்பாலான மக்கள் ஊட்டச் சத்துக் குறைவினல் வலிவு குன்றி, நலிவுற்று வாழுகிருர்கள். எனவே, உடனடியாக இந்தியாவில் பாலுக்குப் பதிலாக ஒரு மாற்றுணவு காண வேண்டியது மிகவும் விரைவாக மேற்கொள்ள வேண்டிய முக்கிய பணியாகும். சோயா மொச்சையிலிருந்து தயாரிக்கப்படும் பால், கீழ்த் திசை நாடுகளின் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. சுவையின் அடிப்படையிலும், சத்தின் அடிப்படையிலும் சோயா பால் மனித இனத்திற்கு மிகவும் ஏற்றதாக விளங்குகிறது. உணவுச் சத்து அடிப்படையில் சோயாபால் தாய்ப்பாலுக்குச் சமமானது. சோயா பாலில் குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா மூலகங்களும் அடங்கியுள்ளன. குழந்தையால் எளிதில் செறிக்கப்படுவதற்கு ஏற்றதாக சோயாபால் அமைந்துள்ளது. சோயா பால், உடல்வளர்ச்சிக்குத் தேவையான புரதம், தாது உப்புகள், உயிர்ச் சத்துகள் (Vitamins) ஆகியவற்றை அளித்து, காப்புத்துணை உணவாக (Protective food supplement) விளங்குகிறது.

வாலிபத்திற்கேற்ற நல்ல செழிப்பான உடலை வளர்ப்பதே, வாழ்நாளைக் குறைக்கும் இளமை முதிர்ச்சி, உடலை அழிக்கும் நோய் ஆகியவற்றிற்கு எதிராக நாம் ஏற்படுத்திக்கொள்ளும் மாபெரும் தற்காப்பு ஆகும். இத் தற்காப்பினை நமக்கு நாமே ஏற்படுத்திக்கொள்ள, இந்தியர் அனைவரும் எவ்வகையிலாவது சோயா மொச்சையை அன்றட உணவில் உபயோகிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

## உடல்நலம் செழிக்கவும்
## தொழில் வளம் பெருக்கவும்
## உதவிடும் சோயா மொச்சை



எனக்கு நிகர் எந்தத் தானியமும் கிடையாது

சோயா மொச்சை ஒரு எண்ணெய் வித்தாக (Oil Seed) வகைப்படுத்தப்பட்டுள்ள போதிலும், எல்லா வகையான காய்கறி புரதச் சத்துக்கும் (Vegetable protein) மேலான, உயர்தரமான புரதச் சத்து மிகுந்த உணவுப் பொருளாகவும் மதிக்கப்படுகிறது.

சோயா மாவில் உயர்ந்த தரமான புரதச் சத்து உள்ளதுடன், மற்றெல்லா எண்ணெய் வித்துக்களையும் விடக் குறைந்த அளவு நார்ப் பொருள்களைக் (Fibre) கொண்டுள்ளது. இதனல் சோயா மாவு, எளிதாகச் செறிக்கக் கூடியது. சோயா மாவில் 78.4 சத அளவுக்குச் செறிக்கப்படக் கூடிய ஊட்டச் சத்துள்ளது. மற்றெல்லாத் தானியங்களிலும் உள்ளதை விட, சோயா மாவில் உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாத 'பான்டோதீனிக் அமிலம்' ( Pantothenic Acid ) 'ரிபோபிளேவின்' ( Riboflavin ) ஆகியவை அடங்கியுள்ளன. அதுபோலவே மற்றெல்லாத் தானியங்களிலும் உள்ள அளவுக்குச் சமமாக, உடல் வளர்ச்சிக்குத் தேவையான 'நியாசின்' (Niacin) 'தையாமின்' ( Thiamine ) ஆகியவை சோயா மாவில் உள்ளன. சோயா மாவு மனித இனத்திற்கு மட்டுமல்ல, கால் நடைகளுக்கும், கோழியினங்களுக்கும் மட்டுமல்ல, குதிரைகளுக்கும் சிறந்த உணவாகும்.

பொதுவாக புரதச்சத்தை விலங்கின புரதச்சத்து ( Animal protein ), தாவர புரதச் சத்து ( Vegetable protein ) என இருவகையாகப் பிரிக்கப்படுகிறது. விலங்குகளிலிருந்து





உடல் பருத்து விட்டது என்ற கவலை வேண்டாம்

கிடைக்கும் புரதச் சத்தே முழுமையானதாக ( complete) உள்ளது. தாவரங்களிலிருந்து கிடைக்கும் புரதச்சத்து பொதுவாக முழுமையற்றதாக (Incomplete ) இருக்கிறது. ஆனல் சோயா மொச்சையில் உள்ள புரதச்சத்து, தாவர அடிப்படையானதே ஆயினும், அது பெரும்பாலும் விலங்குகள் புரதச் சத்துக்கு ஒப்பானதாக உள்ளது.

### கிளைகளில் வளரும் இறைச்சி!

மக்கள் அல்லது மாக்களின் உணவில் இன்றியமையாததாக இருக்கவேண்டிய அமினே அமிலங்கள் ( Amino acids ) உச்ச அளவாக சோயா மொச்சையில் உள்ளது என்பது இரசாயனப் பகுப்பாய்வின் மூலம் தெரிய வருகிறது. இதிலிருந்து அதிகப்படியான காலத்திற்கு உயிர் வாழ வைக்க வல்ல முழுமையான உணவு, சோயா மொச்சையே என்பது புலனகின்றது.

தாவரப் புரதச்சத்துப் பெறச் சிறந்த ஆதாரமாகத் திகழ்வது சோயா மொச்சையே! எனவே சோயா மொச்சையைக் 'கிளைகளில் வளரும் இறைச்சி' ( Meat that grows on wines ) என்று கீழ்த்திசை நாடுகளில் விந்தையாகக் கூறப்படுகிறது.

### எலும்பில்லா இறைச்சி!

ஆசிய மக்கள், சோயா மொச்சையிலிருந்து எடுத்த பால், பாற் கட்டி ஆகியவைகளையும், சோயா மொச்சைக் கலந்த ரொட்டி, சாஸ், எண்ணெய் ஆகியவைகளைப் பெரும் அளவில் பயன்படுத்துகின்ருர்கள். எனவேதான், ஆசிய மக்கள் சோயா மொச்சையை 'எலும்பில்லா இறைச்சி!' ( Meat without bones ) என்று குறிப்பிடுகின்ருர்கள்.

### சோயா மொச்சையில் உள்ள சத்துக்கள்

சோயா மொச்சையில் ஊட்டச் சத்துக்கள் செறிந்துள்ளன. ஊட்டச்சத்துக்களைப் பெற்றிருப்பதில் சோயா மொச்சைக்கு இணையாக வேறெந்தத் தானியமும் இருப்பதாகத் தெரியவில்லை. 100 கிராம் சோயா மொச்சையில் கீழ்க்கண்ட அளவு ஊட்டச்சத்துக்கள் உள்ளன.

புரதச்சத்து—43.20 கிராம்.
கொழுப்புச்சத்து—19.50 கிராம்
மாவுப்பொருள்—20.90 கிராம்.
சுண்ணும்புச் சத்து—0.24 கிராம்
பாஸ்பரஸ் சத்து—0.69 கிராம்.
இரும்புச் சத்து—11.50 மில்லி கிராம்.

சக்தி—432 கலோரிகள்.

உயிர்ச்சத்து-'ஏ'—710 ஐ.யு.(I.U.) (Vitamin.A.).

உயிர்ச்சத்து-'பி. 1'—0.73 (Vitamin.B.1.) மில்லி கிராம்

உயிர்ச்சத்து-'பி. 2'—0.76 (Vitamin.B. 2.) மில்லி கிராம்

நிக்கோட்டினிக் அமிலம்—2.40 மில்லி கிராம்.

சோயா மொச்சையில் உள்ளதைப் போல் மற்றெந்தத் தானியங்களிலும் மேற்கண்ட அளவில் ஊட்டச் சத்துக்கள் செறிந்து காணப்படவில்லை. சோயா மொச்சையை முளைக்க வைக்கும் போது உயிர்ச்சத்து-'சி' மிகுந்து காணப்படுகிறது.

சோயா மொச்சையில் மாவுப் பொருள்கள் ( Carbohydrates ) குறைந்த அளவில் இருப்பதால், நீரிழிவு ( Diabetes ) நோயினல் அவதிப்படுவோருக்கும், அதிகப் பருமனக ஆகி விட்டோம் என்று கவலைப் படுவோருக்கும், ஊட்டச் சத்து மிக்க உணவு தேவைப்படுவோருக்கும் சோயா மொச்சை மிகவும் பயனளிக்கக் கூடியதாகும்.

ஒரே சம எடையுள்ள சோயா மொச்சை, இறைச்சி, பாற்கட்டி, மீன், முட்டைகள், கோதுமை முதலிய இதர தானியங்கள், ரொட்டி, பால், ஆகியவைகளை எடுத்துக்கொண்டு அவைகளிலுள்ள புரதச்சத்தைக் கணக்கிட்டால், சோயா மொச்சையில் பின்கண்ட அளவில் புரதச்சத்து அதிகமாக இருப்பது தெரிய வருகிறது.

இறைச்சியில் உள்ளதைவிட 2 மடங்கு.

பாற்கட்டியைவிட 2 மடங்கு.
மீனைவிட 2 முதல் 3 மடங்கு.
முட்டைகளைவிட 4 மடங்கு.
கோதுமை முதலிய இதர தானியங்களைவிட 4 மடங்கு.

ரொட்டியில் உள்ளதைவிட 5 முதல் 6 மடங்கு.

பாலைவிட 12 மடங்கு.

ஒரு பவுண்டு (454 கிராம்) சோயா மொச்சை மாவில் உள்ள புரதச்சத்து 2½ பவுண்டு இறைச்சி அல்லது 54 முட்டைகள் அல்லது 2 காலன் பாலில் உள்ள புரதச்சத்துக்குச் சமமாகும். ஒரு பவுண்டு சோயா மாவின் விலை, ஒரு பவுண்டு இறைச்சியின் விலையில் நான்கில் ஒரு பங்காகவே (கால்பாகம்) இருப்பதால், சோயா மாவினை இறைச்சிக்குப் பதிலாகப் பயன்படுத்தி, நலம் பெறலாம்.

### ஏழையின் இறைச்சி!

சோயா மொச்சை ஏழை எளிய மக்களின் வாழ்வை வளப்படுத்தவல்லதாக அமைந்துள்ளது. எனவேதான் சோயா மொச்சைக்கு 'ஏழையின் இறைச்சி '(Poor Man's Meat) என்ற பெயரும் ஏற்பட்டுள்ளது. குறைந்த செலவில் உடல் நலத்தை மேம்படுத்திக் கொள்ள, ஏழை எளிய சாதாரண மக்களுக்குக் கிடைத்துள்ள அரிய உணவாகச் சோயா மொச்சை விளங்குகிறது.

### சோயா மொச்சையின் பயன்கள்

நன்கு முதிர்ந்த சோயா மொச்சை விதைகளிலிருந்து தயாரிக்கப்படும் மாவைக் கொண்டு கீழ்க்கண்ட உணவுப் பொருள்களைத் தயாரிக்கலாம்.

'நூடில்' (Noodles) எனப்படும் மக்கரோணி.
சூப் (Soup),
இனிப்புகள்,
பல பயன் உணவு (Multi-purpose food),



ஊட்டச் சத்தளிப்பதில் சோயா மொச்சைக்கு நிகரில்லை.




கால்நடைகளுக்கும் குதிரைகளுக்கும் கூட ஏற்றது சோயா மொச்சை.

இறைச்சிக்கு மாற்றுப் பொருள்கள் (Meat substitutes),

சோயா பால்,

தயிர்,

பாற்கட்டி,

ரொட்டி, ‘ சாஸ் ’ (Sauce)

மற்றும் பல்வேறு உணவுகள்.

சோயா மொச்சை எண்ணெய் மற்றும் அதன் இதர தயாரிப்புகள் சமைப்பதற்குரிய கொழுப்புப் பொருகள்(Cooking fats), மார்கரின் (Margarin) போன்றவைகளாக உபயோகப்படுவதுடன், பின்கண்ட பொருள்கள் தயாரிக்கவும் பயன்படுகின்றன.

‘ பெயிண்டு ’கள்,

‘ பிளாஸ்டிக் ’,

‘ லினோலியம் ’,

செயற்கை ரப்பர்,

ஐஸ்கிரீம் பவுடர்,

சோப்புகள்,

‘ குளு , (Glue),

‘ பீர் ’

வழவழப்பாகும் கிரீஸ்,

இரசாயன உரம்,

தொற்றுநோய்த் தடுப்பு மருந்துகள் (Disinfectants)

எண்ணெய்த் துணிகள்,

அச்சிடும் மைகள்,

தண்ணீர் ’ உட்செல்லாத துணிகள்,

மருந்து எண்ணெய்கள்,

தண்ணீரால் கெடாத சிமெண்டு,

துணி நெய்வதற்கான நூல்கள்,

மற்றும் அநேக பொருள்கள்.

சோயா மொச்சையின் இளங்காய்களில், பெரும்பாலான காய்கறிகளில் உள்ளதைவிட, புரதம், சுண்ணும்பு, பாஸ்பரஸ், இரும்பு, கலோரி ஆகியவை நிறைந்து காணப்படுவதால், அவைகளைக் காய்கறிகளாகப் பயன்படுத்தலாம். இளங்காய்களைக் காய்கறிகளைப்போல் சமைத்தால் எல்லாத்தரத்தினருக்கும் ஏற்ற சுவையான, ஊட்டச் சத்து மிக்க உணவாக அமையும்.

சோயா மொச்சையின் விதைகளை முளைக்க வைத்து உண்ணலாம். அதில் உயிர்ச்சத்து—சி மிகுதியாகக் காணப்படுகிறது. சோயாமொச்சையின் விதைகளைத் தண்ணீரில் ஊற வைத்து எடுத்து, மசாலாத் தூளுடன் கலந்து வறுத்துச் சாப்பிடலாம். இதைப் பெரும்பாலோர் பெரிதும் விரும்புகின்றார்கள்.

சோயா மொச்சையில் உள்ள ஒரே ஒரு குறை என்னவென்றால், அதிலிருந்து எழும் ஒரு வகை வாடையை மக்கள் விரும்புவதில்லை. இதன் காரணமாகவே சோயா மொச்சை இந்தியாவில் பெருமளவில் பரவவில்லை. சோயா மொச்சையை முளைக்க வைத்து உண்ணும் பொழுது இவ்வாடை தெரிவதில்லை. சோயா மாவைத் தனியாக உணவுப் பொருள்கள் தயாரிக்கப் பயன்படுத்தாமல், இதர தானிய மாவுகளுடன் கலந்து உணவுப் பொருள்களாகத் தயாரித்தால், சோயா மொச்சைக்கே உரியவாடை தெரியாது.

மேலும், சோயா மொச்சை ஊட்டச்சத்து நிறைந்த உணவுத் தானியமாக இருப்பதால்—பொதுவாக மனித உணவுக்காக இருப்பினும் சரி, அல்லது கால்நடைத் தீனிக்காக இருப்பினும் சரி—மற்ற உணவுத் தானியங்களுடன் சோயா மொச்சைத் தயாரிப்புகளைக் கலந்து உபயோகிக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

சப்பாத்தி, ரொட்டி போன்ற தயாரிப்புகளுக்கு 2 அல்லது 3 பங்கு வழக்கமாகப் பயன்படுத்தும் மாவையும், ஒரு பங்கு சோயா மொச்சை மாவையும், பயன்படுத்தினால், அவை வெகு சுவையாக இருப்பதுடன், ஊட்டச்சத்து மிகுந்ததாகவும் இருக்கும்.

கோதுமை மாவிலிருந்து தயாரிக்கப்படும் ரொட்டியில் 12 சத புரதச்சத்து மட்டுமே உள்ளது. ஆனால் ஒரு பங்கு சோயா மொச்சை மாவையும், 3 பங்கு கோதுமை மாவையும் சேர்த்து ரொட்டி தயாரித்தால், ரொட்டியில் உள்ள புரதச்சத்து 20 சதமாக உயருகிறது. அது போலவே, ரொட்டியில் உள்ள சுண்ணும்பு, பாஸ்பரஸ், இரும்பு, உயிர்ச்சத்து—‘ ஏ ’ உயிர்ச் சத்து—‘ பி ’ ஆகிய சத்துக்களும், அதிகமாகின்றன. கோதுமை மாவினால் தயாரிக்கப்பட்ட 100 கிராம் ரொட்டியில் 355 கலோரி சக்தி மட்டுமே நமக்குக் கிடைக்கிறது. 3 பங்கு கோதுமை மாவுடன், 1 பங்கு சோயா மொச்சை மாவைக் கலந்து தயாரிக்கப்பட்ட 100 கிராம் ரொட்டியில் 374 கலோரி சக்தி கிட்டுகிறது. எனவே, நாம் வழக்கமாகப் பயன்படுத்தும் மாவுடன், சோயா மாவைக் கலந்து உணவு தயாரித்து உண்பதே, சோயா மொச்சையைப் பழக்கத்திற்குக் கொண்டு வருவதற்கு அடிப்படை வழியாகும்.

## சோயா மொச்சை

கி.மு. 2838-ஆம் ஆண்டில் சைனாவை ஆண்ட அரசன், வெகு தொலைவில் இருந்த வணிகன் ஒருவனிடம் ஒப்படைக்குமாறு கூறி விலை மதிக்க முடியாத பொருள்களைத் தன்னுடைய பணியாட்கள் மூலம் அனுப்பி வைத்தான். அரசன் கொடுத்த விலைமதிக்க முடியாத பொருள்களை எடுத்துக்கொண்டு, தகுந்த பாதுகாப்புடன் அப் பணியாட்கள் ஒரு கணவாய் வழியே சென்று கொண்டிருந்த போது, கொள்ளைக்காரர்கள் அவர்களை வழி மறித்து, அவர்களிடம் இருந்த பொருள்களையும், அவைகளைச் சுமந்து சென்ற விலங்குகளையும், அவர்கள் வைத்திருந்த அரிசி, கருவாடு ஆகிய உணவுப் பொருள்களையும் பறித்துக் கொண்டனர்.

கொள்ளைக்காரர்களிடம் எல்லாவற்றையும் பறிகொடுத்த பணியாட்கள் திரும்பி வந்து அரசனிடம் நடந்தவற்றைக் கூறினார்கள். அப்பொழுது அவர்களுடைய ஆடைகள் கிழிந்து கந்தல்களாகக் காணப்பட்டன. ஆனால் பயணம் துவங்கியபொழுது இருந்ததைவிடப், பொருள்களைப் பறி கொடுத்துவிட்டு திரும்பி வந்த பொழுது, பணியாட்கள் நல்ல உடல்வாகுடன் காணப்பட்டதால், அவர்கள் கூறியதை அரசனும், அமைச்சர்களும் நம்பவில்லை.

“ அடிமைகளே ! உண்மையைச் சொல்லுங்கள் ! உங்களுடைய முகம் வட்ட நிலாவைப்போல் வடிவழகுடன் காணப்படுகிறது ! நீங்கள் வெண்ணெய் கலந்த தேநீர் சாப்பிட்டவர்களைப் போல் காணப்படுகின்றீர்கள் ! வேட்டையாடுவதற்குக் கூட உங்களிடம் வசதி இல்லாத பொழுது எப்படி உங்களுக்கு உணவு கிடைத்தது ? ” என்று அரசன் அதட்டினான்.

### கால்நடைகளுக்கும் ஏற்ற தீவனம் !

சோயா மொச்சை விதைகளை உடைத்து பொடியாக்கி தீனியுடன் கலந்துக் கறவை மாடுகளுக்குக் கொடுத்தால் பால் அதிகமாகக் கிடைக்கும், சோயா மொச்சையின் பிண்ணாக்கில் நல்ல சத்து இருப்பதால், இது கால்நடைகளுக்குச் சிறந்த தீவனமாக அமைகிறது.

சோயா செடிகளைப் பால்மாடுகளுக்குக் கொடுத்தால், அவ்வைகள் ஊட்டம் பெறுவதுடன், அதிக பாலையும் கொடுக்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கால்நடை, மற்றும் கோழியினங்களின் தீவனத்திற்காகவே பெரும்பகுதியில் சோயா மொச்சை பயிரிடப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சோயா மாவை வேக வைத்து, சுண்ணும்புச் சத்து, (கால்சியம்), ‘ ரிபோபிளேவின் ’ ஆகிய சத்துக்களைச் சேர்த்தால் கோழிகளுக்குத் தேவையான சமநிலைத் தீவினம் கிடைக்கும். வளரும் கோழிக் குஞ்சுகளுக்குச் சோயா மாவு புரதச்சத்து மிகுந்த தனி உணவாகும். சோயா மாவைக் கோழிகளுக்குக் கொடுத்தால், கோழிகளின் முட்டையிடும் காலம் நீடிப்பதுடன், அதிகமான முட்டைகள் கிடைக்கும். இறைச்சிக்காக வளர்க்கும் கோழிகளுக்குச் சோயா மொச்சைக் கலந்த தீனி கொடுத்தால் அதிக அளவு இறைச்சி கிடைக்கும். சோயா மொச்சை மாவினை கோழிகளுக்குப் பயன்படுத்தினால், கோழி வளர்ப்பவர்களுக்கு மிகுந்த செலவு குறைவதுடன், குறைந்த செலவில் முட்டைகள் அல்லது இறைச்சி கிடைக்கிறது. இதனால், அவைகள், நுகர்வோருக்கும் (Consumers) குறைந்த செலவில் கிடைக்கின்றன. கோழி வளர்ப்போரின் ஆண்டு இலாபமும் கூடுகிறது.

மாவாக அறைப்பதற்குச் சோயா மொச்சை விதையின் மேலே மூடிய தோலை அகற்ற வேண்டியது அவசியமில்லை.

சோயா மொச்சை ஊட்டச் சத்துள்ள உணவையும், எண்ணெய்யையும் அளிப்பதுடன், பின்கண்ட சிறப்பியல்புகளையும் கொண்டுள்ளது.

## அறிமுகமான கதை

“நாங்கள் கடவுள் சாட்சியாக உண்மையைத்தான் சொல்கின்றோம். தரையில் தானாகவே முளைத்துப் படர்ந்து கிடந்த ஒருவகைச் செடியின் காய்களைத் தவிர, வேறெந்த உணவும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. ‘ பீச் ’ பழத்தின் மேல் காணப்படுவது போன்ற,, நுண்ணிய உரோமம் போன்ற ஒருவகைப் பொருள்கள் அச்செடிகளின் இலைகளில் வளர்ந்திருந்தன. அச்செடிகளின் குறுகிய இலைகளுக்கும், அரசர் அணிந்திருக்கும் உடையில் பின்னப்பட்டிருக்கும் பூக்களைப் போன்ற சாம்பல்நிறப் பூக்களுக்கும் கீழே, கருமானின் உலைக்களத்தில் தெறிக்கும் நெருப்புப் போன்ற பொன்னிற விதைகள் நெருக்கமாகப் பொருந்திய காய்கள் காணப்பட்டன. அக்காய்களின் விதைகளைத் தின்றே எங்கள் வயிற்றை நிரப்பிக் கொண்டு நீண்ட தூரம் நடந்து வந்துள்ளோம் !” என்று அரசனின் பணியாட்கள் பயத்துடன் கூறினார்கள்.

“நீங்கள் கூறுவதற்குச் சாட்சியாக அச்செடியின் விதைகளைக் கொண்டு வாருங்கள் !” என்று அரசன் ஆணையிட்டான்.

அரசன் ஆணைக் கிணங்கப் பணியாட்கள் அச்செடியின் விதைகளைக் கொண்டு வந்து அரசனிடம் காட்டித் தண்டனையிலிருந்து தப்பித்தனராம்.

இது ஒரு சீனத்துக் கதை. இக்கதையில் வரும் விந்தைச் செடி, சோயா மொச்சையே என்று வரலாறு கூறுகின்றது. இந் நிகழ்ச்சிக்குப் பிறகே, சோயா மொச்சை சைனாவின் ஐந்து புனித உணவுகளில் ஒன்றாக ஆகியதாம்.



[கவலையைப் போக்கும் அருமருந்து சோயா மொச்சை]

சோயா மொச்சை மற்ற பயிர்களைவிட மிகவும் நம்பகமான பயிராக உள்ளது. இந்தியாவில் வறட்சி, அதிக மழை அல்லது பருவம் தவிர்த்த மழை ஆகியவை அடிக்கடி பயிர்களை முழு அளவில் அல்லது ஒரு பகுதியைக் கெடுத்து விடுகின்றன. ஆனால் அவைகளாலும். சோயா மொச்சைக்குப் பெரும் தீங்கு ஏற்படுவதில்லை. எனவே, இதை வறட்சியைத் தாங்கும் புரட்சிகரமான பயிர் என்று கூறுவதில் தவறில்லை!

### சிக்கனமான பயிர் !

சோயா மொச்சையின் பெரும்பாலான ரகங்கள் 3 அல்லது 4 மாதங்களில் அறுவடைக்கு வந்து விடுகின்றன. சோயா மொச்சை சாகுபடிக்காகும் செலவும் குறைவு. மத்திய இந்தியாவில் சோயா மொச்சைப் பயிரிட ஏக்கருக்கு ரூ. 31·50 மட்டுமே செலவாகிறது. அதே அளவு நிலக் கடலை உற்பத்தி செய்ய ரூபாய் 85 செவாகிறது. எனவே சோயா மொச்சையைக் குறைந்த செலவில் பயிரிடலாம். சோயா மொச்சைக் குறுகிய கால்த்தில் பயனளிப்பதாலும், உள்ளூர் ரக சோளம், பருத்தி, பயறு ஆகியவைகளைக் காட்டிலும் 2 அல்லது 3 மாதங்களுக்கு முன்பாகவே அறுவடைக்கு வந்துவிடுவதாலும் நீண்ட நாட்களுக்குப் பயிர்களைப் பாதுகாப்பதற்கு ஏற்படும் செலவில், கணிசமான அளவையும் உழவர்கள் சிக்கனப்படுத்த இயலும்.

### அதிக மகசூல் அளிக்கும் அற்புதப் பயிர் !

இந்தியாவில் சாகுபடி செய்யப்பட்டு வரும் பெரும்பாலான முக்கிய பயிர்கள் கொடுக்கும் ஏக்கர் மகசூலைவிட, சோயா மொச்சை அதிக மகசூல் கொடுக்கவல்லது. சராசரி உழவர்கள் இந்தியாவில் மற்ற

தானியப் பயிர்களைச் சாகுபடி செய்து ஏக்கருக்கு 7 முதல் 20 மணங்குத்தானியமகசூலை பெற்று வருகின்றனர். ஆனால்அவர்களே, சோயா மொச்சைப் பயிரிட்டு, ஏக்கருக்கு 20முதல் 30 மணங்குத் தானிய மகசூல் பெற்றுள்ளனர். சோயா மொச்சை விதைகளுடன் 'பேக்டீரியல் கல்சர்' கலந்தும், தகுந்த இடைவெளி விட்டும் விதைத்தால் அதிக மகசூல் கிடைக்கும். அதிக மகசூல் அளிக்கும் அற்புதத் தன்மையைப் பெற்றிருப்பதால் சோயா மொச்சை பயிரிட்டு உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைய முடியும்.

**மண்வளம் பெருக்கும் மகத்தான பயிர்!**

சோயா மொச்சைக்குள்ள மகத்தான சக்திகளில் ஒன்று மண் வளம் பெருக்கும் சக்தியாகும். சோயா மொச்சை பயிரிடும் நிலத்தில் 'பேக்டீரியல் கல்சர்' தெளிப்பதனால், இப்பயிர் ஒரு ஹெக்டேர் நிலத்தில் 60 முதல் 80 கிலோ தழைச்சத்தை நிலைநிறுத்தி, அச் சத்தை. அடுத்த பயிருக்குக் கிடைக்கச் செய்கிறது என்பது பல இடங்களில் நடத்தப்பெற்ற சோதனைகளின் மூலம் தெளிவாகியுள்ளது. இதனால் தழைச்சத்து தேவையில் 2 மடங்குச் சிக்கனப்படுத்த முடிகிறது. எனவே இரசாயன உரப்பற்றுக்குறை நிலவும் நாடுகளைச் சேர்ந்த உழவர்களுக்குச் சோயா மொச்சை ஓர் உற்ற நண்பனாக அமைந்துள்ளது. எனவே மண்வளம் பெருக, சோயா மொச்சையை அறுவடை செய்த பின் அடிக்கட்டைகளையும், அதன் வேர்களையும், செடிகளையும் மண்ணிலிருந்து அகற்றாமல் அப்படியே விட்டு விடுமாறு பரிந்துரைக்கப் படுகிறது.



[உடல் நலத்திற்கு ஏற்றது சோயா மொச்சை]

**களைகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் !**

சோயா மொச்சையை விதைக்கும் பொழுது வரிசைக்கு வரிசையும், வரிசையில் விதைக்கு விதை தகுந்த இடைவெளி கொடுத்து விதைத்தால், 2 முறை களையெடுத்தபின், செடிகள் நன்கு வளர்ந்து பூமியை மூடிவிடுவதால் களைகளின் வளர்ச்சிக் கட்டுப்படுத்தப்படுகிறது. எனவே வளர்ந்த சோயா மொச்சையில் களையெடுக்க வேண்டிய அவசியமில்லை.

**இந்தியாவுக்குக் கிடைத்த தங்கம் !**

விதர்ப்ப நாட்டிலுள்ள 'யோட்மால்' ( Yeotmal ) என்ற இடத்தில் 28 வகை சோயா மொச்சைகளைக் கொண்டு நடத்தப்பெற்ற சோதனைகளிலிருந்து, சோயா மொச்சையினை 'இந்தியாவுக்குக் கிடைத்த தங்கம்' ( Gold for India ) என்று கூறப்படுகிறது. இதைப் பயிரிட்டால் இந்திய கிராம மக்கள் சிக்கன முறையில் . தங்கள் உணவின் தரத்தினையும், கால்நடைகளின் உற்பத்தித் திறனையும் உயர்த்திக் கொண்டு சீரோடும், சிறப்போடும், வளமோடும் வாழலாம்.

**ஊட்டச் சத்தளிப்பதில் உயர்ந்தது சோயா மொச்சையே**

சோயாபீன்ஸ், மற்ற உணவு தானியங்களை விட ஊட்டச்சத்து மிகுந்தது என்பதைப் பின்கண்ட அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

[100 கிராம் எடையில் அடங்கியுள்ள சத்துக்கள்.]

| உணவு தானியத்தின் பெயர். | புரதச் சத்து (கிராம்). | கொழுப்புச் சத்து (கிராம்). | மாவுப் பொருள் (கிராம்). | சுண்ணாம்புச் சத்து (கிராம்). | பாஸ்பரஸ் சத்து (கிராம்). | இரும்புச் சத்து (மில்லி கிராம்). | கலோரிகள். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| அரிசி (பச்சையாக அரைத்தது) | 6·90 | 0·70 | 79·20 | 0·01 | 0·11 | 1·00 | 348 |
| சோளம் | 10·40 | 1·90 | 74·00 | 0·03 | 0·28 | 6·20 | 355 |
| கம்பு | 11·60 | 5·00 | 67·01 | 0·05 | 0·35 | 8·80 | 360 |
| கோதுமை | 11·80 | 1·50 | 71·20 | 0·05 | 0·32 | 5·30 | 348 |
| துவரம் பருப்பு | 22·30 | 1·70 | 57·20 | 0·14 | 0·26 | 8·80 | 333 |
| மொச்சை | 24·90 | 0·80 | 60·10 | 0·06 | 0·45 | 2·00 | 347 |
| சோயா பீன்ஸ் | 43·20 | 19·50 | 20·90 | 0·24 | 0·69 | 11·50 | 432 |

மேற்கண்ட அட்டவணையிலிருந்து, மாவுப் பொருள் தவிர மற்றெல்லாச் சத்திலும் சோயா மொச்சையே மற்றத் தானியங்களை விட அதிக ஊட்டச் சத்துக்கள் கொண்டுள்ளது என்பது புலனாகின்றது.



எனவே, கீழ்க்கண்ட சாகுபடி முறைகளை மேற்கொண்டு சோயா மொச்சை பயிரிட்டுப் பயனடையுமாறு தமிழ்நாட்டு உழவர் பெரு மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

**சாகுபடி முறைகள்**

தமிழ்நாட்டில் இறைவையாகவும், மானாவாரியாகவும் சாகுபடி செய்ய சோயா மொச்சை ஏற்றது. அதுவும் குறிப்பாக கோவை மாவட்டத்திற்கு மிகவும் ஏற்றது. இ.சி. 39821 என்ற சோயா மொச்சை ரகம் தமிழ் நாட்டிற்கு மிகவும் ஏற்றது. இதன் வயது 90 முதல் 100 நாட்களே.

மண்வளம்: பொதுவாக எல்லா வகையான மண்களும் சோயா மொச்சைக்கு ஏற்றது. ஆனால், களர், உவர் நிலங்களும், தண்ணீர் தேங்கும் நிலமும் ஏற்றதல்ல.

விதைக்கும் பருவம் : ஆகஸ்ட் முதல் செப்டம்பர் வரையான காலமே விதைப்பதற்குச் சிறந்தது.

நிலம் தயாரித்தல் : நிலத்தை நன்குஉழுது, ஏக்கருக்கு 20வண்டி (10 டன்) தொழு எரு அல்லது கம்போஸ்ட் இட வேண்டும். நிலத்தில் பாத்திக்கள் அல்லது 1½ அடிக்கு ஒரு பார் வீதம் அமைத்துக் கொள்ளவும்.

அடியுரம் : ஏக்கருக்கு 25 கிலோ தழைச்சத்து (125 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 56 கிலோ யூரியா), 50 கிலோ மணிச்சத்து (312.5 கிலோ சூப்பர் பாஸ்பேட்), 30 கிலோ சாம்பல் சத்து (50 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ்) ஆகியவைகளை கடைசி உழவில் அடியுரமாக இட வேண்டும்.

விதையளவு : ஏக்கருக்கு 35 கிலோ முதல் 45 கிலோ விதை தேவைப்படும்.

விதைத்தல் : சோயா மொச்சை விதையின் மேல் தோல் கெட்டியாக இருக்குமாதலின், விதைகளை மணலுடன் சேர்த்து, உரலில் இட்டு, இலேசாகக் குத்திய பிறகே விதைப்பது நல்லது. சோயா மொச்சைக்கு ஏற்ற 'பேக்டீரியல் கல்ச்சர்'களை வேளாண்மைத்துறையின் கிடங்குகளிலிருந்து பெற்று விதைகளுடன் கலந்து விதைத்தால் தான், மகசூல் அதிகமாகக் கிடைக்கும் 10 கிலோ விதைகளுக்கு 1 குடுவை 'பேக்டீரியல் கல்ச்சர்' வீதம் கலந்து விதைக்க வேண்டும். பேக்டீரியல் கல்ச்சர்' அடங்கிய குடுவையுடன் கொடுக்கப்படும் குறிப்பில் கண்டுள்ளவாறு முறைபடி கலந்து, உடனடியாக விதைத்துவிட வேண்டும். களிமண் நிலத்தில் ஒரு அங்குல ஆழத்திலும், செம்மண், மணல் முதலிய நிலத்தில் 2 அங்குலம் ஆழத்திலும் விதைகளை ஊன்ற வேண்டும்.



இடைவெளி : வரிசைக்கு வரிசை 1 அடியும், விதைக்கு விதை 2 அல்லது 3 அங்குலமும் விட்டு விதைப்பது சிறந்தது.

நீர்ப்பாசனம் : ஆரம்ப வளர்ச்சியின்போது சோயா மொச்சை வறட்சியைத் தாங்கிக் கொள்ளும். பூக்கும் தருணத்தில் வறட்சி நீடித்தால் காய்ப்புக் . குறைந்துவிடக் கூடுமாதலின், பூக்கும் சமயத்திலும், அதற்குப் பிறகும் சற்று அதிக அளவு நீர் கட்ட வேண்டும். ஆனால் தண்ணீர் தேங்கி நிற்கக் கூடாது. அளவான நீர் கட்ட வேண்டும்.

களையெடுத்தல் : இளம் செடிகளாக இருக்கும் பொழுது களை எடுத்து விட வேண்டும். பின்பு செடிகள் களைகளை வளர விடுவதில்லை.

பயிர்ப்பாதுகாப்பு : செதில் பூச்சி, பேன், தத்துப்பூச்சி, வெள்ளை ஈக்கள், செம்பேன்கள் ஆகியவை தாக்கினால் 'டைமெதோடு (ரோகார்) 30 சதவீதம் இ. சி. 0.03 சதவீதம் அல்லது தையோமெடான் (இகாடின்) 25 சதவீதம் இ.சி. 0.025 சதவீதம் மருந்தில் 100 மில்லி லிட்டர் எடுத்து, 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். அல்லது 100 மில்லி லிட்டர் பாஸ்பாமிடான் (டைமெக்ரான்) மருந்தை 200 லிட்டர் கலந்து தெளிக்கலாம்.

சிவப்புச் சிலந்திகள் காணப்பட்டால் 300 மில்லி லிட்டர் கார்போ பிேனாதையான் (டிரைதியான்) 20 சதவீதம் இ.சி. 0.06 சத மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

இலைத் தின்னும் புழுக்கள் தாக்கினால் பாரத்தியான் 50 சதவீதம் இ.சி. 0.025 சதவீதம் மருந்தில் 100 மில்லி லிட்டரை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். அல்லது 100 மில்லி லிட்டர் மாலத்தியான் 50 சதவீதம் இ.சி. 0.05 சதவீதம் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

சோயா மொச்சைக்கு என்ட்ரின், கார்பரில், டி.டி.டீ. மருந்து தெளிப்பதைக் கண்டிப்பாக . தவிர்க்க வேண்டும்.

ஏதேனும் நோய்கள் தோன்றினாலும் அல்லது வருமுன் காக்கவும் 'டைத்தேன்' மருந்து தெளிக்க வண்டும்.

அறுவடை : செடிகள் முதிர்ச்சி அடைந்தவுடன் இலைகள் பழுத்து உதிர்ந்து விடும். காய்களின் நிறமும் பழுப்பாக மாறிவிடும். இந்நிலையில் செடிகளை அறுத்து, சற்று காய வைத்துத் தடி கொண்டு அடித்து விதைகளைப் பிரித்தெடுக்கலாம்.

மகசூல் : ஏக்கருக்கு 900 முதல் 1,200 கிலோ.

**வாடை இல்லாத சோயா மொச்சை !**

உடலுக்கு இன்றியமையாத ஊட்டச் சத்துக்கள் மிகுந்திருப்பினும், சோயா மொச்சையில் உள்ள வாடை காரணமாகச் சோயா மொச்சையை இதுவரை இந்திய மக்கள் விரும்பவில்லை. இக்குறையைப் போக்கிடப் பந்த்நகரில் உள்ள வேளாண்மைப் பல்கலைக் கழகம், ஒரு புதிய சோயா மொச்சை ரகத்தைக் கண்டுபிடித்துள்ளது. இப்புதிய ரகத்தின் சுவை, கொண்டைக் கடலையின் (Bengal gram or Channa) சுவையை ஒத்துள்ளது. எனவே, இந்த ரகம் இந்திய மக்களால் விரும்பப்படும் என்பது உறுதி.

# வெண்பாப் போட்டி

அன்பின் வடிவாய் அமைதிச் சுடரெனவே
என்பினையும் நாட்டிற்காய் ஈந்திட்டு—நன்மைதனை
எண்ணி எளியோர்க்கென் றின்னலுற்றே ஏற்றமிகும்
அண்ணல் வழியே அழகு.

—புலவர் நா. சோமசுந்தரம், வாணியம்பாடி.

' எண்ணம் செயலெல்லாம் என்றும்என் நாட்டிற்கே '
திண்ணம் ' திருநாடு சீர்பெறுமே—என்றுரைத்துக்
கண்ணும் சுதந்தரத்தைக் காண்பதற்கே தானுழைத்த
அண்ணல் வழியே அழகு.

—அழகாபுரி இளங்கோவன், அண்ணாமலை நகர்.

வன்முறையால் நம்முரிமை வாரா தெனக்கருதி
அன்புநெறி கொண்டே அகற்றினர்—அந்நியரை
எண்ணம் செயலாக்கி ஏற்றமுடன் நாம்வாழ
அண்ணல் வழியே அழகு.

—துரையன், இருட்டிணுபுரம்.

" போரிட்டுத் துஞ்சும் புரட்சிவழி நீதென்றே
போரில் அகிம்சைப் புதுவழியால்—பாரதிய
அன்னியனும் வென்னைய ராட்சிவெளி யேறென்ற
அண்ணல் வழியே அழகு.

—த. தனராசன், பி.ஏ., பி. அழகாபுரி.

பிச்சை எடுப்போரைப் பேணிநல் வாழ்வமைத்தே
இச்சையொடு கண்ணிழந்தோர் ஏற்றமுற—அச்சமின்றி
என்னிலாப் பேறுபெற ஏழ்மையை நீக்கிடவே
அண்ணல் வழியே அழகு.

—பழ. கந்தசாமி, சத்திரப்பட்டி.

எண்ணத்தால் பேச்சால் எழுத்தால் செயலால்நம்
அண்ணலாம் காந்தி அடிகளார்—கண்களுக்குள்
கண்மணிபோல் சத்தியத்தைக் காத்துநின்று வாழ்ந்துவந்தார்
அண்ணல் வழியே அழகு.

—வை. இரத்தினசாமி, தேத்தாக்குடி.

நாட்டிலுள்ள ஏழையின் நல்வாழ்வுக் காகத்தன்
வீட்டில் சுகத்தை விரும்பாது—பாட்டாளி
மண்ணில் உயர்ந்திட வாழ்வெல்லாம் அர்ப்பணித்த
அண்ணல் வழியே அழகு.

—நாராயணன், மீனாட்சிபுரம்.

தண்ணீரின் தண்மை தணலைத் தணிப்பதுபோல்
கண்ணீரும் கோபக் கனல்தீர்க்கும்—மண்ணுலகில்
உண்மை வழிநடந்தால் உண்டுவெற்றி யென்றுரைத்த
அண்ணல் வழியே அழகு.

—கு. பாலசுப்பிரமணியம், அருப்புக்கோட்டை.

ஏழ்மை அகன்றிடவு மில்லாமை ஏகிடவும்,
கீழ்மை யனைத்துமே கெட்டிடவும்—தாழ்வின்றி
எண்ணியன யெல்லா மிசைந்திடவும் நம்காந்தி
அண்ணல் வழியே அழகு.

—புலவர் சு. முத்துக்கருப்பன், நகரம்.

" பாட்டுப் பெரும்புலவர் பாடிய நூலழகும்,
நாட்டில் அறஞ்செய்தோர் நல்லழகும்—கேட்டிடிலோ
மண்ணில் அழகல்ல ; மக்கட் குழைத்துயர்ந்த
அண்ணல் வழியே அழகு !".

—புலவர் பரசுராமன், க. புதுக்கோட்டை.

உண்மை, பொறுமை, உளமார்ந்த நற்றூய்மை,
திண்மை யமைந்த செயல்திறமை—எண்மையுடன்
நண்ணலரும் போற்றும் நயவுரையும் கொண்டுநின்ற
அண்ணல் வழியே அழகு.

— நக்கீரன் நாச்சிமுத்து, தேனி.

பொன்னே கிடைத்தாலும் பொய்சொல்லா நன்னெஞ்சால்
இன்னல் பலவாழ்வில் ஏற்றமகான்—இன்னாசெய்
நண்ணாரும் வெட்க நலம்அவர்க்குக் காட்டும்நம்
அண்ணல் வழியே அழகு.

—சி. சௌ. கருப்பன், திருச்சி-15.

முல்லை வழியிலங்க முள்வழியை நாடுவதோ ?
தொல்லை அகற்றுகிற தூயவழி—நல்லணங்கே !
எண்ணம் சிறந்தவழி இன்பவழி அன்புவழி
அண்ணல் வழியே அழகு.

—புலவர் முத்துவேங்கடேசன், திருமயம்.

கன்னல் மொழியே கனிச்சுவையே, காலமெலாம்,
என்னில் துயரம் எவர்தரினும்—மன்னித்தே
என்னல் பிறர்நலமே ! என்றுயர்ந்த அண்ணலாம்
அண்ணல் வழியே அழகு.

—புலவர் செ. வரதராசன், கள்ளக்குறிச்சி.

# வெண்பாப் போட்டி

எளியோர் நிலைபோக்க என்னவழி என்றால்
எளிமையாய் வாழ்வதே என்றார்—எளிமையாய்க்
கண்முன்னே வாழ்ந்துமே காட்டினார் ! காந்தியாம்
அண்ணல் வழியே அழகு.

—மா. ஆறுமுகம், மலைப்பட்டு.

வேட்டுமுறை யால்வெற்றி வேட்டல் விரும்பவொணுக்
காட்டுமுறை யாமென்றே கைவிட்டு—நாட்டவர்க்குக்
கண்ணும் அறநெறியைக் காட்டிக் கடைப்பிடித்த
அண்ணல் வழியே அழகு.

—க. இரத்தினம், தஞ்சை.

இருளில் அகல்விளக்காய் இன்னலில் பேரன்பாய்
மருளில் அருந்துணிவாய் வாய்த்தே—அருளென்னும்
கன்னல் மழைச்சாற்றைக் கண்ணால் பொழிந்திட்ட
அண்ணல் வழியே அழகு.

—த. ச. தவசிமணி. அருப்புக்கோட்டை.

வாய்மை யோடன்பு வற்றாப் பெருங்கருணைத்
தூய்மை நெறிநின்றே தொண்டாற்றி—ஓய்வின்றி
மண்ணகத்தே சண்டையிடும் மாந்தருக்குக் காந்தியாம்
அண்ணல் வழியே அழகு.

—த. ம. இராமசாமி, திருப்பத்தூர்.

அன்று நடந்தவழி ஆர்ப்பாட்ட மற்றவழி
கண்ணீர் துடைக்கும் கருணைவழி—பெண்ணுரிமை
சொன்னவழி ஆதிக்கக் கோடில்லா நேர்வழியாம்
அண்ணல் வழியே அழகு.

—புலவர் மு. சிக்கந்தர், பழனி.

அடுபகையைத் தூளாய் அகிம்சையினால் மாற்றிக்
கடுமொழியை இன்பக் கனிச்சொல்லால்—பொடியாக்கித்
தன்னூர் உழைப்பாலே தாழ்வகற்றி வாழ்வளித்த
அண்ணல் வழியே அழகு.

—கு. மருதமணி, அரக்கோணம்.

வள்ளுவனார் வாழ்க்கை வழிவகுத்துத் தந்தமைக்குத்
தெள்ளியதோர் சான்றாய்த் திகழ்ந்ததுடன்—உள்ளத்தில்
எண்ணும் கருத்துகளை ஏற்றிச் செயல்முடித்த
அண்ணல் வழியே அழகு.

—மணிவண்ணன், விழுப்புரம்.

கண்ணிழந்த மாந்தர்க்குக் கண்ணும் வறியவர்க்
கெண்ணரிய வீடும் எழுப்பித்துப்—பண்புடனே
அண்ணன் வழியினிலே ஆளும் திருவாரூர்
அண்ணல் வழியே அழகு.

—நாவரசு, விழுப்புரம்.

சாதி யொழித்துச் சமதர்ம மென்கின்ற
வேதஞ் சமைக்க விழைவோர்க்கு—மேதினியில்
எண்ணந் தனிலே இனிமை பயக்கின்ற
அண்ணல் வழியே அழகு.

— ப. சண்முகானந்தம், தே. காளிப்பாளையம்.

" வாய்மையே வெல்லும் ; வளம்குன்றும் தன்னலத்தில்
தோய்வின்றி யாரும் தொழில்புரிந்தால்—மாய்தலிலா
வண்ணம் வளமுற்று வாழ்திடலாம் " என்றுரைத்த
அண்ணல் வழியே அழகு.

—எல். மல்லிகா, முனுகப்பட்டு.

' சத்தியமே தன்மூச்சாய்ச் சாந்தமே தன்உருவாய்
இத்தரையில் ஏழைக்கும் ஏழையாய்—நித்தமும்
எண்ணிச் செயலாற்றி என்பையும் ஈந்திட்ட
அண்ணல் வழியே அழகு.

—சாலத்தூரன், மொங்கநல்லாம் பாளையம்.

கொல்லாமை நல்லறமும் கொள்கைவிடாச் சொல்லறமும்
எல்லாரும் ஒன்றெனும் இன்னுணர்வும்—வல்லமையால்
எண்ணிக் கொன்றாற்கும் இன்னருளைச் செய்ததனால்
அண்ணல் வழியே அழகு.

—சிவகாமி கணேசன், காரைக்குடி.

அன்பின் வலிமையினால் ஆற்றல் பெருக்கெடுக்கத்
துன்பத் திரையின் துயர்மாயப்—பொன்போன்ற
மண்ணின் விடுதலையால் மாந்தர் நலங்காண
அண்ணல் வழியே அழகு.

—சோ. வேணுகோபாலன், சென்னை-39.

சொல்லும் செயலும் சொந்தமுறத் தான்நடந்து
வெல்லும் வழிகாட்டி வென்றவராம்—நல்லறஞ்செய்
எண்ணம் எளிமை இரக்கமொடு வாய்மைசேர்
அண்ணல் வழியே அழகு.

—நெற்குப்பை கதி. கணேசன், காரைக்குடி.

நல்ல தொண்டு

ஊட்டச்சத்துக்களைப் பெற்றிருப்பதில் சோயா மொச்சைக்கு இணையாக வேறெந்த தானியமும் இருப்பதாகத் தெரியவில்லை! இன்று மனிதனுக்குத் தெரிந்த ஊட்டச்சத்து நிறைந்த, அடர்த்தியான உணவு சோயா மொச்சையே! சத்தற்ற உணவையும் சோயா மொச்சை சத்துள்ள உணவாக ஆக்குகிறது: நல்ல உணவையும் சிறந்த உணவாக மாற்றுகிறது. சோயா மொச்சையை உணவில் கலப்பதால் உண்பதில் ஆர்வமும் (Zest), பல்வேறு வகையும் (Variety) கிட்டுகிறது. அதிக பட்ச ஊட்டச்சத்து, அதிக மகசூல் ஆகியவைகளைக் குறைந்த செலவில் சோயா மொச்சை கொடுப்பதால், தமிழ்நாட்டு மக்களின் உடல் நலம் செழிப்படையவும், தமிழ்நாட்டு கால்நடைகளின் உற்பத்தித் திறனைப் பெருக்கவும், தமிழ்நாட்டின் தொழில் வளம் கொழிக்கவும் சோயா மொச்சையைப் பயிரிடும் முயற்சியில் ஈடுபடுமாறு தமிழ்நாட்டு உழவர் பெருமக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம். இந்த விந்தைப் பயிரை தமிழ்நாட்டில் புகுத்தி மேம்படுத்திட நாம் எல்லா வகையான முயற்சிகளையும் எடுத்துக் கொள்வோமேயானால் அதுவே நாட்டிற்குச் செய்யும் நல்ல தொண்டு ஆக அமையும்.

ஆர். எம்.

## சோயா மொச்சை ஓர் அரிய மருந்து

சோயா மொச்சை ஊட்டச்சத்து மிக்க உணவாக விளங்குவதுடன், மனித இனத்தின் உடல் நலம் பேணும் அருமருந்தாகவும், பயன்படவல்லது என்பது சைனாக்காரர்களின் நம்பிக்கை. அமெரிக்கா, ஐரோப்பா முதலிய நாடுகளில் மேற்கொண்ட அறிவியல் ஆராய்ச்சியின் பயனாக, சைனாக்காரர்களின் நம்பிக்கையில் தவறு இல்லை என்பது உலகிற்குத் தெரியவந்துள்ளது.

கி.மு. 450-ஆம் ஆண்டில் சைனா மருத்துவ நூல் (Materia Medica) ஒன்றில், இருதயம், ஈரல், சிறுநீர்ச் சுரப்பிகள் (Kidneys), இரைப்பை, குடல் ஆகியவை சரியான முறையில் இயங்குவதற்குச் சோயா மொச்சையே சரியான சிறந்த மருந்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது!

சோயா மொச்சைக்கு மேலும் பல மருந்துக் குணங்களும் அமைந்துள்ளன.

மனித இனத்தின் மலச்சிக்கலைப் (Constipation) போக்கவும், நுரையீரலின் இயக்கத்தைத் தூண்டவும், உடலின் உட்சென்றுள்ள நஞ்சை (Poison) அகற்றவும், தோலில் உள்ள தூய்மையின்மையைப் போக்கித் தோலின் வனப்பைக் கூட்டவும், உரோமங்களின் வளர்ச்சியைத் தூண்டி நல்ல தோற்றத்தைக் கொடுக்கவும் சோயா மொச்சை உபயோகமாகிறது.

சோயா மொச்சைச் செடியின் புதிய பசுமையான இலைகளும் மருந்தாகப் பயன்படுகிறது. உடலின் எந்த பாகத்திலாவது நீர் சேர்ந்து விடுதலை (dropsical affections), இரப்பை தொடர்பான கோளாறினால் ஏற்படும் காய்ச்சல் (Gastric fever), சிறுநீரகக் கோளாறு (Bladder trouble), முறையற்ற குருதியோட்டம், கண்புரை, இருதயம், ஈரல், சிறு நீர்ச்சுரப்பிகள், இரைப்பை முதலிய முக்கிய உறுப்புகளில் சுரக்கும் நீர்கள் முறையின்றிச் சுரத்தல் ஆகியவைகளை அகற்றும் அருமருந்தாகச் சோயா மொச்சையின் இலைகள் பயன்படுகின்றனவாம்.

மஞ்சள் நிற சோயா மொச்சை விதைகள் நுரையீரலின் சக்தியை அதிகப்படுத்தவும், உடலைப் பருக்க வைக்கவும், தோல் அமைப்பை அழகுபடுத்தவும், உடல் அமைப்பைக் குளிர்ச்சி பெறச் செய்யவும் பயன்படுத்தப்பட்டனவாம்.

நீண்டதூரப் பயணம் மேற்கொள்ளும் பொழுது குதிரைக்கு வலு ஊட்டவும், அதன் நுரையீரல் சக்தி பெறவும் கறுப்பு நிறச் சோயா மொச்சையைத் தீனியாகக் கொடுப்பது பழக்கமாக இருந்துள்ளது.

## பத்திரிகைத் தருமம்

டில்லியிலுள்ள ஒரு முக்கியமான செய்தித்தாள், வைசிராயினுடைய முடிவுகளையும், காங்கிரஸ் செயற் குழுவினரின் தீர்மானங்களையும் அவர்கள் வெளியிடுமுன் தானாகத் தெரிந்து வெளியிட முயன்றிருப்பதைக் காண வருத்தமாயிருக்கிறது: அந்தமாதிரி நடப்பது 'பத்திரிகா தருமத்திற்கு' இழுக்கு உண்டாக்குவதாகும்.

நானும் பல ஆண்டுகள் ஒரு செய்தித்தாளின் ஆசிரியனாக இருந்து வருகிறேன். அதனால் 'பத்திரிகா தருமம்' எப்படியிருக்க வேண்டுமென்று கூற எனக்கு உரிமையுண்டு.

வைசிராயும், காங்கிரஸ் தலைவரும் தங்கள் தீர்மானங்களைச் செய்தித் தாள்களுக்கு அனுப்புமுன் அங்குமிங்குமாகச் செய்திகளைச் சேகரித்து மக்களிடையே பரபரப்பு உண்டாக்குவதற்காக வெளியிடுவது, மறைந்திருந்து குத்துவதற்குச் சமமாகும். இப்படிச் செய்வது மக்களிடையே தவறான கருத்தை உண்டுபண்ணிக் காரியத்தைக் கெடுப்பதாக இருக்கிறது.

செய்தித்தாள் விற்பனையை அதிகரிப்பதற்காகவும், மின்னல் வேகத்தில் செய்திகளை வெளியிடுவதாகப் பேர் வாங்குவதற்காகவும் இத்தகைய தவறான முறையைப் பின்பற்றக் கூடாது.

—காந்தியடிகள்.

['ஹரிஜன்' 1-6-1947 இதழில்.]

## வெண்பாப் போட்டி

### 41. அண்ணல் வழியே அழகு

'' செய் அல்லால் செத்துமடி ''; ''சேரிமக்கள் சோதரரே;''
'' பொய்யாமை நெஞ்சில், புலனடக்கம்—மெய்வாழ்வில்;
'' மண்ணில் உரிமைப்போர் மாவேள்வி '' என்றுரைக்கும்
அண்ணல் வழியே அழகு.

—சிவ. கிருட்டிணன், கணியூர்.

சத்தியத்தின் பாதைச் சமாதான வீதியில்
நித்தம் உழைப்பு நெடுநாட்கள்—தத்தளித்தும்
உண்மைவழி நேர்மை எனவுலகம் போற்றவைத்த
அண்ணல் வழியே அழகு.

—கா. கோதண்டம், சென்னை-35.

உண்மைக் கடவுள்; உழைப்பு வழிபாடு;
திண்மையே நோன்பு; செயலாற்றும்—நுண்மையால்
எண்ணமீ டேற இனிய நெறிகாட்டும்
அண்ணல் வழியே அழகு.

—சாரதா ஆறுமுகம், இலப்பைக்குடிக்காடு.

முடியரசு போனதும் மூதறிஞர் எம்மான்!
குடியரசின் வித்திட்டார்; கோமான்—கொடியோனின்
குண்டுபட்டும் மன்னித்த கொற்றவ ஞர்காந்தி
அண்ணல் வழியே அழகு.

—சு. கா. சுந்தரராசன், நாரைக்கிணறு.

அஞ்சுவதற் கஞ்சல் அடிமைதனைச் சாடுங்கால்
துஞ்சாமை, மாற்றான்முன் தூங்காமை—எஞ்சியநல்
மண்பொறுமை தண்ணமைதி மாந்தர்க்குக் காட்டியநம்
அண்ணல் வழியே அழகு.

—சோ. முத்துமாணிக்கம், பி.எஸ்சி., வேலூர்-7.

தூக்குக் கயிற்றுக்கும் துப்பாக்கிக் குண்டுக்கும்
தாக்கும் பகைவர்க்கும் தான்அஞ்சா(து)—ஊக்கமுடன்
எண்ணும் விடுதலையை ஈங்களித்த நம்காந்தி
அண்ணல் வழியே அழகு.

—புலவர் ந. கருணாநிதி, வங்கனூர்.

தோட்டாவைக் காட்டாமல் துப்பாக்கி நீட்டாமல்
நாட்டினர் நாட்டின் சுதந்தரத்தை—ஓட்டினர்
அந்நியரை அன்புவழி தான்நின்றே நம்காந்தி
அண்ணல் வழியே அழகு.

—சீனி. சௌந்தரராசன், திருக்கோயில்பத்து.

வாட்டும் வறுமையினால் வாழ்விழந்து பெற்றதாய்
நாட்டுரிமை இன்றி நலிந்தவர்க்(கு)—ஊட்டமுடன்
மண்ணின் விடுதலையை மாண்புடனே பெற்றளித்த
அண்ணல் வழியே அழகு.

—சண்முக. தாயுமானவன், பொன்மலை.

நண்ணார்க்கும் நல்வழியை நல்கிவிடும் நம்முதல்வர்
அண்ணா வழியில் அரசோச்சித்—திண்மையாய்க்
கண்ணில்லா ஏழைக்குக் கண்ணீயுந் தன்மையால்
அண்ணல் வழியே அழகு.

—கே. பரமசிவம், பி.எஸ்சி.,பி.டி., பழனி.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:—

திரு சிவ. கிருட்டிணன்,
1/32, அக்கிரகாரம், கணியூர் அஞ்சல்,
கோவை மாவட்டம்.

## வெண்பாப் போட்டி

" வாய்மை ! அகிம்சை ! வழியில் நடந்துதுயர்
தாய்மை மனத்துடனே தாங்கிஉளத்—தூய்மையுடன்
இன்னல் விடுதலைக்காய் ஏற்றுயர் தொண்டுசெய்த
அண்ணல் வழியே அழகு ."

—வித்துவான் நெல்லை ஆ. கணபதி, சென்னை-15.

தீயவற்றைப் பாராமை தீயவற்றைக் கேளாமை
தீயவற்றைச் சொல்லாமை திட்டமுடன்—ஆயஇவை
தின்மையுறப் பூண்டு திகழ்ந்திருந்த நம்முடைய
அண்ணல் வழியே அழகு.

—ஒளிதிலகன், கரூர்.

அன்பு வழிமூலம் ஆற்றும் பணியெல்லாம்
பண்பு பெருக்கிப் பயனளிக்கும்—வன்முறையை
என்றும் ஒழித்துவிடல் ஏற்ற செயலென்ற
அண்ணல் வழியே அழகு.

—தி. பொன்னுச்சாமி, தூத்துக்குடி.

தோள்புடைத்து மார் துடித்துத் துள்ளிவந்து கையிலே
வாளெடுத்து வேல்பிடித்து மாய்ந்துகண்ட—தோல்வியால்,
அந்நிய ரோட்ட "அகிம்சை" நெறிசென்ற
அண்ணல் வழியே அழகு.

—வே. குருநாதன், மதுரை.

நாட்டின் நலம்காண நாமெல்லாம் நன்றாக
நாட்டம் செலுத்துவோம் நற்பணியில்—நாட்டோரின்
எண்ணம் நிறைந்திடவே எந்நாளும் சென்றிடநம்
அண்ணல் வழியே அழகு.

—எஸ். முருகேசன், ஆனையாம்பட்டி, சேலம்.

சாதி சமயத்தைச் சாய்க்கவந்த நல்லவழி
ஆதிக் குறளார் அறிந்தவழி—நீதிவழி
பின்னிக் கிடக்கும் பெருமைவழி எந்நாளும்
அண்ணல் வழியே அழகு.

—சி. சக்குபாய், உடுமலை.

நாட்டு விடுதலையை நாமடைய நல்லவழி
காட்டி அமைந்த கருணைவழி—நீட்டுலகில்
எண்ணியெண்ணிப் பாராட்டும் ஏற்றமிகு நம்காந்தி
அண்ணல் வழியே அழகு.

—புலவர் ச. மருதமுத்து, உடுமலை.

துப்பாக்கி ஏந்தாமல் தோள்தட்டிப் போகாமல்
தப்பேதும் தம்வாழ்வில் தான்புரியா—இப்புவியில்
கண்போல் விடுதலையைக் காக்கும் நிலைதந்த
அண்ணல் வழியே அழகு.

—பாபநாசம் குறள்பித்தன், திருப்பாலத்துறை.

துப்பாக்கிக் குண்டேந்தித் தூளாக்கிப் போட்டுவிடும்
சிப்பாய்க்கு முன்னே திடமாக்கி—இப்போரில்
கண்ணீரும், செந்நீரும் காணு விடுதலைக்கு
அண்ணல் வழியே அழகு.

—கோவி. தமிழேந்தி, புலவன்காடு.

வன்முறைகள் செய்திங்கே வாழ்வமைக்க எண்ணாமல்
நன்முறைகள் தேர்ந்தே நலங்காண்க—இன்முறையாம்
மண்ணில் அகிம்சையே மாந்தருக்கு வேண்டுமென்ற
அண்ணல் வழியே அழகு.

—எஸ். சுந்தரம், வெண்பாவூர்.

எக்குலமும் ஓர்குலமாய் எம்மதமும் சம்மதமாய்
எக்காலும் ஏற்றிடவே இந்நாட்டில்—திக்கெல்லாம்
பண்புடனே ஓதிட்ட பாரதத்தின் தந்தையெனும்
அண்ணல் வழியே அழகு.

— பாக்கியமணாளன், மட்டப்பாறை.

கங்கைமுதல் கன்னிக் குமரிவரை ஒற்றுமை
பொங்கிப் புரளப் புதுமைசெய்வோம்—தங்கமே
மண்ணில் அதற்கு மகாத்மாவாம் காந்தியெனும்
அண்ணல் வழியே அழகு.

—முத்தமிழ்த்தாசன், சிறுகூடல்பட்டி.

இன்னல் விளைத்தார்க்கும் இன்பம் விளைந்திடவே
நன்னயம் செய்வதுதான் நம்வழியாம் !—எண்ணுங்கால்
மண்ணில் நலம்விளைய வன்முறையால் இல்லைபயன் !
அண்ணல் வழியே அழகு.

—சிவ. மு. சிவா, வேடசந்தூர்.

ஆண்டான் அடிமையெனும் அந்நிலை தானொழித்துத்
தீண்டாமைக் கொள்கையினைத் தீய்த்ததனுல்—மூண்டெழும்
எண்ணிலாத் தீங்கெலாம் இல்லாமற் செய்திட்ட
அண்ணல் வழியே அழகு.

—கோ. ப. முருகநாதன், பி.ஏ., கோவை-22.

# முதல்வரின் கண் சிகிச்சை முகாம் நிதி

## நன்கொடை வழங்கியோர் பட்டியல்

| | ரூ. காசு |
|---|---|
| சென்ற இதழ்த் தொடர்ச்சி | |
| வணிக மின்கம்பி-ஆணிகள் தொழிற்கூடம், கதிரேசன் தொழிற்பேட்டை. | 201.00 |
| தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர். | 3,27,088.46 |
| செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர். | 55,726.00 |
| சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர். | 2,87,412.00 |
| ஏ. எம். எம். அறக்கட்டளை, சென்னை-1. | 17,500.00 |
| குடிசை மாற்றுவாரியத் தலைவர். | 176.00 |
| மதுரை மில்ஸ் .. .. | 3,000.00 |
| மைலம் ஊராட்சி ஒன்றியம் .. | 1,000.00 |
| திரு ஓ. கோவிந்தசாமி கலைக் கல்லூரி திறப்பு விழாவில். | 31.00 |
| கடலூரில் பெரியார் சிலை திறப்பு விழாவில். | 39.00 |
| திரு ஜே. கே. கே. சுந்தரம், சுந்தரம் நூற்பு ஆலை, குமார பாளையம். | 7,145.00 |
| கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர். | 25,243.00 |
| திரு கருணாநிதிபுரம் குடியிருப்போர் நலசங்கம், சென்னை-61. | 15.00 |
| திரு எல். எ. லோகநாதன், தி.மு.க. புழுதிவாக்கம். | 5.00 |
| மதுரை தி.மு.க. மாநாட்டில் திரு எம்.ஜி. யாரிடம் வழங்கியது. | 10.01 |
| மின்வாரிய கணக்காயர் சங்கம், சென்னை-2. | 2,165.00 |
| டி. யு. சி. எஸ்., திருவல்லிக்கேணி | 1,001.00 |
| தக்கம்மாபேட்டை, தி.மு.க. | 2.00 |
| ஸ்டாண்டர்ட் பயர் ஒர்க்ஸ், நாகரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி. | 25.00 |
| மோகினி ஸ்டோர்ஸ், சென்னை-6. | 51.00 |
| கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-6. | 1,168.00 |
| வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர். | 68.00 |
| சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர். | 94,557.00 |
| குமரி மாவட்ட ஆட்சித்தலைவர். | 8,072.00 |
| தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர். | 1,01,743.00 |
| அறநிலைய அமைச்சர் வழியாக. | 1,001.00 |
| செம்பனார்கோயில் வட்டார வளர்ச்சி அலுவலர். | 100.00 |
| திரு டி. ஜி. ரெங்கசாமி நாயுடு, ஸ்ரீராம்புரம். | 10.00 |
| திரு பாலசுந்தரம், குகைநல்லூர். | 10.00 |
| திரு கே. பி. சுப்பிரமணிய முதலியார், குகைநல்லூர். | 10.00 |
| திரு எஸ். இ. ராஜவேலு நாயுடு, ஸ்ரீராம்புரம். | 10.00 |
| திரு கே. எஸ். வடிவேலு முதலியார். | 10.00 |
| மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரி, மதுரை. | 350.00 |
| திருப்புவனம், ஊராட்சி ஒன்றிய ஆணையர். | 4,000.00 |
| திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர். | 2,30,000.00 |
| ராதாபுரம் ஊராட்சி ஒன்றிய ஆணையர். | 492.00 |
| திரு ராமச்சந்திரன் | 25.00 |
| பொதுக் கூட்டத்தில் வரவு .. | 13.00 |
| முதல்வர், அறிஞர் அண்ணா கலைக்கல்லூரி, செய்யாறு. | 996.17 |
| மதுரை மில்ஸ், மதுரை-1 | 2,000.00 |
| முதல்வர், வி. வி. வன்னியப் பெருமாள் மகளிர் கல்லூரி, விருதுநகர். | 595.40 |
| மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர். | 3,13,058.00 |
| குமரி மாவட்ட ஆட்சித் தலைவர். | 20,752.50 |
| தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர். | 2,800.50 |
| வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு. | 500.00 |
| திரு வி. மாணிக்கம், மேற்கு தாம்பரம். | 10.00 |
| திரு கே. என். தண்டாயுதபாணி பிள்ளை, சென்னை. | 501.00 |
| தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர். | 65,794.50 |
| தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர். | 2,00,030.00 |
| செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர். | 22,431.00 |
| நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய ஆணையர். | 20.00 |
| கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி, கடலூர். | 200.00 |
| திருத்தணி எஸ். எஸ். அரசினர் கலைக்கல்லூரி. | 337.65 |
| இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர். | 94,517.50 |
| திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி. | 5,001.00 |
| காட்பாடி கூட்டுறவு நகரமைப்பு லிமிடெட். | 50.00 |
| நெல்லை, திருச்சி பொதுக் கூட்டங்களில் வசூல். | 110.00 |
| திரு என். எஸ். நடராஜ், சாராபாய் கெமிக்கல்ஸ், மைசூர். | 15.00 |
| திரு டி. என். பி. சாரதி ஊராட்சி ஒன்றிய மருந்தகம். | 25.00 |




**பலதரப்பட்ட பூச்சிகளிடமிருந்து உங்கள் பயிர்களை முழுமையாகப் பாதுகாக்கும் விரிவாற்றல் படைத்த (ப்ராட் ஸ்பெக்ட்ரம்) பூச்சிக்கொல்லியாகிய ஆம்பிதியான், தீங்கில்லாத பண்பும், திறமை குன்றாத நெடுநேர ஆற்றலும் ஒருங்கிணைந்தது.**

கிடைக்கும் ப்ராட்-ஸ்பெக்டரம் பூச்சிக் கொல்லிகளிலே ஒப்பற்ற வன்மை வாய்ந்தது ஆம்பிதியான்...கொல்லக் கடினமான எவ்வித முரட்டுப் பூச்சிகளையும் கொன்றுவிடக்கூடிய ஒன்றுதிரண்ட போராற்றல் படைத்தது.

தீங்கு நேரும் வாய்ப்பு மிக மிகக் குறைவு ஆதலால் ஆம்பிதியான் மருந்தடிப் போருக்கு யாதொரு பிரச்சினையும் இராது; தவிர, இட்டு நெடுநேரம் ஆனபின்னும் மட்டற்ற வீரியமுடன் செயல்படும் ஆதலால், ஓயாமல் அடிக்கடி மருந்தடிக்கத் தேவையில்லை.

பணம், நேரம், சிரமம் எல்லாமே மிச்சமாகும். பல நாடுகளில் பரிட்சிக்கப்பட்ட ஆம்பிதியான், இலாபம்தரும் செழிப்பான பயிர் விளைச்சலுக்கு உறுதுணையெனப்பரிசோதிக்கப்பட்டு நிருபணம்பெற்றபூச்சிக் கொல்லியாகும்.




CYANAMID உலகெங்கும் விவசாயத்திற்கு ஊழியம் புரிந்துவருவோர்

அக்ரிகல்சரல் டிவிஷன்,
ஸயனமைட் இந்தியா லிமிடெட்
பி. ஓ. பாக்ஸ் நம்பர் 9109, பம்பாய் 25



# கொய்தலை

திருச்சியை அடுத்த டால்மியாபுரத்தில் அமைக்கப் பட்டுள்ள இலவசக் கண் சிகிச்சை முகாமில், 10 மணி நேரத்தில் 1,208 கண் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன.

இவ்வளவு குறுகிய நேரத்தில் இத்தனை அறுவைச் சிகிச்சைகள் உலகத்தில் இது வரை எங்குமே செய்யப்பட்டதில்லை என்று கூறப்படுகிறது.

திருச்சியிலிருந்து 20 மைல் தொலைவிலுள்ளது டால்மியாபுரம். இங்குள்ள டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட் நிறுவனத்தினர் இலவசக் கண் சிகிச்சை முகாமிற்கு ஏற்பாடு செய்துள்ளனர். மதுரையைச் சேர்ந்த கண் டாக்டர் வெங்கடசாமியின் தலைமையில் 16 டாக்டர்கள் இந்த முகாமில் பணியாற்றுகின்றனர். அவர்கள் 10 மணி நேரத்தில் 1,208 அறுவைச் சிகிச்சைகளைச் செய்து முடித்தனர்.

இதற்கு முன்பு கோபி செட்டி பாளையம் இலவசக் கண் சிகிச்சை முகாமில்தான், ஒரே நாளில் ஏறக்குறைய 961 அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன.

* *

நோயாளியின் இருதயம் சுருங்கி விரியும் இயக்கம், அவரது இரத்த அழுத்தம், நாடித் துடிப்பு ஆகிய எல்லாவற்றையும் துல்லியமாக அறிந்து கொள்ளப் புதிய சாதனம் ஒன்று பிரிட்டனில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தானியங்கு முறையில் வேலை செய்யும் இந்தச் சாதனம் மேற்கண்ட விவரங்களை அருகேயிருக்கும் 'டேப் ரிகார்ட்ரில்' பதிவு செய்து விடுகிறது.

நோயாளியின் உடலில் இந்தச் சாதனத்தை வைப்பதால் எந்த வித இடையூறும் உணரப்படுவதில்லை. தான் பரிசோதனை செய்யப்படுகிறோம் என்ற எண்ணங்கூட அவருக்கு வருவதில்லை. சிறிது நேரம் இந்தச் சாதனத்தைப் பொருத்திக்கொண்டு அவர் தனது பிற வேலைகளைக் கவனிக்கலாம். இயந்திரம் வேலை செய்து தகவல்களைச் சேகரித்துக் கொண்டு விடுகிறது.

இலண்டன் மருத்துவமனை ஒன்றைச் சேர்ந்த நிபுணர்கள் இந்தக் கருவியைப் பயன்படுத்தி 25 நோயாளிகளைச் சோதித்துப் பார்த்தனர். நோயாளிகள் பற்றிய முக்கியமான மூன்று விவரங்களையும் இந்தச் சாதனம் தானியங்கு முறையில் மிகவும் விரைவாகவும் தெளிவாகவும் பதிவு செய்துவிட்டது.

* *

81 நாய்களின் பெயரில் ரூ. 10 கோடியே 22 இலட்சம் மதிப்புள்ள சொத்து எழுதி வைத்திருக்கிறார் ஒரு பெண்மணி. அந்த விந்தைப் பெண்மணி யார் தெரியுமா ?

அமெரிக்காவில் உள்ள புளோரிடா மாநிலத்தைச் சேர்ந்த எலினார்ரிட்சி என்பவர்தான் அவர். இறப்பதற்கு முன் தன்னுடைய சொத்துக்களை 150 நாய்களுக்கு உயில் எழுதி வைத்தார். இதில் 69 நாய்கள் செத்துவிட்டன. மீதி 81 நாய்கள் பெயரில் அந்தச் சொத்து இருக்கிறது !

இந்த நாய்களும் இறந்த பிறகு அலபாமா மாநிலத்தில் உள்ள பல்கலைக் கழகத்துக்கு இந்தச் சொத்து சேரவேண்டும் என்றும், உயிலில் எலினார் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சொத்தில் தங்களுக்குப் பங்கு வேண்டும் என்று எலினாரின் உறவினர்கள் நால்வர் தகராறு செய்தார்கள். இதைத் தொடர்ந்து அவர்களுக்குச் சொத்தில் [illegible] 5 சதவீதம் அளிப்பது என்று உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

* * *

அமெரிக்க அரசியல் கட்சிகளில் குடியரசுக் கட்சிக்கு யானையையும், ஜனநாயகக் கட்சிக்கு கழுதையையும் சின்னங்களாகக் குறிப்பிடுவது வழக்கம். இந்தச் சின்னங்கள் எப்படித் தோன்றின தெரியுமா ?

அமெரிக்காவில் அரசியல் கட்சிகளுக்கு அதிகாரப் பூர்வமான சின்னங்கள் ஒன்றும் கிடையாது. இந்த [illegible] இரண்டுச் சின்னங்களும் ஒரு கேலிச் சித்திரக்காரரின் கைவண்ணமாகும். இவர் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்தவர். பெயர் தாமஸ் நாஸ்ட். இவர் தந்தை ஜெர்மானிய ராணுவத்தில் இசைவாணர்.

கட்சிகளைக் குறிப்பிடுவதற்கு யானையையும் கழுதையையும் நாஸ்ட் தெரிந்தெடுத்தது ஏன்? நாஸ்ட் கையில், கழுதை ஜன நாயகக் கட்சியினரையும் யானை குடியரசுக் கட்சியினரையும் குறிப்பவை ஆயின. அப்படியே பொது மக்களும் அதை ஏற்றுக் கொண்டுள்ளனர் ; இது நாஸ்ட்டின் அரசியல் கேலிச்சித்திரத் திறமைக்கு ஒரு சிறந்த சான்றாகும்.

முதலில் அவர் குடியரசுக் கட்சியைக் குறிக்கக் கழுதை ஒன்றை வரைந்து வெளியிட்டது 1870 துவக்கத்தில் "ஹார்ப்பர்ஸ் வீக்லி" என்ற பத்திரிகையில்தான். அப்படம் முன்னாள் போர்த் துறை அமைச்சரைப் பாராட்டி அவரைத் தாக்கியவர்களைக் கேலி செய்தது.

கார்ட்டூன் வெளியான சமயம் அந்த அமைச்சர் காலமாகி விட்டார். படத்தில் அமைச்சரை நாஸ்ட் ஒரு சிங்கமாகக் காட்டி, அதை ஒரு கழுதை உதைப்பதாக வரைந்திருந்தார். "உயிரோடிருக்கும் கழுதை, இறந்த சிங்கத்தை உதைக்கிறது. என்ன சிங்கம் ! என்ன கழுதை !" என்பது கார்ட்டூன் வாசகம். அதன் பின் நாஸ்ட் வரைந்த கார்ட்டூன்களில் கழுதையை ஜனநாயகக் கட்சியின் ஒரு பகுதிக்கு மட்டுமல்லாமல் கட்சி முழுமைக்[illegible] சின்னமாக்கினார்.

குடியரசுக் [illegible] சியைக் குறிப்[illegible] யானையைக் கை[illegible] ண்டது 1874 இறுதியிலாகும். அவரது கார்ட்டூனில் ஒரு காட்டில் யானை [illegible] விலங்கினங்கள் இருந்தன. [illegible] வை பலப்பல பத்திரிகைகளை[illegible]ம் மாநிலங்களையும் அரசியல் சிக்கல்களையும் குறித்[illegible]. அங்கு சிங்கத்தின் [illegible]. போர்த் [illegible] கழுதை "[illegible]" என்று கூக்குர[illegible] அதைக் கேட்டு மற்றெல்லா விலங்குகளும் தடுமாறிக் கொண்டிருந்தன. அதிபர் யுலீஸஸ் எஸ். கிராண்ட் மூன்றாவது தடவையும் அதிபராகச் சூழ்ச்சி செய்து வருகிறார் என்று ஜனநாயகக் கட்சியினர் குற்றம் சாட்டியதையே [illegible] இவ்வாறு சித்திரித்தார்.

# காலக் கண்ணாடி

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்.



| 91 நாட்கள் | 6 மாதங்கள் | 12 மாதங்கள் | 2 வருடங்கள் | 3 வருடங்கள் | 5 வருடங்கள் |
|---|---|---|---|---|---|
| $4\frac{3}{4}\%$ | $5\frac{1}{4}\%$ | $6\frac{1}{4}\%$ | $6\frac{3}{4}\%$ | $7\frac{1}{4}\%$ | $7\frac{1}{2}\%$ |

தமிழ்நாடு கூட்டுறவு வங்கியில் முதலீடு செய்வது மிகவும் சிறந்தது. எங்கள் வட்டி விகிதங்கள் மிகவும் கவர்ச்சிகரமானதென்பதுடன் உங்களுக்கு அதிக வருமானத்தையும் தருகிறது. ரூ. 3,000 வரை உள்ள வட்டிக்கு வருமான வரி கிடையாது. எங்கள் வங்கியில் செலுத்தும் முதலீடுகள் விவசாயிகளுக்கு விதைகள், உரம் முதலியவைகள் வாங்க உபயோகப்படுவதால் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படுகின்றன.

½% கூடுதல் வட்டி, மத, தர்ம கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு தரப்படும்.

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1,000-க்கும் அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

இதர விவரங்களை எங்கள் கிளை அலுவலகங்களிடமிருந்து பெறலாம்.

## தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை-1.
போன்: 20367, 20368, 20369. தந்தி: ''அர்பாங்க்''
டெலக்ஸ் எண்: MS 7225.

தலைவர்: ஆர். கனகசபை. செயலர்: பி. என். டி. சாரி.




# செந்தமிழ்ச் செம்மல்கள்

தென்பாண்டி நாட்டைச் சேர்ந்த திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஊர் கரிவலம் வந்தநல்லூர்.

இவ்வூரில்கோவில்கொண்டுள்ள பால்வண்ண நாதரைக்கரி(யானை)யொன்று நாள்தோறும் வலம் வந்து வழிபட்டு வணங்கியதால் கரிவலம் வந்தநல்லூர் எனப் பெயர் பெற்றது என்பர். இப்பெயர் கருவை நல்லூர் என்று மருவியும் வழங்குகிறது.

சங்கரநயினார் கோயிலுக்கு எட்டுக் கல் வடக்கே உள்ள கரிவலம் வந்த நல்லூரின் புகைவண்டி நிலையத்திற்குத் தென் கிழக்கே அரைக் கல் தொலைவில் உள்ளது, சென்னிகுளம். சோழன் ஒருவன் இவ்வூரில் குளம் வெட்டினான். சோழனுக்குச் சென்னி என்ற பெயரும் உண்டு. ஆகவே, சென்னிகுளம் எனப் பெயர் பெற்றது என்பர்.

சென்னிகுளத்தில் வாழ்ந்து வந்த சென்னவ ரெட்டியார்—ஓவு அம்மாள் தம்பதியாருக்கு கி.பி. 1861-ஆம் ஆண்டில் அண்ணாமலை பிறந்தார். அண்ணாமலைக்கு உடன் பிறந்தவர்கள் ஐவரும் பெண்கள்.

கரிவலம் வந்தநல்லூரில்தான் அண்ணாமலை வாழ்ந்த காலத்திற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் வரகுண இராமபாண்டியர் என்பவர் வாழ்ந்துள்ளார். இவர்திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, திருக்கருவை வெண்பா அந்தாதி, திருக்கருவைக் கலித்துறையந்தாதிஆகிய பாடல்களைப் பாடியுள்ளார். இவருடையதம்பிதான் நைடதம் பாடிய அதிவீரராம பாண்டியர். 'காசி காண்டம்' என்ற நூலையும் இவர் இயற்றியுள்ளார். இப்படித் தமிழ்ப் புலமை மிக்கவர்கள் வாழ்ந்த கரிவலம் வந்தநல்லூரில் ஒரு பகுதியாக விளங்கும்சென்னிகுளத்தில் பிறந்த அண்ணாமலை, தமிழ்ப் புலமையுடன் திகழ்ந்ததில் வியப்பில்லை.

சிவகிரியிலிருந்து சென்னிகுளத்திற்கு வந்து, திண்ணைப்பள்ளிக்கூடம் வைத்து நடத்திக் கொண்டிருந்தார் சுப்பிரமணியபிள்ளை என்பவர். அவரிடம் அண்ணாமலை வரிசை முறையாக அரிச்சுவடி முதலிய நூல்களையும், சங்கர சதாசிவ மாலை, இராச கோபால மாலை, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ். கருவையந்தாதி, திருப்புகழ், நிகண்டு முதலிய ஏடுகளையும் படித்து இளமையிலேயே புலமை மிக்கவராய்த் திகழ்ந்தார்.

அண்ணாமலை ரெட்டியார் தமிழறிவு மி க்கவராக இருந்ததுடன் முரட்டுத்தனம் உடையவராகவும் தந்தைக்குப் பணியாதவராகவும் இருந்தார். இதனால் ஒரு நாள் தந்தையின் கோபத்துக்கு ஆளாகிய போது வேறு ஊருக்குச் சென்றுவிட முடிவு கட்டினார்.

அண்ணாமலை ரெட்டியார் சென்னி குளத்தைவிட்டுப் புறப்பட்டுச் சென்றபோது கரிவலம் வந்தநல்லூரில் கந்தசாமிக் கவிராயர் என்பவர் ஒரு வீட்டில் சிறு பெண்ணுக்கு இசை பயிற்றிக் கொண்டிருந்தார். அந்த இசையில் மயங்கிய அண்ணாமலை ரெட்டியார் அவரைச் சந்திக்கச் சென்றார். அண்ணாமலையைக் கண்டு கந்தசாமிக் கவிராயர் 'யார் நீ' என வினவியபோது அண்ணாமலை ரெட்டியார் 'மடக்குச் செய்யுளில்' ஒரு பாடல் பாடினார்.

மடக்குச் செய்யுள் என்பது வந்த முன்னணிச் சீர்கள், பின்னாலே வருகின்ற இரண்டு, மூன்று, நான்கு அடிகளிலும் மடங்கி வரப் பாடுவது. ஒவ்வொரு அடிக்கும் பொருள் வேறு வேறாக அமையும்.

மடக்குச் செய்யுளைக் கேட்ட கந்தசாமிக் கவிராயர் அண்ணாமலை ரெட்டியாரின் கவித்திறம் கண்டு மகிழ்ந்து நண்பரானார்.

அதன் பின்னர் அண்ணாமலை ரெட்டியார் அங்கிருந்து புறப்பட்டுச் சேத்தூரை அடைந்து மன்னர் சுந்தரராச பாண்டியரைக் கண்டு அவர் மீது அருமையான கவிதைகளைப் பாடினார். மன்னரும் அவரைத் தம் அரண்மனையிலேயே தங்கச் சொன்னார்.

சேத்தூர் அரசவைப் புலவராக இருந்த முகவூர்க் குருக்களையா என்பவரின் ஆதரவால் அண்ணாமலை ரெட்டியார் திருவாவடுதுறையை அடைந்து அங்குத் தலைவராக இருந்த மேலகரம் சுப்பிரமணிய தேசிய மூர்த்திகளிடம் இலக்கண நுட்பங்களைக் கற்றார். அவர் அண்ணாமலை

# மாணவர் அரங்கம்

ரெட்டியாரை அங்குத் தம்மிடம் மாணவராக இருந்த உ. வே. சாமிநாதய்யரிடம் ஒப்புவித்தார். உ. வே. சாமிநாதய்யர் அண்ணாமலை ரெட்டியாருக்கு நன்னூலும் மாயூரப் புராணமும் பாடம் சொன்னார்.

ஓராண்டுக்குப் பின்னர் அண்ணாமலை ரெட்டியார் அங்கிருந்து விடை பெற்றுக்கொண்டு ஊர் திரும்பினார்.

ஊற்றுமலை மன்னர் மருதப்பத் தேவருக்கு மிகவும் வேண்டியவர் சென்னிகுளம் சுந்தர பரமதேசியார் என்பவர். அவர் அண்ணா



மலே ரெட்டியாரை [illegible]ற்று மலேக்கு அழைத்துச் சென்று அரசவைப் புலவராக்கினர். அண்ணுமலே ரெட்டியார் மரு தப்பர் மேல் ஏராளமான பாடல் களேப் பாடியுள்ளார்.

அண்ணுமலே ரெட்டியார் இளம் வயதில் கொடிய நோய்க்கு ஆளானர். இவருக்கு 24-ஆம் வயதில் குருவம்மாள் என்ற பெண்ணே மணமுடித்து வைத்த னர். மணமுடிந்து இரண்டு ஆண்டுகளில் கி.பி. 1887-ஆம் ஆண்டில் மறைந்தார்.

அண்ணுமலே ரெட்டியார் பாடிய நூல்கள் காவடிச் சிந்து, விரையந்தாதி, விரைப்பிள்ளேத் தமிழ், கோமதியந்தாதி என்பன. இந்நூல்களில் மிகச் சிறந்த தாக விளங்குவது காவடிச் சிந்தே.

## வெண்பாப் போட்டி—44

"குழந்தை" எனத் தொடங்கி
"இனிது" என முடிக்க

முடிவு நாள் : 15—10—1972

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—
ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
''தமிழரசு'' அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னே-2.

குறிப்பு :
அஞ்சல் அட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக் கொள்ளப்படும்.

'' சந்தச் செய்யுளின் தந்தை' என்று அண்ணுமலே ரெட்டியார் புகழப்படுகிருர்.

அண்ணுமலே ரெட்டியாரின் காவடிச் சிந்துக்கு ஈடும் இணே யும் கிடையாது என்பது தமிழ் அறிஞர்களின் கருத்து.

—நம்பியின் தம்பி.

## காந்திவழி செல்வோம்!

உள்ளம் பொய்யா தொழுகியதால்
உயர்வாம் அகிம்சை போற்றியதால்
உள்ளந் தன்னில் நிற்கின்றுர் ;
உலகத் தந்தை நம்காந்தி!

எளிமை வாழ்வு வாழ்ந்தவராம் ;
ஏழையர் வாழ உழைத்தவராம் ;
தெளிவுறத் திட்டம் தந்தவராம் ;
தேச விடுதலே கண்டவராம் !

சத்திய சோதனே செய்தவராம் ;
தனிப்பே ராற்றல் கொண்டவராம்;
வித்தகர் காந்தி வழிசெல்வோம் ;
மேதினி போற்ற வாழ்ந்திடுவோம்.

—சாமி பழ.





# கண் அழுத்த நோய்

டாக்டர் ஜி.வெங்கடசாமி
(துணை முதல்வர், மதுரை மருத்துவக்கல்லூரி.)

இன்று வளர்ந்து வரும் மருத்துவ அறிவிற்கும், ஆராய்ச்சிக்கும் ஒரு சவா லாக விளங்கி மனிதனின் நுண்ணிய உறுப்பான கண்ணின் பார்வையைப் பயங்கரமாகப் பாதித்துக் கொண்டு வருகின்ற கொடிய நோய்தான் கிளா கோமா (Glaucoma) எனப் படும் கண் அழுத்த நோயாகும்.

இன்று உலகிலேயே அதிக மான குருடர்கள் ஆசியாவில் தான் இருக்கிருர்கள். அவர்களில் 62 சதவீதத்தினர் அதாவது 55 இலட்சம் பேர், இந்தியாவில் இருக்கிருர்கள். இவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் கண் அழுத்த நோயினுல் பார் வையை இழந்திருக்கிருர்கள் என்ருல், இந்த நோயின் கொடிய தன்மையை ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம். அவ் வளவு ஏன் ? இன்று உலகிலேயே பணக்கார நாடு என்று கருதப்படும் அமெரிக்காவி லேயே எட்டுக் குருடர்களில் ஒருவர், கண் அழுத்த நோயா லேயே பார்வையை இழந் திருப்பதாகக் கணக்கெடுத்திருக் கிருர்கள்.

இந்தக் கண் அழுத்த நோய் மருத்துவ உலகிற்கே ஒரு மிகப் பெரிய சவாலாக இருப்பதற்கு மிக முக்கியமான அடிப் படைக் காரணம் என்ன வென்ருல் ஆரம்ப நிலேயிலேயே இதைக் கவனிக்காமல் விட்டு விடுவதுதான். கண்பார்வை மங்க ஆரம்பித்த உடனேயே 'சாளேஸ்வரம்' வந்து விட்டது, 'வயதாகிவிட்டது' என்ற எதேச்சையான எண் ணத்தில் நாம் பேசாமல் இருந்து விடுகிருேம். பின் நோய் முற்றிய பிறகு, கண்ணில் வலி யுடன் கண் மருத்துவரைத் தேடி ஓடுகிருேம். அவர் '' இப்பொழுது வந்திருக்கிறீர் களே ? முன்பே வந்திருக்கக் கூடாதா ? '' என்று வருத்தத் துடன் உதட்டைப் பிதுக்கும் பொழுது, நாம் கண்ணீர் விட்டு, குடும்பத்திற்குப் பாரமாக நிற்க வேண்டிய சூழ்நிலேயை எண்ணிக் கலங்குகிருேம்.

நமது நாடு ஏழை நாடு மட்டு மல்ல. கூட்டுக் குடும்பங்களேக் கொண்டதாகவும் இருக்கிறது. இந்நிலேயில் கண்பார்வை இழந்த வர்களேப் பாதுகாக்கப் போது மான சமுதாய இல்லங்கள் இல்லாத காரணத்தினுல் ஒரு வரது பிரச்சினே எல்லாரை யும் கவலேக்குள்ளாக்கிக் குடும்பத் தில் மனக் கசப்பை உண்டு பண்ணுகின்றது. கண் பார்வை இழந்தவர் தனக்குத் தானே பாரமாகிப் பிறருக்கும் பாரமா கிருர். எனவே, இப்படிப் பட்ட சூழ்நிலேயில் இந்தப் பயங்க ரமான கண் அழுத்த நோய் பற்றி எச்சரிக்கையாக இருந்து உடனே தகுந்த முன் நட வடிக்கை எடுப்பது அவசிய மாகிறது.

### கண் அழுத்த நோயின் காரணம்

கண் விழியின் மேல் பாகத் தில் 'ஆகியூவஸ் ஹுமர்' என்ற திரவம் சுரந்து சுற்றிக் கொண்டே வந்து, பின் கண் உள் உள்ள ஒரு குழாய் மூலம் வடிந்து செல்கிறது. அப்படி வடிந்து செல்லும் குழாயில் கோளாறு ஏற்பட்டாலோ அல் லது தடைப்பட்டாலோ 'ஆகி யூவஸ் ஹுமர்' என்ற அத் திரவம் வெளிச் செல்லாமல் தேங்கிவிடுகிறது. இதனுல், கண் அழுத்தம் அதிகமாகிறது. நாளடைவில் 'கண் அழுத்தம்' அதிகரித்துக் கண் விழியின் பின் ஞல் உள்ள மெல்லிய நுண்மை யான பார்வை நரம்புகளேப் பாதித்து அவைகளேச் செய லற்றதாக்குகிறது. கடைசியில் கண்பார்வை நிரந்தரமாக மறைந்து விடுகிறது. இதற்குப் பின் எந்தச் சிகிச்சை செய்தும் கண்ணேப் பாதுகாக்க முடியாது.

கண்விழியின் சாதாரண அழுத்தம் 20 மி.மீ. இதைவிடக் கண் அழுத்தம் அதிகமாவ தாகத் தெரிந்தால், 'கண் அழுத்த நோய்' வருவ தற்குச் சந்தர்ப்பம் உண்டு. எனவே கண் அழுத்த நோய் தனக்கு இருக்கிறதா, இல்லேயா என்ற சந்தேகமுள்ள யாரும் உடனே தகுந்த கண் மருத்து வரை அணுகித் தனது கண் அழுத்தத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும். குறிப்பாக 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஆண்டுக்கு ஒரு முறை கண் அழுத் தத்தைத் தெரிந்து கொள்வது ஒரு முன்னெச்சரிக்கையாக இருக்கும்.

### கண் அழுத்த நோயின் அறிகுறிகள்:—

கண் அழுத்த நோயில் இரு வகைகள் உண்டு.

### மெதுவாக வரும் கண் அழுத்த நோய்

இந்தக் கண் அழுத்த நோயில் பார்வை சிறிது சிறிதாக மங்கிக் கொண்டே வந்து, பின் பார்வை முழுவதையும் இழந்துவிட நேரிடும். இது சாதாரண மாக இரண்டு கண்களேயும் பாதிக்கும்; பக்கப் பார்வை யும் குறைந்து கொண்டே வரும். அடிக்கடி கண்ணுடியை மாற்ற நேரிடும்.

### திடீர் கண்அழுத்த நோய்

இந்தக் கண் அழுத்த நோயில் 'திடீர்' என்று கண்ணில் வலி ஏற்படும். கடுமையான தலே வலியும், வாந்தியும் ஏற்படுவ துண்டு. இந்தத் திடீர் கண்வலி வருவதற்கு முன்னுல் சில சமயங் களில் இரவில் விளக்கைச் சுற்றி வண்ணக் கோடுகள் தெரியும். அப்படி வரும்போதே கண்ணே மருத்துவரிடம் காண்பித்தால் ரணசிகிச்சையின் மூலம் திடீர் கண்வலி வராமல் தடுக்க முடி யும்.

### சில எச்சரிக்கைகள்

இதரக் கண் நோய்களினுல் பார்வை மங்கினுல் அல்லது பாதிக்கப்பட்டால் கண்ணுடி அணிவதனுலேயோ அல்லது சிகிச்சை அளிப்பதினுலேயோ திரும்பப் பெற்று விடலாம். ஆனுல் கண் அழுத்த நோயினுல் பார்வையை இழந்துவிட்டால் திரும்பப் பெறமுடியாது. எனவே, கண் அழுத்த நோயால் பாதிக்கப்பட்டிருந்தாலும், பாதிக் கப்படாமலிருந்தாலும் கீழ்க் கண்ட முன் எச்சரிக்கைகளே மேற் கொள்ளவேண்டும்.

1. 40 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் எல்லாரும் பயிற்சி பெற்ற கண் மருத்துவரி டம்சென்று ஆண்டிற்கு ஒருமுறை கண் அழுத்தத்தைச் சோதித் துக் கண் அழுத்தநோய் வருவ தற்குச் சந்தர்ப்பம் இருக்கிறதா இல்லேயா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

2. இந்தக் கண் அழுத்த நோய்க்கு ஒரே தடவையில் சிகிச்சை அளித்துவிட முடியாது. சில மாதங்கள் சில வாரங்கள், [illegible] மீண்டும் மீண்டும் கண் [illegible]

அழுத்தத்தைப் பரிசோதித்துச் சிகிச்சை முறையை மாற்ற வேண்டியிருக்கும். தேவையானால் அறுவைச்சிகிச்சையும் செய்ய வேண்டியிருக்கும். எனவே கண் மருத்துவர் குறிப்பிடும் நாளில், தவருமல் சென்று, சிகிச்சை பெறுவது அவசியம். சில வாரங்கள், சில மாதங்கள் சிகிச்சையை ஒத்திப் போடுவதால் கண் பார்வையை நிரந்தரமாக இழக்க நேர்ந்தாலும் நேரிடும்.

3. கண் அழுத்த நோய் சிகிச்சை பெற்றுக் கொண்டிருப்பவர்களுக்கு நீரிழிவு, இரத்தக் கொதிப்பு முதலிய நோய்கள் இருந்தால் முன் எச்சரிக்கையாகக் கண் அழுத்த நோய்க்குச் சிகிச்சை அளித்துக் கொண்டிருக்கும் மருத்துவரிடம் அது பற்றிய விவரங்களைச் சொல்ல வேண்டும். கண் நோய்க்கும், இதர நோய்க்கும் எந்தவித மான தொடர்பும் இல்லை என்று இருந்துவிடக்கூடாது.

அதேபோல் வேறு நோய்களுக்கு, வேறு மருத்துவரிடம் சென்று சிகிச்சை பெற நேர்ந்தால் அவரிடம் கண் அழுத்த நோய் பற்றிய விவரத்தைச் சொல்ல வேண்டும்.

4. எக்காரணம் கொண்டும் மருத்துவர்கள் பரிந்துரைக்கும் மருந்தை நேரம் தவருமல் கண்களில் போடத் தவறக் கூடாது. குறிப்பிட்ட தேதியில் தவருமல் வந்து, கண் அழுத்தத்தைப் பரிசோதித்துச் செல்வதுபோல், வேளை தவருமல் மருந்தைப் போட்டுக் கொண்டு வருவதும் முக்கியமாகும். மருந்திஞல் எந்தவிதப்பலனும் ஏற்படவில்லையென்று பொறுமை இழத்தல் கூடாது.

5. இரவில் வெகுநேரம் கண் விழித்துக் கொண்டிருக்கக் கூடாது. குறிப்பாகச் சினிமா பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும்.

6. அன்ருட வாழ்க்கையில் ஆத்திரமும், அவசரமும் இல்லாமல் பொறுமையாக வேலைகளைச் செய்ய வேண்டும்.

7. புகையிலை, காபி, தேநீர் முதலிய பானங்களைக் குறைந்த அளவே பருக வேண்டும். ஒரே சமயத்தில் அதிகமான தண்ணீரையோ இதர பானங்களையோ அருந்தக் கூடாது.

இந்தக் கண் அழுத்த நோய் உள்ளவர்களும், இல்லாதவர்களும் மிகவும் முக்கியமாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய எச்சரிக்கை என்னவென்ருல், கண் பார்வை மங்கிவரும் அறிகுறி தெரிந்த உடனே கண் மருத்துவரை அணுகுவதுதான்.

நமக்கு அன்ருட வாழ்க்கையில் ஆயிரம் சமூகப்—பொருளாதாரச் சிக்கல்கள் இருக்கலாம். ஆனல் முன் எச்சரிக்கையாகக் கையாள வேண்டிய முறைகளை விட்டு விட்டுக் கண் பார்வையை இழந்தபின் தனக்குத் தானே பாரமாக மட்டுமல்லாது, குடும்பத்துக்கும் பாரமாய்க் கண்ணீர் விட்டு முணங்கிக் கொண்டு காலம் கழிக்கும் மனிதர்களாக நீங்களும் இருக்க விரும்புகிறீர்களா? உடனே, உங்களுடைய கண்ணின் மீது கண்காணிப்பு இருக்கட்டும் என்று கண்சாடை காட்டுகிருேம்.





# சங்கர் சிமெண்ட்

தயாரிப்பாளர்களுக்கு 1968-69-ம் ஆண்டில் ஏற்றுமதியில் சிறப்புற்று விளங்கியதற்காக இந்திய அரசின் பாராட்டு இதழ் கிடைத்துள்ளது.

தரம், நீண்டகால சேவை, பாறை போன்ற உறுதி ஆகிய சிறப்பு அம்சங்கள் பொருந்திய சங்கர் சிமெண்ட் நாட்டின் அந்நியச் செலாவணி வருவாயைப் பெருக்குவதிலும் முன்னணியில் நிற்கிறது.

ISI மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்
தன் பில்டிங், சென்னை 2
25 ஆண்டுகள் நிறைந்து, இன்றும் வளர்ந்து கொண்டே போகிறது!
இலவசத் தொழில் நுட்ப ஆலோசனைக்கு: சிமெண்ட் சர்வீஸ் பீரோ, குரோவ், சென்னை-18






# காலத்திற்கேற்ற வகையில் காவிரியின் சீரமைப்பு

செக்கர் வானத்தில் செங்கதிரோன் மறைந்து கொண்டிருந்தான்! காவிரி 'கடலோடு கலக்கும் இடத்தில் கடற்கரை மணலில் அமர்ந்து, கையில் வைத்திருந்த குறிப்புத் தாள்களை அருகில் வைத்து, அவைகளின் மேல் பாரமாகச் சிறிது மணலை அள்ளிப் போட்டுவிட்டு, அன்றைய காவிரிப் பூம்பட்டினத்தைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்தேன். கரிகால் சோழன் காலத்தில் சீரோடும் சிறப்போடும் விளங்கிய காவிரிப்பூம் பட்டினக்காட்சிகள் என் மனத்திரையிலே ஓடிக் கொண்டிருந்தன. கற்பனை இன்பமும், கடற்காற்றின் சுகமும் உட்கார்ந்திருந்த என்னை மணலில் படுக்க வைத்துவிட்டன. கடற்காற்றின் குளிர்ச்சி என் கண்களை மூட வைத்துவிட்டன. என் உடல் கடற்கரை மணலில் கிடந்தாலும், என் உள்ளம் மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் நிறைந்த காவிரிப்பூம் பட்டின வீதிகளிலே பெருமிதத்தோடு சுற்றுலாச் சென்று கொண்டிருந்தது.

''தம்பி!'' என்ருெரு குரல் கேட்டது. இந்த உலகை மறந்த நிலையில் காவிரிப்பூம் பட்டினத்துக் காட்சிகளில் மனத்தைப் பறிகொடுத்துக் கொண்டிருந்ததால் அந்தக் குரல் கேட்டும், கற்பனை இன்பத்தை இழந்திட மனமின்றி, கண்களை மூடிக் கொண்டே இருந்தேன்.

''உன்னைத்தான் தம்பி!'' என்ற அண்ணுவின் குரல் மீண்டும் கேட்டது.

பேரறிஞர் அண்ணு தான் அடிக்கடி 'உன்னைத்தான் தம்பி!' என்று அழைத்து, சிந்தையைக் கிளறுவார்! அவர் கூறும் 'உன்னைத்தான் தம்பி' என்ற குரலைக் கேட்டுப் பலஆண்டு ஆகிவிட்டது. அதே 'உன்னைத்தான். தம்பி' என்ற குரல் கேட்டதும் அண்ணு வந்துவிட்டாரோ என்ற பேரார்வத்தால் என் கண்கள் தாமாகவே திறந்து கொண்டன. அதே நேரத்தில் உணர்வுகள் விழித்துக் கொண்டதால், என் உடல் துடித்து எழுந்தது.

அங்கு அண்ணுவைக் காணேம்! ஆனல் கம்பீரமான தோற்றத்தோடும் முறுக்கிய மீசையோடும் கூடிய ஒருவர் நின்று கொண்டிருந்தார். அண்ணுவைக் காணத் துடித்த என் கண்களில்—ஏமாற்றத்தின் காரணமாக—கண்ணீர் சுரந்தது!

''அண்ணுவின் குரலில் 'உன்னைத்தான் தம்பி!' என்று அழைத்து, கரிகால் சோழ மன்னனைக் காணச் சென்று கொண்டிருந்த என்னைத் தடுத்து நிறுத்தி விட்டீர்கள். எனக்கு இருபெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்திவிட்டீர்கள். ஏன் என்னை அழைத்தீர்கள்?'' என்று வெறுப்புடன் கேட்டேன்.

''தம்பி! ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில், உன்னை எழுப்பவில்லை!'' என்று கூறினர்.

'அண்ணுவின் அதே குரல்! என்னை என்னல் நம்ப முடியவில்லை! அண்ணுவின் உருவத்தைத்தான் என்னல் காண முடியவில்லையே தவிர, அண்ணுவுக்கே உரிய குரலில் அவர் பேசியதைக் கண்டு வியப்புடன் அவரை நோக்கினேன்.

''தம்பி! தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணநிதி அவர்களின் பெருமுயற்சியால் அமைக்கப் பெற்றுவரும் கற்புக்கரசி கண்ணகியின் கலைக் கூடத்தைக் கண்டுவிட்டு அதைப்பற்றிய சிந்தனையுடன் கடற்கரை ஓரத்தில் நடந்து கொண்டிருந்த என் காலில் ஒரு காகிதத்தாள் வந்து சிக்கியது. அதை எடுத்துப் பார்த்தேன். 'காலத்திற்கேற்ற வகையில் காவிரியின் சீரமைப்பு' என்ற தலைப்பில் குறிப்புகள் எழுதப்பட்டிருந்தன. காகிதத் தாளில் உள்ள எழுத்து சற்று நேரத்திற்கு முன்பு எழுதப்பட்டதாக தெரிந்தது. இது எப்படி இங்கு வந்திருக்கும் என்று எண்ணிக் கடற்கரையை நோக்கினேன். உன்னைத்தவிர இங்கு யாரையும் காணவில்லை. எனவே இத்தாள் உன்னுடையதாகத் தான் இருக்கும் என்று எண்ணி உன் அருகில் வந்தேன். உன் அருகில் இதே தாளைப் போன்ற வேறு சில தாள்களும் கிடப்பது கண்டு அவைகளை எல்லாம் எடுத்துச்சேர்த்து விட்டேன். அதை உன்னிடம் ஒப்படைத்துவிட்டுச் செல்ல வேண்டுமென்பதற்காகவே உன்னை எழுப்பினேன். தவறெனின் மன்னித்துக் கொள் தம்பி!'' என்ருர்.

''அண்ணுவின் குரலில் சிறிதும் மாற்றமின்றிப் பேசுகின்றீர்களே!'' என்று குறிப்பிட்டேன்.

''அண்ணுவின் குரலில் மட்டுமல்ல; நீ காண விரும்பிய கரிகால் சோழனின் குரலிலும் என்னல் பேச முடியும்!'' என்ருர் அவர்.

''ஐயா! தாங்கள் யார் என்பதைத் தயவு செய்து கூறுகின்றீர்களா?'' என்று கேட்டேன்.

''நான் யார் என்பதைப் பிறகு கூறுகின்றேன். முதலில் நீ காண விரும்பிய கரிகால் சோழனின் குரலைக் கேட்க உனக்கு விருப்பமில்லையா?'' என்று வினவினர்.

''சரி! கரிகால் சோழனின் குரலில் பேசுங்கள்'' என்றேன்.

''தம்பி! நீ விரும்புகின்றபடி கரிகாலன், குரலில் பேசுகின்றேன். ஆனல், முதலில் நீ, எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்! செய்வாயா?''

''முடிந்தால் செய்கின்றேன்! என்னவென்று சொல்லுங்கள்''.

''கைம்மாறு எதிர்பார்த்துக் கேட்கின்றேன் என்று எண்ணி விடாதே! 'காலத்திற்கேற்ற' வகையில் காவிரியின் சீரமைப்பு என்று குறிப்பு எழுதி வைத்துள்ளாயே அதன் விவரங்களை எனக்கு நீ, விளக்க வேண்டும். காவிரியை என் உயிராகக் கருதுகின்றேன். அதனல்தான் அதைப் பற்றித் தெரிந்து கொள்ளத் துடிக்கின்றேன்!''.

''ஓ! இதைத்தான் உதவி என்று கேட்டீர்களா? நீங்கள் எதைக் கேட்கப் போகின்றீர்களோ! அதைச் செய்ய என்னல் முடியுமோ, முடியாதோ! என்று பயந்து கொண்டிருந்தேன்''.

''ஒருவரால் முடியாத உதவியை, அவரிடமிருந்து எதிர்பார்ப்பது தமிழனின் பண்பல்ல தம்பி!''

''சரி! காவிரியின் சீரமைப்பு பற்றி விளக்கட்டுமா?''.

''கடற்கரை ஓரத்தில் நடந்து கொண்டே பேசலாமோ?''

''தங்கள் விருப்பப்படி நடந்து கொண்டே பேசுவோம்.''

அவர் முன்னே நடந்தார். நான் அவரைப் பின் தொடர்ந்தேன். அவருடைய உடை, அவரை ஒரு சாதாரண மனிதரைப்போல் காட்டினுலும், அவருடைய நடை 'ராஜ நடை' என்பார்களே அதுபோல் இருந்தது. என்னல் அவருடைய வேகத்திற்கு நடக்க இயலவில்லை. அவருடைய நடையழகைப்பார்த்துக் கொண்டே, சற்று தூரம் அவர் பின்னலேயே நடந்தேன். சிறிது நேர மௌன நடைக்குப் பின், அவர் என்னைத் திரும்பிப் பார்த்தார். நான் சற்று வேகமாக நடந்தேன்.

''ஓ! நான் வேகமாகச் செல்கின்றேனு? இனிமேல் மெதுவாகச் செல்கின்றேன்'' என்று கூறி அவர் நின்றார்.

''பரவாயில்லை! இதோ வந்து விட்டேன்!'' என்று கூறிக் கொண்டே சற்று வேகமாக ஓடி அவர் நின்ற இடத்தை அடைந்தேன்.

''தம்பி! காவிரி நதி பற்றியும், காவிரி சீரமைப்புப் பற்றியும் முழு விளக்கம் தருவாயா?'' என்று கேட்டுக் கொண்டே மெதுவாக நடந்தார்.

''இதோ! துவங்குகின்றேன்' என்று கூறிவிட்டு அவர் பக்கத்திலேயே நடந்தேன். நான் விளக்கத் தொடங்கினேன்.

''ஐயா! நினைப்புக்கு எட்டாத நெடுங்காலமாகவே வேளாண்மையிலும், நீர்ப்பாசன முறையிலும் தஞ்சை மாவட்டம் தரணியே போற்றும் அளவுக்குச் சிறந்து விளங்கியுள்ளது. இயற்கை, தஞ்சை மாவட்டத்திற்கு நல்ல மழையை அளித்து வந்ததுடன், தென்மேற்கு, வட கிழக்கு ஆகிய இரு பருவக் காற்ருலும் நிரம்ப மழையைப் பெறும் காவிரி நதியையும், அதன் பல கிளை நதிகளையும் அளித்துள்ளது. அவைகள், பல நூற்ருண்டுகளாகத்தஞ்சை மாவட்டத்திற்கு நிலையான நீர்ப்பாசன வசதியை அளித்து வந்ததுடன், அவ்வப் பொழுது வெள்ளப் பெருக்கினல் ஏராளமான சேதங்களையும் ஏற்படுத்தி வந்துள்ளன.

''தஞ்சை மாவட்டத்தில், காவிரி நதியால் ஏற்படுத்தப்பட்டுள்ள கழிமுகப் பகுதி (டெல்டா) 10 இலட்சம் ஏக்கருக்கும் மேல் பரவியுள்ளது. விசிறி வடிவில் ( Fan Shape ) அமைந்துள்ள இக் கழிமுகப் பகுதி வடக்கில் கொள்ளிடத்தையும், கிழக்கில் வங்காள விரிகுடாவையும், தெற்கிலும், மேற்கிலும் தஞ்சை மாவட்டத்தின் மேட்டுப்' பாங்கான பகுதிகளையும் எல்லையாகக் கொண்டுள்ளது. இக் கழிமுகப் பகுதி, நெல் சாகுபடிக்கேற்ற வளமான பகுதியாக விளங்குகிறது. 'தமிழகத்தின் நெற்களஞ்சியம்' என்று தஞ்சை மாவட்டம். அன்றும், இன்றும், வழங்கப்பெறுகிறது. எனவே, தஞ்சை மாவட்டத்தைத் 'தமிழகத்தின் இதயம்' என்ருலும் தகும்.

"பல நூற்ருண்டுகளாக காவிரிக் கழிமுகப் பகுதி-நீரைத் தேக்கி வைத்திருந்து தேவைக்கேற்ப பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பின்றி-நேரடியாகவே நீர் பெற்று வந்தது. கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்புவரை, காவிரி யாற்றிலோ அல்லது அதன் கிளை நதிகளின் குறுக்கிலோ நீர்த் தேக்கங்கள் அமைக்கப்படவில்லை.

''காவிரி நதியின் மேல் பாதியில் அமைந்துள்ள 31,000 சதுர மைல் பரப்பு கொண்ட நீர் வடி பரப்பு ( Catchment area ) பெரும்பாலும் மைசூரில் உள்ளது. இப்பகுதி தென் மேற்குப் பருவக்காற்று காலத்தில் (ஜூன்-அக்டோபர்) பெரும்பகுதி மழையைப் பெறுகிறது. காவிரியின் கீழ்ப் பாதியில் உள்ள நீர் வடி பரப்பு, தமிழ்நாட்டில் உள்ளது. இப்பகுதி வட கிழக்குப் பருவக் காற்று காலத்தில் (அக்டோபர்—டிசம்பர்) பெரும் பகுதி மழையைப் பெறுகிறது.

"மைசூர் மாநிலத்தில் உள்ள 'கிருஷ்ணராஜ சாகர்' அணையே காவிரி நதியில் கட்டப்பட்ட முதல் நீர்த் தேக்கமாகும்.

"காவிரிக்கழிமுகப்பகுதியின்பாசனத் தேவையை முக்கியமாக ஈடு செய்யவே, மேட்டூர் நீர்த் தேக்கம் ( Mettur Dam) ஏற்படுத்தப்பட்டது. 1934-ஆம் ஆண்டில், மேட்டூர் அணை கட்டி முடிக்கப்பட்டது. மேட்டூர் அணையில் 93,500 மில்லியன் கனஅடி தண்ணீரைத் தேக்கி வைக்க முடியும். மேட்டூர் அணையின் நீர் வடி பரப்பு 16,300 சதுர மைலாகும்.



"திருச்சிராப்பள்ளிக்கு 10மைல் மேற்கே மேல்அணை(Upper Anicut) 1835-ஆம் ஆண்டில், கேப்டன் காட்டன் என்ற வெள்ளைக்காரப் பொறியாளர் ஒருவரால் கட்டப் பெற்றது. இவ்வணையே கழிமுகப் பகுதியின் தலைப்பாகும். இங்குக் காவிரி இரு பெரும் நதிகளாகப் பிரிந்து கொள்ளிடத்தை ஏற்படுத்துகிறது. கழிமுகப் பகுதியின் வடக்கெல்லையாக அமைந்துள்ள கொள்ளிடம், வெள்ளத்தை வடிக்கும் முக்கிய நதியாக அமைந்துள்ளது. மேல் அணையின் மேலே, கொள்ளிடத்தின் குறுக்கே, 1945-ஆம் ஆண்டில் ஒருபாலம் கட்டப்பெற்றது. வெள்ளத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக, மேல் அணையை 1899-ஆம் ஆண்டிற்கும், 1904-ஆம் ஆண்டிற்கும் இடையில் புதுப்பிக்கப்பட்டது.

''மேல் அணையிலிருந்து 17மைல் கிழக்கே, காவிரியாறு காவிரி, வெண்ணுறு, உள்ளாறு என்று மூன்று ஆறுகளாகப் பிரிகின்றது. இவ்விடத்தில் அமைந்துள்ள அணையே கல்லணை (Grand Anicut ) எனப்படுகிறது. இக் கல்லணையே காவிரிக் கழிமுகப் பகுதியில் உள்ள முக்கிய நீர்ப் பாசன அமைப்பாகும். காவிரிக் கழிமுகப் பகுதியில் பல நூற்ருண்டுகளுக்கு முன்பே கட்டப் பட்டுள்ள பழமையான நீர்ப் பாசன அமைப்பு கல்லணையே என்று கூறப்படுகிறது.

''கி. பி. 2-ஆம் நூற்ருண்டில் உள்ளாற்றின் குறுக்கே, கரிகால் சோழன் கல்லணையைக் கட்டியதாக வரலாறு கூறுகின்றது. அந்த அணைக் கட்டப்பட்டதனுலேயே—உள்ளாற்றின் வழியாகக் கொள்ளிடத்தில் வீணுகச்சென்ற தண்ணீரைத் தடுத்து, காவிரியில் திருப்பிவிட்டு—தஞ்சை மாவட்ட நெல் சாகுபடிக்கு உறுதியான பாசனம் கிடைத்தது. அதனுல் கரிகால் சோழனைத் தமிழகம் என்றும் மறக்காது'' என்றேன்.

இவ்வாறு கூறிய உடனே அவர் ''தம்பி!'' என்று அழைத்துவிட்டு, தன் மீசையை முறுக்கி விட்டுக் கொண்டு, ஒரு பெருமித களைப்பு களைத்துக்கொண்டார். அவருடைய செய்கை ''நான்தான் கல்லணையைக் கட்டியவன்!'' என்பதுபோல் இருந்தது.

''என்ன ஐயா?'' என்றேன்.

''கி.பி. 2-ஆம் நூற்ருண்டிலேயே, கரிகால் சோழன் கல்லணையைக் கட்டுவித்தான் என்று நீ கூறியதும், தமிழனின் திறமையை நினைத்து நான் பெருமிதமடைந்தேன். அந்தப் பெருமிதத்தில் நீயும் பங்கு கொள்ள வேண்டும் என்பதற்காகவே, ''தம்பி!'' என்று அழைத்து, உன் பேச்சைத் தடைப்படுத்தி விட்டேன். ஒரு செய்தியையும் விட்டுவிடாமல், எல்லாவற்றையும் தொகுத்துத் தொடர்பு படுத்தி நன்கு கூறுகிருய். தொடர்ந்து கூறு தம்பி!'' என்ருர். நான் என் விளக்கத்தைத் தொடர்ந்தேன்.

''கேப்டன் ஜே. எல். கால்டுவெல் என்ற வெள்ளைக்காரப் பொறியாளர் 1804-ஆம் ஆண்டில், கல்லணையைப் பழுது பார்த்து, அதன் மேல் 263 கல் தூண்களை நிறுவி புதுப்பித்துள்ளார். இச்செய்தி பற்றிய கல்வெட்டு இன்றும் கல்லணையில் காணப்படுகிறது. அக் கல்வெட்டில், 'Repaired this calingulah and erected the 263 upright stones by captain J.L. Caldwell A.D. 1804' என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கல்லணையில் 1830-ஆம் ஆண்டு முதல் மேலும் பல மாற்றங்களும், திருத்தங்களும் செய்யப்பட்டு, 1939-ஆம் ஆண்டில், தற்பொழுதுள்ள உருவத்தைக் கல்லணை பெற்றது.

"காவிரி, வெண்ணுறு பிரியும் இடத்தில் தண்ணீரைத் தேக்கி காவிரியிலும், வெண்ணுற்றிலும் தண்ணீரை முறை படுத்திவிடவும், கட்டுப்படுத்த முடியாத வெள்ளத்தை ஒதுக்கிவிடவும் 1886—ஆம் ஆண்டில், காவிரி-வெண்ணுறு பொறிமதகு (Regulator) அமைக்கப்பட்டது. இந்த இடத்திலிருந்தே காவிரி-மேட்டூர் திட்டத்தின் கீழ் வெட்டப்பட்ட கல்லணைக் கால்வாய் துவங்குகிறது. இப்பகுதிக்குக் கிழக்கே காவிரியும், வெண்ணுறும் பிரிந்து, பிரிந்து, பல கிளை நதிகளாக உருபெற்று, கழிமுகப் பகுதி முழுமைக்கும் பாசன வசதி அளிக்கின்றன.



" காவிரிக் கழிமுகப் பகுதியில் 36 பெரிய ஆறுகள் உள்ளன. அவைகளின் மொத்த நீளம் 999 மைல். இப்பெரிய ஆறுகள் அல்லாமல், 14,891 மைல் மொத்த நீளமுள்ள 29,881 வாய்க்கால்கள் கழிமுகப் பகுதிக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கின்றன. சில வடிகால் ஆறுகள் மேல் பகுதியிலோ அல்லது கீழ்ப் பகுதியிலோ பாசன ஆறுகளாக பயன்படுவது இப்பகுதிக்கே உரிய தனித்தன்மையாகும்.

''மேல் அணையிலிருந்து 67 மைல் தூரத்தில் கொள்ளிடத்தின் குறுக்கே கீழ் அணை ( Lower Anicut ) கட்டப்பட்டுள்ளது. இதை 'சர் ஆர்தர் காட்டன்' என்பவர் 1836-ஆம் ஆண்டில்—மேல் அணை கட்டப்பட்ட காலத்திலேயே-கட்டியுள்ளார். மேல் அணை கட்டப்பட்டதால் கொள்ளிடத்தை நம்பியுள்ள தென்னுர்க்காடு மாவட்ட நிலங்கள் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்காகவும், தஞ்சை மாவட்டத்தின் வட கிழக்குப் பகுதியில் காவிரியால் போதிய பாசன வசதி பெருதிருந்த நிலங்களுக்கு உறுதியான பாசனவசதி அளிக்கவும், கீழ் அணை கட்டப்பெற்றது. வடவாறு மற்றும் வீராணம் ஏரிக்குத் தண்ணீர் வழங்க-பழங்காலத்தில் மணலையும், கிளைகளையும் கொண்டு அமைக்கப்பட்டு வந்த தடுப்புச் சுவரை மாற்றியமைக்கவே-கீழ் அணை கட்டப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். கீழ் அணையின் மேல் 1855-ஆம் ஆண்டில் ஒரு பாலம் அமைக்கப்பட்டது. கீழ் அணை 1856—1957-ஆம் ஆண்டுகளில் விரிவு படுத்தப்பட்டு, 1899-ஆம் ஆண்டிற்கும் 1902-ஆம் ஆண்டிற்கும் இடையில், மேல் அணையைப் போலவே, புதுப்பித்துக் கட்டப்பட்டது. பிறகு கீழ் அணையின் தடுப்புச் சுவர் மட்டம் மேலும் 2 அடி தாழ்த்தப்பட்டு, வடவாறுக்கும், வீராணம் ஏரிக்கும் அதிக அளவு தண்ணீர் வழங்கப்பட்டது. கீழ் அணையின் தரைமட்டம் 1914-ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டு வலிவூட்டப்பெற்றன. வெள்ளம் வடிவதற்கு வசதியாக கீழ் அணையின் தெற்குப் பகுதியில், புதிதாக 10 கண்மாய்கள் 1929-ஆம் ஆண்டில் கட்டப்பட்டன. மேட்டூரிலிருந்து வரும் தண்ணீரில் ஒரு பகுதியைத் தனியாக கல்லணையிலிருந்து உள்ளாறு வழியாகக்கொள்ளிடத்திற்குத்திருப்பி விடுவதால், கீழ் அணையின் கீழுள்ள நிலங்கள் உறுதியான பாசனம் பெறுகின்றன.

" காவிரிக் கழிமுகப் பகுதியில் தற்பொழுது 9,34,150 ஏக்கர்

61



நிலப் பரப்பு நீர்ப்பாசன வசதி பெற்று வருகிறது. இப்பகுதியின் முக்கியப்பயிர் நெல். இப் பகுதியில் வழக்கமாக 6.5 இலட்சம் ஏக்கரில் ஒருபோக சாகுபடியும், 2.5 இலட்சம் ஏக்கரில் இருபோக சாகுபடியும் நடைபெற்று வந்து கொண்டிருந்தது. கல்லணைக் கால்வாய் மூலமாக 2.5 இலட்சம் ஏக்கர் பாசன வசதி பெற்று வருகிறது.

" கீழ் அணைக்கட்டின் மூலம், தற்பொழுது 1,15,141 ஏக்கர் பாசனம் பெறுகிறது. அதில் 70,024 ஏக்கர் ஒரு போக நிலமாகவும், 45,117 ஏக்கர் இருபோக நிலமாகவும் உள்ளது.

இதுவரை காவிரியைப் பற்றிய விவரங்களைச் சொன்னேன். இது போதுமா? இன்னும் ஏதேனும் விவரம் தேவையா?'' என்றேன்.

''இதுவே போதும் தம்பி! காவிரியைச் சீரமைக்க வேண்டிய அவசியம் என்ன தம்பி?'' என்ருர் அவர்.

''வான் பொய்ப்பினும் தான் பொய்யா காவிரி!'' என்று ஒரு காலத்தில் புகழப்பட்ட காவிரியாற்றில் இன்று போதுமான வெள்ளம் வருவதில்லை. அப்படியே வெள்ளம் வந்தாலும், காலத்தில் வருவதில்லை! அதன் காரணமாக தஞ்சை மாவட்டத்தில் குறுவைச் சாகுபடியையும், முன்போக சம்பா சாகுபடியையும் காலத்தில் செய்ய முடிவதில்லை, தப்பித்தவறி காலத்தில் வெள்ளம் வந்து குறுவையையும், முன்போக சம்பாவையும் சாகுபடி செய்யத் தொடங்கிவிட்டால், ஒரு சில வாரங்களுக்குப்பிறகுத் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு விடுகிறது அல்லது தாளடிப் பயிருக்குத் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு விடுகிறது. தஞ்சை மாவட்டத்தில் ஏதோ சில ஆண்டுகளைத் தவிர, மற்றெல்லா ஆண்டுகளிலும் வழக்கமாக இந்நிலை ஏற்படுகிறது. இதனுல் தஞ்சை மாவட்ட உழவர்கள் தாங்கொணுத இன்னல் அனுபவித்து வருகின்றனர். தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் தட்டுப்பாடு என்ருல் தமிழகமே வருத்தப்படுகிறது. ஏனெனில், தமிழகத்தில் உற்பத்தியாகும் அரிசியில் நான்கில் ஒரு பங்கு தஞ்சை மாவட்டத்திலிருந்துதான் கிடைக்கிறது.

"இதே நிலைமையைத்தொடர்ந்து நீடிக்க விடக் கூடாதென்பதற்காகவும், தற்பொழுது தஞ்சை மாவட்ட பாசன முறையில் உள்ள பல சங்கடங்களைத் தவிர்த்து தஞ்சை மாவட்ட உழவர்கள் படும் இன்னலைப் போக்க வேண்டுமென்பதற்காகவும், இன்றையத் தமிழ்நாடு அரசு காவிரியாற்றை காலத்திற்கேற்ற வகையில் சீரமைப்பு செய்யும் திட்டத்தை (Modernisation of Cauvery system) துவக்கியுள்ளது'' என்றேன்.

''தஞ்சை மாவட்ட பாசன முறையில் பல சங்கடங்கள் உள்ளதாகக்கூறுகிறாயே, அதைப் பற்றி சற்று விரிவாக சொல் தம்பி!'' என்றார் அவர்.

''தீவிரச்சாகுபடித்திட்டம் என்றழைக்கப்படும் தீவிர வேளாண்மை மாவட்டத்திட்டம்(Intensive Agricultural District Programme) தஞ்சை மாவட்டத்திற்குப் பெரும் பயன் அளித்து வருவதால், பேரும் புகழும் பெற்று விளங்குகிறது. கடந்த சில ஆண்டுகளில் உயர் விளைச்சல் ரகங்களைப் புகுத்துவதிலும், இரசாயன உரங்களின் உபயோகத்தை அதிகப்படுத்துவதிலும், பாசன நீரைப் பயனுள்ள முறையில் பயன்படுத்துவதிலும் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வந்தது. சீரிய முறையில் பாசன நிருவாகத்தை மேற்கொள்ளுவதற்கு, தஞ்சை மாவட்டத்தில் நெடுநாட்களாக நின்று நிலைத்து வரும் பழமையான பாசன முறை, ஒரு முக்கிய இடையூறாக இருந்து வருகிறது.

''கல்லணைக் கால்வாய் மூலம் பாசனம் பெரும் பகுதியைத் தவிர, பழைய கழிமுகப்பகுதியில் உள்ள நீர் வழங்குமுறை நீண்ட நெடுநாட்களாகவே இருந்து வருகிறது. இப்பாசன முறையில் ஒரு சிறு அளவுக்கேனும் கட்டுப்பாடு ஏற்படுத்தி, நம் விருப்பத்திற்கேற்ப தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்வதென்பது இயலாததொன்றாக இருந்து வருகிறது. ஒரு வயலிலிருந்து மற்றொரு வயலுக்கு என்ற முறையில் பாசனம் செய்யப்படுகிறது. இதனால் கடைமடையில் உள்ள நிலங்கள் காலத்தில் தண்ணீர் பெற முடிவதில்லை. பல இடங்களில் நீரை வடிப்பதும், பாசனம் செய்வதும் ஒரே வாய்க்கால் மூலமாகவே நடைபெறுவதால், நீரை வடிப்பது மிகவும் கடினமாக உள்ளது. இவையெல்லாவற்றிற்கும் மேலாக, காவிரி கழிமுகப் பகுதி வெள்ளத்தில் அமிழ்ந்தும், அழிந்தும் குறிப்பிடத் தகுந்த அளவு சேதம் அடைகிறது.

"காலம் கற்றுக் கொடுத்த பாடத்தையும், உழவர் பெருமக்களின் அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967—68-ஆம் ஆண்டில், பரம்பரை பரம்பரையாக ஒரு போகமே சாகுபடி செய்யப்பட்டுவந்த தஞ்சை மாவட்ட நன்செய் நிலங்களில், இருபோகம் சாகுபடி செய்யும் திட்டத்தைச் செயல்படுத்தத் திட்டமிட்டார். இன்றைய தமிழ்நாட்டு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், 1967—68-ஆம் ஆண்டிலே பொதுப் பணித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த நேரத்திலே, தஞ்சாவூரில் நீர்ப்பாசன மாநாடு நடைபெற ஆவன செய்தார். அந்த மாநாட்டில் இருபோக சாகுபடித் திட்டத்தைப் பற்றி விரிவாக விவாதித்து முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவிற்கேற்ப இருபோக சாகுபடித் திட்டத்தைத் தீவிரமாக செயல்படுத்திட பேரறிஞர் அண்ணா அவர்கள் தீவிர கவனம் செலுத்தினார். அதன் பயனாக அந்த ஆண்டில், தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் 2.1 இலட்சம் ஏக்கர் ஒருபோக சம்பா நிலத்தில், இருபோகம் சாகுபடி செய்யப்பட்டது. அதன் காரணமாக தஞ்சை மாவட்டத்தில் அந்த ஆண்டில் முதற் போகத்தில் மட்டும் 5.92 இலட்சம் ஏக்கரில் ஆடுதுறை-27 நெல் பயிரிடப் பட்டது. அதனால் 13.83 கோடி ரூபாய் மதிப்புள்ள 2,88,210 டன் அரிசி அதிகமாக உற்பத்தியாகியது. வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு முதல் போகத்தில் மட்டுமே 115·29 இலட்சம் ரூபாய் உபரி வருவாய் கிடைத்தது. இரண்டாவது போகத்தில் ஏறத்தாழ 6 கோடி ரூபாய் அதிக வருவாய் உழவர்களுக்குக் கிடைத்தது. இருபோக சாகுபடித் திட்டத்தின் காரணமாக நெல் உற்பத்தி அதிகமாகியதால், அந்த நெல்லை உடனடியாகக் காயவைத்துப் பதப்படுத்தி சேமித்து வைக்க 30 நெல் உலர்த்தும் ஆலைகள் தஞ்சை மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டன. அத்துடன் தஞ்சை மாவட்டத்தில் அந்த ஆண்டில் மட்டும் 4.5 இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டு, தமிழ்நாட்டில் நீண்ட நாட்களாக நிலவி வந்த உணவுப் பற்றாக் குறை நீக்கப்பட்டு, தன்னிறைவு அடைய முடிந்தது.



"தஞ்சை மாவட்ட இருபோக சாகுபடித் திட்டத்தின் வெற்றி உழவியல் சரித்திரத்திலேயே எங்கும், என்றும், கண்டும், கேட்டுமிராத மாபெரும் சாதனையாகும். இத் திட்டத்தினை அமெரிக்க நாட்டு 'லுக்' (Look) என்ற நாளேடு—நாளொன்றுக்கு 70 இலட்சம் பிரதிகள் விற்பனையாகும் இதழ்—'வேளாண்மையில் அமைதிப் புரட்சி' (Silent Revolution in agriculture) என்று வர்ணித்துள்ளது.

''பேரறிஞர் அண்ணா இருபோக சாகுபடித் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்பாக (1966—67 வரை), வழக்கமாக தஞ்சை மாவட்டத்தில் ஆண்டு தோறும் சுமார் 3 லட்சம் ஏக்கரில் குறுவையும், சுமார் 9 இலட்சம் ஏக்கரில் சம்பாவும், 2.70 இலட்சம் ஏக்கரில் தாளடியும் ஆக, மொத்தத்தில் 14·70 இலட்சம் ஏக்கரில் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டு வந்தது. பேரறிஞர் அண்ணா கொண்டு வந்த இருபோக சாகுபடித் திட்டத்தின் காரணமாக, 1967—68-ஆம் ஆண்டில், தஞ்சை மாவட்டத்தின் மொத்த சாகுபடி பரப்பு 15.68 இலட்சம் ஏக்கராக உயர்ந்தது. அண்ணா வழியில் அரும்பணியாற்றி வரும் கலைஞரும் இருபோக சாகுபடி திட்டத்தில் பேரார்வம் காட்டி வருவதால், சென்ற ஆண்டு (1971—72), தஞ்சை மாவட்டத்தின் மொத்த சாகுபடி பரப்பு 16.72 இலட்சம் ஏக்கராக உயர்ந்தது. மிகுபயன்தரும் ரகங்களின் பயனாலும், இருபோக சாகுபடியின் பயனாலும், 1966—67-ஆம் ஆண்டில் 8·77 இலட்சம் டன்னாக இருந்த தஞ்சை மாவட்டத்தின் அரிசி உற்பத்தி, 1970—71-ஆம் ஆண்டில் 13.01 இலட்சம் டன்னாக உயர்ந்தது.

"இவ்வாறு சாகுபடி முறையில் பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருவதால், பாசன முறையில் ஏற்பட்டிருந்த சிக்கல்கள் தீவிர மடைந்தன''.

—ஆர். எம்.

(அடுத்த இதழில் முடியும்)








# பிஞ்சுக்குழந்தைகளின் நெஞ்சங்கவர்ந்தவர்

செல்வி

"காக்கை குருவி எங்கள் சாதி
—நீள்
கடலும் மலையும் எங்கள்
கூட்டம்"

அமுதன் இந்தப் பாட்டைச் சத்தமிட்டுப் பாடிக் கொண்டிருந்தான். அப்போது அங்கு வந்த தங்கை தேன்மொழி, "அண்ணா! பாரதியார் பாட்டுத் தானே இது!" என்றாள்.

"ஆமாம் தேன்மொழி! வேறு யார் இப்படிப் பாட முடியும்? காக்கையையும், குருவியையும், கடலையும், மலையையும் தனது இனம் என்று சொல்லக் கூடிய பெரிய மனம் வேறு யாருக்கு வரும்?"—அமுதன் சொன்னான்.

"போ அண்ணா! உனக்குத் தெரிந்தது அவ்வளவுதான்! ஒரு ஆட்டுக் குட்டியைத் தனது தம்பி என்று சொல்லி இருக்கிறார் ஒரு தாத்தா. அவரை உனக்குத் தெரியுமா?"—தேன்மொழி கேட்டாள்.

"யாரது?.. — ....எனக்குத் தெரியவில்லையே!" என்றான் அமுதன்.

"அவர்தான் காந்தித் தாத்தா"—மகிழ்ச்சி அலை மோதத் தேன்மொழி சொன்னாள்.

"என்ன தேன்மொழி! எனக்குத் தெரியாத செய்தியெல்லாம் உனக்கு எப்படித் தெரிந்தது?"—அமுதன் வியப்புடன் பேசினான்.

"நேற்று எங்கள் ஆசிரியை காந்தித் தாத்தாவைப் பற்றி நிறையக் கதை சொன்னார்கள் அண்ணா!"

"அப்படியா! எங்கே ஒவ்வொன்றாகச் சொல்லு!"

"எல்லாக் கதைகளையும் சொல்ல முடியாது அண்ணா! நான் 7 மணிக்கு 'டியூசன்' படிக்கப் போக வேண்டும்! அதற்குள்ளாக எவ்வளவு சொல்ல முடியுமோ அவ்வளவையும் சொல்கிறேன்."

தேன்மொழி இவ்வாறு சொல்லியதும், அதுவரை நின்று கொண்டே பேசிக் கொண்டிருந்த அமுதன் தரையில் சம்மணம் போட்டு அமர்ந்தபடி, "சீக்கிரம் சொல்லு தேன்மொழி!" என்றான்.

தேன்மொழி காந்தித் தாத்தாவைப் பற்றிச் சொல்லத் துவங்கினாள்.

"காந்தித் தாத்தா ஆசிரமத்திலிருந்தார். அவர் எப்போதும் ஆட்டுப்பால் அருந்தி வந்தார். அதனால் அவரது ஆசிரமத்தில் ஆடு ஒன்று இருந்தது. அந்த ஆட்டுக்குக் குட்டி ஒன்று இருந்தது. தினமும் மாலையில் காந்தித் தாத்தா உலாவப் புறப்படுவார். அப்போது அந்த ஆட்டுக் குட்டியும் புறப்படும். ஒரு நாள் அவருக்கு முன்னும் பின்னும் சென்று தொல்லை கொடுத்தது. காந்தித் தாத்தா அப்போது என்ன செய்தார் தெரியுமா? ஆட்டுக் குட்டியின் காதைப் பிடித்து நிறுத்தினார்."

"இதோ பார்! நீ மிகவும் பொல்லாதவன். நீ எனக்குத் தொல்லை கொடுப்பது ஏன் என்று எனக்குத் 'தெரிந்து விட்டது. உனது அம்மா தரும் பாலை நானும் பங்கு போட்டுக் கொள்கிறேனே என்கின்ற பொறாமையுணர்ச்சியிலே நீ இவ்வாறு செய்கிறாய்! நீயும் நானும் இனி அண்ணன் தம்பிகள்! ஒரு தாய்ப்பாலைக் குடித்து வளர்கிறோம் இல்லையா?"

என்று கூறி ஆட்டுக் குட்டியின் முதுகைத் தடவிக் கொடுத்தார். இப்போது புரிகிறதா அண்ணா, பாரதியார் மட்டுமல்ல, காந்தித் தாத்தாவும் விலங்குகளைத் தமது இனம் என்று பாராட்டிப் பேசியிருக்கிறார் என்ற செய்தி!" —தேன்மொழி இவ்வாறு கேட்டாள்.

"தேன்மொழி! நமது எதிர் வீட்டில் உள்ள சாமிநாதனும், கயல்விழியும் தாங்கள் உடன் பிறந்தவர்கள் என்பதையே மறந்துவிட்டு, ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்கிறார்களே .......—..! அவர்களிடம் போய் இந்தச் செய்தியைச் சொல்ல வேண்டும்—விலங்கையும் தன்னையும் அண்ணன் தம்பியாக எண்ணிக் கொண்ட காந்தித் தாத்தாவின் பெரிய மனத்தைத் தெளிவாக எடுத்துரைக்க வேணடும்; வருகிறாயா போவோம்!"—அமுதன் ஆர்வத்துடன் கேட்டான்.

"அண்ணா உன் ஆர்வம் நியாயமானதுதான், ஆனால் ........ எதிர்வீட்டுக்காரர்கள் அனைவரும், வெளியூரில் உள்ள உறவினர் வீட்டுத் திருமணத்திற்குக் குடும்பத்துடன் சென்றிருக்கிறார்கள் என்பதை மறந்துவிட்டாயா?"

"ஆமாமா! இப்போதுதான் நினைவு வருகிறது......சரி அடுத்த கதையைச் சொல்லு!"

"அண்ணா! குழந்தையும் தெய்வமும்.........." "........ கொண்டாடும் இடத்தில்; எனக்குத் தெரியும்!"

"உனக்குத் தெரியும். அந்தப் பழமொழி காந்தித் தாத்தா வாழ்க்கையில் அப்படியே உண்மையாக நடந்திருக்கிறது. ஒரு தடவை காந்தித் தாத்தா வட்டமேசை மாநாட்டுக்காக இலண்டன்

சென்றார். கிங்ஸ்லி கூடம் என்ற கட்டடத்தில் தங்கியிருந்தார். அவரைப் பார்த்துச் செல்ல அரசியல் வாதிகள் வந்தார்கள்—பத்திரிகைக்காரர்கள் வந்தார்கள். அவர்கள் மட்டுமல்ல ; எண்ணற்ற குழந்தைகளும் தாத்தாவைப் பார்க்க வந்தார்கள். அந்தக் குழந்தைகளோடு காந்தித் தாத்தா சலிப்பின்றிப் பேசினார்; விளையாடினார். அந்தக் குழந்தைகளும் காந்தித் தாத்தாவை விட்டுப் பிரியாமல் எப்போதும் சூழ்ந்து கொண்டே இருந்தார்கள். அப்போது குழந்தைகளிடம் காந்தித் தாத்தா ஒரு கேள்வி கேட்டார். அது என்ன தெரியுமா?''

''சொன்னாத்தானே தெரியும் தேன்மொழி! சொல்லாமலே என்னைக் கேட்டால்........''

''சரி சொல்கிறேன்! காந்தித் தாத்தா என்ன கேள்வி கேட்டார் தெரியுமா? ஒரு டப்பா நிறையப் பட்டாணிக் கடலையை வைத்துக் கொண்டு 'இதில்எத்தனை பட்டாணிகள் இருக்கின்றன' என்றார். எந்தப் பையன் சொல்கிறானோ அவனுக்கு ஓர் அன்பளிப்பு தரப் போகிறேன் என்றும் கூறினார் ''

''பையன்கள் சொல்லி விட்டார்களா ?''— அமுதன் கேட்டான்.

''அதிலேதான் வேடிக்கையிருக்கிறது அண்ணா! ஒரு சிறுவன் நூறு பட்டாணி என்றான். மற்றோர் சிறுவன் இரு நூறு என்று சொன்னான். இப்படி ஒவ்வொருவரும் தனக்கு உகந்ததைச் சொன்னார்கள். காலிக் என்ற பெயருள்ள ஒரு சிறுவன் காந்தித் தாத்தாவின் அருகில் வந்து நின்று, 'தாத்தா, தாத்தா! ஒரு டப்பா நிறைய பட்டாணி இருக்கிறது' என்று சொன்னான். அந்தச் சிறுவன் சாமர்த்தியமாகப் பதில் சொன்னதைக் கேட்ட காந்தித் தாத்தா மகிழ்ந்து போனார். அந்தச் சிறுவனுக்கு அழகான பரிசு ஒன்றினைத் தந்தார்''

''என்ன பரிசு தந்தார் தேன்மொழி?''

''அழகான-வெள்ளை வெளேரென்றிருந்த ஒரு முயல் குட்டியைப் பரிசு தந்தார்''

''அப்படியா! ஆமாம்.........அந்த முயல் குட்டி காந்தித் தாத்தாவுக்கு ஏது? நம்ம நாட்டிலிருந்தே கொண்டு போயிருந்தாரா?''

''இல்லை அண்ணா, இலண்டனுக்கு அவர் சென்றிருந்த சமயம் அவரது பிறந்தநாள் வந்தது. அங்குள்ள மக்கள் தாத்தாவைச் சந்தித்துப் பலவித அன்பளிப்புகளை அவருக்குக் கொடுத்தார்கள். அதிலே அந்த முயல் குட்டியும் அன்பளிப்பாக வந்து சேர்ந்தது. அந்த அன்பளிப்புப் பொருளைத் தான் சிறுவனுக்குக் கொடுத்தார் காந்தித் தாத்தா''

''தேன்மொழி! எனக்கு ஒரு கருத்துத் தோன்றுகிறது. 'வாழ்க்கை பிறருக்குக் கொடுப்பதற்காகத்தான், ஏற்றுக் கொள்வதற்கல்ல' என்று சொல்வார்களே அந்தத் தத்துவத்தை காந்தித் தாத்தா, அப்படியே கடைப்பிடித்திருக்கிறார்''

''இதை எங்கள் ஆசிரியையும் சொன்னார்கள். நீயும் அப்படியே சொல்கிறாய் அண்ணா!'' தேன்மொழி சொன்னாள்.

''இதிலிருந்து உனக்கு என்ன விளங்குகிறது? சொல்லு பார்ப்போம்!''

''ஒன்றும் விளங்கவில்லையே?''

''அதாவது ..........எதிர் காலத்தில் நானும் ஒரு பள்ளி ஆசிரியர் ஆகப் போகிறேன் புரிந்து கொள்!'' — அமுதன் சொன்னான்.

''உயர்ந்த பணி; உன்னதமான பணி; காந்தித் தாத்தா கூட ஆசிரியர் வேலை செய்ய நினைத்திருக்கிறார் அண்ணா; ஆனால் அந்த ஆசை நிறைவேறவில்லை.''

''அப்படியா! அந்த விவரம் எனக்குத் தெரியாது; கொஞ்சம் சொல்லு தேன்மொழி!''

''ஏன் அண்ணா? உண்மையிலேயே தெரியாமல்தான் கேட்கிறாயா? என்னைக் கிண்டல் செய்வதற்காகக் கேட்கிறாயா?''

''தெரிந்திருந்தால் நானல்லவா உனக்குச் சொல்லியிருப்பேன்! உன்னிடம் நான் கேட்டுக் கொண்டிருக்க மாட்டேனே!''— அமுதன் சொன்னான்.

''சரி, சொல்கிறேன். மணி 6.50 ஆகிவிட்டது. இன்னும் பத்து நிமிடத்திற்குள் சொல்லி முடித்துவிட்டு நான் டியூசனுக்குப் போகவேண்டும் அண்ணா!''

''சீக்கிரம் சொல்லு. நீ தானே நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறாய்......?''

''கேளு அண்ணா! காந்தித் தாத்தா வெளிநாடு சென்று சட்டக் கல்வி படித்து வந்தார், சட்டப் படிப்பில் அவருக்குக் கொஞ்சம் கூட விருப்பமில்லை, ஆனாலும் பெற்றோர்களின் விருப்பத்திற்காகப் படித்தாராம்; பிறகு வழக்கறிஞராகத் திரும்பி வந்து ராஜகட்டத்தில் தொழில் நடத்தினார். அங்குத்தொழில் சரி வர நடக்காததால், பம்பாய் சென்று தொழில் நடத்தினார். அங்கேயும் அந்தத் தொழில் சரி வர அவருக்கு நடைபெறவில்லை. சலிப்புடனேயே இருந்தார். அந்தச் சமயத்தில் தான் ஒருநாள் ஒரு பத்திரிகையில் வெளி வந்த விளம்பரம் அவரது கண்ணில் பட்டு விட்டது''

''என்ன விளம்பரம் தேன்மொழி?''

''அதாவது தனிப்பட்ட ஒருவர் தனது குழந்தைக்கு ஆங்கிலப் பாடம் சொல்லித்தர வேண்டும்; மாதம் 75 ரூபாய் தரப்படும்; தகுதியுடையோர் உடனே வருக, என்று ஒரு விளம்பரம் செய்திருந்தார். அந்த விளம்பரத்தைக் கண்ணுற்ற காந்தித் தாத்தா அதில் குறிப்பிடப்பட்டுள்ள வீட்டுக்குச் சென்று விளம்பரம் செய்தவரைச் சந்தித்துத் தனது தகுதியை எடுத்துச் சொன்னாராம். அப்படியிருந்தும் காந்தித் தாத்தா இந்தியர் என்பதால் அவருக்கு அந்த அலுவல் கிடைக்கவில்லை! பாவம்! ஏமாற்றத்துடன் திரும்பி விட்டார்.''

''அதனாலென்ன தேன்மொழி! காந்தித் தாத்தாதான் நமது இந்திய நாட்டுக்கே ஆசிரியராக விளங்கியிருக்கிறாரே!''—அமுதன் சொன்னான்.

அப்போது கடிகாரம் ஏழு மணியை உதிர்த்தது. உடனே, தேன்மொழி ''அண்ணா நான் டியூசனுக்குப் போகிறேன்'' என்று ஓடிச் சென்று விட்டாள்.

அமுதன், காந்தித் தாத்தாவின் கதையை அழகாக எடுத்துச் சொன்ன தன் தங்கையின் திறமையையெண்ணி மனத்துக்குள் பாராட்டிக் கொண்டிருந்தான்.

ஆசிரியர், வெளியிடுபவர் செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை, அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-2.






பன்னிரண்டு
ஆண்டுகளில் வருவாய்
இரட்டிப்பாக
தமிழக மாநிலத் திட்டக்
குழுவின் திட்டங்கள்
இப்படி
எந்த
நோக்கினும்
நமது
நல்வாழ்வுக்காக
புதிய புதிய
திட்டங்கள்
இவைகளால் புதுவாழ்வு
பெருகிடும் மக்கள் தொகையே இன்றையப் பெரும் பிரச்சினை?
குடும்ப நலத்திட்டம்
• நமக்கும் நல்லது
• நாட்டுக்கும் நல்லது !
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்.
குடும்ப நலத்துறை தமிழ்நாடு அரசு



# அரசு - மிகவுயர்ந்த தரமானது

## போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீக்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலையால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

### தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

**அரசு** -வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16


R.R.No:877/55/72
P. 71



# நம் தாய்த்திருநாட்டில் அறிவு பரவி ஆற்றல் மிகுந்திட.....

அக்டோபர் இரண்டாம் நாள்—அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள். சமுதாய நலத் திட்டங்களை நாடெங்கும் தொடங்கிவைத்து அதனைத் தொடர்ந்து செயல்படுத்த நாம் தேர்ந்தெடுத்துக் கொண்ட பெருநாளும் அந்தத் திருநாளே !

சமுதாயம், தனி மனிதர்களின் கூட்டு ; தனி மனிதர்களால் உருவாக்கப்படுகிறது. சமுதாயத்தின் மொத்த வாழ்வு பற்றியே நாம் கவலைப்படுகிறோம் எனினும், அந்த வாழ்வுக்கு ஒவ்வொரு தனி மனிதனும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு தனி மனிதனின் செயல்—ஒழுக்கம்—அரசியல் பண்பாடு—பொதுத் தொண்டில் உள்ள ஆர்வம்—மனத்தூய்மை—பேச்சு—எழுத்து—அறிவு—ஆற்றல்—அனைத்தும் துணை நதிகளாகிச் சமுதாயமெனும் காவிரிப் பெரு நதியாகப் பெருக்கெடுத்து—வாழ்வில் வளமும் நலனும் சேரக் கிளைநதிகளாக, வாய்க்கால்களாகப் பிரிந்து கடமையாற்றுகின்றன.

செயல், தன்னலத்திற்காக அமைந்து—ஒழுக்கம் ஊருக்குச் செய்யும் உபதேசமாக இருந்து—அரசியல் பண்பாடு, எரிச்சலுக்கு ஆளாகி அழிந்துபட்டு—பேச்சிலும் எழுத்திலும் தரக்குறைவுகள் தலையெடுத்து அறிவும் ஆற்றலும் பழி வாங்குவதற்கே பயன்படுத்தப்பட்டு — பொதுத் தொண்டில் ஆர்வம் என்பது வெளி வேடமாகி விடுமேயானல், சமுதாய நலத் திட்டங்களுக்கென அளவற்ற பொருளை அள்ளி வழங்கினலும், அதனல் கிடைக்கும் பயன் மிகச் சொற்பமாகவே போய்விடும். அதனல் தான் அண்ணல் காந்தியடிகள் தூய்மையான மனத்துடன் இந்தப் பணியிலே புகுந்திட வேண்டுமென விரும்பினர்.

வெறும் சொல் அளவிலே நின்று விடாமல் சுதந்தரம் பெற்ற நாட்டின் ஒளிமிகுந்த வாழ்க்கை அந்த நாட்டிலுள்ள கிராமப் புறத்து மக்களின் சுதந்தரச் சுகவாழ்விலிருந்து தான் உதயமாகிட வேண்டும் என்பது அவர் கருத்து. மக்களாட்சியின் மாண்புக்கே வழி வகுக்கக் கூடியது அடித்தள மக்களின் வாழ்வுப் பிரச்சினைகளை மையமாக வைத்துக் காரியங்களை மேற்கொள்வதுதான் என்றும் திடமாக எடுத்துக் கூறி, அந்தப் பணிக்குத் தன்னை ஒப்படைத்துக் கொண்டார்.

ஆன்றோர்கள் உருவாக்கிய பழந்தமிழ் இலக்கியங்களிலும், பிற்காலக் கல்வெட்டுகளிலும், கிராம மக்களின் நலன்களையும், உரிமைகளையும் காக்கவும், அவர்தம் வாழ்வை வகுத்துக் கொள்ளவும் முறைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததைக் கண்ணுறும் தமிழர்களாகிய நமக்குக் காந்தியடிகளின் தத்துவம் கற்கண்டாய்த் தேன்பாகாய் இனிப்பதில் வியப்பேதும் இல்லையல்லவா ?

சமுதாயத்தில், எல்லாக் கட்டங்களிலும் வளம் சேர்க்கச் சமுதாய நலத்திட்டப் பணிகள் பயன்படுகின்றன. அந்தப்பணியினை மெத்த ஆர்வத்துடன் செய்திடும் ஊராட்சிகளை மேலும் ஊக்கப்படுத்தவே இந்த ஆண்டும் அதற்கான வார விழாவை நடத்திட முன் வந்துள்ளோம்.

இலட்சிய ஆர்வமும், ஆக்கமும், ஊக்கமும் நிறைந்த நடைமுறைப் போக்கு—இன்று ஊராட்சி மன்றங்களிடையே தோன்றியுள்ளன. இந்தப் பேரொளி நின்று நிலைக்கும்போது, ஏற்றத் தாழ்வற்ற வளம்நிறைந்ததொரு சமுதாய அமைப்பை நம்மால் உறுதியாக உருவாக்க முடியும்.

கடந்த ஆண்டுகளில் வேளாண்மை வளர்ச்சிக்கெனப் புதிய ஆய்வுகள் நடத்தி விஞ்ஞான நுட்பங்களைப் பயன்படுத்தி மிகு விளைச்சலுக்கான ஆக்க வேலைகளில் முனைந்து நின்ற ஊராட்சி மன்றங்கள் என்றும் நமது பாராட்டுக்குரியன. ஊர் மக்களிடையே, பசுமைப் புரட்சி செய்வது மட்டுமின்றி—அறிவுப் புரட்சியும் செய்து அவர்களை மனவளமுள்ளவர்களாக—சுகாதார வசதிகளைப் பெறுவதில் முன் நிற்பவர்களாக ஆக்குகின்ற முயற்சிகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம்.

தொடர்ந்து தொண்டாற்ற—இன்று இந்த விழாவை நான் தொடங்கி வைக்கிறேன்.

மேற்கொள்ள வேண்டிய புதிய வேலைகள் பற்றியும், ஊராட்சித் திட்டங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய சிறப்பிடம் பற்றியும், வட்டார அளவிலும்—மாவட்ட அளவிலும் இவ்விழாவின் போது விரிவான விவாதங்கள் நடத்தப்பட வேண்டுமென விரும்புகிறேன். அந்தந்த வட்டாரங்களின் வளர்ச்சிக் கேற்பச் செயல்படத் தக்க கருத்துகளைத் திரட்டி மேற்கொள்வதற்கான வழிவகையும் ஆராயப்பட வேண்டும்.

சமுதாயம் ஒன்றுபட்டு நிற்கும் போது அனைவருக்கும் பயன்கிட்டும் என்பதை எடுத்துக் காட்டும் வகையில் சமுதாயம் முழுமையும் இவ்விழாவில் பங்குகொள்ளத் தக்கவாறு எல்லாப் பிரிவினரையும் கவரக் கூடிய—நன்கு திட்டமிட்ட நடவடிக்கைகளோடு இவ்விழா நிறைவுபெற ஊராட்சித் தலைவர்களும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் தங்கள் ஒத்துழைப்பைத் தந்திடுமாறு ஆர்வத்தோடு பெரிதும் வேண்டுகிறேன்.

மக்களின் ஆர்வத்தோடு அரசாங்க அலுவலர்களின் திட்டமிட்ட பணியும் இணையும் போது வளர்ச்சி மேலோங்குகிறது.

பொறுப்பின்றிப் பதவியோ அதிகாரமோ இல்லை.

அதிகாரங்களைவிடப் பொறுப்புகள்தான் முக்கியமானவை !

அதிகாரங்கள் தேய்ந்து, பொறுப்புகள் தன்னியல்பாகி விடுவதே உண்மையான மக்களாட்சி !

பதவிகள், பணிபுரிவதற்குக் கிடைக்கும் வாய்ப்புகளாகக் கருதப்பட வேண்டும். அதிகாரங்கள் தம்மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புகள் என்ற உணர்வு வந்தாகவேண்டும். அப்போதுதான் பொதுவாழ்வு சிறக்கும். பொதுத் தொண்டு வெற்றி பெறும்; புத்தொளி நாடெங்கும் பரவும்.

புதிய வேளாண்மைக் கிணறுகள், சமுதாயக் கிணறுகள், அமைத்தல்—குடிநீர்க் கிணறுகள் தோண்டுதல்—பாசன வசதி மேம்பாட்டுக்கான வாய்க்கால்களை வகைப்படுத்தல் — இணைப்புச் சாலைகளைப் போடுதல்-வானொலி மன்றங்களை ஏற்படுத்தல் —இளைஞர் அணியினருடன் தொடர்பு கொண்டு அவர்கள் ஆற்றலைப் பயன்படுத்துதல்—தீண்டாமை நோய், எந்த வழியிலும் தலை காட்டாமல் தடுத்தல்—குடும்ப நலத் திட்டங்களை நிறைவேற்றுதல்—விளக்குதல்—சத்துணவுத் திட்டம் பற்றிய விவரங்களை அளித்தல்—கண் ஒளி குறைந்தோர்க்கு ஒளி வழங்கும் திட்டம் பற்றி எடுத்துச்சொல்லி, அவர்களை அதன் பயனை அனுபவிக்கச் செய்தல்—இளம் மாணவர்க்கு உற்சாக மூட்டும் விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல்—பேச்சுப் போட்டிகளை ஏற்பாடு செய்தல்—இது போன்ற நூற்றுக்கணக்கான காரியங்களைப் பொறுப்பிலே உள்ளவர்கள், கடுகளவும், தன்னலமின்றிச் செய்வார்களேயானல் புன்னகைப் பூங்காவாக நமது பூமி திகழும்.

கிராமங்களின் வளர்ச்சியை ஒட்டியே நாட்டின் எதிர்காலம் அமையும். மக்களாட்சி, ஊராட்சிகளில் இருந்துதான் தொடங்குகிறது. மறுமலர்ச்சி என்பதும் அங்கிருந்தே முகிழ்க்க வேண்டும்.

இனிய பொழில்களையும் நெடிய வயல்களையும் கணக்கின்றிப் பெற்றுள்ள நம் தாய்த் திருநாட்டில்—

விளைவு பெருகி
வறுமை மாய்ந்து
அமைதி தவழ்ந்து
அறிவு பரவி
ஆற்றல் மிகுந்திட

இந்த வாரவிழா—கால்கோள் விழாவாக அமையட்டும் என்று கூறி விழாவினைத் தொடங்கி வைக்கிறேன்.

(சமுதாய நலத்திட்ட வாரவிழாவைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை.)




16-10—1-எ

# அரசு கொண்டாடிய அண்ணலின் விழா



அக்டோபர் மாதம் 2-ஆம் நாள் அகிலத்துக்கு அகிம்சை வழியைப் போதித்த அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாள்.

அந்த நாளைத் தமிழக அரசு ஆர்வத்துடனும் அக்கறையுடனும் கொண்டாடி வருகிறது. அதுமட்டுமல்ல, அண்ணலின் பிறந்த நாளை அனைத்துக் கட்சியினரும் சேர்ந்து கொண்டாடும் அன்பு விழாவாகத் தமிழக அரசு மாற்றி அமைத்துள்ளது.

அந்த வகையில், இந்த ஆண்டு அக்டோபர் 2-ஆம் நாளன்று சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் அனைத்துக் கட்சியினரும் பங்கேற்கும் வகையில் அண்ணலின் 104-வது பிறந்த நாள் முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

இந்த விழாவிலே வேறு முக்கியமான இரண்டு நிகழ்ச்சிகள் இணைக்கப் பெற்றதை வரலாறு மறக்க முடியாது.

சென்னை-செங்கற்பட்டு மாவட்டங்களைச் சேர்ந்த விடுதலைப் போராட்ட வீரர்கள் 113 பேர்களுக்குத் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் சார்பில் விருது வழங்கிய நிகழ்ச்சியும், கோவைச் சிறையில் சிதம்பரனார் இழுத்த செக்கு, சென்னைக்குக் கொண்டு வரப்பட்டுப் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப் பெறுவதற்காக முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப் பெற்ற நிகழ்ச்சியும், அண்ணலின் பிறந்தநாள் விழாவோடு இணைக்கப் பெற்றது குறிப்பிடத் தக்க செய்தியாகும்.

பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபம் வண்ண விளக்குகளால் அணி செய்யப் பட்டிருந்தது. பாதைகளில் உள்ள வண்ணக் கொடிகள் காற்றில் அசைந்த காட்சி அனைவரையும் வருக வருக என்று அழைப்பது போலிருந்தது. மக்கள் வெள்ளம் நூற்றாண்டு மண்டபத்தை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருந்தது.

மண்டபத்தினுள்ளே மாலை 5-30 மணியளவில் மெல்லிசை மன்னர் திரு எம். எஸ். விசுவநாதன் அவர்களின் குழுவினருடன், திரு டி. எம். செளந்தரராசன், திரு கே. வீரமணி, திருமதி எல். ஆர். ஈஸ்வரி ஆகியோர் அண்ணலின் புகழ்ச் சரித்திரத்தைப் பாமாலைகளாக்கித் தொடுத்துத் தந்தார்கள்.

அதன் பிறகு,

நூற்றாண்டு விழா மண்டபத்திற்கு வெளியே வைக்கப் பெற்றிருந்த சிதம்பரனார் இழுத்த செக்கைப் பொதுமக்களின் பார்வைக்கு முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

பின்னர்,

அனைத்துக் கட்சியினரும் பங்கு கொள்ளும் பொதுக்கூட்டம் தொடங்கப் பெற்றது. முதல்வர் கலைஞர் அவர்களைத் தலைமை ஏற்குமாறு கேட்டுக்கொண்டும், வந்திருந்தோர் அனைவரையும் வரவேற்றும் உரையாற்றினார், தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு பு. சபாநாயகம் அவர்கள்.

முதல்வர் கலைஞர் அவர்கள் தமது தலைமை முன்னுரையில் குறிப்பிட்டார்கள் :—

''காந்தியடிகள் பிறந்த இந்த நாளில் அனைத்துக் கட்சிகளின் சார்பில் ஆண்டுதோறும் நாம் வழக்கமாகக் கொண்டாடுவதைப் போல் இந்த ஆண்டும் விழாவினை ஏற்பாடு செய்து மிகச் சிறப்புடன் கொண்டாடுகின்ற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறோம்.''

''இந்திய அரசின் சார்பில் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படுகின்ற செப்பேட்டினைப் பெறுவதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் இங்கே வருகை தந்திருக்கிறார்கள். அவர்கள் விடுதலைப் போராட்டத்திலே நம்முடைய மாநிலத்திலேயிருந்து ஈடுபட்டவர்களல்ல என்றாலும், வேறொரு மாநிலத்திலே இருந்து அந்தப் போராட்டத்திலே அவர்கள் ஈடுபட்டவர்கள் என்றாலும், அந்தப் போராட்டத்திற்கான விருதினைப் பெறுகின்ற மாநிலமாக நமது தமிழகம் இருப்பதில் நாம் பெருமை அடைகிறோம். இது, தமிழ் நாட்டிலே இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த அரசு, இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டில் எவ்வளவு ஆர்வத்தோடு இருக்கிறது என்பதற்கு இயற்கையே நமக்களித்திருக்கும் சான்றாகும் என்று கருதுகிறேன்.''

''அந்த வகையிலே நம்முடைய மேதகு ஆளுநர் அவர்களுக்கு இந்திய அரசு வழங்குகின்ற செப்பேட்டினை வழங்குவதில் நான் மிகுந்த பெருமையடைகிறேன்.''

—இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் தெரிவித்துவிட்டு, மேதகு ஆளுநர் கே. கே. ஷா அவர்களிடம், தாமிர பத்திர விருதினைக் கொடுக்க, அதனைப் பெற்றுக் கொண்ட ஆளுநர் அவர்கள் தனது நன்றிப் பெருக்கினை எடுத்துரைத்தார். தமது பேச்சில் ஆளுநர் குறிப்பிட்டதாவது:

''தாமிர பத்திர விருது பெறுவோனாக இருப்பேன் என்று நான் வாழ்நாளில் என்றும் நான் எதிர்பார்த்தேன் அல்ல. நாங்களெல்லாம் நாட்டின் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்த காலத்தில் நீண்ட காலச் சிறை வாழ்வையோ அல்லது தூக்குத் தண்டனையையோ தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். எங்களுக்கிருந்த ஒரே ஆறுதல் மகாத்மா காந்தியைத் தலைவராகப் பெற்றிருந்தோம் என்பதுதான். அவர் எழுப்பிவிட்ட எழுச்சிதான் எல்லோர்களிடையே வலுவான அன்புப் பிணைப்பாக இருந்தது.

''வன் செயலில் நம்பிக்கை கொண்ட பிரிவினரைச் சேர்ந்திருந்தவன் நான். எங்குச் சென்றாலும் இதையே நான் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தேன். ஆனால் போராட்டம் முடிந்தவுடன் ''பாபு, நான் தவறு செய்து விட்டேன்; அதற்காக வருந்துகிறேன்'' என்று மகாத்மாவிடம் நான் சொல்வது உண்டு.

### தலைமையின் சிறப்பு

''நீ, மீண்டும் அதே தவறைச் செய்வாய் என்பதையும் நான் அறிவேன். ஆனால் நீ என்னிடம் வந்துகொண்டு இருக்கும் காலம்வரையிலும் உன்னையே நீ மாற்றிக்கொள்ளச் சந்தர்ப்பம் உண்டு''-இவ்வாறு பதிலுரைப்பார் மகாத்மா!

''சவகர், சர்தார், மௌலானா, சுபாஷ்பாபு, இராஜாஜி போன்றவர்களைத் தன் வழியில் செல்லத் தூண்டிய வேறொரு தலைவரை வரலாற்றில் நீங்கள் பார்த்ததுண்டா? படித்தது உண்டா?''

''அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே நாட்டை நடாத்திச் செல்லும் பெற்றிமை உடையவர்கள். இருப்பினும் அவர்கள் அனைவரும் காந்தியின் கூற்றினை முடிந்த முடிபாக ஏற்றுக் கொண்டார்கள். அதுதான் காந்தியினுடைய தலைமையின் சிறப்பாகும்.''

### மக்களுக்கே அதிகாரம்.

''நான் இன்று ஆளுநராக இருக்கிறேன் என்றால் நாட்டின் விடுதலைக்காகப் போராடிய எல்லா விடுதலை வீரர்களுக்கும் இந்த ஆளுநர் பதவியில் பங்குண்டு.

''தமிழகத்தில் கற்றுத் தேர்ந்த நமது தமிழக முதல்வரின் கையிலிருந்து தாமிர பத்திரம் பெறும் இந்நாள் என் வாழ்வில் ஓர் திருநாள். இந்நிகழ்ச்சி வடக்குத் தெற்கு வேறுபாடுகளை மறந்து, சாதி, மதம், சமயம், மொழி வேற்றுமைகளைத் துறந்து நாட்டின் விடுதலைக்காகப் போராடிய நிகழ்ச்சிகளை என் நினைவிற்குக் கொண்டு வருகிறது.''

''நன்றி கலந்த வணக்கம்!''

ஆளுநர் உரை முடிந்ததும் மேலவைத் துணைத் தலைவர் திரு ம. பொ. சி. அவர்களுக்கு முதல்வர் கலைஞர் அவர்கள் செப்பேட்டினை வழங்கினார்கள்.

அதன்பின், விடுதலை வீரர்கள் அனைவருக்கும் செப்பேடுகள் வழங்கப் பெற்றன. செப்பேடு வழங்கப் பெறும் நிகழ்ச்சி முடிவுற்றதும் தவத்திரு குன்றக்குடி அடிகளார், எம்.எல்.சி., அவர்கள், உரையாற்றினார்கள்.

''தீண்டாமையை நாம் முற்றிலும் விலக்கியபாடில்லை. சாதி முறைகளை ஒழித்தபாடில்லை. இமயம் முதல் குமரிவரை வாழ்கின்ற சமுதாயத்தை-ஒத்த குலம்—ஒத்த நிறை—எல்லாரும் ஓர் குலம்—எல்லாரும் ஓர் நிறை என்று பாரதி பாடிய வகையில் உருவாக்குகிற பொழுதுதான் விடுதலைக்கு ஒரு நல்ல பாதுகாப்பு ஏற்படும்.''

—இவ்வாறு குறிப்பிட்ட அடிகளாருக்குப் பின், உழைப்பாளர் கட்சியின் சார்பில் திரு எஸ். எஸ். இராமசாமிப் படையாச்சி எம். எல். சி. உரையாற்றினார்கள். அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''மகாத்மா காந்தியவர்கள் இந்த நாட்டின் விடுதலைக்காகப் போராடி வெற்றிபெறச் செய்தார். அவர் விடுதலைக்காக மட்டும் போராடவில்லை. எதிர்காலத்தில் மக்கள் எப்படி எல்லாம் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் அவர் தந்திருக்கிறார்.''

அடுத்து பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் பேசிய திரு ஏ. ஆர். பெருமாள், எம். எல்.ஏ. தமது உரையில் குறிப்பிட்டதாவது :

''காந்தியடிகள் விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை வகிப்பதற்கு முன்னாலேயே விடுதலைப் போராட்டம் நடந்தது. ஆனால், அந்த விடுதலைப் போராட்டம் வன்முறையை அடிப்படையாகக் கொண்டு ஆயுதங்களை ஏந்திப் பயங்கர இயக்கமாக இந்தியா முழுவதும் நடைபெற்றிருக்கிறது. வெள்ளைக்கார அதிகாரிகள் கண்ட கண்ட இடங்களில் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அதன் காரணமாக, விடுதலைப்போராட்டம், விடுதலை கேட்கின்ற குரல் எழாதபடி தடுத்து வைத்திருந்தான் வெள்ளைக்காரன். அந்த

அண்ணலின் சிலைக்கு முதல்வர் மாலையிடுகிறார்









நேரத்திலேதான் இந்திய விடுதலைப் போராட்டத்தின் தலைமையை ஏற்க வந்தார் காந்தியடிகள். வந்தபொழுது அவர் கொடுத்த இரண்டே இரண்டு கொள்கைகள் தாரக மந்திரங்கள்—அகிம்சை ; சத்தியம்; இந்த இரண்டு கொள்கைகளை வைத்தே பெரிய ஏகாதிபத்தியத்துடன் போராடி வெற்றிகண்டார் காந்தியடிகள்.

பின்பு பேசிய முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் திரு கே. ஏ. அப்துல் வகாப், எம். எல். சி. குறிப்பிட்டார் :—

''மகாத்மா காந்தியடிகள் சாதாரண மனிதர் இல்லை. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஓர் முறை உதயமாகும் நறுமணமிகுந்த நர்கிஸ் மலரை ஒத்தவர். அவர்கள் நமக்குக் கிடைத்தது நாம் செய்த பாக்கியம் என்றுதான் சொல்ல வேண்டும். ''

அதன் பின்பு, சட்ட மன்ற மேலவையின் துணைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் உரையாற்றினார்கள். அவர்தம் உரை :—

''சுதந்தரத்திற்குப் பாடுபடுகிற பேறு பெறுவதே ஒருவருடைய புண்ணியம்.

''அந்தச் சுதந்தரத்தை பெற்று முடித்துச் சுதந்தரத்தைப் பார்ப்பது அதைவிடப் பெரும் புண்ணியம்.

''சுதந்தரத்தைப் பார்த்த பிறகும் அதை வளர்ப்பதற்குக் கால் நூற்றாண்டு வாழ்வது அதைவிடப் பெருஞ் சிறப்பு.''

''அதைவிடப் பெருஞ்சிறப்பு, எந்த ஆட்சியை அமைத்தானோ அந்த ஆட்சியிடம் அவன், தியாகத்தைச் செப்புப் பட்டயத்தில் பொறித்துக் கொடுப்பது—அதைப் பெறுவது ; ''

''அதைவிடப் பெருஞ்சிறப்பு சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களுடைய நெஞ்சங்களிலே குடியிருக்கும் ஏழை மக்களின் ஆட்சியினுடைய முதல்வரிடமிருந்து இரண்டு கையேந்திப் பெறுவது பெருஞ் சிறப்பாகக் கருதுகிறேன்.

''தாமிரபத்திரம் பெற்றது சிறைக்குப் போய்த் துன்பம் பெற்றோம், என்ற காரணத்திற்காக ஆகும். அந்தத் தாமிர பத்திரம் கொடுப்பவர்க்கும் அந்தத் துன்பம் தெரிந்திருந்தால் நல்லது ; அவரும் தெரிந்தவர்—ஆறு ஏழு முறை சிறை சென்றவர். சிறைக்குப் போன காரணங்களில் வேறுபடலாம். ''

''பிரதம மந்திரி இந்திரா காந்தி அவர்கள் பெரியார் முதல் இராஜாஜி வரை—அடியேன் வரை சேர்த்து நம்முடைய முதல்வரை வைத்துக் கொடுங்கள் என்றார். பிரதம மந்திரியே முதல்வரைத் தேர்ந்தெடுத்து 'உங்கள் கையால் கொடுங்கள்' என்று சொல்லிவிட்ட பிறகு அதற்குத் தலைவணங்க மறுப்பவர்கள் இந்தியாவின் சனநாயகத்தையே மறுப்பவர்கள். ''

''அதிகம் புகழ நினைத்தாலும் புகழ முடியாத உயரத்தில் இருக்கிறார், காந்தியடிகள். சிந்தையும், ஒளியும் செல்லாத சிகரத்தில் — அந்தப் புகழில் வீற்றிருக்கிற மகானின் பெருமையைச் சொல்ல வார்த்தைகள் போதாது.''

சிலம்புச் செல்வருக்குப்பின், பேசிய கல்வியமைச்சர் திருநாவலர் அவர்கள் '' காந்தியடிகளுடைய வரலாறு—இந்த நாட்டினுடைய அரசியல்போக்கையே மாற்றுவதற்கு அவர் காரணமாக இருந்து—வெள்ளைக்காரர்களுடைய கால் கழுவிக் கெஞ்சுகின்ற நிலைக்குப் போகாமல் வெடிகுண்டின் மூலமும், துப்பாக்கிகளின் மூலமும், வன்முறைச் செயல்களின் மூலமும் தான் எண்ணுகின்ற காரியங்களை முடிக்க வேண்டும் என்று கருதாமலும்—இடையிலே புதியதொரு வழியைக் கண்டு பிடித்து எதிரிக்கு அடிமையாகாமல் அடங்காமல்—வளையாமல்— நெளியாமல்—பணியாமல்—வீழாமல்— அதே நேரத்தில் பிறரை வஞ்சிக்காமல்—வாட்டாமல்— வருத்தாமல் — கொடுமைகளுக்கு ஆளாக்காமல் — தம்மைத் தாமே வருத்திக் கொள்வதன் மூலமாகப் பிறரது உள்ளத்தையே திருத்த வேண்டும் என்ற பெருங் கொள்கையில் அவர்கள் வெற்றி பெற்றார்கள்'' என்றார்.

அதன்பின், முதல்வர் கலைஞர் அவர்கள் முடிப்புரையில் குறிப்பிட்டார்கள் :—

''இன்று தமிழக அரசின் சார்பில் நடத்தப்படுகின்ற காந்தியடிகள் பிறந்த நாள் விழாவிலும், கப்பலோட்டிய தமிழன் சிதம்பரனார் அவர்கள் கோவைச் சிறையிலே இழுத்த செக்கினைத் திறந்து வைக்கின்ற விழாவிலும்,







விடுதலை வீரர்கட்கு இந்திய அரசின் சார்பில் வழங்கப்பட்ட செப்பேடுகளை விடுதலை வீரர்கள் பெற்றுக் கொள்ளும் விழாவிலும் கலந்து கொண்டு சிறப்புச் செய்த உங்கள் அனைவருக்கும் நான் எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.''

''காந்தியடிகளுடைய விழாவை—இந்தியாவில் அவரது 100-வது பிறந்த நாளின்போது எல்லா மாநிலங்களிலும் கொண்டாடப் பட்டது. அப்போது தமிழ் நாட்டில் காந்தியடிகளுடைய நூற்றாண்டு நாள் விழாவினையொட்டி, அவர் தென்னாப்பிரிக்காவில் போராட்டம் நடத்திய போது அவருக்கு யார் உறுதுணையாக இருந்தார்களோ, தமிழகத்தின் சார்பில்—அந்தத் தில்லையாடி வள்ளியம்மைக்கும்—நாகப்பனுக்கும், நாராயணசாமிக்கும் அவர்கள் மூதாதையர்கள் வாழ்ந்த திருநகரமான தில்லையாடியில் வள்ளியம்மை நகரை அமைத்தும், நாகப்பன், நாராயணசாமி ஆகியவர்களின் பெயரால் நினைவுச் சின்னங்களை எழுப்பியும், காந்தியடிகள் அந்தச் சாதாரணமான எளிய குடும்பத்திலே பிறந்து—

ஆனால் ஒரு வீரவரலாற்றைக் காந்தியடிகளுடைய வாழ்க்கைப் புத்தகத்திலே ஓர் அத்தியாயமாகச் சேர்த்த தில்லையாடி வள்ளியம்மை பிறந்த அந்தத் திருத்தலத்திற்கு, வந்து தங்கி இருந்த அந்த வீட்டினையும் செம்மைப் படுத்திச் சில லட்சம் ரூபாய் செலவில் தமிழக அரசின் சார்பில் அந்த நகரத்தை ஒரு நினைவுச் சின்னமாக ஆக்கியிருக்கின்றோம். அது மாத்திரமல்லாமல், எந்த அடித்தளத்து மக்களுக்காகக் காந்தியடிகள் செய்பாடுபட்டாரோ—அரசு செய்கின்ற காரியங்களெல்லாம் போய்ச்சேர வேண்டும் என்று விரும்பினாரோ— அப்படிப்பட்ட அடித்தளத்து மக்களுடைய வாழ்வில் மேன்மை எய்திட வேண்டும் என்பதற்காக அவரது நூற்றாண்டு விழாவினையொட்டி நூற்றுக்கணக்கான இடங்களிலே குடிதண்ணீர் வசதியைப் பெருக்கியும், அரிசனங்களுக்கான புதிய புதிய காலனிகளை அமைத்தும், தீண்டாமையை ஒழித்திட மேலும் தீவிரக் கவனம் செலுத்துவதற்காக ஆறு மாவட்டங்களிலே இதற்காகத் தனிக் காவல்படை ஒன்றினை அமைத்தும் நூற்றாண்டு விழாவிலே தமிழக அரசின் சார்பில் காந்தியடிகளுக்குச் செலுத்த வேண்டிய காணிக்கையை நாம் செலுத்தி இருக்கின்றோம்.''



வ. உ. சிதம்பரனார் இழுத்த செக்கை முதலவர், பொதுமக்கள் பார்வைக்குத் திறந்து வைக்கிறார்.



[illegible] முதல்வர் வழங்குகிறார்.





# பசுமைப் புரட்சியில் கிழங்குகள்

இந்தியாவில் பசுமைப் புரட்சியில் குறிப்பாகத் தமிழகத்தில் மரவள்ளிக் கிழங்குகளும், சர்க்கரை வள்ளிக் கிழங்குகளும் முக்கிய இடம் பெற்றுள்ளன. ஏனெனில் அவைகள் நல்ல உணவுச் சத்துகளைக் கொண்டுள்ளன. நல்ல மகசூலும் கொடுக்கின்றன. அவைகளை மாற்று உணவாக உட்கொள்ளலாம். அவைகளை, மற்றச் சாகுபடிக்கு ஒவ்வாத நிலங்களிலும் சாகுபடி செய்யலாம். மைசூரில் உள்ள நம் மைய உணவு-நுட்ப ஆராய்ச்சிக் கழகத்தில், நம் உணவில், அரிசிக்குப் பதிலாக, 25 சதவிகிதம் அளவுக்கு இக் கிழங்குகளை உணவாக உட்கொள்ளலாம் எனக் கண்டுள்ளனர். இவ்விதம் கிழங்குகளை நாம் உணவாக உட்கொள்ள 1.5 மில்லியன் டன் கிழங்குகள் தேவைப்படுகின்றன. மரவள்ளிக் கிழங்குகளிலும், சர்க்கரை வள்ளிக் கிழங்குகளிலும் பின் கண்டவாறு உணவுச் சத்துகள் அடங்கி உள்ளன..

| | மரவள்ளிக் கிழங்கு. | சர்க்கரை வள்ளிக் கிழங்கு. |
|---|---|---|
| கலோரிகள் | 146 | 125 |
| நீர் (கிராம்) | 62.5 | 70 |
| மாவுப்பொருள் ,, | 34.7 | 27.3 |
| புரதம் ,, | 1.2 | 1.8 |
| கொழுப்பு ,, | 0.3 | 0.4 |
| சுண்ணாம்பு (கால்சியம்) | 3.3 | 3.4 |
| இரும்பு ,, | 0.7 | 1.0 |
| வைட்டமின் 'ஏ'(ஐ.யூ) | .. | 2,500 |
| வைட்டமின் 'பி1' | 0.66 | 0.1 |
| வைட்டமின் 'பி2' | 0.33 | 0.05 |
| நியாசின் | 0.60 | 0.60 |
| வைட்டமின் 'சி' | 36 | 23 |

தமிழகத்தில் மரவள்ளிக் கிழங்குகளும், சர்க்கரைவள்ளிக் கிழங்குகளும் அநேகமாக தமிழ் நாட்டின் எல்லாமாவட்டங்களிலும் பயிராகின்றன. என்பதைக் கீழே கண்ட அட்டவணையிலிருந்து அறிந்துக் கொள்ளலாம்.

| மாவட்டம் | மரவள்ளிக் கிழங்கு பரப்பளவு (எக்டேரில்). | சர்க்கரை வள்ளிக் கிழங்கு பரப்பளவு (எக்டேரில்) |
|---|---|---|
| செங்கற்பட்டு | 592 | 171 |
| தென் ஆர்க்காடு | 1,482 | 1,623 |
| வட ஆர்க்காடு | .. | 150 |
| சேலம் | 19,537 | 208 |
| தர்மபுரி | 599 | 20 |
| கோவை | 191 | 90 |
| திருச்சிராப்பள்ளி | 1,144 | 1,015 |
| தஞ்சை | 220 | 129 |
| மதுரை | 98 | 338 |
| இராமநாதபுரம் | | 138 |
| நெல்லை | 10 | 485 |
| நீலகிரி | 311 | 49 |
| குமரி | 14,422 | 33 |
| மொத்தம் | 38,606 | 4,003 |

### மரவள்ளிக் கிழங்கு

மரவள்ளிக் கிழங்கு இந்தியாவில் ஏறத்தாழ 2,51,000 எக்டேர் பரப்பளவிலும், தமிழகத்தில் 38,606 எக்டேரிலும்பயிராகின்றது. குமரி, கோவை நீலகிரி மாவட்ட மக்கள், மரவள்ளிக் கிழங்கை உணவாக உட்கொள்கின்றனர். சேலத்தில் மரவள்ளிக் கிழங்கை ஜவ்வரிசியாகவும் (Sago), வற்றலாகவும், மாவுப் பொருளாகவும் தயாரிக்க ஏறத்தாழ முன்னூறு தொழிற்சாலைகள் இயங்குகின்றன. ஓர் ஏக்கரிலிருந்து கிடைக்கக்கூடிய மரவள்ளிக் கிழங்கிலிருந்து கிடைக்கும் மாவுப் பொருள் கோதுமையை விட ஆறு மடங்கும், மக்காச் சோளத்தை விட இரு மடங்கும் அதிகமாக இருக்கின்றது.

நூற்பு ஆலைகளுக்கு மரவள்ளிக் கிழங்கின் மாவுப் பொருள், உருளைக் கிழங்கு, மக்காச்சோளம் ஆகிய மாவுப் பொருளைவிடச் சிறந்ததாக இருக்கிறது. 1959–60-ஆம் ஆண்டில் சேலத்திலிருந்து ஜவ்வரிசி இலங்கை, கிழக்குப் பாகிஸ்தான், ருஷ்யா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இங்கிலாந்து, பெல்ஜியம், ஆஸ்திரேலியா, நியுஜிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில் இதற்கு நல்ல தேவை (கிராக்கி) உள்ளது.

இந்திய வேளாண்மைக் கழகத்தின் சார்பாகக் கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், கூட்டு ஆய்வுத் திட்டத்தின் கீழ், மரவள்ளிக் கிழங்குகளில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாராய்ச்சிகளின் அடிப்படையில், அதன் சாகுபடியைப் பற்றிய குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**மண் வளம்:**—நல்ல வடிகால் வசதியுள்ள, குறுமண் கலந்த மணற் பாங்கான நிலம் சாகுபடிக்குச் சிறந்தது.

**மரவள்ளிக் கிழங்கு வகைகள்:**—தமிழகத்திற்குக் கீழே கண்டுள்ள வகைகள் சிறந்தவையெனக் கண்டறியப்பட்டுள்ளன.

எஸ். 2:—இது திருவனந்தபுரத்தில் உள்ள மைய கிழங்கு ஆராய்ச்சிக் கழகத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதன் கிழங்குகள் நீளமாகவும், பெரியதாகவும், விரிந்தும், பரந்தும் உள்ளன. இதன் மேல்தோல் பழுப்பு வண்ணத்துடனும், உட்சதை வெண்மையாகவும் காணப்படும். ஒரு செடியிலிருந்து 8 முதல் 10 கிழங்குகள் கிடைக்கும். இந்த ரகம் ஒரு எக்டேரிலிருந்து சற்றேறக்குறைய 45 முதல் 50 டன் மகசூல் கொடுக்க வல்லது.

எஸ். 5:—இதுவும் திருவனந்தபுரத்தில் உள்ள மைய கிழங்கு ஆராய்ச்சிக் கழகத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளதேயாகும். இதன் கிழங்குகள் பருத்தும், நெருக்கமாகவும் உள்ளன. கிழங்குகளின் மேல் தோல் பழுப்பு நிறத்துடனும், உட்சதை வெண்மையாகவும் காணப்படும். ஒரு செடியிலிருந்து 6 அல்லது 8 கிழங்குகள் கிடைக்கும். ஒரு எக்டேரிலிருந்து ஏறத்தாழ 30 முதல் 35 டன் கிழங்குகள் பெறலாம்.

மலேயன் 4:—இவ்வகையை 'வைரஸ்' என்ற நோய் தாக்காது. இது மற்ற வகைகளைவிட வீரியமாகவும், உயரமாகவும் வளரும். இதன் கிழங்குகள் நீளமாகவும், விரிந்தும் காணப்படும். கிழங்குகளின் மேல் தோல் கருமை கலந்த பழுப்பு நிறத்துடனும், உட்சதை வெண்மையாகவும் தோன்றும். இது ஒரு எக்டேருக்கு சற்றேறக்குறைய 35 முதல் 40 டன் மகசூல் கொடுக்கும்.


எஸ்-5 வகை மரவள்ளிக் கிழங்கு.


எஸ்-2 வகை மரவள்ளிக் கிழங்கு


மலேயன் 4 வகை மரவள்ளிக்கிழங்கு

மலவெள்ளா:—இதன் கிழங்குகள் பெரியதாகவும், தண்டினைச் சுற்றிலும் நெருக்கமாகவும் காணப்படும். மேல் தோல் இலேசான பழுப்பு நிறத்துடனும், உட்தோல் சிவப்பு நிறத்துடனும், உட்சதை வெண்மையாகவும் இருக்கும். இந்த ரகம் ஒரு எக்டேரிலிருந்து 25 முதல் 30 டன் மகசூல் அளிக்கும்.

நிலந்தயாரித்தல்:—நிலத்தை மூன்று அல்லது நான்கு முறை நன்றாக உழுதல் வேண்டும். கடைசி முறையாக உழும்போது 20 வண்டி (10 டன்) மக்கிய தொழு உரம் ஒரு எக்டேருக்கு என்ற அளவில் நிலத்தில் இட்டு அவைகளை மண்ணோடு மண்ணாகக் கலக்குமாறு உழ வேண்டும். பிறகு நிலத்தில் ஒன்றுக்கொன்று 75 செ.மீ. இடைவெளி விட்டுப் பார் பிடிக்க வேண்டும்.

நடும்முறை:—மரவள்ளிக் கிழங்குச் செடியினுடைய கிளையின் நுனிபாகத்தை நீக்கி விட்டு மைய பாகத்தையும், அடிப்பாகத்தையும் 15 செ.மீ. நீளமுள்ள துண்டுகளாக நறுக்க வேண்டும். நடுவதற்கு முன்பு பூசண நோய் வராமல் தடுக்க 1 சத போர்டோ கலவையில் கரணைகளை நனைத்து எடுக்க வேண்டும். தண்ணீர் கட்டிய பார்களின் நடுப்பக்கத்தில் 90 செ. மீ. இடைவெளியில் அக்குச்சிகளை நடவேண்டும். ஒரு எக்டேருக்கு 10,000 முதல் 12,000 குச்சிகள் வரை தேவைப்படும்.



நடுங்காலம்:—பொதுவாக உழவர்கள் மரவள்ளிக் கிழங்குக் குச்சிகளை, ஜூன் மாதத்தில் நடுகின்றனர். ஆனால் செப்டம்பர் மாதத்தில் நடவு செய்தால் நல்ல மகசூல் கிடைக்கும் என ஆராய்ச்சியின் மூலம் தெரியவருகிறது.

நீர்பாய்ச்சுதல்:—மரவள்ளிக் கிழங்கு சாகுபடி காலத்தில் சுமார் 35 அல்லது 40 தடவை தண்ணீர் கட்டினால் போதுமானது. மழைக் காலங்களைத் தவிர மற்றக் காலங்களில் எட்டு நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் கட்டுவது சாலச் சிறந்தது.

உரம் வைத்தல்:—நிலத்தில் குச்சிகள் நடுவதற்கு முன்பாகத் தொழு உரம் போடவேண்டும். அதன் பின் அட்டவணையில் கண்ட இரசாயன உரங்களை நடுவதற்கு ஒரு நாள் முன்பு, அடி உரமாக இடுதல் வேண்டும். நட்ட மூன்று மாதங்களுக்குப் பின் அட்டவணையில் கண்டபடி மேலுரம் போட வேண்டும்.

பின்செய் நேர்த்தி:—ஒவ்வொரு மாதமும் களைகள் எடுக்க வேண்டும். பயிர்களின் மூன்றுவது மாதத்திலும் அதாவது மேலுரம் போட்ட உடனும், ஆறுவது மாதத்திலும் மண் அணைக்க வேண்டும். ஒவ்வொரு செடியிலும் இரண்டு தண்டுகளுக்கு மேல் இருத்தல் நல்லதல்ல.

ஊடு பயிர்:—குச்சிகள் நட்ட இரண்டு அல்லது மூன்று மாதத்திற்குள்ளாகப் பலன்தரும் கடலை, முள்ளங்கி, பீட்ரூட் போன்றவைகளை ஊடு பயிர்களாகக் சாகுபடி செய்யலாம். இதன் விதைகளைக் குச்சிகள் நட்ட பார்களின் மறுபகுதியில் விதைக்க வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு:—மரவள்ளியை 'மொசைக் வைரஸ்' என்ற நோய் தாக்கும். இந்நோய்களினால் தாக்கப்பட்ட செடிகளை அப்புறப்படுத்தித் தீக்கிரையாக்க வேண்டும். இந்நோய் பரவாமல் இருக்க மூன்று அல்லது நான்கு முறை 'ரோகார்' என்னும் மருந்து தெளிப்பதால், இந் நோயைப் பரவச் செய்கின்ற பூச்சிகளைக் கொன்றுவிட முடியும். மரவள்ளிக் கிழங்கின் தண்டுகளைச் 'செதில்கள்' எனப்படும் பூச்சிகள் தாக்கும். இவைகளைத் தவிர்க்க 'மெட்டாசிஸ் டாக்ஸ்' 0·5 சதவிகிதம் தெளிக்க வேண்டும்.

அறுவடை:—மரவள்ளிக் கிழங்குகளை நட்ட 10 முதல் 12 மாதங்களில் அறுவடை செய்யலாம். கிழங்குகள் முதிர்ச்சியடைந்துள்ளதைப் பின் கண்ட அறிகுறிகள் மூலம் அறியலாம்.

1. இலைகள் பழுப்படைந்து, மஞ்சள் நிறத்துடன் காய்ந்து உதிரும்.

2. செடிகளின் அடிப்பாகத்தில் மண் வெடித்துக் காணப்படும்.

மாவு தயாரிப்பதற்கு 12 முதல் 14 மாதங்களுக்குப் பின் தான் அறுவடை செய்ய வேண்டும். அறுவடை செய்வதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாகத் தண்ணீர் கட்டுவதால் கிழங்குகளை எளிதாக தோண்டி எடுக்க முடியும். ஒரு எக்டேரிலிருந்து சுமார் 25 முதல் 30 டன் வரை கிழங்குகள் சாதாரணமாகப் பெறலாம். நல்ல ரகங்களில் 50 டன் வரை கூட மகசூல் கிடைக்கும்.

ஒரு எக்டேர் (2·47 ஏக்கர்) மரவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்யச் சுமார் ரூபாய் 2,000 செலவாகும். ஆனால் மொத்த வருமானம் சுமார் ரூபாய் 6,000 கிடைக்கலாம்.

### சர்க்கரை வள்ளிக் கிழங்கு

தமிழகத்தில் சற்றேறக்குறைய 4,000 எக்டேரில் சர்க்கரை வள்ளிக் கிழங்கு சாகுபடியாகின்றது. கிழங்குகளில் வைட்டமின் 'ஏ'யும் 'சி'யும் அதிகமாக உள்ளன. சர்க்கரை வள்ளிக் கிழங்கு நூற்பாலைகளுக்குத் தேவையான பசை, வாசனைப் பவுடர்கள், ரொட்டி ஆகியவை செய்வதற்கு உபயோகப்படுத்தப்படுகின்றன. சர்க்கரை வள்ளிக் கிழங்கிலிருந்து சாராயமும் ( Alcohol ) தயாரிக்கலாம்.

மண்வளம்:—குறுமண் கலந்தமணல், சர்க்கரை வள்ளிக் கிழங்குச் சாகுபடிக்கு ஏற்றது. நல்ல


எச்-3 வகை சர்க்கரை வள்ளிக் கிழங்கு.


மலேவெள்ளா மரவள்ளிக் கிழங்கு.


எச்-1 சர்க்கரை வள்ளிக்கிழங்கு.

ஒளியும், நீண்ட இரவும் இதன் வளர்ச்சிக்கு ஏற்றது. நிலம் நல்ல வடிகால் வசதியுடன் இருக்க வேண்டும்.

### சர்க்கரை வள்ளிக் கிழங்கு வகைகள்

வி-6.—இதன் சாகுபடிகாலம் 4½ முதல் 5 மாதங்கள். கிழங்குகள் நீண்ட உருண்டையாகவும், பெரியதாகவும் காணப்படும். உட்சதை நல்ல மஞ்சள் நிறத்துடனும், மேல்தோல் சிவப்பு நிறத்துடனும் இருக்கும். ஒரு எக்டேரிலிருந்து சற்றேறக்குறைய 18 முதல் 19 டன் கிழங்குகளைப் பெறலாம்.

வி-8:—கிழங்குகள் பெரியதாகவும், நீளமாகவும் இருக்கும். கிழங்குகளின் மேல்தோல் வெண்மையாகவும், உட்சதை 'வெண்ணெய் (Cream) நிறத்துடனும் காணப்படும். இதன் சாகுபடிக் காலம் 4 முதல் 4½ மாதங்களாகும். ஒரு எக்டேரிலிருந்து 18 முதல் 20 டன் கிழங்குகள், மகசூல் கிடைக்கும்.

வி-12:—இந்த ரகக் கிழங்குகள் நீளமாகவும், பெரியதாகவும் இருக்கும். மேல் தோல் மஞ்சள் நிறமாகவும், நல்ல சுவையுடனும் இருக்கும். இதன் சாகுபடி காலம் 4 முதல் 4½ மாதங்கள். ஒரு எக்டேரிலிருந்து 17 முதல் 18 டன் கிழங்கு மகசூல் பெறலாம்.



எச்-1:—இது திருவனந்தபுரத்தில் உள்ள மைய கிழங்கு ஆராய்ச்சிக் கழகத்தில் பண்பகக் கலப்பினால் உருவாக்கப்பட்ட ஒரு வகையாகும். இதன் சாகுபடிக் காலம் 5 மாதங்கள். கிழங்குகள் சுமாரான வண்ணத்துடன் இருக்கும். மேல் தோலும், உட்பாகமும் வெண்மையாக இருக்கும் ஒரு எக்டேரிலிருந்து 15 முதல் 16 டன் கிழங்கு மகசூல் கிடைக்கும்.

எச்-3:—இதுவும் மேற்கூறிய ஆராய்ச்சிக் கழகத்திலிருந்து உண்டான ஒரு பண்பகக் கலப்பு வகையேயாகும். இதன் சாகுபடிக் காலம் 5 மாதங்கள். கிழங்குகள், சுமாரான வண்ணத்துடனும், அதன் மேல்தோல் இளஞ் சிவப்புடனும் (pink), உட்சதை வெண்மையாகவும் இருக்கும். இந்த ரகத்தைப் பயிரிட்டு ஒரு எக்டேரிலிருந்து 18 முதல் 20 டன் கிழங்குகள் பெறலாம். இதன் கொடிகள் மற்ற வகைகளைப்போல் அதிகம் படர்வதில்லை. இலைகள் நீண்டு காணப்படும்.

இதைத் தவிர சில கிழங்கு வகைகள் நல்ல மகசூலைக் கொடுக்கின்றன. இவைகள் இவ்வாராய்ச்சித் திட்டத்தின் பரிசோதனையிலிருந்து வருகின்றன.

நிலம் தயாரித்தல்.—நிலத்தை மூன்று அல்லது நான்கு முறை புழுதி காண உழ வேண்டும். 20 வண்டி (10 டன்) தொழு உரம் நிலத்தில் போட்டுக் கலக்க வேண்டும். பின் நிலத்தில் பார் பிடிக்க வேண்டும். பார்கள் ஒன்றுக்கொன்று 60 முதல் 75 செ. மீ. இடைவெளியில் இருக்க வேண்டும். நடுவதற்கு முன்பாக நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சிட வேண்டும்.

நடும் முறை:—சர்க்கரை வள்ளிக் கிழங்குகளின் கொடிகளில் நுனி பாகத்தையும், மைய பாகத்தையும் நடுவதற்கு உபயோகப்படுத்தலாம். நடும் கொடியின் நீளம் சுமார் 20 செ. மீ. (8 அங்குலம்) இருக்க வேண்டும். நுனி பாகத்தை நடும்பொழுது மூன்றில் ஒரு பங்கு மண்ணுக்குள் நேராக இருக்க வேண்டும். மைய பாகக் கொடியை நடும்பொழுது கொடியின் மைய பாகத்தை மண்ணுக்குள் மறையும்படியும், கொடியின் இரு பக்க நுனிகள் வெளியே தெரியும் படியும் நட வேண்டும்.

இவ்வாராய்ச்சித் திட்டத்தில், சர்க்கரை வள்ளிக் கிழங்கின் நுனிப் பாகத்தை நடுவதால் அதிக மகசூல் பெற முடியும் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒரு ஏக்கர் நடுவதற்கு 25,000 கொடித் துண்டுகள் ( Cuttings ) தேவைப்படுகின்றன.

நடும் காலம்:—கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்று வரும் கிழங்கு ஆராய்ச்சித் திட்டத்தில், சர்க்கரை வள்ளிக் கிழங்குக் கொடிகளை, அக்டோபர் மாதம் முதலிரண்டு வாரத்திற்குள்ளாகவும், செப்டம்பர்

# தமிழ்நாட்டில் ஒரு புத்தக மாமலை

"இது என்ன, பாடப்புத்தகமா ?'' படப்புத்தகமா ?''

''இரண்டுமேதான் !''.

''அப்படியா ? படிக்கவும், பார்க்கவும் எவ்வளவு அழகாக இருக்கிறது பார்த்தீர்களா ?''

''ஆமாம். முன்பெல்லாம் வெளிவந்த பாடப்புத்தகங்களைத் தான் நீ பார்த்திருப்பாயே ! வெறும் கறுப்பு மையினுல் ஒரு சில படங்களோடு அல்லவா அவை இருந்தன .... ''

''ஆமாம். இப்போது பாருங்கள் ! முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரையிலுள்ள இந்தப் பாடப்புத்தகங்கள் கண்ணைக் கவரும் வண்ணப்படங்களுடன், அழகான அச்சு அமைப்புகளுடன், கவர்ச்சியாகக், குழந்தைகள் மனத்தில் எளிதில் பதியும்படியாக இருக்கின்றன ....'

'' நீங்கள் சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை. மக்கு மாணவன் கூட இந்தப் புத்தகத்தைக் கண்டால், சொக்கிப் போய்விடுவான் ; சோம்பல் இல்லாமல் படிக்கவும் ஆரம்பித்துவிடுவான் !''

இப்படித் தொடக்கப் பள்ளிப் பாடப் புத்தகங்களைப் பற்றிப் பெற்றோர்கள் பெருமையாகப் பேசிக் கொள்வதில் விந்தை என்ன இருக்க முடியும் ?

நிறுவனம் வெளியிட்டுள்ள நூல்கள்



ஆரம்பப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கல்லூரி ஆகியவைகளுக்குப் பாடப் புத்தகங்களையும் பிற பொது நூல்களையும் வெளியிட்டுப் புத்தக உலகில் ஓர் புரட்சியை உண்டு பண்ணியிருக்கிறது ஒரு நிறுவனம். அதுதான், இன்று தனிப்பெரும் நிறுவனமாகத் திகழும் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம்.

தமிழ்நாடு எல்லாத் துறையிலும் பிற மாநிலத்தவர்க்கு வழி காட்டியாக விளங்கி வருவது போன்று, பாட நூல்கள் வெளியிடுவதிலும் ஒரு முன்மாதிரியாகவும் இருந்து வருகின்றது. ஆம் ! இந்தியாவிலேயே இது முதல் நிறுவனமாக இருப்பதைப் பெருமையோடு சொல்ல வேண்டும்.

வரலாற்று நூல்கள் பலவற்றை வெளியிட்டுள்ள இந்த நிறுவனத்தின் வரலாறு என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா ?

1959-ஆம் ஆண்டு !.

'கல்லூரித் தமிழ்க்குழு' என்ற பெயரால் தமிழ்நாடு அரசு ஒரு குழுவை நிறுவியது. அப்பொழுது புதிதாகத் தோற்றுவிக்கப் பட்ட 'தமிழில் கல்லூரிப் பாடங்களைக் கற்பிக்கும் முறை' யைக் கவனித்து, அதற்குரிய மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியவர்களைத் தெரிந்தெடுத்துத் தேவையான பாட நூல்கள், சொற்பொழிவுக் குறிப்புகள், கலைச்சொல் அகராதி ஆகியவற்றைத் தயாரிப்பதில் அரசினர்க்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறுவதற்கென்றே இக் குழு தோற்றுவிக்கப்பட்டது. 1962-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் வரை செயற்பட்ட இக் குழு மூன்று ஆண்டுகளில் கலை, விஞ்ஞானத் துறைகளில் 35 நூல்களை வெளியிட்டது.

பாட நூல்களை நாட்டுடைமையாக்கும் திட்டம் தமிழ்நாடு அரசினுல் 1960-ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப் பட்டு வருகின்றது.

கல்லூரித் தமிழ்க் குழுவின் பணியைவிட, மேலும் விரிந்த அளவில் பணி புரிந்திட வேண்டுமென்ற முடிவுடன் 1962-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 'தமிழ் வெளியீட்டுக் கழகம்' துவக்கப் பட்டது. கல்லூரித் தமிழ்க் குழு, வெளியீட்டாளர்கள் மூலம் நூல்களை வெளியிட்ட சூழ்நிலையை மாற்றித் 'தமிழ் வெளியீட்டுக் கழகம்' சொந்தமாகவே வெளியீட்டுப் பணியில் ஈடுபட்டது.

தனி நூல்கள், மொழி பெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் ஆண்டுதோறும் பட்டப் படிப்பிற்கு உரிய நூல்கள் வெளிவந்தன. புகுமுக வகுப்பிற்கு நூல்கள் வெளியிட்டதோடன்றிப் பொதுமக்களுக்கான பொது அறிவு நூல்களையும் ஆண்டுதோறும் இது வெளியிட்டு வந்தது. பின்னர் அறிவியல் சார்ந்த பட்டப் படிப்பிற்கும் நூல்களை வெளியிடத் தொடங்கியது. இவ்வாறு 1962 ஏப்ரல் முதல் 1970 ஏப்ரல் வரை வரலாறு, புவியியல், புவியமைப்பியல், அரசியல், பொருளாதார வியல் வாணிகவியல், வேதியியல், இயல்பியல், கணிதவியல், சட்டவியல், மருத்துவ—மானிடவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய பல்வேறு துறைகளில் 231 நூல்களைக் கவின்மிகு வகையில் கழகம் வெளியிட்டது.

1970-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாட்டுப், பாட நூல் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது. தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் கல்லூரிப் பாட நூல்களை வெளியிடும் பணியில் ஈடுபட்டது. பிறகு இது இரண்டாண்டுகளுக்குள், பல்வேறு துறைகளின் கலைச் சொற்கள், புகுமுக வகுப்பு, இளங்கலைப் பட்டப் படிப்பு, அறிவியல் சார்ந்த பட்டப் படிப்பு வகுப்புகளுக்குமாக 115 நூல்களை வெளியிட்டது. இன்றுவரை இது வெளியிட்டுள்ள நூல்களின் எண்ணிக்கை 392.

படிக்கும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில், வண்ணப் படங்களோடு, குறித்த நேரத்தில், குறைந்த விலையில் பாடப் புத்தகங்களை வெளியிட வேண்டும் என்ற நோக்கோடு முதல் ஐந்து வகுப்புகளுக்குப் பாட நூல்கள் வெளிவந்துள்ளன. இது பெற்றோரையும் மற்றோரையும் மட்டுமல்ல, மாணவர்களையும் வெகுவாகக் கவர்ந்துள்ளது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

4, 7 வகுப்புகளுக்கு ஆங்கிலப் பயிற்சி ஏடுகளும், 9, 11 வகுப்புகளுக்குத் தமிழ் இலக்கண நூல்களும் வெளிவந்துள்ளன. மற்றும் உயர் நிலைப்பள்ளி, கல்லூரிக்கான தமிழ், கணக்கு, ஆங்கிலம், வரலாறு, புவியியல் அறிவியல் முதலான பாடப் புத்தகங்களும், 10-வது வகுப்புக்குச் சிறப்புப் பாடமாக உயிரியல் நூலும் வெளியிடப்பட்டுள்ளன. இவை தவிர தமிழ், ஆங்கிலத் துணைப்பாட நூல்களும் வெளியிடப்படுகின்றன.

பட்டப் படிப்பிற்குரிய நூல்களான கணிதம், இயற்பியல், வேதியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், உளவியல், தத்துவம், மருத்துவம், அரசியல், வணிகவியல், பொருளாதாரம், வரலாறு முதலிய நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன. கல்லூரிப் பாட நூல்களோடு, பார்வை நூல்களையும் (Reference Books) இது வெளியிடுகிறது.

பொதுவாக, வண்ணப்படங்களோடு வெளியிடப்பெறும் தொடக்கப்பள்ளிப் பாடப் புத்தகங்களின் விலை அதிகம் என்று கருதப்படுவதை இந்நிறுவனம் மறுக்கிறது. புத்தகத் தயாரிப்புச் செலவைப் பார்த்தால் இது எவ்வளவோ குறைந்த விலை என்று இதன் செயலாளர் விளக்குகிறார் :

'' பாடத் திட்டக் குழு பரிந்துரைத்ததைக் கருத்தில் கொண்டு பாட நூல்கள் பல வண்ணங்களிலும் பெரிய அளவிலும் பல பக்கங்கள் கொண்டதாகவும் அச்சிடப்பட்டிருக்கின்றன. இந்த அடிப்படையில் தமிழ்ப் பாட நூல்களை வெளியிட்டதனுல், புத்தகங்களின் அடக்க விலை இப்போது உள்ள புத்தகங்களின் விலையைவிடக் கூடுதலாகிறது.

'' தவிர, இப்போது நிர்ணயிக்கின்ற விலையே, இப் புத்தகங்கள் வழக்கில் உள்ள காலம் வரையில் நீடிக்க வேண்டும். அச்சுத் தாள் விலை ஏற்றம், அச்சுக் கூலி ஏற்றம் ஏனைய தக்க காரணங்களுக்காக விலையை மறுமுறை மாற்ற முற்படுவது குறை கண்டு பிடிப்பதாக இருக்கும். இன்றைய நிலையில் புத்தகங்களை வெளியிடுவதற்கு நிறுவனத்திற்கு ஆகின்ற செலவையும் அனுசரித்து ஒவ்வொரு புத்தககத்திற்கும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

''வழக்கத்திலிருந்த தமிழ்ப் பாட நூல்களைவிடப் புதிதாக வெளியிடப்பட்ட தமிழ்ப் பாட நூல்களின் விலை கிட்டத்தட்ட

பிழை திருத்துநர் பிரிவு






அறுவடை.—சர்க்கரை வள்ளிக் கிழங்குகளை நட்டு 4½ முதல் 5 மாதத்தில் அறுவடை செய்யலாம். கிழங்குகள் நல்ல முதிர்ச்சி யடைந்துள்ளனவா என்பதைக் கீழே கண்ட குறிப்புகளிலிருந்து அறியலாம்.

ஒரு சில கிழங்குகளைத் தோண்டி எடுத்து, அவைகளை வெட்டிப் பார்த்தோமானால், அவைகளிலிருந்து வடியும் பால் காய்ந்து வெண்மையாகத் தோன்ற வேண்டும். கிழங்குகள் முதிர்ச்சி யடையவில்லையென்றால் வெட்டுப்பட்ட பாகத்தில் வடியும் பால் காய்ந்து கரும் பச்சை நிறத்துடன் காணப்படும். முதிர்ச்சி யடைந்த கிழங்குகளின் மேல் மண் ஒட்டுவதில்லை.

ஜூன் மாதங்களில் மூன்றாவது, நான்காவது வாரத்திலும் நடுவதால் நல்ல பலன்கிடைக்கும் என ஆராய்ச்சியின் மூலம் தெரியவருகிறது.

நீர் பாய்ச்சுதல்:—சர்க்கரை வள்ளிக் கிழங்கிற்கு வாரம் ஒரு முறை தண்ணீர் கட்ட வேண்டும். இதன் சாகுபடிக் காலத்தில் சுமார் 12 தடவை தண்ணீர் கட்டினால் போதுமானது.

உரம் வைத்தல்.—நடுவதற்கு முன்பாக எக்டேருக்கு 20 வண்டி (10 டன்) தொழு எரு போட வேண்டும். அத்தோடு கூடப் பரிந்துரைக்கப்படும் இரசாயன உரங்களில் ஒரு பாதியை அடி உரமாக இட வேண்டும். நட்ட இரண்டு மாதத்திற்குப் பின்பு இரசாயன உரத்தின் மறுபாதியை மேல் உரமாக இட வேண்டும். பின் கண்ட அளவில் அடி உரம், மேல் உரம் ஆகியவைகளை இட வேண்டும்.

| இரசாயன உரம் (1) | அடி உரம் 5 (2) | மேல் உரம் (இரண்டு மாதத்திற்குப் பின்.) (3) |
|---|---|---|
| | (கிலோ/எக்டேருக்கு). | |
| அமோனியம் சல்பேட் | 125 | 125 |
| சூப்பர் பாஸ்பேட் | 312 | 312 |
| மியூரியேட். ஆப் பொட்டாசு | 125 | 125 |

பின்செய் நேர்த்தி:—முதலிரண்டு அல்லது மூன்று மாதங்களில் மாதம் ஒரு முறை நிலத்தைக் கொத்திக் களை எடுக்க வேண்டும். கொடிகளின் கணுக்களில் வேர் பிடித்து நிலத்தில் ஊன்றாமல் இருக்க அவைகளை அவ்வப்போது எடுத்து விட வேண்டும். அப்படிச் செய்வதால் கிழங்குகள் பெரிதாக ஏதுவாகும்.

பயிர்ப் பாதுகாப்பு:—சர்க்கரை வள்ளிக் கிழங்கு வண்டுகள் (Sweet potato Weevils) கிழங்குகளைத் தாக்கி நாசம் செய்கின்றன. இவைகளைத் தடுக்க 'டையல்ட்ரின்' 0·10 சதம் மருந்தைக் கொடிகள் நட்ட 45 நாட்களிலிருந்து, பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை விதம், 6 முறை தெளிக்க வேண்டும்.

அறுவடை செய்வதற்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்பாகத் தண்ணீர் கட்டினால் கிழங்குகளைத் தோண்டி எடுப்பதற்கு எளிதாக இருக்கும். ஒரு எக்டேரிலிருந்து 15 முதல் 20 டன் கிழங்குகள் கிடைக்கும். அறுவடை செய்யப்பட்ட கொடிகளை மாடுகளுக்குத் தீவனமாக உபயோகிக்கலாம். சர்க்கரை வள்ளிக் கிழங்கு ஒரு எக்டேரில் சாகுபடி செய்ய ரூபாய் 1,500 செலவாகும். வருமானம் ரூபாய் 3,500 வரை கிடைக்கும்.

எனவே, மேற்கூறிய முறைகளில் மரவள்ளிக் கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு ஆகியவற்றைச் சாகுபடி செய்து பயன் அடையுமாறு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

—டாக்டர் வி. என். மாதவராவ்,

—டாக்டர் க. ஞா. சண்முகவேலு,

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

மரவள்ளிக் கிழங்கிற்கேற்ற

இரசாயன உர அட்டவணை.

| ஒரு எக்டேருக்குத் தேவையான இரசாயன உரம். | மல வெள்ளா அடி உரம். (கிலோவில்) | மல வெள்ளா மேல் உரம். (கிலோவில்) |
|---|---|---|
| அமோனியம் சல்பேட் .. | 250 | 250 |
| சூப்பர் பாஸ்பேட் .. | 156 | 156 |
| மியூரியேட் ஆப் பொட்டாசு | 83 | 83 |

| எச். 1 அடி உரம். (கிலோவில்) | எச். 1 மேல் உரம். | எஸ். 5 அடி உரம். (கிலோவில்) | எஸ். 5 மேல் உரம். |
|---|---|---|---|
| 375 | 375 | 125 | 125 |
| 156 | 156 | 506 | 506 |
| 125 | 125 | 83 | 83 |









பதின்மூன்று பேர் ஆசிரியர்களாக உள்ள இந்த இசைக் கல்லூரியில், சுமார் 140 பேர் இசைப்பயிற்சி பெற்று வருகின்றனர்.

கர்நாடக இசைக் கல்லூரியில் சேர என்ன தகுதி வேண்டும் ?

பள்ளி இறுதி வகுப்பு வரை படித்திருக்க வேண்டும். வயது 18-லிருந்து 35 வரை இருக்க வேண்டும். என்றுலும், அவர்களுக்குச் சிறிதளவாவது இசையில் ஞானம் இருந்திருக்க வேண்டும். அப்போதுதான் இந்தக் கல்லூரியில் சேர அவர்கள் தகுதி பெறுவார்கள். இசை அறிஞர்கள் கொண்ட ஒரு குழு, ஆண்டு தோறும் மாணவ, மாணவிகளைத் தேர்வு செய்கிறது. ஒவ்வொரு ஜூலைத் திங்களிலும் மாணவர் தேர்வு நடைபெற்று, மே திங்களில் கல்லூரித் தேர்வு நடைபெறுகிறது.

இசைத் துறையில் உயர்தரக் கல்வி இங்கு போதிக்கப்படுவதால், திருப்பதி வெங்கடேசுவரா பல்கலைக் கழகம், ஐதராபாத் இசைக் கல்லூரி, சென்னை, அண்ணுமலைப் பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவர்கள். இந்தக் கர்நாடக இசைக் கல்லூரிக்கும் வந்து மேலும் இசை நுணுக்கங்களைத் தெரிந்து கொள்கின்றனர்.

சங்கீத வித்துவான், வாத்திய விசாரதா, நாட்டிய விசாரதா போன்ற பட்டப்படிப்புகள் இங்குக் கற்பிக்கப்படுகின்றன. சங்கீத வித்துவான் படிப்பு இரண்டு ஆண்டுகளாகும். இசையின் எல்லா அடிப்படைக் கருத்துக்கள், இலக்கணங்கள், இசைக் கருவிகளின் தன்மைகள் முதலிய எல்லா விவரங்களும், கற்பிக்கப் படுகின்றன. தேர்வு பெற்றதும் இவர்களுக்குச் ' சங்கீத வித்துவான் ' என்ற பட்டம் வழங்கப் படுகிறது. பல்கலைக் கழகங்களில் நடப்பது போன்றே இங்கும் பட்டமளிப்பு விழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

இசையோடு மட்டும் இவர்கள் நில்லாமல் தமிழ் மன்றம், கருத்தரங்கு, ஆண்டுவிழா, விளையாட்டுப்போட்டி போன்ற நிகழ்ச்சிகளுக்கும் இசைந்து இணைந்து செயல்படுகிறுர்கள். இங்கு மாணவர்களால் நடத்தப்படுகின்ற தமிழ் மன்றம் திங்கள் தோறும் இன்னிசைக் கச்சேரி ஒன்றுக்கு ஏற்பாடு செய்கிறது. கச்சேரி செய்பவர்கள் வெளியில் உள்ள இசை மேதைகளாகும். இசை நுணுக்கங்களைத் தெரிந்து கொள்ள இந்தக் கச்சேரிகள் மாணவர்களுக்கு வெகுவாகப் பயன்படுகின்றன. மேலும் வானெலி இசைப் போட்டிகளில், கலந்துகொள்ளவும், வெளியில் கச்சேரிகள் செய்யவும் இங்குள்ள மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.





பரத நாட்டிய வகுப்பில் பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் பயிற்சி பெறுகின்றனர் ; மிருதங்கத்திலும் அவர்கள் சளைத்தவர்களல்ல என்பதை அந்த வகுப்பைப் பார்த்தால் தெரிகிறது.

திருமணமா ? திருவிழாவா ? என்று இசை வரும் திசை நோக்கிப் பார்க்கிறேம். நாதசுர ஒலி காற்றிலே மிதந்து வருகிறது. அங்கே போய்ப் பார்த்தால் ' நாதசுர வகுப்பு ' என்ற பெயர்ப் பலகை காணப்படுகிறது. மாணவர்கள் வரிசையாக அமர்ந்து நாயனம் வாசிக்கின்றனர். தாளமும், தவுலும் இணைந்து இசையோடு கலககின்றன. இந்த வகுப்புக்கு ஒரு தனிச் சலுகை உண்டு. அதுதான் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குவதாகும். இசைத்துறையில் நாதசுரம், தவுல் ஆகியவற்றுக்குச் சிறப்பான இடமுண்டு என்பதை நாமறிவோம். இதனைக் கற்றுக்கொள்ளச் சிலரே முன் வருகின்றனர். ஆகையால், இக்கலையை மேலும் வளரச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இதனைப் பயிலும் மாணவர்க்கு ஆக்கம் அளித்து ஊக்கம் தருகிறது அரசு. இந்த வகுப்பில் இப்போது மொத்தம் பதினைந்து பேரே பயிற்சி பெற்று வருகின்றனர். அவர்களுக்கு மாதம் ரூபாய் அறுபது உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இங்கு ஒரு நூல் நிலையம் இருக்கிறது. இசைக் கலை சம்பந்தமான நூல்கள் பல, மாணவர்கள் ஐயத்தைப் போக்க உதவுகின்றன. இன்னிசையின் நாதங் கேட்டுத் தானே என்னவோ இங்கே பாம்புகள் அவ்வப்போது படையெடுத்து வருகின்றனவாம் !

கற்ருரையும், மற்ருரையும் கவர்ந்திழுக்கும் இசைக்கலை, திசை தோறும் பரவிடத் தமிழக அரசு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வளர்த்து வருகிறது. கர்நாடக இசைக் கல்லூரிக்காகத் தமிழ்நாடு அரசு, ஓராண்டுக்கு ஒரு இலட்சத்து அறுபத்தைந்தாயிரம் ரூபாய் செலவிடுகிறது. நல்ல இசைக் கலைஞர்களைத் தமிழகத்துக்கு மட்டுமின்றி உலக நாடுகளுக்கும் வழங்கிடத் தமிழ்நாடு அரசு உறுதுணையாக இருக்கிறது என்று இசைத் துறை வல்லுநர்கள் போற்றிப் பாராட்டுகின்றனர்.

அண்மையில் கல்வி அமைச்சர், இதை ஓர் இசைப் பல்கலைக்கழகமாக மாற்றுவதற்காகத் திட்டம் அரசிடம் இருப்பதாகத் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

—பி. வி. ஜி.





இரண்டு மடங்கு அதிகமாக இருந்தாலுங்கூடப் புதியதமிழ்ப் பாட நூல்கள் பெரிய அளவு இருப்பதுடன் அதிகப் பக்கங்களையும், அதிக வண்ணங்களையும் கொண்டுள்ளதால், விற்க வேண்டிய விலை கூடுதலாகிறது. தற்போது குறிக்கப்பட்டுள்ள விலையின்படி நிறுவனத்திற்கு நிகர இலாபமாக ஏற்படக்கூடிய முழுத் தொகை மிகக் குறைவாகவே இருக்கும். 4, 5 வகுப்புகளுக்கான புத்தகங்கள் ஒரே வண்ணத்தில் அச்சடிக்கப்பட்டுள்ளதால், அதில் கிடைக்கக் கூடிய ஆதாயம் 1, 2, 3 வகுப்புகளில் பல வண்ணங்களில் அச்சிடப்பட்டிருப்பதால் ஏற்படும் அதிகச் செலவைச் சமன் செய்ய உதவி செய்கிறது. இந்நிலையில் ஆரம்ப வகுப்புகளுக்கு (1 முதல் 3 வகுப்பு) புத்தகங்கள் பல இலட்சங்கள் அச்சிடப்பட்டிருந்தாலும் மிகக் குறைந்த அளவே இலாபம் ஏற்பட ஏதுவாகிறது.)

''அதே சமயத்தில் இப் புத்தகங்கள் வழக்கிலுள்ளவரை ஓரளவுக்கு அச்சுத் தாள் விலை ஏறினாலும், அச்சுக் கூலி கூடினாலும் இதே விலையை வைத்து விற்கப் போவதால், 1 முதல் 5 வகுப்புப் பொறுத்தவரை நிறுவனத்திற்கு இலாபம் இல்லை என்ற நிலை ஏற்படக்கூடும். மேலும், அச்சுத் தாளை நிறுவனம் நேராக அரசிடமிருந்து வாங்காமல் நிர்ணயப்படி அவ்வப்போது பொதுச் சந்தையில் வாங்குகிறது. மேலும், இந்நிறுவனம், உயர்ந்த ரக அச்சுத் தாள்களையே உபயோகப்படுத்துகிறது.

''நமது மாநிலத்தில் சராசரி 1 முதல் 5 வகுப்புகளுக்கு 17 சதவிகிதம் அடக்க விலையைவிடக் கூடுதலாகிறது. பிற மாநிலங்களில் புத்தக விலை நிர்ணயிக்கப்படும் முறையைத் தெரிந்து கொண்டால், இந்தக் கூடுதல் விலைப் பிரச்சனை நன்கு தெளிவாகும்.

''ஒரு மாநிலத்தில் அடக்க விலையை விட $1\frac{1}{2}$ மடங்கு அதிகமாக விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது 50 சதவிகிதம் அதிகமாக விலை குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கீகாரம் செய்யப்பட்ட அறிவியல் புத்தகத்திற்குப் பக்கத்திற்கு $1\frac{1}{2}$ காசு வீதமும் இதர பாட நூல்களுக்குப் பக்கத்திற்கு ஒரு காசு வீதமும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நிறுவன அறிவியல் புத்தகத்திற்குப் பக்கத்திற்கு ஒரு காசைவிடக் குறைவாக உள்ளது.

''பிறிதொரு மாநிலத்தில் புத்தக விலையை அதன் பக்கங்கள், பாடங்கள், வண்ணப் படங்கள், எதிர்பார்க்கும் புத்தக விற்பனை முதலியவைகளைக் கவனத்தில் கொண்டு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

''மற்ெருரு மாநிலத்தில் 1 முதல் 5 வகுப்புகளுக்கு விலை நிர்ணயம் செய்வதில் அடக்க விலை 65 சதவிகிதம். இதரவினங்களுக்கு 35 சதவிகிதம் என்ற அளவில் புத்தக விலை கணக்கிடப் பட்டுள்ளது.

> **தமிழில்**
> **முதல் செய்தியிதழ்**
>
> **தமிழகத்தில் முதன்முதலாக கி. பி. 1833-ல் 'விருத்தாந்தி' என்னும் பெயரில் தமிழிலும் தெலுங்கிலும் செய்தி இதழ்கள் வெளியாயின. இதற்கு அடுத்து வெளிவந்த இதழ்களில் குறிப்பிடத்தக்கது, 'ராஜவர்த்தி போதினி'.**

குறிப்பிட்ட விவரங்களுடன் ஒப்பிடும்போது தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தின் புத்தகங்களின் விலை குறைவாகவே உள்ளன''.

இந்நிறுவன நூல்களையெல்லாம் விற்பனை செய்வதற்குத் தமிழகம் முழுவதற்கும் விற்பனையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சென்னை, செங்கற்பட்டுக்கு மட்டும் இந்நிறுவனமே நேரடியாக விற்பனை செய்கிறது. பிற மாவட்டங்களில் 56 மொத்த விற்பனையாளர்கள் உள்ளனர். கல்லூரிப் பாட நூல்கள் 20 சதவீதக் கழிவில் தரப்படுகின்றன. பொது மக்களும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

1972 மே திங்களிலிருந்து ஜூலை திங்கள் வரை 400 லாரிகளில் புத்தகங்கள் தமிழ்நாடு முழுவதற்கும் ஏற்றுமதி ஆயின. ஒரு லாரியிலுள்ள புத்தகத்தின் மதிப்பு ரூபாய் ஐம்பதாயிரம்.

இந்நிறுவனம் பட்டப்படிப்புக்காகவும், பட்ட மேற்படிப்புக்காகவும் பல்கலைக் கழகப் பாட நூல்களின் கைப்பிரதிகளைத் தமிழில் எழுதுவதற்கு 597 ஆசிரியர்களைப் பணித்துள்ளது.

இங்கு வெளியிடப்பெறும் நூல்கள் அரசினர் அச்சகம் தவிர, சென்னையில் உள்ள 32 தனியார் அச்சகங்களிலும் அச்சாகின்றன. இந்நிறுவனத்தில் மூன்று பேர் பிழை திருத்துநராக உள்ளனர். இவ்வலுவலகத்தில் மொத்தம் 82 பேர் பணி புரிகின்றனர்.

பாட நூல்களுக்கான ஒரு நிபுணர் குழு உள்ளது. இது ஒவ்வொரு துறை பற்றிய கையெழுத்துப் பிரதிகளையும் சரிபார்த்துத் திருத்திச் செப்பனிடுகிறது.

பாடப் புத்தகத்தினை எவர் வேண்டுமானாலும் எழுத அனுமதிப்பதில்லை. அத்துறையில் ஏறத்தாழ இருபது ஆண்டுகளாவது அனுபவம் உள்ளவர்களாலேயே எழுதப்படுகின்றது.

நிறுவனத்துக்குச் சொந்தமான 'தாள்-புத்தகக் கிடங்குகள்' நுங்கம்பாக்கம், அமைந்தகரை, தண்டையார்ப்பேட்டை, வடபழனி, ஜார்ஜ் டவுன் ஆகிய பகுதிகளில் உள்ளன.

பள்ளிப் புத்தகங்களை வெளியிடும் இந்நிறுவனத்தின் புள்ளி விவரத்தைப் பார்ப்போமா?

ஓர் ஆண்டில் அச்சிடும் தாள்கள் வாங்குவதற்காக மட்டும் ஒரு கோடி ரூபாய் செலவாகிறது! அச்சுக்கூலி மட்டும் எழுபது இலட்சம் ரூபாயாகிறது. இவ்வாண்டில் இரண்டு மூன்று திங்களுக்குள்ளேயே ரூபாய் மூன்று கோடிக்கு நூல்கள் விற்பனையாகியிருக்கின்றனவாம். 1972—73-இல் இந்நிறுவனம் வெளியிட்டுள்ள எல்லா நூல்களின் எண்ணிக்கை சுமார் இரண்டரை கோடி இருக்கும்.

தமிழக அரசின், இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கும் திட்டமொன்றும் உள்ளது. ஒன்று முதல் மூன்று வகுப்புகளில், மதிய உணவு பெறும் பள்ளிச் சிறுர்கள் சுமார் பத்து இலட்சம் பேர்களுக்கு இலவசமாகத் தமிழ், கணக்கு, ஆங்கிலப் பாட நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொடக்கப்பள்ளி மட்டுமின்றி எல்லா வகுப்புப் பாடநூல்களையும் நான்கைந்து வண்ணத்தில் கண்ணைக் கவரும் வகையில் வெளியிட வேண்டும் என்ற எண்ணம் இந்நிறுவனத்திற்குள்ளது.

பிஞ்சு உள்ளங்களில் தெள்ளத் தெளியும் வகையில், கருத்துகளைப் பதிய வைக்கும் வண்ணம் பாட நூல்களை வெளியிடும் இந்நிறுவனத்தின் பணி, பாட நூல் வெளியிடும் துறைக்கே அணி செய்பவையாக இருக்கின்றன; பிற மாநிலத்தவரால் போற்றிப் புகழப்படும் இந் நிறுவனம், நாளையத் தலைமுறையினருக்கு நல்வழி காட்டும் நற்பணி மன்றமாக விளங்கி வருவதையும் நாம் பாராட்ட வேண்டும்.





# இனிய கீதம் பாடும்

வசந்தா
சரசாங்கி
கமலா மனோகரி
ரவிச்சந்திரிகா
சாருகேசி
நீலாம்பரி
பூர்வகல்யாணி
தேவகாந்தாரி

இந்தப் பெயர்களெல்லாம் எந்தப் பெண்களையும் குறிப்பிடவில்லை. எழுபத்தேழு ராகங்களில் இவையும் சிலவாகும். இந்த ராகங்களையெல்லாம், நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமா? அப்படியானால் நேரே, சென்னை அடையாற்றிலுள்ள கர்நாடக இசைக் கல்லூரிக்குத்தான் செல்ல வேண்டும்.

அடையாற்றிலுள்ள கிரீன் வேஸ் சாலையில், அமைதியான சூழ்நிலையிலே அழகாக வீற்றிருக்கிறது இந்த இசைக் கல்லூரி. இயற்கை எழில் கொஞ்சும் இந்த இடத்திலே இன்னிசையின் நாதம் எங்கும் பரவி ஒலிக்கிறது.

கல்லூரிக்குள் நுழையும்போது ராகம், தானம், பல்லவி மட்டுமா கேட்கிறோம்?

குழலின் இனிமை
யாழின் இன்னிசை
நடனத்தின் சதங்கை ஒலி
நாதசுரத்தின் நாதம்

இவைபோன்ற எத்தனையோ இசை ஒலிகளையெல்லாம் காதாரக் கேட்டு மகிழ முடிகிறது.

தமிழிசையின் பெருமையைத் தரணியெல்லாம் பரவும் வகை செய்கிறது இந்தக் கல்லூரி. ஆம்! எத்தனை எத்தனையோ இசைவாணர்களை இது வழங்கிய வண்ணமிருக்கிறது. இங்கே பயின்றவர்கள் அமெரிக்கா, ஜெர்மனி போன்ற நாடுகளிலும், ஐதராபாத், கேரளம், தில்லி போன்ற நகரங்களிலும் இசைப் பேராசிரியர்களாகப் பணியாற்றி வருகிறார்கள்.

1949-ஆம் ஆண்டில் மத்திய, மாநில அரசின் ஆதரவோடு துவக்கப் பெற்ற இந்தக் கல்லூரி, 1956-ஆம் ஆண்டிலிருந்து முழுக்க முழுக்கத் தமிழ்நாடு அரசின் நிர்வாகத்தின் கீழ்ச் செம்மையாக இயங்கி வருகிறது.

இந்த இசைக் கல்லூரியில் பயிலும் மாணவர்களில் பெரும்பாலோர் பெண்களாவர். மாணவ, மாணவிகளில் பலர், பிற மாநிலங்களிலிருந்தும், இலங்கை, ஜப்பான் போன்ற நாடுகளிலிருந்தும் வந்து பயிற்சி பெறுகின்றனர் என்றால் அவர்களின் ஆர்வத்தை என்னென்பது! பெண்கள் இங்கேயே தங்கிப் படிப்பதற்கான அழகான விடுதி ஒன்றும் இருக்கிறது.

இந்தக் கர்நாடக இசைக் கல்லூரியில்தான் எத்தனை வகுப்புகள்! எத்தனை பயிற்சிகள்!

வாய்ப்பாட்டு, வீணை, யாழ், குழல், நடனம், மிருதங்கம், நாதசுரம், தவுல்—இப்படிப் பல வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொன்றுக்கும் அத்துறைப் பேராசிரியர் ஒருவர் ஆசிரியராக இருந்து கற்பிக்கிறார்.






## 11. வலை விரிந்தது

முற்பகல் கோடை வெய்யில் கொளுத்தும் போது, இந்த அடர்த்தியான தோப்பின், இயற்கையான குளுமையை அனுபவித்துத்தான் அறிந்து கொள்ள முடியும்.

முல்லைக்காலுக்கு வடபுறம், சற்று மேட்டுப் பாங்கான சமதளத்தில் இருக்கும் வேலாயுதத்தின் தென்னந்தோப்பில் ஐநூறு மரங்களுக்கு மேலிருக்கும். கிழக்குக் கோடியில் கிணறும், ஆயில் என்சினும் இருக்கிறது. கரையிலிருந்து திரும்பும்போது, தோப்பின் முகப்பிலிருந்து சற்று உள்ளே தள்ளிச் சிறிய வீடு. நாள் பூராவும் இங்கேயே தங்கலாம். அத்தனை வசதிகளும் உண்டு.

வேலாயுதம் பெரும்பாலும் இங்கேதான் இருப்பார். அவர் இருந்தால் வில்வண்டி நிற்கும். தோப்புக்குள்ளே ஒரு கும்பலும் கூடி இருக்கும்.

வேலாயுதம் உள்ளேதான் இருக்கிறார்.

வீட்டைச் சுற்றிலும், தரவாரியாக, நான்கைந்து பேர்களாக உட்கார்ந்து, அவர்களுக்குள்ளேயே பேசிக்கொண்டிருக்கிறார்கள், இவர்களில் பெரும்பாலோர், இந்த அடிதடி வழக்கில் போலீஸ் விசாரணை என்று ஆரம்பித்த நாளிலிருந்து, உருட்டி முத்தையாவின் தலைமையில், மொத்தச் செலவில் தங்கி இருப்பவர்கள்.

பாண்டியனையும் லிங்கத்தையும் அழைத்துக் கொண்டு போனார்கள், கைதியாகத்தான்! —பின்னே, அடிபட்டவன் செத்துக்கொண்டிருக்கும் போது சும்மா விடுவார்களா? ஆனால், அவனுக்கும் இத்தனை படை இருக்கும் என்பதை இங்கே யாருமே எதிர்பார்க்கவில்லை. உள்ளூரில் யாருமே தலையைக் கொடுக்காவிட்டாலும், வெளியூரிலிருந்து, 'நான்', 'நீ' என்று முந்திக்கொண்டு, சொத்து விவரக் குறிப்புகளோடு, எத்தனையோ பட்டாதாரர்கள் கூடவே சென்றனர் பாண்டியனை அழைத்து வர.

மறுநாளே ஜாமீனில் வந்து விட்டதாகக் கேள்வி..

'உள்ளூரில், உற்றம் சுற்றம் என்பதையெல்லாம் பகைத்து நிற்கும் நேற்றுப் பிறந்தவனுக்கு அக்கம் பக்கத்தில் இவ்வளவு செல்வாக்கா?' என்பதில் ஏற்பட்ட திகைப்புக்கும், எரிச்சலுக்கும் மத்தியில், கோத்திருக்கும் வழக்கில் பாண்டியனது தலை நிச்சயமாகத் தப்பாது என்ற உறுதியில் ஒரு திருப்தியும் இங்கே நிலவுகிறது.

உருட்டி முத்தையா, சம்பவத்தை நேரில் கண்ட முதல் சாட்சியாக நிற்கும் போது, வழக்கு விடுபட்டுப் போகுமா?

வீட்டிற்குள்ளே, உள் அறையில் வேலாயுதமும், நாச்சிமுத்துவும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவன் சற்றுமுன்புதான் நிலக்கோட்டையிலிருந்து வந்திருக்கிறான்.

நாச்சிமுத்து இரண்டாவது சாட்சியாக உருவாக்கப்பட்டிருப்பவன். இவனுக்கு வயது நாற்பதுக்குள்ளாகத்தான் இருக்கும். என்றைக்குமே வேலாயுதத்திடம் நெருங்கி இருப்பவர்களில் ஒருவன். கரையடியில் வண்டியை மறித்து, நடந்த தகராறையெல்லாம் நேரிலே பார்த்ததாகப் போலீஸ் விசாரணையின் போது சாட்சி சொல்லி இருப்பவன். நாளைக்கும் கோர்ட்டிலும் சொல்லப் போகிறவன்.

சன்னலோரமாகப் பிரம்பு நாற்காலியில் சாய்ந்திருக்கிறார் வேலாயுதம். முன்பாக, மேல் துண்டைக் கையிலே சுருட்டிக் கொண்டு, பணிவோடு நிற்கிறான் நாச்சிமுத்து.

"என்னடா—மாமாவை இன்னும் காணலையே", என்று திரும்பிப் பார்த்துக் கேட்டார் வேலாயுதம்.

"நானும் அவரும் ஒன்னாத்தானே வந்தோம். நீ முந்திப் போ—வீட்டுக்குப் போயிட்டு வாரேன்னு போனாரு" என்ற நாச்சிமுத்து, சற்று நிறுத்தி, "இப்பத்தாங்க பெரிசு யாருன்னு புரியுது. கச்சேரியிலே என்னென்ன சட்டமெல்லாம் பேசுறாரு" என்று வியப்போடு சொன்னான்.

வேலாயுதம் சிரித்துக் கொண்டார்.

"சட்டம் படிச்சவங்களுக்கே, மாமா, பாயிண்ட் எடுத்துக் கொடுப்பாரே. இன்னைக்கி நேத்து அனுபவமா? நம்ம சடையன் கேசுக்கு மாமா இருந்து நடத்தலையின்னா ஜென்மமில்லே சொல்லி இருப்பான்" என்று சொல்லி முடிப்பதற்குள், வாசலிலே முத்தையாவின் தலையும் தெரிந்தது.

"இப்பத்தான் மாமா சொல்லிக்கிட்டிருக்கேன். நாத்தங்களும் வாரிங்க. [illegible] மேலேயும் சாகமாட்டிங்க" என்று சொல்லி, மலர்ந்த முகத்தோடு வரவேற்றார் வேலாயுதம்.

'' போதுமே மாப்பிள்ளை. அவ்வளவுக்கு இந்த மண்ணிலே கிடந்து அழுந்தணுமா ? நடக்க வேண்டியதை முடிச்சு வச்சுப் போட்டுச் சீக்கிரமே போய்ச் சேரணும் '' என்ற முத்தையா நெருங்கி வந்து, நாச்சிமுத்து தூக்கிவந்து போட்ட நாற்காலியில் உட்கார்ந்து, வழுக்கைத் தலையில் அரும்பியிருந்த வியர்வையைத் துடைத்து விட்டுக் கொண்டார்.

அதற்குள் நாச்சிமுத்துவும், வெளியில் போய்விட்டான்.

'' என்ன சொல்றுன் பயல் ? '' என்று, அவன் தலை மறைந்ததும் கேட்டார் முத்தையா.

'' நாச்சிமுத்து உங்க மேலே உயிரையே வச்சிருக்கான். எப்பவும் உங்க கூடவே வச்சிக்குங்க '' என்றுர் வேலாயுதம்.

'' இவங்ககிட்ட உயிரைத் தவிர வேறே என்ன இருக்கு?'' என்று கேட்ட முத்தையா, எழுந்து சென்று கதவைத் தாழிடாமல் அடைத்து விட்டுத் திரும்பி வந்து உட்கார்ந்தார்.

'' ஒரு தகவலும் தெரியாம இருக்கேன்னுதான் ஐயம்பெருமாளை அனுப்பி வச்சேன்'' என்று ஆரம்பித்தார் வேலாயுதம்.

'' அவரு வரலையின்னாலும் இன்னைக்கும் என்னுலே வந்திருக்க முடியாது ''.

'' பொன்னையா எப்படி இருக்கான் ''.

'' பொன்னையா கொஞ்சம் தெளிவாத்தான் இருக்கான். ரெத்தம் செலுத்திக்கிட்டிருக்காங்க. இப்ப அவன் பெண் சாதி சிவந்தி இருக்காளே, அவதான் இப்ப நமக்கு பிரச்சனையா இருக்கா. அவளுக்கும் ஒரு பாதை வகுத்துக்கிட்டுத்தான் வந்திருக்கேன் '' என்றுர் முத்தையா.

'' அவளையும் உள்ளே இழுத்துப் போடாம. கால்லே விழுகிறவளை உயரே தூக்கி வச்சுக்கிட்டு '' என்றுர் வேலாயுதம் அவசரத்தோடு.

முத்தையா சொன்னுர்.

'' நடக்கிறதை • நமக்குச் சாதகமாப் பயன்படுத்திக்கணும். இடையிலே சிவந்தியைப் பாண்டியன் சந்திச்சிருக்கான். அவளை வச்சு, பொன்னையாவோட வாயைக் கிளறிப்பார்க்கவும் முயற்சிகள் நடந்திச்சு. நானும் முந்திக்கிட்டுப் பொன்னையாவைப் பொறுத்த வரையிலும் ஒரு அணையைப் போட்டு வச்சேன் '' என்றுர்.

வேலாயுதத்தின் முகத்தில் பரபரப்புத் தென்பட்டது.

''என்ன மாமா சொல்றிங்க?' என்றுர்.

முத்தையா குரலைத் தணித்துக் கொண்டு சொன்னுர்.

''கொடுத்திருக்கிற வாக்கு மூலத்துக்கு விரோதமா சிவந்தி கிட்ட எதையாவது சொல்லி வச்சா என்ன ஆகும்?'' பொன்னையா கிட்டத் தனியா, ''ஏற்கெனவே பாண்டியனுக்கும் சிவந்திக்கும் தொடர்பு இருந்திருக்கு. அவகிட்ட எந்தப் பேச்சும் வச்சுக்காதேன்னு சொல்லி அவன் வாயை மூடியிருக்கேன். இப்ப அவளும் இங்கேதான் வந்திருக்கா. பாண்டியனை எப்படியும் சந்திக்கப் போருன்னு எனக்கும் தெரியும். விட்டுப் பிடிச்சிருக்கேன்.'' என்றுர் முத்தையா.

''இடையிலே எந்த வழுக்கலும் இருக்கப்படாதுன்னு நான் பதறிப் போயிருக்கேன். இவளை இந்த நேரத்திலே, அவன்கிட்ட தள்ளிவிட்டுச் சுத்தி வளைக்கணுமா ?'' என்று அவசரத்தோடு கேட்டார் வேலாயுதம்.

''இப்ப எதுவும் கெட்டுப் போகலே, இப்பப் பொன்னையாவுக்கு நினைவு வந்தாலும் அவளைத் திரும்பிக்கூடப் பாக்கிறதில்லை. இதை நினைச்சுப் பதறிப் போய்தான் அவளும் பாண்டியனைத் தேடி இங்கே வந்திருக்கா. ஏற்கெனவே இவனுக்கும் அவளுக்கும் உறவு இருக்குங்கிறது உறுதியாகிப் போகுது. இதை ஊருக்குள்ளே விதைச்சுவிட எவ்வளவு நேரமாகும்? சம்பவம் நடந்ததுக்கு, இந்தத் தொடர்ச்சியும் ஒரு காரணம்ன்னு வரும்போது, கேசு வலுவாகும். யாராலேயும் உடைக்க முடியாது. நானும் காலத்தையும் நேரத்தையும் கணிச்சுக்கிட்டுத்தான் வாரேன்.''

''இந்த வகையிலே உங்க யோசனையே தனி மாமா ?'' என்று உளமாரச் சொல்லி மெச்சிக் கொண்டார் வேலாயுதம்.

''இப்ப இங்கே தங்க நேரமில்லை. உடனடியாத் திரும்பியாகணும்'' என்ற முத்தையா, ''பெரியவர் எப்படி இருக்கார்?'' என்றும் கேட்டார்.

''அவ்வளவுதான். ஏற்கெனவே மகளை நினைச்சு ரெத்தக் கொதிப்பு இருக்கு. இந்த வேக்காடும் அணையாம பாத்துக்கிட்டாப் போதும். அப்புறம் இன்னெரு தலைமுறைக்கு உன்னை அசைக்க முடியாது.'' என்று சிரித்துக் கொண்டே சொல்லித் தனது வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டார் முத்தையா.



மனத்திலே புதிய உற்சாகத்தோடு, நன்ருகச் சாய்ந்து கொண்டார் வேலாயுதம். சன்னல் பக்கமாகப் பார்த்தவர் வேறு நினைவில் மூழ்கி விட்டார்.

அன்றைக்கு நடந்தது, இருவரைத்தவிர வேறு யாருக்குமே தெரியாது. ஊராட்சித் தேர்தலின் போது., உச்சக்கட்டத்தில், பின் தொடர்ந்தே சென்று, பாண்டியனை நிலக் கோட்டையில் தனியே சந்தித்தார் வேலாயுதம். இந்த ஒரு தடவை விட்டுக் கொடுக்கும்படி, காலில் விழாத குறையாகக் கெஞ்சிய போது, எவ்வளவு அகம்பாவத்தோடு சிரித்தான் அந்தச் சிறுவன். அதற்கான தண்டனைதான் நாளைக்கு அவனுக்குக் கிடைக்கப் போவது. இவனையும் உள்ளே தள்ளிவிடும்போது, ஓடிப்போய் தாலி கட்டிக் கொண்டவளா, படியேறி வந்து, குறுக்கே நிற்கப் போகிறுள்? இருக்கும் சொத்துகளைத்தான் எண்ணத் தொலையுமா ? அதில் கொஞ்ச நாள் காலூன்றி நின்றுலே போதுமே. எப்படியும்—அவனை அனுப்பி விட வேண்டும்.

அதுவரையிலும் மாமா கையில் ஆயிரம் ஆயிரமாகக் கொடுத்துக் கொண்டிருந்தால், வெற்றியை இழுத்துக் கொண்டு வந்துவிட மாட்டாரா ?

பெருமூச்சு உடலை அசைத்தது.

முத்தையா திரும்பிப் பார்த்தார்.

நினைவில் ஓடுவது—முகத்தில் தெரியாதா என்ன ?

முத்தையாவின் முதிர்ந்த அறிவு நடப்பதையும், நடக்கப் போவதையும், எடைபோட்டுக் கொண்டிருந்தது.

விட்டதும், தொட்டதும், எல்லாமே வேலாயுதத்துக்குக் கிடைத்துவிடும் தான். இடையிலே முன்ளுல் நின்று, பாண்டியனை ஒழித்துக் கட்டுவதில் முத்தையாவுக்கு என்ன லாபம் இருக்கிறது ? வேளா வேளைக்கு, வாய்க்கு ருசியாகச் சாப்பிடலாம். வேண்டும் போது, நூருே ஆயிரமோ கிடைக்கும். உயிரோடு ஒருவனைக் குழியிலே தள்ளி மண்ணைப் போடுவதற்கு இது போதுமா ?

முத்தையாவின் பேத்திப் பெண்ணை, அந்த லிங்கத்துக்குக் கொடுப்பதெனக் கிழவியும் ஒப்புக் கொண்டு நாள் குறித்திருக்க, யாரையும் மதிக்காது, கழுத்தில் மாலையோடு வந்து நின்றவனையும் சேர்த்துக் கம்பிக்குள் தள்ளும்போது, நினைத்ததில் ஒன்று நடக்கிறது.

**அறப்பணிகளுக்கு ஆலயப் பணம்**

ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் மாதா கோவில் பணம், மனிதாபிமானப் பணிகளுக்குப் பயன் படுத்தப்படுகிறது. இதற்கென்று பொருளாதார வளர்ச்சி நிதி என்ற பெயரில் நிதியை உருவாக்கியிருக்கிறுர்கள். 10 கோடி மார்க் (ஜெர்மன் நாணயம்) தொகைக்கு மேல் இம்மாதிரி மனிதாபிமானப் பணிகளின் தர்மத்திற்கு மாதா கோவில்கள் அளித்துள்ளன. இத்தகவலை வளர்ச்சி உதவிச்சங்கத் தலைவர் ஆல்வின் புருச் தெரிவித்திருக்கிறுர்.

இத்தோடு முடிகிறதா? இன்னும் மாலை பூக்காது உட்கார்ந்திருக்கும் பேத்திக்கு, ஊரெல்லாம் மெச்ச உயர்ந்த இடத்தில் திருமணம் செய்துவைக்க வேண்டாமா? வடக்கு தெற்கு தெரியாதவன், முத்தையாவின் மருமகன் காடுபட்டியான், அவனுக்கே இப்படியொரு யோசனை தோன்றியிருக்கும் போது நடத்தி வைக்க வேண்டியதுதானே.

''என்ன மாமா யோசனை பலமாயிருக்கு?' என்று இடையிலே கேட்டார் வேலாயுதம்.

முத்தையா குலுங்கினுர்.

''நினைக்கிறது நடந்தாகணும் அந்த யோசனைதான்!'' என்றுர்.

''என்ன ஆனுலும் சரி மாமா? இந்தப் பயலை இத்தோட நசுக்கிப் போடணும். பணம் எவ்வளவு செலவானுலும் அதைப் பத்திக் கவலைப்படாதிங்க'' என்று சொல்லி மாமனை ஊக்கப் படுத்தினுர்—வேலாயுதம்.

முத்தையா உள்ளுக்குள்ளேயே சிரித்துக் கொண்டார். அவர் பதில் சொல்ல வாயெடுப்பதற்குள், கதவைத் தள்ளும் சந்தடி கேட்டுத் திரும்பினுர்.

கந்தையா வந்து கொண்டிருந்தான்.

கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக, வேலாயுதத்தின் வீட்டில், சாப்பாட்டுப் பிரச்சினையைத் தீர்த்து வைத்துக் கொண்டிருப்பவன். பேசும் போதும், நடக்கும் போதும் பெண்மையின் சாயல் இருக்கும். இவனது கைச்சமையலை நளபாகம் என்பார்கள். வேலாயுதம் உட்பட, கந்தையாவை யாருமே அதட்டிச் சொல்லிவிட முடியாது. அத்தனை செல்வாக்கு.

உள்ளே வந்தவன், நின்று, முத்தையாவையும் ஒரு பார்வை பார்த்து விட்டு, மூலையில் குவிந்து கிடந்த தேங்காய்களில் முற்றியவையாகப் பொறுக்கியெடுத்து, ஒரு குட்டிச்சாக்கில் போட்டுக்கட்ட ஆரம்பித்தான்.

''வீட்டு வேலையை விட்டுப் போட்டு, இவன் எதுக்கு இங்கே வந்திருக்கான்?'' என்று முத்தையா கேட்பதும் இவன் காதுகளில் விழுந்தது.

கந்தையாவுக்கு என்றைக்குமே—இந்த வழுக்கைத்தலைக் கிழவனைக் கண்டால் பிடிக்காது.

நேரா நேரத்துக்கு வீசம்படி நெய்யையும் கொட்டித் தின்று விட்டுக்கூடவே, ஒட்டிக்கொண்டு இல்லாததையும், பொல்லாததையும் சொல்லிக்கொண்டு . . . .

குழந்தையைப்போலக் குட்டிச் சாக்கை இடுப்பிலே தூக்கி வைத்து அணைத்துப் பிடித்தவாறு, எதிரிலே போய் நின்றான் கந்தையா. அவனுக்கென்ன பயமா ?

''சமயலுக்குத் தேங்கா வேணும்ன்னு நானும் சொல்லிச் சொல்லி அலுத்துப் போயிட்டேன். தோப்பிலேயிருந்து தினைக்கும் எத்தனை பேரு திங்கிறதுக்கு வராங்க. யாராவது கொண்டாராங்களா ? இதுக்கும் நான்தான் வேலை மெனக்கெட்டு வரவேண்டியிருக்கு. இதுக்கொரு பேச்சா?'' என்று மூக்கிலே விரலை வைத்துக் கேட்டான் கந்தையா.

முத்தையா முகத்தை திருப்பிக் கொண்டார்.

''சீக்கிரம் போடா. மாமாவுக்குப் பால் பாயாசம் செய்து வை. என் கையாலே போடணும்.'' என்றார் வேலாயுதம்.

'' எம்புட்டு நேரமாகப் போகுது அந்தப் பாயாசத்தைத் செய்து வைக்க'' என்ற கந்தையா போய் விட்டான்.

வேலாயுதம் சிரித்தார்.

''உங்களுக்கும் கந்தையாவுக்கும் எப்பவும் போட்டிதான்!'' என்றார்.

கந்தையாவின் நடையழகை ரசித்த எரிச்சலுடன் திரும்பினார் முத்தையா.

''முதல்லே நம்ம வீட்டுக்குச் சீதேவி வரணும். அப்பத்தான் எல்லாமே கூடிவரும்'' என்றார் சற்றுப் படபடப்புடன்.

''அவன் கைச் சமையலைச் சொல்லுங்க. அந்தப் பக்குவம் வேறே யாருக்கு மாமா வரும்?'' என்றார் வேலாயுதம் வெகுளியாக.

''உனக்கு எதுதான் புரியப் போகுது? நம்ம மைனர் நடேசனுக்கு உடனடியா கல்யாணத்தை முடிச்சுப் போடணும்'' என்று உத்தரவிடுவது போல் சொன்னார் முத்தையா.

''அவனுக்கென்ன வயசாகிப் போச்சு. போன தையோட இருபத்திரண்டு முடியுது.''

''நடேசன் எப்பவோ சுவரேறிக் குதிச்சிட்டான். அவன் வயசிலே நீ திரியலையா ?', என்று கேட்டார் முத்தையா.

வேலாயுதம் சாய்ந்து கொண்டார்.

''நானும் அதை நினைக்கத்தான் செய்யிறேன். தாயில்லாப் பிள்ளையின்னு செல்லமா வளத்தாச்சு. படிக்கத்தான் இல்லையின்னாலும், இன்னமும் எதிலேயும் பொறுப்பு வரலையே'' என்றார் பெருமூச்சோடு.

''கால்கட்டைப் போடு. பொறுப்புத் தன்னாலே வரும்'' என்றார் முத்தையா அவசரத்துடன்.

''செய்யணும். அப்பவாவது ஊரைச் சுத்தாம வீட்டோட இருக்கானு பாக்கலாம்'' என்றார் வேலாயுதம் திரும்பாமலே.

முத்தையா நிமிர்ந்து உட்கார்ந்தார்.

உள்ளத்தில் இருப்பதைச் சொல்லுவதற்கென்று, இருக்கும் அவசரத்தில், இனியும் ஒரு நேரம் வந்து நிற்கப் போகிறதா ?

அவர் நிதானித்து வாயெடுப்பதற்குள், வாசலில் ''ஐயா'' என்றழைக்கும் குரல் கேட்டது. சொல்ல எண்ணியது உள்ளுக்குள்ளேயே அமுங்கிப் போயிற்று.

உட்கார்ந்தபடியே திரும்பி, 'யாரது?' என்று குரல் கொடுத்தார்.

உள்ளே நுழைந்து, எட்டத்திலேயே பணிவோடு நின்று, ''ஐயா உங்களைக் கூட்டியாறச் சொன்னாங்க'' என்று சொல்லி நின்றான், குருபாதத்தின் பண்ணையாட்களில் ஒருவன் சின்ன வெள்ளை.

''நீ முன்னாலே போடா. . . . . வாரேன்'' என்றார் வேலாயுதம்.

சின்ன வெள்ளை சென்றதுமே, ''நிலத்தைப் பக்குவமா உழுது வச்சிருக்கோம்.' விதைக்கிறதெல்லாம் முளைக்கும். எப்பவும் நாம் முந்திக்கணும்'' என்று அடியெடுத்துக் கொடுத்தார் முத்தையா.

''நீங்க வண்டியைப் போடச் சொல்லுங்க மாமா!'' என்று சொல்லிவிட்டு எழுந்தார் வேலாயுதம்.

(வளரும்)

**நம் நாட்டில் பாதுகாக்கப்படும் காட்டு விலங்குகள்**

1. சிங்கம், 2. புலி, 3. வெள்ளைப் புலி, 4. வேட்டைச் சிறுத்தை 5. மரமேறும் சிறுத்தை 6. பனிச் சிறுத்தை, 7. சிவிங்கிப் பூனை, 8. பெரிய புனுகுப் பூனை 9. தங்கநிறப் பூனை, 10. சலவைக் கல் போன்ற பூனை, 11. புள்ளிப் பூனை, 12. அஸ்ஸாம் குரங்கு, 13. சின்னப் பாண்டா, 14. சதுப்பு நிலக்கலைமான், 15. மணிப்பூர் கொம்பு மான், 16. நான்கு கொம்பு மான், 17. கறுப்பு மான், 18. சிங்காரா வகை மான், 19. காஷ்மீர் மான், 20. கஸ்தூரி மான், 21. ஒற்றைக் கொம்பு காண்டா மிருகம், 22. சின்னக்காட்டுப் பன்றி, 25, காஷ்மீர்காட்டு ஆடு, 26. மலை ஆடு, 27. காட்டுக் கழுதை, 28. இமாலயக் காட்டு ஆடு (தாகின்), 29. முதலை, 30. மலைப் பாம்பு, 31. எறும்பு தின்னி 32. பெரிய இந்திய பஸ்டர்ட், 33. வெள்ளைக் காட்டு வாத்து, 34. சிகப்புத் தலை வாத்து, 35. மயில், 36. ட்ராகோபான்ஸ் (ஒருவகை வான் கோழி), 37. பட்டாம் பூச்சி.

**வெள்ளைப் புலிகள்**

உலகில் இன்று 39 வெள்ளைப் புலிகள் இருக்கின்றன. இவற்றில் 25 இந்தியாவிலும், 10 இலண்டனிலும், 4 அமெரிக்காவிலும் இருக்கின்றன. இந்தியாவில் டில்லியில் 13-ம், கல்கத்தாவில் 7-ம், ரேவா அரண்மனையில் 5-ம் இருக்கின்றன.





# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகள்!



புத்தம் புதிய ரகங்களும், சாகுபடி முறைகளும் ஆராய்ச்சி நிலையங்களிலே நித்தம் நித்தம் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. அப்புதிய ரகங்களும், சாகுபடி முறைகளும், நெற்றி வியர்வை நிலத்திலே விழப் பாடுபட்டு வரும் ஏழை எளிய உழவர்களிடையே பரவாவிட்டால், பலகோடி ரூபாய் செலவில் நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களால் பயன் கிட்டாது. நாட்டில் எதிர்பார்க்கப்படும் உற்பத்திப் பெருக்கமும் கானல் நீராகவே இருக்கும்!

''ஆராய்ச்சி நிலையங்களில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய ரகங்களும், புதிய சாகுபடி முறைகளும் பாமர உழவர்களை வந்தடையாவிட்டால் ஆராய்ச்சியின் நோக்கம் முற்றுப் பெறாது'' என்று தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத் துவக்க விழாவன்று குறிப்பிட்டார்.

இவைகளை மனத்திற்கொண்டே தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், அண்மையில் ''தகவல் தொடர்பு நிலையம்'' ஒன்றைத் துவக்கிப் புதிய கண்டுபிடிப்புகளைப் பல்வேறு விரிவினை முறைகளில் பரப்பி வருகிறது. உழவர்களின் உயர்விலை நாட்டம் கொண்டுள்ள ''தமிழரசு'', தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ''தகவல் தொடர்பு நிலையம்'' அவ்வப்பொழுது அனுப்பி வரும் தகவல்களைத் தொகுத்து ''தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகள்'' என்ற தலைப்பிலே 16—9—1972 ''தமிழரசு'' இதழில் வெளியிட்டிருந்தோம்.

அக்கட்டுரையைப் பல உழவர் பெருமக்கள் விரும்பி வரவேற்றதால், தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக, ''தகவல் தொடர்பு நிலையம்'' அனுப்பிய கீழ்க்கண்ட ஆராய்ச்சி முடிவுகளையும் ''தமிழரசு'' பெருமையுடன் வெளியிடுகிறது. இதுபோன்று தொடர்ந்து வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், புதிய கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்திப் பலன் அடையுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

## வெண்டைக்கு வேண்டியன . . . .

குறைந்த செலவிலும், எளிய முறையிலும் சாகுபடி செய்வதற்கு ஏற்றதாகவும், குறுகிய காலத்தில் அதிக மகசூல் அளிக்கக் கூடியதாகவும் இருப்பதால் தமிழ் நாட்டில் வெண்டை ஒரு முக்கியக் காய்கறிப் பயிராகப் பயிரிடப்படுகிறது. வெண்டையில் பெரு மகசூல் காணத் தகுந்த விதைப்புக்காலம், சீரான இடைவெளி, ஏற்ற இரசாயன உர அளவு மிகவும் அவசியமாகும். இவைகளைப் பற்றித் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தோட்ட இயல் துறையைச் சார்ந்த காய்கறிப் பிரிவில் ஆராய்ச்சிகள் நடத்தப்பெற்றன.

வரிசைக்கு வரிசை 60 சென்டிமீட்டர் (2 அடி) இடைவெளியும், செடிக்குச் செடி 20 சென்டிமீட்டர் (8 அங்குலம்) இடைவெளியும் கொடுத்து நடப்பட்ட வெண்டைச் செடிகள், 60 செ.மீ. (2 அடி) ×30 செ.மீ. (1 அடி), 60 செ.மீ. (2 அடி)×40 செ.மீ. (1 அடி 4 அங்குலம்) ஆகிய இடைவெளிகளில் நடப்பட்ட வெண்டைச் செடிகளை விட 26.6 சதம் முதல் 43.7 சதம் வரை அதிக மகசூல் அளித்துள்ளன. எனவே, வெண்டை நடுவதற்கு 60 செ.மீ.×20 செ.மீ. இடைவெளியே சிறந்தது என்பது தெளிவாகியுள்ளது.

வெண்டைக்கேற்ற இரசாயன உர அளவைப்பற்றி நடத்தப்பட்ட சோதனைகளிலிருந்து, ஹெக்டேருக்கு 40 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச்சத்து, 30 கிலோ சாம்பல்சத்து (ஏக்கருக்கு 16 கிலோ தழைச்சத்து; 20 கிலோ சாம்பல்சத்து, 12 கிலோ சாம்பல்சத்து), என்ற அளவே அதிக மகசூல் அளிக்க வல்ல இரசாயன உர அளவு என்பது புலனாகியுள்ளது.

வெண்டை ஆண்டு முழுவதும் பயிரிடுவதற்கு ஏற்றது எனினும் சில மாதங்களில் விதைக்கப்படும்பொழுது மட்டுமே, வெண்டை நல்ல மகசூல் கொடுக்கின்றது. இதுபற்றி நடத்தப் பெற்ற சோதனையில், நல்ல வெய்யில் உள்ள நீண்ட பகல் நேரம் கொண்ட மார்ச்சு ஏப்ரல், மே மாதங்களே வெண்டை விதைப்பதற்குச் சிறந்த காலமாகத் தெரிய வருகிறது. மார்ச்சு, ஏப்ரல், மே மாதங்களில் தனித்தனியே விதைத்துச் சாகுபடி செய்யப்பட்ட வெண்டைச் செடிகள் முறையே ஹெக்டேருக்கு 16,654 கிலோ, 14,434 கிலோ, 14,426 கிலோ வெண்டைக் காய்களை கொடுத்துள்ளன. இந்த மாதங்களில் விதைக்கப்பட்ட விதைகளின் முளைக்கும் தன்மை அதிகமாகவும், செடிகள் நல்ல வீரியம் மிகுந்ததாகவும் காணப்படுகின்றன.

மேற்கண்ட சோதனைகளிலிருந்து வெண்டைச் சாகுபடியில் பெரும் மகசூல் பெறுவதற்குப் பின்கண்ட முறைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது விளங்குகிறது.

தகுந்த விதைப்புக் காலம்—மார்ச், ஏப்ரல், மே.

சீரான இடைவெளி—60 செ.மீ.×20 செ.மீ.

ஏற்ற இரசாயன உர அளவு ஹெக்டேருக்கு 40 கிலோ தழைச் சத்து, 50 கிலோ மணிச் சத்து, 30 கிலோ சாம்பல் சத்து.

எனவே, மேற்கண்டவாறு வெண்டை சாகுபடி செய்து பெருமகசூல் பெற்று அதிக இலாபம் அடையுங்கள்.

### நுண்ணுயிர் ராசி

'லெக்யூம்' (Legume) எனப்படும் தாவர வகையைச் சார்ந்த பயறு வகைகள், காய்கறிகள், பசுந்தாள் உரங்கள் ஆகியவை காற்றிலுள்ள எரிவளி (நைட்ரஜன்) வாயுவைப் பரிமாற்றத் தன்மை மூலமாகத் தனது வளர்சிக்குப் பயன்படுத்துகிறது. இந்தப் பரிமாறும் தன்மையானது வேர்களில் உள்ள வேர் முடிச்சுகள் மூலமாக நடைபெறுகிறது. நூற்றுக்கணக்கான தாவரங்களில் 'ரைசோபியம்' என்ற நுண்ணுயிர் வகையினால் வேர் முடிச்சுகள் உண்டாயினும், அவையாவும் ஒருசில அயல் இனவூட்டுத் தொகுதிகளைச் சாரும்.

பயறு வகைகள், நிலக்கடலை, போன்ற பயிர்களின் விளைச்சல் 5 முதல் 15 சதம்வரை 'ரைசோபியல்கல்சர்' எனப்படும் நுண்ணுயிர் ராசி உபயோகிப்பதால், அதிகரிக்கும் எனத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலுள்ள உயிரியல் துறையைச் சார்ந்த நுண்ணுயிர் பிரிவின் ஆராய்ச்சியாளர்களால் மெய்ப்பிக்கப் பட்டுள்ளது.

குறிப்பிட்ட நுண்ணுயிர் ராசிகள் (ரைசோபியல் கல்சர்) தயாரித்து வேளாண் பெருங்குடி மக்களுக்கு வேளாண்மைத் துறையைச் சேர்ந்த விரிவாக்க அலுவலர்கள் மூலமாகப் பெரும் அளவில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. 1971-ஆம் ஆண்டு வரை இந்த நுண்ணுயிர் ராசிகள் 'கூழ் கரைசல்களாக' சிறு பாட்டில்களிலும், குடுவைகளிலும் விநியோகம் செய்யப் பட்டு வந்தன. இந்தக் 'கூழ் கரைசலைச்' சுத்தம் செய்யப் பட்ட நீருடன் கலந்து விதையுடன் கலக்கவேண்டும்.

1972-ஆம் ஆண்டு முதல் நுண்ணுயிர் ராசிகள் புதிய முறையில் உலர்ந்த அங்ககப் பொருட்களுடன் கலந்து, விளக்கம் அச்சிட்ட 'பாலிதீன்' பைகளில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு கிலோ ராசியும் ஒரு ஏக்கர் விதைக்குப் போதுமானது. இதன் விலை ரூபாய் 2 தான். இந்தப் பைகளின் மேல் ராசியின் வீரியத் தன்மைக்கான தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. தவிரவும், உயிரியல் துறை அவ்வப்போது சோதித்து இதன் தரத்தைப் பாதுகாத்து வருகிறது.

> **பழச்சத்து**
>
> பழச்சாற்றில் உள்ள உடல் வளர்க்கும் பொருட்கள் எந்த அளவில் உள்ளன என்பதை கண்டுபிடிக்கும் கருவி ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது. இதை உருவாக்கும் பொறுப்பு ''ஹைட்ரோ நாட்டிக்ஸ்-இஸ்ரேல்'' லிமிடெட் என்ற நிறுவனத்திடம் இருக்கிறது. ஏற்கெனவே ஆரஞ்சுப் பழச் சாற்றில் உள்ள உடல் வளர்க்கும் சத்துப் பற்றி இது கணக்கிட்டுள்ளது.
>
> இப்போது காற்றில் உள்ள பிராணவாயு எவ்வளவு என்பதை இந்த நிறுவனம் கண்டுள்ளது. மற்றும் பொட்டாசியம், கால்சியம் போன்றவைகளும் ஒவ்வொன்றிலும் எவ்வளவு உள்ளன என்பதைக் கண்டுபிடிக்கின்றன.

அங்ககப் பொருளுடன் கலந்த நுண்ணுயிர் ராசியை ½ கிலோ வெல்லக்கரைசலுடன் கரைத்துத் திரவ வடிவில் செய்யவேண்டும். இவ்விதம் செய்வதால், எல்லா விதைகளுக்கும் விதையின் மேல் இந்த ராசி ஒரே சீராக ஒட்டுவதற்கு ஏதுவாகிறது.

அங்ககப் பொருளுடன் கலந்த நுண்ணுயிர் ராசியின் நன்மைகள்:—

1. இதை நீண்ட நாள் சேமித்து வைக்கலாம்.

2. எளிதாக கையாளலாம்.

3. அங்ககப் பொருள்களினால் இந்த நுண்ணுயிர்கள் சிறப்பாக பாதுகாக்கப்படுகிறது.

4. இதைத் திரவ உருவத்திலேயோ, அல்லது பொடி வடிவத்திலேயோ உபயோகிக்கலாம் ஆனால் திரவ உருவத்தில் உபயோகிப்பது மிகச் சிறந்தது.

5. இந்த அங்ககப் பொருள் கலந்த நுண்ணுயிர் ராசி மிக விலை மலிவானது. கூழ் நுண்ணுயிர் ராசி கலக்க ஒரு ஏக்கருக்கு ரூபாய் 8 தேவை. ஆனால், அங்ககப் பொருள் கலந்த ராசி கலக்க ரூபாய் 2 தான் செலவாகிறது.

மருந்துடன் கலந்த விதைகளை, நுண்ணுயிர் ராசி கரைசலுடன் கலக்கக் கூடாது. மருந்து கலந்த விதைகளை, நன்றாகத் தண்ணீரில் கழுவிய பின்புதான் கலக்க வேண்டும். இல்லையேல், விதைகளுடன் கலக்கப்பட்ட மருந்தினால் நுண்ணுயிர்கள் பாதிக்கப்படும்.

இந்த நுண்ணுயிர் ராசி (ரைசோபியல் கல்சர்) தற்போது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக விதை விற்பனை நிலையத்தில் விற்பனைக்குத் தயாராக உள்ளது.

### எள் மகசூல் பெருக்கிட மாங்கனீஸ் சல்பேட் இடவும்

எள், தமிழகத்தின் ஒரு முக்கியமான எண்ணெய் வித்துப் பயிர். ஏறத்தாழ 3 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் இங்கே எள் பயிரிடப்படுகிறது. கால்சியம் சத்தை மிகுதியாகக் கொண்டுள்ளதால் எள்ளிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் ஒரு சிறந்த உணவு எண்ணெய்யாகவும், சில சமயம் மருந்துப் பொருளாகவும் பயன்படுத்தப் படுகிறது.

'மாங்கனீஸ் சல்பேட்' என்ற இரசாயன உரத்தை எள் பயிருக்குப் போடுவதால் எள் விளைச்சல் அதிகரிக்கிறது என்பது ஆராய்ச்சி மூலம் தெரிய வந்தது. இந்த உண்மையை ஆராயும் பொருட்டுத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த வேளாண்மை விரிவாக்கத் துறையினரால், மாநில வேளாண்மை துறையினர் உதவியைக்கொண்டு, மாநிலத்தின் பல்வேறு இடங்களில் கீழ்க்கண்ட உழவர் பெருமக்கள் நிலங்களில் சோதனைச் செயல் விளக்கங்கள் அமைக்கப்பட்டன.

1. திரு சி. ஆறுமுகம்,
நம்பியாம்பாளையம்,
அவினாசி வட்டாரம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

2. திரு எம். பழனியப்பன்,
வேப்பம்பாளையம்,
ஈரோடு வட்டாரம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

3. திரு ஆர். நடராஜன்,
இடையன்காடு,
புலிபாக்கம் (வழி),
செங்கற்பட்டு மாவட்டம்,

4. திரு சி. ஆறுமுகம்,
பூசாரிபட்டி,
கடையம்பட்டி வட்டாரம்,
சேலம் மாவட்டம்.



மேற்கண்ட உழவர்களின் வயலில் நடத்தப்பட்ட சோதனையில் எள் பயிருக்கு வழக்கமாகப் பரிந்துரை செய்யப்பட்ட இரசாயன உரத்துடன் ஒரு ஏக்கருக்கு 4 கிலோ 'மாங்கனீஸ் சல்பேட்' போடப்பட்டது.

அச்சோதனைச் செயல் விளக்கங்களில் 'மாங்கனீஸ் சல்பேட்' போட்டதால் 20 முதல் 23·10 சதம் வரை அதிக விளைச்சல் கிடைத்துள்ளது. சராசரியாக 21·39 சதம் அதிக விளைச்சல் கிடைத்துள்ளது.

ஆகவே, 'மாங்கனீஸ் சல்பேட்' எள் பயிரின் விளைச்சலைப் பெருக்கவல்லது என மெய்ப்பிக்கப்பட்டுள்ளதால், எள் சாகுபடி செய்து அதிக மகசூல் பெற, ஏக்கருக்கு 4 கிலோ வீதம் 'மாங்கனீஸ் சல்பேட்' இடுமாறு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

### வள்ளிக் கிழங்கு மகசூல் பெருக

தமிழகத்தில் ஏறத்தாழ 5,000 எக்டேர் பரப்பில் சர்க்கரை வள்ளிக்கிழங்கு முக்கிய உணவுப் பயிராக பயிர் செய்யப் படுகிறது. இந்தக் கிழங்கு வகையானது அன்றாட உணவில் அரிசி உணவை 25 சதவிகிதத்திற்குச் சரிக்கட்டவல்லது. இதில் மாவுச் சத்துடன் 'ஏ', 'சி', ஆகிய வைட்டமின்கள் அடங்கியுள்ளன. இதன் மாவை கோதுமை மாவுடன் கலந்து, சிறந்த சத்துணவாகப் பயன்படுத்தலாம். ஒரு டன் சர்க்கரை வள்ளிக் கிழங்கு உற்பத்தி செய்ய 30 மனித நாட்களும், 1 டன் நெல் உற்பத்தி செய்ய 153 மனித நாட்களும், 1 டன் மக்காச் சோளம் உற்பத்தி செய்ய 78 மனித நாட்களும் தேவை.

சர்க்கரை வள்ளிக் கிழங்கானது மிகக் குறைந்த செலவில் சுமார் 4½ மாதத்தில் நிறைந்த இலாபம் கொடுக்கும் ஒரு சிறந்த பயிராகும். இந்தக் கிழங்கின் பரப்பளவை அதிகரிப்பதற்குச் சிறந்த வாய்ப்புகள் உள்ளன. இந்த கிழங்கானது மாவுப் பொருள் (ஸ்டார்ச்), பற்பசை போன்ற பல வேளாண்மையைச் சார்ந்த சிறு தொழில்களைத் தொடங்க உதவியாக இருக்கும். எனவே இந்த முக்கியமானக் கிழங்கு வகைக்கு ஆராய்ச்சியின் அடிப்படையில் கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகளை கண்டறிவது மிக இன்றியமையாததாகியது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள தோட்ட இயல் துறையைச் சேர்ந்த காய்கறி இயற் பிரிவில் நடத்திய சோதனைகளில் சர்க்கரை வள்ளிக் கிழங்குப் பயிருக்குகந்த நடவுகாலமும், நடவுக் கொடிகளும், இரசாயன உர அளவும் முக்கிய அங்கமாகும். இது காறும் சர்க்கரை வள்ளிக் கிழங்கானது, இதன் கொடியின் பல பாகத்தை நடுவதன் மூலம் பயிராக்கப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 2 ஆண்டுகளாக இந்த கிழங்குப் பயிரின் நடுப்பாக கொடி, நுனிக்கொடிக் மற்றும் கிழங்குக் கரணை ஆகியவைகள் விதைப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டன. இவற்றில் நுனிக் கொடியே மற்றவைகளை விடச் சிறந்தவையென மெய்ப்பிக்கப் பட்டுள்ளது. இது, நடுக்கொடி, கிழங்குக் கரணை ஆகியவைகளை விதைப் பொருளாக நட்ட பயிரைவிட, அதிக விளைச்சல் கொடுத்துள்ளது.

ஏற்ற பருவத்தை அறியும் பொருட்டு ஜூன் முதல் அக்டோபர் மாதம் வரை இருவார இடைவெளியில் தொடர்ந்து நடவு செய்து, இரண்டாண்டுக் காலத்திற்குச் சோதனைகள் நடத்தப்பட்டன. செப்டம்பர் 2-வது பதினைந்து நாளில் நடப்பட்ட பயிரானது ஒரு ஹெக்டேருக்கு, 25·200 டன் கிழங்கு விளைச்சல் கொடுத்துள்ளது. இதை அடுத்து அக்டோபர் முதல் பதினைந்து நாளில் நடவு செய்த கிழங்கு ஒருஹெடக்ருக்கு 25·020 டன் கிழங்கு விளைச்சல் கொடுத்துள்ளது.

சர்க்கரை வள்ளிக் கிழங்கு மகசூலைப் பெருக்க இலைவழி உரமளித்தல் ஒரு சிறந்தமுறையாகத் தெரியவந்துள்ளது. ஹெக்டேருக்கு இடப்படும் 80 கிலோ தழைச்சத்தைப் பாதியாகப் பிரித்து, ஒரு பாதியை நடும் போது அடியுரமாகவும், மற்றப் பாதியை அதாவது (40 கிலோ தழைச்சத்தை) 30, 60 மற்றும் 90-வது நாளில் பகிர்ந்து இலைவழி உரமாகவும் தெளித்ததால், விளைச்சல் கணிசமாக அதிகரித்துள்ளது. அதாவது சர்க்கரை வள்ளிக் கிழங்குப் பயிருக்குத் தேவையான தழைச்சத்தில் பாதியை இலைவழி மூலம் அளிப்பதால், நேரடியாக உரமிடுவதைவிட 23 சதவிகிதம் அதிக மகசூல் கிடைக்கும் என்பது புலனாகியுள்ளது.

தமிழகத்திற்கு ஏற்ற சர்க்கரை வள்ளிக்கிழங்கு ரகங்களுக்கான பரிசோதனையில் 'வி. 2', 'வி. 6', 'வி. 8', 'வி. 12', ஆகியவை நல்ல விளைச்சலைக் கொடுத்துள்ளன. அண்மைக் கால ஒருங்கிணைப்புத் திட்டத்தில், சில வீரிய ரகங்கள் உட்பட 32 ரகங்கள் பரிசோதனை செய்யப்பட்டன. இவற்றில் 'வி' ரகங்கள் நல்ல பலன் கொடுத்துள்ளன. சிறப்பாக வி. 6 என்ற ரகம் எக்டேருக்கு 25 டன் வரை மகசூல் கொடுத்துள்ளது. வீரிய ரகங்களில் 'எச். 3' (H3) என்ற ரகம் மிகுந்த விளைச்சலைக் கொடுத்துள்ளது. இதைத் தவிர முசிரி தண்டல் (எஸ். பி. 1), முசிரி (எஸ். பி. 4), ரத்னகர் (எஸ். பி. 13), ஆலாங்குளம் சிவப்பு (எஸ். பி. 18) என்ற உள்ளூர் ரகங்கள் ஹெக்டேருக்கு 15லிருந்து 19 டன்கள் விளைச்சலைக் கொடுத்துள்ளன.

தகவல் :—'' தகவல் தொடர்பு நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-3.

> **உயிர் இருப்பதை உணர்த்தும் கருவி**
>
> மனிதர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என்பதை எதிலிருந்து தெரிந்து கொள்ளுகிறோம்; நாம் காற்றை உள்ளிழுத்து வெளியே விடுவதை வைத்துத்தான்! அறுவைச்சிகிச்சை செய்கிற சமயங்களில் நோயாளி மூச்சு விடுகிறாரா என்பதைக் கண்டறியப் புதிய கருவியை இஸ்ரேல் நாட்டில் கையாளுகின்றனர்; இதை நேரடியாக நோயாளி உடலில் சேர்த்து வைக்க வேண்டியதில்லை.
>
> அறுவைச் சிகிச்சை செய்கிற அரங்கில் ஒரு குழாயுடன் இக்கருவியை இணைத்து வைத்து விடுகிறார்கள். அது சரியாக இணைக்கப்பட்டுள்ளதா, இல்லையா என்பதைக் கூட அக்கருவி காட்டிவிடுகிறது. மூச்சு நிறுத்தினால், அது 10 முதல் 45 வினாடிகள் வரை தான் முடியும்; அதனால் அந்தக் குறிப்பிட்ட காலக்கட்டத்திற்கு மேல் மூச்சு நின்றுவிட்டால் உடனே அக்கருவியில் உள்ளமணி அலறத் தொடங்கிவிடும்.

VOLTAS

பருத்திப்பயிர்
களுக்குப்
பாதுகாப்பளிக்க
மிகச் சிறந்தது



ஜோலோன்®
முழுப் பொருள்
'ரோன்-பொலெங்க்'
பாரிஸ், பிரான்ஸ், ஸ்தாபனத்தாரால்
கண்டுபிடிக்கப்பட்ட போஸலோன்
பூச்சி மருந்து

RHONE-POULENC

(Systemic)

பாதுகாப்பு
'ரோன்-பொலெங்க்'
பூச்சி மருந்துகள்

19,






மகளிர் பகுதி என்றால் உணவுப் பழக்கங்களைப் பற்றியே எழுதுகிறோம் என்ற ஐயப்பாடு சிலருக்கு ஏற்படலாம்.

அடிப்படையாக ஒவ்வொரு பெண்ணுக்கும் ஊட்ட உணவு பற்றிய விவரம் தெரிந்திருப்பது அவசியமாகும். தொட்டிலை ஆட்டுவோருக்குள்ள உணவுப் பழக்கம் பற்றிய அறிவே, எதிர்காலச் சமுதாயத்தை வலுமிக்கதாக அமைக்கும்.

சுவர் இருந்தால்தானே சித்திரம் வரைய முடியும்? உடலை நன்கு பாதுகாத்தால்தானே உலக வாழ்வை அனுபவிக்க முடியும்? ஆகவே இந்த இதழிலும் உணவுப் பழக்கங்கள் பற்றிய செய்திகளே தெரிவிக்கப் படுகின்றன.

நம் நாட்டின் வெவ்வேறு பகுதியில் வாழும் மக்களின் உணவு எவ்வாறு உள்ளது என்றும், அவற்றிலுள்ள குறைபாடுகள் யாவை என்றும், அவற்றை எப்படிப் போக்கலாமென்றும் கவனிப்போம்.

நம் நாடு மிகவும் பெரியது; எனவே, வெவ்வேறு பகுதிகளிலுள்ள வெப்ப தட்ப நிலைகள் பெரிதும் மாறுபடுகின்றன. எல்லா இடங்களிலும், மழை ஒரே அளவில் பெய்வதில்லை; சில இடங்களில் மழை மிகவும் பெருமளவில் பெய்கிறது. வேறு சில பகுதிகளில் மிகவும் குறைந்த மழையே பெய்கிறது; சில இடங்களில் சிறிதும் மழையின்றிப் பாலைவனமாகவே இருக்கிறது. இவைகளுக் கேற்ப, வெவ்வேறு இடங்களிலும், வெவ்வேறு உணவுப் பயிர்கள் உண்டாகின்றன. இவற்றை ஒட்டியே, ஆங்காங்குள்ள மக்களின் உணவுப் பழக்கங்களும் அமைகின்றன. உணவுக் கேற்றபடி, அவர்களின் உடலமைப்பு, சக்தி முதலியனவும் வேறுபடுகின்றன.

பஞ்சாபில் கோதுமை மிகுதியாக விளைகிறது. ஆகையால், அங்கு வசிப்பவர்கள் ரொட்டியை முக்கிய உணவாகக் கொள்கிறார்கள். பஞ்சாபிலுள்ள சீக்கியர்கள் கோதுமை, பால், இறைச்சி முதலியவற்றை உண்கிறார்கள். கீரை, கிழங்கு காய்கறிகளையும் பயன்படுத்துகிறார்கள். எனவே, அவர்கள் உடற்கட்டுள்ளவர்களாக இருக்கிறார்கள். பஞ்சாபிலிருந்து கிழக்கே செல்லச் செல்ல, உணவின் சத்துக் குறைந்து கொண்டே போகிறது. வங்காளத்தில் நெல் மிகுதியாகப் பயிராகிறது. அங்குள்ள மக்கள் அதையே அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். அவர்களுடைய உணவில் அரிசி, பருப்பு, பால் முதலியன மிகுதியும் இடம்பெறுகின்றன. இதைப் போன்று தமிழ் நாட்டிலுள்ளவர்களும் அரிசியையே முக்கிய உணவாகக் கொள்கிறார்கள். பொதுவாக, வட இந்தியர்கள் கோதுமையையும், தென்னிந்தியர்கள் அரிசியையும் முக்கிய உணவுகளாகக் கொள்கின்றனர் என்று கூறலாம். அரிசி, கோதுமையைக் காட்டிலும் சத்துக் குறைவானது. அதில் புரதம் குறைவாகவுள்ளது. இவ்வளவு வேறுபாட்டின் காரணத்தால், பஞ்சாபினின்றும் கிழக்கேயும், தெற்கேயும் செல்லச் செல்ல உணவுச் சத்தும் குறைகிறது; மக்களின் உடலும் வளர்ச்சி குன்றிக் காணப்படுகிறது. இக்குறைபாட்டை நீக்கும் ஒரே சிறந்த வழி, கலப்புணவை உட்கொள்வதேயாகும்.

அரிசியை முக்கிய உணவாகக் கொண்டுள்ளவர்கள் தங்கள் உணவில் 1/3 அல்லது 1/2 பாகம் கோதுமையால் செய்த பொருள்களைச் சேர்த்து கொண்டு பால், பழம், கிழங்கு, காய்கறி, கீரைகள் முதலியவற்றையும் அதிகமாகச் சேர்த்துக் கொண்டால் அவர்களுடைய உணவு, சத்துள்ளதாகி, நன்கு சமன்செய்யப்பட்ட உணவாகவும் ஆகும். இவ்வாறு உணவுத் திட்டத்தை மாற்றிக் கொள்வதற்கான சூழ்நிலையும் இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

இரண்டாவது உலகப் பெரும் போருக்கு முன்னால், தென்னக மக்கள் கோதுமையை உணவுத் தானியத்தின் வடிவில் பெரும்பாலும் பயன்படுத்தவேயில்லை. அல்வா, பூரி போன்ற பண்டங்களுக்கே பயன்படுத்திவந்தனர். சில சமயங்களில், நீரிழிவு நோயுள்ளவர்கள் கோதுமையைத் தானிய வடிவில் பயன்படுத்தி வந்தனர்.

ஆனால், இரண்டாவது உலகப் பெரும்போர், பெரும் மாறுதலை ஏற்படுத்திவிட்டது. நாட்டில் உணவுப் பற்றாக் குறையின் காரணத்தால், உணவுப் பங்கீட்டு முறை ஏற்பட்டது. எல்லாருக்கும் போதிய அளவு அரிசி கிடைக்கவில்லை. இவ்வுணவுக் குறையை நிரப்பக் கோதுமையும் வழங்கப்பட்டது. இதனால் தென்னகத்தைச் சேர்ந்தவர்கள் கோதுமையை வேறு வழியின்றிப் பயன்படுத்த வேண்டியதாயிற்று. அவர்கள் சப்பாத்தி, பூரி முதலியவைகளை முன்னைவிடக் கூடுதலாக உண்டனர். இவ்வுணவும் ஒருவகையில் பழக்கமாகிவிட்டது. இவ்வுணவு மாற்றத்தால், அவர்களுடைய உடலுக்கும் நன்மை ஏற்பட்டது. ஆனால், இப்பொழுது அரசினரின் முயற்சியால் அரிசிப் பற்றாக்குறை ஓரளவு நீங்கிவிட்டதால், மக்கள் மறுபடியும் முன்போல் அரிசியை மிகுதியாகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். இது சரியன்று.

அரிசியுடன் கோதுமையையும் பயன்படுத்திப் பால், தயிர், வெண்ணெய், மோர், கிழங்கு, கீரைகள், காய்கறிகள் முதலியவற்றையும் மிகுதியாகப் பயன்படுத்துவதால் நமது உணவு, சத்துள்ளதாகவும் நன்கு சமன் செய்யப்பட்டதாகவும் அமையும். மரக்கறி உணவையே நம்பியுள்ளவர்களுக்குப் பால் குடிப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

ஒரு நாளுக்குக் குறைந்தது 8 அவுன்ஸ் பாலாவது குடிக்க வேண்டும். அரிசிச் சோற்றிலுள்ள புரதக் குறைவைப் போக்கப் பருப்பை மிகுதியாக உட்கொள்ள வேண்டும். புரதத்தைக் கருத்திற் கொண்டு பார்த்தால், முட்டையைவிடப் பருப்பில் மிகுதியான புரதச் சத்து இருக்கிறது. உலோகச் சத்தைப் பெறுவதற்காகக் காய்கறி, கீரை, பழங்களை உட்கொள்ள வேண்டும். நாள்தோறும், 2, 3 அவுன்ஸ் நெய் அல்லது எண்ணெயையும் அருந்த வேண்டும். புலால் உணவு உண்பவர்கள், தங்களுடைய உணவில் முட்டை, மீன்கள் முதலியவற்றைச் சிறிது அதிக அளவில் சேர்த்துக் கொள்வதால், அரிசியிலுள்ள புரதக் குறைவைப் போக்கிக் கொள்ளலாம். இம்மாதிரியான உணவிலும் நாள்தோறும் ஏறக்குறைய 3,000 வெப்ப அளவு எண்கள் கிடைக்கும். இதற்கு மாறாக அரிசியை மட்டும் முக்கிய உணவாகக் கொண்டு, சிறிது காய்கறிகளையும், எண்ணெயையும் உட்கொள்வதால், பொதுவாக 1,500 வெப்ப அளவு எண்களே கிடைக்கக்கூடும்.

நாட்டில் உணவுப் பொருள்களின் விளைச்சல் மிகுதியாக இருந்து அவற்றின் விலையும் குறைவாக இருந்தாலே, மக்களுக்குச் சத்துள்ள உணவு கிடைப்பது எளிதாகும். முக்கியமாகக் குழந்தைகளின் வளர்ச்சிக்கும், உடல் நலத்திற்கும் பால் மிகவும் இன்றியமையாததாகும். இதற்காக நாட்டின் பல இடங்களிலும் குழந்தைகள் வளர்ப்பு விடுதிகள் திறந்து, அங்கு ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாகப் பால், பால் பொடி, பாலடைக்கட்டி முதலியன அளிக்கப்பட்டு வருகின்றன.

இச்செய்திகள் அனைத்தையும் கருத்திற்கொண்டு, நாம் சில உணவுத் திட்டங்களைத் தயாரிக்கலாம். சில உணவுத் திட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

1. 8—12 மாதக் குழந்தைக்கு (நாளொன்றுக்கு)

பால்—32 அவுன்ஸ்.
நன்றாகச் சமைத்த சோறு—ஒரு சிறு கோப்பை.
நன்றாகச் சமைக்கப்பட்டு மசிக்கப்பட்ட கீரை—1 சிறு கரண்டி.
நன்றாகச் சமைக்கப்பட்டு மசிக்கப்பட்ட உருளைக்கிழங்கு அல்லது சர்க்கரை வள்ளிக்கிழங்கு—1 சிறு கரண்டி.
ஆரஞ்சு அல்லது தக்காளி பழச்சாறு—4 அவுன்ஸ், முட்டை—1.
வெண்ணெய் அல்லது நெய்—ஒரு சிறு கரண்டி.
சர்க்கரை—ஒரு சிறு கரண்டி.

இவ்வுணவின் மூலம் சுமார் 900 வெப்ப அளவு எண்கள் கிடைக்கலாம். மரக்கறி உணவு மாத்திரம் உண்பவர்கள் முட்டைக்குப் பதில் துவரம் பருப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பருப்பு நன்றாக வெந்து பக்குவமாக இருக்க வேண்டும். இவ்வுணவுத் திட்டத்தின் படி போதிய வைட்டமின்களும் கிடைக்கும்.

2. 1½ வயது முதல் 2 வயது வரையுள்ள குழந்தைகளுக்கான சமன் செய்த உணவுத் திட்டம்.

நன்கு சமைத்த சோறு—2 சிறு கோப்பைகள்.
பால்—20 அவுன்ஸ்.
நெய்—2 சிறு கரண்டிகள்.
கிழங்கு, கீரைகள்—4 சிறு கரண்டிகள்.
பசுமையான காய்கறிகள்—2 சிறு கரண்டிகள்.
வாழைப்பழம் (மொந்தன்)—1 (சிறியது).
ஆரஞ்சு அல்லது தக்காளிச்சாறு—1½ அவுன்ஸ்.
சர்க்கரை—2 சிறு கரண்டிகள்.
முட்டை, மாமிசம் அல்லது பருப்பு 1½ அவுன்ஸ்.

இவ்வுணவின் மூலம் சுமார் 1,200 வெப்ப அளவு எண்களைப் பெறக்கூடும்.

3. வயது வந்தவர்களுக்கான சமன்செய்த உணவு.

நன்கு சமைக்கப்பட்ட ஏதேனும் இரண்டு தானியங்களின் சோறு சுமார்—300 கிராம்.
துவரை (பருப்பு) சுமார்—55 கிராம்.
உளுந்து சுமார்—15 கிராம்.
இலை காய்கறிகள் (கீரை வகைகள்)—50 கிராம்.
பசுமையான காய்கறிகள் சுமார்—84 கிராம்.
தக்காளி—20 கிராம்.
தேங்காய் (வெண்பருப்பு) சுமார்—4 சிறிய துண்டுகள்.
வெல்லம் அல்லது சர்க்கரை சுமார்—70 கிராம்.
நெய் அல்லது எண்ணெய்—சுமார் 1 அவுன்ஸ்.
இறைச்சி, முட்டை அல்லது கொட்டைகள் சுமார் 90 கிராம்.
பால் சுமார்—8 அவுன்ஸ்.

இவ்வுணவின் மூலம் ஏறக்குறைய 2,500 வெப்ப அளவு எண்கள் பெறக்கூடும்.

—அஞ்சனு

---

# புலி! புலி!!

கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை, இராஜஸ்தான், பஞ்சாப், கட்ச்சுப் பாலைவனப் பகுதிகள் நீங்கலாக, இந்தியாவில் நெடுகிலும் புலியைக் காணலாம். வனப்பான வண்ணம்; அழகான வரிக்கோடுகள்; நன்கமைந்த உடல்; இதுவே புலியின் தோற்றம்.

பசுமையான, இலையுதிர்க் காடுகளிலும், வறட்சியான திறந்த வெளி வனங்களிலும், மலையடிவாரப் புல்வெளிகளிலும் இவை வசிக்கின்றன. சுந்தர்பான்ஸ் பகுதியில், மரங்களும், சேறும், நீரும் நிறைந்த இடங்களில் இவை அலைந்து திரிகின்றன.

அடித்துத் தின்பதற்குக் ஏதுவாகப் பெரிய மிருகங்கள், தூங்குவதற்கு நிழலுடன் கூடிய வசதியான இடம், தாகத்தைத் தணித்துக் கொள்ள நீர் இவை மூன்றும் புலிக்குத் தேவை. சாதாரணமாகப் புலி இரவில் வேட்டையாடுகிறது. மப்பும் மந்தாரமாகவோ, குளிர்ந்தோ இருக்கும் பகல் நேரங்களிலும் புலி



இரை தேடுவதுண்டு. யானை, காட்டெருது, எருமை போன்ற பலவகை மிருகங்களை புலி வேட்டையாடும். மான், நீல எருது (நீல்காய்), காட்டுப்பன்றி, கரடி, முள்ளம்பன்றி ஆகியவற்றைப் புலி அடித்துக் கொல்லும். இரைக்கு வன விலங்குகள் கிடைக்காவிடில் கால் நடைகளையும், மனிதர்களையும் புலி வேட்டையாடுகிறது. கனமான உடல் இருந்தாலும் புலி துடிப்புடன் இருக்கிறது. புலி நீரைக் கண்டு பயப்படுவதில்லை. எளிதில் நீந்தி விடுகிறது.

சொந்தம் கொண்டாடும் தன்மை புலிக்கு அதிகம். அது வாழும் எல்லைக்குள் எவரையும் சாதாரணமாக அண்ட விடுவதில்லை. சாதாரணமாகப் புலிக்கு இரண்டு அல்லது மூன்று குட்டிகள் பிறக்கும். சில சமயங்களில் ஆறு குட்டிகள் பிறப்பதும் உண்டு. குட்டிகள் ஆறு மாத காலம் வரை இருப்பிடத்திலேயே சுற்றிக் கொண்டிருக்கும். பிறகு, தாய்ப் புலியுடன் சென்று அவை வேட்டையாட ஆரம்பிக்கின்றன. தாய்ப் புலியுடன் குட்டிகள் இரண்டாண்டுகளே கூடவே தங்கியிருக்கும். சாதாரணமாகப் புலி 20 ஆண்டுகள் வாழ்ந்திருக்கும்.



யாராவது நம்மை நினைக்கும் போது தும்மல் வருமென்றும், அப்படித் தும்மிடும் போது வாழ்த்துச் சொல்வது என்றும் ஒரு நம்பிக்கை பழங்காலந் தொட்டுத் தமிழகத்தில் பரவி நிற்கிறது. அந்தப் பழக்கத்தை வைத்து வள்ளுவனார் ஒரு அரிய காதல் காட்சியைச் சித்திரிக்கிறார்.

சோலைப் பசும் புற்றரையிலே—பால் வண்ண உடை உடுத்தி—காதல் மகனும் காதல் மகளும் இன்ப யாழை மீட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆரத் தழுவி அக மகிழும் போது முகத்தில் பதிந்த முழு நிலவுப் பெண்ணின் கரிய கூந்தலின் சிறு தொகுப்பு அவளையு மறியாமல், அவன் மூக்கிலே பட்டதாலோ என்னவோ தும்மிவிட்டான். உடனே அந்த அணங்கு அவனை 'வாழ்க' என்று வாழ்த்தினாள். வாழ்த்தியவளுக்குத் திடீரென ஒரு நினைவு எழுந்தது.

“ஆமாம்—எந்தப் பெண்மயில் உம்மை நினைத்தாள்? அதனால் தும்மினீர்?” என்று ஒரு கேள்வியைப் போட்டு ஊடல் புரிந்தாள். செல்லமாக அழுதாள். காதலனுக்கு மீண்டும் தும்மல் வந்தது. காதலி, அந்த முறை ஐயத்தால் அழுவாளே என்று தும்மலை அவன் அடக்கிக் கொண்டான்! அவளோ, காதலனை நினைத்து ஏங்குகிற இன்னொருத்தி இருக்கிறாள் என்பதை நிச்சயமாக முடிவு செய்து கொண்டவள் போல்,

“ஓகோ! இன்னொருத்தி உம்மை நினைப்பதை, எனக்குக்காட்டிக் கொள்ளாமல், தும்மலை அடக்கி மறைக்கிறீரோ?” என்று மீண்டும் அழுதாள். அதை விளக்கும் குறளோவியங்கள் இரண்டு—இதோ!

வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று.

தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல்
எம்மை மறைத்திரோ என்று.



தும்மினால் அருகிருப்போர் வாழ்த்துவர். இது பழைய கால வழக்கம். அந்த வழக்கத்தை வைத்து வள்ளுவர், காதலர்களை ஊடல் புரிய மட்டும் விடவில்லை. ஊடல் தீர்ப்பதற்கும் அந்தப் பழக்கத்தைப் பயன்படுத்துகிறார்.

துப்புறச் சிவந்த வாயாள் தூயபஞ்சணையின் மீது ஒப்புறக் கணவனுடன் இருந்த காலை இடையே எழுந்தது ஊடல் என்னும் காதல் திருவிளையாடல்! ஒன்பது முத்தம் தருவேன் என்று எட்டுத் தந்து நிறுத்தினானே; அல்லது அவள்தான் எட்டி நின்றுவிட்டாளோ—கட்டிக் கரும்பே என அழைத்துவிட்டுச் சுவைக்காமல் தயங்குகிறானே என்று ஊடல் புரிந்தாளோ? எண்ணி ஏன் ஒன்பது கேட்டாள்? எண்ணாமல் பெறுவதற்கு ஏன் அஞ்சினாள், என்று அவன் தான் மடிவிட்டு எழுந்தானோ? எப்படியோ உல்லாசபுரியில் ஊடல் நிலவு உதயமாகிவிட்டது. சில விநாடிகள் அமைதி!

காதலன் திடீரெனத் தும்மி விட்டான். காதலியும் ஊடலை மறந்து “வாழ்க” என்று வாழ்த்திவிட்டாள்.

தோற்றாய்! தோற்றாய்! என்று தோகையின் சிவந்த கன்னத்தைச் சிவக்க வைத்தான். அவளும் பின்னிக் கொண்டாள். 'தும்மல்' அவர்கள் ஊடலைத் தவிர்த்து விட்டது.

காதலன் சாதாரணமாகக்கூடத் தும்மியிருக்கலாம். ஆனால் அவளோ மறுநாள் காலை தன் தோழியிடம், தன் காதலனின் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக,

“நான் ஊடினேன்—அவர் வேண்டுமென்று தும்மினார். நான் ஊடலை மறந்து வாழ்த்திவிட்டேனடி!” என்று கன்னத்தைத் தடவிக்கொண்டே கனிமொழி சிந்துகிறாள். அந்தக் குறள் இதோ!

ஊடி யிருந்தேமாத் தும்மினார் யாந்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து.

# பெற்ற விடுதலையின் பெரும்பயன் காண- நலிவுற்ற மக்கள் நல்வாழ்வு பெற வேண்டும்!

வாழ்க நீ எம்மான், இந்த
வையத்து நாட்டி லெல்லாம்

தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்

பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை

வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா! நீ வாழ்க!!
வாழ்க!!!

என்று பாரதியார், அண்ணல் காந்தியடிகளின் அருமை பெருமைகளை எடுத்துச் சொல்லி, அவர் பல்லாண்டு வாழ வேண்டுமென்று வாழ்த்தினார்.

அண்ணல் காந்தியடிகள் இறந்து விட்டாலும், அவர் கற்பித்த அன்பு நெறி, அவர் கூறிய அறிவுரைகள், அவர் காட்டிய நல்வழிகள் நம் மனக்கண் முன்னே காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் எண்ணிஎண்ணிச் செயல்படுவதற்குரிய நினைவு நாளாக அவருடைய பிறந்தநாள் அமைகிறது.

இன்று அக்டோபர் இரண்டாம் நாள்; அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள். தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் நாட்டின் நல் வாழ்வுக்காக நல்கிய தேசத்தந்தை அண்ணல் காந்தியடிகள் பிறந்த புனித நாள்.

" நலிவுற்ற சிற்றூர்கள் நல்வாழ்வு பெற்றாலன்றி நாம் பெற்ற சுதந்தரத்தின் முழுப் பயனும் நமக்குக் கிட்டாது " என்ற அண்ணலின் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, 1952–ஆம் ஆண்டு அவர் பிறந்த இதே நாளில் நாடெங்கும் சமுதாய வளர்ச்சித் திட்டம் தொடங்கப் பெற்றது.

அண்ணல் காந்தியடிகளின் உள்ளத்தில் ஒன்றியிருந்த ஊர் வளர்ச்சிப் பணிகளுக்கு ஆக்கம் தரவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு அவர் பிறந்த நாளான அக்டோபர் 2-ஆம் நாள் தொடங்கி, ஒருவார காலத்தைச் சமுதாய நலத்திட்ட வாரமாக 1970–ஆம் ஆண்டு முதல் நாடெங்கும் கொண்டாடி வருகிறோம்.

காலத்தால் சீர்குலைந்துவிட்ட சமுதாயம், ஞாலத்தில் உயர்வு பெற உழைப்பு ஒன்றே உற்ற துணையாகும். சமுதாயம் தலை நிமிர்ந்து வாழ்வதிலும், வளர்வதிலும், ஆர்வம் மிக்க அனைவரும் ஒருங்கிணைந்து பங்கு கொள்வதே, சமுதாய நலத் திட்டமாகும்.

கடந்த 20 ஆண்டுகளாக ஊர் வளர்ச்சிக்கான பணிகளில், திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறோம். நாடெங்கும் நிறைந்துள்ள ஊராட்சி நிறுவனங்கள் வலுவடைந்து செயல் திறன் மிக்கவையாக மாற்றியமைக்கும் முயற்சியில், முழு மூச்சுடன் ஈடுபட்டுள்ளோம்.

பசுமைப் புரட்சியில் ஒவ்வோர் ஊராட்சியும் முழுமையாகப் பங்கு பெறச் செய்ய, 'உற்பத்திப் பெருக்கத் திட்டம்' என்ற பெயரால், வேளாண்மை, கால்நடை வளர்ச்சி, மீன் வளர்ப்பு ஆகிய திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இம்முயற்சியின் காரணமாக, ஒவ்வோர் ஊராட்சியின் தேவைகளும் ஆராயப்பட்டு, அவற்றிற்கேற்ப வளர்ச்சிப் பணிகளில் தக்க மாற்றங்கள் உருவாக்கப்பட்டன. இன்றியமையாத பணிகளோடு, அந்தந்த இடத்துக்கேற்ப வகையில் சிறப்புத் திட்டங்களை அமைத்துக் கொள்ளவும் வசதி செய்யப்பட்டது. மக்களின் தேவைக்கேற்பத் திட்டங்களைத் தீட்டும் மாபெரும் உரிமை ஊராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. அதன் விளைவாக இன்றைய ஊராட்சி நிறுவனங்களின் பணிகளில் ஒரு மாபெரும் மறுமலர்ச்சியைக் காண முடிகிறது. பல்கிப் பெருகி வரும் மக்கட் பெருக்கத்திற்கேற்பப் பசுமைப் புரட்சிக்கு, வித்திட்டு உற்பத்தியில் தன்னிறைவு கொள்ள முடிந்தது.

'உண்டி கொடுப்போர் உயிர் கொடுப்போரே' என்பது முதுமொழி. நாட்டில் பெருகி நிறைவுபெறும், ஏனைய தொழில் வளத்துக்கெல்லாம் உயிரளிப்பது உழவுத் தொழிலேயாகும். வேளாண்மையைத் தொழிலாக மட்டுமல்லாமல், வாழ்க்கை நெறியாகவே ஏற்றுக்கொண்டுள்ள கோடிக் கணக்கான உழவர்களை நம்பித்தான், இந் நாட்டில் செழிப்பும், செம்மையும் தழைத்து வளர்ந்துள்ளன.

ஆயினும், அடுத்துச் செய்து முடிக்க வேண்டிய ஆக்கப்பணிகள் இன்னும் சிலபல உள்ளன. அவற்றைப் பற்றித் திட்டமிடவும், மக்கள் சக்தியை ஒன்று திரட்டவும், இந்தச் சமுதாய நலத்திட்ட வாரவிழா பெரிதும் துணைபுரியும் என்று நம்புகிறேன். ஒவ்வோர் ஊராட்சி நிறுவனமும், தனது ஊரை மேலும் வளமுள்ளதாகவும், வசதியுள்ளதாகவும் ஆக்க என்னென்ன பணிகளை நிறைவேற்ற வேண்டுமென்பதில்முழுமையாகக் கவனம் செலுத்துவதே, ஊராட்சி உறுப்பினர்களின் மாபெரும் பொறுப்பாகும். வளர்ச்சிப் பணிகள் அந்தந்த ஊர்களில் வாழும் மக்களின் அனுபவத்திலிருந்தே உருவாக வேண்டும். அரசையும், அரசு ஊழியர்களையும் பக்கத் துணையாகவே கொள்ள வேண்டும்.

1972-73-ஆம் ஆண்டிற்கெனப் பல்வேறு வரவு செலவுத் திட்டத் தலைப்புக்களில், ஊராட்சிகளின் மேம்பாட்டுக்கெனத் தமிழக அரசு ரூபாய் 77.14 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. இதைக்கொண்டு ஊராட்சி நிர்வாகம் எவ்வளவு பெரிய அளவில் செயல்படுகிறதென்பது நன்கு புலப்படும்.

ஊராட்சி ஒன்றியங்களின் ஆட்சி அமைப்பு முறையில் அவ்வப்போது, பயனளிக்கும் பல்வேறு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே.

ஒருங்கிணைந்த திறமையான நிர்வாக அமைப்பாக இயங்குவதற்கென்றே, இந்த ஆண்டிலும் ஊராட்சி ஒன்றியங்களின் நிர்வாகஅமைப்பை அரசு திருத்தி அமைத்துள்ளது. இதன்படி, ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உற்பத்திப் பிரிவு, கல்விப் பிரிவு, கூட்டுறவுப் பிரிவு, பணிகள் பிரிவு, ஊராட்சி நிர்வாகப் பிரிவு, பொதுப்பிரிவு ஆகிய ஆறு பிரிவுகள் செயல்பட ஏற்பாடாகியுள்ளது. ஒவ்வொரு பிரிவின் தலைவரே, அப்பிரிவின் முறையான நிர்வாகத்துக்கும், தொடர்பான பல்வேறு திட்டங்களை இணைத்து நிறைவேற்றுவதற்கும், பொறுப்புள்ளவராகிறார். வளர்ச்சி அலுவலர்களின் தலைவர் என்ற முறையில், ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் விளங்கவும், அதற்கேற்ப அவர்களின் கரங்களைப் பலப்படுத்தவும் ஆவன செய்யப்பட்டுள்ளன.

ஆயினும் ஊர் வளர்ச்சி என்பது, ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் ஆகியோர் ஆக்கப் பணிகளில் காட்டும் ஆர்வத்தைப் பொறுத்தே அமைய முடியும்! மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர்கள், எவ்வளவு காலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தார்கள் என்பதைக் கணக்கிடுவதைவிட, அந்தக் கால வரம்பிற்குள் மக்களுக்கு உண்மையில் பலன் தரத்தக்க நற்பணிகள் எத்தனை செய்து முடித்துள்ளார்கள் என்பதே வரலாற்றில் பொறிக்கத் தக்க சாதனையாக இருக்கும். அவையே, என்றென்றும் அவர் புகழை நிலைத்து நிற்கச் செய்யும்.



கல்வி, உள்ளாட்சித் துறை அமைச்சர்
நாவலர் நெடுஞ்செழியன்

பேரறிஞர் அண்ணா அவர்கள், ஊராட்சித் தலைவர்களைக் குறித்துச் சொன்ன மணிமொழி ஒன்று, இன்று என் நினைவிற்கு வருகிறது :

" நீங்கள், உங்கள் சொந்த வாழ்க்கையைக் கவனிக்க வேண்டாமென்று, நான் சொல்லவில்லை. நீங்கள் சமுதாயத்துக்குக் கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்றுதான் சொல்லுகிறேன்; அடிப்படையிலிருந்து, நீங்கள் செய்யும் உதவியால் தான், சனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும்" என்றார்.

இருபது ஆண்டுக் கால சமுதாய வளர்ச்சித் திட்டத்தால், எதிர்பார்த்த பலன் கிடைக்காவிட்டாலும், ஊர்களில் ஒரு புதிய விழிப்புணர்ச்சி தோன்றியுள்ளதை யாரும் மறுக்க இயலாது. ஊர்கள்தோறும் நம்பிக்கை ஒளிவீசும் நற்காட்சியைக் காண்கிறோம்.

மக்கள் ஆட்சிக்கு அடிப்படையான பண்புகளையும், கடமைகளையும், பொறுப்புக்களையும், ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சிகளும் இன்று பாதுகாத்துப் பலப்படுத்தி வருகின்றன. மக்களுக்குச் சேவை செய்வதில் தலைமைப் பொறுப்பேற்க, ஊர்கள் தோறும் பல புதிய சக்திகள் உருவாகி வருவதைக் காண முடிகிறது. இன்றைக்குக், கிராமப்புற மக்களைத் தங்கள் வளர்ச்சிக்கான வழிகளில் அவர்களையே ஈடுபடுத்தி இருப்பது, சமுதாய நலத்திட்டங்களின் மிகச் சிறந்த, நிலையான சாதனையாகும்.

உலக உத்தமர் பிறந்த இத் திருநாளில், சமுதாய வேலைகள் இன்னும் தீவிரமாக நடைபெற, நாம் அனைவரும் ஒன்றுபட்டு முயல்வோமாக!

காந்தியடிகளின் கருத்துகள் எத்தனை எத்தனையோ இன்னும் நிறைவு பெருமல், சொல் அளவிலும் பேச்சளவிலும் நிற்கின்றன என்பதை, ஊன்றிக்கவனிப்போர் நன்கு உணர்வர்.

தாழ்த்தப்பட்ட மக்கள் இன்னும் தாழ்த்தப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். மேடைகளில் பேசுகிறோம். ஆனால் பேசும் அளவுக்குச் செயலில் துடிப்பு இருப்பதில்லை. தாழ்த்தப்பட்ட மக்களின் மேன்மைக்கான வகையில், காந்தியண்ணல் பிறந்த இப்புனித நன்னாளில் சிறந்த பணிகளை மேற்கொள்வது சாலப் பொருத்தமாகும்.

சமுதாயம் ஒவ்வொரு விநாடியும், மாறியமைந்து வருகிறது, இதுவே, வளர்ச்சியின் அறிகுறி. வளர்ந்து வரும் தேவைகளுக்கு ஏற்றவாறு, திட்டப் பணிகள் அமையவேண்டும். அவ்வாறு அமைக்க, இந்தச் சமுதாய நலத்திட்ட வார விழாவை உறுதுணையாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். அரசு அலுவலர்களும், மக்கள் தலைவர்களும், மக்களும் இணைந்து நின்று, நிலையான சமுதாயச் சொத்துகளை உருவாக்கத் தக்க ஆக்கப் பணிகளில் ஈடுபட, இந்த விழா பெரிதும் உதவுமென நம்புகிறேன்.

ஊராட்சி அமைப்புகள் வேரும், விழுதுமாக நின்று நிலை பெற்று ஒற்றுமையின் சின்னமாக, ஊக்கத்தின் பிறப்பிடமாக, நாம் அனைவரும் இணைந்து செயலாற்றினால்தான் உலகம் விரும்பும் ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை நாம் உருவாக்க முடியும்.

தமிழகமெங்கணும் விரிந்துள்ள ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய நலத்திட்ட விழாவில் பெரும் பங்கேற்பதோடு, மக்கள் தலைவர்களும் அரசு அலுவலர்களும் ஒருங்கிணைந்து விழாவைச் சிறப்புடையதாக்கும் சீரிய பணியை மேற்கொள்வார்களென எதிர்பார்க்கிறேன்.

இருட்டை எதிர்த்து முழக்கமிடுவதைவிட, ஒரு மெழுகு வத்தியை ஏற்றி வைப்பதே இன்றையத் தேவை! சமுதாய இடிபாடுகளையும் குறைபாடுகளையும் சாடுவதைவிட, நலம் அமையும் நல்ல சமுதாயத்தை உருவாக்க ஒவ்வொருவரும் தமது பங்கை அளித்துப் பணியாற்ற முன்வருவதே போற்றுதற்குரியது.

பொதுப்பணி ஏற்பீர்!
புகழ் பெற வாழ்வீர்!
வணக்கம்.

(வானொலியில் சமுதாய நலத்திட்ட வார விழாவை ஒட்டி ஆற்றிய உரை)

# கல்வெட்டுக் கூறும் செய்தி



கு.தாமோதரன்

தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத் துறையால் வட ஆர்க்காடு மாவட்டம், செங்கம் வட்டத்தில் உள்ள தாமரைப் பாக்கம் என்ற ஊரில் கல்வெட்டு ஆய்வு நடத்தப்பட்டது. இவ்வூர் கல்வெட்டுகளில் '' திருத் தாமரைப் பாக்கம் '' என்று குறிக்கப்பட்டுள்ளது. பெயருக்கு ஏற்ப இவ்வூர் சிறந்து விளங்குகிறது. இங்கு எடுப்பிக்கப்பட்டுள்ள திரு அக்னீசுவரர் கோயில் சோழர் காலப் பாணியில் அமைந்துள்ளது. கோயிலில் காணப்படுகின்ற சிற்பங்கள் மிகவும் எழில் வாய்ந்தவைகளாக விளங்குகின்றன. முப்பது தமிழ்க் கல்வெட்டுகள் இங்கிருந்து படி எடுக்கப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுகளில் இரண்டு மிகவும் சிறப்பான செய்தியினை நமக்குத் தெரிவிக்கின்றன. இவைகள் சோழ மன்னன் மூன்றாம் குலோத்துங்கனின் 10-வது ஆட்சியாண்டில் (கி.பி. 1188-ஆம் ஆண்டு) பொறிக்கப்பட்டனவாகும்.

முதல் கல்வெட்டில் சோமனான பிரிதிகங்கன் என்பாருடைய தந்தை கூத்தாடும் தேவரான பிரிதிகங்கர் என்பார் கூத்தாடும் தொழிலில் வல்லவராய் விளங்கினார் என்றும், 'இவர் பள்ளி கொண்ட (இறந்து பட்ட) பொழுது இவருடன் பாடும் தொழிலில் வல்ல பெண் ஒருத்தியும் பள்ளி கொண்டாள் என்றும், இவள் பள்ளி கொண்டதால் இவளுடைய குடும்பத்திற்கு ஏற்பட்ட வருத்தத்தையும், இழப்பையும் போக்குவதற்கு இவளுடைய சந்ததியினருக்கு நிலம் கொடையாக அளிக்கப்பட்டது என்றும் அறிய முடிகிறது. இக் கல்வெட்டு இறந்தவரின் குடும்பத்துக்கு நிலம் கொடையாக அளிக்கப்பட்டதைத்தான் தெரிவிக்கிறது.

ஆனால்; சில சமயங்களில் பள்ளி கொண்டவர்களுக்கு அவர்கள் நினைவாகப் பள்ளிப்படை அமைத்தலும் உண்டு. சிறந்த அரசர்கள் பள்ளி கொண்ட பொழுது அவர்கள் நினைவாக நிறுவப்படும் நினைவுச் சின்னத்திற்குப் பள்ளிப்படை என்று பெயர். இந்தப் பழக்கம் தமிழகத்தில் இருந்து வந்திருக்கின்றது. சோழர்கள் காலத்தில் கோயில்கள் பள்ளிப்படையாக எடுப்பிக்கப்பட்டன.

முதலாம் பராந்தகனின் தந்தையான முதலாம் ஆதித்தன் என்பவர் பள்ளிகொண்ட பிறகு, அவரது நினைவால் பள்ளிப்படையாகத் தொண்டை மாநாட்டில் ஆதி ஈசுவரர் கோயில் பராந்தகனால் எடுப்பிக்கப்பட்டது. இதைப் போலவே ஆற்றூரில் பள்ளி கொண்ட அரிஞ்சயனுக்காக முதலாம் இராசராசன் மேல்பாடி என்ற ஊரில் அரிஞ்சிகை ஈசுவரர் கோயிலை எடுப்பித்தான்.

இங்குப் பள்ளி கொண்ட பாடும் பெண்ணுக்கு நிலம் அளிக்கப்படுகிறது இந்த நிலம் 'பதினறு சாண் கோலால், அளந்து விடப்பட்ட ஒரு வேலியாகும் (இருபது மா). இதை இவளுடைய சந்ததி உள்ள வரை ஆண்டு அனுபவித்துக் கொள்ள வேண்டியது. இந்த நிலத்திற்கு சோமன் பிரிதிகங்கனுடைய வழிமுறையைச்சார்ந்தவர்கள் தீங்குச் செய்ய நினைத்தால் அவர்கள் எத்தகைய பாவத்தைச் செய்தவர்கள் ஆவார்கள் என்பதைக் கல்வெட்டு மிகவும் அழகாகக் குறிப்பிடுகிறது.

கணவன் இறந்துபட்ட பொழுது மனைவியும் உயிர் நீத்தல் (உடன்கட்டை ஏறுதல்) வேண்டும் என்ற பழக்கம் தமிழ் நாட்டில் இருந்து வந்திருக்கின்றது. இலக்கியங்களில் ஒரு சில இடங்களில் இதைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

இதைப் போலவே சுந்தர சோழனின் பட்டத்தரசி வானவன் மாதேவி என்பவள் மன்னன் இறந்த பொழுது அவன் இழப்பைத் தாங்க மாட்டாதவளாய்த் தீப் பாய்ந்தாள் என்பதை நம்மால் காண முடிகிறது.

கணவனுடன் மனைவி உயிர் நீத்தலை வேண்டுமானால் முறையாகக் கொள்ளலாம். ஆனால் இங்குப் பேசப்படுகின்ற கூத்தாடும் தொழிலில் வல்ல பிரிதிகங்கன் என்பவருடன் பாடும் தொழிலில் வல்ல பெண் ஒருத்தி பள்ளி கொண்டது(உடன்கட்டை ஏறியது) மிகவும் சிறப்புடையதாகும்.

இதே அரசனுடைய காலத்தைச் சார்ந்த மற்றொரு கல்வெட்டு, கூத்தாடும் பிரிதி கங்கருடன் ஆடும் தொழிலில் வல்ல ஆழ்வார் ஒருவரும் இறந்துபட்டதைக் குறிக்கிறது. கூத்தாடும் தொழிலில் வல்ல பிரிதிகங்கருடன் பாடும் பெண்ணும், ஆடலில் சிறந்த ஆழ்வாரும் பள்ளி கொண்ட காரணத்தை நோக்கும் பொழுது நமக்கு உணர்ச்சி மேலோங்குகிறது. கூத்தாடுதல், பாடுதல், ஆடுதல் போன்ற மூன்றும் ஒன்றுக் கொன்று தொடர்புள்ள தொழில்களாகையால் ஏற்பட்ட உறவு காரணமாகவோ, அல்லது அவர்பால் ஏற்பட்ட அன்பின்பெருக்காலோ அவருடன் பள்ளி கொண்டிருக்கக் கூடும். இறந்துபட்டஆழ்வார்க்கு அளிக்கப்பட்ட நிலம் 'பதினறு சாண் கோலால்' அளந்து விடப்பட்டது என்பதை நோக்கும் பொழுது மூன்றாம் குலோத்துங்கனின் ஆட்சிக் காலத்தில் நிலத்தை அளக்கும் பொதுஅளவு கோலாக இது நிலவியிருக்கிறது என்பதை நம்மால் உணர முடிகிறது.

எனவே கல்வெட்டுகளின் வாயிலாக ஒரு நாட்டின் நாகரிகத்தையும், சமூகத்தில் நிலவிய பழக்க வழக்கங்களையும், அளிக்கப்பட்ட கொடை முறைகளையும், நாட்டில் நிலவிய அளவை முறைகளையும் நம்மால் காண முடிகிறது. இத்தகைய காட்சிகளைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடியாகக் கல்வெட்டுகள் விளங்குகின்றன.



நெற்பயிரையும் களையையும் வேற்பிரித்தறிவது கடினமானதால், நாங்கள் களையை மட்டும் ஒழிக்கும்
ஸ்டாம் F-34
தயாரித்திருக்கிறோம்

களையைப் பிய்த்தெடுக்கும்போது நிறைய நெற்பயிர்களும் பிய்த்து வருகின்றன அல்லவா! மேலும், கையால் பிய்த்தெடுப்பது சிரமமான காரியம். நிறைய சமயம் விரயமாகிறது. களையை அறவே ஒழிக்கவும் முடியாது. ஆகவே புது வழியைப் பின்பற்றி களைகொல்லியான ஸ்டாம் F-34 தெளியுங்கள். அது நெற்பயிர்களுக்கு ஒரு கெடுதலும் விளைவிக்காமல் களையை மட்டுமே ஒழிக்கிறது. இதன் பயனாக நெற்பயிர் அதிக ஆரோக்கியமானதாகச் செழித்து வளரும். உங்கள் வருவாயும் பெருகும்.

ஸ்டாம் F-34 — குறைந்த செலவில் துரிதமாக களையை மட்டும் ஒழிக்கும் அற்புத களைகொல்லி!




பம்பாய் 25, இந்தியா
STAM F-34 என்ற பெயரும்,



நம் நாட்டில் தாவரங்களையும், தாவர இனப் பெருக்கத்திற்கான தண்டுகள், கிழங்குகள், பதியங்கள், ஒட்டுகள், ஆகியவற்றையும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எடுத்துச் செல்வதற்குச் சில ஒழுங்கு முறைகள் உள்ளன என்பது பலருக்குத் தெரியாது. உலகமெங்கணும், வேகத்திலும், போக்குவரத்தின் வகையிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் காரணமாக அனைத்து நாட்டுப் பயணமும், வாணிபமும் பெருமளவில் பெருகியுள்ளன. இதன் காரணமாக ஒவ்வொரு நாடும்—அறிந்ததும், அறியாததுமான—தீங்கு விளைவிக்கக் கூடிய பல்வேறு பூச்சிகள், நோய்கள் ஆகியவைகளின் தாக்குதலுக்கு இலக்காகின்றன. அந்தப் பூச்சிகளும், நோய்களும் மனித இனத்தையும், கால்நடைகளையும் தாக்குவதுடன், பல்வேறு வகையான தாவரங்களையும், உணவு, நார், மற்றும் மதிப்பு வாய்ந்த பொருள்கள் அல்லது நாட்டின் முன்னேற்றத்திற்கும், செழிப்பிற்கும் உதவக் கூடிய பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள் ஆகியவைகளைக் கொடுக்கக் கூடிய தாவரப் பொருள்களையும் தாக்கிப் பாழ்படுத்துகின்றன. அவற்றுள் சில களைகளும், நோய்களும், பூச்சிகளும் புதிய பகுதிகளில் புகுந்து, ஆங்காங்கே நிலைத்து நின்று தொடர்ந்து தீங்கு விளைவித்து வருவதற்குச் சில ஆதாரங்களும் காணக் கிடக்கின்றன.




தென் அமெரிக்காவிலிருந்து வந்த 'லாண்டானு' (Lantana), 'ஆகாயத் தாமரை' அல்லது 'வெங்காயத் தாமரை' (Water Hyacinth) எனப்படும் களைகள் இந்தியாவில் வேளாண்மை உற்பத்தியை வெகுவாகப் பாதித்து வருகின்றன.

வாழையின் முடிக் கொத்து நோய் (Bunchy top disease of Banana) ஒரு வகை கருநச்சு நுண்ணுயிரினல் (Virus) ஏற்படுகிறது. இந்த நோய் ஒரு வகைப் பூச்சியினல் பரவுகிறது. இந்நோய் 1940-ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து கேரளாவிற்கு வந்தது. 1943-ஆம் ஆண்டிலேயே கேரள மாநிலத்தில் கோட்டயம் பகுதியில் சில நூறு ஏக்கர்களில் இந்நோய் பரவி விட்டது.

கேரளா, ஒரிசா, மேற்கு வங்காளம், அசாம் ஆசிய மாநிலங்களுக்கு 4கோடி ரூபாய் நட்டத்தை முடிக்கொத்து நோய் ஏற்படுத்துகிறது. அண்மைக் காலத்தில் கேரளாவிலிருந்து கட்டுப்பாடின்றி, வாழைக் கன்றுகளை இறக்குமதி செய்து வந்ததன் காரணமாகத் தமிழ்நாட்டிலும் முடிக்கொத்து நோய் புகுந்து விட்டது.

உருளைக் கிழங்கில் 'வார்ட்' (Wart) எனப்படும் நோய் மேற்கு வங்காளத்தில் 'டார்ஜிலிங்' மாவட்டத்தில் 1952-ஆம் ஆண்டில் முதன் முதலில் காணப்பட்டது. இந்நோய் 'ஹாலந்து' (Holland) நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக் கிழங்கு மூலமாக இந்தியாவில் பரவியது. பத்தாண்டுக் காலத்தில், அதாவது 1962-ஆம் ஆண்டிலேயே, இந்நோய் ஏறத்தாழ 2,500 ஏக்கர் பரப்பில் பரவிவிட்டது. சமீப காலத்தில் நேபாள நாட்டிலும், இந்நோய் பரவியுள்ளதாகத் தெரியவருகிறது. இக்கொடிய நோய் மற்ற மாநிலங்களில் பரவுவதைத் தடுப்பதற்காக, இந்திய அரசின் தீங்கு விளைவிக்கும் பூச்சிகள், பயிர்ப்பூச்சிகள் சட்டம் 1914-இன் படி (Destructive Insects and Pests Act, 1914 of Government of India) மேற்கு வங்காளத்திலிருந்து உருளைக் கிழங்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்குத் தடை விதிக்கப்பட்டது.

உருளைக் கிழங்குச் செடியைத் தாக்கும் 'பொன்னிற நூற்புழுக்கள்' (Golden Nematode) முதன் முதலில் 1961-ஆம் ஆண்டில் நீலகிரியில் தோன்றின. 'கிரேட் ஸ்காட்' (Great Scot) என்னும் ஒருவகை உருளைக் கிழங்குகளை விதைக்காக, ஸ்காட்லாந்திலிருந்து (Scotland) பெருமளவில் இறக்குமதி செய்ததன் மூலமாக பொன்னிற நூற் புழுக்கள் இந்தியாவில் புகுந்துவிட்டன. அண்மையில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வு (Survey) மூலமாக உதகமண்டலத்தைச் சுற்றிலும் உள்ள 2,000 ஏக்கருக்கும் மேற்பட்ட பரப்பில் பொன்னிற நூற்புழுக்கள் பரவியுள்ளன என்பது தெளிவாகிறது.

இக்கொடிய புழுக்களை அறவே ஒழிக்க வேண்டுமானல்ஏக்கருக்கு ரூபாய் 3,000 முதல் ரூபாய் 4,000 வரை செலவிட வேண்டியுள்ளது. இந்திய—ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், இப்புழுக்களை அழிப்பதற்காக மேற்கு ஜெர்மனி அரசாங்கம் 'டாசனிட்' (Dasanit) என்னும் நூற்புழுக் கொல்லி மருந்தை இலவசமாக வழங்கி வருகிறது.

ஆப்ரிக்காவிலிருந்து நம் நாட்டிற்கு வந்து சேர்ந்த ஜெயின்ட் ஆப்ரிக்கன் ஸ்நெயில் (Giant African Snail) என்னும்



ஒருவகை நத்தை, சென்னை நகரிலும், கேரளா, ஒரிசா, அசாம் ஆகிய மாநிலங்களிலும் சாகுபடி செய்யப்படும் காய்கறிச் செடிகளைப் பழாக்கி வருகின்றன.

ஆப்பிள் மரத்தில் காணப்படும் 'சான்ஜோஸ் ஸ்கேல்' (Son Jose Scale) எனப்படும் செதில் பூச்சிகளும் இறக்குமதியின் மூலமாக இந்தியாவில் புகுந்தவையே என்பது குறிப்பிடத் தக்கதாகும். இப்பூச்சிகள் தற்பொழுது ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப், இமாசலப் பிரதேசம், உத்தரப்பிரதேசம், மேற்கு வங்காளம், அசாம், ஒரிசா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் காணப்படுகின்றன. ஆப்பிள் மரமின்றி, இருநூறுக்கும் மேற்பட்ட பழ மரங்கள், செடிகள், வண்ணப் பூச்செடிகள் ஆகியவை இப்பூச்சிகளை உயிர்வாழ வைக்கின்றன என்பதால்இவைகளை கட்டுப்படுத்துவதென்பது எவ்வளவு சிரமமான செயல் என்பது விளங்குகிறது. இச்செதில் பூச்சிகளைப் போலவே 'உல்லி ஏபிட்' (Woolly Aphid) எனப்படும் உரோமம் போன்ற வளர்ச்சி கொண்ட அசுவணிப் பூச்சிகளும் ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப், இமாசலப் பிரதேசம் உத்தரப் பிரதேசம், தமிழ் நாடு ஆகிய மாநிலங்களில் சாகுபடி செய்யப்படும் ஆப்பிள் மரங்களில் தோன்றிச் சேதம் விளைவிக்கின்றன. இதுவும் இறக்குமதியின் மூலம் இந்தியாவில் புகுந்த பூச்சி வகையேயாகும்.

குறுகிய காலத்தில், மிகு பயன் தரவல்ல வெளிநாட்டு ரகங்களைப் பெரும் பரப்பில் பயிரிட வேண்டும் என்ற நோக்குடன் பெருமளவு விதைகள் தற்போது இந்தியாவில் இறக்குமதி செய்யப்படுகின்றன. புத்தம் புதிய ரகங்களைப் பயிரிட வேண்டும் என்ற பேரவாவுடன், கொடிய பூச்சிகளும் நோய்களும் அவ்விதைகளுடன் சேர்ந்து இந்தியாவில் புகுந்து விடக் கூடாதென்பதற்காக, முன்னெச்சரிக்கையான சில தடுப்பு நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும் என்ற பேரவா இன்று நம்மிடையே எழ வேண்டும். ஏனெனில், இறக்குமதியாகும் விதைகளின் மூலம் பல்வேறு கொடிய நோய்களும், பூச்சிகளும், களைகளும் இந்தியாவில் புகுந்து நம் நாட்டின் உணவு உற்பத்தியைப் பெரிதும் சீர்குலைத்து விடக்கூடும்.

எடுத்துக் காட்டாகச் சொல்ல வேண்டுமானால், கோதுமை விதை இறக்குமதி செய்யப் படுவதை எடுத்துக் கொள்ளுங்கள். கோதுமை விதை 55 வகையான பேக்டீரியல் மற்றும் பூஞ்சாள நோய்களைப் (Bacterial and Fungal diseases) பரப்பக்கூடியது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அந்நோய்களில் சில கோதுமைப் பயிரை மட்டுமல்ல, மற்றத் தாவரங்களையும் தாக்கக் கூடியவையாகும்.

அது போலவே, ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் விதை உருளைக் கிழங்குகள், 'எக்ஸ்' (X) 'ஒய்' (Y) என்ற இரு கடும் நச்சு நுண்ணுயிர்களைக் கொண்டு வருகின்றன. இவ்விரு நுண்ணுயிர்களும் உருளைக் கிழங்குச் செடிகளைத் தாக்குவதில்லை. ஆனல் அவைகள் வெகு வேகமாகக் பெருகிப் புகையிலைச் செடிகளைத் தாக்கி, முழு அளவில் சேதம் விளைவிக்கின்றன.

எனவே, எந்த முன்னேறும் நாடும், எல்லா வகையான தாவரங்களையும், தாவரப் பொருள்களையும் கட்டுப்பாடின்றி இறக்குமதி செய்வதையும் அல்லது அவைகளைத் தங்கள் நாட்டு எல்லைக்குள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கட்டுப்பாடின்றிக் கொண்டு செல்வதையும் அனுமதிக்காது. இறக்குமதி செய்யப்படும் நாற்றங்கால் செடிகள், பதியன்கள், கிழங்குகள், வேர்கள் ஆகியவை மூலமாகவும் அல்லது பழங்கள், காய்கறிகள், கொட்டைகள், விதைகள், இலைகள், வைக்கோல் முதலிய பல்வேறு பொருட்களின் மூலமாகவும் தாவரப் பூச்சிகளும், நோய்களும் பரவிப் பெருகுவதால் அவைகளை இறக்குமதி செய்வதற்குச் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாதது என்பதை உலக நாடுகள் உணர்ந்தன. இதன் காரணமாகவே, உணவு வேளாண்மை நிறுவனத்தின் (Food and Agriculture Organisation) பேருதவியுடன், தென்மேற்கு ஆசியாவிற்கும், பசிபிக் மண்டல நாடுகளுக்குமான பயிர்ப் பாதுகாப்பு உடன்படிக்கை 1956-ஆம் ஆண்டில் ஏற்பட்டது. அதே ஆண்டில் ஆஸ்திரேலியா, இலங்கை, ஐக்கிய அரசு (U.K.), லாவோஸ், நெதர்லாந்து இந்தோனிசியா, போர்ச்சுகல், வியட்நாம் ஆகிய நாடுகளுடன் இந்தியாவும் இந்த உடன்படிக்கையில் பங்கேற்றது.

நமது இந்திய அரசாங்கம் அந்த உடன்படிக்கையின் படி தாவரங்கள், தாவரப் பொருள்களின் பூச்சிகளும், நோய்களும் இந்தியாவில் புதிதாகப் புகுவதையும், பரவுவதையும் தடுப்பதற்குரிய பொதுவான தீவிர நடவடிக்கைகளை எடுப்பதற்கும், அவைகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய முறைகளை ஊக்குவிக்கவும், உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள சட்டப் பூர்வமான முறைகளை மேற்கொள்வதற்கும் ஒப்புக் கொண்டது. மேலும் இவ்வுடன்படிக்கையின்படி இந்திய எல்லைக்குள் முழு அளவில் செயல்பட எல்லா வகையான பொறுப்புகளையும் ஏற்றுக் கொள்ள நமது இந்திய அரசாங்கம் ஒப்புக் கொண்டது.

இந்தியாவில் தாவரப் பூச்சிகளும், நோய்களும் புகுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற நன்நோக்குடன்-எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவாகவும், இந்தியாவின் சக்திக்கும் ஏற்ப-ஓர் அரசாங்க பயிர்ப்பாதுகாப்பு நிறுவனத்தை நிறுவுவதற்குத் தேவையான நிதியை ஒதுக்கிட இந்திய அரசு ஒப்புக் கொண்டது. தாவரங்களும், தாவரப் பொருள்களும் இந்தியாவில் இறக்குமதி செய்யப் படுவதை ஒழுங்குபடுத்த இந்திய அரசு முழு அதிகாரத்தைப் பயன்படுத்தவும் ஒப்புக் கொண்டது. அதன்படி இந்திய அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

(அ) தாவரங்கள் அல்லது தாவரப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவதற்குக் கட்டுப்பாடுகளையோ அல்லது தேவையான முறைகளையோவிதிக்கலாம்.

(ஆ) குறிப்பிட்ட தாவரங்களையோ அல்லது தாவரப் பொருட்களையோ இறக்குமதி செய்வதைத் தடைபடுத்தலாம். அல்லது அவைகளின் குறிப்பிட்ட இறக்குமதி முழுவதையுமே தடைப்படுத்தலாம்.

(இ) தாவரங்களும் தாவரப் பொருட்களும் அடங்கிய குறிப்பிட்ட இறக்குமதியைப் பார்வையிடலாம் அல்லது அவைகளை இறக்குவதற்கு அனுமதியளிக்காமல் நிறுத்தி வைத்துவிடலாம்.

டாக்டர் எஸ்.என்.பானர்ஜி
இந்திய அரசின் பயிர்ப் பாதுகாப்பு அறிவுரை வழங்குநர்

(ஈ) குறிப்பிட்ட இறக்குமதியில் உள்ள பூச்சிகளையும், நோய்களையும் தடுப்பு மருந்து தெளித்து அழிக்கலாம். அல்லது குறிப்பிட்ட இறக்குமதிக்கு அனுமதி மறுக்கலாம். குறிப்பிட்ட இறக்குமதிக்கு மருந்து தெளிக்கும்படி கட்டாயப்படுத்தலாம். அல்லது அவைகளை அறவே அழித்துவிடலாம்.

இந்தியாவில், பூச்சிகளும், நோய்களும் புகுவதைத் தடுக்க 1914-ஆம் ஆண்டு முதலே, சட்ட அடிப்படையான நடவடிக்கைகளை இந்தியஅரசு மேற்கொண்டு வருகிறது. அனைத்து நாட்டு வாணிபம், போக்குவரத்து நடைபெற்று வரும் முக்கியத் துறைமுகங்களிலும், விமான நிலையங்களிலும் தாவரப் பூச்சி நோய்த்தடுப்புப் பணிகள், இந்திய அரசினால் மேற்கொள்ளப்படுகின்றன. பம்பாய், கல்கத்தா, கொச்சி, சென்னை, இராமேசுவரம், தூத்துக்குடி, விசாகப் பட்டினம், பவநகர் முதலிய துறைமுகங்களிலும், அமிர்தசரஸ், பம்பாய், திருச்சிராப் பள்ளி, சென்னை கல்கத்தா, புதுடில்லி முதலிய விமான நிலையங்களிலும் நிறுவப்பட்டுள்ள தாவரப் பூச்சி, நோய்த் தடுப்பகங்களில் (Plant Quarantine Stations ) தாவரங்களையும், தாவரப் பொருட்களையும் பார்வையிடவும், அவைகளுக்குத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளவும் வசதி உள்ளன.

ஆப்கானிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பழங்களை, இந்திய-பாகிஸ்தான் எல்லையில் உள்ள 'ஹுசைனிவாலா' (பெரோஸ்பூர்) வில் நிறுவப்பட்டுள்ள தாவரப் பூச்சி நோய்த் தடுப்பகம் மற்றும் புகைபோடும் நிலையத்தில் (Plant Quarantine and Fumigation Station) பார்வையிடப்பெற்று புகை போடப்படுகிறது. நேபாளத்திலிருந்து இறக்குமதியாகும் உருளைக் கிழங்குகளை இந்திய-நேபாள எல்லையில் உள்ள 'சுக்கியா போக்ரி' (டார்ஜிலிங்) என்னுமிடத்திலிருக்கும் தாவரப் பூச்சி நோய்த் தடுப்பு நிலையத்தில் பார்வையிடப்படுகிறது.

நடைமுறையில்உள்ள எல்லாத் தாவரப் பூச்சி நோய்த் தடுப்புச் சட்டங்களும், புதிய பகுதிகளில் பூச்சிகளும், நோய்களும் நுழைவதையும், பரவுவதையும் தடுப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. எனவே இக் குறிக்கோளினை எய்திட மேற்கொள்ளப்படும் முறைகள் தொடர்புடைய பூச்சி அல்லது நோயின் வகையுடன் நேரடித் தொடர்புடையதாக உள்ளன.

பொதுவாக எல்லாத் தாவரங்களையும், தாவரப் பொருள்களையும் குறிப்பிட்ட துறைமுகங்களின் மூலமாகவே இறக்குமதி செய்யப்பட வேண்டும். தற்பொழுது பம்பாய், கல்கத்தா, கொச்சி, பவநகர், இராமேசுவரம், சென்னை, நாகப்பட்டினம், தூத்துக்குடி, விசாகப்பட்டினம் முதலிய துறைமுகங்களின் மூலமாகவே இறக்குமதி செய்யப்படுகின்றன. அத்துறைமுகங்களில் இறக்குமதியாகும் தாவரங்களையும், தாவரப் பொருட்களையும் பார்வையிட்டுத் தேவையானால், தகுந்த தடுப்புச் சிகிச்சைகளும் செய்யப் படுகின்றன. அவைகள் தாவர நலச் சான்றிதழுடன் (Phytosanitary Certificate ) வந்திருந்தால்தான் அவ்வித துறைமுகங்களில் இறக்குமதி செய்யப்படும்.

விமானம் மூலமாகத் தாவரங்களை இறக்குமதி செய்ய வேண்டுமானால், இந்திய அரசின் பயிர்ப் பாதுகாப்பு அறிவுரை வழங்குநர் ( Plant Protection Advisor to the Government of India ) அவர்களிடமிருந்து அனுமதிச் சீட்டுப் ( Permit ) பெற வேண்டும். நிறையத் தாவரங்களையும், தாவரப் பொருட்களையும் விமானம் மூலமாக இறக்குமதி செய்ய, மேற் குறிப்பிட்டவரிடமிருந்து சிறப்பு அனுமதிச் சீட்டுப் ( Special Permit ) பெற்றிருக்க வேண்டும். அனுமதிச்சீட்டுடன், பச்சை, ஆரஞ்சு வண்ணக் கலர் விவரச் சீட்டுகள் ( Tag ) வழங்கப்படுகின்றன. அனுமதிச் சீட்டையும், விவரச் சீட்டையும் பொருட்களைப் அனுப்புநருக்கு அனுப்ப வேண்டும். தாவர நலச் சான்றிதழ், அனுமதிச் சீட்டு, விவரச் சீட்டு ஆகியவைகளைத் தாவரங்கள் அல்லது தாவரப் பொருட்களுடன் அனுப்பப்பட வேண்டும். விவரச்சீட்டு மூலமாக உடனுக்குடன் தாவரப்பூச்சி, நோய்த் தடுப்பகப் பணியாளர்களால், பல்வேறு தாவரப் பூச்சி, நோய்த் தடுப்பகம், மற்றும் புகை போடும் நிலையங்களில் தாவரப் பூச்சிகள் அல்லது நோய்களைக் கண்டுபிடித்து, சோதனை செய்து, தேவையானால் அவைகளுக்குத் தடுப்புச் சிகிச்சை செய்து, அவைகள் மனநிறைவு அளிக்கும் வகையில் இருப்பின் உரியவர்களுக்கு வழங்க அனுமதியளிக்கப்படுகின்றது.

## வெண்பாப் போட்டி-45.

முறிப்படி :

சிக்கலைகள் கற்போம் சிறந்து.

**முடிவு நாள்: 1-11-1972.**

பரிசு : ஓராண்டு "தமிழரசு" அன்பளிப்பு.
வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:
ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு : அஞ்சலட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.





# காலத்திற்கேற்ற வகையில் காவிரியின் சீரமைப்பு

சென்ற இதழ்த் தொடர்ச்சி

பாசன முறையில் ஏற்பட்ட சிக்கல்களைத் தீர்க்க இன்றைய அரசு என்ன செய்தது?

இச்சிக்கல்களைத் தீர்க்கக் காவிரி கழிமுகப்பகுதியில் உள்ள பழைய பாசன முறையைப் புதுப்பிக்க ஒரு தனித் திட்டம் (A Master Plan) தீட்டப் பெற்றது. சீரிய முறையிலும், சிக்கனமாகவும் பாசனம் செய்யவும், விருப்பத்திற்கேற்பப் பாசனத்தைக் கட்டுபடுத்தவும், மழையின்மூலம் காவிரியில் வரும் நீரையும், காவிரி கழிமுகப் பகுதியில் உள்ள நில நீரையும் (Ground water) ஒருங்கிணைத்துப் பயன் படுத்திக் கொள்ளவும், தஞ்சை மாவட்டக் கழிமுகப் பகுதியில் உள்ள பாசன அமைப்பு முறைகளைக் காலத்திற்கேற்ற வகையில் சீரமைப்புச் செய்ய இத்திட்டம் வகை செய்கிறது.''

'' காலத்திற்கேற்ற முறையில் காவிரியைச் சீரமைப்புச் செய்யும் திட்டத்தின் கீழ் என்னென்ன பணிகள் அடங்கியுள்ளன?''

''காலத்திற் கேற்ற வகையில் காவிரியைச் சீரமைப்புச் செய்யத் திட்டத்தில் 6 முக்கியப் பணிகள் அடங்கியுள்ளன. அவற்றில் முதலாவது பணி, காவிரி நதியில் வரும் வெள்ளத்தைத் தடுத்து நிறுத்த, கல்லணையைப் பலப் படுத்துவதாகும்.''

''இரண்டாவது பணி காவிரி கழிமுகப் பகுதியில் பாயும் ஆறுகளை மேம்படுத்துவதாகும். இப் பணியின் கீழ் 3 வகையான வேலைகள் மேற்கொள்ளப்படும். இப் பணியின் கீழ் முதலாவதாகத் தேவையான இடங்களில்ஆற்றின் கரைகளுக்கு வலிவூட்டுவதுடன் கரையின் உயரத்தையும் உயர்த்தப்படும். இரண்டாவதாக, ஆறுகளில் வாய்க்கால்களில் அதிக அளவு நீர் கசிந்து விடும் ( seepage ) பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அப்பகுதிகளிலெல்லாம் கான்கிரீட் பலகைகளைக் கொண்டு தளம் அமைத்துத் தண்ணீர் கசிவதைத் தடுத்து நிறுத்தப்படும். மூன்றாவதாக, முக்கிய ஆறுகள் கிளை ஆறுகளின் குறுக்கே பொறி மதகுகள் அமைப்பதுடன், மொட்டைஅணைகளைப் (bed dams) பொறி மதகு கொண்ட அணைகளாக மாற்றப்படும்.''

''மூன்றாவது பணி, 'எ' வகுப்பு வாய்க்கால்களைத் தேவையான இடங்களில் சீரமைத்துத் தரப் படுத்துதல், பிரிவு அணை, மதகுகள், சரிவுச்சுவர்கள் ஆகியவைகளைக் கட்டுதல் மூலமாக மேம்படுத்துதலாகும்.''

''நான்காவதாக 50 ஏக்கர் பாசனப்பரப்பு வரை செங்கற்களால் அல்லது குழாய் மூலம் மதகு அமைப்பதுடன், தேவையான இடங்களில் வாய்க்கால்களை நேர்படுத்தி, தரப்படுத்தித் தூர் எடுக்கப்படும்.''

ஐந்தாவதாகப் பாசனம், வடிகால் ஆகிய இரு பணிக்காகவும் பயன்பட்டு வரும் ஆறுகளுக்கு அதிக அளவு நீர் வழங்கப்படும்.

ஆறாவதாகக் கீழ்க்கொள்ளிடம் அணைக்கட்டு மேம்படுத்தப் படும். இவைகளுடன் வேறுசில முக்கியப் பணிகளும் இத்திட்டத்தின் கீழ் அடங்கியுள்ளன.''

'' அவைகளையும் கூறு தம்பி?''

'' ஐயா, தற்பொழுது காவிரி கழிமுகப் பகுதியில் ஏறத்தாழ 40,000 ஏக்கர் சாகுபடி நிலம், 20 நாள் முதல் 5 மாதம் காலம் வரை, வெள்ளத்தில் அமிழ்ந்து விடுகிறது. இதனால் ஏற்படும் சேதம் அதிகமாக உள்ளது. அதுவும் குறிப்பாகச் சீர்காழி வட்டத்தில் வடிகால் வசதி மிகவும் குறைவு. வெண்ணாற்றுப் பாசனப் பகுதியில் உள்ள அதிக அளவு தாழ்ந்த நிலங்கள் வடகிழக்குப் பருவமழை காலத்தில் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இந்நிலைமையைப் போக்க வேண்டுமென்பதற்காகத்தற்பொழுதுள்ள வடிகால் ஆறுகளை மேம்படுத்தவும், வெள்ளத்தை வேகமாகவும் விரைவாகவும் வடியச் செய்து வெள்ளத்தால் அமிழ்ந்த நிலங்களை மீட்கவும், வளைந்து வளைந்து செல்லும் வடிகால் வாய்க்காலில் தேவையான இடங்களில்நேருக்கு நேராக வெட்டி விடவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதிக அளவு வெள்ளம் காவிரியில் புகுவதைத் தடுக்கும் நோக்குடன் மேல் அணைக்கட்டில் காவிரியின் குறுக்கே, வெள்ளத் தடுப்பு அணை (barrage) கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.''

'' நில நீர் உபயோகிக்கப் படும் என்று குறிப்பிட்டாயே ! அதுவும் காவிரி சீரமைப்புத் திட்டத்தில் அடங்கியதா ?''

'' ஆமாம் ! குறைவான தண்ணீர் இருப்பது காரணமாக மேட்டூர் அணை திறந்து விடப் படுதல் காலங் கடந்த போதிலும் காலத்தில் நாற்று விடுவதற்காக மழையினால் கிடைக்கும் மேல் நீரையும், நில நீரையும் ஒருங்கிணைத்து உபயோகிப்பதற்காகவும், காவிரி கழிமுகப் பகுதியில் 5,000 முனைக் குழாய்களும் (Filter points), 1,000 ஆழ் குழாய்க் கிணறுகளும் அமைக்கப் படும். இது காவிரி சீரமைப்புத் திட்டத்தில் ஒரு சிறப்பு அம்சமாகும். நிலவங்கிகள் வழங்கும் கடன் தொகையைக்கொண்டு உழவர்களே வடிமுனைக் குழாய்களை அமைத்துக் ' கொள்ள வேண்டும். இத்திட்டத்தின் ஓர் அங்கமாக 1,000 ஆழ் குழாய்க் கிணறுகள் அமைத்துக்கொடுக்கப் படும். ''

''நவீனப் பாசன முறை என்று முன்பு குறிப்பிட்டாயே ! அது என்ன ? அதுவும் காவிரி சீரமைப்புத் திட்டத்தில் இடம் பெறுகிறதா ?''

'' தஞ்சை மாவட்டத்தில் ஒரு வயலிலிருந்து, மற்றொரு வயலுக்கு என்ற முறையில்தானகவே பாசனம் நடைபெற்று வருகிறது. இதனால் தண்ணீர் சேதமாகிறது. இம்முறையை மாற்றியமைக்கக் காவிரி சீரமைப்புத் திட்டத்தின் கீழ் ஒரு துணைத்திட்டம் உள்ளது. தஞ்சை மாவட்டத்தில் 'சித்தமல்லி ' என்ற கிராமத்தில், வேளாண்மைத் துறையினரால் ஒவ்வொரு வயலுக்கும்தனித்தனியாகப் பாசன வாய்க்காலும், வடிகால்வாய்க்காலும்அமைத்துப் பாசனம் செய்யப்பட்ட சோதனைகளிலிருந்து, பாசனநிருவாகத்தில் சிக்கனமும் நற்பயனும் இட்டுவது தெரிய வந்துள்ளது. சித்தமல்லி பாசன முறையைக் காவிரி

சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 3,00,000 ஏக்கர் நிலத்திற்கு விரிவுபடுத்தப்படும். இவ்வாறு காவிரி சீரமைப்புத் திட்டத்தில் பல கூறுகள் அடங்கியுள்ளன.''

'காவிரி சீரமைப்புத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும் ?''

'' தஞ்சை மாவட்டத்தில் பழைய காவிரி கழிமுகப் பகுதி பாசன முறையைக் காலத்திற்கு ஏற்ற வகையில் சீரமைக்கும் திட்டத்திற்கு 49 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப் பட்டுள்ளது.''

'' இத்திட்டத்தின் இன்றைய நிலை என்ன தம்பி ?''

'' காலத்திற்கு ஏற்ற வகையில் காவிரி சீரமைப்புச் செய்யும் திட்ட மதிப்பீடு இந்திய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டது. இத்திட்டம் மைய அரசின் நீர் மின்சார ஆணைக்குழுவின் (Central water and power Commission) ஆய்வில் உள்ளது. இதற்கிடையில் உலகவங்கிக்குழு (world Bank Team) இத் திட்டத்திற்கு உதவ முன்வந்து, காவிரி கழிமுகப் பகுதியைப் பார்வையிட்டு, இத்திட்டத்தை ஆய்வு செய்து வருகிறது. இந்நிலையில் தமிழ்நாடு அரசுக்கும், மைசூர் மாநில அரசுக்கும் இடையே காவிரி நீர் பெறுவதில் தகராறு ஏற்பட்டு விட்டது. தமிழ் நாட்டிற்கும் மைசூருக்கும் இடையே 1892-ஆம் ஆண்டிலும், 1924-ஆம் ஆண்டிலும் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை மீறிக் காவிரியிலும், அதன் கிளை நதிகளிலும் மைசூர் மாநில அரசு ஹேமாவதி, கபினி, ஹரங்கி, யாகாஷி முதலிய பாசனத் திட்டங்களை—இந்திய அரசின் அனுமதி பெறாமலேயே—துவக்கியதனால், இத் தகராறு ஏற்பட்டு விட்டது. இதைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகத் தமிழ் நாடு அரசு, இந்தியத்தலைமை நீதி மன்றத்தில் தொடர்ந்திருந்த வழக்கையும் திரும்பப் பெற்றுக் கொண்டது. இதன் காரணமாகக் காவிரி சீரமைப்புத் திட்டத்தைத் துரிதப்படுத்த முடியவில்லை.''

''நீ கூறுவதைப் பார்த்தால் இத்திட்டம் இன்னும் செயல்படத் துவங்கவில்லை போலிருக்கிறதே !''

'' நீங்கள் நினைப்பது தவறு ஐயா ! மைய அரசின் அனுமதி கிடைக்கவில்லை என்பதற்காகவும், உலக வங்கியின் கடன் உதவி கிடைக்கவில்லை என்பதற்காகவும், இந்நல்ல திட்டத்தைத் தமிழ்நாடு அரசின் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தள்ளிப் போட்டுவிடவில்லை ! 'காலம் பொன் போன்றது கடமை கண்போன்றது' என்பதை நன்கு உணர்ந்துள்ள கலைஞர், காவரி பாசன முறையைச் சீரமைக்கும் திட்டத்தின் கீழ் சில முன்னோடித் திட்டங்களைச் (Pilot Schemes) செயல்படுத்துவதில் தீவிரம் காட்டி வருகிறார்.

தமிழ் நாடு அரசு, முன்னோடித் திட்டங்களின் கீழ் இதுவரை 149 வாய்க்கால்களைச் சீரமைப்புச் செய்ய, ரூபாய் 146 இலட்சம் மதிப்புள்ள திட்டங்களை அனுமதித்துள்ளது. அவைகளின் சீரமைப்பு வேலைகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்ற பாங்கில் நடைபெற்று வருகின்றன. இது போலவே, ரூபாய் 135 இலட்சம் மதிப்புள்ள, 44 வடிகால் திட்டங்களும் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காவிரி கழிமுகப் பகுதியில் உள்ள பாசன வாய்க்கால்களில் உள்ள தூர்களை எடுக்கும் வேலையைக் குடிமராமத்துத் திட்டத்தின் கீழ் உழவர்களே செய்ய வேண்டும். உழவர்கள் குடி மராமத்துத் திட்டத்தில் நாட்டம் கொள்ளாததன் காரணமாகப் பெரும்பாலான வாய்க்கால்களில் மண் மூடிவிட்டது. பொதுப் பணித்துறையினரால் பராமரிக்கப் பட்டு வரும் வாய்க்கால்களில், குடிமராமத்துப் பணிகளை மேற்கொள்வதற்காகத் தமிழ்நாடு அரசு 1971–72-ஆம் ஆண்டில் ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கியது. இத்துடன் தமிழ்நாடு அரசு நின்றுவிட்டதாக எண்ணிவிடாதீர்கள்''.

''நான் அப்படி நினைக்கவில்லை தம்பி ! நாட்டிற்கு நல்லது எனின் அதை விரைந்து செயல்படத் தமிழ்நாடு முதல்வர் கலைஞர் கருணாநிதி தயங்க மாட்டார் என்பது என் நம்பிக்கை ! மேலும் இத்திட்டத்தின்கீழ் என்னென்ன பணிகள் செய்துள்ளனர் என்பதை அறிந்து கொள்ள ஆர்வத்துடன் இருக்கிறேன். சீக்கிரம் சொல் தம்பி.''

'' காவிரி கழிமுகப் பகுதியின் பாசன அமைப்பைப் பராமரிப்பதில் உள்ள சங்கடங்களைத் தவிர்ப்பதற்காகத் தற்பொழுதுள்ள பாசன அமைப்பைப் பழுதுபார்த்துப் புதுப்பிக்கும் விரைவுத் திட்டத்தையும் (Accelerated Programme of repairs to and renavation of the Cauvery Delta Irrigation system) கலைஞர் கொண்டு வந்துள்ளார். இத் திட்டத்தை 1972–73-ஆம் ஆண்டு தொடங்கி நான்காண்டுகளில், 1,298.33 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றத் தமிழ் நாடு அரசு அனுமதியளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் 244 இலட்சம் ரூபாய் செலவிடத் திட்டமிடப் பட்டுள்ளது.

காவிரி கழிமுகப் பகுதியில் வெள்ளக்கட்டுப்பாடு வடிகால் திட்டங்களுக்காக இந்த ஆண்டிற்கு 20.73 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கொள்ளிடம், காவிரி ஆகியவற்றின் கரைகள் எங்கெல்லாம் வலுவிழந்து உள்ளனவோ அங்கெல்லாம் வெள்ளத் தடுப்புத்திட்டத்தின் கீழ் அவைகளை வலுப்படுத்துவதற்காக இந்த ஆண்டிற்கு ரூபாய் 22.35 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



காவிரி கழிமுகப் பகுதியில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்காக ரூபாய் 212 இலட்சம் செலவில் மேல் அணைக் கட்டில், காவிரியின் குறுக்கே தடுப்பு அணை ஒன்று கட்டுவதற்கான செயற்குறிப்பு இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. திட்ட ஆணைக்குழுவின் ஏற்பளிப்புப் பெறப்பட்டவுடன், இப்பணி மேற்கொள்ளப்படும். காவிரி சீரமைப்புத் திட்டத்தினைப் பற்றி எனக்குத் தெரிந்தவைகளைக் கூறி விட்டேன். இனிமேலாவது, கரிகாற் சோழனின் குரலில் தாங்கள் பேசுவீர்கள் என்று நம்புகிறேன். ''

'' சரி தம்பி '' என்று கூறி விட்டு, உடனே அவர் கரிகாற் சோழனின் குரலில் பேசத் துவங்கினார்.

'' தம்பி, என்னை அரசாள விடாமல் முளையிலேயே கிள்ளி எறிந்துவிட எண்ணிய பகைவர்கள், என்னைச் சிறையிலடைத்துச் சிறைக் கோட்டத்திற்கே தீயிட்டனர். சிறையிலிருந்து தப்பி, என் பகைவர்களை வென்று அரசு கட்டிலில் ஏறினேன். என்னை அரசாள விடக் கூடாதென்பதற்காக எத்தனை போராட்டம் தமிழ்நாட்டில் நடந்தது தெரியுமா? என்னை எதிர்த்த சேர, பாண்டிய மன்னர்களை 'வெண்ணி என்னுமிடத்தில்போரிட்டு அவர்களைத் தோற்கடித்தேன். அப் போரில் சேரமான் நெடுஞ் சேரலாதனின் மார்பில் என் அம்பு பாய்ந்து உடலை ஊடுருவி முதுகுப்புறமாக வந்து விட்டது. அதனால், ஏற்பட்ட முதுகுப் புண்ணை, நெடுஞ் சேரலாதன் புறப் புண்ணாகக் கருதி, வெட்கப் பட்டு, வடக்கிருந்து உயிர் துறந்ததை நினைக்கும் பொழுது என் உடல் இன்றும் புல்லரிக்கின்றது. எனக்கு இன்னல் பல கொடுத்துவந்த இருங்கோ வேளை அடக்கினேன். கற்கா, வேள்நாடு, குட்டம், குடம், பூழி தென்பாண்டி நாடு, தொண்டை நாடு ஆகியவைகளை வென்று அவைகளை என் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தேன். தமிழ்நாடு முழுவதும் வென்றபின், வட நாடு நோக்கிப் படையைச் செலுத்தினேன். இமயமலையை அடுத்த வச்சிர நாட்டு மன்னன் நான் படையெடுத்து வருவதைக் கேட்டு, எனக்கு 'முத்துப்பந்தர் ஒன்றைத் திறையாகக் கொடுத்து என்னுடன் நட்பு கொண்டான். மகத நாட்டு மன்னன் எனக்குப் பணியமறுத்துஎதிர்த்துத்தோற்று இறுதியில் பணிந்து, 'பட்டிமண்டபம்' ஒன்றினைத் திறைப் பொருளாகக் கொடுத்தான். அவந்தி நாட்டு மன்னன் என் ஆற்றலை அறிந்து, அஞ்சி, என்னை எதிர்கொண்டு அழைத்துத் தன்னிடமிருந்த மிக உயர்ந்த வாயில் தோரணம் ஒன்றைக் கொடுத்தான். எதிர்ப்பவர் இல்லாது முன்னேறிய என்னை, இமயமலை தடுத்தது. எனவே அம் மலையின் மேல் என் அடையாளச் சின்னமாகிய புலியைப் பொறித்து விட்டு வெற்றி வாகையோடு திரும்பினேன். கடற் படையைச் செலுத்தி ஈழத்தை வென்றேன். ஈழத்திலிருந்து போர்க் கைதிகளைக் கொண்டு வந்தேன். ''

'' தங்கள்வாழ்நாளில், பெரும் பகுதியைப் போர்க்களத்திலேயே கழித்து விட்டீர்கள் போலிருக்கிறது?'



'' இல்லை தம்பி! நான் போர்க்களத்தில் விருப்பம் உள்ளவனல்ல ! நாட்டிற்கு நல்லது செய்ய நினைத்தேன் ! ஆனால் நயவஞ்சகர்கள் எனக்கு எண்ணற்ற தொல்லைகளை அடுக்கடுக்காய்க் கொடுத்து வந்ததால், நான் போராட நேர்ந்தது. போரில் கிடைத்த வெற்றியும் பரிசுப் பொருள்களும் என்னைப் பரவசப் படுத்தியது என்று நினைக்கிறாயா ? இல்லவே இல்லை. என் பகைவர்களை எல்லாம் அடக்கியபின், நான் சுகபோகத்திலே ஈடுபட்டிருப்பேன் என்று நினைக்கின்றாயா ?''

'' இல்லை ! தாங்கள் நாடெங்கும் குளந்தொட்டு வளம் பெருக்கியதாகவும், காடு வெட்டி நாடாக்கியதாகவும், காவிரியின் இரு மருங்கும் பெருங் கரை கட்டியதாகவும் பல புதிய கால்வாய்களை வெட்டுவித்ததாகவும், கல்லணையைக் கட்டிக் காவிரியின் நீரினை வாய்க்கால்களின் வழியே செலுத்தி, உழவுத் தொழிலை விழுமியதாக்கியதாகவும் பழந்தமிழ்ப் பாடல்கள் மூலமாக அறிந்துள்ளேன்!''

'' பழந்தமிழ்ப் பாடல்களைத் தவிர வேறு சான்று இல்லையா?''

'' ஏனில்லை ? ஏறக்குறைய 1,800 ஆண்டுகளுக்கு முன்பே கரிகாற் சோழன் கற்களையும் மண்ணையும் கொண்டு, உள்ளாற்றின் குறுக்கே 1,080 அடி நீளமும், 40 முதல் 60 அடி அகலமும், 15 முதல் 18 அடி ஆழமும் உள்ள பாம்புபோல் வளைந்த அணையைக் கட்டி, உள்ளாறு வழியாகக்கொள்ளிடத்தில் வீணுகச் சென்ற வெள்ளத்தைக் காவிரியில் திருப்பி விட்டதாக திரு எப். ஆர். கெமிங்வே, ஐ.சி.எஸ், (F. R. Hemingway, I.C.S.) அவர்கள் சென்னை மாநில தஞ்சாவூர் மாவட்ட கெசட்டியரின் பகுதி நான்கில், பக்கம் 104-இல் குறிப்பிட்டுள் ளார்.

'' நான் காவிரியின் இரு மருங்கும் கரையெடுத்ததற்கு ஏதேனும் ஆதாரம் உண்டா ?''

''மாடர்ன் ரிவியூ (Modern Review) என்னும் 1955-ஆம் ஆண்டின் புத்தகத்தில், 309–312-ஆம் பக்கங்களில் தெலுங்கு—சோழமன்னர்களின் தாமிரச் சாசனத்தில் கண்டபடி வெள்ளத்தைக் கட்டுப் படுத்துவதற் காகவும், புதிய கால்வாய்களைக் கட்டுவதற்காகவும் காவிரியின் இருமருங்கும் தாங்கள் பெருங் கரையெடுத்ததாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

'' ஈழத்தை வென்று, கொண்டு வந்த கைதிகளைக் கொண்டு என்ன செய்தேன் தெரியுமா ? ''

'' தெரியுமே !, ஈழத்திலிருந்து கொண்டு வந்த கைதிகளைக் கொண்டு காவிரியின் கரையைப் பலப் படுத்தியுள்ளீர்கள். அதற்குக் கைம்மாறாக ஈழத்திற்கு அரிசியும் அனுப்பி வைத்தீர்கள் ! இச் செய்தி பழந்தமிழ் இலக்கியங்கள் மூலமாக தெரிய வருகிறது. அத்தோடு திரு கே.வி. சுப்பிரமணியம் என்பார் எழுதியுள்ள ஆராய்ச்சி நூலிலும் ( T. A. S. III ) பக்கம் 154–155-ல் காணக் கிடைக்கிறது.''



'' இவ்வாறு பலவகையிலும் நீர்வளம் பெருக்கி, நில வளத்தைக்செழிக்கச்செய்ததால், என் காலத்தில் '' ஒரு வேலி நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளைந்தது '' எனப் 'பொருநர் ஆற்றுப்படை' என்ற இலக்கியம் கூறுகிறது. இந்நிலை ஏற்பட்ட பின்புதான், 'சோழவளநாடு சோறுடைத்து' என்று பெயர் பெற்றது. தமிழின் அறிவும், ஆற்றலும் கண்டு பிற நாடு வியந்தது! தமிழனின் நாகரிகமும், வாணிபமும், 'வளர்ந்து பிற நாடுகளுக்கும் பரவியது! அதன் பின்புதான் என் மனத்தில் நிலையான நிம்மதியும் மகிழ்ச்சியும் ஏற்பட்டது!

'' உங்கள் காலத்தில் சோழ வளநாடு செழித்திருந்ததுபோலத் தஞ்சை மாவட்டத்தை இப்பொழுது செழிக்கச் செய்ய வேண்டுமென்பதற்காகவே காலத்திற்கேற்ற வகையில் காவிரியைச் சீரமைக்க இன்றைய அரசு முயன்றுள்ளது.''

'' கரிகாற் சோழன் காலத்திற்குப் பிறகு கலைஞரின் ஆட்சியில்தான் காவிரி சீரமைக்கப்படுகிறது என்பதைக் கேட்டு நான் மனமகிழ்கின்றேன்! கலைஞரின் முயற்சி வெல்லும்! அதனால் தமிழ்நாடு தரணி போற்ற வாழும், என்பது திண்ணம்'' என்று கூறிக்கொண்டே அவர் கடலில் இறங்கினார்.

''ஐயா, கடலில் இறங்குகின்றீர்களே! ஆபத்தாயிற்றே'' என்றேன்.

'' கடல் அலைகளையும், காற்றையும், கலங்களையும் அடக்கி ஆண்ட கரிகாலன் நான்தான். கடலுக்கடியில் மறைந்துள்ள காவிரிப்பூம்பட்டிணத்தில் நான் வாழ்கின்றேன். வருகின்றேன் தம்பி வணக்கம்!'' என்றார்.

'' வணக்கம் '' என்று கூறி நானும் கை குவித்து வணங்கினேன்.

'' வாழ்க தமிழ், வாழ்க தமிழ் நாடு'' என்று கூறி விட்டு அவர் கடல் அலைகளுக்கிடையே கம்பீரமாகப் புகுந்து மறைந்து விட்டார்.

கண்களைத் துடைத்துக் கொண்டு கடற்கரை மணலிலிருந்து எழுந்தேன். இரவு மணி 8 ஆகியது. என் இருப்பிடத்திற்குத் திரும்பினேன். என் கற்பனை ஓர் கட்டுரை உருவாக உதவியது. அதன் முடிவு தான் இக்கட்டுரை. நான் கரிகாலனைக் கண்டு பேசியதை நீங்கள் நம்ப மறுக்கலாம். ஆனால் கட்டுரையில் கூறப்பட்ட செய்திகள் அனைத்தும் உண்மையே''

—ஆர். எம்

---



## தொழிற்சாலை துவங்கச் செப்பனிட்ட நிலங்கள்!

தமிழ் நாட்டில், பல இடங்களில் தொழிற்பேட்டைகளை நிறுவித் தொழில்கள் மலரத் தமிழ்நாடு அரசு உதவி செய்கிறது. அது போலவே, தமிழ்நாட்டின் தொழிற் பகுதிகளைச் சுற்றியுள்ள இடங்களைக் குறைந்த செலவில் கையகப்படுத்தி, சாலைவசதி, மின்வசதி, நீர்வசதி, கழிவு நீர் அகற்று வசதி. பொருள்களை அனுப்பி வைக்க இருப்புப்பாதை வசதி முதலியவற்றுடன் அவற்றை மேம்படுத்திப் பெரிய நடுத்தர, சிறு தொழிலதிபர்களுக்கு வழங்குவதிலும் தமிழ்நாடு அரசு தனிக்கவனம் செலுத்தி வருகிறது. தொழிலதிபர்கள் எளிதில் அங்குத் தொழிற்சாலைகளை அமைத்து உற்பத்தித் தொடங்கப் பெரிதும் இதனால் வசதி ஏற்படும்.

செப்பனிட்ட நிலங்களின் விலையைச் செலுத்துவதற்கான நிபந்தனைகளைத் தளர்த்தும் நோக்கத்துடனும், தொழில் அதிபர்களை அதிகமாக ஈர்க்கும் கருத்துடனும், 1969 நவம்பரில் தமிழ்நாடு அரசு கீழ்க்கண்ட ஆணைகளை வெளியிட்டது.

1. அம்பத்தூரில் உள்ள செப்பனிட்ட நிலங்களைப் பொறுத்த மட்டில், ஏக்கர் ஒன்றுக்கான விலை 30,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

2. கிண்டியில் உள்ள செப்பனிட்ட நிலங்களைப் பொறுத்த வரையில், அந்த நிலத்திற்கான விலையை ஆறு தவணைகளில் செலுத்தலாம்.

3. தலைநகருக்குத் தொலை தூரத்தில் இருக்கின்ற மதுரை, திருச்சி, மேட்டூர் ஆகிய பகுதிகளில் உள்ள செப்பனிட்ட நிலங்களைப் பொறுத்த வரையில், விலையை ஆறு தவணைகளில் வசூலிக்கலாம் என்று அரசு இசைவளித்தது.

தலை நகருக்குத் தொலை தூரத்தில் உள்ள இடங்களைப் பொறுத்தவரையில், 95 ஆண்டுக்கால நீண்டகால அளவுக்குக் குத்தகை அடிப்படையில், தொழில் அதிபர்களுக்கு நிலங்கள் ஒதுக்கப்படலாமென்கிற வகையில் புதிய தூண்டுகோல் இப்போது அளிக்கப்படுகிறது. செப்பனிட்ட நிலங்களின் செலவில் 6 சதவீதம்தான் ஆண்டுக் குத்தகைத் தொகையாகிறது. எனினும், குத்தகைதாரர் குத்தகைக்கால அளவில் முதல் பத்தாண்டுகளுக்குள்ளாக, அந்த இடத்தை ஒரேயடியாக வாங்கிக் கொள்வது அவருடைய விருப்பத்தைப் பொறுத்ததாகும்.

தமிழ்நாடு அரசு அளித்துவரும் மேற்கண்ட சலுகைகளைப் பயன்படுத்திப் புதிய தொழிற்சாலைகளைத் துவங்க முன்வருமாறு தொழிலதிபர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.



சங்கிலித் தேவன்!

பெயரிலே இருக்கும் கம்பீரம் அவனது தோற்றத்திலும் இருந்தது. அவன் மகன் கந்தனுக்கு இருக்கின்ற இளமை மிடுக்கும் துடுக்கும் வயதான சங்கிலித் தேவனிடமும் இருந்ததில் வியப்பில்லை!

குலவித்தை கல்லாமல் பாகம்படும் என்பார்களே, அது பொய்க்கவில்லை. பரம்பரை பரம்பரையாக இருந்து வந்த பழக்கம் சங்கிலித்தேவனுக்கும், அவன் மகனுக்கும் இருந்ததில் என்ன வியப்பு இருக்க முடியும்?

'' பயங்கரக் கழுகின் தங்க இறகைக் கொண்டு வந்தால் தான் புலிவேட்டையில் கலந்து கொள்ள முடியுமாம். தந்தை சொல்கிறார் இப்படி! நான் கை தேர்ந்த வீரன் இல்லையாம். வீரர்களின் தலைவர் மாடசாமி குத்திக் காட்டுகிறார்! இப்போது நான் காட்டுகிறேன் என் கைவரிசையை!'' எண்ணச் சுழலுடன் காட்டுப் பாதையைக் கடந்து கொண்டிருந்தான் கந்தன்.

கண்ணுக்கெட்டிய தூரத்தில் ஒரு மலை. விண்ணைத் தொடும் அளவுக்கு அது உயர்ந்திருந்தது. அதன் அடிவாரத்தில் கற்பாறைகள் சரிந்தும், விழுந்தும், குவிந்தும் கிடந்தன. சிறுசிறு முட்புதர்களும், புற்களும், பச்சைப் பசேலென அடர்ந்து காணப்பட்டன.

பயங்கரக் கழுகு !

அந்தச் சமயத்தில் அதை நினைக்கும் போதே அவனுக்கு— அந்த வீர நெஞ்சினனுக்குச் சிறிது பயங்கரம் தட்டியது என்னவோ உண்மைதான்.

மலையின் அடிவாரத்தில் நின்று கொண்டு வானத்தினை அண்ணாந்து பார்த்தான் அவன். வானமும் மலையும் ஒட்டிக் கொண்டதோ என்று எண்ணும் அளவுக்கு உயர்ந்திருந்தது. நாலு பக்கமும் அவனது கண்கள் சுழன்றன.

எங்கும் ஒரே அமைதி!

இப்போது மலையின் ஒரு பகுதியில் நின்று கொண்டு பெருமூச்சு வாங்கக் கழுகு இருக்கும் இடத்தைத் தேடினான்.

அதோ! அந்தத் தங்க இறக் கழுகேதான்!

அவன் எதற்காக வந்தானோ அந்தக் காரியம் நிறைவேறப் போகிறதா ?

அகலமான பரந்த சிறகு; கரிய கூரிய வளைந்த மூக்கு; நாலா பக்கமும் பார்வையைச் சுழல விடும் பயங்கரக் கண்கள்; பருத்த உடலில் கூர்மையான நீண்ட விரல்கள். உண்மையில் இது பயங்கரக் கழுகு தான்.

பயங்கரக் கழுகு, தன் பரந்த சிறகைக் குறுக்கிக் கொண்டு கூனிக் கிடக்கிறது. சிறகின் ஒரு பகுதியில் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. ஐயோ பாவம்! நடக்கவும் முடியாமல் தத்தித் தடுமாறுகிறதே !

வளைந்த வில்லிலிருந்து புறப்படவேண்டிய அம்பை எடுத்து உறைக்குள் போட்டான் கந்தன். அதற்குள்ளாகவா அவன் மனத்தில் 'கருணை' உட்புகுந்து கொண்டது ? கந்தனும் மனிதன்தானே ?

'பயங்கரக் கழுகு, பயங்கரக் கழுகு' என்று இதுவரை பயந்து கொண்டிருந்த கந்தனுக்குப் பச்சாதாபம் ஏற்பட்டதேன் ?




ஏற்படாதா என்ன ? தாயைக் காணாத குஞ்சுகள் கூட்டிலே பசியால் துடிதுடிக்க, குஞ்சுகளைக் காணாத தாய் அடிபட்டு அடங்கிக் கிடக்க, இத்தருணத்தில் அதன் கொட்டத்தை அடக்க வேண்டும் என்றுதிட்டம் போட்டிருப்பவன் உண்மையில் மனிதன்தானா ?

கந்தன் இப்படி எண்ணினானோ இல்லையோ தாய்க் கழுகை—பயங்கரக் கழுகு என்று பட்டம் சூட்டிக் கொண்ட கழுகை நோக்கிச் சென்றான்.

ஆனால், எட்ட இருந்தபோது சும்மா கிடந்த கழுகு, கிட்ட வந்தால் பயங்கரமாக அலறிக் கொண்டு தன் கூரிய நகங்களால் உடலைக் கிழிக்க வருமோ ?

கந்தன் தாமதிக்க வில்லை; வில்லை வளைத்தான். வில்லிலிருந்த அம்பு புயலெனப் பாய்ந்தது. இரத்தம் சொட்டச் சொட்டக் கீழே விழுந்து இறந்தது—ஒரு வெள்ளை முயல் !

கந்தன் பாறைவிட்டுப் பாறை தாவித் தாவிக் கீழே வந்தான். முயலைத் தூக்கிக் கொண்டு கழுகு கிடந்த பக்கத்தை நெருங்கினான்.

பயங்கரக் கழுகு கண்களைச் சுழலவிட்டுக் கந்தனைப் பார்த்தது. கந்தன் தைரியமாக அதனை நெருங்கிக் கொண்டிருந்தான். கழுகு தன் அகலச் சிறகை மெல்ல விரிக்க முயன்றது. ஆனால், அதனால் முடியவில்லையோ என்னவோ, மீண்டும் சிறகைக் குறுக்கிக் கொண்டது. அதனுடைய கண்களில் வழிந்த நீர், அதற்குப் பொறுக்க முடியாத வலி என்பதை நிரூபித்துக் காட்டியது. தனக்கு அருகில் கூட்டிலிருந்த குஞ்சுகளை ஓரக் கண்ணால் அடிக்கடி பார்த்தது.

கந்தன் இறந்த முயலைத் தூக்கிக் கொண்டு கழுகுக் குஞ்சுகள் இருக்கும் கூண்டை நெருங்கிக் கொண்டிருந்தான்.

கூண்டுக்கு அருகே அடிபட்டுக் கிடக்கும் தாய்க்கழுகு, தன் குஞ்சுகளை அடைய எத்தனித்துக் கொண்டிருந்ததைக் கந்தன் கவனித்தான். கழுகுக் குஞ்சுகள் பசியால் கத்திக் கொண்டிருந்தன. கந்தன் தான் கொண்டு வந்திருந்த முயலின் தோலை உரித்து, அதனுடைய கறித்துண்டுகளைக் குஞ்சுகளுக்கு ஊட்டினான்.

இதைப் புரிந்து கொள்ளாத தாய்க் கழுகு. கந்தனால் தன் குஞ்சுகளுக்கு ஏதோ ஆபத்து என்று தவறாகக் கருதிக் கந்தன்

மேல் பாய முயற்சித்தது. ஆனுல், கந்தனின் கழுகுக் கண்கள் அந்தப் பயங்கரக் கழுகின் மீது அடிக்கடி படாமலில்லை.

குஞ்சுகளின் பசியை ஆற்றிய கந்தன் தாய்க் கழுகை நெருங்கி வந்தான். பெருத்த உருவமான அந்தப் பயங்கரக் கழுகை நெருங்கக் கந்தனுக்குச் சிறிது அச்சமாகவே இருந்தது. கழுகுக் குஞ்சுகளுக்குப் போட்ட மாமிசத் துண்டுகளில் மீதித் துண்டுகளை எடுத்துக் கொண்டு பயங்கரக் கழுகின் முன்னுல் வந்து நின்றுன்.

பார்க்கவே மெய் சிலிர்க்கும் அந்தக் கழுகு, தன் கண்ணுடிக் கண்களால் கந்தனைப் பார்த்தது. கந்தன் மாமிசத் துண்டுகளை அதன் முன்னுல், சற்றுத் தூர நின்றே போட்டான். மிகுந்த பசியால் துவண்டு கிடந்த அந்தக் கழுகு மிக்க ஆவலுடன் மாமிசத் துண்டுகளைத் தின்றது. கந்தனை நன்றிப் பெருக்குடன் பார்த்துச் சிறிது தூரம் தத்தித் தத்தி வந்தது.

உடனே, கந்தன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு 'பொல்லாத கழுகு' என்று ஊராரிடம் பெயர் வாங்கி விட்ட அந்தக் கழுகைத் தொட்டுத் தடவிக்கொடுத்தான். தங்க நிறமான, பார்க்க அழகான அந்தச் சிறகில் தைத்திருந்த கூரிய அம்பை மெல்ல எடுத்துக் காயத்துக்குப் பச்சிலைகளைக் கசக்கி வைத்துக் கட்டினுன்.

பயங்கரக் கழுகு அவனை ஒன்றுமே செய்யவில்லை. அதனுல் கந்தன் அதனிடம் மிக்க அன்பு காட்டினுன்.

கழுகு மலையில், அந்தப் பயங்கரமான காட்டில் கந்தன் சில நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தான்.

ஒரு நாள்—

வெகு தூரம் அலைந்தும் வேட்டை ஏதும் இன்றி வெறுங்கையுடன் திரும்பிக் கொண்டிருந்தான்.

அப்போது—

பயங்கர உறுமலுடன் ஒரு பெரிய சிறுத்தை கழுகுக் கூண்டுக்கு மேலே நின்று கொண்டிருந்தது. அது கூண்டுப் பக்மாக இறங்கி வருவதற்கு இப்படியும் அப்படியுமாகத் திரிந்து கொண்டிருந்தது.

வெறுங்கையுடன் வந்த வெறுப்பு ஒரு பக்கம்; அன்பாய்க் கவனித்து வரும் கழுகுக் கூண்டை அழிக்கப்பார்க்கும் சிறுத்தையின் மீது ஏற்பட்ட ஆத்திரம் ஒரு பக்கம். உடனே வலிமை மிக்க வில்லினை வளைத்து அம்புகளைச் சரமாரியாகப் பல கோணங்களில் தொடுத்தான். அவ்வளவுதான்; சிறுத்தை பெருத்த உறுமல் சத்தத்துடன் கீழே உள்ள பாறைகளில் மோதித் 'தொபார்' எனக் கீழே விழுந்தது.

'ஆகாரத்துக்கு இனிப் பஞ்சமில்லை. ஆடைக்கும் தொல்லையில்லை' என்று சொல்லிக் கொண்டே, மிக்கச் சிரமத்துடன் சிறுத்தைப் புலியின் தோலை உரித்துக் காய வைத்தான்.

இப்படி நாட்கள் நகர்ந்தன.

ஒரு நாள் காலை அவன் கண் விழித்து எழுந்த போது தாய்க் கழுகைக் காணுமல் திகைத்தான். பிறகு அவன் கழுகுக் குஞ்சுகளோடு விளையாடிக் கொண்டிருந்த போது அந்தப் பயங்கரக் கழுகு தன் வலிமை மிக்கக் கால்களில் ஒரு காட்டுப் பன்றிக் குட்டியைத் தூக்கிக் கொண்டு வந்தது. கந்தன் மிகவும் ஆச்சரியத்துடன் அதைப் பார்த்தான். கழுகு அந்தக் 'கொழு கொழு' குட்டியை அவன் காலடியில் போட்டது.

பறக்கவும், இரை தேடவும் வலிமை பெற்றுவிட்ட கழுகு தன் நன்றியைக் காட்டுகிறது என்பதைப் புரிந்துகொண்டான் கந்தன். இனிமேல் அவனுக்கு அங்கு வேலை இல்லை. அக் கழுகுக் குடும்பத்துக்குத் தன் உதவி தேவையில்லை என்று அவன் அறிந்ததும் தன்னிருப்பிடத்திற்குத் திரும்ப முடிவு செய்தான்.

ஆனுல்—

ஆனுல் என்ன? அவன் வந்த காரியத்தை முடிக்க வேண்டுமே!

கந்தன் பலத்த சிந்தனையில் இருந்தான். கழுகு அப்போது தான் எங்கெங்கோ சுற்றித் திரிந்து விட்டுக் கூண்டுக்கு வந்தது. முதலில் குஞ்சுகளுக்குத் தான் கொண்டுவந்த உணவை ஊட்டிவிட்டு, மெல்லச் சிறகடித்துக் கந்தன் முன்னுல் வந்தது. கந்தன் அதன் முதுகை அன்புடன் தடவிக் கொடுத்தான். அப்படி அதைத் தடவிக் கொடுக்கும்போது கந்தன் கண்களில் கண்ணீர் வருகின்றதே அது ஏன்? இத்தனை நாள் பழகி விட்டு இன்று பிரியப் போகிருேமே என்ற பிரிவாற்ருமையா? கழுகும் அடிக்கடி அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டு, அவனிடம் நெருங்கி நெருங்கி வந்தது.

"உன் அன்புக்கடையாளமாக என் வீரத்தன்மையை வேடுவத்தலைவருக்கு எடுத்துக் காட்ட இந்தச் சிறகை நான் எடுத்துக் கொள்கிறேன்" என்று மனத்திற்குள் சொல்லிக்கொண்ட கந்தன் தங்க நிறமான அந்த அழகிய சிறகுக் கற்றையிலிருந்து ஓர் இறகைப் பிடுங்கித் தன் அம்பு உறைக்குள் போட்டுக் கொண்டான்.

கழுகு தன் குஞ்சுகளுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டிருந்தது. இதுதான் சமயம் என்றிருந்த கந்தன் மெல்ல, கழுகுக் கண்களுக்குப் படாமல் அவ்விடத்தை விட்டு நழுவினுன். ஆனுல், அவன் கண்கள் அடிக்கடி கழுகுக் கூண்டை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டன.

கந்தன் நடந்து கொண்டேயிருந்தான்.

எங்கும் இருள் அரக்கன் வாசம் செய்து கொண்டிருந்தான். அந்தக் குக்கிராமமே பூரண அமைதியில் ஆழ்ந்து கிடந்தது. அந்தக் கிராமத்தின் ஒரு பகுதியில் ஒரு பெரிய தீப்பந்தம் எரிந்து கொண்டிருந்தது. அதற்குக் கீழே வேடுவர்கள் பலரும் கும்பலாக உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். மத்தியில் மாடசாமி முறுக்கிய மீசையுடன் உட்கார்ந்திருந்தார்.

பொழுது விடிந்தால் புலி வேட்டை!

மெல்லத் தள்ளாடி நடந்து கொண்டே தன் குடிசையை அடைந்தான். குடிசையின் சிறிய சன்னலினுள் பார்த்தான். மங்கலாக விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சங்கிலித் தேவன் ஆழ்ந்த நித்திரையில் இருந்தார்.

இருமுறை கதவைத் தட்டிவிட்டு, அப்படியே உட்கார்ந்துவிட்டான். சிறிது நேரங்கழித்துக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார் சங்கிலித் தேவன்.

"யார்? ஓ, கந்தனு? இந்த நள்ளிரவிலா வந்தாய்?" அவனை அப்படியே அணைத்துக் கொண்டார்.

"தங்க நிற இறகைக் கொண்டு வந்து விட்டாயா? நாளை புலி வேட்டை!" என்றுர் சங்கிலித்தேவன்.

"கொண்டு வந்து விட்டேன், பயங்கரக் கழுகின் தங்க நிற இறகை" என்று கந்தன் அம்பு உறையிலிருந்த கழுகின் இறகைத் தந்தையிடம் கொடுத்தான்.

அளவற்ற மகிழ்ச்சியுடன் கழுகின் நீண்ட இறகை வாங்கித் தன் மகனைப் பெருமிதத்துடன் பார்த்தார். கந்தன் அவர் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு நடந்த கதையை விளக்கமாகச் சொல்லிவிட்டு, "அப்பா ஒரு சந்தேகம், பயங்கரக் கழுகின் இறகைக் கொண்டு வருவது. எளிதான செயலல்ல; உண்மையில் பயங்கரமாகப் போரிட்டால்தான் அதன் இறகைக் கைப்பற்ற முடியும். ஆனுல்....." என்று இழுத்தான் கந்தன்.

"ஆனுல், என்ன கந்தா? தயக்கமில்லாமல் சொல்!" சங்கிலித் தேவன் அவனுக்குத் தைரியம் சொன்னுர்.

"நான் அந்தப் பயங்கரக் கழுகினிடம் அன்பாகப் பழகினேன். அப்படிப் பழகும் சூழ்நிலை எனக்கு ஏற்பட்டுவிட்டது. அந்தக் கழுகும் என்னை ஒன்றும் செய்யாமல் அன்பாகப் பழகியது. அப்படி நான் அன்பாகப் பழகிய கழுகின் சிறகைத்தான் உங்களிடம் கொடுத்திருக்கிறேன். பயங்கரக் கழுகுடன் பயங்கரமாகப் போரிட்டு அதன் இறகைக் கொண்டு வருவதுதானே வீரத்திற்கு அழகு? ஆனுல், நான் அப்படிச் செய்யவில்லையே? ஆகவே, தான் இந்தத் தேர்வில் எனக்குச் சந்தேகம் வந்து விட்டது!" என்றுன் மூச்சு வாங்க.

சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்த சங்கிலித்தேவன், "சரி, நாளை மாடசாமியைக் கலந்துவிட்டு இதைப்பற்றிச் சொல்கிறேன். நேரமாகி விட்டது. நீ போய்ப் படுத்துக் கொள்" என்றுர்.

மறு நாள் காலை.

புலிவேட்டைக்குப் போவதற்குச் சில மணி நேரங்களே இருந்தன.

சங்கிலித்தேவனும், மாடசாமியும் திண்ணையில் அமர்ந்திருந்தனர். வேட்டைக்குப் போகும் வேடுவர்கள் கூட்டமாக நின்றிருந்தார்கள். அவர்கள் என்ன சொல்லப் போகிருர்களோ, ஏது செய்யப் போகிருர்களோ என்ற அச்சம் கந்தனை உலுக்கிக் கொண்டிருந்தது.

'பகைவனை நேசி' என்ற அமுத வாக்கை நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? கொடிய பகைவன் தான் என்றுலும், அவன் துன்பத்திலே கருணை கொண்டு உதவுவதுதான் உண்மையான வீரமாகும். மேலும், அக்கருணையால் கொடிய பகைவனையும் நட்பாக்கிக் கொள்வதோ அதனினும் சிறந்த வீரமாகும். கந்தனின் கருணையே கருணை! கந்தன் ஒரு வீரனுக்குரிய குணநலன்களைப் பெற்று விட்டான். இனிப்புலிவேட்டைக்குப் புறப்படக் கந்தனுக்கு எந்த விதத் தடையும் இல்லை." என்று மாடசாமி சொல்லும் போது கந்தனுக்கேற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை!






# வெண்பாப் போட்டி

## 42. 'பண்' எனத் தொடங்கிப் 'பாட்டு' என முடித்தல்

பண்பாடு மென்காதல் பார்போற்றும் ஒள்வீரம்
கண்டாங்கு யாம்தேறக் கைவளையாய் !—உண்டெனக
எண்டிசையும் ஏற்றமிகும் எங்கள் கருவூலம்
பண்டைத் தமிழ்ப்புறப் பாட்டு.

—ஆர். பிரபா, திருவேற்காடு.

பண்ணிருக்கும் வாய்திறந்து பாடுதற்குப் பால்மணக்கும்
புண்ணிருக்கும் சிந்தைக்குப் பொன்மருந்தாய்க்—கண்ணிருக்கும்
சீரழகுச் செந்தமிழில் சேர்ந்திருக்கும் நம்கவிஞர்
பாரதியின் தேசபக்திப் பாட்டு.

—ச. கருணாநிதி, மேலைச்சிவபுரி.

பண்-பாட்டுப் போட்டிப் பரிசதனை நாடாதிவ்
வெண்பாவைத் தீட்டி வெளியிட்டேன்—பெண்பாலோர்
சேர்க்காமல் ஒப்பனையைச் செய்கின்ற நாட்டியத்தைப்
பார்ப்பதுபோல் தோற்றுமிப் பாட்டு.

—க. இராதாகிருட்டிணன், காவேரிப்பாக்கம்.

பண்ணை விளைக்கும் பயன்பொருள்கள் அத்தனையும்
இன்னை இருந்தே திளைக்கின்றீர்—மண்ணுழைப்பின்
தேட்டம் கவர்வதிலே தேர்ந்தோரே ! என்றுணர்வீர்
பாட்டாளி பாடுகின்ற பாட்டு ?

—த. தமிழரசி, குட்டப்பட்டி.

பண்பாட்டின் காவலர்கள் பைந்தமிழ் நன்னாட்டைக்
கண்போலக் காக்கின்றார் ; காலமெல்லாம்—துன்புற்றோர்
விடுதலை பெற்றுவிட்டார் ; வேதனைகள் அற்றுவிட்டார்
பாடுகின்றார் ஆனந்தப் பாட்டு.

—மு. சிவலிங்கம், வேடசந்தூர்.

பண்டு தமிழரசர் பாப்புனையும் பாவலரைக்
கண்டு பரிசளித்துக் காத்ததெல்லாம்—கண்டீர் !
அரிதென்று செய்தேன் ; அறைவீர் அரசின்
பரிசும் பெறுமோ என் பாட்டு ?

—மு. சேதுபதி, மேலச்சிறுபோது.

பண்படுத்தி நல்ல பசுந்தாள் உரமிட்டு
மண்ணை வளமாக்கி மாவிளைச்சல்—உண்டாக்கப்
பாடுபடும் பாட்டாளிக் கூட்டத்தைப் போற்றியே
பாடுவோம் சேர்ந்தொரு பாட்டு.

—வை. இரத்தினசாமி, தேத்தாக் குடி.

பண்ணும் பரதமுமே பாடிடுவார் ஆடிடுவார்
எண்ணில் அவற்றுக் கெதிருண்டு—கண்ணடிக்
காட்டிக் கருத்தழிக்கக் கற்றவளே ! பாரிலெதிர்ப்
பாட்டில்லாப் பாட்டேற்றப் பாட்டு !

—இரெ. மல்லபிள்ளை, மேட்டுப்பாளையம்.

பண்டைப் பொழுதினிலே பண்பாளர் நாவினிலே
உண்டாகி வந்த உயிரான—வண்டமிழே !
நெஞ்சத்தில் என்றும் நீயிருந்தால் இவ்வுலகில்
பஞ்சமா என்றனுக்குப் பாட்டு ?

—அ. அறிவுநம்பி, காரைக்குடி.

---

பரிசுபெற்ற வெண்பா எழுதியவர்:—

பிரபா,
மே/பா P.R.S.
S. K. D. J. உயர் பள்ளி
திருவேற்காடு, சென்னை-56.

பண்ணார்க்கும் வண்டாடும் பன்வண்ணத் தேன்மலர்கள்,
கண்ணுடிப் பூமேனிக் கைவளையல்,—கண்ணீரை
வார்த்தெழுதும் துன்பூறும் வாழ்க்கைநிலை, என்றிவற்றைப்
பார்த்தாலே ஊறுதடா பாட்டு.

—கு. ஜெயபிரகாஷ் நாராயணன், திருமங்கலம்.

பண்ணிசைத்துப் பாடப் பகுத்தறிவுத் தேன்சிதறும்
எண்ணந் தமிழ்காக்க ஏகிடுமே—ஒண்கருத்துப்
பூவேய்ந்(து) அணிசெய் புரட்சி மணங்கமழும்
பாவேந்தன் சொற்சுவைசேர் பாட்டு.

—தா. பகவதிஅப்பன், யாதவன்புதூர்.

பண்ணமுதம் காதினிலே பாய்ந்தினிக்க நாற்றுநடும்
வண்ணமுடன் பாடுகின்றாள் மாங்குயிலாய் !—பெண்ணமுதம்
பாடுபடும் வேளையிலே பற்றும் அலுப்பகலப்
பாடுகின்ற பாட்டன்றோ பாட்டு !

—வெங்கடேசன், மருதங்குடி.

பண்ணும் பொருளுடன் பாரோர் விரும்பிடும்
வண்ணச் சிறப்பு வடிவுமிக்க—என்ன
அலகுள சீர்நடை ஆரணி கொண்ட
பலநயம் பெற்றதே பாட்டு.

—மு. ப. சங்கரலிங்கம், வடுகபாளையம்.

பண்படுத்தி நீர்பாய்ச்சிப் பாழ்நிலத்தில் நல்விளைச்சல்
உண்டாகச் செய்த உழவரினப்—பெண்டிரெல்லாம்
ஆடிடுவர் தைத்திருநாள் ஆனந்தப் பொங்கலிட்டுப்
பாடிடுவர் பைந்தமிழிற் பாட்டு.

—இரா. சுப்பிரமணியன், பேராவூருணி.

பண்ணிற் பிறந்தவளைப் பாராளும் பைங்கிளியை,
வண்ணப் புலவோரின் வண்டமிழை,—மண்ணகத்தில்
வேலுண் விழியாளை வேண்டி மணப்பவர்க்குப்
பாலும் பழமுமென் பாட்டு.

—புலவர் சோ. பா., வேதாரண்யம்.

பண்ணிசைக்கும் தென்றலிசை பாடிவரும் புள்ளினங்கள்
வண்ணமலர்த் தேன்சொரிய வாயவிழும் !—தண்டிலுள்
ஓடையொலி ' கின்கிணு ' வென் றோங்குமே ஓர்கலனுள்
பாடவே பைந்தமிழ்ப் பாட்டு!

—கே. டி. அரசு, கொளக்குடி.

பண்ணில்லாப் பாட்டால் பாரில் பயனுண்டோ ?
கண்ணில்லா வாழ்வில் களிப்புண்டோ ?—எண்ணற்றோர்
கண்ணொளி பெற்றுக் களிகொள்ளும் காட்சியைப்
பண்ணிசைக்க இன்னிசையாம் பாட்டு.

—சீ. சங்கரகோமதி, சம்புக்குட்டப்பட்டி.

பண்ணே இனிமை ! பருகுவதோ தேன்துளிகள் !
வண்ணம் கறுப்பாம் ; வகைவகையாம்—வண்டிசைக்கும்
அந்திப் பொழுதில் அழகான மல்லிகைப்பூம்
பந்தரின்கீழ் நான்கேட்கும் பாட்டு.

—சிவ. கிருட்டிணன், கணியூர்.

பண்ணற்ற யாழானேன் ; பைங்கிளியே ! என்வாழ்வில்
புண்பட்டு வாடுகிறேன் ! போக்காயோ ?—கண்மணியாய்
என்னுள் இருந்தானை ஏன்பிரித்தான் ? பாவியெனப்
பன்னுளாய்ப் பாடுகின்றேன் பாட்டு.

—புலவர் எ. மாணிக்கம், விருர்.

பண்ணென்றால் தாலாட்டு ; பாசமெனில் அன்னைமனம்
பொன்னென்றால் இல்லாளின் பூமுகமே—என்றெண்ணி
நல்லறத்தை நாடுமெழில் நற்றமிழர் வாழ்வதனைப்
பல்சுவையாய்ச் சொல்லுவதே பாட்டு.

—ஏ. காந்தி, தேவத்தூர்.

பண்ணைமீன் மேதினென்று பாய முகில்மடியில்
தண்ணியதென் காற்றென்று தான்சுரக்க !—தெண்ணறுநீர்க்
காவிரிபாய் நாடா ! நீ கங்கைதரு நன்னீரால்
பாவைதமி ழைக்குளிப் பாட்டு.

—பேகன், மதுரை-1.

பண்ணும் இசையும் பரதமும் பைந்தமிழின்
கண்ணும் விளங்கிடுதல் காணீரோ—எண்ணரிய
பாடுதற்கே ஈட்டுதமிழ்ப் பாவிருந்தும் ஏன்மயங்கிப்
பாடுகின்றீர் வேற்றுமொழிப் பாட்டு.

—தவ. சரோசா, கோவை-14.

பண்டைத் தமிழரின் பாங்கான வாழ்வியலை
விண்டுரைத்துச் சொல்லும் விளக்கமெல்லாம்—பெண்ணே!
அழகுபெறு சங்கத்தில் ஆன்றோர்கள் யாத்த
பழகு தமிழ்ப்பத்துப் பாட்டு.

—வை. வைரவன், சிறுகூடல்பட்டி.

பண்பின் உறைவிடமாய்ப் பாங்கின் நிறைகுடமாய்த்
தொண்டில் முதலிடமாய்த் தோன்றிடுவீர்—கண்ணியமாய்
நாட்டுக்கும் மக்கட்கும் நன்குற்ற நீர்படும்
பாட்டுக்குப் பாடுவரே பாட்டு.

—கதி. சானகி, காரைக்குடி.

பண்டிங்கே மண்டிப் பரந்திருந்து பாழாக்கிக்
கொண்டிருந்த மூடக் கொடுமையெலாம்—விண்டுரைத்துக்
காட்டிப் பகுத்தறிவாம் கண்ணொளியை நல்கியதே
பாட்டிலுயர் பாவேந்தர் பாட்டு.

—மு. வள்ளியம்மை, காரைக்குடி.

பண்ணும் பசுந்தமிழாய்ப் பாலாய் நறுந்தேனுய்க்
கண்ணும் மணியாய்க் கனிச்சுவையாய்—எந்நாளும்
நாட்டில் வளர்பாட்டு நற்றுயர் தாலாட்டு
பாட்டில் தலையாய பாட்டு.

—புலவர் ச. மருதமுத்து, உடுமலை.

பண்ணைச் செவிகளிலே பாயும்! குழந்தைகளைக்
கண்ணயரச் செய்யும்! களிப்பூட்டும்—பெண்மைநலம்
கூடும் பொழுதிற் குலவிமகிழ் தாய்மார்கள்
பாடுவதே தாலாட்டுப் பாட்டு!

—நெல்லை. ஆ. கணபதி, சைதாப்பேட்டை.

பண்ணிற்கே ஏற்ற பதங்கள் அமைத்துமே
மண்ணிலே மக்களுக்கு மாண்புடனே—கண்ணொளிபோல்
நீதியைப் போதிக்கும் நேர்மையைக் கொண்டுள்ள
பாதையைக் காட்டுவதே பாட்டு.

—சீனிவாசம்மாள், சேலம்-9.

பண்ணும் மொழிபேசிப் பட்டுவிரல் கையசைத்து
வெண்ணிலவாய் மண்ணில் விளையாடும்—கண்ணனைநான்
சேர்த்தள்ளிக் கொள்ளச் சிரிப்பான் ; அவனழகைப்
பார்த்தவுடன் நெய்தேன்இப் பாட்டு.

—க. ஒப்பிலாள், திருச்சி-15.

பண்ணின்றி யாழின்றிப் பாரில் எனைமயக்கக்
கண்மணியாம் என்மழலை கைதட்ட—வண்ண
விழிசிமிட்டி நெஞ்சில் விளையாடி இன்பப்
பழம்போல் எனக்களித்தாள் பாட்டு.

—வங்கனூரான், வங்கனூர்.

பண்ணை விளைவிருந்தும் பாட்டாளி ஓய்ச்சலின்றி
மண்ணை அமுதாக மாற்றிடினும்—பொன்னைநிகர்
நெல்ம[illegible]யின் மே[illegible] நிறைந்திடினும் ஏனிந்தப்
பல்[illegible] இல்லையெ[illegible]ம் பாட்டு?

—அமரன், அருப்புக்கோட்டை.

ப[illegible]பாடு பல்வகைத்து, ப[illegible]வேறு நாடுகளில்,
ப[illegible], பாட்டும், பல்வ[illegible]த பாரினிலே—பெண்வண்ணக்
க[illegible]பாடி யாடும் கவின்ந[illegible]டி யம்பலவாம் ;
[illegible]தமிழா! பாடிமகி[illegible]பாட்டு.

—புலவர் கோம்பைச்சீரான், கோம்பை.

ப[illegible]ணின் [illegible]ப், பார்வைப் பனிக்குளிராய்,
எ[illegible] ஏந்திழையே!—கண்ணுக்குள்
ஓடிப் [illegible]டன்னை நினைத்தேதான்
பாடி முடித்தேனிப் பாட்டு.

—ப. வே. இராமசாமி, மானுமதுரை.

பண்ணுக்கு மன்னவனும் பாரதி தாசனவன்
கண்ணொத்த நல்ல கருத்தாழச்—சொன்னயமும்
மண்ணில் குழவிபோல் மாத்தமிழில் கொஞ்சியதும்
பண்ணொழுகுந் தேன்தமிழ்ப் பாட்டு.

—பி. சி. அசனல்லி, அரக்கோணம்.

பண்ணொலிக்கும் பைந்தமிழின் பாவலராம் நம்முதல்வர்
கண்ணொளியும் தந்துநமைக் காக்கின்றார்!—மண்ணோர்
சிரம்வணங்கிப் பாராட்டும் சீர்தொண்டைப் பார்த்துப்
பரவசத்தால் பாடியதிப் பாட்டு.

—சண்முக தாயுமானவன், பொன்மலை.

பண்பில்லான் பெற்ற பணமும் பகிர்ந்துண்ண
நண்பில்லான் தானுண்ட நல்லுணவும்—பெண்பிள்ளை
கண்நோக்கம் கிட்டாதான் கைக்கிளையும் ஒக்குமே
பண்நோக்க மில்லாதான் பாட்டு.

—இரா. சு. முத்து, பாளையங்கோட்டை.

பண்நா! பனித்தமிழ்! பண்புடைமை மின்னிட்ட
அண்ணா! அறிஞர் அவர்புகழைக்—கண்ணாகக்
காப்பளித்துப் போற்றும் கலைஞர் கனிச்சுளைபோல்
பாப்படைத்தார் வெல்லுமவர் பாட்டு.

—இளங்கோ, விருதுநகர்-2.

பண்ணேசைக் காரன்! பருமீசைக் காரன்!
என்னுசைத் தீந்தமிழ் ஏந்தல்அவன்—தென்னிளசைப்
பாரதியின் தாசன்! பசுந்தமிழின் நேசனிப்
பாரதிரப் பாடியதே பாட்டு.

—சுந்தர. இளங்கோவன், அரசப்பிள்ளைபட்டி.

பண்ணுந் திறனும், பயனுர்ந்த நற்பொருளும்,
எண்ணுங் கலையின் எழிற்சிறப்பும்—நண்ணிடவே
தேமதுரச் செந்தமிழால் செய்தளித்துப் பாவலரும்,
பாமரரும் கொள்வதுவே பாட்டு.

—நா. சிவராம முத்துக்குமாரவேல், தேனி.

பண்ணும் பிறக்கும் ; பரதமும் கொண்டிலங்கும்
எண்ணங் கவரும் எழிற்சிலையில்!—வண்ணத்தைச்
சேர்த்துமே தீட்டிய சேல்விழி மங்கையின்
பார்வையும் பாடுமே பாட்டு.

—புலவர் எ. பார்த்தசாரதி, கரூர்.

பண்ணிற் பிழையாது பாட்டிற்காம் தாளத்தின்
எண்ணிற் சிதையா திழுக்காது—கண்போன்று
நாட்டுக் குயர்வுதரும் நற்கருத்துக் கொண்டதிருப்
பாட்டன்றோ யான்விரும்பும் பாட்டு.

—புலவர் சி. இராமசாமி, சேலம்-6.



**சைதியான்**

**கால்நடைகளுக்கும், கோழி முதலிய பண்ணைப் பறவைகளுக்கும் புழு பூச்சிகளிலிருந்து முழுப் பாதுகாப்பு அளிப்பதற்கு**

**சைதியான்**

**90 வெவ்வேறு வகையான பயிர்களைத் தாக்கும் 100 வகை புழுபூச்சிகளைப் பயனுள்ள முறையில் கட்டுப்படுத்துகிறது**

**சைதியான்**

**5 வெவ்வேறு வகையான 50 காய்கறிப் பயிர்களையும், பழப் பயிர்களையும் தாக்கும் 75க்கு மேற்பட்ட புழு பூச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது**




# சைதியான்

CYANAMID


# முதல்வரின் கண் சிகிச்சை முகாம் நிதி

## நன்கொடை வழங்கியோர் பட்டியல்

| வழங்கியோர். | ரூ. | காசு. |
|---|---|---|
| சென்ற இதழ் வரை மொத்தத் தொகை | 25,93,671 | 55 |
| பதிவுத்துறைத் தலைவர் சென்னை. அவர்களது தனி உதவியாளர். | 231 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கீவளூர், தஞ்சை மாவட்டம். | 50 | 00 |
| தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர். | 200 | 00 |
| பால் உற்பத்தி, பண்ணை வளர்ச்சி ஆணையர், சென்னை. | 201 | 00 |
| இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் ரிஜிஸ்டரேஷன், சென்னை-1. | 268 | 00 |
| டன்லப் இந்தியா லிமிடெட், சென்னை-2. | 5,000 | 00 |
| திருமதி பத்மாவதி, முதல்வர் பெண்கள் அரசினர் கல்லூரி, கும்பகோணம். | 575 | 00 |
| திரு பாலசுந்தரம், மாவட்டக் கூட்டுறவுக் கணக்குத் தணிக்கை அலுவலர், சேலம்-1. | 5,800 | 00 |
| மாவட்ட கூட்டுறவுக் கணக்குத் தணிக்கையாளர். சேலம்-1. | 100 | 00 |
| | 125 | 00 |
| ௸ | 750 | 00 |
| ௸ | 126 | 00 |
| பால்உற்பத்தி பால் பண்ணை வளர்ச்சி ஆணையர், தனி உதவியாளர், சென்னை-5. | 100 | 00 |
| தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சை. | 100. | 00 |
| அண்ணா நகர் அரிமா சங்கம், சென்னை-29. | 2,14,321 | 00 |
| திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர். | 300 | 00 |
| மாவட்டக் கூட்டுறவுக் கணக்குத் தணிக்கை அலுவலர், சேலம். | 20 | 80 |
| மாவட்டப் பதிவாளர், பாளையங் கோட்டை. | 20,001 | 00 |
| நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர். | 25 | 00 |
| சுந்தசாமிப் புலவர், பாளையங் கோட்டை. | | |
| நாகர்கோவில் மாவட்ட ஆட்சித் தலைவர். | '9,887 | 50 |
| மாவட்டக் கூட்டுறவுக் கணக்குத் தணிக்கை அலுவலர், சேலம். | 150 | 00 |
| நெல்லை மாவட்டத்தில் வரவு. | 10 | 00 |
| மாவட்டக் கூட்டுறவுக் கணக்குத் தணிக்கை அலுவலர். | 975 | 00 |
| கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர். | 3,00,000 | 00 |
| வேலூர் ஜேசீஸ், 171/2, சுண்ணாம்புக்காரத் தெரு, வேலூர். | 825 | 00 |
| வாடகைக்கார்த் தொழிலாளர் சங்கம், அவிநாசி. | 10 | 00 |
| ஆண்டவர் இஞ்சினீயர் தொழிலாளர்கள். | 5 | 00 |
| திரு இராசமாணிக்கம், தி.மு.க., ஈரோடு. | 100 | 00 |
| முதல்வர் கோவை வந்தபோது குழந்தைக்குப் பெயரிடல் மூலமாகவும் பொதுமக்களிடமிருந்து திரட்டியது. | 19 | 00 |
| தமிழ்நாடு மின்கணக்காயர் சங்கம். | 51 | 00 |
| திரு எ. என். முத்து, செயலர், சவரத் தொழிலாளர் சங்கம், அவிநாசி. | 51 | 00 |
| தமிழ்நாடு, மின் கணக்காயர் சங்கம், திருப்பூர் கிளை. | 40 | 00 |
| தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் சங்கம், அவிநாசிக் கிளை. | 65 | 00 |
| திரு விசுவநாத முதலியார் முடி திருத்துவோர் சங்கச்சார்பில். | 51 | 00 |
| கோவை நகரசபைக் குழு மின்சார பிரிவு தொழிலாளர் முன்னேற்ற சங்கம். | 101 | 00 |
| செல்வி வி.ஜே. பத்மினி, பி.ஏ., செயலர், செண் ஜான் ஆம்புலன்ஸ் சங்கம், வட ஆர்க்காடு மையம், வேலூர். | 101 | 00 |
| செல்வி டி. ஆர். பிரேமா, பிரேமா நாடக மன்றம், கோடம்பாக்கம், சென்னை-24. | 51 | 00 |
| மொத்தம் .. .. | 31,54,457 | 85 |

பருத்தி விவசாயிகள் கவனிக்கவும்.



5 A/152 (760)

உங்கள் பயிரை சார் உறுஞ்சி நாசம் விளைவிக்கும் பூச்சிகளிலிருந்து

பாதுகாக்க மெடாஸிஸ்டாக்ஸ்

கடித்து மென்று பயிருக்கு தீங்கிழைக்கும் பூச்சிகளை

ஃபாலிடால்

சிறந்த முறையில் கட்டுப்படுத்துகிறது.

காய்ப் புழுக்-

களுக்கு ஏற்றது விசேஷ பூச்சி மருந்து

மெடாஸிட்காம்பி

அடைப்புகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் உபயோகிக்கும் முறைகளின் படி ஃபாலிடால், மெடாஸிஸ்டாக்ஸ், மெடாஸிட்காம்பி மருந்துகளை என்றும் உபயோகியுங்கள்.

பருத்திப் பயிரைத்தாக்கும் பூச்சிகளினால் ஏற்படும் நஷ்டத்திற்கு முடிவு காணவும். பண விரயத்தை தவிர்க்க

BAYER பாயரின் தரமான பூச்சி மருந்துகள்




### நாளுக்கொரு குறள் !

வானொலியில் 'குறள் அமுதம்' என்ற புதிய நிகழ்ச்சியை இனி நாம் கேட்டு மகிழலாம். ஐந்து நிமிட நேரம் நடக்கும் இந்த நிகழ்ச்சி, நாள்தோறும் உண்டு.

திருக்குறளில் இருந்து நாளுக்கொரு செய்யுள் படிக்கப்படும். அதற்கான விளக்கமும் கூறப்படும். தமிழ்ப்புலவர்கள், இந்த விளக்கத்தைச் சொல்வார்கள். நாள்தோறும் காலையில் 6-10 மணிக்குக் 'குறள் அமுதம்' ஒலிபரப்பாகும்.

சென்னை, திருச்சி, பாண்டிச்சேரி வானொலி நிலையங்களில் இந்நிகழ்ச்சியைக் கேட்கலாம். 'குறள் அமுதம்' நிகழ்ச்சி, நவம்பர்த் திங்கள் 5-ஆம் தேதி முதல் ஒலிபரப்பாகும்.

* * *

### பஸ் பயணிகளுக்கு

சென்னை நகர பல்லவா போக்குவரத்துக் கழக நகர பஸ்களிலும் புற நகர் பஸ்களிலும் மாதாந்தர 'சீசன் டிக்கெட்' கொடுக்கப்படுகிறது.

இந்த டிக்கெட்டை வாங்கியவர்கள், எந்தப் பஸ்ஸில் வேண்டுமானாலும் ஒரு நாளைக்கு, ஒரு தடவை குறிப்பிட்ட தூரத்திற்குப் போகலாம்; அதே தூரத்திற்குத் திரும்பி வரலாம்.

20 காசு டிக்கெட்டு உள்ள குறைந்த தூரம் முதல், 65 காசு டிக்கெட்டு உள்ள அதிக தூரம் வரை இந்த 'சீசன் டிக்கெட்'டுகள் கொடுக்கப்படும்.

20 காசு தூரத்திற்கு உரிய மாதாந்தர சீசன் டிக்கெட்டுக் கட்டணம் 8 ரூபாய்தான். ஒருவர் 20 காசு டிக்கெட்டுத் தூரத்திற்கு ஒரு நாளைக்குப் போக வரப் பயணம் செய்தால் நாளொன்றுக்கு 40 காசு ஆகும். அதாவது மாதம் 12 ரூபாய் ஆகும் இந்தச் சீசன் டிக்கெட்டு எடுப்பதன் மூலம் 4 ரூபாய் மிச்சமாகும்.

* * *

### நெசவாளர் துயர் நீங்கிட..!

கைத்தறி, விசைத்தறித் துறைகளைச் சேர்ந்த நெசவாளர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த நெசவாளர்களுக்கும் அடையாள அட்டை வழங்கத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள தறிகளின் எண்ணிக்கை, நெசவாளர்களுக்குத் தேவையான நூலின் அளவு, நூல் தரம், நிதி வசதி ஆகியவை பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிப்பதற்கு, இந்த அடையாள அட்டைகள் பயன்படும்.

இந்தத் தவல்களைச் சேகரித்தால்தான், நெசவாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு விரிவான திட்டம் தயாரிக்க முடியும். தமிழ்நாட்டில் ரூ. 8 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தேங்கி நிற்கின்றன. இதில், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திடம் மட்டும் ரூ. 4 கோடி மதிப்புக்குத் துணிகள் தேங்கியுள்ளன. இத் தகவலைத் தொழிலமைச்சர் திரு செ. மாதவன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

* * *

### பட்டதாரிகள் பயன்பெற..

வேலை இல்லாமல் இருக்கும் பி.டி. பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப் புதிய திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை வேலை வாய்ப்புத் துறை தொடங்கி உள்ளது.

பி.டி. பட்டமும், அதற்கு மேற் படிப்பும் படித்து வேலையில்லாமல் இருக்கும் பட்டதாரி வாலிபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக இந்தப் புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன்படி அவர்களுக்கு 'பிரைவேட் டியூஷன்' (விரும்பும் மாணவர்களுக்குத் தனியாகக் கற்பிப்பது) கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

வேலை வாய்ப்புத் தேடித் தரும் அலுவலகங்களில் பதிவு செய்திருக்கும் பட்டதாரிகளுக்கு 'பிரைவேட் டியூஷன்' சொல்லிக் கொடுக்கச் சம்மதமா என்று கேட்கப்படும். அப்படி எழுதி கேட்கப்படும். அப்படி யானால் காலை அல்லது மாலையில் எத்தனை மணி நேரம் ஒதுக்க முடியும்? சம்பளம் எவ்வளவு வேண்டும் என்பதைத் தெரிவிக்கும்படி அவர்களிடம் கேட்கப்படுகிறது.

அவர்களிடமிருந்து பதில் வந்ததும் 'பிரைவேட் டியூஷன்' வைத்துக்கொள்ள விரும்பும் மாணவர்களின் பெற்றோருக்கு இந்தப் பட்டதாரிகள் அடங்கிய பெயர்ப் பட்டியல் அனுப்பி வைக்கப்படும்.

முதலாவதாக இந்தத்திட்டம் சோதனை முறையாக நடத்திப் பார்க்கப்படும். இதன் பலன்கள் தெரிந்த பின், எல்லாப் பகுதிகளுக்கும் இந்தத் திட்டம் விரிவு படுத்தப்படும். இந்தத் திட்டத்தின்படி ஏற்கெனவே சென்னை நகரில் 700 பட்டதாரிகள் 'பிரைவேட் டியூஷன்' சொல்லிக் கொடுக்கச் சம்மதம் தெரிவித்துள்ளார்கள்.

* * *

### மீன் வளம் பெருகிட..!

இராமநாதபுர மாவட்டம் மண்டபத்தில் 'இறால்' மீன் பதனிடும் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. இதனை ரூ. 38 இலட்சம் செலவில் நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு வெளிநாட்டுப் பணம் சம்பாதித்துத் தரும் பொருள்களில் 'இறால்' மீன் ஒன்று. அந்த 'மீன் சுரங்கம்' மண்டபம் கடற் பகுதியில் ஏராளமாக உள்ளது. இங்குப் பிடிக்கும் 'இறால்' மீன்கள் கொச்சி (கேரளா)க்கு அனுப்பப்பட்டுப் பதப்படுத்தப்படுகின்றன. பிறகு அங்கிருந்து அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கொச்சியில் மட்டும் இறால் மீன் பதப்படுத்தும் தொழிற்சாலை உள்ளதால் கேரளம் இதன் மூலம் இலாபம் அடைகிறது. எனவே மண்டபத்தில் இறால் மீன் பதப்படுத்தும் தொழிற்சாலைக்காக 2 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படும் வேலையும், தொழிற்சாலை அமைக்கும் பணியும் தீவிரமாக நடந்து வருகிறது.

# உங்கள் நிலம் வளம்பெற புதுவகை 'உரம்' வழங்குகிறது பாங்க் ஆஃப் பரோடா

## குடியானவ நண்பர்களுக்கு விவசாயக் கடனுதவி

பணம்...அதுவே உன்னதமான உரம்!
உங்கள் நிலம் செழித்து அமோக விளைச்சலை அள்ளித்தர, நல்ல விதைகள்.
நவீன பண்ணைக் கருவிகள், மேம்பாடு பெற்ற பாசன முறைகள் மற்றும்
சிறந்த உரம் தேவை. அவற்றை வாங்குவதற்கான பணத்தை எளிதில்
பெற முடியும். எப்படியா? பாங்க் ஆப் பரோடாவுக்கு வந்து,
விவசாயக் கடனுதவி பற்றி விசாரியுங்கள். மிகவும் சல்லிசான நிபந்தனையின்
பேரில் நாங்கள் கடனுதவி வழங்குகிறோம். இன்றே வாருங்கள். எங்கள்
விவசாயக் கடனுதவி, உங்கள் நிலம் கொழிக்க 'உரமாக'ப்
பயன்படுவதைப் பாருங்கள்!

நீங்கள் என்றென்றும் வளமையுடன் வாழ

**பாங்க் ஆஃப் பரோடா**

இந்தியாவிலும் வெளிநாடுகளில் யு. கே.
கிழக்கு ஆப்பிரிக்கா, மொரிசு, பிஜித் தீவுகள்,
மற்றும் கயானாவிலும் 625க்கும் மேற்பட்ட
கிளைகள் உள்ளன.




SMPL-BOB-8A/78 Tam.



# கதர் கைத்தொழில் அங்காடி

குறளகம்
சென்னை-1

கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்

வெளிநாட்டார் போற்றும்
ஷயன் பொருள்
கலைக்கூடம்

20461
20462 20463
20464 20465

# மாவட்டங்களிலிருந்து....

தமிழக மாவட்டங்களில் எத்தனையோ நற்பணிகள், சீர் திருத்தங்கள், வளர்ச்சிப் பணி கள் முதலியன நடந்தவண்ண முள்ளன. ஒரு மாவட்டத்தில் என்ன நடக்கின்றன என்பதைப் பிற மாவட்டத்தினரும், பொது வாகப் பொதுமக்களும் தெரிந்து கொள்வது வளர்ச்சிப் பணிக்கு மேலும் வித்திடுமல்லவா ? இதனை விளக்குகிறது இந்தப் பக்கம்.

### வளர்ச்சிப் பணி வளர்கிறது

மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அண்மை யில் நடைபெற்றுள்ள வளர்ச்சிப் பணிகள் வருமாறு :—

தீவிர வேளாண்மைத் திட்டத் தின் கீழ் விவசாயிகளுக்கு முதல் போகம் முடிந்த இடங்களில் ஐ. ஆர். 20, ஐ. ஆர். 8. காஞ்சி விநியோகம் செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்குக் கடனுகவும் ரொக்கமாகவும் யூரியா, அமோ னியம் சல்பேட், டை அமோ னியம் பாஸ்பேட் முதலியன வழங்கப்பட்டுள்ளன.

மேலும், சிறுசேமிப்பு மூலம் ரூ. 42,000 திரட்டப்பட்டுள்ளது. சமூக நல ஊழியர்கள் சார்பில் குடும்பநலத்திட்டம், தீண்டாமை ஒழிப்பு விழாக்கள் கொண்டாடப் பட்டுள்ளன. இளைஞர் அணியி னுல் 24 முதியோர் கல்வி வகுப்புகளும் சிறப்பாக நடந்து வருகின்றன.

### அரிய ஆய்வுக்கூடம்

மூலப்பொருள்களையும், முற்றுப் பெற்ற பொருட்களையும் சோதனை செய்வது, உற்பத்திப் பொருள்களின் தரத்தைப் பாது காப்பதற்கு மிகவும் இன்றியமை யாதவையாகும். இந்த வகையில் ஒரு நிறுவனத்தை வெற்றிகர மாக உருவாக்குவதற்குச் சோதனை ஆய்வுக் கூடங்கள் மிகவும் அவசியமாகின்றன. ஆகவே, தமிழகத்தைத் தொழில் மயமாக்க உதவும் வகையில் தமிழக அரசு சோதனை ஆய்வுக் கூடங்களை நிறுவுவதற்கு முன் வந்துள்ளது.

' இரசாயன சோதனை பகுப்பு ஆய்வுக்கூடம் ' என்னும் மத்திய ஆய்வுக்கூடம், சென்னை நகரில் அமைக்கப்பட்டு கடந்த இருபத்தி ஐந்து ஆண்டுகளாகப் பல்வேறு வழிகளில் தொழிலதிபர்களுக்குச் செயலாற்றி வருகின்றது. ஆனால் சென்னையிலிருந்து தொலைவிலிருக் கும் மாவட்டங்களிலுள்ள தொழி லதிபர்களுக்குத் தங்களது ஆய்வு செய்யவேண்டிய மாதிரிகளை அனுப்புவதில் காலதாமதமும், பணவிரயமும் ஏற்படுகின்றது. எனவே, இதுபோன்ற சிரமங் களைத் தவிர்ப்பதற்காக இந்த மண்டல சோதனை ஆய்வுக்கூடம் அமைக்கப்பட்டுள் ளது.

குமரி, நெல்லை, மதுரை, இராமநாதபுரம் மற்றும் திருச்சி யில் உள்ள தொழில் அதிபர்களுக் குத் தொழில் நுணுக்க மற்றும் சோதனை வசதி அளிக்க மண்டல சோதனை ஆய்வுக் கூடத்தை மதுரையில் மாநில அரசு அமைத்துள்ளது. மதுரை மாநகரில் வடபகுதில் உள்ள தொழிற்பேட்டையில் இந்த ஆய்வுக்கூடம் இருக்கிறது. இந்த ஆய்வுக்கூடம் மாநில அரசின் தொழில் வணிகத் துறையின் இரசாயனப் பிரிவின் கீழ் அமைந்துள்ளது.

தமிழக அரசு இவ்வாய்வுக் கூடத்தின் கட்டடம், கருவிகள் மற்றும் நூல்கள் முதலானவை களுக்கு ரூபாய் 15 இலட்சம் வழங்கியுள்ளது. இதன் கட்டடம் ரூ. 5 இலட்சம் அளவில் கட்டப் பட்டுள்ளது. பல்வகையான இயந் திரங்கள் மற்றும் கருவிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 9 இலட்சம் ஆகும். ஒரு இலட்சம் ரூபாய் அளவில் இந்த ஆய்வுக் கூடத்திலுள்ள நூலகம் விரிவு படுத்தப்பட இருக்கின்றது.

இந்த ஆய்வுக்கூடம் கனிகள், தாதுக்கள், உலோகங்கள், கலப்பு உலோகங்கள், எண்ணெய், கொழுப்புகள், சோப்புகள், உரங் கள், பூச்சி மருந்துகள், தொழில் களுக்குத் தேவையான இரசா யனப் பொருட்கள், எரிபொருட் கள், வர்ணங்கள், வார்னிஷ்கள், உணவுப் பண்டங்கள், மின் கருவிகள், மற்றும் பிற வகைப் பொருட்கள் பற்றி பௌதிக முறையிலும் இரசாயன முறை யிலும் ஆய்வுகள் நடத்த ஏற்றுக்கொள்ளப்படும்.

இராமநாதபுரம் மாவட்டத் தில் அகதிகளைக் குடியமர்த்தும் திட்டத்தின்படி இதுவரை மொத்தம் 8,630 பர்மா அகதி கள் குடும்பங்களைச் சார்ந்த 20,000 அகதிகளும், 14,371 இலங்கை குடும்பங்களைச் சார்ந்த 59,178 அகதிகளும் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

1972-73-க்கு உபகாரச் சம்பளமாக பிரி-மெட்ரிக்குக்காக 9,228 பேர்களுக்கு ரூ. 2,21,880 அளிக்கப்பட்டுள்ளது. போஸ்ட்-மெட்ரிக்குக்காக 497 பேர்களுக்கு ரூ. 2,61,953 அளிக்கப்பட்டுள் ளது.

ஒவ்வொன்றிலும் 50 மாணவர் களைக் கொண்ட புதிய அரிசன மாணவர்கள் தங்கும் விடுதி சிவகெங்கையில் ஒன்றும் 30 மாணவர்களைக் கொண்ட மற்றொரு விடுதி திருவாடனை வட்டத்திலும் திறக்கப்படவிருக் கிறது. மாவட்டத்தின் முத லாவது அரிசன மாணவர் தங்கும் விடுதியாக இது அமையும்.

### அறியாமை அகன்றிட . .

மதுரை மாவட்டத்தில் பள்ளியில் சேரத் தகுதிவாய்ந்த குழந்தைகள் 1,90,000 பேர் இருக்கின்றனர். இலவசக் கல்வி, மதிய உணவு முதலிய வசதிகள் அளித்தும், அறியாமையினுல் அவர்கள் கல்வி பெற வாய்ப் பில்லாமல் போய்விட்டது. இந்த அவல நிலையை மாற்ற மாவட்ட ஆட்சித் தலைவர், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், அதிகாரி கள் ஆகியோரின் துணை கொண்டு, 1,52,494 பேர்கள் அறிவொளி பெற பள்ளியில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

திண்டுக்கல் வட்டத்திலுள்ள வக்கம்பட்டி கிராமத்தில் சின்னக் காளை என்பவர் கிணறு தோண்டு கையில் விபத்து ஏற்பட்டு இரு கைகளையும் இழந்து விட்டார். அவருக்கு முதலமைச்சர் நிதி யிலிருந்து 1,000 ரூபாய் உதவிப் பணமாக வழங்கப்பட்டுள்ளது.

### கண்ணெளி வழங்கிட . .

தமிழ்நாடு அரசு கண் மருத் துவமனையைச் சார்ந்த குழுவின ரால், விருத்தாசலம் கொளஞ் சியப்பர் கோவில் கல்யாண மண்டபத்திலும், அரசினர் ஆண் கள் உயர்நிலைப் பள்ளியிலும் இலவசமாகக் கண் சிகிச்சை முகாம் நடத்தப்பெற்றன.

முகாமில் 2,939 ஆண்களும், 1,796 பெண்களும் பதிவு செய்து கொண்டார்கள். அவர் களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 262 ஆண்கள், 275 பெண்கள் ஆகியோருக்கு அறுவைச்சிகிச்சை செய்யப்பெற்றது. கண் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட 510 பேர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணுடி வழங்கப்பெற்றது.






கதர்
கிராமத்
தொழில்கள்
கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது புனிதத் தொண்டு
கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது கிராம மக்களுக்குச் செய்யும் பேருதவி
கதர்- கதர்ப் பட்டு
சோப்பு, தேன்
தோல் பொருள்கள்
பனைவெல்லம்.
பனைப் பொருள்கள்
வார்ப்படங்கள்
மற்றும் பல்வேறு கைநுட்பப் பொருள்கள் கதர் கிராமத் தொழில் விற்பனை நிலையங்களில் கிடைக்கும்
கதர் கிராமத் தொழில் துறை
2. சர் தேசிகாச்சாரி சாலை
சென்னை-4
சந்தர்--


ஆராய்ச்சி மணி
12
கதை : இளவல்
காட்டில் உள்ள தனி இடத்திற்கு மணியும்
அழைத்துச் செல்லப்பட்டார்கள்.
இந்தப் பையன்களை இங்கு யார் கொண்டு வரச் சொன்னது? அவர்களின் கண் கட்டுகளை அவிழ்க்காமல் நம்முடைய பழைய இடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்.
உத்தரவுப்படியே செய்கிறோம்
அப்பாவின் குரல் மாதிரி இருக்கே!
நாட்களுக்குள் போலீஸ்காரர்கள் புகுந்து அங்குள்ள திருட்டுக் கூட்டத்தைச் சூழ்ந்து கொள்கிறார்கள்
மாணிக்கம் உங்கப்பா தாண்டா இந்தத் திருட்டுக் கூட்டத் தலைவர். அதோ டாக்டர் பொன்மலை உயிரோடு இருக்கிறார்டா.
எங்கப்பாதான் திருட்டுக் கூட்டத் தலைவர்னு நினைச்சா எனக்கு வெட்கமா இருக்கு! ஒரே ஷேம்! ஏன்டா மணி எங்கப்பாவை ஜெயில்லே போடுவாங்களா?
தப்பு செஞ்சா தண்டனை கிடைக்காதா?





# காவலர்க்கு ஒரு மருத்துவமனை

தமிழகத்தின் தலைநகரம் சென்னை. அதனால் பல மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு வருவோர் போவோர் தொகை ஏராளம். அதுமட்டுமல்ல, வெளி மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு வந்து பணிபுரிவோரின் தொகையும் மிக அதிகம். அதனால்தான், சென்னை நகரில் அரசினரின் மருத்துவ மனைகள் எத்தனையோ இருந்தபோதிலும், மருத்துவ மனைகளில் எந்த நேரமும் மக்கள் வெள்ளம் காட்சி தந்து வருகிறது. சென்னையைப் பொறுத்த வரையில், பொது மக்களுக்காகப் பல மருத்துவ மனைகள் உள்ளன. தொழிலாளர்களின் நலன் பேணுவதற்கு அரசின் ஒத்துழைப்புடன் இயங்கிவரும் இ.எஸ்.ஐ. மருத்துவமனையும், மருந்தகங்களும் உள்ளன.

உள் நாட்டுப் பாதுகாப்பில் ஈடுபட்டிருக்கும் காவல் துறையினர்களின் நலனுக்காகச் சென்னையில் நகரக் காவலர் மருத்துவ மனை ஒன்று எழும்பூரில் இயங்கி வருகிறது. நீண்ட காலமாகக் காவல் துறையினரின் மருந்தகமாக இருந்த ஒரு நிலையம் 1963-ஆம் ஆண்டு முதல் மருத்துவ மனையாகத் திகழ்கிறது. காவல் துறையினரும், அவர்களது குடும்பத்தினரும் தீயணைப்புத் துறையினரும் இந்த மருத்துவ மனையில் சிகிச்சை பெறலாம்.

காவல் துறையினர் இந்த மருத்துவ மனைக்குத்தான் சிகிச்சைக்காக வரவேண்டும். காவல் துறையைச் சேர்ந்த ஒருவர், இந்த மருத்துவ மனைக்கு வருவதற்குக்கூட முடியாத நிலையில் தங்கள் இல்லத்துக்கு அருகில் உள்ள அரசினர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டால், அந்தத் தகவலை, அவரது உறவினர்கள், இந்தக் காவலர் மருத்துவமனைக்குத் தெரிவிக்க வேண்டும்.

பொதுவாக, நோய்வாய்ப்பட்ட காவல் துறையினரை விரைவில் அலுவலுக்குத் தகுதியானவர்களாக்குவது இந்த மருத்துவமனையின் அருந் தொண்டாகும்.

காவல் துறைதான் இந்த மருத்துவ மனைக்குத் தேவைப்படும் பணச் செலவைச் செய்து வருகிறது.

இந்த மருத்துவமனையில் புற நோயாளர் பிரிவு, உள்ளிருப்பு நோயாளர் பிரிவு இரண்டும் இருக்கிறது. புறநோய்ப் பிரிவு காலை 8-30 மணியிலிருந்து 12-30 மணிவரையிலும் மாலை 3-30 மணியிலிருந்து 4-30 மணி வரையிலும் பணி புரிகிறது. நாள்தோறும் 350 ஆண்கள், 300 பெண்கள், குழந்தைகள் இந்தப் பகுதிக்கு வருகை புரிகிறார்கள்.

இங்குள்ள உள்ளிருப்பு நோயாளர் பிரிவில் 30 படுக்கைகள் உள்ளன. என்றாலும் நாளொன்றுக்குச் சராசரி 45 உள்ளிருப்பு நோயாளிகள் உள்ளனர். பெண் கள், ஆடவர்கள், சிறுவர்கள், ஆகியோருக்குத் தனித் தனி வார்டுகள் உள்ளன. மகப்பேற்றுப் பிரிவும் இங்கே உள்ளது. கடந்த ஆண்டு மட்டும் 65 மகப் பேறுகள் இங்கு நடைபெற்றிருக்கின்றன.

இங்கே அறுவை அரங்கம் ஒன்று உள்ளது. இது அண்மையில் குளிர்சாதன வசதி செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. வாசக்டமி, ஹெர்னியா, ஹைட்ரசல் போன்ற சிறு அறுவைச் சிகிச்சைகள் இங்கே நடைபெறுகின்றன.

மருந்தினால் குணமாகும் எல்லா வித நோய்களுக்கும் இங்கே சிகிச்சை தரப்படுகிறது. மருத்துவத் துறையினர் விநியோகிக்கும் மருந்துகளைத் தவிர, வேறு அவசியமான மருந்துகளை வெளிச் சந்தைகளிலிருந்தும் விலைக்கு வாங்கிப் பயன்படுத்துகின்றது இந்த மருத்துவமனை. இந்த மருந்துகள், உள்ளிருப்பு நோயாளிகளுக்கும் புற நோயாளிகளுக்கும் கொடுக்கப்படுகின்றன. இதன் காரணமாக இங்கு வரும் நோயாளிகள் நீண்ட நாட்கள் சிகிச்சை பெற வேண்டிய அவசியம் இல்லாமல், மிகக் குறைந்த நாள் சிகிச்சையிலேயே நலம் பெற்று விரைவில் தங்கள் பணிகளைச் செய்ய முடிகிறது.

சிக்கலான பிரச்சினைகள் உள்ள நோயாளிகள் பொது மருத்துவ மனை, ஸ்டான்லி மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவமனை ஆகிய மருத்துவ மனைகளுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

இங்கு இ.சி.ஜி. (E.C.G.) இயந்திரம் உள்ளது. இதய நோய் உள்ளவர்கள், அந்நோய் பற்றி அறிந்துள்ள சிறப்பு

# புத்தம் புதிய திட்டம் — அத்தனையும் உங்களுக்கே

## 1972 அக்டோபர் முதல் அளிக்கப்படும் பரிசுகளில் பரபரப்பூட்டும் மாறுதல்கள்



**மூன்று வரிசைகளுக்கு, மொத்தப் பரிசுகளும் பரிசுத் தொகையும்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | முதல் பரிசுகள் | ஒவ்வொன்றும் ரூ. | 1,00,000 | = | ரூ 3,00,000 |
| 6 | இரண்டாவது பரிசுகள் | ஒவ்வொன்றும் ரூ. | 10,000 | = | ரூ. 60,000 |
| 225 | மூன்றாவது பரிசுகள் | ஒவ்வொன்றும் ரூ. | 1,000 | = | ரூ. 2,25,000 |
| 300 | நான்காவது பரிசுகள் | ஒவ்வொன்றும் ரூ. | 500 | = | ரூ. 1,50,000 |
| 1500 | ஐந்தாவது பரிசுகள் | ஒவ்வொன்றும் ரூ. | 100 | = | ரூ. 1,50,000 |
| 3000 | ஆறாவது பரிசுகள் | ஒவ்வொன்றும் ரூ. | 50 | = | ரூ. 1,50,000 |

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு கீழ்க்கண்டபடி ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசுக்கு | ஒவ்வொன்றும் | ரூ. 1500/– வீதம் 6 ஆறுதல் பரிசுகள் | = ரூ. 9000/- |
| இரண்டாவது பரிசுகளுக்கு | ஒவ்வொன்றும் | ரூ. 500/- வீதம் 12 ஆறுதல் பரிசுகள் | = ரூ. 6000/- |

## மொத்தப் பரிசுகள்: 5052 *

மொத்தப் பரிசுத் தொகை ரூ. **10,50,000**

**குலுக்கல் நாள்: 10—11—1972**

**பரிசு சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்**

**இன்றே வாங்குங்கள்**

# தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு



விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.
கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2

* 3 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.




மருத்துவர்களிடம் அனுப்பப்படுவதற்கு முன்னர்த் தேவைப்படும் இ. சி. ஜி. இங்கே எடுக்கப்படுகிறது.

எக்ஸ்-ரே பகுதியும் இந்த மருத்துவ மனையில் உண்டு. சாதாரணமாக எக்ஸ்-ரே மட்டும் தான் உண்டு. வேறு நவ்ன வகை—சிறப்பு வகை எக்ஸ்ரேக்கள் இங்கே கிடையாது. ஆண்டொன்றுக்கு 1,500 எக்ஸ்-ரேக்கள் எடுக்கப்படுகின்றன.

இங்கு ஓர் ஆய்வுக்கூடமும் உள்ளது. ஆய்வுக்குரிய வசதிகள் இங்கு அண்மையில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற முதனிலைத் தொழில் நுணுக்கர் இங்குப் பணிபுரிகிறார்.

இந்த மருத்துவ மனையில் ஆம்புலன்ஸ் வண்டி ஒன்று இருக்கிறது. இது சென்னைக் குதிரைப் பந்தயச் சங்கத்தால் அன்பளிப்பாகத் தரப்பட்டதாகும். அவசரச் சிகிச்சைகளுக்கும் சிக்கலான பிரச்சினைகளைச் சமாளிக்கச் சிறப்பு மருத்துவர்களிடம் நோயாளிகளை அழைத்துச் செல்வதற்கும் இந்த ஆம்புலன்ஸ் கார் பயன்படுகிறது.

இந்த மருத்துவ மனையில் 4 டாக்டர்களும், ஒரு சிவில் சர்ஜனும், மூன்று சிவில் உதவி சர்ஜன்களும், 5 செவிலியர்களும், 4 மருந்தகப் பணியாளர்களும், ஒரு ரேடியோகிராபரும், ஆய்வுக்கூடத் தொழில் நுணுக்கர் ஒருவரும், 5 ஆண் உதவி நர்சுகளும் 2 பெண் உதவி நர்சுகளும், மகப்பேறு உதவியாளர்களும் பணிபுரிகிறார்கள். இங்குப் பணிபுரியும் டாக்டர்களும், செவிலியர்களும் நல்வாழ்வுத்துறை இயக்குநரால் நியமிக்கப்பட்டுக் காவல் துறை ஆணையரின் கீழ்ப் பணியாற்றுகிறார்கள்.

இங்குப் புறநோயாளர் பிரிவில் பணி செய்யும் டாக்டர்கள், புறநோய்ப் பிரிவு நேரம் முடிந்தவுடன், உள்ளிருப்பு நோய்ப் பிரிவுகளுக்குச் சென்று பணியாற்றுகின்றனர். அதுமட்டுமல்ல, கீழ்ப்பாக்கத்தில் உள்ள காவல் துறை பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறுபவர்களின் உடல் நலனையும் அடிக்கடி கவனிக்கிறார்கள். பயிற்சிப் பள்ளியின் நலத்துறை வசதிகளையும் ஆய்வு செய்கிறார்கள்.

இந்த மருத்துவ மனை இன்னொரு முக்கியமான பணியையும் செய்துவருகிறது. நகரத்தில் திரிகின்ற பிச்சைக்காரர்கள், காவல் துறையினரால் இந்த மருத்துவ மனைக்குக் கொண்டு வரப்படுகிறார்கள். அந்தப் பிச்சைக்காரர்கள் காப்பு இல்லங்களுக்கும், தொழுநோயாளர் இல்லங்களுக்கும், பணிபுரியும் நிலையங்களுக்கும் அனுப்பப்படுவதற்கு முன்னர் இந்த மருத்துவ மனையில் தான்—மருத்துவர்களால் அத்தாட்சி பெறுகின்றார்கள். எந்தப் பிச்சைக்காரர்கள் எங்கே அழைத்துச் செல்லப்பட வேண்டும் என்பதை இங்குள்ள டாக்டர்கள் நிச்சயம் செய்கிறார்கள்.

தினமும் பத்துப் பதினைந்து சிறுவர்கள் இந்த மருத்துவ மனைக்கு அழைத்து வரப்படுகிறார்கள். அவர்கள் எல்லாம் யார் தெரியுமா இளங்குற்றவாளிகள்! அவர்கள் இளைஞர்கள் தாமா, எத்தனை வயதிருக்கலாம் என்பதையெல்லாம் நிர்ணயம் செய்வது இந்த மருத்துவமனையின் தொண்டுதான்.

—த.பி.


நல்வாழ்த்துக்கள்

தென்னிந்திய விஸ்கோஸ் லிமிடெட்,

கோயம்புத்தூர்-18.

தரத்தில் சிறந்த

ஸ்டேபிள் பைபர்...

ரேயான் நூல்.....

மரக்கூழ்.........

தயாரிப்பாளர்கள்



...ரியர், வெளியிடுபவர் செய்தி—மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை, அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-2.




R.R. No 885/72




# செழுமையான விளைச்சலுக்கோர் சீரான சாதனம் எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்



செழுமையான விளைச்சலைப்பெற மிக அவசியமானது சீரான நீர்ப்பாசனம். பம்ப் செட்களின் மூலம் வயல்களுக்குத் தடையின்றி நீர் பாய்ச்சவும், அவைகளை நல்ல முறையில் இயங்கச் செய்யவும் எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸடார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் சிறந்தவை. இவை எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

விவசாயிகளின் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

· பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்து கொடுக்கின்றனர்.

· சிறிய ஊர்களில்கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH L&T Switchgear

ஸ்விட்ச்கியர் டிவிஷன்,
லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்
P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.

LT-3506




# தொலைநோக்குத்

**இது திட்டயுகம் !**

இந்தத் திட்ட யுகத்தில் எதையும் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டியவர்களாகவே நாம் இருக்கிறோம்.

'' எண்ணித் துணிக கருமம்'' என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவப் பெருந்தகை கூறியிருக்கிறார்.

எந்தக் காரியமானாலும் முதலில் எண்ணிப் பார்த்துக் காரியத்தில் இறங்கிட வேண்டும் என்று வள்ளுவர் வலியுறுத்துகிறார். அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் இந்தத் திட்டக் குழுவின் குறிக்கோள்கள் அமைந்திட வேண்டும்.

' ஆற்றில் போட்டாலும் அளந்து போட வேண்டும்'— என்று சொல்வார்கள். ஆற்றில் போடுவதே வீணானதாக இருந்தாலும் அதையும் அளந்து போட வேண்டும் என்பார்கள். இதிலுள்ள உட்கருத்தைப் புரிந்து கொண்டு நாம் செயல்பட வேண்டும். நல்லவைகளைச் செய்யும் போது அளந்து செய்ய வேண்டும்— என்று கிராமிய மக்களும் கருத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாம் திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். மூன்றாண்டுத் திட்டமானாலும்—ஐந்தாண்டுத் திட்டமானாலும் அவையெல்லாம் தொலை நோக்கைக் குறிக்கோளாக வைத்துப் போடப்பட வேண்டும்.

நாம் திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். ஆனால் எதிர்பார்ப்பது போலச் சமுதாயத்தின் தேவைகள் நிறைவேற—மக்களுக்கு நல்வாழ்வு இடைக்க—வறுமை ஒழிந்த வளமான வாழ்வு—வசதி நிறைந்த வாழ்வு கிடைத்திட வாய்ப்புகள் மிகுந்ததாக அமைந்திடும் நிலை மக்களுக்குக் கிடைத்ததா என்றால் இல்லை !

அகில இந்தியத் திட்டக்குழுவினால் வகுக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் ஏற்பட்ட பயன்களைப் பற்றி எண்ணிப் பார்த்திட வேண்டும்.

அகில இந்தியத்திட்டக் குழுவே சொல்வதென்ன ?

' நமது திட்ட வளர்ச்சி விகிதம் முதல் பத்தாண்டுக் காலத்தில்—1951–60 ஆகிய பத்தாண்டுக் காலத்தில் 3·8 சதவிகிதமாகும்.

1961–70 வரையிலான இரண்டாவது பத்தாண்டுக் காலத்தில் 3·7 சதவிகிதமாகும்.

நமது பொருளாதாரம் தகுந்த அளவில் வளர்ச்சி அடையவில்லையாதலால் நம்முடைய வளர்ச்சி நல்ல நிலையில் இல்லை. நான்காவது திட்ட காலத்தில் இந்தியாவின் வளர்ச்சி 5·7 சதவிகிதமாக இருக்கலாமெனவும் பிறகு அடுத்த ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் 6·2 சதவிகிதமாக இருக்குமெனவும் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போதுள்ள சூழ்நிலைகளைப் பார்க்கும் போது ஐந்தாவது திட்ட முடிவில் 5·5 சதவிகிதம் வளர்ச்சி அடைந்தால் அதிகமாக இருக்குமெனத் தோன்றுகிறது'' என்று ஆராய்ச்சி நடத்தித் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தக் கருத்தை நாம் அக்கறையோடு ஆராய வேண்டும் ; ஆர்வத்தோடு ஆராய வேண்டும். அதனால்தான் மாநிலத் திட்டக்குழு அமைத்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

1972-ம் ஆண்டு முதல் 1984-ம் ஆண்டு வரை நம்முடைய திட்டங்கள் எப்படி அமைய வேண்டும் என்ற அடிப்படையில் மாநிலத் திட்டக் குழுவின் சார்பில் ஆராய்ந்து நல்ல முடிவுகளை எடுத்துவருகிறோம்.

திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபடுவதில் நாம் முன்னோடியாக இருக்கிறோம். மாநில அளவில் மட்டுமல்ல ; மாவட்ட அளவிலும் திட்டமிட்டுச் செயலாற்ற நாம் முன் வந்திருக்கிறோம்.

கல்விப் பிரச்சினையைப் பற்றிய சிந்தனைத் தொகுப்பு டாக்டர் மால்கம் ஆதிசேசையா தலைமையில் அமைந்த குழுவினர் தந்திருக்கின்ற சிந்தனைகள் பொன்னே போல் போற்றத் தகுந்தவைகளாகும். அந்தச் சிந்தனைகளின் மூலம் நாம் புதிய ஊக்கத்தைப் பெறமுடியும்.

இப்படி மாநிலத் திட்டக் குழுவிலே இருக்கின்ற ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறைகளுக்குத் தலைமை தாங்கிப் பல்வேறு ஆக்கப்பூர்வமான சிந்தனைகளைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிற இந்தக் காரியம் தமிழகத்தில் மட்டுமல்ல ; இந்தியாவிலேயே புதியதோர் திருப்பத்தை ஏற்படுத்தக் கூடியவைகளாகும்.

நபர்வாரி வருமானத்தைப் பொறுத்தவரை அதைப் பெருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். தமிழ்நாட்டில் நபர்வாரி வருமானம் 1970–71-ல் ரூ. 654 ஆக இருந்து வருகிறது. 1983–84-ஆம் ஆண்டு அளவில் தமிழ்நாட்டில் நபர்வாரி வருமானம் ரூ. 1,308 ஆக உயர்த்துவதற்கு மாநிலத் திட்டக் குழு தனது ஆராய்ச்சி மூலம் வரையறுத்திருக்கிறது.

இன்றையத்தினம் சமுதாயத்தில் பீடித்துள்ள பெரிய



நோயாக வேலையில்லாத் திண்டாட்டம் இருந்து வருகிறது. இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கத் திட்டங்களின் மூலம்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்குக் கல்வித் துறையில் புதிய திட்டங்களை—சீரிய திட்டங்களை உருவாக்கியாக வேண்டும். வேலையில்லாப் பிரச்சினையும், கல்விப் பிரச்சினையும் இணைந்திருக்கின்ற ஒன்றாகும் என்பதனை அனைவரும் ஒப்புக் கொள்வார்கள்.

அண்மையில் நான் ஐதராபாத் நகரில் கல்லூரித் திறப்பு விழாவொன்றில் பேசும் போது இன்றுள்ள நமது கல்வி நிலையினால் வேலை வாய்ப்பு இல்லாமல் இருப்பது மட்டுமல்ல; வேலைக்கே இலாயக்கில்லாத பலரும் உருவாக்கப்பட்டு விடுகிறார்கள். ஆகவே கல்வி கற்கும் போதே வேலைக்கும் தகுதியுள்ளவர்களாக ஆக்கிவிட கல்விமுறை வேண்டும்'' என்று சொன்னேன்.

டாக்டர் மால்கம் ஆதிசேசையா அவர்களின் தலைமையில் அமைந்த குழுவினரால் தரப்பட்டிருக்கின்ற கல்விச் சிந்தனைகள் நமக்குப் புதிய சிந்தனையைத் தருவதாக அமைந்திருக்கின்றன.

தமிழ்நாட்டில் 60 சதவிகிதம் மக்கள் ஏழ்மையில் உழல்கிறார்கள். ' ஏழ்மையை விரட்டுவோம் ; வறுமையை விரட்டுவோம் ' என்ற முழக்கத்தால் மட்டும் இந்த நிலையை மாற்றிவிட முடியாது. இப்படிப்பட்ட சமதர்ம சமுதாயத்தை உருவாக்கத் தொலை நோக்குத் திட்டங்கள் அவசியமாகும்.

இன்றுள்ள நிலைமையில் உடனடியாக ஒரு சிலவற்றை நிறைவேற்றி விடுவதில் இலாபமில்லை. அதனால் நீண்ட காலத்திற்குத் தேவைப்படும்பரிகாரங்களை நிறைவேற்றிடத் தவறியவர்கள் என்ற குற்றச் சாட்டுக்கு ஆளாகிவிடுவோம்.

தலை வலிக்கிறது என்றால் மருந்து தடவினால் தீர்ந்துவிடும். அப்படிப்பட்ட தலைவலியும் உண்டு ! சில நேரங்களில் நிரந்தரத் தலைவலியாகவும் இருந்துவிடும். வயிற்றுக் கோளாறுகளினாலும் தலைவலி வருவதுண்டு. அப்படிப்பட்ட தலைவலி வரும்போது மருந்து தடவினால் அந்த நேரத்தில் மட்டும்தான் வலி போகும். ஆனால் தொடர்ந்து இருக்கக் கூடியதாக—தொல்லைதரக் கூடியதாக இருந்துவிடும். ஆகவே ஏன் இந்தத் தலைவலி ஏற்பட்டது என்பதை ஆராய்ந்து இதைக் கைவிட ஆவன செய்ய வேண்டும். அப்படிப்பட்டவைதான் திட்டங்களாகும்.

அப்படிப்பட்ட திட்டங்களைத் தருகின்ற நல்ல மூளைகள் இருக்கின்றன. அவற்றை நிறைவேற்றும் போது ஏற்படுகின்ற சங்கடங்களைத் தடுக்க நிர்வாகத்தில் இருப்பவர்கள் முனைந்து முயலவேண்டும்.

நிதிப் பற்றுக்குறை—கருவிகள் வரவில்லை என்று இருக்கிற நிலைமைகளின் மீது பழிபோட்டு தப்பித்துக் கொள்ளக்கூடாது. ஏற்படுகின்ற இடைஞ்சல்களை நீக்கி ஏற்ற முறையில் சிந்தித்துச் செயல்படவேண்டும்.

ஒரு பைல் இருக்கிறதென்றால் அமைச்சர் அதிகாரியை அழைத்து நிறைவேற்றிட ஆணை பிறப்பிக்க முடியும். ஆனால் நடைமுறையில் இருக்கின்ற சில சம்பிரதாயங்களினால் இங்கேயிருந்து பைல் புறப்பட்டு ஆதிசேசையாவிடம் போய் அவரிடமிருந்து நடராசன் அவர்களிடமும்—இராசாராம் அவர்களிடமும் போய்ச் சுற்றிவந்து இறுதியில் என்னிடம் வருமானால் எவ்வளவு கால தாமதமாகிவிடும்.

இப்படிப் பைல்கள் ஒவ்வொரு இடத்திலும் விருந்தினராக இருந்து விடக்கூடாது. மாமனார் வீட்டுக்குப் போகும் மாப்பிள்ளைகளைப் போலப் பைல்கள் உடனடியாக விடுபடவேண்டும். அங்கேயே தங்கிவிடக்கூடாது.

எந்தத் திட்டங்களானாலும் ஆராய்ச்சி நடத்தப்படுவது, பிறகு அனுமதி பெறுவது— அனுமதிக்கப்பட்ட திட்டத்திற்கு ஏதாவது சங்கடங்கள் இருக்கின்றனவா என்று பார்ப்பது—அதை ஆராய்ந்திடக் குழுவை அமைப்பது பிறகு அமைச்சரவை விவாதத்திற்கு அனுப்புவது—பிறகு மாவட்ட அளவில் விவாதிப்பது இப்படி நிர்வாகத்தின் சக்கரம் சுழன்று கொண்டே இருந்தால் — எப்படிப்பட்டவர்கள் திட்டம் தீட்டித் தந்தாலும் பலன் ஏற்படாது. சிறிய உதாரணத்தைப் பெரிய விஷயத்தை விளக்கச் சொன்னேன். எப்போதுமே பெரிய விஷயங்களைச் சிறிய உதாரணங்களால்தான் விளக்கமுடியும்.

தமிழ்நாட்டில் 12 ஆண்டுகளுக்கான திட்டத்தை மாநிலத் திட்டக்குழு வகுத்திருக்கிறது. மத்தியத் திட்ட அமைச்சர் தார் அவர்கள் தமிழ்நாட்டுக்கு வர இருக்கிறார் — நமது திட்டக்குழு உறுப்பினர்களோடு கலந்து பேச வருகிறார். நானும் அமைச்சர்களும் அவரைச் சந்தித்துப் பேசுகிறோம். நான் அவர் வருவதற்கு முன்பே சில விஷயங்களை சொல்லி வைக்கிறேன்.

மாநிலத் திட்டங்களை நிறைவேற்ற ' பவர் ' வேண்டும். ' பவர் ' என்றதும் நான் ஏதோ மாநில சுயாட்சி அடிப்படையில் ' அதிகாரம் ' வேண்டும் என்று சொல்லவில்லை—மின்சாரத்தைத் தான் குறிப்பிடுகிறேன்.

நீர்வழி மின்சாரம் முடிந்துவிட்ட நிலையில் அனல் மின்சாரத்தையும், அணுமின்சாரத்தையும் தயாரிக்க வேண்டியிருக்கிறது. மின்சார உற்பத்திக்கு நமது திட்ட அளவின்படி மேலும் 27 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 400 கோடி ரூபாய் மின்சார உற்பத்திக்குத் தேவைப்படும் என்று கருதுகிறோம்.

நமது தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான கருவிகள் இல்லையென்றால் அவற்றை இறக்குமதி செய்வதற்கும் தயாராக இருக்கவேண்டும்.

பெரிய தொழிற்சாலைகளுக்கான அனுமதி நமக்குக் கிடைக்கவில்லை.

சேலம் இரும்பு உருக்காலைக்கு அனுமதி கிடைத்திருக்கிறது. அதற்கும் முற்றுப்புள்ளி வைக்க முயற்சி நடைபெறுகிறது. எப்படியாவது சேலத்தில் தொழிற்சாலையை உருவாக்கப் பாடுபட்டு வருகிறோம். அதற்கு மத்திய அரசு பரிவோடு இருப்பதற்காக நன்றியும்—பாராட்டுதலும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் தேவை என்று வற்புறுத்தி வருகிறோம்.



1-11—1ஏ

இன்று 600 மெகாவாட் அளவுக்கு ஸ்டேஷன் இருந்தும், 300 மெகாவாட்டுக்கு மேல் போக முடியாத அளவுக்குத்தேவையான ' லிக்னைட் ' கிடைக்க முடியாத காரணத்தால் 100 மெகாவாட் ஸ்டேஷனைப் பயன் படுத்திக் கொள்ள முடியாதவர்களாக இருக்கிறோம்.

இன்று தூத்துக் குடியில் உரத் தொழிற்சாலை இருக்கிறது.

புதிதாகத் தென் ஆர்க்காடு மாவட்டத்திலாவது தஞ்சையிலாவது ஓர் உரத் தொழிற்சாலை வேண்டும்.

சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றினால் எத்தனை தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும். சர் ஏ. ராமசாமி முதலியார் கமிட்டி வரையறுத்திருக்கிறது. 'ஐயாயிரத்திலிருந்து பத்தாயிரம் பேர் வரை தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும், என்று தெரிவிக்கப்பட்டது என்று நான் நினைக்கிறேன்.

இன்று மேற்குக் கடற்கரையிலிருந்து சுற்றிவந்து கிழக்குக் கடற்கரைக்கு வர இலங்கையைச் சுற்றி வர வேண்டியிருக்கிறது. ஆகவே இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் 1,000 மைல் தூரம் குறையும்.

சேது சமுத்திரத் திட்டத்தை முன்பே நிறைவேற்றியிருந்தால் ரூ. 20 கோடியில் முடிந்திருக்கும். இன்று அதற்காக அதிகமாகச் செலவிட வேண்டியிருக்கிறது. இவ்வளவு செலவாகுமா என்று இப்போது தயங்கினால் இன்னும் பத்தாண்டுகளுக்குப் பிறகு மேலும் செலவு அதிகமாகிவிடும்.

ஆகவே, ஏழை எளிய மக்கள் வாழ்வு முன்னேற கிராம மக்களின்—சமுதாயத்தின் அடித் தளத்தில் உள்ள மக்களின் வாழ்வை மையமாக வைத்துத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். அந்த வகையில் தான் நமது மாநிலத் திட்டக்குழு செயல்பட்டு வருகிறது.

[20—10—1972 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற தமிழகத் திட்டக்குழு இருநாள் கருத்தரங்கைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை]

---




குடிசைப் பகுதிகளில் வாழும் குழந்தைகளுக்கும், அவர்களின் அன்னையருக்கும் ஊட்டச்சத்து மிக்க துணை உணவுகளை வழங்கும் சிறப்பு ஊட்டச்சத்துணவு வழங்கும் திட்டம், மைய அரசு நிதி உதவியால் நடைபெற்று வரும் திட்டமாகும். மாநில அளவில் மகளிர் நலத்துறை இயக்குநர் அவர்களைத் தலைவராகவும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைத் தலைவராகவும் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

துவக்கத்தில் இத்திட்டம், 6 மாதம் முதல் 3 வயதுடைய, பள்ளிக்குச் செல்லும் முன் வயதுடைய குழந்தைகளுக்குப் பயனளித்தது. தற்பொழுது இத்திட்டம் குடிசைப்பகுதிகளில் உள்ள, 6 மாதம் முதல் 6 வயதுடையகுழந்தைகளுக்கும் தாய்ப் பால் கொடுத்துவரும் அன்னையருக்கும் விரிவுபடுத்தப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், வாரத்தில் 6 நாட்களுக்கும், ஓராண்டில் 300 நாட்களுக்கும் ஊட்டச் சத்துள்ள உணவு வழங்கப்படுகிறது. குழந்தைகளுக்கும், அன்னையர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ், 25 கிராம் எடை கொண்ட, உயிர்ச்சத்து ( Vitamin ) செறிந்த சிறப்புப்பால் ரொட்டித் துண்டுகள் 3 வழங்கப்படுகின்றன.

தென்ஆர்க்காடு மாவட்டத்தில் இத்திட்டம் கடலூர் நகராட்சி எல்லையில் 3-6-1971 முதல் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இதுவரையில் இத்திட்டத்தின் கீழ்க் கடலூர் நகராட்சியில் ஏற்பட்டுள்ள சாதனை பின் வருமாறு உள்ளது.

| | இலக்கு. | சாதனை. |
|---|---|---|
| குழந்தைகள் | 3040 | 3040 |
| அன்னையர் | 400 | 400 |

சிறப்பு ஊட்டச் சத்துணவு வழங்கும் திட்டத்தினை தென் ஆர்க்காடு மாவட்டத்தில் இந்த ஆண்டில் (1972-73) செயல் படுத்துவதற்கு ரூபாய்1,14,000 ஒதுக்கப்பட்டுள்ளது. கடலூர் நகராட்சி எல்லையில், இத்திட்டத்தின் கீழ் ஊட்டச்சத்து மிக்க உணவு வழங்க 8 நிலையங்கள் உள்ளன. கடலூர் நகராட்சி ஆணையாளரின் மேற்பார்வையில், நகராட்சிப் பணியாளர்கள் ஊட்டச்சத்து மிக்க உணவு வழங்கும் பணியைச் சிறப்பாகச் செய்து வருகின்றார்கள்.



# தமிழில் வரைவுகளுக்குப் பரிசு

அரசுப் பணியாளர்களில் தமிழில் சிறந்த முறையில் வரைவுகளும் குறிப்புகளும் எழுதுகிற திறமை பெற்றவர்களுக்குப் பரிசளிக்கும் திட்டம் 14-7-1970-ல் அறிவிக்கப் பெற்றுத் தமிழ் வளர்ச்சித் துறைமூலம் தமிழக அரசு ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்டநிலை அலுவலர்களின் கீழ் பணிபுரியும் பணியாளர்களில் (கண்காணிப்பாளர், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள்) சிறந்தவர்களாகத் தேர்தெடுக்கப் பெறும் ஒவ்வொரு பணியாளரும் எழுதிய மூன்று கோப்புகள் அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அனுப்பப்படும். அந்தக் கோப்புகள் ஆய்வுசெய்யப்பட்டுச் சிறந்த குறிப்புகளும் வரைவுகளும் எழுதிய பணியாளர் தேர்ந்தெடுக்கப்பெறுவர். மாவட்ட ஆட்சியாளர் அவருக்கு 500 ரூபாய் பரிசும் நற்சான்றிதழ்களும்வழங்குவர். இவ்வாறு, பதின்மூன்று மாவட்டங்களுக்கும் மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 13 பேர் பரிசு பெறுவர்.

நமது சென்னை மாநகரைப் பொறுத்தவரை, அனைத்துத் துறைத் தலைமை அலுவலங்கள், சென்னை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்களில் ஒவ்வொரு அலுவலகத்திலிருந்தும் இருவரின் சிறந்த வரைவுகளும் குறிப்புகளும் அடங்கிய இரண்டிரண்டு கோப்புகள் தமிழ் வளர்ச்சி இயக்குநர்க்கு அனுப்புமாறு கோரப்படுகிறது. அவ்வாறு வரப்பெறுகிற கோப்புகளை ஆய்வு செய்து, பரிசுக் குரியவர்களாக இருவரைத் தேர்ந்தெடுப்பர்.

இவ்வகையில், சென்னை மாநகர்க்குரிய 1970-ஆம் ஆண்டிற்கான இரு பரிசுகளும், 25-3-1971-ல் மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர் அவர்களால் வழங்கப்பெற்றன.

இப்போது, 1971-ஆம் ஆண்டிற்கான பரிசுகளை, மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் பரிசு பெற உரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற திரு த. சம்பந்தம், திரு த. மு. சுப்பிரமணியம் இருவருக்கும் வழங்கினார். திரு சம்பந்தம் சென்னை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகவும், திரு. தா. மு. சுப்பிரமணியம், சென்னை வருவாய் வாரிய (நிலவரித் திட்டம்)த்தில் உதவியாளராகவும் பணிபுரிகின்றனர்.

இந்தப் பரிசளிப்பு விழா 19-10-1972-ல் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் அறையில் நடைபெற்றது. ஒவ்வொருவருக்கும் 500 ரூபாய் ரொக்கப் பரிசும், நற்சான்றிதழும் வழங்கிப் பாராட்டுகையில் "தமிழில் நல்ல குறிப்புகளும் வரைவுகளும் எழுதவேண்டும் என்ற ஆர்வத்தினை இப்பரிசுத் திட்டம் எல்லா அரசுப் பணியாளர்களிடத்தும் ஏற்படுத்தும் என்று தாம் நம்புவதாக மாண்புமிகு நாவலர் அவர்கள் தெரிவித்தார்கள்.

மேலும் அலுவலர்கள் தம் பட்டறிவினால் சிறந்த பொருண்மையுடைய தமிழ்ச் சொற்களை அறிய நேரும்போது அவற்றைத் தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்குத் தெரிவித்தல் சிறப்புடையதாக இருக்குமென்றும், தற்போது அரசு ஆய்வுப் பணி விரிவுபடுத்தப் பட்டிருப்பதால் தமிழ்த் திட்டம் அரசு அலுவலகங்களில் நல்ல முறையில் செயல்படுமெனவும் போதிய ஆர்வம் செலுத்த வேண்டுமென்றும், இனி வரும் ஆண்டுகளில் பரிசளிப்பு விழா பெரிய அளவில் அனைத்துப் பணியாளர்களும் கலந்து கொள்ளும் வகையில் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்படுமெனவும் தெரிவித்தார்கள்.

திரு சம்பந்தம் பரிசு பெறுகிறார்.



திரு சுப்பிரமணியம் பரிசு பெறுகிறார்.





# பொது மருத்துவ மனையில்

# ஒரு சிறப்புப் பிரிவு

இந்திய மருத்துவ வரலாற்றிலேயே ஒரு புதுமை. தமிழக மருத்துவத் துறைக்கு ஒரு பெருமை. சென்னை அரசினர் பொது மருத்துவ மனையில் ஒரு புதிய சாதனை.

சென்னை மருத்துவ மனையில் காது-மூக்கு-தொண்டை நோய்ப் பிரிவு ஒரு சிறப்புக் குரிய புதிய பணியினை மேற்கொள்ளத் தொடங்கி இருக்கிறது. அத்துறையில் ஓர் ஆராய்ச்சி நிலையமாக இயங்கத் தொடங்கி இருக்கிறது. இந்திய மருத்துவ வரலாற்றில் இப்படிப்பட்ட ஓர் ஆராய்ச்சி நிலையம் அமைவது இதுவே முதலாவதாகும். இந்நிலையத்தில் பட்டப் படிப்புக்கும், பட்ட மேற்படிப்புக்கும் படிக்கும் மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கும், ஆய்வு நிகழ்த்துவதற்கும், மருத்துவக் கல்வி பெறுவதற்கும் வாய்ப்பளிக்கப் படுகிறது.

இந்நிலையத்தை 18-10-1972 புதன் கிழமையன்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமையில் திறந்து வைத்தார்கள்.

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு நெ. து. சுந்தரவடிவேலு, விழா மலரை வெளியிட்டார். நல்வாழ்வு, குடும்ப நலத்துறை இயக்குநர் டாக்டர் பி. ஆர். பாலகிருஷ்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார். நலத்துறைச் செயலாளர் திரு அம்பாசங்கர் காதுப் பிரிவைத் துவக்கி வைத்தார்.

நிலைய இயக்குநரும், பேராசிரியருமான டாக்டர் சத்திய நாராயணா, இத் துறையின் வரலாற்றுப் பின்னணியையும், வளர்ச்சியையும், அந்த வளர்ச்சிக்கு உதவிய தமிழக முதல்வர், நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆகியோரின் ஒத்துழைப்பையும் முயற்சியையும் எடுத்துரைத்தார்.

தம்முடைய உரையில் டாக்டர் சத்திய நாராயணா குறிப்பிட்டதாவது, '' இத்துறைக்கும் நோயாளிகளுக்கும் இன்று ஒரு பொன்னாள். இத் துறையின் வளர்ச்சி பற்றியும், இந்த ஆய்வு நிலையம் பற்றியும் அதற்கான நிதித் தேவை பற்றியும் முதல்வரிடம் கூறியபோது, பெருநிதி தருவது இப்போது முடியாது தான். என்றாலும், முயற்சிகளையும், திட்டங்களையும் உங்களுடைய திறமையின் மூலம் செயற்படுத்திக் காட்டுங்கள்— பின்னர் நிதி பற்றிப் பார்த்துக் கொள்ளலாம் என்று சொன்னார். அவருடைய கருணையில்தான் இன்று இந்தப் பிரிவு உயர் நிலையமாக உயர்ந்துள்ளது.''

இத் திறப்பு விழாவுக்கான தமது வாழ்த்துச் செய்தியில், தமிழக ஆளுநர் அவர்கள் ''முதல்வரின் கரத்தால் திறக்கப் படுவதால், இது மேலும்மேலும் சிறந்தோங்கும்'' என்று கூறியுள்ளார். முதல்வரவர்களின் அந்தப் பொற்கரங்கள் இந்த மருத்துவமனை முழுவதிலும் பட்டு மிளிரட்டும்! மருத்துவ மனை பாங்குடன் சிறக்கட்டும்!''

### அன்பே அருமருந்து !

''டாக்டர்களின் திறமையை விட, அவர்கள் நோயாளிகளிடம் காட்டும் அன்புதான் சிறந்த மருந்தாகும். எனவே, நோயாளிகளிடம் தமது திறமையைக் காட்டுவதைவிட டாக்டர்கள் அன்பையே அதிகம் காட்ட வேண்டும். அதுவே நோயாளிக்கு ஆறுதலும், ஊக்கமும் தந்து நோயைக் குணப்படுத்தப் பெரிதும் உதவும்'', என்று முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சென்னைப் பொது மருத்துவமனை டாக்டர்களிடம் கூறினார்.

அத்துடன், சமதர்மச் சமுதாயத்தை அமைக்கவும், டாக்டர்கள் உதவிட முடியும் என்றும், உதவிட வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

இந்தியாவிலேயே முதன் முதலாகப் புதிதாக அமைக்கப் பட்டுள்ள காது-மூக்கு-தொண்டை சிறப்புப் பகுதியை சென்னை அரசினர் பொது மருத்துவ மனையில் திறந்து வைத்துப் பேசுகையில் டாக்டர் கலைஞர் அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்கள்.

மேலும் அவர்கள் கூறியதாவது :

''இப்பொது மருத்துவ மனையில், டாக்டர் சத்தியநாராயணா அவர்களின் ஆர்வத்தாலும், அவர் சுட்டிக் காட்டிய அரசாங்கத்தின் ஒத்துழைப்பாலும், விரிந்தும் உயர்ந்தும் இருக்கின்ற காது-மூக்கு-தொண்டைப் பிரிவின் ஆய்வு நிலையத் தொடக்க விழாவில் பங்கேற்பதில் பெரிதும் மகிழ்ச்சி கொள்கிறேன்.



'' ஒரு சிறிய இருட்டறையில் நடைபெற்றுக் கொண்டிருந்த இந்தப் பிரிவு 1934 முதல் முன்னேறத் தொடங்கி, இன்று உயர்த்தப்பட்ட ஒரு பிரிவாக வளர்ந்துள்ள வரலாற்றைச் சுட்டிக் காட்டினார்கள். ஒவ்வொரு முறையும் சிறுகச்சிறுக வளர்ந்து வந்தது என்றும் சொல்லப்பட்டது.

''இப் பிரிவின் வளர்ச்சி குறித்து என்னையோ, சம்பந்தப் பட்ட நல்வாழ்வுத் துறை அமைச்சரையோ அணுகி டாக்டர்கள் கேட்டபோது நிதி நெருக்கடியின் காரணமாகத் தான் இதில் முழு முயற்சியை உடனடியாக மொத்தமாக மேற்கொள்ள முடியாமல் தாமதப்படுத்தி இருக்கிறோம்.

''பல்வேறு கருவிகளையும், மருத்துவ வசதிகளையும் படிப்படியாகப் பெற்றுப் படிப்படியாக இப் பிரிவு விரிவடைந்து வளர்ந்தது என்று டாக்டர் சத்தியநாராயணா குறிப்பிட்டார்கள்.

''எந்த வளர்ச்சியும் படிப்படியாகத்தான் இருக்க வேண்டும். திடீர் வளர்ச்சி என்பது ஆபத்தாகவே முடியும். நோயாளியின் நோயும் படிப்படியாகத் தான் குணமடைய வேண்டும். காலை எட்டு மணிக்கு வருகிற ஒருவரின் நோய் ஒன்பது மணிக்கே குணமாக முடியாது. அப்படி ஒரு மணி நேரத்திற்குள்ளேயே குணமடைந்து விட்டதென்றால், அது நோய் குணமடைந்ததாகப் பொருளல்ல. நோயாளியே மொத்தமாக 'குணமடைந்துபோய் விட்டான்' என்றுதான் பொருள்.

''மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அவர்கள் பேசும்போது, டாக்டர்களின் பணி நாட்டுக்குப் பயன்பட வேண்டும் என்றும் அதற்கேற்றபடி டாக்டர்கள் தமது கடமையை உணர்ந்து செயற்பட வேண்டும் என்றும் கூறினார்கள். கடந்த சில மாதங்களாகக் கண்ணொளி வழங்கும் திட்டம் செயற்பட்டு வருகிறது. அத்திட்டத்தால் பயன்பெறுவோர் பாமர மக்களேயாவர்.

''கண் கெட்டால் வாழ்வு போய்விடும், அது விதிப்பயன் என்று மட்டுமே நொந்து கிடக்கும் கிராம மக்களுக்கு அவர்களுக்கு வழி இருக்கிறது; நல்ல வாய்ப்பு இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி உதவிட ஆளில்லாமல், தமக்கு இப்படி வாய்ப்பு உள்ளது என்பதை அறியாமலும், அதைப் பயன்படுத்திக் கொள்ளாமலும் அவர்கள் அல்லற்படுகின்றனர். அப்படிப்பட்ட மக்களுக்காகக் கண்ணொளி வழங்கும் திட்டத்தினை நம் அரசாங்கம் செயற்படுத்தி வருகிறது.

'' சென்னை, கோவை, மதுரை போன்ற நகரங்களில் மட்டுமே வசதியான ஆடம்பரச் சூழலில் வாழ்ந்து பழக்கப்பட்ட டாக்டர்கள், இத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காகக் கிராமப் புறங்களுக்குச் சென்று கந்தலாடை கட்டிய மக்களை, ஒட்டிய கன்னங்களும், கந்தலாடையும் கொண்டு ஏழ்மைப்பிடியில் வாடும் அந்த மக்களை அணுகி, அவர்களோடு உறவாடி அவர்களது கண்களுக்குச் சிகிச்சை அளித்து ஒளி பெறச் செய்கிறார்கள்.

'' கண்ணொளி பெற்ற அந்த ஏழைமக்கள், மனமார டாக்டர்களையும், இந்த அரசாங்கத்தையும் நன்றியுடன் வாழ்த்தும் போதும், கையெடுத்துக் கும்பிடும் போதும், அதைக் காண்கின்ற எங்களுக்கு மெய்யெல்லாம் சிலிர்க்கிறது; உள்ளத்தில் பேரானந்தம் பொங்கி வழிகிறது !

''இப்படி மக்களின் நோயைக் குணப்படுத்துவதில் அரசும், மருத்துவர்களும் ஈடுபாடு கொண்டு இணையற்ற பணியாற்றி வருவது கடமையுணர்வில் தமிழ்நாடு முன்னிற்கிறது என்பதைக் காட்டுகிறது.

''இந்நிலையத்தின் இயக்குநரான டாக்டர் சத்திய நாராயணா அவர்கள் இனிமையாகப் பழகி மனம் விட்டுப் பேசுகின்றவர்.

''நான் அவரிடம் சிகிச்சை பெற்றிருக்கிறேன். அப்போது, அவர் மிகவும் பாராட்டத் தக்கவகையில் செயற்பட்டார். என்னை ஒரு முதல்வர் என்று கருதிச் செயற்படவில்லை. ஒரு நோயாளியாகவே கருதிச் செயற்பட்டார்.

''இப்படி எல்லாரையும் சமமாகப் பாவித்துப் பணியாற்றும் அவரது இயல்பு மிகவும் பாராட்டுக்குரியது. நாட்டில் ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை அமைத்துச், சமதர்மம் கண்டிட இப்படிப்பட்ட தொண்டுதான் தேவை. அப்படி எல்லாரையும் சமமாக மதித்துப் பணியாற்றிச் சமதர்ம சமுதாயம் காணத் துணை நிற்கும் டாக்டர்கள் பலரில் சத்திய நாராயணாவும் ஒருவர். அவர் தனது ஆற்றலால் அனைத்துலகப் புகழ் பெற்றவர். அவர் எழுதிய மருத்துவத் துறைப் புத்தகங்கள் உலகெங்கும் பாராட்டப்படுகின்றன ; பாட நூற்களாகவும் அமைந்துள்ளன.

''இம் மேடையில் அவரைப் பாராட்டுவதைப் போலவே தங்களையும் பாராட்டிப் போற்றும் வகையில் ,ஏனைய டாக்டர்களும் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடிக்கின்றேன்.''






# அரிசன— பின்தங்கிய மக்கள் அடைந்துள்ள நன்மைகள்

‘சமுதாயத்தில் ஒரு பிரிவினரைத் தீண்டத் தகாதவர்கள் என்று ஒதுக்கி வைத்திருக்கும் நிலை மாறுதவரை சுயராஜ்ஜியம் என்ற வார்த்தைக்கு அர்த்தமில்லை’ என்றார் காந்தியடிகள். ‘எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்’ என்று கவிஞன் பாடிய பாடல் மட்டும் அல்ல, இன்று நடைமுறையில் காணும் நேரிடையான உண்மையாலும், நெடுங்காலமாகத் தாழ்த்தப்பட்டு அதன் விளைவாகப் பின்தங்கிவிட்ட அரிசனங்கள், குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர், இதர பிற்பட்ட வகுப்பினர் அனைவரும் இன்று தமிழக அரசின் தளராத தொண்டினாலும் வியக்கத்தகும் முன்னேற்றம் அடைந்துள்ளனர். ஆயிரக்கணக்கானவர் அறிவை வளர்க்கும் கல்வி பயின்று ஆக்கம் தேடும் தொழில் புரிந்து சொந்த வீடு கட்டிக் கொண்டு சீரும் சிறப்புமாக வாழ, ஏழை மக்களுக்கு ஏற்றம் தரும் தமிழக அரசு பாடுபட்டு வருகிறது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் அரிசன வகுப்பைச் சேர்ந்த மக்களின் எண்ணிக்கை சுமார் 7 இலட்சமாகும். இது மொத்தத் தொகையில் 25 சதவிகிதம். இப் பின்தங்கிய வகுப்பினர் விவசாயத்தில் வளம் பெற நிலமும், நிலத்தை உழக் கால்நடைக் கருவிகள் வாங்கக் கடனும் அரசு வழங்கி வருகிறது. சிறு தொழில் புரியவும் அரசு ஆதரவு அளிக்கிறது. செவிக்கில்லாத போது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் என்ற சொல்லுக்கேற்பக் கல்வி பயிலும் அரிசன மாணவர்களுக்கும் மதிய உணவும் தங்க இடமும் அளிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் அரிசன வகுப்பினரும் மலைச் சாதியினரும் உள்ளனர். இதில் அரிசன வகுப்பினர் செஞ்சி வட்டத்தில் 49,999 பேரும், திண்டிவனம் வட்டத்தில் 1,62,530 பேரும் விழுப்புரம் வட்டத்தில் 85,673 பேரும் திருக்கோவலூர் வட்டத்தில் 1,06,830 பேரும் கடலூர் வட்டத்தில் 1,13,535 பேரும் கள்ளக் குறிச்சியில் 1,94,412 பேரும் விருத்தாசலம் வட்டத்தில் 1,08,728 பேரும் சிதம்பரம் வட்டத்தில் 1,33,725 பேரும் உள்ளனர்.

மலைச் சாதி வகுப்பினர், செஞ்சிவட்டத்தில் 3,681 பேரும், திண்டிவனம் வட்டத்தில் 4,602 பேரும் விழுப்புரம் வட்டத்தில் 1,053 பேரும் திருக்கோவலூர் வட்டத்தில் 945 பேரும், கடலூர் வட்டத்தில் 649 பேரும் கள்ளக்குறிச்சி வட்டத்தில் 540 பேரும் விருத்தாசலம் வட்டத்தில் 1,350 பேரும் சிதம்பரம் வட்டத்தில் 717 பேரும் உள்ளனர்.

### கல்வி வளம்

இவர்களின் கல்வித் தரத்தினை உயர்த்த அரசு பாடுபட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் 1968—69-ல் 178 பள்ளிகளில் 671 ஆசிரியர்கள் பணிபுரிந்து வந்தனர். அதுவே 1970—71-ல் 183 பள்ளிகளாகவும் 958 ஆசிரியர்களாகவும் உயர்ந்தது. இப் பள்ளிகளில் சுமார் 23,000 அரிசனப் பிள்ளைகள் படித்து வருகிறார்கள்.

இம்மாணவர்கள் தங்கிப் படிப்பதற்காக இம்மாவட்டத்தில் 1968–69 வரை 42 தங்கும் விடுதிகளில் 3,586 மாணவர்கள் தங்கிப் படித்து வந்தனர். அவர்களுக்கு ரு. 7,47,944 அரசினரால் செலவிடப்பட்டிருக்கிறது. இவற்றோடு அரசு உதவி பெறும் விடுதிகள் 5-ம் தனியாரால் உதவி பெறும் விடுதிகள் 3-ம் இயங்கி வருகின்றன. 1970—71-ல் அரசினர் நடத்தும் விடுதிகள் 44 ஆக உயர்ந்தன. இவ்விடுதிகளில் தங்கும் மாணவர்களுக்கு விடுதியிலேயே படிப்புச் சொல்லிக் கொடுக்க 31 பகுதி நேர ஆசிரியர்கள் அமர்த்தப் பட்டிருக்கிறார்கள். இந்த விடுதிகளில் 4,706 மாணவர்கள் தங்கி வருகிறார்கள். இவர்களுக்காக அரசு ரு. 8,48,355 செலவிட்டது. உண்ண வகையில்லாமல் கல்வியின் அவசியத்தை உணர்ந்திருந்த மக்களுக்கு, பள்ளிகளில் உணவளித்து, இந்த அரிசன மாணவர்களுக்குக் கல்வி புகட்டி வருகிறது அரசு. 1968—69-ல் 12,806 மாணவர்களுக்கு ரு. 5,16,640 செலவில் மதிய உணவு வழங்கப்பட்டது. 1969—70-ல் 13,378 மாணவர்களுக்கு ரு. 4,91,868 செலவில் மதிய உணவு வழங்கப்பட்டது. அதுவே 1970—71-ல் 13,526 மாணவர் ஆக உயர்ந்தது. அரசு இவர்களுக்காகச் செலவு செய்வது ரு. 5,40,568 ஆக உயர்ந்திருக்கிறது.

கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் படிக்கும் அரிசன பின்தங்கிய மாணவர்களுக்குப் புத்தகங்கள் வாங்கவும், விடுதிகளுக்குப் பணம் கட்டவும் உணவு உடைகளுக்கும் அரசு, உதவித் தொகை வழங்கி வருகிறது. 1968—69-ல் 27,444 மாணவர்கள் ரு. 11,57,339 உதவித் தொகை பெற்று வந்தனர். 1969—70-ல் 37,523 மாணவர்கள் ரு. 13,88,145 பெற்று வந்தனர். 1970—71-ல் 48,386 மாணவர்களுக்கு ரு. 19,33,075 உதவித் தொகையாக வழங்கப் பட்டது.

உடுக்க உடையில்லாமல் தவிக்கும் அரிசன-பின்தங்கிய மாணவ மாணவியர்களுக்கு அரசு சீர் உடைகள் வழங்கி வருகிறது. 1969—70-ல் சீர் உடை வழங்குவதற்காக ரு. 2,76,400 அரசு செலவிட்டிருக்கிறது. 1970—71-ல் ரு. 2,50,000 அரசு செலவிட்டிருக்கிறது. பள்ளிப் பிள்ளைகளுக்கு எழுதும் பலகை, எழுதுகோல், புத்தகங்கள் இலவசமாகக் கொடுக்க ரு. 2,67,303-க்கு 1970—71-ல் அரசு செலவிட்டுள்ளது.

### தீண்டாமை

தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மக்களிடையே தீண்டாமை ஒழிக்க இங்கு ஆண் பெண் சமூக நல ஊழியர்கள் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரப் பணிகளை மேற்கொண்டு வருகி

ரூர்கள். சிறந்த முறையிலே துப்புரவாகவும் தொழில் துறையில் முன்னேற்றமும் கண்டுள்ள கிராமங்களுக்கு ஊக்கமளிக்க மாவட்டந் தோறும் அரசு ரூ. 1,500 பரிசு வழங்கி வருகிறது. அதோடு சிறந்த அரிசனக் காலனிகளுக்கு வானொலிப் பெட்டி போன்ற பரிசுகளை வழங்கி வருகிறது. தீண்டாமையை மறக்க அரிசன விழாக்கள் ஊர்தோறும் வருடம் தோறும் கொண்டாடப்படுகிறது.

### வீட்டு வசதி

ஒழுகும் கூரைகளிலும், ஓலைக் குடிசைகளிலும், மரத் தடியிலும் வாழ்ந்து நலிவுற்ற இம்மக்களுக்குச் சிறந்த முறையில், ஒழுகாத வீடுகளில் குடியிருக்க வீடுகள் கட்டிக் கொடுக்கிறது அரசு. வீடுகள் கட்டுவதற்கு இம்மக்களுக்குக் கடன் உதவியும் அளித்து வருகிறது. இத்திட்டம் 1970-ல் தான்முதன்முதலாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் ரூ. 83,000 ஒதுக்கப்பட்டுள்ளது. 1970-ல் விழுப்புரம் வட்டத்தில் உள்ள வளவனூரில் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 1971-ல் 4 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கட்டடவேலைகள் நடைபெற்றன.

### நிலமற்றோருக்கு நிலம்

இம்மாவட்டத்திலுள்ள அரிசன, பின்தங்கிய மக்களுக்காக நிலப்பட்டா வழங்கி அவர்கள் வீடு கட்டிக் கொள்ள வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. இவ்வாறு வழங்கப்பட்ட இடங்களில் இம்மக்கள் வீடு கட்டிச் சுகாதாரமான வாழ்க்கை வாழ்ந்து வர அரசு வழி செய்திருக்கிறது. குடிநீர் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. அரிசன மக்களுக்கென நடைபாதை, இடுகாடு போன்ற வசதிகள் ஏற்படுத்த இடங்களை ஒதுக்கி வருகிறது. கடந்த 4 ஆண்டுகளில் அரசு வழங்கிய நிலப்பட்டாக்களின் எண்ணிக்கை.

| ஆண்டு. | வழங்கப்பட்ட நிலங்களின் மதிப்பு. | பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| | ரூ. | |
| 1968–69 | 3,00,367 | 2,169 |
| 1969–70 | 2,62,500 | 3,382 |
| 1970–71 | 5,42,872 | 12,775 |

### உழவுக்கு ஊக்கம்

இம்மாவட்டத்திலுள்ள அரிசன மக்கள் உழவுத் தொழிலில் மேன்மை பெற விவசாயக் கருவிகளும், உரங்களும் நல்ல விதைகளும் கடன் உதவியும் அரசு வழங்கியிருக்கிறது. அவ்வகையில் கடந்த 4 ஆண்டுகளில் அரசு செய்த பேருதவி.

| ஆண்டு. | பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை |
|---|---|---|
| | | ரூ. |
| 1968–69 | 46 | 57,250 |
| 1969–70 | 128 | 86,350 |
| 1970–71 | 118 | 1,10,500 |

தொழில் வளர மட்பாண்டம், தச்சுத் தொழில், காலணி செய்தல் போன்ற சிறு தொழில் செய்து வரும் அரிசன மக்களுக்காக அவர்களுள் சிலரைத் தேர்ந்தெடுத்து அரசு கடன் உதவி அளித்து வருகிறது.

### அரசு அலுவலகப் பயிற்சி

1969–70-ல் அரசு அலுவலகப் பயிற்சி துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. பயிற்சியின் காலம் ஓராண்டாகும். இங்குத் தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆகியவை கற்பிக்கப்பட்டு அரசுத் தொழில் நுட்பத் தேர்விற்கு அனுப்பப்படுகின்றனர். தமிழில் தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பயிற்சி விரைவிலேயே துவக்கப்படும்; மாதம் ரூ. 20 உதவிச் சம்பளம் இங்கு பயில்வோருக்கு அளிக்கப்படுகின்றது.

இவ்வாறு அரசு, அரிசன மக்களுக்கும் பின்தங்கிய மக்களுக்கும் இந்த மாவட்டத்தில் பெரும் உதவிகளை செய்துவருகிறது.

---

தமிழ்நாட்டில் உள்ள மூன்று வேளாண்மைக் கல்லூரிகளில் படித்துப் பட்டம் பெற்ற அனைவருக்கும் தமிழக அரசு வேலை வாய்ப்பு வழங்கி ஒரு சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

1971–72-ஆம் ஆண்டில் வேளாண்மைப் படிப்பில் பட்டம் பெற்ற பட்டதாரிகள் 250 பேருக்கும் 1972–ஆம் ஆண்டில் தேறிய 223 பட்டதாரிகளுக்கும் தமிழ்நாடு வேளாண்மைத் துறை வேலை வாய்ப்பு வழங்கியுள்ளது.

இது அல்லாமல் பிற மாநிலங்களைச் சேர்ந்த வேளாண்மைப் பட்டதாரிகளுக்கும் வேலை வாய்ப்புவழங்கப்பட்டுவருகிறது.

• • •

1971 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ் நாட்டில் முதல் தடவையாக 14 நகர்கள் ஐம்பதாயிரத்திற்கு மேல் மக்கள் தொகை பெற்ற நகரங்களாக உள்ளன.

அவை திருவொற்றியூர், ஆவடி தாம்பரம், பல்லாவரம், திருவண்ணாமலை, ஆம்பூர், வாணியம்பாடி, விழுப்புரம், நெய்வேலி சிங்காநல்லூர், திருவரங்கம், காரைக்குடி, கடையநல்லூர் ஆகிய நகரங்களாகும்.

கோவை மாவட்டத்தில் உள்ள சிங்காநல்லூரில் மக்கள் தொகை ஐந்து மடங்கு பெருகியுள்ளது. 1961-ல் அதன் மக்கள் தொகை 26,674 தான். அது இப்போது 1,12,306 ஆகியுள்ளது. அதே மாதிரி ஆவடியிலும் 13,050

## கொய்தவை

மாநிலத்தில் இப்போது ஐம்பதாயிரம் மக்கள் தொகைக்கு மேற்பட்ட 43நகரங்கள் உள்ளன. 1961-ல் 25 நகர்களே அப்படியிருந்தன. இப்போது ஒரு இலட்சம் முதல் இரண்டு இலட்சம் மக்கள் தொகையுள்ள 12 நகர்கள் உள்ளன. 1961-ல் இப்படி 9 நகர்களே இருந்தன.

லிருந்து 77,413 ஆகியிருக்கிறது. நெய்வேலி நகரியத்தில் 10,296-லிருந்து 58,265 ஆக மக்கள் தொகை பெருகியிருக்கிறது.

தர்மபுரி மாவட்டத்தில் 50,000 மக்கள் தொகைக்கு மேற்பட்ட நகர் ஒன்று கூட இல்லை.





தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள விருத்தாசலம் இன்று வெளிநாடுகளில் எல்லாம் அறிமுகமாகத் தொடங்கியுள்ளது. அதற்குக் காரணம்—அங்குள்ள ஆர்ட்டீசியன் கிணறுகள் மட்டுமல்ல—பீங்கான் தொழில் வளர்ச்சியுற்றிருக்கும் பாங்கான நிலையும் அதற்குக் காரணம்.

விருத்தாசலத்தில் அரசு அமைத்துள்ள பீங்கான் தொழிற்பேட்டை தென் ஆர்க்காடு மாவட்டத்திற்கே தனிப்பெருமையை ஏற்படுத்தி வருகிறது.

இந்தியாவில் உள்ள பீங்கான் தொழிலகங்கள் பீஹார், வங்காளம் ஆகிய மாநிலங்களில் தீவிரமாகச் செயலாற்றுகின்றன. இந்தியாவின் தென் பகுதியும் அந்த வகையில் செயலாற்றுவதற்குரிய வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறது.



மக்களுக்கு விருந்து படைத்து வருகிறது இந்தப் பீங்கான் தொழிற்சாலை. சென்ற ஆண்டு தொழில் வணிகத்துறையின் சார்பில் சென்னை இராசாசி மன்றத்தில் நடைபெற்ற இருவாரக் கண்காட்சியில் ஏராளமான அளவில் பீங்கான் பொருள்கள் விற்பனையாகின. இந்தப் பீங்கான் பொருள்களில் போர்வீரன் பொம்மை ஒன்று குறிப்பிடத்தக்கதாகஇருந்ததைச்சென்னை மக்கள் மறக்க முடியாது.

இந்தத் தொழிற்கூடத்தின் முக்கியத் தயாரிப்புகள் உப்பு மெருகிடப்பட்ட பீங்கான் குழாய்கள். 4 அங்குலம், 6 அங்குலம், 9 அங்குலம், 12 அங்குலம், 15 அங்குலம் ஆகிய அளவுகள் விட்டமுள்ள பீங்கான் குழாய்கள் இங்கே செய்யப்படுகின்றன.

தமிழகத்தில்—பீங்கான்தொழிலுக்குத் தேவையான எல்லா மூலப் பொருள்களும் கிடைக்கின்றன. தரமான சைனாக் களிமண்—நெய்வேலி லிக்னைட் சுரங்கத்திலிருந்து கிடைக்கிறது. துப்புரவுப் பணிக்குப் பயன்படும் பீங்கான் பொருட்கள் தயாரிப்பதற்குத் தேவையான ஒரு வகைக் களி மண்ணும் நெய்வேலியில் கிடைக்கிறது. பண்ணுருட்டி-திண்டிவனம் ஆகிய பகுதியிலும் இந்தக் களிமண் கிடைக்கிறது. ஏனைய மூலப் பொருள்களான, க்வார்ட்ஸ், பெல்ஸ்பார் ( Felspar ), ஜிப்சம் ( Gypsum ) ஆகியவை சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் கிடைக்கின்றன. மிகமிகத் தரமான மேக்னசைட், சேலத்தில் மிகுந்து காணப்படுகிறது. ஆகவே, தமிழகம் இந்த மூலப் பொருள்களைத் தன்னகத்தே கொண்டிருப்பதால்—இந்தப் பீங்கான் தொழிலைச் சிறப்புடன் செய்வதற்குத் தென் ஆர்க்காடு மாவட்டத்திற்கு நல்வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

பீங்கான் தொழில்—நாட்டின் நாகரிக வாழ்வுக்கு—நாட்டின் தொழில் வளத்துக்கு மிகவும் பயன்படும் ஓர் அடிப்படைத் தொழில். அநேக தொழில்கள், பீங்கான் தொழிலின் ஓர் அங்கமாக விளங்கும் சுகாதாரப் பொருட்களை எதிர்பார்த்து நடைபெறுகின்றன. மின் ஆற்றலால் இயங்கும் பல தொழில்கள்—தங்கள் உலைகளில் பீங்கான் பொருட்களைப் பயன்படுத்துகின்றன. இரும்பு—உருக்குத் தொழில்கள் பீங்கான் பொருட்களை மிகவும் எதிர்பார்க்கின்றன.

தொழில் துறை மட்டுமல்ல—சமுதாயத் துறையும் பீங்கான் பொருள்களை வரவேற்று வருகின்றன. செங்கற்கள், ஓடுகள், மெருகிடப் பட்ட பீங்கான் ஓடுகள், சுகாதாரச் சாதனங்கள் குழாய்கள், இன்சுலேட்டர்கள், ஆகியவை மக்கள் வாழ்வில் உன்னத இடத்தைப் பிடித்துள்ளன.

நமது நாட்டிலே உள்ள வசதி படைத்த மக்கள் பீங்கானால் செய்யப்பட்ட, சமையற் கருவிகள், அலங்காரப் பொருட்கள், கோப்பைகள், தம்ளர்கள், கலைப் பொருட்கள் ஆகியவற்றைப் பெரு விருப்பத்துடன் பயன்படுத்தி வருகிறார்கள்.

உச்ச ஆற்றல், மித ஆற்றல் கொண்ட இன்சுலேட்டர்கள் மின் துறையில் பயன்படுத்தப்படுகின்றன.

எனவே, ஆண்டு தோறும் இந்தப் பொருட்களின் விற்பனை அதிகரித்து வருகின்றதே தவிரக் குறைந்ததே கிடையாது.

ஆண்டு தோறும் பீங்கான் பொருட்களின் கண்காட்சி ஒன்றினையும் ஏற்படுத்திப் பொது

இந்தியாவில் மற்ற மாநிலங்களில் உள்ள பீங்கான் தொழிற்சாலைகளில் 12 அங்குலம் வரை தான் குழாய்கள் செய்கிறார்கள். ஆனால் 15 அங்குலம் விட்டமுள்ள குழாய் இங்கேதான் செய்யப்படுகிறது.

சுகாதாரத் துறையில்—கழிவு நீர் அகற்றுவதற்கு—மற்றும் பல்வேறு வகைகளில் பயன்படும் இந்தக் குழாய்கள், விருத்தாசலம் பீங்கான் தொழிலுக்கே தனிப் பெருமை தரக் கூடியவை. இவை, உலைகளில் வைத்துத் தயாரிக்கப்படும்போது இறுதியில் சாதாரண உப்புத் தூவப்படுகின்றது. அதன் காரணமாக இந்தக் குழாய்களில் ஒரு தனி வண்ணம்—உருக்கு போன்ற வண்ணம் ஏற்படுகிறது. இந்த வண்ணம் அழிவதே கிடையாது. அது இந்தத் தொழிற் கூடத்தின் தனிச்சிறப்பு.

அதன் காரணமாகத்தான் 'இந்திய தரக் கட்டுப்பாடு' தனது முத்திரையைப் பதித்துக் கொள்ள அனுமதி அளித்திருக்கிறது. தமிழ் நாட்டில் பயன்படுத்தப் பெறும் குழாய்களில் பெரும்பாலும் இந்த நிறுவனத்தில் உருவாக்கப்பட்டவைதான்.

மைசூர், ஆந்திரம், கேரளம் முதலிய மாநிலங்களுக்கு இந்தக் குழாய்கள் அனுப்பப்படுகின்றன. வெளிநாடுகளுக்கும் விரைவில் ஏற்றுமதி செய்யப்பட விருக்கின்றன. ரூ. 1½ இலட்

சத்துக்குரிய பீங்கான் குழாய்கள் தேவை என்று இலங்கை தெரிவித்திருக்கிறது.

இந்தத் தொழிற்சாலையில் பீங்கான் குழாய்கள் மட்டுமல்ல; வீட்டு உபயோகத்திற்குரிய துப்புரவுச் சாதனங்களும், சமையல் சாதனங்களும், கலைப் பொருட்களும் உருவாக்கப்படுகின்றன. அவை பல வண்ணங்களிலும் உருவாக்கப்பட்டு வருவது பாராட்டுக்குரியது. மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளவல்லது. இதனைச் சென்ற ஆண்டுசென்னை இராசாசி மன்றத்தில் நடைபெற்ற பீங்கான் தொழிற்கண்காட்சியும், பீங்கான் பொருட்களின் விற்பனையும் மெய்ப்பிக்கின்றன.

### பயிற்சிப் பள்ளி

பீங்கான் தொழிலில் ஈடுபடக் கைத்திறன் மட்டும் போதாது; கலை நுணுக்க அறிவும் அவசியம் ஆகும். பீங்கான தொழிலின் செய் பொருள்கள் பெருமளவு அழகுப் பொருட்களாக இருக்கின்றன. அழகுப் பொருட்களின் பெருமை காலத்தை ஒட்டிய கண்ணோட்டத்தில் செய்வதில்தான் இருக்கிறது. இத் தொழில் சிறக்க, காலத்தால் அழிவு பெறுமல் இருக்கத் திறன் பெற்ற கைத்திறன், கலைநுணுக்க விற்பன்னர்கள் தேவை. இதற்காகப் பயிற்சிப் பள்ளி ஒன்றும் இயங்கி வருகிறது.

இப்பயிற்சிப் பள்ளியில் ஆண்டொன்றிற்கு 15 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இங்குப் பயிலும் ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ. 50 உதவித் தொகையும் அளிக்கப்படுகிறது.

### தொழிற்பேட்டை

தனியார் துறையில் தனிப்பட்டவர்கள் பீங்கான் தொழிலில் ஈடுபடச் சில இயற்கையான இடர்ப்பாடுகள் உள்ளன. தொழில் அகங்கள் கட்டுவதற்கே ஏராளமான பணம் தேவைப்படுவது, தேவையான இயந்திரங்களின் உயர்ந்த விலை, தொழில் நுணுக்க அறிவுப் பற்றுக்குறை, தொடக்கக் காலத்தில் உள்ள இயற்கையான இடர்ப்பாடுகள் ஆகிய அனைத்தும் தனிப்பட்டவர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட முட்டுக் கட்டைகளாக இருக்கின்றன.



இக்குறைகளைக் களைய அரசே தொழிற்பேட்டை ஒன்றை விருத்தாசலத்தில் அமைத்துள்ளது. இங்குப் பலதரப்பட்ட தனியார்களின் தேவைகளுக்கு ஏற்ப ஏ.,பி.,சி.,டி., என்று நான்கு வகைத் தொழிலகங்கள் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் தனிப்பட்டவர்களுக்கு வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் விடப்படுகின்றன. இந்தத் தொழிற் பேட்டையிலேயே பொது சர்விஸ் நிலையம் ஒன்றுள்ளது. இங்கிருந்து எல்லாத் தொழிலகங்களுக்கும் தேவைப்படும் மூலப் பொருட்கள் பக்குவப் படுத்தி அளிக்கப்படுகின்றன. அதனுல் பொருட்களை உருவமாக உருவாக்கும் இயந்திரங்களை மட்டும் தனியார்கள் வைத்துக் கொண்டால் போதும்.

மேலும் தொழில் தொடங்க விரும்பும் தனியார்களுக்குத் தொழில் நுட்பம், இயந்திரங்களை அமைக்கும் முறை போன்ற பல்வேறு வகைகளிலும் இங்கு உதவிகள் செய்து தரப்படுகின்றன.

தனியார்கள் மிகுந்த பொருட் செலவில் உலைகள் உருவாக்கிக் கொள்ள முடியாது. அதனுல் அவர்கள் உலைகளைப் பயன்படுத்திக் கொள்வதற்குச் சதுர அடிக்கு 7 காசுகள் வீதம் வசூல் செய்து கொள்கிறது இந்தத் தொழிற்சாலை. இது ஓர் அரிய வாய்ப்பு.

படித்துவிட்டு, வேலையின்றித் தவிக்கும் ஒரு சில பட்டதாரிகள், இங்கேயுள்ள residence cum work shop திட்டத்தைப் பயன்படுத்தி முன்னேற்றம் அடைந்து வருகிருர்கள். டிப்ளமா பட்டம் பெற்ற சிலரும் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி வருகிருர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

தமிழகத்தில் தென் ஆர்க்காடு இவ்வாறு, பீங்கான் தொழிலில் ஓங்கி நிற்கிறது.

## வெண்பாப் போட்டி 46

'காற்று' எனத் தொடங்கி 'மழை' என முடித்தல்.

முடிவு நாள் : 16—11—1972

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—
ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
''தமிழரசு'' அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு :
அஞ்சல் அட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக் கொள்ளப்படும்.



# உழவர்களுக்குப் பயிற்சி தரும் ஒப்பற்ற நிலையம்

மாலையின் பெருமை மலர்களைத் தொடுப்பவனின் கைத்திறனில் உள்ளது. அதே போல் உழவின் பலன் உழவனின் திறமையில் உள்ளது.

எல்லாத் தொழில்களுக்கும் அச்சாணியாக விளங்குவது உழவு; அத்தொழிலில் வளர்ச்சியின்றி மற்றத் தொழில்களில் நிலையான-நிரந்தரமான நியாயமான வளர்ச்சி அடைவது இயலாத ஒன்று.

உழவுத் தொழிலின் மேன்மை, உழவர்களின் ஆக்கத் திறன், அறிவுத் திறன் ஆகியவைகளை ஒட்டிச் செல்வது. பழையன கழிதலும் புதியன புகுதலும் எல்லாத் தொழிலிலும் உண்டு. உழவுத் தொழிலும் இதற்கு விதிவிலக்கல்ல.

இதைக் கண்ணுற்று உழவர்களின் கைத்திறனை, நுணுக்க அறிவுத் திறனை வளர்க்கத் தமிழக அரசு பலவகையான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. அவற்றில் ஒன்று மாநிலமெங்கும் பரவலாக ஆங்காங்கே உழவர்கள் பயிற்சி நிலையங்கள் அமைத்து, அந்தந்தப் பகுதி உழவர் பெருமக்களுக்கு ஆண், பெண் வேறுபாடின்றிப் பயிற்சி அளிப்பதாகும்.

இதுவரையிலும் தமிழகம் முழுவதும் தமிழக அரசு எட்டு உழவர்கள் பயிற்சி நிலையங்களை அமைத்துள்ளது. அவைகள் முறையே கோயம்புத்தூர் மாவட்டத்தில் பவானிசாகர், வட ஆர்க்காடு மாவட்டத்தில் ராணிப்பேட்டை, தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆடுதுறை, திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டி, மதுரை மாவட்டத்தில் மதுரை, தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம், திருச்சி மாவட்டத்தில் புத்தூர், உத்தமனூர் ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறையினரால் செயல்படுத்தப்பட்டுக் கண்காணிக்கப்படுகின்றன.

திண்டிவனம் உழவர்கள் பயிற்சி நிலையம் 1971-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையம் திண்டிவனத்திலிருந்து 3 கி. மீ. தொலைவில் திண்டிவனம்-பாண்டிச்சேரிச் சாலையில் இருக்கிறது. திண்டிவனம் வட்டார வேளாண்மை ஆய்வு நிலையத்தின் ஓர் அங்கமாக இந்த நிலையம் செயல்பட்டு வருகிறது.

இப்பயிற்சி நிலையத்தில் உழவர் பெருமக்கள் ஆண் பெண் இருபாலரும் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுமதிக்கப்படுகின்றனர். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலிருந்தும் பயிற்சி பெற உழவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இங்கு மைய அரசினரால் குறிப்பிடப்பட்டுள்ளவாறுபயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

1972-ஆம் ஆண்டு மார்ச்சு முடிய இதுவரையிலும் மொத்தம் இருபது பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு பயிற்சி வகுப்பிற்கும் ஆண், பெண் இருபாலரிலும் மொத்தம் இருபத்தைந்து பேர் தெரிந்தெடுக்கப்படுகின்றனர். ஒவ்வொரு பயிற்சி வகுப்பிற்காக இம்மாவட்டத்தில் உள்ள மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்து எடுக்கப்பட்டு அவைகளிலிருந்து மட்டுமே பயிற்சி பெற உழவர்கள் தெரிந்து எடுக்கப்படுகின்றனர்.

1—4—1972 முதல் 31—3—1971 முடிய ஓராண்டுக்காலத்தில் ஆண்களுக்காக 10 பயிற்சி வகுப்புகளும், பெண்களுக்காக 10 பயிற்சி வகுப்புகளும், நடைபெற்றிருக்கின்றன. மொத்தம் 250 ஆண்களும், 250 பெண்களும் இதுவரையிலும் பயிற்சி பெற்றுள்ளனர்.

### பயிற்சி முறை

ஒவ்வொரு பயிற்சி வகுப்பிற்கும் உழவர்கள் தெரிந்து எடுக்கப்பட்டபின் எல்லாருக்கும் ஐந்து நாட்கள் உயர்ந்த வகை நெல், மற்றும் அந்தந்தப் பகுதியின் முக்கிய விளைபொருட்களான நிலக்கடலை, எள், கரும்பு பயிரினங்களைப் பயிரிடுவதில் ஆழமான விரிவான பயிற்சி அளிக்கப்படுகிறது.

அதற்குப் பின் பயிற்சி பெறும் ஆண், பெண்களிடையே இருந்து கருத்தரங்கிற்காக அமைப்பாளர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். கருத்தரங்குக் குழுவின் அமைப்பாளர் தலைமையில் திருச்சி அகில இந்திய வானெலி நிலையத்தினரால் நாள் தோறும் மாலை 7-30 மணியிலிருந்து 8-00 மணி வரை ஒலி பரப்பப்படும் வேளாண்மைக் கருத்தரங்கு நிகழ்ச்சிகளைக் கேட்டுத் தங்களுக்குள் விவாதம் செய்து கொள்ளப் பயிற்சி அளிக்கப்படும். அத்தோடு அந்தப் பகுதியில் உள்ள பயிற்சி பெருத முற்போக்கு எண்ணம் கொண்ட வேளாண்குடியினரிடையே நவீன வேளாண்மை முறையை எடுத்துச் சொல்லுதல் போன்ற பணிகளிலும் இவர்கள் ஈடுபடுத்தப்படுவர். இதுபோன்ற கருத்தரங்கு அமைப்பாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் ஆண்டு ஒன்றிற்கு ஐந்து என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு நடைபெற்ற ஐந்து கருத்தரங்கு அமைப்பாளர்கள் பயிற்சி வகுப்புகளில் மொத்தம் 125 பேர் பயிற்சி பெற்றுள்ளனர்.

### செய்முறைப் பயிற்சி

இவையன்றி உயர் ரக விதைத் தானியங்கள் பயிரிடும் முறையைப் புற்றிக் கிராமங்களிலேயே செய்முறைப் பயிற்சிகளும் நடத்தப்படுகின்றன. இதனுல் கிராமப்புற வேளாண் குடியினர் பெரிதும் பயன் அடைகின்றனர். இம்முறைப் பயிற்சி 1971—72-ஆம் ஆண்டு 100 இடங்களில் நடத்தப்பட்டன. அவைகளின் மூலம் ஆண், பெண் இரு பாலரும் மொத்தம் 2,500 பேர் பயன் பெற்றுள்ளனர்.

### சுற்றுலா

பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ளும் பயிற்சியாளர்கள் கடலூர், பாலூர், விருத்தாசலம், திண்டிவனம் போன்ற இடங்களில் உள்ள வேளாண்மை ஆய்வு நிலையங்களுக்கும் அழைத்துச் செல்லப்படுவர். சென்ற ஆண்டு மட்டும் இதுபோன்று 20 சுற்றுலா ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

உயர்ரகத் தானியங்களிலிருந்து எப்படிச் சத்துள்ள உணவு வகைகள் தயாரிப்பது என்று செய்முறைப் பயிற்சிகளும் பெண்களுக்கு அளிக்கப்படுகின்றன.

சென்ற ஆண்டு இதுபோன்று செய்முறைப்பயிற்சிகள் பத்து நடத்தப்பட்டன.

### கருத்தரங்குக் குழுக்கள்

சென்ற ஆண்டு மட்டும் மொத்தம் 300 கருத்தரங்குக் குழுக்களின் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதனால் 4,225 பேர் பயன் அடைந்துள்ளனர். கருத்தரங்குக் குழுக்களின் அமைப்பாளர்கள் தலைமையில் பயிற்சியாளர்கள் கூடி வானொலி வேளாண்மைத்துறை நிகழ்ச்சிகளைக் கேட்டுக் கருத்தரங்கு நடத்தி, அதன்மேல் ஏற்படும் ஐயங்களைத் தீர்த்துக் கொள்ளத் திருச்சி வானொலி நிலையத்தாரோடு கடிதப்போக்குவரத்து வைத்துக் கொள்ளுதல் போன்ற எல்லா வகைப் பயிற்சிகளும் பயிற்சியாளர் பெறுகின்றனர்.

இந்த உழவர்களின் பயிற்சி நிலைய முயற்சிகளுக்கு அகில இந்திய வானொலியினரும் பேருதவியாக இருந்து, நிலைய நிகழ்ச்சிகளை அவ்வப்போது பதிவு செய்து கொண்டு வானொலியில் ஒலிபரப்புகின்றனர்.

அமைப்பாளர்கள் வேளாண்மை அறிவு பெற அவர்களுக்குத் 'தமிழரசு' இதழ்கள் மற்றும் விவசாய விளக்கங்கள், வேளாண்மை உண்மைகளும் புள்ளி விவரங்களும் அவர்களுக்கு அளிக்கப்படுகின்றன.

இது போன்ற பயிற்சி நிலையங்கள் நாட்டில் கிராமப்புற வேளாண் குடியினரிடையே புதிய முறை வேளாண்மை முறைகளைத் தெரியப்படுத்தி அதன் மூலம் நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்கவே நடத்தப்படுகின்றன. இதற்காக இரண்டு செய்முறை விளக்கப் பண்ணைகளையும் இந்நிலையம் வைத்துள்ளது. அவைகளில் வேளாண் குடியினருக்குப் புதிய முறையில் எப்படி நாற்றுப் பயிரிடுவது, எப்படி நாற்று நடுவது, வளரும் பயிரை எப்படிப் பாதுகாப்பது, எப்படி அறுவடை செய்வது போன்றவைகள் கற்றுத்தரப்படுகின்றன.

இப்பயிற்சி நிலையம் மாவட்ட வேளாண்மை அலுவலர் தகுதியுள்ள சிறப்புத் துணை வேளாண்மை இயக்குநர் தலைமையில் இயங்குகிறது. அவருக்கு உதவியாக வானொலித் தொடர்பிற்காக ஒரு மாவட்ட வேளாண்மை அலுவலர், செய்முறைப் பயிற்சிக்காக ஒரு மாவட்ட வேளாண்மை அலுவலர், ஒரு பெண்கள் பயிற்சி அலுவலர், ஒரு துணை வேளாண்மை அலுவலர் மற்றும் பலர் இந்நிலையத்தில்பணிபுரிகின்றனர்.

### எதிர்காலத் திட்டம்

இப்பயிற்சி நிலையத்தின் பணி இப்பகுதி வேளாண் குடியினருக்குப் பெரும் பலன் அளித்து வருகிறது. இதனால் எல்லா வகை உயர் ரக வித்துக்களையும் பயன்படுத்தி வேளாண்மை முறையைச் சிறக்கச் செய்யும் பணியிலே இந்தப் பயிற்சி நிலையம் சிறப்பான திட்டங்களைத் தீட்டிச் செயல்பட முனைந்துள்ளது. இப்பயிற்சி நிலையத்தின் பணி சிறக்க இப்பகுதி வேளாண் குடியினரும் பேருதவியாக இருந்து செயல்பட வேண்டும் என்பதே இதன் விருப்பமும், வேண்டுகோளும் ஆகும்.

## தமிழகத் தொழில் அமைதி

தமிழகத்தில், 1957-ஆம் ஆண்டில் இருந்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 4,318. அப்போது நடந்த வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை 248.

1958-ல் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 4,250; வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை 261.

1959-ல் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 4,359; வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை 214.

1960-ல் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 4,361; வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை 331.

1971-ல் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 6,419 வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை 308.





# நீர்த்தேக்கங்கள் நிறைந்த மாவட்டம்

தென் ஆர்க்காடு மாவட்டம், பல நீர்த்தேக்கங்களை உருவாக்கி அவற்றின் மூலமாகப் பாசன வசதிகளைச் செய்திருக்கிறது. ஏற்கெனவே இங்கு வெலிங்டன் நீர்த்தேக்கம், வீடூர் நீர்த் தேக்கம், மணி முக்தா நீர்த்தேக்கம், கோமுகி நீர்த்தேக்கம் போன்ற நீர்த்தேக்கங்கள் உள்ளன. புதிய நீர்த் தேக்கங்களை உருவாக்கத் தமிழக அரசு திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது. அவற்றின் விவரத்தைப் பார்ப்போம்.

### வராக நதி அணைக்கட்டுத் திட்டம்

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் செஞ்சி வட்டத்தில் செவலபுரி கிராம எல்லையில் வராக நதியின் குறுக்கே ஓர் அணை கட்டுவதற்குத் தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது.

400 அடி நீளமுள்ள கல்லணை கட்டுவதற்கும், 13 கிலோ மீட்டர் நீளத்திற்குப் பிரதான கால்வாய் வெட்டுவதற்கும், கிளைக் கால்வாய்கள் வெட்டுவதற்கும் இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்திற்கு ரூ. 18.75 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தால் செஞ்சி வட்டத்திலுள்ள 15 கிராமங்கள் பயனடையும். இதனால், 565 ஏக்கர் புன்செய் நிலங்களை, நன்செய் நிலங்களாக மாற்றவும், 215 ஏக்கர் தரிசு நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கவும், மேலும், 1,254 ஏக்கர் பதிவு செய்யப்பட்ட நிலங்களுக்கு நிரந்தரப் பாசன வசதிகள் கிடைக்கவும் வழி வகை செய்யப்பட்டுள்ளன. இதன் வாயிலாகக் கிடைக்கப் போகும் அதிகப்படி உணவு உற்பத்தி ஆண்டு ஒன்றுக்கு –1,190 டன் என எதிர்பார்க்கப்படுகிறது.

### இராமராஜபுரம் அணைக்கட்டுத் திட்டம்

கள்ளக்குறிச்சி வட்டத்தில் உள்ள மணி நதியின் குறுக்கே கட்டப்பட்டிருந்த பழைய இராமராஜபுரம் அணைக்கட்டைப் புதுப்பித்து அந்த அணையில் இருந்து 12 மைலுக்குப் புதியதொரு வாய்க்கால் வெட்டி, 12 சிறு பாசன ஏரிகளுக்கு நீர்ப்பாசனம் அளிக்கும் பொருட்டு, ரூ. 16·08 இலட்சத்திற்கு 1960–61-ல் அரசினரால் திட்டமிடப்பட்டது. 1962–63-ல் வேலை துவக்கப்பட்டது. வாய்க்கால் வெட்டும்போது கடினமான பாறைகளை உடைக்க வேண்டிய நிலை ஏற்பட்டதால் ஒப்பந்ததாரர்களும், வேலையாட்களும் முன் வரவில்லை. மேலும், இவ்வாய்க்கால் வெட்டும் வேலைக்கு அதிக விகிதம் கோரப்பட்டதால் நடுநடுவே இவ்வேலை நின்று விட்டது. தமிழக அரசின் பெருமுயற்சியின் காரணமாக இந்த ஆண்டு சனவரி மாதத்தில் இந்தப் பணி மீண்டும் துவக்கப் பெற்றது. தற்போது முடிவடையும் தறுவாயில் உள்ளது.

> **இளைஞர் அணி**
>
> படித்துப் பட்டம்பெற்ற இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பெறுகிற வரையில் ஓரளவுக்காவது அவர்கள் சமுதாயத்திற்குப் பயன்பட்டிட அவர்களுக்கு அரசின் சார்பிலே மாதந்தோறும் 175 ரூபாய் அளிக்கலாம் என்ற திட்டத்தின் கீழ் உள்ள இளைஞர் அணியினர், 185 பேர் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 16 ஊராட்சி ஒன்றியங்களில் தங்கள் பணியை நடத்தி வருகின்றனர்.

12 மைல் நீளமுள்ள இந்த வாய்க்காலில் 1,25,000 கனஅடிப் பாறையை உடைக்கும் வேலையும், 15,84,000 கன அடி மண் வெட்டும் வேலையும் முடிந்துள்ளன. இவ்வாய்க்காலின் குறுக்கே கட்டவேண்டிய குறுக்குக் கட்டட வேலைகளும் பெரும்பகுதி முடிவுற்றுவிட்டன. விரைவில் வாய்க்கால் திறப்பு விழா கொண்டாடப்பட விருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு இதுவரை செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 15,41,000 ஆகும். இந்தத் திட்டத்தால் பயன்பெறும் நிலங்கள் சுமார் 1,400 ஏக்கர்கள்.

### தீவளூர் அணைக்கட்டுத் திட்டம்

விருத்தாசலம் வட்டத்தில் உள்ளபெரிய ஓடையின் குறுக்கே தீவளூர் கிராமத்தில் ஓர் அணையைக் கட்டி, அதன் வாயிலாக நீரைத் திருப்பிச் சுமார் 1,822 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பது இந்தத் திட்டத்தின் நோக்கம்.

இதன் மொத்த மதிப்பு ரூ. 7·60 இலட்சம். இத்திட்டம் 1965–66–ல் துவங்கப்பட்டது. தற்போதுதான் முடியும் தறுவாயில் உள்ளது. அணையின் தலைப்பு மதகு கட்டும் வேலைகள் முடிவடைந்துவிட்டன. வாய்க்கால் வெட்டும் வேலையும் பெரும்பகுதி முடிவடைந்து விட்டது. இது வரை செலவான தொகை ரூ. 7,55,000 ஆகும்.






# தென்ஆர்க்காடு வரலாற்றுக் கண்ணோட்டம்

## நா. அமிர்தலிங்கம்

இன்றைய தென் ஆர்க்காடு மாவட்டத்தை அடக்கியுள்ள பகுதி தமிழகத்தின் தொன்மையான பகுதிகளில் ஒன்றாகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே அதாவது கற்காலம், உலோக காலம் ஆகிய காலங்களிலேயே இப்பகுதிகளில் ஆதிகுடிகள் வாழ்ந்ததற்கான சான்றுகள் பல கிடைத்துள்ளன. இப்பழங்குடி மக்கள் பயன்படுத்திய மட்பாண்டங்கள், உலோகக் கருவிகள் பல இம்மாவட்டப் பகுதிகளில் உள்ள தாவனூர், சத்தியமங்கலம், சித்தம்பூடி, சம்படை, கொங்கராயப்பாளையம், குகையூர், குண்டலூர் ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கல்ராயன் மலைப்பகுதிகளில் பழங்குடி மக்கள் பலர் இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

### சங்க காலம்

சங்க காலத்தில் தமிழகம் சேர, சோழ, பாண்டிய மூவேந்தர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. தென் ஆர்க்காடு மாவட்டம் சோழ நாட்டின் பகுதியாக இருந்துள்ளது. காவியப் புகழ் பெற்ற கரிகாலன் இப்பகுதியை வென்று காடு திருத்தி நாடாக்கினான் என்பர். தென்ஆர்க்காடு, வடஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்கள் அடங்கிய சோழ நாட்டின் வடபகுதி, தொண்டை மண்டலம்என்ற பெயர் பெற்றது.

### பல்லவர் ஆட்சி

பல்லவர்கள் தென் இந்தியாவில் கி.பி. ஆறும் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரை சிறப்பாக அரசு புரிந்தனர். அவர்களுடைய தலை நகரம் காஞ்சி எனப்படும் காஞ்சிபுரம் ஆகும். இந்தப் பல்லவ ஆட்சிக் காலத்தில் தென் ஆர்க்காடு மாவட்டம் பல்லவ நாட்டின் சிறப்புமிக்க ஒரு பகுதியாக அமைந்திருந்தது. சிம்ம விஷ்ணு, சேரர்களையும், பாண்டியர்களையும் வென்றார். அவர் புதல்வர் மகேந்திரவர்மர் முதலில் சமண சமயத்தைச் சார்ந்திருந்து பின்னர் திருநாவுக்கரசரின் முயற்சியால் சைவரானார். நரசிம்ம பல்லவர் காலத்தில் தமிழகம் முழுதும் பல்லவ அரசின் கீழ் வந்தது. அவர்களின் ஆட்சிக்காலத்தில் சமயம், கலை, இலக்கியம் ஆகியவை சிறப்புற்று விளங்கின. சீயமங்கலம், தளவனூர் ஆகிய இடங்களில் பல்லவர் காலத்து மலைக்கோயில்கள் காணப்படுகின்றன.

பிற்காலத்தில் தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள சேந்தமங்கலத்தைத் தலைநகராகக் கொண்டு கோப்பெருஞ்சிங்கர் என்ற பல்லவ மன்னர் ஒருவர் ஆண்டதாகத் தெரிகிறது. அவர் காலத்தில் சிதம்பரம் கோயிலின் மேற்குக் கோபுரம் கட்டப்பட்டது.

### சோழப் பேரரசு

கி. பி. பத்தாம் நூற்றாண்டில் பல்லவர் ஆட்சி பலவீனமடைந்ததும் தஞ்சைச் சோழ மன்னர்கள் எழுச்சியுற்றனர். சோழ அரசு விரிவடைந்ததும் தென் ஆர்க்காடு மீண்டும் சோழப் பேரரசின் ஒரு பகுதியாக அமைந்தது. கல்வி, சமயம், கலை, ஊராட்சி முறைகள் வளர்ந்தன.

சோழர்கள் இப்பகுதியிலிருந்து பல கோயில்களைப் புதுப்பித்தார்கள். பராந்தகச் சோழன் சிதம்பரம் நடராசர் கோயிலின் கூரையைப் பொன் ஓடுகளால் வேய்ந்தார். அதனால் அவருக்குத் தில்லைக்குப் பொன்வேய்ந்த பராந்தகன் என்ற சிறப்புப்பெயர் ஏற்பட்டது. மேலும் விக்கிரமச் சோழன், குலோத்துங்கன் ஆகியவர்களும் இக்கோயிலுக்குப் பல திருப்பணிகளைச் செய்துள்ளனர். மன்னர் மன்னர்களான இராசராசன், இராசேந்திரன் ஆகியவர்கள் காலத்தில் சோழ அரசர்கள் கால்வாய்களை வெட்டியும், ஏரிகளை அமைத்தும், நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கினார்கள். அவர்கள் காலத்தில் வீராணம் ஏரி அமைக்கப்பட்டது. தென்

இறந்த பிறகு தேசிங்கு ராஜன் சுதந்தரமடைந்து ஆர்க்காட்டு நவாபுக்கு வரி கொடுக்க மறுத்தார். இதனால் ஏற்பட்ட போரில் தேசிங்கு ராஜனும் அவரது தளபதி முகமத்கானும் வீரமாகப் போரிட்டு உயிர் துறந்தனர். செஞ்சிக்கோட்டை, ஆர்க்காட்டு நவாபின் நேரடி ஆட்சிக்குள் வந்தது. அப்போது ஆர்க்காட்டு நவாபாக இருந்த சைதுல்லாகான் தன் தலைநகரத்தை நான்கு ஆண்டுக் காலம் செஞ்சியில் வைத்திருந்தார். பின்னர் ஆர்க்காட்டுக்கு மாற்றிக் கொண்டார். நவாபின் பிரதிநிதிகள் அங்கு நியமிக்கப்பெற்றனர்.

### ஐரோப்பியர் குடியேற்றம்

நாயக்கப் பிரதிநிதிகள் செஞ்சியை ஆண்ட காலத்திலேயே தென் ஆர்க்காடு மாவட்டக் கடற்கரையோரப் பகுதிகளில் ஐரோப்பியர் பலர் வந்து குடியேறி வணிக நிலையங்களை அமைக்க ஆரம்பித்தனர். பதினாறாவது நூற்றாண்டின் இறுதியில், செஞ்சி கிருஷ்ணப்ப நாயக்கரின் அனுமதிபெற்றுப் போர்த்துகீசியர்கள் போர்ட் நோவோ எனப்படும் பரங்கிப்பேட்டையில் வந்து குடியேறினார்கள். டச்சுக்காரர்கள் பரங்கிப்பேட்டையிலும், தேவனாம்பட்டணத்திலும் வணிக நிலையங்களை அமைத்தனர். டேனிஷ்காரர் சிலரும் பரங்கிப்பேட்டையில் வந்து வாணிகம் செய்தார்கள்.

செஞ்சியில் ஆண்ட பீஜப்பூர் சுல்தானின் பிரதிநிதியிடம் பிராங்காயிஸ் மார்ட்டின் என்ற பிரெஞ்சுஅதிகாரி கி.பி.1674-ஆம் ஆண்டில் புதுச்சேரியைப் பெற்றார். இந்தியாவிலிருந்த பிரெஞ்சு ஆட்சிப் பகுதிகளின் தலைமையிடமாகப் புதுச்சேரி பின்னர் அமைந்தது. தென்னிந்தியாவில் நடந்த ஆதிக்கப் போட்டிக்கும், புதுச்சேரியைப் பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் இராணுவத் தளமாகப் பயன்படுத்தினர்.

செஞ்சியில் மராத்தியப் பிரதிநிதியாகவிருந்த இராசாராமிடமிருந்து ஆங்கிலேயர்கள் கி.பி. 1690-ல் கடலூரில் ஓர் இடத்தை வாங்கி ஒரு கோட்டையைக் கட்டிக் கொண்டார்கள். அந்தக் கோட்டைதான் புகழ்பெற்ற செயின்ட் டேவிட் கோட்டை எனப்படுவது. சென்னைக்கு அடுத்தபடியாகத் தென்னாட்டில் ஆங்கிலேயரின் இரண்டாவது கேந்திர இடமாக இக்கோட்டை அமைந்திருந்தது.

### வெற்றித் தூண்

செஞ்சிக் கோட்டை, பிரெஞ்சுக்காரர் வசமிருந்தபோது அங்கிருந்த வெங்கடரமணா ஆலயத்திலிருந்த சிற்ப வேலைப்பாடமைந்த கல் தூண்கள் பலவற்றைப் பெயர்த்துக் கொண்டு போய், புதுச்சேரியில் வெற்றித் தூண்களாகக் கட்டினர். அவற்றை இப்போதும் புதுச்சேரித் துறைமுகத்தின் வாயிலில் நாம் பார்க்கலாம். அதுபோலவே செஞ்சியிலிருந்து வேறு சில கல்தூண்களைச் சென்னைக்குக் கொண்டுவர ஆங்கிலேயர் 1858-ல் தீவிர முயற்சி செய்தனர். ஆனால் அது கைகூடவில்லை.

அப்போது நவாபு பதவிக்காக முகமதலியும்; சந்தா சாகிபும் சண்டையிட்டார்கள். முகமதலிக்கு உதவியாக ஆங்கிலேயரும், சந்தாசாகிபுக்கு ஆதரவாக பிரெஞ்சுக்காரரும் போரில் ஈடுபட்டார்கள். இதன் காரணமாக எழுந்தபோர்களுக்குக் கர்நாடகப் போர்கள் என்று பெயர். அவற்றில் திருவண்ணாமலை, பெருமுக்கல், சிதம்பரம், புவனகிரி, பண்ணுருட்டி, விருத்தாசலம், வில்லியனூர், அரியான்குப்பம், செஞ்சி, கடலூர், புதுச்சேரி ஆகிய இடங்களில் நடைபெற்ற போர்கள் குறிப்பிடத்தக்கன.

பிரெஞ்சுக்காரர் கடலூரையும், ஆங்கிலேயர் புதுச்சேரியையும் பலமுறை தாக்கிக் கொண்டார்கள். கி.பி. 1750-ல் செஞ்சிக் கோட்டையைப் பிரெஞ்சுத் தளபதி புஸ்ஸி பிடித்துக் கொண்டார். கி.பி. 1758-ல் செயின்ட் டேவிட் கோட்டையைப் பிரெஞ்சுத் தளபதி லாலி பிடித்துக் கொண்டார். பிரெஞ்சுச் செல்வாக்கு தென்னாட்டில் அப்போது வெகுவாக உயர்ந்து வந்தது. ஆனால் வாய்ப்பு ஆங்கிலேயர்களின் பக்கமே இருந்தது. கி.பி. 1760-ல் சர் அயர் கூட் என்ற ஆங்கிலத் தளபதி வந்தவாசியில் நடந்த பெரும் போரில் பிரெஞ்சுக்காரரை நன்கு தோற்கடித்தார். 1761-ல் புதுச்சேரியையும் அவர் பிடித்துவிட்டார். 1761-ல் புதுச்சேரியும் பிரெஞ்சுக்காரரிடமிருந்து ஆங்கிலேயர் வசம் வந்தது.

கருநாடகப் போர்கள் மட்டுமல்லாமல் மைசூர்ப் போர்களின் காரணமாக எழுந்த சில சண்டைகளும் இம்மாவட்ட எல்லைக்குள் நடைபெற்றன.

கி.பி. 1780-ல் ஐதர் அலி, செங்கம் கணவாய் வழியே புகுந்து வந்து திருவண்ணாமலையைத் தாக்கினார். அங்கு நடந்த சண்டையில் ஆங்கிலேயர் தோற்றனர். ஆனால் அதைத் தொடர்ந்து பரங்கிப்பேட்டை அருகே நடந்த போரில் ஐதர் அலி தோற்றுத் தப்பி ஓடும்படியாயிற்று. ஐதர் அலியின் மகன் திப்பு சுல்தான் பிரெஞ்சுக்காரர்களின் உதவியுடன் கி.பி. 1782-ல் கடலூரைத் தாக்கிப் பிடித்துக் கொண்டார். ஜெனரல் ஸ்டூவர்ட் என்ற ஆங்கிலத் தளபதி மீண்டும் கடலூரை மீட்டுவிட்டார். கடைசியாக மைசூர்ப் போர்களின் முடிவில் திப்பு சுல்தான் கொல்லப்பட்டார். அத்துடன் ஆங்கில ஆட்சியை எதிர்க்கும் எல்லாப் பெரிய சக்திகளும் தென் இந்தியாவில் அழிந்து போயிற்று. ஆங்கிலேயரின் ஆதரவுபெற்ற ஆர்க்காட்டு நவாபான முகமதலியின் ஆட்சி கருநாடகத்தில் நிலைநிறுத்தப்பட்டது. முகமதலிக்கு இருந்த போட்டிகள் யாவும் ஒழிந்துவிட்டன. ஆனால் நடந்த போர்களினால் முகமதலி பெருங்கடன்காரர் ஆனார்.

கி.பி. 1774-ல் புவனகிரியில் வாழ்ந்த ராயோஜி என்பவருக்குப் பதின்மூன்றரை இலட்சம் பணத்திற்கு (பகோடா) தென் ஆர்க்காடு மாவட்டத்தைக் குத்தகைக்கு முகமதலி கொடுத்தார். இதனால் அவருக்குப் பணமுடை தீரவில்லை. பின்னர் ஆங்கிலேயரிடம் பட்டுள்ள கடனுக்கு ஈடாகத் தென் ஆர்க்காடு மாவட்டம் 1781-ல் ஆங்கிலேயரிடமே குத்தகைக்கு விடப்பட்டது. ஆனால் இந்த ஏற்பாட்டாலும் நிலைமை சீர்படவில்லை.

வெல்லெஸ்லி பிரபு ஆங்கிலக் கவர்னர் ஜெனரலாக இருந்தபோது கருநாடகம் முழுவதையும் தங்களுடைய நேரடி ஆட்சியில் ஆங்கிலேயர் எடுத்துக்கொண்டனர். ஆங்கில ஆட்சி அமைந்ததும் கி.பி. 1801-ல் தென் ஆர்க்காட்டுப் பகுதிகள் ஓர் மாவட்டமாக அமைக்கப்பட்டன. அதற்குத் தனியாக ஓர் ஆட்சித் தலைவர் நியமிக்கப்பட்டார். மாவட்டத்தின் தலைநகரமாகக் கடலூர் ஆக்கப்பட்டது. அப்படி அமைந்த மாவட்டத்தின் முதல் ஆட்சித் தலைவராக காப்டன் கிரஹாம் என்பவர் நியமிக்கப்பட்டார். இப்படித் தொடர்ந்த ஆங்கில ஆட்சி 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ல்தான் முடிவுக்கு வந்தது.



கொல்லைக் கதவு தட்டப்படும் சந்தடி கேட்டு, முகத்தைத் துடைத்துக் கொண்டு, பரபரப்போடு சென்று கதவைத் திறந்தாள் அரசி. கொல்லைப் பக்கம் ஐம்பது தென்னைகளுக்கு மேலிருக்கும். பாதுகாப்பான வேலியென்று ஒன்றும் இல்லை.

கதவோரமாக டெய்சி நின்று கொண்டிருந்தாள்.

அரசிக்கு மேல்மூச்சு வாங்கியது.

'' அவங்கதான் வந்திட்டாங்களாக்கும்னு பரபரத்துப் போயிட்டேன்'' என்றாள்,குனிந்து முகத்தைத் துடைத்துக் கொண்டே.

'' நீ எப்படி இருக்கியோன்னு பாத்திட்டுப் போக வந்தேன்'' என்றவாறு உள்ளே காலடி வைத்து, அரசியை ஏறிட்டுப் பார்த்தாள் டெய்சி.

'' கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே கூட நினைச்சேன். நீயே வந்து நிக்கறே ''.

'' வேறே என்னமும் தகவல் வந்திச்சா? ''

'' எதுக்காகவும் கவலைப்பட வேண்டாம். பின்னாலேயே வாரோம்னு கன்னையா கிட்டச் சொல்லி அனுப்பிச்சாங்க. அதுவும் ரெண்டு நாளாகப் போகுதே '' என்றாள் அரசி கவலையுடன்.

'' ஏன் கண்ணெல்லாம் சிவந்து போயிருக்கு?'' என்று கேட்டுப் பரிவோடு அரசியின் கரங்களைப் பற்றிக் கொண்டாள் டெய்சி.

'' இந்த ஒரு வாரத்திலே நான் எவ்வளவோ தேறிட்டேன் டெய்சி; யாரை நினைச்சு, அவங்க செய்யிறதிலே எதை நினைச்சு நான் கலங்கணும்? கண்ணீரே வறண்டு போச்சு எனக்கு'' என்றாள் அரசி.

'' விழுந்திருக்கிற முடிச்சு அழுதா மட்டும் விடுபடப் போகுதா ? நம்ம தைரியமும் அவங்களுக்குத் துணை இருக்கணும் '' என்ற டெய்சி, அரசியின் தோளின்மீது கையை வைத்து, '' உங்கண்ணா ஊருக்குள்ளே இருந்தாருன்னா, மனசுக்குள்ளே ஒரு தைரியம் வருது—இல்லையா ?'' என்று கேட்டாள்.

''இதை இவரேகூட அடிக்கடி சொல்றாரு. சின்ன வயசிலேயிருந்தே அண்ணனுக்கு எதுக்காகவும் கவலைப் படவே தெரியாது '' என்றாள் அரசி.



# உன்னை மயக்கும் சந்நிதி

சோம. மகாதேவன்

## 12. உயிருக்கோரு விலை

''அன்றைக்கு அத்தனை கூட்டத்துக்குள்ளே சிரிச்சுக்கிட்டேதான் போனாரு '' என்றாள் டெய்சி.

'' அதையும் பார்த்தியா ?''

'' நானெங்கே பார்க்க முடிஞ்சுது? பீட்டர் வந்து கதையாச் சொன்னான். அவர்னா அவன் உயிராயிருக்கான் '' என்றாள் டெய்சி.

'' உன்னை விடவா ?''

டெய்சி பதில் சொல்லாமல் அரசியின் கன்னத்தைக் கிள்ளினாள்.

'' உங்கப்பா பஞ்சாயத்து ஆபீசுக்கே வந்து கோபமாப் பேசினாராமே! நீயும் தயாராத் தானே அம்மா காலிலே விழுந்தியாம் '' என்று கேட்டபோது, அவளையும் அறியாமல் அரசியின் கண்கள் நீரை உகுத்தன.

அரசியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, முகத்தோடு முகம் வைத்து, '' என்ன அரசி—ஏன் அழறே ?'' என்று கேட்டாள் டெய்சி.

அரசி அவளை அணைத்துக் கொண்டாள்.

'' அம்மான்னு சொல்லும் போதே, கைக்கெட்டிய தூரத்திலிருந்தும், அம்மாவைக் காண முடியாத மகளுக்குத் தன்னாலே கண்ணீர் வருது. அம்மா எப்படி இருக்காங்க? உங்கூடப் பேசினாங்களா ? என்ன சொன்னாங்க ?'' என்று அடுக்கடுக்காகக் கேள்விகளைக் கேட்டாள்.

'' அந்த நேரத்திலே வேறே யாருக்குப் பேச முடிஞ்சுது? அழறவங்களைச் சிரிக்க வைக்கிறதும், சிரிக்கிறவங்களை அழ வைக்கிறதும் அவருக்கு ரொம்ப லேசானது. யாரும் இடையிலே வாயைத் திறக்க முடியாது'' என்றாள் டெய்சி.

'' கழுத்திலே முடிச்சு விழட்டும்—நீ வாயைத் திறக்காம இருக்கிறதைப் பாக்கலாம் '' என்று சொல்லிச் 'சிரித்தாள் அரசி.

அதற்குள் '' யாரம்மா வந்திருக்கிறது ?'' என்று குரல் பின்கட்டிலிருந்து கேட்டது.

அப்போதுதான் கொல்லைக் கதவோரமாகவே நின்று தங்களையே மறந்து, பேசிக் கொண்டிருப்பதை உணர்ந்து, இருவருமே திடுக்கிட்டுத் திரும்பினர்.

''டெய்சி வந்திருக்கு பாட்டி'' என்றாள் அரசி.

'' கொல்லைப் பக்கமா வந்து நின்னுதான் பேசணுமா ?'' என்றாள் பாட்டி கோபமாக.

டெய்சிக்கு நாக்கு வறண்டு விட்டது.

'' இப்பத்தான் வந்தேன் பாட்டி '' என்று பதட்டத்துடன் சொன்னவள், அரசியின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

'' சிறுசுகளாச் சேர்ந்துதானே கூத்து நடத்துறீங்க? எதையும் சுமக்கத் தக்கனே நினைக்கணும்! அப்பத்தான் எப்பவும் கொண்டு செலுத்த முடியும்.'' என்றான் பாட்டி மேலும்.




ஆர்க்காடு மாவட்டம் அடங்கிய பகுதி சோழப் பேரரசில், செயங்கொண்ட சோழபுரம் என்று அழைக்கப்பட்டது.

### பாண்டியர் ஆட்சி

சோழப் பேரரசு நலிவடைந்த போது கி. பி. பதின்மூன்றும் நூற்றுண்டில் பிற்காலப் பாண்டியர் வலிமை பெற்றுர்கள். சடையவர்மன் சுந்தர பாண்டியனும் சடையவர்மன் குலசேகர பாண்டியனும் இவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள். தென் ஆர்க்காடு மாவட்டம் உள்ளிட்ட தமிழகம் இவர்களது ஆட்சிக்குள் வந்தது. சோழர்களைப் போன்றே இம்மாவட்டத்தில் பல கோயில்களை இம் மன்னர்கள் புதுப்பித்தனர். சுந்தர பாண்டியன் சிதம்பரம், திருவரங்கம் கோயில்களின் கூரைகளைப் புதுப்பித்துப் பொன்ஞல் வேய்ந்தார். அதனுல் இப்பாண்டியன் பொன்வேய்ந்த பெருமாள் என்று சிறப்பிக்கப்பட்டார். இப்பிற் காலப் பாண்டிய மன்னர்கள் காலத்தில்தான் சிதம்பரம் கோயிலின் கிழக்குக் கோபுரம் கட்டப்பட்டது.

### சுல்தான் படையெடுப்பு

பாண்டியர் ஆட்சி வெகு காலம் நீடிக்கவில்லை. உள்நாட்டுப் போராட்டமும், வெளிப்பகையும் பாண்டியர்களை வலுவிழக்கச் செய்தன. இக்காலத்தில் டெல்லியில் பழம்பெரும் அரசுகள் மறைந்து ஆப்கானிய சுல்தான்களின் ஆட்சி ஏற்பட்டது. பாண்டிய அரசுரிமைப் போரில் கலந்து கொள்ளும் வாய்ப்பில் ஆப்கானிஸ்தான் தளபதி மாலிக்காபூர் என்பவன் படையெடுத்து வந்தான். அப்படையெடுப்பில் தென்ஆர்க்காடு மாவட்டமும் தப்பவில்லை. அவன், பழந்தமிழ் நகரங்களையும், புகழ்பெற்ற கோயில்களையும் கொள்ளையிட்டுச் சென்ருன். இப்படையெடுப்பால் மதுரையில் சுல்தான்கள் ஆட்சி ஏற்பட்டது. அப்போது தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பழைய சோழ அரசின் தளபதிகளான சம்புவரையர்கள் ஒரு சிற்றரசை நிறுவ முயன்றனர். ஆனுல் அது நீடித்து நிற்கவில்லை.

### நாயக்க ஆட்சியும் செஞ்சிநாடு உதயமும்

விஜயநகர நாயக்கர்களின் ஆட்சி தென்னுட்டில் வலுப்பெற்றதும் சுல்தான்களின் ஆட்சி முடிவுக்கு வந்தது. மதுரை, தஞ்சை அரசுகள் நாயக்க அரசுகளாக மாறின. விஜயநகரப் பேரரசு தென்னுட்டை நன்கு கண்காணிக்க வேலூரிலும், செஞ்சியிலும், கோட்டைகளை அமைத்துப் படைகளை வைத்தனர். செஞ்சிக்கோட்டையைத்தலைமையிடமாகக்கொண்ட நாயக்க அரசு தென் ஆர்க்காடு மாவட்டப் பகுதிகளைச் செஞ்சி நாடாக உருவாக்கியது. நாயக்கப் பிரதிநிதிகளில் குறிப்பிடத் தகுந்தவர் கிருஷ்ணப்ப நாயக்கர். இவர் செஞ்சிக்கோட்டையை வலுவானதாக அமைத்தார். செஞ்சியில் கல்யாண மகால் என்னும் அழகான கட்டடத்தையும் இவர் கட்டினுர். திருக்கோவலூர், ஸ்ரீ முஷ்ணம் ஆகிய இடங்களிலுள்ள கோயில்களையும் அவர் கட்டினுர். விஜயநகரப் பேரரசர்களில் புகழ் மிக்க கிருஷ்ணதேவராயர் சிதம்பரம் நடராசர் கோயிலின் வடக்குக் கோபுரத்தை அமைத்தார். வட ஆர்க்காட்டில் உள்ள திருவண்ணுமலைக் கோயிலின் ஆயிரக்கால் மண்டபத்தைக் கட்டியவரும் அவரே. செஞ்சியில் நாயக்கர் ஆட்சி சுமார் ஒரு நூற்றுண்டுக் காலம் நீடித்தது.

### பீஜப்பூர் சுல்தான் ஆட்சி

தலைக்காட்டுப்போரில் விஜயநகரப் பேரரசு வீழ்ச்சியடைந்தது. வெற்றிபெற்ற பீஜப்பூர் சுல்தானின் படைகள் தெற்கே பாய்ந்து வந்தன. கி.பி. 1648-ல் செஞ்சியைப் பீஜப்பூர் படைகள் பிடித்துக்கொண்டு, அங்கு சுல்தான்கள் ஆட்சியை நிறுவினுர்கள். பீஜப்பூர் பிரதிநிதியாகச் செஞ்சியின் கில்லாதார்களாக ஆட்சி செய்தவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் சய்யது நாசிர்கான், நாசிர்முகம்மதுகான்.

இவர்கள் காலத்தில் செஞ்சிக்கோட்டைக்குப் 'பாட்சாபாத்' என்று புதுப் பெயரிட்டனர். ஆனுல் இவர்கள் ஆட்சியும் நீடிக்கவில்லை. இவர்கள் வைத்த பெயரும் நிற்கவில்லை.

### மராத்திய ஆட்சி

சத்திரபதி சிவாஜி, தக்காணத்தில் நிலையான அரசை நிறுவியதும், கி.பி. 1677-ல் ஒரு பெரும் படையுடன் தென்னுட்டின்மீது படையெடுத்து வந்து செஞ்சிக்கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டார். செஞ்சிப் பகுதிக்கு சாந்தாஜி, மராத்தியப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். சிவாஜி இறந்த பிறகு அவர் மகன் சாம்பாஜி, மொகலாயச்சக்கரவர்த்தி ஔரங்கசீப்பிடம் கைதியாக ஆனுர். சாம்பாஜியின் தம்பி இராசாராம், மொகலாயர் படைக்குத் தப்பிச் செஞ்சிக்கு வந்து சேர்ந்தார். ஆனுல் மராத்திய ஆட்சியும் செஞ்சியில் வெகுகாலம் நீடிக்கவில்லை.

### மொகலாயர் ஆட்சி

ஔரங்கசீப்பின் படைகள் கி.பி. 1698-ல் செஞ்சியைத் தாக்கிப் பிடித்துக் கொண்டன. செஞ்சி நாடு இப்போது மொகலாயர் ஆட்சிக்குள் வந்தது. தென்னுட்டின் மொகலாயப் பிரதிநிதியாக தாவுத்கான் என்பவர் ஆர்க்காட்டில் பவுஜ்தாராக நியமிக்கப்பட்டார். இந்த ஆர்க்காட்டு பவுஜ்தார்கள்தான் பின்னர் ஆர்க்காட்டு நவாப் என்று அழைக்கப்பட்டவர்கள். இதுதவிர, செஞ்சிக் கோட்டையின் கில்லாதாராக மொகலாயப் படையில் ஒரு தளபதியாகப் பணிபுரிந்த சருப்சிங் என்ற இராஜபுத்திரர் நியமிக்கப்பட்டார். சருப் சிங்குக்குப் பின்னர் அவர் மகன் தேஜ்சிங் பட்டத்திற்கு வந்தார். தென் ஆர்க்காட்டு நாடோடிப் பாடல்களிலும், தெருக்கூத்துக்களிலும் அழியா இடம் பெற்றுவிட்ட தேசிங்கு ராஜன் என்கிற 'வெள்ளிக் கிழமை இராஜா' இவரே! ஔரங்கசீப்



நினைத்து நினைத்துப் பார்த்தாலும், பாட்டிக்கு, இவர்களால் என்ன பதில் சொல்ல முடியும் ?

' உள்ளே போவதா அல்லது இப்படியே திரும்பி விடுவதா?' என்ற குழப்பத்தில் நின்றாள் டெய்சி.

அப்போது, தலைவாசல் பக்கமிருந்து ஆளரவம் கேட்டது. தொடர்ந்து " பாட்டி ", என்றழைக்கும் லிங்கத்தின் குரலும் கேட்டது.

அவர்கள் வந்து விட்டார்கள்; பாட்டியை முந்திக் கொண்டு குழந்தையைப் போல் முன் பக்கம் ஓடினாள் அரசி.

டெய்சியும், பரபரப்புடன் குனிந்து வேர்த்துப் போயிருந்த முகத்தைத் துடைத்துக் கொண்டு, உள்ளே செல்ல அடியெடுத்து வைத்த போது, பின்னால் கொல்லைப் பக்கமிருந்து குழந்தையொன்று அழும் குரல் கேட்டுத் தயங்கினாள். கதவை முழுவதுமாகத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தாள்.

கொல்லைத் தோப்பின் தென் கோடியில், சில்லாம்பட்டிக்குச் செல்லும் பாதையோரமாக, அழுகின்ற குழந்தையை இடுப்பிலே வைத்தவாறு நின்று, இங்கேயே பார்த்துக் கொண்டிருந்த பெண்ணொருத்தி, டெய்சி எட்டிப் பார்ப்பதைக் கண்டு, சற்று முன்னால் வந்து, கையசைத்துக் கூப்பிட்டாள்.

டெய்சிக்குத் திகைப்பாக இருந்தது.

இங்கிருந்து பார்க்கும் போது யாரென்று புரியவில்லை.

அவள் தெரிந்துதான் அழைக்கிறாளா ? எதற்காக ?

குழந்தைக்கு ஏதாவது வேண்டுமென்று கேட்பாளோ !

டெய்சி மறுபடியும் திரும்பிப் பார்த்தாள்.

அவள் தோப்புக்குள்ளேயே வந்து விட்டாள். குழந்தை மீண்டும் அழுதது. " இங்கே வாம்மா " என்று அவள் அவசரத்துடன் அழைப்பதும் அரைகுறையாகக் கேட்டது.

டெய்சி படிகளில் இறங்கி, அவளை நோக்கிச் சென்றவள், அவள், யாரென்று தெரிந்த போது திகைத்து நின்றுவிட்டாள்.

பொன்னையாவின் மனைவி சிவந்தி — ... ...

இவள் இங்கே எதற்காகத் தனிமையில் வந்து நிற்கிறாள்?

சிவந்தியின் கண்கள் இரத்தம் போலச் சிவந்திருந்தன. டெய்சியை ஏறிட்டுப் பார்த்துப் படபடப்புடன் சொன்னாள்.

" அவரைத்தான், தலைவரைப் பாக்கணுமம்மா. யாரு கண்ணிலேயாவதுபட்டா கொன்னு போடுவாங்க. இந்தப் பக்கமா வரச் சொல்றியா?" என்றாள் அவள்.

திகைத்தாலும், "இருங்க— உள்ளே போய்ச் சொல்றேன் " என்று சொல்லிவிட்டுத் திரும்பினாள் டெய்சி.

### குடிநீர் வசதி

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள மொத்த கிராமங்களின் எண்ணிக்கை 3,450; இவற்றில் 1967 வரையுள்ள 20 ஆண்டுகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி பெற்ற கிராமங்கள் 1,467; அதன் பின் கடந்த ஐந்தாண்டுகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி பெற்ற கிராமங்கள் 1803. எஞ்சியுள்ள 180 கிராமங்களுக்கு 41 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

வீட்டிற்குள் நுழைந்தபோது, முன்கூடம் நிறைய ஆள் இருப்பது தெரிந்தது.

எப்படியும் அவரிடமே தகவல் சொல்லியாக வேண்டுமே!

பின்கட்டைக் கடந்து முன்னால் வந்தாள் டெய்சி.

அதே சமயத்தில், இவளைத் தேடிக் கொண்டு அரசி முன்னால் வந்ததும் நல்லதாயிற்று.

அரசியை ஒரு பக்கமாக இழுத்துச் சென்று, " உங்கண்ணாவை உடனே பாக்கணுமாம். அந்தப்பொன்னையாவோடபெண்சாதி சிவந்தி கொல்லைப்பக்கமா வந்து நிக்கிறா ?" என்று அவசரத்துடன் சொன்னாள் டெய்சி.

" சிவந்தியா—இங்கேயா ? " அரசிக்கும் வியப்பாகவே இருந்தது.

அரசியைத் தொடர்ந்து, முன் பக்கமிருந்து பாண்டியனும் அங்கே வந்து விட்டான். இது வரையிலும் இங்கு டெய்சி வந்திருப்பது அவனுக்குத் தெரியாது. கண்டதும் முகம் மலர்ந்தது.

" நீயும் இங்கேதானா டெய்சி? ஒருத்தருக்கொருத்தர் ஆறுதல் சொல்லிக் கொண்டே இருந்திங்களாக்கும் " என்று கேட்டான் பாண்டியன்—அந்த வறண்ட புன்னகையுடன்.

டெய்சி அரசியைப் பார்த்தாள்.

அரசி சொன்னாள்.

" அண்ணா, கொல்லைப்பக்கமா அந்தப் பொண்ணு சிவந்தி வந்து நிக்கிறாளாம். உங்களைப் பாக்கணுமாம். " என்றாள்.

" இங்கேயா? " என்று வியப்போடு கேட்ட பாண்டியன் பரபரப்படைந்தவனாய், வேறு ஒன்றும் சொல்லாது பின்கட்டை நோக்கி நடந்தான்.

அரசியும் டெய்சியும் அவனைப் பின் தொடர்ந்து வந்தவர்கள் கொல்லைக் கதவோரமாகவே நின்று விட்டனர்.

பாண்டியன் அருகில் சென்ற போது, சிவந்தியின் இடுப்பிலிருந்த குழந்தையின் அழுகையும் அடங்கி விட்டது.

சிவந்தி தென்னையின் மறைவிலே நின்று கொண்டிருந்தாள்.

அருகில் நெருங்கி வந்த பாண்டியன், " என்ன சிவந்தி?" என்று பதட்டத்துடனே கேட்டான்.

சிவந்தி ஏறிட்டுப் பார்த்தாள்!

" உங்க சொல்லிலே நியாயம் இருக்குன்னு நினைச்சு, வெட்டினது யாருன்னு என் புருஷனிட்ட கேட்டதே..... இப்ப என் தலைக்கில்லா வந்து நிக்குது " என்று சற்று ஆவேசத்துடன் சொன்னாள்.





என்ன நடந்திச்சு?"

" ரெண்டு நாளைக்குமுன்னாலே வந்து பேசினாரு. " நான் செத்துப் போக மாட்டேன். கவலைப்படாதேன்னு சொன்னாரு. நானும், உங்களை அடிச்சது யாரு, எங்கிட்டச் சொல்லுங்கன்னு கேட்டேன். அவரும் யோசிச்சுக் கிட்டே இருந்தாரு. அதுக்குள்ளே அந்தக் கிழவன் வந்திட்டாரு. பொசுக்குன்னு பழம் வாங்கியாரச் சொல்லி என்னை வெளியே அனுப்பிச்சுப் போட்டு, அவருகிட்ட என்னத்தைச் சொன்னாரோ?"

பாண்டியன் சற்று நிதானித்துச் சொன்னான்.

"இருக்கிற நிலைமையிலே, எப்படியோ உனக்கும் பொன்னையாவுக்கும் மத்தியிலே அணை போடலைன்னா உண்மை வெளியாகிப்போகும் இல்லையா? சுருக்கத்திலே உருட்டி முத்தையாவோட மூளை பக்குவமா வேலை செய்திருக்கு; என்ன சொல்றிங்க?'

"படுக்கையிலே, நகர முடியாமக் கிடக்கிறவன் நெஞ்சிலே நஞ்சைக் கலந்தா, பொன்னையா உங்கூடப் பேசவும் மாட்டான், சீக்கிரமா செத்தும் போவான்னு அவங்க எதிர்பார்க்கிறாங்க.



படுக்கையிலே கிடக்கிறவன் கிட்ட. ஏற்கெனவே உனக்கும் எனக்கும் தொடர்பு உண்டுன்னு சொல்லி யிருக்காங்க. உனக்குப் புரியலையா?'' என்று அமைதியாகவே கேட்டான் பாண்டியன்.

கேட்டதும் சிவந்தி திகைத்துத்தான் போய்விட்டாள்.

''நானு நாளா அவரு காலடியிலே உட்கார்ந்து முகம் பார்க்க மாட்டாரான்னு அழுதுகிட்டிருந்தேனே. இந்தப் பாவிங்க செய்த மதிமோசம் எனக்குத் தெரியாமப் போச்சே. இல்லாததை இந்த நேரத்திலே இட்டுக்கட்டிச் சொல்றவங்க விளங்குவாங்களா?'' என்றாள் குமுறலோடு.

''நீ கொடுக்கிற சாபம் அவங்களை எதுவும் செய்யாது. உயரத்தான் தூக்கிவைக்கும். நீயோ நானோ மனசாலே கூட நினைக்காததை இட்டுக்கட்டிச் சொல்லும் போது, பொன்னையாவுக்கு இந்தத் தீங்கைச் செய்தவங்க அவங்கதான்னு உனக்கு இப்ப நல்லாப்புரியும்'' என்று மேலும் சொன்னான் பாண்டியன்.

''அந்த மொட்டைத்தலைக் கிழவன் ஆஸ்பத்திரியைத்தானே சுத்தி வாராரு. இன்னிக்கி அவரும் இங்கே வரத்தானே நானும் புறப்பட்டு வந்திருக்கேன்'' என்றாள் சிவந்தி.

''பொன்னையாவோட உயிருக்கு ஒரு விலைபேசி யாரையக் கட்டி வச்சிருக்காங்க. அவங்களே காவலுக்கும் உட்கார்ந்திருக்காங்க. எப்படியும் உண்மையைத் தெரிஞ்சுக்கணும். நீயும் பக்கத்திலேயே இரு. அவன் பேசுன்னாலும் நீ பேச. உடனே போய்ச்சேரு. நானிங்கே நானும் உனக்குத் துணையா இன்னொரு ஆளை அனுப்பி வைக்கிறேன்'' என்றான் பாண்டியன்.

''இத்தனை காலமாச்சே: எந்தப்பயலே இப்படியொரு சொல்லு விழுந்தது இல்லையே'' என்றாள் சிவந்தி கண்களில் நீர் பொங்கி வர.

''அவங்க சொல்றதைப் பத்திக் கவலைப்பட்டுக் கிட்டே இருந்தா எந்தக் காரியமும் நடக்காது. நாம குற்றமற்றவங்களா இருக்கிறப்ப அதுக்கு அவசியமுமில்லே. எப்படியும் பொன்னையா பிழைக்கணும். நினைக்கிறது நடக்கணுங்கிறதுக்காக அவங்க எந்தப் பாவத்தையும் செய்யத் தயங்க மாட்டாங்க. அவங்களுக்கு மத்தியிலே, தைரியத்தோட, உண்மைவெல்லும்ங்கிற நம்பிக்கையோட இரு. இது போதும்'' என்றான் பாண்டியன்.

சிவந்தி, கீழே குனிந்து, தரையில் தவழ்ந்திருந்த மகனைத் தூக்கி இடுப்பிலே வைத்துக் கொண்டாள். அந்தக் குழந்தை, பொக்கை வாயைத் திறந்து, பாண்டியனைப் பார்த்துச் சிரித்தது.

''நானும் பறந்தி பெத்த மகதான். இந்த மட்டுக்கும் நடந்தது இல்லைன்னு தெரிஞ்சுக்காம விடப்போறதில்லே'' என்று ஆவேசத்தோடு சொன்னவள்—கண்கலங்கிக் குனிந்து மகனை அணைந்து முத்தமிட்டாள்.

''ஆத்திரப்படும் போது, வாய் சிதறிப்போகும். அமைதியாலே இரு. சீக்கிரமாப் போ!'' என்றான் பாண்டியன்.

''இப்படியே நடந்து போயி அணைப்பாட்டியிலே வண்டி ஏறிக்கிறேன். வாரேங்க.'' என்று சொல்லிவிட்டுச் சிவந்தி திரும்பி நடந்தாள்.

அவள் நடையிலே ஒரு ... தைந்து ... பார்த்தவாறு நின்றான் பாண்டியன்.

வாழ்நாளில், உழைப்பைத் தவிர வேறு ஒன்றையுமே ... டறியாத அந்தக் ... தையே. பகைக் ... உருட்டுகிறவர்கள் ... இவள் திரிந்து ... அந்த நரகத்திலிருந்து ... னையா தெளிந்து எழுவானா?

அங்கேயே நின்ற பா... யன். அந்தக் காட்... காண நேர்ந்தது.

சிவந்தி தோப்பைக் கடந்த போது, எதிரே பாதையோ... பாக நாச்சிமுத்து நின்று... டிருப்பது தெரிந்தது. அவ... அருகிலே நெருங்கிய போது, ... அவளுக்கு முன்னால் ... உமிழ்ந்து விட்டு, ... நோக்கி நாச்சிமுத்து நடப்பது தெரிந்தது.

சிவந்தி அங்கேயே நின்று, திரும்பிப் பாண்டியனைப் பார்த்தாள்.

பாண்டியன், இங்கிருந்தே ... தலைக்குமேல் கையைத் தூக்கிப் பக்கவாட்டத்தில் அசைத்தான்.

சிவந்தி தயங்கவில்லை. நாச்சிமுத்து நடந்த ... அவளும் நடந்தாள்.

கொல்லைக் கதவில் ... மாகவும், படிகளிலும், ... ருமே நின்று, நடைபெற்... இந்த நாடகத்தையேதான் ... துக் கொண்டிருந்தார்கள்.

''இடையிலே.. இது ... இருக்கு..'' பெருங்கூத்தா... என்று வேகத்தோடு கேட்டு... முன்னால் நின்ற பாட்டி.

திரும்பி வந்த பாண்டியனின் கண்கள் டெய்சியைத் தேடின. அவள் மட்டும் அங்கே இல்லை.

(வளரும்)

## பாய் நெசவுப் பயிற்சி நிலையம்

சிதம்பரம் வட்டத்தில் காட்டுமன்னார் கோயில் அருகில் உள்ளது செட்டித் தாங்கல் என்னும் கிராமம். இங்கே தமிழக அரசின் தொழில் வணிகத்துறை இந்த ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் நாளில் 'அரிசன மகளிர் பாய் நெசவுப் பயிற்சி நிலையம்' ஒன்றினை உருவாக்கியிருக்கிறது.

20 பெண்கள் இங்கே பயிற்சி பெறுகின்றார்கள். ஓராண்டுப் பயிற்சி இது. பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூபாய் 40 உதவிப்பணம் கொடுக்கப்படுகிறது. பயிற்சி முடிந்ததும் அவர்கள் சொந்தத்தில் இந்தத் தொழிலைத் துவக்குவதற்காக ரூபாய் 400 கடனுதவி தருகிறது தமிழக அரசு.

இங்கே பயிற்சி பெறுபவர்களுக்குப் படிப்பு அறிவும் தேவை இல்லை என்றாலும் தற்போது பள்ளி இறுதிவரை படித்த பெண்கள் நால்வர், பயிற்சி பெறுகின்றனர்.

இரண்டு நாட்களில் ஒரு பாயை நெய்து முடிக்கிறார்கள். பாய்களுக்குத் தேவையான கோரை வணிகத் துறையின் வாயிலாகக் கரூரிலிருந்து வரவழைக்கப்படுகிறது.

தற்போது 10 தறிகள் உள்ள இந்தப் பயிற்சி நிலையத்தில் ஒரு பெண் பயிற்றுவிப்பாளர் பொறுப்பேற்றுப் பணிபுரிகின்றார்.



நெய்வேலி, ஆர்க்காடு மாவட்டம் தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதி என்று ஒரு காலம் கருதப்பட்டது. அந்தக் கருத்து இன்று பழங் கதையாகி விட்டது. நெய்வேலியினால் தொழிற்பெருமை பெற்று விளங்கும் இம்மாவட்டத்தில் பொதுத் துறையின் கீழும், தனியார்துறையின் கீழும் பரவலான தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாகக் குடிசைத் தொழில் வளர்ச்சி போற்றத்தக்க தன்மையிலுள்ளது.



### இரசாயனத் தொழிற்சாலைகள்

கடலூர் பழைய நகரில் பாக்ட் நிறுவனத்தாரால் ஓர் உரத் தொழிற்சாலை நிறுவப்பட்டு வருகிறது. மேலும் ஏற்கெனவே இங்குப் பிரிமியர் உரத் தொழிற்சாலை 1 கோடி ரூபாய் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் செயல் பட்டுவருகிறது. இங்கு சல்ப்யூரிக் ஆசிடும், சூப்பர் பாஸ்பேட்டும் உற்பத்தி செய்யப் பட்டு வருகின்றன. கடலூரில் பாரி நிறுவனத்தார் ஆண்டு தோறும் 1,000 டன் வீதத்தில் கலப்பு உரங்களைத் தயாரித்து வருகின்றனர். நெய்வேலியில் உரத் தொழிற்சாலை ஒன்று சீரிய முறையில் இயங்கி வருகின்றது. இவ்வாறு வாடிப் போன நிலங்களை உரமிட்டு வளர்த்து, விளைச்சலை அதிகமாக்க இத் தொழிற்சாலைகள் மூலம் அரசு நமக்கு உதவுகிறது.

### பொறியியல் தொழில்

வடலூரில் சேஷசாயி தொழில் நிறுவனத்தார் மின்சாரச் சாதனங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையை நடத்தி வருகின்றனர். இத்தொழிற்சாலையில் ஆண்டு தோறும் சுமார் 1,200 டன் அதிக சக்தி தாங்கக் கூடிய இன்சுலேட்டர்களையும் (Insulators) 2,000 டன் காஸ்டிங்குகளையும், 120 டன் நான்பெரஸ் உலோக காஸ்டிங்குகளையும், 12,000 டன் போர்ஜிங்களையும் தயாரித்து வருகிறது. இதன் மூலதனம் ரூ. 1 கோடியாகும். இத்தொழிற்சாலையில் சுமார் 700 பேர் வேலை செய்கின்றனர்.

மாநில அரசின் தொழில் துறைத் திட்டங்கள் இம்மாவட்டத்தில் சிறப்பாக நிறைவேற்றப் பட்டு வருகின்றன. அவற்றுள் விருத்தாசலத்தில் உள்ள மெருகிட்ட குழாய்த் தயாரிப்புத் தொழிற்சாலை, பீங்கான் பாண்டத் தொழிற்சாலை, பீங்கான் பாண்டத் தொழிற் பள்ளி, தொழிற்பண்ணை, குறிப்பிடத்தக்கவை. பீங்கான் பாண்டத் தொழிற்சாலையின் மொத்த மூலதனம் ரூபாய் 15 இலட்சமாகும். இந்தத் தொழிற்சாலைக்கு வேண்டிய முக்கிய மூலப் பொருள்கள் விருத்தாசலத்திலிருந்து 100 மைல் சுற்றளவில் கிடைக்கின்றன. இங்குத் துப்புரவுப் பாண்டங்கள், அலங்காரப் பாண்டங்கள், கோப்பைகள் முதலியவை செய்யப்படுகின்றன.

விருத்தாசலத்திலுள்ள மெருகிட்ட குழாய்த் தயாரிப்புத் தொழிற்சாலை ரூ 12 இலட்சம் மூலதனத்தோடு தொடங்கியது. இத்தொழிற்சாலை ஆண்டு தோறும் 6,000 டன் மெருகிட்ட குழாய்களைத் தயாரிக்கும் திறனுடையது. இங்குள்ள அலங்காரப் பாண்டத் தொழிற் பிரிவு உற்பத்தி செய்வதோடு ஆண்டு தோறும் 15 பேர்களுக்கு அலங்காரப் பாண்டத் தயாரிப்பில் பயிற்சியும் அளித்து வருகிறது. ஒவ்வொருவருக்கும் மாதம் ரூபாய் 50 உதவித் தொகை அளிக்கப்படுகிறது. பீங்கான் பாண்டத் தொழில் வளர்ச்சிக்காக 33½ இலட்சம் ரூபாய் செலவில் தொழிற்பேட்டை கட்டப்பட்டுள்ளது.

விருத்தாசலத்தில் தமிழக அரசின் அச்சகம் ஒன்று இயங்கி வருகிறது. இங்கு அரசு சம்பந்தப்பட்ட வெளியீடுகள், அச்சடிக்கப்படுகின்றன.

கூட்டுறவு முறையில் ஓர் அச்சகம் கடலூரில் இயங்கி வருகிறது.

### எண்ணெய்த் தொழிற்சாலை

விழுப்புரம் வலஸ்பதி எண்ணெய் தயாரிக்கும் ஆலை ஒன்று தமிழக அரசினரால் நிறுவப்பட்டு வெற்றிகரமாக இயங்கி வருகிறது. நெடுங்காலமாக முடங்கிக்கிடந்த இத் தொழிற்சாலையை இவ்வரசு திறந்து பல பேருக்கு வாழ்வளித்து வருகிறது. மேலும் கடலூரில் 'ஆயில் புராடக்ட்ஸ் கார்ப்பரேஷன்' என்ற ஓர் எண்ணெய்த் தொழிற்சாலையும் இயங்கி வருகிறது.

### அரிசி ஆலை

சிதம்பரத்தில் இந்திய உணவுக் கார்ப்பரேஷன் ஓர் அரிசி ஆலையை பிரம்மாண்டமான முறையில் கட்டியிருக்கிறது. இங்கு விஞ்ஞான முறையில் அரிசியை வேகவைத்து, உலர்த்தி, அறைக்கப்பட்டுச் சேமித்து வைக்கப்படுகின்றது. மேலும் கள்ளக்குறிச்சியில் உலகம் காத்தான் என்னுமிடத்தில் ஓர் அரிசி ஆலை இயங்கி வருகிறது.

அண்மையில் தனியாரின் முயற்சியில் பண்ணுருட்டிக்குப் பக்கத்தில் சாராயத் தொழிற்சாலை ஒன்று 50 இலட்ச ரூபாய் மூலதனத்தில் தொடங்கப்பெற்றிருக்கிறது.

தனியாரின் முயற்சியில் முந்திரித் தொழிற்சாலை ஒன்றும் பண்ணுருட்டிக்கு அருகில் இயங்கி வருகிறது.

### சர்க்கரை ஆலை

இந்த மாவட்டத்தில் கரும்பு விளைச்சல் அதிகமாக இருப்பதனால் நான்கு சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. இவை கூட்டுறவுத் துறையின் வாயிலாக நடைபெறுகிறது. தனியாரின் நிருவாகத்தில் இயங்கும் சர்க்கரை ஆலைகளும் இந்த மாவட்டத்தில் உள்ளன.

### தொழிற்பேட்டைகள்

1967—ஆம் ஆண்டு ரூ. 3.79 இலட்சம் செலவில் 29.03 பரப்பளவில் வடலூரில் 4 தொழிற்கூடங்கள் கொண்ட ஒரு தொழிற்பேட்டை கட்டப்பட்டு 1969-ல் முடிவு பெற்றது. இந்தத் தொழிற்பேட்டையில் தயாராகும் உபரி சாதனங்கள் நெய்வேலி, வடலூர் பீங்கான் தொழிற்சாலை போன்றவற்றிற்குப் பயன்படுகின்றன.

கடலூர்-திருக்கோவலூர் செல்லும் பாதையில் கோண்டூர் என்னுமிடத்தில் 5.782 இலட்சம் செலவில் 15.60 ஏக்கர் பரப்பளவில் 6 தொழிற் கூடங்கள் கொண்ட ஒரு தொழிற்பேட்டை 1968-ல் தொடங்கப் பெற்றுள்ளது.

### நிலப் பட்டா
### மனைப் பட்டா

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கடந்த இருபதாண்டுகளில் 1947 முதல் 1967 வரை நிலங்கள் ஏழை எளியவர்களுக்கு உரிமையாக்கப்பட்டுப் பட்டா வழங்கப்பட்ட வகையில் மொத்தம் வழங்கப் பட்டுள்ள பட்டாக்களின் எண்ணிக்கை 15,813.

அதே காலத்தில் வழங்கப்பட்டுள்ள வீட்டுமனைப் பட்டாக்களின் எண்ணிக்கை 3,228.

அதன் பின்னுள்ள ஐந்தாண்டுகளில் தமிழக அரசு வழங்கியுள்ள நிலப்பட்டாக்களின் எண்ணிக்கை 34,188; வீட்டு மனைப் பட்டாக்களின் எண்ணிக்கை 85,476.

கடலூரில் எரிபொருள் தொழிற்கூடம் ஒன்று 4.8 இலட்சம் செலவில் 2.81 ஏக்கர் பரப்பளவில் 1968-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுச் சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

மரக்காணத்தில் கண்ணும்புத் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திலுள்ள சர்க்கரைத் தொழிற்சாலைகளுக்கு இத் தொழிற்சாலை கண்ணம்பு விநியோகம் செய்து வருகிறது.

இவ்வாறு, தொழிற்கூடங்கள் இந்த மாவட்டத்தில் அமைப்பதன் வாயிலாக, இந்த மாவட்டம் எழில் மிகுந்து விளங்குகிறது




பரங்கிப் பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கிள்ளை என்னும் கிராமத்தின் அருகே உள்ள பிச்சாவரம் காடு சுற்றுலாப் பெருமை படைத்தது.

இங்கே கடல்போன்ற நீர்ப் பரப்பு உள்ளது. அந்த நீர்ப் பரப்பில்வனப்பகுதியும் உள்ளது. அந்த வனப்பகுதிதான் பிச்சாவரம் காடு என்று சொல்லப்படுகிறது. படகின் துணைகொண்டுதான் அங்கே செல்ல முடியும்.

இந்தக் காடுகளில் கர புன்னை என்ற மரங்கள் இருக்கின்றன. இதே போன்ற மரங்கள் உலகத்திலேயே ஆறு இடங்களில்தான் இருக்கின்றனவாம். இந்தியாவில் தண்டகாரண்யத்தில் உள்ளது. இந்த மரத்திலுள்ள காய்கள் வெடித்து, விதைகள் தண்ணீருக்குள் விழுகின்றன. அவை தாமாகவே முளைத்து மரங்களாகி விடுகின்றன. இந்தக் காடுகளில் —பல வருடங்களுக்கு முன்பு அண்ணா அவர்கள் ஒரு முறை வந்து சென்றிருக்கிறார்; தனிமையில் அமர்ந்து சிந்தனை செய்திருக்கிறார்.

காடுகளும், நீர்ப்பரப்பும் கண்களுக்கு விருந்தாக அமைந்துள்ளன. மதுரை மாவட்டத்தில் தேக்கடியை அனைவரும் சிறப்பித்துச் சொல்வதுண்டு. 10 தேக்கடிகள் ஒன்று சேர்ந்தது இந்தக் கிள்ளை என்று சொல்லலாம். சில பகுதிகளில் ஐந்து பக்கங்களில் வாய்க்கால்கள் பிரிகின்றன. நடுப்பகுதியில்—படகில் இருந்து பார்த்தால் கால்வாய்கள் பிரியும் பகுதிகளும்—மையப் பகுதியும் நம்மைப் பரவசப்படுத்தும்.

சின்ன வாய்க்கால், பெரிய வாய்க்கால், கண்டு வாய்க்கால், நரி வாய்க்கால் என்று பல வாய்க்கால்கள் உள்ளன. இவற்றை இங்குள்ள மீனவர்கள், தங்களது நாடோடிப் பாடல்களில் குறிப்பிடுகிறார்கள்.

இங்கே சின்ன வாய்க்கால், பில்லுமேடை, முழுக்குத்துறை, முடச ஓடை என்று பல கிராமங்கள் உள்ளன. இவை தீவு போல் காட்சி தருகின்றன.

இவற்றிற்குப் படகின் வாயிலாகத்தான் செல்ல வேண்டும். செல்லும் பாதை இந்த மீனவர்களுக்குத்தான் தெரியும்.

கிள்ளையிலிருந்து 2 மைல் தொலைவில் சின்னவாய்க்கால் இருக்கிறது. இங்கு 150 குடும்பங்கள் உள்ளன. இவர்கள் அனைவரும் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளனர்; கிள்ளையிலிருந்து இங்கு வந்து குடியேறியுள்ளவர்கள். வருடத்தில் தை மாதம் முதல் புரட்டாசி மாதம் முடிய இவர்கள் இங்கேதான் தங்கியிருப்பார்கள். அதன்பிறகு கிள்ளைக்குச் சென்று விடுவார்கள். மழைக் காலத்தில் இங்கே இருப்பதில்லை. ஒரு சிலர், துணிவுடன் மழைக் காலத்தில்கூட இந்தச் சின்னவாய்க்கால் கிராமத்திலேயே இருப்பதுண்டு. ஒரு சமயம் பலத்த மழையினால் இங்குள்ள குடிசைகள் சீர்குலைந்து கடல் தண்ணீரில் சென்றதுண்டு.

சின்ன வாய்க்காலில் உள்ள குழந்தைகள் நாள்தோறும் படகில் கிள்ளைக்குச் சென்று படித்துத் திரும்புகிறார்கள்.

சின்ன வாய்க்காலில் உள்ள மீனவ மக்கள் ஆவணி மாதத்தில் தான் திருமண விழா நடத்துகிறார்கள். அதுவும் கிள்ளைக்கு வந்துதான் நடத்துகிறார்கள். தீவுப் பகுதிகளில் திருமண விழா நடத்துவதில்லை. அது போலவே, எவரும் மடிந்துவிட்டால், இறுதிச் சடங்குகளை நடத்துவதற்கும் கிள்ளைக்கே வந்து விடுகிறார்கள்.

இந்தப் பகுதிக்குப் பல வருடங்களுக்கு முன்பு இந்தியக் குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன் வந்து சென்றிருக்கிறார். அ ஹ ரூர் அண்ணா அவர்களும் இங்கு வந்து சென்றிருக்கிறார்கள்.

இந்தப் பகுதி — ஏறக்குறைய காஷ்மீர் போன்ற நீர்நிலையை உடையது. இதனை அபிவிருத்தி செய்வதற்கும், இதனைச் சுற்றுலாத் தலமாக்குவதற்கும் ஒரு திட்டம் தமிழக அரசின் ஆய்வில் உள்ளது. இந்தப் பகுதி சுற்றுலாத் தலமாக ஆக்கப்பட்டால் —பறவைகளுக்கு வேடந்தாங்கல் ஏரி சரணாலயமாக அமைந்திருப்பது போல—மனித இனத்துக்கு—இந்தப் பகுதி மகிழ்ச்சி தரும் இடமாக மாறுவது உறுதி.

கிள்ளை ரெவின்யூ கிராமம். 16 குக்கிராமங்கள் கொண்டது. 8 ஆயிரம் மக்கள் இங்கே வாழ்கிறார்கள். இவர்களில் பாதிப் பேர் மீனவர்கள்.

கிள்ளையில் மீனவர் கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. இவர்களுக்கு அரசு வலை விநியோகம் செய்கிறது. ஏறக்குறைய 1,500 படகுகள் இங்கே உள்ளன.

மீனவர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள அரசு 1,000 ரூபாய் பணம் தருகிறது. இதில் 75 சதவீதம் உதவித் தொகையாகவும், 25 சதவீதம் வட்டியில்லாக் கடனாகவும் தரப்படுகின்றது.

இதுவரை 80 வீடுகள் இந்த முறையில் உருவாகியுள்ளன. இன்னும் 40 வீடுகளுக்கு அனுமதி கொடுத்துள்ளது அரசு. இந்த ரூபாய் 1,000 தவிர மேற்கொண்டு பணம் செலவு செய்து வீடு கட்டிக்கொள்ள மீனவர்களுக்கு அனுமதி தந்துள்ளது அரசு








ஒரு காலத்தில் கவனிப்பாரற்றுக் காட்டு நிலமாகக்கிடந்த பகுதி இன்று தொழில் வளம் பெருக்கும் உன்னத நகரமாக உருவெடுத்திருக்கிறது. இந்த அதிசயம் நடைபெற்றிருக்கும் இடம்தான் வளம் சுரக்கும் நெய்வேலி. வீட்டுக்கு உதவும் 'லிக்கோ', நாட்டின் தொழில் வளம் பெருக்கிட மின்சாரம், ஏர்முனை செழிக்க உரம், இப்படி இங்குக் கிடைக்கும் இயற்கை வளம் மனித சமுதாயத்தை வாழ வைக்கும் அமுத சுரபியாகத் திகழ்வதை வியப்புற்று வாழ்த்தாதார் இல்லை.

## நெய்வேலி வரலாறு

நாட்டின் தொழில் வளர உயிர்நாடி மின்சாரம். தொழில் வளர்ச்சி பெருகுவதற்கு ஏற்ப மின்சாரத்தின் தேவையும் பெருகுகிறது. தமிழகத்திலுள்ள நீர் நிலைகளில் எல்லாம் மின் சக்தியைப் பெற்ற பிறகு பெறுவதற்கு ஒன்றுமில்லை. அந்நீர் நிலைகளில் ஏற்ற முடிவுக்கு வந்த பிறகு அனல் மின்சார நிலையங்கள் நமது கவனத்தை ஈர்த்தன. அவற்றை இயக்க நிலக்கரி, வாயுக்கள், எண்ணெய் முதலியன தேவைப்பட்டன. அண்டை மாநிலங்களிலிருந்து நிலக்கரி கொண்டுவந்து அனல் மின்சார நிலையங்கள் உருவாக்கப்பட்டாலும் அது நமது மாநிலத் தொழில் வளர்ச்சிக்குப் போதாது என்ற நிலை ஏற்பட்ட போது, நெய்வேலியில் மாபெரும் அளவில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரி, நிபுணர்களின் கவனத்தைக் கவர்ந்தது. தோண்டத் தோண்டக் குறையாத இந்தக் கரிச் செல்வத்தைப் பயன்படுத்தி அனல் மின்சார நிலையம் உருவாக்கும் எண்ணம் பிறந்தது. அதன் விளைவே இன்றைய நெய்வேலி.

தமிழக அரசும் மத்திய அரசும் நடத்திய ஆராய்ச்சிகளின் வாயிலாக இப்பகுதியில் இருநூறு கோடி டன்னுக்கு மேலான நிலக்கரியுள்ள நூறுசதுர மைல் பரப்பளவு, அதிகமான கரி உள்ள பகுதி என்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இது அயல் நாடுகளில் கிடைக்கும் நிலக்கரிகளுடன் போட்டி போடக் கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

## நிலக்கரிச் சுரங்கம்

சுமார் 160 அடி உயரத்துக்கு மேல் மண்; மேல் பாகத்தை அழுத்தக் [illegible] இருந்து மிகச்சக்தி வாய்ந்த நீர் ஊற்றுப் பகுதி. இரண்டுக்கும் இடையே தான் 55 அடியுள்ளகரிப்படிவம் ஒளிந்து கொண்டிருப்பது; அந்தச் செல்வத்தை அடைய வேண்டுமானால் மேல் மண்ணை அகற்ற வேண்டும்; அடியில் உள்ள சக்தி வாய்ந்த ஊற்று நீர் வெடித்து மேல் நோக்கிப் பாய்ந்து சுரங்கம் வெள்ளத்தினால் மூழ்காமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த இயற்கை விளையாட்டில் வெற்றி காணவே குகைச் சுரங்க முறையைக் கையாளாமல் திறந்த வெளிச் சுரங்க முறை பின்பற்றப்பட்டது.

சுரங்கவேலை ஆரம்பிக்கப்பட்டதும், சுமார் 50 பம்புசெட்டுகள் இடைவிடாது வேலை செய்து நிமிடத்திற்கு 50,000 காலன் வீதம் தண்ணீரை வெளியேற்றியது. இதன் காரணமாக நீரூற்றின் சக்தி குறைந்தது. சுரங்க வேலை எவ்வித ஆபத்துமின்றி நடைபெற்று வருகிறது. இவ்விதம் வெளியேற்றப்படும் நீரில் ஒரு பகுதி மின் நிலையத்திற்கு அருகே ஓர் ஏரியில் தேக்கப்படுகிறது. இதுவே மின்சார நிலையம்; மற்றத் தொழில் நிலையங்களின் தேவைகளுக்கும் நகரத்தின் குடி தண்ணீர்த் தேவைக்கும் இது உதவுகிறது.

இம் மாபெரும் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பை 1955-ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்திற்கான மூலதனச் செலவு சுமார் ரூ.160கோடியாகும். இத்திட்டத்தின்கீழ் வெட்டியுள்ள முதற் சுரங்கத்தில் ஆண்டொன்றுக்கு 35 இலட்சம் டன் பழுப்பு நிலக்கரி கிடைத்தது. இந்த உற்பத்தியின் அளவு முதல் விரிவாக்க நிலையில் 55 இலட்சம் டன்னாகவும் பின்னர் 63 இலட்சம் டன்னாகவும் உயர்த்தப்படும். இங்குள்ள சுரங்கத்தில் 1962 மே மாதம் முதற் கொண்டு பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கப்படுகிறது.

## அனல் மின்சார நிலையம்

சோவியத் ரஷ்யாவின் உதவியுடன் முதல் நிலையாக 250 மெகாவாட் மின்சார உற்பத்தியுள்ள அனல் மின்சார நிலையம் நிறுவப்பட்டது. 1962 மே மாதத்தில் 50 மெகாவாட் உற்பத்தித் திறனுள்ள முதற் பிரிவு வேலை தொடங்கியது. ஐந்தாவது பிரிவு 1964 ஏப்ரலில் வேலை செய்யத் தொடங்கியது. இரண்டாவது நிலையாக 50 மெகாவாட் உற்பத்தித் திறனுள்ள 6-வது பிரிவு 1965 ஆகஸ்டு மாதத்தில் வேலை தொடங்கியது. இதனால் இந்த மின்சார நிலையத்தின் உற்பத்தித் திறன் 300 மெகா வாட்டாக உயர்ந்தது. 100 மெகா வாட் உற்பத்தித் திறனுள்ள 7-வது பிரிவு ஒன்று தற்போது இயங்கி வருகிறது. இதோடு ஒவ்வொன்றும் 100 மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடிய இரண்டு பிரிவுகளை நிறுவியுள்ளனர். தற்போது இதன் மொத்த உற்பத்தித்திறன் 600 மெகாவாட்டாகும். மேலும், நெய்வேலி அனல் மின்சார நிலையம் தமிழக மின்சார இணைப்பிற்கு மின்சாரம் அளிக்கிறது.

## உணவு உற்பத்தி பெருக

நெய்வேலியில் ரூ. 36 கோடி செலவில் நிறுவப்பட்டிருக்கும் இரசாயன உர உற்பத்தித் தொழிற்சாலை இந்தியாவிலேயே மிகப் பெரிய தொழிற்சாலையாகும். நிலக்கரியை மூலப்பொருளாகக் கொண்டு இயங்கும் தொழிற்சாலை இந்தியாவிலேயே இது ஒன்றுதான். இது ஆண்டு ஒன்றுக்கு 70,000 டன் நைட்ரஜன் சத்துடன் கூடிய 1.52 இலட்சம் டன் யூரியா உரம் உற்பத்தி செய்யக்கூடிய திறனது.

அழகு சுமந்து வரும் பெண்ணைப் பருவம் சுமையால் களைத்துப் போன இதயம் படைத்த ஒரு வாலிபன் பார்க்கிறான். பார்த்தவன் தன் பாதையில் போவது தானே நியாயம்! அந்த அழகியின் மீது பழி கூறி விட்டுப் போகாவிட்டால் அவனுக்குத் தூக்கம் வராது போலும். மனித வழக்கமே அப்படித்தான் ஆகி விட்டது. "ஏ, வானத்தில் தவழும் நிலவைப் பார்த்து நிலவே—ஏன் என்னை இப்படித் தகிக்கிறாய்?" என்று கோபித்துக் கொள்வான். சலசலவெனப் பாயும் நீரோடை நிலங்கிழித்துச் செல்வதைப் பொறாமைக் கண்களோடு மனிதன் பார்த்து வயிற்றெரிச்சலை வெளியிடு வான். நான் வருந்தும்போது நீரோடை இப்படி இசைபாடிச் செல்வதா? என்று கவிதா உள்ளத்தோடு வசைபொழிவான். அத்தகைய ஓர் இளைஞனைத்தான் இதோ நம் கண்முன்னே— மன்னிக்கவும்— ஒரு மங்கையின் கண் முன்னே நிற்கவைத்துக் கதற வைக்கிறார் வள்ளுவப் பெருந் தகையார்.

"கொடுமை பொருந்திய புருவங்கள் கோணுதல் இல்லாமல் நேர்க்குமானால், இவளுடைய கண்கள் என்னை நடுங்க வைக்கும் அளவுக்கு என் மீது பாய மாட்டா!"

அவளது பார்வையில் பட்டுத் தெறிக்கிறதாம் அவனது பருவ நெஞ்சம்! அந்த இன்ப வேதனையில் புலம்புகிறான். அய்யகோ— அணை சரியாகப் போடப்பட்டுத் தடுக்கப்பட்டிருந்தால் விரகதாப வெள்ளம் என்னை மூழ்கடித்திருக்காதே! என்ற கருத்திலே கூறுகிறான்; அவள் சுந்தர விழிகளை—அவள் புருவங்கள் சுவர் போலத் தடுத்திருக்கக் கூடாதா என்று! வள்ளுவர் நடையில் அதைப் படியுங்கள்.

"கொடும்புருவம் கோடா
மறைப்பின் நடுங்கஞர்
செய்யல மன்இவள் கண்"

நடுங்கு அஞர் செய்யல—நடுக்கம் தரும் துன்பத்தைச் செய்யமாட்டா என்பது பொருள்.

களங்கம் இருக்கிறது என்பதற்காக நிலவைப் பழிப்பாரில்லை.

முள் உண்டு என்பதற்காக ரோஜா மலரை வெறுப்பாரில்லை.

இப்படித்தான் உதாரணங்கள் கேள்விப் பட்டிருக்கிறோம்.



இதோ ஒரு புதிய உதாரணம் கேளுங்கள். பழையதுதான்; ஆனாலும் புதுமை நிறைந்தது. யசோதர காவியம் என்னும் நூலில் உள்ள அவையடக்கத்தில் காணப்படும் உவமையிது! அனலுக்குள்ளே புகையொடுங்கி இருக்கிறது என்ற காரணத்திற்காக விளக்கை வெறுப்பாருண்டோ?

விளக்கு எரியும்போது அந்தச் சுடரில் புகையும் மறைந்திருக்கிறது. அதற்காக விளக்கை வெறுத்தலாகாது. அதை இதோ அழகாகக் கூறுகிறான் புலவன்.

"உள் விரிந்த புகைக்கொடியுண்டெனா
எள்ளுகின்றன ரில்லை விளக்கினை"

பெயர் தெரியாத புலவரின் பெருமை மிகு உவமை எப்படியிருக்கிறது பார்த்தீர்களா?



டைவது. உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யவும், இரசாயன உரங்களை இறக்குமதி செய்யவும் கணிசமான தொகை செலவிடப்படுகிறது. இந்த உரத் தொழிற்சாலையில் ஆண்டு தோறும் உற்பத்தியாகும் உரங்களை வயல்களில் பயன்படுத்துவதன் மூலம் 7 இலட்சம் டன் அதிக உணவு உற்பத்தி பெறலாம். இதனால் ரூ. 30 கோடி அந்நியச் செலாவணியில் மீதப்படுத்த முடியும். அது மட்டுமல்லாமல் ஆண்டு தோறும் ரூ. 10 கோடி மதிப்புள்ள இரசாயன உரங்களை இறக்குமதி செய்யாமல் தவிர்க்கலாம். இங்ஙனம் 40 கோடி ரூபாயை அந்நியச் செலாவணியில் மீதப்படுத்த இத் தொழிற்சாலை வழி வகுக்கிறது.

**தென் ஆர்க்காடு மாவட்டம்**
**சில அடிப்படை விவரங்கள்**

| | |
|---|---|
| மக்கள் தொகை | 36,17,723 |
| ஆண்கள் | 18,36,950 |
| பெண்கள் | 17,80,773 |
| பரப்பளவு | 10,762 (ச.கி. மீட்டர்) |
| வட்டங்கள் | 8 |
| கோட்டங்கள் | 4 |

மலை வளம் குன்றிட. . .

வீட்டு உபயோகத்திற்காக ஆண்டு தோறும் 3.8 இலட்சம் டன் கட்டி அச்சுக்கரி தயாரிக்கக் கூடிய தொழிற்சாலை ரூ. 28 இலட்சம் செலவில் நிறுவப்பட்டிருக்கிறது. முதன் முதலாக 1965 ஜூலை மாதத்தில் இங்குக் கட்டி அச்சுக்கரி தயாரிக்கும் இயந்திரம் இயங்கத் தொடங்கியது. இத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் 3.8 இலட்சம் டன் கட்டி அச்சுக்கரியை வீட்டு உபயோகத்திற்குப் பயன்படுத்துவதன் மூலம் ஆண்டுதோறும் 15 இலட்சம் டன் மரங்கள் காப்பாற்றப்படுகின்றன என்கிற உண்மையையும் மறந்து விட முடியாது. இந்த நிலையத்தில் கட்டி அச்சுக்கரிகள் தவிர தார், தாரின் துணைப் பொருள்கள், வண்ணங்கள் போன்றவையும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இங்குள்ள வெள்ளைக் களிமண் சுத்தம் செய்யும் தொழிற்சாலை ரூ. 14 இலட்சம் செலவில் நிறுவப்பட்டது. இந்நிலையம் 1961-ல் வேலை தொடங்கியது. இது ஆண்டு ஒன்றுக்கு 6,000 டன் களிமண் சுத்தம் செய்யக் கூடியது. பீங்கான் பாண்டத் தொழிலுக்கு இந்தக் களிமண் பெரிதும் பயன்படுகிறது.

தொழில் நகரம்

நெய்வேலி நிலக்கரியை மின்சார ஒளியாகவும், வயலுக்கு உரமாகவும், வீட்டுக்கு எரி பொருளாகவும், மாற்றிடும் உன்னதப் பணிகளில் ஏறக்குறைய 20,000-க்கு மேற்பட்டவர்கள் ஈடுபட்டுள்ளனர். இங்குச் சுமார் 12½ சதுர மைல் பரப்பில் மாபெரும் தொழில் நகரம் உருவாகியிருக்கிறது. ஏறக்குறைய 10,000-க்கு மேற்பட்ட வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. புதிது புதிதாக வீடுகள் தொடர்ந்து கட்டப்பட்டு வருகின்றன. தொழில்களால் எத்தனையோ பேருக்கு வேலை வாய்ப்பு; அதுபோல் இந்தத் தொழில் நகரத்தால் இணைந்து வளர்ந்திருக்கும் தொழில் வாய்ப்புகள் எத்தனையோ! அங்காடிகள், திரைப்பட அரங்கு, பள்ளிகள், பூங்காக்கள், மருத்துவமனை, அஞ்சலகங்கள், சின்னஞ்சிறு கடைகள், கூட்டுறவு மாளிகைகள், விளையாட்டுத் திடல்கள், இப்படி எல்லாவிதமான வசதிகளும் இங்குப் பெருகி இருக்கின்றன. இங்குள்ள மருத்துவமனை 156 படுக்கை வசதிகள் கொண்டது. நவீன மருத்துவச் சாதனங்கள் அமைந்ததாயும் பெற்றுச் சிறந்த மருத்துவமனையாக விளங்குகின்றது. இயந்திரங்களின் பேரிரைச்சல், தொழில் நிலையங்களில் கேட்கிறது. அமைதி ஆறும் இந்நகரம் அழகாக தவழும் நகரமே! [illegible] அமைக்கப்பட்டிருக்கும் நகரம் நம் தொழில் வளர்ச்சிக்கு ஒரு சின்னமாகத் திகழ்கிறது.

சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை வளர்ந்துவிட்டால் அங்கு எடுக்கப்படும் இரும்பை உருக்கத் தேவையான நிலக்கரி நெய்வேலியிலிருந்து கிடைக்கும். மேலும், மற்ற ஆக்க வேலைகளுக்காக மின்சாரமும் இங்கிருந்து பெற்றுக் கொள்ளலாம். எனவே சேலமும், நெய்வேலியும் வருங்காலத்தில் நமது தமிழகத்தை ஒரு வளம் சுரக்கும் தொழிற்சாலையாக மாற்றப் போவது உறுதி.



# சிறு நிலக் கிழார்களின் முன்னேற்றத் திட்டம்

வேளாண்மைக்கு முதன்மையான இடம் கொடுத்து வரும் தமிழக அரசு, சிறு நிலக்கிழார்களின் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. நான்கு அல்லது ஐந்து ஏக்கர் வைத்துள்ள சிறு விவசாயிகளின் முன்னேற்றத்திற்காகத் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 1971-ஆம் ஆண்டு மார்ச்சு முதல் நாள் முதல் அரசினால் உருவாக்கப்பட்ட ஒரு தனித்துறை இயங்கி வருகிறது. இம் மாவட்டத்திலுள்ள 50,000 சிறு விவசாயிகளை உயர்த்த இத்துறையினர் பாடுபட்டு வருகின்றனர்.

12 ஊராட்சி ஒன்றியங்களில் இது செயல் பட்டு வருகின்றது. சுமார் 9,618 சிறு விவசாயிகள் 1971-ஆம் ஆண்டு வரை பலனடைந்துள்ளனர். 1972–73-ஆம் ஆண்டில் மேலும் பல ஊராட்சி ஒன்றியங்களில் இத்துறை செயல்படும்.

இத்துறையினர் இம்மாவட்டத்திலுள்ள சிறு விவசாயிகளுக்குக் கிணறு தோண்டுவதற்கும். கிணற்றை ஆழப்படுத்துவதற்கும் பண உதவி செய்கின்றனர். இத் திட்டத்தின்கீழ் 1,500 புதிய கிணறுகள் கட்டவும், 1,000 கிணறுகளை ஆழப்படுத்தவும் 85 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது. சுமார் 45 இலட்ச ரூபாயில், மின்சார மோட்டார்களும் ஏனைய வேளாண்மைக் கருவிகளும், எண்ணெய் இயந்திரங்களும் சிறு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ 6 இலட்ச ரூபாய் செலவில் பூச்சி மருந்து தெளிக்கும் கருவிகள் வழங்கல், நிலச் சீர்திருத்தம் செய்தல், நிலத்தை உழுவதற்கு மாடுகள் வாங்குதல், உரம் வாங்குதல் ஆகியவற்றிற்காகச் சிறு விவசாயிகளுக்கு 1971-ஆம் ஆண்டு முதல் கடனாக வழங்கப்படுகிறது. இத்துடன் 2,000 ஏக்கர் நிலங்களை வளப்படுத்த, ரூ. 580.50 இலட்சம் கடனாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், சிறுவிவசாயிகள் மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து கடன் பெற்றுப் பயனடைகிறார்கள்.

இத்துறையினர், சிறு விவசாயிகள் பயனடையும் பொருட்டு மாதிரி நிலங்களை உருவாக்கி எப்படிப் பயிரிட்டு நெல் விளைச்சலை அதிகப்படுத்துவது என்பதை அறிவுறுத்துகின்றனர். இந்தத் துறையில் விவசாயிகளுக்கு நிலம் பற்றிய கல்வியும் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இத்துடன் பயிரைப் பாதுகாப்பது எப்படி என்றும், விற்பனை செய்வது எப்படி என்றும் அவர்களுக்குச் சொல்லித்தரப்படுகின்றது.

இம்மாவட்டத்தில், கடலூர், நெல்லிக்குப்பம், திருநாவலூர், உளுந்தூர்ப்பேட்டை, சங்கராபுரம், ரிஷிவந்தியம் ஆகிய நான்கு ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள சிறு விவசாயிகள் தங்கள் நிலத்தை உழ, சமன் செய்ய, அக்ரோ தொழில் துறையினர் 6 டிராக்டர்களை வழங்க முன் வந்துள்ளனர்.

800 மாதிரி நிலங்களை இத் துறையினர் ரூ. 80 ஆயிரத்துக்கு வாங்கி அவற்றில் உரமிடுவது எப்படி என்றும் மண்ணைப் பாதுகாப்பது எப்படி என்றும் விளைச்சலை அதிகப்படுத்துவது எப்படி என்றும் நடைமுறையாகக் கற்பிக்கின்றனர்.

இத்திட்டத்தால் ஏற்பட்ட பயனைப் புள்ளி விவரங்கள் கூறும்.

புதிய கிணறு தோண்டுதல் — 441—ரூபாய் 22,95,600

எண்ணெய் இயந்திரம், மின்சார மோட்டார்குழாய்களுக்காக 144—ரூபாய் 21,35,000

நிலச் சீர்திருத்தம்—110 ரூபாய் 1,02,000

விவசாயக் கருவிகள் வாங்க— 127—ரூபாய் 2,28,600

காளைகள், உரங்கள் வாங்க— 171—1,96,500

குறுகிய காலக் கடன், விதைகள், உரங்கள் வாங்க—938— ரூபாய் 3,61,215

குறுகிய காலக் கடன்கள் வழங்குவதோடு நீண்ட காலக் கடன்களும் வழங்கும் வகையில் ரூ. 771 இலட்சம் 1971–72-ல் வழங்கப்பட்டிருக்கிறது.

பதிவு செய்யப்படாத கரும்பு நிலங்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாகச் சிறு விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 300 கடனாக வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், அதே சமயத்தில் பதிவு செய்யப்பட்ட கரும்பு வயல்களுக்காக-ஏக்கருக்கு ரூ. 1,000 வழங்கப்படுகிறது.



"உழுதுண்டு வாழ்வாரே
வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர்"

என்று உறுதியுடன் எடுத்துரைத்தார் திருவள்ளுவர். அந்த மொழிக்கேற்ப, உழவர் பெருமக்களின் வாழ்வு உயர்வதற்கும், உழவுத் தொழில் சிறப்பதற்கும் தமிழக அரசு அரும்பாடு பட்டு வருகிறது. உழவர்களுக்குப் பல வகைகளிலும் உதவி புரிந்து வருகிறது.

தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக வேளாண்மைக்குத் தகுந்த சாகுபடி நிலத்தின் பரப்பளவு தென் ஆர்க்காடு மாவட்டத்தில்தான் அதிகமாக உள்ளது.

இந்த மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பு 27 இலட்சம் ஏக்கர். இதில் 17,43,817 ஏக்கர் நிலம், பயிர்த் தொழிலுக்குப் பயன்படுத்தப் பெறுகிறது. இதில் ஒரு போகத்திற்கு மேல் சாகுபடி செய்யப்படும் நிலம் சுமார் 3 இலட்சம் ஏக்கராகும்.

தரிசாகவும், பயன்படுத்தப் படாமலும், காடு மேடுகளாகவும் இருந்த நிலங்களைச் சீர்திருத்தி விளைச்சலைப் பன் மடங்கு உயர்த்தத் தமிழக அரசு பாடுபட்டுவருகிறது. மற்றத் துறைகளின் ஒத்துழைப்பின் வாயிலாகவும், சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது. இந்த மாவட்டத்தில் சாகுபடிக்குத் தகுந்த நன்செய் புன்செய் நிலங்கள் கடந்த 4 ஆண்டுகளில் கணிசமான அளவில் சீர்திருத்தப்பட்டுள்ளன.

### பீம கிராமம்

கள்ளக்குறிச்சிக்கு 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அரிய பெருமானூர் கிராமத்திற்குப் பீம கிராமம் என்ற பட்டம் ஆயுள் காப்பீடு நிறுவனத்தினால் அண்மையில் சூட்டப்பட்டிருக்கிறது. ஏன் தெரியுமா? அந்தக் கிராமத்தில் ஆயுள் காப்பீடு செய்யத் தகுதியுள்ள நூறு குடும்பங்களில் 77 கட்டுறுதிப் பத்திரங்கள் வாங்கியுள்ளனர். இது அருஞ்செயல் என்பதால் இந்த ஊருக்குப் பீம கிராமம் என்ற பெயர் சூட்டப்பட்டது. இந்த விழாவில் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் கலந்துகொண்டார்கள்.



# உழவுத் தொழில்

### நீர்ப்பாசனம்

நிலத்துக்குப் போதுமான நீர்ப்பாசன வசதி இல்லாமையினால் நொடிந்து கிடந்த இம்மாவட்டக் கிராம வேளாண் பெருமக்களின் நல்வாழ்வுக்காக நீர்ப்பாசன வசதிகள் கடந்த 4 ஆண்டுகளில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

1967-68-ல், 1,03,776 கிணறுகள் கிராமங்களில் இருந்தன.. 1969–70-ல், 1,43,725 கிணறுகளாக உயர்ந்தன. மேலும் நீர்ப் பாசனத்திற்குப் பயன்படும் குளங்கள், ஏரிகளின் எண்ணிக்கை 1967–68 ல் 5,505. அதுவே 1969–70 ல் 9,482 ஆக உயர்ந்துள்ளது.

வேளாண்மை வளர்ச்சியினை உயர்த்தத் தமிழக அரசு, தென் ஆர்க்காடு மாவட்டத்திற்கு 1969–70 ல் 6,55,777 ரூபாய் செலவிட்டிருக்கிறது.

### நீர்ப்பாசன வசதிகள்

இம்மாவட்டத்தில் அழகுற ஓடும் பெண்ணையாறு, கெடிலம், கொள்ளிடம், வெள்ளாறு, மணிமுத்தாறு, கோமுகி நதி, மயூர நதி, பம்பையாறு, பரணி, துரிஞ்சலாறு, சங்கராபரணி, தொண்டியாறு போன்ற ஆறுகள் இம்மாவட்டத்தினை நெற் கொழிக்கும் சோலையாக மாற்றுகின்றன.

இம்மாவட்டத்தில் வீராணம் ஏரி, பெருமாள் ஏரி, வாலாசா ஏரி ஆகியவை வேளாண்மைக்கு வழி புரிகின்றன.

சீரான நிர்வாகம் நடந்தேறப் பொதுப் பணித்துறை பல பகுதிகளாகப் பிரிந்து இம்மாவட்டத்தில் செயலாற்றி வருகின்றது. 1966-ஆம் ஆண்டு இறுதியில் ஏற்பட்ட கடும்வெள்ளம் காரணமாகத் திண்டிவனம், செஞ்சி ஆகிய வட்டங்கள் மிகவும் பாதிக்கப்பட்டன. நீர்ப்பாசனக் கால்வாய்கள், ஏரிகள் பல பாதிக்கப்பட்டன. கடும் வெள்ளத்தினால் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ஏற்படும் ஆபத்தினைக் கண்காணிக்க ஒரு புதிய பகுதியை அரசு இம்மாவட்டத்தில் ஏற்படுத்தியது. அப்பகுதி இன்றும் திண்டிவனத்தைத் தலைமை அலுவலகமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. நந்தன் கால்வாயைச் சீர்திருத்தி அமைத்து விழுப்புரம் வட்டத்தை வளமாக்க இத்துறையினர் பெரு முயற்சி எடுத்து வருகின்றனர். இம்மாவட்டத்திலுள்ள ஏரிகளும், அணைகளும், ஆறுகளும் இவர்களின் கண்காணிப்பில் இருந்து வருகின்றன. இத்துறையினர் இம்மாவட்டத்தில் நீர்ப்பாசன வசதிக்கென அணைகள் கட்டுதல், குளங்கள் வெட்டுதல், கால்வாய் வெட்டுதல் வடிகால்வாயை அமைத்தல் போன்ற திட்டங்களை இவற்றின் பராமரிப்பினையும் ஏற்று நடத்துகின்றனர். இத்துறையினராலேயே இம்மாவட்டத்தில் வேளாண்மை வளம் பெற வழி பிறக்கின்றது.

### நீர் உயர நிலம் உயரும்

இம்மாவட்டத்தில் உள்ள முக்கியமான நீர்ப்பாசனத் திட்டங்களாவன: சிதம்பரம் வட்டத்திற்குக் கொள்ளிடமும், கடலூர், விருத்தாசலம், சிதம்பரம் ஆகிய வட்டங்களுக்கு வெள்ளாறும், விருத்தாசலம் கள்ளக்குறிச்சி ஆகிய வட்டங்களுக்கு மணி முத்தாறு நதியும், கள்ளக்குறிச்சி வட்டத்திற்கு கோமுகி நதியும், திருக்கோவலூர் விழுப்புரம், கடலூர் வட்டங்களுக்குப் பொன்னியாறும், செஞ்சி, திண்டிவனம் ஆகிய வட்டங்களுக்கு வராக நதியும், திண்டிவனம் வட்டத்திற்கு ஏடாண்டியாறுமாகும். இத்துடன் வீடூர் நீர்த் தேக்கத் திட்டம் என்ற ஒன்றும் செயல்பட்டு வருகிறது. வீடூர் நீர்த் தேக்கத்திலிருந்து தமிழ் நாட்டிலுள்ள இரண்டாயிரத்து இரு நூறு ஏக்கர் நிலத்திற்கும் புதுவை மாநிலத்திலுள்ள 1,000 ஏக்கர் நிலங்களுக்கும் நீர்ப்பாசன வசதி அளிக்கப்படுகின்றன. மணிமுத்தாறு நதியைத் தடுத்து நீரைத் தேக்கி அதன் மூலம் 400 ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கப்படுகிறது. கோமுகி நதித் திட்டத்தின் மூலம் 5,000 ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறுகின்றன.

### சிறப்புப் பாசனத் திட்டம்

இம்மாவட்டத்திலுள்ள ஆறுகளையும், குளங்களையும், சீர்திருத்தி நீர்ப்பாசன வசதிக்குத் தகுந்தவாறு மாற்றி அமைப்பதற்கு அரசு கோடிக் கணக்கான ரூபாயைச் செலவிட்டிருக்கிறது.

இம்மாவட்டத்திலுள்ள சிதம்பரம் வட்டத்திலுள்ள குளங்களைச் சீர் படுத்தி மதகுகள் அமைத்து நீர்ப்பாசன வசதியை அதிகப்படுத்தி விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ரூ. 20,19,200 அரசு செலவிட்டிருக்கிறது.

இம்மாவட்டத்தில் உள்ள கடலூர் வட்டத்தில் செம்மங்குப்பம் கிராமம் போன்ற பல கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து தருவதற்கு ரூ. 3,06,000 அரசு செலவிட்டிருக்கிறது. திருக்கோவலூர் வட்டத்திலுள்ள முகையூர் ஊற்று வாய்க்காலுக்கு மதகு அமைப்பது போன்ற மற்றும் பல வேலைகளுக்கும் அரசு ரூ. 2,83,600 செலவிட்டிருக்கிறது.

வரலாற்றுப் புகழ் பெற்ற செஞ்சி வட்டத்திற்குச் செல்வபுரி கிராமத்தில் வராகநதியைத் தடுத்து ஓர் அணையை அரசு கட்டியுள்ளது. இதற்கு ரூபாய் 1,29,00,000 செலவிட்டிருக்கிறது. இம்மாவட்டத்திற்கென அரசு ரூபாய் 2,45,08,000 நீர்ப்பாசன வசதிக்கெனச் செலவிட்டிருக்கிறது. விருத்தாசலம், விழுப்புரம் வட்டங்களில் புலியூர் அணைக்கட்டுக் கால்வாய்க்கும் நீர்த்தேக்கத்திற்கும் சிறப்பு மராமத்து வேலைகள் செய்வதற்கும் மற்றும் பல திட்டங்களுக்காகவும், ரூ.2,47,500 அரசு செலவிட்டிருக்கிறது.

### புனரமைப்புத் திட்டம்

நீர்ப்பாசன வசதியை அதிகப்படுத்தும் பொருட்டு இம்மாவட்டத்திலுள்ள ஏரி, குளங்கள் ஆகியவற்றினைத் தூர் எடுத்துத் தேக்கியுள்ள நீரை வெளியேற்றி அதிக நீரும் சுத்தமான நீரும் கிடைக்க வழி செய்யும் பொருட்டு அரசு இம்மாவட்டத்திற்குப் பெரும் தொகையைச் செலவிட்டிருக்கிறது. இம்மாவட்டத்திலுள்ள திருக்கோவலூர் வட்டத்திலுள்ள மட்டிகை நீர்த் தேக்கத்தில் தூர் எடுப்பதற்காக ரூ. 9,900 அரசு செலவிட்டிருக்கிறது. இதனோடு, இவ்வட்டத்திற்கும் அரசு ரூ. 2,59,200 செலவிட்டிருக்கிறது.

திண்டிவனம் வட்டத்திற்கென ரூ. 7,800 கள்ளக்குறிச்சி வட்டத்திற்கென ரூ.72,000 விருத்தாசலம் வட்டத்திற்கென ரூ. 56,200; விழுப்புரம் வட்டத்திற்கென ரூ. 7,500 கடந்த நான்கு ஆண்டுகளில் அரசு செலவிட்டிருக்கிறது.

### வடிகால் வசதி

நெல் விளைச்சலுக்கு, நிலத்தில் பாய்ந்த நீர் வடிவதற்கு வாய்க்கால் வெட்டும் திட்டத்திற்காகச் சிதம்பரம் வட்டத்தில் அரசு ரூ. 1,45,600 செலவிட்டிருக்கிறது. இதில் ரூ. 9,300 குறியாமங்கலம், கீழ் மூங்கிலடி கிராமங்களுக்கு வடிகால் வசதி செய்து தரச் செலவிடப்பட்டிருக்கிறது.



திருக்கோவலூர் வட்டத்திலுள்ள வீ.புத்தூர் கிராமத்திலுள்ள நிலங்களுக்கு வடிகால் வசதி செய்து தர ரூ. 88,500 செலவிடப்பட்டுள்ளது. திண்டிவனம் வட்டத்தில் ரூ. 15,550 அரசு செலவிட்டிருக்கிறது.

இவை மட்டுமல்லாமல் இம்மாவட்டத்திலுள்ள குளங்களும், அரசினரின் ஆதரவினால் கட்டப்பட்ட கிணறுகளும், வடிகுழாய்க் கிணறுகளும் வடிமுனைக் குழாய் கிணறுகளும் வயலை வளப்படுத்தி விளைச்சலை அதிகமாக்குகின்றன. இம் மாவட்டத்தில் அணைக்கட்டுகள் மூலம் பாசன வசதி சுமார் 3,43,979 ஏக்கர் நிலங்களுக்குக் கிடைக்கின்றன. குளம் ஆகியவற்றின் மூலம் சுமார் 1,57,830 ஏக்கர் பயனடைகின்றன. கிணறுகள் மூலம் 63,297 ஏக்கராவும் எண்ணெய் இயந்திரக் குழாய், மோட்டார் இயந்திரக் குழாய் மூலம் 45,008 ஏக்கராவும் நீர்ப்பாசன வசதி பெறுகின்றன.

### நிலச் சீர்திருத்தம்

இந்த மாவட்டத்தில் வேளாண்மை வளர்ச்சியின் பொருட்டுப் பல சிறிய திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த முறையில் வேளாண்மைப் பொறியாளர் துறை இந்த மாவட்டத்தில் பல வியக்கத் தக்க முன்னேற்றங்களைக் கடந்த ஐந்தாண்டுகளில் செய்திருக்கிறது.

இத் துறையினர் மூலம் தமிழக அரசு குழாய்க் கிணறுத் திட்டம், வடிமுனைக் குழாய்த் திட்டம், பாறை உடைக்கும் கருவியால் கிணற்றை ஆழப்படுத்தும் திட்டம், நிலச் சீர்திருத்தம், நிலநீர்வரப்புப் பாதுகாத்தல், வரப்பு அமைத்தலும் சமன்படுத்துதலும், புல்டோசர் மூலம் நிலத்தைச் சமப்படுத்துதல், இயந்திரக் கலப்பை மூலம் நிலம் உழுதல், டிராக்டர் தவணை முறையில் வழங்கும் திட்டம், வறட்சி நிவாரணத் திட்டம், ஆர்டிசியன் குழாய்க் கிணறு செப்பனிடுதல், பம்பு செட், ஷெட்டு அமைத்தல், நீர்த் தொட்டி கட்டுதல் எண்ணெய் இயந்திரம் அமைத்தல், முள்வேலி போடுதல், மின்சார மோட்டார் வைத்தல், வடிகால் குளம் வெட்டுதல், போன்ற திட்டங்களைத் தென் ஆர்க்காடு மாவட்டம் முழுமையும் உள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் அரசு குறிப்பிடும் இலக்கினைவிட அதிகமான அளவில் திட்டங்களைச் செயல்படுத்தி, மிகத் திறமையான முறையில் பணிபுரிந்து வருகின்றது. 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்ற பழமொழிக்கேற்ப உயிர் கொடுத்தவருக்கு உயர்வளிக்கும் வகையில் அரசு இத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இத் திட்டங்களில் கடந்த 4 ஆண்டுகளாக அரசு செய்த முன்னேற்றங்களைக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் விளக்கும்:

குழாய்க் கிணறுத் திட்டம்

| ஆண்டு. | தோண்டப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1967–68 | 333 |
| 1968–69 | 537 |
| 1969–70 | 605 |
| 1970–71 | 770 |

நவீன விஞ்ஞான முறைகளைக் கடைப்பிடித்து விளைச்சலை அதிகப்படுத்தும் நோக்கத்துடன் அகல உழுவதைவிட ஆழமாக உழுதல் சிறந்தது என்ற சொல்லுக்கேற்பப் பழங்கால மரக் கலப்பை

கனித்தனித்து இயந்திரக் கலப்பை மூலம் நிலத்தை உழுவதற்கு விவசாயப் பெருமக்களுக்கு இத்துறையினர் இயந்திரக் கலப்பைகளைக் கடந்த ஐந்து ஆண்டுகளில் வழங்கியதன் மூலம் உழுத நிலங்களின் பரப்பளவு விவரம்.

| ஆண்டு. | உழுத நிலத்தின் பரப்பு. ஏக்கர். |
|---|---|
| 1967–68 | 3,616 |
| 1968–69 | 3,845 |
| 1969–70 | 3,266.50 |
| 1970–71 | 3,628.75 |

### டிராக்டர் தவணை முறையில் வழங்கும் திட்டம்

நிலங்களை வைத்துக் கொண்டு சீராக உழ வசதியில்லாத விவசாயப் பெருமக்களுக்கு அரசு தவணை முறையில் பணம்பெற்று, டிராக்டர்களினால் நிலங்களை உழுது, நிலங்களைச் சீர்படுத்த உதவி செய்கிறது. அந்நிலையில் பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை கடந்த 4 ஆண்டுகளில்:

| ஆண்டு. | பயனடைந்தோர் எண்ணிக்கை. |
|---|---|
| 1967–68 | 27 |
| 1968–69 | 21 |
| 1969–70 | 25 |
| 1970–71 | 22 |

### வறட்சி நிவாரணத் திட்டம்

இந்த மாவட்டத்தில் பருவ மழை பெய்யாததால் வறட்சி ஏற்பட்டு, உண்ண உணவின்றி ஏங்கித் தவிக்கும் உழவர் பெருமக்களுக்குப் பணி கொடுக்கவும், விவசாயத்தரத்தினை உயர்த்தவும் பயன்படக் கூடிய நிவாரண வேலைகள் ஒவ்வொரு துறையினாலும் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் இத்துறையில் 1969–70-ல் இம்மாவட்டத்தில் உழவர் பெருமக்களின் உதவியால் இந்த வறட்சி ஆண்டில் 62 ஆர்டீசியன் கிணறுகள் செப்பனிடப்பட்டன. 37 செட்டுகளோடு அமைந்த பம்ப் செட்டுகள் அமைக்கப்பட்டன. 22 நீர்த் தொட்டிகள் கட்டப்பட்டன. 27 எண்ணெய் இயந்திரங்கள் நிறுவப்பட்டன. 76 இடங்களில் பயிர்ப் பாதுகாப்பிற்கு முன்வேலி அமைக்கப்பட்டன. 5 மின்சார மோட்டார்களை நிறுவினர். 14 வடிகால்களங்களை வெட்டினர்.

# தொண்டு

தென்ஆர்க்காடுமாவட்டத்தில் 17—11—1967 அன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சிரணித் திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். இரண்டாயிரம் தொண்டர்கள் இந்தத்திட்டத்தில் பங்கு பெற்றார்கள்.

இந்த மாவட்டத்திலுள்ள 34 ஊராட்சி ஒன்றியங்களிலும், வட்டாரச் சிரணிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோட்ட அளவில் 4 சிரணிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட அளவில் ஒரு சிரணிக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஒன்றியத்திலும் சிரணி அறிவகம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. மாவட்டத் தலைமையிடத்தில், மாதத்திற்கொருநாள் 300 சிரணித் தொண்டர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சி, காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகளால் கொடுக்கப்படுகிறது.

சிரணி, இந்த மாவட்டத்தில் பல்வேறு பணிகளைச் செய்கிறது. வானொலி மன்றம் கட்டுதல், பள்ளிக் கட்டடங்களைப் பராமரித்தல், ஊராட்சி கால்நடை கிளை நிலையக் கட்டடங்கள் கட்டுதல், இணைப்புச் சாலைகள் போடுதல், போன்ற வேலைகள் சிரணித் தொண்டர்களின் பங்குடன் செயல்படுத்தப்பட்டுள்ளன.

சிரணித் திட்டத்தின் கீழ், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் செய்யப்பட்ட சாதனைகள் வருமாறு :

1967–68-ல் 49 வேலைகள் ரூபாய் 1,02,000 மதிப்பிலும், 1968–69-ல் 105 வேலைகள், ரூபாய் 1,45,600 மதிப்பிலும், 1969–70-ல் 235 வேலைகள், ரூபாய் 1,85,700 மதிப்பிலும், 1970–71-ல் 499 வேலைகள் ரூபாய் 2,73,000 மதிப்பிலும், 1971–72-ல் 76 வேலைகள், ரூபாய் 2,76,000 மதிப்பிலும், நடைபெற்றிருக்கின்றன.

இவ்வாறு—சிரணித் திட்டத்தினால் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உருவாகும் நன்மைகள் ஆண்டுதோறும் பெருகிக் கொண்டே வருகிறது. 'சிரணிப் பெருமை செப்பவும் பெரிதே' என்று சொல்லப்படும் வாசகம்—பொருள் நிறைந்தது தான் என்பது உறுதியாகின்றதல்லவா?

இவ்வாறாக இத்துறையினர் ஆற்றுப் பாசனம், ஏரிப் பாசனம் இல்லாத இடங்களில் நீர்ப்பாசன வசதிசெய்து கொடுத்துக் காடு மேடுகளைச் சீர்திருத்தி, நெல் கொழிக்கும் நிலங்களாக மாற்றி, இம்மாவட்ட விவசாயத் துறையில் ஒரு மாபெரும் முன்னேற்றத்தினை அடைய அரும் பாடுபட்டு வருகின்றனர். அது மட்டுமல்லாமல் நமது அரசு செயல்படுத்தி வரும் அரும்பெரும் திட்டங்களையும் இம்மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்காகச் சீரிய முறையில் செயல்படுத்த இத்துறையினர் ஆவலுடன் உள்ளனர்.



# பிணி நீக்கும் பெரும் பணி



ஒரு நாடு நலமுடன் திகழ நாட்டு மக்கள் உடல் நலத்துடனும் நோய் நொடியில்லாமலும் வாழ்தல் அவசியம். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற சொல்லுக்கேற்ப நோயற்ற வாழ்வுக்காக அரசு தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பல புதிய திட்டங்களைச் செயல்படுத்திச் சுகாதாரமான வாழ்வு அமையப் பாடுபட்டு வருகிறது. எனவேதான் அரசு, இத்துறைக்குத் தலையாய முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இம்மாவட்டத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் மருத்துவ வசதி கிடைக்கப் புதிய மருத்துவமனை தோற்றுவித்தும், இருக்கின்ற மருத்துவ மனைகளை விரிவு படுத்தியும், பல புதிய மருத்துவப் பிரிவுகளை ஏற்படுத்தியும் வருகிறது. இம்மாவட்டத்தில் அரசினர் மருத்துவமனைகளின் மொத்தப் படுக்கைகள் 795; தனியார் துறையினரின் மருத்துவமனைகளில் படுக்கைகள் 503.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஒரு மாவட்டத் தலைமை மருத்துவ மனையும் 14 அரசினர் மருத்துவ மனைகளும், இரண்டு அரசினர் மருந்தகமும், பல்வேறு நகராண்மைக் கழகம் மற்றும் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களும், 34 முதன்மைச் சுகாதார நிலையங்களும் பொது மக்களுக்கு மருத்துவ வசதியளித்து வருகின்றன.

கடலூரில் உள்ள தலைமை மருத்துவமனையில் கீழ்க்காணும் மருத்துவப் பகுதிகள் இயங்கி வருகின்றன.

1. பல் சிகிச்சை.
2. கண் பகுதி.
3. பால்வினை நோய்ப் பகுதி.
4. காது, மூக்கு, தொண்டைப் பகுதி.
5. மார்பு வைத்தியம்.
6. குருதிச் சேமிப்பு நிலையம்.
7. எக்ஸ் கதிர் பிரிவு.
8. குழந்தைகள் பகுதி.

இம்மருத்துவ மனையில் 172 படுக்கைகள் இருந்தன. அத்துடன் புதிதாகக் கடந்த 4 ஆண்டுகளில் சுமார் 100 படுக்கைகள் கொண்ட ஒரு புதிய பகுதியினைத் தமிழக அரசு கட்டியுள்ளது. தொழிலாளர் நலனுக்காகத் தொழிலாளர் சட்டுறுதித் திட்டத்தின் கீழ் 8 படுக்கைகள் கூடுதலாக அரசு அமைத்துள்ளது. இம்மருத்துவ மனையில் அரசு ஊழியர்களின் சிகிச்சை வசதிக்காகத் தனியாக ஒரு மருந்தகம் திறக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. இதில் அரசு ஊழியர்களுக்கு மட்டும் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

கடந்த 1—4—1970 அன்று இம்மாவட்ட மருத்துவ மனையில் தாய்மார்கள் பகுதி ஒன்றினை மாண்புமிகு அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்தார்கள். 13—3—1971 முதல் இம்மருத்துவ மனையில் சித்த வைத்தியத் துறையின் சிறப்புப்பகுதி திறக்கப்பட்டுச் சித்த வைத்திய முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்திலுள்ள வைத்திய நிபுணர்கள் இம்மாவட்டத்திலுள்ள மருத்துவமனைகளுக்கு நேரில் சென்று சிகிச்சையளிக்க யூனிசெப் (Unicef) நிறுவனத்தினர் ஊர்தி வழங்கியுள்ளனர்.

சிதம்பரத்திலுள்ள அரசினர் மருத்துவ மனையில் 70 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவமனை கட்டத் தகுந்த திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

திண்டிவனம் அரசினர் மருத்துவ மனையில் தற்போது உள்ள 44 படுக்கைகள் தவிர மேலும் 32 படுக்கைகள் கொண்ட புதிய பகுதி 28,700 ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது.

வளவனூர் அரசினர் மருத்துவ மனையில் ரூ. 35,000 செலவில் 10 படுக்கைகள் கொண்ட மகப்பேறு இல்லம் ஒன்றும், விழுப்புரம் அரசினர் மருத்துவ மனையில் மகப்பேற்றுப் பகுதியும், அறுவைச் சிகிச்சை அரங்கு ஒன்றும் கட்ட அனுமதி வழங்கப்பட்டு, கட்டடங்கள் முடியும் தறுவாயில் உள்ளன. கள்ளக்குறிச்சி அரசினர் மருத்துவமனையில் கூடுதலாக 8 படுக்கைகள் பகுதி ஒன்றைத் துவங்க ரூ. 45,000 அரசு அனுமதி அளித்திருக்கிறது.

### தொழுநோய்ச் சிகிச்சை

திருக்கோவலூரில் தொழுநோய்க்கான சிகிச்சை ஆய்வு நிலையம் ஒன்று நல்ல முறையில் சேவை செய்து தொழுநோயாளிகளின் துன்பத்தைப் போக்கி வருகின்றது. சிதம்பரம், கள்ளக்குறிச்சி, விருத்தாசலம், ஆகிய ஊர்களில் தொழுநோய்க் கட்டுப்பாடு நிலையங்கள் செவ்வனே பணியாற்றி வருகின்றன. அதோடு இப்பகுதிகளில் உள்ள கிராமப்புறங்களில் உள்ள துணை நிலையங்கள் தொழு நோயாளிகளுக்குச் சிறந்த சேவை செய்து வருகின்றன. வீரப்பெருமாள் நல்லூரில் தொழுநோய்ச் சிகிச்சை நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. கடலூர், உளுந்தூர்ப்பேட்டை, விழுப்புரம், வளவனூர், திட்டக்குடி ஆகிய இடங்களில் உள்ள அரசினர் மருத்

துவ மனைகளிலும் நெல்லிக்குப்பம், குறிஞ்சிப்பாடி ஆகிய ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களிலும் மங்களம் பேட்டை முதன்மைச் சுகாதார நிலையத்திலும் ஆய்வுக் கல்விச் சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டுத் தொழு நோயாளிகளுக்குச் சேவை செய்து வருகின்றன. அண்ணல் காந்தியடிகள் அனுதாபப்பட்டுக் கண்ணீர் சிந்திய தொழு நோயாளிகளுக்கு—சமூகத்தால் வெறுத்து ஒதுக்கப்பட்ட மக்களுக்கு-அரசு சீரிய முறையில் சிகிச்சை நிலையங்களைத் துவக்கி அவர்களின் துயர் துடைத்து வருகின்றது.

### காசநோய்

காசநோய் கண்டவர்கள் உயிர் வாழ்தல் கடினம், என்ற எண்ணத்தைப் போக்கி அவர்களையும் குணப்படுத்தி இவ்வுலகில் வாழ வழி செய்யும் வகையில் இம்மாவட்டத்தில் கடலூர் கேப்பர் மலையில் காசநோய்ச் சிகிச்சை நிலையம் நமது அரசினரால் நடத்தப்பட்டு வருகிறது. அங்கு நோயாளிகள் துயர் மறந்து பொழுது போக்கவும், அவர் தம் அறிவு வளரவும் நூலகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அதோடு மற்ற இன்றியமையாத தேவைகள் நிறைவேற்றப் பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகின்றது.

இம்மாவட்டத்தில் பி.சி.ஜி. குழுவினர் ஒவ்வொரு கோட்டத் தலைநகரிலும் ஓராண்டு முகாம் இட்டு அந்தக் கோட்டத்தி லுள்ள எல்லா ஊர்களிலும் காசநோய்த் தடுப்பு ஊசி போட்டுக் காசநோய் வராமல் தடுக்கவும், மேலும் பரவாமல் தடுக்கவும் அறிவுரைகள் வழங்கி வருகின்றனர்.

### நல்வாழ்வு ஆய்வுக்கூடம்

மாவட்ட நல்வாழ்வு ஆய்வுக் கூடம் கடலூரில் அரசினர் தலைமை மருத்துவ மனையில் இயங்கி வருகிறது. இங்கு இரத்தம், சிறுநீர், மலம் மற்றும் பல பரிசோதனைகளும் மக்களுக்கு இலவசமாக நடத்தப்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்திலுள்ள அரசினர் மருத்துவ மனைகளிலும், ஆரம்ப நல்வாழ்வு நிலையங்களிலும், மருந்தகங்களிலும் 184 மருத்துவர்களும், 131 செவிலியர்களும், 87 பேறு கால உதவியாளர்களும் பணி புரிந்து வருகின்றனர்.

### நல்வாழ்வு

எவ்வளவு பணம் படைத்திருந்தாலும், அதிகம் படித்திருந்தாலும் சுகாதாரமான வாழ்க்கை நடத்தத் தெரியாதவனுக்கு இவ்வுலகம் கசக்கத்தான் செய்யும். வறுமையிலும் இன்பம் காண வழி வகுக்கும் வாழ்க்கை, நோயற்ற வாழ்க்கையே. இதனைக் கருத்தில் கொண்டுதான் அரசு மலேரியா ஒழிப்புத் திட்டம், அம்மையொழிப்புத் திட்டம், காலரா ஒழிப்புத் திட்டம் ஆகியவற்றை ஒவ்வொரு மாவட்டத்திலும் மத்திய அரசின் கூட்டோடும், உலகச் சுகாதார நிறுவனங்களின் ஒத்துழைப்போடும் மிகத் தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது. கிராமம் கிராமமாகச் சென்று மருத்துவர்கள் சுகாதாரமான வாழ்க்கையின் அவசியத்தை மக்களுக்கு எடுத்துக் கூறியும், படக் காட்சி மூலம் விளக்கியும் வருகின்றனர்.

இம்மாவட்டத்தில் தற்போது 34 இளநிலை நல்வாழ்வு நிலையங்கள் ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ளன.

> உளுந்தூர்ப்பேட்டையில் அரசு உருவாக்கியுள்ள பிச்சைக்காரர் மறு வாழ்வு இல்லத்தில் விடுதலை நாள் விழா 15-8-1972 அன்று கொண்டாடப்பட்டிருக்கிறது. தொழு நோய்ப் பிச்சைக்காரர்கள், அன்று அதிகாலையிலேயே புத்தாடை அணிந்து தேசியக் கொடி ஏற்றும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். இல்லத்தில் வாழ்பவர்களுக்கு விளையாட்டுப் போட்டியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள் இதில் கலந்து கொண்டார்கள். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் கொடுக்கப்பட்டன.
>
> அது மட்டுமல்ல இருப்பிடத்தைச் சுத்தமாகவும் ஒழுங்காகவும், வைத்திருந்தவர்களுக்கும் நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்தவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. விடுதலைத் திருநாளையொட்டி, இந்த மறு வாழ்வு இல்லத்தில் வாழ்பவர்களுக்குச் சிறப்பு உணவுகளும் வழங்கப்பட்டன.

இதில் 12 நிலையங்கள் கடந்த 3 ஆண்டுகளில் புதியதாகக் கட்டப்பட்டவை ஆகும். அதில் 33 இளநிலை நல்வாழ்வு நிலையங்களில் ஒவ்வொரு நல்வாழ்வு நிலையத்திலும் 6 படுக்கைகள் நோயாளிகளுக்காக ஏற்படுத்தப் பட்டுள்ளன. ஓர் இளநிலை நல்வாழ்வுநிலையத்தில் மட்டும் 20 படுக்கைகள் உள்ளன. ஒரு நாளைக்கு ஓர் இளநிலை நல்வாழ்வு நிலையத்தில் மட்டும் சுமார் 75 நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

10 இளநிலை நல்வாழ்வு நிலையங்கள் அரசாங்கக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அவற்றோடு 4 புதிய கட்டடங்கள் தமிழக அரசினரால் கட்டப்பட்டு வருகின்றன. மருத்துவ ஊழியர்கள் வசதியான வாழ்க்கை நடத்தவும் மருத்துவமனைகளின் அருகேயே இருந்து பணியாற்றவும் 32 இளநிலை நல்வாழ்வு நிலையங்களில் மருத்துவ ஊழியர்களுக்கான குடியிருப்புகள் கட்டப்படுகின்றன.

### கேர்

கேர் நிறுவனத்தாரின் உதவி கொண்டு இம்மாவட்டத்தில் 33 இளநிலை நல்வாழ்வு நிலையங்களில் பால், பால்பவுடர், சாலட் எண்ணெய் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு இளநிலை நல்வாழ்வு நிலையத்திலும் 30பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் 80 கிராம் சி.எஸ்.எம். பவுடரும், 8 கிராம் சாலட் எண்ணெய்யும் வழங்கப்படுகின்றது.

### அளவான குடும்பம்

தென்ஆர்க்காடு மாவட்டத்தில் இரண்டாவது காலத்திட்டத்தில் கடலூரில் மாவட்டத் தலைமைக் குடும்பக், கட்டுப்பாடு நிலையம் நிறுவப்பட்டுப் பின்னர் முழுநேர நிலையாக மாற்றப்பட்டது. அளவான குடும்பமே ஆனந்தமான குடும்பம் என்பதனை நமது மக்கள் உணர மாவட்டத்தில் அரசாங்க மருத்துவ மனைகளிலும், திருக்கோவலூர் அரசாங்கத் தொழுநோய்ச் சிகிச்சை ஆய்வு நிலையங்களிலும் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் அரசினரால் ஏற்படுத்தப்பட்டு நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் செயல்பட்டுவரும் மத்திய அரசுத் துறை ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று மருத்துவர்கள் மூலமாகவும், படக்காட்சி மூலமாகவும் மக்கட் பெருக்கத்தின் ஆபத்தினை எடுத்துக் கூறியும், அறுவைச் சிகிச்சை, லூப் முறை, மாத்திரைகள் மூலம் தடுத்தல் மற்றும் பல குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை விளக்கிச் செயல்படுத்தி வருகின்றது. கல்வி அறிவு இல்லாத கிராமங்களிடையே இதைப் பரப்புவது எளிதான முயற்சியாக இல்லாமல் இருந்தாலும் பெருமையுடனும், பொறுப்புடனும் இத்துறையினர் எடுத்துக் கூறிவருகின்றனர். கடந்த 4 ஆண்டுகளில் இத்துறையினர் செய்த சாதனை போற்றுதற்குரிய முறையில் அமைந்துள்ளது.

குடும்பக் கட்டுப்பாட்டிற்குப் பயன்படுத்தப்பட்ட முறைகள்.

அறுவைச் சிகிச்சை—

| ஆண்டு. | பயன் அடைந்தவர் எண்ணிக்கை. |
|---|---|
| 1967—68 | 7,944 |
| 1968—69 | 7,595 |
| 1969—70 | 12,392 |
| 1967—68 | 234 |
| 1968—69 | 673 |
| 1970—71 | 1,014 |
| 1971—72 | 3,007 |

ஜுன் மாதம் வரை.

ஐயூ. சி. டி. முறை

இம்மாவட்டத்தில் 30 வட்டாரங்களில் 119 குடும்பக் கட்டுப்பாட்டு நிலையங்கள் திறக்க அரசு முடிவு செய்துள்ளது. துணை நிலையங்கள் ஒன்றுக்கு ரூ. 12,000 வீதம் மொத்தம் ரூ. 14,28,000 அரசு ஒதுக்கீடு அளித்துள்ளது.

### பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம்

'இரந்தும் உயிர்வாழ்தல்
வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்'

என்கிறது குறள். பிச்சைக்காரர் இல்லாத நாடுதான் நாகரிக நாடு என்னும் கருத்து விரைவாக வளர்ச்சி பெற்று வருகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் 1945-ஆம் ஆண்டில் பிச்சையெடுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பிச்சையெடுப்போருக்கு உரிய தண்டனைகளும் இச்சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளன. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் அரசு தற்போது பிச்சைக்காரர்களுக்கெனக் காப்பு இல்லங்களை நடத்தி வருகின்றது. சிதம்பரத்தில் ஒரு பிச்சைக்காரர் இல்லத்தினை நகராட்சியினர் நடத்துகின்றனர். இதற்கு அரசு உதவித் தொகை அளித்து வருகிறது.

1961—ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் 40,000 பிச்சைக்காரர்கள் இருந்தனர். ஆனால் தற்போது சுமார் 60,0000 பிச்சைக்காரர்கள் தமிழ்நாட்டில் உலவி வருகின்றனர். 1969—70—ஆம் ஆண்டின் மதிப்பீட்டுக் குழு, பிச்சைக்காரர்கள் பிரச்சினையை நன்கு ஆராய்ந்து அறிக்கை அனுப்பி உள்ளது. 1970—ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23-ஆம் தேதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பிச்சைக்காரர் மறு வாழ்வு பற்றி முடிவு செய்யப் பட்டது. அதன்படி நோயுற்றோர்களை முதலாவதாகக் கவனிக்க வேண்டும். அவர்களில், தொழுநோயால் துன்புறுவோரை உடனடியாகக் கவனித்து அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்பதனைக் கருத்தில் கொண்டு தொழுநோய் வந்து வருந்துவோர், தங்கி மருத்துவச்சிகிச்சை பெற்று மறுவாழ்வு பெற வழி செய்யும் வகையில் சிறப்பு இல்லங்களை அரசு திறக்க முடிவு செய்துள்ளது. இவற்றில் 3 இல்லங்கள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. அவ்வாறு கட்டப் பெற்ற மூன்று இடங்களில் ஒன்று தென் பிராந்திய நெடுஞ் சாலையில் இம்மாவட்டத்தில் உள்ள உளுந்தூர்ப்பேட்டையும் ஒன்றாகும். இக்கட்டடம் 20 ஏக்கர் பரப்பில் 7 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது.

பிச்சைக்காரர் பிரச்சினை பெரும் பிரச்சினையாகும். அரசால் மட்டும் அப்பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது. பொது மக்களின் ஒத்துழைப்பு மிகவும் தேவை; பொருள் வசதி படைத்தோர் அனைவரும் ஆதரவு காட்ட வேண்டும்; எனவே பிச்சைக்காரர் நலம்பேணப் பொது மக்களிடமிருந்து அரசு நிதி திரட்டி வருகிறது. அவ்வகையில் இம்மாவட்ட மக்கள் பிச்சைக்காரர் மறு வாழ்வு நிதிக்கென 1971 ஆகஸ்டு முடிய ரூ. 2,67,323·76 வாரி வழங்கியுள்ளனர். இவ்வாறு 'பிச்சையெடுத்தேனும் பிச்சையை நீக்குவோம்' என்ற கொள்கையினைத் தமிழக அரசு மிகத் தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது.

## தென்ஆர்க்காடு செங்கல்பட்டு இணைப்புப் பாலம்

> தொண்டை நாட்டில் தோன்றிச் சைவத்தமிழ் உலகம் போற்றிப் பாராட்டும் திருத் தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தை இயற்றிய செந்தமிழ்ச் சேக்கிழார், தமது பெரு நூலைத் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள சிதம்பரத்தில் அரங்கேற்றியதன் வாயிலாக இரண்டு மாவட்டங்களுக்குமிடையே பல நூற்றுண்டுகளுக்கு முன்பே ஒரு நல்ல 'உறவுப் பாலம்' இருப்பதை உணரலாம்.
>
> அண்மையில் இரு மாவட்டங்களுக்குமிடையே வாணிகம், வேளாண்மை முதலிய பல துறைகளிலும் மேலும் வளர்ச்சி காண உதவும் வகையில், கீழக் கடற்கரைச் சாலையில் செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த தென்பாக்கம் கிராமத்தையும், தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த மரக்காணம் கிராமத்தையும் இணைக்கும் பாலம் ஒன்றை 23 இலட்சம் ரூபாய் செலவில் தமிழக அரசு கட்டி முடிக்க முடிவு செய்து, இந்தப் பால வேலைக்கான அடிக்கல் நாட்டு விழாவை 25—9—1972-ல் நடத்தியுள்ளது. தமிழக அரசு, மத்திய அரசிடமிருந்து, ரூ. 23 இலட்சத்தைக் கடனாகப் பெற்று இப்பாலத்தை எழுப்புகிறது. அடுத்த ஓராண்டில் கட்டி முடிக்கப் பெற இருக்கிற இந்தப் பால அமைப்புக்குக் கால்கோள் செய்த தமிழ் நாட்டு அறநிலையத் துறை அமைச்சர் இந்தப் பாலம் அமைவது இப்பகுதி மக்களின் வாழ்க்கையை முன்னேற்றப் பெரிதும் பயன்படும் என்றார்.





# வெண்பாப் போட்டி

## 43. கொலுவிருக்கும் அன்றே குவிந்து

காவிரி யோடுநதி கங்கையைச் சேர்த்திடுவோம்
வாவிகளில் நீர்நிறைப்போம் வான்மரங்கள்—காவில்
நிலைத்துவிடும் ; காய்கனியும் ; நெல்விளையும் ; இன்பம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—சி. சி. தங்கஅரசு, கீழ்க்குளம்.

ஓட்டைக் குடிசையை உப்பரிகை யாய்மாற்றிக்
காட்டைக் கழனியாக்கும் ஆட்சியிடம்—நாட்டின்
வலுமிகுந்த பாட்டாளி வாழ்த்தும், பரிவும்,
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—ச. கந்தசாமி, மேலூர்.

அடுத்தடுத்துப் பிள்ளைகள் ஆறேழைப் பெற்றால்
இடுக்கணில்தான் வீழ்வாய், என்தோழா—மிடுக்காய்
வலுவான "ஒன்றிரண்டில்" வாழ்வமைப்பின், இன்பம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—முல்லை நடவரசு, தும்மலப்பட்டி.

சக்கரமும் வேலும் சரிந்த சிறுபிறையும்
மெக்காவும் காசித் திருத்தலமும்—தக்க
சிலுவையும் ஒன்றென்று தேர்ந்தால் அமைதி
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—சு. கிருட்டிணன், திருப்பூர்.

சாதிச் சமயச் சகதிக ளில்லாத
மேதினியில் மக்களினம் மேலோங்கும்—சூது
நிலவாத நாட்டில் நெறிமுறைக ளெல்லாம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—கி. ஆதிமூலம், உடையார்பாளையம்.

மல்லிகை முல்லையென மக்கள் இரண்டுபெற்றே
இல்லறம் பேணின் இளநங்காய்—கொல்லும்
நலிவனைத்தும் நீங்கிப்போய் நல்வாழ்வில் இன்பம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—த. ச. தவசிமணி, அருப்புக்கோட்டை.

சாதிமதப் பூசலெலாம் சாய்த்துச் சமதருமச்
சோதியொளி எங்கும் சுடர்பரப்ப—நீதி
நிலைநிறுத்தி விட்டால்இந் நீணிலத்தில் இன்பம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—சி. மு. சிவலிங்கம், மதுரை-21.

காவிரிக்கே கங்கைத்தாய் காலால் நடந்துவரும்
ஒவியத்திற் குண்மை உருக்கொடுத்தால்—பாவில்
சொலும்கனவு நாடெல்லாம் தோற்கவிங்கே செல்வம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—புலவர் கரு. சுப்பையா, அருப்புக்கோட்டை.

வெள்ளையரின் ஆதிக்கம் வீழ்த்தி, விடுதலையைக்
கள்ளமிலா உள்ளத்துக் காந்திதந்தார்—உள்ள
வலுவிருக்கும் கைகளினால் நம்நாட்டிற் செல்வம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—புலவர் விசயவீரப்பன், சோழமாதேவி.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :
திரு சி. சி. தங்கஅரசு,
கீழ்க் குளம் அஞ்சல்,
குமரி மாவட்டம்.

# வெண்பாப் போட்டி

ஏழ்மை, பணத்தாசை இங்கில்லை ; சாதியெனும்
தாழ்வுயர்வுச் சண்டை சழக்கில்லை—வாழ்வில்
இல்லையெவர்க்கும் பேதம் எனும்நாளில், இன்பங்
கொழுவிருக்கும் அன்றே குவிந்து.

—சோ. க. யுவராசன், அரக்கோணம்.

கடல்கோள் நிகழாமல் காப்பதற்கே வங்கக்
கடலோரம் கல்லறையைக் கண்டு—குடிகொள்
சலியாத அண்ணா சதுக்கம் அழகு
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—புலவர் மு. சிக்கந்தர், கோரிக்கடவு.

துன்ப இருளைத் துரத்தத் தமிழ்நாட்டார்
ஒன்றுகச் சேர்ந்தே உழைத்திட்டால்—அன்பு
குலுங்கும் அறத்தழைக்கும் குன்றுபோல் இன்பம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—வி. மு. உலகநாதன், சென்னை-7.

மக்கள் நலனே மகேசன் நலனென்றே
எக்கணமும் ஆளும் இயல்புடையார்—மிக்க
வலுவுடையார் ஆனார்! வளங்களவர் நாட்டில்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—நெல்லை ஆ. கணபதி, சென்னை-15.

எல்லாரும் ஓரினமே; எல்லாமும் எல்லார்க்கும்
இல்லார் எனஇல்லை இங்கென்ற—பல்லோர்
நிலையுயர்த்தும் திட்டம் நிறைவேறின் இன்பம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—நாராயண சுந்தரேசன், செங்காடு.

நாளொரு திட்டமிட்டு நம்நாட்டைக் காப்பவர்க்குத்
தோளொடு தோள்நிற்போம் தோழர்காள்!—நீளும்
வலுவிருக்கும் சாதனைகள் வண்ணமுடன் நாட்டில்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—சண்முக தாயுமானவன், பொன்மலை.

இல்லாமை, கல்லாமை, ஏற்றுண்ணும் ஆற்றுமை,
'இல்லாமை' யாகிடவே இவ்வரசும்—நல்லார்
சொலும்விதமே செய்வினைகள், சூழ்மக்கள் நெஞ்சில்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—அரி. இள. தமிழடியான், மல்லிகா.

ஒன்றிரண்டு பெற்றே உயர்வடைய வேண்டுமென
நன்றுரைக்கும் திட்டம் நலங்குவிக்கும்—என்றும்
அளவிருக்கும் இல்லமதில் ஆனந்தம் பொங்கிக்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—வெண்பாவூர் எஸ். சுந்தரம், திருச்சி.

கற்பகமே தேனே கருமுகிலின் பண்புருவே
கற்பனைக்கும் ஒவ்வாத காவியமே—பொற்பு
விலைமதிக்க வொண்ணு விழிமலருன் நோக்கில்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—பசுமலை வீர முருகேசன், தருமபுரி.

போடுகின்ற திட்டமெலாம் போக்கற்றோர், வாழ்வற்றோர்
தேடுகின்ற தேவைக்கே சேர்த்திருப்பின்—நாடு
நல்வற்று நல்வளத்தால் நாநிலம் போற்றக்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—புலவர் அ. சுந்தரேசன், மேட்டுப்பாளையம்.

சேது சமுத்திரத்தைச் சேலத் திரும்புதலை
வாதிட்டுப் பெற்றுவிடின் வண்டுவிழி—மாதே!
செழுமை வளந்தேங்கிச் சீர்த்திமிகும் செல்வம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—ஆயை மு. காசாமைதீன், பெங்களூர்-1.

ஆக்கும் உரைநடையோ நுன்னதமாய் வல்லுநர்கள்
பாக்களுடன் நல்ல படைப்புகளை—ஆக்கும்
சலுகையை நம்மரசு தாளிந்தால் நூல்கள்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—வெற்றிவேல் வெங்கடேசன், சேலம்-9.

பெய்யும் மழையாய்ப் பிறர்நலம் பேணினோர்
உய்யும் வழிகாட்டி ஆக்கினோர்—தெய்வம்
சிலுவையில் வைத்தும் சினவாதார் நெஞ்சில்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—புலவர் வெ. குமாரசாமி, கோரிக்கடவு.

கானப் பாதிரிக் கருந்தகட்டு ஒள்வீ
வேனில் அதிரலொடு விரைஇக்—காண்வர,
சில்லுங் கூந்தல் அழுத்தி, அழகாய்க்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—அத்திபூரான், அத்திமாஞ்சேரிப்பேட்டை.

நெஞ்சில் உறுதியுடன் நேர்வழியில் அஞ்சாமல்
வெஞ்சமரை நோக்கி விரைந்திட்டால்—வஞ்சி
வலுவில் நமைத்தேடி வந்தடையும் வெற்றிக்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—த. சுப்பிரமணியன், காரைக்குடி.

அண்ணாவின் கொள்கை அனைத்தும்நம் நாட்டினர்
எண்ணத்தில் ஊறி இருந்திட்டால்—என்றும்
வலுவுடன் வாழ வழிகாட்டும்; நேர்மை
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—கா. மு. கண்ணாயிரம், புல்லரம்பாக்கம்.

# வெண்பாப் போட்டி

தந்தை பகலவன்; தண்மதியே ஈன்றவள்;
விந்தை முகிலாம் விளைசெய்க்குச்—சிந்தை
வலுவிருக்கும் பாவலர் வாழ்த்தவிண்ணில் மேகம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—இரும்பொறை, காளூடு காத்தான்.

சாதிப் படைநோயும் தாழ்ச்சித் தொழுநோயும்
ஓதி உயர்ந்தோர் உளநோயும்—நீங்கின்
சொலற்கரிய சீர்திருத்தம் தோன்றுவதால் நீதி
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—தவமுத்து. அண்ணாமலை, தவசி.

பகுத்தறி வூட்டுகின்ற பாசறையின் தந்தை
வகுத்திட்ட கொள்கையில் வாழ்ந்தால்—மிகுத்த
வலுவிருக்கும் தெய்வங்கள் வாய்மூடி ஓர்நாள்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—ஆ. துரைராசன், கும்பகோணம்.

வங்கக் கடலோரம் வண்ணத் துயில்கொள்ளும்
சிங்கத் தமிழண்ணன் சொல்லெல்லாம்—எங்கள்
நலிவகற்றும், நல்லோரின் நாவெல்லாம் சென்று
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—புலவர் கே. மு. கிருட்டிணமூர்த்தி, தேவிகாபுரம்.

மஞ்சள் கருணை வயலிருக்கும் ; காய்க்கடையில்
மிஞ்சி கருங்கருணை மேலிருக்கும்—கொஞ்சும்
கலைகள், கருணை, கருணா நிதிக்கண்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து!

—புலவர் தெய்வசிகாமணி, விண்ணம்பள்ளி.

மழலைவாய் தேன்ஒழுகும் மாளன் நழைக்கும்
அழகே தனியழ காகும்—பழக
வலுவூட்டுந் தாய்த்தமிழும் வான்புகழத் தங்கக்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—க. கா. சுந்தரராஜன், நாரைக்கிணறு.

கொண்ட கணவனையே கும்பிட்டுத் தான்பெற்ற
தண்தேன் குழவிகளைத் தாங்கியுளப்—பண்பால்
பொலிவிருக்கும் கற்புநிறை பூவையரால் இன்பம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—பூங்குழலி, பொருளூர்.

தேனின் இனிமை தெவிட்டாத தீந்தமிழில்
மானின் மருட்பார்வை மாதரிடம்—கானில்
புலிகாட்டும் வீரம் பொதியனிடம் மாண்பே
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—சிவ. கிருட்டிணன், கனியூர்.

தத்தையே! மோனத் தமிழுருவே! உன்னுல்யான்
பித்தானேன் பேதையே! பெண்பாவாய்!—முத்துக்
குலுங்குநகை கொஞ்சிடநீ சென்றுய்; நினைவு
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—அ. மதிவாணன், நெல்லை-4

சின்ன மழலையதன் சிங்காரப் பேச்சினிலும்
சன்ன நடையழகின் தன்மையிலும்—மின்னல்
பொலிவிருக்கும் கண்களிலும் பொன்றுத இன்பம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து?

—திருமதி ஜீவரத்தினம், அருப்புக்கோட்டை.

வற்றுப் பெருவளமும் வாட்டமிலா நற்புகழும்
பற்றுக் குறையின்றிப் பன்னலமும்—முற்றி
வலுவிருக்கும் நெஞ்சுடையோர் வாழ்வினிலே என்றும்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—அ. காந்தி, தேவத்தூர்.

கையில்லார் காலில்லார் கண்ணில் ஒளியின்றி
உய்ய வழியில்லார் ஓர்கோடி;—மெய்யில்
நலிந்தோர்க் குதவுவதால் நம்மிதயம் அன்பு
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—சி. சௌ. கருப்பன், திருச்சி-15.

ஈன்றாளின் இன்முகத்தும், இல்லாளின் அன்பிடத்தும்,
சான்றோரின் தன்வயமாம் நட்பினிலும்,—ஆன்ற
கலையுள்ளும், கன்னித் தமிழினிலும் இன்பம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—அ. முப்பாலிகை, நத்தம்.

கடமை யுணர்த்திட ஓர்விரல் காட்டி
மடமை யொழித்திட்ட மன்னன்—கடமைப்
பொலிவுடையான் புன்னகையில் தாயன்பே என்றும்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—எஸ். செந்தில்குமார், கோவை மாவட்டம்.

எங்கும் தமிழ்மொழியின் ஏற்றமே காண்பதன்றி
'இங்குயாம் வாளா இருப்போமா?—சிங்க
வலுவிருக்கும் ஒண்டமிழர் வாழ்வினிலே வெற்றி
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—உருக்குமணி, கோபிச்செட்டிபாளையம்.

அன்பும் அறநெறியும் ஆய்ந்த பொருள்நெறியும்
என்பும் பிறர்க்குரியார் ஏற்றமும்—பொன்போல்
பொலிவுற்றுச் சீர்பெருக்கப் புத்தரசில் இன்பம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—மு. பொன்னுரங்கம், அனக்காவூர்.

## தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்

19, 20, லிங்கி செட்டி தெரு, சென்னை-600001.

தந்தி விலாசம் : 'அர்பாங்க்'

தொலைபேசி எண் : 20367, 20368, 20369

தபால் பெட்டி எண் : 226.

டெலக்ஸ் எண் : எம். எஸ். 7225.

எங்கள் வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும், விவசாயத் தொழில்களுக்கும் உதவி செய்யும்.

**வட்டி விகிதங்கள்**

நடப்புக் கணக்குகள் .. (வருடத்திற்கு) ½%

சேமிப்புக் கணக்குகள் .. 4%

(குறைந்த அளவு மாத நிலுவையின் பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது)

காலாந்திர கணக்குகள் : ரூ. 1,000-ம் அதற்கு மேலும் (வருடத்திற்கு)

15 நாட்கள் .. 2%

46 நாட்கள் .. 3%

நிரந்தரக் கணக்குகள் : ரூ. 100-ம் அதற்கு மேலும்

| | | | |
|---|---|---|---|
| 91 நாட்கள் | 4¾% | 24 மாதங்கள் | 6¾% |
| 6 மாதங்கள் | 5¼% | 36 மாதங்கள் | 7¼% |
| 12 மாதங்கள் | 6¼% | 60 மாதங்கள் | 7½% |

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1,000-க்கும் அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு மேலே குறிப்பிட்டதைவிட ½% கூடுதல் வட்டி தரப்படும்.

தொடர் கணக்குகள் — தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம்.

| மாதத் தவணை | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
|---|---|---|---|---|---|---|---|
| ரூ. 5-ம் அதன் மடங்குகளும் | ரூ. 62 | 128·50 | 201 | 278 | 362·50 | 452 | 548·50 |

கிளைகள் :—மயிலாப்பூர், எழும்பூர், திருவல்லிக்கேணி, தியாகராய நகர், காந்திநகர், ஷெனாய் நகர், கெல்லீஸ், சாந்தோம், கிரீன்வேஸ் ரோடு, மயிலாப்பூர்-குளம், அண்ணாசாலை (காமதேனு), சாஸ்திரி நகர், அசோக் நகர், அண்ணா நகர், அண்ணாசாலை (அண்ணா சிலை), ஜவஹர் நகர், நுங்கம்பாக்கம், பெஸன்ட் நகர்.

ஆர். கனகசபை, தலைவர்.

குடவாசல் சி. இருட்டிணமூர்த்தி, துணைத் தலைவர்.

டி. வர்தமானன், செயலர்.


# தென் ஆர்க்காடு மாவட்டத்தின் உலகச் சாதனை

குடும்பநலத்திட்டச் செயலாக்கத்தில் இந்தியாவிலேயே தமிழ்நாடு தனக்கெனத் தனியொரு சிறப்பிடத்தைப் பெற்ற மாநிலமாகும். 1,000-க்கு 39 அல்லது 40 எனப் பிறப்பு விகிதம் இருந்த நேரத்திலேயே மிகுந்த தொலை நோக்குடன் குடும்ப நலத்திட்ட அறுவைச் சிகிச்சைத் திட்டத்தை 1959-லிருந்தே செயல்படுத்தியது தமிழ்நாடு! இதன் பயனாகத் தமிழ்நாட்டின் பிறப்பு விகிதம் இப்போது 1,000-க்கு 32 எனக் குறைந்திருக்கிறது. அனைத்து இந்தியாவிலும் தமிழ்நாடு, கேரளம், மகாராட்டிரம் ஆகிய மூன்று மாநிலங்களில்தான்பிறப்புவிகிதம் 1,000-க்கு 32 ஆகக் குறைந்திருக்கிறது. 1,000-க்கு 32 எனப்பிறப்பு விகிதத்தைக் குறைக்க வேண்டுமென்பது நான்காவது திட்டகாலக் குறிக்கோளாகும். நான்காவது திட்ட இறுதியாண்டான 1973–74-ல்தான் தமிழ்நாடு 1,000க்கு 32 என்ற பிறப்பு விகிதத்தை அடைய வேண்டுமென்பது இலக்கு! ஆனால் தமிழ்நாடு, குறிப்பிட்ட இரண்டு ஆண்டுக் காலத்திற்கு முன்பாகவே தனது இலக்கை எட்டியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதொரு வெற்றியாகும்.

மேலும், இந்தியாவில் இது வரை—குடும்ப நலத் திட்ட அறுவைச் சிகிச்சை நடத்தத் தொடங்கிய நாள் முதல் இது வரை 84 இலட்சம் பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு இது வரை ஏறத்தாழப் பன்னிரண்டேகால் இலட்சம் பேருக்கு அறுவைச் சிகிச்சை நடத்தியுள்ளது. அதாவது இந்தியாவின் சாதனையில் 15 விழுக்காடுகள் தமிழ்நாடு ஏற்படுத்தித் தந்துள்ளது. ஆனால், இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் தமிழ்நாட்டின் மக்கள் தொகை 7.5 விழுக்காடுதான்! எனவே குடும்பநலத் திட்டத்தில் இதுவரை இந்தியா ஏற்படுத்தியுள்ள சாதனையில் தமிழ்நாட்டின் பங்கு இருமடங்காகும். இச்சிறப்புக்குரிய தமிழகம் சென்ற 1971–72-ஆம் ஆண்டில் இலக்கையும் மீறி மாபெரும் சாதனையை ஏற்படுத்தியுள்ளது. சென்ற ஆண்டில் 1,73,883 அறுவைச் சிகிச்சைகள் செய்து முடிக்க வேண்டுமென்பது தமிழ்நாட்டிற்குரிய இலக்காகும். ஆனால், 2,45,845 பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்து, தமிழகம் சென்ற 1971–72-ஆம் ஆண்டில் மாபெரும் சாதனையை ஏற்படுத்தியிருக்கிறது. இது 141.4 விழுக்காடுகள் அளவுக்குத் தமிழகம் இலக்கு மீறிய சாதனை புரிந்ததற்கு ஒப்பானதாகும். அளப்பரிய இவ்வெற்றியைத் தமிழ்நாடு பெற்றதற்கு மாவட்டங்கள் தோறும் சென்ற ஆண்டு நடந்து முடிந்த முனைப்பு இயக்கங்களே காரணம் எனலாம். வெற்றிக்கு முழுமுதற் காரணமாக அமைந்த முனைப்பு இயக்கத்தைச் செம்மையாக நடத்தித் தமிழக மாவட்டங்கள் அனைத்தையும் விஞ்சிய நிலையில் சாதனை புரிந்த முதல் மாவட்டமாகத் திகழ்வது தென் ஆர்க்காடு மாவட்டமாகும்!

ஏனைய மாவட்டங்களைப் போல முனைப்பு இயக்கம் நடத்த முனைந்த தென் ஆர்க்காடு மாவட்டம் தொலைநோக்குடனும், தகுந்த முன் ஏற்பாடுகளுடனும் தகுந்த அடித்தளத்தோடும் தன் பணியைத் துவக்கியது. முனைப்பு இயக்கக் காலத்தில் அறுவைச் சிகிச்சை முகாம் தொடங்குவதற்கு முன் ஒரு மாத காலம் குடும்ப நல விளம்பரப் பணி மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. மக்களிடையே சிறுகுடும்ப நெறியின் அவசியத்தைப்பற்றி எடுத்துச் சொல்லிக் குடும்ப நலத் திட்டம் ஏற்கச் செய்ய கிராம அதிகாரிகளும், ஆசிரியப் பெருமக்களும், வருவாய்த்துறை, சமுதாய நலத்துறை, குடும்ப நலத்துறை ஆகிய துறைகளின் அலுவலர்களும், சேரணியினரும் தன்னியக்கத் தாபனங்களைச் சார்ந்தோரும், அந்தந்த வட்டாரத் தலைவர்களும், ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள், சட்ட மன்ற, மேலவை, நாடாளு மன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் இவ்வியக்க வெற்றிக்கு உறுதுணையாக இருந்து அரும்பணியாற்றினார்கள்.

சிறப்பாக முனைப்பு இயக்கக் காலத்தில் தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தவரும் இரண்டே இரண்டு பெண் குழந்தைகளையேயுடைய வருமான திரு கே.ஏ. நம்பியார் அவர்கள், தாமே அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு பிறருக்கு எடுத்துக் காட்டாக விளங்கினார்.

### முனைப்பு இயக்கத்தின் முக்கிய அம்சங்கள்

சாதாரணமாக 55 வயது வரை ஆண்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது. ஆனால் தென் ஆர்க்காடு மாவட்ட முனைப்பு இயக்கக் காலத்தில் அதிகப்படியாக 45 வயதுவரைதான் ஆண்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யலாம் என்ற வரம்பு நிர்ணயிக்கப்பட்டது. எனவே குழந்தைகளைப் பெற்றெடுக்கும் வாய்ப்பு மிகுந்த—குறைவான குழந்தைகளையுடைய இவர்களின் இளம் மனைவிமார்கள் அந்த வாய்ப்பை இழந்தார்கள். எனவே இம் மாவட்டத்தில் 45 வயதுவரையிலானவர்களுக்கு மட்டும் அறுவைச் சிகிச்சை செய்ததால் பெரும் பயன் விளைந்தது என்றே சொல்லலாம்.

முனைப்பு இயக்கம் நடந்த போது அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்குப் பொதுவாக அரசு அளித்தது ரூ. 30 ஈட்டுத்தொகையும், அறுவைச் சிகிச்சைக்குப் பிறரை அழைத்து வந்தவருக்கு ரூ. 10ம், ஆறு நாட்களுக்கு இலவசமாக உணவு அளிக்க ரூ. 18ம் ஆகும். ஆனால் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கீழ்வரும் ஊக்கத் தொகையும் பிறவும் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு அளிக்கப்பட்டன.

### தந்தைமார்களுக்கு வழங்கப்பட்டவை

1. அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஒவ்வொரு தந்தைக்கும் ரூ. 75.

2. தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு ஒன்று.

3. ரூ. 10 பெறுமானமுள்ள ஒரு வேட்டியும் துண்டும்.

4. இலவச உணவளிக்க ஒவ்வொரு நபருக்கும் நாள் ஒன்றுக்கு ரூ. 4.25 வீதம் ஆறு நாட்களுக்கு ரூ. 25.50.

5. கிராமத்திலிருந்து அறுவைச் சிகிச்சை முகாம் நடக்கும் இடத்திற்குப் போய்

வரப் போக்குவரத்துச் செலவுக்கென ஒவ்வொருவருக்கும் ரூ. 5.

### தாய்மார்களுக்கு வழங்கப்பட்டவை

1. அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஒவ்வொரு தாய்க்கும் ரூ. 100.

2. தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு ஒன்று.

3. ரூ. 12 பெறுமானமுள்ள சேலை ஒன்று.

இந்த வகையிலான செலவினங்களுக்காக மாவட்ட ஆட்சித் தலைவரால் பொது மக்களிடமிருந்தே நிதி திரட்டப்பட்டது.

தென் ஆர்க்காடு மாவட்ட முனைப்பு இயக்க அறுவைச் சிகிச்சை முகாமை 1971-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் நாள், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் கடலூர் நகர மண்டபத்தில், போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் துவக்கி வைத்தார்கள். இந்நகர மண்டபத்தின் பின் பகுதியிலேயே அறுவைச் சிகிச்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன, இந்நகர மண்டபத்தில் விழா துவக்கி வைக்கப்பட்ட அந்த ஒரே நாளில் மட்டும் 600 தாய்மார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. இத்தொடக்க விழாவின் தொடர்பாக மாவட்டத்தில் பரவலாக அமைக்கப்பட்டிருந்த அறுவைச் சிகிச்சை முகாம்களும் இயங்கிச் செயல்பட்டன.

### பூத்துறையின் நூற்றுக்கு நூறு சாதனை

இம்மாவட்டத்தில் 'வானூர்' வட்டார வளர்ச்சிப் பகுதியில் இருப்பது, 2,622 மக்கள் தொகையுடைய பூத்துறை என்ற கிராமமாகும். விவசாயிகளான இக்கிராம மக்களில் தகுதி வாய்ந்த தம்பதிகள்-'தென்ஆர்க்காடு மாவட்டஆட்சித் தலைவரின் கணிப்புப்படி 45 வயதுக்குட்பட்ட தந்தைமார்கள் அனைவரும் நூற்றுக்கு நூறு பேர் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார்கள். இவ்வருஞ் செயல் நிகழப் பின்னணியிலிருந்து பெரும் பணியாற்றியவர் பூத்துறை கிராம அதிகாரி திரு பி. கே வைத்தியலிங்கம் ஆவார். இருபத்தி ஒன்பது வயது நிரம்பிய இந்த இளைஞர் மூன்று குழந்தைகளோடு சிறுகுடும்ப நெறி ஏற்றுள்ளார். இவரது துணைவியார் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளார்.

### சிரணியினரின் சீரிய தொண்டு

இம்மாவட்டத்தைச் சேர்ந்த காட்டு மன்னார் கோவில் ஊராட்சி ஒன்றியம் முனைப்பு இயக்கக் காலத்தில் 1,700க்கும் மேற்பட்ட அறுவைச் சிகிச்சை செய்து தனக்கென ஒரு தனியிடத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இதில் 500 அல்லது 600 பேர் அறுவைச் சிகிச்சைக்கெனச் சிரணியினரால் அழைத்து வரப்பட்டனர்.

மேலும் இங்கு அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு ஓய்வில்லங்களில் தங்கியிருந்தோருக்கான உணவைச் சிரணியினர் உழைப்புதானம் நல்கி இலவசமாக ஆக்கிப் படைத்தார்கள். சிரணியினரின் இச்சீரிய தொண்டு, முனைப்பு இயக்கத்திற்குப் பெருந்துணையாக அமைந்தது.

### உலகச் சாதனை

அனைத்திந்தியாவிலும்முனைப்பு இயக்கத்தின் மூலம் குடும்ப நலத் திட்டத்தில் மிகப்பெரிய சாதனையை ஏற்படுத்தியது கேரள மாநிலத்தைச் சேர்ந்த எர்ணாகுளம் மாவட்டம் எனப்பட்டது. 1970-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களிலும், 1971-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களிலும் இம்மாவட்டத்தில் முனைப்பு இயக்க முகாம்கள் நடத்தப்பட்டன. கேரள மாநிலம் முழுவதிலுமிருந்து வந்த தந்தைமார்களும், தாய்மார்களும் அறுவைச் சிகிச்சைக்காக ஏற்றுக் கொள்ளப்பட்டனர்.

அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு 'கேர்' நிறுவனத்தின் உதவியோடு பல்வேறு வகையான சலுகைகள் இலவசமாக அளிக்கப்பட்டன. இத்தனைக்கும் பின்னே, எர்ணாகுளத்தில் இருவேறு மாதங்களில் நடந்த முனைப்பு இயக்க முகாமில் செய்யப்பட்ட அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை 78,423 என்றும், இதில் எர்ணாகுளம் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் 34,500 பேர் என்றும் அறிகிறோம். இந்த 34,500 அறுவைச் சிகிச்சைகளைச் செய்து முடித்தது எர்ணாகுளம் மாவட்டம் என்றும், தனியொரு மாவட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட பெருஞ் சாதனை இது என்றும், இதுவே உலகச் சாதனை என்றும் இதுவரை கருதப்பட்டது.

ஆனால் தென்ஆர்க்காடு மாவட்டம் ஒரே முனைப்பு இயக்க முகாமில்-மழைக்கும் வெள்ளத்திற்கும் இடையை நடத்தப்பட்ட முகாமில் 'கேர்' நிறுவனம் போன்றவற்றின் உதவியில்லாமல், 1971-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள், முதல் நாள் முதல்1972-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் பத்தாம் நாள் வரையிலான 41 நாட்களில், அண்டை மாவட்டம், பிற மாவட்ட மக்களுக்கல்லாது, தன் மாவட்டத்தினரிடையே மட்டும் செய்துள்ள அறுவைச் சிகிச்சையின் எண்ணிக்கை 37,887 ஆகும். எனவே முனைப்பு இயக்கத்தின் மூலம் இப்போதைய நிலையில் குடும்ப நலத்திட்டத்தில் உலகச் சாதனை ஏற்படுத்தியிருப்பது தென்ஆர்க்காடு மாவட்டம். இந்த மாவட்டத்தின் அளப்பரிய இச்சாதனை சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இவ்வெற்றியைக் குறிக்கும் வகையில் கடலூரில் 12-5-1972 ஆம் நாள் மாபெரும் வெற்றி விழாக் கொண்டாடப்பட்டது. இவ்வெற்றி விழாக் கூட்டத்தில் கலந்துகொண்டு அனைவரையும் பாராட்டிஊக்கமும்உற்சாகம் ஊட்டிய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே. ஏ. நம்பியாருக்கும் பிறருக்கும் அவர்களது அரும்பணியைப் பாராட்டிப் பரிசுகள் வழங்கினார்கள்.

### ஏழு நகராட்சிகள்

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கடலூர், சிதம்பரம், விழுப்புரம், திண்டிவனம் ஆகிய நான்கு நகராட்சிகளே இருந்தன. ஆனால், கடந்த 5 ஆண்டுகளில் ஏற்பட்ட மக்கட் பெருக்கத்தின் விளைவாலும், தொழில், வணிகம் ஆகியவற்றில் முன்னேற்றம் அடைந்துள்ள காரணத்தாலும், பேரூராட்சிகளாக இருந்த நெல்லிக்குப்பம், பண்ணுருட்டி, விருத்தாசலம் ஆகியவையும் நகராட்சி மன்றங்களாக மாற்றப்பட்டன. இவற்றுள் கடலூர் நகராட்சி நூற்றாண்டைத் தாண்டியது குறிப்பிடத்தக்கது.





# ஆராய்ச்சி நிலையங்கள் அமைந்த மாவட்டம்

தென் ஆர்க்காடு மாவட்டம், தஞ்சை மாவட்டத்திற்கடுத்தபடியாக வேளாண்மையில் சிறந்து விளங்குகிறது. அதன் காரணமாக, வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் இங்கே தோன்றியுள்ளன; வேளாண்மைத் தொழிலுக்கு இந்த ஆராய்ச்சி நிலையங்கள் மிகுந்த உதவி செய்கின்றன.

பழம்பெரும் ஆராய்ச்சிப் பண்ணைகளில் பாலூர் விவசாய ஆராய்ச்சிப்பண்ணையும்ஒன்றாகும். இப்பண்ணை கடலூர் வட்டாரத்தில் பாலூருக்கு அடுத்த பல்லவராயன் நத்தம் கிராமத்தில் அமைந்துள்ளது. இது 1967-ஆம் ஆண்டிலிருந்து உழவியல் வல்லுநர்களின் கீழ் இயங்கி வருகிறது. இந்தப் பண்ணையின் மொத்தப் பரப்பளவு 55 ஏக்கர்களாகும். இவற்றில் 18.65 ஏக்கர் நன்செய், 24.40 ஏக்கர் புன்செய் நிலங்கள். இங்கு குழாய்க் கிணறுகள் ஐந்து உள்ளன. நான்கு மின்சார மோட்டார்கள் பொருத்தப்பட்டுள்ளன இந்தப் பண்ணையில்.

இந்தப் பண்ணையில், பாலூர் —1, பாலூர் —2 என்ற இருவகை குறுகிய காலப் பயிர்களும், பாலூர் —1, பாலூர் —2 என்ற குறுகிய காலக் கேழ்வரகுத் தானிய வகையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வகைகளைப் பயிரிடுவதன் வாயிலாகச் சாதாரணச் சாகுபடியை விட 10 சதவிகிதம் அதிக மகசூல் கிடைக்கிறது.

டி. கே. எம். 6 நெல் வகை, சொர்ணவாரி, நவரைப் பட்டத்தில் பயிரிடுவதற்கும், கோ. 25 சம்பாப் பட்டத்தில் பயிரிடுவதற்கும் சிறந்தவை என முடிவு செய்யப்பட்டுள்ளன. இந்தப் பண்ணை நெல், தானியங்கள், காய்கறி போன்ற விதைகளை உற்பத்தி செய்து அரசு விதைப்பண்ணைகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அனுப்பி வைக்கிறது. பழ வகைகளில் உயர்தரக் கன்றுகளும், காய்கறிகள் முதலியவையும் இப்பண்ணையின் காய்கறித் தோட்டத்திலும் பழத் தோட்டத்திலும் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.

இப்பண்ணையில் ஆராய்ச்சியின் விளைவாகக் கண்டுபிடிக்கப்பட்ட பயிர் வகைகள் நெல் பி.எல்.ஆர். 1, பி. எல். ஆர். 2, கேழ்வரகு, பி.எல்.ஆர் 1, பி.எல்.ஆர். 2 ஆகிய வகைகளாகும்.

ஃ ஃ ஃ

விருத்தாசலம் வட்டத்தில் உள்ள குப்ப நத்தம் என்ற கிராமத்தில் ஓர் ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. இங்கு முந்திரி விளைச்சலைப் பல மடங்கு பெருக்கும் நோக்கத்தோடு ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. தரமான முந்திரி விதைகளைக் கண்டுபிடிப்பது இதன் முக்கியமான பணிகளாகும்.

ஃ ஃ ஃ

கடலூரில் வில்வராய நத்தம் என்ற கிராமத்தில் கரும்பு ஆராய்ச்சி நிலையும் செயல்பட்டு வருகிறது.

1957-ஆம் ஆண்டின் துவக்கத்தில் இந்த ஆராய்ச்சி நிலையம் கடலூரில் துவக்கப்பட்டது. தமிழ்நாடு பிரிவதற்கு முன் இந்த ஆராய்ச்சி நிலையம் ஆந்திர மாநிலத்தில் விசாகப்பட்டின மாவட்டத்தில் அனகாபள்ளியில் இருந்தது. தமிழ்நாட்டுக்கு ஆராய்ச்சி நிலையம் அவசியம் என்ற நிலை உருவாகியது, அதற்குத் தகுந்த இடம் கடலூர் என்று தேர்ந்தெடுக்கப்பட்டது. 136·15 ஏக்கர் பரப்பளவு உள்ளது இந்த ஆராய்ச்சி நிலையம்.

இந்த நிலையத்தின் முதன்மையான அலுவல் கரும்பு ஆராய்ச்சிதான்.

ஆண்டுதோறும் 70 ஏக்கரில் கரும்பு பயிரிடப்படுகிறது. மீதி நிலத்தில் நெல், மணிலா, ராகி, சூரியகாந்தி, பசுந்தாள் உரம், இதர பயிர்கள் பயிரிடப்படுகின்றன.

ஆண்டு ஒன்றுக்கு 1·19 இலட்சம் ரூபாய் செலவாகிறது. ஆனால் வரவு ரூபாய் 1·57 இலட்சம். எனவே இது இலாபகரமாக நடைபெறும் நிலையம் என்பது குறிப்பிடத்தக்கது.

கோ. 6304 என்ற ரகக் கரும்பு இந்த ஆராய்ச்சி நிலையத்தால் கண்டுபிடிக்கப்பட்டு 1970-ல் அறிமுகம் செய்யப்பட்டது. இதன் வயது 12 மாதம்; பிப்ரவரி, மார்ச் மாதத்தில் நடவு செய்வார்கள். ஒரு ஏக்கருக்கு 46 டன் கரும்பு விளைகிறது. இதில் சர்க்கரைச் சத்து 13·5 சதவிகிதம் கிடைக்கிறது. ஒரு ஏக்கர் கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரை 6·2 டன். இந்த ரகத்தைக் கரிப்பூட்டை நோய் தாக்காது. எளிதில் சாயாமல் நிமிர்ந்து நிற்கும் தன்மையுடையது இந்த ரகம்.

பொதுவாக, கோ. 658, கோ. 740, கோ. 853, கோ. 419, கோ. 449 ஆகிய கரும்பு ரகங்கள் சாகுபடியில் உள்ளன. ஆனால் இவை அனைத்தையும்விடச் சிறந்ததாக விளங்குகிறது இந்தப் புதிய ரகம்.

அதிக மகசூல் கொடுக்கக் கூடியதும் அதிக சர்க்கரை கொடுக்கக் கூடியதும் [illegible] பூஞ்சான நோய்களால் [illegible]

படாததும், பல்வேறு தட்பவெப்ப நிலைகளுக்கு உகந்ததுமான ரகங்களைத் தேர்ந்தெடுத்தல்.

பல்வேறு நிலங்களுக்கு வேண்டிய உர அளவுகளைக் கண்டுபிடித்தல்.

பயிரிடும் செலவுகளைக் குறைப்பதோடு, வேண்டிய உழவியல் முறைகளை ஆராய்தல்.

இவைதான் இந்த நிலையத்தின் நோக்கங்கள்

பொதுவாக வெளிநாட்டு ரகங்கள் நமது நாட்டுக்குப் பயன்படவில்லை.

இந்தியாவிலேயே புகழ்பெற்ற கோவை ஆராய்ச்சி நிலையத்தில் ஒட்டுச் சேர்க்கை செய்து, ரகங்களைக் கண்டுபிடித்து, மாநில ஆராய்ச்சி நிலையங்களுக்கு அனுப்புகிறார்கள். அவர்கள் மாவட்ட வேளாண்மை அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கிறார்கள்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் குடியாத்தத்திலும், திருச்சி மாவட்டத்தில் சிறுகமணியிலும் கிளை ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன.





ஒவ்வொரு ஆண்டும் 750 முதல் 1,500 ரகங்கள் ஆய்வு செய்யப்பட்டு, முக்கியமான ரகங்கள் மாவட்ட வேளாண்மை அலுவலர் (கரும்பு) அவர்கள் மூலம், வேளாண் பெருமக்களின் நிலங்களில் பரிசோதிக்கப்பட்டு, அதன் பின்னர் பரந்த அளவில், வேளாண்மைக்குப் பயன்படுத்தப் பெறுகின்றன.

தமிழ்நாடு வேளாண் குடியினரால் பயன்படுத்தப்பெறும் விதை ரகங்கள் நூற்றுக்கு நூறு இந்த நிலையத்தில் உருவாகியவைதான் என்பது குறிப்பிடத்தக்கது.

30 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ஏக்கர் நிலத்தில் 20 டன் கரும்பு விளைந்தது. தற்போது ஒரு ஏக்கர் நிலத்தில் ஏறக்குறைய 37 டன் கரும்பு பயிராகிறது.

வேளாண் குடியினர், தங்கள் நிலத்தின் மண் எவ்வகையானது, அதில் எவ்வகைப் பயிர் செய்யலாம் என்றறிவதற்கு, இந்த நிலையத்திற்கு மண்ணை அனுப்பி வைத்தால், இந்நிலையத்தினர் இலவசமாக மண் ஆய்வு நடத்தி அதன் விவரங்களைத் தெரிவிக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

திண்டிவனத்தில் இறையானூர் என்ற கிராமத்தில் ஒரு வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் இயங்கி வருகிறது. எண்ணெய் வித்துப் பயிர்களில் முக்கியமான பயிர்களான நிலக்கடலை (மணிலா), எள், ஆமணக்கு, இம்மூன்றிலும் தீவிர ஆராய்ச்சி செய்து, அதிக மகசூலைக் கொடுக்கக்கூடிய வகைகளும், வறட்சி தாங்கக் கூடியதுமான சிறந்த விதைகளைத் தேர்ந்தெடுப்பதற்கும், சாகுபடி முறைகளில் மகசூலைப் பெருக்கக் கூடிய ஆராய்ச்சிகள் இங்கு நடைபெறுகின்றன. உலகத்தில் இதுவரை 750 வகையான மணிலாக்கள் இருக்கின்றன என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

புது டில்லியில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக்குழு, எண்ணெய் வித்துக்கள் ஆய்வினை அகில இந்திய அளவில் நடத்தியது. கேரளம், ஜம்மு—காஷ்மீர் தவிர எல்லா மாநிலங்களும் அந்த ஆய்வில் பங்கு பெற்றன. திண்டிவனத்தில் உள்ள இந்த ஆராய்ச்சி நிலையந்தான் முதன்மை மையமாகத் (Major centre) தேர்ந்தெடுக்கப்பட்டது.

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் உள்ள நிலையம் துணை மையமாகத் (Sub centre) தேர்ந்தெடுக்கப்பட்டது.

நிலக் கடலையில் உள்ளூர் ரக வித்துக்களைவிட 30 சதம். அதிக மகசூலைக் கொடுக்கக் கூடிய 6 பொறுக்கு விதைகள் ஏற்கெனவே இந்த நிலையத்தில் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. இவை தவிர டி.எம்.வி. 7, டி.எம்.வி. 8, டி.எம்.வி. 9, டி.எம்.வி. 10 போன்ற அதிக விளைச்சல் தரக்கூடிய பொறுக்கு விதைகளையும் இங்குக் கண்டு பிடித்துள்ளனர். உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் நிலக் கடலை, எள், ஆமணக்கு ரகங்கள் வரவழைக்கப்பட்டு, ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. என்றாலும், மணிலாவைப் பற்றிய ஆராய்ச்சிக்கே இங்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது.



# மீனவர்கள் வளம்பெற அரசு தரும் உதவிகள்

கனிச் செல்வம், நிலச் செல்வம் போன்றதே நீர்ச் செல்வமும். ஆழ் கடலில் மூழ்கி முத்தெடுத்துக் கிரேக்க, ரோமாபுரிய நாடுகளுடன் முத்து வாணிகம் செய்து செழித்துக் கொழித்த நாடு நமது தமிழகம். தமிழகத்தின் கடற்கரையோரம் சித்திரக் கதைகள் பல பேசும் நிலச் செல்வத்தைவிட, நீரிலிருந்து பெற்ற செல்வம் பெருமதிப்புடையது. தமிழகத்தில் கடற்கரை யோரங்களில் பல சிறான துறைமுகங்களைக் கட்டி நாட்டின் வாணிக நிலையினை உயர்த்திப் பெருமை பெற்றிருக்கிறது தமிழக அரசு.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் வடக்கே மரக்காணத்திலிருந்து தெற்கே கொள்ளிடத்தின் முகத்துவாரம் வரை 65 மைல் நீளக் கடற்கரை இருக்கிறது. உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் பிடிப்பதற்காக வாய்ப்பு வசதிகள் ஏராளமாகப் பெருகியுள்ளன.

நீர் மேல் வாழ்வு நடத்தும் மீனவர்களுக்கு மீன்வலையும், கட்டுமரங்களும் வாங்கக் கடன் உதவி அளித்து வருகிறது. இம்மாவட்டத்தில் கடலூர் பழைய நகரில் மீன்பிடிக்கும் துறைமுகம் ஒன்றை அரசு அமைத்து வருகிறது.

மீனவர்கள் வாழ்வு மேன்மையுற விசைப்படகுகளை வாங்கத் தவணை முறையில் பணம் கட்டி, விசைப்படகுகளைத் தமிழக அரசு அளிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் ரூ. 47,89,050 கடன் வழங்கியுள்ளது. 1971-ஆம் ஆண்டு மீனவர்களுக்கு 35 விசைப்படகுகள் கடனாக வழங்கும் திட்டம் செயல்பட்டு அதனைப் பரிசுத் திட்டத்தின் மூலம் மீனவர்களுக்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது.

இந்த ஆண்டு 44 விசைப் படகுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இவ்வாண்டு முதல், விசைப்படகுகளில் மீனவர்கள் விரும்பினால், இயந்திரத்தைப் பொருத்தித் தரவும் தமிழக அரசு அனுமதித்துள்ளது.

குடியிருப்பு வசதி

ஓலைக் குடிசையிலே வாழ்கின்ற மீனவர்களுக்கு நல்ல தரமான குடியிருப்புகளைக் கட்டுவதற்கு அரசு ரூ. 80,000 வழங்கியுள்ளது. இந்த வீடுகளை சிதம்பரம் வட்டம் கிள்ளை என்ற கிராமத்தில் கட்டுவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கென வீடு கட்டுவதற்கு மீனவர்களுக்கு ரூ. 750 உதவித் தொகையாகவும், ரூபாய் 250 வட்டியில்லாத கடனாகவும் அரசு வழங்கி வருகிறது.

> **அரிசனக் குடியிருப்பும் மின் வசதியும்**
>
> தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 1967 வரையுள்ள 20 ஆண்டுகளில் மின்வசதி பெற்ற அரிசனக் குடியிருப்புகள் 30; கடந்த ஐந்தாண்டுகளில் மின்வசதி பெற்ற அரிசனக் குடியிருப்புகள் 1,152; கல்வராயன் மலைப் பகுதி தவிர மற்றப் பகுதிகளுக்கெல்லாம் மின் வசதி அளிக்கப்பட்டுவிட்டது.

மீன் அங்காடி

மீன்களை விற்பதற்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்த அரசு பல உதவிகளைச் செய்து வருகிறது. இம்மாதிரியான கூட்டுறவுச் சங்கங்கள் இம்மாவட்டத்தில் 70 உள்ளன. அவற்றில் உள்ள மீனவ உறுப்பினர்களின் எண்ணிக்கை 19,000 ஆகும். இச்சங்கங்களுக்காக அரசு 1969—70-ல் ரூ. 31,000 கடன் வழங்கியுள்ளது.

1970—71-ல் அரசு, ரூபாய் 10,000 செலவில் உலர்ந்த மீன் அங்காடி வைக்க விழுப்புரத்தில் ஒரு கட்டடத்தைக் கட்டியது. கடலூர் பழையநகரில் ரூ. 10,000 செலவில் ஒரு மீன் அங்காடி கட்டி முடிக்கப் பட்டது. தென் கடலில் மூழ்கி முத்து எடுப்பது தொன்று தொட்டுவரும் ஒரு வழக்கமாகும். அம்முறையில் ஆழ்கடலில் மூழ்கிச் சங்கு எடுப்பதை இம்மாவட்டத்தில் அரசு பொது மக்களுக்குக் குத்தகைக்கு விட்டிருக்கிறது. 1971-ல் 1,09,722 சங்குகள் மூழ்கி எடுக்கப்பட்டுள்ளன. 1969—70 வரை சங்கு எடுப்பதற்காகக் குத்தகை விடப்பட்டு அரசு அடைந்த வருமானம் ரூ. 35,000 ஆகும். இம்மாவட்டம் சங்கு எடுப்பதில் முதன்மையில் நிற்கிறது.




# தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கல்வி வளர்ச்சி

"தொட்டனைத் தூறும்மணற்
கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

என்கிறது குறள் ; குறள் மொழியைப் பொன்னேகப் போற்றிவரும் தமிழக அரசு கல்விதரும் பணியில் பெருந்தொண்டு புரிந்து வருகிறது. இந்தியாவிலேயே படித்தவர்கள் அதிகம்பேர்உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாவது மாநிலமாகத் திகழ்கிறது. இந்த முன்னேற்றத்துக்குக் காரணம், தமிழக அரசின் அயராத தொண்டு என்றால் அது மிகையாகாது.

தென் ஆர்க்காடு மாவட்டத்தைப் பொறுத்த அளவில் கல்விப் பணிக்கு அரசு நிறையப் பொருள் செலவு செய்து வருகிறது. கல்விப் பணியைப் பொறுத்த அளவில் தென் ஆர்க்காடு மாவட்டம் நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை யாவன: கடலூர், விழுப்புரம் விருத்தாசலம், திண்டிவனம்.

தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பள்ளிகள் விவரம்:

| | |
|---|---|
| துவக்கப் பள்ளிகள் | 2,034 |
| உயர் துவக்கப் பள்ளிகள். | 380 |
| உயர் நிலைப் பள்ளிகள். | 195 |
| முதுநிலை ஆதாரப் பள்ளிகள். | 126 |
| இளநிலை ஆதாரப் பள்ளிகள். | 428 |
| கீழ்நாட்டு மொழி நடுநிலைப்பள்ளி. | 1 |
| கீழ்நாட்டு மொழி உயர்நிலைப்பள்ளி. | 1 |
| முதல்நிலை ஆதாரப் பள்ளி. | 5 |
| சிறைப்பள்ளி | 1 |
| பார்வையற்றோர் துவக்கப் பள்ளி. | 1 |
| முதியோர் பள்ளி | 4 |
| நர்சரிப் பள்ளி | 1 |

துவக்கப்பள்ளிகளுக்கும், உயர்நிலைப்பள்ளிகளுக்கும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மிகுதியாகத் தேவைப்பட்டதை யொட்டிப் பயிற்சிப் பள்ளிகள் வளர்ச்சியிலும் கவனம் செலுத்த வேண்டி நேரிட்டது. தற்போது இந்த மாவட்டத்தில் 10 ஆசிரியர்பயிற்சிப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 7 ஆண்களுக்கும் 3 பெண்களுக்கும் ஆகும்.

துவக்கப் பள்ளிகளில் 8,547 ஆசிரியர்களும், உயர்நிலைப்பள்ளிகளில் 3,747 ஆசிரியர்களும் பணி புரிகிறார்கள்.

அண்மையில் இந்த மாவட்டத்தில் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சி ஒன்று நிகழ்ந்துள்ளது. நெல்லிக்குப்பம் பேராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கண்டாக் கோட்டையில் உயர் தொடக்கப்பள்ளி ஒன்று 20 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. இந்தக் கட்டடத்திற்குப் பரிசுச் சீட்டு வருமானத்திலிருந்து 13 ஆயிரம் ரூபாயைத் தமிழக அரசு மானியமாகக் கொடுத்துள்ளது. இந்தப் பள்ளியை அரிசன நல அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அம்மையார் அவர்கள் செப்டம்பர் மாதம் 16-ஆம் தேதி அன்று திறந்து வைத்தார்கள்.

இம்மாவட்டத்தில் 1966-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் உள்ள கலைக் கல்லூரிகளைத் தவிர்த்து, இரண்டு கல்லூரிகள் மட்டுமே இருந்தன. அதன்பின் கடலூரில் ஆண்கள் கல்லூரி ஒன்று இயங்கி வருகிறது. 1968-ல் மகளிர் கல்லூரி ஒன்று. பச்சையப்பன் அற நிலையத்தாரால் கட்டப்பட்டு இயங்கி வருகிறது.

திண்டிவனத்தில் ஏ. கோவிந்தசாமி அரசினர் கலைக் கல்லூரி—31—10—1969-ல் ரூ. 8.50 இலட்சத்தில் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. 17—12—1970 அன்று வேலை துவக்கப்பட்டு, இந்த ஆண்டுத் துவக்கத்தில் முடிக்கப்பட்டுவிட்டது. கல்லூரி, இப்போது புதிய கட்டடத்தில் நடைபெற்று வருகிறது. கட்டடம் கட்டி முடிக்கச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 10 இலட்சம் என்பது குறிப்பிடத்தக்கது.

விழுப்புரத்தில், நகர்ப் பகுதியில் அமைந்துள்ள கீழ்ப்பெரும்பாக்கத்தில் அரசினர் கலைக் கல்லூரி நிரந்தரக் கட்டடம் நிறுவுவதற்கு அரசு அனுமதி தந்துள்ளது; இந்தத் திட்டம் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் செயல்முறைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது : தற்போது வேலைகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன. இதன் மொத்தச் செலவு ரூ. 10.30 இலட்சங்கள் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

விருத்தாசலத்தில், ஆண்கள் கலைக் கல்லூரி ஒன்றினை அரசு உருவாக்கியுள்ளது. 1969-ல் துவக்கப்பட்ட கல்லூரிக் கட்டடம் 1971-ல் கட்டி முடிக்கப் பெற்றது. கடந்த 1971 ஜூன் மாதத்திலிருந்து இந்தக் கல்லூரி புதிய கட்டடத்தில் இயங்கி வருகிறது. சுமார் 700 மாணவர்களுக்குக் கல்வி கொடுத்து வரும் இந்தக் கல்லூரியின் திட்ட மதிப்பீடு ரூ. 8.50 இலட்சம் ; ஆனால் ரூ. 8.27 இலட்சம்தான் செலவாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் கல்லூரியின் பின் பகுதியில் முதல் மாடி கட்டுவதற்கும் தமிழக அரசு ரூ. 3.10 இலட்சம் தருவதற்கு இசைந்துள்ளது. விரைவில் வேலை துவங்கி, முடிக்கப்படவிருக்கிறது.

இவ்வாறு, அறியாமையைப் போக்கும் அறிவாலயங்களை உருவாக்கி, மாவட்ட மக்களுக்குக் கல்விச் செல்வத்தை வாரி வழங்கும் வகையில் அரசு தொண்டு புரிந்து வருகிறது

# தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கண் ஒளி வழங்கும் தொண்டு

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் 49-வது பிறந்த நாள் விழாவை விழி இழந்தோருக்கு ஒளி வழங்கும் விழாவாகக் கொண்டாடும் பொருட்டு மாவட்டந்தோறும் கண் சிகிச்சை முகாம்கள் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன. ஒளி இழந்த கண்ணினர் பலர் ஒளிபடைத்த கண்ணினராக மாறிக் காட்சியின்பங்களில் திளைத்து மகிழ்கின்ற அற்புதங்கள் அன்றாடம் நிகழ்கின்றன.

இந்தக் கண் சிகிச்சை முகாம் மூலம் இவ்வாண்டு ஓர் இலட்சம் பேருக்கு அறுவைச் சிகிச்சை நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஏறத்தாழ 60 இலட்சம் ரூபாய் வரை செலவாகும் என்றும் அதே சமயம் 5 இலட்சம் பேர்களுக்குக் கண் பரிசோதனை வேறு செய்ய வேண்டியுள்ளது என்றும், இதற்கு 5 இலட்சம் ரூபாய் வரை செலவாகலாம் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த ஏற்பாட்டின்படி, தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 10 ஆயிரம் பேருக்கு இலவசக் கண் சிகிச்சையளிக்க முடிவு செய்யப்பட்டு ஜூலை 19 முதல் 31 வரை முகாம் நடைபெற்றது.

முதலில், சிதம்பரம் அரிமா சங்கத்தின் உதவியுடன் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொறியியல் கல்லூரியில் இருவார காலம் நடைபெற்றது.

இந்த முகாமில், 4,378 பேர்களுக்குக் கண் சிகிச்சையளிக்கப்பட்டது. 433 பேர்களுக்கு அறுவைச் சிகிச்சையளிக்கப்பட்டது. அறுவைச் சிகிச்சை பெற்றோருக்கு, சென்னை கண் மருத்துவத் தலைமை மருத்துவர் திரு கே. சி. ஆபிரகாம் தலைமையில், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் அன்பழகன் அவர்கள் இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கினார்.

இன்னொரு முகாம், தென் ஆர்க்காடு மாவட்டம் மணவாள நல்லூர். கொளஞ்சியப்பர் கோயிலில் நடைபெற்றது. இந்தச் சிகிச்சை முகாமுக்காகக் கொளஞ்சியப்பர் கோயில் சார்பாக முன்பே ரூபாய் 12 ஆயிரம் நிதி வழங்கப்பட்டது. இது தவிர, உணவு முதலிய வசதிகளுக்காக ரூ. 8 ஆயிரம், கோயிலின் சார்பில் செலவிடப்பட்டது.

இந்த முகாமில், 2,867 ஆண்களுக்கும், 1,733 பெண்களுக்கும் 135 குழந்தைகளுக்கும் இலவசக் கண் சிகிச்சையளிக்கப்பட்டது; 262 ஆண்களுக்கும், 275 பெண்களுக்கும் கண்ணில் புரை அறுவைச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்த முகாமின் நிறைவு விழா சட்ட மன்ற உறுப்பினர் திரு என். செல்வராக தலைமையில் நடைபெற்றது.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர், 510 பேர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கினார்.

அடுத்த முகாம், விழுப்புரம் அரசினர் பயிற்சிப் பள்ளியில் 27—9—1972-ல் தொடங்கியது. சட்ட மன்ற உறுப்பினர் திரு சண்முகம் தலைமையில் இந்த முகாமை மாவட்ட ஆட்சியாளர் தொடங்கி வைத்தார்.

இந்த முகாமில் 2,504 பேர்களுக்கு மருந்திடப்பட்டது. 492 பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. சென்னை, எழும்பூர் கண் மருத்துவ மனை டாக்டர் திரு கே. சி. ஆபிரகாம் தலைமையில் 18 மருத்துவர்கள் இந்த அறுவைச் சிகிச்சைகளை நடத்தினர்.

### புத்தகப் பெருக்கம்

உலகத்திலுள்ள அச்சகங்கள் ஒரு விநாடிக்கு 260 புத்தகங்களும், 4,500 செய்தித்தாள்களும் அச்சடிக்கின்றன. ஒரு முழுப் புத்தகம் ஒவ்வொரு மணித்துளிக்கும் அச்சாகின்றது.

ஓர் ஆண்டில் உலகில் அச்சாகும் புத்தகங்களை, ஒன்றுக்கும் பக்கத்தில் ஒன்றாக அடுக்கினால் உலகத்தை நான்கு முறை சுற்றி அடுக்கவேண்டும்.

வானொலி, தொலைக்காட்சி முதலியவைகளினால் புத்தகம் படிக்கும் பழக்கம் மக்களிடையே இருந்து விலகுமோ என்ற ஐயப்பாட்டுக்கு அவசியமே இல்லை.



# செழித்து வளரும் கூட்டுறவு

மக்கள் ஒன்றுபட்ட முறையில் பொருளாதார வசதிகளைப் பெருக்கிக்கொள்ளப் பெருஞ் சாதனமாக இருப்பது கூட்டுறவு. கூட்டுறவே நாட்டுயர்வு என்பதற்கேற்ப ஊர்தோறும் பள்ளியும் ஊராட்சி மன்றமும் எவ்வாறு அவசியமோ, அதுபோலக் கூட்டுறவுச் சங்கமும் அவசியமான நிறுவனமாகும். இம்மாவட்டத்தில் பெரும்பாலும் எல்லாக் கிராமங்களும் கூட்டுறவு இயக்க வசதியைப் பெற்றுள்ளன. இம்மாவட்டத்தில் தற்போது 1,333 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் சுமார் 400 கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாகக் கடந்த நான்காண்டுகளில் துவக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் கீழ் இயங்கி வரும் சங்கங்களின் வகைகளும் அதன் எண்ணிக்கையும் :—

1 விவசாயக் கடன் கழகங்கள் (வரையறுக்கப்பட்டது)—320.

2 விவசாயக் கடன் கழகங்கள் (வரையறுக்கப்பட்டது)—452.

3 விவசாயக் கடன் கழகம்—1

4 கூட்டுறவுக்கழகம் (விற்பனை)—16.

5 பொதுநல ஆய்வுக் கழகங்கள்—2.

6 ஆரம்ப நிலைக் கூட்டுறவு சங்கங்கள்—9.

7 பிற விவசாய மன்றக் கடன் சங்கங்கள்—65.

8 ஊழியர் போர் கூட்டுறவுச் சங்கங்கள்—49.

9 கைத்தறிப் பொருள்கள் கழகங்கள்—67.

10 கைத்தொழிற் கழகங்கள்—28.

11 வீட்டுவசதிக் கழகங்கள்—8.

12 பிறவகைக் கூட்டுறவுக் கழகங்கள்—193.

இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இம்மாவட்டத்தில் எல்லா மக்களும் நிதி உதவி பெற்று வளமான வாழ்க்கைக்கு வழி செய்து கொள்கின்றனர். அவ்வகையில் இக்கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பெற்ற நிதி உதவி விவரம் :—

| ஆண்டு. | மக்கள் பெற்ற தொகை. ரூ. |
|---|---|
| 1966-67 | 46,785.25 |
| 1967-68 | 82,321.09 |
| 1968-69 | 1,02,218.33 |
| 1969-70 | 22,758.81 |

திருக்கோவலூரில் அமைந்துள்ள கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக மக்கள் பெற்ற கடந்த 4 ஆண்டுகளின் உதவி பெற்ற கடன் தொகை விவரம் :—

| ஆண்டு. | மக்கள் பெற்ற தொகை. ரூ. (இலட்சம்.) |
|---|---|
| 1967-68 | 95.70 |
| 1968-69 | 120.02 |
| 1969-70 | 120.44 |
| 1970-71 | 128.77 |

விழுப்புரம் வட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் மக்கள் பெற்ற உதவித் தொகை விவரம் :—

| ஆண்டு. | மக்கள் பெற்ற தொகை. ரூ. (இலட்சம்) |
|---|---|
| 1967-68 | 95.70 |
| 1968-69 | 120.02 |
| 1969-70 | 120.44 |
| 1970-71 | 128.77 |

இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசினரும் மக்களும் கடன் வழங்கும் எண்ணத்தோடு நிதி உதவி அளிக்கின்றனர். அவ்வகையில் கடந்த நான்காண்டுகளில் இக்கூட்டுறவுச் சங்கங்கள் பெற்ற கடன் தொகை விவரம் :—

| ஆண்டு. | தொகை. ரூ. |
|---|---|
| 1966-67 | 6,000 |
| 1967-68 | 8,700 |
| 1968-69 | 4,900 |
| 1969-70 | 15,300 |

திருக்கோவலூர் வட்டம்

| ஆண்டு. | தொகை. ரூ. |
|---|---|
| 1966-67 | 1,49,760 |
| 1967-68 | .. |
| 1968-69 | 8,34,805 |
| 1969-70 | — |

விழுப்புரம் வட்டம்

| ஆண்டு. | தொகை. ரூ. (இலட்சம்.) |
|---|---|
| 1966-67 | 0.15 |
| 1967-68 | 0.07 |
| 1968-69 | 0.66 |
| 1969-70 | 0.37 |

கடந்த நான்காண்டுகளில் இம்மாவட்டத்தில் நிதி உதவி பெற்ற மக்களின் எண்ணிக்கை வருமாறு :—

| ஆண்டு. | மக்கள் தொகை. |
|---|---|
| 1967-68 | 43,477 |
| 1968-69 | 41,235 |
| 1969-70 | 43,332 |
| 1970-71 | 45,437 |

மற்ற முன்னேற்றச் சாதனைகள்

விழுப்புரம் வட்டத்திலுள்ள விற்பனைச் சங்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள மூலதனத்தில் இவ்வட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கம் 1970-71-ல் 0.15 இலட்சம் கடனாகக் கொடுத்துள்ளது.

இந்த வட்டத்திலுள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்காக மாவட்டக் கூட்டுறவுச் சங்கம் ரூ. 0.45 இலட்சம் 1969-70-ல் கடனாக வழங்கியுள்ளது.






# மின் ஒளி வசதி

கிராமங்களுக்கு மின்சார வசதி அளிப்பதிலும், மின்சக்தியை வேளாண்மைக்குப் பயன்படுத்துவதிலும் தமிழகம் இந்தியாவிலேயே முதலிடமாய் விளங்குகிறது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் விவசாயம் பயன்மிக்க தொழிலாக வளர்வதில் மின்சார வசதி பெருமளவிற்கு உதவியாயிருக்கிறது.

மேட்டூர், நெய்வேலி, திருச்சி ஆகிய மின்சார அமைப்புகளில் இருந்து இம்மாவட்டத்திற்கு மின்சாரம் கிடைக்கிறது. இம் மாவட்டத்தில் மிகுதிச் சக்தி மின்நிலையங்கள், செஞ்சி, விருத்தாசலம், சிதம்பரம், திட்டக்குடி, குறிஞ்சிப்பாடி, அவலூர்பேட்டை ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. மிகுதி கூடுதல் மின்சாரச் சக்தித் துணை நிலையங்கள்விழுப்புரம், பண்ணுருட்டி, தியாகமங்கலம், கடலூர், திண்டிவனம், செயல்பட்டு துர்க்கம் ஆகிய இடங்களில் வருகின்றன.

இம்மாவட்டத்தில் மின்வசதி பெற்ற கிராமங்கள் தற்போது 3,772 ஆகும். 1967–68-ல் 184 கிராமங்கள் மின்வசதி பெற்றன. 1968–69ல் 203 கிராமங்களும், 1969–70-ல் 218 கிராமங்களும் 1970–71-ல் 391 கிராமங்களும் மின்வசதி பெற்றன.

விவசாய வளர்ச்சிக்காக அரசு பம்பு செட்டுகளை விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கிராமங்கள் தோறும் அமைத்துத் தந்து 1971-ஆம் ஆண்டு மார்ச் முடிய 2,763 சிறு தொழிற்சாலைகளுக்கு மின்வசதி செய்து தரப்பட்டுள்ளது. இதில் 1967–68-ல் 245 தொழிற்சாலைகளுக்கும், 1968–69-ல் 312 தொழிற்சாலைகளுக்கும் 1970–71-ல் 332 தொழிற்சாலைகளுக்கும் மின்வசதி செய்து தரப்பட்டது. 1971 மார்ச்சு மாதம் முடிய 28 பெரிய தொழிற்சாலைகளுக்கு மின் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

பின் தங்கிய வகுப்பினரான அரிசன மக்கள் வசிக்கும் காலனிகளுக்கு மின்வசதி தர அரசு பெருமுயற்சி எடுத்து வருகிறது. அவ்வகையில் கடந்த நான்காண்டுகளில் இம் மாவட்டத்தில் மின்வசதி படைத்த அரிசனக் காலனிகளின் எண்ணிக்கையைக் கீழே காணலாம்.

| வட்டங்கள். | 67–68 | 68–69 | 69–70 | 70–71 |
|---|---|---|---|---|
| கடலூர் | .. | 6 | 9 | 43 |
| சிதம்பரம் | .. | 8 | 21 | 61 |
| விருத்தாசலம் | 2 | 1 | 9 | 29 |
| திருக்கோவலூர் | 1 | 6 | 31 | 11 |
| விழுப்புரம் | 16 | 14 | 18 | 31 |
| செஞ்சி | 3 | 3 | 6 | 28 |
| திண்டிவனம் | 7 | 5 | 25 | 24 |
| கள்ளக்குறிச்சி | 1 | 11 | 8 | 34 |
| | 30 | 54 | 127 | 261 |

வியாபாரத்திற்கு 1967–68-ல்120 இலட்சமும் 1968–69-ல் 10·84 இலட்சமும் 1969–70-ல் 71'9 இலட்சமும் 1070–71-ல் 401·1 இலட்சமும் செலவில் மில்வசதி தரப்பட்டிருக்கிறது.

இம்மாவட்டத்திற்கு மின்சாரவசதி செய்துதர அரசு 1967–68-ல் 89·11 இலட்சமும் 1968–69-ல் 122·77 இலட்சமும் 1969–70-ல் 132·10 இலட்சமும் 1970–71-ல் 348·3 இலட்சமும் செலவு செய்திருக்கிறது.

விவசாயத்திற்காகவும் தொழில் வளர்ச்சிக்காகவும் வீடுதோறும் விளக்கெரியவும் அரசு இம் மாவட்டத்தில் வியக்கத்தகும் வகையில் மின்வசதிகளைச் செய்து தந்திருக்கிறது. அவ்வகையில் கடந்த நான்காண்டுகளில் தமிழக அரசு தனிநபர்களுக்கு மின்சார வசதி செய்து தந்துள்ள செயலைக் கீழே அறியலாம்.

| | 67–68 | 68–69 | 69–70 | 70–71 |
|---|---|---|---|---|
| விவசாயம் | 32,667 | 39,439 | 45,131 | 51,146 |
| தொழிற்சாலை | 2,186 | 2,753 | 3,041 | 3,474 |
| பொதுமக்களுக்கு மின்வசதி. | 2,341 | 5,269 | 5,444 | 5,946 |
| வீட்டிற்கு மின் வசதி | 48,465 | 55,674 | 57,380 | 60,596 |

1970-ல் கடலூரில் 100 மெகாவாட் கொண்ட ஒரு மின் நிலையம் புதியதாக அமைக்கப்பட்டது. திண்டிவனம் உதவி மின் நிலையம் 10 மெகாவாட் மின் நிலையம் ஆக மாற்றப்பட்டது. இதனால் இம்மாவட்டத்திலுள்ள மக்களுக்குத் தங்கு தடையின்றி மின் ஆற்றல் கிடைத்து வருகிறது.

1967-68-ல் 24,88,64,495 யூனிட் மின் சக்தி மக்களால் பயன்படுத்தப்பட்டது. அதுவே அரசு இத்துறையில் மேற்கொண்ட பெரும் திட்டங்களால் 3,324.93 இலட்சம் யூனிட்டுகளாக உயர்ந்து மின் சக்தியினை மக்களுக்கு வாரி வழங்குகிறது. இம்மாவட்டத்திற்கு வேண்டிய மின் சக்தியில் 152,27,79,962 யூனிட்டுகள் நெய்வேலியிலிருந்து பெறப்படுகின்றன. அண்டை மாநிலமான புதுவைக்கு உதவி செய்யும் உள்ளத்தோடு நமதரசு 879.5 இலட்சம் யூனிட் மின் சக்தியினை விற்கின்றது

இவ்வாறு அரசு தமிழகத்தினை ஒளி மயமாக்க 1972-க்குள் தமிழகத்திலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின் வசதி அளிக்கச் செயல் பட்டு வருகின்றது. ஏற்கெனவே மின் வசதியில் முக்கிய இடம் வகிக்கும் தென்ஆர்க்காடு மாவட்டம் மேன்மையான இடத்தை 1972-க்குள் பெறும்.

திருக்கோவலூர் வட்டத்தில் கள்ளக்குறிச்சியில் ஒரு கூட்டுறவு அரிசி ஆலையை மாவட்டக் கூட்டுறவுச் சங்கம் நிறுவியுள்ளது. இந்த ஆலை, மணிக்கு 2 மெட்ரிக் டன் அரைக்கும் திறனுடையது. இதற்காக இந்த ஆலையின் மூலதனத்தில் ரூபாய் 10.87 இலட்சம் அரசு உதவியாக அளித்துள்ளது. அத்துடன் 1.11 இலட்சம் தென்ஆர்க்காடு மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து பெறவும் அனுமதி பெற்றுள்ளது. இந்த நிதியிலிருந்து இந்த ஆலைக்குத் தேவையான நெல் கொள்முதல் செய்யப்படுகின்றது.

இத்துடன் கடலை எண்ணெய் எக்ஸ்பெல்லர் கூடம் ஒன்று அமைக்க அரசு இந்தக் கூட்டுறவு ஆலைக்கு மூலதனத்தில் ரூபாய் 70,000 உதவி அளித்துள்ளது.

வீடு கட்டும் திட்டத்தின்கீழ், கடலூர் வட்டத்தில் கிராமங்களில் சீரான வீடுகளை ஏழை மக்களும் கட்டி இன்புற்றுவாழ அரசு உதவி செய்துள்ளது. அவ்வகையில் 1966-67-ல் ரூபாய் 30,000, 1967-68-ல் ரூபாய் 1,940, 1968-69-ல் ரூபாய் 7,060, 1969-70-ல் ரூபாய் 7,840 கடனாக வழங்கப்பட்டன. இதன் மூலம் வந்த கடனை, மக்கள் நல்வழியில் பயன்படுத்தி நல்லமுறையில் வீடுகளைக் கட்டிப் பயனடைந்து வருகின்றனர்.



'சாரம்' என்னும் ஊரில் உள்ள கூட்டுறவு நூற்பு ஆலை.

மேலும் குறைந்த வருமானம் உள்ளோர் வீடு கட்ட வசதியில்லாமல் தவிக்கும் சமயத்தில் உதவும் பொருட்டு இச்சங்கம், இவ்வட்டத்தில் 1967—68-ல் ரூ. 8,000, 1968—69-ல் ரூ. 8,590, 1969—70-ல் ரூ. 11,900, கடனாக வழங்கியுள்ளது. அவ்வகையில் பெற்ற கடனைக் கொண்டு குறைந்த வருமானமுள்ள மக்கள் வீடுகளைக் கடலூரிலும் சுற்றுப்புறங்களிலும் அமைத்துச் சுகாதாரமான வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

திருக்கோவலூர் வட்டத்திலும் விழுப்புரம் வட்டத்திலும், உழவர்களும் தொழில் செய்வோரும் பெற்ற கடன் தொகை விவரம் :—

| ஆண்டு. | மக்கள். | மக்கள் தொகை. | கடன்பெற்ற தொகை, ரூ. |
|---|---|---|---|
| 1967—68 | விவசாயிகள் | 15,454 | 96,94,141 |
| | தொழிலதிபர்கள் | 5,156 | 25,26,878 |
| 1968—69 | விவசாயிகள் | 10,932 | 1,20,50,599 |
| | தொழிலதிபர்கள் | 5,812 | 20,44,127 |
| 1969—70 | விவசாயிகள் | 16,374 | 1,24,11,266 |
| | தொழிலதிபர்கள் | 4,826 | 24,80,720 |

விழுப்புரம் வட்டம் :

| | | 1968–69 | 1969–70 | 1970–71 |
|---|---|---|---|---|
| விவசாயிகள் | | 79.13 | 83.27 | 90.25 |
| கிராம வங்கி உறுப்பினர்கள் | | 40.82 | 32.52 | 37.45 |
| சங்கங்கள் | 0 15 | 0.07 | 0.005 | 0.12 |
| கிராமங்களில் வீடுகட்ட | — | — | 0.201 | 0.101 |

### முன்னாள் இராணுவத்தினர் நலன்

கடலூரிலுள்ள தென்ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு பஸ் போக்குவரத்துச் சங்கம் முன்னாள் இராணுவத்தினரின் நலனுக்காக 1947-ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. தற்போது இதில் 49 உறுப்பினர்கள் இருக்கின்றனர். இச் சங்கத்திற்குச் சொந்தமாகத் தற்போது 10 பேருந்துகள் உள்ளன. இவர்களுக்கு,மூன்றாவது திட்ட காலத்தில் அரசு ரூ. 2,80,000 கடனாக வழங்கியுள்ளது. அதன்பின் அச் சங்கம் எந்தக் கடனையும் அரசிடமிருந்து பெறவில்லை. 1971-ல் மட்டும் இந்தச் சங்கத்திற்குப் போக்குவரத்தின்மூலம் கிடைத்த வருமானம் ரூ. 13.32 இலட்சம் ஆகும். இவர்களுக்கு 1971-ல் கிடைத்த இலாபம் சுமார் ரூ. 84,292 ஆகும்.

### கூட்டுறவு அச்சகம்

கடலூரிலுள்ள தென் ஆர்க்காடு கூட்டுறவு அச்சகம், கூட்டுறவு முறையில் இந்த மாவட்டத்திலேயே முதன் முதலாகத் துவக்கப்பட்ட ஒன்றாகும். தற்போது இச்சங்கத்தில் சுமார் 60 உறுப்பினர்கள் இருக்கின்றனர். இதன் பங்கு மூலதனம் ரூ. 51,840 ஆகும். பங்கு மூலதன உதவியாக ரூ. 10,000 கடனும், மேற்பார்வை அலுவலர் உதவித் தொகையாக ரூ. [illegible]00 கடனும் அரசினரால் வழங்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் கூட்டுறவு முறையில் கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இத்தகைய சங்கங்கள் முக்கியமாக அரிசன மக்களுக்கு உதவுவதற்காகவே அமைக்கப்பட்டுள்ளன. கடன் வழங்கும் சங்கம் என்ற ஒன்றும் இம்மாவட்டத்தில் இயங்கிவருகின்றது. இந்தச் சங்கங்கள் விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதுடன் இரசாயன விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள், நவீன கருவிகள் முதலியவை வழங்குகின்றன. வேளாண்மை உற்பத்தியை அதிகமாக்க முழுநிதித் திட்டம், தீவிரச் சாகுபடித் திட்டம் போன்றவை இம் மாவட்டத்தில் அமலாக்கப்படுகின்றன. கடன் தொகையினைத் துரிதமாக வழங்குவதற்காகத் தென்ஆர்க்காடு கூட்டுறவு மத்திய வங்கியின் கிளைகள், திண்டிவனம், [illegible], உளுந்தூர்ப்பேட்டை, [illegible]குருட்டி, சிதம்பரம், விழுப்புரம் போன்ற இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கடன் வழங்கும் சங்கங்களுக்குப் புத்துயிர் அளிப்பதற்காக 142 கடன் வழங்கும் சங்கங்கள், 22 விவசாய வங்கிகள், 13 கடன் வழங்கும் நிலையங்கள் ஆகியவற்றில் பங்கு மூலதனமாக ரூ. 8.08 இலட்சம் அரசு முதலீடு செய்துள்ளது.

இவை தவிர இம் மாவட்டத்தில் தொழிலாளர் ஒப்பந்தச் சங்கங்கள், பால் வழங்கும் சங்கங்கள், நெசவாளர் ஒன்றியங்கள் போன்ற பல ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன.

# மரமும் கல்லாதும்

மரம் என்று எண்ணி, அருகே சென்று பார்த்தால் அது கல்லாக இருக்கிறது

இது ஓர் அதிசயம்! ஆனால் உண்மை!

ஆமாம்! ஒரு காலத்தில் மரமாக இருந்தவை, கால வெள்ளத்தால் கல்லாக மாறி விட்டன!

இந்த அதிசயத்தைத் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள திருவக்கரை என்ற ஊரில் காணலாம். தென் ஆர்க்காடு மாவட்டத்தின் வழியாகச் செல்லும் தெற்குப் பெருஞ்சாலையில் ( Grand Southern Trunk Road ) இருந்து பாண்டிச்சேரியை நோக்கிக் கிழக்கே செல்லும் சாலையில் சென்று, 9-வது கிலோ மீட்டரில் உள்ள கரசனூர் என்ற இடத்தில் தெற்கே திரும்பி, மேலும் 9 கிலோமீட்டர் தூரம் சென்றால் திருவக்கரையை அடையலாம்.

திருவக்கரைக்குச் செல்லும் வழியிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் கடலூர் வகையைச் சார்ந்த கருங்கல் குன்றுகளும், அதிலிருந்து கல் உடைப்பவர்கள் நீலக் கருங்கற்களை உடைத்துத் தூளாக்குவதையும் காண முடியும். மேலும் செல்லச் செல்ல, நிலத்தோற்றம் மாறிக் கடலூர் மணற்கற்கள் (Cuddalore sand stone ) வகையைச் சார்ந்த புரசல் மண்ணின் பழுப்பு நிறமாகக் காணப்படுகிறது.

திருவக்கரைக் கோயிலின் தென் கிழக்கு மூலையில் நின்று நோக்கினால், நிலக்கடலை வயல்களுக்கு இடையிலே—சங்கராபரணி ஆற்றின் வட கரையிலேயுள்ள ஒரு குன்றின் அடிவாரத்திலே—வெட்டப்பட்ட மரங்களின் பெரிய பெரிய துண்டுகள் கிடப்பதைக் காணலாம்!

[illegible] வீர்களேயானால், விழுந்து கிடக்கும் மரங்களின் காய்ந்த பட்டையும் உங்களின் கண்களுக்குத் தெரிய வரும்!

நீங்கள் அவைகள் கிடக்கும் இடத்தின் அருகே சென்று தொட்டுப் பார்த்தால், அவை மரக்கட்டைகள் அல்ல—கற்களே என்பதை உணருவீர்கள்!

நிலஇயல் வல்லுநர்கள் அக்கற்கள், கடலூர் மணற்கற்கள் வகையைச் சேர்ந்தவை என்று கூறுகிறார்கள்!

அக்கற்கள் 20 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு மரங்களாக இருந்திருக்கக் கூடும் என்றும், காலப் போக்கில் அம்மரங்களின் மேல் மணல் படிந்து படிந்து—மரம் இருந்த அமைப்பிலேயே— கல்லாக மாறியிருக்கக்கூடும் என்றும் நில இயல் வல்லுநர்கள் கருதுகின்றார்கள்.

தற்பொழுது கிடைக்கும் வரலாற்றுச் சாசனங்களிலிருந்து இந்த அதிசயக் கல் மரங்களை 1781-ஆம் ஆண்டில் 'சோனார்டு' ( Sonard ) என்ற நிலஇயல் வல்லுநர் அவர்களே முதன் முதலில் கண்டுபிடித்தார் என்பது தெரிய வருகிறது. அது முதல் அவை ஆராய்ச்சிக்குரிய பொருளாகிவிட்டன.

அக்கல் மரத்தின்மேல் காணப்படும் ஒளிவிடும் தன்மையினால், அக்கற்களில் தங்கம் இருக்கிறது என்ற வதந்தியும் ஒரு காலத்தில் பரவி இருந்தது. அவ்வதந்தி இன்றும் உலவுகிறது. திருமாலால் கொல்லப்பட்ட ஓர் இராட்சதனின் எலும்பே அக்கல் மரங்கள் என்ற அறிவுக்கு ஒவ்வாத ஒரு கதையும் அவ்வூரில் கூறப்படுகிறது.

அவ்வதிசயக் கல் மரங்களைச் சுற்றிலும் நில இயல் துறை பாதுகாப்பான வேலி அமைத்துள்ளது. கால வெள்ளத்தால் கல்லாக மாறிய அம்மரங்கள் எதிர்காலத்தில் பல உண்மைகளை உலகிற்குப் புலப்படுத்தும் என்பது திண்ணம்.



# கால்நடை வளர்ப்பில் கண்டுள்ள முன்னேற்றம்

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஒரு காலத்தில் உயர்ந்த ரகக் கால்நடைகளைக் காண்பது மிகவும் அரிதாக இருந்தது. கால்நடைகளுக்குப் போதிய சத்துள்ள தீவன வசதிகள் இல்லாமல் இருந்தன. ஆனால் இப்போது அந்த நிலைமை மாறி வருகிறது. 1968–69 ஆண்டுக் கணக்குப்படி இம்மாவட்டத்திலுள்ள கால்நடைச் செல்வங்களின் எண்ணிக்கை சுமார் 29,07,758 ஆகும்.

| | | |
|---|---|---|
| மாடுகள் | .. | 11,30,724 |
| எருமைகள் | .. | 1,90,449 |
| செம்மறியாடுகள் | | 3,86,401 |
| வெள்ளாடுகள் | | 4,34,593 |

## கால்நடை மருத்துவ மனை

கால்நடைகளை நோயின் பிடியிலிருந்து காப்பதற்காக இந்த மாவட்டத்தில் கள்ளக்குறிச்சியிலும் மற்றுமோர் இடத்திலும் இரண்டு கால்நடை மருத்துவ மனைகளும், சின்ன சேலம், வாணுபுரம், விருத்தாசலம், கம்மாபுரம், போன்ற 40 இடங்களில் கால்நடை மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 1969–70-ல் வாணுபுரம், கம்மாபுரம், புக்கிரவாரி ஆகிய மூன்று இடங்களில் புதிதாக மருந்தகங்கள் திறக்கப்பட்டன. 1969–70-ல் 55 கால்நடை உதவி நிலையங்கள் இவ்வட்டத்திலுள்ள 9 ஊராட்சி ஒன்றியங்களில் நிறுவப்பட்டன. புவனகிரியை மையமாகக் கொண்ட கால்நடை மருத்துவ மனைகள் 18 அவ்வட்டத்தில் செயல்பட்டு வருகின்றன. மேலும் 1970ல் 62 கால்நடைப் பராமரிப்பு உதவி நிலையங்கள் 9 ஊராட்சி ஒன்றியங்களில் புதிதாகத் துவக்கப்பட்டன. சாரத்தை மையமாகக் கொண்ட மருத்துவ மனைகளில் 8 கால்நடை மருந்தகங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 1968–69-ல் பிரம்மதேசம் என்ற இடத்தில் ஒரு கால்நடை மருந்தகம் திறக்கப்பட்டுள்ளது.

1969–70-ல் தேவனூர், கிளியனூர், மயிலம், வல்லம் ஆகிய நான்கு இடங்களில் புதிதாகக் கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தில் ஒரு நடமாடும் கால்நடை மருத்துவ மனையும் உள்ளது. கடலூரில் உள்ள நோய் ஆராய்ச்சி நிலையம் கால்நடை நோய்கள் பற்றிய ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையத்தில் வெட்கை நோய், சப்பை நோய், அடைப்பான் நோய், கோமாரி நோய் போன்ற கால்நடை நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதுடன் கால்நடை வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப் படுகின்றன. தடுப்பு ஊசிகள் போடப்படுகின்றன.

கோழி வளர்ப்பு, சிதம்பரம் வட்டம், திருநாவலூர், புவனகிரி ஆகிய இடங்களில் கோழிப் பண்ணை விஸ்தரிப்பு நிலையங்களில் நடைபெற்று வருகின்றன. கோழிப்பண்ணை வைத்திருக்கும் குடியானவர்கள் கடனுதவியும் மானிய உதவியும் பெற்று வருகின்றனர். திருக்கோவலூர், கள்ளக்குறிச்சி வட்டத்தில் அம்மையகரத்தைத் தலைமையகமாகக் கொண்ட கோழி வளர்ப்பு நிலையங்கள் 18 தனியார் துறையில் இயங்கி வருகின்றன. அவற்றில் 13 நிலையங்கள் 1967-லிருந்து 1971-க்குள் நிறுவப்பட்டன. திண்டிவனம் வட்டத்தில் உள்ள மேல்மலையனூர் என்ற ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு சேவலும், 4 கோழிக்குஞ்சுகளும் கொண்ட 500 யூனிட்டுகள் 1970–71-ல் புதிதாகத் துவக்கப்பட்டுள்ளது.

புவனகிரியில் உள்ள கோழிப் பண்ணையில் தீவிரக் கோழி வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்துடன் நோய் தீர்க்கும் துறை ஒன்றும் இம்மாவட்டத்தில் இயங்கி வருகிறது.

குறிஞ்சிப்பாடியில் கால்நடை வளர்ப்புத்திட்டம் ஒன்றும் இயங்கி வருகிறது. அத்திட்டத்தின் கீழ் சுமார் 100 குடியானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களிடையே கோழிகளை விநியோகம் செய்கின்றனர். அக்கோழிகள் இடும் முட்டைகளை அவர்கள் அரசினரிடமே கொடுக்க அம்முட்டைகள் இந்த மாவட்டத்திலுள்ள ஏழை மக்களுக்கு இலவசமாக வழங்கப் படுகின்றன.

'கோஸ்வா' திட்டம் என்ற திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 10 முதல் 12 வரை உயர் ரகக் கால்நடைகளைக் கோயில்களுக்கும், பள்ளிகளுக்கும் இலவசமாக அரசு வழங்கியுள்ளது. அவற்றைப் பராமரிக்க அவர்களிடம் சொல்லி அதன் மூலம் பெறும் பாலை ஏழை எளியவர்களுக்கு வழங்கவும் செய்கிறது. மேலும்இத்திட்டத்திற்குச் சுமார் 3,000 ரூபாய் கடன் உதவியும் வழங்கியிருக்கிறது.

சிறு விவசாயிகள் முன்னேற்றத் திட்டத்தின் கீழ் கோழி வளர்ப்புத் திட்டம், மாடு வளர்ப்புத் திட்டம், ஆகியவற்றையும் செயல்படுத்தி அவற்றின் மூலம் சிறு விவசாயிகளுக்கு இத்துறையில் நிறையக் கடன் வழங்கிக் கோழிகள், மாடுகள் வழங்கி உதவி செய்து வருகிறது.

அந்த முறையில் 'புள்ளெம்ஸ்' என்ற வகை 10,000, நூறு சிறு விவசாயிகளுக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்குகின்றனர். அத்தோடு இச்சங்கங்கள் மூலம் கடன் வழங்க 1·20 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2,800 உயர்ந்த ரகப் பசுமாடுகளும், எருமை மாடுகளும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இவற்றில் 1,300 கடனுகவும் ஒரு விவசாயிக்கு இரண்டு மாடுகள் விதம் 1,400 சிறு விவசாயிகளுக்கு வழங்கியிருக்கிறார்கள்.

கோழி வளர்க்கவும், உணவு தயாரிக்கவும் கூடிய ஒரு நிலையத்தைக் கால்நடைத் துறையினர் செம்பியன் மாதேவி என்ற இடத்தில் துவக்குவதற்கு முடிவெடுத்துள்ளனர்.





# தமிழகத்தின் தலைநகருக்குத் தாராளத் தண்ணீர் தரும் வீராணம் திட்டம்

நீர்ப் பற்றுக்குறையினுல் நித்தமும் தத்தளிக்கும் சென்னை வாழ் மக்களுக்கு நீரளித்துத் தாகம் தணிக்கும் தனிப் பெருமையை வீராணம் திட்டத்தின் மூலம் தென் ஆர்க்காடு மாவட்டம் பெற்றிருக்கிறது.

தமிழக அரசால் சென்னைக்கு நீரளிக்கும் இத்திட்டத்தின் மூலம் வீராணம் ஏரியிலிருந்து ஒரு நாளைக்கு 40 மில்லியன் காலன்கள் நீரெடுத்து வழங்க ஒரு மாபெரும் திட்டம் 21.30 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

சிதம்பரம் வட்டத்திலே—சிதம்பரத்திலிருந்து சுமார் 10 கிலோ மீட்டர் தூரத்திலே அமைந்துள்ளது வீராணம் ஏரி; தமிழகத்திலுள்ள மிகப் பெரிய ஏரிகளில் இதுவும் ஒன்று. 25.90 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் இந்த ஏரி அமைந்துள்ளது. இவ்வேரியின் அகலம் 5.64 கிலோ மீட்டர் ஆகும். இந்த ஏரியில் 44.500 ஏக்கர் அளவில் ஒரு மதகு அமைந்துள்ளது. இவ்வீராணம் ஏரி தெற்கே லால்பேட்டையிலிருந்து வடக்கில் சேத்தியாத் தோப்பு வரை 16 கிலோ மீட்டர் நீளம் உள்ளது.

இத்திட்டத்தின் கீழ்த் தினமும் 40 மில்லியன் காலன் நீரெடுத்து அதை வடலூர் அருகேயுள்ள வடக்குத்து என்னுமிடத்திற்குக் குழாய் மூலம் கொண்டுசென்று அங்கு நீரை விஞ்ஞானமுறையில் சுத்தம் செய்து, 66 அங்குலம் விட்டமுள்ள சிமெண்ட் குழாய்களில் 213 கி. மீ. தூரமுள்ள சென்னை மாநகருக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

வீராணம் ஏரியில் நீரெடுப்பதற்காக ஒரு கோபுரம் ஒன்று அமைத்தல், கோபுரம், நீரை இறைப்பதற்குப் பம்பு செட்டும், ஒரு பம்புக் கூடமும் அங்கு அமைக்கப்படுகிறது. இவ்வாறு குழாய்கள் மூலம் கொண்டு வந்த நீரை வடக்குத்துக் கிராமத்தில் தேக்கி வைத்துச் சுத்தப் படுத்துவதற்காக 40 மில்லியன் காலன் கொள்ளளவு கொண்ட பெரிய டாங்கிகளைக் கட்டுவதும், அவ்வாறு சுத்தப்படுத்தப்பட்ட நீரைக் குழாய்கள் மூலம் சென்னைக்கு எடுத்துச் செல்வதற்காகக் குழாய்களையும் பம்பு செட்டுகள் கொண்ட கூடங்களையும் கட்டுவதும் நீரைக் கொண்டு செல்லப் பாலங்கள் மீதும், சாலைகள் மீதும் பாலங்கள் கட்டுவதும் ஆகியவை திட்டங்களாகும்.

சேத்தியாத் தோப்பில் ஏரியிலிருந்து நீரை எடுக்க 34 அடி அகலம் கொண்ட ஒரு நீர்த்தேக்கம் 24 அடி ஆழத்திற்கு 2 முகங்கள் கொண்டுள்ளதாகக் கட்டப்பட்டுள்ளது. இவற்றில் ஆறுமுகங்கள் கொண்ட வாயில் அமைந்துள்ளது. அந்த ஆறு முகவாயில்களின் மூலம் நீர் எடுக்கப்படும். இந்தக் கணவாயில் நீர் வெளியே போகா வண்ணம் பாதுகாக்கப் படும். இக்கணவாய் நீர் மட்டத்தில் இரண்டு அடி ஆழத்திலிருந்து அமைக்கப்பட்டுள்ளதால், எந்த அளவில் இருந்தாலும் நீரை எளிதில் எடுத்து இந்த நீர்த் தொட்டிகளில் தேக்கி வைக்க முடியும். இதன் மூலம் கீழ் அளவில் நீர் இருந்தாலும் நீரை எடுப்பதற்குத்தடையின்றிச் சென்னைக்கு நீர் எப்போதும் அனுப்ப முடியும். அதோடு இத்திட்டம்நன்குசெயல்பட்டால் போதுமான நீர் இருந்தால், மற்றுமொரு நீர்த் தொட்டியையும் உருவாக்கி 40 மில்லியன் காலன்வரை தேக்கி, சென்னைக்குக் கொண்டு செல்ல வழி வகை செய்யப்படும்.

சேத்தியாத் தோப்பிலுள்ள நீர்த்தொட்டியிலிருந்து 450 குதிரைச் சக்தி கொண்ட ஆறு பம்பு செட்டுகள் மூலம் நிமிடத்திற்கு 30,450 காலன் நீர், வெளியேற்றப்பட்டு வடக்குத்துக் கிராமத்திற்குக் கொண்டுவரப் படும்.

தற்போது 40 மில்லியன் காலன் நீர் கொள்ளும் நீர்த் தொட்டி கட்டப்படும் வேலை



நடந்து வருகிறது. அங்கு வீராணத்திலிருந்து கொண்டுவரும் நீரைத் தேக்கி விஞ்ஞான முறையில் சுண்ணாம்பு மற்றும் பல இரசாயன முறையில் சுத்தப்படுத்தி, 10.5 மில்லியன் காலன் கொள்ளளவு கொண்ட 4 நீர்த் தொட்டிகளில் தேக்கிவைத்து, அவற்றை வடிகட்டிக் குளோரின் கலந்து சென்னைக்குக் குழாய்கள் மூலம் எடுத்துச் செல்லப்படும். விஞ்ஞான முறையில் நீரைச் சுத்தம் செய்யும் தொட்டி மணிக்கு 18,27,000 காலன் நீர் கொள்ளும் திறனுடையது.

இவ்வாறு சுத்தம் செய்யப்பட்ட நீரானது 2 மில்லியன் கேலன் கொள்ளும் அளவுடைய நீர்த்தொட்டியில் சேர்ந்து அங்கிருந்து 600 குதிரைச் சக்திகொண்ட 6 குழாய்கள் மூலம் நிமிடத்திற்கு 27,770 காலன் வீதம் வெளியேற்றப்பட்டுச் சென்னைக்குக் கொண்டு செல்லப்படும்.

இத்திட்டத்தின்கீழ் சேத்தியாத் தோப்பி லுள்ள நீர்கொள்ளும் தொட்டி கட்டி முடிக்கப் பட்டுவிட்டது. வடக்குத்தில் நீர் சுத்தம் செய்யப்படும் திட்டமும் மிக வேகமாக நடைபெற்று வருகிறது. நீர் கொண்டு செல்லும் குழாய்கள் தயாரிப்பதற்கான தொழிற்சாலைகள் பண்ணுருட்டியிலும், திருக்கழுக் குன்றத்திலும் நிறுவப்பட்டுப் பணியைத் தொடங்கிவருகின்றன. தனியார் நிலங்களையும் அரசு நிலங்களையும் இத் திட்டத்திற்காக அரசின் ஒத்துழைப்போடும், மக்களின் ஒத்துழைப்போடும் வாங்கிக் குழாய்ப்பாதை வெட்டுவதற்கான வேலை மிக மும்முரமாக நடைபெற்று வருகிறது. இந்தக் குழாய் வெள்ளாறு, கெடிலம், புள்ளியாறு, கிளியாறு, பாலாறு போன்ற பெரிய ஆறுகளைக் கடக்க வேண்டி இருப்பதாலும், பல இடங்களில் தேசிய நெடுஞ்சாலையைக் கடந்துசெல்ல வேண்டியிருப்பதாலும் இவற்றில் எல்லாம் தங்கு தடையின்றி இக்குழாய்கள் செல்ல வேண்டியிருப்பதால் பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

நீரை எப்போதும் தடை யில்லாமல் ஏரியிலிருந்து வெளியேற்றவும், அந்நீரைச் சுத்தப் படுத்திச் சென்னைக்கு எக்காலத்திலும் எடுத்துச் செல்லவும், மின்சாரம் மிக முக்கியத் தேவையாக இருப்பதால் தமிழக மின்சார வாரியத்தினால் 110 கிலோ வாட்ஸ் மின் சக்திகொண்ட இரண்டு உதவி நிலையங்கள் சேத்தியாத் தோப்பிலும், வடக்குத்திலும் நிறுவப்பட்டு வருகின்றன.

இத் திட்டமானது 1973 இறுதிக்குள் முடிந்து சென்னை வாழ் மக்களுக்கு நீரையளித்துத் தாகம் தீர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்திலேயே தமிழக அரசு மேற்கொண்டுள்ள திட்டங்களில் மிகப்பெரிய திட்டமான இது முடிவு பெற்றால் தமிழகத்தின் வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும். ஆண்டுகள் பலவாக அல்லலுறும் சென்னை மக்களுக்கு இத் திட்டம் அமுதசுரபி போல் பயன் கொடுக்கும். அந்தப் பெருமை தென் ஆர்க்காடு மாவட்டத்திற்குக் கிடைக்கும்.


விலைவாசியைக் கட்டுப்படுத்த உதவுங்கள்



அதிக விலை கொடுக்காதீர்கள்

சங்கர் சிமெண்ட் தரம் நிறைந்த சிமெண்ட். ஆனாலும் கூட அதற்கு நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியதில்லை.
அங்கீகாரம் பெற்ற எங்கள் விற்பனையாளர்களிடமிருந்தே வாங்குங்கள். எங்கள் விற்பனையாளர்களிடம் கம்பெனி கொடுத்துள்ள சான்றிதழ் இருக்கிறதா என்று பாருங்கள்.
எங்கள் விற்பனையாளர்களின் கடைகளில் அமுலில் உள்ள நிர்ணய விலை பட்டியல் இருக்கும். அதன்படி நிர்ணய விலையே கொடுத்து வாங்குங்கள்.

SANKAR I C CEMENT

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்
175/1, மவுண்ட் ரோடு, சென்னை 2

ISI மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது.

சங்கர் சிமெண்ட்
தயாரிப்பாளர்கள்

SOSIC/1813TMA




# ஊராட்சி வளர்ச்சிக்கு ஒப்பற்ற பணிகள்

ஒன்பதாம் நூற்றுண்டுக்குச் சற்று முற்பட்ட காலத்திலேயே சோழப் பேரரசர்களின் கீழ் உள்ளாட்சித் துறை பெரும் வளர்ச்சி பெற்றுச் செழித்திருந்த வரலாறு, நம் பண்டைய வரலாருகும். இது நாம் எடுத்துக் கொண்டுள்ள சீரிய பணியில் நம்மை ஊக்குவிக்கும் வரலாற்றின் ஒளிக் கீற்றுகும். இராசராச சோழரின் அரசுப் பகுதிகள் ''8 மண்டலங்களாகவும்'' மண்டலங்கள் ''வளநாடுகளாகவும்'' வள நாடுகள் ''கோட்டங்கள்'' எனவும் பிரிக்கப்பட்டு நிருவகிக்கப்பட்டன.

ஒவ்வொரு கோட்டமும் சுயாட்சி பெற்ற பல ஊர்களைக் கொண்டதாகவும் அமைந்திருந்ததென வரலாறு நமக்கு அறிவிக்கிறது. ஊராட்சி, திறம்பட நடைபெறப் பல குழுக்கள் இயங்கி வந்திருக்கின்றன. இக் குழுக்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்கட்குச் சொத்து, கல்வி போன்ற சில தகுதிகள் வரையறுக்கப்பட்டிருந்ததாகவும் அறிகிறோம். கோட்ட வாரியம், ஏரி வாரியம், கழனி வாரியம், கணக்கு வாரியம், அறநிலை வாரியம் போன்ற பல குழுக்கள் ஊராட்சி நிருவாகத்தினை இயக்கும் உயிர்நாடிகளாக விளங்கியுள்ளன. எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களின் மூலம் நிருவாகம் நடைபெற்று வருவது, நமக்குப் புதிய ஒன்றன்று என்பது வரலாறு உணர்த்தும் உண்மையாகும்.

மக்களாட்சி முறை தழுவிய இவ்வாட்சி முறை 19-ஆம் நூற்றுண்டு வரை நடைமுறையில் இருந்து வந்தது. நாளடைவில் அந்நிய ஆதிக்கத்தின் கீழ் இம்முறை சீர்குலைவு பெற்றது. எனினும் நாட்டு விடுதலைக்குப் பின்பு, இச்சீரிய கொள்கை மறுமலர்ச்சி பெற்றுப் ''பஞ்சாயத்து அரசு'' என்ற தத்துவத்தின் பேரில் புத்துயிர் பெற்றுள்ளது. சிற்றூர்க் குடியாட்சியே நாட்டாட்சியின் அடித்தளம் என்றும், பயிற்சிக் களம் என்றும் ஒத்துக் கொள்பவர்கள் ''பஞ்சாயத்து அரசு'' பயன் பெற்றவையாக அமைதல் வேண்டும் என்பதில் கருத்து வேற்றுமை கொள்வதற்கு இடமில்லை. வழிவழி வந்த அந்த நற்பண்புக்கேற்ப நாம் செயலாற்ற முனைந்ததன் விளைவே இன்றைய ஊராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவை.

இன்று அரசு காட்டும் பேரார்வத்தின் காரணமாக, வளர்ச்சிப் பணிகள் சிறந்து விளங்க, நல்லதொரு சூழ்நிலை ஊர்ப்புறங்களிலே உருவாகியுள்ளது. ஊர்கள் யாவும் ஊக்கமும், ஆக்கமும் பெற்றுத் தமிழகத்தைத் தன்னிகரில்லா மாநிலமாக விளங்கச் செய்யும் மாபெரும் வாய்ப்பு இப்போது ஏற்பட்டுள்ளது. இந்தச் சீர்முகத் திட்டங்கள் உருவாவதில் பேரார்வம் காட்டி, அரசுக்கு உறுதுணையாய் நின்று பாடுபட்டுவரும் உங்களுக்கு என் உளங்கனிந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மக்களுக்காக உள்ள அரசு அல்லது மக்கள் அரசு என்பதனை மக்களுக்குப் புலப்படுத்தி ஆக்கப் பணிகளில் மக்களை ஊக்கம் கொள்ளச் செய்து வருவது, இவ்வரசின் தலையாய பணிகளில் குறிப்பிடத்தகுந்த ஒன்று.

இத் துறையில், நடந்து முடிந்த ஊராட்சித் தேர்தல் புதியதோர் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. 1970-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் 12,651 ஊராட்சிகளுக்கும், 506 பேரூராட்சிகளுக்கும் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. சற்றேறத்தாழ 190 இலட்சம் வாக்காளர்கள் இத் தேர்தலில் வாக்களித்தனர். சட்டப்பேரவை வாக்காளர் பட்டியலைத் தவிர்த்து, இத்தேர்தலுக்கெனவே தனி வாக்காளர் பட்டியல் இல்லங்கள் தோறும் சென்று கணக்கெடுத்து, 1958 ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 20 (2)-ன் கீழ் வெளியிடப்பட்டது. இப்படி ஊராட்சித் தேர்தலுக்காகத் தனி வாக்காளர் பட்டியல் தயாரித்தது, தமிழ்நாடு வரலாற்றிலேயே முதல் நிகழ்ச்சியாகும்.

ஊர் அல்லது நகரிலுள்ள வாக்காளர்கள், முதல் முறையாக, இரகசிய வாக்கெடுப்பு மூலம், ஊராட்சித் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுத்தது, மற்ெறாரு முக்கிய நிகழ்ச்சியாகும். இம்முறை சரிவரச் செயல்படுகிறதா என்பதனை அரசு மாவட்ட ஆட்சியாளர்கள் தரும் கணிப்பைக் கொண்டு ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுத்தல் குறித்துப்பரிசீலிக்கும். ஊராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும், தலைவர்களுக்கும் தேர்தல்கள் ஒரே நேரத்தில் நடைபெற்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் முன்பிருந்த ஊராட்சிகளில் அடங்கிய பகுதிகள் சீர்செய்யப்பட்டுச் சிறிய அடக்கமான பகுதிகள் கொண்ட 64 பேரூராட்சிகள், 224 ஊராட்சிகளாகவும்; திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டத்தில் முன்பிருந்த 6 ஊராட்சிகள், 4 பேரூராட்சிகள், 6 ஊராட்சிகளாகவும் திருத்தியமைக்கப்பட்டன. மாநிலத்தில் மற்றப் பகுதிகளில் உள்ள ஊராட்சி



கப்படும் வகையில் ரூ. 19 கோடி செலவு மதிப்பீட்டில் அரசு ஒரு திட்டத்தைத் தயாரித்துள்ளது. 1972–73-ல் செலவிட ரூ. 3 கோடிக்கு அரசு ஏற்கெனவே அனுமதி வழங்கியுள்ளது. இதற்கென 1973-74-ல் ரூ. 4 கோடி செலவிட வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

உள்ளாட்சி நிறுவனங்களின் செலவுப் பளுவைக் குறைக்கும் முறையில் ஊர்ப்புறங்களில் உள்ள பேருந்து வழிச் சாலைகளின் பராமரிப்பைப் படிப்படியே அரசே ஏற்றுக் கொள்வதென முடிவு செய்யப்பட்டு, இவ்வகையில், சென்ற ஆண்டுகளில், சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 500 மைல் நீளமுள்ள சாலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. 1972-73-ல் சுமார் 1,015 மைல் நீளமுள்ள சாலைகளை ஏற்றுக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சேகரிக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களிலிருந்து, 4,551 சிற்றூர்கள், நிலையான நீர் ஆதாரங்களின்றி உள்ளன என்பதும், சற்றேறத்தாழ 12,858 ஊர்களில் உள்ள நீராதாரங்கள் வலுவூட்டப்பட வேண்டிய நிலையில் உள்ளன என்றும், நோய் பரவும், வட்டாரங்களாக உள்ள சுமார் 2,059 ஊர்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டிய நிலை உள்ளதென்றும், அறிய வருகின்றோம். அரிது முயன்று இக்குறையினைப் போக்கியாக வேண்டுமென்பது இவ்வரசின் தலையாய நோக்கமாகும். மேற்கூறிய குறைகளைக் களைய சுமார் ரூ. 40 கோடி தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இப் பிரச்சினையை விசாலமான எதிர்காலக் கண்ணோட்டத்துடனும் மிகப் பெரிய அளவிலும் சமாளிப்பதற்கான புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குடிநீருக்குத் தொல்லையுறும் பற்றாக்குறை இடங்களுக்கெனக் ''குடிநீர் வழங்கும் சிறப்புத் திட்டம்'' ஒன்றினை உருவாக்கி நிறைவேற்ற வேண்டிய இன்றியமையாமையும் உள்ளது. குடிநீர் பற்றாக்குறை ஊர்களையும், ''காலரா'' நோயினால் பாதிக்கப்படும் ஊர்களையும் கண்டறிந்து, அங்குள்ள மக்களுக்கு நிலையான குடிநீர் வழங்கத் தக்க வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்குத் தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை ஊர்ப் பணிகள்) ஒரு வேலைத் திட்டத்தை உருவாக்கியுள்ளார். அவர் தொகுத்த இவ்வேலைத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இம் மாநிலத்திலுள்ள பாறை நிலப்பகுதிகளிலுள்ள குடிநீர்ப் பற்றாக்குறை ஊர்களிலும் ''காலரா'' நோயினால் பாதிக்கப்படும் ஊர்களிலும், ''யூனிசெப்'' உதவியைக் கொண்டு, ஐந்தாண்டுகளுக் குள்ளாக 8,850 குழாய்க் கிணறுகளை நிறுவுவதற்கு இத் திட்டம் வகை செய்கிறது. துளையிடும் மற்றும் இதரக் கருவிகளை 'யூனிசெப்'' அளித்து உதவும். 8,850 குழாய்க் கிணறுகளை நிறுவி அவைகளைப் பேணுவதற்காகவும் செலவு ரூ. 2.71 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத் திட்டம் 1971–72-ஆம் ஆண்டு முதற்கொண்டு நிறைவேற்றப் பட்டு வருகிறது.

ஒவ்வோர் ஆண்டும் 1,770 குழாய்க் கிணறுகள் நிறுவப்படும். முழுச் செலவையும் மைய அரசே ஏற்கும் வகையில் இந்த நாடு முழுமைக்கும் ஆண்டு ரூ. 20 கோடியும் அடுத்த ஆண்டு ரூ. 40 கோடியும் செலவிடும் வகையில் மைய அரசு ஒரு திட்டத்தைத் தீட்டியுள்ளது. இத் திட்டத்தின் முக்கிய நோக்கம், பாதுக்காக்கப்பட்ட குடிநீர் அளிக்கப்படாத நிலையில் உள்ள பகுதிகளுக்கு உடனடியாக அவ்வசதிகளைச் செய்து தருவது ஆகும்.

இம் மாநிலத்தில் உள்ள 374 வட்டாரங்களிலும் ''திருத்தப்பட்ட குடும்பநல வேலைத் திட்டத்தைப்'' புகுத்தி, நாட்டை எதிர்நோக்கி நிற்கும் இப்பெரும் பிரச்சினையைச் சமாளிக்க, நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் சத்து, சாரம், குறிக்கோள் அனைத்தும் விவசாயப் பெருக்கமும், மக்கள் தொகைக் கட்டுப்பாடும் ஆகும். தமிழ்நாடு இத் துறையில் ஏறத்தாழ முன்னணியில் நிற்கிறது எனக் கூறிக் கொள்வதில் நாம் மகிழ்ச்சி பெறலாம். 1974-க்குள் பிறப்பு விகிதத்தை ஆயிரத்துக்கு 40 என்பதிலிருந்து 25 ஆகக் குறைக்க வேண்டுமென்பது, அரசின் இப்போதையக் கொள்கையாகும். இந்நோக்கம் நிறைவேறிட, ஒன்றியங்களின் ஒத்துழைப்பு மிக மிகத் தேவை.

கிராம வேலை வாய்ப்பு விரைவுத் திட்டம், தமிழகத்தில் 1971–72 முதல் அமலாக்கப்படுகிறது. இது மைய அரசின் முழு உதவி பெறும் திட்டமாகும். தமிழ் நாட்டில் 230 ஊராட்சி ஒன்றியங்கள் இத் திட்டத்தை நிறைவேற்றி வருகின்றன. இத் திட்டம் 1971–72-லிருந்து தொடர்ச்சியாக ஆண்டொன்றுக்கு வட்டாரத்திற்குச் சுமார் $1\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டுடன் செயல்பட்டு வருகின்றது. ஊர்ப் புறங்களில் வேலை வாய்ப்பின்றி இருக்கும் சுமார் 1,000 நபர்களுக்கு வருடமொன்றிற்கு 250 நாட்களுக்காவது வேலை வாய்ப்பளிப்பது, இத் திட்டத்தின் நோக்கம். உழைப்பின் அடிப்படையில் பல்வேறு வேலைகளை எடுத்துச் செய்து, அவ்வேலைகள் நிறைவேற்றப்படுவதன் மூலம் மக்கள் மேலும் பலன் பெறக் கூடிய தன்மையைக் கொண்டது இத் திட்டம். ரூ. 292.76 இலட்சம் செலவீட்டில் இதுவரை 4,397 மீட்டர் புதிய சாலைகள் அமைத்தும், 1,938 கி.மீட்டர் சாலைகள் மேம்பாடு செய்தும், 640 சிறுபாலங்கள், மதகுகள், தாம்போக்கிகளை அமைத்தும், இத் திட்டத்தின் மூலம் கிராமங்கள் பயன் பெற வழி வகுக்கப் பெற்று வருகின்றது.

தீவிர முன்னோடி கிராம வேலை வாய்ப்புத் திட்டம் தென் ஆர்க்காட்டில், மங்களூர் ஊராட்சி ஒன்றியத்திலே இவ்வாண்டிலிருந்து ஆரம்பிக்க வழி வகைகள் செய்யப்பட்டு வருகின்றன. இது மத்திய அரசின் திட்டமேயானாலும், தமிழக அரசு அதை நிறைவேற்றி வெற்றி பெற்றுத் தர முன் வந்திருக்கிறது. இத் திட்டத்தின்கீழ் மங்களூர் வட்டாரத்தில் ஆக்கப் பணிகளுக்குத் தங்களது உழைப்பு நல்க முன்வரும் மக்களுக்காகச் செலவிட, சுமார் 45 இலட்சம் ரூபாயை 1972-73ல் இருந்து மூன்றாண்டு

## முதல்வர்

# அகிலம் போற்றும்

# நேரு

புலவர் தமிழ்ப்பித்தன்

இந்தியத்தாய் நலம்பாட எழுந்த கொண்டல்!
இமயத்தைச் சிறிதாக்கும் வெற்றிக் காட்சி
[illegible] தேனருவி! திசைகள் எட்டும்
[illegible]சரித்த சுடர் இரவி! மாலைத் தென்றல்!
சிந்தித்த கருத்தெல்லாம் விளைச்சல் கொள்ளத்
திரண்டெழுந்த அமுதமழை! வற்றா ஊற்று!
முந்திநின்ற வெள்ளையரை ஆட்டி வைக்க
மூண்டெழுந்த புயற்காற்று-வீரர் நேரு!

பெற்றெடுத்த தந்தைக்குப் பெருமை சேர்த்துப்
பெரும்புவியில் நிலைக்களனாய் வாழ்ந்த செம்மல்!
உற்றெடுத்த காந்தியெனும் தலைவர் போற்ற
ஒளிவீசித் திகழ்ந்திருந்த திறமைத் தொண்டர்!
கற்றறிந்த செல்விக்கு வரலா றெல்லாம்
கனிச்சாற்றுக் கடிதத்தால் விரைந்தே காட்டி
முற்றிநின்ற முழுநிலவு; மூடக் கொள்கை
போக்கிடவே ஆர்த்தெழுந்த நெருப்பின் ஆறு!



பிஞ்சுகளின் நெஞ்சுகளில் எளிதாய் நின்ற
பெருமகனார்-திருமகனார்: வானில் தோன்றும்
செஞ்சுடரை விஞ்சுகின்ற வண்ண மேனி;
செயலெல்லாம் துடிதுடிப்பே கொண்ட தேனீ!
பஞ்சுநுரை வெண்புறாவைப் பறக்க விட்டே
பாரெல்லாம் அமைதிவழி நாடி நின்ற
நெஞ்சமலர்: கனிவான உடையில் நித்தம்
[illegible]மலராய் ரோஜாவை ஏற்ற தோன்றல்!

"ஆலைகளே ஆலயங்கள்" எனவே சொல்லி
ஐந்தாண்டுத் திட்டங்கள் அன்பாய் நல்கி
பாலைகளைச் சோலைகளாய் மாற்றும் தொண்டில்
பரிவுடனே முனைந்தவர்தான்: ஒவ்வோர் நாளும்
வேலையினைப் பதினெட்டு மணிகள் செய்தே
வீங்குபுகழ் பெற்றவர்தான்: புதிதாய்த் தோன்றும்
சாலைகளை அகலமுடன் படைப்ப தென்னும்
தத்துவத்தை-திட்டத்தை இவரே தந்தார்!

நூலகத்தை ஆர்வமுடன் நாடிச் சென்றே
நுண்மைகளை ஆய்ந்தறிந்தே இன்பம் கண்ட
சீலரவர்: வள்ளுவர்தம் குறளின் நீதி
தேர்ந்திருந்த தூயரவர்: என்புச் சாம்பல்
கூளமென எண்ணாமல் "வயல்கள் எல்லாம்
கோலமுறத் தெளித்திடுதல் வேண்டும்" என்றே
ஆழமுடன் உயில்எழுதி வைத்துச் சென்ற
அறிவாளர் நேருவினை அகிலம் போற்றும்!







சுரங்கத்துறை அமைச்சர் திரு மோகன் குமாரமங்கலம் அவர்கள் மேற்கூறிய விழாவில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:

''சேலம் இரும்புத் தொழிற்சாலைத் திட்டம் மிகப் பெரிய திட்டமாகும். மற்ற இடங்களில் உற்பத்தி செய்யப்படும் இரும்புபோல் அல்லாமல், சேலத்தில் உயர்ந்த ரக இரும்பு உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. எனவேதான் திட்டம் தீட்டுவதில் கால தாமதம் ஆகியது. இப்பொழுது சேலம் இரும்புத் தொழிற்சாலைக்கான வேலைகள் வெகு வேகமாக நடந்து வருகின்றன.

சேலம் இரும்புத் தொழிற்சாலைக்கான மின் சக்தியைக் கிலோவாட் மணி நேரத்திற்கு 8.6 காசு என்பதற்குப் பதிலாக 5 காசு என்று குறைந்த விலையில் வழங்கிட ஒப்புக்கொண்டதற்காகத் தமிழ்நாடு அரசுக்கு மத்திய அமைச்சர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

''சேலம் ஸ்டீல் லிமிடெட்'' நிறுவனம் துவக்கப்படுவதன் மூலம், சேலம் இரும்புத்தொழிற்சாலை உருவ அமைப்பைப் பெறுவதால் தமிழ்நாடு அரசு மகிழ்ச்சி அடைகிறது'' என்று இவ்விழாவில் கலந்துகொண்ட தமிழ்நாடு தொழில் அமைச்சர் திரு மாதவன் அவர்கள் குறிப்பிட்டதுடன், ''சேலம் இரும்புத் தொழிற்சாலைத் திட்டத்திற்கு முழு ஒத்துழைப்பையும் நல்கிடத் தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது'' என உறுதிப்படுத்தினர்.

'சேலம் ஸ்டீல் லிமிடெட்' நிறுவனம் துவக்கப்பட்டது, நாலரைக் கோடித் தமிழர்களின் நீண்டகாலக் கனவு பலித்துவிட்ட தன் முதல் பலனாக விளங்குகிறது. சேலம் இரும்புத் தொழிற்சாலை முழு அளவில் உற்பத்தியைத் துவக்கும் போது, நீண்டகாலக் கனவு நனவாகியதன் முழுப் பலனையும் தமிழகம் பெறும் என்பது திண்ணம். அந்த நாள் விரைவில் வந்திட அனைவரும் ஒத்துழைப்பு நல்குவோம்.

—ஆர். எம்.

---




தமிழ்நாட்டில் உள்ள காட்டு வளத்தைப் பெருக்குவதற்காக ரூ. 28 கோடி செலவில் தமிழக அரசு திட்டம் தீட்டி உள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள காடுகளை விரிவு படுத்தி அதன் மூலம் வேலை வாய்ப்பை உருவாக்குவதுபற்றித் தமிழ்நாடு திட்டக்குழு உறுப்பினர் டாக்டர் மால்கம் ஆதிசேசையா தலைமையில் ஒரு குழு பரிசிலனை செய்து ஒரு திட்டம் தீட்டியுள்ளது; அத்திட்டத்தின் விவரம் வருமாறு:

தமிழ்நாட்டில் தொழில்வளம் பெருகுவதற்கு ஏற்பக் காடுகளை விரிவாக்கும் இந்தத் திட்டம் 12 ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றப்படும்.

காடுகளில், காகிதம் தயாரிப்பதற்குப் பயன்படும் மரங்கள், மற்றும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான தேக்குப் போன்ற மரங்களையும் அதிகமாகப் பயிரிட வேண்டும். இப்போது தமிழ்நாட்டில் உள்ள காட்டுப் பகுதிகள் 12 ஆண்டுகளில் மேலும் விரிவுபடுத்தப்படும்.

காடுகளை விரிவுபடுத்துவதன் மூலம் தொழில் வளத்திற்குத் தேவையான மூலப் பொருள்கள் அதிகமாகக் கிடைக்க வாய்ப்பு ஏற்படும். இதன் மூலம் தொழில் வளத்தைப் பெருக்க முடியும்.

இது தவிர தேயிலை, காபி, ரப்பர் போன்ற தோட்டப் பயிர்களை உற்பத்தி செய்வதற்காக ரூ. 3 கோடியே 73 இலட்சம் செலவில் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டிற்கு வரும் இலங்கைத் தமிழர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

சுற்றுலாவின் வளர்ச்சியையொட்டிக் கோவை மாவட்டத்தில் வன விலங்குகளுக்காக 3 சரணாலயங்களை ஏற்படுத்த வேண்டும். இது தவிர முந்திரிப் பழத்தில் இருந்து ஒரு வகை மது தயாரிப்பதற்காகத் தனித் தொழிற்சாலை ஒன்றும், சந்தனத்தைலம் தயாரிப்பதற்காக ஒரு தொழிற்சாலையும் அமைக்க வேண்டும்.

காட்டு வளத்தை எப்படி விரிவுபடுத்துவது, பாதுகாப்பது என்பது பற்றி அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். அதுபற்றி ஆராய்ச்சி நடத்தவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

தொழில் வளத்திற்கு அடிப்படையான இந்தக் காட்டு வளப்பகுதியை, நல்ல முறையில் மேற்பார்வையிடுவதற்காகவும் வளரச் செய்வதற்காகவும் 'தனி நிறுவனம்' ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

இவை தவிரத் தமிழ்நாட்டில் உள்ள 8 முக்கிய அணைக் கட்டுகளில் மண் அரிப்பைத் தடுப்பதற்காக ரூ. 2 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

1972—73-ஆம் ஆண்டில் தொடங்கப்படும் இந்தத் திட்டம் 1983—84-ஆம் ஆண்டில் முடிவடையும். இந்தத் திட்டம் முடிவடைந்தால், இப்போது காடுகளில் இருந்து அரசுக்குக் கிடைக்கும் வருமானத்தைப் போல் இரண்டு மடங்கு வருமானம் கிடைக்கும்.

இதன் மூலம் மொத்தம் ஏறத்தாழ 20 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

---

முறையைப் போல் இங்கும் இருக்க வேண்டுமென்பதற்காக, இந்நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

ஊராட்சி வளர்ச்சி நிருவாகத்தில் வட்டார நிருவாக அமைப்பு முறையைச் சீர் செய்யும் எண்ணத்துடன், இதை நிருவாகச் சீரமைப்புக் குழுவின் ஆய்வுக்கு விட்டிருக்கிறோம்.

கடந்த கால அனுபவங்கள் வருங்காலத் திட்டத்தைச் செம்மையாக்கிட உதவும் எனக் கூறப்படுவதுண்டு. எனவே, நம் எதிர்காலத் திட்டத்தை உருவாக்கும் முன்பு, சென்ற வரை நடந்து வந்துள்ள நெறியைச் சற்றே திரும்பிப் பார்ப்பதில் தவறில்லை என்றே கருதுகிறேன். ஊராட்சி வளர்ச்சி நிருவாகத்தில் இதுவரை செய்யப்பட்டுள்ள நிருவாகச் சீர்திருத்தங்கள் பின்வருமாறு:—

(1) கால்நடை வளர்ச்சித் துறையைத் திருத்தியமைத்து, ஒவ்வொரு வட்டாரத்திலும் துணை நிலையங்களின் எண்ணிக்கையையும், கால்நடை வளர்ச்சி அலுவலர்களின் எண்ணிக்கையையும் உயர்த்தி, ஒரு கட்டுக்கோப்பான பகுதியை அவர்கள் பொறுப்பின் கீழ்க் கொணர்ந்து, இத்துறையில் எல்லாப் பணிகளும் செவ்வனே நடை பெற வழி வகுக்கப் பட்டுள்ளது.

(2) ஊராட்சி வளர்ச்சி நிருவாகம் திறம்பட இயங்க இடமளிக்கும் வகையில் ஊராட்சித் துறையைத் திருத்தியமைக்கும் பணியில் முதற்படியாக 47 கோட்ட ஊராட்சி அலுவலர் பதவிகள் தேர்வு நிலை வட்டார வளர்ச்சி அலுவலர் பதவிகளாக உயர்த்தப் பட்டுள்ளன.

(3) வட்டாரப் பகுதிகளில் கடன்களை வசூலித்தல், ஊராட்சி, மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலங்களை நிருவகித்தல், நில ஆக்கிரமிப்புகள் போன்ற பல்வேறு வேலைகளைக் கவனிக்கத் தனி அலுவலர் பதவிகளை ''வளர்ச்சி அலுவலர் (வருவாய்)'' என்ற பெயரில் தோற்றுவித்து, ஊராட்சி ஒன்றியங்களின் நிதிநிலை உயர வகை செய்யப்பட்டுள்ளது.

(4) 1967-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நீக்கப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரின் இரண்டாம் நேர் உதவியாளர் (ஊராட்சி வளர்ச்சி) பதவிகள் 1970-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளன. பெயரே பணி நிலையை விளக்கும் வகையில், நேர் உதவியாளர் (ஊராட்சி வளர்ச்சி) என்ற பதவியை, ''மாவட்ட வளர்ச்சி அலுவலர்' என்று பெயரிட்டு அழைக்க முடிவு செய்யப்பட்டது.

ஊராட்சி நிருவாகத்தில் பங்கு கொண்டுள்ள உங்களனைவரின் கருத்துக்களையும் அறிந்து, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் நிருவாக அடிப்படையில் என்னென்ன விதமான மாற்றங்களும் முன்னேற்றத் திட்டங்களும் தேவைப்படுகின்றன என்பதை ஆலோசித்துத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள இன்றைய அரசு விரும்புகிறது. இந்தச் சூழ்நிலையில், நாம் இதுவரை செய்துள்ள சில வளர்ச்சிப் பணிகள் பற்றிய விவரங்களைக் குறிப்பாக 1971—72-ஆம் ஆண்டில் ஆற்றியுள்ள பணிகளைச் சுருக்கமாக உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

குறிப்பாக எல்லா ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் வேளாண்மையில் சிறந்த



முன்னேற்றம் காணவும், ஆரம்பக் கல்வித் துறையில் நிறைவு காணவும், குடும்ப நலத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றவும், குடிநீர்த் திட்டம், கிராம வேலை வாய்ப்பு நிறைவுத் திட்டம், இணைப்புச் சாலைகள், சாலை பராமரிப்புத் திட்டங்கள், மற்றும் முன்னேற்றத்திட்டங்கள் அனைத்திலும் முழு வெற்றி காணச் சீருடனும் சிறப்புடனும் செயல்பட்டு வருகின்றன.

மேலும், கால்நடை வளர்ச்சி, மீன் வளம், சமூகக் கல்வி, மகளிர் குழந்தைகள் நலம், கிராமக் கலை, கைத்தொழில் திட்டம், இதுபோன்ற திட்டங்களும், இவையன்றிச் சத்துணவுத் திட்டம், குழந்தைகள் காப்பகம் போன்ற சிறப்புத் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன. இவ்வரசின் முக்கியக் குறிக்கோள், கிராம மக்களுக்கு அடிப்படைத் தேவையான குடிநீர், மின்சார விளக்கு, இணைப்புச் சாலைகள் ஆகியவற்றைக் குறைந்த காலத்தில் அமைத்துக் கொடுப்பதேயாகும். இதை நிறைவேற்றுவதில் ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் முக்கியப் பங்கு ஏற்றுச் செயல்படவேண்டும்.

1971—72-ஆம் ஆண்டு மார்ச்சு முடிய 5,340 மேல் நிலை நீர்த் தொட்டிகள், மற்றும் தானியங்கி அழுத்தத் தொட்டிகள், 69,700 கிணறுகள், 50,150 கிலோ மீட்டர் சாலைகள், 14,030 பள்ளிக்கூடங்கள் முதலியன 374 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ளன.

'' வெள்ளத் தனையது மலர் நீட்டம், மாந்தர்தம் உள்ளத் தனையது உயர்வு'' என்ற பொய்யா மொழியினை இங்கு நினைவுபடுத்தி, இந்நாளில் நாம் பெற்றுள்ள மேற்கூறிய வசதிகளும், வாய்ப்புகளும், எந்நாளும் நிலைத்துப் பெருகிட, நம் சிந்தனையும் செயலும் எம்முறையில் அமைந்திடல் வேண்டும் என்பதை ஆய்ந்தறிந்து, அதற்கேற்ற நெறிமுறைகளின்படி நாம் செயலாற்றி வெற்றி கண்டிட வேண்டும் என்பதே, இந்த நேரத்தில் நான் உங்களுக்கு விடுக்கும் வேண்டுகோள்.

[ஊராட்சி வளர்ச்சி கருத்துரைக் குழுக்களின் ஏழாவது கூட்டம் 1—11—1972 அன்று நடைபெற்ற [illegible]

ருப்பதை மணிமேகலை பார்த்துக் கொண்டே வருகிருள்.

"அண்ணு! இவைகளையெல்லாம் பார்க்கும்போது தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு ஒளிமயமான எதிர்கால மிருக்கிறது என்று சொல்லுங்கள்......" என்ருள் மேகலை.

"நிச்சயமாக. இன்னும் கேள். தொழிலில் நல்ல திறமையும் ஊக்கமும் உள்ளவர்களுக்கு நல்ல வாய்ப்பு அளிக்கும் சிட்கோவின் கொள்கை என்ன தெரியுமா? 'உடைமை உடனே—தொகை பிறகே' என்பதாகும். இயந்திரச் சாதனங்களில் ரூ. 7.5 இலட்சத்திற்கு மேற்படாமல் மூதலீடு உள்ளவைகளே 'சிறு தொழில்கள்' எனப்படும் என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். ஓர் இயந்திரத்துக்கு ரூ. 500-க்குக் குறையாமலும் ஓர் இலட்சத்துக்கு மேற்படாமலும் மதிப்புள்ள உள்நாட்டு இயந்திரங்களை இத்திட்டத்தின் மூலம் பெறமுடியும்" என்று இளங்கோ சொன்னதும் மணிமேகலை, "மாவு அரைக்கும் இயந்திரத்துக்கும் உதவி கிடைக்குமா?" என்று அவசரமாகக் கேட்டாள்.

இளங்கோ சிரித்துக்கொண்டே சொன்னுன்: "மாவு அரைக்கும் இயந்திரத்துக்கு மட்டுமல்ல, நெல் அரைக்கும் இயந்திரம், எண்ணெய் பிழியும் இயந்திரம், காப்பிக் கொட்டை அரைக்கும் இயந்திரம் ஆகியவற்றிற்கும் உதவி கிடைக்காது"

"உதவித் தொகையை எப்படிக் கட்ட வேண்டும் அண்ணு?"

"தவணை முறைத் திட்டத்தின்கீழ் விண்ணப்பம் செய்வோர் உதவி கோரும் தொகையின் மதிப்பு ரூ. 25,000-க்கு உட்பட்டிருந்தால், உதவி வழங்கப்படும்' தொகையில் 5 சதவீதத்தையும், உதவி கோரும் தொகையின் மதிப்பு ரூ. 25,000க்கு மேற்பட்டிருந்தால் உதவி வழங்கும் தொகையில் 10 சதவீதத்தையும் தங்கள் பங்குப் பணமாகக் கட்ட வேண்டும்.

"அப்படியாளுல், மிகுதிப் பணத்தைக் கட்டவேண்டாமா?"

"அப்படிக் கேள் மேகலை! மிகுதிப் பணத்தை சிட்கோவே ஏற்றுக் கொள்ளும். இயந்திரங்கள் வந்து சேர்ந்த ஓராண்டிலிருந்து ஒவ்வோர் அரையாண்டிலும் தவணை முறையில் இந்தக் கடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். தவணைத் தொகை முழுமையும் சேர்ந்த பிறகு இயந்திரத்தினுடைய முழு உரிமையும் விண்ணப்பதாரருக்கு மாற்றப்படும். தனி நிறுவனமொன்று ஓர் இலட்சம் ரூபாய்வரை இதற்காகக் கடன் வாங்க வாய்ப்புண்டு."

"சிட்கோவின் சிறந்த பணிகளை என்னுல் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. தொழிற்கூடங்களைக் கட்டவும், இயந்திரங்களை வாங்கவும், நடைமுறைத் தேவைகளுக்காகக் கடன்களைப் பெறவும் இது உறுதுணையாக இருப்பதை அறிந்து மிகவும் மகிழ்கிறேன், அண்ணு!"

"அம்பத்தூரிலுள்ள சைக்கிள் தொழிற்சாலையைப் பற்றித்தான் நீ கேள்விப் பட்டிருப்பாயே! இந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான உபகரணங்களைத் தயாரிப்பதற்காக இதே இடத்தில் பத்து ஏக்கரில் 25 தொழிற்கூடங்களும் கட்டப்பட்டிருக்கின்றன."







# கனவு பலித்தது!

நீண்டகாலக் கனவு பலித்ததற்காக 16-9-1970 அன்று தமிழகமே மகிழ்ச்சியில் திளைத்திருந்தது!

ஆம்! அன்றுதான் மாண்புமிகு இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணுநிதி அவர்கள் தலைமையில் சேலம் இரும்புத் தொழிற்சாலைத் திட்டத்தைத் துவக்கிவைத்து நாலரைக் கோடி தமிழர்களின் நீண்ட காலக் கனவை நனவாக்கிஞர்!

கனவு பலித்தது! கனவு பலித்ததென்ற களிப்பில் கவலையற்றிருந்த தமிழக மக்களின் உள்ளத்திலே—"சேலம் இரும்புத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் நிலைக்குமா? எப்பொழுது துவங்கப்படும்? சேலம் இரும்புத் தொழிற்சாலையில் உற்பத்தி எப்பொழுது துவக்கப்படும்?" என்பது போன்ற ஐயத்திற்குரிய சில விஞக்களைச் சிலர் அடிக்கடி எழுப்பி வந்ததன் காரணமாகக் கனவு பலித்தும், பலன் கிட்டவில்லையே என்ற ஏக்கம் இருந்து வந்தது!

இந்த ஏக்கம் 13—6—1972 அன்று சேலம் இரும்புத்தொழிற்சாலைக்கான இடத்தைத் தயார்ப்படுத்தும் வேலை துவக்கப்பட்டதாலும், வேலை தொடர்ந்து முன்னேற்றமான நிலையில் நடைபெற்று வருவதாலும்—படிப்படியாகக் குறைந்து வருகிறது.

சேலம் இரும்புத் தொழிற்சாலை பற்றி அடிக்கடி எழுப்பப்படும் ஐய விஞக்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் 25—10—1972 அன்று, சேலம் இரும்புத் தொழிற்சாலையை நடத்துவதற்காக, 'சேலம் ஸ்டீல் லிமிடெட்' (Salem Steel Ltd.) என்ற பெயரில் தனி நிறுவனம் (கம்பெனி) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதஞல் ஒளிமயமான எதிர்காலம் விரைவில் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கவிருக்கின்றது என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

'சேலம் ஸ்டீல் லிமிடெட்' என்ற நிறுவனம் இந்தியாவில், பொதுத் துறையில் அமைக்கப்பட்டுள்ள 3-வது இரும்புத் தொழிற்சாலை நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ரூபாய் 340 கோடி செலவில் ஆண்டுதோறும் 70,000 மெட்ரிக் டன் 'எவர் சில்வர்' இரும்பும் (Stainless steel) 75,000 மெட்ரிக் டன் மின்சார இரும்பும் (Eletrical Steel) மெட்ரிக் டன் 50,000 சிறப்பு வகை இரும்பும் உற்பத்தி செய்வதற்கான வகையில் சேலம் இரும்புத் தொழிற்சாலையை அமைக்க 'சேலம் ஸ்டீல் லிமிடெட்' விரைந்து செயல்படும்.

சேலம் இரும்புத் தொழிற்சாலைக்காக இதுவரை 1,000 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. இதஞல் இடம் பெயர்ந்த 1,000 குடும்பங்களுக்கு நட்ட ஈடு வழங்குவதற்காக 75 இலட்சம் ரூபாயை இந்திய அரசு தமிழ்நாடு அரசிடம் ஒப்படைத்துள்ளது. இடம் பெயர்ந்த 1,000 குடும்பங்களுக்கும் மாற்று இடம் கொடுக்கப்பட்டுள்ளது. மாற்று இடத்திற்கு அனுப்பப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொருவருக்காவது வேலை கொடுக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

'சேலம் ஸ்டீல் லிமிடெட்' நிறுவனத்தின் தலைமை அலுவலகம் சேலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இப் புதிய நிறுவனம் துவக்கத்தில் 100 கோடி ரூபாய் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனத்துடன் (Authorised Capital) இயங்கும். இந்நிறுவனம் 1956-ஆம் ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு பதிவு செய்வதற்கான பத்திரத்தை, கம்பெனி சட்ட வாரியத்தின் மண்டல இயக்குநர் திரு எஸ். சி. பத்ஞ அவர்கள், 'சேலம் ஸ்டீல் லிமிடெட்' நிறுவனத்தின் நிருவாக இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ள திரு வி. சுப்ரமணியம் அவர்களிடம் 25—10—1972 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் ஒப்படைத்தார்.

"சேலம் இரும்புத் தொழிற்சாலை, இன்னும் 3 ஆண்டுக் காலத்திற்குள் உற்பத்தியைத் துவக்கும். சேலம் இரும்புத் தொழிற்சாலை முழு அளவில் உற்பத்தி செய்ய இன்னும் 6 ஆண்டுக் காலம் ஆகும்" என்று இந்திய அரசின் எஃகு மற்றும்






# சிறப்பாக வளரும் சிறுதொழில்!

"அன்றைக்குத் திருவள்ளுருக்கு இரயிலில் போய்க்கொண்டிருந்த போது, அது என்ன அண்ணு என்று கேட்டாயே அதுதான் இந்தத் தொழிற் கூடம்" என்று அந்தத் தொழிற்கூடத்தைச் சுட்டிக் காட்டினுன் இளங்கோ. அவன் தங்கை மணிமேகலை அந்தப் பரந்த இடத்தையும், அங்கே உருவாகியுள்ள தொழிற் கூடங்களையும் பார்த்தான்.

கொரட்டூருக்கும், அம்பத்தூருக்கும் இடையில் உள்ள அந்த 'அம்பத்தூர் தொழிற் பேட்டை'யைச் சுற்றிப் பார்க்க இருவரும் அதனுள் நுழைந்தனர்.

"அண்ணு! இந்தத் தொழிற் கூடங்களையெல்லாம் நிறுவியது யார் அண்ணு?"

"தமிழ்நாடு அரசுதான் மேகலை. 'சிட்கோ' என்னும் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தார்தான் 36,000 ஏக்கர் பரப்பளவுள்ள இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்துப் பல தொழிற் கூடங்களை உருவாக்கி வருகிருர்கள்."

"இதோ தெரிகிறதே இவையனைத்தும் தொழிற்கூடங்கள் தாணு?"

"ஆமாம். இப்போது பதினெழு தொழிற் கூடங்கள் கட்டப் பட்டு, அவற்றில் தொழில்கள் நடந்து வருகின்றன. இவையனைத்தும் ஐந்தே மாதங்களில் கட்டி முடிக்கப் பட்டவை. இன்னும் 25 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன" என்று எதிரே உருவாக்கப்பட்டு வரும் கட்டட வேலைகளைக் காட்டினுன் இளங்கோ.

"இங்கே என்னென்ன தொழில்கள் நடைபெறுகின்றன அண்ணு?"

"பல்வேறு தொழில்கள், இங்கே பாங்காக வளருகின்றன. அவற்றுள் சிலவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். துத்தநாக சல்பேட், ரப்பர் பொருள்கள், வேளாண்மைக் கருவிகள், அலுமினியப் பொருள்கள், பாலித்தீன்—பிளாஸ்டிக் சாமான்கள், இரும்புச் சாமான்கள் போன்ற பல தொழிற்கூடங்கள் தற்போது இயங்கி வருகின்றன" என்று சொன்ன இளங்கோ துத்தநாக சல்பேட் என்னும் உரம் தயாரிக்கும் தொழிற் கூடத்திற்குள் மணிமேகலையை அழைத்துச் சென்ருன். தயாராகும் இந்த உரமானது தேயிலை, காப்பிச் செடிகளுக்குச் சிறந்த உரமாகும்.

"இந்தத் தொழிற் கூடங்களெல்லாம் தொழில் நடத்துபவர்களுக்குச் சொந்தமானவையா?"

"ஒரு காலத்தில் இந்தக் கூடம் அவர்களுக்கே சொந்தமாகிவிடும். தவணைமுறைத் திட்டப்படி இந்தத் தொழிற் கூடங்கள் தரப்படுகின்றன. தொழிலில் ஆர்வமும் திறமையும் இருந்து, போதிய வசதியில்லாமல் திண்டாடுபவர்களுக்கு நல்ல வாய்ப்புத் தருகிறது இந்தச் சீரிய திட்டம். இதற்காகத் தமிழக அரசு எல்லா வகையிலும் உதவி செய்து வருகிறது."

"எப்படி அண்ணு?"

"மூலப் பொருள்களை வழங்குதல், தொழிற் கூடங்களை அமைத்தல், இயந்திரங்களை வாங்கித் தருதல் போன்ற பல உதவிகளைச் செய்கிறது, அரசு".

"இயந்திரங்கள் கூடவா தருகிருர்கள்? பரவாயில்லையே!"

"ஆமாம். இதுவரை ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள இயந்திரங்களை இந்த நிறுவனம் தவணை முறையில் வழங்கி, வளரும் தொழில்களுக்கு வழி வகை செய்திருக்கிறது. மூலப் பொருள்களை வழங்குவதற்காகச் சென்னை, கோவை, மதுரை ஆகிய இடங்களில் கிடங்குகளும் உள்ளன."

"அப்படியாளுல் இந்தத் திட்டத்திற்குப் பெருமளவு வரவேற்பு இருக்குமே?"

"ஆமாம், மேகலை. பல தொழில்களில் முனைந்திருப்பவர்கள் இந்தத் தவணை முறைத் தொழிற் கூடங்களைப் பெற ஆர்வமுடன் முன்வருகிருர்கள். அவர்களுக்காக 'சிட்கோ' மிகச் சீரிய முறையில் மேலும் பல தொழிற் கூடங்களைக் கட்டும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது." என்று சொல்லிக் கொண்டே இளங்கோ, உலோகம் வெட்டும் கருவிகள் உருவாக்கும் தொழிற் கூடத்துள் நுழைந்தான். அங்கே இளைஞர்கள் பலர் சுறுசுறுப்பாகத் தம் பணிகளில் ஈடுபட்டிருப்பதைக் கண்டனர். அவர்கள் உருவாக்கிய கருவிகள் ஒரு பக்கம் அடுக்கி வைக்கப்பட்டு

| | | |
|---|---|---|
| பால் உற்பத்தி, பண்ணை வளர்ச்சி ஆணையர், சென்னை-51. | 850 | 00 |
| சேலம் மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர். | 100 | 00 |
| ஷை | 100 | 00 |
| மேட்டூர் உதவிப்பதிவாளர், | 200 | 00 |
| அறந்தாங்கி ஊராட்சி ஒன்றிய ஆணையர். | 377 | 00 |
| திரு டி. பாலசுந்தரம், மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம். | 50 | 00 |
| ஷை | 450 | 00 |
| திரு ஓ. எம். எஸ். காசிம் முகம்மது மரக்காயர், மரக்காயர்பட்டினம். | 101 | 00 |
| திரு பெரி. விசுவநாதன், அரசினர் உயர்நிலைப்பள்ளி, இராமநாதபுரம். | 10 | 00 |
| தாலூகா அலுவலக ஊழியர்கள், இராமநாதபுரம். | 51 | 00 |
| திரு வி. காஞ்சி நகரத் தி.மு.க. இராமநாதபுரம். | 11 | 00 |
| அரசினர் மருத்துவமனை, செவிலியர், இராமநாதபுரம். | 51 | 00 |
| திரு எம். ராஜகோபாலன், ராஜகம்பீரம். | 5 | 00 |
| திருவாத ஊரைச் சேர்ந்த ஒருவர். | 10 | 00 |
| திரு எல். கிருஷ்ணன், தலைவர், பேங்க் ஆப் மதுரை லிமிடெட். | 2,500 | 00 |
| தமிழ்நாடு அரசினர் கல்லூரி ஆசிரியர்கள் சங்கம். | 1,000 | 00 |
| சேலம் மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர். | 1,500 | 00 |
| செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியாளர். | 225 | 00 |
| உதவிப்பதிவாளர், மேட்டூர் | 225 | 00 |
| சேலம் மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர். | 300 | 00 |
| ஷை | 200 | 00 |
| ஷை | 2,525 | 00 |
| உதவிப்பதிவாளர், மேட்டூர் | 1,350 | 00 |
| சேலம் மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர். | 800 | 00 |
| திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை லிமிடெட், நாசரத். | 1,500 | 00 |
| உளுந்தூர்ப்பேட்டை கூட்டுறவு வீடு கட்டும் சங்கம், லிமிடெட். | 100 | 00 |
| கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலைகள் லிமிடெட், ஆருள்வாய்மொழி. | 1,500 | 00 |
| துணைப் பதிவாளர், பாளையங்கோட்டை. | 30 | 00 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர். | 4,100 | 00 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், இராமநாதபுரம். | 45,152 | 50 |
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம். | 1,575 | 00 |
| திரு ஜே. கே. சோமசுந்தரம், ஐ.ஏ.எஸ்., பத்திரப் பதிவுத் தலைமை அலுவலர், சென்னை. | 160 | 00 |
| திரு வி. இராமலிங்கம், உதவிப் பதிவாளர், மேட்டூர். | 275 | 00 |
| சேலம் மாவட்டக் கூட்டுறவுக் கணக்குத் தணிக்கை அலுவர். | 850 | 00 |
| ஷை | 150 | 00 |
| மேட்டூர் அணை மீன்பிடிப்போர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிமிடெட், மேட்டூர். | 250 | 00 |
| மேட்டூர் உதவிப் பதிவாளர், சேலம். | 125 | 00 |
| நிர்வாக இயக்குநர், ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், லிமிடெட், வடபுதுப்பேட்டை. | 5,000 | 00 |
| நிருவாக இயக்குநர், தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பு ஆலைகள் லிமிடெட், பேட்டை திருநெல்வேலி. | 2,500 | 00 |
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம்-1. | 125 | 00 |
| தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர்-1. | 3,500 | 00 |
| உதவிப் பதிவாளர், மேட்டூர், சேலம். | 1,187 | 00 |
| கூட்டுறவு உதவிப் பதிவாளர், செங்கற்பட்டு. | 50 | 00 |
| தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர். | 50 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கீழ்வேளூர், தஞ்சாவூர். | 65 | 00 |
| தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர். | 19,760 | 00 |
| மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை. | 1,00,124 | 00 |
| சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர். | 350 | 00 |
| மாவட்டக் கூட்டுறவு தணிக்கை அலுவலர், சேலம். | 1,375 | 00 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், நாகர்கோவில். | 6,592 | 50 |
| மாவட்டக் கூட்டுறவு தணிக்கை அலுவலர், சேலம்-1. | 50 | 00 |
| செயலாளர், நீலகிரி கூட்டுறவு அச்சகம் லிமிடெட், உதகமண்டலம். | 50 | 00 |
| சேலம் மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர். | 825 | 00 |
| சேலம் மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர். | 450 | 00 |
| மாயூரம், தர்மபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கல்லூரி, ஆசிரியைகளும், மாணவியர்களுமாக. | 564 | 00 |
| திரு பி. சம்பந்தம், ஊராட்சித் தலைவர், தலைச்சங்காடு மாயூரம். | 25 | 00 |
| குத்தாலம் பொதுக்கூட்டத்தில் கொடுக்கப்பட்டது. | 10 | 00 |
| மாணவர்கள், ஆசிரியர்கள், கூட்டுறவுக் கடைகள் ஜி.எச். எஸ். குத்தாலம், தஞ்சை. | 10 | 00 |
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம். | 600 | 00 |
| வருவாய்த்துறை வாரிய அலுவலர், மணமகிழ் மன்றம், சென்னை-5. | 100 | 00 |
| | 38,49,558 | 84 |

" நல்ல திட்டம் அண்ணா இது! இதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்குமல்லவா? "

" ஆமாம் மேகலை; இவை மட்டுமா? இன்னொரு திட்டமும் உள்ளது. இரசாயனம், மற்றும் பல தொழிலுக்காக 40 ஏக்கரில் ஒரு தொழிற்கூடமும் இங்கே கட்டப் போகிறார்கள்! "

" இம்மாதிரியான தொழிற்கூடங்கள் இந்தியாவில் வேறு எந்தெந்த மாநிலத்தில் அண்ணா இருக்கின்றன? "

" இந்தியாவில் வேறு எங்குமே இல்லை மேகலை! ஏன், ஆசியாவிலேயே தமிழ் நாட்டில் மட்டும்தான் தவணைமுறைத் தொழிற்கூடங்கள் உருவாக்கப் பட்டு வருகின்றன. இந்த வகையில் அம்பத்தூர் அனைத் திந்தியாவுக்கும் வழிகாட்டியாக விளங்குகிறது! ".

" இத்தனை சிறப்புக்கும், புகழுக்கும் உரிய இந்தத் தொழிற்பேட்டை கிண்டியில் உள்ளதைவிடப் பெரியதா? "

" ஆமாம்! ".

" தமிழ்நாட்டில் மற்ற மாவட்டங்களிலும் தவணை முறைத் தொழிற்கூடங்கள் அமைக்கப்படுமா? "

" இப்போது அமைக்கப்பட்டு வருகின்றனவே! ஊட்டியில் 12 ஏக்கரிலும், மதுரையில் 10 ஏக்கரிலும், திருவாரூரில் 10 ஏக்கரிலும், ராணிப்பேட்டையில் 20 ஏக்கரிலும், கோவையில் 30 ஏக்கரிலும் தொழிற்கூடங்கள் அமைக்கும் வேலை தீவிரமாக நடைபெற்று வருகின்றது. இவற்றில் ஊட்டி, கோவையில் அமைக்கப்பட்டுவரும் தொழிற்கூடங்கள் மார்ச்சுத் திங்களில் தொடங்கிவிடும். இப்படி ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தவணைமுறைத் தொழிற்கூடங்களை நிறுவும் எண்ணமும் அரசுக்கு இருக்கிறது " என்று சொல்லிக்கொண்டே இளங்கோ ஓரிடத்தில் வந்து அமர்ந்தான். அவன் அருகே மணிமேகலை வந்து உட்கார்ந்து கொண்டாள். தாம் கொண்டுவந்திருந்த பையிலிருந்து பிளாஸ்க்கையும் பிஸ்கட்டையும் எடுத்தான் இளங்கோ. சிற்றுண்டி முடிந்தது. மீண்டும் அவர்கள் தங்கள் பேச்சைத் தொடர்ந்தனர் :

" ஆமாம், இங்கு ஓட்டல் எதுவும் இல்லையா, அண்ணா? " மணிமேகலை கேட்டாள்.

" இப்போதைக்கு இங்கு இல்லை. ஆனால் கூடிய சீக்கிரத்தில் இங்கு ஓட்டல் என்ன, அஞ்சல் நிலையம், வங்கி, சொற்பொழிவு மண்டபம் போன்ற எல்லா வசதிகளும் ஏற்படுத்தப்படவிருக்கின்றன " என்றான் இளங்கோ.

" இங்கே பணிபுரிவர்கள் போக்குவரத்து வசதிக்கு என்ன செய்வார்கள்? "

" எல்லாம் போகப் போகச் சரியாகிவிடும். இந்த இடத்தில் அதாவது கொரட்டூருக்கும் அம்பத்தூருக்கும் இடையில் ஒரு இரயில் நிலையம்கூட அமைக்கப் படலாம். அப்போது எல்லாப் பகுதியிலிருந்தும் தொழிலாளர்கள் வர நல்ல வசதியாகிவிடும்".

" ஆமாம், அண்ணா! இன்னும் என்னென்ன வசதிகளை 'சிட்கோ' செய்கிறது? "

" தொழில் நடத்துகிறவர்களுக்குச் சொந்தமாக நிலம் இருந்தால், அந்த நிலத்தில் தொழிற்கூடம் கட்டிக் கொடுக்கவும் சிட்கோ முன்வந்துள்ளது. இதற்காக ரூ. 24 இலட்சம் வழங்கிட இது ஒப்புதல் அளித்துள்ளது. சிட்கோ தொடங்கிய 23 மாதங்களில் ரூ. 650 இலட்சம் மதிப்புள்ள இரும்பு உருக்குகளையும், ரூ. 2.2 இலட்சம் மதிப்புள்ள காஸ்டிக் சோடா, துத்தநாகம் போன்றவைகளையும் வழங்கியுள்ளது. "

" எல்லாம் சரி அண்ணா! இவ்வளவு விஷயங்களையும் சொன்ன நீங்கள் ஏன் சும்மா இருக்கின்றீர்கள்? உங்களுக்குத்தான் அச்சகச் சம்பந்தமான வேலைகளில் நல்ல அனுபவம் இருக்கிறதே! நீங்களும் ஒரு தொழிற்கூடத்தை வாங்கக் கூடாதா? ". என்றாள் மணிமேகலை சிரித்துக் கொண்டே.

" நிச்சயம் நான் வாங்கத்தான் போகிறேன். அதற்காக விண்ணப்பம் கூடச் செய்திருக்கிறேன். விரைவில் நான் இங்கே ஒரு தொழிற்கூடத்தை வாங்காவிட்டால் பாரேன்! " என்றான் உறுதியாக இளங்கோ. இருவரும், தொழிற்பேட்டையைச் சுற்றிப்பார்க்க அனுமதி வழங்கிய அதிகாரிக்கு நன்றி தெரிவித்துவிட்டு மகிழ்வுடன் வெளியே வந்தனர்.

—பி.வி.ஜி.

## மேம்பாலங்களும் சுரங்கப் பாதைகளும்



*தமிழகத்தில் 1967-ஆம் ஆண்டுவரையில் திட்டங்கள் வாயிலாக மேற்கொள்ளப்பட்டிருந்த பால வேலைகள் [illegible] 50 ஆகும். அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை [illegible] இலட்சம்.

1967-க்குப் பிறகு 72 வரையுள்ள 5 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பால வேலைகள், ஐந்து ஆண்டு காலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளவை 72. அவற்றிற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் [illegible] இலட்சம்.

*சுரங்கப் பாதைகளும் மேம்பாலங்களுமாக 20 ஆண்டு காலத்தில் அமைக்கப்பட்டவை 11.

கடந்த 5 ஆண்டுகளில் அமைக்கப்பட்டுள்ள மேம்பாலங்களும் சுரங்கப் பாதைகளும் 12.

1972-லிருந்து 74 வரையில் உத்தேசிக்கப்பட்டுள்ள பாலங்கள் மட்டும் 10. மேம்பாலங்களும் சுரங்கப் பாதைகளும் மொத்தம் 26.



தெரிந்தது. உள்ளுக் குள்ளே நகர்ந்து கொண்டாள்.

படியேறி வந்த வேலாயுதம், நின்று, பொதுவாகச் சுட்டெரிப்பது போலவும் ஒரு பார்வையைப் பார்த்து விட்டு, மெத்தைப் படிகளை நோக்கிச் சென்றார்.

* * *

இதுவரையிலும் கீழே பின் கட்டில் உள்ள மைய அறையில் தான் படுப்பார். சில நாட்களாகவே, பெரிய கட்டில் மாடியேறி இங்கே வந்து விட்டது. இப்போது, மனைவி-மக்களையெல்லாம் விட்டு விலகிய தனிமை தேவையாகிவிட்டது. காலையில் ஒரு பொழுதைத் தவிரக் கீழே இறங்கிப் போவதே இல்லையாமே!

மெதுவாகக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே எட்டிப்பார்த்தார் வேலாயுதம்.

கட்டிலிலே மேல் உத்திரத்தைப் பார்த்தவாறு சாய்ந்திருந்தார் குருபாதம். வலது கை நெற்றியின் மீது கிடந்தது.

வேலாயுதம் உள்ளே நுழைந்தார்.

குருபாதம் படுத்தவாறே தலையைத் திருப்பிப் பார்த்து, ''வா உட்காரு'' என்றார்.

வேலாயுதம், பக்கத்திலிருந்த நாற்காலியைக் கட்டிலோரமாக இழுத்துப்போட்டுஉட்கார்ந்தார்.

''ரெண்டு நாளா நீ வரவே இல்லையே!''

''வராம என்ன? நடக்கிறதை நினைக்கறப்ப எனக்கே பெரிய வேதனையா இருக்கு. இந்த வழக்கு ஒரு பக்கம் நிக்கிது. இப்படியொரு சிக்கல் இருக்கும் போதே அவனோட திமிர் அடங்கலையே! நானும் முத்தையா மாமனுமா சேர்ந்துதான் பொன்னையாவை அடிச்சதா சொல்றானும். அதுக்குச் சாட்சிகள் தேடிக்கிட்டிருக்கான்'' என்றார் வேலாயுதம் தணிந்த குரலில்.

''ஆமா—எல்லாரையும் ஆளணும்னுதானே அவன் பிறவி எடுத்திருக்கான்.'' என்று ஆத்திரத்தோடு சொல்லிப் பல்லைக் கடித்தார் குருபாதம்.

வேலாயுதம் மேலும் பக்குவமாகச் சொன்னார்.

''அம்மன் கோவில் கிணத்துக்குப் பக்கத்திலே, கோவில் கோபுரத்துக்கும் உயரமா குடி தண்ணித் தொட்டியைக் கட்டுறதுக்கும் பிளான் தயாராகிக்கிட்டிருக்கு. இதுக்கு யாரோட சம்மதமும் தேவை இல்லையாம். இதே தண்ணியை வெளிக் கிராமங்களுக்கும் கொண்டு போகப் போறானும்'' என்றார்.

குருபாதம் திரும்பினார். அவர் முகம் கன்றிச் சிவந்திருந்தது.

''நான் ஏற்கெனவே சொல்லி இருக்கேன். முதல்லே கிணத்தை இழுத்து மூடணும். அப்புறம் வர்றதைப் பாத்துக்கலாம். இதைச் செய். இல்லே—நானே செய்துக்கிறேன்'' என்று கோபமாகவே சொன்னார்.

வேலாயுதம் மிகுந்த பயபக்தியோடு சற்று நேரம் பேசாதிருந்தார்.

''மகனாகப் பிறந்திட்டதுனாலே, அவனாலே ஊரைவிட்டே ஓட முடியுமா?'' என்று மேலும் கேட்டார் குருபாதம்.

''நாம வளைஞ்சு கொடுக்கணும்னு நினைச்சாலும் அவன் வணங்கி வரத் தயாராயில்லையே! களத்து மேட்டு வேலையும் மறுபடியும் தொடங்கியிருக்கு. வர்ற வெள்ளிக்கிழமை அந்தப் பொன்னையாவோட குடிசையைப் பிரிக்கப் போறானும். அதுக்கும் நாள் குறிச்சிருக்கான். நம்ம





# முதல்வரின் கண் சிகிச்சை முகாம் நிதி

## நன்கொடை வழங்கியோர் பட்டியல்

| | ரூ. | காசு. |
|---|---|---|
| முன்தொடர்ச்சி. | 31,54,457 | 85 |
| தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர். | 400 | 00 |
| பதிவுத் துறை தலைமை அலுவலர், சென்னை. | 30 | 00 |
| மாவட்டக் கூட்டுறவுக் கணக்குத் தணிக்கையாளர், சேலம்-1. | 2,350 | 00 |
| திரு கிருஸ்துதாஸ், துணைப் பதிவாளர், சேலம். | 125 | 00 |
| திரு வி. வைத்தியநாதன், உதவிப் பதிவாளர் எஸ்.ஆர்.ஓ. உடங்குடி. | 150 | 00 |
| திரு பி. மாணிக்கவேலு, எம்.ஏ., முதல்வர், அறிஞர் அண்ணா அரசினர் கல்லூரி, ஆத்தூர், சேலம் மாவட்டம். | 524 | 00 |
| திரு எல். எம். மௌனசீஸ், ஐ.ஏ.எஸ்., பால்பெருக்குத் துறை இயக்குநர் (பொறுப்பு) சென்னை. | 50 | 00 |
| திரு டி. பாலசுந்தரம், பி.ஏ., மாவட்டக் கூட்டுறவுக் கணக்குத் தணிக்கை அலுவலர்., சேலம். | 1,001 | 00 |
| திரு எம். சி. நாராயணசாமி, பி.ஏ., மாவட்டப் பதிவாளர், பாளையங்கோட்டை. | 12 | 00 |
| வடஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் (330 டிராப்டுகள்). | 3,52,215 | 00 |
| தென்ஆர்க்காடுமாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர். | 81,711 | 50 |
| இந்து அறநிலையப் பாதுகாப்பு ஆணையர், சென்னை-34. | 1,001 | 00 |
| வட்டார முன்னேற்ற அலுவலர் | 1,480 | 00 |
| திரு டி. கோபாலகிருஷ்ணன், லலிதா மருத்துவ நிலையம், மணச்சநல்லூர், திருச்சி. | 100 | 00 |
| கன்னியாகுமரிமாவட்ட ஆட்சித் தலைவர், நாகர்கோவில். | 3,200 | 00 |
| பதிவுத் துறைத் தலைவர் | 105 | 00 |
| செங்கற்பட்டு நகரக் கூட்டுறவு வங்கி. | 50 | 00 |
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம். | 800 | 00 |
| மாவட்டக் கூட்டுறவுக் கணக்குத் தணிக்கை அலுவலர், சேலம். | 500 | 00 |
| மாவட்டக் கூட்டுறவுக் கணக்குத் தணிக்கை அலுவலர், சேலம். | 250 | 00 |
| அசோக் லேலண்ட் தொழிலாளர் சங்கம், எழும்பூர். | 2,000 | 00 |
| திரு யூசப், திருச்சி (வேளாண்மை அமைச்சர் மூலமாக). | 1,001 | 00 |
| பர்மா தமிழர் மறுமலர்ச்சி சங்கம், 9, பர்மா பசார், சென்னை-1. | 501 | 00 |
| விஜயலட்சுமிபுரம், குடியிருப்போர் சங்கம், அம்பத்தூர். | 11 | 00 |
| டி.ஐ. சைக்கிள் தொழிலாளர் பகுத்தறிவு மன்றம், அம்பத்தூர். | 50 | 00 |
| திரு கே.டி.எஸ். மணி நகராட்சித் தலைவர், காஞ்சிபுரம். | 25 | 00 |
| பேரறிஞர் அண்ணா நற்பணி மன்றம், டி. ஐ. மில்லர் தொழிலாளர் சார்பில். | 10 | 00 |
| திரு ராமு, காமராஜ் சேவா சங்கம், எழும்பூர். | 10 | 00 |
| திரு நாகலிங்கம், திரு ஏ. எல். சீனிவாசன் மூலமாக. | 10 | 00 |
| திரு கே. கணேச முதலியார், பட்டாணிப்பட்டி, மைசூர். | 25 | 00 |
| துணைப்பதிவாளர், சத்தியமங்கலம். | 25 | 00 |
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம். | 2,750 | 00 |
| நங்கநல்லூர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம். | 25 | 00 |
| தஞ்சாவூர் கூட்டுறவு மத்திய வங்கி. | 5,000 | 00 |
| உதவிப் பதிவாளர், மேட்டூர் | 100 | 00 |
| டை | 200 | 00 |
| கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-6. | 153 | 75 |
| துணைப் பதிவாளர், சங்கரன் கோயில். | 100 | 00 |
| டை | 150 | 00 |
| தஞ்சை மாவட்ட ஆட்சியாளர். | 2,200 | 00 |
| சேலம் மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர். | 600 | 00 |
| ஆத்தூர் வட்டம் கூட்டுறவு மார்க்கெட்டிங் சங்கம். | 200 | 00 |
| துணைப்பதிவாளர், சேலம் | 1,100 | 00 |
| திருவாக அலுவலர், தாந்தோணி நகரியம். | 301 | 00 |
| சேலம் மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர். | 1,401 | 00 |
| நல்வாழ்வுத் துறை அமைச்சர் வாயிலாக. | 15,000 | 00 |
| ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றிய ஆணையர் | 335 | 00 |

களுக்கு மைய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

படித்துப் பட்டம் பெற்றுள்ள இளைஞர்களிடையே சமூகத் தொண்டாற்றுவதற்கான உணர்வை ஏற்படுத்தும் முறையில் ''இளைஞர் அணி'' அமைக்கப் பட்டு இருக்கிறது. இதன் முதல் அணி, திருச்சியில் துவக்கப்பட்டது. கல்வி, மருத்துவம், வேளாண்மை, பொறியியல், அறிவியல், சுகாதாரம் போன்ற துறைகளில் பட்டம் பெற்ற இளைஞர்கள் இப் பணியில் தேர்ந்தெடுக்கப்படுவர். மாதம் ஒன்றுக்கு ரூ. 175 வீதம் ஒவ்வொருவருக்கும் உதவித் தொகை வழங்கப்படும்.

''அறிவு அற்றங்காக்கும் கருவி'' என்றார் வள்ளுவப் பெருந்தகை. இக்கருவியை நாட்டில் யாவரும் பெற்று உய்யும் வகையில் இவ்வரசு பல நல்ல திட்டங்களை அமைத்துள்ளது. கிராமப் பள்ளிகள் தரமுடைய கல்வியை அளிக்கும் வகைகளில், ''விஞ்ஞானக் கருவிகள் வழங்குதல்'' போன்ற திட்டங்களை நாம் உருவாக்கியுள்ளோம்.

ஆரம்பக் கல்விப் பணிக்கான செலவு நாளுக்கு நாள் பெருகி, வருவது, நாம் அடைந்துள்ள வளர்ச்சியின் அறிகுறியாகும். 1958-ஆம்வருடத்திய ஊராட்சிச் சட்டத்தின்படி அமைந்த மானிய முறைகள் இன்னும் நடைமுறையில் உள்ளன. கூடிவரும் செலவினங்களுக்கு ஏற்றவகையில், நிதி ஆதாரங்கள் மேலும் பெருக்கப்பட வேண்டும். மானிய முறைகள் மாற்றப்படவேண்டும். இதைக் கருத்தில் கொண்டு, இவ்வரசு முதன் முறையாக இப் பொருளைப் பரிசீலித்து ஆலோசனைகள் கூற, ஒன்றியக் கல்வி ஆய்வுக்குழு ஒன்றை நியமித்தது.

இக்குழுவின் பரிந்துரைகளை அரசு பரிசீலனைச் செய்து ஆணைகள் பிறப்பித்துள்ளது. இதன்படி ஊராட்சி ஒன்றியங் களுக்குக் கூடுதலாக அரசு மானியம் கிடைக்க வகை செய்யப் பட்டுள்ளது.

ஒன்றியப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டித்தர ''விரைவுத் திட்டம்'' ஒன்றும் அரசின் ஆய்வில் உள்ளது. இப்போதுள்ள 21,900 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் 14,930 பள்ளிகள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. வருங்காலத்தில் பள்ளிகள் நிலையான கட்டடங் களில் இயங்குவதோடு காலப் போக்கில் மாநிலத்திலுள்ள எல்லா ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளும் சொந்தக் கட்டடங் களிலேயே செயல்படவேண்டும் என்ற கருத்துடன், ஆயுள் காப்பு நிறுவனத்தின் உதவி பெறும் திட்டம் ஒன்றும், அரசின் ஆலோசனையிலுள்ளது. இத் திட்டத்தின்கீழ் மூன்றாண்டுக் காலத்தில் 7,377 தொடக்கப் பள்ளிகளுக்கும், 1,112 உயர் தொடக்கப் பள்ளிகளுக்கும் கட்டடங்கள் கட்டித்தரத் திட்டமிடப்பட்டுள்ளது.

> நமது [illegible] விடுதலை அடை[illegible] கிராமங் களை [illegible]வதிலேயே மி[illegible] எடுத்துக் [illegible]
>
> இந்தியாவின் உயிர்நாடியான கிராமங்கள் வளர்ச்சி அடைந்து முன்னேறினால் தான் நம் மக்கள் நல்வாழ்வுக்கு உறுதியான அடித்தளம் உருவாகும்.

ஊராட்சிகளில் வானொலிப் பெட்டிகள் நிறுவும் செயல்திறமிக்க திட்டமொன்று தொடர்ந்து செயல்படுத்தப் பட்டதனால் மூன்றாவது ஐந் தாண்டுத் திட்ட இறுதியில் இம் மாநிலத்திலுள்ள எல்லா ஊராட்சிகளிலும் வானொலிப் பெட்டிகள் நிறுவப்பட்டு விட்டன. இத் திட்ட வேலைகள் தற்போது ஊர்கள், சிற்றூர்களுக்குக் கூட விரிவாக்கப்படுகின்றன.

மொத்தம் உள்ள 57,794 கிராமங்களில் 1969–70-ஆம் நிதியாண்டு முடிய 23,088 வானொலிப் பெட்டிகள் நிறுவப் பட்டன. 1970–71-ம் ஆண்டில் 4,770 வானொலிப் பெட்டிகளும் 1971–72-ஆம் ஆண்டில் 5,000வானொலிப் பெட்டிகளும் நிறுவப் பட்டுள்ளன. ஆக 1971-72-ஆம் நிதியாண்டின் இறுதியில் 31,200 கிராமங்களில் வானொலிப் பெட்டிகள் நிறுவப் பட்டுள்ளன.

ஊராட்சி வானொலிப் பெட்டிகள் வாயிலாக, ஊர் வளர்ச்சிக்கான சிறப்பு நிகழ்ச்சிகளைக் கேட்கவும், தம்முள் கலந்து பேசி அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும், செயலாற்றிப் பயன் பெறவும், வானொலி மன்றங்கள் சிறந்த பணியாற்றி வருகின்றன. இவற்றுக்கு மேலும் ஊக்கமூட்டும் நோக்கத்தோடு, திருச்சி வானொலி நிலையத்தாரின் ஒத்துழைப்புடன், சென்ற ஜூலைத் திங்களில் தமிழ் நாடு அரசு ஒரு பரிசுத் திட்டத்தை உருவாக்கி நிறைவேற்றியுள்ளது. மாநிலப் பரிசு ஒன்று 300 ரூபாய் அளவுக்கும், மாவட்டப் பரிசு ஒவ்வொன்றும் 200 ரூபாய் அளவுக்கும் ஏற்படுத்தப் பட்டது. அண்மையில், 'அக்டோபர்த் திங்களில் நடைபெற்ற சமுதாய நல விழாவின்போது இப்பரிசுகளை, மாவட்ட ஆட்சியாளர்கள் அளித்ததோடு, வானொலி மன்றங்களின் வளர்ச்சியில் தனிக்கவனம் செலுத்தி வருவதையும் அறிந்து மிகவும் மகிழ்கிறேன்.

நமது மாநிலத்தில் மொத்தம் 2,092 குழந்தைகள் காப்பகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் 1,000 குழந்தைகள் காப்பகங்களுக்கான கட்டடங் களைக் கட்டுவதற்கும், அவற்றின் மூலம் இரண்டு முதல் ஐந்து வயது வரை உள்ள குழந்தைகளுக்கும், கர்ப்பிணிகளுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும், ஐந்தாண்டுகளுக்கு இலவச உணவு வழங்குவதற்கும், 'கேர்' நிறுவனம் பொறுப்பேற்றுள்ளது. இதுவரை 1,000 குழந்தைகள் காப்பகங்களில் இத் திட்டம் செயற்படுத்தப்பட்டுச் சுமார் 85,000 பேர் பயனடைந்துள்ளனர். இது வரை 115 குழந்தைகள் காப்பகங்கள் 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் கட்டப் பட்டுள்ளன. மீதியுள்ள காப் பகங்களுக்கும் நிரந்தரமான கட்டடங்கள் கட்டுவதற்குக் 'கேர்' நிறுவனத்தின் உதவியைப் பெறுவதற்கு தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நமது மாநிலம் இந்திய நாட்டின் பெரிய மாநிலங்களில் ஒன்று. பொருளாதார, சமூகத் துறைகளில் அமைதியான புரட்சியொன்றை ஏற்படுத்தி, வறுமை நிரம்பிய மக்களின் வாழ்வில் புத்தொளி காணும் மகத்தான முயற்சியில் நாம் எல்லாரும் ஈடுபட்டுள்ளோம். அறியாமையை அகற்றி, உயர்வு தாழ்வின்றிச் சாதிமதப் பாகுபாடுகளைக் களைந்து, பகுத்தறிவுடன் பிரச்சினைகளை நோக்கித் தீர்க்கும் உணர்ச்சியுள்ளவராய், நமது மாநிலத்தில் பல வளங்களைச் சீராகப் பயன்படுத்தி, ஓர் ஒப்பற்ற சமதர்ம சமுதாயத்தை நிறுவ நாம் மேற்கொண்டுள்ள பணியில், ஊராட்சிகளும், பேரூராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் இன்றியமையாத பங்கு பெறுகின்றன.

[ஊராட்சி வளர்ச்சிக் கருத்துரைக் குழுக்களின் ஏழாவது கூட்டத்தில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.]







## தொழில் தேவையில் கவனம்

பல மாடிக் கட்டடங்களைப் பொறியியல் வல்லுநர்கள் திட்டமிட்டு, செம்மையான முறையில் கட்டி முடிக்கிறார்கள். மீனவர்கள், சலவைத் தொழிலாளர்கள், நெசவாளர்கள் போன்றவர்களின் தொழில் முறைத் தேவைகளையும் கருத்தில் கொண்டு, அந்தந்த வகை மக்களுக்கு ஏற்றவாறு இல்லிடங்கள் அமைக்கப்படுகின்றன.

இந்தப் பணிகளுக்கான நிதி வசதியை 50 சதவிகித மானிய உதவி 50 சதவிகித கடன் வசதி என்ற முறையில் மாநில அரசினர் தருகிறார்கள். கடன் தொகையை 30 ஆண்டுகளில் வட்டியுடன் திருப்பித் தர வேண்டும். ரூபாய் 5 லட்சம் வரை செலவு பிடிக்கும் திட்டங்களுக்குக் குடிசைப் பகுதி மாற்று வாரியமே ஒப்புதல் அளிக்க அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது. ரூ. 5 லட்சம் செலவு மதிப்புக்கு மேல் உள்ள திட்டங்களுக்கு மாநில அரசினர் ஒப்புதல் அளிக்கிறார்கள்.

இதுவரையில் 22,876 குடியிருப்புகளைக் கட்டுவதற்கான 67 செயல் திட்டங்களை ரூ. 19·50 கோடி செலவில் நிறைவேற்ற ஒப்புதல் வழங்கப்பட்டு, 42 செயல் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 4,166 இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டுக் குடியேறுவதற்குத் தயார் நிலையில் உள்ளன.

## ஏழாண்டுத் திட்டம்

சுகாதாரக் குறைவான குடியிருப்புப் பகுதிகளை அகற்றி, மாநகரைச் சிங்காரச் சென்னையாக ஆக்க, 7 ஆண்டுக் காலத்தில் ஒரு லட்சத்து 80 ஆயிரம் வீடுகள் கட்ட வேண்டும் என்று வாரியம், குறிக்கோள் அளவை வரையறுத்துக்கொண்டுள்ளது. தற்போது இந்த வீடு கட்டும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வரும் வேகத்தில் முப்பது நிமிடங்களுக்கு ஒரு வீடு வீதம் கட்டி முடிக்கப்பட்டு வருகின்றது. இந்த வேகத்தை இரு மடங்காக்க வாரியம் திட்டமிட்டுள்ளது.

குடியிருப்பு இல்லம் ஒன்றின் பரப்பு குறைந்த பட்சம்



# உண்மையின் சந்நிதி

சோம. மகாதேவன்

13



## புகையும் பகை நெருப்பு

மாடியிலிருந்து குருபாதத்தின் உரத்த குரல் கேட்டுக் கொண்டிருந்தது. வெகு நேரமாகவே அவரோடு பேசிக் கொண்டிருந்து விட்டு, சோர்ந்த முகத்துடன் ஒவ்வொரு படியாக இறங்கி வந்தார் குருவையா.

குருவையாவை எதிர்பார்த்தே—முன் பக்க மாடிப்படிகளின் ஓரம் நின்று கொண்டிருந்த ஐயனு, "அம்மா உங்களைப் பாக்கணும்னுங்க" என்று சொல்லி அடுத்த அழைப்பையும் விடுத்தான்.

குருவையா தயங்கினார். அவருக்கு அலுப்பாகவும் இருந்தது.

குருபாதத்தோடு ஒத்த வயது இவருக்கு. என்றைக்குமே இந்தக் குடும்பத்தில் இவரும் ஒரு அங்கம்போல. ஆல் போல் தழைத்து வந்த குடும்பம் இப்படிச் சிதறுண்டு போவதை நினைத்து இவருக்குப் பெருங் கவலை. பெரியவரை, அந்த உள் கொந்தளிப்புக் குறையாமல் வைத்துக் கொண்டிருக்கிறார்களே என்ன செய்வது? காது கொடுத்துப் பேச விட்டால் தானே இருக்கும் நிலையை எடுத்துச் சொல்லுவதற்கு! விழுந்திருக்கும் முடிச்சை, வேறு எப்படித்தான் அவிழ்ப்பது?

"யாருகிட்டே என்ன பேசறதுன்னு எனக்குப் புரியலே ஐயனு?" என்று மெதுவாகச் சொன்ன குருவையா, உள்பக்கமாகத் திரும்பிப் பார்த்து, "அம்மா எங்க இருக்காங்க?" என்று கேட்டார்.

ஐயனு பதில் சொல்லுவதற்குள், தலைவாசல் கதவோரமாக நின்றிருந்த சிவகாமியம்மாள், எட்டிப் பார்த்து, "வாங்க அண்ணாச்சி" என்று குரல் கொடுத்தாள்.

குருவையாவும், ஐயனுவும் பக்கமாகச் சென்றார்கள்.

சற்று நேர மௌனத்துக்குப் பிறகு, தலைமறைவாகவே நின்று அடக்கமாகவே சொன்னாள் சிவகாமியம்மாள்.

"மகனைப் போய் பார்த்திட்டு வந்ததிலேயிருந்து எங்க கூடப் பேச்சும் நின்னு போச்சு. பெத்த மனம் கேட்குதா? பதறிப் போயிட்டேன். இவருக்கும் அவனுக்கும் மத்தியிலே நான் என்ன செய்யட்டும்? ரெத்தக் கொதிப்புக்கு வாங்கியாந்த மருந்து மாத்திரை யெல்லாம் அப்படியே இருக்கு. அதைத் தொட்டுத் துதிக்கலே. கால்லே விழுந்தும் சொல்லிப் பார்த்தாச்சு, வாயைத் திறக்கலையே". என்று சொல்லி வந்த போது குரல் தழுதழுத்தது.

"மகனை நினைச்ச வெறுப்பு இன்னமும் அடங்கலையே இவருக்கு! என் மகன் காலிப் பயதான்னு சொல்லிக்கிட்டாரு. அந்த அளவுக்கு நெஞ்சிலே நிறைச்சு வச்சிருக்காங்க. இப்ப என் பேச்சும் எடுபடலையே!" என்று கவலையோடு சொன்னார் குருவையா.

"சின்னவர்தான் அடிக்கடி வந்திட்டுப் போறாரே. எல்லாத்தையும் ஒருமிக்கச் சுருட்டுறதுக்குத் திட்டம் போட்டுத் தானே இறங்கி இருக்காங்க" என்று இடையிலே கொதிப்போடு சொன்னான் ஐயனு.

"நீ சும்மா இருடா"—, என்ற சிவகாமியம்மாள், "இவரு என்னதான் சொல்றாரு? பிறந்த ஒரு மகன் தலைக்கும் கல் வந்து நிக்கறப்ப, இவரும் இப்படி இருந்தா, இது எதிலே போய் முடியப் போகுது? இந்த வீடு இன்னமும் இருளடைஞ்சு போகணுமா?" என்று கேட்டாள்.

வியர்த்துப் போன முகத்தைத் துடைத்துக் கொண்டார் குருவையா.

"நாலு நாளைக்கு முன்னாலே மதுரையிலேதான் பாண்டியனைப் பார்க்க வேண்டியதாச்சு. அவன் எதைப் பத்தியும் கவலைப்படலே! இப்பவும் சிரிச்சுக்கிட்டுதான் இருக்கான். பணம் தேவையின்னா கேளுன்னு கூடச் சொன்னேன்."

"எவ்வளவு கேட்டாலும்—கொடுங்க" என்றாள் சிவகாமியம்மாள் ஆவலுடன்.

"பணத்தாலே மட்டும் வெற்றி கிடைக்கும்னு நான் நம்பலே. நெஞ்சிலே உண்மை இருக்கு. நடத்தையிலே நேர்மை இருக்கு. இது எப்பவும் எனக்குத் துணை இருக்கும்னு சொல்றான், அவன்கிட்டே வேறே எதைப் பேச முடியுது?" என்றார் குருவையா.

"இருக்கிறதை யெல்லாம் சுருட்டிக்கிட்டுப் போகணும்னு வளைச்சு வாராங்களே. இதைப் பத்தியெல்லாம் அவன் நினைக்கலையா?" என்று கேட்டாள் சிவகாமியம்மாள்.

"சுருட்டினதை வேறே எங்கே கொண்டு போகப்போறாங்க? ஊருக்குள்ளே தானே இருக்கும்னு சொல்றானம்மா உன் மகன்", என்ற குருவையா, சற்று யோசித்து, "எப்படியும் பாண்டியனை இங்கே இழுத்துக்கிட்டு வாரேன். தகப்பனும் மகனும் நேருக்கு நேரா பேசிக்கட்டும். அப்பவாவது நல்ல முடிவு ஏற்படுமான்னு பாக்கலாம்" என்றார் குருவையா.

சிவகாமியம்மாள் ஏதோ சொல்ல வாயெடுத்த போது, வாசலிலே வேலாயுதத்தின் தலை




ஊருக்குள்ளே நடக்கிற காரியத்துக்கு, வெளியூரிலே இருந்து பாதுகாப்புக்கு வாராங்க'' என்று வேலாயுதம் சொல்லி வந்தபோது, ''உள்ளே போயிட்டு வந்தாத்தான் அவன் திமிர் ஒடுங்கப் போகுது. அதுக்கானதைப் பாரு,'' என்றார் குருபாதம் சற்று உரத்த குரலில்.

வேலாயுதம் இன்னும் நெருங்கி வந்தார்.

''அவன் எல்லாத்தையும் கடந்து, எவ்வளவோ தூரம் போயிருக்கான்ங்கிறது இப்பத்தான் புரியுது.



உங்க கிட்ட அதைச் சொல்றதுக்கே தயக்கமா இருக்கு'' என்று சொல்லித் தலையைக் குனிந்து கொண்டார்.

குருபாதம் திரும்பினர். நெற்றி சுருங்கியது.

வேலாயுதம் இரகசியமான குரலில் சொன்னர்.

''ஏற்கெனவே, பொன்னையாவோட பெண்சாதி சிவந்திக்கும்—இவனுக்கும் தொடர்பு இருந்திருக்கு. இது போலீஸ் விசாரணையிலே கூட வெளியாகலே. இவனைப் பாக்குறதுக்குப் படுக்கையிலே கிடக்கிற புருசனைப் போட்டுட்டு, இங்கே வந்திருக்கா சிவந்தி. கொஞ்ச நேரத்துக்கு முன்னலே, லிங்கம் வீட்டுத் தோப்பிலே இவனும் அவளும் பேசி இருக்காங்க.''

நீண்ட பெருமூச்சு குருபாதத்தின் உடலை உலுக்கியது.

ஒன்றும் சொல்லாமல், நெற்றியை விரல்களால் அழுத்தியவாறு அப்படியே சாய்ந்து கொண்டார். சற்று நேரம் கழித்து ''இப்ப உடம்பு எப்படி இருக்கு?'' என்று ஆர்வத்தோடு விசாரித்தார் வேலாயுதம்.

குருபாதம் தலைநிமிர்ந்து தம்பியைப் பார்த்தார். கண்களில் நீர் கோத்திருந்தது. ''இந்த மண்ணிலே இருக்கிற வரைக்கும் எனக்கு நிம்மதி இருக்காது'' என்றர் கலங்கிய குரலில்.

'' அவன், தாளுகவே இழுத்து வச்சுக்கிட்ட தீவினை ; நாம கவலைப்பட்டு என்ன செய்ய?''

''வேறே எங்கே யாவது போய்க் கொஞ்சம் நாள் தங்கியிருக்கணும். இந்த ஊருக்குள்ளே இருக்கிறது எனக்கு நெருப்பா இருக்கு '' என்றர் குருபாதம் மேலும்.

''போகலாம். உங்களைப் பொறுத்த வரையிலே அது தான் எனக்கும் நல்லதாப் படுது. மத்ததை நான் பாத்துக்கிறேன். இன்னென்று, நான் முன்னலேயே உங்ககிட்ட சொல்லி இருக்கேன். இந்த ஐயனுப் பயலைப் பத்தி இன்னமும் நீங்க மெத்தனமா இருக்கீங்க. நடந்ததுக்கெல்லாம் உள் கையா இருந்து, இப்பவும் இங்கேயும் அங்கேயுமா நிக்கிறது இவன்தான். அவனுக்கும் ஒரு வழி பண்ணி ஒதுக்கி விடுங்க'' என்பதையும் சொல்லி விட்டு வேலாயுதம் எழுந்தார்.

குருபாதம் ஒன்றும் சொல்லவில்லை. அப்படியே சாய்ந்திருந்தார்.

''உடம்பைக் கவனமாகப் பார்த்துக்குங்க'' என்று கேட்டுக் கொண்டு, வேலாயுதம் போய் விட்டார்.

தம்பி சொன்னதை யெல்லாம் மீண்டும் நினைத்துப் பார்க்கும் போது, உடம்பிலுள்ள இரத்தமெல்லாம் நெஞ்சிலே வந்து உறைந்து விட்டதைப்போலிருந்தது. இப்போது நினைத்தாலும் எழுந்து உட்கார முடியாது. ஒரேயடியாகப் போய்ச் சேர்ந்து விடவும் முடியவில்லையே!

விரைவிலேயே உற்றம் சுற்றம் என்பதெல்லாம் இல்லாத இடத்துக்குப் போய்ச் சேர்ந்து விட வேண்டும். யாருமில்லாத இடத்தில்தான்

> காலத்தின் மாறுதல்களுக்கு ஏற்றபடி ஒரு சமுதாயம் வளர்ச்சியடைந்து மாருமலிருக்குமாளுல், அது வரவரத் தளர்ச்சியடைந்து வாழ்க்கையிலே பிறப்பே இல்லாமல் நசித்துப் போகும்.
>
> * * *
>
> மக்கள் பயிற்சி பெறுவதற்கும் குறைகளைக் குறைத்துக் கொள்வதற்கும் ஒரேயொரு வழிதான் உண்டு. பொறுப்பை ஏற்றுக் கொண்டு, செய்யும் பிழைகள் மூலம் அனுபவம் பெற்றுக் கொள்ளும்படி செய்வதுதான் இந்த ஒரே வழி.
>
> —நேரு.

இந்த நெஞ்சுக்கு நிம்மதி கிடைக்கும்.

பின்பக்கத்துக் கதவைத் தள்ளிக் கொண்டு ஐயனு உள்ளே நுழைந்தான்.

அவனுகத்தான் இருக்கும். அவனைத் தவிர, இப்போது இங்கே வேறு யார் வரப் போகிறர்கள்?

குருபாதம் திரும்பவில்லை.

ஐயனு, இடது பக்கமாக, கட்டிலோரமாக வந்து நின்றன்.

''ஐயா'' என்றன்.

''என்னடா?'' என்றர் சலிப்போடு.

''மருந்தைத் தொடவே இல்லையே. டாக்டர் சொல்லியிருக்காரு'' என்று ஆரம்பித்தான் ஐயனு.

''பாக்கி இருக்கிற உயிரும் உன்னலேதான் போகப் போகுது. நீயும் போடா.... அவனேடவே சேர்ந்துக்கோ! அவளும் இங்கே நின்னு கண் கலங்க வேண்டாம். மகன் கிட்டயே போய் இருக்கச் சொல்லு. என்னைத் தனியா விடுங்க'' என்றர் குருபாதம். கண்களை மூடிக் கொண்டார். அவருக்கு மயக்கமாக வந்தது.

''நீங்க நிம்மதியா இருங்க; இப்ப அதுதான் வேணும்.'' என்றன் ஐயனு அவர் முகத்துக்கு நேரடியாகக் குனிந்து.

குருபாதம் கண்களைத் திறந்த போது, ஐயனுவின் முகம் பக்கத்தில் இருந்தது.

அவனையும், இவனையும் சமமாகவே வளர்த்து விட்டாள் சிவகாமி.

''ஐயனு'' என்றர் மெதுவான குரலில்.

''ஐயா''

''நீ இந்த வீட்டுக்கு எப்படி வந்தேங்கிறதெல்லாம் உனக்கு நினைவு இருக்காடா?

''இல்லீங்க''

''இருக்காது. எனக்கே மறந்து போச்சு. உன்னேட வளர்ந்தவன், பாகத்தைப் பிரிச்சுக்கிட்டு, சொந்த பந்தம் எதுவுமே இல்லையின்னு படியிறங்கிப் போயிட்டான். இல்லையா?'' என்று கேட்டார் குருபாதம்.

ஐயனுவுக்கு, உள்ளுக்குள் நிறைந்திருந்த பொருமல் பொத்துக் கொண்டு வந்தது.

''தம்பி தானுப் போகலிங்க; நாமதான் போகச் சொன்னேம்'' என்றன் விம்மலுடன்.

'' ஆமடா...., அப்படித்தான், உனக்கும் கொடுக்கிறதைக் கொடுத்துப் போடுறேன். நீயும் போயிடு.'' என்றர் குருபாதம் கோபத்தோடு.

''ஐயா'' என்ற ஐயனு, ஆவேசத்தோடு முன்னுல் கவிழ்ந்து, அவரது கால்களைப் பிடித்துக் கொண்டான்.

''எனக்கு வேறே எதிலேயும் பங்கு வேண்டாமுங்க. உங்க உயிரிலே பங்கு இருக்கு. இந்தக் காலடியில் தான் வளந்தேன். இந்த உயிரு இருக்கிற மட்டும் இங்கதான் கிடப்பேன்'' என்று சொல்லி அவர் கால்களைக் கட்டிக் கொண்டு முகம் புதைத்து அழுதான் அந்த இளவட்டம்.

குருபாதத்தின் விழிகளில் நீர் தேங்கி நின்றது.

''உனக்கிருக்கிற பாசம் அவனுக்கு இல்லையேடா?'' என்றர்.

ஐயனு கண்களைத் துடைத்து கொண்டே ஏறிட்டுப் பார்த்தான்.

''சின்ன வயசிலேயிருந்தே உங்களுக்கும் தம்பிக்கும் இடையிலே திரை போட்டு மறைச்சிட்டாங்க. இப்பவும் உங்களுக்கு நிம்மதி இல்லாம வந்து சேதி சொல்ருங்க '' என்றன் படபடப்புடன்.

''நெஞ்சொடிய அடிபட்டவன் வாக்கு மூலத்திலே சொல்லி இருக்கானே.''

''பொன்னையா தாளுச் சொல்லலே. அவனைச் சொல்ல வச்சிருக்காங்க.'' என்றன் ஐயனு ஆத்திரத்துடன்.

''எல்லாம் உனக்குத் தெரிஞ்சிருக்கு. எனக்கே எடுத்துச் சொல்ற அளவுக்குத் துணிவும் வந்திருக்கு. உன்னைப் பாக்குறபோதெல்லாம் அவன் நினைவு வருது. போடா நீயும் போ செத்தாலும் நான் தனியாத்தான் சாகணும் நான் யாருகிட்ட வேறெதைச் சொல்லப்போறேன்.'' என்றர் குருபாதம்.

''உங்க கண் கலங்கலாமா ஐயா ?'' என்று சொல்லிப் பதட்டத்துடன் அவரது கைகளைப் பிடித்துக் கொண்டான் ஐயனு.

கதவு 'கிறீச்'சிடும் சத்தம் கேட்டது.

நீர் நிறைந்த விழிகளுடன் திரும்பிப் பார்த்தார் குருபாதம்.

சிவகாமியம்மாள் உள்ளே நுழைந்தாள்.

(வளரும்)

---



# கரிசல் மண் பகுதிக்கேற்ற புதிய சோளம்!

கோவில்பட்டியிலுள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் 1968-69, 1969-70, 1971-72-ஆம் ஆண்டுகளில் நடத்தப்பெற்ற பரிசோதனைகளிலிருந்து கரிசல் மண் பகுதிக்கேற்ற குறுகிய கால வயதுடைய ஒரு புதிய ஒட்டுவீரியச் சோளம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இப்புதிய ஒட்டுவீரியச் சோளம் எம். எஸ். 2219 என்ற ரகத்தையும், ஐ. எஸ். 3541 என்ற ரகத்தையும் கரு இணைப்பு செய்து உருவாக்கப்பட்டுள்ளது. இது, தற்பொழுது கரிசல் மண் பகுதியில் மாளுவாரியாகப் பயிரிடப்பட்டுவரும் 'கே. 3' என்னும் 'பெரிய மஞ்சள் இருங்கு' ரகத்தைவிட மகசூலிலும், தானியம், தட்டை ஆகியவைகளின் தரத்திலும் சிறந்து விளங்குகிறது.

தென்பாண்டி மண்டலத்திற்கு இப்புதிய ரகம் ஏற்றதாக இருப்பதுடன், எக்டேருக்கு 4,425 கிலோ தானியத்தையும், 11,923 கிலோ தட்டையையும் அளிக்கின்ற ஆற்றல் வாய்ந்ததாகவும் இருக்கிறது. ஆனல், தற்பொழுது பயிரிடப்பட்டு வரும் 'கே. 3' என்னும் சோளம் எக்டேருக்கு 3,111 கிலோ தானியமும், 10,026 கிலோ தட்டையுமே கொடுத்து வருகிறது. எனவே, இப்புதிய ஒட்டுவீரியச் சோளம் 'கே. 3' சோளத்தைவிட 42 சதம் அதிகத் தானிய மகசூலும், 19 சதம் அதிகத் தட்டை மகசூலும் அளிக்கிறது. இந்தப் புதிய ரகம் கீழ்க் கண்ட குணங்களையும் கொண்டுள்ளது :—

1. வறட்சியைத் தாங்கிக் கொள்ளும்.

2. குறுகிய கால வயதுடையது. 90 நாட்களில் அறுவடைக்கு வந்துவிடும். தற்பொழுது சாகுபடியில் உள்ள 'கே. 3' சோளத்தைவிட 30 நாட்கள் வயது குறைவானது'

3. எளிதில் கதிரிலிருந்து மணிகளைப் பிரிக்கலாம்.

4. முத்துப் போன்ற வெண்மையான மணிகளைக்கொண்டது.

5. தட்டை இனிமையானதாகவும், சாறு நிறைந்ததாகவும் இருப்பதால், கால்நடைகளால் விரும்பி உண்ணப்படுகின்றன.

அதிக மகசூலையும், தரமான தானியத்தையும், தட்டையையும் அளிப்பதால் இப்புதிய ஒட்டுவீரியச் சோளம் 'கே. 3' சோளத்தைவிட எக்டேருக்கு ரூபாய் 1,040 அதிக இலாபம் அளிக்கின்றது.

மேற்கூறிய பயன்களைக் கொண்டிருப்பதால், தமிழ்நாட்டின் கரிசல் மண் பகுதியில் இப்புதிய ஒட்டுவீரியச் சோளத்தைச் சாகுபடி செய்வதற்காக வழங்குவதென மாநில வேளாண்மைக் குழு முடிவு செய்துள்ளது

# வெண்பாப் போட்டி

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:
க. இலக்குமி, எழிலகம்,
நெசவாளர் குடியிருப்பு,
அருப்புக் கோட்டை,
இராமநாதபுரம் மாவட்டம்.

ந்தை' எனத் தொடங்கி 'இனிது' என முடித்தல்

ந்தைப் புலவர் குவலயத்தில் தோன்றிப்
ந்தமிழர் பாங்கறியச் செய்தார்—வழங்கிடும்
ன்றோரின் உள்ளத்தே சாவா நிலையெய்திக்
ான்போல வாழ்வார் இனிது.

—க. இலக்குமி, அருப்புக்கோட்டை.

ந்தை வளர்ப்பும் குடியோம்பிக் காப்பும்
ந்தருஉம் திட்டத்தின் வாக்காம்—குழந்தை
பெற் றிடர்ப்படாமுன் பண்பாய்த் தடுத்துச்
பெறாஉம் சீர்மை இனிது.

—புலவர் அ. மரியமைக்கேல், திருவரங்கம்.

ந்தைபல ஈன்று குடும்பத்தைக் காக்க
ன்று வருந்தல் அழகோ ?—பழங்குறள்போல்
லறிவுச் செய்கள் நமக்கிரண்டே உண்டானல்
ல்லற வாழ்வே இனிது.

—புலவர் மா. அரங்கநாதன், சல்லிப்பட்டி.

ழந்தை முகத்தைப்பார் ! கொஞ்சமிவ ளோடு
ழகியவர் வேறுமுகம் பாரார்—மழலையதால்
ல்லை எழிலாக்கும் இப்பிஞ்சைப் பார்த்திடா்
ல்லையென வாழ்வோம் இனிது.

—சி. செள. கருப்பன்செட்டி, திருச்சி-15.

ழந்தைகளே உங்களுக்கோர் கொண்டாட்ட நாளை
ழங்கிய நேருவுக்கு வாழ்த்து—முழங்க
றுவெடுப்பீர், நாட்டிலவர் வேண்டியநல் லின்பம்
றுவுழைப்பீர், என்றும் இனிது.

—புலவர் க. முத்துக்கருப்பன், பேரையூர்.

குழந்தை மனத்திற் குகந்த கவிபைப்
பழகுந் தமிழினில் பாங்காய்—அழகுற
மாற்றமின்றி மக்கள் மனத்தில் பதிந்திட
ஏற்றம் கொடுத்த லினிது.

—பூவன. தீனதயாளன், திருவண்ணுமலை.

குழந்தைநா ணுகிக் குமரியே உன்றன்
அழகுக் கரங்களில் ஆவேன் !—விழையும்
மணமாய்என் வாழ்வின் வழிகாட்டி யாய்நீ
இணைந்தால் எனக்கே இனிது !

—ந. பாகலால், அந்தியூர்.

குழந்தைமலர் கொவ்வைக் கனிவாய் குவித்து
மழலைசொல நெஞ்சம் மகிழும்—அழகுருவே
பிச்சிப்பூங் கையால் முகங்கிள்ளிப் பெற்றிடும்
'இச்'செனும் முத்தம் இனிது.

—முத்தமிழ்த்தாசன், சிறுகூடல்பட்டி.

குழந்தை அளவு குடும்பத்தில் வேண்டும் !
கிழவர் எனினும் குணத்தில்—குழந்தை
மனமிருத்தல் வேண்டும் ! மகவு, பகைசெய்
இனத்தார்க்கும் கூட இனிது.

—நா. பசும்பொற்கிழார், பாளையம்பட்டி.

குழந்தைகள் பேற்றைக் குறைக்குங் குடும்பம்
விழைந்தஇன்பம் துய்த்தே மிளிரும்—அழுகுறும்இம்
மாற்றத்தால் காணும் வளங்கள் தமிழ்நாட்டை
ஏற்றமுற வைக்கும் இனிது.

—வி. மு. உலகநாதன், சென்னை-7.

## வெண்பாப் போட்டி

குழந்தை குழறுமொழி கொண்டசெவி தன்னுள்
பழந்தமிழ்நூ லின்பமும் பாய்ந்து—விழைந்தநலம்
தப்பா தளிப்பதுபோல் தண்டமிழ்நல் லாட்சியுமே
எப்போதும் நல்கும் இனிது.

—கண. சீனிவாசன், மதுரை-1.

குழந்தை யெனப்பிறந்தேன் கொல்பசியில் நோயில்
விழுந்து தவிக்க விடாதீர்—எழுந்தேற்பீர்
" எல்லாம் இரண்டே இரண்டின்பின் எப்போதும்
இல்லா திருத்தல் இனிது. "

—சி.பி. அரங்கநாதன், நுங்கம்பாக்கம்.

குழந்தைகளைப் பெற்றே குடும்பத்தை நாளும்
அழகாய் நடத்துவாள் அன்னை ;—கிழமாகிப்
பேரனையும் பேணிப் பெருமையுறும் பெண்ணினத்தின்
நா மனதே இனிது.

—ஆர். லலிதா, மேல்பட்டாம்பாக்கம்.

குழந்தைகள் நாளாகக் கொண்டாடும் நம்முள்
நிழல்போல் நிலைத்தநல் நேரு—பழகிய
மைந்தர் பலருள்ளும் மாணிக்க மாய்வாழ்ந்த
த்தலைப் போற்றல் இனிது.

—சி. கைலாசம், ஈரோடு-7.

குழந்தை இளந்தென்றல் கொத்துமலர்ச் செண்டே
மழலைமொழிக் கீடுண்டோ மண்ணில்—அழகுச்
சுடர்விளக்கோ ! அன்பின் செழும்பரிசோ ! செந்தேன்
இடரகற்றும் வாழ்வில் இனிது.

—து.ம. இராமசாமி, கோவை-29.

குழந்தைக் கனியமிழ்தே ! குற்றமிலா உன்போல்
குழந்தைப் பிறப்பெடுத்தோர் குற்றம்—இழைத்தல்போல்,
வாழ்வில் செய்யாதே, ஊக்கம், உயர்நெறியால்
புகழ் நாட்டில் இனிது.

—அ. கோவரசு, அரக்கோணம்.

குழந்தை பலபெற்றுக் கோடிநோய் வாட்ட
ழந்திஅவை மாள்தல் அழகோ?—எழிலார்
ம்ப நலத்திட்டம் கூறும் வழியில்
டர்களைந்து வாழ்வோம் இனிது.

—ப. சண்முகானந்தம், தேவம்பாடி.

குழந்தைச் சிரிப்பில் குழலிசையில் கொஞ்சும்
தமிழில் தகுநெறியில் தாய்மை—விழுமியநல்
அன்பில் அருங்கலையில் ஆன்றமைந்த முப்பாலில்
இன்பத்தைக் காணல் இனிது.

—அ. முப்பாலிகை, திருப்பத்தூர்.

குழந்தைமன நேருவின் கோலத் திருநாள்
குழந்தைகள் நாளென்றே கொண்டோம்—மழகளிற்றை
ஒப்பவே நம்புதல்வர் ஓங்கும் வகைவளர்த்தே
எப்பகையும் வெல்வோம் இனிது!

—புலவர் ந. கருணாநிதி, வங்கனூர்.

குழந்தை மிகுந்தால் குடும்பத்தில் இன்பம்
இழந்து விடுதல் இயல்பே—குழந்தைகள்
ஒன்றுக்கு மேலாய் உதவா தெனக்கொண்டால்
என்றுமே வாழ்க்கை இனிது.

—இரா. பலாகிருட்டிணன், பாலூர்.

குழந்தை பிறந்து குலப்பெருமை காத்துப்
பழந்தமிழ்ப் பாங்குடன் கற்றே—இழந்த
தரமிகு வாழ்வு தரணியி லோங்க
இரண்டு பெறுத லினிது.

—ஆ. இளங்கண்ணன், கல்லுப்பட்டி.

குழந்தைச் சிறுவாயில் கூத்தாடும் தேன்சொல்,
அழகியவள் கண்ணசைவும் அன்னை—மொழியோடு
நன்னெறியில் செல்வமுடன் நாட்டுகிற நற்புகழும்
இன்பமுமே வாழ்வில் இனிது.

—அரசிக்கன்பன், காரைக்குடி.

குழந்தைக்கே அன்பைக் கொடுத்தாலும் நற்றாய்
இழந்தாரின் உள்ளம்போல் இன்றிப்—பழந்தமிழில்
தாலாட்டுப் பாடித் தடந்தோள் வளர்த்திட்டால்
ஏலாமை நீங்கும் இனிது.

—கோ. வேணுகோபாலன், சென்னை-39.

குழந்தைகள் உள்ள குடும்பந்தான் சோலை ;
மழலையில் லாமனையோ பாலை—சுழலுலகில்
துன்பங்கள் கோடி துளைப்பினும் பால்முகம்
இன்பம் தருமே இனிது.

—வி. ஆர். துரை, திருப்பத்தூர்.

குழந்தை மனமும் குவலயம் போற்றும்
மழலைச் சிரிப்பும் உலகம்—வழங்கும்
புதுமைக் கருத்தும் பொலிந்தநம் அண்ணு
இதயத்தில் வாழ்தல் இனிது.

—மு. கலாநிதி, அம்பத்தூர்.

குழந்தை பலபெற்றுக் கூட்டும் கவலைச்
சுழலில் தவித்தல் சுகமோ?—அழகாய்த்
திரண்ட தென்உரைக்கும் தேன்மொழிச் செல்வம்
இரண்டோ டிருத்தல் இனிது.

—சொ. மணிமொழி, வள்ளுவரகம்.

# வெண்பாப் போட்டி

குழந்தை இளந்தென்றல் ! கொஞ்சுதமிழ் மன்றம் !
அழகு நிலாப்பூ ! அமுதம் !—பழத்தேன் !
இருமழலை பெற்றூல்தான் ஈதெல்லாம் மெய்யாம் !
இருமை அருமை இனிது.

—புலவர் முத்துவேங்கடேசன், திருமயம்.

குழந்தை பிறந்த குரல்கேட்டுத் தாய்தான்
உழந்த துயர்மறப்பாள், உண்மை ;—தழைத்த
குடும்பக் கொழுந்திது கூட்டுக கோலம்,
இடும்பை எரித்தே இனிது.

—இரும்பொறை, காருடுகாத்தான்.

குழந்தை இளநெஞ்சம், கொண்டவன் போற்ற
மலர்காய்ப் பணிபுரிந் தோம்பும்— எழிலுரு
நல்லவை ஏற்ற ஒருவருக் கிப்புவியில்
இல்லற வாழ்வே இனிது !

—ஏகாம்பரம், தென்னம்பட்டு.

குழந்தை மனமே ! குமுத மலரே !
அழகிய பெண்ணேஎன் அன்பு—கெழுமிய
சித்திரமே ! காதலியே ! தேன்மொழியே ! நீயென்றும்
இத்தரையில் வாழ்க இனிது.

—அரவரசன், கீழஅரும்பூர்.

குழந்தை பெருக்கலிலோர் கொள்கையின்றி உள்ளம்
குழைந்த படிபெறுதல் வினை—குழைந்து
இருண்ட நறுங்கூந்தல் தோகையே ! வாழ்வில்
இரண்டைப் பெறலே இனிது.

—அமரன், அருப்புக்கோட்டை.

குழந்தைபல பெற்றுக் குடும்பம் துயரில்
அழுந்துவதி னின்றும் அகல—மழையே
திரண்டன்ன கூந்தல் தெரிவையே யாரும்
இரண்டு பெறுதல் இனிது.

—நாவரசு, விழுப்புரம்.

குழந்தை பெறுவதைக் கூட்டிப் பெருக்கி
இழக்கும் வளங்கள் இனிஏன்?—அழகே
இரண்ட குழந்தையைத் தீதற்ற மாந்தர்
இரண்டே பெறுவர் இனிது.

—இரா. பெரியசாமி, அருப்புக்கோட்டை.

குழந்தை குரலினிது ; கொள்ளுங் களமார்
உழவர் உழைப்பினி தோங்கும்—நிழலாக
வாய்த்த அரசினிது ; வற்ருத நற்றூண்டால்
மற்றுயர்தல் என்றும் இனிது.

—புலவர் அ. ஆறுமுகம், திருச்சி-20

குழந்தை மனமினிது ; குற்றமிலாப் பண்பால்
உழும்வாழ் வினிதே ; அறமும்—செழுந்தமிழும்
ஆட்சிக் கினிதே அறிவன்பும் சேர்ந்தாங்கு
மாட்சிமைகொண் டாளும் இனிது.

—வ. சீ. கி. மூர்த்தி, 'சிந்தகம்பள்ளி.

குழந்தை இரண்டும் குலவுதமிழ் மூன்றும்
நிழலாம் பொருள்நான்கும் நிற்க—அழகூட்டும்
பாவைந்து மாருப் பணிநாட்க ளேழென்றும்
தேவை தெவிட்டா தினிது.

—சாரதா ஆறுமுகம், இலப்பைக்குடிக்காடு.

குழந்தைப் பருவமது கொஞ்சமும் துன்பத்
தழல்பட்டு நோகாத தன்றே—கிழமாகிக்
கன்னங்கள் பள்ளத்தைக் கண்டபின் முற்பருவ
எண்ணங்கள் யாவும் இனிது.

—த. ச. தவசிமணி, அருப்புக்கோட்டை.

குழந்தை யிரண்டுபெற்றுக் கொண்டான் மகிழ
அழகிலும், அன்பான உண்டி—வழங்கி
வருவாய்க்குத் தக்கபடி வாழ்வதிலும் மேம்பட்(டு)
இருப்பாள் துணையே இனிது.

—புலவர் பெரு. வே.மருதையன், பாபநாசம்.

குழந்தைகள் பேசும் குதலை.மொழியும்
பழந்தமிழ்ப் பாணர் பயின்று—வழங்கிய
தொல்யா ழிசையும்சீர் தூக்கின் மழலையே
எல்லார்க்கும் ஆற்ற இனிது.

—சு. தருமர், மேலாண்மறைநாடு.

குழந்தையது வாழட்டும் ; கொள்கையில் மாற்றம்
பழுதில்லை ; பண்புயரும் பாரில்—வழுவகற்றிச்
சிறுவே! சிறுது வங்கத்தை அங்கமென
ஐ.நா.வில் சேர்த்தல் இனிது.

—அ. புருடோத்தமன், காவேரிப்பட்டணம்.

குழந்தை மலர்முகத்தைக் கொவ்வை இதழைப்
பழகுமுயர் பண்புடனே பேச்சின்—மழலையை
உண்ணுகின்ற காட்சியொ(டு) ஒடுகின்ற மாட்சியினைக்
கண்கொண்டு காண்டல் இனிது.

—தஞ்சை இளந்திரையன், கரந்தை.

குழந்தை, கடவுள் கொடுப்பதெனல் நன்று ?
குழந்தை இரண்டெனில்முக் கோண—முழக்கத்தை
இன்றே செயல்புரிவீர்! எல்லார்க்கும் செல்வமெனில்,
என்றும் இரண்டே இனிது.

—புலவர் அ.வே. காசிநாதன், கோடாலிக்





# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்



# புதிய கண்டுபிடிப்புகள்!

முத்து

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் துவக்கப்பட்டு இன்னும் 1½ ஆண்டுக் காலம்கூட ஆகவில்லை. ஆயினும் அது தமிழ்நாட்டு உழவர் பெருமக்கள் விழுமிய முறையில் வேளாண்மை செய்து உயர்வு பெறப்பலபுதிய கண்டுபிடிப்புகளை வெளியிட்டுள்ளதுடன், உயரிய சாகுபடி முறைகளையும் அவ்வப் போது வெளியிட்டு வருகிறது. அவைகளை எல்லாம் தொகுத்து உழவர் பெருமக்களின் நலன் கருதித் 'தமிழரசு' வெளியிட்டு வருகிறது. அண்மையில் வந்த தகவல்களைக் கீழே படைத்துள்ளோம்.

### 1. உயர் விளைச்சல் நெல்வகைகளுக்கு உரமிடும் முறைகள்

உயர் விளைச்சல் நெல்வகைகளைச் சமீபகாலமாகத் தமிழக உழவர் பெருமக்கள் பெருவாரியாகப் பயிரிடுவதால், அவைகளுக்குத் தேவையான உர அளவுகள், உரமிடும் முறைகள் ஆகிய விவரங்களைத் தமிழக உழவர் பெருமக்களும், விரிவாக்கப் பணியாளர்களும் நன்கு தெரிந்திருப்பது மிகவும் இன்றியமையாததாகும். குட்டையான எல்லா உயர் விளைச்சல் நெல் வகைகளும் ஒரே அளவு தழைச்சத்தை மண்ணிலிருந்து கிரகித்துக் கொள்வதில்லை. மண்ணில் இருக்கும் தழைச்சத்தின் அளவும் இடத்திற்கு இடம் மாறுபட்டிருப்பதால், ஓரளவு மாறுபட்ட உர அளவுகள் பரிந்துரைக்கப் படுகின்றன.

பருவ மழையுடன் ஒன்றியிருக்கும் பட்டங்களைவிட, கோடைப்பட்டம் அல்லது நவரைப்பட்டத்தில் குட்டையான உயர் விளைச்சல் நெல் வகைகள், பொதுவாகப் பல இடங்களில் ஒரே சீராக அதிக மகசூலை அளிக்கின்றன. ஓர் ஏக்கரில் உயர் விளைச்சல் நெல் வகையைச் சாகுபடி செய்ய ஆகும் செலவில் சுமார் மூன்றில் ஒரு பங்கு, உரத்திற்காகச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, உயர் விளைச்சல் தரும் நெல்வகை, உரத்தின் முழுப் பயனைப் பெற்று நல்ல மகசூல் கொடுக்கத்தக்க சூழ்நிலையை ஆராய்ந்து, அறிந்து, அதன்படி உரமிடவேண்டும்.

பொதுவாக, உயர்விளைச்சல் நெல் வகைகளுக்கு, ஏக்கருக்கு 75 கிலோ தழைச்சத்து, 35 கிலோ மணிச்சத்து, மற்றும் 35 கிலோ சாம்பல் சத்து பரிந்துரைக்கப்படுகிறது. 35 கிலோ மணிச்சத்துக் கொடுக்கும் அளவுக்குச் சூப்பர் பாஸ்பேட்டும், அதே அளவு சாம்பல் சத்துக் கொடுக்க, மூரியேட் ஆப் பொட்டாஷ் உரமும், கடைசி உழவின் போது அடியுரமாக இடவேண்டும். அடுத்து, பரிந்துரைக்கப்படும் தழைச்சத்தின் ஒரு பகுதி, அம்மோனியம் சல்பேட்டாகவோ அல்லது யூரியாவாகவோ நடவின்போது தூவப்படுகிறது. நேரிடை உரங்களைத் தவிர, காம்ப்ளெக்ஸ் உரம் அல்லது கலப்பு உரங்களை உபயோகிக்கும் போது, மேலே பரிந்துரைக்கப்பட்ட சத்துக்களின் அளவுகளைக் கருத்திற்கொள்வது அவசியம்.

நல்ல தண்ணீர் வசதியும், வடிகால் வசதியும் உள்ள நன்செய் பூமிகளில் தழைச்சத்து கொடுக்கும் உரங்களை அடியுரமாக இடும்போது, மேலாகத் தூவி விடுவது பழக்கத்தில் உள்ளது. அவ்வாறில்லாமல், தழைச்சத்து அளிக்கும் உரங்களைச் சற்று ஆழமாகப் போட்டு விட்டால், நடவு செய்யப்பட்ட பயிருக்கு எதிர் பார்த்த அளவு தழைச்சத்தின் பயன் கிடைக்காமல் போய் விடுகிறது. மேலுரமாகத் தழைச்சத்து கொடுக்கும்போது, உரங்களைச் சுமார் 2 செ. மீ. அளவு தண்ணீரை வயலில் இருத்திக் கொண்டு போடுவது அவசியம். அப்பொழுது வயலிலுள்ள தண்ணீர் மடைகளையும் நன்ருக அடைத்து விடவேண்டும். வரிசை வரிசையாக நடவு செய்த வயல்களில், 20 செ.மீ. இடைவெளியில் 'ரோட்டரி வீடர்' என்ற சுழலும் களை எடுக்கும் கருவியை உபயோகித்தால் தழைச்சத்தில் சேதமேற்படாமல் பாதுகாக்கலாம். வளரும் நெற்பயிருடன் போட்டியிடும் களைப் பயிர்களைக் கட்டுப்படுத்த, நன்செய் வயல்களில் சீராகத் தண்ணீர் இருத்திவைக்கவேண்டும்.

அடுத்து, தழைச்சத்து அளிக்கும் உரங்களை வளரும் பயிருக்கு எந்த விகிதத்தில் அடியுரம், மற்றும் மேலுரமாகப் பிரித்துக்கொடுப்பது என்பதைப் பற்றி ஆராய்வோம். தற்போது பரிந்துரைக்கப்படும் தழைச் சத்தின் அளவில் சரி பாதியோ அல்லது பாதிக்குச் சற்று அதிகமாகவோ அடியுரமாக அளிக்கப்படுகிறது. மற்றப் பகுதி, மேலுரமாக ஒரு முறையோ அல்லது இரண்டு முறைகளோ கொடுக்கப்படும் பழக்கம் உழவர் பெருமக்களிடம் பரவியிருக்கிறது. வளரும் சில நுணுக்கங்களை ஆராய்ந்து அறிந்து, அதற்கேற்றுற்போல், தக்க தருணத்தில் தழைச்சத்து அளிக்கும் உரங்களை இட்டால், தழைச்சத்துக் கிரகிக்கப்படும் திறனை அதிகரிக்கலாம்.

அதாவது, பரிந்துரைக்கப்படும் தழைச்சத்தளவின் ஒரு பகுதி அடியுரமாகப் போடப்பட்டது என்று வைத்துக் கொள்வோம். பாக்கியுள்ள அளவின் உரத்தை இரு பாகங்களாகச் செய்து தூர்கள் கிளைக்கும் சமயத்தில் ஒரு பாகமும் (அதாவது நடவு செய்து 15 அல்லது 20 நாட்களுக்குள்) மீண்டும் தண்டு உருளும்அல்லது கதிர்விட ஆயத்தம் செய்யும் சமயத்தில் ஒரு பாகமும் (அதாவது நடவு செய்து 60 அல்லது 75 நாட்களுக்குள்) இடுவது மிகவும் சிறந்தது. மணற்பாங்கான வயல்களுக்கோ அல்லது

மத்தியகால நெல் வகைகள் பயிர் செய்த சமயத்திலோ, பயிர் புடையில் இருக்கும் போது—அதாவது தொண்டைக் கதிர் பருவத்தில்—ஒருமுறை தழைச்சத்துக் கொடுத்தால் நல்ல மகசூல் கிடைக்கிறது. பொதுவாகப் பார்க்கும் போது, உயர் விளைச்சல் நெல் வகைகளுக்குப் போதிய தழைச்சத்து, கொடுத்துத் தூர்கள் கிளைக்க வகை செய்யவேண்டும். மேலுரமாகத் தழைச்சத்து இரண்டு அல்லது மூன்று பகுதிகளாகத் தக்க தருணத்தில் அளிக்கப்பட்டால், சத்து முழுவதும் பயிரினால் கிரகிக்கப்படுகிறது. அதற்கேற்றாற்போல் கதிர்களில் மணிகள் அடர்த்தியாகப் பிடிப்பதுடன், மணிகள் பதராகவும், கருக்காய்களாகவும் மாறுவது தவிர்க்கப்படுகிறது.

மேலும், நெல் மணிகளில் புரதச்சத்து அதிகமாகச் சேமிக்கப்பட வழி செய்கிறது. மேலுரமாகத் தழைச்சத்துக் கொடுக்கும்போது ஒரே சமயத்தில் பெரும் பகுதியை அளித்தால், பயிர் பூச்சியால் தாக்கவோ அல்லது பூசணத்தால் சேதமடையவோ ஏதுவாகும். ஆகவே, இரண்டு அல்லது மூன்று முறைகளில் தழைச்சத்து உரத்தைப் பிரித்து அளித்தால் மேலே குறிப்பிட்ட நஷ்டங்களைத் தவிர்க்கலாம்.

பொதுவாக மண்ணின்வளம், சாகுபடி செய்யப்படும் நெல் வகை, அதன் வயது, தண்ணீர் வசதி மற்றும் சாகுபடி செய்யப்படும் பட்டம் ஆகியவற்றைப் பொறுத்துத்தான், எவ்வளவு தழைச்சத்து உரம் இடவேண்டும் என்றும், எவ்விதத்தில் பிரித்து அடியுரமாகவும், மேலுரமாகவும் இடவேண்டும் என்றும் நிர்ணயிக்க வேண்டும். தழைச்சத்து உரம் அதிகமாகச் சேதமாகாமல் சாகுபடி செய்யப்படும் உயர் விளைச்சல் நெல் வகைகளால் பயன்படுத்தப் பட, பல உழவியல் ஆராய்ச்சிகளுக்குப் பிறகு, கீழ்க்கண்ட வழிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

1. மண்ணின் வளத்தையும், தண்ணீர் வசதியையும் பொறுத்து இரண்டு முதல் நான்கு முறைகள் தழைச்சத்தைப் பிரித்து மேலுரமாக இடலாம்.

2. ஒவ்வொருமுறை மேலுரம் இடும்போதும், ஏக்கருக்கு 10 கிலோ அல்லது 12 கிலோ தழைச்சத்திற்கு மேல் அளிக்கக் கூடாது.

3. மண்ணில் தழைச்சத்து குறைவாக இருந்தால், அடியுரம் சற்று அதிகமாகவே கொடுக்கப்பட வேண்டும்.

4. மண்ணில் தழைச்சத்து அதிகமாக இருந்தால், மொத்தம் கொடுக்கப்படும் தழைச்சத்தைக் குறைத்து, மேலுரமாக ஒரு முறை சிறிதளவு கொடுத்தால் போதும்.

5. தூர்கள் குறைவாகக் கிளைக்கும் நெல் வகைகளுக்கு ஓரளவு அதிகமான தழைச்சத்து அடியுரமாக அளிக்கப்பட வேண்டும்.

6. குறுகியகால நெல்வகைகளுக்கு, அதிகமான தழைச்சத்தை அடியுரமாகக் கொடுத்து, மேலும் ஒரு முறை கொடுக்கலாம்.

7. நீண்டகால நெல் வகைகளுக்கு மேலுரத்தை மூன்று அல்லது நான்கு தடவைகளில் பிரித்துக் கொடுக்கலாம்.

8. பயிர் நடவு செய்த தருணத்தில் குளிர்காலப் பட்டமாக இருந்தால், மேலுரமாகக் கொடுக்கப்படும் தழைச்சத்தின் அளவை அதிகப்படுத்தலாம்.

9. 'குலைநோய்' அல்லது 'கொள்ளை நோய்' மேலும் தோகையில் வரும் 'பிளாட்' நோய், சாகுபடி செய்யப்படும் நெல்வகைகளைத் தாக்காமல் இருக்கத் தழைச்சத்தை மேலுரமாகச் சிறுகச் சிறுகப் பிரித்து அளித்தல் அவசியம்.

10. நேரிடை விதைப்புச் செய்த வயலுக்கு அடியுரத்தைக் குறைத்து, மேலுரம் மூன்று, நான்கு முறைகளில் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும்.

11. சற்று வயது முதிர்ந்த நாற்றுகளைப் பயன்படுத்தும் போது அடியுரம் அதிகமாகவும், மேலுரம் குறைவாகவும் உபயோகிக்க வேண்டும்.

12. மானாவாரிப் பயிருக்கு, மழைவரும் தருணமறிந்து, சிறிது சிறிதாக மேலுரம் அளிக்கப்படவேண்டும்.

மேற்கூறிய நிர்ணயிக்கப்பட்ட அனுபவரீதியான வழிமுறைகளைக் கவனத்தில் இருத்திக்கொண்டு, உழவர் பெருமக்கள் உயர் விளைச்சல் நெல் வகைகளை நல்லமுறையில் பயிர் செய்து அதிக விளைச்சல் அடையமுடியும்.

## வெண்பாப் போட்டி-47

'ஆண்டு' எனத் தொடங்கி 'அன்பு' என முடித்தல்.

முடிவு நாள் : 1—12—1972

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
''தமிழரசு'' அலுவலகம்,
அரசினர் தோட்டம்; சென்னை-2.

குறிப்பு :

அஞ்சல் அட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக் கொள்ளப்படும்.

பவானி சாகர் பகுதிக்கேற்ற
### அதிக விளைச்சல் தரும் புதிய வீரியச் சோளம்

சி. எஸ். எச். 1 வீரியச் சோளத்தை வெளியிட்ட நாள் முதல், பல வீரியச் சோள ரகங்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பவானி சாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் நல்ல ஒத்துழைப்புடன் தொடர்ந்து பரிசோதிக்கப்பட்டன. இந்தச் சோதனைகள் பருவமழைப் பட்டத்திலும், கோடைப் பட்டத்திலும் நடத்தப்பட்டன. கோடைப் பருவத்தில் கோ. 18 சோளத்துடனும், பருவ மழைப் பட்டத்தில்உள்ளூர் செஞ்சோளத்துடனும் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டன.

ஓர் எக்டேருக்கு 20 வண்டி கம்போஸ்ட் உரத்துடன் 420 கிலோ சூப்பர் பாஸ்பேட் (67.26 கிலோ மணிச்சத்து) அடியுரமாகப் போடப்பட்டது. 560 கிலோ அம்மோனியம் சல்பேட்டை (112.00 கிலோ தழைச்சத்து) ஒரு எக்டேருக்கு இரு சம பங்காகப் பிரித்து, முதல் பகுதியை விதைக்கும் போதும், மற்றப் பாதியை விதைத்த ஒரு மாதத்திற்குப் பிறகும் போடப்பட்டது.

வரிசைக்கு வரிசை 45 செ. மீட்டரும், செடிக்குச் செடி 15 செ. மீட்டர் இடைவெளியும் விட்டு நடப்பட்டது. நடவின் போது 1 மீட்டர் நீளத்திற்கு 1.5 கிராம் 'திம்மட்' (Thimet) குருணைகள் போடப்பட்டன. நட்ட 15-வது நாளில் பயிர்ப் பாதுகாப்புக்காக என்ட்ரின் தெளிக்கப்பட்டது. 30-வது நாளில் மற்றொருமுறை என்டிரின் மருந்து தெளிக்கப்பட்டது. நட்ட 40-வது நாளில் எக்டேருக்கு 15 கிலோ வீதம் என்டிரின் குருணைகள் குருத்தில் போடப்பட்டன. கதிர் விடும் தருணத்தில் பி. எச். சி. 10 சதத் தூளும், டி. டி. டீ. 5 சதத் தூளும் கதிர் நாவாய்ப் பூச்சியைத் தடுக்கத் தூவப்பட்டன.

இந்தச் சோதனையில் எம்.எஸ். 2219× ஐ. எஸ். 3541 என்ற வீரியச் சோள ரகமானது தொடர்ந்து பருவமழைப் பட்டத்திலும், கோடைப் பட்டத்திலும் உள்ளூர் ரகங்களைவிட அதிகவிளைச்சல் கொடுத்துள்ளது. அதாவது இந்த ரகம் 1968-69, 1969-70-ஆம் ஆண்டுகளில் மழைப் பருவத்தில் ஒரு எக்டேருக்கு முறையே 6,300 கிலோ, 5,975 கிலோவும், கோடைப்பட்டத்தில் 6,095 கிலோ, 8,790 கிலோ தானிய விளைச்சலும் கொடுத்துள்ளது. இது மங்கலான நடு இலைநரம்பைக் கொண்டுள்ளதால், நல்ல சுவையுள்ள தட்டையையும் கொடுக்கிறது.

> சமுதாய நீதி வேண்டும் என்று இன்று மக்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். ஏழையாகப் பிறந்தால் ஏழையாகவே இருக்கவேண்டும் என்று நினைத்து 'விதி', 'தலை எழுத்து' என்றெல்லாம் பேசுகிற பேச்சை இன்றைய மக்கள் குறைவாகவே மதிக்கிறார்கள். எனவே, செல்வர்க்கும், வறியவர்க்கும் இடையேயுள்ள வேற்றுமைகளை நீக்க முயல்வது தவிர வேறு வழியில்லை. எல்லாருக்கும் சமவாய்ப்பு ஏற்படுத்தும் வகையிலே நாம் முயலத்தான் வேண்டும்.
>
> —நேரு

இதைத்தவிர இந்த ரகமானது சி. எஸ். எச். 1 ரகத்தைவிட உயரமானது. அதாவது சி. எஸ். எச். 1 சோளத்தின் உயரம் 136 சென்டி மீட்டர். இந்த எம். எஸ். 2219× ஐ. எஸ். 3541 ரகத்தின் உயரம் 216 சென்டி மீட்டர். இதனால் இந்தச் சோள ரகத்தின் சோளத் தட்டை விளைச்சல் சி. எஸ். எச். 1 சோள ரகத்தைப் போல் இருமடங்காக இருக்கும். இந்த ரகம் முத்துப் போன்ற வெண்ணிற மணிகளைக் கொண்டிருப்பதுடன், சாயாத தன்மை வாய்ந்ததாகும்.

### 3. திராட்சையைத் தாக்கும் சொறி நோய்த் தடுப்பு முறைகள்

திராட்சையில் காணப்படும் பூச்சிகளில் புள்ளி வண்டு, இலைப் பேன், இலை சுருட்டுப் புழு போன்றவை இலைகளைப் பாதிக்கின்றன. ஆனால் இவைகளைவிடத் திராட்சைக் குலைகளைத் தாக்கும் 'திரிப்ஸ்' என்னும் பேன் இப்பொழுது விரைவாகப் பரவி வருகிறது. குறிப்பாகக் கோவை மாவட்டத்தில் இப் பேனின் தாக்குதல் அதிக அளவில் காணப்படுகிறது. இப்பேன்களே திராட்சையில் சொறி நோயை ஏற்படுத்துகின்றன.

'திரிப்ஸ்' இனத்தைச் சேர்ந்த 'ஸ்கிரிட்டோதிரிப்ஸ் டார்ஸாலிஸ்' என்ற மிகச் சிறிய பழப்பேனே இச் சொறி நோயை உண்டாக்குகிறது. சாதாரணமாக இப்பேன், திராட்சையில் தங்கி இனப் பெருக்கம் செய்வதில்லை. இவைகள் சீமைக்கருவேல், ஆமணக்கு, மிளகாய், சோயா மொச்சை போன்ற செடிகளில் பெருமளவில் இனப் பெருக்கம் செய்கின்றன.

வயதடைந்த பூச்சிகளே பழக்குலையைத் தாக்குகின்றன. திராட்சைக் கொடிகள் கவாத்து செய்யப்பட்டு புதிதாகக் காய்கள் பிடிக்க ஆரம்பித்ததிலிருந்து, இலை பழுக்கும் வரையிலும் இத்தாக்குதலிருக்கும். இரவிலும், குளிர்ந்த மாலை நேரத்திலும் இப்பூச்சிகள் பழக்குலைகளைத் தாக்குகின்றன.

இப்பூச்சிகள் காய்களின் மெல்லிய தோலைச் சுரண்டி, அதனின்று கசியும் சாற்றை உறிஞ்சுகின்றன. இதனால் காயின் மேல் தோலில் தேமல் போன்ற படைகள் தோன்ற ஆரம்பிக்கின்றன. நாளடைவில் இவைகள் சொறி பிடித்தது போன்றாகி, வரண்டு, கடினம் ஆகிவிடுகின்றன. மிகக் கடுமையான தாக்குதலில், காய்கள் வளர்ச்சியுறாமலும், வெடித்தும் காணப்படுகின்றன. அதனால் காய்களின் தூய்மை பாதிக்கப்பட்டுப் பற்பல பூஞ்சாள நோய்கள் பரவ ஏதுவாகின்றன. பாதிக்கப்பட்ட குலைகள் விற்பனை மதிப்பை இழந்துவிடுகின்றன. இக்கனிகள் சுவை குன்றிவிடுவதுடன், சாறுமற்று உவர்ப்பாக இருக்கும். இதனால் இலாபம் வெகுவாகக் குறைகிறது.

இப்பூச்சியினால் குறிப்பாகப் 'பன்னீர்,' 'அனப்-இ-ஷாஹி', 'மஸ்காட்' 'கந்தாரி', 'பெங்களூர் புளு' போன்ற உயர் விளைச்சல் தரும் திராட்சை ரகங்கள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றன. மிகக் கடுமையான தாக்குதலால் அனப்-இ-ஷாஹி ரகத்தில் 70 முதல் 80 சதம் வரை சேதமேற்படலாம். 'விதையில்லாத ரகம்', 'கராச்சி', 'பக்டி' போன்ற ரகங்களில் இப்பூச்சியின் தாக்குதல் குறைவாகக் காணப்படுகிறது.

தடுப்பு முறைகள்—இப்பேனின் தாக்குதலைக் கட்டுப்படுத்தவும், சொறி நோயைத் தடுக்கவும் டி. டி. டீ. 0·1 சதத்தையோ டிரைதியான் 0·06 சதத்தையோ கார்பரில் 0·1 சதத்தையோ, மேலத்தியான் 0·1 சதத்தையோ தெளிக்கவும்.

கவாத்து செய்த நாளிலிருந்து ஒருமாதம் கழித்து, முதல் முறை

யாகத் தொடங்கி 10 நாட்கள் அல்லது ஒரு வாரம் இடைவெளி விட்டு 5 அல்லது 6 தடவை மருந்து தெளிக்கவேண்டும். சில இடங்களில் டி. டி. டீ. அல்லது கார்பரில் தெளிப்பதால் சிலந் திப் பூச்சி இலைகளில் தோன்ற லாம். இதனைக் கட்டுப்படுத்த அதனுடன் நனையும் கந்தகத்தைச் சேர்த்துத் தெளிக்கவும். வேலி களாகச் சீமைக்கருவேல் இல்லாம லிருந்தால் இப்பூச்சியைக் கட்டுப் படுத்த மிக உதவியாயிருக்கும். தவிரச் சுற்றியுள்ள இடங்களில் மிளகாய், பருத்தி, ஆமணக்கு போன்ற செடிகளிலிருந்தால் தவறுமல் மருந்தடித்து வருதல் மூலமும் இப்பேனைக் கட்டுப்படுத் தலாம்.

மருந்து தயாரிக்கும் முறை

டி.டி.டீ. 50% டபிள்யூ.பி.
டிரைதியான் 20% இ.சி.
மேலத்தியான் 50% இ.சி.
கார்பரில் 50% டபிள்யூ.பி.

மேற்கூறிய திறன் கிடைக்க ஒரு லிட்டர் தண்ணீரில் கலக்க வேண்டிய மருந்தின் அளவு முறையே 2 கிராம், 3 மி.லி., 2 மி.லி., 2 கிராம் ஆகும்.

4. பவானி சாகர் பகுதிக்கு ஏற்ற வீரிய கம்பு

வீரியக் கம்பு ரகங்கள் ஏறக் குறைய சாதாரண நாட்டுக் கம்பு ரகமான அரிசிக் கம்பின் பரப்பளவு முழுவதையும் ஆக்கிர மித்துக் கொண்டதற்கு, இவைக ளின் எளியசாகுபடி முறைகளும், சிறந்த மகசூலும், அதிகப் பூச்சி களும் நோய்களும் தாக்காத தன்மைகளுமே காரணமாகும்.

பவானிசாகர் பகுதிக்கு ஒரு சிறந்த வீரியக் கம்பு ரகத்தைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டும், அதற்கான கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகளை நிர்ண யிக்கும் பொருட்டும் எச். பி. 1, எச். பி. 3, எச். பி. 4 மற்றும் எக்ஸ் 3 ஆகிய ரகங்கள் பவானி சாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதிக்கப்பட் டது. இந்தச் சோதனைகள் மானு வாரியிலும், பாசனத்திலும் நடத்தப்பட்டன.

எச். பி. 3 கம்பு, மூன்று பாசனப் பட்டத்திலும், ஒரு எக்டேருக்கு மிக அதிகச்சராசரி விளைச்சலாக 2,570 கிலோ தானியம் கொடுத்தது. இந்த மூன்று பட்டத்திலும் நடத்திய 27 வகையான பல அளவு உரப் பரிசோதனைகளில் எக்டே ருக்குச் சராசரியாகக் கீழ்க்கண்ட வாறு மகசூல் கிடைத்துள்ளன.

எச்.பி. 3—2,570 கிலோ.
எச்.பி. 4—2,120 கிலோ.
எச்.பி. 1—2,032 கிலோ.
எக்ஸ். 3—1,232 கிலோ.

எச். பி. 3 கம்பு ரகத்தைப் பாசனப் பயிராகச் சாகுபடி செய்ய எக்டேருக்கு 150 கிலோ தழைச் சத்து, 38 கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து இடு வதே சிக்கனமான உர அளவு என்று நிர்ணயிக்கப்பட்டது.

இந்த உர அளவில் எச். பி. 3 கம்பு ரகம் எக்டேருக்கு 3,235 கிலோ தானிய விளைச்சல் கொடுத் துள்ளது.

இரண்டாண்டுகளாக நடத்தப் பட்ட மானுவாரியப் பயிர்ச் சோதனையில் கிடைத்த பல் வேறு வீரிய ரகங்களின் விளைச்சல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| ரகம். | விளைச்சல் ஒரு எக்டேருக்கு |
|---|---|
| எச்.பி. 1 | 1,080 கிலோ |
| எச்.பி. 4 | 1,085 ,, |
| எச்.பி. 3 | 1,432 ,, |
| எக்ஸ். 3 | 900 ,, |

சிறந்த, சிக்கனமான, மானு வாரி வீரியக் கம்புப் பயிருக் கேற்ற உர அளவானது, ஒரு எக்டேருக்கு 50 கிலோ தழைச் சத்து, 25 கிலோ மணிச்சத்து, 5 கிலோ சாம்பல் சத்து எனக் கண்டறியப்பட்டுள்ளது. இந்த உர அளவில் எச். பி. 3 கம்பின் சராசரி விளைச்சல் எக்டேருக்கு 2,000 கிலோ தானியமாகும்.

எனவே, இந்தச் சோதனைகளி லிருந்து பவானி சாகர் பகுதி யில் மானுவாரியாகவும், பாச னப் பயிராகவும் சாகுபடி செய்ய எச். பி. 3 கம்பு ரகமே தலைசிறந்த வீரியக் கம்பு ரக மெனத் தெளிவாகியுள்ளது.

தகவல்: தகவல் தொடர்பு நிலையம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம் புத்தூர்-3.

## மருந்து தெளிக்க உதவும் புதிய பம்பு

'பசுமைப் புரட்சி' பட்டி தொட்டி எங்கும் பரவிவருவ தால், பூச்சிகளின் தாக்குதலி லிருந்து பயிர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கத்துடன் பூச்சி மருந்துகள் தெளிக்கும் பழக்கம் முக்கியத்துவம் பெற்று வருகிறது. பொதுவாக விசைத் தெளிப்பான்கள் (Power sprayers) அல்லது கைகளால் இயக்கும் தெளிப்பான்கள் மூலமாகவே பூச்சி மருந்துகள் தெளிக்கப் படுகின்றன. விசைத் தெளிப் பான்களின் விலை அதிகமாக இருப் பதுடன், சாதா ரண உழவர்கள் எளிதில் பயன் படுத்த முடியாத அளவுக்கு அமைந்துள்ளது.

கல்கத்தாவைச் சேர்ந்த திரு எஸ்.எஸ். காத்ரா அவர்கள் கால் களால் இயக்கும் பம்பு (Foot operated pump) ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார். இப் பம் பினை பூச்சி மருந்துக் கரைசல் நிரம்பிய கொள்கலனுடன் (container) இணைக்கலாம்.

இப்புதிய சாதனத்தில் 2 சிறு பம்புகள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு பம்பிலும் உருளைக் குள் செல்லும் 'பிஸ்டன்' உள் ளது. இப் பம்புகள் இதற்கென் றே சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட பூட்சுகளின் (Specially designed shoes) குதி (Heels) பாகத்தில் பொருத்தமாக வைக் கப்பட்டுள்ளன. இப்பூட்ச களை அணிந்துகொண்டு இப் பம்பினை இயக்குபவர் நடந்தால், அவருடைய எடையின் காரண மாக குதிகாலில் ஏற்படும் அழு த்தத்தால், பம்புகள் ஒன்று மாற்றி ஒன்றாக இயங்குகின்றன. அவ்வாறு அவ்விரு பம்புகளும், மாறி மாறி இயங்கும்பொழுது பூச்சிமருந்துக் கரைசல் கொண்ட கொள்கலனுடன் இணைக்கப் பட்ட தெளிப்பான் மூலம் மருந்துக்கரைசல் தெளிக்கப்படு கிறது.

இந்த எளிய ஆனால் பயனுள்ள பம்பினை உருவாக்கிய திரு எஸ். எஸ். காத்ரா அவர்களுக்குப்புதிய கண்டு பிடிப்புகளை ஊக்குவிக் கும் வாரியம் 2,000 ரூபாய் பரிசு வழங்கியுள்ளது.





# வயிற்றில் வரும் புற்றுநோய்

## முன்னுரை

ஒற்றைச் சாண் வயிறு இல்லா விட்டால் உலகில் வாழ்வும் இல்லை; வளர்ச்சியு மில்லை; வளமும் தேவையில்லை.

பசிதான் உலகையே இயக்குகிறது, என்றான் ஓர் அறிஞன். 'பசி வந்தால் பத்தும் பறந்து போம்' என்பதும் உண்மை. பசியே வராவிட்டால், உடலில் இருந்து உயிரே பிரிந்து போகுமே.

ஆகவே வயிற்றைப் பேணுவீர்; வாழ்வைக் காணுவீர் என்று, வயிற்றின் இயல் பறிந்து பலரை வாழவைத்திடப் பணியாற்றும் டாக்டர் என். ரங்கபாஷ்யம் நமக்கு அறிவுரை தருகிறார்; புற்றுநோய் பற்றினால் மரணமே பற்றிக் கொண்டதாக மருண்டு நிற்கும் மக்கட்கு 'அஞ்சற்க' என்று அபயமும் தருகிறார்.

புற்று நோயைக் குணப்படுத்தவே முடியாது என்ற கருத்து எப்படியோ பொது மக்களிடையே நிலவி வருகிறது. குணப்படுத்த முடியாமற் போவதற்குரிய காரணம், முற்றிய பிறகே நோயாளிகள் மருத்துவம் பெற வருவர்; அல்லது மருத்துவத்தைத் தாங்கிக் கொள்ளும் சக்தி கூட இல்லாதவர்களாக நோயாளிகள் இருப்பர். இந்த இரண்டு நிலைகளிலும் நோயைக் குணப்படுத்த முடிவதில்லை. என்னுடைய மருத்துவப் பிரிவில் வயிற்றில் ஏற்படும் நோய்களுக்கே சிகிச்சையளித்து வருகிறோம். வயிற்றில் புற்று நோய் ஏற்பட்டு அல்லற்படும் நோயாளிகளை நாங்கள் பார்க்கிறோம். இரைப்பை, குடல் ஆகியவற்றில் ஏற்படும் புற்றுநோயின் இயல்பு பற்றித் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

வாய் முதல் ஆசனவாய்வரை உணவுக் குழாய், இரைப்பை, குடல் ஆகியவை ஒரு தொடராக அமைந்துள்ளன; உணவு, வாயிலிருந்து உணவுக் குழாய் வழியாக இரைப்பையை அடைகிறது. உணவுக் குழாயின் மேற்பகுதி, நடுப்பகுதி அல்லது கீழ்ப்பகுதியில் புற்று நோய் ஏற்படலாம்.

உணவுக் குழாயில் நோய் ஏற்பட்டால், ஆரம்பத்தில் உணவு செல்லுவதில் ஏதாவது ஒரு கோளாறு ஏற்படும். புண் அல்லது சதை வளர்ச்சி அதிகப்பட்டுவிட்டால், உணவுக் குழாயின் உள் சுற்றளவு குறைந்து, உணவை விழுங்க முடியாதபடி ஆகும். சிலருக்கு உமிழ்நீரைக் கூட விழுங்க முடியாதபடி இருக்கும். இதில் வேதனை என்னவென்றால், இந்த நோயாளிகளுக்கு நல்ல பசியும், உண்ண வேண்டும் என்ற ஆசையும் இருக்கும். ஆனால், உணவை உட்கொள்ள முடியாது. உணவை விழுங்க முடியாமல் தவித்துச் சாப்பிட முடியாமல் மெலிந்து, எலும்பும், தோலுமாக ஆகிய நிலையில் எங்களிடம் வருகிறார்கள். இந்த நிலையில் அவர்களைச் சிகிச்சைக்குத் தக்கபடி சக்தியூட்டி அறுவைச் சிகிச்சை அல்லது ஒளிக் கதிர் சிகிச்சை ஆகியவற்றுக்கு ஏற்றபடி உடலை ஆயத்தப்படுத்தவே நாளாகி விடுகிறது.

முன்னதாகவே வந்தால் நோயின் தன்மையை எளிய சோதனையின் மூலம் தெரிந்து கொள்ளலாம். உணவுக் குழாயின் உட்புறத்தில் உள்ள நோயின் அறிகுறிகளை ஒரு காட்சிக் கருவியின் மூலம் காணலாம். நிழற்படம் போல உள்ளுறுப்புகளைக் காட்டும் கருவி ஒன்றின் மூலம் காணலாம். தேவையானால் உடற் சதையினைச் சோதித்து நோயின் இயல்பை அறிந்துகொள்ளலாம். 'பேரியம்' எனப்படும் மாவினைக் கரைத்து உட்கொள்ளச் செய்து கதிர்ப்படம் மூலம் நோய் ஏற்பட்டுள்ள பாகம் எது என்பதைக் கண்டு கொள்ளலாம். நோயின் தொடக்கக் காலத்திலேயே மருத்துவம் செய்யப்படுமானால், வெற்றி கிடைக்கிறது.

புகை பிடிப்பதால் இருதய நோயும், நுரையீரலில் புற்று நோயும் வருவதோடு, உணவுக் குழாயிலும் புற்று நோய் ஏற்படுகிறது.

அதற்கடுத்து, பொதுவாகப் புற்று நோய் வரும் இடம் இரைப்பைதான். நம் நாட்டில் நோயாளிகள் மிகவும் காலங் கடந்து வருவதால் நமது சிகிச்சையால் கிடைக்கும் பயன் பிற நாடுகளில் கிடைப்பதை விடக் குறைவாகிவிடுகிறது. பிற நாடுகளில் நோய் தாக்கத் தொடங்கியவுடனேயே சிகிச்சையும் செய்யத் தொடங்கி விடுவதால் வெற்றி கிடைக்கிறது.

இரைப்பையில் புற்றுநோய் ஏற்படும் ஒருவருக்கு ஆரம்பத்தில் சில அறிகுறிகள் காணப்படும். பசியிருக்காது, உணவின் சுவைதெரியாது. சாப்பிட்ட பிறகு வாந்தி எடுக்கும். சாப்பிட்ட பிறகு வயிறு ஏதோ அதிகப்படியாக நிறைந்து விட்டது போன்ற ஓர் உணர்வு இருக்கும். அத்துடன் பலக் குறைவு, எடைக் குறைவு, இரத்த சோகை ஆகியவையும் ஏற்படும். சில வேளைகளில், நோயாளிக்கு இரத்த வாந்தி வரும். அல்லது வயிற்றின் மேல் பகுதியிலோ, முதுகிலோ வலி ஏற்படலாம். அல்லது வயிற்றில் ஒரு கனம் தெரியலாம்.

இந்த அடையாளங்களில் சில, குடற் புண் இருந்தாலும் ஏற்படலாம். இப்படிப்பட்ட அறிகுறிகள் இருந்தால் உடனே மருத்துவப் பரிசோதனை செய்தாக வேண்டும். குறிப்பாக நாற்பது வயதுக்கு மேற்பட்ட ஒருவருக்கு இந்த அறிகுறிகள் ஏற்பட்டால், அவர் அன்றாட வாழ்வில் நோயற்றவராகவே இருந்தாலும், அவரை டாக்டரின் சோதனைக்கு அனுப்பியாகவேண்டும்.

நம் நாட்டில் உள்ள நோயாளிகள் இப்படிப்பட்ட அறிகுறிகள் இருந்தால், ஏதோ வயிற்றுக் கோளாறு, உணவு செரிக்கவில்லை, பலவீனம் என்று மட்டுமே கருதி விடுகிறார்கள். ஏதாவது சக்தியூட்டும் சத்து மருந்து வாங்கிச் சாப்பிட்டால் போதும் என்று கருதி விடுகிறார்கள். பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் என்று கூட அக்கறை காட்டுவதில்லை.

எவ்வளவு பகுதியை எந்த அளவுக்குப் பாதித்திருக்கிறது என்பதைப் பொறுத்து, அறுவை மருத்துவம் செய்வதுதான் வயிற்றில் ஏற்படும் புற்று நோய்க்குத் தக்க மருத்துவமாகும். இரைப்பையின் ஒரு பகுதியோ அல்லது முழுவதுமோ நீக்கப்படுகிறது. இச் சிகிச்சை ஆளைப் பாதிக்காது. மாறாக, உணவைச் செரிக்கச் செய்து, எடையையும் கூட்டுகிறது. தொடக்கத்திலேயே அறுவை செய்துகொண்டால் நல்ல பயனளிக்கிறது. நிணநீர் சுரப்பிகள் (Lymph glands) ஈரல், இரத்த நாளங்கள் ஆகியவற்றுக்குப் புற்று நோய் பரவிவிட்டால் முழுச் சிகிச்சை செய்ய முடியாது. வலியைக் குறைக்கலாம் அல்லது அந்த நோயாளி எவ்வளவு நாள் வாழ முடியுமோ அதுவரை நோயின் வேதனையைத் தாங்கக் கூடிய வேதனையாகக் குறைக்கலாம். அதற்குமேல் எதுவும் செய்ய முடியாது. இந்நோயால் பாதிக்கப்படுவோரில் பொதுவாக ஐம்பதுடையோர்தான் அதிகம் என்றாலும் 24 வயது முதல் 70 வயதுவரைநோயாளிகள் எங்களிடம் வந்துள்ளனர்.

அடுத்து; புற்று நோய் ஏற்படும் பகுதி பெருங் குடலாகும். சிறுகுடலின் முடிவிலிருந்துதொடங்கி, ஆசனவாய் வரை பெருங்குடல் அமைந்துள்ளது. வலது புறமாக உள்ள பெருங்குடலின் (ascending colon) தொடக்கப் பகுதியில் ஏற்படும் புற்று நோய் 'காலிஃப்ளவர்' போன்று இருக்கும். நோயாளியின் மலம் கருப்பாக இருக்கும். வயிற்றின் வலது புறத்தில் வலி இருக்கும். இரத்தம் வெளியாவதால்சோகை ஏற்படும். இதில் வேதனை என்னவென்றால், இந்த நோயாளிகளுக்கு நோய் அதிகப்பட்ட பிறகுதான் அதற்குரிய அடையாளங்கள் வெளிப்படும். பெருங்குடலின்பின்பகுதியில் (descending colon) அல்லது மலம் தங்கும் பகுதியில் புற்றுநோய் ஏற்பட்டால், மலம் கழிப்பதில் தடை ஏற்படும். மலம்கழிக்க முடியாது. வேதனை அதிகப்படும். புற்று வளர்ந்தால் இரத்தம் கசியத் தொடங்கலாம். ஏற்பட்டுள்ள நோயின் இயல்புக்கேற்ப, மலச்சிக்கல், கருப்பாக மலம் கழிவது ஆகியவை ஏற்படலாம்.

பெருங்குடலின் இறுதிப் பகுதியில் புற்று நோய் தோன்றினால், வயிற்றுளைச்சல் நோய்க்குண்டானது போல் சில அடையாளங்கள் ஏற்பட்டு, இரத்தமும் சளியுமாக அடிக்கடி மலம் கழியும். இதை அமீபாவினால் வரும் வயிற்றளைச்சல் என்று தவறாகக் கருதி விடுவதுண்டு. இந் நோயாளிகளுக்கு மலம் கழித்த பிறகும் மலக்குடல் நிறைந்திருப்பது போலவே ஓர் உணர்வு இருக்கும். இப்படிப்பட்ட அறிகுறிகள் உள்ள நோயாளிகள் உடனே மருத்துவரை அணுக வேண்டும். புற்று நோய் ஏற்பட்டு இரத்தம் வடிவதைச் சிலர், மூல நோயினால்தான் இரத்தம் வடிகிறது என்று கருதிக் கொண்டு, நாள் கடந்து நோய் முற்றிய பிறகே வருகிறார்கள். சில வேளைகளில் வயிற்றுளைச்சலைக் கூட அமீபா வயிற்றுளைச்சல் என்றோ வயிற்றுக்கோளாறு என்றோ கருதி விடுகிறார்கள். வயிற்றுளைச்சலுக்கு நல்ல மருத்துவம் செய்து, மீண்டும், மீண்டும் அதே அடையாளங்கள் தெரிந்தால், முழுவதுமாக நோயாளியைச் சோதித்துப் பார்க்க வேண்டும். பெருங்குடலில் வரும் புற்றுநோயையும் தொடக்க நிலையிலேயே கண்டு கொண்டால் மற்ற நோயைப் போலவே குணமாக்க முடியும்.

பெருங்குடலில் புற்றுநோய் ஏற்பட்டால் புற்று வளர்ந்துள்ள பகுதியை மட்டும் அறுவை மூலம் நீக்கி விட்டு, நோயாளியைக் காக்கலாம். பெருங்குடலின் இறுதிப் பகுதி, ஆசனவாய்ப் பகுதி ஆகியவற்றில் புற்றுநோய் இருந்தால், ஆசனவாய்ப் பகுதியை அறுவை செய்து நீக்கி விட்டு, நோயாளியின் வயிற்றிலேயே ஒரு பகுதியில் செயற்கையாக ஆசனவாய் அமைக்கப்படுகிறது.




நீங்கள் உங்கள் குடும்ப டாக்டரை அணுகி ஆலோசனை கேளுங்கள். அவர் அதைக் கவனித்து, நோயின் இயல் பறிந்து, தேவைப்பட்டால் அது சம்பந்தப்பட்ட நிபுணர்களிடம் உங்களை அனுப்பித் தக்க நேரத்தில் மருத்துவத்துக்கு உதவுவார்.

இவற்றை மறக்காதீர்கள் அல்லது அலட்சியப்படுத்தாதீர்கள்.

1. உணவை விழுங்கும் போது ஏற்படும் வேதனை.

2. சோகை, பசியின்மை, சீரணக் கோளாறு.

3. வாந்தியிலோ, மலத்திலோ, இரத்தம் வெளிப்படுதல்.

4. குடலில் ஏற்படும் மாற்றங்கள்.

(அ) மலக்குடல் வழியாகரத்தம், சளி போன்றவை மருத்துவத்திற்குப் பிறகும் தொடர்ந்து வெளிப்படுதல்.

(ஆ) திடீரென்று அல்லது நாட்பட ஏற்படும் மலச்சிக்கல்கள்.

(இ) மலம் கழிந்த பிறகும் மீண்டும் மலக்குடல் நிறைந்திருப்பது போன்ற உணர்வு; அல்லது அரைகுறையாக மலம் கழிவது.

(ஈ) வலியுடனோ அல்லது வலியில்லாமலோ வயிறு நிறைந்திருப்பது போன்ற உணர்வு.

(உ) வயிற்றில் ஏதோ ஒரு கட்டிபோல் தெரிவது.

(ஊ) [illegible] மில்லாமலே எடை குறைவு, பலவீனம் ஏற்படுவது.

(எ) அடிக்கடி காரணம் கண்டுபிடிக்க முடியாத காய்ச்சல்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறிகுறிகள் மற்றச் சிறு வியாதிகளாலும் ஏற்படலாம். அல்லது புற்று நோயின் காரணத்தால் ஏற்பட்டுவிடலாம். ஆகவே, அவற்றைப் புறக்கணிக்காதீர்கள்.

# குறளோவியம்

## ...ல்வர் கலை...

வெள்ளிமணல் படுக்கையிலே அந்தப் புள்ளிமயில் படுத்திருந்தாள். அந்தச் சயனத்துச்சாயலைத் தூர இருந்து காண்கிறான் அவன். அந்த அழகுமிழும் காட்சியால் உள்ளத்தில் வெல்லப்பாகு தடவிய அவன் கண்களை வாழ்த்துகிறான்; பாராட்டுகிறான்.

குளிர் மொண்டுவரும் தென்றலிலே கத கதப்பு உணர்ச்சி கலந்து வருவதாக அறிகிறான். சிறிதுநேரம் சிலையானான். உணர்வு வந்தபின் அசைந்தான். அப்போது அந்த நிலாப்பதுமையைக் காணவில்லை. அவள் போய் விட்டாள்.

அவன் நெஞ்சு துடித்துக் கனத்து விட்டது. 'ஐயோ! ஏன் இந்த அழகியைப் பார்த்தோம்! பார்க்காமலிருந்திருந்தால் இப்படிப் பதைக்க வேண்டிய அவசியமே வந்திருக்காதே' என்று புலம்பினான்.

வேதனையை உண்டாக்கிய தன் கண்களை வசைபொழிந்து கண்டித்தான். வீடு சென்றான். தூக்கம் வரவில்லை. அவளை நினைத்து நினைத்து அழுதான். அப்போது அவனுக்கு ஓர் ஆறுதல் ஏற்பட்டது.

"சும்மா இருந்த என்னைச் சுந்தரியின் நினைவால் வாடச்செய்யும் நோயை உண்டாக்கிய, கண்களே—நீங்கள் தூக்கம் வராமல் அழுகிறீர்களே...... அது எனக்கு மிக மகிழ்ச்சி. 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' தண்டனையை நன்றாக அனுபவியுங்கள்" என்று முணு முணுத்தான். அந்த முணுமுணுப்பை முத்தமிழ் வள்ளல் குறளார் எப்படி இரு வரிகளில் அமைத்திருக்கிறார்! படியுங்கள்.

"ஓஒ இனிதே யெமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் இதன்பட்டது".





# மாணவர் அரங்கம்

## செந்தமிழ்ச் செம்மல்

வளங்கொஞ்சும் நன்செய்க்குப் பஞ்சமில்லாத் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஊர் பாபநாசம். இவ்வூருக்குக் கிழக்கே முக்கால் கல் தொலைவில் உள்ளது 'உத்தமதானபுரம்'.

இவ்வூரின் அருகே, கிழக்கே 'நல்லூர்' என்னும் ஊரும், வடமேற்கே திருப்பாலைத்துறை என்னும் ஊரும் உள்ளன. அவை இரண்டும் தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்களாகும்.

உத்தமதானபுரத்தில் வேங்கட சுப்பையர் என்பவர் ஒருவர் வாழ்ந்திருந்தார். அவருடைய முழுப்பெயர் வேங்கட சுப்பிரமணிய அய்யர் என்பது. அவர் தமிழ்ப் புலமையும், இசைப் புலமையும் மிக்கவராகத் திகழ்ந்தார். அவருடைய மனைவிக்கு 1855-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் பத்தொன்பதாம் நாள் திங்கட்கிழமை ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு 'வேங்கடராமன்' என்று பெயர் வைக்கப்பட்டது.

சிறுவன் வேங்கடராமன், சடகோப ஐயங்கார் என்ற புலவரிடமும், குன்னம் சிதம்பரம் பிள்ளை என்பாரிடமும் கல்வி பயின்றான். வேங்கடராமனுக்குப் பதின்மூன்று வயதாகிய போதே, அதாவது 16-6-1868-ல் திருமணம் நடைபெற்றது.

வேங்கடராமன் 1869-ல் செங்கணம் விருத்தாசல ரெட்டியாரிடம் யாப்பருங்கலக் காரிகையைப் பாடம் கேட்டு வந்தார். 1862-ஆம் ஆண்டில் சந்திர சேகரக் கவிராசப் பண்டிதரால் முதன் முறையாகப் பதிப்பிக்கப் பெற்ற 'தனிப்பாடல் திரட்டு' என்ற நூலை அடிக்கடி ரெட்டியாரும் வேங்கடராமனும் படித்துப் பாராட்டி மகிழ்வது வழக்கம்.

விருத்தாசல ரெட்டியார்தான் வேங்கடராமனிடம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை என்பவரைப் பற்றி அடிக்கடி சொல்வார். "நீர் அவரிடம் போய்ப் படிப்பதுதான் சிறந்தது" என்று உரைப்பார்.

மாயூரத்திலிருந்த மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையைக் கண்டு, அவரிடத்தில் தம் மகன் வேங்கடராமனை வேங்கடசுப்பையர் ஒப்புவித்தார். வேங்கடராமனுடைய படிப்பு நிலையைச் சில கேள்விகள் கேட்டு ஆராய்ந்த மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, அவரைத் தம் மாணாக்கராக ஏற்றுக் கொண்டார்.

வேங்கடராமனுக்கு வேறு பெயர் ஏதேனும் உண்டா என்று மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் ஒருநாள் வினவினார். எங்கள் வீட்டில் 'சாமா' என்று என்னை அழைப்பார்கள் என்று வேங்கடராமன் மறுமொழி பகன்றார்.

சாமா என்பது சாமிநாதன் என்ற பெயரின் மாற்றுச் சொல்லே. ஆதலினால், வேங்கடராமனைச் சாமிநாதன் என்று அழைப்பதாக மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் கூறினார்கள்.





# உ. வே. சாமிநாத அய்யர்

வேங்கடராமன் அன்று முதல் தன் பெயரைச் சாமிநாதன் என்றே சொல்லிக் கொண்டார்.

அந்த வேங்கடராமனே, பிற்காலத்தில் மகா மகோபாத்தியாய சாமிநாத அய்யர் என்றும், "தாட்சிணாத்திய கலாநிதி சாமிநாதய்யர்" என்றும் "தமிழ்த்தாத்தா" என்றும் தமிழ் கூறும் நல்லுலகு பாராட்டும் பெரும்பேற்றைப் பெற்றார்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் சாமிநாத அய்யர், குடந்தை திரிபந்தாதி, பழமலைத் திரிபந்தாதி, திருப்புகலூர் திரிபந்தாதி, மறைசையந்தாதி, தில்லையமக அந்தாதி, துறைசையமக அந்தாதி, திருவரங்கத்து யமக அந்தாதி, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், சீர்காழிக் கோவை முதலிய நூல்களைப் பாடம் கேட்டார்.

சாமிநாத அய்யரின் ஆசான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் 31—1—1876-ல் இயற்கை எய்தினார். மனமுடைந்து போன சாமிநாத அய்யரைத் திருவாவடுதுறை குருமூர்த்தியாக இருந்த மேலகரம் சுப்பிரமணிய தேசிகர், திருமடத்திலேயே இருக்கும்படி கேட்டுக் கொண்டார்.

தேசிகரிடம் சைவ சித்தாந்த சாத்திரங்கள், நன்னூல், விருத்தியுரை, யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம், திருக்குறள் பரிமேலழகர் உரைகளைச் சாமிநாத அய்யர் பாடம் கேட்டார்.

கும்பகோணம் அரசினர் கலைக் கல்லூரியின் பேராசிரியராக விளங்கிய தியாகராசச் செட்டியார், திருவாவடுதுறைக்கு வந்திருந்த பொழுது ஆதீனத் தலைவரிடம் சாமிநாத அய்யரைக் கும்பகோணம் கல்லூரிக்குத் தமிழ்ப் பேராசிரியராக அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டார். தேசிகர் முதலில் மறுத்தாலும் பின்னர் அனுப்பி வைத்தார்.

தியாகராசச் செட்டியாரின் பரிந்துரையால் குடந்தைக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகச் சாமிநாத அய்யர் பணியாற்றத் தொடங்கினார். அப்பொழுதுதான் குடந்தையின் முன்சீப்பாகப் பணியாற்றி வந்த சேலம் இராமசாமி முதலியார் அவர்களின் நட்பு இவருக்குக் கிடைத்தது. சங்க இலக்கியங்களின் பிரதிகளை அவர் கொடுத்ததால்தான் சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு, புறநானூறு முதலிய பண்டைய இலக்கியங்களை அரும்பாடுபட்டு ஆராய்ந்து வெளிப்படுத்திய பெரும்பேறு சாமிநாதய்யருக்குக் கிடைத்தது.

1880-ஆம் ஆண்டிலிருந்து 1903-ஆம் ஆண்டுவரை குடந்தைக் கல்லூரியில் பணியாற்றிய இவர் 1903-ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரிக்கு மாற்றப் பெற்றார். இங்கு 1919-ஆம் ஆண்டு வரை பதினாறு ஆண்டுகள் பணியாற்றினார்.

1924-ஆம் ஆண்டில் இராஜா அண்ணாமலைச் செட்டியார், சிதம்பரத்தில் கல்லூரிகள் ஏற்படுத்திய போது, தமிழ்க் கல்லூரிக்கு இவர் முதல்வராகப் பொறுப்பேற்றார்.

1932-ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தார், தமிழ்ப் புலவர்களுக்கு, அது வரை வழங்கிடாத "டாக்டர்" பட்டத்தை இவருக்கு வழங்கினார்கள்.

இரண்டாவது உலகப் பெரும் போர் நடைபெற்ற பொழுது சென்னை மாநகரில் பகைவர்களின் குண்டுகள் விழும் என்று அஞ்சிச் சென்னையில் வாழ்ந்த மக்கள் வேற்றூர்களை நாடிச் சென்றனர். உ. வே. சாமிநாத அய்யரும் தம் குடும்பத்தாருடன் திருக்கழுக்குன்றம் சென்று தங்கினார். 1942-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் ! இருபத்தெட்டாம் நாள் உ. வே. சாமிநாத அய்யர் இயற்கை எய்தினார்.

சாமிநாத அய்யர் பதிப்பித்த நூல்களைக் காவியங்கள், சங்க நூல்கள், இலக்கண நூல்கள், பிரபந்தங்கள் எனப் பலவகைப் படுத்தலாம்.

இன்று தமிழ்ச் சமுதாயம் சங்க இலக்கியங்களைப் படிக்க முடிகின்றது என்றால் அதற்குப் பெரும் காரணமாக விளங்குபவர் சாமிநாத அய்யர் அவர்கள். சங்க இலக்கியங்கள் பெரும்பாலானவை இவராலேயே அச்சிடப்பட்டன. பல உரைநடை நூல்களை இவர் ஆக்கி வெளியிட்டார். தமிழகத்திற்கே புது மாதிரியாக முதன் முதலில் "என் சரித்திரம்" என்ற நூலை இவர் எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது.

—நம்பியின் தம்பி

# துப்பாக்கிக் குண்டுகளாலும் துளைக்க முடியாத தொப்பி



பட்டாளத்து வீரர்களும் காவற்படையினரும் இனிமேல் எஃகினால் செய்யப்பட்ட பாரமான தொப்பியைச் சுமக்க வேண்டியதில்லை!

துப்பாக்கிக் குண்டுகளாலும் துளைக்கப்பட முடியாததும், கண்ணாடி நார் இழைகளை உள்ளீடாகச் செலுத்தி வலுவூட்டப் பெற்றதும், பிளாஸ்டிக்கினால் செய்யப் பட்டதுமான இலேசான தொப்பியை அணிந்து, இனிமேல் பட்டாளத்து வீரர்களும், காவற்படையினரும் பாதுகாப்புடன் பணியாற்ற முடியும்.

இப்புதிய தொப்பியைக் கோயம்புத்தூரில் உள்ள பிரகா தொழிற்சாலையில் (Praga Industries Pvt. Ltd.,) பணியாற்றும் திரு ஜோசப் நிஜெட்லி (Joseph Nejedly) அவர்கள் கண்டு பிடித்துள்ளார். அவருக்குப் பட்டாளத்து வீரர்களும், காவற்படையினரும், நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளார்கள்.

பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்ட இத்தொப்பி மிகவும் இலேசாக இருப்பதால், தற்பொழுது பழக்கத்திலுள்ள எஃகுத் தொப்பிகளுக்கு மாற்றுப் பொருளாக அமைவதுடன், துப்பாக்கிக் குண்டுகளாலும் துளைக்கப்பட முடியாத எஃகுத் தொப்பியின் எல்லாப் பயன்களையும் கொண்டுள்ளது. கண்ணாடி நார் இழைகளை உள்ளீடாகச்செலுத்தி வலுவூட்டப் பெற்ற பிளாஸ்டிக், எளிதில் வெப்பத்தைக் கடத்தாதாதலின், இப்புதிய தொப்பி வெப்பத்தைத் தடுக்கச் செய்யும் குணத்தைப் பெற்றிருப்பதுடன், குளிர் மற்றும் அதிக வெப்பம் ஆகிய இரண்டிற்கும் எதிராகப் பாதுகாப்பு அளிக்கிறது.

முதலில், தேர்ந்தெடுத்த கன பரிமாணமுள்ள கண்ணாடி நார் இழைகளைப் பின்னி, அத்துடன் பாலிஸ்டெர் (polyster), ரெசின் (Resin) ஆகியவைகளைக் கலந்து, பிறகு ஒரு நீரழுத்த அச்சில் (Hydraulic press) வைத்து மிகுந்த அழுத்தத்திற்கு உட்படுத்தப்படுகிறது. சரியான வெப்பக் கட்டுப்பாடு, கண்ணாடி, ரெசின் ஆகியவைகளின் சரியான கலவை விகிதம், அச்சில் அழுத்தும்போது போதுமான அழுத்தம் ஏற்படுத்தல், சரியான வகைக் கண்ணாடி நார் இழைகளைக் கொண்டு வலுவூட்டுதல் ஆகியவற்றினால் இப்புதிய தொப்பிக்கு உடையாத தன்மை ஏற்படுகிறது.

துப்பாக்கிக் குண்டுகள் பாயும் போது அதனால் ஏற்படும் பயங்கர அழிவுச் சக்தி வெளிநோக்கிச் சிதறிடும் வண்ணம் இப் பிளாஸ்டிக் தொப்பி அமைக்கப் பட்டுள்ளது. ஆனால் எஃகுத் தொப்பியில் குண்டு பாயும்போது, அதனால் ஏற்படும் பயங்கரச் சக்தி அந்த இடத்தில் உள்ள உலோகத்தை அழுத்தி அல்லது பெயர்த்து விடுவதால், கலவைக்கிடமான காயங்களை ஏற்படுத்துகிறது.

படையில் டாங்குகளைச் செலுத்துவோரும் (Tank-crew) பாராசூட்டில் இறங்குவோரும் தலையில் அணியக் கூடிய கியர் (Head gears) செய்வதற்கும், இப்புதிய தொப்பியைச் செய்யப் பயன்படுத்தப் பட்டுள்ள தொழில் நுட்பத்தையே பயன்படுத்தலாம்.

இப்புதிய கண்டுபிடிப்பினால், கணிசமான அளவு அந்நியச் செலாவணியை மீதப்படுத்த முடியும்.

புதிய கண்டு பிடிப்புகளை ஊக்குவிக்கும் வாரியம் (Inventions Promotion Board) துப்பாக்கிக் குண்டுகளாலும் துளைக்கப்பட முடியாத தொப்பியை உருவாக்கியதற்காகத் திரு ஜோசப் நிஜெட்லி அவர்களுக்கு ரூபாய் 5,000 பரிசு வழங்கியுள்ளதுடன், இறக்குமதி செய்யப் பட்டு வரும் துப்பாக்கிக்குண்டுகள் துளைக்காத தொப்பிகளுக்குச் சிறப்பான மாற்றுப் பொருள் (Substitute) தயாரித்ததற்காகப் பிரகா தொழிற்சாலை நிறுவனத்திற்கு வெண்கலக் கேடயமும் அளித்துள்ளது.

—ஆர். எம்.





# மிளகாய் மகசூல் பெருக 'பிளானோபிக்ஸ்' தெளியுங்கள்!

ஒரு ஏக்கர் மிளகாய்ச் செடிகளுக்கு ரூபாய் 18 செலவிட்டு, 'பிளானோபிக்ஸ்' (Planofix) மருந்து தெளித்தால், ரூபாய் 414 அதிக இலாபம் கிடைக்கும் என்பது கோவில்பட்டியிலுள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளப் பெற்ற பரிசோதனைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

பொதுவாக மிளகாய்ச் செடிகளில் தோன்றும் பூக்களில் பெரும் பகுதி உதிர்ந்துவிடுகின்றன. அத்துடன் பூக்களிலிருந்து தோன்றும் மிளகாய்ப் பிஞ்சுகளில் ஒருபகுதியும்உதிர்ந்து விடுகின்றன. இவ்வாறு பூக்களாகவும், பிஞ்சுகளாகவும், உதிர்ந்தது போக, எஞ்சி இருக்கும் பிஞ்சுகளே பருமன் ஆகி, முதிர்ந்து பழங்கள் ஆகின்றன. கோவில்பட்டி நிலைமையில் மிளகாய்ச் செடிகளில் பூக்கும் பூக்களில் 11 சதம் அளவில் இருந்து மட்டுமே காய்கள் தோன்றுகின்றன என்று கணக்கிடப்பட்டுள்ளது.

'பிளானோபிக்ஸ்' (Alpha Naphthelene acetic acid) என்னும் மருந்தை மிளகாய்ச் செடிகளுக்குத் தெளிப்பதால், மிளகாய்ப் பூக்களும், பிஞ்சுகளும் உதிர்வதைத் தடுத்து, மிளகாய் மகசூலை அதிகப்படுத்த முடியும் என்ற ஆராய்ச்சி முடிவைக் கண்டறிய, 1971-72-ஆம் ஆண்டு முக்கியப் பட்டத்தில், கோவில்பட்டி மண்டல ஆராய்ச்சி நிலையத்தில், அனைத்து இந்திய ஒருங்கிணைந்த காய்கறி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பரிசோதனை மேற்கொள்ளப் பட்டது.

ஒரே அளவுள்ள இவ்விரு பரிசோதனைத் தளைகளில் 5-11-72 அன்று 'கே. 1' ரக மிளகாய்க் கன்றுகள் நடப்பெற்றன. ஒரு தளையில் 'பிளானோபிக்ஸ்' மருந்து தெளிக்கப்பட்டது. மற்றொரு தளையில் 'பிளானோபிக்ஸ்' மருந்து தெளிக்காமல் தடுப்புத் தளையாக (Control Plat) அமைக்கப்பட்டது.

மிளகாய் நடவு செய்த65-ஆம் நாள் 0.5 மில்லி லிட்டர் 'பிளானோபிக்ஸ்' மருந்தை 4.5லிட்டர் தண்ணீரில் கலந்து முதல் முறையாகத் தெளிக்கப்பட்டது. அதன் பிறகு 30 நாட்கள் கழித்து—அதாவது மிளகாய் நடவு செய்த 95-ஆம் நாளில், 1 மில்லி லிட்டர் 'பிளானோபிக்ஸ்' மருந்தை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து இரண்டாம் முறையாகத் தெளிக்கப்பட்டது.

'பிளானோபிக்ஸ்' மருந்துக் கலவை மிளகாய்ச் செடிகளில் நன்கு ஒட்டிக் கொள்ள வேண்டுமென்பதற்காக 4.5 லிட்டர் மருந்துக் கலவைக்கு 1 சி. சி. வீதம் 'டீபால்' (Teapal) கலக்கப்பட்டது.

இருமுறை 'பிளானோபிக்ஸ்' மருந்து தெளித்த தளையில் கிடைத்த மகசூலை (மிளகாய் வற்றல்), 'பிளானோபிக்ஸ்' மருந்து தெளிக்காத தடுப்புத் தளையில் கிடைத்த மகசூலுடன் ஒப்பிட்டுப் பார்த்ததில் பின் கண்ட புள்ளி விவரங்கள் கிடைத்துள்ளன.

'பிளானோபிக்ஸ்' மருந்து தெளித்ததால் எக்டேருக்கு கிடைத்த மிளகாய் மகசூல் 1,537 கிலோ.

'பிளானோபிக்ஸ்' மருந்து தெளிக்காததால் எக்டேருக்கு கிடைத்த மிளகாய் மகசூல் 1,106 கிலோ.

'பிளானோபிக்ஸ்' மருந்து தெளித்ததால் எக்டேருக்கு கிடைத்த அதிக மகசூல் 431 கிலோ.

100 கிலோ மிளகாய் வற்றல் ரூபாய் 250 வீதம் அதிகமாகக் கிடைத்த 431 கிலோ மிளகாய் வற்றலின் மதிப்பு ரூபாய் 1,080.

எக்டேருக்கு 2 முறை 'பிளானோபிக்ஸ்' தெளிக்க உபயோகித்த 250 மில்லி லிட்டர் 'பிளானோபிக்ஸ்' மருந்தின் விலை, தெளிப்பதற்கான ஆட்கூலி ஆகியவற்றிற்கான செலவு ரூபாய் 45.

2 முறை 'பிளானோபிக்ஸ்' தெளித்ததால் எக்டேருக்கு கிடைத்த அதிக இலாபம் ரூபாய் 1,035.

இதை ஏக்கருக்குக் கணக்கிட்டால், 18 ரூபாய்செலவு செய்து 2 முறை 'பிளானோபிக்ஸ்' தெளித்தால், 414 ரூபாய் அதிக இலாபம் கிடைக்கும் என்பது புலனாகும்.

'பிளானோபிக்ஸ்' தெளிக்கும் பொழுது கீழ்க்கண்ட முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

'பிளானோபிக்ஸ்' மருந்தைத் தண்ணீருடன் கலக்கக் கிணற்றுத் தண்ணீரைப் பயன்படுத்தலாம். கிணற்றுத் தண்ணீர் உவராகவோ அல்லது உப்பாகவோ இருந்தால் 'பிளானோபிக்ஸ்' மருந்துடன் கலக்கக் கூடாது. அப்படிக் கலந்தால் மகசூல் அதிகமாகாது. ஆற்று நீர், தேக்கி வைக்கப்பட்டுள்ள மழை நீர் ஆகியவை 'பிளானோபிக்ஸ்' கலக்க மிகவும் சிறந்ததாகும்.

'பிளானோபிக்ஸ்' மருந்துக் கலவை மிளகாய்ச் செடி இலைகளின் பரப்பில் நன்கு ஒட்டிக் கொண்டு, நீண்ட நாட்களுக்கு வீரியத்துடன் இருந்து பயனளிக்க 4. 5 லீட்டர் மருந்துக் கலவைக்கு 1 சி. சி. 'டீபால்' வீதம் அல்லது மென்மையான சோப்பு (Soft Soap) போன்ற ஏதேனும் ஒரு ஒட்டிக்கொள்ளஉதவும் பொருளை (Wetting agent or adhesive) உபயோகிக்கவேண்டும்.

மிளகாய்ச் செடிகள் மழையில் நனைந்தால், எவ்வாறிருக்குமோ அதுபோல் 'பிளானோபிக்ஸ்' தெளிக்கப்பட்ட மிளகாய் செடிகளும் நன்கு நனைந்து காணப்படவேண்டும். இவ்வாறு செய்ய மிளகாய்ச் செடி இலைகளின் மேல், அடிப் பரப்புகள் முழுவதும் நன்கு நனையுமாறு, 'பிளானோபிக்ஸ்' மருந்துக் கலவையைத் தெளிக்க வேண்டும்.

'பிளானோபிக்ஸ்' மருந்தை மிளகாய்ச் செடிகளுக்கு 2 முறை தெளித்துக் குறைந்த செலவில் நிறைந்த மகசூல் பெறும் படியும், அதிக இலாபம் பெற்று வாழ்வை வளப்படுத்திக் கொள்ளும் படியும் கேட்டுக்கொள்கின்றோம்.

—ஆர். எம்.



சைதியான்

கால்நடைகளுக்கும், கோழி முதலிய பண்ணைப் பறவைகளுக்கும் புழு பூச்சிகளிலிருந்து முழுப் பாதுகாப்பு அளிப்பதற்கு

சைதியான்

90 வெவ்வேறு வகையான பயிர்களைத் தாக்கும் 100 வகை புழுபூச்சிகளைப் பயனுள்ள முறையில் கட்டுப்படுத்துகிறது

சைதியான்

5 வெவ்வேறு வகையான 50 காய்கறிப் பயிர்களையும், பழப் பயிர்களையும் தாக்கும் 75க்கு மேற்பட்ட புழு பூச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது



சைதியான்

CYANAMID


# மாவட்டங்களிலிருந்து....

### திருச்சிக்கு முதலிடம் !

கடந்த செப்டம்பர் மாதம் மத்தியிலிருந்து அக்டோபர் மாதம் முதல் மூன்று வாரம் முடியத் தமிழ் நாட்டில் 56,008 குடும்ப நலத்திட்ட அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. இந்த வகையில் மாவட்டங்களுக்கிடையே திருச்சி முதலிடம் வகிக்கிறது.

திருச்சி மாவட்டத்தில் 14,508 பேர்களுக்குக் குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்கள் விவரம்: கோவை 11,000 செங்கற்பட்டு 10,920, நெல்லை 9,812, வட ஆர்க்காடு 5,047, இராமநாதபுரம் 4,721.

இந்தச் சிகிச்சை பெறுவோர் ஒவ்வொருவருக்கும் 60 ரூபாய், தொகை ஊக்குவிப்பாக வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மக்களில் நூற்றுக்கு ஒருவருக்கு நிலையான அறுவைச் சிகிச்சை அளிக்கும் நோக்குடன் இந்த இயக்கம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

•  •  •

### மதுரை மாவட்டத்தில்....

தமிழ்நாடு அரசு மதுரை மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் சார்பில் ஆரம்ப உயர்நிலைப் பள்ளிகளைக் கட்டுவதற்கும், வகுப்பறைகள் கட்டுவதற்கும் ரூ. 13.7 இலட்சத்தினை மானியமாக வழங்கி இருக்கிறது.

கழிவு நீர்ப் பண்ணை ஒன்றினை ஏற்படுத்த மதுரை மாநகராட்சிக்கு அரசு சத்தியமங்கலத்தில் 200 ஏக்கர் நிலத்தினை அளிக்க முன் வந்துள்ளது. பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட கல்லூரி, பள்ளி மாணவர் கல்வி உதவித் தொகையாக மதுரை மாவட்டத்தில் 65,765 மாணவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 63 இலட்சத்து 2 ஆயிரத்தில் 4,70,683 ரூபாய் 39,696 மாணவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் நைலான் தொழிற்சாலையைக் கப்பலூரில் ஏற்படுத்தவும் அரசு உத்தேசித்துள்ளது.

ரெட்டியார் சத்திரம், ஆத்தூர், திண்டுக்கல், சாணார்பட்டி பகுதிகளில் 50 புதுக்கிணறுகளுக்கும், 50 கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும், 100 பம்பு செட்டுகள் அமைக்கவும், வேடசந்தூர், பாளையம், பகுதிகளில் 100 புதுக் கிணறுகளுக்கும், 100 கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும், 200 பம்புசெட்டுகள் அமைக்கவும், நத்தம் பகுதியில் 50 கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும், 100 பம்பு செட்டுகள் அமைக்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

வேடசந்தூரில் மரகதப்படிவங்கள் தென்படுவது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

•  •  •

### மேலூரில் மேலான பணி !

மதுரை மாவட்டம், மேலூர் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் தீவிர வேளாண்மைத் திட்டத்தின் கீழ் 7,000 கிலோ நெல் விதைகள், 20 உழவுக் கருவிகள் உழவர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 1,200 ஏக்கர்கள் பூச்சிகளிலிருந்து பாதுகாக்கப்பட்டு உள்ளன.

மேலும் இணைப்புச் சாலைத் திட்டமும் சிறப்பாக நடந்து வருகின்றது. இரண்டு சீரணி அறிவகங்கள் சீரிய தொண்டாற்றி வருகின்றன. கிராமப்புற வேலையும் துரிதமாக நடந்து வருகின்றது.

•  •  •

### இளைஞர் அணி பெற்ற வெற்றி !

கோவை மாவட்டம், பவானி சாகர் நகரியத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 64-வது பிறந்த நாள் விழா சிறப்பாக நடந்தது. விழாவினையொட்டி, ''கபடி விளையாட்டுப் போட்டி'' நடந்தது. இதில் பல ஊர்களின் சார்பில் 18 அணியினர் கலந்து கொண்டனர். போட்டியில் இளைஞர் அணிப் பயிற்சி நிலையத்தைச் சார்ந்த 'பயிற்சியாளர்கள் அணி' முதல் பரிசைப் பெற்று வெற்றி பெற்றது. வெற்றி பெற்றவர்களுக்கு ''அறிஞர் அண்ணா சுழற் கோப்பை'' வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

•  •  •

### கோவையில் குடும்ப நலம் !

கோவை மாவட்டக் குடும்ப நலக் கழகம் நடத்தி வரும் தீவிரக் குடும்ப நலத் திட்ட இயக்கத்தின் விளைவாக, அந்த மாவட்டத்தில் 11,000-க்கு மேற்பட்ட ஆண்களுக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. செப்டம்பர் மாத மத்தியில் துவக்கப்பட்ட இந்த இயக்கம் அக்டோபர் இறுதிவரை நடந்தது.

கோவை மாவட்டத்திலுள்ள 41 வட்டாரங்களிலும் சுகாதார விடுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்கள், இந்த விடுதிகளில் ஆறு நாட்கள் தங்கி ஓய்வு பெற்றனர். இந்த நாட்களில் ஏற்படக்கூடிய ஊதிய இழப்பை ஈடு செய்வதற்காக இவர்கள் ஒவ்வொருவருக்கும் 60 ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது.

கோவை, தமிழ் நாட்டிலுள்ள மிகப் பெரிய மாவட்டமாகும். நிரந்தரக் கருத்தடை முறைகளை ஏற்றுக் கொள்ளும் தகுதி வாய்ந்த 3.79 இலட்சம் தம்பதிகள் இம்மாவட்டத்தில் வசிக்கின்றனர். இவர்களுள், 1972 செப்டம்பர் மாதம் வரையில் மொத்தம் ஒரு இலட்சம் பேர் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளனர்.

இப்போது நடந்த தீவிர இயக்கத்தின்போது சுமார் 18,000 ஆண்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.





# கேளுங்கள் கொடுக்கப்படும்

### அவரை, புடலைச் செடிகளுக்கு யூரியா போடலாமா?

வீட்டுத் தோட்டத்தில், பயிரிடும் அவரை, புடலைச் செடிகளுக்கு யூரியாவைப் போட்டால் பட்டுப் போய்விடுகிறது. இது எதனால்? யூரியாவைப் போடலாமா? எவ்வளவு போடவேண்டும்? எந்த வகையில் போட்டால் பயிர் நன்கு வளர்ந்து வரும்? இல்லாவிடில் எங்கள் உறுப்பினர் ஒருவர் போட்ட விதந்தான் சரியில்லையா? என்று பதில் கூறுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

—எஸ். பால்துரை,
உழவர் விவாதக் குழு அமைப்பாளர், திட்டங்குளம் (தெற்கு), நெல்லை மாவட்டம்.

யூரியாவில் 44·0 சதம் தழைச்சத்து உள்ளதால் வீரியம் மிகுந்து காணப்படுகிறது. பொதுவாக அவரை, புடலை, பரங்கி, பூசனி போன்ற கொடி வகைக் காய்கறி பயிர்களுக்கு யூரியாவை உரமாக இடுமாறு பரிந்துரைக்கப்படுவதில்லை.

புடலை, பரங்கி, பூசனி ஆகியவற்றிற்கு ஒரு குழிக்கு அடியுரமாக 12 கிலோ (1 கூடை) தொழு உரமும், 100 கிராம் 6 : 12 : 12 கலப்பு உரத்தையும் போடுவதே சிறந்தது. அவைகளுக்கு மேலுரமாக விதைபோட்ட 30-வது நாளில், குழிக்கு 500 கிராம் அமோனியம் சல்பேட் உரமிடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

அவரைக்கு, ஒரு குழிக்கு 12 கிலோ தொழு உரம், 115 கிராம் அமோனியம் சல்பேட், 290 கிராம் சூப்பர் பாஸ்பேட் ஆகியவைகளை அடியுரமாக இட்டு, மண்ணுடன் நன்கு கலக்குமாறு செய்துவிட வேண்டும். பூப் பூக்கும் பொழுது குழிக்கு 12 கிலோ தொழு எருவை மேலுரமாக இடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

உங்கள் விவாதக் குழு உறுப்பினர் யூரியாவை எந்த அளவில் போட்டார் என்பதைத் தெரிவிக்கவில்லை. அமோனியம் சல்பேட்டைவிட, யூரியாவில் 2·2 மடங்குத் தழைச்சத்து உள்ளது. எனவே, அவரை அல்லது புடலைக்கு ஒரு குழிக்கு 227 கிராம் யூரியாவுக்கு மேல் இட்டால் நிச்சயமாகப் பட்டுவிடும்.

யூரியாவை அவரை, புடலை ஆகியவற்றிற்கு மேற்கண்ட அளவில் இட்டு, மண்ணுடன் கலக்கச் செய்து உடன் நன்கு தண்ணீர் விட வேண்டும். யூரியாவை அதிக அளவில் இட்டாலோ, அல்லது யூரியாவைப் போட்ட உடன் தண்ணீர் விடாவிட்டாலோ நிச்சயமாக அவரை, புடலை போன்ற காய்கறிப் பயிர்கள் பட்டுவிடும். எனவே, கூடுமானவரை அவரை, புடலை போன்ற எல்லாக் கொடி வகைக் காய்கறிப் பயிர்களுக்கும் அடியுரமாகவோ அல்லது மேல் உரமாகவோ யூரியாவைப் பயன்படுத்தாதிருப்பதே நல்லது. பொதுவாக எல்லாக் கொடி வகைக் காய்கறிப் பயிர்களுக்கும் அடியுரமிட 6 : 12 : 12 கலப்பு உரத்தையும், மேலுரமிட அமோனியம் சல்பேட்டையும் பயன்படுத்துவதே சிறந்தது.

### எம்.சி.யு. 5 பருத்தியின் சிறப்புகள்!

எம். சி. யு. 5 பருத்தியின் சிறப்புகள் என்னென்ன? இப் பருத்தியை எப்பருவத்தில் பயிரிடலாம்?

—ச. ஆ. கேசவன்,
கு. கழுகாசலபுரம், குருமலை அஞ்சல், கடம்பூர் வழி.

இதுவரைத் தமிழ் நாட்டில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள உகாண்டா பருத்தி ரகங்களில் எம். சி. யு. 5 ரகப் பருத்தியே அதிக மகசூல் அளிக்க வல்லது. இந்த ரகத்தின் முக்கியச் சிறப்புக்களாவன :

1. இது சராசரியாக எக்டேருக்கு 6·5 குவின்டால் பஞ்சு மகசூல் கொடுக்கக் கூடியது.

2. இதன் இழை நீளம் 1 6/32 அங்குலம் உள்ளது. ஆனால், எம்.சி.யு. 1, எம்.சி.யு. 3 ஆகிய ரகப் பருத்திகளின் இழை நீளம் முறையே 1 அங்குலமாகவும், 1 2/32 அங்குலமாகவும் உள்ளது.

3. இதன் இழை வலிமை 8 1. ஆனால் எம்.சி.யு. 1 ரகப் பருத்தி இழையின் வலிமை 7·5 தான்.

4. இந்த ரக இழையின் மைக்ரோனர் அளவு 3·2. ஆனால் எம்.சி.யு. 1 ரக இழையின் மைக்ரோனர் அளவு 4·2. எனவே, இந்த ரக இழை மிகவும் நுண் தன்மை வாய்ந்ததாக இருப்பதால், மெல்லிய வலிவுள்ள நூலிழைகளை உருவாக்க எம்.சி.யு. 5 மிகவும் ஏற்றதாக உள்ளது.

5. எம்.சி.யு. 1, எம்.சி.யு. 3 ரகங்களைக் கொண்டு முறையே 40, 45-ஆம் எண் நூல் நூற்க முடியும். எம்.சி.யு. 5 ரகத்தைக் கொண்டு 70-ஆம் எண் நூல் நூற்க முடியும்.

6. இதன் வயது 165 நாட்கள்தான். ஆனால் எம்.சி.யு. 1 ரகத்தின் வயது 180 நாட்கள். வயது குறைவாக இருப்பதால் இந்த ரகம் விரைவில் மகசூல் கொடுப்பதுடன், காய்ப் புழுக்களின் தாக்குதலிலிருந்தும் கணிசமான அளவிற்குக் காப்பாற்றப்படுகிறது.

7. இந்த ரகம் நெருக்கமாகக் கிளைக்காமல், விரிவாகக் கிளைத்து வளரும் தன்மையையும், பரவலான - மிகவும் அடர்த்தியில்லாத - இலைகளின் அமைப்பையும் கொண்டுள்ளதால், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைத் திறமையான முறையில் பயன்படுத்த இயலுகிறது.

8. பல்வேறு காலநிலையிலும், நன்கு வளரக் கூடியதாகையால் மானாவாரியாகவும், இறைவையாகவும் சாகுபடி செய்வதற்கு இந்த ரகம் ஏற்றதாக உள்ளது.

9. இந்த ரகத்தைப் பயிரிடுவதால், சாகுபடியாளர்களுக்கு எக்டேருக்கு ரூபாய் 1,000 கூடுதலாகக் கிடைக்கிறது.

10. தமிழ்நாட்டில் குளிர் காலப் பருத்திச் சாகுபடியாகும். 80,000 எக்டேர் பரப்பு முழுவதிலும் எம்.சி.யு. 5 பருத்தி பயிரிடப்படுமானால், எம்.சி.யு. 5 பருத்திச் சாகுபடி செய்யும் உழவர்களுக்கு ஆண்டுதோறும் ஏறத்தாழ 8 கோடி ரூபாய் கூடுதல் இலாபம் கிடைக்கும்.

எம்.சி.யு. 5 ரகப் பருத்தியைக் குளிர்கால இறைவைக் கம்போடியாப் பருத்தியாக ஆகஸ்டு-செப்டம்பர் முதல் பிப்ரவரி-மார்ச்சு வரையான பருவத்திலும், குளிர்கால மானாவாரி கம்போடியா பருத்தியாக அக்




டோபர் முதல் மே, ஜூன் வரையான பருவத்திலும் பயிரிடலாம்.

எம். எப். 17 : 17 : 17 :
காம்ப்ளெக்ஸ்

எங்கள் நிலத்தில் கிச்சலி, கார் போன்ற நாட்டு நெல் வகைகளைப் பயிரிட இருக்கிறோம். நல்ல விளைச்சல் பெற புதிய எம்.எப். காம்ப்ளெக்ஸ் 17 : 17 : 17 உரங்களை எம் முறையில், நிலத்தில் விதைகள் விதைக்கப்பட்ட எத்தனை நாட்களுக்குப் பிறகு, எவ்வளவு தண்ணீரில் பயன்படுத்த வேண்டும் என்பதைத் தெரிவிக்கவும். மேற்படி உரங்களைக் கடன் மூலம் நம் அரசு விநியோகம் செய்கிறதா என்பதையும் தெரிவிக்கவும். எம். எப். காம்ப்ளெக்ஸ் 17: 17: 17 உரம் பயன்படுத்திய அதே நிலத்தில் அதே பயிருக்கு யூரியா உரம் இட வேண்டிய தேவை உண்டா என்பதையும் தெரிவிக்கவும் ?

பொதுவாக நாட்டு ரக நெல் எல்லாவற்றிற்கும் கடைசி உழவில். அடியுரமாக 13 கிலோ தழைச்சத்து, 14 கிலோ மணிச்சத்து, 7 கிலோ சாம்பல் சத்து இடுமாறும், நடவு செய்து 30-வது நாளில் 8 கிலோ தழைச்சத்தை மேலுரமாக இடுமாறும் பரிந்துரைக்கப்படுகிறது. தாங்களும் இதே அளவில் உரமிடுதல் நல்லது.

தாங்கள் எம். எப். காம்ப்ளெக்ஸ் 17 : 17 : 17 உரங்களைப் பயன்படுத்த விரும்பியுள்ளதால், மேற்கூறிய அளவில் உரமிட கடைசி உழவில் ஏக்கருக்கு 41 கிலோ 17 : 17 : 17 எம்.எப். காம்ப்ளெக்ஸ் உரத்தையும், 43·75 கிலோ சூப்பர்பாஸ்பேட் உரத்தையும், 13·2 கிலோ யூரியா அல்லது 30 கிலோ அமோனியம் சல்பேட் உரத்தையும் இட வேண்டும். அப்பொழுதுதான் ஏக்கருக்கு 13 கிலோ தழைச்சத்து, 14 கிலோ மணிச்சத்து, 7 கிலோ சாம்பல் சத்து கிடைக்கும்.

இவ்வாறு உரமிடத் தங்களுக்குச் சூப்பர் பாஸ்பேட் அல்லது யூரியா அல்லது அமோனியம் சல்பேட் கிடைப்பது கடினமாக இருந்தால், ஏக்கருக்கு 82 கிலோ எம். எப். காம்ப்ளெக்ஸ் 17 : 17 : 17 உரத்தை அடியுரமாகக் கடைசி உழவில் இட்டு விடுங்கள். இவ்வாறு செய்தால், 82 கிலோ உரத்திலிருந்து ஒரு ஏக்கருக்கு 14 கிலோ தழைச்சத்து, 14 கிலோ மணிச்சத்து, 14 கிலோ சாம்பல் சத்து கிடைத்துவிடும். இதில் பரிந்துரைக்கப்பட்ட அளவுக்கு மேல் 1 கிலோ தழைச்சத்தும், 10 கிலோ சாம்பல் சத்தும் கூடுதலாக இருக்கிறது. இது தேவையில்லையெனினும், உழவர்கள் எம்.எப். காம்ப்ளெக்ஸ் 17 : 17 : 17 ஒன்றை மட்டுமே கொண்டு எளிதில் அடியுரமிட இம்முறையை மேற்கொள்ளலாம்.

நடவு செய்த 30-ஆம் நாள் நிலத்தில் உள்ள தண்ணீரை வடித்துவிட்டு, ஏக்கருக்கு 8 கிலோ தழைச் சத்து அளிக்க 40 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 17·2 கிலோ யூரியாவை மேலுரமாக இடவேண்டும். உரமிட்ட பின் இலேசாகத் தண்ணீர் விடவேண்டும். எம். எப். 17 : 17 : 17 காம்ப்ளெக்ஸ் உரத்தை அடியுரமாகத்தான் பயன்படுத்த வேண்டும். மேலுரமாகப் பயன்படுத்தக் கூடாது. அதனால் அதிகப் பயன் கிடைக்காது. எனவே மேலுரமிட, யூரியாவையோ அல்லது அமோனியம் சல்பேட்டையோ பயன்படுத்த வேண்டும்.

தாங்கள் கடன்பெற விரும்பும் கூட்டுறவுச் சங்கத்தில் எம். எப். காம்ப்ளெக்ஸ் 17 : 17 : 17 உரமிருப்பின், தங்களுக்கு அது கிடைக்கக்கூடும். இல்லாவிட்டால் அங்குள்ள உரங்களையே பெற முடியும். அரசு வழங்கி வரும் தீவிர உரமிடும் திட்டத்தின் கீழ் இவ்வுரங்களைப் பெறலாம்.

நான் கோழிப் பண்ணை வைக்க விரும்புகின்றேன். இதன் பொருட்டு அரசாங்கத்திடம் இருந்து கடன் வாங்க நான் யாரை எங்கு அணுக வேண்டும் ? வானொலியில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கி மூலம் கடன் பெறலாம் என்று ஒலிபரப்புகின்றனர். அக்கடனை வாங்க வழிமுறை தெரியவில்லை. அக்கடனை வாங்குவதற்கு, முன் பணம் கட்ட வேண்டுமா ? எவ்வளவு ரூபாய் கடன் கொடுப்பார்கள் ? கடன் பெற எவ்வளவு நாளாகும் ? தயவுசெய்து தெரிவிக்கவும் ?

—ர. ஜேம்ஸ்,
ஆரோக்கியபுரம், வடுகந்தாங்கல்,
வட ஆர்க்காடு மாவட்டம்.

கோழிப் பண்ணை அமைக்கத் தற்பொழுது தனிப்பட்டவர்களுக்கு நேரடியாக அரசு கடன் கொடுக்கவில்லை. கோழிப்பண்ணை அமைக்க, கனரா பாங்கு, இந்தியன் ஓவர்சீஸ் பாங்கு, இந்தியன் பாங்கு, பாங் ஆப் பரோடா, பேங் ஆப் இந்தியா முதலிய நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் தற்பொழுது பெருமளவில் கடன் கொடுத்து வருகின்றன. ஸ்டேட் பாங்கும் கோழிப் பண்ணை அமைக்கக்கடன் கொடுத்து உதவுகிறது. மேற்கண்ட பாங்குகளில் ஏதேனும் ஒன்று தங்கள் பகுதியில் இருக்கும். அவ்வங்கிக்குச் சென்று, வங்கியின் முகவரையோ ( Agent ) அல்லது மேலாளரையோ சந்தித்து தங்கள் விருப்பத்தைக் கூறிக் கடன்மனுப் பெற்று, அதைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். அதன் பின், அக்கடன் மனுவில் கண்ட விவரங்களை வங்கி அலுவலர்கள் நேரடியாக விசாரித்துக்கொண்டு தங்கள் சொத்து மதிப்பு, தங்களுக்குள்ள கடனைத் திருப்பிக் கட்டும் சக்தி ஆகியவற்றிற்கு ஏற்பக் கடன் கொடுக்க ஆவன செய்வார்கள். கடன் மனுவில் கண்ட விவரங்கள் சரியாக இருந்தால், சொத்து மதிப்பில் தகராறு இல்லாவிட்டால், ஒரு வாரத்திற்குள்ளாகவே கூட சில வங்கிகள், கேட்ட கடன் தொகையைக் கொடுக்கின்றன. எவ்வளவு தொகைக் கடன் கொடுப்பார்கள் என்று கேட்டுள்ளீர்கள். இதை நாங்கள் திட்டவட்டமாகக் கூறமுடியாது. தாங்கள் எத்தனை கோழிகள் வைத்துக் கோழிப் பண்ணை நடத்தவிருக்கின்றீர்கள் என்பதைப் பொறுத்தே கடன் தொகை எவ்வளவு என்பது முடிவு செய்யப்படுகிறது. தாங்கள் பெற விரும்பும் கடன் தொகைக்கு, முன் பணம் கட்ட வேண்டிய அவசியம் இருக்காது. ஆனால் நபர் ஜாமீன் அல்லது தங்கள் சொத்தில் ஒரு பகுதியை ஈடுகாட்ட வேண்டியிருக்கும். உங்கள் அருகாமையில் உள்ள வங்கிக்குச் சென்று இது பற்றிய எல்லா விவரங்களையும் கேட்டறிந்து, அதன் பின் கோழிப் பண்ணை அமைக்க கடன் பெற முயற்சி செய்வதே நல்லது.

—ஆர். எம்

---

கடமை எவ்வளவுக்கெவ்வளவு பெரிதோ, அவ்வளவுக்கவ்வளவு பொறுப்பும் மிகுதியாகும்.

* * *

மனிதன் புற உலகை வெல்கிறான் ; தன்னைத் தான் வெல்வதிலே தோற்கிறான்.

* * *

அடைந்த பலன்களை வைத்துத்தான் இலட்சியங்களின் சிறப்பைச் சோதிக்க வேண்டும்.

—நேரு.

# மக்கள் தொகைப் பெருக்கமும் வேலை வாய்ப்பும்

கே. என். சுப்பையா.

காய்தல் உவத்தல் அகற்றி நடுநிலைநின்று நோக்கின் இந்தியத் துணைக் கண்டம் விடுதலை அடைந்து குடியாட்சி உரிமை பெற்ற பின்னர் பல்வேறு துறைகளிலும் கணிசமான முன்னேற்றம் அடைந்திருக்கிறது, என்பதில் யாருக்கும் ஐயம் இருக்க முடியாது.

வணிகத்திலாகட்டும், வங்கி முறையிலாகட்டும், தொழில் துறையிலாகட்டும், விவசாயத்திலாகட்டும், கல்வியிலாகட்டும், மருத்துவத்திலாகட்டும் நம் முன்னேற்றம் குறிப்பிடத்தக்கது. இலக்கிட்ட முடிவுகளை ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் பெற்று மகிழ்ந்திருக்கிறோம். தேசிய வருவாய் உயர்ந்து காணப்படுகிறது. இத்துணை முன்னேற்றத்திற்குப் பிறகும் தனி நபர் வருமானத்தில் ஏற்றம் காணப்படவில்லை. வறுமையும், ஏழ்மையும் முழுமையாக நம்மை விட்டகலவில்லை. குடிசையில் வாழ்வோர் நம்மில் பலர் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். நோய் வாய்ப்பட்டவர்கள் இல்லாமல் இல்லை. ஏன் ? நீக்கமற நிறைந்து நிற்கும் ஒரே காரணம் '' மக்கள் தொகைப் பெருக்கம்தான்'' என்றால் மிகையாகாது. இயற்கை அளிக்கும் இன்பம், தென்றல் தரும் சுகம் எல்லாருக்கும் பொதுவானது. இருப்பினும் தலைவனை இணைந்து நிற்கும் தலைவி இன்புற்றும், துறந்து நிற்பவள் இன்னலுற்றும் இருக்கும் பொழுது, இயற்கை முன்னவருக்கு இன்பத்தையும், பின்னவருக்கு இன்னலையும், விளைவிப்பது போல், நாடு அங்குள்ள சூழ்நிலை, பொருளாதாரம், இவற்றிற்கு இணங்க இந்தியா, சீனா போன்ற ஆசிய நாடுகளுக்கு மக்கள் தொகைப் பெருக்கம் தவிர்க்கப்பட வேண்டியதாகவும், ஸ்வீடன், ஜெர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளுக்கு விரும்பி வரவேற்கப்பட வேண்டியதாகவும் இருக்கிறது. பெருகிவரும் மக்கள் தொகையைக் கருத்தில் கொள்ளாமல் நாம் வகுக்கும் எந்தத் திட்டமும் வெற்றியடைய வாய்ப்பில்லை.

முதல் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் 18 சதவிகிதம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 25 சத விகிதம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 30 சத விகிதம், தேசிய வருமானம் பெருகிக் காணப்பட்ட போதிலும், மக்கள் தொகைப் பெருக்கத்தின் காரணமாகத் தனி நபர் வருமானம் எதிர்பார்த்த அளவு உயர்ந்து காணப்படவில்லை. தனி நபர் வருமானத்தையும், தேசிய வருமானத்தையும் உயர்த்தத் திட்டங்கள் தீட்டப்படுவதுடன், மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வழி வகைகள் செய்யப்பட வேண்டும்.

1961-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி 33.6 கோடி மக்களாக இருந்த நாம் 1971-ஆம் ஆண்டில் 44.1 கோடியாக வளர்ந்திருக்கிறோம். 22.01 சத விகிதம் உயர்ந்திருக்கிறோம். ஐம்பது ஆண்டுகள் தொடர்ந்து இதே வளர்ச்சி இருந்தால் மக்கள் தொகை எண்ணிக்கை இரட்டிப்பாக வாய்ப்பிருக்கிறது. ஆனால் அதே காலக் குறியீட்டில் தேசிய தனி நபர் வருமானம் மக்கள்தொகைப் பெருக்க விகிதத்தில் பெருக வாய்ப்பு உண்டா என்றால் இப்போதுள்ள வசதி வாய்ப்புகளில் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

1951—61-ஆம் ஆண்டுகளில் மக்கள் தொகைப் பெருக்கம் 11.85 சத விகிதம்தான். கடந்த பத்து ஆண்டுகளில் நம் இரட்டிப்பு வளர்ச்சி கவலைக்கிடமாக இருக்கிறது. இந்திய மக்கள் தொகையில் இன்று நாம் 7.51 சத விகிதங்களாக பரவியிருக்கிறோம். இந்திய மக்கள் தொகையில் 1951-ல் ஐந்தாவது இடத்தையும், 1961-ல் ஆறாவது இடத்தையும், 1971-ல் ஏழாவது இடத்தையும் பெற்றிருக்கிறோம் என்பது நமக்குச் சிறு ஆறுதல் தர வல்லதாக இருக்கிறது.

இந்த நூற்றாண்டுத் துவக்கத்தில் 1901-ல் 19.3 கோடியாக இருந்த நாம் 113 சத விகிதம் உயர்ந்து 1971-ல் 41.1 கோடியாகியுள்ளோம். அதில் 20.8 கோடி ஆண்கள், 20.3 கோடி பெண்கள். 12.4 கோடி மக்கள் நகர்ப்புறங்களிலும், 28.7 கோடி மக்கள் கிராமப்புறங்களிலும் வாழ்கிறார்கள்.

1961-ல் சதுர மைலுக்கு 258 பேராக வாழ்ந்த நாம் 1971-ல் 316 பேராக வாழ்கிறோம் என்றாலும், அனைத்து இந்திய அளவில் சராசரி சதுர மைலுக்கு 182 பேர்களே வாழ்கிறார்கள்.

1961-ல் 31.41 சத விகிதம் படித்தவர் எண்ணிக்கையாக இருந்து, பத்து ஆண்டுக் காலத்தில் 25.41 சத விகிதம் வளர்ந்து, 1971-ல் 39.39 சத விகிதம் ஆக உயர்ந்திருக்கிறோம்.

நாம் முன்னர்க் கூறியதுபோல் துறைகள் அனைத்திலும் வளர்ந்திருந்தும் பெருகி வரும் மக்கள் தொகைப் பிரச்சினையும், அதன் விளைவுகளும் நம்மைச் சோதனையில் ஆழ்த்துகின்றன.

> ''வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
> வைத்தூறு போலக் கெடும்''
>
> '' அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
> இல்லாகித் தோன்றாக் கெடும்.''

வருமுன்னர்க் காவாதவர் வாழ்க்கையும், அளவறிந்து வாழாதவர் வாழ்க்கையும் அழிந்து படும் என்று வள்ளுவர் மொழிந்திருக்கிறார்.

# வெற்றியின் சின்னங்கள்

நடன - காசிநாதன்

பழங்கால மன்னர்கள் ஒருவரோடொருவர் போர் புரிந்து கொள்வதும், தாங்கள் வெற்றி பெற்றதன் நினைவுச் சின்னமாக மாற்று நாட்டரசர்களின் போர் வீரர்களைக் கைதிகளாக்கித் தங்கள் நாட்டுக்குக் கொணர்ந்து ஆக்கப் பணிகளில் ஈடுபடுத்துவதும், தோல்வியுற்ற மன்னர்களின் பொன்னையும் பொருளையும் கவர்ந்து வந்து தங்கள் கருவூலங்களை நிரப்புவதும் அவர்களின் உடன்பாடு கொண்ட வழக்கமாகக் கொண்டிருந்தனர். அவ்வாறே தாங்கள் வெற்றி கொண்ட நாடுகளிலிருந்து சில கலைப்பொருட்களையும் திரட்டி வந்திருக்கின்றனர் பண்டைய மன்னர்கள்.

ஒருபகுதியிலுள்ள கலைப்பாணியினை இன்னொரு பகுதியில் அமைப்பதுவும், ஒரு பகுதியிலிருக்கும் கலை விற்பன்னர்களைப் பிறிதொரு பகுதிக்கு இட்டுச் செல்வதும் கூடத் தொன்மை வழக்காக இருந்தது. தமிழகத்து வீதிகளில் மகத நாட்டுத் தச்சரும் அவந்தி நாட்டுக் கொல்லரும் நடமாடியதை நமக்குப் பட்டினப்பாலை எடுத்துக் காட்டுகிறது. இன்று கச்சியம்பதியிலே காட்சிக்கு அரியதாய் விளங்கும் கைலாய நாதர் ஆலயத்தைக் கண்டுதான் இராட்டிர கூட மன்னன் முதலாம் கிருட்டிணன் எல்லோராவில் கைலாயநாதர் ஆலயத்தை அமைத்துள்ளான் என்பர் வரலாற்றாசிரியர்கள். திருச்சிக்கு அண்மையிலே திருக்கண்ணபுரத்திலே எழிலார்ந்த உருவமாக ஏற்றமுடன் தோற்றமளிக்கும் ஈச்சுரர் கோயில் போசளரின் கைவண்ணமன்றோ ! இவ்வாறு பலப்பல சான்றுகளைக் காணலாம்.

பிற பகுதிகளிலுள்ள, பாணியைப் பார்த்து மற்றொரு பகுதியில் அமைத்ததோடு அல்லாது பிற பகுதியில் இருந்த சில கலைப் பொருட்களையே தங்கள் நாட்டிற்கு எடுத்துச் சென்றிருக்கின்றனர். அம்மாதிரி தமிழ் மன்னர்கள் சிலர் பிற பகுதியிலிருந்து சில சிற்பங்களை எடுத்து வந்திருக்கின்றனர் என்பதை இன்று அழியாச் சான்றுகளாக விளங்கும் அந்தச் சிற்பங்கள் மூலமே நாம் தெரிந்து கொள்ளலாம். இந்தச் சிற்பங்களை அவர்கள் தாங்கள் அந்நாட்டின் மீது வெற்றி கொண்டதற்கு அடையாளமாக அமைய வேண்டுமென்று எண்ணியும் எடுத்து வந்திருக்கலாம் அல்லது அந்நாட்டுக் கலைகளின் மீதெழுந்த ஆர்வத்தாலும் அவைகளைக் கொணர்ந்திருக்கலாம்.

சோழப் பேரரசன் முதலாம் இராசேந்திரன் தான் கங்கையாற்றங் கரையிலே போர் நிகழ்த்தி அப்பகுதி அரசர்களைப் புறமுதுகிடச் செய்தான் என்பதை அவனது கல்வெட்டுகள் 'கங்கையும் கடாரமும் கொண்டான்' என்று புகழ்ந்து கூறும். அதற்கு மேலும் வலுவூட்டுவதாக அவனால் கொண்டு வரப்பட்ட அந்நாட்டுக் கலைப்படைப்புகளும் தமிழகத்தில் இன்று காட்சி தந்து வருகின்றன.

சோழர்களின் இரண்டாம் தலைநகராகப் பழையாறை சிறந்து விளங்கிற்று. அதற்கு வெகு அண்மையிலுள்ள குடமூக்கும் (கும்பகோணம்) சோழ மன்னர்களின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்தது. குடமூக்கு சிவத்தலமாகவும், வைணவத்தலமாகவும் சிறப்புற விளங்கி வந்திருக்கிறது. சைவ சமயத்தைச் சார்ந்தார்க்குத் திருநாகேச்சுரர் கோயிலும், வைணவ சமயத்தார்க்கு இராமசாமிக் கோயிலும் அருள் பாலிக்குந் தலங்களாக விளங்குகின்றன. திருநாகேச்சுரர் கோயில் சோழ மன்னன் முதலாம் ஆதித்தன் காலத்தைச் சார்ந்தது என்று கணிக்கின்றனர். இக்கோயில் கருவறையின் மாடங்களில் காட்சி தரும் பெருமானின் கோலங்கள் பார்ப்போரைத் தம்மை விட்டு அகலா வண்ணம் செய்துவிடுகின்றன. அத்தகைய அழகும், அமைதியும், கலைத்திறனும், கருத்தாழமும் கொண்டதாக அச்சிற்பங்கள் காட்சி அளிக்கின்றன. அச்சிற்பங்களைக் காண நேரும் வெளிநாட்டார்கள் வியந்து வியந்து பாராட்டிச் செல்கின்றனர்.

இத்தகைய சோழர் கலைப் பாணிகளுக்கிடையே சற்று மாறுபட்ட கலைப்பாணியைக் கொண்ட ஆனைமுகன் உரு ஒன்று அங்குக் காட்சி அளிக்கிறது. அது செய்யப்பட்டிருக்கிற கல்லும் மாறுபட்ட வண்ணத்தில் உள்ளது. அதன் பெயர் ' கங்கை விநாயகர் ' என்று கூறப்படுகிறது. பெயரிலிருந்தும் அது வடிக்கப்பட்டிருக்கின்ற முறையிலிருந்தும் கல்லின் வண்ணத்திலிருந்தும், சோழர் கலைப்பாணிக்கு முற்றிலும் மாறுபட்டது என்பதை உணர முடிகிறது. கங்கைப் பகுதியிலே ஆட்சி புரிந்தவர்களின் கலைப் பாணியோடு அவ்வுருவத்தை ஒப்பிட்டு நோக்குகையில் அது அவர்களுடைய பாணிதான் என்பது புலனாகிறது. எனவே இச்சிற்பம் கங்கை வரை படையெடுத்துச் சென்று வெற்றி வாகை சூடிய முதலாம் இராசேந்திரன்தான் கொண்டு வந்திருக்க வேண்டும்.

தஞ்சைப் பெருவுடையார் கோயில் எவ்வாறு முதலாம் இராசராசனின் புகழுக்கும் பெருமைக்கும் நிலைக்களனாக திகழ்கிறதோ அதுபோன்று அவன் அருமை மைந்தன் முதலாம் இராசேந்திரனின் வெற்றிச் சிறப்பை எட்டுத்திக்கும் கொட்டி முழக்கும் வண்ணம் எடுப்பாகக் காட்சி அளிப்பதுதான் கங்கை கொண்ட சோழபுரம். தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் காண முடியாத சில கலைப்படைப்புகள் கங்கைகொண்ட சோழபுரத்துக் கோயிலில் காணலாம். கோயிலின் வடக்குப்பக்க நுழைவாயிலில் இரு பக்கங்களிலும் உள்ள கலைச்செல்வி, சண்டேசு வரனுக்ரகமூர்த்தி ஆகிய சிற்பங்கள் உலகப் புகழ்பெற்ற சிற்பங்களாகும். இக்கோயிலின் சுவர் மாடத்தில் காட்சி தரும் முருகப் பெருமானின் உருவமும், கோயிலினுள் உற்சவமூர்த்தியாக உள்ள முருகப்பெருமானின் செப்புத் திருமேனியும் ஒரு வடிவாக

# அமோகமான மகசூலை நிச்சயமாகப் பெற ஜோதி வர்ட்டிகல் டர்பைன் பம்பு

▢ மின்சக்தி செலவு கணிசமாகக் குறையும் ▢ தொல்லையற்று நீடித்த உழைப்பு
▢ பிரத்யேகமான கட்டமைப்பு ▢ பராமரிப்பு தேவையில்லை என்றே சொல்லலாம்

அளவு: 100 மி.மீ. முதல் 750 மி.மீ. வரை...
• சக்தி: நிமிடத்திற்கு 85,000 லிட்டர் வரை • ஏற்றம்: 100 மீட்டர் வரை




everest/504/JY/Ta

கிளை :—அறை எண் 35, எக்ஸலென்ஸ் ஓட்டல், 177/179, மவுண்ட் ரோடு, சென்னை-2.
தொலைபேசி எண் : 85007


உள்ளது அருமையிலும் அருமை என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

சோழர் கலைப் பாணியின் காட்சிக் கூடமாக விளங்கும் இக்கோயிலுக்கு இரண்டு கல் கிழக்கே செங்கமேடு என்ற சிற்றூரில் ஒரு தோப்பில் கலிங்க நாட்டுக் கலைப் பாணியில் பைரவர் உருவங்கள் இரண்டு சிவப்புக் கல்லில் செதுக்கப்பட்டுக் காட்சியளிக்கின்றன. அவைகளைத் தற்பொழுது தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை தனது பாதுகாப்பின் கீழ்க் கொணர்ந்து வருகின்றது. அவ்வுருவங்கள் அங்கு எவ்வாறு வந்தன. கங்கை கொண்டானால் எழுப்பப் பெற்ற ஆலயத்தின் அருகில் எவ்வாறு அவை இடம்பிடித்தன என்று ஆராய்வோமானால் அவைகளையும் முதலாம் இராசேந்திரன் தான் கலிங்கப் பகுதிகளை வென்ற தன் நினைவாகக் கொண்டு வந்திருக்க வேண்டும் எனத் தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் அவர்கள் கருதுகிறார்கள். கங்கை கொண்ட சோழபுரத்துக்கு அருகில் உள்ள இராவீரெட்டித் தெருவில் காணப்படும் துர்க்கை உருவமும், மணல் மேட்டில் உள்ள துர்க்கை உருவமும் சாளுக்கிய பாணியில் உள்ளன. அவை சாளுக்கிய நாட்டிலிருந்து கொண்டுவந்திருக்கலாம்.


பைரவர்
செங்க மேடு
கலிங்கர் பாணி

முதலாம் இராசேந்திரனின் மூத்த மகன் முதலாம் இராசாதிராசன் தன் தந்தையைப் போன்றே பெரு வீரனாகத் திகழ்ந்தவன். இவன் பாண்டியர் சேரர், சிங்களர், சாளுக்கியர் ஆகியவர்களோடு வெஞ்சமர் புரிந்து வெற்றிவாகை சூடியவன். இம்மன்னன் சாளுக்கிய மன்னன் ஆகவமல்லனோடு போர் புரிந்து, அவனைத் தோற்கடித்து, அம் மன்னனது கம்பிலி நகரிலிருந்த கோட்டையைத்தான் தகர்த்தெறிந்ததுவும், வராக முத்திரை பொறிக்கப் பெற்றிருந்த இடத்திலெல்லாம் தனது புலி முத்திரையைப் பொறித்ததுவும், வெற்றித்தூண் நாட்டியதுவும் இவனது கல்வெட்டுகளால் அறிய முடிகிறது. அவ்வாறு போர்ப் பரணி நடத்திப் புலவர்களால் புகழ்ப் பரணி பெற்றவன் சாளுக்கியர்களின் தலைநகரான கல்யாண புரத்தை வெற்றி கொண்டதன் அடையாளமாக அங்கிருந்து துவாரபாலர் சிலையொன்றை எடுத்து வந்திருக்கிறான். அச்சிலை சில ஆண்டுகளுக்குமுன்புவரை கும்பகோணத்துக்கு அருகிலுள்ள சிற்றூரான தாராசுரம் இராசராசேச்சுரம் உடையார் கோயிலில் வைக்கப் பெற்றிருந்தது. அது இப்பொழுது தஞ்சை அருங்காட்சி அகத்தில் பொது மக்களின் காட்சிக்கு வைக்கப் பெற்றிருக்கிறது. அச்சிலையினுடைய பீடத்தில் 'ஸ்வஸ்தி ஸ்ரீ உடையார் ஸ்ரீ விசயராசேந்திரத் தேவர் கல்யாணபுரம் எறிந்து கொண்டு வந்த துவாரபாலர்' என்று வரையப் பெற்றுள்ளது. அதன் சிற்பவமைதியைக் காணுங்கால் சோழர் காலத்துத் தமிழ்


பைரவி
செங்க மேடு
கலிங்கர் பாணி

நாட்டுக் கலைப் படைப்புக்களோடு ஒத்தில்லாமல் மாறுபட்டுக் காணப்படுகிறது. எனவே இது சாளுக்சிய நாட்டிலிருந்து இராசாதிராசனின் வெற்றியின் சின்னமாகக் கொண்டு வந்தது தான் என்பது உறுதியாகிறது.

இதைப் போன்று பல வெற்றிச் சின்னங்கள் தமிழ் நாட்டுக்குக் கொண்டுவந்திருக்கக் கூடும். இலங்கை நாட்டின்மீது படையெடுத்துச் சென்ற தமிழ் மன்னர்கள் அந்நாட்டிலிருந்தும் சில கலைப் படைப்புகளைக் கொண்டு [illegible]த் தெரிகிறது. அவைகளெல்லாம் [illegible] அழிந் [illegible] அல்லது [illegible] இன்னும் கண்டு [illegible] முடியாத நிலையில் உ[illegible]மா? என்பது தெரியவில்லை [illegible] முயற்சிப்போ[illegible] கலை [illegible] பேணிக் [illegible] பாம்




நாம் வருமுன்னர்க் காக்க முயற்சிக்க வேண்டும். அளவோடு பெற்று வளமுடன் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். பெற்றவரைக் காக்கவும், பெருமல் தடுக்கவும், பழகிக்கொள்ள வேண்டும்.

சற்றேறக்குறைய, பொருளாதார வளர்ச்சியால் முழுமை அடைந்த அமெரிக்கா போன்ற நாடுகளில் தனி மனிதன் வருமானம் ரூ.28,000வரை இருந்தும் குடும்ப நலத் திட்டத்தின் அவசியம் உணர்ந்து பணியாற்றப் படுகிறது. நம் நிலை என்ன? ஒரு உயிர் பிறக்காமல் தடுக்கப்பட்டால் அரசுக்கு ரூ. 25,000 வரை காக்கப்படும்.

அரசாங்க மட்டத்தில் குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்தும் ஒரே நாடு இந்தியாதான். முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 65 இலட்ச ரூபாயும், இரண்டாவது திட்ட காலத்தில் 5 கோடி ரூபாயும், மூன்றுவது திட்ட காலத்தில் 50 கோடி ரூபாயும் செலவு செய்ய அரசினர் முடிவு செய்திருக்கின்றனர். உயிர் பிறக்காமல் தடுக்கப்பட வேண்டியதின் அவசியத்தைப் பற்றி இப்பொழுது நாட்டில் ஒவ்வொருவரும் உணர்ந்த நிலையில் இருப்பது நமக்குத் தெரிவதால், பெற்றவரைக் காப்பது எப்படி என்று பார்ப்போம்.

மக்கள் தொகைப் பெருக்கமுள்ள ஆசிய நாட்டினரின் கண்களுக்கு உருவாக்கப்படும் உயிருக்குள்ள வாயும், வயிறும் தான் காட்சியளித்து கவலை கொடுக்கிறது. மக்கள் தொகைப் பெருக்கம் குன்றியுள்ள ஐரோப்பிய நாட்டினருக்கு உயிர் ஒவ்வொன்றிற்கும் உள்ள இரண்டு கரங்கள் மகிழ்ச்சியளிக்கின்றன. உண்ணுவதற்கு ஒரு வாயைப் படைக்கும்பொழுதே உழைக்க இரு கரங்களைப் படைக்கத் தவறவில்லை.

நாம் செய்யும் தடைகள் அனைத்தையும் கடந்து வெள்ளம் போல் பெருகி வரும் மக்கள் கூட்டத்திற்கு வேலை வாய்ப்பளிப்பது எப்படி, வசதிகளைப் பெருக்கி வறுமையை ஒழிப்பது எப்படி, சமதர்ம சமுதாயத்தைச் சமைப்பது எப்படி என்று நோக்குவோம்.

1961-ஆம் ஆண்டு மக்கள் பெருக்கக் கணக்குப்படி 33.6 கோடி மக்களில் வேலை வாய்ப்புப் பெற்ரோர் எண்ணிக்கை 15.3 கோடியினராவர். மற்றவர் சிறியவர், முதியவர், வேலை வாய்ப்புப் பெற முடியாதவர், பெற விரும்பாதவர்கள். அதில்

| | சத விகிதம். |
|---|---|
| உழுபவர்—விளைவிப்பவர் | 42.07 |
| விவசாயிகள்—நில உரிமையாளர். | 18.42 |
| கனிவளத் துறையினர் | 2.84 |
| இல்லத் துறையினர் | 7.86 |
| உற்பத்தித் துறையினர் | 5.52 |
| ஆக்கத் துறையினர் | 1.34 |
| தொழில் வியாபாரத் துறையினர். | 4.94 |
| போக்கு வரத்துத் துறையினர். | 1.65 |
| மற்ற துறையினர் | 15.36 |

1971-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 4·11 கோடி மக்களில் வேலை வாய்ப்புப் பெற்ரோர் 1.5 கோடி மக்களாவார்கள்.

| | சத விகிதம். |
|---|---|
| உழுபவர்—விளைவிப்பவர் | 31·1 |
| விவசாயிகள்—நில உரிமையாளர். | 29·9 |
| மற்றவர் .. .. | 40·0 |

வேலை வாய்ப்புப் பெற முடியாதவர், பெற விரும்பாதவர் 25 கோடி மக்களாவர். 1961—71 புள்ளி விவரங்களில் உழுபவர்—நில உரிமையாளர் என்ற இரண்டு புள்ளி விவரங்களை மட்டும் எடுத்துக்கொண்டால் அரசினர் கொண்டுவந்த நில உச்ச வரம்புச் சட்டங்கள் எதிர்பார்த்த பயனைக் கொடுத்திருக்கிறது என்பது புலனாகிறது. உழுபவர் எண்ணிக்கைகுறைந்தும் நில உரிமையாளர் எண்ணிக்கை உயர்ந்தும் காணப்படுவது குறிப்பிடத் தக்கது.

> சாதிசமயமற்ற சமூகம்-யாவருக்கும் சமமான பொருளாதார நீதியும் வாய்ப்பும் உள்ள வகுப்பற்ற சமூகம்-மனிதனின் பொருளாதார, பண்பாட்டு நிலைகளை உயர்த்துவதற்கும் ஆன்மீகப் பண்பு, கூட்டுறவு மனப்பான்மை தன்னலமின்மை, சேவை மனப்பான்மை, நேர்மை, நல்ல எண்ணம், அன்பு ஆகியவற்றைப் பேணுவதற்குத் திட்டமிட்ட அடிப்படையின்மேல் அமைக்கப்பட்ட சமூகம் இதுவே நமது இறுதி இலட்சியமாக இருக்கவேண்டும். இதற்குக் குறுக்கே வருவது எதுவானாலும் அதை முடியுமானால் அன்பான முறையிலும் தேவையானால் கட்டாயமான முறையிலும் அகற்றியே தீரவேண்டும்.
>
> —ஜவகர்லால் நேரு

1961–71-ல் மக்கள் தொகைப் பெருக்கம் 22.01 சதவிகிதம் உயர்ந்து இருந்தாலும் வேலை வாய்ப்புப் பெற்ரோர் எண்ணிக்கையில் உயர்வு தெரியவில்லை என்பதற்கு '' வேலை வாய்ப்புப் பெற்ரோர்'' என்ற சொல்லுக்குக் கொடுக்கப்பட்ட ஆக்க பூர்வமான விளக்கத்தில் ஏற்பட்ட மாறுதலே யன்றி வேறு ஒன்றும் காரணம் இல்லை.

முந்திய புள்ளி விவரங்களை உறு துணையாக வைத்து எதிர் காலத்தில் இப்படித்தான் இருக்கும் என்று எண்ணிக் கணக்கிட்டால் 1966-ல் 1.97 கோடி மக்களுக்கும், 1981-ல் 2·15 கோடி மக்களுக்கும், 1984-ல் 2.27 கோடி மக்களுக்கும் வேலை வாய்ப்பளிக்க வேண்டிய நிலையில் நம் மாநில அரசு இருக்கும். 1984 என்பது ஆருவது ஐந்தாண்டுத் திட்ட கால முடிவாகும்.

1984-ஆம் ஆண்டிற்குள் காலப் போக்கில் வரக்கூடிய 40 இலட்சம் பேருக்குள்ள வேலை வாய்ப்பின்றி புதிதாக மேலும் 40 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பிற்கு வழி வகைகள் செய்ய முடியும் என்று, வேலையில்லாத் திண்டாட்டம் முழுமையாக இல்லாமல் போய் விடுமென்றும், நம் மாநிலத் திட்டக் குழுவினர் தீர்வுகண்டிருக்கிருர்கள். உத்தியோக உயர்வு, பலதுறை விரிவாக்கம், மரணம் மற்றபொதுவானகாரணங்களால் விளையும் உத்தியோக வாய்ப்புகள் இல்லாமல் புதிதாக அடுத்த ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 16.5 இலட்சம் பேருக்கும், ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேலும் 16 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்க வேண்டி வரும்.

நாம் முன்னர் சொல்லியது போல் வரவிருக்கும் 13 ஆண்டுகளில் 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு எப்படி வேலை வாய்ப்பளிப்பது என்று நோக்குவோம்.

மாநிலத் திட்டக் குழு எடுத்த முடிவின்படி, சிறிய நகர்ப்புறங்கள், கிராமங்களில் புதிய வேலை வாய்ப்பு நிலையங்களைத் துவக்கி வைத்துப் பணிபுரிய வேண்டும். பொருளாதார வளர்ச்சிக்கு விரோதமாக, பெரிய நகர்ப் புறங்கள் வளராமல் சிறு நகர்ப்புறங்கள் வளர்த்து கோழிப் பண்ணை, கால்நடை

# கெல்தேன்® பல்வேறு இனங்களைச் சார்ந்த செம்பேன்களை அழிக்கிறது. தவிர, பயிர்களின் மேல் நீண்ட நாட்கள் தங்கி வேலை செய்கிறது. உபயோகத்திற்கு அபாயமற்றதும் கூட.

கெல்தேன் ஒரு பரந்த பயனுள்ள செம்பேன் கொல்லி மருந்து. இன்று கிடைக்கப்பெறும் பல செம்பேன் கொல்லி மருந்துகளில் கெல்தேன் ஒன்றுதான் பல இன வகை செம்பேன்களை அழிக்க வல்லது. கெல்தேன் அதிகநாள் பயிர் மற்றும் செடிகளில் தங்கி வளர்ந்த செம்பேன்களையும், முட்டையிலிருந்து வெளிவந்த சிறிய செம்பேன்களையும் அழித்து செயல்புரிவதில் தனித்து நிற்கிறது. தப்புரவாக பிரயோகம் செய்தால் கெல்தேன் பிரயோகித்த பலன் 4 வாரத்திலிருந்து 6 வாரத்திற்கும் இன்னும் அதிக நாட்களுக்கும் காணப்படுகிறது.

கெல்தேன் மருந்து பிரயோகம் இலைகளின் மேலோ அல்லது பழங்களின் மேலோ பிரயோகிக்க அபாயமற்றது ரசாயன மருந்து பிரயோகங்களுக்கு குணம் மாறும் பழவகை இனங்கள், கெல்தேன் மருந்து பிரயோகத்திலும் நிறம் மாறுவதில்லை. தவிர, இலைகளுக்கு எந்தவிதக் கெடுதலும் ஏற்படுத்துவதில்லை. கெல்தேன் மகரந்த சேர்க்கைக்கு உதவி செய்யும் பூச்சிகளுக்கோ அல்லது பயிர்களுக்கு தீங்கு செய்யும் பூச்சிகளை அழிக்கும் மற்ற பூச்சி இன வகைகளுக்கோ தீங்கு இழைப்பதில்லை.

இண்டோக்பில் கெமிகல்ஸ் லிமிடெட்
பம்பாய்-25.

● கெல்தேன் மற்றும் ஃப்ளாஸ்க் சின்னம் ரோம் அண்ட் ஹாஸ் கம்பெனி, ஃபிலடெல்ஃபியா, பா., அவர்களின் ட்ரேட் மார்க்குகள். யு. எஸ். பேட்டண்டு ஆபீஸிலும் இதர நாடுகளிலும் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.




இண்டோக்பில் கெமிகல்ஸ்—பசுமை நிறைந்த வருங்காலத்திற்கு


வளர்ப்பு, சிறு தொழில் அபிவிருத்தி செய்து, புதிய வேலை வாய்ப்புகளை உண்டாக்க வேண்டும். இதுவரை நம் மாநில அரசு இதுபோல் 240 நகர்ப்புற புறங்களைத் துவக்கி இயக்கி வருகிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேலும் நூறுக்கும் மேற்பட்ட புதிய நகர்ப்புறங்கள் உருவாக்கப் பட வேண்டும். மற்றும் ஒரு வழி—பொருளாதாரம் குன்றிக் காணப்படும் பின்தங்கிய எட்டு மாவட்டங்களில் தொழிற்சாலைகள் நிறுவி வேலை வாய்ப்பளித்தல் இப்பொழுது மக்கள் பொதுக் கல்வியில் காட்டும் பிடிப்பு தகுதிக்குக் குறைந்த வேலை வாய்ப்பையே கொடுக்க வல்லதாக இருக்கிறது. தொழில் கல்வியில் கவனம் செலுத்தி, தகுதி பெற்றோர்க்குத் தகுதிக்குத் தக்க வேலை வாய்ப்பளிக்க முயற்சிக்க வேண்டும்.

மத்திய அரசினர் பொருளாதார முன்னேற்றம் ஏற்படக் கூடிய வகையில் மக்கள் தொகையை மாற்றி அமைக்க முயற்சிக்க வேண்டும். வளர்ச்சி குன்றியதும் மக்கள் தொகை அதிகமில்லாததுமான பகுதிகளுக்கு மக்கள் குடிபெயர்வதன் மூலம் பொருளாதார வளர்ச்சி அடைய முடியும். இப்படிக் குடிபெயர்ந்து வாழ்தல் அதிகமான மக்கள் தொகை கொண்ட மாநிலங்களில் மக்களது சராசரி வருமானத்தை உயர்த்தியும், மக்கள் தொகை குறைவாக உள்ள மாநிலங்களில் பொருளாதார வளர்ச்சியைப் பெருக்கவும் துணை நிற்கும்.

சென்னை போன்ற நகர்ப்புறங்களில் தொழிலாளர் எண்ணிக்கையில் பற்றாக்குறையும் அதனால் ஊதிய உயர்வும், ஊதிய உயர்வின் விளைவால் செய்பொருள் உற்பத்திச் செலவில் உயர்வும் ஏற்படுவதைப் பார்க்கிறோம். அதே சமயத்தில் சிறு நகர், கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பின்மையும், கூலியில் குறைவையும் காண்கிறோம், இது போன்ற சிக்கல்களைச் சமாளிக்க ஒரே வழி குடிபெயர்ந்து குடியேறுதலும், சிறு நகர்ப்புறங்களை வளர்ப்பதுமாகும்.

அமெரிக்காவில் அலாஸ்காப் பகுதியும், ரஷ்யாவில் சைபிரீயாப் பகுதியும், குடி பெயர்ந்து குடியேறி முன்னேற்றங் கண்ட பகுதிகள்தான். சராசரியாகச் சதுர மைலுக்கு 320 பேராக வாழும் நாம், கேரளத்தில் சதுர மைலுக்கு 1,380 பேராகவும், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் போன்ற பகுதிகளில் 200 பேருக்கும் குறைவாகவும், வாழ்கிறோம். இத் திட்டத்தின் மூலம் ஏற்றத் தாழ்வை . நீக்கி வருவாயைப் பெருக்கிக்கொள்ள முயற்சிக்கலாம். முயற்சி திருவினையாக்கும்.

தனி மனிதனின் அடிப்படைத் தேவைப் பூர்த்திக்காகவும், வேலை வாய்ப்பளிக்கவும், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 10,500 முதல், 11,500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதுடன், தகுதிக்குத் தகுந்த வேலை வாய்ப்பளிக்கவும், முயற்சிக்க விருக்கிறார்கள். இத் திட்டம் வெற்றிகரமாக முடியத் தேவைப்படும் பணத்தில் 6,000 முதல் 7,500 கோடி ரூபாய் நேர்முக வரி விதிப்பின் மூலம் சேர்க்கவிருக்கிறார்கள். வரி விதிப்பு வெறும் விலை உயர்வில் மட்டும் முடிந்துவிடாமல் பயனுள்ள வழிகளில் பயன் படுத்தப்பட வேண்டும். வரி விதிப்பு, உற்பத்தியைப் பெருக்கி வேலைவாய்ப்பளித்து தேசியத் தனி நபர் வருமானத்தை உயர்த்தி, பண வீக்கத்தைத் தடை செய்து, செய்பொருள்களில் உற்பத்திச் செலவைக் குறைத்து விலைவாசிகளைக் கட்டுப்படுத்தி, எளியவர், நடுநிலையினர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, ஒரு நல்ல சமுதாயத்தைச் சமைப்பதாக இருக்க வேண்டும். இப்படி நாம் எடுத்துக்கொள்ள விருக்கும் முயற்சிகள் தனி நபர் வருமானத்தை 1983—84-ல் இரட்டிப் பாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1970—71-ல் தனி நபர் வருமானம் ரூ . 370 ஆக இருப்பது 1983—84-ல் ரூ. 740 ஆக உயரும். இப்படிஏற்படும் உயர்வால் மாநில வருமானம் 4,205 கோடியாக உயருமெனக் கணக்கிட்டிருக்கிறார்கள். தமிழகத்தில் 1983—84-ல் மக்கள் தொகை 56.8 கோடியாக உயருமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

நம் திட்டங்கள் வெற்றி பெற நம் நாட்டின் தேசிய வருமானம் தனி நபர் வருமானம் உயர, நாடு நலம் பெற, மக்கள் நல்ல வளம் பெற எதிர்காலச் சந்ததியினர் நாம் ஓர் இந்தியக் குடிமகன் என்று சொல்லிப் பூரித்து நிற்க இனி ஒரு விதி செய்வோம், அதை எந்த நாளும் காப்போம்.

பெற்றவரைக் காப்போம்,
பெருமல் இனித் தடுப்போம்!

இந்தத் தேனாறும் சொந்தங்களுக்குத்தான் நாம் வாயூறி நிற்கிறோம்.

## தமிழரசின் தலை சிறந்த தொண்டு



ஐயா,

நாங்கள் 'தமிழரசு' தவறாது படித்து வரும் விவசாயிகள். இதற்கு முன் எந்த அரசும் இவ்வளவு விளக்கமாக, விரிவாக விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, விவசாய நுணுக்கங்களைக் கூறி ஊக்கம் கொடுக்கவில்லை. தமிழரசில் வரும் குறிப்புகளைப் படிக்கும்போதே மகசூல் வீட்டுக்கு வந்துவிட்டது போன்ற நிறைவு ஏற்படுகிறது. 'கேளுங்கள் கொடுக்கப்படும்' பகுதியை ஒவ்வொரு இதழிலும் வெகு ஆவலுடன் எதிர்பார்த்துப் படித்து வரும் எங்களுக்குச் சென்ற இரண்டு இதழ்களிலும் காணாதது மிகவும் ஏமாற்றமாக உள்ளது. இப்பகுதி ஒவ்வொரு இதழிலும் இடம் பெறச் செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்வதோடு விவசாயத்திற்கு அளவிலா ஆக்கமும் ஊக்கமும் தரும் 'தமிழரசு' பத்திரிகையின் பணி மேன் மேலும் வளர உளமார வாழ்த்துகிறோம்.

இப்படிக்கு,
நவீன விவசாய முன்னேற்றக் குழு,
நிலக்கோட்டை (வட்டம்),
மதுரை மாவட்டம்.

# தென் ஆர்க்காட்டுச் செய்திகள்

கி.பி. 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று கருதப்படுபவரும், இராமாயணத்தை எழுதியவருமான கவிச்சக்கரவர்த்தி கம்பனை ஆதரித்த வள்ளல் சடையப்பர் வாழ்ந்த திருவெண்ணெய் நல்லூர் தென் ஆர்க்காடு மாவட்டத்தில்தான் இருக்கிறது.

●

மதுரையிலுள்ள மீனாட்சியம்மன் ஆலயத்திலும், சுசீந்திரம் ஆலயத்திலும், சில தூண்களைத் தட்டினால் இனிய ஒலி வருவது போல, ஸ்ரீமுஷ்ணம் பூவராக சுவாமி ஆலயத்தில் உள்ள நாயக்க மன்னர்கள், அவர்கள் துணைவியர் ஆகியோரின் சிலைகளைத் தட்டிப் பார்த்தால், கருங்கல்லின் ஒலி கேட்பதில்லை; ஆனால் இசைக்கருவிகளை இயக்கினால் ஏற்படுமே சங்கீத ஒலி, அதுபோன்ற ஒலி கேட்கிறது.

தென் ஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகரான கடலூர், கூடலூர் என்றும் வழங்கப்படுகிறது. ஏன் தெரியுமா? பெண்ணையாறும் கெடிலம் நதியும் கூடுமிடத்தில் இந்த ஊர் அமைந்திருப்பதுதான் காரணம்!

●

கோனான் குப்பத்தில் வீரமா முனிவரால் கட்டப்பெற்ற கத்தோலிக்கத் தேவாலயம் இருக்கிறது. அவர் இந்த ஊரில்தான் தேம்பாவணி என்னும் நூல் இயற்றினார்.

●

மலையமான் என்னும் குறுநில மன்னன் ஆட்சி செலுத்திய பகுதியான திருக்கோவலூர் இந்த மாவட்டத்தில் தான் உள்ளது. இதனைக் கோவலூர் என்றும் அழைக்கிறார்கள்.

●

திருக்கோவலூர் வட்டத்தைச் சேர்ந்த சேந்தமங்கலத்தில் சோழ, பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுக்கள் உள்ளன. கிருஷ்ண தேவராயரின் வெற்றியை எடுத்துரைக்கும் கல்வெட்டும் இருக்கிறது.

●

பண்ணுருட்டி பலாப்பழத்திற்குப் பெயர் போனது. இப்போது முந்திரி வளர்ச்சியிலும் சிறந்து விளங்குகிறது.

பண்ணுருட்டி பலாச்சுளைகளுக்கு மட்டுமல்ல பொம்மைகளுக்கும் பெயர் போன ஊர். தமிழகத்தில் கொண்டாடப்பட்டு வரும் நவராத்திரி விழாக்களில் முதலிடம் பெறுவது பண்ணுருட்டிப் பொம்மைகள்தாம்.

●

இன்றைய திண்டிவனம் தான் முன்னாளில் கிடங்கல் என்னும் பெயருடன் திகழ்ந்ததென்றும், நல்லியக் கோடன் என்னும் குறுநில மன்னன் இதனை ஆண்டு வந்தான் என்றும் வரலாறு தெரிவிக்கிறது.

●

சர்வ சமய சமரச சன்மார்க்கத்தைத் தோற்றுவித்தவரும் அருட்சோதி வள்ளல் என்றும் வள்ளலார் என்றும் புகழப்படுபவருமான இராமலிங்க அடிகளார் இந்த மாவட்டத்துக்காரர் என்பதிலே இந்த மாவட்டத்துக்குத் தனிப்பெருமை உண்டு.

●

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கூட்டுறவு இயக்கம் 1907-ஆம் ஆண்டில் துவக்கப்பெற்றது. இந்த மாவட்டம் கூட்டுறவுத் துறையில் தனிப்பெருஞ் சிறப்பைத் தேடிக் கொண்டிருக்கிறது. இந்த மாவட்டத்திலுள்ள எல்லாக் கிராமங்களிலும் கூட்டுறவு நிறுவனங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

பறம்பு மலை மன்னன் பாரியின் மகளிரான அங்கவை, சங்கவை இருவருக்கும் அடைக்கலம் கொடுத்து ஆறுதலளித்தது தென் ஆர்க்காடு மாவட்டந்தான். பாரியின் பிரிவால் அவரது நண்பர் கபிலர் மனம் வருந்தித் தீ மூட்டி உயிர் துறந்ததும் இந்த மாவட்டத்தில்தான்.

●

வாணிகம் செய்ய வந்த ஆங்கிலேயர் முதன்முதலில் கிழக்கிந்தியக் கம்பெனியார் என்ற பெயரில் கடலூர் துறைமுகத்தில், தங்களது பண்டகசாலையை நிறுவினார்கள். பின்னர் உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையிட்டு மெல்ல மெல்ல நாட்டை ஆளும் நிலைக்கு வந்துவிட்டார்கள். அப்போது கடலூரில் செயின்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டினார்கள். அதன் இடிபாடுகளையும், கிழக்கிந்தியக் கம்பெனியார் வாணிகம் நடத்திய இடங்களின் சின்னங்களையும் கடலூர் கடற்கரைச் சாலையில் இன்றும் காணலாம். இன்று கடலூர் மஞ்சைக்குப்பத்தில் உள்ள ஆர்ச் குசையப்பர் உயர்நிலைப்பள்ளி அமைந்துள்ள இடம் 'கார்னல் தோட்டம்' என அழைக்கப்படுகிறது. இந்த இடம் ஆங்கிலேயரின் படைத் தலைவர் வசித்த இடமாக இருந்ததாலேயே இப்பெயருடன் விளங்குகிறது.

சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணம், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள சிதம்பரம் நடராசர் ஆலயத்தில் அரங்கேற்றம் செய்யப்பெற்றது. அண்மைக் காலத்தில், கோவையைச் சேர்ந்த திரு சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் பெரிய புராணத்திற்கு எழுதிய உரையும் சிதம்பரம் ஆலயத்தில்தான் அரங்கேற்றம் செய்யப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

●

விருத்தாசலத்தில் உள்ள அரசினர் பிராந்திய அச்சகத்தில் தொழிலாளர்களின் மனமகிழ் மன்றம் ஒன்று இயங்கி வருகிறது. குடியரசு நாள், விடுதலை நாள் போன்ற முக்கியமான விழா நாட்களை இந்த மனமகிழ் மன்றம் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது. அதற்கு அரசு ஆண்டுக்கு ரூ. 250 நன்கொடையாகத் தந்து வருகிறது.

●

ஆர்ட்டிசன் கிணறுகள் என்று சொல்லப்படும் தானே இயங்கி வரும் ஊற்றுக் கிணறுகள் தமிழகத்தில் இந்த மாவட்டத்தைத் தவிர வேறு எந்த மாவட்டத்திலும் கிடையாது.

காட்டு மன்னார் கோயில் என்று வழங்கப்படும் ஊரின் பெயர் அதுவல்ல; வீரநாராயண நல்லூர் என்பதே ஆகும்; இது ஒரு காலத்தில் சோழ நாட்டின் தலைநகராக இருந்தது என்றும் கூறப்படுகிறது. இதன் அருகில் உள்ள வானமாதேவி, உத்தம சோழகன் முதலிய ஊர்கள் இதற்குச் சான்றுகளாக உள்ளன. இவ்வூர் காட்டு மன்னார் கோயில் எனப்பெயர் பெற்றதற்கு ஒரு கதை வழங்கப்பட்டு வருகிறது. ஆழ்வார்கள் அருளிய நாலாயிர திவ்ய பிரபந்தங்கள் மறைந்துவிட, அவை எங்கே இருக்கின்றன என்பதை இந்த ஆலயத்தில் உள்ள பெருமான் காண்பித்ததாகவும், அதனால் அவர்க்குக் காட்டும் மன்னன் என்று பெயர் ஏற்பட்டதாகவும் சொல்கிறார்கள்.

திண்டிவனம் நகரத்தில் 17·34 இலட்ச ரூபாய் செலவில், பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த நகராட்சியில் சாக்கடைத் திட்டம் இல்லாததால், அதனை அமைக்கும் கருத்து அரசினரின் ஆய்வில் இருக்கிறது.

வீராணம் ஏரி என்று சொல்லப்படும் ஏரியின் பெயர் வீரநாராயண ஏரி ஆகும். இது தமிழ்நாட்டிலேயே மிகப்பெரும் ஏரியாகும். ராஜாதித்தன் என்ற சோழ மன்னன் கி. பி. 9 ஆம் நூற்றாண்டில் இந்த ஏரியை வெட்டியதாகச் சொல்லப்படுகிறது. ராஜேந்திர சோழன் கங்கை கொண்ட சோழபுரத்தில் கோயிலும் ஊரும் உண்டாக்கும்போது, அந்நகர அமைப்புக்காக மண்வெட்டியபோது ஏற்பட்ட ஏரிதான் இது என்றும் சொல்லப்படுகிறது. வீர நாராயணன் என்று அழைக்கப்பட்ட முதற் பராந்தக சோழனால் இது அமைக்கப்பட்டது என்றும் சொல்லப்படுகிறது.

வீராணம் 52 வடிகால் கணைக் கொண்டது. இதன் நீர் கான்சாகிப் கால்வாய் வழியாகச் சிதம்பரம் வட்டத்தில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதியை அளித்து வருகிறது. 43,500 ஏக்கர் பரப்பிற்கு மேற்பட்ட ஆயக்கட்டு உள்ளது.

விருத்தாசல வட்டத்தைச் சேர்ந்த மணவாள நல்லூரில் உள்ள கொளஞ்சியப்பர் தேவஸ்தானம் தென் ஆர்க்காடு மாவட்டத்திலேயே அதிக வருவாயுள்ள ஆலயமாகும். ஆண்டொன்றுக்கு ரூபாய் 3 இலட்சம் உண்டியல் வாயிலாகவும், தானியம், கால்நடைகள் ஆகியவற்றின் வாயிலாகவும் கிடைக்கிறது. இதற்குச் சொந்தமாக 12·22 ஏக்கர் நிலம் உள்ளது.

தனது வருவாயை நல்ல பணிகளுக்கு இந்த ஆலயம் செலவு செய்வது குறிப்பிடத்தக்கது. சித்த மருத்துவமனை ஒன்றினை நிறுவிப் பொது மக்களுக்கு இலவசச் சிகிச்சை தருகிறது.

விருத்தாசலத்தில் உள்ள கொளஞ்சியப்பர் கலைக் கல்லூரிக்கு ரூ. 2 இலட்சம் நன்கொடையாகத் தந்துள்ளது.

புதுக்கோட்டையில் உள்ள பெண்கள் கல்லூரிக்கு 10 ஆயிரம் ரூபாய் நன்கொடை தந்துள்ளது.

அனைத்துக்கும் மேலாக, முதல்வர் அவர்களின் வேண்டுகோளின்படி உருவாக்கப்பட்ட இலவசக் கண் சிகிச்சை முகாம் வெற்றி பெற ரூ. 20 ஆயிரம் கொடுத்து உதவி இருக்கிறது.

# பரங்கிப்பேட்டைப் பெருமை

தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பரங்கிப்பேட்டை பல வகைப் பெருமையும் படைத்ததாகத் திகழ்கிறது.

இந்த இடம் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாரால் (Porto Nova) என்று அழைக்கப்பட்டது. இதன் பொருள் New port என்பது. அதாவது புதிய கோட்டை. ஆங்கிலேயர்கள் இந்த இடத்தில் ஒரு கோட்டை கட்டினார்கள். அதனால்தான் புதிய கோட்டை என்று இந்த இடம் அழைக்கப்பட்டது.



இங்கே, கடல்வாழ் உயிரின ஆராய்ச்சி நிலையம் ( Biological Station ) ஒன்று இருக்கிறது. இது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்தது. இங்கு ஆண்டுதோறும் 45 மாணவர்கள் ஆராய்ச்சி செய்கின்றனர்.

வெள்ளாறும், உப்பங்கழியும் (Back water) கலப்பதால் இங்கே ஆய்வுக்குரிய வாய்ப்புகள் நிறைந்துள்ளன. அதிலும் ஆய்வுக்கூடம் அமைந்திருக்கும் இடத்தில், கரையோரத்திலேயே ஆய்வுக்குரிய பொருள்கள் எளிதில் கிடைக்கின்றன.

இந்த நிலையத்தில் பலவகையான மீன்களும், பாம்புகளும் கொண்ட காட்சியகம் ஒன்று உள்ளது. பல வகையான கடற்பொருள்களும் வைக்கப்பட்டுள்ளன.

பரங்கிப்பேட்டை, உப்பளங்களுக்குப் பெயர்போன இடம்.

இங்கு, அதிக அளவில் கிடைக்கும் இறால் மீன்கள் (Prawns) அமெரிக்கா போன்ற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. அமெரிக்கர்கள் இவற்றை விரும்பி உண்கின்றனர்.

இறால்களைக் கடலிலிருந்து பிடிப்பதற்கு இங்கே ஒருவகை முறை கையாளப்பட்டு வருகிறது. ஆழ் கடல் மீன்பிடிப்பு முறையென்று சொல்லப்படுகிறது. நைலான் வலை, கூடை மாதிரி இருக்கும். படகுகளில் இதனைப் பொருத்தி விடுவார்கள். இறால்கள் அவற்றுக்குள் விழுந்துவிடும். வலையைக் கத்தரித்து வெளியே வர முடியாது. இந்த முறையை நமது மாநிலத்தில் தூத்துக்குடியிலும், கேரள மாநிலத்திலும் கடைப்பிடிக்கிறார்கள்.

இங்கு டேனிஷ் மிஷன் நடத்தும் பள்ளி ஒன்று இருக்கிறது. இந்தப் பள்ளியில் அனாதைக் குழந்தைகள் பராமரிக்கப்படுகிறார்கள். பல ஆண்டுகளுக்கு முன்பு, இங்கு வந்த காந்தியடிகள் "சேவா மந்திர்" என்று இந்தப் பள்ளிக்குப் பெயர் வைத்தார்.

டென்மார்க்கிலிருந்து இந்தப் பள்ளிக்குப் பலவித உதவிகள் கிடைத்து வருகின்றன.

ஐதர் அலிக்கும் ஆங்கிலேயர்களுக்கும் 1781-ல் போர் நடந்த இடம் இந்தப் பரங்கிப் பேட்டையில் உள்ளது.

துவக்கத்தில் இங்கு உருக்காலை இருந்திருக்கிறது. இந்தியாவிலேயே முதல் உருக்காலை இங்கே இருந்த ஆலையாகத்தான் இருக்க வேண்டும். இங்கு செய்யப்பட்ட இரும்புப் பாளங்கள் (கர்டர்கள்) சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் இன்றும் உள்ளன. போர்ட்ட நோவாவில் செய்யப்பட்டது என்ற பொருளுள்ள ஆங்கிலச் சொற்றொடர் அந்த இரும்புப் பாளங்களில் உள்ளது.

சென்னையில் உள்ள 'பக்கிங்ஹாம்' கால்வாயை யாரும் மறக்க முடியாது. அந்தக் கால்



வாய், பரங்கிப் பேட்டையில் தான் துவக்கம்ஆகிறது. மாமல்லபுரம் வழியாகச் சென்னைக்கு வந்து சேரும் அந்தக் கால்வாயின் நீளம் சுமார் 250 கிலோ மீட்டர் இருக்கலாம்.

பரங்கிப்பேட்டைக்கு மாபெரும் பெருமை ஒன்று வந்து சேர இருக்கிறது. கடல்நீரைக் குடி தண்ணீராக மாற்றும் நிலையம், இந்தியாவிலேயே முதன் முதலாக இங்கேதான் அமையப் போகிறது என்னும் பெருமை தான் அது!

ஆசிரியர், வெளியிடுபவர் செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை, அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-2.



# புத்தம் புதிய திட்டம்— அத்தனையும் உங்களுக்கே!

## 1972 அக்டோபர் முதல் அளிக்கப்படும் பரிசுகளில் பரபரப்பூட்டும் மாறுதல்கள்



**மூன்று வரிசைகளுக்கு, மொத்தப் பரிசுகளும் பரிசுத் தொகையும்:**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | முதல் பரிசுகள் | ஒவ்வொன்றும் | ரூ. 1,00,000 | = | ரூ | 3,00,000 |
| 6 | இரண்டாவது பரிசுகள் | ஒவ்வொன்றும் | ரூ. 10,000 | = | ரூ. | 60,000 |
| 225 | மூன்றாவது பரிசுகள் | ஒவ்வொன்றும் | ரூ. 1,000 | = | ரூ. | 2,25,000 |
| 300 | நான்காவது பரிசுகள் | ஒவ்வொன்றும் | ரூ. 500 | = | ரூ. | 1,50,000 |
| 1500 | ஐந்தாவது பரிசுகள் | ஒவ்வொன்றும் | ரூ. 100 | = | ரூ. | 1,50,000 |
| 3000 | ஆறாவது பரிசுகள் | ஒவ்வொன்றும் | ரூ. 50 | = | ரூ. | 1,50,000 |

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு கீழ்க்கண்டபடி ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசுக்கு | ஒவ்வொன்றும் | ரூ. 1500/- வீதம் 6 ஆறுதல் பரிசுகள் = | ரூ. 9000/- |
| இரண்டாவது பரிசுகளுக்கு | ஒவ்வொன்றும் | ரூ. 500/- வீதம் 12 ஆறுதல் பரிசுகள் = | ரூ. 6000/- |

**மொத்தப் பரிசுகள்: 5052** *

**மொத்தப் பரிசுத் தொகை ரூ. 10,50,000**

**குலுக்கல் நாள்: 10—11—1972**

பரிசு சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

**இன்றே வாங்குங்கள்**
**தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு**



விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.
கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2

* 3 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.






இந்நாளில் விஞ்ஞானத்தின் துணையால் தாய் மண்ணைத் தாரமாக்கக் கற்றுக் கொண்டோம். தாயைப் பழிவாங்கும் மக்கள் முன்னாளில் கிடையாது. தாரத்தைப் பழிவாங்கும் மக்கள் எந்நாளிலும், எந்நாட்டிலும் உண்டு. மண் மூடிய இந்த உலகத்தை எந்நாட்டவரும் பழி வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். பண்படுத்திய பூமிகள் மாறிப் பாழ் மனைகள் ஆகின்றன. தாவரம் செழித்த இடங்கள் தரைமட்டமாகின்றன.

நந்தவனங்கள் போன்று பூத்துக் குலுங்கிய இடங்கள் மறைகின்றன. வானுற ஓங்கி உயர்ந்த மரங்களை வளர்த்த காடுகள், அருகி வருகின்றன. வண்ணப் பறவைகளும், விந்தை விலங்குகளும் காணக் கிடைக்காது மறைந்து மடிந்து போகின்றன.

மண்ணை வளமாக்கவும், மண்ணைப் பொன்னாக்கவும், மண்ணை வணங்கவும் மக்கள் குலத்துக்கு அறிவு வர வேண்டும். மண் வளம் குறைந்தால் மக்கள் மனவளம் குறையும். இலக்கிய வளம் போம். சொல் நாகரிகம் குன்றிக் கருத்துக்கள் ஒடுங்கி மனிதர்கள் விலங்கு மனத்தினராய்க் கருவி பிடிக்கும் கரத்தினராக மாறிவிடுவார்கள். பயங்கரச் செயல்கள் பண்பாகப் போற்றப்படும்; கொலை செய்வது, நன்றி மறப்பது, தீமை புரிவது இயல்பாகிப் போகும். மண்ணைக் கெடுப்பார், மக்கள் குலத்து மன நாகரிகத்தைக் கெடுப்பவர்.

காற்று, தண்ணீர், மண் மூன்றையும் கெடுத்துக் கொண்டு வருகிறோம். இவை நமக்குக் கிடைத்த அமிழ்தங்கள். இயல், இசை, நாடகம் போன்ற முத்தமிழுக்கு இவை சமம்.

இதுகாறும் மனித குலத்துக்குரிய மூன்று புறச் செல்வங்களைச் சொன்னேன்.

இனி, மனித குலம் முழுமைக்குரிய அகச் செல்வங்கள் மூன்றினைச் சொல்லுகிறேன்.

வியப்பு - நம்பிக்கை-அன்பு-

என்ற மூன்று செல்வங்களும் காற்று, தண்ணீர், மண் என்னும் மூன்று செல்வங்களுக்குச் சமம்.

வியக்கத் தெரிவது பெரிய கொடை! கொடுக்கத் தெரிவது மட்டும் கொடையன்று. எவை அழகு தருவனவோ, எவை நல்லறிவு தருவனவோ, எவை பண்பாட்டைத் தருவனவோ, அவற்றைக் கண்டு வியக்கத் தெரிய வேண்டும். வடிவங்களையும் வண்ணங்களையும் பார்த்து இன்புறுதல் வேண்டும்.

பாடும் நதிகள், ஓடும் மேகங்கள், ஆடும் மயில்கள், அசையும் யானைகள் யாவும் கண்ணுக்கு வியப்பூட்டும் பொருள்கள். இதே போன்று, கருத்துக்கு வியப்பூட்டும் கவிதைகள், கதைகள், நாடகங்கள், அரசியல் திருப்பங்கள், மேடைப் பேச்சுகள் ஆகியவற்றையும் அறிவுக் கண்ணால் முதற்கண் வியக்கத் தெரிய வேண்டும். பின்னர் விளை புரியத் தெரிய வேண்டும்.

வியக்கத் தெரிவது அடித்-தளம். வியக்கும் பொருள்களை நாமே சிருஷ்டிக்கத் தெரிவது மேல் தளம். செடியின் வேரும், அதன் பூவும் போல எவை வெறுக்கத் தக்கன, எவை விரும்பத்தக்கன என்று மனத்தால் கோடு போடத் தெரிந்தால் வியக்கத் தக்க சூழ்நிலைகளை நாமே உண்டாக்கலாம். நம் போன்ற மனிதர்களை உய்வித்துச் செல்லலாம். செல்வர்கள் ஆக்கலாம்.

கீழே பத்துப்பாட்டு இலக்கியங்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றிற்கு எதிர் வரிசையில் அந்தந்த நூல்களின் பெயர்களும், மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன. அந்தந்த இலக்கியத்திற்குரிய ஆசிரியரையும் பாடப் பெற்றோரையும் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

| பாட்டு | ஆசிரியர் | பாடப்பெற்றோர் |
|---|---|---|
| 1. திருமுருகாற்றுப்படை | கபிலர் | நல்லியக்கோடன் |
| 2. பொருநர் ஆற்றுப்படை | நப்பூதனார் | நெடுஞ்செழியன் |
| 3. சிறுபாணாற்றுப்படை | மாங்குடி மருதனார் | கரிகாற்சோழன் |
| 4. பெரும்பாணாற்றுப்படை | நக்கீரர் | ஆரியமன்னன் பிரகத்தன் |
| 5. முல்லைப்பாட்டு | முடத்தாமக்கண்ணியார் | முருகப்பெருமான் |
| 6. மதுரைக்காஞ்சி | பெருங்கௌசிகனார் | நன்னன் |
| 7. நெடுநெல்வாடை | நத்தத்தனார் | இளந்திரையன் |
| 8. குறிஞ்சிப்பாட்டு | உருத்திரங்கண்ணனார் | கரிகாற் சோழன் |
| 9. பட்டினப்பாலை | நக்கீரர் | பெயர் தெரியாத தலைவன் |
| 10. மலைபடுகடாம் | உருத்திரங்கண்ணனார் | நெடுஞ்செழியன் |

விடை : அடுத்த பக்கம்

# வயலதை வளர்ப்போம்

## டி. என். சுகி சுப்பிரமணியம்

மனிதனுகப் பிறந்த ஒவ்வொருவரும் சீரும் சிறப்புமாக வாழச் சுத்தமான காற்று, தண்ணீர், மண் மூன்றும் தேவை.

காற்றும் தண்ணீரும் சுத்தமாக இருப்பதை—இருக்க வேண்டுவதை நம்மில் பெரும்பாலோர் ஒப்புக் கொள்வார்கள். மண் தூயதாக இருக்க வேண்டுவதை வேளாண்மை செய்பவர்கள் மட்டும் ஒப்புக் கொள்ளுவார்கள்.

இவற்றை அசுத்தப் படுத்துவதை இந்நாளில் தொழிலாகவும், குறிக்கோளாகவும் வைத்துக் கொண்டிருக்கிறோம். இவ்வாறு செய்வதை நாகரிகமாகப் பேணுகிறோம். நம்மில் சிறுபாலோர் இவற்றைச் சுத்தமாக வைக்க வேண்டுமென்னும் பணியில் கர்நாடகமாகவும் ஈடுபடுகிறார்கள்.

நாம் தொழிற்படுத்தும் இயந்திரச்சாலைகள், தொழிற்கூடங்கள் காற்றை அசுத்தப் படுத்தவே சதா வேலை செய்கின்றன. தூய்மை குறைந்த காற்று விஷத்துக்குச் சமம். விஷப் பொருள்கள் தயாரிப்பதே இந்நாளைய நாகரிகத்தின் முழுநேர வேலை. அமிர்த மயமான காற்றை உண்டு விஷத்தன்மை உமிழ்கிறவை மனிதர்கள், இயந்திரங்கள் விஷவாயுவைச் சுத்தப்படுத்தும் சக்தி, கேவலம் மரங்களுக்கும் பசிய செடி கொடிகளுக்கும் இயல்பாக இருக்கின்றன.

தாவர உலகம் நமக்கு அமிர்தம் தருகிறது; தூய காற்றுத் தருகிறது! காற்று அசுத்தப்படாமல் சுத்தமாக்கும் பணியைச் சமூகத்துள்ளாகப் பார்த்துக் கொள்வது தாவர உலகம். தாவர உலகத்தின் அறிவு- படைத்த மக்கள் இந்நாளில் அருகி வருகிறார்கள். தூய காற்றுக்குப் பஞ்சம் வருகிறது.

தாவர உலகம் சரிவர இயங்கிக் காற்றைச் சுத்தப்படுத்தினால் காற்றுக்கும் அப்பால் மற்றொரு நன்மை உண்டாகும்.

### அதுவே மழை

பசுமையான இயற்கை செழித்தால் பருவமழை தப்பாது வரும். மரம் செழித்தால் மழை செழிக்கும். பூமித்தாய் ஈரமுள்ள நெஞ்சோடு வற்றாது வாரி வழங்குவாள். மண்ணிடைப் பிறக்கும் மரங்களை மனிதர்கள் வெட்டிப் பிழைக்கிறார்கள்; மரங்களை நட்டுப் பிழைப்பது தான் மனிதன் செய்ய வேண்டிய தர்மம். அழிப்பதும் இந்நாள் நாகரிகம். புதிய துறைகளை வளர்க்கும் போது புதிய தொழிலகங்களை உருவாக்கும் போது, புதிய சாலைகள் போடும் போது, புதிய காலனிகள் கட்டும் போது தாவர வளத்தையும் அணைத்துக் கொண்டு வேலை செய்ய வேண்டும்.

சாலைநெடுக மரங்கள் வைத்ததும், தோப்புத் துரவுகள் எழுப்பியதும் அறிவற்றவர்கள்செய்கையன்று. பாருங்களேன்! ஆற்றோரம் ஏரிக்கரையோரம் மரங்களைப் பாதுகாத்த தன்மை போய்க் கொண்டிருக்கின்றன. இதனால் தூய காற்றுக்கும் பஞ்சம். அமிர்த மழைக்கும் பஞ்சம், ஊர்ப் பொதுவுக்காகச் சில எண்ணெய் மரங்கள், புன்னை இலுப்பை மரங்கள் இருந்தன என்பது ஏட்டுப்பாடமாக மாறிவிட்டன. காடுகளும் சோலைகளும் இல்லாது போனால், நாடுகளும் நகரங்களும் பாலையாய்ப் போம்.

கழனிகளுக்கும், கார்நிலங்களுக்கும் தூய்மையான தண்ணீர் தேவை. கழிவு நீர்கள் கலக்கக் கலக்க, செடியின் வீரியம் போய், பயிரில் பச்சை பிடிக்காமல் சோகைபிடிக்கலாம். மணிகள் பிடிக்காமல் சாவியும் சண்டும் பிடித்து விடலாம். வளத்திற்குப் பதில் வறுமை பீடிக்கலாம்.

உயிர் வாழ்வன யாவற்றுக்கும் தூய தண்ணீர் தேவை; நமது நாகரிக வாழ்க்கையில் மனிதன் குடிக்கக்கூடத் தூய்மையான நீர் எங்கும் கிடைக்கவில்லை.

பளிங்கு போன்ற ஓடைகளும், பால் வெண்ணீறு போன்ற கண்மாய்களும், இளநீர்த்தன்மையான கிணறுகளும் தமிழகத்தில் சில இடங்களில் இன்னும் காணக் கிடைக்கின்றன. குழாய் வழியாக வரும் தண்ணீர் தூய்மையாக இருந்தால் போதும். பயிருக்கும், கால்நடைக்கும் கேடு கெட்ட தண்ணீர் கிடைத்தால் போதும் என்றால், நாம் மனித சமுதாயத்திற்கு விரோதிகள். வாடும் பயிரைக்காண வேண்டிய அஞ்ஞானிகள், உயர்ந்த கால்நடைகளுக்கு உற்சாகம் தரும் உலுத்தர்கள்.

தூய காற்றும், தூய தண்ணீரும் தாவர உலகத்தைப் பொறுத்தது; தாவர உலகம் வீறு கொண்டு வளரவும், ஒன்றுக்கு நூறாக விம்மி வெடித்துப் பலன் தரவும் தூய்மையான மண் தேவை. மண்ணை விட இனிமையான பொருள் வேறு எதுவும் இல்லை. மணமிக்க மலர்கள் மண்ணிடையே தோன்றுகின்றன. அழகுமிக்க பறவைகள், வலிவுடைய விலங்குகள் மரங்களிலும், மரங்கள் சூழ்ந்த கானகங்களிலும் வாழ்கின்றன. மண்ணைத் தாயகம் என்கிறோம். தாய்க்கு மாண்பும், மதிப்பும் உண்டு. அவள் தியாகி; அவள் உள்ளம் பிறரைக் காக்கும் பேருள்ளம்.






தமிழரசு அளிக்கும்
இணைப்புகள்
மாநிலத் திட்டக் குழுச்
செயல் அணி
அறிக்கையின் சுருக்கங்கள்
புத்தகங்களாக
வருகின்றன!
டிசம்பர் 1உ 1972
பசுமைப் புரட்சிக்குப் பன்னிரண்டு ஆண்டுத் திட்டம்
டிசம்பர் 16உ 1972
வெண்மைப் புரட்சியும் நீலப்புரட்சியும்
சனவரி 1உ 1973
கல்வி வளர்ப்போம்
சனவரி 16உ 1973
நல்வாழ்வு பொங்க....






232 சதுர அடியாக இருக்கவேண்டும் என்று முதலில் வரையறுக்கப்பட்டது. ஆனால் அதிகமான பேர்களுக்கு வசதி ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் செலவுகளை மேலும் குறைக்க வீட்டுப் பரப்பு பல்வேறு வடிவமைப்புகளுக்கு ஏற்ப 197 சதுர அடியிலிருந்து 215 சதுர அடி வரை இருக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு இல்லத்திலும் ஒரு அறை, சமையல் அறை, குளிக்குமிடம், கக்கூஸ், தண்ணீர்க் குழாய் வசதி, மின்சார வசதி உண்டு. மேல் மட்ட நீர்த் தொட்டி கட்டிக் குடிநீருக்கு வசதி செய்யப்படுகிறது. இந்தக் குடியிருப்புப் பகுதிகளில் பள்ளிகள், விளையாட்டுத் திடல்கள், சமுதாயக் கூடம், குழந்தைகள் விளையாடுமிடம், மருந்தகம், பூங்கா, அங்காடி முதலியன அமைக்கவும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### வாடகை ரூ. 15 தான்

இந்த இல்லங்களுக்கு, கட்டுமானச் செலவுக்கு ஏற்ப, கட்டுபடியாகக் கூடிய வாடகை விதிக்கப்படுவதில்லை. அப்படி வாடகை விதிப்பதென்றால் மாதம் ரூ. 50 வாடகை ஆகும். ஆனால் வசதிக் குறைவான மக்களின் நலனை முன்னிட்டு, மிகப் பெரும்பாலான குடும்பங்களில் சம்பாத்தியம் உள்ளவர் ஒரே ஒரு நபர் என்ற நிலையைக் கருத்தில் கொண்டு அடையாள வாடகை என்ற முறையில் மாதம் ரூ. 15 வாடகை வரையறுக்கப்பட்டுள்ளது. சோசலிச சமுதாய அமைப்பை ஏற்படுத்திக் காட்டுவதில் இது போன்ற செயல் திட்டங்கள் மிக முக்கியமானவை என்பதால் இத்திட்டம் செயலாக்கப்படும் காலம் வரை, ஆண்டு ஒன்றுக்கு மத்திய அரசினர் ரூ. 10 கோடி வீதம் உதவி வரவேண்டும் என்று வாரியம் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டு வருகின்றது.

### ....வாழ்க்கை நிலை மேம்பட....

புதிய இல்லங்களில் மக்களைக் குடியமர்த்துவதுடன் பணி முடிந்து விடுவதில்லை. இந்த மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த வேண்டும். சுற்றுப்புறச் சுகாதாரத்தைப் பாங்குறப் பேண வேண்டும். கல்வி வசதியைப் பரப்ப வேண்டும் என்பதை உணர்ந்து சமூக நலப் பணிகளுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது. சமூக நலனுக்குப் பணியாற்றும் பல்வேறு நிறுவனங்களின் தொண்டு இவ்வகையில் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. புதுக் குடியிருப்பு நல்வாழ்வுப் பேரவையின் பணி இவ்வகையில் குறிப்பிடத்தக்க தொன்றாகும். மற்றும் சீரணிப் படையினர், கில்டு ஆப் சர்வீஸ், இந்தியா ஸ்வாலோஸ், மாதர் நலத்துறை, பியூட்டி டியூட்ஸ், ஒய்.எம்.சி.எ. ஆகியவையும் சமூக நலப் பணியாற்றி வருகின்றன. புதிய குடியிருப்புகளில் குடியமர்வோர் சிந்தனை, செயல்முறை, வாழ்க்கைநோக்கு அனைத்திலும் மேம்பட வேண்டும் என்ற கருத்தோடு இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. மக்கள் வாழ்க்கை முன்னேற்றத்துக்கும் அறிவு வளர்ச்சிக்கும் பயன்படத் தக்க திரைப்படங்கள் இப்பகுதிகளில் செய்தி மக்கள் தொடர்புத் துறையினரால் திரையிடப்படுகின்றன. சில குடியிருப்புப் பகுதிகளில் ஏற்கெனவே நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 500 குடும்பங்களுக்கு மேல் உள்ள பகுதிகளில் மருந்தகங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. குடும்ப நல முறைகள் எடுத்துரைக்கப்படுகின்றன. இப்பகுதிகளில் இளைஞர்களுக்குத் தொழிற் பயிற்சிக்கான கூடங்கள் அமைக்கவும் வாரியம் செயல் முறைகளை வகுத்து வருகிறது.



# 7 ஆண்டுகளில்

'பெரிய நகரங்களில் குடிசைப் பகுதிகளை மாற்றி அமைப்பதன் மூலம் அந்த மக்களுக்கு நன்மையும், அவர்களுடைய ஆற்றல் நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படக் கூடிய நிலையையும் ஏற்படுத்துகிறோம். அது மட்டும் போதாது. குடிசைப் பகுதிகளில் மிகுந்திருக்கும் ஆள் பலத்தை தாயகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் சமுதாயச் செழுமைக்கும் பயன்படுத்திக்கொள்ள வழிவகை செய்வதும் முக்கியம்' என்ற கருத்தைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்திச் சொல்லி வந்தார்கள்.

அங்கும் இங்குமாகச் சிற்சில திருத்தங்களைச் செய்வதனால் குடிசைப் பகுதிகளை மேம்படுத்திவிட முடியாது. குடிசை வாழ் மக்களுக்காக அரசாங்கமே முன்னின்று பெரியதொரு திட்டம் வகுத்து அதனைச் செயல்படுத்தினால்தான் நகரங்களிலும் நகரங்களின் சுற்றுப்புறப் பகுதிகளிலும் குடிசைப் பகுதிகள் நிலை மேம்படும் என்று அவர் கூறிய கருத்தைச் செயல்படுத்தத் தோன்றியதே குடிசை மாற்று வாரியம் ஆகும். தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், தோன்றி இரண்டே ஆண்டுகளில் அது செய்து முடித்துள்ள பணிகள் அனைத்திந்தியாவின் கவனத்தையும் கவர்ந்துவிட்டன. வியக்கத்தக்க சாதனை என்று வேறு மாநிலத்தவராலும் போற்றப்பட்டுள்ளது. அயல் நாடுகளில் கூட, இத்திட்டத்தின் சிறப்பினை ஏடுகள் எடுத்துரைத்திருக்கின்றன.

வெள்ள அபாயங்களுக்கும் தீ விபத்துகளுக்கும் இடமில்லாமல் குச்சு வீடு இருந்த இடங்களில் மச்சு வீடுகள், ரூ. 50 நியாய வாடகை இருக்கக்கூடிய குடியிருப்புகளை ஏழை மக்கள் நலன் கருதி ரூ. 15 வாடகைக்கு விடுவது, சென்னையின் அழகுக்கு மேலும் எழிலூட்டும் வகையில் இந்த மாடிக் குடியிருப்புகளை அமைத்திருப்பது; மக்கள் வாழ்க்கை நிலையை மேம்படுத்த வசதிகள், உதவிகள் இவை அனைத்தையும் விளக்குகிறது இக்கட்டுரை.

# 180 ஆயிரம்

சென்னை நகரில் மொத்த மக்கள் தொகை சுமார் 27 இலட்சம் என்றால், நகரில் உள்ள வீடுகள் எண்ணிக்கை—ஒரு இலட்சத்து இருபதாயிரம் மட்டுமே ஆகும். குடிசைப் பகுதிகளில் வாழும் மக்கள் உட்பட அனைவருக்கும் ஓரளவுக்கு நிறைவான வீட்டு வசதி செய்வதென்றால் சுமார் 4 இலட்சம் இல்லங்களாவது வேண்டும். நகர மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் குடிசை வாழ் மக்களே யாவர். நகரின் எல்லாப் பகுதிகளிலும் விரவிக் கிடக்கும் குடிசைப் பகுதிகளில் இவர்கள் வாழ்கின்றனர். அண்மையில் எடுத்த புள்ளி விவரங்களின்படி சென்னையில் 1,202 குடிசைப் பகுதிகள் இருப்பதாகக் கணக்குக் கிடைத்திருக்கிறது. இந்தக் குடிசை வாழ் மக்களில் மிகப் பெரும்பகுதியினர் மாதம் ரூ. 50 ரூ. 70, ரூ. 100 என்ற அளவில் மிகக் குறைந்த வருமானம் உள்ள ஏழைகள்.

### ஏழையின் சிரிப்பு

இன்றைய தமிழக அரசு ஏழைகளின் நலன் கருதும் அரசு மட்டுமல்ல, ஏழை மக்களின் துயரங்களைத் துடைத்து, இன்னல்களைக் களைந்து அவர்கள் நிலையை மேம்படுத்துவதில் இந்தியா முழுவதுமுள்ள அனைத்து மாநிலங்களுக்கும், வழிகாட்டும் அரசாகவும் விளங்குகிறது. 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்பதைத் தன் லட்சியமாகக் கொண்டிருக்கிறது. சோஷலிச லட்சியங்களைச் செயல்படுத்துவதற்கு முனைந்து நிற்கிறது. எனவே தான் மாநிலம் முழுவதற்கும் மக்களில் எல்லாப் பிரிவினருக்கும் வீட்டு வசதி செய்யத் தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரியம் இருக்கும் போது, அதனுடனேயே தனியாக குடிசைப் பகுதி மாற்று வாரியம் அமைத்து ஏழை மக்களுக்கு நல்ல வீடுகளை வியக்கத் தக்க வேகத்தில் கட்டி முடித்துக் கொண்டு வருகின்றது.

சென்னை போன்ற நகரங்களில் இயல்பான மக்கள் பெருக்கத்தோடு, புதிதாக வந்து குடியேறுபவர்களும் அதிகம். நாட்டுப் புறங்களில் மழை மாரி சரியாக இல்லை என்பதாலும் நகரங்களுக்குச் சென்றால் பிழைப்பது எளிது என்று நம்பிக்கொண்டும், படிப்புக்கு ஏற்ற வேலை தேடிக் கொள்ள எண்ணியும் சென்னை போன்ற பெரு நகரங்களுக்கு மக்கள் வந்த வண்ணம் இருக்கிறார்கள். இதன் விளைவாகச் சுகாதாரக் குறைவான பகுதிகளில் குடிசைகளைப் போட்டுக்கொண்டு மக்கள் வசிக்கும் நிலை பரவியது. கடற்கரையோரம், கால்வாய் ஓரங்கள், தணிந்த பகுதிகள், ஓரங்கள் பல்வேறு இடங்களிலும் குடிசைகளால் நகரின் எழிலும் கோலமும் சுகாதாரமும் பாதிக்கப்பட்டன என்பதல்லாமல், வேறு இரு அபாயங்களும் கூடவே வந்தன. மழை பெய்த போதெல்லாம், இந்தத் தணிந்த பகுதிகளில் குடிசைகளில் வாழ்ந்த மக்கள் சொல்லொணா அவதிகளுக்கு உள்ளாயினர். கோடை காலங்களில் தீ விபத்துக்கள் மக்களைத் துடிக்க வைத்தன. குறிப்பாக 1967-ல் புது அமைச்சரவை அமைந்த பின்பு, தீ விபத்துக்கள் அதிகரித்தன. தீ விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவித்தொகையை இரட்டிப்பாக்கினர் அரசினர். அவதிக்குள்ளான குடும்பம் ஒன்றுக்கு ரூ. 80 தரப்பட்டது. தீ விபத்து அபாயத்தைத் தடுப்பதற்காக 5,000 எரியாத வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இத்துடன் குடிசை வாழ்மக்களுக்காகப் பல மாடிக் கட்டடங்கள் அமைத்து 7,384 இல்லிடங்களை அமைத்துத் தந்தது வீட்டு வசதி வாரியம்.

### பெருந் திட்டம்

எரியாத வீடுகள் கட்டினாலும், அவை தணிந்த பகுதியில் பெரும்பாலும் இருந்ததால் மழைக்காலங்களில் வெள்ளம் தேங்கி அந்த வகையில் இன்னல்கள் நீடித்தன. எனவே குடிசைப் பகுதிகளை மேம்பாடு செய்வதற்குப் பதிலாகப் பெருமளவில் குடிசைப் பகுதி மாற்று வேலைகளை மேற்கொள்வதே சாலச் சிறந்ததாக இருக்குமென்றும், இதுவே இச் சிக்கலுக்கு நிலையான தீர்வாக அமையுமென்றும் உணரப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்தியாவிலேயே முதலாவதாக, மற்ற மாநிலங்களுக்கும் வழி காட்டும் முறையில் 1970 செப்டம்பரில் குடிசைப் பகுதி மாற்று வாரியம் அமைக்கப்பட்டது. இந்த வாரியத்திற்குவிரிந்தஅளவில் அதிகாரங்கள் தரப்பட்டுள்ளன. திரு. இராம. அரங்கண்ணல் தலைமையில் 15உறுப்பினர்களைக்கொண்ட குடிசைப் பகுதி மாற்றுவாரியம் வசதி பெற்ற மேல்நாடுகளையும் விஞ்சும் வகையில் ஒரே சமயத்தில் பல இடங்களில் பல்வேறு திட்டங்களை வகுத்து, செயல்படுத்தி, வீடுகளைக் கட்டி முடித்து வருகின்றது. குடிசைப் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்படும் காலத்தில் அந்த மக்களுக்குப் பாதுகாப்பளித்து. சுகாதாரக் குறைவான குடியிருப்புப் பகுதிகள் புதிதாகத் தோன்றாமல் தடுப்பது, தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடிசைப் பகுதி மக்களுக்கு உதவுதல், குடிசைப் பகுதி மக்களுக்கு நிலையான குடியிருப்புகள் கட்டித் தருதல், அப்பகுதிகளில் சுகாதாரம், அடிப்படையான வசதிகள் செய்தல் இதர ஆகியன குடிசைப் பகுதிமாற்று வாரியத்தின்முக்கியப் பணிகளாக இருந்து வருகின்றன.

# புது இல்லங்கள்!

### அடையாள அட்டைகள்

குடிசைப் பகுதிகள் நீங்கி, குச்சுக்குப் பதில் மச்சு வீடுகள் அமைத்து, ஏழை மக்களுக்கு இல்லிட வசதி செய்யும் திட்டங்கள், பெரு நகரின் வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் முறையாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. முதலில் குடிசைப் பகுதிகளின் சமூகப் பொருளாதார நிலவரம் குறித்து, குடிசைப் பகுதி மாற்று வாரிய புள்ளி விவரப் பிரிவினர் கணக்குகள் எடுக்கிறார்கள். குடிசை வாழ் குடும்பங்கள் போட்டோ எடுக்கப்படுகின்றன. அந்தந்தக் குடிசைக் குடும்பத்துக்கு ஒரு எண்ணும் தரப்படுகின்றது. வாக்காளர் பட்டியல் மற்றும் ஏனைய பதிவுகளைக் கொண்டு இவ்விவரம் சரி பார்க்கப்படுகின்றது. வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட புதிய பகுதிகளில் இவர்களைக் குடியமர்த்த, இந்தப் படமும் எண்ணும் அடையாள அட்டை ஆக உதவுகின்றது. இவ்வகையில் குறைபாடுகள் ஏதாகிலும் இருப்பின் அதைத் தீர்த்துக் கொள்ள மேல் முறையீடு வசதியும் உண்டு. குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைவரும், உறுப்பினர்களும் அவ்வப்போது குடிசைப் பகுதிகளுக்குச் சென்று குறைகளைக் கவனிக்கிறார்கள். தேவைகள் குறித்தும் சரியான மதிப்பீடு தயாரிக்க இதன் மூலம் வசதி ஏற்படுகிறது.

குடிசை வாழ் மக்களுக்குஇல்லிடங்களுக்காக 'அந்தந்த இடங்களில் பல மாடிக் கட்டடங்கள் கட்டி முடியும் வரை, குடிசை வாழ் மக்கள் தற்காலிகமான குடியிருப்புகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். இப்படிச் செல்லும்போது, குடும்பம் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் தரப்படுகின்றது. புதிய இல்லிடம் தயாரானதும், இவர்களுக்கு ஒதுக்கப்பட்டு, அடையாள அட்டையில், அந்தப்புது இல்லிட எண் விவரம் பதியப்படுகின்றது. மிகக் குறைந்த வருமானம் பெறுகின்ற அரசு ஊழியர்கள், அரசுச் சார்பு நிறுவனங்களின் ஊழியர்கள் ஆகியோருக்கும் இந்தப் புதிய இல்லிடங்களில் ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன. இத்தகையவர்கள் முதலில் ரூ. 500 செலுத்தி விட்டு, வாடகைக்கிரய அடிப்படையில் மாதம் ரூ. 40 வீதம் 25 ஆண்டுகள் செலுத்தி இல்லிடத்தை முழு உரிமையாக்கிக் கொள்ளவும் வசதி உள்ளது. வீடுகள் கட்டுவதற்கான இடத்தை, அரசு, வாரியத்துக்கு வழங்குகிறது. அல்லது வாரியம் விலைக்கு வாங்குகிறது. வள்ளல் தன்மை வாய்ந்தவர்களின் நன்கொடை வகையிலும் இடங்கள் கிடைக்கின்றன.

# ஊராட்சி மன்றங்களின் வளர்ச்சி

முத்து

"சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்" என்பது நம் திருமறை; "நாட்டின் முதுகெலும்பு வேளாண்மை; வேளாண்மையின் தலைமைத் தளம் ஊர்கள். எனவே ஊர்களே மக்களின் உயிர்நாடி" என்பன போன்ற கருத்துக்கள் நம் அனைவர் மனத்திலும் ஆழமாகப் பதிந்தவையாகும்.

விவசாயம் பல்கிப் பெருகச் சாலை வசதி, மின் இணைப்பு, நீர்ப்பாசனம், கால்நடை வளம், கூட்டுறவு போன்ற திட்டங்களையும், மக்கள் நலம்பேணும் நல்வாழ்வுத்துறையில் இணைத்து, குடிநீர்த் திட்டம், பால் பெருக்கு, மீன்வளம், மருத்துவ வசதி, கல்வி, இன்னபிறபணிகளையும் சீரிய முறையில் நாம் செயல்படுத்துவதற்கு உறுதுணையாக அமைந்தவை, ஊராட்சிகளும், பேரூராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும், மாவட்ட வளர்ச்சி மன்றங்களும், மாநில ஊராட்சி வளர்ச்சிக் கருத்துரைக் குழுக்களும் ஆகும்.

மக்களுக்கும், ஆட்சி நிருவாக அமைப்புக்கும் இடையே இந்நிறுவனங்கள், நெருங்கிய தொடர்புக்கு வழி வகுத்து, இந்தியத் துணைக்கண்டத்தில் வேறு எந்த மாநிலத்திற்கும் கிட்டாத அரிய சிறப்புகள் பலவற்றைத் தமிழ்நாடு பெறுவதற்குக் காரணமாக இருந்திருக்கின்றன.

இன்று தமிழ் நாட்டில் 12,642 ஊராட்சிகள், 600 பேரூராட்சிகள், 12 நகரியங்களை உள்ளடக்கிய 374 ஊராட்சி ஒன்றியங்கள், ஊர் வளர்ச்சிக்குப் பாடுபடும் ஒப்பற்ற அமைப்புகளாக இயங்கி வருகின்றன.

சமுதாய வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் முழுப் பொறுப்பும், ஊராட்சி ஒன்றியங்களிடமே ஒப்படைக்கப் பட்டுள்ளது.

"நீரின்றி அமையாது உலகு" என்றார் திருவள்ளுவர். நீரைத் தேக்கி நிலத்தின் வளத்தைப் பெருக்கி மக்கட்கு உண்டி கொடுப்பதே உயர்பணியும், உயிர்ப் பணியும் ஆகும். அத்தகு உண்டியை விளைவிக்க உறுதுணை புரியும் வேளாண்மைத் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு, ஊராட்சிகளைச் சேர்ந்ததே.

குழவிகளின் மழலைச்சொல் குழலையும் யாழையும் வெல்லக் கூடியதுதான் என்றாலும், அம்மழலைச் செல்வங்கள் ஈசலெனப் பெருகிவிட்டாலோ குடும்பங்கள் இடிபடும் உரலாகவும், அடிபடும் மத்தளங்களாகவும் ஆக நேரிடும். எனவே, பிறப்பு விகிதத்தை ஒழுங்குப்படுத்தி, மக்கட்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி, நாட்டு நலத்தை நலமுறத் துய்க்கத் துணை செய்யும் குடும்பநலத் திட்டப் பணிகளும், ஊராட்சிகளிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

'கிணறுகளை அகழ்ந்து மக்களுக்கு உண்ணுவதற்கு நீர் கொடுப்பவர் என்றும் சாவா உடம்பை எய்தியவராவர்' என்று நம்முடைய இலக்கியங்கள் பாடுகின்றன. இத்தகைய குடிநீரை, அதுவும் பாதுகாக்கப் பட்ட குடிநீரை, அளிக்கும் பொறுப்பு, ஊராட்சி ஒன்றியங்களுடையதே.

இந்தியத் துணைக் கண்டத்திலே சிறந்த கிராமமாக 1969–70-ஆம் ஆண்டில், நமது மாநிலத்தைச் சேர்ந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மணவாளக்குறிச்சி என்ற கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதல் பரிசுத் தொகையாக ரூ. 3,000 பெற்றுள்ளது எனக் கேட்டு, நாம் அனைவரும் இறும்பூதெய்துகிறோம். இந்த ஊரை நிலைக்களனாகக் கொண்டு திரைப்படம் ஒன்றைத் தயாரிக்கவும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

நமது மாநிலத்தில்1970-71-ஆம் ஆண்டிற்கான சிறந்த கிராமமென இராமநாதபுர மாவட்டம், வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கூமைப்பட்டி என்ற கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதல் பரிசான ரூ. 750 பெற்றுள்ளது. இது ஊர் வளர்ச்சித்துறையின் சாதனைக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு என மகிழ்வுறலாம். மக்களுக்கான, மக்கள் சக்தி, மக்களாட்சியில் மலரும் பேற்றினை, இச்செயலின் மூலம் தெளிவுற அறியும் வாய்ப்பினை இது அளித்துள்ளது.

இதுபோலவே, கிராமச்சாலைகளின் தரம் உயர்த்தப்படுவதிலும், சீர்திருத்த வேலைகள் செய்து தருவதிலும், தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது. தற்போது ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் சுமார் 53,942 கி.மீ. சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

எல்லாக் கிராமங்களும் தரமுள்ள சாலை இணைப்பைப் பெற வேண்டும் என்பது, அரசின் நோக்கம். இந்நிலையை எய்த, முதற்படியாக 1,500-ம் அதற்கு மேற்பட்டு முள்ள மக்கள் தொகையைக் கொண்டுள்ள கிராமங்கள் சாலைகளால் இணைக்





இரட்டிப்பாக
தமிழக மாநிலத் திட்டக்
குழுவின் திட்டங்கள்
சமதர்ம சமுதாய
அமைப்பை
உருவாக்கும்
அரசின்
செயல் திட்டங்கள்.
இப்படி
எங்கு
நோக்கினும்
நமது
நல்வாழ்வுக்காக
புதியபுதிய
திட்டங்கள்
இன்னும்
நாட்டுடைமை.
இவைகளால் புதுவாழ்வு
பெருகிடும் மக்கள்தொகையே இன்றையப் பெரும் பிரச்சினை?
குடும்ப நலத்திட்டம்
• நமக்கும் நல்லது
• நாட்டுக்கும் நல்லது
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப்பிறகு எப்போதும் வேண்டாம்
குடும்ப நலத்துறை தமிழ்நாடு அரசு


தமிழரசு
டிச 1.1972 40காசு
6 - DEC 1972





## கைத்தறியாளர்களின் கண்ணீர் துடைக்க ...

தமிழகக் கைத்தறி நெசவாளர் தலைமைச் சங்கத்திற்கும், மாநிலச் சங்கத்திற்கும்—ரிசர்வ் வங்கியிடம் தமிழ்நாடு அரசு உறுதி அளித்து, அதன் மூலம் 1967-ல் 460 லட்சம் ரூபாய் பெற்றுத் தரப்பட்டது; 1972-73-ல் அது 800 லட்சம் ரூபாயாக வளர்ந்திருக்கிறது.

* ஆண்டு தோறும் தமிழக அரசு உதவித் தொகை அளித்து வருகிறது; 1967-ல் ஒரு கோடியாக இருந்த அந்த உதவித் தொகை 1972-73-ல் இரண்டரைக் கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்திருக்கிறது.

* கைத்தறியில் நவீன முறை நெசவுப் பயிற்சித் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதற்காக 1966-67-ல் 1·41 லட்சமும், 1967-68-ல் 1·57 லட்சமும், 1971-72-ல் 5·19 லட்சமும் அரசு வழங்கியிருக்கிறது.

* தள்ளுபடி அளிப்பதன் மூலம் கைத்தறித் துணியின் உற்பத்தி பெருகவும், அந்தத் துணி வெகுவாகச் சந்தைக்குச் செல்ல வசதி ஏற்படுத்தவும் அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது.

1967-68-ல் விற்பனைக்குத் தள்ளுபடி அளிக்கப்பட்ட நாட்கள் 52. 1968-69-ல் 89 நாட்கள். 1969-70-ல் 69 நாட்கள். 1970-71-ல் 68 நாட்கள். 1971-72-ல் 85 நாட்கள். இவ்வாறு தள்ளுபடி தரப்படும் நாட்களும் ஆண்டுக்காண்டு அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

* தள்ளுபடிக்காக அளிக்கப்படும் உதவித் தொகை 1967-68-ல் இருந்த 64 லட்சம், 1971-72-ல் 130 லட்சமாக உயர்ந்திருக்கிறது.

* தமிழகத்தில் கைத்தறித் தொழில் பற்றிய நிபுணர்கள் குழு, பல்வேறு மாவட்டங்களிலும் சுற்றுப் பயணம் செய்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளையும், கைத்தறித் தொழில் சம்பந்தப்பட்ட இதர அமைப்புகளின் பிரதிநிதிகளையும் நேரில் சந்தித்து, அவர்களது வாக்கு மூலங்களைப் பதிவுசெய்யும் பணி நடைபெறுகிறது.

# பழுதுபட்ட விழிகளுக்குப் பார்வை தரும் பெருந்தொண்டு!

**காஞ்சியில் 2—11—1972 அன்று நடைபெற்ற கண் சிகிச்சை மூன்றாவது கட்ட நிறைவு விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.**

இன்று காஞ்சி மண்ணில் கண்ணொளி வழங்குகின்ற திட்டத்தின் நிறைவு விழாவில் நானும் கலந்து கொண்டு உங்கள் அனைவரையும் காணுகின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்கு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். கண்ணொளி வழங்குகின்ற திட்டத்தினைக் கடந்த ஜூன் திங்களில் தொடங்கிக் கடந்த 5–6 மாதங்களில் தமிழகத்திலே பல்வேறு பகுதிகளில் இந்தத் திட்டம் சிறப்புற நடைபெற்று வருகின்றது.

இதுவரை இந்த இலவசக் கண் சிகிச்சை முகாம்கள் 26 இடங்களில் நடைபெற்றிருக்கின்றன. 26 இடங்களில் இந்த முகாம்களில்வெளிப்புற நோயாளிகளாக வந்து தங்களுடைய கண்ணிலே ஏற்பட்டிருக்கின்ற கண் நோயை எடுத்துக்கூறி அதனை டாக்டர்கள் ஆராய்ந்து பார்த்து, வெளிப்புற அளவிலே அறுவைச் சிகிச்சை இல்லாமல் சிகிச்சை பெற்றவர்கள் மட்டும் 1,22,555 பேர் ஆவார்கள். கண்ணிலே அறுவைச் சிகிச்சை பெற்றுக் கண்ணொளி பெற்றவர்கள் எண்ணிக்கை 19,697 ஆகும். இந்த 19,697 பேர்கள் கண்ணொளி பெறவும், கிராமப்புறங்களிலே வசதியற்ற ஏழைமக்கள் வெளிப்புற நோயாளிகளாக வந்து கண் சிகிச்சை பெற்றவர்களும் சேர்ந்து ஓர் இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள்.

இந்த 26 முகாம்களிலே இவர்களுக்கு அறுவைச் சிகிச்சை நடத்திய வகையில் ஆன செலவு ரூ. 10,96,000 ஆகும். கடந்த ஜூன் திங்களில் என்னுடைய பிறந்த நாள் வந்த போது, இந்த ஆண்டு என் பிறந்த நாளை மக்களுக்குக் கண்ணொளி வழங்குகின்ற விழாவாகக்கொண்டாடிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டதன் பேரில் இந்தச் சிகிச்சை முகாம்கள் ஆரம்பிக்கப் பட்டன.

தமிழ்நாட்டிலே ஏறத்தாழ, பார்வை பழுதுபட்டோர் பத்து இலட்சம் மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் பட்டிக்காடுகளில், கிராமப்புறங்களில், பேரூர்களில், நகரத்திற்கு அருகினில் இருக்கின்ற சுற்றுப் புறங்களில்— பாமரர்களாய்—வாழ்க்கை வசதி அற்றவர்களாய்—வறுமையில் மூழ்கியவர்களாய்—வசதியற்று— வாய்ப்புகள் அற்று இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் கண்ணொளி வழங்குகின்ற இந்தச் சிறப்பான திட்டத்தை மேற்கொண்டு இந்த ஆண்டிலே மட்டும் ஓர் இலட்சம் பேருக்குக் கண்ணொளி வழங்கிட வேண்டும் என்று தீவிர முனைப்போடு மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள், டாக்டர் ஆபிரகாம், டாக்டர் வேங்கடசாமி ஆகியோரைக் கலந்து இந்த ஏற்பாட்டினைச் செய்திருக்கிறார்கள்.

ஆங்காங்கு இருக்கின்ற— மருத்துவப்பணிகளிலே தங்களை அன்புடன் ஒப்படைத்துக் கொண்டிருக்கின்ற டாக்டர்களும் மாணவ மாணவியர்களும், ஆசிரியப் பெருமக்களும், சாரணர்களும் இப் பொதுத் தொண்டிலே பேருதவி புரிந்திருக்கின்றார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட அலுவலாளர்கள் தங்களுடைய ஒத்துழைப்பையும் இதற்காகத் தந்தது போற்றுதற்குரியது. அவர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜூன் திங்களிலே நான் வேண்டுகோள் விடுத்தவாறு என் பிறந்த நாளில் எனக்கு மாலை போட வேண்டுமானால் மாலைக்குப்பதிலாகப் பத்துரூபாய் தாருங்கள்; அப்படியும் மாலை போட்டுத்தான் தீர வேண்டும் என்றால் மாலையையும் போட்டுப் பத்து ரூபாயையும் தர வேண்டும் என்று கேட்டு, அதன்படிச் சேர்ந்த தொகையும், மக்களின் பேராதரவால் கிடைத்த நிதியும் இன்றைக்குக் கிட்டத்தட்ட ஐந்தாறு மாதங்களில் 40 இலட்சம் ரூபாயைத் தாண்டியிருக்கிறது என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு, சொல்லிக் கொள்கிறேன். தருவதாகச் சொன்னவர்கள் எல்லாம் தந்திருக்கிறார்கள். பத்திரிகைகளிலே வழங்குவதாகச் சொல்லிவிட்டு வராத பணம் எதுவும்இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி வழங்குகின்ற பெருமக்களுக்கெல்லாம்—நல்ல உள்ளங்களுக்கெல்லாம் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இங்கே நம்முடைய அரசு எப்படிப்பட்ட திட்டங்களை என்னவாறெல்லாம் அணுகுகிறது என்பதனை எனக்கு முன்பு பேசிய திரு சி. வி. எம். அண்ணாமலை அவர்களும், தொடர்ந்து பேசிய நண்பர்களும், எடுத்துச் சொன்னார்கள். சமுதாயத்தின் அடித்தளத்து மக்கள்—பின் தங்கிய மக்கள்— தாழ்த்தப்பட்ட மக்கள், வறுமையில் வாடுகின்ற மக்கள், கிராமப்புறத்து மக்கள்—நகர்ப்புறச் சூழ்நிலைகளிலே இருக்கின்ற மக்கள், புற நகர்களிலே இருக்கின்ற மக்கள் ஆகிய இவர்களுக்காக இந்த அரசு தன்னுடைய மேலான திட்டங்களைத் தீட்டுகிறது.

மற்றவர்களை விட இந்த முதலமைச்சர் ஏழைகளுக்குச் செய்கின்ற காரியங்களை எப்படிச் செய்ய முடிகின்றது என்று நண்பர்கள் கேட்டார்கள். அது காஞ்சிபுரத்து மண்ணில் பிறந்த முதலமைச்சர் கற்றுத் தந்த பாடம். பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த பாடம். அறிஞர் அண்ணா அவர்கள் சட்ட மன்றப் பேரவையிலே தன்னுடைய முதல் நிதி நிலை அறிக்கையைச்சமர்ப்பித்துப் பேசும்போது, ''இந்த அரசின் திட்டம் எதுவாக இருந்தாலும், இந்த நாட்டினுடைய ஏழை, எளிய மக்கள், தொழிலாளர்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் ஆகியவர்களை மையமாகக் கொண்டு தீட்டப்படும்—தீட்டப்பட வேண்டுமெனச் சொன்னார்கள்.

இந்த அடிப்படையில்தான் தமிழ்நாட்டின் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. மக்கள் தருகின்ற வரிப் பணத்தைக்கொண்டு இவைகளைச் செய்ய முடியாதா? முடியும். நான் மறுக்கவில்லை. பிச்சைக்காரர் மறுவாழ்வு, கண்ணொளி வழங்கும் திட்டம், இது போன்ற திட்டங்களில் பொது மக்களுடைய பங்கும் இருக்க வேண்டும்; பரிவும் இருக்க வேண்டும் என்ற ஆசையின் காரணமாகவே என்னுடைய பிறந்தநாள் விழா, ஒரு நாளோடு போய்விடும் மகிழ்ச்சியான திருநாளாக இருந்திடக் கூடாது என்பதற்காக இந்த நல் வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு பெரு நிதி சேர்த்து, ஏழை எளிய மக்களுக்கு அதனைப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் இத் திட்டங்கள் இன்றைக்கு நாட்டிலே நிறைவேற்றப் பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் ஏராளமான திட்டங்கள் தொடங்கப்படுகின்றன. அந்தத் திட்டங்கள் அனைத்தும் சாதாரண மக்களுக்கு அடிப்படை வசதி பெறுகின்ற திட்டங்களாகத் திட்டமிடப்படுகின்றன. அப்படிப்பட்ட திட்டங்களில் ஒன்றுதான் கண்ணொளி வழங்குகின்ற திட்டமென்று இங்கே பேசியவர்கள் அனுபவ பூர்வமாகச் சொன்னார்கள். சென்னை மாநகரிலே கண்நோய் தீர்ப்பதற்கு இருக்கின்ற மருத்துவ மனைகள் பல. அதுபோலவே பெரிய பெரிய நகர்களில் எல்லாம் மருத்துவ மனைகள் இருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால் ஓர் ஆண்டுக்கு நானூறு—ஐந்நூறு அல்லது ஆயிரம் பேர்களுக்கு என்று சிகிச்சை முகாம்கள் நடத்தப்படுவது உண்டு. ஆனால், நாம் இன்றைக்கு ஆரம்பித்திருக்கின்ற இந்தத் திட்டம் தீவிரத் திட்டம். இந்தத் திட்டத்தின் மூலம் ஓர் ஆண்டுக் காலத்தில் ஓர் இலட்சம் பேருக்கு அறுவைச்சிகிச்சை செய்திட வேண்டும் என்ற சபதத்தை நாங்கள் எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.



உணர்ச்சியில் உந்தப்படுபவன் மனிதன். அவன் ஓர் அருமையான இயந்திரம். அவனுடைய இதயத்தில் வலி—அவனது கண்களில் கண்ணீர்—அவனது உடலில் வாட்டம் காணப்பட்டால் அந்த மனித இயந்திரத்திடமிருந்து முழுப் பயனும் பெற முடியாது.

சாதாரணமாக ஒரு பக்தர் காரில் போகும்போதோ, வண்டியில் போகும்போதோ, போகிற வழியில் கோயில்களைக் கண்டால் அங்கே இறங்கி அந்தக் கடவுளை வணங்கிவிட்டு, குளத்தைக் கண்டால் இறங்கி இரண்டு சொட்டுத் தண்ணீரைத் தலையில் தெளித்துக் கொள்ளுவதைப் போலவும் எனக்குக் கோயிலாக இருப்பது — திருக்குளமாக இருப்பது எல்லாம் பிச்சைக்காரர் விடுதிகளும், கண் சிகிச்சை முகாம்களும் தான். நான் செங்கற்பட்டு மாவட்டம் வழியாகக் காரில் செல்லும் நிலை ஏற்படும் போதெல்லாம் பரனூர் சென்று அங்குள்ள, சமுதாயத்தால் வெறுத்து ஒதுக்கப் பட்ட—சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள அந்தத் தொழு நோய்ப் பிச்சைக்காரர்களை வணங்கிவிட்டுத்தான் செல்லுவேன். அந்த ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் காண்கிறேன்.

இதுபோன்ற காரியங்களைத் தான் நாங்கள் செய்யவேண்டும் என்று மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் எங்களுக்குக் கற்றுத் தந்தார்கள். ஆனால் அந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றிட அவர்கள் இல்லை. எங்களையெல்லாம் நம்பித்தானோ என்னவோ இவ்வளவு விரைவில் நம்மை விட்டுச் சென்று விட்டார்கள்.

அண்ணா அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களே, பல எதிர்ப்புகள் வந்தாலும் மின்னல் இடியென மாற்றார் எங்களைத் தாக்கினாலும் நீங்கள் அமைத்த சமுதாயச் சீர்திருத்தம் எனும் அகல் விளக்கினை நாங்கள் அணையாமல் போற்றிப் பாதுகாத்து வருவோம் என்று இங்கே கண்ணொளி பெற்றவர்கள் சார்பிலே நிறைந்த மகிழ்ச்சியோடு சொல்லி விடைபெறுகிறேன்.

வணக்கம்.

## முதல்வர் கலைஞர்




# தமிழகம் பெற்ற பரிசு



சென்ற 1971–72ஆம் ஆண்டு தமிழ்நாடு முழுவதிலும் மூனைப்பு இயக்கம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டது. அப்போது தஞ்சை மாவட்டம் தனியொரு பாணியை—முறையைப் பின்பற்றி மூனைப்பு இயக்கத்தைச் செயல்படுத்தியது.

மூனைப்பு இயக்கத்தின் போது கல்யாண மண்டபங்கள், பள்ளிக்கூடங்கள் போன்ற பொது இடங்களில் 'நல்வாழ்வு நிலையங்கள்' அமைக்கப்பட்டு, அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட தந்தைமார்கள் அங்கு ஆறு நாட்கள் தங்க வைக்கப்பட்டார்கள். இந்த ஆறு நாட்களிலும் அவர்களுக்கு இலவசச் சத்துணவு வழங்கப்பட்டது. வானொலி, தாயம், படக்காட்சி போன்ற பொழுதுபோக்கு வசதிகள் செய்து தரப்பட்டதோடு, நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் போன்றவையும் நடத்தப்பட்டன. மருத்துவர்கள் தந்தைமார்களோடு அன்புடன் பழகி, அவர்களோடு இரண்டறக் கலந்து, அவர்களுக்குத் தேவையான — அவசியப்பட்ட சிகிச்சைகளை அளித்துக் கண்ணுங் கருத்துமாகக் கவனித்தனர். எனவே நல்வாழ்வு நிலையங்களில் தந்தைமார்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு தங்கிச் சென்றனர். நல்ல சத்துணவு காரணமாக நல்வாழ்வு நிலையத்திற்கு வந்த போதிருந்த எடையை விட அதிக எடையோடு வீடு திரும்பினர்.

மூனைப்பு இயக்கத்தின் போது தந்தைமார்கள் சிறந்த முறையில் கவனிக்கப்பட்ட காரணத்தால் அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட தந்தைமார்களே பலரை அறுவைச் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தனர். நல்வாழ்வு நிலையங்கள் அமைத்துச் செயல்படுத்திய காரணத்தால் தஞ்சை மாவட்ட மூனைப்பு இயக்கம் குறிப்பிடத் தக்கதொரு வெற்றியைப் பெற்றது.

தஞ்சை மாவட்ட முதல் மூனைப்பு இயக்கம் 1971-ஆம் ஆண்டு மே-ஜூன் மாதங்களில் நடத்தப்பட்டது. இதற்கான இலக்கு 2,000 அறுவைச் சிகிச்சைகள். செய்து முடிக்கப்பட்டவை, 4,591 அறுவைச் சிகிச்சைகளாகும். இரண்டாவது மூனைப்பு இயக்கம் இம்மாவட்டத்தில் 1971-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களிலும், 1972-ஆம்ஆண்டு சனவரித் திங்களிலும்

# கற்பகத் தருவையே காகத்திடம் கொணர்ந்தார் கலைஞர் !



காஞ்சிபுரம் கண் சிகிச்சை முகாமில் அறுவைச் சிகிச்சை பெற்றுக் கண்ணொளி பெற்றவரும் காவந் தண்டலத்தைச் சேர்ந்தவருமான திரு பக்தவத்சலம் என்னும் 67 வயதுடைய முதியவர், பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''எனக்கு 67 வயதாகிறது. உடலாலும், உள்ளத்தாலும் என்னால் இனி உழைக்க முடியாது. என்றாலும் எனக்குக் கண் பார்வை போன உடனே வீட்டிலுள்ள சின்னக் குழந்தை கூட,'தாத்தா அங்கே போய் எதையாவது தள்ளி விடாதே; உடைத்து விடாதே' என்று எச்சரிக்கை செய்யும் போது என் உள்ளம் மிகவும் வேதனை அடையும்.

பார்வையற்று இருப்பதோடு இப்படி மற்றவர்களுக்குப் பாரமாகவும் இருக்கிறோமே என்கிற உணர்ச்சி ஏற்படும்.

இதுபோல், மனத்தாலும் ஊனமடைந்து வாழ்கிற வாழ்க்கையில் ஏற்பட்ட கசப்பைப் போக்குவதற்காக வேனும் கண்ணொளி பெற வேண்டுமே என ஏங்கினேன்.

ஆனால், அதற்குப் பண வசதி இல்லை. போதிய பண வசதி இருந்தால், சென்னைக்கோ வேறு சில இடங்களுக்கோ சென்று சிகிச்சை செய்து கொள்ள முடியும்.

'கற்பகத் தருவைச் சார்ந்த காகமும் அமுதமுண்ணும் ' என்பார்கள். அது பழம்பாடல். இப்போது, நமது தமிழ்நாட்டு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், கற்பகத் தருவையே காகம் இருக்கும் இடத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். பார்வை தரும் கற்பகத் த்ருவை நான் இருக்கிற இடத்துக்கே கொண்டு வந்து என் போன்றவர்களின் கண்களில் எல்லாம் ஒளியேற்றி வைத்திருக்கிறார்கள். இங்கே, நீங்கள் எல்லாம் உட்கார்ந்திருப்பதை என்னால் காணமுடிகிறது.

பந்தலில் உள்ள அலங்காரங்கள்—வர்ண விளக்குகள் எல்லாம் தெரிகின்றன. என் உள்ளத்தில் ஏற்படும் இந்த மகிழ்ச்சியை இன்னும் சிறிது நேரத்தில் நீங்கள் எல்லாம் பெறுவீர்கள் என்பதே என் எண்ணம். இந்தப் பெருந்தன்மைக்குணம் எப்படி ஏற்பட்டது என்றால் ''சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம், கொடையும் தயையும் பிறவிக்குணம்'' என்பார்கள். அதுபோல அவருக்குப் பெயர் அமைந்ததே காரணமாக இருக்கிறது. இந்தக் கண்களுக்கு ஒளி தந்தவர்களுக்கும், அவர்களுக்கு ஒத்தாசையாக இருந்தவர்களுக்கும் மனமார நன்றி கூறி—அவர்களுக்கு நீண்ட வாழ்வு கிடைத்துப் பல காலம் பதவியில் இருக்க வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன்''.



நடத்தப்பட்டன. இரண்டாவது முனைப்பு இயக்கத்தின் போது தஞ்சை மாவட்டம், 15 ஆயிரம் அறுவைச் சிகிச்சைகள் செய்து முடிக்க வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. நல்வாழ்வு நிலையங்கள் அமைக்கப்பட்டுச் சிறந்த முறையில் முனைப்பு இயக்கம் நடத்தப்பட்டதால், 15 ஆயிரம் என்ற இலக்கையும் மீறித் தஞ்சை மாவட்டம் 21,602 தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து பெரும் வெற்றியை ஈட்டியது.

நல்வாழ்வு நிலையங்கள் அமைத்து முனைப்பு இயக்கம் நடத்தும் 'தஞ்சைப் பாணி'யை வெகுவாகப் பாராட்டி முழுமையாக ஏற்றுக்கொண்ட இந்திய அரசு, ஐதராபாத்தில் இவ்வாண்டு நவம்பர்த் திங்கள் முதல் நாளும் இரண்டாவது நாளும் நடைபெற்ற குடும்பநல மாநாட்டில் தமிழகத்திற்குப் பரிசு ஒன்றினை வழங்கிச் சிறப்பித்தது. மேலும் இவ்வாண்டு இந்தியா முழுவதிலும் நடத்தப்படும் முனைப்பு இயக்கம்



'தஞ்சைப் பாணி'யைப் பின்பற்றி நல்வாழ்வு நிலையங்கள் அமைத்துச் செயல்பட ஆவன செய்துள்ளது. குடும்பநலத் திட்டத்தைச் செயல் படுத்துவதில் இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்கள் அனைத்தும் தமிழகத்தையே பின்பற்றுகின்றன என்றே சொல்லலாம்.

இந்த முறையில் முனைப்பு இயக்கம் நடத்துவதற்காக அறுவைச் சிகிச்சை ஒவ்வொன்றிற்கும் நூறு ரூபாய் இந்திய அரசால் வழங்கப்படுகிறது. இந்த நூறு ரூபாயில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட தந்தைக்கு ஈட்டுத் தொகையாக அறுபது ரூபாயும், நல்வாழ்வு நிலையங்கள், உணவு, விளம்பரம் போன்றவற்றிற்காக முப்பது ரூபாயும், மருந்தினச் செலவுக்காகப் பத்து ரூபாயும் செலவிடப்படுகிறது. இவை தவிரத் தந்தைமார்களை ஊக்குவித்து, அறுவைச் சிகிச்சைக்கு அழைத்து வருவோருக்கு ஊக்குவிப்புத் தொகையாக அறுவைச் சிகிச்சை ஒவ்வொன்றிற்கும் பத்து ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது. இந்தப் பத்து ரூபாயைத் தமிழ்நாடு அரசு தன் நிதியிலிருந்து தருகிறது.






# நூலக வார விழாவில்...

அறிவைப் பெறும் ஆற்றலைப் பெருக்கவும், சிந்திக்கும் ஆற்றலைப் பெறவும், சிந்தித்ததைச் செய்து முடிக்கும் தன்மையினைப் பெறவும், அதன்மூலம் வாழ்க்கையின் தேவைகளை ஈடு செய்யும் முறைகளை அறியவும் புத்தகம் படிப்பது அவசியமாகிறது.

நூலகங்கள் வளர வேண்டிய அளவுக்கு வளரவில்லை என்றாலும், வளர்க்கப்பட வேண்டிய அளவுக்கு வளர்க்கப்பட்டுக் கொண்டுதான் வருகிறது. தமிழக அரசு ஆண்டொன்றுக்கு நூலக வளர்ச்சிக்கு மட்டும் ஒன்றே கால் கோடி ரூபாய் செலவிட்டு வருகிறது.

ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு படிக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவனது அறிவின் முதிர்ச்சி இருக்கும். இதைத்தான் 'நீரளவே ஆகுமாம் நீராம்பல்; தாம் கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு' என்றார் வள்ளுவர்.

"அவனுக்கு எழுதப் படிக்கத் தெரியாது; ஆனாலும் புத்திசாலி" என்று சிலரைச் சொல்வார்கள். அந்தப் புத்திசாலித்தனத்தைக் கற்றறிவாளர் ஏற்கமாட்டார்கள் என்னும் கருத்தில் "கல்லாதார் நுட்பம் கழிய நன்றாயினும் கொள்ளார் அறிவுடையார்" என்று வள்ளுவரே கூறியிருக்கிறார்.

ஒன்றினைக் கண்ணால் பார்க்கும் போது—செவியால் கேட்கும் போது நாவால் ருசிக்கும் போது—மூக்கால் நுகரும்போது அடைகிற இன்பத்தைவிடப் படிக்கும் போது பெறுகிற இன்பமே மேலானது.

—கல்வி அமைச்சர் நாவலர்

* * *

அறிவை வளர்க்கின்ற காரணத்தால் நூலகங்களை அறிவாலயங்கள் என்கிறோம். அப்படிப்பட்ட அறிவாலயங்களை ஒவ்வொருவரும் தரிசிக்க வேண்டும் என்பதற்காக அரசாங்கம் நல்ல பல திட்டங்களைப் போட்டுச் செயலாற்றி வருகிறது. ஆனால், மக்கள் அவற்றையெல்லாம் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்கிறார்களா என்றும் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட அரிய திட்டங்களுக்கு மக்களின் ஒத்துழைப்பு மிகவும் தேவை.

அறிவைத் தூண்டும் பணியில் மிகப் பெரிய அறிஞர்களெல்லாம் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களின் படைப்புகளை எல்லாம் படித்துப் பயன்பெற மக்களுக்கு ஆர்வமூட்ட வேண்டும்; அதனால்தான் அறிவு வளர்ச்சி பெற முடியும்.

வருங்கால மக்கள் அறிவாற்றல் மிக்கவர்களாக இருக்க வேண்டும். அதற்கு நூலகங்கள் திறம்பட நடந்திட வேண்டும்.

கல்வித்துறை கொஞ்ச காலத்திற்கு முன்பு இருந்ததை விட, இப்போது மிக நல்ல முறையில் வளர்ச்சி அடைந்திருக்கிறது.

முன்பெல்லாம் மதச் சம்பந்தப்பட்ட நூல்கள்தான் எழுதப்பட்டன. இப்போதுதான் சமுதாய முன்னேற்றத்திற்குப் பயன்படும் நூல்கள் வெளிவருகின்றன. இத்தகைய நூல்களால் தான் நாடு முன்னேற முடியும்.

—உணவு அமைச்சர்
மன்னை நாராயணசாமி

* * *

சென்ற ஆண்டில் உலகத்திலேயே அதிகமாக அமெரிக்காவில்தான் புத்தகங்கள் வெளியிடப்பட்டன. அதற்கு அடுத்ததாக ரஷ்யாவில் வெளியிடப்பட்டன. அதற்கு அடுத்தாக ஐரோப்பிய நாடுகளில் எல்லாம் சேர்ந்து வெளியிட்ட புத்தகங்களின் எண்ணிக்கை இருந்தது. அதற்கடுத்ததாக இங்கிலாந்து இருந்தது. அடுத்த இடம்தான் இந்தியாவுக்கு. என்றாலும் தமிழ்நாட்டில்தான் மற்ற மாநிலங்களைவிட நூலகங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. தமிழ்நாட்டில் இன்னும் புதியதாக இலக்கண-இலக்கிய நூல்கள் வெளிவரவில்லை. அவை வரவேண்டும்.

'தமிழ்நாட்டில் தமிழன் என்றைக்குத்தான் நோபல் பரிசு வாங்கப் போகிறானோ' என்று நான் சொன்னபோது அண்ணா அவர்கள் அப்படிப்பட்ட நாள் விரைவில் வரும் என்றார். அந்த நாள் விரைவில் வரவேண்டும்.

—பிற்பட்டோர் நல அமைச்சர்
க. இராசாராம்.

> **சென்னையில் நடைபெற்ற நூலக வார விழாச் சொற்பொழிவுகளிலிருந்து திரட்டப் பெற்றவை.**

* * *

அறிவுக்கு விருந்தளிப்பவை நூலகங்கள். அந்த நூலக வளர்ச்சிக்கு இந்த அரசு சிறப்பான முறையில் உதவிகள் செய்து வருகிறது.

இந்தியாவிலேயே நூலகங்களுக்கான நூலகச் சட்டத்தைக் கொண்டு வந்தது நமது தமிழ் மாநிலம்தான். தென்னிந்திய நூலகச் சங்கம் துவக்கப்பட்டதும், நூலக இயக்கங்கள் துவங்கியதும் நமது மாநிலத்தில்தான்.

தமிழ் நாட்டிலுள்ள அடையாறு நூலகமும்—கன்னிமாரா நூலகமும் — தஞ்சையிலுள்ள சரசுவதி மகால் நூலகமும் இந்தியாவுக்கே வழி காட்டத் தக்கவைகளாக இருக்கின்றன.

புத்தகத் துறையிலும் நூலகத் துறையிலும் தமிழகம் முன்னேறி வருகிறது. தமிழ்நாடு அரசு, நூலக வரியை 3 காசிலிருந்து 6 காசாக உயர்த்தியிருப்பதன் மூலம் அதன் வளர்ச்சிக்கு உதவி செய்து வருகிறது. இப்படிப் பல அம்சங்களில் அரசு இந்தத் துறையை ஊக்குவித்து வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

—சிலம்புச் செல்வர் ம. பொ. சி.

* * *

பேரறிஞர் அண்ணா அவர்கள், ஆபத்தில்லாத நண்பன் என்று புத்தகத்தைக் குறிப்பிடுவார்கள்.

என் கீழியங்கும் குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் கட்டடம் கட்டப்படும் இடத்தில் எல்லாம், நூல்நிலையத்திற்கென்று தனியே ஒரு கட்டடத்தை வாடகையின்றிக் கொடுத்து வருகிறோம். அங்கே அந்த ஏழை எளிய மக்கள் ஆர்வத்தோடு வந்து படிப்பதைப் பார்ப்பதைவிட மிகையான இன்பம் இருக்க முடியாது.

—இராம. அரங்கண்ணல்.

# ஆராய்ச்சியே ஜோதி ஸ்டார்ட்டருக்கு நீடித்த ஆயுள் வலிமையூட்டும் இரகசியம்

ஜோதியின் அதிநவீனமான ஆராய்ச்சி-அபிவிருத்தி நிலையத்திலே நடைபெறும் இடையருத ஆராய்ச்சிகளே ஜோதி ஸ்டார்ட்டரின வெற்றி இரகசியம். நிறுவிப் பாருங்கள் ஒரு ஜோதி-பயன்கள் தாமாகவே சொல்லும். நீண்ட நெடுங்காலம் மாற்றுறுபபே தேவைப்படாது. பிற வகை ஸ்டார்ட்டர்கள் பழுதுபட்டுப்போகலாம், மாற்றுறுப்புப் போடும் நிலைக்கு வந்துவிடலாம், ஓய்ந்து போகலாம், ஆனுல் ஓயாது உழைத்துவரும் ஜோதி ஸ்டார்ட்டர். கண்டிப்புடன கோருவீர்: காலமெல்லாம் உழைக்கும் ஜோதி ஸ்டார்ட்டரை! ஜோதியின் ஆராய்ச்சி-அபிவிருத்தி நிலையத்திலே கடும் பரிசோதனைகளுக்கு உடபடுத்தி உருவாக்கப்பட்ட ஸ்டார்ட்டர் இது.

ஜோதி quality is our creed

## ஜோதி லிமிடெட்.

ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள:
ஜோதி கேலார்-எமாக் லிட., பரோடா 3
கிளைகள்: நியூ டெல்லி பம்பாய் கல்கத்தா சென்னை லக்னோ செகந்தராபாத் ஜெய்பூர்



everest/839/JC/TM




# வீட்டுவசதிக்குப் புதியதிட்டங்கள்

சென்னை மாநகரின் வாழ்க்கை நிலை குறித்து, இங்கு வசித்து வரும் ஓர் அமெரிக்கர் அண்மையில் குறிப்பிட்டார். "அமெரிக்காவுடன் ஒப்பிடும் போது சென்னை நகரில் எல்லாப் பொருட்களும் மலிவான விலைக்குக் கிடைக்கின்றன. ஆனுல் வீட்டு வாடகை மட்டும் அமெரிக்க நிலையை எட்டிப் பிடிக்கக் கூடியதாக இருக்கிறது" என்ருர் அவர். வாடகை அதிகமாகக் கொடுத்தாலும் கூடப் போதுமான அளவு வீட்டு வசதி கிடைப்பதில்லை. இதனுல் பெரிதும் வேதனைக்கு உள்ளானவர்கள் ஏழைகள், குறைந்த வருமானப் பிரிவினர், நடுத்தர வருமானப் பிரிவினர் ஆகியோராவர்.

குறைந்த வருமானப் பிரிவினர், நடுத்தர வருமானமுள்ளவர்கள், அரசு ஊழியர்கள், மற்றும் மக்களில் பல்வேறு பிரிவினருக்கும் பயன்தரும் வீட்டு வசதித் திட்டங்களை மாநில வீட்டு வசதி வாரியம் தொடர்ந்து சீராகச் செயல்படுத்துவதுடன், புதிய திட்டங்களையும் நிறைவேற்றி வருகின்றது.

சென்னை மாநகரின் சுற்றுப்புறங்களில் வடக்கே வியாசர் பாடி, மேற்கே பேரறிஞர் அண்ணு நகர்ப்பகுதி, மேற்கு அண்ணு நகர் விரிவாக்கப்பகுதி, கொரட்டூர் ஆகிய இடங்களிலும் தெற்கே இந்திரா நகர், சாஸ்திரி நகர், பெசண்ட் நகர் ஆகியவைகளிலும் தென் மேற்கில் கோடம்பாக்கம் புதூர், கலைஞர் கருணுநிதி நகர் ஆகியவைகளிலும் விரிவாக்க வேலைகளும், கட்டுமான வேலைகளும் சிறப்பாக நிறைவேறி வருகின்றன.

வீடு கட்டுவதற்கு நியாய விலையில் நிலம் கிடைக்கச் செய்யவும், வளர்ந்து வரும் பெரு நகரங்களில் வசதி வாய்ந்த வீட்டு மனைகளை அமைத்துத் தரவும் நிலம் கையகப்படுத்தல்—மேம்படுத்தல் என இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

ரூ. 7,200-க்கு மேற்படாத வருவாய் உள்ளவர்களின் வசதிக்காகக் குறைந்த வருமானப் பிரிவினர் வீட்டு வசதித் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது. இதன் மூலம் சுமார் 500 சதுர அடி பரப்பளவுள்ள அடுக்கு மாடி வீடுகள் முழு உரிமை அடிப்படையிலோ, அல்லது தவணைமுறையிலோ வழங்கப்படுகின்றன. வீட்டின் விலை ரூ. 18,000 முதல் ரூ. 20,000 வரை ஆகிறது. தவணை முறையில் வீடு பெற விரும்புவோர் நான்கில் ஒரு பகுதியை முன் பணமாகக் கட்டிவிட்டு, மீதித் தொகையைக் குடியேறியபின்னர் 20 ஆண்டுகளில் மாதத் தவணையில் செலுத்தலாம்.

இதே வகையில் ரூ. 7,200 முதல் 18,000 வரை வருமானம் உள்ளவர்களுக்காக நடுத்தர வருமானப் பிரிவினருக்கான வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. இதில் வீட்டின் விலை மதிப்பு ரூ. 27,000 முதல் ரு. 30,000 வரை ஆகும். வீட்டின் பரப்பு 800 சதுர அடி. முழு உரிமை அடிப்படையிலோ தவணை முறையிலோ வீட்டைப் பெறலாம்.

அரசுப் பணியாளர்களுக்காகச் சலுகை வாடகை வீட்டு வசதித் திட்டம் மாவட்டத் தலைநகர்களிலும் மற்றும் சில முக்கிய நகரங்களிலும் செயல்பட்டு வருகின்றது. சிறப்பாக வருவாய்த் துறை அலுவலர்களுக்கும், நீதித் துறை அலுவலர்களுக்கும் 5 ஆண்டுக் காலத்தில் சுமார் 500 வீடுகள் கட்டி முடிக்க முடிவு செய்து வீட்டு வசதி வாரியத்தின் பொறுப்பிலே அப்பணியை நிறைவேற்ற அரசு ஆணையிட்டுள்ளது. குறிப்பிட்ட 5 ஆண்டுக் காலத்திற்கு முன்னதாகவே இத்திட்டம் முடியும் வண்ணம் வேலைகள் விரைவாக நடந்து வருகின்றன. இதுவரை நீதித் துறை அலுவலர்களுக்கும், வருவாய்த்துறை அலுவலர்களுக்கும் 200 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. மற்றத் துறை அலுவலர்களுக்கும் வீடுகள் கட்ட ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

உதகை, கொடைக்கானல், ஏற்காடு, சவ்வாது மலைகள் ஆகிய இடங்களில் உள்ள மலைப் பகுதிகளில் சிறு குடில்கள் கட்டுவதற்கான திட்டம் ஒன்றை வீட்டு வசதி வாரியம் தீட்டியுள்ளது. பொது மக்களிடமிருந்து பெறுகின்ற நன்கொடைகளிலிருந்து இந்தச் சிறு குடில்கள் கட்டப்படும். இக்குடில்களின் மனைப் பரப்பளவு 700 ச.அடி. ஆகவும், 400 ச. அடியாகவும் இருக்கும். இதற்கு முறையே ரூ. 20,000 13,000 செலவாகும். இந்தத் திட்டத்திற்கு நல்ல வரவேற்பு உள்ளது.

ஆயுள் ஈட்டுறுதிக் கழகத் தலைவரின் கருத்துரையின் பேரில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் கிராமப்புறங்களில் மருத்துவர்களுக்கு வீடுகள், மருந்தகங்கள் சிலவற்றைக் கட்டிக் கொடுக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்கு ரூ. 15,000 முதல் ரூ. 20,000 வரை செலவாகும். தொடக்கத்தில் 20 சதவீதத் தொகை செலுத்த வேண்டும். எஞ்சிய தொகை மாதத் தவணைகளில் வசூலிக்கப்படும்.

ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளில் பணி ஓய்வு பெறவிருக்கும் அரசுப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான திட்டம் ஒன்றுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், பணியாளர்கள் தங்கள் பெயரைத் தமிழ்நாட்டு வீட்டு வசதி வாரியத்தில் பதிவு செய்து கொண்டு அவர்கள் பணி ஓய்வு பெறவேண்டிய நாள் வரையில் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 முதல் ரூ. 100 வரையில் ஒரு தொகை கட்டி வருமாறு கேட்டுக் கொள்ளப்படுவார்கள். அவர்கள் பதவியிலிருந்து ஓய்வு பெற்றவுடன், தமிழ்நாட்டில் அவர்கள் விரும்பும் ஏதாவது ஓர் இடத்தில் வீடு அல்லது மனை அவர்களுக்கு நிச்சயம் உண்டு என்று அவர்கள் உறுதியாகக் கொள்ளலாம்.

திங்கள் ஒன்றுக்கு ரூ. 200 முதல் ரூ. 500 வரை ஊதியம் பெறுகின்ற அரசிதழ் பதிவு பெரு அரசுப் பணியாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கான மற்ரெரு திட்டமும் உள்ளது. அவர்கள் தங்களது பெயர்களை வீட்டு வசதி வாரியத்தில் பதிவு செய்துகொண்டு திங்கள் ஒன்றுக்கு ரூ. 20 முதல் ரூ. 50 வரை செலுத்தி வருமாறு கேட்டுக் கொள்ளப்படுவர். ஐந்தாவது ஆண்டின் முடிவில் அவர்களுக்கு ஒரு மனை ஒதுக்கிக் கொடுக்கப்படும். அதற்குப் பிறகு தேவைப்பட்





டால் வீடும் கட்டிக் கொடுக்க வும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் 'சொந்த வீடுகட்டிக் கொள்ளும் திட்டத்தை'த் தங்க ளுக்குச் சாதகமாகப் பயன்படுத் திக்கொள்ள வீட்டுவசதி வாரியம் கருதியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஆயுள் ஈட்டுறுதி செய்து கொண்டவர் இத் திட்டத்தில் சேரும்போது இவ்வீட்டில் குடி புகுவதற்கு முன், அவ்வீட்டின் விலை மதிப்பில் கால்பாகத்தினைச் செலுத்த வேண்டும். எஞ்சியுள்ள தொகையை, இத்திட்டத் தின் கீழ் ஆயுள் ஈட்டுறுதி ஒன்றைச் செய்து கொள்வதன் மூலம், 20 ஆண்டுக் காலத்தில் செலுத்த வேண்டும். ஆயுள் ஈட்டுறுதி எடுப்பதன் நன்மை என்னவெனில் உரிய காலத்திற்கு முன் ஒருவர் இறந்து விட்டால் அவருக்கு அந்த வீடு சொந்தமாகி விடுகிறது.

வீட்டு வசதி கருதி நாளொன் றுக்கு ஒரு ரூபாய் சேமிக்கும் திட்டத்தின் மூலம், ஒவ்வொரு வரும், தனது வீட்டில், வீட்டு வசதி வாரியத்தால் வழங்கப் படும் சிறப்பு உண்டியல் பெட்டி யில், நாளொன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் சேமித்து வர வேண்டும். இத்திட்டத்தின் கீழ் தினமும் ஒரு ரூபாய் என்ற விகிதத்திலோ அல்லது தினமும் இரண்டு ரூபாய் அல்லது மூன்று ரூபாய் அல்லது நான்கு ரூபாய் என்ற விகிதத் திலோ சேமிக்கலாம். ஒவ்வொரு திங்கள் இறுதியிலும், இந்த உண்டியலில் சேமிக்கப்பட்ட தொகையானது, வீட்டு வசதி வாரியத்திடமுள்ள, அந்த நபரின் கணக்கில், உரிய முறையில் வரவு வைக்கப்படும். அவ்வாறு சேமிக்கப்படும் தொகையானது 5 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, வீட்டு மனைவாங்கி அதில் வீடு கட்டுவதற்குப் பயன்படுத்தப் படும். அவ்வாறு கட்டிக் கொடுக்கப்படும் வீட்டின் விலை யும், வீட்டு மனையின் மதிப்பும் சேர்ந்து 5 ஆண்டு காலச் சேமிப் புத் தொகையைப்போலச் சுமார் 4 பங்கு மதிப்புடையதாக இருக்கும்.

அரசுப் பணியாளர்களுக்குப் புதிதாக வீடு கட்டுவதற்காகவும், புது மனையை விலைக்கு வாங்கு வதற்காகவும், கட்டப்பட்டுள்ள வீட்டை விலைக்கு வாங்குவதற் காகவும் முன்னரே அவர்களுக்குச் சொந்தமாகவுள்ள வீட்டு இட வசதியை அதிகப்படுத்துவதற் காகவும் கடன் வசதி அளிக்கப் படுகிறது. அரசின் நிலையான பணியாளர்களும், அல்லது ஐந் தாண்டு தொடர்ந்து அரசின் கீழ் பணிபுரிபவர்களும், இந்த மாநிலத்தில் பணிபுரிகிற அனைத் திந்திய பணி அதிகாரிகளும், இக் கடன் பெறத் தகுதியுடையவர் களாவர். அரசுப் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களு டைய சம்பளத்தைப் போன்று 60 மடங்குத் தொகை அல்லது ரூ 55,000 இவற்றில் எது குறைவாக உள்ளதோ அத் தொகை முன் பணமாக வழங்கப் படுகிறது. இத்திட்டத்திற்காகத் தமிழ்நாடு அரசின் 1972–73 -ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 65 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வீடுகளை மலிவான விலையில் கட்டிமுடிக்கும் வகையில் வீட்டு வசதி வாரியத்தின் மேற்பார்வை யில் தக்கைக் கல் தொழிற்சாலை, நிறுவப்பட்டுச் சோதனை அடிப் படையில் உற்பத்தி நடைபெற்று வருகிறது. இந்த வகைக் கற்கள் புழைக் கலவைக் கற்கள் என வழங்கப் பெறுகின்றன.

இத்திட்டத்தின் மதிப்பீடு சுமார் மூன்றரைக்கோடி ரூபாய். மத்தியஅரசு, தமிழக அரசிற்குக் கடனாக இந்தத் தொகையைக் கொடுத்து இத்திட்டம் போலந்து நாட்டுத் தொழில் நுட்ப உதவி யுடன் நடைபெறுகிறது. இதனு டைய சிறப்பு அம்சம் என்ன வென்றால் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 4 கோடி ரூபாய் மதிப் புள்ள கட்டடங்கள் கட்டுவதற் கான ஒரு கோடி ரூபாய் தக்கைக் கற்கள் செங்கற்களுக்குப் பதிலாக பயன்படுத்த உற்பத்தி செய்யும். இக்கற்கள் ஒவ்வொன் றும் சுமார் 10 செங்கற்கள் அடங் கிய அளவுக்கு அமையும். ஆனால் செங்கற்களின் கனத்தை விட 50 சதவீதம் குறைவாக இருக்கும். இக்கற்களைப் பயன்படுத்திக் கட் டட வேலைகள்செய்யும்போது இப் பொழுதுள்ள செலவிலே சுமார் 10 சதவீதம் சிக்கனம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

> இந்த நாட்டிலே நம்ம வர் வீடுகட்டுவர்; அதிலே பலப்பல அறைகள் அமைப் பர். மாட்டுக்கொட்டகை ஒரு பால், பொக்கிஷ அறை ஒரு பால், சமையல் அறை மற்றொரு பால் அமைப்பர். ஆனால் அறி வூட்டும் ஏடுகள் நிறைந்த படிப்பறை பற்றிப் பகற் கனவும் காணார். படிப் பறை மிகவும் முக்கிய மானது; அவசியமானது; அலட்சியப்படுத்தக் கூடிய தன்று.
>
> —பேரறிஞர் அண்ணா,

தமிழ்நாடு வீட்டு வசதி வாரி யம், செங்கல் இயந்திரச் சூளை ஒன்றை செக்கோஸ்லோவாகியா நாட்டின் ஒத்துழைப்புடன் தொடங்குவதற்கான செயற் குறிப்பு பரிசீலிக்கப்பட்டது. இயந்திரங்களுக்கான விலைகள் குறித்து இயந்திரம் வழங்கும் நிறுவனத்திற்கு ரூ. 18.00 இலட்சம் தொகைக்கு உத்தர வாதமும் கொடுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கான முதலீட்டுச் செலவு சுமார் ரூ. 98.30 இலட்ச மாகும். அதற்கான அந்நியச் செலாவணி ரூ. 21.09 இலட்ச மாகும்.

### ஆண்டுத் தேவை ரூ. 10 கோடி

மாநிலத்தில் வீட்டு வசதித் தேவைகளைக் கருதிப் பார்க்கை யில், இன்னும் 10 ஆண்டுகளுக்கு ஒவ்வோர் ஆண்டுக்கும்குறைந்தது ரூ. 10 கோடி தேவைப்படுகிறது. வீடுகளின் தேவைகளைக் கணிச மான அளவு நிறைவேற்ற இந்த அளவு தொகை தேவைப் படும். கொரட்டூர் புறநகர் வீட்டு வசதித்திட்டத்தை (முதல் நிலை) நிறைவேற்றத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச்சுழல் நிதியிலிருந்து ரூ. 2.38 கோடிக்கு புதுடில்லி, வீட்டு வசதி வாரியம் —நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் ஒப்புதல் அளித்துள்ளது. முதல் தவணைத் தொகையாக ரூ. 92 இலட்சம் பெறப்பட் டுள்ளது.

வீட்டு வசதி வாரியம், ரூ. 1,520.63 இலட்சம் செலவி லான மேலும் 6 திட்டங்கள் வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச் சிக் கழகத்திற்குஅனுப்பியுள்ளது.

ரூபாய் 100 இலட்சம் கடன் வழங்குவதற்குச் சிண்டிகேட் வங்கி ஒப்புதல் வழங்கியுள்ளது. மிகக் குறைந்த வருமானமுடை யோர் குறைந்த வருமானத் தொகுதியினர் ஆகியோருக்கு, வீடுகள் கட்டிக் கொடுப்பதற் கான பல திட்டங்களுக்கு நிதி உதவியளிக்க, ரூ. 1 கோடி விரைவுத் திட்டக் கடன்வழங்க ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் கொள் கையளவில் ஒப்புக் கொண் டுள்ளது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மக்களின் தேவை களை உணர்ந்து சிறப்பான திட் டங்களைத் தீட்டி மனைப் பற்றுக் குறையைப் அடியோடு தீர்க்க உறுதியான எண்ணத்துடன் செயல்பட்டு வருகிறது. இத் திட்டங்களைக் கிராமப்புறத்திற் கும் வழங்க எண்ணங்கொண்டு மக்களுக்குத் தொண்டு செய்யத் தீவிரமாக முனைந்துள்ளது. மனை வளம் ஓங்குக !




**ஓர் அரிய திட்டம்!**

மேலை நாடுகளில் பணிபுரியும் தமிழ்நாட்டைச் சேர்ந்த முப்பது அறிஞர்கள், விடுமுறைக் காலங்களில் தமிழ்நாட்டில் விஞ்ஞானத் தொழில் நுட்பத் துறைகளில் பணியாற்றுவதற்கு ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

1972–73-ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும். இரு திங்களுக்கு ஒரு முறை இந்தத் திட்டம் செயல்பட்டு வருவதை ஆராய்வதற்காக ஓர் இணைப்புக் குழு அமைக்கப்படும்.

விடுமுறைக் காலப் பேராசிரியர் வருகைத் திட்டத்தின் கீழ் மேலை நாடுகளில் பணியாற்றும் முப்பது தலைசிறந்த விஞ்ஞானிகள் தமிழ் நாட்டுக் கல்லூரிகளில் விரிவுரை நிகழ்த்த அழைக்கப்படுவர். இதற்கான செலவைத் தமிழ்நாடு அரசு ஏற்கும்.

**செவிலிப்பணி உதவியாளருக்குச் சலுகைகள்!**

அரசு மருத்துவ மனைகளில் பணி புரியும் செவிலிப் பணி உதவியாளர்கள் (தரம் I & II) இதுவரை கடைநிலை ஊழியர்களாக வகைபாடு செய்யப்பட்டிருந்தனர். தமிழக அரசு மருத்துவமனை செவிலிப் பணி உதவியாளர்கள் சங்கத்தின் வேண்டுகோளுக் கிணங்க செவிலிப்பணி உதவியாளர்கள் 'மேல் பிரிவுப் பணியாளர் தொகுதியைச்' சேர்ந்தவர்கள் என அரசு ஆணை பிறப்பித்தது. இதன் மூலம் மேல் பிரிவுப் பணியாளர் தொகுதியைச் சேர்ந்த பிற அரசு ஊழியர்கள் பெறும் கீழ்க்காணும் விடுப்புச் சலுகைகளை, செவிலிப் பணி உதவியாளர்களும் பெறுவர்:

நிரந்தரப் பணியாளர்களாக இருப்பின், அவர்கள் (1/11) பதினொரு நாட்களுக்கு ஒரு நாள் வீதம், 180 நாட்களுக்கு மிகாமல், விடுப்பு ஈட்ட முடியும்.

மருத்துவச் சான்றிதழின் அடிப்படையில் ஓர் ஆண்டு மருத்துவ விடுமுறையினை முழு ஊதியத்துடன் ஆறுமாத விடுமுறையாகக் கணக்கிட இயலும்.

தமது சொந்தக் காரியங்களுக்கென மொத்தம் ஆறுமாதம் (ஒரே சமயத்தில் உயர்ந்த அளவு மூன்று மாதம் மட்டும்) விடுமுறை பெறும் தகுதி உடையவராவர்.

மேல்பிரிவுப் பணியாளர் தொகுதியைச் சேர்ந்த அரசு ஊழியர்கள் தமது 55-வது வயதில் ஓய்வு பெறுவர்; இதனால் தற்பொழுது 55 வயதிற்கு மேற்பட்ட செவிலியர்ப்பணி உதவியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, செவிலிப் பணியாளர்கள், தங்களது 60-வது வயதில் ஓய்வு பெற வாய்ப்புள்ள அரசின் பழைய விடுமுறைகளின் கீழ்ப்பணி புரிய விரும்புகிறார்களா அல்லது தங்களது 55-வது வயதில் ஓய்வு பெற வாய்ப்புள்ள புதிய விதிமுறைகளின் கீழ்ப் பணி புரிய விரும்புகிறார்களா என்கிற விருப்பத்தைத் தெரிவிக்க அரசு வகை செய்துள்ளது.

## "தாய்" நிறுவனத்தின் ஓர் முக்கிய அறிவிப்பு

'தாய் தருவது வளர்ச்சிக்குச் சேவை'

வெளிநாடுகளிலுள்ள உறவினர்களிடமிருந்து, விவசாயிகள் டிராக்டர்களை நன்கொடையாகப் பெறும் திட்டத்தை இந்திய அரசாங்கம் 31–3–1973 வரை நீட்டித்துள்ளது என்பதைத் "தாய்" அறிவிக்கின்றது. பின் குறிப்பிட்டுள்ள டிராக்டர்களில் ஏதேனும் ஒன்றை இறக்குமதி செய்யலாம்.

| | | |
|---|---|---|
| 1. | மாஸே ஃபர்குசன் | எம்.எப். 1035/135 ஐ.எம்.டி. 533/555 |
| 2. | இண்டர்நேஷனல் | பி. 275/276, 434 |
| 3. | ஃபோர்டு | ஃபோர்டு 3000 |
| 4. | டாயட்ஸ் | டி—3006. டி—4006. டி—6006 டி—10006. |
| 5. | ஸெட்டார் | 2011/2511/3011/3511/5511 |
| 6. | ரஷ்யன் | டி—25 |
| 7. | ஷிபௌரா | எஸ்—2000 |
| 8. | ஹேனோமாக் | 32 குதிரைத திறன் |
| 9. | ருமேனியன் | யூ—500, யூ—650 |
| 10. | டேவிட் பிரௌன் | மாடல் 990 (50 குதிரைத் திறன்) |

இந்தத் திட்டத்தின் அடிப்படையில் டிராக்டர்களைப் பிராஜெக்ட்ஸ் அண்டு எக்குவிப்மெண்ட்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட், சந்திரலோக் பில்டிங், ஜன்பத், புது டெல்லி என்னும் அலுவலகத்தின் மூலமும் இறக்குமதி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

டிராக்டர்களை நன்கொடையாகப் பெற விரும்புபவர்கள் விண்ணப்பத்தாள் மற்றும் விவரங்களுக்குக் கீழ்க்கண்ட முகவரிக்கு உடனடியாக எழுதுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம், "வேளாண் இல்லம்" தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-600032.

வேளாண்மை இயக்குநர்

## ‘தமிழரசு’ இதழுக்கு விற்பனையாளர்கள் (ஏஜண்ட்) தேவை

தமிழரசு இதழுக்குக் கீழ்க்கண்ட ஊர்களுக்கு விற்பனையாளராக (ஏஜெண்ட்) இருக்க விரும்புவோர் “இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-2, என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

### செங்கற்பட்டு மாவட்டம்

1 திருத்தணி
2 வாலாஜாபாத்
3 ஆரணி
4 பட்ரோடு
5 பெரியபாளையம்
6 பள்ளிப்பட்
7 ஆலந்தூர்
8 கூடுவாஞ்சேரி
9 அய்யம்பேட்டை
10 பொத்தூர்பேட்
11 சோத்துப்பாக்கம்
12 பாலுசெட்டி சத்திரம்
13 ஸ்ரீபெரும்புதூர்
14 கும்மிடிபூண்டி

### வடஆர்க்காடு மாவட்டம்

1 பேரணம்பட்டு
2 ஆம்பூர்
3 தொட்டப்பாளையம் (வேலூர்)
4 ஜோலார்பேட்டை
5 வானபுரம் (திருவண்ணாமலை)
6 பள்ளிக்கொண்டா
7 பனப்பாக்கம்
8 அத்துமேடு (ஒடுக்கத்தூர் அஞ்சல்)
9 தெள்ளூர்
10 அணைக்கட்டு அஞ்சல்
11 ஆலங்காயம்
12 ராணிப்பேட்டை
13 ஆர்க்காடு
14 காஞ்சி
15 புதூர் (வாணியம்பாடி)
16 தக்கோலம் இராமம்
17 லத்தேரி
18 வெட்டவலம்
19 கே. வி. குப்பம் (காட்பாடி வழி)
20 கலவை
21 ஓச்சேரி (ஆயர்பாடி அஞ்சல்)
22 மாணிக்கன்பாளையம் (கண்ணமங்கலம்)
23 கீழப்பெண்ணாத்தூர்
24 பெரிய கொழப்பலூர் அஞ்சல் (ஆரணி வழி)
25 கீழ்க்கொதங்கலூர் அஞ்சல்
26 திமிரி
27 காவிரிப்பாக்கம்
28 சோளிங்கபுரம்
29 கொரட்டி அஞ்சல்
30 மேலூர்
31 சாந்தி புதுப்பாளையம்
32 வேலூர்
33 ஒழுகூர் அஞ்சல் (அம்மூர் வழி)
34 நெமிலி
35 தெய்விகாபுரம்
36 தனிப்பாடி
37 தண்டாராம்பேட்டை

### தென்னார்க்காடு மாவட்டம்

1 காட்டுமன்னார்குடி
2 மரக்காணம்
3 புவனகிரி
4 கீரப்பாளையம்
5 கணை
6 மயிலம்
7 புதுப்பேட்
8 தெங்கநாதம் (கடத்தூர்)
9 கொச்சேரிப்பாளையம்
10 கண்டாரக்கோட்டை
11 கண்டமங்கலம்
12 அவலூர்பேட்டை
13 வண்டிப்பாளையம் (கடலூர்-2)
14 ஸ்ரீமுஷ்ணம்
15 திருப்பாப்புலியூர்
16 கிள்ளிகிராமம் (சிதம்பரம் தாலுக்கா)
17 லால்பேட் (வழி) எல்லேரி அஞ்சல்

### கோவை மாவட்டம்

1 திருப்பூர்
2 பி. புளியம்பட்டி
3 சத்தியமங்கலம்
4 கொடுமுடி
5 காரமடை
6 போத்தனூர்
7 வால்பாறை
8 கள்ளிப்பட்டி (ஈரோடு வழி)
9 மேட்டுப்பாளையம்
10 பள்ளிப்பாளையம்
11 பெருந்துறை
12 முடக்குறிச்சி
13 கவுந்தப்பாடி
14 நம்பியூர்
15 பழக்க வண்டு பாளையம் (விஜயமங்கலம் வழி)
16 பரம்பிக்குளம்
17 காட்டூர் (பல்லடம் வழி)
18 ஏரிசனம்பட்டி (உடுமலை தாலுக்கா)
19 ஒத்தக்கல் மண்டபம்
20 சோளிங்கநகர் (பொள்ளாச்சி வழி)
21 மல்லூர் அஞ்சல் (தாராபுரம் தாலுக்கா)
22 முடீஸ்
23 சிவகிரி
34 சீனிவாசபுரம் (ஆலந்துரை அஞ்சல்)
25 புலம் கிணூர் அஞ்சல் (உடுமலை வட்டம்)
26 சேத்துமடை அஞ்சல் (ஆனைமலை வழி)
27 இரும்பாறை அஞ்சல்
28 பவானி
29 பொங்களூர்
30 காஞ்சிக் கோயில் அஞ்சல் (நசியனூர்)
31 அம்மாபாளையம் (அறுப்பர் பாளையம்)
32 திங்களூர்

குறிப்பு: தமிழ்நாடு அரசாங்கத்தின் ‘தமிழரசு’ மாதம் இருமுறை இதழ் விற்பனை உரிமை (ஏஜண்ட்) பெற, ஒரு பிரதிக்கு ரூ. 2 வீதம் முன்பணம் (Deposit) கட்டப்பட வேண்டும். முன்பணம் கட்ட முன்வராத எந்த விண்ணப்பமும் கவனிக்கக்கப்படமாட்டாது. விற்பனையாளர்களுக்கு (ஏஜெண்ட் கமிஷன் 25.‘/ தரப்படும். இவ் விளம்பரம் வந்த பதினைந்து நாட்களுக்குள் விண்ணப்பதாரர்கள் இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

இயக்குநர்,
செய்தி—மக்கள் தொடர்புத் துறை.
சென்னை-9.

291



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்




# புதிய கண்டுபிடிப்புகள்!

### மிளகாய்ப் பயிருக்குத் தகுந்த இடைவெளி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் 1971-72-ஆம் ஆண்டில் மிளகாய்ப் பயிருக்கான இடைவெளி சோதனையில் ‘பி. 70 ஏ. எல்.’ (அஸ்ஸாம் ரகம்), ‘சி. 63-ஏ. 5’ (சிலோன் ரகம்), ‘பி-24-ஏ. 2’ (பீகார் ரகம்), மற்றும் உள்ளூர் குண்டு ரகம் ஆகிய ரகங்கள் 60×60 செ. மீ., 45×45 செ. மீ., 30×30 செ. மீ. ஆகிய இடைவெளிகளில் சாகுபடி செய்யப்பட்டன. இந்தப் பயிர்களுக்கு எக்டேருக்கு 50 வண்டி (25 டன்) தொழு உரத்துடன், 25 கிலோ சாம்பல் சத்து, 25 கிலோ மணிச் சத்து ஆகியவை அடியுரமாக இடப்பட்டன. 40 நாட்கள் வயதுடைய மிளகாய் நாற்றுகள் நடப்பட்டன. 70 கிலோ தழைச் சத்தை நட்ட 30-ஆம் நாளிலும், 75-ஆம் நாளிலும் ஆக இரு முறையாக இடப்பட்டது. மிளகாய் நாற்று நட்ட 120 நாளிலிருந்து 240 நாட்கள்வரை மிளகாய்ப் பழங்கள் பறிக்கப் பட்டன.

இந்தச் சோதனையின் முடிவில் 30×30 செ. மீ. இடைவெளியில் நடப்பட்ட மிளகாய்ச் செடியானது 60×60 செ. மீ. இடைவெளியில் நட்ட செடிகளைவிட 65 சதம் அதிக விளைச்சல் கொடுத்துள்ளது. இந்தச் சோதனையில் எல்லா ரகங்களையும் விட சிலோன் ரகமான ‘சி. —63—ஏ. 5’ என்ற ரகம் எக்டேருக்கு 2,367 கிலோ மிளகாய் கொடுத்துள்ளது. இலாபகரமான அதிக விளைச்சலைப் பெற 30×30 செ. மீ. இடைவெளியில், ஒரு சதுர மீட்டருக்கு 11 செடி வீதம் நட்டால் நல்ல பலனைப்பெறலாம் என மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

### எள்ளினை அழிக்கும் பூச்சிகளும் அதன் தடுப்பு முறைகளும்

நல்லெண்ணெய் தமிழ்நாட்டின் முக்கியமான உணவு எண்ணெயாகும். இந்த எண்ணெய்யைத் தரும் எள் தமிழகமெங்கும் பரவலாகப் பயிராகிறது. உயர் விளைச்சல் தரும் எள் ரகங்கள் பெருவாரியாகப் பயிரிடப்பட்டு வருகின்றன. இவைகளின் முழுப் பலனையும் பெற எள்ளினைத் தாக்கும் பல்வேறு பூச்சிகளைக் கட்டுப்படுத்தல் இன்றியமையாதது. எள் செடிகளைத் தாக்கும் பூச்சிகளும், அவைகளைத் தடுக்கும் முறைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### இலை மடக்குப் புழு (ஆன்டிகேஸ்ட்ரா கேட்டலௌனலிஸ்)

எள்ளினைத் தாக்கும் பூச்சிகளிலேயே இது மிகவும் முக்கியமான தாகும். இது ‘புலி நகம்’, ‘பெட்டூனியா’ போன்ற செடிகளிலும் காணப்படுகிறது. இவற்றின் புழுக்கள் இளம் இலைகளை ஒன்று சேர்த்துப் பின்னி, அக்கூட்டினுள்ளிருந்து இலைகளை உண்பதோடல்லாமல், இளம் காய்களையும், தண்டுகளையும் துளைக்கின்றன. இதனால் மகசூல் பாதிக்கப்படுகிறது. இப்பூச்சியின் வாழ்க்கைப் பருவம் ஏறக்குறைய ஒரு மாதமாகும். இதில் 11 முதல் 16 நாட்கள் வரை புழுப் பருவத்தில் கழிகிறது. இதுவே பயிருக்குச் சேதத்தை விளைவிக்கும் பருவமாகும்.

குறைந்த அளவு புழுக்களிருப்பின் புழு காணப்படுகின்ற பாகங்களைக் கிள்ளி அழித்து விடலாம். அதிகமாகக் காணப்பட்டால் டி.டி.டீ. 5 சதத் தூளைத் தூவியோ அல்லது எண்டிரின் 0.02 சதம் தெளித்தோ கட்டுப்படுத்தலாம். செடி முளைத்து 4 வாரங்களுக்குப் பின் முதன் முறையாகவும், பின்னர் 15 நாட்களுக்கு ஒரு முறையாக மூன்று முறையும் மருந்துதெளிப்பதால் பூச்சியைக் கட்டுப்படுத்துவதுடன் அதிக மகசூலும் பெறலாம் என ஆராய்ச்சியின் முடிவுகளிலிருந்துதெரிந்துள்ளன. புழுப் பருவத்தில் ‘இச்சினே மானிட்’ குடும்பத்தைச் சேர்ந்த ‘கிரெமாஸ்டஸ் ப்ளோவர் பிட்டாலிஸ்’ ‘பிரகோனிட்’ குடும்பத்தைச் சேர்ந்த ‘பிரக்கன் பிரெஹகார்னிஸ்’ ‘பிரேக்கன் ஹெபேட்டர்’ போன்ற இயற்கை விரோதிகளும் (Natural enemies) உண்டு.

### காய்க் கொழுப்பு ஈ (ஆஸ்பாண்டைலியா செசாமி)

கொசு மாதிரியான பெண் ஈக்கள் தனித்தனியாகப் பூ மொக்குகளுக்குள்ளோ, இதரப் பூவின் பாகங்களிலோ, இளம் காய்க்குள்ளோ முட்டையிடுகின்றன. நான்கு நாட்களுள் வெளிப்படும் புழுக்கள் சூலகத்தையும் மற்றப் பூவின் பாகங்களையும் சுரண்டுவதால் ஏற்படும் எரிச்சலால் காய்களில் வீக்கங்கள் ஏற்படும். காய்கள் வற்றியும், சிறிதாகவும் காணப்படும். சில சமயங்களில் விதைகள் உண்டாவதில்லை. இப்புழுவின் பருவம் 2-3 வாரங்களாகும். உருண்டையான அல்லது கோளவடிவமான வீக்கங்களிருக்கும். கூட்டுப் பருவம் 7-12 நாட்களுள் முடிந்து காய்களிலிருந்து தாய் ஈ வெளிப்படும். இப்பூச்சியின் வாழ்க்கைக் காலம் 23-37 நாட்களாகும். தமிழகத்தில், திருச்சி, கரூர் பகுதிகளில் இப்பூச்சிகளின் தொல்லை மிகவும் அதிகம். இப்பூச்சியைத் தடுக்க, பயிர் முளைத்த 35, 50, 65-வது நாட்களில் பி. எச். சி. 10 சதத் தூளைத் தூவலாம். அல்லது டி. டி. டீ. 0.1 சதம் தெளிக்கலாம். பி. எச். சி. யை உபயோகிப்பதன் மூலம் அதிக மகசூல் கிடைக்கிறதென கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதற்கு ‘சால்சிட்’ குடும்பத்தைச் சேர்ந்த ‘யூரிடோமா டெண்டிலெக்டஸ்’ என்ற இயற்கை விரோதி உண்டு.

### சாத்தலே அந்து
### (அக்கிரான்சியா ஸ்டிக்ஸ்)

இப்பூச்சி எள்ளைத் தவிர, கத்தரி, அவரை, மல்லிகை முதலியவற்றையும் தாக்குகிறது. இதன் புழு பருத்தும், நீண்டும், மஞ்சள் வரிகளுடனும், பசுமை நிறமாகவும் காணப்படும். இலைகளையும், சிறு காய்களையும் உண்ணுகின்றன. இப்புழுக்களால் ஏற்படும் சேதம் குறைவே. புழுக்களைக் கைகளால் பொறுக்கி விடலாம். இதற்கும் 'பிரகோனிட்' குடும்பத்தைச் சேர்ந்த 'அபேண்டிலஸ் அக்கிரான்சியா' என்ற இயற்கை விரோதி உண்டு.

### தத்துப் பூச்சி
### (ஒரேசிஸ் ஆல்பிசிங்டஸ்)

இது மிகவும் சிறிய தத்துப் பூச்சி. இது இளம் இலைகளின் சாற்றை உறிஞ்சி வாழ்கிறது. இதனாலேற்படும் நேரடியான சேதம் குறைவென்றாலும், பில்லோடி ( Phyllody ) இலைச்சுருட்டல் ( leaf curl ) போன்ற 'வைரஸ்' நோய்களைப் பரப்பித் தீங்கினை அதிகப் படுத்துகிறது. 'வைரஸ்' நோயுண்டான செடிகளில் சாதாரணமாகக் காய்கள் பிடிப்பதில்லை.

இதனைத் தடுக்க போரேட் 10 சதக் குருணையைப் பயிர்க்காலத்தில் மண்ணிலிடுவதுடன், என்டிரின் 0.02 சதம் தெளிப்பதன் மூலமும் கட்டுப்படுத்தலாம். 3/2, 65-1/11-1, 67-1/2 போன்ற எள் வகைகள் இயற்கையாகவே இப்பூச்சிக்கு எதிர்த்திறன்கொண்டவை எனத் தெரிய வந்துள்ளது.

### அசுவணி (ஏபிஸ் காஸிப்பி)

இவ் வசுவணிகள் பருத்தியையும் தாக்குகின்றன. செடியின் சாறு உறிஞ்சப்படுவதால் வீரியமும், வளர்ச்சியும் குறைகிறது. 'மெனேக்கைலஸ் செக்சு மாக்லேட்டா' முதலிய 'லேடிபோடு' வண்டுகள் இதற்கு இயற்கை விரோதிகளாகும்.

இவைகளல்லாமல் சாற்றை உறிஞ்சும் பலவித நாவாய்ப் பூச்சிகளும், இலையைத் தின்னும் அந்துப் பூச்சிகளும் எள் பயிரில் காணப்படுகின்றன. மேற்கூறிய மருந்துகளைத் தூவுவதாலோ, தெளிப்பதாலோ இவைகளை வெகுவாகக் கட்டுப்படுத்தலாம்.

### கத்தரியின் பூச்சிகளைக் கட்டுப் படுத்தக் குருணைப் பூச்சிக் கொல்லிகள்

கத்தரி ஒரு முக்கியமான காய்கறியாகத் தமிழகம் முழுவதும் பயிர் செய்யப்படுகிறது. இப்பயிரைப் பல விதமான பூச்சிகள் தாக்கி நாசப்படுத்துகின்றன. அவற்றில் இலையின் சாற்றை உறிஞ்சும் பூச்சிகள், குறிப்பாக அசுவணி, இலைத் தத்துப் பூச்சி போன்றவையும், கடலை வண்டு, குருத்துப் புழு அல்லது காய்ப்புழுவும் மிக முக்கியமானவையாகும். அவற்றில் இலையின் சாற்றை உறிஞ்சும் பூச்சிகள் கத்தரியை இளம் பருவம் முதற்கொண்டே தாக்குகின்றன. குறிப்பாகக் கத்தரி நடவு செய்த ஓரிரு வாரங்களில் சேதத்தினின்று தடுப்பது மிக அவசியமாகும். இந்நாட்களில் ஏற்படும் சேதத்தினால், பயிரின் வளர்ச்சி குன்றிவிடுவதோடல்லாமல், மகசூலும் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. எனவே கத்தரி நடவு செய்த உடனேயே பூச்சிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

> **சேலத்தில் விமான நிலையம்**
>
> சேலத்தில் இருந்து 13 மைல் தொலைவில் ரூபாய் 50 இலட்சம் செலவில் விமான நிலையம் அமைக்கும் திட்டத்திற்குத் திட்டக்குழு அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது. இந்த விமான நிலையம் அமைக்கும் வேலை இன்னும் 4 மாதங்களில் தொடங்கி, 1974-ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிவடைந்து விமானப் போக்குவரத்திற்குத் தயாராகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குருணைப் பூச்சிக் கொல்லிகள் வேர்களின் மூலம் ஊடுருவிச் சென்று இலைகளின் சாற்றுடன் கலந்து நச்சுத் தன்மையுண்டாக்கும் குணமுடையவை. ஆகையால் இக்குருணைப் பூச்சிக் கொல்லிகளைக் கொண்டு ஒரு பரிசோதனை மேற் கொள்ளப்பட்டது.

குருணைப் பூச்சிக் கொல்லிகளான 'தைமெட்' 10 சதவிதம், 'சால்விரக்ச்' 5 சதவிதம் 'டாசனேட்', 'ஆல்டிகார்ப்' 10 சதவிதம் ஆகியவற்றை ஒரு எக்டேருக்கு முறையே 10.0 கிலோ, 15.0 கிலோ, 20.0 கிலோ, 30.0 கிலோ, என்ற விதமும் 20.0 கிலோ, 30.0 கிலோ, 10.0 கிலோ, 15.0 கிலோ என்ற விதமும் மண்ணில் போட்டு இரு சோதனைகள் நடத்தப்பட்டன. நாற்று நடவு செய்த 15-ஆவது நாள், இக்குருணைப் பூச்சிக் கொல்லிகளை, செடிகளின் வேர்ப்பாகத்தில், இரண்டு அங்குல ஆழத்தில் போட்டு, மண் அணைத்து உடனே நீர்பாய்ச்சப்பட்டது.

இவ்வாறு பரிசோதிக்கப்பட்டதில் 'ஆல்டிகார்ப்' 10.0 கிலோ, 'சால்விரக்ச்' 15.0 கிலோ, விதம் இடப்பட்ட செடிகளில், பூச்சிக் கொல்லிகள் போட்ட பின் 40 நாட்கள் வரை இலைத் தத்துப்பூச்சி, அசுவணி, சிவப்புச் சிலந்தி ஆகியவை தடுக்கப்பட்டன. மற்றக் குருணைப் பூச்சிக் கொல்லிகள் இடப்பட்ட செடிகளில் குறுகிய காலமே பூச்சிகள் தடுக்கப்பட்டாலும், பூச்சிக் கொல்லிகள் இடப்படாத செடிகளைக் காட்டிலும் நன்றாகவே இருந்தன.

எனவே, கத்தரியின் தத்துப் பூச்சி, அசுவணி ஆகியவற்றைத் தடுக்க 'சால்விரக்ச்' அல்லது 'ஆல்டிகார்ப்' உபயோகிக்கலாம். மேலும் இப்படிக் குருணைப் பூச்சிக் கொல்லிகளை உபயோகித்தால் செடிகள் நல்வளர்ச்சி உடையதாக இருப்பதுடன், 30 சதவிதம் அதிக விளைச்சலும் கொடுத்துள்ளது.

இதைத் தவிர இக்குருணைகளை உபயோகிப்பதால் கீழ்க்கண்ட அனுகூலங்கள் ஏற்படுகின்றன.

1. குருணைப் பூச்சிக்கொல்லிகள் உபயோகிப்பது மிகவும் எளிது.

2. பூச்சிக் கொல்லி ஊடுருவிச் செல்லும் இயல்புள்ளதாலும், நீண்ட நாட்கள் செடிகளில் தஞ்சு இருப்பதாலும், அடிக்கடி மருந்து தெளிக்க வேண்டியதில்லை.

3. இப்பூச்சிக் கொல்லிகளை உபயோகிப்பதால், நன்மை உண்டாக்கும் பிற பூச்சிகள் (தேனீக்கள் போன்றவை) அழிக்கப்படுவதே இல்லை.

4. இளஞ் செடிகளுக்குக் குருணைகள் இடப்படுவதால் செடிகள் காய்க்கும் தருணத்தில் மட்டும் காய்ப் புழுவைத் தடுக்க முயற்சிகள் செய்தால் போதுமானதாகும். எனவே, மேற்கூறியவாறு 'ஆல்டிகார்ப்' அல்லது 'சால்விரக்ச்' உபயோகிப்பதன் மூலம், கத்தரியின் விரோதிகளைக் கட்டுப்படுத்துவதுடன், அதிக விளைச்சலையும் பெற்றுப் பயன் அடையலாம் என்று சோதனைகள் நிரூபித்துள்ளன.

தகவல் : தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்—3.

## ? ? ? ? ? ? ? ? ? ? கேளுங்கள் கொடுக்கப்படும்

சிறந்த பசுந்தீவனமான 'குதிரை சால்', செப்டம்பர் 1, 1972 'தமிழரசு' இதழில் நன்கு விவரிக்கப்பட்டுள்ளது. அதன் விதைகள் பெறுவதில் சிரமம் இருப்பதாகத் தெரிகிறது. அரசு தன் துறைகளின்மூலம் விநியோகம் செய்யுமா ?

—வெ. இராமகிருட்டிணன்,
நெய்வேலி,
தென்னார்க்காடு மாவட்டம்.

இப்பொழுதுதான் 'குதிரை மசால்' பரவி வருவதால், 'குதிரை மசால்' விதைகள் கிடைப்பது சற்றுக் கடினம் என்பது உண்மையே. இதை உணர்ந்தே தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை 'குதிரை மசால்' விதைகளை வழங்கி வருகிறது. உங்கள் பகுதியில் உள்ள கால்நடை மருத்துவ அலுவலரிடம் அல்லது உங்கள் ஊராட்சி ஒன்றியக் கால்நடை வளர்ச்சி அலுவலரிடம், 'குதிரை மசால்' விதை வரவழைத்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளலாம். அல்லது பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை ஆகிய ஊர்களில் உள்ள கடைகளிலிருந்து நீங்களே 'குதிரை மசால்' விதைகளை வாங்கிக் கொள்ளலாம். அல்லது கீழ்க்கண்ட அலுவலருக்கு எழுதி 'குதிரை மசால்' விதைகளை விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

உதவி இயக்குநர்,
கால்நடை—பராமரிப்புத் துறை,
சென்னை-35.

கால்நடைப் பண்ணைத் தொழிற் பயிற்சி தமிழ் நாட்டில் எங்கெங்கு நடத்தப்படுகிறது ?

—மு. திருவேங்கடம்,
அரியலூர்,
திருச்சி மாவட்டம்.

கால்நடைப் பண்ணைத் தொழிற் பயிற்சி, முதன்முதலாக 1972-ஆம் ஆண்டு சனவரி முதல் 3 மாத காலத்திற்கு ஒசூர் கால்நடைப் பண்ணையில் நடத்தப் பெற்றது. இரண்டாவது பயிற்சி, தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஒரத்தநாடு கால்நடைப் பண்ணையிலும், தருமபுரி மாவட்டத்தில் உள்ளஒசூர் கால்நடைப் பண்ணையிலும் விரைவில் துவக்கப்படவிருக்கிறது.

நான் ஒரு 'செகண்டரி கிரேடு' ஆசிரியர். படிக்கும் போது அடமானம் வைத்த நிலங்களை மீட்பதற்குப் பணம் சேமிக்க முடியவில்லை. எனது சம்பளத்தில் மாதம் ரூபாய் 100 பிடித்துக் கொள்ளக் கூடிய முறையில் ரூபாய் 2,000 கடன்பெற வசதி உள்ளதா ? நிலவள வங்கிகள் நில அடமான பேங்குகள் எவ்வாறு செயல்படுகின்றன ?

—எஸ். பெரியநாயகம்,
அறந்தாங்கி (அஞ்சல்), சிதம்பரம் வட்டம், தென்னார்க்காடு மாவட்டம்.

தங்கள் சம்பளத்தில் மாதம் ரூபாய் 100 விதம் பிடித்துக் கொள்ளக் கூடிய முறையில் ரூபாய் 2,000 கடன் பெற நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் உதவியை நாடலாம். நிலவள வங்கிகள் தற்பொழுது பழைய கடனை அடைப்பதற்குக் கடன் கொடுப்பதில்லை. நில வளத்தை மேம்படுத்தி, உற்பத்தியைப் பெருக்குவதற்கான பணிகளுக்கு மட்டுமே நிலவள வங்கிகள் கடன் கொடுத்து வருகின்றன. தற்பொழுது நில அடமான வங்கிகள் இல்லை. அவைகளே நிலவள வங்கிகளாக மாற்றப்பட்டுள்ளன.

> **கொடி நாள் நிதி கொடுத்திடுவீர் !**
>
> முன்னாள் படைவீரர்களின் நல்வாழ்வுத் திட்டங்களுக்கு உதவுவதற்காக, 1972 டிசம்பர் 7-ஆம் நாள் அன்று 'கொடி நாள்' (Flag Day) விழா கொண்டாடப் படவிருக்கிறது. கொடி நாள் அன்று தாராளமாக நிதி உதவி செய்திடுமாறு, பொதுமக்களுக்குத் தமிழ் நாடு அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.
>
> 1960-ஆம் ஆண்டில் ரூபாய் 1,04,000 ஆக இருந்த கொடி நாள் வசூல், 1971-ஆம் ஆண்டில் ரூபாய் 5,66,000 ஆகப் பெருகியுள்ளது. இந்த ஆண்டில் கொடி நாள் நிதி மேலும் பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தங்கள் கடனை அடைக்கச் 'சம்பளப்பட்டியல் சேமிப்புத் திட்டமும் ( Pay Roll Savings Scheme ) உதவும். தாங்கள் மாதம் ரூபாய் ஐம்பதை இத்திட்டத்தின் கீழ் கட்டிவந்தால், 5 ஆண்டு முடிவில், தங்களுக்கு வட்டியுடன் சேர்ந்து, ரூபாய் 3,550 கிடைக்கும், இத்திட்டத்தின்கீழ் ரூ. 100அல்லது 50 என்று தங்கள் சம்பளத்திலிருந்து பிடித்துக் கொள்வதற்குக் கையொப்பமிட்டுக் கொடுத்துவிட்டால், தங்கள் சம்பளப்பட்டியலிலேயே அத்தொகையைப் பிடித்துக் கொள்வார்கள். இதற்கெனத் தனியே ஒரு பாஸ் புத்தகம் துவங்கப்பட்டு, உங்களுக்குச் சம்பளம் வழங்கும் அலுவலரிடம் இருக்கும். அதை எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் கேட்டு வாங்கிச் சரி பார்த்துக் கொள்ளலாம்.

இவ்வாறு சேமிக்கப்படும் தொகையில் நீங்கள் கடன் பெற்று, நீங்கள் முன்பு வாங்கியுள்ள கடனுக்கு வட்டி கொடுக்கவும் வசதியுண்டு. இத் திட்டத்தின் கீழ், கணக்கு (Account) துவங்கிய ஓராண்டு காலம் முடிவடைந்தபின், சேமித்துள்ள பணத்தில் பாதித் தொகையைக் கடனாகவும் பெறலாம். இதை நீங்கள் திருப்பிக் கட்டத் தேவையில்லை. நீங்கள் விரும்பினால், கடனாகப் பெற்ற தொகையை, முழுவதுமாகவோ அல்லது 5 ரூபாய் மடங்கின் அடிப்படையில் 20 சம தவணைகளிலோ கட்டிவிட்டு, இறுதியில் முழுத்தொகையையும் வட்டியுடன் பெற்றுக் கொள்ளலாம். இதுவும் தங்கள் கடனை அடைக்கச் சுலபமான வழியாகும். இதில் சேர விரும்பினால், தங்கள் மாவட்டத்தில் உள்ள 'மாவட்டச் சேமிப்பு அலுவலர்' அவர்களுடன் அல்லது 'மாவட்ட அமைப்பாளர், தேசிய சேமிப்பு நிறுவனம்' அவர்களுடன் உடன் தொடர்பு கொள்ளுங்கள்.




எங்கள் கிராமம் சுமார் 5,000 மக்கள் தொகை கொண்டது. இவ்வூரில் ஓர் உயர்நிலைப் பள்ளியும், ஆரம்பப் பள்ளியும் உள்ளன. இப்பகுதியில் பலர் வீடு இன்றி மிகவும் துன்பப்படுகின்றோம். ஆகவே, எங்கள் கிராமத்தில் கூட்டுறவு முறையில் அரசு கடன்பெற்று வீடுகட்டப் பெருமுயற்சி எடுத்துள்ளோம். ஆனால், இது சம்பந்தப்பட்ட பல அரசு அலுவலர்களை அணுகி விளக்கம் கேட்டோம். யாரும் சரியான விளக்கம் தரவில்லை. ஆகவே எங்கள் கிராமத்தில் அரசின் கடன்பெற்று வீடு கட்ட முடியுமா ?

—ஆர். சி. கேசவன்,
நத்தம் (அஞ்சல்),
வட ஆர்க்காடு மாவட்டம்.

கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் அமைக்க உங்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணியாற்றும் கூட்டுறவுத் வளர்ச்சி அலுவலர் (Extension Officer Co-operation) அவர்களை அணுகி இதுபற்றிய முழு விவரமும் அறிந்து கொள்வதே நல்லது. அல்லது உங்கள் பகுதி கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகத்திற்குச் சென்று இதுபற்றிய முழு விவரமும் அறியலாம். உறுப்பினர்களைச் சேர்த்து, வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் அமைத்துப் பதிவு செய்து கொண்ட பிறகே, தாங்கள் அரசிடமிருந்து கடன் பெற இயலும்.

பூமிக்கு அடியில் உள்ள தண்ணீரைக் கொண்டுவர வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டம் தமிழக அரசின் ஆய்வில் இருப்பதாக அறிந்தேன். இதை அமைக்க யாரை அணுக வேண்டும் ? எவ்வளவு செலவு ஆகும் ? அந்தக் கிணற்றிலிருந்து எவ்வளவு ஏக்கருக்குத் தண்ணீர் பாய்ச்ச முடியும் என்ற விவரத்தைத் தெரியப்படுத்தவும். கோவை மாவட்டம், அவிநாசி வட்டம், காளம்பாளையம் கிராமத்தில் சுமார் 2½ ஏக்கர் மானாவாரி பூமியில் சிறிய கிணறு தோண்டச் சுமார் ரூபாய் 2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) போதும் என்கிறார்கள். இந்தத் தொகைக்கு வடிமுனைக் குழாய்க் கிணறுகள் ஏற்படுத்த முடியுமா ?

—ஏ. அங்கப்பன்,
7-21-1, பிள்ளையார் கோவில் வீதி,
பங்களா மேடு, மேட்டுப்பாளையம்,
கோவை மாவட்டம்.

அனைத்து நாட்டு வளர்ச்சிக் கழக நிதி உதவியின் மூலமாகத் தமிழ் நாட்டில் 7,000 வடி முனைக் குழாய்கள் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் இத்திட்டம் தஞ்சாவூர், தென்னார்க்காடு, திருச்சி மாவட்டங்களில் தான் செயல்படுகிறது. ஏனெனில், மணற்பாங்கான பகுதிகளில் மட்டுமே வடிமுனைக் குழாய் அமைக்க முடியும். நிலத்தின் அடிமட்டம் பாறையாகவோ கல்லாகவோ இருக்குமிடங்களில் வடிமுனைக் குழாய் அமைக்க முடியாது. வடிமுனைக் குழாய் அமைக்க விரும்புகின்றவர்கள், அந்தந்தப் பகுதியின் துணை வேளாண்மைப் பொறியாளரை அணுகுதல் வேண்டும். வடிமுனைக் குழாய்க் கிணறு அமைத்து மோட்டார் அமைத்துத் தண்ணீர் இறைக்க, இடத்திற்கும் கருவிக்கும் ஏற்ப ரூபாய் 3,000 முதல் ரூபாய் 4,500 வரை செலவாகக் கூடும். ஒரு வடிமுனைக் குழாய் மூலம் 3 முதல் 4 ஏக்கருக்குப் பாசனமளிக்க முடியும்.

கோவை மாவட்டம், அவிநாசி வட்டம், காளம்பாளையம் கிராமத்தில் வடிமுனைக் குழாய் அமைக்க முடியாது என நினைக்கின்றோம். ஏனெனில் அப்பகுதியில், நிலத்தின் அடியில் கல் இருக்கும். தங்கள் பகுதியில் ரூபாய் 2,000 செலவு செய்து வடிமுனைக் குழாய் அமைக்க முடியாது என நம்புகின்றோம். உங்கள் பகுதிக்குக் கிணறு அல்லது குழாய்க் கிணறு அமைப்பதே சிறந்தது. இது பற்றி உங்கள் பகுதி உதவி "வேளாண்மைப் பொறியாளர் ஆலோசனையைப் பெறுவதே நல்லது. —ஆர். எம்.




பழக்கத்தில் உள்ள டிராக்டர்களில்* மும்முனை இணைப்பும் (Three point linkage), இணைப்புக் கருவிகளை மேலே உயர்த்தவும், தாங்கிப் பிடிக்கவும், தாழ்த்தவும் பயன்படும் நீர் அழுத்தச் சாதனமும் (Hydraulic ram) பொருத்தப்பட்டுள்ளன. இம்முறையில் உள்ள குறைபாடுகள் இரண்டு. அவை சிக்கலான அமைப்பும், 2 அல்லது அதிகமான கட்டுப்பாடு 'லீவர்'களைப் பயன்படுத்துவதில் டிராக்டர் ஓட்டுகின்றவருக்கு ஏற்படும் சிரமமுமாகும்.

உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட 'ஸ்வராஜ்' டிராக்டரில் ஒரு புதிய எளிய நீரழுத்த முறை (Hydraulic System) இணைக்கப்பட்டுள்ளது. இதனால் தனித்து இயங்கும் ஒரு லீவரின் செயல் திறன் ஆழத்தைத் திறமையாகக் கட்டுப்படுத்த இயலும். இப்புதிய முறையில், புதிய வகைக் கட்டுப்பாடு வால்வு, கூட்டு இணைப்பு, பம்புடன் கூடிய திரும்பத் திரும்ப நிரப்பிக் கொள்ளும் தேவையான பொறியியல் அமைப்பு ஆகியவை அடங்கியுள்ளன.

இந்தத் தனியொரு லீவரில் உள்ள தானாகவே ஆழம் மற்றும் நிலையில் நிறுத்தும் கட்டுப்பாடு முறை, சாகுபடி வேலைக்கும், குறிப்பாகச் சிறுவயல்களின் மண் நிலைக்கும் ஏற்றதாக 'ஸ்வராஜ்' டிராக்டரின் திறனை மேம்படுத்தியுள்ளது.

இப்புதிய டிராக்டரை வணிக முறையில் உற்பத்தி செய்ய, பஞ்சாப் மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகத்திற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய முயற்சியைப் பாராட்டும் முகத்தான் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் வாரியம் துர்காபூரைச் சார்ந்த திருவாளர்கள் சர்வஸ்ரீ சந்திர மோகன், ஜி. எஸ். ரிகால், பி. எஸ். தேவ்கன் ஆகிய மூவருக்கும் சேர்த்து ரூபாய் 1,500 பரிசு வழங்கியுள்ளது.



# ஆதரவற்றவர்க்கெல்லாம்...

டி.கே.டி.துரைராசன்

''மணி பத்து ஆகப்போகுது; எல்லாரும் படுங்க. பேசாமெ படுங்க!''—காவலாளி சின்னையாவின் குரல் அந்தச் சிறு கட்டடம் முழுவதும் எதிரொலித்தது.

எல்லாரும் பேசாமல்தான் படுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் வழக்கமாக அப்படி ஒரு குரல் கொடுப்பது அவருக்குப் பழக்கமாகி விட்டது. இன்று நேற்று, எத்தனை ஆண்டுகள் அவருக்கு இது 'சர்வீஸ்!'

நீண்ட அந்த வராந்தாவின் இரு புறங்களிலும் சிறிது சிறிதாகக் கட்டப்பட்டிருந்த பத்து அறைகளுக்குள்ளே— ஒவ்வொரு அறையிலும் ஒரு சிம்னி விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அந்த விளக்கு சிந்திய மங்கலான ஒளியில் ஒவ்வொரு அறையிலும் சிறுவர்கள் படுத்திருப்பது அரைகுறையாகத் தெரிந்தது.

ஒவ்வொரு அறையின் திறந்த ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டு வந்த சின்னையா, வராந்தாவில் ஒரு கோடியில் இருந்த பெஞ்சின்மேல் அமர்ந்து, வெற்றிலைச் சுருளை அவிழ்த்த போது—

ஏதோ ஓர் அறையிலிருந்து பேச்சுக்குரல் கேட்டது. யார் பேசுகிறார்கள் என்று அவருக்குத் தெரியும்.

''டேய் சோமு! உன்னோடெ பெரிய தொந்தரவாப் போச்சுடா.. பேசாமெ படுக்க மாட்டே... எப்பப் பார்த்தாலும் 'தொணதொண'ன்னு எதையாவது பேசிக்கிட்டே இருக்கியே!'' என்று குரல் கொடுத்தபடியே கொட்டைப் பாக்கு ஒன்றினை எடுத்துப் பல்லிடுக்குகளில் வைத்துக் கடித்தார்.

''தூக்கம் வரமாட்டேங்குது!'' என்று குரல் வந்தது. குரல் கொடுத்தவன் சோமு தான்.

''கண்ணை மூடிக்கிட்டுப் படுத்துக் கிட. தூக்கம் தன்னாலே வரும்..''

''நான் கண்ணை மூடிக்கிட்டுத் தான் இருக்கேன். ஆனா இந்த மணி தான் தாங்காம அழுதுக்கிட்டிருக்கான்'' என்று பதிலுக்குப் பதில் பேசினான் சோமு.

''என்னடா பெரிய தொந்தரவாப் போச்சி .. ரெண்டு பேரும் இங்கே எந்திரிச்சி வாங்கடா........'' என்று கூறியபடியே எழுந்துபோய், அந்த அறைக்கதவின் வெளித் தாழ்ப்பாளைத் திறந்து விட்டார் சின்னையா.

சோமு, மணி இரண்டு பேரும் வெளியில் வந்தார்கள். இருவரும் சிறுவர்கள். பன்னிரண்டு பதின்மூன்று வயதுக்கு மேலிராது. மணியின் கண்கள் கலங்கியிருக்க, சோமு உற்சாகமாக இருந்தான்.

''வாங்கடா இப்படி...'' என்று பெஞ்சில் போய் அமர்ந்தார் சின்னையா. சிறுவர்கள் இருவரும் அவருக்கு எதிரில் கீழே அமர்ந்தார்கள்.

''டேய் மணி.....ஏண்டா அழுவுறே? அ;நான் உங்க அப்பா அம்மாவுக்குத் தகவல் கொடுத்தாச்சி..........நாளை மறுநாள் வந்துருவாங்கடா...... அழாமே இருடா'' என்று ஆறுதல் கூறினார் சின்னையா.

''அவங்க எங்கே வராமல் இருந்துடுவாங்களோன்னு தான் மணி அழுவுறான். இருந்தாலும் இவங்க அப்பா அம்மாவுக்கு இவன் மேலே அன்பே இல்லை. ரொம்ப மோசம்'' என்றான் சோமு மணிக்காக வக்காலத்து வாங்கிக் கொண்டு!

மணிக்குக் கோபம் வந்துவிட்டது. ''டேய்......பேசாமெ இருடா........எங்க அப்பா அம்மாவைப் பற்றி எதுவும் சொல்லாதே! தப்புப் பண்ணினவன் நானு....'' என்றான் மணி.

அவன் செய்த தவறு என்ன?

ளிக்குப் போகாமல் கோலி விளையாடிக்கொண்டிருந்தான். அவன் அப்பா அடித்து விட்டார். அந்தக் கோபத்தில் தன்னுடைய சொந்தக் கிராமத்தை விட்டுப் பட்டணத்துக்கு ஓடி வந்து விட்டான். பட்டணத்தில் கண்ட இடங்களில் கண்டபடி சுற்றிக் கொண்டிருந்த அவனைப் போலீஸார் பார்த்துச் சிறுவர் பாதுகாப்பு விடுதியில் கொண்டு வந்து சேர்த்து விட்டார்கள்.

காவலாளி சின்னையனுக்கு இந்த விவரங்கள் எல்லாம் தெரியும். மணியிடம் அவர் பரிவோடு கேட்டார்;

''திரும்ப ஊருக்குப் போனதுக்கு அப்புறம் மறுபடியும் பள்ளிக்கூடம் போகாமல் கோலி விளையாடுவியா?''

''மாட்டேன்'' என்று தலை அசைத்தான் மணி.

''அதுதான் நல்ல பையனுக்கு அழகு. அப்புறம் ஏன் அழறே?''

''அப்பா மறுபடியும் அடிப்பாரே....'' என்று தேம்பினான் மணி.

''அடிச்சா என்ன? அப்பா தானே அடிக்கிறார்......! நீ ஒன்னும் கவலைப்படாதே..! உங்க அப்பாவுக்கு நான் சமாதானம் சொல்றேன்'' என்றார் சின்னையா.

சோமு குறுக்கிட்டான். ''அது தான் நடக்காது தாத்தா. நிச்சயமா அவனுடைய அப்பா வரவே மாட்டார். ஏன்னா இவன் மேலே அவங்க அப்பாவுக்கு அன்பே இல்லை. அப்படி இருந்தா கோலி விளையாடினதுக்காக அடிப்பாரா? எங்க அப்பாவோ, அடிக்க மாட்டார்; இனிமேலே இந்த மாதிரியெல்லாம் செய்யாதேன்னு சாந்தமா சொல்வார்'' என்றான்.

சின்னையாவுக்கு எரிச்சலாக சமாதானப்படுத்துகிறோம் இவன் சீண்டி விடுகிறானே என்று. அந்த எரிச்சலில்—

''உங்க அப்பா மட்டும் உன் மேலே அன்பாஇருப்பாராக்கும்?'' என்று கேட்டார்.

''சந்தேகமென்ன? என்மேலே எங்க அப்பாவுக்கு ஒரே உசிரு. 'நான் பள்ளிக்கூடம் போகலேப்பா'ன்னு சொன்னா 'வேண்டாண்டா கண்ணு'ன்னு சொல்வார். சினிமாவுக்குப் போறதுக்கு ஒரு ரூபா கேட்டா, ரெண்டு ரூபா கொடுப்பார். வாரத்துக்கு ஒரு தடவை புதுச் சட்டையும், நிஜாரும் வாங்கித் தருவாரு. எங்க அம்மாவும் அப்படித்தான். ஏன்னா எங்க அம்மா அப்பாவுக்கு நான் ஒரே பிள்ளை'' என்று அடுக்கிக் கொண்டே போனான் சோமு.

அவன் சொல்வதையே திறந்த வாய் மூடாமல் கேட்டுக் கொண்டிருந்தான் மணி. தன்னுடைய அப்பா அம்மா இல்லையே என்ற ஏக்கம் அவன் முகத்தில் நிழலாடுவதைச் சின்னையா பார்த்துவிட்டார். உடனே ''இவ்வளவு அன்பா இருக்கிற அப்பா அம்மாவை விட்டுவிட்டு நீ ஏண்டா ஓடி வந்துட்டே?'' என்று சோமுவிடம் கேட்டார்.

''ஒரு நாள் அவர் சட்டைப் பையிலிருந்து இருபது ரூபாயைத் திருடிட்டேன். இந்தக் கைதானே திருடினதுன்னு சொல்லி, என் கையை ஒரு கிள்ளுக் கிள்ளினாரு; அவ்வளவுதான்! எனக்குக் கோபம் வந்திடுச்சு. ஓடி வந்துட்டேன். பாபம் இந்தப் பத்துப் பதினைஞ்சு நாளா என்னைப் பார்க்காமே எவ்வளவு கஷ்டப் பட்டாரோ? எங்கெங்கே தேடினாரோ?'' என்று சொல்லிக் கொண்டு வந்த சோமு, ''தாத்தா நீங்க வேணுமின்னா பாருங்களேன்! நாளைக்குக் காலையிலே எங்க அப்பா என்னைக் கூட்டிட்டுப்போக வருவாரில்லே என்னைப் பார்த்ததும் அழ மாட்டார். அப்படியே கட்டிக்கிட்டு முத்தம் கொடுப்பார்'' என்று கூறிய பொழுது—

''சரி..சரி..ரெண்டு பேரும் போய்த் தூங்குங்க.........'' என்று அவர்கள் இருவரையும் கொண்டு வந்து அறைக்குள் விட்டு வெளித்தாழ்ப்பாள் போட்டார் சின்னையா.

அந்தச் சிறுவர் பாதுகாப்பு விடுதி மீண்டும் அமைதியில் ஆழ்ந்தது.

* * * *

மறுநாள் காலை.

பத்து மணி இருக்கும். சிறுவர்களின் பேச்சும், அரட்டையும், கூச்சலுமாக அந்தப் பாதுகாப்பு விடுதிக் கட்டடம் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது.

ஆனால் இந்த அமர்க்களம் ஆரவாரம் எதிலும் கலந்து கொள்ளாமல் அமைதியாக இருந்தான் மணி.

அவன் இங்கே இருக்கிற விவரம் அவனுடைய தந்தைக்குத் தெரிவிக்கப்பட்டு நான்கைந்து நாட்கள் ஆகி விட்டன. நேற்றே அவர் வந்து விடுவார் என்று தான் அனைவரும் எதிர் பார்த்தார்கள். இன்றும் பத்து மணி வரை ஆகி விட்டது. இன்னும் காணோம்.

மணிக்குப் பயம்—ஒரு வேளை அவர் வராமல் இருந்து விடுவாரோ? அப்படியே வந்தாலும் கோபத்தில் அடி அடி என்று அடித்து விடுவாரோ என்று.

ஆனால் சோமு இந்தப் பயமோ கவலையோ இல்லாமல் உற்சாகமாக இருந்தான்.

இந்த இரண்டு பேரையும் பார்த்துப் பார்த்துத் தமக்குள் பெருமூச்சுவிட்டுக் கொண்டார் காவலாளி சின்னையா.

'தன் சிறிய தவற்றை உணர்ந்து வருந்தும் மணி தன்னுடைய பெரிய தவற்றைப் பற்றிக் கவலையே படாத சோமு... அப்பப்பா! இந்தச் சிறுவர்களின் மனப்பாங்குதான் எவ்வளவு விசித்திரமாக இருக்கிறது!'



இப்படி அவர் நினைத்துக் கொண்டிருந்த பொழுது, காம்பவுண்டுக்குள் வந்து நுழைந்த ஒரு டாக்சியிலிருந்து நடுத்தர வயதுள்ள ஒருவர் இறங்கினார். அவர் முகச்சாயலிலிருந்து மணியின் தந்தையாக இருக்குமோ என்று யூகித்தார் சின்னையா.

அவர் யூகம் சரிதான். மணியின் தந்தைதான் அவர்.

தம் மகனைப் பார்த்ததும் அவர் கண்கள் கலங்கிவிட்டன. ஆரத்தழுவிக் கொண்டார்.

''ஐயா....நீங்க எங்கே அடிச்சிடுவீங்களோன்னு ஒங்க பையன் பயந்துக்கிட்டே இருந்தான்.. ஏதோ சின்னப்பையன்..தெரியாத்தனமா..''என்று சின்னையா சொல்லி முடிப்பதற்குள்—

''தவறு என் மேலே தானுங்க. பள்ளிக்கூடத்துக்குப் போகாமெ அவன் கோலி விளையாடிக்கிட்டு

இருந்ததுக்காக நான் அவனை அப்படி அடிச்சிருக்கக்கூடாது..'' என்றார் மணியின் தந்தை.

''அப்பாடா!'' என்று நிம்மதியாகி விட்டது சின்னையாவுக்கு. அடுத்த ஒரு மணி நேரத்தில் மணியை, அவனுடைய தந்தை அழைத்துக் கொண்டு போன பிறகு, சின்னையாவின் கவனம் சோமுவின் பக்கம் திரும்பியது. 'இன்னும் இவனுடைய பெற்றோர்கள் வரவில்லையே' என்று அவர் யோசித்துக் கொண்டிருந்த பொழுது, சிறுவர் பாதுகாப்பு விடுதி அலுவலகத்தைச் சேர்ந்த கிளார்க் ஒருவர் சோமுவைத் தேடிக்கொண்டு வந்தார்.

''டேய் சோமு..நீ கொடுத்த உங்க ஊர் அட்ரஸ்லே உங்க அப்பா-அம்மா, யாரும் இல்லேன்னு லெட்டர் திரும்பி வந்திருக்கே..கரெக்ட் அட்ரஸ் என்னடா?'' என்று கேட்டார்.

சோமு பதில் பேசாமல் நின்றான். சின்னையாவுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

''என்னடா ஊமையாட்டம் நிக்கிறே? உங்க அப்பா, அம்மா எங்கேடா இருக்காங்க?'' என்று சற்றுக் கோபமாகக் கேட்டார் அந்தக் கிளார்க்.

சோமு தலையைக் குனிந்து கொண்டான். அப்படிக் குனிந்தபடியே ''எனக்கு அப்பா-அம்மா கிடையாது சார்!..அவங்க யாருன்னு கூட எனக்குத் தெரியாது சார்!....யாருமே இல்லாத அனாதை சார் நான்!'' என்றான் குரல் தழுதழுக்க.

சின்னையா விக்கித்துப் போனார்.

''அப்படின்னா நீ கொடுத்த அட்ரஸ்?'' என்று கேட்டார் கிளார்க்.

''பொய் அட்ரஸ் சார். எல்லாப் பசங்களும் அவங்க அவங்க அப்பா அம்மா அட்ரஸ் கொடுக்கவுமே நானும் ஒரு அட்ரஸைச் சொன்னேன். நான் அனாதை சார்.:நான் அனாதை சார்..'' என்று அழத்தொடங்கிவிட்டான்.

மறு வார்த்தை பேசாமல் கிளார்க் போய்விட்டார்.

சின்னையாவுக்கோ சோமுவைப் பார்க்கப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

தாய், தந்தை யாரென்றே தெரியாத ஒரு சிறுவன். அந்தத் தாய் தந்தையின் அன்புக்காக ஏங்கும் ஏக்கத்தை அவரால் புரிந்துகொள்ள முடிந்தது. அந்த ஏக்கத்தை மறைப்பதற்காகத் தான் அவன் இப்படியெல்லாம் பொய் சொன்னானோ?

அழுது கொண்டிருந்த சோமுவிடம் நெருங்கினார் சின்னையா.

''அழாதேடா சோமு! உன்னைப் போன்ற நூற்றுக்கணக்கான சிறுவர்களுக்கு அப்பாவாகவும்-அம்மாவாகவும் இருந்து வளர்க்கிறதுக்கு அரசாங்கம் இருக்கு...நீ ஒன்றும் கவலைப்படாதே. இந்தப் பாதுகாப்பு விடுதியிலேயே நீ தொடர்ந்து இருந்து படிக்கலாம். பெரிய பெரிய வேலைக்குப் போகலாம். கவலைப்படாமே வா..'' என்று சோமுவை, அந்த விடுதியின் கண்காணிப்பாளர் அறைக்கு அழைத்துக் கொண்டு நடந்தார் சின்னையா.


## காலக் கண்ணாடி

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்




# வெண்பாப் போட்டி



பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்: திரு ப. செல்லபாண்டியன், ஊர் நல உதவியாளர், ஊர் வளர்ச்சிப் பயிற்சி நிலயம், கிருட்டிணகிரி.

## 45. சிக்கலைகள் கற்போம் சிறந்து

பொம்மைக் கரகாட்டம், பொய்க்காற் பரியாட்டம்,
வெம்மைப் புலியாட்டம் மேவுகலை—செம்மையுறும்
அக்கறையால் வண்ணமயி லாட்டமென ஊர்வளர்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.

—ப. செல்லபாண்டியன், கிருட்டிணகிரி.

மழுப்பும் வரைவின் மகளிரை நாடி
வழுக்கியும் நன்மனை வாழ்க்கைச்—செழுந்துணைவர்
எக்காலும் செல்லா திருந்திடநா மும்கவர்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.

—சு. மாரியம்மாள், முதலிப்பட்டி.

தாழ்வுணர்ச்சி போக்கித் தடைக்கல்லைத் தூளாக்கிப்
பாழ்வெளியைக் காட்டாமல் பண்புடனே—வாழ்விலெச்
சிக்கலையும் வேரறுக்கும் சீர்திருத்தும் பேரைமெச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.

—புலவர் மு. சிக்கந்தர், கோரிக்கடவு.

பஞ்சம் அறுப்போம் பசிநோய் அகற்றிடுவோம்
விஞ்சும் பயிரில் விளைநிலமே—மிஞ்சிநிற்கும்
அக்கலையைக் கற்போம் அழகுபசு மைப்புரட்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.

—சிவ. கிருட்டிணன், கணியூர்.

சித்தர் மருத்துவமும் சீரான பொறியியலும்
சித்திரமும் கப்பலைச் செய்தொழிலும்—கைத்தொழில்சிற்
பக்கலையும் போர்த்தொழிலும் பைந்தமிழர் தம்சுதே
சிக்கலைகள் கற்போம் சிறந்து.

—சாவித்திரி, திருச்சென்னன்பூண்டி.

நாட்டின் நலிவகற்றி நற்றமிழின் சீர்காத்தே
ஓட்டிப் பகைவென் றுயர்ந்ததுபோல்—கூட்டுறவால்
எக்காலும் ஏடுபுகழ் ஏற்றந் தரும்நல்லாட்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.

—சண்முக. தாயுமானவன், பொன்மலை.

மாற்றான் வலிவுடனே நம்வலிவும் மிக்குணர்ந்து,
தூற்றும் பதடிகளைத் தூளாக்க—ஏற்றமுடன்
சிக்கலெலாம் நாமறுத்துச் செந்தமிழின் நற்குறளாட்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.

—புலவர் எழில்வேலன், கோபி.

பாசக் கலையறிந்தோம் ; பண்புக் கலைதேர்ந்தோம்!
நேசக் கலையில் நெடிதுயர்ந்தோம் !—வீசுபுகழ்
அக்கலைகள் போலே அணுவியல், விண்ணாராய்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.

—புலவர். ச. மருதமுத்து, உடுமலை.

ஆய்வோம் ! அகழ்ந்தெடுப்போம் அந்நாளின் வண்ணங்கள்!
ஓய்வோம் எனவுரையோம் ! ஒன்றுபட்டே—பாய்ந்தெழுவோம்!
முக்காலும் மாயாத மாட்சி மிகுகண்காட்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.

—இசைகொண்டான், சம்பு குட்டப்பட்டி.

கொல்வறுமை கூடுபசி குன்றாத நோயுடைமை
கல்லாமை தொல்மூடக் கற்பனைகள்—பல்வகைசேர்
சிக்கல் அறுத்துச் செம்மைநிலை ஆக்குபுரட்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.

—அமரன், அருப்புக்கோட்டை.

# வெண்பாப் போட்டி

ஒருபிடி சோறும் உடல்சாய்க்கப் பாயும்
கருவிழியாள் பேசிநிதம் காதல் ;—தருபவனும்
விக்கித்து வீழ்வரைக்கும் வேண்டும்நாம் நல்எழுச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—ந. செனார்த்தனன், அரக்கோணம்.

மக்கள் இடரகல மாநிலத்தில் வாழ்வுயர
ஒக்க உடம்பும் உறுதிபெற ;—மிக்கநலம்
தக்க முறையில் தழைக்கச் சகலபயிற்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—இல. இராசேந்திரன், கணியூர்.

காட்டாற்றைத் தேக்கிக் கடுமேட்டைச் சீராக்கி
வாட்டும் பசிப்பிணி மாய்ந்தொழியக்—காட்டுவெளிப்
பக்கமெல்லாம் பூக்கும் பசுமை மிகுபுரட்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—க. ச. சூசை, சம்புகுட்டப்பட்டி.

காவியம் யாத்தல் களித்து நடம்புரிதல்
ஓவியம் தீட்டல் உயர்கலையாம்—பூவிழியே
தக்க முறையில் தவறுமல் அவ்வுணர்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—பெ. தியாகராசன், குன்னம்.

காலத்தின் கோலத்தைக் காட்டுகின்ற வானம்போல்
ஞாலத்தின் மாற்றமன்றே நாகரிகம் !—சீலத்தின்
சிக்கல் தனைநீக்கும் சீரார் மறுமலர்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—கலாவதி காசிநாதன், அமிர்தராயன் கோட்டை.

பஞ்சத்தை, நோயைப் படுதுயரைப் போக்கத்தான்
கொஞ்சமோ ஏற்றும் கொடுந்துயரை—வஞ்சனையாய்ச்
சிக்கலைச் செய்யும் சிறுமதியார் வீழச்சூழ்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—சி. ப. அரங்கநாதன், சென்னை-34.

உள்ளம் ஒளியேந்தி ஒப்பரிய பண்பேந்திக்
கள்ளமில் அன்புக் கவினேந்தி—ஒள்ளிடையே
சிக்கலை நீக்கச் செழித்த மணிமாட்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—புலவர் முத்து வேங்கடேசன், திருமயம்.

சித்திரம் சிற்பம் செழிக்கும்நற் கைத்தொழில்கள்
வித்திடும்விஞ் ஞான விரிகலைகள்—இத்தரையின்
சிக்கலைத் தீர்த்திடும் சீரார் கவின்கவர்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—பி. சி. அசனல்லி, அரக்கோணம்.

கலைமலிந் தோங்குகின்ற கன்னித்தமிழ் நாட்டில்
சிலையுயிர் பெற்றுச் சிறக்கும்—விலையில்லா
அக்கலையை ஏற்ற அறிவியலின் நல்வளர்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—பாரதி சங்கு, அமராவதி நகர்.

பண்டைத் திருநாளில் பண்பட்ட நுண்கலைகள்
கண்டார்நம் முன்னோர் களித்திடவே—எண்டிசைவாழ்
மக்கள் கலைப்பாலை மாந்தவினி நல்வளர்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—சி. புண்ணியகோடி, பிள்ளையார் பாளையம்.

மக்கள் நலம்பெருக மாப்பிணிகள் அற்றொழியத்
தக்க வளஞ்சிறக்கத் தாளுய்ந்தே—எக்காலும்
பக்கத்து நாட்டவரும் பார்த்துவியக் கும்வளர்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—திருமாலன்பன், செல்லம்பட்டு.

எக்காலும் போற்றிவரும் ஏற்றம் மிகவுடைய
மிக்க வணிகத்தால் மேம்பட்டு ;—மக்கள்நாம்
தக்காராய் வாழ்ந்து தரணி புகழுமுணர்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—இளங்கோவன், பி.ஏ., பி. அழகாபுரி.

இல்லையெனும் சொல்லேயிங் கில்லை எனவாக
ஒல்லும் வகையெலாம் நன்குழைக்க—எல்லாரும்
தக்கார்தம் தாள்பணிந்து தக்க தொழிற்பயிற்
சிக்கலைகள் கற்போம் சிறந்து!
—மா. இல. குப்புசாமி, பி. எஸ்.சி., மாரண்ட அள்ளி.

ஒப்பில் தமிழிசையும் ஓவியமும் நாட்டியமும்
செப்பரிய இன்பம் சேர்ப்பதனுல்—இப்புவியில்
மக்கள் மனத்துயரை மாய்த்திடவே வாழ்வுயர்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—து. ம. இராமசாமி, துடியலூர்.

# வெண்பாப் போட்டி

இக்கால விஞ்ஞானம் ஏற்றமாய் நம்நாட்டில்
மிக்கபுகழ் கூட்டிடவே மேலோங்கப்—பக்குவமாய்
தக்கபடி நற்றமிழில் சால்பாய் புகுத்தவளர்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—வெற்றிவேல் வேங்கடேசன், சேலம்-9.

கண்டு களிப்பதற்கும் காதாரக் கேட்பதற்கும்
உண்டு சுவைப்பதற்கும் உள்ளார—அண்டுதற்கும்
எக்கலைகள் கண்டிடினும் ஈடற்ற பெண்ணின்மாட்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—புலவர் அ. வே. காசிநாதன், கோடாலிக் கருப்பூர்.

ஏர்மக்கள் வாழ்விலோர் ஏற்றம் எழுந்திடவும்
ஊர்மக்கள் தத்தம் உணர்விற்கும்—பாருலகின்
பக்கமெலாம் செல்வோம் ! பசுமையில் நற்புரட்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—வே. இளம்பரிதி, தாரமங்கலம்.

மூடக் கலைவளர்த்து முன்னேற்றம் நாடாது
வாடலேன் ? சோம்பி மடிவதேன்—நாடதனில்
மிக்க வளம்பெருக்க வேண்டித் தொழிற்பயிற்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—ப. சிவலிங்கம், ஆலப்பட்டி.

நாட்டு வளம்பெருக்க நற்றொழில் மேலோங்க
நீட்டும் வளத்திட்டம் சீரடைய—நாட்டமுடன்
தக்க தமிழில் தரமாய்த் தொழில்வளர்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—பொன். இளங்கோ, தூத்துக்குடி-1.

பண்ணும் பரதமுடன் பாரோங் கறிவியலும்
நண்ணுங் கலைநூறு நாட்டகத்தே—வண்ணமுறும்
அக்கலைகள் உண்டாக்கு மச்சாணி யாமறிவாட்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—மு. பெருமாள், கொனத்துப்பாளையம்.

அறிவியலின் ஆற்றலால் அம்புலியைத் தொட்டுப்
பொறியொடுவான் போய்க்கோள்கா ணிந்நாள்—அறிவுநிறை
இக்கெட்டும் போற்றிடுஞ் செல்வமாம் நற்புகழ்மாட்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—மு. ப. சங்கரலிங்கம், வடுகபாளையம்.

மாற்றார் கருத்தினிலும் மாண்பாய தானுற்றிப்
போற்றார் புகழப் பொதுத்தொண்டை—ஏற்றென்றும்
மக்கள் மனமகிழ மல்கும்நற் பண்புவளர்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—புலவர் அ. ஆறுமுகம், எம்.ஏ., பி.டி., திருச்சி-20.

செந்தமிழர் திக்கெட்டும் சென்று, திறமான
நந்தமிழில் நுண்கலைகள் நன்றுணர்ந்து—சொந்தமென
அக்கலைகள் நம்நாட்டில் நட்டபின்னர், பல்லாராய்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—புலவர் பா. மாலிகான், வெங்கடசமுத்திரம்.

அறம்சூழ அன்புசூழ ஆற்றல்கள் சூழத்
திறம்சூழத் தீந்தமிழ் சூழ—மறம்சூழ
மக்கட் பிறவிப் பயன்சூழ மாணெழுச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—க. கிருட்டிணன், வாளவாடி.

விண்ணேறிப் பாய்ந்தாங்கு வெண்ணிலவைத் தொட்டதெலாம்
மண்ணில் உழவின்றி மாளுவதோ ?—எண்ணிடுவீர்
எக்கலையும் ஏற்றமுற ஈங்குவேளாண் மைப்பயிற்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—சீனி. சௌந்தராசன், திருக்கோயில் பத்து.

சிற்பக் கலைக்கொரு தென்மல்லை ; சீரார்ந்த
பொற்புறு மாளிகைக்கோர் தாசுமகால் ;—கற்குகை
மிக்கோ வியஞ்சேர் அசந்தா எனும்புகழ்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—சோ. ச. யுவராசன், அசக்கோணம்.

காண்பதனை யெல்லாம் கருத்தெனவே கைக்கொண்டு
சாண்வயிற்றுக் காகச் சலிக்காமல்—ஆண்மையுடன்
எக்காலும் தம்மக்கள் வாழ்தற்கு மேழிவளர்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—புலவர் கி. முனிரத்தினம், செஞ்சி.

கண்ணில் அருளாட்சி ; காதலிலே கண்ணூட்சி ;
எண்ணத்தில் தூய எழிலாட்சி—மண்ணுலகில்
மிக்க புகழாட்சி ; மேற்சொன்ன பல்வேறுட்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.
—சி. சௌ. கருப்பன், திருச்சி-15.

# வெண்பாப் போட்டி

ஐ. ஆர். வகையால் அதிகந்தான் நெல்விளைச்சல்
பொய்யார் புகல்வார்? புதுமைநாம்—செய்வோமே
மிக்கவளம் கண்டிடவே மேலாம் பசும்புரட்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.

—எஸ். சுந்தரம், வெண்பாவூர்.

மேனாட்டார் ஆட்டமேன்? வேற்றுமொழிப் பாட்டுமேன்?
மீன்நாளும் வேல்விழியின் மென்பாவை—தானாடும்
மிக்கபுகழ் நற் 'பரதம்' 'வில்பாட்டு' போன்றசுதே
சிக்கலைகள் கற்போம் சிறந்து.

—சி. மு. சிவலிங்கம், மதுரை-21.

வண்ணமலர்ப் பட்டால் வகைவகையாய்க் கைத்தறியில்
கண்கவரு மாடை கலைநெய்தே—மண்ணகத்து
மக்களது மானத்தை மாண்புடனே காக்குங்காஞ்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.

—எழில்வேந்தன், சென்னை-28.

வெண்ணிலவிற் சென்று விளையாடக் கற்றவரே!
மண்ணுலகில் போர்வெறியை மாய்த்திடுவோம்!—எந்நாளும்
சிக்கல் தவிர்த்துச் சிறந்தோங்கப் பண்புவளர்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.

—ம. சக்குபாய், உடுமலைப்பேட்டை.

பண்ணும் பரதமும்போல் பைந்தமிழர் நுண்கலைகள்
இன்னும் பலவிருக்க இந்நிலத்தார்—அந்நியத்தில்
அக்கரையைக் காட்டல் அழகாமோ? நம்பழம்மாட்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.

—மு. இராமசாமி, மதுரை-21.

விண்ணிற் பறப்போம் விரிகடலைத் தாண்டிடுவோம்
எண்ணற்ற எந்திரங்கள் செய்திடுவோம்—நுண்ணறிவால்
எக்கலையும் கற்றோம் எனினும் தொழில்வளர்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.

—வை. நடராசன், திருமலைராயன்பட்டினம்.

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஓயாமல் கற்றே உயர்வடைவோம்!—தாய்தந்தை
செக்கிழுத்துச் சேர்த்தாலும் சேர்க்கின்ற காசைவீ
சிக்கலைகள் கற்போம் சிறந்து.

—சிங்காரம், கீழ்ச்சிவல்பட்டி.

பசுமைப் புரட்சிசெய்து பஞ்சம் தவிர்ப்போம்;
விசும்பிடை வீதி சமைப்போம்; — பசும்பொற்செல்
வக்கொழிப்பால் சீருயர்வோம்; வாழ்வின் மறுமலர்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.

—சா. கா. சாகுல் அமீது, பி.ஏ., சித்தையன்கோட்டை.

வேலையில்லாத் தீநிலைகள் வீழ்ந்திடவும் நாட்டிடையே
ஆலையெல்லாம் நற்செல்வம் ஆக்கிடவும்,—காளையரே!
மிக்கவிளை வெய்திடவும், மேலுறவும் நற்றொழில்தேர்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.

—ஜெ. மலர்விழி, செந்துறை.

தேக வலிமை திடமான ஊக்கம்நல்
வேகம் எதிலும் வெளிப்படத்—தேகத்தில்
எக்காலும் நோயின் றிருக்க உடற்பயிற்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.

—நாராயணன், மீனாட்சியாபுரம்.

அணுவைத் துளைத்தென்றே ஔவையார் சொன்ன
பனுவல் உடையயாம் பாரில்—மனமுவந்து
அக்கரையும் செல்வோம்! அறிவிய லாராய்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.

—வித்துவான் ஆ. கணபதி, பி.ஏ., சென்னை-15.

சந்திரனில் கால்வைப்போம் தாண்டுவோம் தண்கடலை
எந்திரங்கள் செய்வோம் இனியும்நாம்—தந்திரத்தால்
எக்காலும் பஞ்சம் இலாது தொழில்மலர்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.

—எஸ். சரோசா, திருவாரூர்.

காலை மலர்ந்து கதிரவன் தோன்றுங்கால்
சோலை வெளியெலாம் சொர்ணப்பூ—வேலைதான்
எக்காலும் நாம்காணும் இன்ப இயற்கையாட்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.

—ம. ந. ருத்ரமூர்த்தி, பி.ஏ., பி.டி., இராயக்கோட்டை.

நாடு நலம்பெறுக! நல்லறிஞர் தோன்றிடுக!
தேடும் கலைமகள் செழித்திடுக! — நாடுவோம்
மக்கள் வளவாழ்வை வாரீர்! அறிவுவளர்ச்
சிக்கலைகள் கற்போம் சிறந்து.

—தா. பகவதிஅப்பன், யாதவன் புதூர்.

# மாவட்டங்களிலிருந்து....

### வளர்ந்து வரும் ஆமூர்

திருச்சி மாவட்டம் ஆமூர் கிராமம் வளமிக்க நெல் வயல்களால் சூழப் பெற்று வேளாண்மைத் துறையில் வெகுவாக முன்னேறி வருகிறது. நல்ல சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன; பல கிராமங்களோடு இந்த ஊர் இணைக்கப்பட்டுக் குக்கிராமங்கள் உள்பட மின் விளக்குகள் போடப்பட்டுள்ளன. பல்வேறு இடங்களில் குடிநீர்க் கிணறுகள் வாயிலாகவும், 'தானே இயங்கும் பம்பு மூலமும் குடிநீர் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

உழவர்களுக்குக் குறைந்த வட்டிக்குக் கடன் வழங்கும் வகையில், பொறுக்கு விதைகள், இரசாயன உரங்கள், பூச்சி மருந்துகள் தக்க சமயத்தில் கிடைக்கக் கூட்டுறவு வங்கி பேருதவி செய்கிறது. மற்றும் கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கமும், உணவுத் தானியங்களைச் சேகரித்து வைக்க ஒரு கிடங்கும் கட்டப்பட்டுள்ளன.

இவ்வூரின் மத்தியில் ஓர் அழகிய பூங்கா உள்ளது. அங்கே உள்ள தகவல் நிலையத்தில் அறிவு நூல்களும், வார-மாத இதழ்களும் உள்ளன. குக்கிராமங்கள் மற்றும் அரிசனத் தெருக்களில் ஏழு வானொலிக் கட்டடங்கள் உள்ளன.

### மனுநீதி நாள் விழா!

மதுரை மாவட்டம் சின்ன மனூர் ஊராட்சி ஒன்றியத்தில் மக்கள் குறை தீர்க்கும் மனுநீதி நாள் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பந்தல் முகப்பில் பசு ஒன்று ஆராய்ச்சி மணி அடித்து நீதி கேட்பது போன்று மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட படத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் திறந்து வைத்தார்.

பின்னர், ஒவ்வொரு துறை வாரியாக மனுநீதித் திட்டத்தை யொட்டிப் பெறப்பட்ட மனுக்களுக்கு இறுதி நடவடிக்கை அறிக்கையும், பட்டாக்களும் வழங்கப்பட்டன.

* * *

### வேளாண்மை வளர....!

மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அண்மையில் நடைபெற்றுள்ள வளர்ச்சிப் பணிகள் பல. அவற்றுள் சில இவை:

தீவிர வேளாண்மைத் திட்டத்தின் கீழ் உழவர்களுக்கு 15,298 கிலோ விதை நெல்லும் மற்றும் உரமும், உழவுக் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

அக்டோபர்த் திங்களில் சிறு சேமிப்பின் மூலம் ரூ. 38,642 வசூல் செய்யப்பட்டுள்ளது. குடும்பநலத் திட்டம், சமூக நலத் தொண்டு, தீண்டாமை ஒழிப்பு விழா, இளைஞர் அணியின் முதியோர் கல்வி முதலியன சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. பொய்யாக்கரைப் பட்டியில் ரூ. 40,000 செலவில் அமைக்கப்பட்டுள்ள கோழிப் பண்ணைகள் நன்கு இயங்கி வருகின்றன.

* * *

### இராமநாதபுர மாவட்டத்தில்!

**1967** முதல் கடந்த 5 ஆண்டுகளில் இம்மாவட்டத்தில் 93 ஆயிரம் ஏக்கர் நிலம், நிலமற்றோர்க்கு நிலப்பட்டாவாக வழங்கப்பட்டுள்ளது. கடந்த 25 ஆண்டுகளில் வீட்டுமனைப்பட்டா 6,000 பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், கடந்த நான்கே மாதங்களில் 5 ஆயிரத்து 392 பேர்களுக்கு இம்மாவட்டத்தில் வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. சாகுபடிக்கேற்ற நிலத்தினை இம்மாவட்டத்திற்கென இந்த ஆண்டு முழுவதற்கும் நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 8 ஆயிரம் ஏக்கர்களாகும். ஆனால், இதுவரையில் 5 ஆயிரத்து 720 ஏக்கர் நிலங்கள் 3,766 பேர்களுக்குச் சாகுபடிக்காகப் பட்டா செய்யப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்கள் திருமணக் கடன் இம்மாவட்டத்திற்கு இந்த ஆண்டு ரூ. 2 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதில், இதுவரை 22 துறைகளைச் சார்ந்த 113 பேர்களுக்கு ரூ. 1 இலட்சத்து 83 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் புதிய கடன் திட்டத்தின்படி, இம் மாவட்டத்தில் 14 பேர்களுக்கு 49,500 ரூபாய் வழங்கப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மீனவர்களுக்கென மீன் பிடிக்கும் இயந்திரப் படகுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பொதுக் குழுவைச்சார்ந்த 7 பேர்களுக்கும் பயிற்சிக் குழுவினைச் சார்ந்த 8 பேர்களுக்கும் ஒவ்வொன்றும் ரூ. 70,000 ரூ. 85,000 மதிப்புள்ள மீன் பிடி இயந்திரப்படகுகள் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பர்மா, இலங்கை அகதிகள் இராமநாதபுர மாவட்டத்தில் 1,298 குடும்பங்களைச் சார்ந்த 4,634 பேர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இம்மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைச்சாதியினர் நலனுக்காகவும், பின் தங்கிய-மிகவும் பின் தங்கிய வகுப்பினர் நலனுக்காகவும் தக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பதினாறு அறைகளும் இரண்டடுக்கு மாடியும் கொண்ட நவீன வசதி மிக்க 'சுற்றுலா மாளிகை' ஒன்று இராமேசுவரத்தில் ரூ. 6 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கிறது. இந்தச் சுற்றுலா மாளிகை பொதுப் பணித் துறையினரால் விரைவில் கட்டி முடிக்கப்படும்.

* * *

### அரிசன-பழங்குடி மாணவர்க்கு...

சுருக்கெழுத்து, தட்டெழுத்துத் தேர்ச்சி பெற்ற அரிசன-பழங்குடி மாணவர்கள் கிடைப்பது அரிதாக இருப்பதால், இம்மாணவர்களுக்கு இவைகளில் பயிற்சி கொடுக்கத் தமிழக அரசு திட்டம் தீட்டியுள்ளது. 1972–73-ஆம் ஆண்டில் இராமநாதபுர மாவட்டத்தில் இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

தட்டெழுத்தில் 50 மாணவர்களுக்கும், சுருக்கெழுத்தில் 25 மாணவர்களுக்கும் இம்மாவட்டத்தில் பயிற்சி அளிக்கப்படும். அரிசன-பழங்குடி மாணவர்கள், அனுமதிக்கப்பட்ட தட்டெழுத்து சுருக்கெழுத்து நிலையத்தில் சேர்ந்து கொண்டு, மதுரையிலிருக்கும் இராமநாதபுர மாவட்ட நல அலுவலர் அவர்களுக்கு உதவி கோரி விண்ணப்பிக்க வேண்டும்.

இதற்கான செலவுகளைத் தமிழக அரசு ஏற்றுக் கொள்ளும். இரண்டு பாடங்களிலும் ஒரே தடவையில் தேர்ச்சிபெறும் மாணவருக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

# பூசணிக்காய்

பூங்கொடி

பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டை இராயர் என்ெருரு மன்னர் ஆண்டுவந்தார். அவருக்குச் சுதர்மன் என்ற நண்பருண்டு. சுதர்மனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர். மூத்தவன் பெயர் இராமன், இளையவன் பெயர் முத்து.

இராமன் சின்ன வயதிலிருந்தே புத்திக் கூர்மையுள்ளவன். இதனுல் அவனை அனைவரும் போற்றிப் புகழ்ந்தார்கள். புத்தியுள்ளவன் பலவான் அல்லவா ?

ஒரு சமயம் இராயர் அரண்மனையில் ஒரு திருமண விழா நடந்தது. அந்த விழாவுக்கு அவரது நண்பர் சுதர்மனும் வந்திருந்தார். அரசர் சுதர்மனை அழைத்து, "இன்று நமது அரண்மனையில் திருமணமாதலால், இந்த மகிழ்ச்சியான நாளிலே நம்மிடம் அடைபட்டிருக்கும் கைதிகளில் ஒருவனை விடுதலை செய்யலாம் என்று எண்ணியிருக்கிறேன். நீங்கள் தகுதியான ஒருவனை விடுதலை செய்யுங்கள் பார்க்கலாம் " என்ருர்.

சுதர்மனும் சரியென ஒப்புக்கொண்டு தனது மகன் இராமனுடன் சிறைச்சாலைக்குச் சென்ருர். அங்கே தன் மகனை நோக்கி, " இந்தக் கைதிகளில் யாரை நீ விடுவிக்க எண்ணுகிருய் சொல் பார்ப்போம் ? " என்று கேட்டார்.

இராமன், சிறையிலிருந்த ஒவ்வொரு கைதியையும் பார்த்துக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தான்.

" நீ ஏன் சிறையில் இருக்கிருய் ?" என்று ஒரு கைதியைப் பார்த்துக் கேட்டான் இராமன். அதற்கு அவன், "தம்பி ! நான் மிகவும் நல்லவன், என்னை வேண்டுமென்றே சிறையில் அடைத்து விட்டார்கள் !" என்ருன். இன்ெனுருவனைக் கேட்டான். அவன், " தம்பி ! என் மீது உள்ள பொருமையால் இந்தத் தண்டனையைக் கொடுத்து விட்டார்கள் !" என்ருன். இன்ெனுருவனைக் கேட்டதற்கு, " அப்பா ! எனக்குத் தண்டனை கொடுத்த நீதிபதி புத்தியில்லாதவன் !" என்ருன் கோபமாக.

கடைசியாக இராமன் ஒரு கைதியைப் பார்த்து, " நீயும் நல்லவன்தானே ? யோக்கியன் தானே ! " என்று கேட்டான். அதற்கு அவன் 'ஓ' வென அழுது கொண்டு, "தம்பி ! நான் மகாப் பாவி ! நான் செய்த குற்றத்திற்கு என்னைத் தூக்கில் தொங்க விட்டிருக்க வேண்டும். ஆனுல், கருணை மிக்க நம்ம இராசா இந்தத் தண்டனையோடு நிறுத்திக் கொண்டார் ! " என்ருன்.

உடனே இராமன் தன் தந்தையை நோக்கி, " அப்பா ! இவனை விடுதலைசெய்யலாம். இவன்தான் உண்மையானவன். தன் குற்றத்தைத் தன் வாயாலேயே ஒப்புக்கொண்டான். மேலும் தன்னை ஒரு ' பாவி ' என்றும் கூறிக் கொண்டான். ஆகையால் இந்தப் பாவியை அந்த ' நிரபராதிகள் ' இருக்கிற இடத்தில் வைக்க வேண்டாம் ! விடுதலை செய்து விடலாம் ! " என்ருன்.

சுதர்மன் தன் மகனது புத்திசாலித்தனத்தைக் கண்டு மிகவும் மகிழ்ந்தார். அந்தக் கைதியை உடனே விடுதலை செய்ய ஆவன செய்தார்.

இராமனின் புத்திக் கூர்மையைக் கேள்விப்பட்ட இராயர், சிறிது காலத்தில் இராமனையே தம் நீதிபதியாக நியமித்துக் கொண்டார். இதையறிந்த சுதர்மன் " அரசே, இளைஞனுகிய இவன் நீதிபதிக்குத் தகுதி வாய்ந்தவன் அல்லன். ஆகையால் அந்தப் பதவியை அவனுக்குத் தர வேண்டாம் ! " என்று வேண்டிக் கொண்டார். ஆனுல், மன்னரோ பிடிவாதமாக அவனையே நீதிபதியாக நியமித்து விட்டார்.

இராமன் நீதிபதியாக வந்ததிலிருந்து நாட்டில் மேலும் பல குற்றங்கள் குறைந்தன. குற்றவாளிகளுக்குத் தகுந்த தண்டனை அளித்தான் ; வழக்குகளைத் திறமையுடன் நடத்தித் தீர்ப்புக் கூறினுன். இதனுல் இராமனுடைய பெரும் புகழும் பரவின.

ஒரு சமயம் இராமன் வீட்டுக்கு ஒரு வித்துவான் வந்திருந்தார். அவர் மிகுந்த கர்வம் உள்ளவர். யாரையும் மதிக்க மாட்டார். ஒருவர் இராமனைச் சுட்டிக் காட்டி, " இவன் மிகவும் புத்திசாலி " என்று வித்துவானுக்கு அறிமுகப்படுத்தினுர். அதற்கு வித்துவான், "சிறிய வயதில் புத்சாலியாக இருப்பவர்கள் பெரிய வயதில் அசடர்களாக இருப்பார்கள்" என்ருர் கேலியாகச் சிரித்துக்



கொண்டே. உடனே இராமன் "நீங்கள் சிறிய வயதில் புத்திசாலியாக இருந்தீர்கள் போலிருக்கிறது " என்ருன் நறுக்கென்று. இதைக் கேட்டு அங்கிருந்தவர்கள் அனைவரும் 'கொல்' லென்று சிரித்தார்கள். வித்துவானே வெட்கமடைந்து வீடுநோக்கிச்சென்ருர். அன்று முதல் அவர் ஆணவமாகப் பேசுவதை விட்டுவிட்டார்.

ஒருநாள் சுதர்மன் தமது இரண்டு பிள்ளைகளையும் அழைத்து இருவருக்கும் சமமாகப் பணம் கொடுத்தார். " இந்தப் பணத்தைக் கொண்டு வீடு நிறையும்படி செய்ய வேண்டும்; செய்யுங்கள் பார்க்கலாம்! " என்ருர். இருவரும் சரியென்று பணத்துடன் கடைக்குச் சென்றனர்.

இளையவன் முத்து நிறைய வைக்கோலை வாங்கி வந்து வீடு முழுக்க அடைத்து வைத்தான். மூத்தவனே மெழுகு வர்த்தியை வாங்கி வந்து ஒரு அறையில் கொளுத்திவைத்தான். தந்தை வீட்டுக்கு வந்தார். வைக்கோல் இருக்கும் அறையையும், மெழுகுவர்த்தி இருக்கும் அறையையும் மாறிமாறிப் பார்த்தார். மெழுகு வர்த்தி உள்ள அறை அதன் வெளிச்சத்தால், மூலை முடுக்கெல்லாம் ஒளி நிறைந்து இருந்தது. உடனே அவர் இராமனைக் கட்டி முத்தமிட்டார். அவன் புத்திக் கூர்மையைப் பாராட்டினுர். முத்துவின் மடமையை எண்ணி வேதனைப் பட்டார்.

இன்ெனுரு சமயம் ஒரு வேடிக்கை நிகழ்ந்தது. இராமன் வீட்டுக்குப் பின் புறத்தில் ஒரு பெரிய தோட்டம் இருந்தது. அந்தத் தோட்டத்தில் நிறையப் பூக்களும் காய்கறிகளும் இருந்தன. அந்தத் தோட்டத்திற்குச் சுதர்மனின் நண்பர் ஒருவர் வந்தார்.

தோட்டத்தின் ஒரு பக்கத்தில் நிறையப் பூசணிக் காய்கள் காய்த்து இருந்தன. அதில் மிகப் பெரிய பூசணிக்காய் ஒன்று இருந்தது. நண்பருக்கு அந்தப் பூசணிக்காயைக்காட்டி இவ்வளவு பெரிய பூசணிக்காயை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா ? என்று கேட்டான் இராமன். அதற்கு அவர் " இதென்ன ஒரு பெரிசா ; எங்கள் ஊரில் அதோ தெரிகிறதே வைக்கோல் போர், அவ்வளவு பெரிய பூசணிக்காய் இருக்கிறது " என்ருர்.

வந்தவரின் வீண் பெருமையைக் கேட்ட இராமன், அவருக்குத் தக்க பாடம்கற்பிக்க எண்ணினுன். ஒருநாள் அவர் மீண்டும் தோட்டத்திற்கு வந்தார்.

இராமன் ஒரு பெரிய வாய் உடைய பானையைச் செய்து தோட்டத்தில் வைத்திருந்தான். நண்பர் பானையைப் பார்த்து " இவ்வளவு பெரிய பானையை நான் பார்த்ததில்லையே " என்ருர். அதற்கு இராமன் " இது ஒரு பெரிசா ? அதோ தெரிகிறதே குளம் அவ்வளவு பெரிய வாயுடைய பானையும் நான் பார்த்திருக்கிறேனே !" என்ருன். " அவ்வளவு பெரிய வாயுடைய பானை எதற்கு ? அது சமைக்கத்தான் உதவுமா ? பிரயோசனம் இல்லாமல் ஏன் அதைச் செய்தார்கள் ? எல்லாம் வீண் பெருமை" என்று சொல்லி முடிப்பதற்குள் இராமன் குறுக்கிட்டு, " நீங்கள் சொன்னீர்களே, வைக்கோல் போர் அளவு பூசணிக்காய் ; அந்தக் காயை அரிந்து போட்டுச் சமைக்கத்தான் அவ்வளவு பெரிய பானை !" என்று நறுக்கென்று பதில் சொன்னுன்.

நண்பர் வெட்கம் அடைந்து இராமனின் புத்திசாலித்தனத்தை எண்ணி வியந்து அன்று முதல் ஆணவத்தை அறவே விட்டு விட்டார்.



கோவை மாவட்டத்தில் அவினுசி, பல்லடம், திருப்பூர் வட்டங்களில் உரேனியம், தோரியம் போன்ற ரேடியம் கதிரியக்கப் பொருட்களைக் கண்டு பிடிக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். அங்கும், சென்னிமலைப் பகுதியிலும் ரேடியம் கதிரியக்கம் காணப்பட்டது. விரிவான ஆராய்ச்சி நடத்த அணுசக்தி ஆணைக் குழு அலுவலர் இம் மாவட்டத்தில் முகாமிட்டிருக்கிருர்.

# சோப்பு

**அழுக்கினை அகற்றி வெண்மை ஒளி பளிச்சிட வைப்பது சோப்பு என்பது நமக்குத் தெரியும். இன்று எத்தனையோ வகை சோப்புகள் நம்மிடையே நடமாடுகின்றன. அவற்றுள் ஒன்று கோபுரம் மார்க் சோப். கதர் கிராமத் தொழிலின் கீழ் உற்பத்தியாகும் இந்தச் சோப்பின் வரலாற்றைக் கூறுகிறது இந்தக் கட்டுரை.**



மூலப்பொருட்கள் சேகரித்து [illegible]

மூலப்பொருட்கள் கொதிக்க வைக்கப்படுகின்றன

சோப்புக் குழம்பு வாணலியில் ஊற்றப்பட்டு ஒரே சீராகக் கலக்கப்படுகிறது

அழுக்குத் துணிகளை அழகாய் வெளுப்பது எது?

கறை படிந்த ஆடைகளைக் கழுவிக் கவர்ச்சியாய்க் காட்டுவது எது?

. சோப்புத்தானே?

இந்தச் சோப்பு அன்றாட வாழ்க்கையில் மிக இன்றியமையாத பொருள் என்பது நமக்குத் தெரியும். ஆனால், இது எப்படி உருவாகி வருகிறது என்பது ஒரு கதை!

கதர் கிராமத் தொழில்!

இது தமிழ்நாட்டில் சிறந்து செயற்பட்டு வருவதும், பிற மாநிலங்களைவிட இத்துறையில் தமிழ்நாடு தனிச்சிறப்புப் பெற்று விளங்குவதும் கண்கூடாகக் காணும் உண்மை.

இத்துறையின் ஓர் அங்கமாகத் திகழ்கிறது, திருக்கழுக்குன்றத்திலுள்ள சோப்பு உற்பத்திக் கூடம்.

நல்ல தரமான சோப்புகளைத் தயாரிப்பதில் இதன் புகழ் கோபுரமென உயர்ந்திருக்கிறது. ஆம்! 'கோபுரம் மார்க்' சோப்புகளைத்தான் இது பெருமளவில் தயாரித்துத் தமிழகத்திற்கு வழங்கி வருகின்றது.

சென்னையிலிருந்து 45 மைல் தொலைவிலுள்ள திருக்கழுக்குன்றத்தில் அமைந்துள்ள இந்தத் தொழிற்கூடம் 1958-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. 1.5 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள இந்தத் தொழிற்கூடம் உற்பத்தியிலும், விற்பனையிலும் இப்போது நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளதைக் குறிப்பிட வேண்டும்.

தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் இதுபோன்ற சோப்புத் தொழிற்கூடங்கள் [illegible]

தனிச் சிறப்புப் பெற்றுள்ளது. மற்ற இடங்களில் இல்லாத 'சிமாகோ' என்னும் கொதிகலன் இங்கே உள்ளது.

சோப்புத் தயாரிக்க என்னென்ன தேவை?

சிலிகேட் (உவர் மண்), வேப்பெண்ணெய், எரிசோடா, ரோசனம், விளக்கெண்ணெய், இலுப்பெண்ணெய் ஆகியவை சோப்புத் தயாரிக்கத் தேவைப்படும் மூலப் பொருள்களாகும். இந்த மூலப் பொருள்களைச் சென்னையிலுள்ள மத்திய தோல் விற்பனை நிலையம் மற்றும் ஈரோட்டிலுள்ள மண்டல விற்பனை நிலையங்கள் அனுப்புகின்றன.

முன்பெல்லாம் ஒரு வாயகன்ற பாத்திரத்தில் இந்தக் கலவையைப் போட்டுக் கொதிக்கவைத்துப் பிறகு அந்தச் சோப்புக் குழம்பை அகன்ற வாணலியில் கொட்டித் துடுப்புகளால் இருவர் துழாவுவார்கள்; இது மிகவும் கடினமாக இருந்ததுடன் கால விரயமும் இதனால் ஏற்பட்டது. இதனைத் தவிர்க்கவே 'சிமாகோ' இங்கு வந்துள்ளது. 200 கிலோ கொள்ளளவு உள்ள இந்தக் கொதிகலனின் உள்ளே தகடாலான துடுப்புகள் இருக்கின்றன. இருவர் இரு பக்கங்களிலுமுள்ள சக்கரங்களைச் சுற்றியதும், உள்ளே உள்ள இரும்புத் துடுப்புகள் கொதிக்கும் சோப்புக் குழம்பை நன்றாக, ஒரே சீராகக் கலக்குகின்றன. இந்த வேலை இலகுவாகவும், விரைவாகவும் முடிந்துவிடுகிறது.

கொதிகலனில், கலவையெல்லாம் மூன்று நாட்கள் பக்குவமாகக் காய்ச்சப்படுகின்றன. இந்தக் குழம்பு பார்ப்பதற்கு வெல்லப் பாகுபோல இருக்கும்.

கடகட ஒரு குழாய் மூலம் வெளியே வரும் இந்தப் பாகு, சிறுசிறு இரும்புத் தொட்டிகளில் ஊற்றிக் குளிர வைக்கப்படுகிறது. நன்றாகக் குளிர்ந்ததும் இவை கெட்டியான சோப்புக் கட்டிகளாகக் கிடைக்கும். இந்தக் கட்டிகளைச் சோப்பு அறுக்கும் கருவியில் வைத்துத் தேவையான அளவுக்கு அறுத்துக் கொள்ளப்படுகிறது. அறுக்கப்பட்ட துண்டுகளை இன்னொரு கருவியில் வைத்துக் கோபுர முத்திரை, பதிக்கப்படுகிறது. இப்போது சோப்புகள் தயார்! இவையனைத்தும் கோபுரம் போல அடுக்கி வைக்கப்படுகின்றன.

பார் சோப்பு, கார்பாலிக் சோப்பு, கூழ் சோப்பு, தூள் சோப்பு ஆகிய வகைகள் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. கார்பாலிக் சோப்பு குளிப்பதற்காகத் தயாரிக்கப்படுகிறது. 500 கிராம் எடையுள்ள ஓர் பார் சோப்பின் விலை ரூ. 1·55. இதே எடையுள்ள கார்பாலிக் சோப்பு ரூ. 2.10. கையடக்கக் கார்பாலிக் சோப்பு 68 காசுகள். கூழ் சோப்பு 1 கிலோ ரூ. 2.25. தூள் சோப்பு 1 கிலோ ரூ. 3.50.

கூழ் சோப்பு, புட்டிகளில் அடைக்கப்பட்டு அனுப்பப்படுகின்றன. தொழிற்கூடங்கள், மருத்துவ மனைகள் முதலான



சோப்புத் துண்டுகள் தேவையான அளவுகளில் அறுக்கப்படுகின்றன



முத்திரை பதிக்கப்படுகிறது.



சோப்புத் துண்டுகள் கோபுரம்போல அடுக்கி வைக்கப்பெற்றுள்ளன.



அவளோர் சித்திரப்பாவை. உரித்தெடுத்த அல்லித் தண்டின் நிறம் பெற்ற உருக்குலையா மங்கை. அவள் ஒளி முகம் ஓராயிரம் நிலவுகளை ஒன்றாக அடுக்கி வைத்துக் கற்பனை செய்து போட்டி போட்டுப் பார்த்தாலும் எதிர் நிற்கக் கூடிய ஆற்றல் வாய்ந்தது. அத்தகைய அழகின் வடித்தெடுத்த கூட்டு அவள்! காணக் கிடைக்காத தங்கம். தேடக் கிடைக்காத வைரம். களிப்பிலாடும் மயில் —காதாரப் பண்பாடும் குயில்! நடக்கும் பொன்வண்டு! நடனமிடும் நட்சத்திரம்!

அவள் அன்னத்தூவி பரப்பிய மஞ்சத்திலே ஆனந்த நித்திரை செய்துகொண்டிருக்கிறாள். தூங்கும் அந்தத் தோகையாளின் துடியிடை நெளிவதேன்? தூய்மை நிறை அவள் செவ்விதழ்களிலே அமுதம் நிறைவதேன்? மின்னித் தேங்கும் அந்த அமுதத்தை அவளது அரும்பு இதழ்கள் அவளையுமறியாமல் சுவை பார்ப்பதேன்? ஆகா—ரத்தினத்தின் நிறம் பழிக்கும் விதத்திலே அவள் கன்னங்கள் மாறுகின்றனவே அது ஏன்? எத்தகைய மந்தகாசமான புன்னகை! முல்லைச் சிரிப்பா? முழு நிலாத் தோற்றமா? எல்லையிலா மகிழ்ச்சியின் கோடுகள் அவள் வதனமெங்கும் அழகுக் கோலங்கள் போடுகின்றனவே!

இதற்குக் காரணம் யாரைக் கேட்பது? வள்ளுவரைத்தான் கேட்க வேண்டும்.

"தம்பி! அவளே—அதோ எழுந்து விட்டாள்—அவளையே கேள்."

இப்போது அவள் தனக்குத் தானே பேசிக்கொள்கிறாள். அது நம் காதுகளில் விழுகிறது—கேளுங்கள்.

"கனவிலே வந்து என்னை என் காதலர் கூடினார். இன்ப சுகந்தரும் அன்பு பொருந்தி ஆனந்தம் பெற்றேன். என்னை விட்டு நீங்காமல் கனவிலே கூடியிருந்த என் காதல் தேவனை, நனவு என்று சொல்லப்படுகிற ஒரு கொடியவன் ஓடி வந்து பிரித்து விட்டானே!"

காரிகை கதறுகிறாள்; நனவைத் திட்டுகிறாள்.

காதலனோடிருப்பதாகக் கனவு கண்டாளாம். விழித்துக் கொண்டாளாம். அதற்காக வருந்துகிறாள். அந்தச் சோகத்தை வள்ளுவர் நடையிலே கேட்டு இன்பம் பெறுங்கள்—இதோ!

நனவெனை ஒன்றில்லை யாயின் கனவினால்
காதலர் நீங்கலர் மன்

வற்றுக்கு இந்தச் சோப்பு பெருமளவில் பயன்படுகின்றது. தூள் சோப்பினை எளிதில் நீரில் கரைத்துத் துணிகளைத் தோய்க்க உபயோகிக்கலாம்.

நல்ல வாசனையுள்ள டாய்லட் சோப்பு ஒன்றைத் தயாரிப்பதற்கான பரிசோதனைகள் இப்போது நடந்து வருகின்றன. அதற்கான மாதிரிகளும் இங்குத் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய சோப்பு ஒன்று தயாரிக்கப்படுவது இதுவே முதல் தடவை. அதுவும் இந்த உற்பத்தி கூடத்தில் தான் தயாரிக்கப் போகிறார்கள். இதற்காக ஒரு உற்பத்திக் கூடமும் இங்குக் கட்டப்பட்டு வருகிறது.

சோப்பின் மூலப் பொருள்கள் சரியாகக் கலந்திருக்கின்றனவா என்பதைக் கண்டறிய இங்கு ஒரு சிறிய சோதனைக் கூடமும் உள்ளது. மற்றும் இந்த உற்பத்திக் கூடத்தில் இங்குத் தயாரிக்கப்படும் சோப்புகள் யாவும் ஈரோட்டிலுள்ள மண்டல ஆய்வுக் கூடத்திற்கு அவ்வப் போது அனுப்பப்பட்டு ஆராய்ச்சிகள் செய்யப்படுகின்றன; அங்கிருந்து வரும் ஆராய்ச்சிகள் சோப்பின் தரத்தைப் பாதுகாக்க உதவுகின்றன.

இந்த உற்பத்திக் கூடத்தில் ஆண்டுக்குச் சுமார் 75,000 ரூபாய் மதிப்புள்ள சோப்புகள் தயாரிக்கப்படுகின்றன. இவை அரசு அலுவலகங்களுக்கும், கதர் விற்பனை நிலையங்கள் மூலம் பொது மக்களுக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. தமிழ் நாட்டிலுள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள், மருத்துவமனைகள் முதலானவற்றுக்கு இந்த அலகிலிருந்து சோப்புத் தயாரித்து அனுப்பப்படுவது, இந்தத் தொழிற்கூடத்தின் முன்னேற்றத்தைத் தெளிவாகக் காட்டும்.

தமிழ்நாட்டில் நெசவாளர்களின் நலனை, அரசு மிகவும் அக்கறையுடன் கவனித்து வருகிறது. நெசவாளர்களின் ஊதியத்தில் ரூபாய் ஒன்றிற்கு நெசவாளர்கள் 4 காசும், உற்பத்தியாளர்கள் 2 காசும், அரசு 6 காசும் போடும் வருங்காலச் சேமிப்பு நிதிபற்றி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

1957–58-ல் 68 கிலோ மட்டுமே சோப்பு இங்கே உற்பத்தியாயிற்று. 1959-ஆம் ஆண்டிலோ 1,340 கிலோவாக இது உயர்ந்தது. பிறகு அடுத்தடுத்த ஆண்டுகளிலே 18 ஆயிரம், 34 ஆயிரம் கிலோவாக உயர்ந்ததென்றால், இதன் தரத்தின் தன்மையை நாம் நன்குணரலாம்.

தமிழ் நாட்டிலுள்ள 29 உற்பத்திக் கூடங்களிலும் தயாரிக்கப்பட்ட சோப்பு உற்பத்தி



யின் மதிப்பு 1970–71-ஆம் ஆண்டில் ரூ. 25,89,527. இவ்வாண்டில் 31—12—1971 முடிய உற்பத்தி ரூ. 25,38,166. அதாவது கடந்த பத்து ஆண்டுகளில் உற்பத்தி பத்து மடங்கு அதிகரித்துள்ளது. இது ஒரு பெருமை மிக்க சாதனையாகும். இவ்வாண்டில் ரூ. 34 இலட்சத்திற்கு உற்பத்தியை அதிகரிப்பதற்கான தீவிரப் பணிகள் நடந்து வருகின்றன.

29 உற்பத்திக் கூடங்களைத் தவிர, சேலம் மாவட்டத்தில் தாரமங்கலத்திலும், விழுப்புரத்தில் கூட்டேரிப் பட்டிலும், வேலூரில் ஆரப்பாக்கத்திலும் மற்றும் பூண்டியிலும் சோப்பு உற்பத்திக் கூடங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

சோப்புத் தொழிலின் முதுகெலும்பு போன்றவர்கள் சோப்பு வல்லுநர்கள். இவர்களின் கருத்தரங்குகள் ஆண்டு தோறும் நடைபெற்று வருகின்றன. சோப்பு உற்பத்தியைப் பெருக்கவும், இத்தொழிலின் எதிர் காலத்திட்டங்களை வகுக்கவும் இக்கருத்தரங்கு பயன்படுகின்றது.

சோப்புத் தொழில் கோபுரமென உயர்ந்திடப் பல புதிய முயற்சிகளைக் கையாளவும், பொது மக்களுக்கு இவை நிறையக் கிடைத்திட வழிவகை செய்திடவும் இத்துறை மேலும் முயன்று வருகிறது.

அரசின் சார்பில் இயங்கும் இந்தச் சோப்புத் தொழில், கோபுரக் கலசமென ஒளிவீசித் திகழ்கிறதென்றால் அதற்குக் காரணம், குறைந்த விலையில், நல்ல தரமான சோப்புகளை இது வழங்குவதேயாகும்.

# பயன்மிகு பப்பாளி!

ஏழை எளியவர்களும் குறைந்த செலவில் பப்பாளிப் பழத்தை உற்பத்தி செய்து உண்ண முடியுமாதலின், இது 'ஏழைகளின் பழம்' (Poormen's Fruit) என்று உலகின் பல பாகங்களிலும் கூறப்படுகிறது. இதன் விலை மலிவாக இருப்பதால், 'ஏழைகளின் பழம்' என்பது மிகவும் பொருத்தமான பெயராகும்.

பப்பாளிப் பழத்தில் 'உயிர்ச்சத்து-எ' (Vitamin-A) நிறைந்துள்ளது. வயிற்றுக் கோளாறுகளால் அவதியுறுவோர்க்குப் பப்பாளிப் பழம் மிகவும் சிறந்த உணவாகும். பப்பாளிப் பழம் உண்பதால் நல்ல செரிக்கும் சக்தி (சீரண சக்தி) ஏற்படுகிறது. பப்பாளிப் பழத்தைத் தமிழ் நாட்டு மக்கள் அதிக அளவில் பயன் படுத்துவது இல்லை; ஆனால் வட நாட்டினர் ஒவ்வொரு வேளை உணவிலும் பயன்படுத்தத் தவறுவதில்லை. மலேயா, சிங்கப்பூர், பர்மா, இலங்கை, ஹவாய் தீவு ஆகிய நாடுகளில் பப்பாளி பெரும் புகழ் பெற்று விளங்குகிறது. இதற்குக் காரணம், பப்பாளிப் பழத்தில் அடங்கியுள்ள ஊட்டச் சத்துக்களே! பப்பாளிப் பழத்தில் கீழ்க்கண்ட அளவில் ஊட்டச்சத்துகள் உள்ளன.

நூறு கிராம் பப்பாளிப் பழத்தில் உள்ள சத்துகள்—

புரதச்சத்து—0.50 கிராம்.

கொழுப்புச் சத்து—0.10 கிராம்.

மாவுப் பொருள்—9.50 கிராம்.

சுண்ணாம்புச் சத்து 0.01 கிராம்.

பாஸ்பரஸ் சத்து—0.01 கிராம்.

இரும்புச் சத்து—0.40 மில்லி கிராம்.

சக்தியளிக்கும் திறன்—40 கலோரி.

உயிர்ச் சத்து-எ—2,020 யூனிட்டுகள்.

உயிர்ச் சத்து-பி. 1—0·04 மில்லி கிராம்.

உயிர்ச் சத்து-பி. 2—0·25 மில்லி கிராம்.

உயிர்ச்சத்து-சி—46 மில்லி கிராம்.

நிக்கோட்டினிக் அமிலம்—0·20 மில்லி கிராம்.

எனவே, பப்பாளிப் பழத்தில் உள்ள ஊட்டச் சத்துகளின் நன்மையைக் கருதித் தமிழ் நாட்டு மக்களும் பப்பாளிப் பழத்தைப் பெருமளவில் உண்ணும் பழக்கத்தை மேற்கொள்ளுதல் சிறந்தது.

பப்பாளியின் இதர நன்மைகள்

'பெப்பெயின்' (Papain) என்னும் ஒருவகை இரசாயன நொதிப்பொருள் (Proteloytic enzyme) பப்பாளிக் காய்களிலிருந்து வெளி வரும் பாலில் இருந்து தயாரிக்கப்படுகிறது. 'பெப்பெயின்' மருந்துப் பொருளாகப் பயன்படுவதுடன் பல்வேறு தொழில்களிலும் பயன்படுகிறது. 'பெப்பெயின்' பின்கண்ட வகைகளிலும் பயன்படுகிறது:—

1. முகத்திலுள்ள வடுக்களை மறையச் செய்து அழகுபடுத்த உதவும் முகப்பசை (Face or Snow), முகப் பவுடர் (Talcum Powder) போன்ற அழகுச் சாதனப் பொருள்கள் உற்பத்தி செய்ய உதவுகிறது.

2. 'பீர்' போன்ற மது வகைகளைத் தூய்மைப் படுத்துவதற்குப் பயன்படுகிறது.

3. இறைச்சிகளை மிருதுவாக்கப் பயன்படுகிறது.

4. தோல் பதனிட உதவுகிறது.

5. கம்பளி ஆடைகள் நெய்வதற்குப் பயன் படுகிறது.

இவ்வாறு பல்வேறு வகைகளில் பயன்படும் 'பெப்பெயின்' என்ற இரசாயன நொதிப் பொருளுக்கு அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும், ஐரோப்பாவிலும் மிகுந்த தேவை (கிராக்கி) ஏற்பட்டுள்ளது. எனவே, நமது தமிழ்நாட்டில் பெரும் பரப்பில் பப்பாளியைப் பயிரிட்டு, 'பெப்பெயின்' உற்பத்தி செய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியை (Foreign Exchange) ஈட்டலாம்.

பப்பாளிக் காய்களிலிருந்து 'பெப்பெயின்' எடுத்த பிறகு பப்பாளிக் காய்களை 'பெக்டின்' (Pectin) தயாரிக்கப் பயன்படுத்தலாம் அல்லது பழுக்கச் செய்து விற்பனை செய்யலாம். பழங்களை விற்பனை செய்வது சிரமமாக இருப்பின், அவைகளைப் பயன்படுத்திப் பழக்கூழ் அல்லது, பழரசம் (Jam) தயாரித்து எளிதில் விற்பனை செய்யலாம்.

பப்பாளி பயிரிடுவதற்குள்ள வாய்ப்புகள்

அமெரிக்காவின் வெப்ப மண்டலப் பகுதியிலிருந்தே பப்பாளி உலகெங்கும் பரவியதாகத் தெரியவருகிறது. மலாகா நாட்டிலிருந்து இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்ட பப்பாளி, இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் பரவியுள்ளது. தமிழ் நாட்டின் பழத் தோட்டங்களிலும், வீட்டுத் தோட்டங்களிலும் பப்பாளி மரங்கள் வளர்க்கப்படுகின்றன. பப்பாளியைப் பெரும்பரப்பில் பயிரிடுவதற்குத் தமிழ்நாட்டில் பெரும் வாய்ப்பிருந்தும், அதன் முக்கியத்துவத்தை உணராததால், தமிழ் நாட்டினர் பப்பாளிச் சாகுபடியில் அதிகக் கவனம் செலுத்தாமல் இருந்துள்ளனர். தமிழ்நாட்டின் மண்வளமும், பருவ நிலைமையும் பப்பாளிச் சாகுபடிக்கு மிகவும் ஏற்றதாக அமைந்துள்ளது.

மகசூல்

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் பப்பாளிக் கன்று நட்ட 10-வது மாதத்திலேயே பழங்கள் அறுவடைக்குக் கிடைக்

கின்றன. அதன் பின்னர் தொடர்ந்து ஆண்டு முழுவதும் பப்பாளி மரம் காய்த்துப் பழுத்துப் பலன் கொடுத்துக் கொண்டே இருக்கிறது.

ஒவ்வொரு பப்பாளி மரமும் 3 ஆண்டுக் காலத்திற்குள் ஏறத் தாழ 120 முதல் 130 பழங்களைத் தருகின்றது. இப்பழங்களின் எடை சற்றேறக்குறைய 200 முதல் 250 ராத்தல் இருக்கும்.

### செலவும் வரவும்

ஒரு ஏக்கர் நிலத்தில் 3 ஆண்டுக் காலத்திற்குப் பப்பாளி பயிரிட ரூபாய் 3,300·00 செலவாகக் கூடும். ஒரு ஏக்கரிலிருந்து 3 ஆண்டுகளில் கிடைக்கும் பப்பாளிப் பழங்களை விற்பதன் மூலம் 5,000 ரூபாயும் முதலாண்டில் காய்கறிப் பயிர்களை ஊடு பயிராகச் சாகுபடி செய்வதன் மூலம் 1,500 ரூபாயும் வருவாயாகக் கிடைக்கக் கூடும். செலவு போக ஏக்கருக்கு ஓர் ஆண்டிற்கு 1,000 ரூபாய்க்குக் குறையாமல் இலாபம் கிடைக்கும்.

இவை தவிர, 3 ஆண்டுக்காலத்தில் ஒரு ஏக்கர் பப்பாளியிலிருந்து 100 முதல் 120 கிலோ 'பெப்பெய்ன்' எடுக்க முடியுமால், அதன் மூலம் ஆண்டு ஒன்றிற்கு ஒரு ஏக்கரிலிருந்து 1,000 ரூபாய்க்குக் குறையாமல் நிகர வருவாய் அடைய முடியும்.

### ஆண் வேறு பெண் வேறு

பப்பாளியில், ஆண் மரங்கள் வேருகவும், பெண் மரங்கள் வேருகவும் இருக்கும். பூக்களைப் பார்த்துத்தான் ஆண் மரம், பெண் மரம் எனக் கண்டறிய முடியும்.

### சாகுபடிக் குறிப்புகள்

மேற்கூறியவாறு பப்பாளி மிகவும் பயனுள்ளதாக இருப்பதால், கீழ்க்கண்ட சாகுபடிக் குறிப்புகளைப்பின்பற்றிப் பப்பாளி பயிரிட்டுப் பயனடையுமாறு கேட்டுக் கொள்கின்ருேம்.

மண்வளம்.—எல்லா வகையான மண்ணிலும் பப்பாளியைப் பயிரிடலாம். ஆனால் நல்ல வடிகால் வசதியுடைய மண்ணும், ஈரம் நிலைத்திருக்காத மண்ணும் பப்பாளிக்கு மிகவும் ஏற்றது. ஈரத் தன்மையை நீண்ட காலத்திற்கு இழக்காதிருக்கும் மண்ணில் பப்பாளி பயிரிட்டால் வாடல் நோயினுல் (Wilt) பப்பாளி மரங்கள் சேதமடையக்கூடும்.

காலநிலை.—பப்பாளி வெப்பம் மிகுந்த பகுதிக்கேற்றதென்ருலும், அதிக மழை பெய்யும் பகுதிகளிலும் பயிரிடுவதற்கு ஏற்றது. காற்றில் அதிக ஈரநிலை (Humidity) காணப்படும் இடங்களில் சாகுபடி செய்யப்படும் பப்பாளி மரங்களின் பழம் சுவையின்றி இருக்கும். பப்பாளி, காயாக இருக்கும் பொழுது வறட்சியான நிலை நிலவினுல், பழம் நன்ருகப் பழுத்துச் சுவை மிகுந்ததாக விளங்கும்.

ஏற்ற ரகம்.—பப்பாளிப் பழங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்காகப் பப்பாளி பயிரிட விரும்புகின்றவர்கள் 'கோ.1 பப்பாளி '(C.O.I. Papaya) ரகத்தைப் பயிரிடுவதே சிறந்தது. கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் உள்ள பழத் தோட்டத்தில் பத்து ஆண்டுக் காலம் மேற்கொண்ட ஆராய்ச்சியின் பலனுக, இனச் சேர்க்கையின் மூலம் ' கோ. 1. பப்பாளி ' தோற்றுவிக்கப் பட்டதாகும். மற்ற ரகப் பப்பாளிப் பழங்களைக் காட்டிலும், ' கோ. 1. பப்பாளி'ப் பழங்கள் உண்பதற்குச் சிறந்ததாகும். இந்த ரகத்தின் சிறப்புக் குணங்கள் ஐந்து : அவை :

1. பொதுவாகப் பப்பாளிப் பழத்தை உண்ணும் பொழுது ஒருவித வாடை வீசும். இவ்வாடை பப்பாளிப் பழத்தில் உள்ள ' பெப்பெய்ன் ' மூலம் ஏற்படுகிறது. இவ்வாடை கோ. 1. பப்பாளிப் பழத்தில் இருக்காது.

2. கோ. 1 பப்பாளிப் பழத்தின் சதை தங்க நிறமாகக் காணப்படும்.

3. கோ. 1. பப்பாளி $2\frac{1}{2}$ அடி உயரத்தில் இருக்கும் பொழுதே காய்க்க ஆரம்பித்து விடும்.



4. கோ. 1. பப்பாளிப் பழம் தரத்தில் உயர்ந்தது.

5. கோ. 1. பப்பாளி குட்டையாக இருப்பதால், வளர்த்துக் காக்கும் செலவில் சிக்கனம் ஏற்படுத்தலாம்.

பப்பாளியிலிருந்து ' பெப்பெய்ன் ' எடுக்க விரும்பினுல் கீழ்க்கண்ட ரகங்களைப் பயிரிடுவதே சிறந்தது.

1. ' சிவப்புப் பப்பாளி ' (Red Fleshed)

2. ' பிலிப்பைன்சு ' (Phillipines)

3. ' பெரடினியா '

விதையளவு.—ஒரு ஏக்கர் பப்பாளி பயிரிட 250 முதல் 300 கிராம் விதைகளை நாற்று விட வேண்டும்.

நாற்று விடுதல்.—விதைகளின் மூலமாகவே பப்பாளி இனப் பெருக்கம் செய்யப்படுவதால், நன்கு பழுத்த பழங்களிலிருந்து எடுத்த விதைகளையே நாற்று விடுதல் நல்லது. நிழற்பாங்கான இடத்தில் மேடைப் பாத்திகள் அமைத்து, விதைக்கு விதை 6 அங்குலம் இடைவெளி விட்டு பப்பாளி விதைகளை விதைக்க வேண்டும்.



நடும் பருவம்.—பப்பாளிக் கன்றுகளை ஆண்டு முழுவதும் நடலாமென்ருலும், ஜுன், ஜுலை, ஆகஸ்டு மாதங்களே சிறந்தவை.

நடும் முறை.—பப்பாளிக் கன்றுகள் நடுவதற்கு 1 அடி நீளம், 1 அடி அகலம், 1 அடி ஆழம் உள்ள குழிகள் தோண்டப்பட வேண்டும். குழிகளைத் தோண்டும் பொழுது ஒரு குழிக்கும் மற்ருெரு குழிக்கும் இடையில் 8 அடி இடைவெளி விட்டுத் தோண்ட வேண்டும். பிறகு ஒவ்வொரு குழிக்கும் 10 கிலோ தொழு உரம் இட்டு, மண்ணுல் நிரப்ப வேண்டும். அதன் பின் ஓரிரு முறை நன்கு தண்ணீர் விட வேண்டும். ஒரு அடி உயரமும், இரண்டு மாத வயதும் உள்ள நல்ல வீரியமான கன்றுகளையே நடுவதற்குப் பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு குழியிலும் 3 அல்லது 4 பப்பாளிக் கன்றுகளை நட வேண்டும். நட்ட பிறகு செடிக்கு நிழல் வசதி அளிக்க வேண்டும்.

நீர்ப்பாசனம்.—பப்பாளிக் கன்றுகள் நட்ட ஒரு மாதம் வரை மூன்று நாட்களுக்கு ஒரு முறை பூவாளியால் தண்ணீர் விடவும். பிறகு வாரம் ஒரு முறை தண்ணீர் விட வேண்டும்.

கன்றுகளைக் களைதல்.—பப்பாளிக் கன்றுகளை அதாவது பூப்பூக்கும் வரை (ஏறத்தாழ 4 மாதம்) வளரவிட வேண்டும். பூக்களைப் பார்த்து ஆண் பப்பாளி மரம் எது என்றும், பெண் பப்பாளி மரம் எது என்றும் கண்டறிந்து கொண்டு, 10 பெண் பப்பாளி மரங்களுக்கு ஓர் ஆண் பப்பாளி மரம் என்ற அளவில் விட்டு, மற்றத் தேவையற்ற மரங்களை வெட்டிவிட வேண்டும். இவ்வாறு செய்வதால் பெண் பூக்களில் அயல் மகரந்தச் சேர்க்கை ஏற்பட்டு அதிக அளவில் நல்ல காய்கள் தோன்றும்.

உரமிடுதல்.—ஆண்டிற்கு 2 முறை பப்பாளி மரங்களுக்கு உரமிடுதல் வேண்டும். ஜுன்-ஜுலை மாதத்தில் ஒரு முறையும், டிசம்பர் மாதத்தில் மறுமுறையும் உரமிட வேண்டும். ஒவ்வொரு மரத்திற்கும் ஒவ்வொரு தடவையும் கீழ்க்கண்ட அளவில் உரமிட வேண்டும்:—

மக்கிய தொழு எரு—10 கிலோ.

அம்மோனியம் சல்பேட்.—454 கிராம்.

சூப்பர் பாஸ்பேட்—908 கிராம்.

மூரியேட் ஆப் பொட்டாஷ்—454 கிராம்.

பின்செய்நேர்த்தி.— ஆண்டிற்கு மூன்று முறை பப்பாளித் தோட்டத்தைக் கொத்திவிட்டுக் களை எடுக்க வேண்டும். மரங்களில் காணப்படும் காய்ந்த இலைகளை உடனுக்குடன் அகற்றிவிட வேண்டும்.

ஊடுபயிர்.—பப்பாளிக் கன்றுகள் நட்ட ஐந்து மாத காலம் வரை; இடைவெளிகளில் காய்கறிப் பயிர்களை ஊடுபயிராகச் சாகுபடி செய்யலாம்.

பயிர்ப் பாதுகாப்பு.— பப்பாளிக் கன்றுகள் நாற்றங்காலில் இருக்கும் பொழுது வேர் அழுகல் நோய் தோன்றும். இந்நோயினுல் செடியின் வேரும், தண்டும் அழுகிச் செடி இறந்துவிடும். இதற்கு முக்கியக் காரணம் தண்ணீர் தேங்கியிருப்பதேயாகும். ஆகவே இதற்கு வடிகால் வசதியை உடனே ஏற்படுத்த வேண்டும். பின்பு போர்டோக் கலவையைத் தெளிக்க வேண்டும்.

கடுநச்சு நுண்ணுயிர் கொண்ட தேமல் நோய் ( Mosaic Virusus ) பப்பாளிச் செடிகளைத் தாக்கும். இந்நோயினுல் தாக்கப்பட்ட பப்பாளிக் கன்றுகளையோ அல்லது மரங்களையோ அவ்வப்போது அடியோடு பிடுங்கி, அவைகளை எறிந்து விட வேண்டும்.

குளிர்காலங்களில் இலைகளினடியில் செம்பேன் என்னும் பூச்சிகள் ( Mites ) இலைகளைத் தாக்கும். இவைகளை அழிக்கக் கந்தகத் தூளைத் தூவ வேண்டும்.

அறுவடை.—பப்பாளி நாற்றுகளில், நட்ட நான்கு மாதத்தில் பூக்கள் தோன்ற ஆரம்பிக்கும். நட்ட எட்டாவது அல்லது ஒன்பதாவது மாதத்தில் பலன் கொடுக்க ஆரம்பிக்கும். ஒரு ஏக்கரிலிருந்து முதல் ஆண்டில் 5,000 கிலோ பழங்களும், இரண்டாம் ஆண்டில் 10,000 கிலோ பழங்களும்; மூன்றும் ஆண்டில் 25,000 கிலோ பழங்களும் கிடைக்கும்.

பெப்பெய்ன் எடுத்தல்.— பப்பாளிக் காயிலிருந்து பெப்பெய்ன் எடுக்கக் காய்கள் முக்கால் பாகம் திரண்டு, முதிர்ச்சியடைந்து இருக்க வேண்டும். வகைக்கு ஏற்றபடி, காய்கள் பிடித்து 70 முதல் 110 நாட்களுக்குள் ' பெப்பெய்ன் ' எடுக்க நல்ல வளர்ச்சியடைந்திருக்கும். இச்சமயமே பெப்பெய்ன் எடுக்கச் சிறந்தது. இச்சமயத்தில் பப்பாளிக் காய்களின் நான்கு பக்கங்களிலும், ' பிளேடு ' போன்ற கத்தியால் மூன்று மில்லி மீட்டர் ஆழத்திற்கு நான்கு கோடுகள் கீழிருந்து மேலாகக் கீற வேண்டும். கீறும் பொழுது வெண்மையான பால் வடியும். இப்பாலை, வட்ட வடிவமான கண்ணாடித் தட்டிலோ ( Petridish ) அல்லது அலுமினியத் தட்டிலோ சேகரிக்கவும். பப்பாளிக் காயில் காய்ந்து ஒட்டியிருக்கும் பாலையும் லேசாகச் சுரண்டி எடுத்துக் கொள்ளவும். இம்மாதிரி மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு ஒரு முறை 4 தடவைகளில் பால் எடுக்கவும். ' பெப்பெய்ன் ' பாலை அதிகாலையில் எடுப்பதால், அதிக அளவு பாலைப் பெறலாம். காலை பத்து மணிக்குள் பால் எடுப்பதை முடித்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பப்பாளிக் காயிலிருந்தும் 5 கிராம் பால் கிடைக்கும். நாள்தோறும் எடுத்த பாலை (Lotex), 50—55 டிகிரி சென்டிகிரேட் வெப்ப நிலையில் உலரவைக்கவும். காற்றுப் புகா வண்ணம் கண்ணாடிக் காகிதங்களில் (Polythene Bags) அடைத்து டப்பாக்களில் வைத்துக் கொள்ளலாம்.

ஒரு கிலோ 'பெப்பெய்ன்' 40 முதல் 55 ரூபாய் வரை விற்பனையாகிறது. ஒரு ஏக்கர் பப்பாளிச் சாகுபடியிலிருந்து மூன்று ஆண்டில் 'பெப்பெய்ன்' எடுத்துச் சுமார் ரூ. 3,000 நிகர இலாபம் பெறலாம்.

வருவாய்.—ஒரு ஏக்கர் பப்பாளி பயிரிட்டுப் பழங்களை விற்பனை செய்வதன் மூலமும், பெப்பெய்ன் எடுத்து விற்பனை செய்வதன் மூலமும் 3 ஆண்டுக்காலத்தில் 6,000 ரூபாய்க்குக் குறையாமல் நிகர இலாபம் பெறலாம். எனவே பப்பாளி பயிரிட்டுப் பயனடையீர்.



# உள்ளமெனும் சந்நிதி

சோம. மகாதேவன்

## 14. எண்ணங்கள் ஆயிரம் ஆங்கே !

மறுநாளே, பாண்டியனைத் தனியாகச் சந்திக்க முடிந்ததில் குருவையாவுக்கு எடுத்த எடுப்பிலேயே திருப்தி ஏற்பட்டது. அவர் தேடிச் சென்ற நேரம், ஊராட்சி அலுவலகத்திலேயே தனியாக உட்கார்ந்திருந்தான்.

குருவையாவைக் கண்டதும் எழுந்து வணங்கி, "ஐயா வாங்க. ஒரு வார்த்தை சொல்லி அனுப்பிச்சிருந்தா தோப்புக்கே வந்திருப்பேனே." என்று சொல்லி வரவேற்றான் பாண்டியன்.

"நீ ஊருக்குத் தலைவர் இல்லையா? இருக்கிற இடத்திலே தான் நாங்க வந்து பாத்துக்கணும்" என்றவாறு எதிரே நாற்காலியில் அமர்ந்தார் குருவையா.

"தலைவர்னு சொல்றதோட, மக்களாலே நியமிக்கப் பட்ட, ஊதியம் பெறாத, ஊழியர்னு சொல்றதும் பொருத்தமா இருக்கும்" என்றான் பாண்டியன்.

"யாராவது இங்கே வந்து கூடிவிடுவதற்குள், தனிமையில் பேச வேண்டியதை முடித்துக் கொள்ள வேண்டுமென்ற துடிப்பு குருவையாவுக்கு. நேரடியாகவே ஆரம்பித்தார்.

"நடக்கிற காரியங்களை நினைக்கிறப்ப, என்னைப் போல இருக்கிறவர்களுக்குப் பெருங் கவலையா இருக்கு. வெள்ளம் வந்தப்புறம் அணை போட முடியாது தம்பி" என்றார்.

"உங்க மனசு எனக்குத் தெரியும்; என்றைக்கும் என் பேரிலே அன்பு வச்சிருக்கிங்க. உங்களுக்குப் பணிஞ்சு போகக் கடமைப் பட்டவன் நான்" என்றான் பாண்டியன்.

குருவையா நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"கையடிக்கத் தண்ணி விலகிப் போகுமா? நல்லதை நினைச்சுக் குறுக்கு வழியா ஒரு பாதையைச் சொல்லத்தான் செய்வோம். கேட்டுக்கத்தான் வேணும்." என்றார்.

"இப்ப என் அளவிலே என்ன செய்யணும்னு சொல்றிங்க?"

"நீ....வீட்டுக்கு வரணும்; அது உன் வீடுங்கிற உரிமையை யாராலேயும் மறுக்க முடியாது. அங்க வந்து நின்னு பெரியவர் கிட்ட, சித்தப்பன் பொய் வழக்குப் போட்டிருக்காருன்னு சொல்லு. அவ்வளவு போதும்" என்றார் குருவையா அவசரத்துடன்.

"இதை நான் வந்து சொல்லித்தான் அப்பாவுக்குத் தெரியணுமா? வேறே எதைத்தான் மாடியிலே யோசிக்கக்கிட்டு ஓமே உட்கார்ந்திருக்காரு? இடத்திறங்கி வந்து நாலு பேத்துப் பேரோட உக்காந்து பேசினுத்தான் எதிலேயும் உண்மை இன்னதுன்னு புலப்படும்" என்றான் பாண்டியன் சற்று வேகமாக.

குருவையா குனிந்து முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

"எப்பவுமே அவரு போக்கு இப்படித்தானே தம்பி? சின்ன அதிர்ச்சியைக் கூட அவராலே தாங்கிக்க முடியாது. இந்த நேரத்திலே, அவர் உனக்குத் துணையா இருக்கணும். நீ அவருக்குத் துணையா இருக்கணும். இப்ப, வீட்டுக்கு வந்தாத்தான் சொல்ல வேண்டியதை நேரடியாகச் சொல்ல முடியும். அம்மாவும் இதைத் தான் சொல்லுது." என்று மேலும் சொன்னார் குருவையா.

பாண்டியன் புன்னகையோடு மேசையின்மீது கவிழ்ந்து கொண்டான்.

"பின் தொடர்ச்சி எதுவுமே இல்லையின்னு ஏற்கெனவே எழுதி வாங்கி இருக்காங்க. இருந்தாலும் நீங்க கூப்பிடுறிங்க. வாரேன். ஆனா . . . " என்று சொல்லி நிறுத்தினான்.

"என்ன தம்பி ?" என்றார் குருவையா அவசரத்துடன்.

"என் கூடவே அரசியும்-லிங்கமும் சேர்ந்தே வருவாங்க; அந்தவீட்டிலே வரவேற்பு இருக்குமா ? சொல்லுங்க. நீங்களும் வாங்க. இப்பவே போகலாம்" என்றான் பாண்டியன்.

குருவையாவுக்குத் "திக்" கென்றது.

பாண்டியனைக் கூப்பிடலாம். ஆனால் ஊர் இருக்கும் நிலவரத்தில் அரசியையும் லிங்கத்தையும் அழைக்க முடியுமா ? பெரியவர் இருக்கும் மனநிலையில், இதுவே மீண்டும் புயலைக் கிளப்பி விடாதா ?

"இதுக்கு நீங்களே ஒத்துக்க மாட்டிங்கன்னு எனக்குத் தெரியும்; ஒரே பொண்ணு. 'அரசி'ன்னு பேர் வச்சு, அரசியாவே வளர்ந்த பொண்ணு, கண் கலங்காம பெத்தவங்களுக்கே வாழறது பொறுக்கலே. என்னைத் தன்னுக்கு, மனமுவந்து என் தங்கைக்கு மறு வாழ்வு கொடுத்திருக்கானே லிங்கம், அவனையும் சேர்த்து, உள்ளே தள்ளணும்னு திட்டம் போட்டு இறங்கியிருக்கிறது மனிதத் தன்மையிலே சேர்ந்ததா?" என்று பாண்டியன் மேலும் கேட்டபோது, குருவையா குலுங்கிப் போனார்.

"எல்லாத்தையும் நினைச்சுத் தான் நான் கவலைப் படுறேன். வாக்குறுதி கொடுத்திருக்கிற கண்ணைத் தோட பொன்னையா வழக்குமுடிந்தொலைஞ்சா வழக்கு இருக்கும்

போருமே தம்பி'' என்று நினைவில் தேங்கி நின்றதையும் சொல்லி விட்டார் குருவையா.

'' பொன்னையா அப்படியே கண்ணை மூடணும்ன்னுதான் காரியங்கள்நடக்கு. மரணத்தோட போராடிக் கிட்டிருக்கிறவன் நினைவிலே நீயதைக் கலக்கிறது ரொம்பச் சுலபம்ன்னு உருட்டி முத்தையாவுக்குத் தெரிஞ்சி ருக்கு. இந்த, மிருகத்தனமான காரியங்களுக் கெல்லாம் அப் பாவைக் கைகொடுக்கச் சொல் லாதிங்க. இது, சித்தப்பாவுக்கும் எனக்கும் நடக்கிற போராட்ட மாவே இருக்கட்டும் '' என்றான் பாண்டியன் ஆவேசத்தோடு.

''அடுத்து, இவனோடு வேறு என்ன பேசமுடியும் ?'' குரு வையா எழுந்தார்.

'' என்னமோ தம்பி என் மனசிலே பட்டதைச்சொன்னேன் மத்தது உங்க விருப்பத்தைப் பொறுத்தது.'' என்றார்.

வாசல் வரை பாண்டியன் தொடர்ந்து வந்தான்.

'' எதுக்கும் கவலைப்பட்டு உடம்பைக் கெடுத்துக்க வேண் டாம்ன்னு அப்பா கிட்டச் சொல்லுங்க '' என்று குருவையா விடம் சொல்லியனுப்பிவிட்டு நிலைப்படியைப் பிடித்தவாறு நின்றான் பாண்டியன்.

அப்போது, வெளியே சென் றிருந்த கன்னையா வந்தான்.

'' அந்த மேலவீட்டுத் தாத்தா உங்களைப் பாக்கணுமாம். நேத்து நாலஞ்சு தடவை ஆள் விட்டுக் கிட்டே இருந்தாரு'' என்று தகவல் சொன்னான் கன்னையா.

ஊராட்சிக் கட்டடத்திற்கு நாலைந்து வீடுகள் தள்ளி, இந்த மேலவீட்டுத் தாத்தாவின் வீடு. பிள்ளை இல்லாதவர். மனைவியும் என்றைக்கோ போய்ச் சேர்ந்து விட்டாள். இவருக்கு இப்போது வயது அறுபதுக்கு மேலிருக்கும். பாண்டியனுக்கு விவரம் தெரிந்த நாளையிலிருந்து, தானேதான் பொங்கித் தின்று, இன்னும் உயிரோடிருக்கிறார். யாரையும் நம்புவதில்லை. இரண்டு ஏக்கர் நன்செய்யும், இந்த வீடும் இருக்கிறது !

இந்தத்தாத்தாவுக்குப் பாண்டி யன் மீது உயிர். இப்போது அதிகமான நடமாட்டம் இல்லை. முடிந்தால் தட்டுத் தடுமாறி இங்கேயே வந்து விடுவார்.

'' கிழவர் வந்தால் இருக்கச் சொல்லு, வாரேன்.'' என்று கன்னையாவிடம் சொல்லிவிட்டுத் தாத்தாவின் வீட்டை நோக்கி நடந்தான் பாண்டியன்.

மேல வீட்டுத் தாத்தா திண்ணை யிலேயே உட்காந்திருந்தார். சற்றுத் தூரத்தில் வரும் பாண்டி யனைக் கண்டதும் அவருக்கு ஒரே பரபரப்பு.

'' ஏன்டா பேராண்டி. உன்னைப் பாக்கணும்ன்னு நினைச் சுக் கண்ணும் பூத்துப் போச்சு தாத்தாவை மறந்திட்டியா ?'' என்று கேட்டு, முற்றத்துக்கு வந்துவிட்டார் தாத்தா.

பாண்டியன் அவரது கைகளைப் பிடித்து மெதுவாகத் திண்ணைக்கு அழைத்துச் சென்றான்.

'' என்னைத்தான் இப்பப் பல தொல்லைகளிலே இழுத்து வச் சிருக்காங்களே தாத்தா'' என்றான்.

'' வா . . உள்ளே உக்காந்து பேசலாம்'' என்ற தாத்தா அவனுக்கு முன்னால் படிகளில் ஏறி, முன்கூடத்தில் கிடந்த பலகையில் உட்கார்ந்து, பாண்டி யனையும் இழுத்துப் பக்கத்திலே வைத்துக் கொண்டார்.

'' நேத்து மட்டப்பாறைக் காரங்க வந்திருந்தாங்களே என்ன முடிவு செய்தீங்க?'' என்று பாண்டியனே கேட்டான்.

## பாசியைப் போக்க....

பல ஏரி குளங்களில் நீரின்மேல் பாசி படர்ந்து அந்நீர் நிலைகளின் நீரை நாம் பயன்படுத்த முடியாத நிலைமை இருந்து வருகிற தல்லவா ! அவ்வாறு படர்ந் துள்ள பாசியை நீக்கவும், அவ்வாறு நீக்கப்பட்ட பின் மீண்டும் பாசி படராமல் தடுக்கவும் பிரிட்டனிலுள்ள வேல்ஸ் பல்கலைக் கழகத் தொழில் நுட்பப் பிரிவு வல்லுநர்கள் ஒரு புதிய முறையைக் கண்டு பிடித் துள்ளனர்.

பாசி பிடித்துப் பச்சைக் குழம்பு போல் தண்ணீர் உள்ள ஏரியிலோ, குளத் திலோ, தண்ணீருக்குக் கீழே அதிர்வேட்டு வெடிக்கச் செய்து, 'அதிர்ச்சி அலை' களை உருவாக்கினால், நீரின் மேலே மிதக்கும் பாசி அடி மட்டத்தில் அமிழ்ந்து விடு வது மட்டுமல்ல - மீண்டும் எப்போதும் பாசியே உண்டா வதில்லையாம்.

'' எல்லாத்தையும் தெரிஞ்சு வச்சுக்கிட்டுத்தான் நீ விலகி நிக்கிறே. உடனடியா நிலத்தை யெல்லாம் எங்க பேருக்கு எழுதி வச்சுப் போடுங்கன்னு சொல்றாங்க. நான் வேர்வை சிந்திச் சம்பாரிச்ச சொத்து. எங்கிட்ட பயமுறுத்திக் கை யெழுத்து வாங்கிப் போக முடியுமா ?'' என்று கேட்டார் தாத்தா.

''இல்லையின்னாலும், நிலத்தைக் கூடவே கொண்டு போக முடி யுமா தாத்தா ?'' என்று கேட்டுப் பாண்டியன் சிரித்தான்.

தாத்தா பாசத்தோடு அவனது தோள்களைப்பற்றிக் கொண்டார்.

'' டே பாண்டி. நேத்துப் போல இருக்கு. நீ ஆத்தங்கரை யிலே விளையாடிக்கிட்டு திரிஞ்சது. ஆளாயிட்டே. இந்த ஊரையே ஆண்டுக் கிட்டிருக்கே. நீ தாத்தாவை நினைக்கலையின்னாலும் நான் மறக்கலேடா ? நிலத்துக்கு நான் என்ன முடிவு செய் திருக்கேன் தெரியுமாடா ?'' என்று கேட்டு விழிகளில் நீர் பொங்கச் சிரித்தார்.

பாண்டியனின் கண்களும் கலங்கின.

''என்ன முடிவு தாத்தா?''

''நான் பாடுபட்டுத் தேடிக் கிட்ட சொத்து, யாருடா குறுக்கே வர முடியும். ரெண்டு ஏக்கர் நஞ்சையையும் உன் பேருக்கு எழுதி வைக்கப் போறேன்டா பாண்டி' என்றார் தாத்தா பூரிப்புடன் நிமிர்ந்து உட்கார்ந்து.

'' உங்களுக்கு என்மேலே ரொம்பப்பாசம் தாத்தா. ஆனா'' என்றான் பாண்டியன்.

''குறுக்கே என்னமாவதுபேசினே எனக்குக் கெட்ட கோபம் வரும்'' என்றார் தாத்தா. அவருக்கு அப்படித்தான் கோபம் வந்து விடும்.

பாண்டியன் சிரித்தான்.

'' தாத்தா! சொல்றதைக் கேட்டுட்டு அப்புறம்சொல்லுங்க. உங்க பங்காளிகளை யெல்லாம் ஒதுக்கிட்டு நிலத்தை என் பேருக்கு எழுதிக் கொடுக்கிறது தவறு இல்லையா?'' என்று கேட் டான் பாண்டியன்.

'' நான் சம்பாதிச்சது. என் விருப்பத்துக்குச் செய்யிறேன்'' என்று தாத்தா கோபமாகவே குறுக்கிட்டார்.

'' செய்யலாம். அப்புறம் உங்க பங்காளிகளோட நான் ஒரு போராட்டமே நடத்தியாகணும். இதுக்கு, இதைவிட வேறொரு நல்ல பாதை இருக்கு''.

''என்னடா சொல்றே?''.

'' வாழ்நாள் பூராவும் பிள்ளை இல்லையேங்கிற குறையோட இருந்திருக்கிங்க. இந்த ஊருக் குள்ளே இருக்கிற குழந்தைங்க எல்லாமே உங்க பிள்ளைகள்ன்னு நினைச்சுப் பாருங்க. அதிலே எவ்வளவு அமைதி இருக்கு. உங்க நிலத்தையெல்லாம் நம்ம பள்ளிக்கூடத்துக்கு, ஏழைக் குழந்தைகள் மதிய உணவுக் குன்னு எழுதிவையுங்க. இந்த ஊர் இருக்கிறமட்டும், உங்களை வாழ்த்துவாங்க. இதிலே ஏதா வது எதிர்ப்பு வந்தா நானே முன்னால் நிக்கிறேன்'' என்றான் பாண்டியன்.

தாத்தா அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''உங்கப்பனுக்கு நல்லதும் தெரியாது; கெட்டதும் தெரியா தேடா. நீ ஊருக்கே வழி காட்டு றியே'' என்று சொல்லிப் பேரனைத் தழுவிக் கொண்டார்.

அப்போது வாசலில் ஆளரவம் கேட்டது.

தாத்தா, விலகி எட்டிப் பார்த்து "யாரது ?" என்றார்.

''நான்தான் தாத்தா'' என்று சொல்லிக்கொண்டே உள்ளே வந்த டெய்சி, இங்கு தாத்தா வோடு பாண்டியனும் உட்கார்ந் திருப்பதைக் கண்டு, உண்மை யிலேயே திகைத்துப் போய்விட் டாள்.

பாண்டியனுக்கும் இங்கு டெய் சியின் வருகை எதிர்பாராத தாகவே இருந்தது. தாத்தாவே அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

''இவளைத்தெரியாதா உனக்கு? நம்ம மைக்கேல் பொண்ணு. இங்கு வந்துதான் சாப்பாட்டுக்கு நெல் வாங்கிட்டுப் போகும்'' என்ற தாத்தா, டெய்சியின் பக்கமாகத் திரும்பி,''எவ்வளவு, வேணும்? போன மாசத்து விலை தான் இப்பவும்'' என்றார்.

நிற்கவும் முடியாமல், நகரவும் முடியாமல், தாத்தாவுக்கு மறு மொழி சொல்லவும் இயலாமல் தயங்கினாள் டெய்சி.

'' தாத்தா — வந்தவுடனே எனக்குக் காபி பலகாரம் கொடுப் பிங்களே அதை மறந்திட்டிங் களே'' என்று கேட்டுக் குறுக்கே பாய்ந்தான் பாண்டியன்.

## தொலைபேசி இணைப்பில் தமிழ் நாட்டுக்கே முதலிடம் !

இந்தியாவில் தொலை பேசிகள் அதிகமாக உள்ள மாநிலம் தமிழ் நாடு என்றும், ஆண்டு தோறும் எறத்தாழ ஏழா யிரம் தொலைபேசி இணைப் புகள் புதிதாகத் தமிழ் நாட்டில் கொடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அண்மையில் காஞ்சிபுரம் அஞ்சலகக் கட்டடத் திறப்பு விழாவில் கூறப் பட்டது.

பேரன் வாய்திறந்து கேட்டது போதாதா? தாத்தா துள்ளி எழுந்தார்.

" உனக்காகத்தான் பால் வாங்கி வச்சிருக்கேன். தொடி யிலே காய்ச்சிக்கொண்டாரேன்'' என்று சொல்லிவிட்டு, டெய்சி அங்கு நிற்பதையும் திரும்பிப் பாராது உள்ளே ஓடினார்.

புன்னகையுடன் டெய்சியின் பக்கமாகத் திரும்பி உட்கார்ந் தான் பாண்டியன்.

"இன்றைக்கு எப்படியாவது உன்னைப் பார்க்கணும்ன்னு நினைச்சிருந்தேன். தன்னாலே சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. தாத்தா வாழ்க'' என்றான்.

டெய்சி தலைநிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

பார்க்காத போது என்ன வெல்லாமோ பேசத்தோன்றும். பார்க்கும்போது, இப்படித்தான் எல்லாமே உள்ளடங்கிப்போகும்.

''உட்காரு''என்றான் பாண்டி யன். அவள் நின்று கொண்டே இருந்தாள்.

''தொல்லைகள் சூழ்ந்துவரும் போதெல்லாம் உன்னைத்தான் நினைக்கிறேன் டெய்சி. ஒரு தெம்பு வருது'' என்று மேலும் சொன்னான் பாண்டியன்.

'' நீங்க இல்லையின்னு நானே இல்லை. நீங்க ஊருக்குள்ளே இருந்தாலே மனசுக்கு தைரியமா இருக்கு'' என்றாள் டெய்சி.

'' இப்பச் சிவந்தியையும் என் னையும் இணைச்சுப் பேசுறாங்களே, உனக்குக் கோபமே வரலையே'' என்று சிரித்துக்கொண்டே கேட் டான் பாண்டியன்.

''கதையிலேன்னு வரும். நான் தான் கண்ணாலே பார்த்தேனே. நீங்க பேசினதைத்தான் கேட்க முடியலே. நெருப்புச் சுடத் தான் செய்யுது. அதை நினைச்சு உடை பத்தி எரியிறப்ப அணைக்காம நிக்கிறோமா? அந்த மாதிரித்தான் இப்ப நீங்க சிவந்தி யோட பழகுறதும்; உங்கமேலே சுமத்தியிருக்கிற பழிச்சொல் நீங்கணும். அதுக்குத்தான் நான் ஜெபிச்சுக்கிட்டிருக்கேன்.'' என் றாள் டெய்சி.

'' நீ ரொம்ப ரொம்பப் புத்தி சாலி டெய்சி'' என்று ரசித்துச் சொன்னான் பாண்டியன்.

'' உங்களை விடவா? — உங் கள் நெஞ்சிலே குவிந்திருப்பது ஆயிரமாயிரம் இருக்குமே'' என்று சொல்லிப் புன்னகை செய்தாள் அவள்.

'' இருப்பதையெல்லாம் சொல்லட்டுமா?''

''சொல்லுங்க.''

'' சொல்லும் போது கனவு மாதிரியே இருக்கும். நம்ம நாட்டைப்பத்தி நினைக்கிறதை விட, நம்ம ஊரைப்பத்தி அதிக மாவே நினைச்சிக்கிட்டிருக்கேன். நம்ம ஊருக்குள்ளே இருக்கிற அத்தனை குடும்பங்களும் சாதிமத பேதமில்லாத ஒரே சமுதாயமா வாழணும்ன்னு ஆசைப்படுறேன். கடந்து செல்ல வேண்டியது வெகுதூரமா இருந்தாலும், நீயும்—நானும் கைகோர்த்து அந்தப் பாதையிலேஅடியெடுத்து வைக்கப்போறோம் '' என்றான் பாண்டியன்.

டெய்சி இமைப்பதை மறந்து அவனையே பார்த்துக் கொண் டிருந்தாள்.

'' அதனாலே — இனிமேல் அப்படியொரு கடிதம் எழுதும் போது டெய்சி முத்துப் பாண் டின்னே எழுது'' என்று மேலும் பாண்டியன் சொன்னபோது, புன்னகையோடு, முகம் சிவக்கத் தலைகுனிந்து கொண்டாள் டெய்சி.

பின்னால் தாத்தாவின் குரலும் கேட்டது.

# தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு ரூ. 10-00

அரையாண்டு ரூ. 5-00

தனி இதழ் 40 காசு.

விவரங்களுக்கு :

நிருவாகி,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.



வெண்பாப் போட்டி-48.

'நன்றி' எனத் தொடங்கி

'நன்று' என முடித்தல்.

முடிவு நாள் : 16-12-1972.

பரிசு : ஓராண்டு 'தமிழரசு'

அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),

''தமிழரசு'' அலுவலகம்,

அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு :

அஞ்சல் அட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.



விலைவாசியைக் கட்டுப்படுத்த உதவுங்கள்



அதிக விலை கொடுக்காதீர்கள்.

சங்கர் சிமெண்ட் தரம் நிறைந்த சிமெண்ட். ஆனாலும் கூட அதற்கு நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியதில்லை. அங்கீகாரம் பெற்ற எங்கள் விற்பனையாளர்களிடமிருந்தே வாங்குங்கள். எங்கள் விற்பனையாளர்களிடம் கம்பெனி கொடுத்துள்ள சான்றிதழ் இருக்கிறதா என்று பாருங்கள். எங்கள் விற்பனையாளர்களின் கடைகளில் அமுலில் உள்ள நிர்ணய விலை பட்டியல் இருக்கும். அதன்படி நிர்ணய விலையே கொடுத்து வாங்குங்கள்.

SANKAR CEMENT

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்

175/1, மவுண்ட் ரோடு, சென்னை 2

ISI மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது.

சங்கர் சிமெண்ட்

தயாரிப்பாளர்கள்





''இந்தப் பொண்ணும் இங்கதான் நிக்குதா?'' என்று கேட்டுக்கொண்டே வந்த தாத்தா, கையிலிருந்த, ஆவிபறக்கும் பால் நிறைந்த செம்பையும், இரு பித்தளை டம்ளர்களையும், முன் பாகப் பலகையில் வைத்தார்.

வாஞ்சையோடு, பாலை டம்ளரில் ஊற்றிப் பக்குவமாக ஆற்றிப் பாண்டியனிடம் கொடுத்தார் தாத்தா.

டம்ளரைக் கையிலே வாங்கிக்கொண்ட பாண்டியன், ''டெய்சிக்குத் தாத்தா'' என்றான்.

இந்தப் பெண் இன்னும் அங்கேயே நின்றுகொண்டிருந்தது தாத்தாவுக்கு எரிச்சலாகவே இருந்தது. இருக்கும் மற்றொரு டம்ளரில் அவளுக்கும் பாலை ஊற்றிக் கொடுக்கலாம். ஆனால் தாத்தா தயங்கினார்.

பாண்டியன் அவரது முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். சற்று யோசனைக்குப் பிறகு, முன் அறைக்குள் சென்று ஒரு கண்ணாடி டம்ளரை எடுத்து வந்த தாத்தா அதில் பாலை ஊற்றினார்.

தாத்தாவின் போக்குப் புரிந்தது பாண்டியனுக்கு.

நீண்ட பெருமூச்சு அவன் உடலைக் குலுக்கியது.

மதம் என்பதை நோக்கும் போது டெய்சி தாழ்த்தப்பட்டவள் அல்ல. ஆனால் அந்த மதமும் இந்த மண்ணிலே தழைத்து வரும்போது, அதற்குள்ளேயும், மேலும் கீழுமாக, முன்னும் பின்னுமாக, ஒன்றுக்கொன்று ; 'கொடுத்தல்', 'எடுத்தல்' ; இல்லாமல் எத்தனை வேற்றுமை சாதிகள் மறைந்து கிடக்கின்றன. இதுதான் மண்வாகு என்பதோ!

தாத்தா இதைக்கொண்டுதான் எடைபோடுகிறார்.

தாத்தாவை முந்திக்கொண்டு, '' இதை வாங்கிக்கொள் டெய்சி'' என்று சொல்லிக்கொண்டே, தன் கையிலிருந்த டம்ளரை அவளிடம் நீட்டினான் பாண்டியன்.

தாத்தா ஏதோ சொல்ல வாயெடுப்பதற்குள், பாண்டியனை தேடிக்கொண்டு, பரபரப்புடன் வந்த குருவன், '' பொன்னையாவுக்குநேத்துலேயிருந்து தொடர்ச்சியா மயக்கம் தெளியலையாம். மதுரையிலேயிருந்து ஆள் வந்திருக்கு'' என்று தகவல் சொல்லி நின்றான்.

(வளரும்)

‘பஞ்சில் பட்டினில் ஆடையும்
உடையும்
பண்ணி மலைகளென
வீதி குவிப்போம்’

என்றார் பாரதியார். இத்தகைய பட்டாடைகளையும், பஞ்சாடைகளையும் உற்பத்திசெய்து தருகிற கைத்தறிகள் தமிழகத்தில் மட்டும் ஏறத்தாழ 5½ இலட்சம் உள்ளன. இவற்றை நம்பி வாழ்வோர் 20 இலட்சம் பேர். இவற்றில் பட்டுத் துணிகளை உற்பத்தி செய்கிற பட்டுக் கைத்தறிகள் 20 ஆயிரம் உள்ளன. அவற்றில் 8 ஆயிரம் மட்டும் கூட்டுறவுத் துறையின் கீழ் இயங்குகின்றன.

தமிழகத்திலுள்ள பட்டுக் கைத்தறிகளில் பணிபுரியும் தமிழக நெசவாளர்கள், கண்ணைக் கவரும் வண்ணங்களில்—புதுப் புது ரகங்களில் சேலைகள், வேட்டிகள் முதலியவற்றைத் தயார் செய்து தருகின்றனர். பொதுவாகப் பட்டுத் துணிகளுக்கு நல்ல கிராக்கியிருக்கிறது என்றாலும், பொன்னிழை (சரிகை) போட்டுப் பின்னிய உடைகளுக்கு (சரிகைச் சேலை, சரிகை வேட்டி முதலியவைகளுக்கு) அபரிமிதமான கிராக்கியுள்ளது. இவற்றைத் திருமணம் முதலிய பல்வேறு விழாக்களுக்கும், தீபாவளி, பொங்கல் முதலிய பல்வேறு பண்டிகைகளுக்கும் மக்கள் விரும்பி வாங்குகின்றனர்.

பொதுவாகப் பட்டுச் சேலைகளில்—வேட்டிகளில் பயன் படுத்துகிற பொன்னிழையின் மூலப் பொருள்கள் சுத்தமான தங்கம், வெள்ளி, கச்சாப்பட்டு முதலியன.



# பொன்னிழை உற்பத்திக்குப் புதியதோர் ஆலை



இன்று தமிழகத்திலுள்ள கைத்தறிகளுக்கு மாதம் ஒன்றுக்கு 10 ஆயிரம் மார்க்குகள் சரிகை தேவைப்படுகிறது. இந்தச் சரிகையை நாம் இப்போது, குஜராத் மாநிலத்திலுள்ள சூரத்தில் இருந்துதான் வாங்கி வருகிறோம். சூரத்திலிருந்துதான் நாம் இந்தச் சரிகையைபெறவேண்டியிருப்பதால், சூரத் வியாபாரிகள், கூறுகிற விலையை நாம் கொடுத்தாக வேண்டும். மேலும், நமது சரிகைத் தேவை நிறைவுக்கு நாம் சூரத் வியாபாரிகளைத் தான் எதிர் பார்த்திருக்க வேண்டும்.

அன்று, 16-ஆம் நூற்றாண்டில் பிரஞ்சுக்காரர்களால் சூரத்தில் ஆரம்பிக்கப்பட்ட பொன்னிழைத் தொழில், இன்று அங்கு குடிசைத் தொழிலாக வளர்ந்து, அம்மாநிலத்திற்குப் பெரும் பொருளை ஈட்டித் தருகிறது. இந்தியாவில் குஜராத்தில் தவிர வேறெங்கும் இந்தப் பொன்னிழை உற்பத்தி நடைபெறவில்லை. நாம் தமிழகத்திலிருந்து மட்டும் ஆண்டு ஒன்றுக்கு, 2 கோடி 40 இலட்சம் ரூபாயை, இந்தச் சரிகைக்காக குஜராத் மாநிலத்திற்குக் கொடுக்கிறோம். கடந்த ஓரிரு ஆண்டுகளில் 1 மார்க்குக்கு 10-லிருந்து 15 ரூபாய் வரை. விலை ஏற்றம் ஏற்பட்டிருக்கிறது.

1967-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற போது, அவர்கள் கவனத்திற்கு வந்த பல்வேறு பிரச்சினைகளில் பட்டுக் கைத்தறியாளர்கள் பிரச்சினையும் ஒன்று. அப்போதுதான் பேரறிஞர் அண்ணா அவர்கள், சரிகைத் தொழில் இந்த நாட்டில் வேறெங்கும் இல்லாததாலும், ஒரே இடத்தில்தான் உற்பத்தி செய்யப்படுவதால் அவர்கள் கேட்கிற விலையை நாம் கொடுத்தாக வேண்டியிருக்கிறது என்பதாலும் நாமே இதனை இங்கு (தமிழ் நாட்டில்) உற்பத்தி செய்தால், நமது சரிகைத் தேவையை நாம் நிரந்தரமாகவும், நியாயமான விலையிலும், தரமுள்ளதாகவும் (continuous supply, price control and quality) பெறலாம் என்றும், சரிகைக்காக நாம் வெளி மாநிலத்திற்குக் கொடுக்கிற பணம் இங்கேயே புழக்கத்திலிருக்கும் என்றும் கூறித் தமிழ் நாட்டில் பொன்னிழை உற்பத்திச்சாலை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தார்கள்.



பேரறிஞர் அண்ணா அவர்கள் விருப்பம் தெரிவித்ததற்கிணங்கத் தமிழ்நாடு அரசு ஒரு பொன்னிழை உற்பத்தித் தொழிற்சாலையை அரசு நிறுவனமாக ஏற்படுத்த முயற்சி செய்தது. அம்முயற்சியின் விளைவாகத் தமிழ்நாடு அரசு நிறுவனமான ‘தமிழ்நாடு சரிகை லிமிடெட்’ தனது புதிய சரிகைத் தொழிற்சாலையைக் காஞ்சிபுரத்திலேயே நிறுவ முன் வந்தது. இவ்வாலைக்குத் தமிழகத் தொழில் அமைச்சர் திரு செ. மாதவன் அவர்கள் 2—10—1972-ல் அடிக்கல் நாட்டினார்கள். காஞ்சியில், ஓரிக்கை என்னும் கிராமத்தில் உள்ள தொழிற்பேட்டையில் தமிழ்நாடு வணிக வர்த்தகத் துறைக்குச் சொந்தமான 2 ஏக்கர் நிலத்தில் கட்டட வேலை விரைந்து நடைபெற்று வருகிறது.





தமிழ்நாடு சரிகை லிமிடெட் கைத்தறி இயக்குநர், நிதி இலாகா இணைச் செயலாளர், தொழில் துறை இணைச் செயலாளர், செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர், சரிகை நிருவாக இயக்குநர் ஆகிய நால்வரையும் உறுப்பினராகக் கொண்டு இயங்குகிறது.

வருகிற 1973-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் இந்தத் தமிழ் நாடு சரிகை உற்பத்தி ஆலை, உற்பத்தியைத் தொடங்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. கோவையில் உள்ள ‘டெக்ஸ்டூல்’ கம்பெனி அளித்த தொழில் நுணுக்க அறிக்கையின் பேரிலும், ‘இப்கான்’ கம்பெனியினர் அளித்த அறிக்கையின் பேரிலும் பெங்களூரில் இயங்கிவரும் பிரஞ்சு இயந்திரங்களை வாங்கத் தீர்மானித்து அதற்கான நடவடிக்கைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. சரிகைத் தொழிற்சாலைக்குரிய கட்டடத்தைக் கைத்தறித் துறை கட்டிவருகிறது.

தமிழ்நாடு அரசு ஏற்கெனவே இவ்வாலையில் ரூ. 2 இலட்சம் பங்கு எடுத்துள்ளது. திட்டச் செலவைச் சரிக் கட்ட மேலும் ரூ. 5 இலட்சத்தைப் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்கிறது. இது, விரைவில் 20 இலட்சமாக உயர்த்தப்படும்.

ஏற்கெனவே குறிப்பிட்டபடி, வருகிற சனவரியில் உற்பத்தியைத் தொடங்கவிருக்கும் இந்த ஆலை, முதலில் மாதம் ஒன்றுக்கு 1250 மார்க்கு சரிகை உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளது. இந்த உற்பத்தியை வெகு விரைவில் அதிகரிக்கத்தக்க அளவில் இயந்திரங்களை விரிவுப்படுத்தவும் ஒரு திட்டம் உள்ளது. இத்திட்டத்திற்குச் சுமார் ரூ. 25 இலட்சத்திற்கு மேல் செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள 20 ஆயிரம் பட்டுக் கைத்தறிகளில் பெரும் பகுதி காஞ்சிபுரத்தில் தான் உள்ளன என்பதால், தமிழ்நாடு அரசு முதன் முதலாக நிறுவ இருக்கும் இந்தச் சரிகை உற்பத்தி ஆலைக்குக் காஞ்சிபுரத்தையே தேர்ந்தெடுத்திருப்பது மிகவும் பொருத்தமானது; நாளடைவில் இந்த ஆலை நல்ல முறையில் உற்பத்தியைப் பெருக்கித் தமிழகத்தின் சரிகைத் தேவையை நிறைவு படுத்தும்.

தமிழ்நாட்டிலேயே முதன் முதலில் இத்துறையில் துவக்கப் படுகிற இந்தத் தொழிற்சாலை, நெசவாளர்களுக்கு வேண்டிய



நயமான—சுத்தமான—தரமான சரிகையைத் தயாரித்து, அவர்களுக்கு நேரடியாக வழங்கும். தமிழ்நாடு கைத்தறித் துறைக்கு மேலும் கவர்ச்சியூட்ட—தரமான சரிகைத் துணிகள் நியாயமான விலையில் மக்களுக்குக் கிடைக்க இது பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

சாமி பழ.

# தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்

19, 20, லிங்கி செட்டி தெரு, சென்னை-600001.

தந்தி விலாசம் : 'அர்பாங்க்'
தபால் பெட்டி எண் : 226.

தொலைபேசி எண் : 20367, 20368, 20369
டெலக்ஸ் எண் : எம். எஸ். 7225.

எங்கள் வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும், விவசாயத் தொழில்களுக்கும் உதவி செய்யும்.

## வட்டி விகிதங்கள்

| | | |
|---|---|---|
| நடப்புக் கணக்குகள் | .. (வருடத்திற்கு) | ½% |
| சேமிப்புக் கணக்குகள் | .. | 4% |

(குறைந்த அளவு மாத நிலுவையின் பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது)

காலாந்திர கணக்குகள் : ரூ. 1,000-ம் அதற்கு மேலும் (வருடத்திற்கு)

| | | |
|---|---|---|
| 15 நாட்கள் | — | 2% |
| 46 நாட்கள் | — | 3% |

நிரந்தரக் கணக்குகள் : ரூ. 100-ம் அதற்கு மேலும்

| | | | |
|---|---|---|---|
| 91 நாட்கள் | ... 4½% | 24 மாதங்கள் | .. 6¾% |
| 6 மாதங்கள் | .. 5½% | 36 மாதங்கள் | .. 7¼% |
| 12 மாதங்கள் | ... 6½% | 60 மாதங்கள் | .. 7½% |

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1,000-க்கும் அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம கல்வி நிலயங்களின் முதலீடுகளுக்கு மேலே குறிப்பிட்டதைவிட ½% கூடுதல் வட்டி தரப்படும்.

| தொடர் கணக்குகள் | தவணைகளுக்கும் பெறும் மொத்தம் பணம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாதத் தவணை | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| ரூ. 5-ம் அதன் மடங்குகளும் | ரூ. 62 | 128·50 | 201 | 278 | 362·50 | 452 | 548·50 |

---

கிளைகள் :—மயிலாப்பூர், எழும்பூர், திருவல்லிக்கேணி, தியாகராய நகர், காந்திநகர், செனாய் நகர், கெல்லீஸ், சாந்தோம், பிராட்வே ரோடு, மயிலாப்பூர்-குளம், அண்ணாசாலை (காமதேனு), சாஸ்திரி நகர், அசோக் நகர், அண்ணா நகர், அண்ணாசாலை (அண்ணா சிலை), ஜவஹர் நகர், நுங்கம்பாக்கம், பெஸண்ட் நகர்.

---

ஆர். கனகசபை, தலைவர்.
கூடலூர் கி. கிருட்டிணமூர்த்தி, துணைத் தலைவர்.
பு. வர்த்தமானன், செயலர்



# பார்த்தோம்! படித்தோம்!

### தொழிற்பேட்டைக்கு நன்றி!

அம்பத்தூரில் புதிதாகத் துவக்கப்பட்டுள்ள தொழிற் பேட்டையைப் பற்றிய தகவல்களை, உரையாடல் வடிவில் மிக மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறீர்கள்! உங்களுக்கு நன்றி!

—எம். மீனாட்சி, நெல்லை-1.

### வயதை வளர்ப்பவருக்குப் பாராட்டு

வயதை வளர்ப்போம்—சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரை! விஞ்ஞான ரீதியாக—நடை முறைகளை ஆய்ந்து கூறியிருக்கும் இந்தக் கட்டுரை ஆசிரியருக்குப் பாராட்டு!

ஏ. கே. நடேசன், அரக்கோணம்.

### சோதனை தருக.

'உங்கள் தமிழறிவுக்கு ஒரு சோதனை'—சிறந்த முயற்சி. தொடர்ந்து இதுபோல் அநேக சோதனைகளை எங்களுக்குக் கொடுங்கள்! ஏற்றுக்கொள்கிறோம்!

—அ. தமிழ்மன்னன், மதுரை-1.

### புகழ் பெற்ற பூங்கா

சிந்தை கவரும் சிறுவர் பூங்கா—சுவையான கட்டுரை. சிறுவர்கள் மட்டுமல்ல—பெரியவர்களும் படித்து இன்புறும் வண்ணம் எழுதப்பட்டிருப்பதை மறுக்க முடியாது. மிருகக் காட்சி சாலையில் இல்லாத விலங்குகள் கூட இந்தப் பூங்காவில் உள்ள வனப்பகுதியில் இருக்கின்ற செய்தி அறிந்து மகிழ்கிறோம்.

—கோபால், சேகர், சென்னை-17.

### படித்தேன் கவிதை!

''அகிலம் புகழும் நேரு'' கவிதை படித்தேன். படித்தேன் அருந்தியது போன்று மகிழ்ந்தேன். கவிதையை இயற்றியவர்க்கு எனது பாராட்டு!

—எஸ். தீனதயாளன், காரைக்குடி.

### டாக்டருக்கு நன்றி

'வயிற்றில் வரும் புற்றுநோய்' பற்றிய பல தகவல்களைத் தெரிவித்திருக்கும் கட்டுரையில் ''அஞ்சற்க'' என்று டாக்டர் என். ரங்கபாஷ்யம் அவர்கள் அபயம் தந்திருப்பது பாராட்டுக்குரியது. அபாயத்தை நீக்குவதற்கு அரிய வழிகளைச் சொல்லும் டாக்டருக்கு நன்றி!

—கே. கோவிந்தசாமி, தஞ்சை.

### திட்டம் தரும் நன்மைகள்

தமிழக அரசு குடிசைப் பகுதிகளை மாற்றிப், பல மாடிக் கட்டடங்களாக ஆக்கிவரும் அருந்தொண்டுகள் பற்றிய விளக்கங்களை ''7 ஆண்டுகளில் 180 ஆயிரம் புது இல்லங்கள்'' என்னும் கட்டுரை தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறது. இது போன்று, திட்டங்கள் தரும் நன்மைகளை அவ்வப்போது 'தமிழரசி'ல் தருக என்று கேட்டுக்கொள்கிறேன்.

கு. லீலா, மணியக்காரன்பட்டி.

### கோவையைப் பற்றிச் சென்னை இதழ்

துப்பாக்கிக் குண்டுகளாலும் துளைக்க முடியாத தொப்பியை எங்கள் கோவை நகரம் உருவாக்கி வருகிறது என்ற செய்தியைச் சென்னையிலிருந்து வரும் தமிழரசு இதழின் வாயிலாகத்தான் நான் அறிந்து கொண்டேன். வாழ்க தமிழரசு.

—சி. வி. மோகனசுந்தரம், கோவை-1.

# அஞ்சலக சேமிப்பு வங்கி மூலம் சேமியுங்கள்!

- ஏந்த வங்கியும் இதுவரை அளிக்காத அளவுக்கு நடப்புக் கணக்கு – 4 சதவீத வட்டியுடன்
- வேண்டும்போதெல்லாம் பணம் எடுத்துக்கொள்ளலாம்: செலுத்தலாம்; எந்தத் தடையும் இல்லை
- காசோலை வசதிகள் உண்டு
- முற்றிலும் பாதுகாப்பு உடையது
- அஞ்சலகங்கள் அனைத்திலும் இந்த வசதி உண்டு

இப்போது சொல்லுங்கள் சேமிப்பதற்காக
அஞ்சலகச் சேமிப்பு வங்கியை
நான் தேர்ந்தெடுத்தது நியாயம்தானே,






# கண் சிகிச்சை முகாம்களில் ஐந்து மாதச் சாதனைகள்

"முதன் முதலாக நல்லவை யாவும் முயன்று முடிப்பது இன்றையத் தமிழ்நாடு அரசு" என்பதற்குப் பல எடுத்துக் காட்டுகளைக் காட்ட முடியுமெனினும், தற்பொழுது தமிழ் நாடெங்கும் நடைபெற்று வரும் "இலவசக் கண்சிகிச்சை முகாம்" அவைகள் எல்லாவற்றையும் விட உயர்ந்த, ஒப்பற்ற எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது.

கையில்லாமல், காலில்லாமல் களிப்புடன் வாழ்ந்து விடலாம். ஆனால் கண்கள் இல்லாமல்—என்னதான் வசதிகள் இருப்பினும்—களிப்புடன் யாரும் வாழ முடியாது. எனவேதான், பழந்தமிழ் நூல்களுள் ஒன்றான நான்மணிக்கடிகை "கண்ணிற் சிறந்த உறுப்பில்லை" என்று கூறிக் கண்களின் இன்றியமையாமையை எடுத்தியம்புகிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த கண்கள் பழுதடைந்து ஒளியிழந்து விட்டால், அந்தக் கண்களைக் கொண்ட மனிதனின் வாழ்வும் ஒளியிழந்து விடும். அதனால் அனாதையாகவோ அல்லது நடைப் பிணமாகவோ வாழ வேண்டிய நிலையை அடைகின்றான். எனவே, கண்ணொளி இழந்தவர்களுக்குக் கண்ணொளி வழங்க வேண்டியது மனிதாபிமானத்துடன் பணியாற்றும் அரசின் கடமையாகும். இக் கடமையைத் தமிழ்நாடு அரசு செவ்வனே செய்து சிறந்த பணியாற்றி வருகிறது.

சமுதாயத்தின் அடித்தளத்திலே வாழும் ஏழை, எளிய, பாமர மக்களில் பலர் வறுமை காரணமாகவும், அறியாமை காரணமாகவும் கண்ணொளி இழந்து, 'ஏன் பிறந்தோம்?' என்று நொந்து, புழுவாய் நெளிந்து, மனம்புழுங்கி, வாழ வழியின்றி வாடி வதங்கி, நடைப்பிணமாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் இலவசமாகக் கண்சிகிச்சை செய்து கண்ணொளி வழங்கும் மாபெரும் மனிதாபிமானத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உலகிலேயே முதன் முதலாகச் செயல்படுத்தி வருவது, ஏழை எளியவர்களின் மேல் அவருக்குள்ள அக்கறையையும், தமிழ்நாடு அரசின் தலைசிறந்த மக்கள் தொண்டினையும் எடுத்துக் காட்டுவதாக விளங்குகிறது.



இதுபோன்ற இலவசக் கண் சிகிச்சை முகாம் இதுவரை உலகில் எங்கும், என்றும் நடைபெற்றதற்குச்சரித்திரத்தில் சான்றில்லை என்றால் மிகையல்ல.

தமிழகத்தில் கண்புரையாலும் (Cataract), இதர கண் வியாதிகளாலும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 10 இலட்சம் பேர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு வாழ் நாட்களில் தம் பார்வையை இழந்து அவதியுறுவோரின் வாழ்க்கையில் ஒளி யூட்டத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டது. அதன்படி நமது "தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் இலவசக் கண்சிகிச்சை முகாம்கள்" நடத்துவது என்னும் திட்டம் கலைஞரின் 49-வது பிறந்த நாளான ஜுன் 3, 1972 முதல் தொடங்கப்பெற்றது. அவரது பிறந்தநாள் நன்கொடையே அதற்கு அடிப்படையாக அமைந்தது.

இந்தத் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் ஓர் இலட்சம் பேருக்குக் கண்சிகிச்சை அளித்து ஒளி வழங்குவது தமிழ்நாடு அரசின் குறிக்கோளாகும்.

நடப்பு ஆண்டில் இத்திட்டத்துக்கென்று 49,38,000 ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இம் முகாம்களைத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நடத்த, இந்து நடமாடும் மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்



ன. இவற்றில் இரண்டு குழுக்கள் சென்னை, கண் மருத்துவமனைக் கண்காணிப்பாளர் டாக்டர் ஆப்ரகாம் தலைமையிலும், இதர மூன்று குழுக்கள் மதுரை எர்ஸ்கின் மருத்துவமனையைச் சார்ந்த கண் அறுவைச் சிகிச்சை மருத்துவர் டாக்டர் வெங்கடசாமி தலைமையிலும் இயங்குகின்றன. ஒவ்வொரு குழுவிலும், அட்டவணை 1-ல் கண்டபடி நான்கு உதவி மருத்துவர்களும் (Assistant Surgeons), பன்னிரண்டு செவிலியர்களும் (Nurses), ஒரு தலைமைச் செவிலியரும் இதர மருத்துவப் பணியாளர்களும் உள்ளனர்.

இந்த ஐந்து குழுக்களும் கீழ்க்கண்ட மாவட்டங்களில் இலவசக் கண் சிகிச்சை முகாம்கள் நடத்தி வருகின்றன.

குழு 1. சென்னை, செங்கை, தென்ஆர்க்காடு மாவட்டங்கள்.

குழு 2. வட ஆர்க்காடு, தருமபுரி மாவட்டங்கள்.

குழு 3. தஞ்சை, திருச்சி, கிழக்கு இராமநாதபுர மாவட்டங்கள்.

குழு 4. கோவை, சேலம், நீலகிரி மாவட்டங்கள்.

குழு 5. மதுரை, மேற்கு இராமநாதபுரம், நெல்லை, நுமரி மாவட்டங்கள்.

ஒவ்வொரு குழுவினரும், திங்கள் தோறும் இரண்டு முகாம்கள் அமைத்துச் சிகிச்சையளிக்க வேண்டும்; ஒவ்வொரு முகாமிலும் குறைந்தது 500 பேருக்காவது அறுவைச் சிகிச்சை அளிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயலாற்றி வருகின்றனர்.

இந்த நடமாடும் குழுக்கள் சிறப்புறப்பணியாற்ற ஒவ்வொரு குழுவுக்கும் ஓர் இலட்சம் ரூபாய் மதிப்புள்ள மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு பேருந்தும், இரண்டு ஜீப் வண்டிகளும் (Van and Jeep), டாக்டர் வெங்கடசாமி, டாக்டர் ஆப்ரகாம் இருவரும் குழுக்களின் வேலைகளை மேற்பார்வை செய்ய ஒவ்வொருவருக்கும் ஓர் அம்பாசிடர் காரும் வழங்கப்பட்டுள்ளன. இதைத் தவிர மருத்துவத் துறையைச் சார்ந்த ஊர்திகளும் ஆங்காங்கே சென்று இத்திட்டத்தின் குறிக்கோளை மக்களுக்கு எடுத்துக்கூறிச் சிகிச்சை பெற வேண்டியவர்களை முகாமுக்கு வரும்படிச் செய்கின்றன.

ஜூன் திங்களில் தஞ்சை மாவட்டம், திருவாரூரில் துவக்கிய இத்திட்டம், தொடர்ந்து டாக்டர் வெங்கடசாமியின் தலைமையிலுள்ள குழுவினரால் குமாரபாளையம், கோபிச்செட்டிப்பாளையம், பழனி, திருச்செந்தூர், கல்லக்குடி, நாகர்கோவில், திருப்பத்தூர், உதகை, குன்னூர், மாயூரம், போடிநாயக்கனூர், மேலூர் ஆகிய இடங்களில் முகாம்கள் நடத்தப்பட்டு அட்டவணை 2-ல் குறிப்பிட்டபடி இதுவரை 88,470 பேர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். அவற்றுள் 14,190 பேர் கண்புரை நோய்க்காக அறுவைச் சிகிச்சை பெற்றுள்ளனர். சேலம் மாவட்டம் பரமத்தி வேலூரில் 21-10-72-ஆம் நாள் முதல், முகாம் நடைபெற்று வந்தது.

இதுபோலவே, டாக்டர் ஆப்ரகாம் தலைமையிலுள்ள குழுவினர் அனகாபுத்தூர், சிதம்பரம், விருத்தாசலம், அம்பத்தூர், கிருட்டிணகிரி, வேலூர், விழுப்புரம், தருமபுரி, சென்னை நகர் (நுங்கம்பாக்கம்), கடலூர் ஆகிய இடங்களில் முகாம்களை நடத்தியுள்ளனர். இம்முகாம்களில் அட்டவணை 3-ல் கண்டபடி 32,579 பேர் கண் சிகிச்சை பெற்றுள்ளனர். அவர்களுள் 3,826 பேர் கண்புரை நோய்க்கு அறுவைச் சிகிச்சை பெற்றுள்ளனர். தொடர்ந்து சென்னை நகர், கடலூர், முகாம்கள் நடைபெற்று வந்துள்ளன.

மேலும் கோவையில் சி.எஸ். எஸ். டபிள்யூ. மில் திருமண மண்டபத்தில் ஒரு கண் சிகிச்சை முகாம் மருத்துவமனை நிறுவப்பட்டு 24—9—1972 முதல் கண்பார்வை இழந்தோருக்குச் சிகிச்சை செய்து கண்ணொளி வழங்கி வருகிறது. இந்த மருத்துவமனையைத் தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனையில் வாரந்தோறும் குறைந்தது 300 பேருக்காவது கண் அறுவைச் சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கோவைக்கு என ஒதுக்கப்பட்டுள்ள கண் சிகிச்சை முகாம் குழு இதைப் பொறுப்பேற்றுத் திறம்பட நடத்தி வருகிறது. முகாம் மருத்துவ மனைக்குச் சீரமைப்புப் பணிக்காக 25,000 ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவ மனையில் 13—11—72 வரை 588 கண் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. இதே போன்று திருச்சி மாவட்டத் தலைமை மருத்துவ மனையிலும் 21—10—1972-ஆம் தேதி முதல் முகாம் மருத்துவமனை ஏற்பாடு செய்யப்பட்டு இயங்கி வருகிறது.





இலவசக் கண்சிகிச்சை முகாம் துவங்கிய 5 திங்களில், அட்டவணை 4-ல் கண்டபடி 1,21,049 நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாலும், அவர்களுள் 18,016 பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு, மூக்குக் கண்ணாடி வழங்கிக் கண்ணொளி வழங்கப்பட்டுள்ளதாலும் தமிழ்நாடு அரசின் குறிக்கோள் விரைவில் நிறைவேறும் என்பது திண்ணம்.

இத்திட்டம் வெற்றிகரமாகச் செயற்பட்டுப் பல இலட்சம் பேருக்கு இழந்த பார்வையை மீட்டு, அவர் தம் வாழ்வில் ஒளியூட்டச் செய்வது அரசினரின் நோக்காகும். இதற்கு ஏராளமான நிதி செலவிடப்பட வேண்டும். எனவே, இதற்கு என்று "முதலமைச்சர் கண் சிகிச்சைத் திட்ட நிதி" ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அதற்குக் கருணை மனம் படைத்தவர்களிடத்திலிருந்து நன்கொடைகள் பெறப்படுகின்றன. நல்லிதயம் படைத்தோரும், பெரும் தொழில் நிறுவனங்களும், வர்த்தகர்களும் ஆர்வத்துடன் வழங்கும் நன்கொடை நிதியைக் கொண்டு இத்திட்டம் சீரிய முறையிலும், சிறப்புறவும் நிறைவேறி வருகிறது.

இதுவரை நடந்த முகாம்களில் கல்லக்குடி கண்சிகிச்சை முகாமில்தான் அதிகமான பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் ஒரே நாளில் கல்லக்குடியில் 1,218 பேருக்கு அறுவைச் சிகிச்சைகள் செய்தது சிறந்த சாதனையாகும்.

மருத்துவர்கள் கிராமப் பகுதிகளில் சென்று பணியாற்றவில்லை என்ற பொதுவான குறை இருந்தாலும், முதலமைச்சர் கலைஞர் அவர்களின் இலவசக் கண் சிகிச்சைத் திட்டத்தில் கல்லக்குடி போன்ற சிறிய ஊர்களுக்குச் சென்னை, மதுரை, தஞ்சாவூர் போன்ற பெரிய ஊர்களில் உள்ள வைத்திய நிபுணர்கள் சென்றிருந்து வைத்திய சிகிச்சை செய்து திரும்புகிறார்கள். வைத்திய முறையில் சென்னையிலும், மதுரையிலும் எவ்வாறு செய்யப்படுகிறதோ, அதே போன்றுதான் இங்கும் செய்யப்படுகிறது. கிராமப் பகுதிகளில் உள்ள மக்களுக்குச் சிறந்த கண்வைத்தியம் அளிக்க இந்தத் திட்டம் உதவுகிறது.

இவ்வளவு ஆயிரக் கணக்கான பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்வதற்கு மருத்துவமனைகள் கட்ட வேண்டுமென்றால் பல கோடி ரூபாய் ஆகும். அமெரிக்காவிலேயே இப்பொழுது பெரிய மருத்துவமனைகள் கட்டுவதில் அதிகப் பணம் செலவழிக்காமல் குடிசைகளில் வாழும் மக்கள் பகுதியில் அவர்களுக்கு உதவும் வகையில் நடமாடும் வைத்திய நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. இம்முகாம்கள் பள்ளிக்கூடம், கல்லூரி ஆகியவற்றின் விடுமுறை நாட்களில் அவைகளின் கட்டடத்தில் நடைபெறுவதால் குறைவான செலவில் மருத்துவச் சிகிச்சை அளிக்க முடிகிறது.

அரசு ஊழியர்கள், தொழிற்சாலை நிறுவனத்தார், அங்குப் பணிபுரிவோர், மருத்துவர்கள் சேர்ந்து பணிபுரிந்தால் எவ்வளவு பெரிய தொண்டு செய்யலாம் என்பதை இந்த முகாம்கள் எடுத்துக் காட்டுகின்றன. கல்லக்குடியில் நடந்ததுபோல் 2,167 அறுவைச் சிகிச்சைகள் மதுரை அல்லது சென்னை மருத்துவ மனையில் நடக்க வேண்டுமென்றால் பல மாதங்கள் ஆகும். நோயாளிகள் கிராமங்களிலிருந்து நகரங்களிலுள்ள மருத்துவமனைகளுக்குச் சென்று வைத்தியம் செய்ய வேண்டுமென்றால், அவர்களுக்கு அதிகம் செலவாகிறது. மருத்துவ மனைக்குச் சென்று வைத்தியம் செய்வதில் போக்குவரத்து, சாப்பாடு ஆகியவற்றிற்குச் செலவு அதிகமாவதால், பலர் மருத்துவ மனைகளுக்குப் போவதில்லை. அத்துடன் இப்பொழுது உள்ள மருத்துவ மனைகளில் போதிய படுக்கைகள் இல்லாததால் வந்த நோயாளிகள் அனைவரையும் சேர்த்துக் கொள்ள முடிவதில்லை. இந்த மாதிரி முகாம்களில் கிராமப்புறங்களில், குறைவான செலவுடன் வந்து நல்ல சிகிச்சை பெற்றுக் கொள்கிறார்கள்.

இருபது மைல் சுற்றளவுள்ள ஒவ்வொரு பகுதியிலும் இவ்வாறு முகாம் நடத்தினால், ஒவ்வொரு முகாமிலும் 2,000 பேருக்கு அறுவைச் சிகிச்சை

செய்யலாம் என்பது தெளிவாகி யுள்ளது.

பார்வையிழந்த ஏழை மக்களின் துயரத்தைத் துடைப்பதில் மருத்துவர்கள் மட்டும் அல்லாது, அரசு ஊழியர்கள், பெரிய தொழிற்சாலை நிறுவனர்கள் யாவரும் இப்பணி செய்வதில் ஒரு மகிழ்ச்சி அடைகிருர்கள். சம்பளத்திற்கு வேலைசெய்கிறேம் என்ற நினைப்பு எல்லாருக்கும் ஏற்படாமல், நல்ல தொண்டு செய்கிறேம் என்ற நினைப்பு அவர்களுக்கு ஏற்படுவதால், நேரம் காலம் பார்க்காமல் இரவும் பகலும் வேலை செய்கிருர்கள். இந்தக் கண் சிகிச்சை முகாம் மக்கள் மனத்திலே தொண்டார்வத்தை ஊட்டி, நாட்டு மக்களின் நன்மைக்காக சமூகத்தில் மாறுதல்கள் ஏற்படும்.

சத்துக்குறைவான உணவினுல் கண்கள் எவ்வாறு பழுதடையும்? எத்தகைய வியாதிகளால் கண்கள் பாதிக்கப்படுகின்றன? வாழ்நாள் முழுவதும் நல்ல பார்வை பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும்? என்பதையெல்லாம் அறிந்து அதற்கேற்ப நடப்பதால், பல மாறுதல்கள் ஏற்படுகின்றன. ஆதலால் இந்த முகாம்களில் பொதுமக்கள், கல்லூரிகள், மாதர் நலச் சங்கங்கள், அரிமா. ரோட்டரி போன்ற சங்கங்கள் யாவும் பங்கு கொண்டு, கூட்டாகப் பணி செய்வதனுல்தான் கல்லக்குடி போன்ற இடத்தில் 2,000-த் திற்கு மேற்பட்டவர்களுக்குப் பார்வையளிக்க முடிந்திருக்கிறது. பார்வையிழந்த மக்களின் கண்களுக்கு ஒளி கொடுத்து மலரச் செய்வதுடன், இந்த முகாமில் பங்கு கொண்டு பணி செய்யும் எல்லாருடைய வாழ்விலும் மகிழ்ச்சியும், மனநிறைவும் ஏற்படுவதுடன், தொண்டுள்ளம் பெருகுகிறது.

## நல்ல நினைவுச் சின்னம்

தாழ்த்தப்பட்ட குலத்தில் தோன்றிய நந்தனுர், எந்தக் குலத்தினரேனும் உணர்வின்பம் அடைதல் கூடும் என மெய்ப்பித்துக் காட்டிய மேலவர்; செந்தமிழ்ச் சேக்கிழார் தாம் இயற்றிய திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தில், 'திருநாளைப் போவார்' என்று நந்தனுரைச் சிறப்பித்தும் பாராட்டுகிருர். சைவத் தமிழ் உலகம் வியந்து பாராட்டும் அறுபத்து மூவரில் நந்தனுரும் ஒருவர். திரு. கோபால கிருஷ்ணபாரதியார், நந்தனுர் வரலாற்றை இசைப் பாடல்களாக்கித் தந்துள்ளார்.

தற்போது தமிழக அரசு, நந்தனுருக்குச் சரியானதொரு நினைவுச் சின்னத்தை எழுப்ப முன்வந்துள்ளது. நந்தனுர் பிறந்த மேலநல்லூர் கிராமம், தஞ்சை மாவட்டத்தில் சீர்காழி அருகே உள்ளது. தமிழக அரசு, இந்தக் கிராமத்தை ஒரு மாதிரிக் கிராமமாக அமைக்கத் திட்டமிட்டுள்ளது. அங்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கென 27 வீடுகள் (ஒவ்வொன்றும் ரு. 2,000 செலவில்) கட்டப்பட இருக்கின்றன. மேலும், இணைப்புச் சாலைகளுக்காக 3,000 ரூபாயும், அந்த கிராமத்தில் உள்ள நீர்நிலைகளைச் சீரமைக்கவும் காலத்திற்கேற்ப மாற்றியமைக்கவும் 7,000 ரூபாயும் செலவிடப்படும்.

உழைக்க வேண்டுமென்ற எண்ணத்தை ஏற்படுத்தி வருகின்றது.

நல்வாழ்வுப் பணிகளில், மக்களும் அலுவர்களுடன் இணைந்து வேலை செய்தால்தான், அவைகள் சிறப்பாக முடியும். தொத்து நோய்களைத் தடுப்பது, சத்துள்ள உணவு, நல்ல குடி தண்ணீர் ஆகியவை வழங்குவது, சுற்றுப்புறத்தைத் தூய்மையாய் வைத்து இருப்பது போன்ற பணிகள் அரசினுல் மட்டும் முடியாது. மக்களும் அதில் ஈடுபட்டால்தான் முடியும். கண் சிகிச்சை முகாம்களில் மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் ஈடுபட்டுப் பணிபுரியும் போது கண்பற்றிய விவரங்களைப் புரிந்து கொள்வதால்

பொருளாதார வகையில் கணக்கெடுத்துப் பார்த்தாலும் இத்திட்டம் புதிய புரட்சியாகும் என்பதை அறியலாம். அறுவைச் சிகிச்சை செய்யும் ஒவ்வொருவரையும் கேட்டால், எவ்வளவு நாள் பார்வை இல்லாமல் இருந்தார்கள்? பார்வை இழப்பதற்குமுன் அவர்கள் சம்பாத்தியம் என்ன? பார்வை விழந்ததனுல் எவ்வளவு நட்டம் உண்டாயிற்று? என்பதைப் புள்ளி விவரங்கள் எடுத்துப் பார்த்தால் இது புரியும். முன்பு நடத்திய கண்சிகிச்சை முகாம்களில் பொருளாதார நிபுணர்களைக் கொண்டு இத்தகைய புள்ளி விவரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அதிலிருந்து பின்வரும் விவரங்கள் தெரிய வந்துள்ளன.

சராசரி பார்வை இழந்து வருந்திய காலம் 9 மாதங்கள். பார்வை இழப்பதற்கு முன் சராசரி வருமானம் ரு. 55. ஒவ்வொருவருக்கும் பார்வை இழந்ததனுல் ஏற்பட்ட நஷ்டம் ரூபாய் 500. குடும்பத்தினருக்கோ இதரருக்கோ இதனுல் பாரம் அதிகமாகியது. பலர் தாம் நடத்திவந்த கடையை மூடி விட்டார்கள். அல்லது விவசாயத்தைச் சரிவர நடத்த முடியவில்லை. கிராமத்தில் சிறுதொழில் செய்பவர்களும் தொழிலை விட்டு விடுகிருர்கள். அவர்களுக்குக் காலாகாலத்தில் அறுவைச் சிகிச்சை செய்து பார்வையளித்து விட்டால், இந்த நட்டமும் துயரமும் ஏற்பட்டிருக்காது. அறுவைச் சிகிச்சைக்கு ஏற்படும் செலவெல்லாம் ரூபாய் 50 தான். இந்த 50 ரூபாய் இல்லாமையினும், இத்தகைய முகாம்களை முன்பு ஏற்பாடு செய்யாமையினும் கோடிக்கணக்கான பண நட்டமேற்பட்டுள்ளது. [illegible]ளும் அளவிட முடியாத அவதிப் பட்டார்கள். எனவே இவ்வளவு குறைந்த செலவில் இலட்சக் கணக்கான மக்களுக்குப் பயன்படும் திட்டம் இதுபோல் வேறு எதுவும் இல்லையென்று கூறலாம்.

நாட்டில் மக்கள் நல்வாழ்வுக்கு அமைத்திருக்கும் புதிய திட்டங்களில் இது சிறந்த திட்டமாகும். ஏழைகள், பாட்டாளிகள் விவசாயப் பெருமக்கள் வாழும் கிராமப் பகுதிகளுக்குச் சிறந்த வைத்திய நிபுணர்கள் சென்று வைத்தியம் செய்யும் திட்டமிது. இத்திட்டத்தில் எல்லாரையும் ஈடுபடுத்தி, சமூகப்புரட்சி உண்டாக்க வேண்டும் என்ற நோக்குடன், இருக்கிற கட்டடங்களை உபயோகித்துக்குறைந்தசெலவில் அதிக அளவில் மக்களுக்கு உதவும் திட்டம் இது. அதனுல்தான் உலகத்தில் உள்ள நிபுணர்கள் பலர் இத்திட்டத்தைப் புகழ்ந்தும், ஆதரித்தும் எழுதியிருக்கிருர்கள்.

எனவே, ஒளியிழந்தவர்களின் வாழ்வில் ஒளியேற்படுத்தும் தமிழ்நாடு அரசின் மனிதாபிமானப் பணிக்கு அனைவரும் நிதி உதவி செய்யும், உடலுழைப்பும் நல்கியும், ஒத்துழைப்பு அளித்தும் ஒளிமயமான எதிர்காலத்தை அனைவருக்கும் ஏற்படுத்துவோம்.

அட்டவணை—1

"தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் இலவசக் கண் சிகிச்சை முகாம் நிதி"யின் அமைப்பின்கீழ் இயங்கும் ஐந்து நடமாடும் கண் சிகிச்சை முகாம்கள் ஒவ்வொன்றிலும் பணியாற்றும் அலுவலர்களின் விவரம்:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| உதவி மருத்துவர்கள் (அசிஸ்டண்ட் சர்ஜன்கள்) | 4 | அறுவைச் சிகிச்சைக்கூட உதவியாளர்கள் (தியேட்டர் அசிஸ்டெண்ட்). | 3 | பணியாளர் (அட்டண்டர்) | 1 | புள்ளிவிவர அலுவலர் (ஸ்டாடிஸ்டிசியன்) | 1 |
| செவிலியர் (நர்சுகள்) | 12 | உதவிச் செவிலியர் (நர்சிங் அசிஸ்டெண்ட்ஸ்) (ஆண் 2, பெண் 2) | 4 | துப்புரவாளர் (ஸ்வீப்பர்) | 3 | தட்டச்சக—எழுத்தர் (கிளார்க்-கம்-டைப்பிஸ்ட்) | 1 |
| தலைமைச் செவிலியர் (ஹெட் நர்ஸ்) | 1 | மின் பணியாளர்கள் (எலக்ட்ரிசியன்) | 2 | ஓட்டுநர் (டிரைவர்) | 4 | கடைநிலை ஊழியர் (லாஸ்ட் கிரேட் கவர்ன்மெண்ட் சொர்வண்ட்) | 2 |
| விழி பரிசோதகர் (ஆப்டீஷியன்) | 3 | மருந்தாளுநர்கள் (பார்மசிஸ்ட்) | 2 | பண்டக எழுத்தர் (ஸ்டோர்ஸ் கிளார்க்) | 1 | துடைப்பவர் (கிளீனர்ஸ்) | 2 |

அட்டவணை—2

முதல்வர் கலைஞர் இலவசக் கண் சிகிச்சை முகாம்களில் டாக்டர் வேங்கடசாமி குழுவினரால் சிகிச்சை பெற்றவர்கள் விவரம்

| முகாம் நடைபெற்ற இடம் | முகாம் நடைபெற்ற காலம் — முதல் | வரை | முகாமுக்கு வந்த மொத்தப் பிணியாளர் | கண் புரைக்கு அறுவைச் சிகிச்சை பெற்றவர்கள் | கண்பரிசோதனை செய்து அறிவுரை வழங்கப் பெற்றேர் | இதர அறுவைச் சிகிச்சை | இது வரை அனுமதிக்கப்பட்ட முன் பணம் (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|
| திருவாரூர் | 2—6—72 | 10—6—72 | 15,013 | 2,035 | 1,678 | 120 | 1,16,630 |
| | 24—6—72 | 10—7—72 | | | | | |
| குமாரபாளையம் | 22—7—72 | 31—7—72 | 5,048 | 1,051 | 1,618 | 24 | 72,918 |
| கோபிசெட்டிப்பாளையம் | 15—7—72 | 7—8—72 | 10,693 | 2,102 | 2,581 | 2,102 | 2,01,938 |
| பழனி | 3—8—72 | 12—8—72 | 4,650 | 847 | 696 | 27 | 81,000 |
| திருச்செந்தூர் | 16—8—72 | 23—8—72 | 4,699 | 320 | .. | .. | .. |
| கல்லக்குடி | 19—8—72 | 28—8—72 | 14,328 | 2,167 | 493 | .. | .. |
| நாகர்கோவில் | 2—9—72 | 9—9—72 | 1,451 | 151 | 467 | 20 | 54,000 |
| திருப்பத்தூர் | 12—9—72 | 23—9—72 | 6,948 | 778 | 488 | 30 | 36,000 |
| உதகை | 11—9—72 | 20—9—72 | | | | | |
| | | | 4,715 | 306 | 939 | .. | 35,000 |
| குன்னூர் | 13—9—72 | 23—9—72 | | | | | |
| மாயூரம் | 19—9—72 | 28—9—72 | 3,576 | 1,770 | 151 | 63 | 72,000 |
| போடிநாயக்கனூர் | 23—9—72 | 2—10—72 | 8,317 | 848 | 512 | 54 | 36,000 |
| கோவை (கண் சிகிச்சை முகாம் மருத்துவ மனை) | 24—9—72 | ஆறு திங்களுக்கு | 2,291 | 588 | 272 | .. | .. |
| மேலூர் | 30—9—72 | 8—10—72 | 6,626 | 1,134 | 940 | | 1,84,000 |
| பரமத்தி வேலூர் | 21—10—72 | 6—11—72 | | | | | |
| திருச்சி கண் சிகிச்சை முகாம் மருத்துவமனை | 21—10—72 | | 115 | 93 | .. | .. | .. |
| மொத்தம் | | | 88,470 | 14,190 | 10,835 | 2,440 | 9,54,486 |

அட்டவணை—3

டாக்டர் ஆப்ரகாம் குழுவினரால் சிகிச்சை பெற்றவர்கள் விவரம்

| முகாம் நடைபெற்ற இடம் | முகாம் நடைபெற்ற காலம் முதல் | வரை | முகாமுக்கு வந்த மொத்தப் பிணியாளர் | கண் புரைக்கு அறுவைச் சிகிச்சை பெற்றவர் | கண் பரிசோதனை செய்து அறிவுரை வழங்கப் பெற்றவர் | இதர அறுவைச் சிகிச்சை | இது வரை அனுமதிக்கப் பட்ட முன் பணம் (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|
| அனகாபுத்தூர் | 3—6—72 | 12—6—72 | 1,325 | 89 | 165 | .. | 2,000 |
| சிதம்பரம் | 21—6—72 | 5—7—72 | 4,624 | 433 | 1,497 | 31 | 2,000 |
| விருத்தாசலம் | 13—7—72 | 28—7—72 | 4,735 | 37 | 1,235 | 14 | 29,070 |
| அம்பத்தூர் | 14—8—72 | 28—8—72 | 2,442 | 403 | 610 | .. | 27,000 |
| கிருஷ்ணகிரி | 28—8—72 | 9—9—72 | 3,930 | 333 | 1,896 | 8 | 27,500 |
| வேலூர் | 13—9—72 | 25—9—72 | 3,314 | 513 | 527 | .. | 18,000 |
| விழுப்புரம் | 27—9—72 | 11—10—72 | 3,985 | 492 | 687 | .. | 18,000 |
| தருமபுரி | 6—10—72 | 18—10—72 | 4,135 | 512 | 1,015 | | 18,000 |
| சென்னை நகர் (நுங்கம்பாக்கம்) | 20—10—72 | 3—11—72 | 2,397 | 162 | .. | .. | .. |
| கடலூர் | 26—10—72 | 8—11—72 | 1,688 | 352 | 325 | .. | .. |
| | | மொத்தம் | 32,579 | 3,826 | 6,057 | 58 | 1,41,570 |

அட்டவணை—4

| முகாம்களின் பெயர் | முகாம்களின் எண்ணிக்கை | முகாமுக்கு வந்த மொத்தப் புறநிலைப் பிணியாளர் | கண் புரைக்கு அறுவைச் சிகிச்சை பெற்றவர் | கண் பரிசோதனை செய்து அறிவுரை பெற்றவர் | இதர அறுவைச் சிகிச்சை பெற்றவர் | இதுவரை முகாமுக்கு அனுமதிக்கப் பட்ட முன்பணம் |
|---|---|---|---|---|---|---|
| டாக்டர் வேங்கடசாமி அவர்களின் தலைமையில் இயங்கும் மூன்று குழுவினர் நடத்திய முகாம்கள். | 16 | 88,470 | 14,190 | 10,835 | 2,440 | 9,54,486.00 |
| டாக்டர் ஆப்ரகாம் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கும் இரண்டு குழுவினர் நடத்திய முகாம்கள். | 10 | 32,579 | 3,826 | 8,057 | 58 | 1,41,570.00 |
| மொத்தம் | 26 | 1,21,049 | 18,016 | 18,892 | 2,498 | 10,96,056.00 |

# அட்டை சொல்லும் கட்டுரை

## அட்டையில் காட்சி தருவது நாட்டியக் கலாலயத்தின் ஆசிரியரும் மாணவியரும்



பண்டைக் காலம் முதற்கொண்டே நாட்டியக் கலை தலைசிறந்த கலையாகவும், நிலைபெற்ற கலையாகவும் விளங்கி வருகிறது. பண்புள்ள கலைஞர்களும், அறிஞர்களும், புலவர்களும் இந்தக் கலையைத் தந்தையாகவும், இசைக்கலையைத் தாயாகவும், மற்றக் கலைகளாகிய நாடகக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை இம்மூன்றையும் குழந்தைகளாகவும் இணைத்துச் சீராட்டிப் பாராட்டிப் பேணிப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள்.

அன்று முனிவர்களும், அரசர்களும், அரசிகளும் ஆடற்கலையை வரையோடும் முறையோடும் நிறைவோடும் ஆடி வந்திருக்கிறார்கள் என்பதற்கு அகத்தியர், நந்திகேசுவரர், பரத முனிவர், பரத சேனாபதியார் போன்ற முனிவர்களின் நூல்கள் இன்றும் ஆதாரமாக இருந்து வருகின்றன.

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இளங்கோவடிகளால் அருளப்பெற்ற 'சிலப்பதிகாரம்'; சேர மன்னன் ஆட்டனத்தி ஆதிமந்தி வரலாறு; அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, போன்ற நூல்கள்; அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர் ஆகியோர் கூத்தப்பெருமானின் ஆடலைப் புகழ்ந்து கூறியுள்ள கால வரம்பற்ற நூல்கள் ஆகியவை பரத நாட்டியத்தின் உண்மைகளையும் மேன்மைகளையும் எடுத்து உரைக்கின்றன.

ஆண்களுக்கும், பெண்களுக்கும் உடற்பயிற்சி மிக அவசியம். ஆண்கள் செய்யும் தேகப்பயிற்சியைப் பெண்கள் செய்ய முற்பட்டால் அவர்களின் மென்மை குன்றிவிடும்; பெண்மை மாறிவிடும் என்பதற்காகவே பெண்மைக்கேற்ற கலையம்சத்தோடு கூடிய உடற்பயிற்சியாகவும் நாட்டியக் கலையைப் பெரியோர் பரப்பியிருக்கிறார்கள்.

"நாட்டியக் கலையை முறையோடு பயின்ற பெண்களுக்கு உடற்கட்டுத் தளராது; முகப்பொலிவு குன்றாது; பண்பு நான்கும் கெடாது; தாய், தந்தை, குரு, தெய்வம் என்ற உண்மைப் பொருள்கள் மனத்தை விட்டு அகலா; உத்தமப் பெண்களாக விளங்குவார்கள்; நீண்டகாலம் திடமாக வாழ்வார்கள்" என்றெல்லாம் பரத சாத்திரம் கூறியிருக்கிறது.

ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு முறைகளைக் கைக்கொண்டு நாட்டியம் நடைபெறுகிறது. ஆனால் இன்று புகழ் பெற்று நிற்பது பரதநாட்டியம், கதக்களி, மணிப்புரி, கதக் இவைகளேயாகும். குச்சிப்புடி, ஒரிஸ்ஸி நடனம் என்கிறார்கள். இவை இரண்டும் பரத நாட்டியத்தைத் தழுவியே செய்யப்படுகின்றன. குச்சிப்புடி, ஏறக்குறைய தெருக்கூத்துப் போன்றது. இரண்டொரு ராகங்களையும் இரண்டொரு தாளங்களையும் முதன்மையாகக் கொண்டு நடைபெறுவதாகும். சிரமம் தெரியாது வளர்ந்து வரும் நாகரிகப் பெண்களுக்கேற்றவாறு எளிதாக ஆடும்படி இருப்பதாலும் தாள வகையோ, ராக முறையோ முத்திரை வேறுபாடுகளோ, ஜதிகளோ முக்கியத்துவம் பெறாதபடியாலும் நாகரிகப் பெண்கள் அதை நாடுகின்றனர்.

...ற்றுக் கொள்ளப்பட்டும் கற்றுக்கொள்ள வேண்டும். வாய்ப்பாட்டுக் கற்றுக் கொள்ள முடியாதவர்கள் ஏதேனும் ஓர் இசைக் கருவியை இயக்குவதற்குக் கற்றுக் கொள்ளவேண்டும். வீணை, வயலின், மிருதங்கம், கோட்டு வாத்தியம் ஆகியவை இங்கே கற்றுத் தரப்படுகின்றன.

வாய்ப்பாட்டு வகுப்பில் பயில்பவர்கள் நாட்டியம் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால், அவர்களும் ஏதேனும் ஓர் இசைக் கருவியை இயக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஆகவே, நாட்டிய டிப்ளமாப் பட்டம் பெறுவதற்கு ஒரு மாணவி ஐந்தாண்டு கற்க வேண்டியுள்ளது. நாட்டியம் கற்க ஐந்தாண்டுகளா என்ற எண்ணம் நமக்குத் தோன்றலாம். சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் இதில் வியப்பு ஏற்படுவதற்கு வழியில்லை. ஏனென்றால் நாட்டியத்திற்கு உடல் உழைப்புத் தேவை. அதிலும் நுண்மையான உழைப்புத் தேவை.



உடல் உறுப்புக்களும், தசைநாளங்களும், ஆடுவோரின் எண்ணத்திற்கு ஏற்ப அசைய வேண்டும் அல்லவா? ஒரு நாள், இரண்டு நாள், ஒரு வருடம், இரு வருடப் பயிற்சியில் முடிகின்ற செயலா என்ன? கையும், காலும் அசைய, அகத்தில் உள்ள எண்ணங்களை முகத்தின் வாயிலாகப் பிறருக்குத்தெரிவிக்க—அதுவும் துரித கதியில் தெரிவிக்க—ஐந்தாண்டுப் பயிற்சி அவசியம் தேவைதான்.

முதல் ஆண்டு முழுதும் கால்களின் அசைவுகள் மட்டும்தான் கற்பிக்கப்படுகின்றன. இரண்டாம் ஆண்டில், கால்களோடு கைகளின் அசைவுகளும் கற்றுத் தரப்படுகின்றன. மூன்றும் ஆண்டிலிருந்துதான் முக பாவங்கள் கற்றுத் தரப்படுகின்றன.

இந்த நிலையத்தில் நாட்டியம் கற்றுக் கொள்வதற்காக, இந்தியாவின் வேறு மாநிலங்களிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் மாணவ, மாணவியர் வருகிறார்கள்.

வெளிநாட்டவர்கள் ஐந்தாண்டுக் காலம் இங்கே தங்கியிருந்து நாட்டியக் கலையைக் கற்பது என்பது இயலாத செயல் என்பதால் அவர்களுக்கு இரண்டு ஆண்டுப் படிப்புத்தான் கற்றுத் தரப்படுகிறது. நாட்டியக் கலையின் நுணுக்கங்கள் அனைத்தையும் அவர்களுக்குச் சொல்லித்தர முடிவதில்லை. ஒரு சிலவே கற்றுத் தரப்படுகின்றன. எனவே இது 'சர்ட்டிபிகேட் படிப்பு' (Certificate Course) என்று வழங்கப்படுகிறது.

சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா, ஐரோப்பா, இலங்கை, பிரேசில், அர்ஜெண்டைனா, மெக்சிகோ, பிரான்ஸ், இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து, ருஷ்யா, பிஜித்தீவு, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து எல்லாம் மாணவியர் வந்து, இந்த நிலையத்தில் நடனம் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்தோனேசியாவைச் சேர்ந்த ஒரு மாணவி இங்கே இருந்து 11 ஆண்டுகள் சொந்த அண்மையில்தான் சொந்த நாட்டுக்குச் சென்றிருக்கிறார்.

ஆண்டு தோறும், டிப்ளமா பட்டம், பட்டமேற் படிப்பு ஆகியவற்றில் பன்னிரண்டு பேர் பட்டம் பெற்றுச் செல்கிறார்கள்.

இங்கே நாட்டியம் கற்றுத் தேர்ச்சி பெற்ற ஒரு மாணவி, காசிப் பல்கலைக் கழகத்தில் நாட்டியத் துறையின் தலைவியாக உள்ளார். மற்றொரு மாணவி, பரோடா பல்கலைக் கழகத்தில் நாட்டியத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார்.





இங்கிருந்து பட்டம் பெற்று வெளியே சென்றவர், நாட்டியக் கலையில் பெருந்திறமை பெற்றுப் புகழ்க்கொடி நாட்டி வருகிறார்கள். சிலர், நாட்டியக் குழுக்களை அமைத்துக் கொண்டு, சிறந்த நாட்டியப் படைப்புகளை வழங்கி, இந்த நிலையத்துக்கும், நாட்டியக் கலைக்கும் பெருமை சேர்த்து வருகிறார்கள்.

இந்த நிலையத்தில், தற்பொழுது பணியாற்றும் நாட்டிய ஆசிரியர்கள் இங்கேயே கற்றுத் தேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தகுந்தது.

கதக்களியும் இங்கே கற்றுத் தரப்படுகிறது. முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு கேரளத்தில் உருவான இக் கதக்களி இன்று உலகப் புகழ் பெற்ற நாட்டியமாக விளங்கி வருகிறது. இந்தக் கலையில் புகழ் பெற்ற ஆசிரியர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்களின் திறமைமிக்க பயிற்சியின் காரணமாக இங்கே கற்கும் மாணவியரும் புகழடைகிறார்கள். ஒருமுறை, இந்த நிலையத்து மாணவியர் கேரளத்தில் கதக்களி நாட்டிய நிகழ்ச்சியை நிகழ்த்திய போது, கேரளத்திலுள்ளவர்களே வியந்து பாராட்டியிருக்கிறார்கள் என்றால், இந்த நிலையத்து மாணவியர், திறமை பெற்றவர்கள் என்பதுதானே பொருள்!

இங்குள்ள வருகையாளர் பதிவேடு ஏராளமான வெளிநாட்டு; உள்நாட்டுத் தலைவர்கள், மேதைகள் ஆகியோரின் கையெழுத்துக்களைச் சந்தித்திருக்கிறது. மறைந்த மாகவிஞர் தாகூர், பண்டித நேரு, ராஜேந்திர பிரசாத், ஜாகிர்உசேன், ஆகிய இந்திய நாட்டுத் தலைவர்களும், நாசர், புல்கானின், அட்லி போன்ற வெளிநாட்டுப் பிரமுகர்களும் இங்கே வருகை புரிந்திருக்கிறார்கள்.

நாட்டியக் கலையை வளர்த்து வரும் இந்த நிலையத்தில் பந்தணைநல்லூர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, பந்தணைநல்லூர் சொக்கலிங்கம் பிள்ளை ஆகிய மேதைகள் பணியாற்றியிருக்கிறார்கள். அவர்களது அயராத பணி, இந்த நிலையத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் பேருதவி செய்திருக்கிறது.

வெளிநாடுகளிலும், பிற மாநிலங்களிலும் நமது தமிழகத்தின் பெருமை பரவுவதற்குத் துணை புரியும் இந்த நாட்டிய நிலையமும் இது போன்ற ஏனைய நிலையங்களும் தமிழக வரலாற்றில் அழியா இடம் பெறும் என்பது உறுதி!

—த.பி.



# நாட்டியக் கலாலய மாணவிகள்

பொதுவாகக் கதக்களி நடனம், உச்சி முதல் கழுத்து வரை முகபாவங்களை மட்டும் முதன்மையாகக் கொண்டு அபிநயித்துக் காட்டுவதாகும். மணிப்புரி நடனம் இடுப்பில் கூடை கட்டிக் கொள்வதால் கழுத்து முதல் இடுப்பு வரை அங்க அசைவுகளை மட்டும் முதன்மையாகக் கொண்டு காட்டுவதாகும். 'கதக்' நடனம், இடுப்பு முதல் பாதம் வரை இருகால்களாலும், காலின் விரல்களாலும் தாள வேறுபாடுகளைக் காட்டி, ஜதிகளை முதன்மையாகக் கொண்டு ஆடுவதாகும். பரதநாட்டியம் உச்சி முதல் உள்ளங்கால் வரையுள்ள உடல் உறுப்புக்கள் அனைத்தையும் காரண காரியங்களோடு இயங்கச் செய்து பாவ, ராக, தாளங்களோடும் முத்திரைகளோடும் எல்லா அம்சங்களும் பொருந்தி ஆடுவதாகும். ஆகவே பரதக்கலை தலை சிறந்த கலை என்பது உறுதி.

நடன ஆசிரியர்கள் என்றால் அவர்களுக்கு அடைவு ஜதிகள் 108, முத்திரைகள் 108, கரணங்கள் 108, தாளவகை 108, நவரசம், தாளலயம், இசை, அதன் நுட்பம், நூற்புலமை, பாடல் இயற்றும் வன்மை, சாத்திர, சரித்திர ஆராய்ச்சி இவை ஒருங்கே அமைந்திருக்க வேண்டும். இசையை எவ்விதம் முறையோடு வகுத்து இருக்கிறார்களோ, அது போல் நாட்டியத்தையும் வரை முறையோடு வகுத்து இருக்கிறார்கள்.

அந்த நாட்களில் நாட்டியம், ஆலயங்களிலும், மன்னர்களின் அவைகளிலும் தான் நடைபெற்று வந்திருக்கிறது. பிற்காலத்தில்தான் பொதுமக்களின் கண்களுக்கு நாட்டியம் விருந்தாகியிருக்கிறது.

அண்மைக் காலத்தில் இந்த அருங்கலையை மேடைக்குக் கொண்டு வர வழி வகுத்தவர்கள் தஞ்சாவூர் பொன்னையா, சின்னையா, வடிவேலு, சிவானந்தம் ஆகியோர்தாம் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களின் வழிவந்தவர்கள் இன்று இந்த அருங்கலையைக் காப்பாற்றி வருகிறார்கள்.

அவர்களில் பந்தணைநல்லூர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, பந்தணைநல்லூர் சொக்கலிங்கம் பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர், காட்டு மன்னார்கோயில் முத்துவீரப்பிள்ளை, வழுவூர் இராமையா பிள்ளை, கே. என். தண்டாயுதபாணிப்பிள்ளை போன்றவர்கள் இன்று புகழ்பெற்ற நடன ஆசிரியர்கள் என்பதைத் தமிழகம் நன்கு அறியும்.

இவர்களது நாட்டிய நிலையங்களில் பயிற்சி பெற்றுத் தேர்ந்துள்ள நடனமணிகள் எண்ணற்றவர்கள். அவர்களில் பலர் அகில உலகப் புகழ் அடைந்திருக்கிறார்கள் என்பதை மறக்க முடியாது.

தனிப்பட்ட நடன ஆசிரியர்களைத் தவிரச் சில நிறுவனங்களும் இந்த அருங்கலையை மாணவர்க்குக் கற்பித்து வருகின்றன. அவற்றில், சென்னை அடையாற்றில் உள்ள கர்நாடக இசைக் கல்லூரி, திருவான்மியூரில் உள்ள கலாசேத்ரா ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

அடையாற்றில் உள்ள கர்நாடக இசைக் கல்லூரி பற்றிய கட்டுரை 'தமிழரசு' அக்டோபர் 16-ஆம் நாள் இதழில் வெளியிடப் பெற்றது.

கலாசேத்ரா என்ற நிலையம் 1936-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 6-ஆம் நாளில், அடையாற்றில் திருமதி ருக்மணி தேவி அவர்களால் ஒரே ஒரு மாணவியுடன், ஒரே ஓர் அறை உள்ள கட்டடத்தில் துவக்கப்பெற்றது. இன்று திருவான்மியூரில் 100 ஏக்கர் பரப்பளவில் நூறு மாணவ, மாணவியர்க்கு நாட்டியக்கலை, மற்றும் இசைக்கலை முதலியவற்றைக் கற்பித்து வருகிறது. நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களை ஏற்றுக் கொள்ள இந்த நிலையம் விரும்புவதில்லை. கலைத் துறைப் பயிற்சியில் தனிப்பட்ட கவனம் செலுத்த வேண்டியது அவசியம். ஏராளமான மாணவர்களை ஏற்றுக் கொண்டால் அவ்வாறு தனிக் கவனம் செலுத்துவது இயலாததாகிவிடும். அதனால்தான் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவில்லை இந்நிலையத்தினர்.

13 வயதுக்கு மேல் - பதினெட்டு வயதுக்கீழ் உள்ள மாணவியர் இங்கே சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

சங்கீத சிரோன்மணி, கலாசேத்ரா—இசை டிப்ளமா, பரதநாட்டிய டிப்ளமா, நாட்டியம், இசை இரண்டிலும் பட்ட மேற்படிப்பு, பரதநாட்டியம், இசை இரண்டிலும் பகுதி நேரப் படிப்பு, மெட்ரிகுலேசன் வகுப்பு, ஓவியம் ஆகியவை இங்கே உள்ளன.

நாட்டியத்தைப் பொறுத்த அளவில், முதன் முதலில் தகுதிகாண் வகுப்பு (Probationary Course) ஒன்று உள்ளது. பொதுக் கல்வியில் போதுமான தகுதியுள்ள 13 வயது மாணவியர் இந்த ஓராண்டுப் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். மாணவியர் இந்த வகுப்பில் சேர்ந்து, தேர்ச்சி பெற்ற பிறகுதான் நான்கு ஆண்டுப் படிப்பான டிப்ளமாவுக்கு அனுப்பப்படுகிறார்கள். இந்த ஓராண்டுப் பயிற்சியில் தெளிவும், திறமையும் இல்லாது காணப்படும் மாணவியர்கள் - டிப்ளமா படிப்பைப் படிக்க அனுமதிக்கப்படுவதில்லை.

நாட்டியக் கலையில் முன் அனுபவமும், திறமையும் உள்ள மாணவியர் விஷயத்தில் விதி தளர்த்தப்படுகிறது. அவர்கள் ஓராண்டுத் தகுதிகாண் வகுப்புக்குப் போக வேண்டியதில்லை. நேரடியாக டிப்ளமா பயிற்சியிலேயே அனுமதிக்கப்படுகிறார்கள்.

நாட்டிய டிப்ளமா தேர்வில் முதல்நிலை—இறுதிநிலை என இரண்டு பகுதிகள் உள்ளன.

முதல்நிலைத் தேர்வு இரண்டாம் கல்வி ஆண்டின் முடிவிலும், இறுதிநிலைத் தேர்வு நான்காவது கல்வி ஆண்டின் முடிவிலும் நடைபெறுகின்றன. முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, தனித் தன்மை ஆகிய தகுதிகளுடன் வெற்றி பெறும் மாணவியருக்கு டிப்ளமா பட்டம் வழங்கப்படுகிறது. முதல் நிலையில் தேர்ச்சி பெறாத மாணவியர் இறுதி நிலைத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவதில்லை.

பரதநாட்டியம், கதக்களி, கிராமிய நடனம், இசை, பொதுக்கல்வி ஆகியவை டிப்ளமா வகுப்பு மாணவியர் படிக்க வேண்டியவை.

தமிழ், தெலுங்கு, இந்தி, சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஏதேனும் ஒன்றில் ஒரு மாணவி, மொழியும் இலக்கியமும் கற்க வேண்டும்.

கலாசேத்ராவின் நாட்டிய டிப்ளமா பட்டம் பெறுவோர், அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றத் தகுதியுடையவர்கள் என்று அரசு அனுமதித்திருக்கிறது.

கலாசேத்ராவின் நாட்டிய டிப்ளமா பட்டம் பெற்ற மாணவியர், விரும்பினால், பட்ட மேற்படிப்புப் (Post-Graduate Course) படிக்கலாம். இது இரண்டாண்டுப் படிப்பாகும். இந்தப் படிப்பில் மாணவியர் நாட்டியம் பற்றிய அனுபவப் படிப்புகளையும், கற்பிப்பதற்குரிய பயிற்சிகளையும் பெறுகிறார்கள்.

இந்த நிலையத்தில் குறிப்பிடத் தக்க செய்தி ஒன்று உண்டு. நாட்டியம் கற்கும் மாணவியர் அவசியம்

# கண்ணொளி வழங்கும் திட்டத்திற்கு நிபுணர்கள் வழங்கிய பாராட்டுகள்

உலகப் புகழ் பெற்ற கண் மருத்துவர்களும், பார்வை யற்றவர்களுக்குப் பார்வை வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள கழகத்தினரும் தமிழ் நாட்டில் முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் பெயரால் மேற்கொள்ளப் பெற்று வரும் இலவசக் கண்சிகிச்சை முகாமைப் பேரார்வத்துடன் வரவேற்று, வாழ்த்துரை வழங்கியுள்ளனர்.

சிகாகோ நகரில் உள்ள இல்லினியாஸ் பல்கலைக் கழகக் கண் மருத்துவத் துறைத் தலைவர் டாக்டர் மார்ட்டன் எஃப் கோல்டுபெர்க் என்பவர் பின் கண்டவாறு பாராட்டியுள்ளார்.

''கருணாநிதி கண்சிகிச்சை நிதி நிறுவுவதில் தமிழ் நாடு முதலமைச்சருக்குக் கிடைத்த வெற்றிக்கு என் பாராட்டுகள். இந்த ஏற்பாடு மிக முக்கியமான பயனுள்ள முன்னேற்றப் பணியாகும். தென்னிந்தியாவில் கண் புரையிலிருந்து ஏற்படும் பார்வை இழப்பை, இது நிச்சயமாக நீக்கி விடும் என்பதை நான் அறிவேன். இப்பயனுள்ள திட்டத்தில் பங்குகொண்டு பணியாற்றும் மருத்துவத் துறையினரையும், அரசினரையும் பாராட்ட விரும்புகின்றேன்.''

மேலும் அவர், ''நீங்கள் ஓர் சிறந்த மனிதாபிமான சேவை செய்து வருகின்றீர்கள்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

மேரிலாந்தில், பால்டிமோர் என்ற இடத்தில் உள்ள ஜான் ஹாப்கின்ஸ் மருத்துவ மனையைச் சார்ந்த வில்மெர் நிறுவனத்தின் இயக்குநர் அவர்களும் இத் திட்டத்தைப் பாராட்டியுள்ளார்.

இங்கிலாந்தில் 'சசெக்ஸ்' என்ற இடத்தில் உள்ள பார்வை யற்றவர்களுக்குப் பணிபுரியும் ராயல் காமன் வெல்த் சங்கத்தின் இயக்குநர் திரு ஜான் பி. வில்சன் அவர்கள் கீழ்க்கண்டவாறு பாராட்டியுள்ளார்.

''உங்கள் மாநிலத்தில் பார்வையற்றோர் நலனில் பேரார்வம் காட்டிப் பணியாற்றி வருவதால், இப்பணியில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவருக்கும் எங்கள் பாராட்டுதல்களைத் தயவு செய்து தெரிவிக்கவும். பார்வையிழப்பைச் சிகிச்சையின் மூலம் குணமாக்கிவிட முடியும். இதில் போதிய கவனம் செலுத்தித் தேவையான நிதி உதவி அளிப்பது மனிதாபிமானத்துடன் பணியாற்றும் அரசின் கடமையாகும். இவ்வரிய பணியில் உங்கள் முதலமைச்சர் எடுத்துக் கொண்டுள்ள முயற்சி, உலகத்தின் மற்றப் பகுதிகளிலுள்ளவர் களையும் தூண்டக்கூடும் என்று நம்புகிறோம்''.

'ஹோனலூலு' என்ற இடத்தில் உள்ள பார்வை இழப்பைத் தடுக்கும் அனைத்து நாட்டுக் கழகத்தின் செயலாளர் திரு டாக்டர் வில்லியம் ஜான் ஹோம்ஸ் அவர்கள் குறிப்பிட்டுள்ளதாவது :—

''நல்ல கண் பார்வை ஏற்படச் செய்வதும், மனிதரில் ஒருவரைப்பற்றி ஒருவர் அக்கறை கொள்ளச் செய்வதுந்தான் நமது குறிக்கோள்''.

பாஸ்டன் நகரில் உள்ள 'ரெட்டினு' அறக்கட்டளை (Retina Foundation) நிறுவனத்தின் தலைவர் டாக்டர் சார்லஸ் சிபென்ஸ் அவர்கள், ''முதலமைச்சர் கண் சிகிச்சை நிதி ஏற்படுத்தியதற்கு உளமார்ந்த வாழ்த்துக்கள். இந்நிதி ஏற்படுத்தியது இந்தியாவின் கண் பாதுகாப்பில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியுள்ளது'' என்று பாராட்டியுள்ளார்.

மேற்கண்ட பாராட்டுதல்கள், மதுரை மருத்துவக் கல்லூரியின் துணை முதல்வராகவும், மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் கண் சிகிச்சை மருத்துவராகவும் பணியாற்றும் டாக்டர் ஜி. வெங்கடசாமி அவர்களுக்கு வந்துள்ள வாழ்த்துச்செய்திகளில் அடங்கியுள்ளன. இப் பாராட்டுதல்கள் உலகின் பிற பாகங்களில் இத்தகைய பணிக்கு ஆதரவு திரட்ட உதவுவதாகவும், தமிழ்நாட்டின் தலைமை ஏற்கும் பணிக்குக் கிடைத்த காணிக்கையாகவும் விளங்குகின்றன.

337

வானகமே! வெளியரங்கே! கட்ட [illegible]
வாங்காமல் காட்சிகள் ஏன் காட்டு கின்றாய்?
கூனனிலம் பிறைக்காட்சி அளிப்பாய்; ஓர்நாள்
குளிர் உமிழும் முழுநிலவை அனுப்பி வைப்பாய்!
கானகத்தில் இருட்புதரில் பூக்கும் பூக்கள்
கன்னியரின் முடிபோல் மகிழ்வு தண்டா?
வானகத்தில் விடிவில்லா வீதி யெல்லாம்
வைத்ததும் ஏன் விண்மீன்கள் விளக்கை ஏற்றி?

கீழ்வான மூலையிலே [illegible]
சினம்புகின்ற நெருப்புருண்டைப் [illegible]
[illegible] பனிப்பஞ்சும் எரியும்; உன்றன்
சுடர்த்திரையும் எரிந்திடுமோ? அஞ்சு கின்றேன்!
ஆழ்கடலின் கண்ணாடி நீயோ! உன்னை
அருவமென்றே ஏன்சொன்னார்? நிறமே [illegible]
ஆழ்கடலின் நீருக்கே நீல வண்ணம்
தொடுத்தளித்த உன்றனுக்கா உருவம் இல்லை!

எத்தனைத் தலைவடிவில் மேகந் தன்னை
எழுதாத தூரிகையால் எழுது கின்றாய்!
பொத்தலுள்ள குடையாநீ? [illegible] வானே
பூமணிகளைக் குளிர வைத்துச் சிரிக்க வைத்தாய்!
கத்துகின்ற இடியெங்கே ஒளித்து வைத்தாய்?
கண்வெட்டும் மின்னலெங்கே மறைந்து நின்றாய்?
இத்தனையும் மழைப்பெண்ணின் [illegible]
எழில்கூட்டும் வானவேடிக் காட்சி யாமோ?

பெண்மையுள்ள மாரியினுள் பயிரை யெல்லாம்
விழிமூடி அழியாமல் காக்கின் [illegible]!
வன்செயல்கள் நிகழ்த்துகின்ற புயலை நீயேன்
வழிகூட்டி அனுப்புகின்றாய்? நீதி [illegible]?
இன்மணத்துத் தாமரையுடன் [illegible]
இணைந்ததுபோல் இரண்டினையும் இணைத்த தேன், ஏன்?
கன்மனத்துக் கருமிபோலக் [illegible] நீயும்
கருணிபோலாம் [illegible] செய்வ தும்ஏன்?

கண்சிமிட்டும் விண்மீன்கள் எரிந்து வீழும்
காதையினை அடிக்கடிஏன் காட்டு கின்றாய்?
உண்டான இவ்வுடலம் உதிக்க [illegible]
ஓர்நாளில் வீழுமென்று உணர்த்து கின்றாய்?
[illegible] எழுதி [illegible]
[illegible] பெறுவாய்?
[illegible] காக்கும்
மண்ணகத்தில் [illegible] உன்னை!
வானகமே! 'மானம்' எனச் சொல்வோம் [illegible]




வெளியிடுபவர் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு ... பொருள் இயக்குநரால், சென்னை, அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது. முகவரி : தமிழரசு அலுவலகம், அச்சினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-2.



# சிறந்ததையே தெரிந்தெடுப்போம்

அவளுக்கு ஒரு தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு வாங்கி அளியுங்கள்.
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டின் மூலம் ஒரு லட்ச ரூபாய் பரிசு பெறும் வாய்ப்புகள் அதிகம்.

## இன்றே வாங்குங்கள்

# தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

முதல் பரிசு: ரூ. 1,00,000

(ஒவ்வொரு வரிசைக்கும்)



முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

குலுக்கல் நாள் 11-12-1972

பரிசு சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/-தான்

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2

விளம்பர வெளியீடு: இயக்குநர் செய்தி,
மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை-9.








# அரசு – மிகவுயர்ந்த தரமானது

## போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட். குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடு களைக் கையாண்டு உற்பத்தி செய்யப் படுகிறது.

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ்**
(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

**அரசு** – வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16




RR No. 928 P






# ஆசியா-72

## சிறப்பிதழ்



# தமிழரசு

16-12-1972
மலர்:3. இதழ்:12

# சேவல் சண்டை



**முதல்வர் கலைஞர்**

தேனலைகள்

**அ**யலூர் போய் வீடுவந்த இனியனிடம் ''என்னத்தான் வாங்கி வந்தீர்?'' எனக் கேட்டுப் பறந்து வந்தாள் ஏந்திழையாள். இல்லறத்தின் புதுச்சுவையைத் தெவிட்டாமல் உண்ணுகின்ற இளங் காதற் பெட்டகங்கள், இனியன்—ஏந்திழை. இருவரும் தமிழ்க் குலத்தார்—எழிற் கோலத்தார்! ''வானவில் போல் அழகு காட்டி வளைந்திருக்கும் தோகை கொண்ட ஆண்கோழியொன்று வாங்கி வந்தேன்'' எனச் சொல்லி, ''மடிமீது இருந்து கொண்டு மறத்தமிழன் சாயல் காட்டும் சேவல் தன்னைப் பார்'' என்றான். ''பாகற் பழம் போன்ற கொண்டைதனைக் கண்டாயோ பெண்ணே? சூடுபட்ட நாக்குபோல் தொங்குகின்ற தாடையின் அழகுபார் கண்ணே! சேரனின் நடை காட்டும்! படை கண்டு கலங்காத வீரனின் தோற்றம் காட்டும்!'' எனப் புகழ்ந்தான்.

''சரியத்தான் ஒப்புகிறேன்; பெட்டையொன்று வாங்கி வந்தாலும் முட்டையிடும்.. ... ...... ...இதைக் கொணர்ந்து பயன் என்ன?'' ஏந்திழையின் பேச்சுக்கு முதற் பதிலாய் நகை முழக்கிப் பின்னும் கூறலானான். ''துப்புரச் சிவந்த வாய்ப் பேரழகே! பசுமாடு; பெட்டைக் கோழி; பெண்ணாடு வளர்ப்பதிலே பால் முட்டையெனப் பயன் காணும் குறிக்கோள் ஒன்று மட்டும் உண்டு! ... ... நான் சேவல் வாங்கி வந்த நோக்கத்தை உன் செவிதனிலே போட்டால், ஒப்பிடுவாய் என் செயலை!'' எனச் சொன்ன அத்தானின் தோளில் சாய்ந்து ''புரிந்து கொண்டேன் உமதுள்ளம் — பெண்ணைப் புகழ்வதற்கு மயில் தன்னை அழைத்திடுவார் — இனிமேல் ஆணைப் புகழ்வதற்குச் சேவல் தன்னைக் காட்டிடலாம் என்பதுதான் உமதெண்ணம்!'' எனச் சிரித்தாள்.

''அதிலும் தவறுகின்றாய் என் அன்பே! ஆணுக்குச் சேவல் தன்னை ஒப்பிடலாம்! .... மறுப்பாரில்லை! ஆனால் ஒன்று; பெண் குலத்தைப் புகழ்வதற்கும் ஆண் மயில்தான் தேவைப்படும்—அதையும் உணர்ந்திடுவாய்!''—என்று கூறி அவள் முகம் கடுப்பதற்குள் சிவப்பாக்கி, முடித்து விட்டான் கோபந்தன்னை!

''ஏந்திழையே! இன்று காலை நடைபெற்ற நிகழ்ச்சி தன்னை உன்னிடத்தில் சொல்லாமல் இருப்பதற்கு முடியவில்லை. என்மாமன் செங்கண்ணன் இருக்கின்றாரே; அவருக்குத் தினந்தோறும் தேகத்தில் கொழுப்பேறி நாக்கு வழி சிந்துகின்ற காட்சி தன்னை நான் நேராக அனுபவித்தேன். சேவற் சண்டையிலே பெருவீரர் எனப்புகழ் மண்டிவிட்ட காரணத்தால் —தானே தான் உடல் வருந்திப் போரிட்டு வென்றது போல் வெட்டரிவாள் மீசை தன்னை முறுக்கிவிட்டு, அன்றொரு நாள் தென்னிலங்கை தன்னை ஆண்டிருந்த இராவணன் போல் எண்ணிக் கொண்டு நடக்கின்றார்; தொலையட்டும்—கவலையில்லை! நான் சேவலை வாங்கி வருகின்ற வழியினிலே மடக்கிக் கொண்டு,'' என்னப்பா இளவெட்டு! சண்டைக்குப் பழக்குதற்குக் கோழி வாங்கிப் போகின்றாயோ?'' எனக் கேட்டார். ''இல்லை'' என்றேன். ''என்னதான் பழக்கினாலும் என்னை வெல்ல ஈரேழு லோகத்திலும் ஆள் இல்லை! வளர்த்துப்பார் உன் சேவலையும்! என் கோழி மூச்சுப்பட்டால் உன் கோழி ஒரு காதம் ஓடிவிடும்'' எனத் தற்பெருமை மலைமீது ஏறி நின்று சண்டைக் கோழிதரும் பெருமையாலே மண்டைக் கனம் கொண்டுவிட்ட மாமன் கூவலானார். நானும் பேசலுற்றேன்.

''சேவற் சண்டையிலே பெற்ற புகழ் பெருவீரம் என நினைத்து—சேரன் செங்குட்டுவன், கனகவிசயர் மீது வீசிநின்ற கனல் தெறிக்கும் வார்த்தைகளைப் பேசாதீர் மாமா! கோழி தன்னை ஆசையாய் வளர்ப்பதற்கு வாங்கி வந்தேன்—கோழையையும் சினங்கொள்ளச் செய்கின்ற உமது பேச்சால் அந்த எண்ணம் மாற்றிக் கொண்டேன். சூளுரைப்பேன் ஏற்றுக் கொள்ளும்! வீரர் நீர்தான் எனச் சூட்டிக்கொண்ட பட்டத்தை, எண்ணி இருதிங்கள் முடிவதற்குள் இழக்கச் செய்வேன். இன்று முதல் என் கோழி சண்டைக் கோழி! இதையறிவீர் — வருகின்றேன் —, எனச் சொல்லி வந்து விட்டேன்—ஊர் முழுவதும் பரவி விட்டதடி இச்செய்தி!''

''ஏனத்தான் புது வம்பு? கோழிச் சண்டை தனைத் தொழிலாய்க்கொண்ட செங்கண்ணன்—அவரிடத்தில் வெல்வதென்றால் சுலபமா? வேண்டாமே வீராப்பு! தோற்றுவிட்டால் வெளியினிலே கிளம்புதற்கும் வீதியிலே நடப்பதற்கும் வெட்கம்—வெட்கம்! வேண்டாம் அன்பா பிடிவாதம்—விட்டுவிடுக!'' என்றாள்.

''தமிழன் சூளுரைத்துப் பின் வாங்கினான் எனில் தலைகுனிய நேராதோ தங்கமே! அஞ்சாதே! நம் கோழி வீரக்கோழி என்பதற்கு ஒருசான்று! இதன் தாய்க் கோழி ஒரு நாள் குஞ்சுக் கூட்டமுடன் இரை தேடப் போகும் போது, கொத்த வந்த பருந்து ஒன்றை எதிர்த்துத் துரத்தியதாம். மற்றொரு நாள் வஞ்சக நரி யொன்றின் வயிற்றுக்கு விருந்தாகும் நெருக்கடியில் போராடித் தப்பியதாம்! அதன் பிள்ளை இந்தச் சேவல்!''

''சரியத்தான்—சேவல் பேச்சு முடியட்டும்! பெட்டைக் கோழியின் துயர் தீர்ப்பீர்; வாரும்!'' என்றாள்! பருவ இளவரசி தந்திட்ட பழச்சுவையமுதங்கூட அவனுக்குச் சுவைக்கவில்லை. மலர் மெத்தை, இன்பத்தைத் தரவும் இல்லை. வீணையும் நாதமும் ஆகிவிட்ட நிலையில் கூட ஏந்திழையின் செங் கண்ணைப் பார்த்தவுடன் செங்கண்ணன் நினைவாலே குழப்பமுற்றான். எப்படியும் வெற்றி பெற்றிட வேண்டுமென்ற துடிப்பாலே செயல் புகுந்தான். சேவலுக்குப் போர்ப்பயிற்சி துவங்கிற்று. தாயின் பேரைப் பிள்ளை எடுக்குமென்ற தளராத நம்பிக்கையொரு புறமும்—செங்கண்ணன் கோழிப் போர் மேதையென்ற புகழுரைகள் மறுபுறமும் நெஞ்சத்தைத்





தாக்கிடவே, நாள் நெருங்க நெருங்க நடுங்கலானாள் ஏந்திழையாள்!

போர் நாளும் வந்தது—ஊர் மக்கள் கூடிவிட்டார். இரு நூறு பொன் பந்தயத் தொகையாக இரு சார்பும் கட்டவேண்டுமென நிபந்தனையும் தந்தார்கள் ஊர்ப் பெரியோர்! நானூறு பொன் கொண்ட கிழியொன்று தொங்குகின்ற மண்டபத்தில் ஊரார் அனைவருமே நிறைந்திருந்தார். இனியன், தன் சேவற் கோழியுடன் களம் வந்தான். ''இளங் கோழி! ஆனாலும் செங்கண்ணன் கோழிபோல் பலமுள்ள கோழியாய்த் தெரியவில்லை'' எனச் சொன்னார் சில கிழவர்! அதைக் கேட்டாள் ஏந்திழை! மேனியெல்லாம் வியர்வையாலே நனைந்துவிட்டாள். இனியனின் சேவல் நிற்கின்ற இடம் நோக்கி, இராஜ நடை போட்டவாறு செங்கண்ணன் கோழி வந்தவுடன் ஊர்ச் சிறுவர் கைகொட்டி வரவேற்றார். ஏந்திழைக்குப் பொறுக்கவில்லை.

செங்கண்ணன் கோழியினை மிஞ்சுவதாய் நின்றிருந்த காட்சி அவள் உள்ளத்தை உலுக்கிற்று. போர் ஆரம்பம்! ஒன்றையொன்று கொத்துதற்கும், பிறாண்டுதற்கும், காலாலே கீறுதற்கும் முயன்று மோதின; சிறகுகள் காற்றில் பறந்தன. எழிற் கொண்டைகள் நிமிர்ந்தன. சுழற்காற்று போல் இரண்டு சேவலும் சுழன்று சுழன்று போர் புரிந்த வேகத்தை ஊரார் வியந்தனர். இனியன் கோழித் தலையினிலே ஒரு கொத்து! குருதி வெள்ளம்! ஆனாலும் அயரவில்லை. முதுகினிலே மற்றொரு கொத்து! வலி பொறுக்கவில்லை. சிறு சோர்வு! அந்தச் சோர்வு கண்ட நேரத்தில் செங்கண்ணன் கோழி மள மளவென அதன் மீது பறந்து பறந்து கொத்தியது. கீறியது! இனியன் கோழி கத்தியது. ஏந்திழைக்கோ நிற்க இயலவில்லை. அதைவிட்டு ஓடிவிட்டாள்.

அவமானம் சூழப் போகிறதே என நினைத்து இனியனுமே கலங்கலுற்ருன். ஏந்திழை ஓடியதைக் கண்டு மனம் நொந்தான். செங்கண்ணனின் சிரிப்பு வலுத்தது. ஊர் மக்கள் கை கொட்டி ஆர்ப்பரித்தார். இனியன் கோழி இப்போது வீழ்ந்துவிடும்—செத்து விடும் எனச் சொல்லி ஒரு கிழவர் வாய் மூடுவதற்குள், செங்கண்ணன் கோழிமீது அக்கோழி ஒரு பாய்ச்சல் நடத்தியது. மறு பாய்ச்சல்—செங்கண்ணன் கோழிக்கு வயிற்றினிலே ஒரு காயம்! அடுத்த ஒரு மோதல்—இப்படி அடுக்கடுக்காய் வெறி பிடித்த மோதல்—பாய்ச்சல்! இனியனுக்கு பெரு மகிழ்ச்சி! திடுமெனச் செங்கண்ணன் கோழி விலகிச் சென்று, இனியன் கோழி மேல் பாய்வதுபோல் போக்குக் காட்டிக் களம் விட்டு ஓடிற்று! தோல்வியால் முகம் தொங்கவிட்டான் செங்கண்ணன்.

அதே ஊர் மக்கள் இனியனுக்கு மாலையிட்டார். மாலை தன்னைக் கோழிக்கு அணிவித்து நானூறு பொன்னோடு வீடுவந்தான். குப்புற வீழ்ந்திருந்த ஏந்திழைக்கு வெற்றிச் சேதிக் கிடைத்திடவே—அத்தானை எதிர் கொண்டு தழுவிக்கொண்டாள். விடவே மறுத்தாள். காதல் பெரு வெள்ளம் உடைப்பெடுத்து ஓடிற்று. இன்பப் பிரவாகம்!

கோழி களைப்பாறுதற்கு வேண்டுவன செய்துவிட்டு, "நானூறு பொன்னுக்கும் கோழிக்கே ஒரு கூண்டு வாங்கிடுவீர்! இரும்புக் கம்பியுள்ள கூண்டு இனி நம் கோழிக்குக் கூடாது; வெள்ளிக் கம்பியுள்ள கூண்டொன்றே தேவை" என்ருள். சரியென்று கிளம்பி விட்டான் கூண்டு வாங்க!

மறு நாள் காலையிலே வெள்ளிக் கூண்டுடனே வேல் விழியாம் ஏந்திழையைக் கூப்பிட்டான் பார்த்தாயா கூண்டழகை எனக் காட்ட! அவளும் வந்து இருவருமே இரும்புக் கூண்டினிடம் சென்று அன்புச் சேவல் தன்னை இடம் மாற்றிக் குடியேற்றக் கூண்டைத் திறந்தார். வெள்ளிக் கூண்டானாலும் கூண்டினிலே வாழ்வதற்குச் சேவலுக்கு விருப்பமில்லை போலும்—அதனாலே அது மாண்டு கிடந்தது இரும்புக் கூண்டினிலே!









ஓட்டலில் தோசைக்கு
'ஆர்டர்' கொடுத்து வாங்கி
உண்ணுவது போல், 'ஆர்
டர்' கொடுத்துக் காஞ்சிப்
பட்டு வாங்கும் அதிசய
இடம் ஒன்று இருக்கிறது.
அதுதான் 'ஆசியா-72'
பொருட்காட்சியில் அமைந்
துள்ள தமிழ்நாடு அரங்கு.
மேலும். தமிழ்நாடு அரங்
கத்தில் கற் சிலைகள். சிற்
பங்கள். மர வேலைகள்,
தக்கையிலான வேலைப்பாடு
கள், துணி நெசவு ஆகிய
வைகளை உருவாக்கும் கலை
வல்லுநர்களை அழைத்துச்
சென்றுள்ளார்கள்.

தஞ்சை மாவட்டத்தைச்
சேர்ந்த தகைச் சிற்பி
கோபாலகிருஷ்ணன் ஓர்
இடத்தில் அமர்ந்து தக்கை
யினுலான ரோஜாப்பூ, சிவந்
திப்பூ செய்த வண்ணமிருக்கி
ருர். ஒரு பூ 50 காசு,
ஒரு ரூபாய் என்று அவ்வப்
போது வாங்கிச் செல்கின்
றனர். பிசைந்த காகிதத்தில்
(பேப்பர் மாசி) செய்யப்படும்
நடராஜா, மோகினி ஆகிய
சிலைகளுக்கு நல்ல வரவேற்பு

மற்ருெரு பகுதியில்
மாமல்லபுரத்தைச் சேர்ந்த
சிற்பி கல்லிலே கலை வண்
ணத்தைக காட்டுகிருர்
சந்தன மரத்தில் சிற்பங்களை
உருவாக்குகிருர் கன்னியா
குமரித் தச்சர்.

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த நெசவாளர், உலகப் புகழ் பெற்ற காஞ்சிப் பட்டு எவ்வாறு உருவாகிறது என்பதைக் காட்சியைக் காண வரும் மக்கள் கண்டுகளிக்கும் வண்ணம் கண்ணெதிரில் உருவாக்கிக் காட்டுகிருர்.

இதனைப் பார்த்து? வியப்படையாத வெளிநாட்டவர்களே கிடையாது. ஒரு வெள்ளைக்காரர் மாலை நேரத்தில் அணியும் துணி ஒன்றிற்கான 'டிசைன் தந்து அம்மாதிரி நெசவு செய்யச் சொல்லி நெசவானதும் 'சுடச்சுட' வாங்கிச் சென்ருர். இதே போன்ற பட்டுப்புடவைக்கு 'ஆர்டர்' கொடுத்து வாங்கிச் சென்ற வடநாட்டுப் பெண்மணியினர் பலர்.



**தைமெட் 10-ஜி உங்கள் பருத்திப் பயிருக்கு இடையருத, நீண்டகால, சக்திமிக்க முவ்வழிப் பாதுகாப்பைத் தருகிறது.**

பயிர் ஜீவாணுவில் ஊடுருவிச் செயல் புரியும் தன்மையும், தொடுநஞ்சாகவும், புகைநஞ்சாகவும் செயலாற்றும் தன்மையும் ஒப்பற்ற முறையில் ஒருங்கே இணையப்பெற்ற **தைமெட் 10-ஜி**, அணுகுவதற்குக் கடினமான புழு பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதுடன், புழுபூச்சிகள் தாக்கத்தொடங்குவதற்கு முன்பே அவற்றிற்கு எதிராக பயிர்களுக்கு உள்ளமைந்த சக்திமிக்க பாதுகாப்பைத் தருகிறது.

தவிர, **தைமெட் 10-ஜி** முழுவளர்ச்சியடைந்த பயிர்களில் கெடுதலான விளைவு எதையும் தோற்றுவிப்பதில்லை; அதன் நீண்டகால கட்டுப்பாடு மற்றும் சீதோஷ்ண நிலைமைகளினல் பாதிக்கப்படாத தன்மையின் காரணமாக, **தைமெட் 10-ஜி**யின் ஒரு பிரயோகம், வழக்கமான பூச்சிக் கொல்லிகளின் பல தெளிப்புகளை விடச் சக்திமிக்க பயனைத் தருகிறது. லாபத்தில் நாட்டமுடைய பயிர்செய்பவர்களுக்கு, அதிக விளைச்சல், அதிக லாபங்கள், பத்திரத்தன்மை மற்றும் திறன்மிக்க பயிர்ப் பாதுகாப்பை உறுதிசெய்கிறது.




**விவசாயப் பிரிவு,**
**ஸயனமைட் இந்தியா லிமிடெட்**
த.பெ. எண் 9109, பம்பாய்-25.


# இதோ ஒரு மினி டைப்ரைட்டர்



ஆர்வம்

ஆற்றல்

அயராத உழைப்பு

அனுபவம்

இவை இருந்தால் மட்டும் ஒருவர் தொழிலைத் தொடங்கிவிட முடியாது. எல்லாவற்றுக்கும் மிகமுக்கியமான மூலதனம் அதற்கு மூல காரணமல்லவா?

தட்டச்சுப் பொறி தயாரிக்கின்ற பிரபலமான நிறுவனமொன்றில் பணியாற்றிப் பதினைந்து ஆண்டுக் காலம் அனுபவம் பெற்ற ஒருவர், சொந்தமாகத் தொழில் நடத்த எண்ணினர். மேற்கண்ட ஆர்வம், ஆற்றல், அயராத உழைப்பு, அனுபவம் எல்லாம் இருக்கிறது அவருக்கு. ஆனல், மூலதனத்துக்கு எங்கே போவார்? யார் தருவார்கள் பெருந்தொகையை?

அவரது சிந்தனை சிறகடித்துப் பறந்தது; சீக்கிரமே அதற்கொரு வழியும் பிறந்தது. உள்ளத்திலே உறுதியும், முகத்திலே உவகையும் பொங்கத் தமக்கு உதவி செய்யக் காத்திருக்கும் நண்பனை நாடி விரைந்தார்.

யார் அந்த நண்பன்? திறமை எல்லாம் இருந்தும், தொழில் தொடங்கிட வழி தெரியாமல் தவிப்போருக்கு உறுதுணையாக இருக்கும் அந்த நண்பரின் பெயர்தான் டி. ஐ. ஐ. சி. ! ஆமாம். இந்த நான்கு எழுத்துக்களுக்குள் அடங்கியிருக்கும் முழுப்பெயர்தான், 'தமிழ்நாடு தொழில் மூலதனக் கழகம் (Tamilnadu Industrial Investment Corporation). சென்னையிலுள்ள இந்நிறுவனம் தொழில் தொடங்குவோருக்குத் தக்க உதவிகளைச் செய்து வருகிறது.

"நெடுநாட்களாக எனக்கொரு எண்ணம் இருந்து அந்த எண்ணம் நிறைவேருதா என்று ஏங்கிக் கிடந்த காலமும் உண்டு. அந்த ஏக்கத்துக்கு ஏற்ற மருந்து எது என்று நான் தேடிக் கொண்டிருந்தபோது டி. ஐ. ஐ. சி. என் மனத்துக்குத் திடமளித்தது; என் எண்ணம் நிறைவேறவும் வழி வகுத்தது" என்று பெருமிதத்துடன் கூறுகிருர் இன்று சொந்தமாகத் தொழில் நடத்தும் திரு குணசேகரன்.

தமிழ்நாடு அரசின், தொழில் மூலதன நிறுவனம் இவருக்குத் தொழிற்கூடம் உருவாக்கிட நாலரை இலட்சம் ரூபாய் கடனை வழங்கியுள்ளது. மற்றும் யுனைடெட் கமர்சியல் பாங்க்கும் கடன் தந்துள்ளது. இந்த உதவியின் உருவகமே, கையில் சுலபமாக எடுத்துச் செல்லும் நட்டச்சுப் பொறிகள் தயாரிக்கும் தொழிற்கூடம் (Portable Type writers).

'சுமதி இன்டஸ்ட்ரீஸ்' என்ற பெயரில் சென்னை சைதாப்பேட்டையில் இயங்கிவரும் இந்தத் தொழிற்கூடம் 1966-ல் தொடங்கப்பெற்றது. இங்கு நாற்பது பேர் பணியாற்றுகின்றனர்.



புள்ளி விவரப்படிப் பார்த்தால், இந்தியாவில் ஓராண்டுக்கு ஒரு இலட்சம் தட்டச்சுப் பொறிகள் தேவைப்படுகின்றன. ஆனல் கடந்த ஆண்டில் தயாரான தட்டச்சுப் பொறிகளோ ஏறத்தாழ 43 ஆயிரமே ஆகும். இவற்றில் கையில் எடுத்துச் செல்லும் தட்டச்சுப் பொறிகளை எவரும் தயாரிக்க முன் வரவில்லை என்பதை இங்குக் குறிப்பிடவேண்டும். இதற்குக் காரணம், இத்தொழில் கடினமானது என்பதேயாகும்.

பறக்கும் மாம்பழம்

தமிழ்நாட்டுப் பழவகைகளில் வெளிநாட்டவர்களை மிகவும் கவரும் பழம் முக்கனிகளில் ஒன்ருன மா. தமிழ்நாட்டின் மாம்பழத்திற்கும், வாழைப்பழத்திற்கும் வெளிநாட்டில் நல்ல வரவேற்பு உள்ளது எனவே ஆசியா'72 பொருட்காட்சியில் தமிழ்நாட்டு அரங்கில் வேளாண்மைத் துறையின் பிரிவில் இந்தப் பழங்களும் முக்கிய இடம் பெற்றுள்ளன.

பொருட்டு மூன்று நாட்களுக்கு ஒருமுறை சென்னையிலிருந்து விமானத்தில் கூடை கூடையாக மாம்பழங்களும் வாழைப்பழங்களும் டெல்லிக்கு ஆசியா'72க்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

சிற்பக் கலையின் சிகரம்

பழங்காலச் சிற்பங்களில் சிங்கம் அல்லது யாழியின் வாயில் உருளைக்கல்லினை

அரசினர் சிற்பப்பள்ளியினர். அவர்கள் கல்லினுல் செய்த இந்தச் சிங்கச் சிற்பம் இன்று டெல்லியில் பொருட்காட்சியில் அனைவரது கவனத்தையும் கவர்ந்து நடுநாயகமாக உள்ளது. சுமார் ஓர் அடி நீளமுள்ள இந்தச் சிங்கத்தினைக் கண்டு வியக்காதவர் யாருமில்லை. அதன் வாயிலுள்ள கல்லினை உருட்டி அதிசயிப்பவர்கள் பலர்.



இதில் சிறப்பு அம்சம் என்னவென்ருல் இந்த டிசம்பர் மாதத்திலும் மாம்பழம் உற்பத்தி ஆவதுதான். சாதாரணமாக மாமரம் காய்த்துக் கனிதரும் காலம் ஏப்ரல் முதல் ஜூன் வரைதான். பிற காலங்களில் மாம்பழத்தைக் கண்ணில் காண்பதே அரிது.

ஆனுல் குமரி மாவட்டத்தில் டிசம்பர் மாதத்திலும், மா கனி தருகிறது. அதனைப் பயன்படுத்தியுள்ளனர் வேளாண்மைத் துறையினர்.

டெல்லியில் காட்சிக்கு வைக்கப்படும் கனிகள் அழுகி விடாமலிருக்கும்

வடித்திருப்பர் சிற்பிகள். உடைக்காமல் ஒட்டாமல் எப்படி இந்த உருளைக்கல்லினை வாயினுள் அமைத்தனர் என்பது புரியாத புதுமையாகவே இருக்கும் சிற்பத்தைப் பார்ப்பவர்களுக்கு. நெல்லை மாவட்டம் கிருஷ்ணபுரத்திலுள்ள கோவிலில் இன்றும் இந்தச் சிற்பம் உள்ளது.

காலத்தால் அழியாத இந்தச் சிற்பக் கலைக்குப் புத்துயிரூட்டி இன்றும் கலைத்திறன் தமிழனிடமுண்டு என்று நிரூபித்து வருகின்றனர் தமிழ்நாடு அரசினரால் நடத்தப்பெறும் மாமல்லபுரம்

அங்குள்ள மற்ருெரு முக்கிய சிற்பம், கண்ணகி சிலையாகும். இதுவும் கல்லினுல் செய்யப்பட்டது. மாமல்லபுரத்திலிருந்து கொண்டு வரப்பட்டது. ஓர் அடி உயரமுள்ள இந்தக் கண்ணகி கையிலுள்ள சிலம்பு தனியாக ஆடக்கூடிய வகையில் மிக நுட்பமாகச் செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொட்டுப் பார்க்கும் வெளி நாட்டவரும் பிற மாநிலத்தவரும் அதிசயப்படுகின்றனர்.

டெல்லியில் நடைபெறும் ஆசியா-72 பொருட்காட்சியிலும் இப்படித் திடீர் என்று பொருட்காட்சிக்காக மாத்திரம் சில நாளிதழ்கள் உருவாகியுள்ளன.

'ஆசியா-72 செய்தி' (Asia-72 News) என்பது ஆசியா-72 பொருட்காட்சி அமைப்பாளர்களால் நடத்தப்படும் நாளிதழ். இதே போன்ற வேறு சில நாளிதழ்கள் 'பொருட்காட்சி அழைக்கிறது' (Fair Calling) 'விழாக்கள்' (Festivals) என்பவையாகும்.

பொருட்காட்சித் திடலில் அன்ருடம் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகள், பிரமுகர்கள் வருகை, அரங்கங்கள் பற்றிய விவரங்கள் ஆகியவை புகைப்படங்களுடன் இந்த நாளிதழ்களில் வெளியிடப்படுகின்றன.

தமிழக அரங்கத்திற்கு நாள் தோறும் சுமார் 10 ஆயிரம் பேர் வருகிருர்கள். சென்ற 3-ஆம் தேதி (ஞாயிறு) அன்று ஒரு லட்சம் மக்கள் வருகை தந்தனர். இவ்வாறு லட்சக் கணக்கில் மக்கள் வருவதால் இந்த நாளிதழ்களுக்கும் நல்ல வரவேற்பு இருக்கின்றது. அதிகமான கூட்டத்தை வரவேற்கும் அரங்கம் சோவியத் நாட்டின் அரங்கமாகும்.

காவிரி பாயும் டில்லி

ஆசியா '72 பொருட்காட்சித் திடலிலுள்ள சாலைகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு ஆற்றின் பெயரைச் சூட்டியுள்ளனர். தமிழ்நாட்டின் காவிரி, பெரியாறு ஆகியவையும் அவற்றில் சில பெயர்கள். தமிழ்நாடு அரங்கத்தின் முன்னுல் செல்லும் சாலையின் பெயர் நர்மதை.

மாலை விலை ரூ. 750.

ஆசியா'72ல் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் ஏலக்காய் மாலையின் விலை மதிப்பு சுமார் ரூ. 750. ஏலக்காயுடன் சந்தனஉருண்டையில் இடையிடையே வைத்துக் கோக்கப்பட்ட இந்த ஏலக்காய் மாலையில் கிராம்பு, மிளகு, கஸ்தூரி போன்ற வாசனைத் திரவியங்கள் உள்ளன. வெளிநாட்டவர்களைக் கவர்ந்த பொருட்களில் இந்த மாலை முக்கியமானது.

கைத் திறனுக்கு எடுத்துக்காட்டாக அமைந்த மற்ருென்று, முழுக்க நெல்மணிகளினுல் உருவாக்கப்பட்டுள்ள தேர். 3 அடி உயரமுள்ள இந்தத் தேரினை உருவாக்கியவர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர். தமிழக அரங்கத்திற்கு வந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தியைக் கவர்ந்த இந்தத் தேர் ரூ. 1500 மதிப்புள்ளது. தஞ்சை மாவட்டக்காரரிடமிருந்து தொழில் துறையினர் விலைக்கு வாங்கிக் காட்சியில் வைத்துள்ளனர்.

திருவாரூர் தேரின், மாதிரியில் செய்யப்பட்ட சுமார் 10 அடி உயரமுள்ள தேர் ஒன்றும் நமது அரங்கத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. குமரி மாவட்டத்திலுள்ள தேர்ச் சிற்பக் கூடத்தில் உருவாக்கப்பட்டிருக்கும் தேர் இது. எக்ஸ்போ-70 பொருட்காட்சியில் இடம் பெற்ற பெருமையும் இந்தத் தேருக்கு உண்டு.

அன்ருடம் போட்டி

டெல்லியில் நடைபெறும் ஆசியா-72 பொருட்காட்சி, ஆசிய வணிகப் பொருட்காட்சியில் 3-வது ஆகும். ஒவ்வொரு முறையும் ஒரு வணிகப் பொருளை மையமாகக் கொண்டு நடைபெற்று வருகிறது. அந்த வகையில் ஆசியா 72-ன் மையப் பொருளாகவுள்ளவை, துணிமணிகளாகும். அதனுல் இப்பொருட்காட்சியின் மையத்தில் மிகப் பிரம்மாண்டமான அரங்கம், துணிமணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதுதான் பெரிய அரங்கமும் கூட. எல்லா மாநிலங்களிலும் தயாரிக்கப்படும் பட்டு, கம்பளி, பருத்தி ஆடைகள் இங்கே கொணரப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆடைகளின் அழகினை எடுத்துக் காட்டுவதற்காக இந்த அரங்கத்தில் அன்ருடம் ஆடை அலங்கார அணிவகுப்பு நடைபெறுகின்றது. தினமும் மாலையில் 6 மணிக்கு ஒரு முறையும் 8 மணிக்கு ஒரு தடவையுமாக இரு காட்சிகள் நடைபெறுகின்றன. அழகான இளம் பெண்கள் நவநாகரிகமான ஆடைகள் அணிந்து அணிவகுப்பில் காட்சி தருகிருர்கள்.

இந்த அரங்கத்தில் சேலைகள், கம்பளங்கள், 'ரெடிமேட்' சட்டைகள், உடுப்புகள் விதவிதமாக வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டுத் துணிகளும் இந்த அரங்கத்தில் இடம் பெற்றுள்ளதுடன், தமிழ்நாடு அரங்கத்தில் கைத்தறிக்கெனத் தனியிடமும் ஒதுக்கப்பட்டுள்ளது. அங்குள்ள, மேனகை, ஊர்வசி, பொன்னி, காவிரி (அனைத்தும் புடவைகளின் பெயர்தான்) அனைவரையும் கவருகின்றன. இந்தப் பட்டுச் சேலைகளின் விலை ரூ. 200 முதல் ரூ. 1500 வரை, தரத்திற்குத் தக்கபடி உள்ளன.

இத்தகைய தட்டச்சுப் பொறிகள் நுண்ணிய வேலைப்பாடு கொண்டவையாகும். இவற்றைத் தயாரிக்கக் கூடுதலான திறமை வேண்டும். ஒரு சிறிய தட்டச்சுப் பொறியில் சுமார் 627-க்கு மேற்பட்ட சின்னஞ்சிறு பாகங்கள் உள்ளன. இவற்றின் சரியான இணைப்புகளைப் பொறுத்துத்தான் இது நன்ருக இயங்கும். ஒரு சிறிய இணைப்புச் சரியாக அமையவில்லை என்ருலோ, அல்லது பழுதுபட்டுவிட்டாலோ இது வேலைசெய்வதை நிறுத்திக் கொண்டுவிடும்.



சில ஆண்டுகளுக்கு முன் இதே போன்ற ஒரு தொழிற்சாலை இந்தியாவில் இருந்தது. அது இப்போது மூடப்பட்டுவிட்டது. அது மேலை நாட்டுத் தொழில் நுட்பத் துணையோடு தட்டச்சுப் பொறிகளைத் தயாரித்து வந்தது. பல பாகங்கள் வெளி நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டு இங்கு இணைக்கப்பட்டன. ஆனுல், இந்தத் தொழிற்கூடமோ மேலை நாட்டு உதவி எதுவுமின்றி, முழுக்க முழுக்க இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பாகங்களைக் கொண்டே இந்தத் தட்டச்சுப் பொறிகளை உற்பத்தி செய்து வருகின்றது என்ருல், இதனை இயக்கி வருகின்ற பங்குதாரர்களின் பெரு முயற்சியை நாம் பாராட்டத்தான் வேண்டும்.

வெளியூர்களுக்கு அடிக்கடி செல்லும் தொழில் பிரதிநிதிகள், பத்திரிகை நிருபர்கள் போன்றவர்களுக்கு இந்தச் சிறிய தட்டச்சுப் பொறி மிக இன்றியமையாத சாதனமாகும். வீட்டுக்கொரு வானெலி வாங்குவது போல, இந்தச் சிறிய தட்டச்சுப் பொறியையும் வாங்கி வைக்கலாம். கணக்கு வகைகள், வாழ்த்துக்கள், கடிதங்கள் முதலியன அழகாகத் தெளிவாக தட்டச்சு செய்து அனுப்பிளுல், படிப்பவர்களுக்கு எத்தனை மகிழ்ச்சியாயிருக்கும்! இதன் விலை கூடப் பெரிய தட்டச்சுப் பொறியைவிடக் குறைவானது. சுமார் ஆறுநூறு ரூபாய்க்கு இதனை வாங்கிப் பயனடையலாம்.

இப்போது மிக மும்முரமாக இப்பொறிகள் இங்குத் தயாராகி வருகின்றன. 1973-ஆம் ஆண்டில் இந்தச் சிறிய அழகிய தட்டச்சுப் பொறிகள் விற்பனைக்கு வந்துவிடும். இலங்கை, மலேசியா மற்றும் கிழக்காசிய நாடுகளுக்கு இவைகளை ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு உள்ளதால், இதற்கு நல்ல வரவேற்புக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இந்நிறுவனம் ஆண்டுக்குப் பதினைந்தாயிரம் தட்டச்சுப் பொறிகள் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது. தற்போது ஆங்கிலத் தட்டச்சுப் பொறிகளே இங்குத் தயாரிக்கப்பட்டு வருகின்றன. தமிழிலும் பிற மொழிகளிலும் படிப்படியாகத் தயாரிக்கும் எதிர்காலத் திட்டமும் இருக்கிறது. இங்குத் தயாராகும் தட்டச்சுப் பொறியின் பெயர்: 'பிரசிடென்ட் ஜுனியர்'

இந்தியாவிலேயே சிறிய தட்டச்சுப் பொறிகளைத் தயாரிக்கும் நிறுவனம் இது ஒன்றே என்ற பெருமையுடன் திகழ்கிறது இத்தொழிற்கூடம்.

கடந்த ஓராண்டுக் காலமாக தட்டச்சுப் பொறிகளை உற்பத்தி செய்து வரும் இத்தொழிற்கூடம் பல தொழில் வல்லுநர்களின் பாராட்டுதல்களைப் பெற்றிருக்கின்றது. விடா முயற்சியால் வெற்றி வாகை சூடி ஒரு முன்மாதிரியாகவும் இது விளங்கி வருகிறது.

''வளரும் தொழில்கள் எத்தனையோ உள்ளன. அவற்றையெல்லாம் தொடங்கி நடத்தக்கூடிய திறமை மிக்கவர்களைத் தமிழகம் பெற்றிருக்கிறது. தமிழ்நாடு அரசு தொழிற்கூடங்கள் கட்டித் தருதல், இயந்திரங்களை வாங்கித் தருதல், கடனுதவி வழங்குதல் போன்ற பலப்பல உதவிகளைச் செய்து வருகிறது. இந்த உதவிகளையெல்லாம் பெற்றுத் தொழில்கள் தொடங்கிளுல் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், தமிழகத்தின் தொழில் வளத்தை பெருக்கவும் வழி செய்தவர்களாவோம்'' என்று இதன் பங்குதாரர்கள் மிகுந்த நம்பிக்கையோடு கூறுவதை நாமும் வரவேற்கத்தானே வேண்டும்?

தமிழ்நாடு அரசின் சிட்கோ, டான்சி, டி. ஐ. ஐ. சி., போன்ற நிறுவனங்களின் உதவியினைத் தொழிலதிபர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். நல்ல பல தொழில்களுக்கு நண்பளுக இருந்து தக்க உதவிகளைச் செய்து வரும் இந்நிறுவனங்களால், எதிர்காலத் தொழில் உலகம் ஒளி மயமாய்த் திகழும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!

—பிரவிஜி.



# சாசனத் தமிழ்ச் சொற்கள்

தமிழ்நாட்டிலே பல்லாயிரக் கணக்கான சாசனங்கள் எழுதப்பட்டுள்ளன. சேர, சோழ, பாண்டிய, பல்லவ அரசர்கள் எழுதிய சாசனங்களும் சிற்றரசர் குறுநில மன்னர் முதலானேர் எழுதிய சாசனங்களும் பல ஆயிரக்கணக்கில் நம்முடைய நாட்டிலே சிதறிக் கிடக்கின்றன. அந்தச் சாசனங்கள் எல்லாம் கற்களிலும் செப்பேடுகளிலும் எழுதப்பட்டவை. பழைய கோவில்களின் சுவர்களிலே எழுதப்பட்ட சாசன எழுத்துக்களை இன்றும் கண்டு வருகிருேம். தொல்பொருள் ஆய்வுத் துறை (ஆர்க்கியாலஜி இலாகா) ஒரு நூற்ருண்டாகச் சாசனங்களைப் படியெடுத்து வருகிறது. படியெடுத்த சாசனங்களில் ஆயிரக் கணக்கானவை வெளியிடப்பட்டுள்ளன. வெளியிடப்படாத சாசனங்கள் இன்னும் ஆயிரக் கணக்கானவை இருக்கின்றன. படி எடுக்கப்படாத சாசனங்களும் இன்னும் நூற்றுக் கணக்கில் உள்ளன.

கற்களிலும் செப்பேடுகளிலும் பொறிக்கப்பட்டுள்ள இந்தச் சாசனங்கள், தமிழ் நாட்டின் பழைய சரித்திரங்களை எழுதுவதற்குக் கருவியாகப் பயன்படுகின்றன. சாசனங்களைக் கொண்டே சேர, சோழ, பாண்டிய, பல்லவ அரசர்களுடைய வரலாறுகள் எழுதப்பட்டன—எழுதப்படுகின்றன. மேலும், மக்கள், சமூக வரலாற்றையும் பழக்க வழக்கம் பண்பாடுகளையும் அறிவதற்குச் சாசனங்கள் பேருதவியாக இருக்கின்றன. வரலாறுகளை எழுதுவதற்கு மட்டும் சாசனங்கள் பயன்படுகின்றன என்று கருத வேண்டாம்; தமிழ்மொழி வளர்ச்சிக்கும் சாசனங்களைப் பயன்படுத்தலாம். ஆயிரக் கணக்கான சொற்கள் சாசனங்களிலே காணப்படுகின்றன. அந்தச் சொற்கள் இப்போது வழக்கில் இல்லாத பழஞ் சொற்கள். அழகாகவும் புதுமையாகவும் உள்ள ஆயிரக்கணக்கான சொற்கள், சாசனங்களிலே மறைந்து கிடக்கின்றன. அந்த அருமையான சாசனச் சொற்களையெல்லாம் திரட்டித் தொகுத்து, சாசனச்சொல் அகராதியாக வெளியிடுவது தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கந் தருவதாகும். சாசனச் சொல் அகராதி இது வரையில் வெளிவராதிருப்பது வருந்தற்குரியது.

நம்முடைய அரசாங்கத்தார் தமிழ் வளர்ச்சித் துறை ஒன்றை அமைத்து அதன் மூலமாகப் பல நல்ல செயல்களைச் செய்து வருகிருர்கள். அரசாங்க அலுவல்களைத் தமிழிலேயே செயலாற்றி வருவது பாராட்டத்தக்க அருஞ்செயலாகும். தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாகத் தமிழக வரலாறு எழுதுவதற்கு ஒரு குழுவை நம்முடைய அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது. அந்த வரலாற்றுக் குழுவே சாசனச் சொல் தமிழ் அகராதியை எழுதுவதற்கு அரசாங்கம் ஆணையிடலாம். சாசனச் சொல் அகராதி ஒன்றை வெளியிடவேண்டும். அப்படி வெளியிடுவது தமிழ் வளர்ச்சியில் ஒரு படி முன்னேறுவதாகும். மேலும் அச்சொற்கள் மறைந்து போகாமல் காப்பாற்றியதும் ஆகும். அச்சொற்கள் மறைந்து போகாமலும் அவற்றைப் பயன்படுத்தும் முறையிலும் சாசனச் சொல் அகராதி வெளிவர வேண்டும். அத்துறையில் பயிற்சியுள்ள தக்க அறிஞர்களைக்கொண்டே இதனைச் செய்வது எளிது.

சாசனச் சொற்கள் சிலவற்றை வாசகர்களின் கவனத்துக்காகக் கீழே தருகிறேன். மிகச் சில சொற்களைத்தான் தருகிறேன். இவை பாதுகாப்பட வேண்டிய பழஞ் சொற்கள் என்பதை வாசகர்கள் முடிவு செய்வார்கள் என்பதில் ஐயமில்லை.

1. அக நாழிகை—கருவறை, கர்ப்பக்கிருகம், மூலஸ்தானம் (திருவுண்ணுழிகை என்றும் சாசனங்களில் கூறப்படுகிறது).

2. அகநாழிகையார், அகநாழிகைப்பணி செய்வார்—கோவிலில் திருமேனிகளுக்குத் திருமஞ்சனம், அர்ச்சனை முதலியன செய்கிறவர். பூசை செய்கின்றவர்.

3. அகநாழிகைச் சென்னடை—திருக் கோவில்களின் அன்ருடச் செலவு.

4. அக்கன்—தமக்கை.

5. அகச் சுற்று—உட் பிரகாரம்.

6. அச்சு-பழைய நாணயங்களில் ஒன்று (அழகச்சு, ஆணையச்சு முதலியன).

7. அத்தாழம்—மாலைநேரம்

8. அட்டிக் கொடுத்தல்—தானமாகக்கொடுத்தல்(அட்டின, அட்டுவதாக).

9. ஆசந்திர தாரகம்—நிலாவும் விண்மீன்களும் உள்ளவரையில்.

10. ஆட்டை—ஆண்டு (ஆட்டைக்கு, ஆட்டை தோறும், ஆட்டை வட்டம்).

11. ஆதிரசாலை—மருத்துவமனை.

12. ஆள் காசு—தலைவரி.

13. ஆனை அச்சு—ஆனையின் உருவம் பொறித்த ஒரு காசு.

14. இஞ்ஞாட்டு — இந்த நாட்டின்.

15. இஞ்ஞாள்—இந்த நாள்.

16. இடஞ்சில் (இடிஞ்சில்)—அகல் விளக்கு.

17. இணை—இரண்டு, ஜதை, ஜோடி.

18. இண்டை—கோயில் திருமேனிகளின் தலையைச் சுற்றி அணியப்படுகிற பூமாலை.

19. இடை நாழிகை—அக நாழிகையைச் (கர்ப்பக் கிருகத்தை) சார்ந்த இடைகழி. அர்த்தமண்டபம் என்று இப்போது வழங்கப்படுகிறது.

20. இரண்டு பூ (இருபூ)—ஆண்டுகளுக்கு இரண்டு போகம் தானியம் விளைவது.

21. இறை—வரி (தறியிறை, செக்கிறை).

22. இறையிலி—வரியில்லாமல் தானம் செய்யப்பட்ட நிலம்.

23. இறையிழிச்சி—வரிநீக்கி.

24. இலக்கணஞ் செய்து—முறைகளை வகுத்து.

25. இழிக்க—அகழ, தோண்ட, கல்ல (துறவு கிணறு இழிக்க).

26. இலை—வெற்றிலை (இலை வாணியப்பாட்டம்—வெற்றிலை விற்பதற்கான வரி).

27. ஈழக்கருங்காசு (ஈழக் காசு)—ஈழ நாட்டில் (இலங்கையில்) வழங்கின காசு.

28. ஈழ விளக்கு—ஈழ நாட்டு விளக்கு.

29. ஈரங் கொல்லி—கோயில்களில் தரையைக் கழுவி மெழுகி ஈரத்தைப் புலர்த்துகிறவன்.

30. உண்ணாழிகை (உள்+நாழிகை) — திருவுண்ணாழிகை, அக நாழிகை, கர்ப்பக் கிருகம்.

31. உண்ணாழிகைப் புறம்—அகநாழிகையில் (கோயில்) பூசை செய்கிறவர்களுக்காகத் தானங் கொடுக்கப்பட்ட நிலம்.

32. உதிரப்பட்டி—போரில் உயிர்விட்ட வீரர்களின் குடும்பத்துக்கு அளிக்கப்பட்ட நிலம்.

33. உத்தர மந்திரி—முதல் அமைச்சர்.

34. உபயம் பலிசை (உபயம்—இரண்டு, பலிசை—வட்டி)—காசாகவும் தானியமாகவும் கொடுக்கப்படுகிற வட்டி.

35. உவா—அமாவாசை, பௌர்ணமி (தலையுவா—அமாவாசை. இடையுவா—முழு நிலா நாள்.)

இச்சொல் மலையாளத்தில் வாவு என்று வழங்கப்படுகிறது.

36. ஊந்தைப் பாட்டம்—ஆற்றிலிருந்து மண் எடுப்பதற்கான வரி.

37. ஊர் வாரியம்—ஊர் ஆட்சிக்குழு.

38. ஏணிக்காணம்—தென்னை பனை மரங்களிலிருந்து கள் இறக்குவதற்கான வரி.

39. ஏரி வாரியம்—ஏரியைப் பாதுகாக்கும் குழு (ஏரிவாரியப் பெருமக்கள்).

40. ஏரிப்பட்டி—ஏரியைப் பராமரிப்பதற்கான செலவுக்காக விடப்பட்ட நிலம்.

41. ஏத்தக் காணம்—ஏத்தம் (ஏற்றம்) இட்டு நீர் இறைத்துக் கொள்வதற்காகச் செலுத்தும் பணம்.

42. ஒட்டோலை—சம்மதித்து எழுதிக்கொடுத்த உடன்படிக்கை

43. ஒரு பூ நிலம்—ஒரு போகத்தானியம் விளையும் நிலம்.

44. ஒலிவண்ணார் பாறை—துணி வெளுக்கும் வண்ணார் செலுத்தும் பணம் (ஒலித்தல்—துணி வெளுத்தல்).

45. ஒரணை—ஒரு ஜதை, ஒரு ஜோடி.

46. ஓலை—திருமுக எழுத்து, தானப்பத்திரம்.

47. ஓலை எழுத்து—அரச ஆணையை எழுதும் அலுவலன்.

48. ஓலைத் தூது—கடிதம் எழுதி அஞ்சல் ஆள் மூலமாக அனுப்புதல் (ஓலைத் தூது கூடக்கடவர்).

இவைபோன்ற எத்தனையோ சொற் நாற்றுக்கணக்கான சொற்களையெல்லாம் அகரவரிசைப் படுத்திச் சாசனச் சொல் அகராதி ஒன்று வெளிவரவேண்டியது அவசியம் அல்லவா?

## ஆசியா—72 பொருட்காட்சியில் ஜப்பான் அரங்கு

புது டில்லியில் நடைபெறுகிற மூன்றாவது ஆசிய சர்வதேச வணிகக் கண்காட்சியில் பங்கெடுத்துக் கொள்கிற முக்கியமான வெளிநாடுகளில் ஜப்பானும் ஒன்று. 4,000 சதுர மீட்டர் பரப்பளவு நிலத்தில் ஜப்பான் காட்சி அரங்கு அழகுற அமைக்கப்பட்டிருக்கிறது. அரங்கினூடே மூன்று மரப்பாலங்களின்கீழே, செயற்கை சிற்றாறு 'சலசல' என்று ஓடிக்கொண்டிருக்கின்றது. பாலங்களின் கீழே பொருத்தப்பட்டுள்ள பச்சை, மஞ்சள் விளக்குகளின் ஒளி தண்ணீரில் பட்டு பிரதிபலிக்கும்போது, கனவுலகத்தில் இருப்பது போன்று பிரமை ஏற்படுகிறது.

ஜப்பான் காட்சி அரங்கு 5 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, அந்நாட்டிலுள்ள 11 முக்கிய உற்பத்தி, வணிக நிறுவனங்களின் உற்பத்திப் பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. முக்கியமாக முன்னேறும் நாடுகளுக்குத் தேவையான இயந்திர சாதனங்கள் இடம் பெற்றுள்ளன. ஒரு பள்ளியை 5 இலட்சம் மடங்கு பெரிதாக்கிக் காட்டும் எலட்டிரான் மைக்ராஸ்கோப், 6 அல்லது 8 பேர் அமரக்கூடிய 'ஜெட்' விமானத்தின் 'மாடல்' அனைவரது கவனத்தையும் கவருகிறது.

சமீப ஆண்டுகளில் இந்தியா—ஜப்பான் கூட்டுறவு முன்னேற்றத்தை விளக்கும் புகைப்படங்கள் இடம் பெற்றுள்ளன.

திறந்த வெளியில் இரு குட்டி 'சூப்பர் எக்ஸ்பிரஸ் எலக்ட்ரானிக்' ரயில் வண்டிகள் ஓடுகின்றன. உலகின் மிக வேகமான 'நியூ டோக்கைடோ லைன்' இரயில் வண்டியின் மாடல் இது. இதில் 30 குழந்தைகள் அமரலாம். அத்துடன் பல்வேறு மிருகங்கள் வடிவில் மோட்டார் கார்களும் இருக்கின்றன. இவற்றில் குழந்தைகள் சவாரி செய்யலாம்.

கண்காட்சி முடிவடைந்த பிறகு, இந்தப் பொழுதுபோக்கு வண்டிகள், இந்திய அரசு மூலம் இந்தியக் குழந்தைகளின் உல்லாசப் பூங்காவுக்கு அன்பளிப்பாக அளிக்கப்படும்.

டிசம்பர் 9ஆம் தேதி ஜப்பான் நாள் கொண்டாடப்பட்டது. அன்று ஜப்பான் கலை நிகழ்ச்சிகளும் திரைப்படங்களும் காண்பிக்கப்பட்டன.

355

# உண்மையின் சந்நிதி

சோம. மகாதேவன்.

15

## வருவது வழித்தங்குமா ?

கூடந்த நான்கு நாட்களாகவே மீனம்மாப் பாட்டி வீட்டைக் கடந்து போகவில்லை. வந்து மோதியிருக்கும் அதிர்ச்சி, நடையைக் குறைத்துக் கட்டிலிலே படுக்க வைத்து விட்டது.

இப்போது, யாரிடமும் சொல்லி அழமுடியாத கவலை பாட்டிக்கு.

ஒன்றே ஒன்றுக்காகத்தான் வாழ்நாளில் பெரும் பகுதி ஓய்வின்றி உழைத்தாள் இந்த மீனம்மாப் பாட்டி. எல்லாம் அவனே என்றிருக்கும் பேரனை வளர்த்து, ஆளாக்கி, நிறைவோடு வாழ வைத்து விட வேண்டுமென்ற துடிப்பு ஒன்றுதான். அதுவே, இறுதியில் இப்படிக் கலங்கித் தவிக்க வைத்து விட்டதே. இங்கே யாருமே நடக்கத் துணியாத தடத்தில் வழி நடந்து, இப்படிப் படுக்கையில் தள்ளி விட்டதே பேரனுக்குப் பெண்ணெடுத்த படலம்.

அவன்—பாண்டியன் பேசப் படித்தவன். எதிலேதான் அவனுக்குப் பயம் தெரிகிறது ? தலைக்குமேல் கல் என்றிருக்கும் போதும், அவன் சிரித்துக் கொண்டே நிற்கிறான். அவனுக்கிருக்கும் நெஞ்சழுத்தம் எல்லாருக்கும் இருக்க முடியுமா?

எந்த விதமான அச்சமும் தோன்றாமல், இதே ஊரில் குடி யிருந்தவளுக்குத்தானே, கடைசிக் காலத்தில் இப்படி மேல் மூச்சு வாங்குகிறது.

கூடத்தை ஒட்டிய உள் அறையில் படுத்து, மேல் உத்திரத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் மீனம்மாப் பாட்டி. விழிகளின் ஓரத்திலே நீர் கோத்திருந்தது.

பொன்னையா பிழைப்பது இரண்டாம் பட்சம் என்று சொல்லுகிறார்களே அப்புறம் என்ன ஆகும் ? அருமை பெருமையாகப் பேரனைக் கட்டிக் காத்ததெல்லாம், இப்படியொரு சுழலில் மூழ்கிப் போவதற்கா ?

பாட்டி பொருமிக்கொண்டிருந்தாள்.

இடையிலே இருமலும் வந்தது.

சமையலறையிலிருந்து அரசி ஓடி வந்தாள்.

" பாட்டி "

" என்னம்மா "

" மருந்து குடிச்சுக்கிங்க " என்றவள், பக்கத்திலிருந்த அலமாரியைத் திறந்து, மருந்து எடுத்துக் கொண்டு வந்தாள் அரசி.

பாட்டி உதட்டளவில் சிரித்தாள். அதில் வேதனை கொப்பளித்தது.

" லிங்கம் எங்கேம்மா?"

" வயலுக்குப் போயிருக்காங்க பாட்டி."

" தனியாவா போயிருக்கான்?"

" என்னமோ தெரியலையே "

பாட்டி ஒருச்சாய்ந்து படுத்து அரசியைப் பார்த்தாள். கண்களில் தேங்கி நின்றிருந்த கண்ணீர் தலையணையில் வழிந்தது.

" ஊரெல்லாம் பகையா இருக்கேம்மா. வரப் போறதை நினைச்சு என் உயிரும் குறையுதே. நான் என்ன செய்யப் போறேன் ?" என்றாள் பெருமூச்சோடு.

" பாட்டி ' என்று பதறியவாறு முகத்திற்கு நேராகக் குனிந்தாள் அரசி. " இப்ப வந்திடுவாங்க " என்றாள்.

" அவன் வரலையா—ஊரைக் கட்டியாளறவன் ?"

"மதுரைக்குப் போனவங்க இன்னம் வரலை பாட்டி " என்றாள் அரசி.

பாட்டி திரும்பிப் படுத்தாள்.

அந்த உருட்டி முத்தையாவை இன்னிக்கு நேத்தா எனக்குத் தெரியும்! அவன் வச்ச குறி தப்பாதே. உருட்டிப் போடுவானே பாவி மகன். பெரிய வீடு எதையும் தாங்கிக்கும். அவங்க ஆட்ட பாட்டத்துக்குப் பலியாக நான்தான் கிடைச்சிருக்கேன் என்ற பாட்டி தலையில் கையை வைத்துக் கொண்டாள்.

பதட்டத்துடன் . கட்டிலில் உட்கார்ந்து, பாட்டியின் கையைப் பிடித்துக் கொண்ட அரசிக்குக் கண்களில் நீர் பொங்கி வந்தது.

'' உங்க நல்ல மனசுக்கு ஒரு குறையும் வராது பாட்டி'' என்று மட்டுமே சொல்ல துடித்த அரசி, உதடுகள் துடிக்கப் பாட்டியின் நெஞ்சிலே முகம் புதைத்துக் கொண்டு வெம்பினாள்.

'' பிறந்த மகள் கண் கலங்காமே வாழணும்னு பெத்தவன் நினைக்கலேயம்மா ?'' என்ற பாட்டி அரசியின் தலையை அணைத்துக் கொண்டாள்.

அரசியால் பாட்டிக்கு என்ன ஆறுதல் சொல்ல முடியும் ?

சற்று நேரம் கழித்து, அரசி தலை நிமிர்ந்த போது, பாட்டி கண்களை மூடி இருந்தாள். இரு மருங்கிலும் கண்ணீர் கசிந்து வந்தது.

அரசி குனிந்து கண்களைத் துடைத்துக் கொண்டாள். அவளால் பாட்டியின் கண்ணீரைத் துடைக்க முடியுமா ?

அப்போது, தலைவாசலிலிருந்து ' அரசி ' என்றழைத்துக் கொண்டே வரும் லிங்கத்தின் குரல் கேட்டது.

அரசி, எழுந்து வெளியே வந்து, '' உடனே திரும்புறேன்னு சொல்லிட்டுப் போனீங்களே '' என்று கேட்டுக் கொண்டே எதிர் கொண்டு சென்றாள்.

'' ரெண்டு ஏக்கருக்கு உரம் போடுறதுக்கு இவ்வளவு நேரம் கூட ஆகாதா ? உன்னை நினைச்சு, இடையிலே எங்கேயும் நிக்கலையே?'' என்று சொல்லிக் கொண்டே நெருங்கி வந்த லிங்கம், '' ஏன்......... கண்ணெல்லாம் கலங்கி இருக்கு?'' என்று கேட்டான்.

'' இன்னும் வரலையான்னு கேட்டு, பாட்டி துடிச்சுப் போறாங்க.''

''நீயும் கூடவே பதைச்சுப் போயிட்டியாக்கும். எப்படித் தான் பாண்டியனுக்குப் பின்னாலே வந்து நீ பிறந்தியோ?'' என்று சொல்லிச் சத்தமில்லாமல் சிரித்தான் லிங்கம்.

' இப்படி வம்பு வழக்கு வந்திருச்சேன்னு நினைச்சுக் கவலைப்படுறாங்க. முதல்லே பாட்டியைப் பாருங்க. '' என்றாள் அரசி அவசரத்துடன்.

'' நீயும் அப்பப்ப தைரியம் சொல்லணும். ''

'' நான் எப்படிங்க சொல்றது ? அண்ணன் இன்னம் வரலைன்னு எனக்குக் கலக்கமா இருக்கு. '' என்று சொல்லி உண்மையை ஒப்புக் கொண்டாள் அரசி.

'' நல்லா இருந்திச்சு. போனவன் காரியம் இல்லாமலா தங்கி இருப்பான். இதெல்லாம் ஒரு கவலையா ? '' என்று கேட்ட லிங்கம், அரசி பின்தொடரப் பாட்டி படுத்திருந்த அறைக்குள் நுழைந்தான்.

கட்டிலின் விளிம்பில் கையை ஊன்றிப் ' பாட்டி ' என்றழைத்தான்.

பாட்டி கண்களைத் திறந்தாள்.

'' நான் சொல்லுறதைக் கேளுடா லிங்கம். '' என்றாள்.

'' என்ன பாட்டி?''

'' இனிமே நீ வயலுக்குப் போறதை நிறுத்திக்கோ. யாரையாவது பதிலா ஒரு ஆளைப் போடு. அவன் போய் பார்த்துக்கட்டும் '' என்றாள் கவலை தோய்ந்த குரலில்.

பாட்டி .வேறு எதையோ கூறப் போவதாக எதிர்பார்த்த லிங்கத்துக்கு, பாட்டியின் கவலை சாதாரணமாகவே பட்டது.

"இப்படிப் பயந்து பயந்து வாழ முடியுமா பாட்டி? நாம போகாமத்தான் உருப்படியா வீடு வந்து சேருமா ? எதை



பாட்டி பேரனின் கையைப் பிடித்துக் கொண்டாள். உள்ளிருந்த நடுக்கம் அவள் கைகளில் தெரிந்தது.

லிங்கம் சற்று நேரம் மௌனமாக இருந்தான்.

'' பாட்டி நாம எந்தத் தவறையும் செய்யலே. நடக்கிறதெல்லாம் நன்மைக்குன்னு நினைங்க. உங்க மனசிலே பதியும் படியா சொல்லணும்னு அதுக்குப் பாண்டியன் தான் வரணும். அவனும் பொழுதடையிறதுக்குள்ளே எப்படியும் வந்திடுவான் '' என்ற லிங்கம் திரும்பி அரசியை ஏறிட்டுப் பார்த்தான்.

'' அவன் சொல்லுத்தானே இப்ப என்னைக் கீழே தள்ளி இருக்கு '' என்று சொல்லிப்

தடவை அண்ணனோடு வந்து பார்த்து விட்டுப் போனவன் ஐயனு.

இன்றைக்குப் பகல் பொழுதிலேயே துணிந்து இங்கே வந்திருக்கிறான்.

குனிந்து கண்களைத் துடைத்துக் கொண்டே '' வா ஐயனு'' என்றாள் அரசி.

வந்து நின்ற பரபரப்பில், இங்கு எடுத்த எடுப்பில் அரசியைப் பார்த்து விட்ட திகைப்பும் கலந்து கொள்ள, சொல்ல வந்ததைச் சொல்ல இயலாதவனாய் அரசியைப் பார்த்தவாறே நின்றான் ஐயனு.

'' எல்லாரும் நல்லா இருக்காங்களா ?'' என்று மேலும் பொதுவாகக் கேட்டபோது, அரசியின் உதடுகள் துடித்தன.

வது? தொடர்ந்து என்ன ஆறுதலைத்தான் சொல்ல முடியும்?

'' நான் கண்ணுக்கு முன்னாலே இருக்கிறது அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சுமையா இருக்கா ஐயனு ? '' என்று கேட்டாள் அரசி.

அவன் தலை குனிந்து கொண்டான்.

சுமைதான். இது தானே அங்கே, அடிப்படையில் கனத்துக் கிடப்பது.

'' பாண்டியன் இன்னம் வரலையம்மா ? '' என்று கேட்ட ஐயனுவின் குரல் இறங்கிப் போயிற்று.

அதற்குள்ளாக, '' என்ன



“ அவங்க நினைச்சதை முடிச்சிட்டாங்க. ”

“ என்ன சொல்றே! ” என்றவாறு நெருங்கி வந்தான் லிங்கம்.

“ காலையிலே பொன்னையா செத்துப் போயிட்டானும்.”

லிங்கமும் திகைத்துப் போனான். பாட்டி இருந்த அறையின் பக்கமாகத் திரும்பிப் பார்த்து விட்டு, “ யாரு சொன்னது உனக்கு?” என்று குரலைத் தணித்துக் கொண்டு கேட்டான்.

“கொல்லைப் பக்கமாக வந்து இப்பத்தான் கந்தையா சொல்லிட்டுப் போருன். எல்லாமே சொல்லி வச்ச மாதிரித்தான் நடக்கு. ” என்ருன் ஐயனு குமுறலை உள்ளடக்கிய குரலில்.

“ வேறே என்ன சொன்ஞன் ? ”

“ காலையிலேதான் சடையனும் இங்க வந்திருக்காஞம். வந்தவுடனேயே அவனுக்கு வெறியேத்தி விட்டிருக்காங்க. எடுப்பும்—தொடுப்பும் பொருத்தமாக இருக்கு. ” என்ருன் ஐயனு.

“போராட்டம் ஒரு முடிவுக்கு வரும்போது எல்லாமே சேர்ந்து தான் வரும். பாண்டியனும் வரட்டும் ” என்ற லிங்கம் பின்னல் நின்ற அரசியைத் திரும்பிப் பார்த்தான்.

வழக்கு, கொலை வழக்காகி விட்ட அதிர்ச்சியில் சுவரோடு சாய்ந்து விட்டாள் அரசி.

“ இப்ப எல்லாருக்குமே நிம்மதியா இருக்கும். இல்லையா ஐயனு. ” என்று குமுறலோடு கேட்டாள் அரசி.

“ ஆட்டிப் படைக்கிறதெல்லாம் சித்தப்பன் கையிலே இருக்குதம்மா. இந்த வேதனையிலேதான் நான் வெந்துகிட்டிருக்கேன். இனிமே என்ன—இந்த உயிரு வேறே எதுக்குத்தான் இருக்கு?” என்ருன் ஐயனு கொந்தளிப்போடு.

அப்போது வாசல் பக்கமிருந்து சலசலப்புக் கேட்டது.

லிங்கமும் ஐயனும் பரபரப்புடன் முன்பக்கம் சென்ருர்கள்.

வாசலிலே ஆவேசத்தோடு சடையன் நின்று கொண்டிருந்தான். சற்றுத் தள்ளி, வேடிக்கை பார்ப்பது போல் ஒரு கும்பலும் ஒதுங்கி நின்றுகொண்டிருந்தது.

சடையன் முன்பிருந்ததைவிட ஆள் கனத்திருந்தான். மீசையும் தடித்திருந்தது.

லிங்கத்தைக் கண்டதும் அவன் சீறினன்.

“ எங்கண்ணனை வெட்டுறப்ப என்னை நினைக்கலையா ? பழி வாங்கத்தான் வந்திருக்கேன்.” என்று சொல்லிக் கொக்கரித்தான்.

“ யாரு குற்றவாளியின்னு கோர்ட்டிலே முடிவு சொல்லுவாங்க? அதுக்குள்ளே குறுக்கே வந்து விழுந்து உன்னேட முடிவைத் தேடிக்காதே ” என்ருன் லிங்கம் கோபத்தினுல் உடல் பதற முன்னுல் வந்து.

சடையன் நின்ற இடத்திலேயே வெறியோடு சிரித்தான்.

“என்னேட முடிவையும் கணிச்சுச் சொல்ற அளவுக்கு வளந்திட்டியா ? நானும் பொன்னையா இல்லை. சடையன். ” என்ருன் அவன் கைகளை ஆட்டிக் கொண்டு.

“ நீ யாருன்னு எங்களுக்கு நல்லாத் தெரியுமே. இதை இங்க வந்து சொல்லிக்க வேண்டிய அவசியமே இல்லையே. எதைச் செய்யணுமோ—அதைப் பாரு.” என்ருன் ஐயனு நிதானமாக.

**ஆசியா 72**
**பொருட்காட்சி**
**திரைப்படம்**

**புதுடில்லியில் நடைபெற்று வரும் ஆசியா 72 பொருட்காட்சியைப் பற்றித் தமிழ்நாடு அரசு, செய்தி–மக்கள் தொடர்புத் துறையின் திரைப்படப் பிரிவு திரைப்படமாக எடுத்துள்ளது. வண்ணத்தில் எடுத்துள்ள இப்படம் ‘ஆசியா 72’ பொருட்காட்சியைப் பார்க்க வாய்ப்பில்லாதவர்களுக்கு நல்லதொரு வாய்ப்பை அளிக்கும்.**

“ செய்யத்தான் போறேன். நான் வச்ச குறி தப்பினதில்லை. தப்பாது.” என்று உறுமினன் சடையன்.

ஆவேசம் பொங்க லிங்கத்துக்கு முன்னுல் படிகாலில் இறங்கினன் சடையன். லிங்கம் அவனது கையைப் பிடித்துக் கொண்டான்.

“ பாக்கிறவன்— அதையேன் சொல்லிக்கிட்டு நிக்கிறே. வாயேன் முன்னலே ” என்ருன் ஐயனு கோபத்தோடு.

“ என் நெஞ்சு குமுறுதடா. இதுக்கு எத்தனை பேர் பலியாகப் போறீங்களோ? போறேன். செத்தவனைச் சாம்பலாக்கிப் போட்டுட்டு வாரேன்” என்று சொல்லி விட்டுத் திரும்பி நடந்தவன், நின்று மீண்டும் திரும்பிப் பார்த்து, “ நான் ரெத்தத்தைக் குடிச்சே வளர்ந்தவண்டா. உங்களை விடவா போறேன்? வந்து பாத்துக்கிறேன். ” என்று ஆங்காரம் தொனிக்கச் சொல்லி விட்டுப் பூமியதிரவே நடந்து சென்ருன் சடையன்.

சுற்றிலும் நின்று, வாய் திறக்காமலே வேடிக்கை பார்த்து நின்ற கும்பல், அந்தப் போக்கிரியை முந்த விட்டுப் பின் தொடர்ந்து சென்றது.

இந்தக் காட்சியை ரசித்தவாறு, லிங்கமும்-ஐயனும் முற்றத்திலேயே நின்றனர்.

இதுகாறும் கண்ணெதிரில் நடந்த நாடகத்தைப் பார்த்துத் துயரத்தால் கடல் அலையெனக் கொந்தளிக்கும் உள்ளத்தோடு தலைவாசல் கதவின் மீது சாய்ந்திருந்த அரசி, பாட்டியின் நினைவு வந்தவளாக, குனிந்து கண்களைத் துடைத்துக் கொண்டே உள் பக்கம் திரும்பிப் பார்த்தாள்.

உள் நடையின் நிலைப்படியைப் பிடித்தவாறே, கண் கலங்கி நின்று கொண்டிருந்த மீனம்மாப் பாட்டி, அந்தக் கணத்தில், கால்கள் துவள, அப்படியே சரிந்து கீழே சாய்ந்தாள்.

“ பாட்டி !” என்றலறிக் கொண்டே உள்ளே ஓடினுள் அரசி.

(வளரும்)





# இளைஞர் அணியின் இலட்சியப் பணிகள்

நம் நாட்டு மக்களில் பெரும்பாலோர் கிராமத்தில்தான் வாழ்கிருர்கள். ‘கிராமம்தான் நம் நாட்டின் முதுகெலும்பு’ என்று கூறினர் அண்ணல் காந்தி. ஆகவே, கிராமம் முன்னேறினுல்தான் நம் நாடு முன்னேறும். இந்த உண்மையை மனத்தில் வைத்துக் கிராம மக்களின் முன்னேற்றத்திற்காகப் பற்பல திட்டங்களைத் தீட்டி அவைகளைச் செயல்படுத்தி வருகிறது தமிழக அரசு.

நம் நாட்டு இளைஞர்களைக் கிராமச் சூழ்நிலைகளிலே பழக்கி, அவர்களின் சேவைகளைக் கிராம மக்களுக்காகப் பயன்படுத்தும் பொருட்டும், படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை நல்கும் பொருட்டும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் சென்ற ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது ‘இளைஞர் அணி’. அந்த அணியின் கீழ்ப் பணியாற்றும் பேறு பெற்றவர்களில் நாங்களும் சிலர்.

•

எங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வேலைகளில் மிக முக்கியமானது ‘ முதியோர் கல்வி ’ கிராமத்திலுள்ள பதினைந்து வயது முதல் ஐம்பது வயதுக்குட்பட்ட எழுதப்படிக்கத் தெரியாத மக்களுக்கு எழுதப் படிக்கச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அதற்காகக் கிராமத்திலுள்ள எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் பட்டியல் தயார் செய்து, அதன்படி எழுதப்படிக்கத் தெரியாதவர்களைத் தனியாகச் சந்தித்து முதியோர் கல்வி வகுப்புகளுக்கு வருவதற்கான ஏற்பாடுகள் செய்தோம் ; ஒவ்வொரு நாளும் மாலை ஏழு மணி முதல் ஒன்பது மணிவரை கிராம ஊராட்சி மன்ற அலுவலகத்தில் அவர்களைக் கூட்டிவைத்து எழுதப் படிக்கச் சொல்லிக் கொடுத்து வருகிருேம். கிராம மக்களின் சொந்த வேலைகளுக்குச் சிற்சில சமயங்களில் இது தடையாக



இருந்தாலும், அவர்களிடையே இந்தத் திட்டத்திற்கு நல்ல வரவேற்புள்ளது. கிராமத்திலுள்ள இளைஞர்களை ஒன்று சேர்த்து ‘இளைஞர் மன்றம்’ அமைத்து அதன்மூலம் நாடு சிறக்க நல்லபல பணிகள் செய்வதுதான் எங்களது அடுத்த முக்கிய நோக்கம். அதன்படி முப்பத்துநான்கு இளைஞர்களைக் கொண்டஒரு ‘இளைஞர் மன்றம்’ அமைத்து அதன்மூலம் கிராம விளையாட்டுகள், தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம், கிராம மக்கள் ஒற்றுமை, முன்னேற்றம் இவைகளுக்கான பணிகள் செய்தல் போன்றவைகளைச் செய்து வருகிருேம்.

**மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்த புதுத் தாமரைப் பட்டியில் பணியாற்றும் இளைஞர் அணிக் குழுவினர் தங்களின் ஈடில்லாப் பணிகளைப் பற்றி இங்கே எடுத்துரைக்கின்றனர்.**

இளைஞர் மன்றத்தின் சார்பில் பொங்கல்விழா முதலியவற்றை விளையாட்டுப் போட்டிகள் நடத்தி மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகிருேம். கிராமத்தில் சுற்றுப்புறச் சுகாதாரத்திற்காக நல்ல பல பணிகள் செய்வது எங்களுடைய மூன்ருவது முக்கிய நோக்கம். இதன்படி ஒவ்வொரு வீட்டிற்கும் ஏற்ற முறையில் மூன்று விதமான கழிவறைகள் அமைத்துப் பயன்படுத்துவது, சாக்கடைகளைச் சுகாதாரமுறைப்படி தேக்கி அவற்றைப் பயன்படுத்துவது முதலியவைகள் சம்பந்தமாக வேண்டிய அறிவுரைகள் வழங்கிவருகிருேம்.

இந்த முக்கிய வேலைகள் அல்லாது விவசாய முன்னேற்றம், கால்நடை வளர்ச்சி குடும்ப நல்வாழ்வு முதலியவற்றிற்கும் எங்களாலியன்ற ஒத்துழைப்புகளை நல்கி வருகிருேம்.

இவையல்லாது அவ்வப்போது அரசு அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு கிராம மக்களுக்காகப் பற்பல சேவைகளைச் செய்து வருகிருேம்.

தமிழக அரசால்நாட்டு மக்களுக்காகச் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களைப்பற்றிக் கிராம மக்களுக்கு அறிவித்து அந்தத் திட்டங்களின் முழுப் பயனையும் கிராமங்களுக்குக் கிடைக்கச் செய்வதும் எங்கள் பணிகளுள் ஒன்றே!




**Ecological hazards by Thermal Power Stations**

Thermal power stations using coal and set up in the country long back are not strictly pollution proof and discharge large quantities of fly ash and other effluents. Mechanical collectors provided in Thermal power stations can at best stop only 80 to 85 per cent of fly ash escaping into the air. But the recently developed Electrostatic Precipitators used along with mechanical separators can collect as much as 98 to 99 per cent of fly ash.

The extent of environmental pollution by fly ash discharge from power stations will be catastrophic to future generations, if it is not checked properly.

By 1980, about 52 million KW of electricity will be the targeted generating capacity. Out of this, about 24 million KW will be thermal. Assuming most of these power stations use coal with 30 to 45 per cent ash, then nearly 50 million tonnes of coal will be burnt in these stations, producing 15 million tonnes of ash. That will mean about 3 million tonnes of fly ash in a year, or about 8,800 tonnes a day will get into the atmosphere. Using mechanical collectors, the discharge will be reduced only to 1,326 tonnes a day and with Electrostatic Precipitators, this will be reduced to a mere 180 tonnes a day.

**but not with BHEL built power stations**



Electrostatic Precipitators have:

- sustained high collecting efficiency upto 99%
- minimum operating costs
- low energy consumption
- easy maintenance and
- long durability.

Other than in Thermal Power Stations, Electrostatic Precipitators are also installed in cement and steel plants, in chemical and fertilizer industries and in producer gas plants.

BHEL-High Pressure Boiler Plant have been able to develop a highly effective design of Electrostatic Precipitators, with a wide adoptability. These are supplied as original equipments to every thermal power station designed and commissioned by BHEL. These can be supplied on replacement basis or as additions to existing power stations also.

**BHEL**

BHARAT HEAVY ELECTRICALS LTD.
(A Govt. of India Undertaking)
Unit: High Pressure Boiler Plant,
TIRUCHIRAPALLI-14
Regd. Office:
8, Parliament St., New Delhi-1


# கேளுங்கள் கொடுக்கப்படும்

எங்கள் உழவர் விவாதக் குழுவில் உள்ள 56 உழவர்களின் நிலத்தில் மண் மாதிரி எடுத்து மண் பரிசோதனைக்கு அனுப்பி அதன் முடிவுகள் எங்களுக்குக் கிடைத்துள்ளன. அவைகளிலிருந்து 45 உழவர்களின் நிலம் அமிலத் தன்மை உள்ளதாகத் தெரிய வருகிறது. இந்த அமிலத் தன்மையைப் போக்கி நல்ல மகசூல் அடைய எந்த முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று விரிவாகத் 'தமிழரசு' இதழில் வெளியிட வேண்டுகிறேன்.

—பி. எஸ். சங்கரநாராயணன்,
அமைப்பாளர்,
உழவர் விவாதக்குழு,
ரவண சமுத்திரம்,
நெல்லை மாவட்டம்.

மண், அமிலத் தன்மையுடையதாக இருக்குமானல், அத்தன்மையைப் போக்கச் சுண்ணும்பு (Calcium carbonate) இடவேண்டும். மண் பரிசோதனையின் முடிவில் உங்கள் நிலத்தினுடைய 'பி. எச்.' எனப்படும் அமிலகார நிலை (pH.) குறிப்பிடப்பட்டிருக்கும். அதைக் கவனித்துப் பாருங்கள். பொதுவாக 'பி.எச்.' அளவு 6·0 என்ற அளவுக்குக் குறைந்திருப்பின், நிலம் அமிலத் தன்மையுடையதாக இருக்கிறது என்பது உறுதி. 'பி.எச்.' அளவுக்கு ஏற்ப ஒவ்வொரு ஏக்கர் நிலத்திற்கும் கீழே குறிப்பிட்டுள்ள அளவில், சுண்ணும்பு இட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

| 'பி.எச்.' அளவு. | | ஏக்கருக்கு இட வேண்டிய சுண்ணும்பின் அளவு. (கிலோ) |
|---|---|---|
| 5·9 | .. | 455 |
| 5·8 | .. | 680 |
| 5·7 | .. | 905 |
| 5·6 | .. | 1,135 |
| 5·5 | .. | 1,360 |
| 5·4 | .. | 1,590 |
| 5·3 | .. | 1,810 |
| 5·2 | .. | 2,040 |
| 5·1 | .. | 2,260 |
| 5·0 | .. | 2,495 |

மற்றும் அதற்குக் கீழே.

உங்கள் மண் பரிசோதனை முடிவில் குறிப்பிட்டுள்ள 'பி.எச்.' நிலைக்கு ஏற்ப, சுண்ணும்பு இட வேண்டிய அளவை நிர்ணயித்துக் கொண்டு, அந்த அளவில் சுண்ணும்பை நிலத்தில் இட்டு, நன்கு கலக்குமாறு உழுதுவிட வேண்டும். சுண்ணும்பு இட்ட ஒரு வாரத்திற்குப் பிறகே, நிலத்தில் நடவு செய்ய வேண்டும்.

இப்பரிந்துரை பொதுவானதேயாகும். உங்கள் நிலத்தின் அமிலத் தன்மையைப் போக்க என்ன செய்ய வேண்டும் என்பதை மண் பரிசோதனையின் முடிவில் தெரிவிக்கப்பட்டிருக்கும். எனவே, அதில் கண்டுள்ளபடி நீங்கள் செய்வதே சிறந்தது.

உங்கள் நிலம் முழு அளவில் அமிலத் தன்மை யற்றதாக ஆகும் வரை, 6 மாதங்களுக்கு ஒருமுறை வீதம், மண் பரிசோதனை செய்து, அதில் குறிப்பிடப்படும் 'பி.எச்.' அளவுக்கு ஏற்ப, சுண்ணும்பை இட்டுவரவேண்டும்.

'தமிழரசு' 1—9—72 தேதி இதழில் சோயா மொச்சையைப் 'பென்சிலின்', 'ஸ்ட்ரெப்டோமைசின்' போன்ற மருந்துகள் தயாரிக்க வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த இரு மருந்துகளும் இந்தியாவில் எங்குத் தயார் செய்யப்படுகிறது ?

—வெ. ர. ஐயப்பன், பி.ஏ.,
அமைப்பாளர்,
உழவர் ஆய்வு மன்றம்,
சுக்காம்பட்டி,
மதுரை மாவட்டம்.

'பென்சிலின்', 'ஸ்ட்ரெப்டோமைசின்' போன்ற நோய்த் தடுப்பு மருந்துகள் (Anti-biotics) இந்தியாவில் 'பிம்பிரி', 'டிராம்பே', பம்பாய் ஆகிய இடங்களில் தயாரிக்கப்படுகின்றன.

தற்போது சூரிய காந்தி பயிர் செய்ய அரசாங்கம் ஊக்குவிப்பதாகவும், அதற்கு மானியம் அளிப்பதாகவும் அறிகிறேன். இதற்கு அரசாங்கம் கொடுக்கும் மானியத் தொகை எவ்வளவு? ஏக்கருக்கு எவ்வளவு விளைச்சல் காணமுடியும்? எந்தப் பருவத்தில் பயிர் செய்ய வேண்டும் ? பொறுக்கு விதைகள் எங்குக் கிடைக்கும் ? விதைகளை விற்பனை செய்ய எங்கே கொண்டு செல்ல வேண்டும் ?

—ஆ. நா. கனகராசு,
தலைமைப் பண்டகசாலை,
பொறுப்பாளர்,
மின்வாரியம், கிருட்டிணகிரி.

தமிழ்நாடு அரசும், இந்திய அரசும், 'சூரிய காந்தி' பயிரிடுவதை ஊக்குவிக்கின்றன. செயல் விளக்கத் தளை அமைப்பவர்களுக்கு மட்டுமே முன்பு மானியம் வழங்கப்பட்டது. தற்பொழுது சூரியகாந்தி பயிரிடுவ்தற்குப் பின்கண்ட சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

1. நிலக்கடலை ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டம் நடைமுறையில் உள்ள இடங்களில் ஏக்கருக்கு 4 கிலோ விதையும், அவ்விதைகளுடன் கலப்பதறகுத் தேவையான மருந்தும் இலவசமாக அளிக்கப்படுகிறது.

2. கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் சூரியகாந்தி பயிரிடுவதற்காகக் குறுகிய காலக் கடன் வழங்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

மானுவாரியில் சூரியகாந்தி பயிரிட்டால் ஏக்கருக்குச் சராசரியாக 300 கிலோவும், இறைவையில் 600 கிலோவும் மகசூல் கிடைக்கும். செப்டம்பர்—அக்டோபர் முதல் டிசம்பர்–சனவரி வரையான பருவத்தில் மானுவாரியாகவும், சூன்முதல் செப்டம்பர் வரையான பருவத்திலும், பிப்ரவரி—மார்ச்சு முதல் மே—சூன் வரையான பருவத்திலும் இறைவையாகவும் சூரியகாந்தியைப் பயிரிடலாம். பொறுக்குவிதைகள் பெற உங்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணியாற்றும் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களின் உதவியை நாடுங்கள். உங்களுக்குக் கிடைக்கும் சூரியகாந்தி




பிலிப்ஸ், HRC-16 எகானமி லாண்டர்னே அறிமுகப் படுத்துகிறது. HPL 125 W MV லாம்புக்கேற்ற சிக்கனமான ஃபிட்டிங்.

சிறியதும், அதிக நடமாட்டமுமில்லாத தெருக்களில் இனி நீங்கள் செலவைப் பெருக்கும் லாம்ப் ஃபிட்டிங்குகளை உபயோகிக்கத்தேவையில்லை. HRC-16 உங்களுக்குத் தெருப்பாதுகாப்பை மலிவாகக் கிடைக்க வழி செய்கிறது.

HRC-16 ஒரு கச்சிதமான ஃபிட்டிங்காகும். இதன் உள்ளேயே பலாஸ்ட் யூனிட் மற்றும் தெருவை நோக்கி ஒளியைப் பாயவைக்கும் சிறந்த ரிஃப்ளெக்டர் இவற்றின் இணைப்பு உள்ளது. இப்போதுள்ள தெரு விளக்கின் பிராக்கெட்களிலேயே இதை எளிதில் பொருத்தலாம்.

ஹை ட்ரான்ஸ்பேரென்ஸி மற்றும் அக்ரிலிக் கவருடன் சேர்ந்தோ அல்லது தனியாகவோ HRC-16 கிடைக்கும்.

**சிறந்த ஒரு லாம்ப் வேண்டுமா?**
**பிலிப்ஸ் வாங்குங்கள்**



PHL 3662

**பிலிப்ஸ்**

PHILIPS

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்
கல்கத்தா • பம்பாய் • புதுடில்லி • சென்னை

மகசூலை ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களின் மூலமாகவோ அல்லது தனிப்பட்ட வியாபாரிகள் மூலமாகவோ விற்பனை செய்யலாம். அல்லது நீங்களே சூரியகாந்தி விதையை நாட்டுச் செக்கு அல்லது 'எக்ஸ் பெல்லர்' ஆலை, அல்லது 'ரோட்டரி' ஆலையில் இட்டு எண்ணெய் எடுத்து, எண்ணெய் ஆக விற்பனை செய்யலாம். பிண்ணாக்கைக் கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்தலாம்.

எங்கள் பகுதியில் மழை சரியில்லாததால் (கிணற்றில் தண்ணீர் இல்லாததால்) சம்பாப் பட்டத்திற்கு முன் கூட்டியே நாற்று விடவில்லை. தற்சமயம் தொடர்ந்து மழை பெய்திருப்பதால் கிணற்றில் ஓரளவு தண்ணீர் ஊறிக் கொண்டிருக்கிறது. மாறுவாரியாக நெல் விதைக்கலாம் என்று சொல்கிறார்கள். எனவே, தற்சமயம் என்ன நெல் விதைக்கலாம்? ஐ. ஆர். 8 போடலாமா? ஐ. ஆர். 20 போடலாமா? ஐ. ஆர். 8 குளிர் தாங்கும் சக்தியில்லாததால் மகசூல் குன்றுவதும் என்ச் செப்டம்பர் 16-ஆம் தேதி 'தமிழரசு' இதழில் வெளியாகியுள்ளது. எங்கள் பகுதியில் ஐ. ஆர். 8, ஐ. ஆர். 20, ஆடுதுறை 27, ஐ. ஆர். 22 முதலிய நெல் ரகங்கள் உள்ளன. இதில் எதை மாறுவாரியாகப் போடலாம்? இதில் சொல்லப்படாத வேறு வகைதான் போட வேண்டும் என்று நீங்கள் கூறுவீர்களேயானுல், அதை எங்கு எழுதிப் பெறுவது? உடனடியாகக் கிடைக்குமா? அப்படி மாறுவாரியாகப் போடும் ரகத்தின் கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகளைத் தெரிவிக்கவும்? இக்கேள்விக்கு நவம்பர் 1-ஆம் தேதி இதழிலேயேவிடையை எதிர்பார்க்கிறேம்.

—துரை முருகேசன்,
மாவுத்தன்பட்டி,
நிலக்கோட்டை வட்டம்,
மதுரை மாவட்டம்.

'தமிழரசு' இதழில் வெளியிடப்படவிருக்கிற கட்டுரைகள் சுமார் ஒரு மாதத்திற்கு முன் கூட்டியே எழுதப்பட்டு, அச்சகத்திற்கு அனுப்பப்பட்டு விடுகின்றன. எனவே, தாங்கள் கேட்டுள்ளபடி நவம்பர் 1-ஆம் தேதி இதழில் தங்கள் கேள்விக்கு விடை அளிக்க இயலாமைக்கு வருந்துகிறேம். தாங்கள் 24—10—1972 அன்று கடிதம் எழுதி, 1—11—1972 இதழில் வெளியிட வேண்டுமென்று கேட்பது முடியக் கூடிய செயலா என்பதைத் தயவு செய்து எண்ணிப் பார்த்தால், எங்கள் மேல் தவறு இல்லை என்பது தெளிவாகும். எனவே, இனிமேலாவது முன் கூட்டியே எழுதுங்கள். நூற்றுக்கணக்கான உழவர் பெருமக்களிடமிருந்து தொடர்ந்து கேள்விகள் வந்து கொண்டே இருப்பதால், அவைகளில் முக்கியமானவற்றையும், அவசரமானவற்றையும் எடுத்துக் கொண்டு விடையளிக்க வேண்டியுள்ளது. தாங்கள் மொத்தம் 10 கேள்விகள் கேட்டிருக்கிறீர்கள். எனவே, எல்லாக் கேள்விகளுக்கும் உடன் விடை அளிக்க இயலவில்லை. ஆயினும் தொடர்ந்து உங்கள் கேள்விகளுக்கு விடையளிக்கவிருக்கின்றேம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேம்.

தாங்கள் குறிப்பிட்டுள்ள ரகங்களில் ஐ. ஆர். 8 மட்டுமே மாறுவாரியாகப் பயிரிடுவதற்கு ஏற்றது. ஆனுல் ஐ. ஆர். 8 ரகத்தை மாறுவாரியாகச் சாகுபடி செய்ய ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் விதைப்பதுதான் சிறந்தது. ஆகஸ்டு மாதத்தில் 'கோ. 31' என்னும் 'ஒட்டு மாறுவாரி சம்பா' ரகத்தையும் விதைக்கலாம். ஆனுல், மாறுவாரியாக நெல் விதைக்க நவம்பர் மாதம் ஏற்றதல்ல. நவம்பர் மாதத்தில் மாறுவாரியாக விதைப்பதற்கு ஏற்ற ரகமும் இல்லை. எனவே, காலம் கடந்து விட்டதால் மாறுவாரியாக நெல் சாகுபடி செய்யும் முயற்சி பயனளிக்காது.

தற்பொழுது தமிழ்நாடெங்கும் நல்ல மழை பெய்ததன் காரணமாகத் தங்கள் பகுதிக் கிணறுகளில் தண்ணீர் நிறைய ஊறும் என்று நம்புகிறேம். போதிய தண்ணீர் கிடைக்குமானுல், நவம்பர் 30-ஆம் தேதிக்குள் அன்னபூர்ணு (கல்சர்—28) என்னும் ரகத்தை நாற்று விடலாம். இதன் வயது 95 நாட்களேயாகும். 'அன்னபூர்ணு' குறுகிய கால வயதுடையதாக இருப்பதால், தண்ணீர் பற்றுக் குறையுள்ள இடங்களுக்கு மிகவும் ஏற்றது. இந்த ரகத்தை உடனடியாக விதைப்பதற்கும், தங்களால் இயலாதென்று எண்ணுகின்றேம். இந்த ரக விதை உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கில் கிடைக்குமா என்பதும் எங்களுக்குத் தெரியாது. இவ்விவரம் எதிர்காலத்திலாவது தங்களுக்குப் பயன்படும் என்று கருதியே தெரிவிக்கின்றேம்.

தண்ணீர் வசதி இருக்குமானுல் டிசம்பர் கடைசியில் அல்லது சனவரியில் ஐ. ஆர். 8 ரகத்தை நாற்று விட்டு, நடவு செய்யுங்கள். இதன் வயது 135 நாட்களே. ஐ. ஆர். 8 ஓரளவு தண்ணீர் பற்றுக் குறையையும் தாங்கிக் கொள்ளும். தங்கள் கிணற்றுப் பாசனத்திற்கு ஐ. ஆர். 8 மிகவும் ஏற்றதாக இருக்கும். எனவே, டிசம்பர் கடைசியில் அல்லது சனவரி முதலில் ஐ. ஆர். 8 நாற்றுவிட்டுச் சாகுபடி செய்வதே பயன்தரும் செயலாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேம்.

## பூச்சிகளை எப்பொழுது தடுப்பது?

பயிர்களின் மேலே காணப்படக் கூடிய பூச்சிகளைப் பொறுத்தமட்டில், அவை பயிர்களில் தோன்றிய பிறகு கூட மருந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம். ஆனுல் பயிர்களின் உள்ளே தோன்றி தீங்கு விளைவிக்கக் கூடிய பூச்சிகளுக்கு-அவை எச்சமயத்தில் பயிர்களின் உள்ளே செல்லக் கூடுமோ, அச்சமயங்களில்-முன் தடுப்பாக மருந்தைத் தெளிப்பது நல்லது. இதனுலேயே 2 அல்லது 3 முறை மருந்து தெளிக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது. அதுபோலவே, கண்களுக்கு எளிதில் புலப்படாத பூச்சிகளைக் கட்டுப்படுத்தவும் முன்கூட்டியே மருந்து தெளிப்பது சிறந்தது. மாவு போன்ற பொருளால் மூடப்பட்ட பூச்சிகளுக்கு வீரியம் மிகுந்த மருந்துகளை பூச்சிகளின்மேல் நன்கு படும்படி தெளிக்க வேண்டும்.

எனது வீட்டுத் தோட்டத்தில் மல்லிகைக் கொடி பயிரிட்டுள்ளேன். அது நன்ருக வளராமல், இலைகளில் வெள்ளைநிறம் ஏற்பட்டு, செடி சரியாக வளரவில்லை. காரணம் தெரியவில்லை? செடி நன்ருக வளர என்ன செய்ய வேண்டுமென்பதைத் தயவு செய்து வெளியிடவும்?

—பி. ராசன்,
தேரப்பாடி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

மல்லிகைக் கொடியின் இலைகளில் முதலில் வெள்ளை நிறம் ஏற்பட்டு, பிறகு பழுப்பு நிறமாக மாறி உதிர்ந்துவிடுமானால், இது சிவப்புச் சிலந்திப் பூச்சியின் தாக்குதலால் ஏற்பட்டிருக்கக் கூடும். சிவப்புச் சிலந்தியின் சேதத்தைத் தடுக்க 'ட்ரைத்தியான்' என்ற மருந்தில் 1·5 மில்லி லிட்டரை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து வாரமொருமுறை விதம் 3 முறை தெளிக்க வேண்டும்.

மல்லிகைக் கொடியிலுள்ள இலைகளின் 2 பக்கங்களிலும் வெள்ளைநிறக் கொப்புளங்கள் காணப்பட்டு, பிறகு கருகிவிட்டால், இது இலைக் கொப்புளம் உண்டாக்கும் சிலந்திப் பூச்சியால் தாக்கப்பட்ட அறிகுறியாகும். இதைத் தடுக்கக் 'கரையும் கந்தகம்' அல்லது 'தயோவிட்' என்னும் மருந்தில் 10 கிராமை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

'மெட்டாசிஸ்டாக்ஸ்' என்ற மருந்தில் 1 மில்லி லிட்டரை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்தும் இப்பூச்சியைக் கட்டுப்படுத்தலாம்.

எனவே, பூச்சி எது என்பதை நன்கு கவனித்து அதற்கேற்ற மருந்தைத் தெளியுங்கள்.

### பூச்சிகளை எவ்வாறு கண்டு பிடிப்பது?

சில பூச்சிகள் கண்களுக்கு எளிதில் தென்படும். அவை பயிர்களின் மேலேயே காணப்படும். (உ-ம்) இலைப் புழுக்கள், வெட்டுக் கிளிகள், நாவாய்ப் பூச்சிகள்.

சில பூச்சிகள் சாதாரணமாக கண்களுக்குத் தெரியாது. பயிர்களின் தோகையைத் தட்டிப் பார்த்தால் தான் தெரியும். பயிர்களின் தோகையைத் தட்டும் பொழுது பூச்சிகள் பறந்து செல்லும். அப்பொழுதுதான் பூச்சிகள் கண்களுக்குத் தெரியும். (உ-ம்)தத்துப் பூச்சி, நெற்பேன்.

சில பூச்சிகளைக் கூர்ந்து நோக்கினுல் மட்டுமே தெரியும். (உ-ம்) 'பல்காரிட்' தத்துப் பூச்சி.

சில பூச்சிகளை சேதத்தின் அறிகுறியின் மூலமாகவே அறிந்து கொள்ள முடியும். (உ-ம்) குருத்துப் பூச்சி, ஆனைக் கொம்பன். இவ்வகைப் பூச்சிகளை அறிய பயிர்களின் தண்டுகளைப் பிளந்துபார்க்க வேண்டும்.

வர்களைச் சிவப்பு எறும்புகள் கடிக்கும். வலி, பொறுக்க முடியாதபடி இருக்கும். கடித்த இடம் வீக்கமாகவும், சிவந்தும் காணப்படும். சில சமயம் மாமரத்தின் கீழே, மண்ணிலும் இவை மேய்ந்து கொண்டு இருக்கும்.

சிவப்பு எறும்புகளை அழிக்க பி.எச்.சி. 5 சதத்தூளைத் தூவ வேண்டும். அல்லது பி.எச்.சி. 50 சதத் தண்ணீரில் கரையும் தூளைத் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்,

சோயா மொச்சை விவரம் கண்டு மனம் மகிழ்ந்தேன். நீங்கள் குறிப்பிட்ட காலத்தில் மட்டும் தான் பயிரிடலாமா ? வேறு காலங்களிலும் பயிரிடலாமா? அதனுடைய விதை பேக்டீரியல் கல்ச்சர், திபா முதலியன சேலம் மாவட்டத்தில் எங்குக் கிடைக்கும் என்பதைத் தயவு செய்து தெரிவிக்கவும் ?

— எஸ்.பி. தங்கவேலு,
சாந்தி நகர்,
பொந்தனூர் (அஞ்சல்),
சேலம் மாவட்டம்.

தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறையினுல் வெளியிடப்பட்ட 'வேளாண்மைக் குறிப்புகள்' என்ற கையேட்டை எவ்விடத்தில் பெறலாம் ? விலை என்ன ?

—சிவகிரி இரா. மீனுட்சி சுந்தரம்,
நந்தனம், சென்னை.

"வேளாண்மைக் குறிப்புகள்" என்ற கையேட்டைப் பின்கண்ட முகவரியில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மாவட்ட வேளாண்மை அலுவலர் (செய்தி),
வேளாண்மைத் தகவல் செய்தி நிலையம்,
வேளாண்மைத்துறை இயக்குநர் அலுவலகம்,
சேப்பாக்கம், சென்னை-5.

வேளாண்மைக் குறிப்புகளில் 2 தொகுதிகள் உள்ளன. இவ்விரண்டு தொகுதிகளும் சேர்ந்து ஒரு ரூபாய் விலைக்கு விற்கப்பட்டு வருகிறது.

எங்கள் தோட்டத்தில் உள்ள மாமரங்களில் 'முசுடு' என்னும் சிவப்புப் பூச்சி அதிகமாக உள்ளது. கட்டை எறும்பு போல் உள்ளது. இலைகளில் கூடு கட்டிக் கொண்டுள்ளது. மாமரங்களில் மாங்காய் காய்த்தால், அறுப்பது சிரமமாக உள்ளது. மரத்தின் கிட்டே போக முடியவில்லை. அது கடித்தால், கொளவி கொட்டியதுபோல் வலி ஏற்படுகிறது. இதர மரங்களிலும் உள்ளது. அதைப் போக்க என்ன செய்ய வேண்டும்?

—ஆர். கந்தசாமி,
நியூஸ் ஏஜெண்ட்,
ஆண்டிமடம் (அஞ்சல்),
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

தாங்கள் குறிப்பிட்டுள்ள 'முசுடு', 'சிவப்பு எறும்பு' ( Red ant ) ( Oecophylla smaragdina ) எனப்படுகிறது. இவை மாமரங்களில் கூடுகட்டிக் கொண்டு வாழ்கின்றன. காய்கள் அறுக்கவோ, அல்லது மாவிலை ஒடிக்கவோ மரத்தில் ஏறுகின்ற

'தமிழரசு' இதழில் குறிப்பிட்டுள்ள பருவத்தில் மட்டும் பெரும் மகசூல் கிடைக்கும். காய் கறிக்காகச் சிறு அளவில் பயிரிட விரும்பினுல் எப்பொழுது வேண்டுமானுலும் பயிரிடலாம். சோயாமொச்சையின் விதை 'பேக்டீரியல் கல்ச்சர்' ஆகியவை பெற உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணைவேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களையோ அல்லது சேலத்தில் உள்ள மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களையோ நாடுதல் நல்லது. அவைகள் சேலத்தில் கிடைக்காவிட்டால், கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த தகவல் தொடர்பு நிலைய விற்பனை பிரிவில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். 'திபா' என்பது அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நமது நாட்டில் அது விற்பனைக்கு இன்னும் வந்ததாகத் தெரியவில்லை. இதற்குப் பதிலாக 'பேக்டீரியல் கல்ச்சர்' பயன்படுத்துவதன் மூலமாகவே அதிக மகசூல் பெற முடியும்.



360

# சிறுதொழில் சிறக்க...

தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்ட நிருவாகச் சீர்திருத்தக் குழு, தமிழகத்தில் புதிய சிறு தொழில்களைத் தொடங்குவதற்குத் தடையாக உள்ள சில சிக்கல்கள் குறித்து ஆராய்ந்து, தமிழக முதல்வர் கலைஞர் அவர்களிடமும், தமிழ்நாடு தொழில்-சட்ட அமைச்சர் திரு மாதவன் அவர்களிடமும் ஓர் அறிக்கையினை அளித்துள்ளது.

பொதுவாக, முதலீட்டுக்குத் தக்கபடி, முழு அளவு வேலை வாய்ப்புகளை உருவாக்கிப் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுவன சிறுதொழில்கள். எனவே, பொருளாதாரச் செழுமைக்கு உயிரூட்டமளிக்கும் சிறு தொழில்களின் வளர்ச்சிக்குத் தமிழ்நாடு அரசு முதன்மையளித்து, அண்மைக் காலத்தில் சிறு தொழில் வளர்ச்சியைப் பெரிதும் விரிவுபடுத்தியுள்ளது.

தொழில் வளர்ச்சிக்குச் சில தடைக்கற்கள் உள்ளன என்பதும், அவை நீக்கப்பட்டால் சிறு தொழில்கள் விரைந்தும், சிறந்தும் வளரும் என்பதும் சிறு தொழில் வளர்ச்சி பற்றி இக்குழு நிகழ்த்திய ஆய்வின் விளைவாகத் தெளிவாகியுள்ளது. சிறு தொழில்களுக்குப் பாதுகாப்பும் சுகாதாரச் சூழலும் ஏற்படுத்திக் கொடுப்பதோடு, தொடர்புடைய அரசுத் துறைகள், தொழில்கள் தொடங்குபவர்களுக்கு விரைந்து ஊக்கமும் ஒத்துழைப்பும் நல்கிடவேண்டும். புதிதாகச் சிறுதொழில் தொடங்குவோர் சந்தித்துத் தீரவேண்டிய சில தடைகள் உள்ளன என்றும் இக்குழு கருதுகிறது.

1. தொழில் துறை, தொழிற்சாலைகள், நகரமைப்புத்துறை, நலத்துறை, உள்ளாட்சித் துறை ஆகிய துறைகளுடன் தொடர்பு கொள்ள வேண்டிய நிலை-அதனுல் ஏற்படும் கால தாமதம்.

2. அலுவலர்கள் பெரும்பாலும், பழைய பத்தாம்பசலிக் கொள்கைகளையும், நடைமுறைகளையுமே பின்பற்றுகின்றனர். தற்கால வளர்ச்சிக்கு ஏற்றபடி நடைமுறைகளில் முற்போக்கு இல்லை.

3. அனுமதி வழங்கும் அதிகாரம், சிறுதொழில் தொடங்கும் சூழ்நிலையையும் பிறவற்றையும் நேரடியாகத் தெரிந்து கொள்ளும் கீழ்மட்ட அலுவலர்களிடம் இல்லாமல், உயர் மட்டத்தில் இருப்பதால் கால விரயம் ஏற்படுகிறது.

4. ஒருங்கிணைப்பின்றி இந்தத் துறைகள் தனியாகவே செயல்படுகின்றன.

இப்படிப் பல்வேறு துறைகளையும் அணுகி, அனுமதிக்குக் காத்துக் கிடக்கும் நிலை நீங்க வேண்டும். தொழில் தொடங்குவதற்கான அனுமதிக் குரிய விண்ணப்பங்களைத் தொழில் துறை உதவி இயக்குநரிடம் வழங்குவதே போதும் என்ற நிலையோடு, அந்த அனுமதியை விரைவில் பெறுவதற்கும், உதவி இயக்குநரே பிறஅலுவலர்களுடன் தொடர்பு கொண்டு விரைவாக எல்லாம் நடைபெற உதவிடும் நிலை இருக்க வேண்டும்.

தொழிலுக்காக வரும் விண்ணப்பங்களை ஆய்ந்து தக்க முடிவுகளை விரைந்து எடுக்கும் வகையில், தொழில், நலத்துறை, தொழிற்சாலை, உள்ளாட்சி ஆகிய துறைகளின் மாவட்ட அலுவலர்களுக்கு எத்தகைய

சிறுதொழில் பற்றிய நிருவாகச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கை முதல்வர் கலைஞரிடம் குழு. உறுப்பினர் திரு. ஏ. ஆர். சுப்பையா எம்.எல்.ஏ. அவர்கள் அளிக்கிருர்கள்.



அதிகாரங்கள் எல்லாம் வழங்கப்பட வேண்டும் என்பதையும் குழு தெரிவித்துள்ளது.

அனுமதி வழங்குவதை விரைவு படுத்துவதற்கு, மாவட்ட ஆட்சி தலைவரைத் தலைவராகவும், தொழில் உதவி இயக்குநரை உறுப்புச் செயலாளராகவும், ( Member secretary ) சம்பந்தப்பட்ட மாவட்ட அதிகாரிகளை உறுப்பினர்களாகவும் கொண்ட ஓர் இணைப்புக் குழு அமைக்கப்பட வேண்டும் என்றும் குழு கருத்துத் தெரிவித்துள்ளது. தொழில்கள் வளர்ச்சி பற்றி ஒவ்வொரு காலக் கட்டத்திலும் தொழில் வணிகத் துறை இயக்குநர் மதிப்பீடு செய்ய வேண்டும்.

காலந் தாழ்த்தாமல் அனுமதி வழங்கும் வகையில் நகராட்சிச் சட்டங்களில் திருத்தம் செய்யப்பட வேண்டும். தடையாக இருக்கும் பழைய சட்டங்களைப் பட்டியல் போட்டுக் காட்டி அச்சட்டங்கள் திருத்தப்பட வேண்டும் என்றும் குழு கோரியுள்ளது. சில காரியங்களை இரண்டு துறைகள் தலையிட்டுத் தடைவிதிக்கும் நிலைமையை மாற்றுவதற்காக, அத்தகைய இரட்டைத் தலையீட்டினை நீக்கி, ஒரே துறையினரே அதைச் செய்து முடிக்கும் வகையில் திருத்தங்கள் தேவை என்பதையும் வலியுறுத்தி யுள்ளார். இரட்டைத் தலையீட்டால்தடைப்படும் செயல்கள் எவை என்பதையும் குழு குறிப்பிட்டுள்ளது.

இந்த மாற்றங்கள் யாவும் செய்யப்படுமானல், சிறுதொழில் வளர்ச்சி தடையின்றி விரைந்து வளர்வதற்கு, தக்க சூழ்நிலை அமைத்து, அரசுத் துறைகள் தொழில்களைத் தடைப்படுத்தும் நிலைமாறி உரிமையுடன் தொழில்கள் ஓங்கி வளரும் நல்ல சூழ்நிலை அமையும் என்று நிருவாகச் சீர்திருத்தக் குழு கருதுகிறது.

—சாமி பழ

## காஃபியின் பெருமை!

* காஃபி ஏற்றுமதி மூலம் கடந்த ஆண்டில் மட்டும் நாட்டுக்கு 25 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.
* 1947–48-ல் நமது நாட்டில் காஃபி உற்பத்தி 16,054 டன் ஆக இருந்தது.
* 1971–72-ல் இது 1,10,300 டன்னுக அதிகரித்துள்ளது.
* 1947–48-ல் காஃபி ஏற்றுமதி 2,275 டன்னுக இருந்தது. இப்போது, ஆண்டுக்குச் சராசரி 35,000 டன்னுக அதிகரித்துள்ளது.
* இந்தியாவில் இப்போது ஆண்டுக்கு 40,000 டன் காஃபி உபயோகிக்கப்படுகிறது.
* இந்தியாவில் மொததம் 1,36,453 எக்டர் நிலப்பரப்பில் காஃபி பயிரிடப்படுகிறது.
* நாட்டில் மொத்தம் 50,581 காஃபித் தோட்டங்கள் உள்ளன.
* இந்தியாவில் பெரும்பாலும் தென்னக மாவட்டங்களிலேயே காஃபி உற்பத்தி செய்யப்படுகிறது. காஃபி விளைவதற்கேற்ற தட்ப வெப்பநிலை இங்கே தான் காணப்படுகிறது.

## சேமிக்கப் பழகுங்கள்!

''அறுவடை செய்யும் காலம் முதல் சேமித்து வைக்கும் காலம் வரையான இடைக்காலத்தில், 9·33 சத உணவு தானியங்கள் சேதம் அடைகின்றன'' என்று இந்திய அரசாங்கத்தின் உணவு - வேளாண்மை அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட நிபுணர் குழு தெரிவித்துள்ளது. 1964-65-ஆம் ஆண்டில் உற்பத்தியான 873 இலட்சம் டன் உணவு தானியங்களில், 73 இலட்சம் டன் உணவு தானியங்கள் மேற்கூறிய வகையில் சேதம் அடைந்ததாக அக்குழு அறிவித்துள்ளது. ஆகவே, அறுவடை செய்யும் காலம் முதல் சேமித்து வைக்கும் காலம் வரையான இடைக் காலத்தில், மொத்த உற்பத்தியில் ஏறத்தாழ பத்தில் ஒரு பங்கு பாழாகிறது.

மொத்தம் உற்பத்தியாகும் நெல்லில் மட்டுமே இவ்வகையில் 38 இலட்சம் டன்கள் சேதமாகின்றன.

வீட்டு எலிகள் மட்டுமே 19 இலட்சம் டன்னுக்கும் அதிகமான உணவு தானியங்களைத் தின்றுவிடுகின்றன.

சேமிப்பில் மட்டுமே 46 இலட்சம் டன் சேதம் ஏற்படுகிறது. இதில் 20 இலட்சம் டன் தானியங்களைப் பூச்சிகள் தின்றுவிடுகின்றன.

அறுவடைக்குப் பிறகு களத்து மேட்டில் மட்டுமே 13 இலட்சம் டன் சேதமாகிறது.

எனவே, உற்பத்தி செய்வதற்குக் காட்டும் ஆர்வத்தைச் சேமிப்பதிலும் காட்டுதல் சிறந்தது.





# அழகுமிகு ஆசிய வணிகப் பொருட்காட்சி

ஆர். நாகராசன்
இயக்குநர்
செய்தி-மக்கள் தொடர்புத் துறை
தமிழ்நாடு அரசு



தமிழக அரங்கத்திற்கு வருகை புரிந்த தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்களுக்கு, அரங்கத்தின் சிறப்பினை விளக்கிச் சொல்கிறார் தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. ஆர். நாகராசன் அவர்கள்





நவம்பர் 3-ம் தேதி

47 நாடுகள் நம்மோடு கூட்டுச் சேர்ந்து நடத்தும் அகில உலக ஆசிய வணிகப் பொருட்காட்சிவிழாவை இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் துவக்கி வைத்தார்கள். எழிலும், பொலிவும் பெற்ற இந்த விழாவில் தமிழகத்து ரோஜா மாலை பாரதப் பிரதமரை வரவேற்றது. நமது தேசியக்கொடியை ஏற்றிய பின்பு உலக நாடுகளின் நிறுவனத்தின் கொடி ஏற்றப்பட்டு, அதைத் தொடர்ந்து இந்த வணிகப் பொருட்காட்சியில் பங்கேற்கும் 47 நாடுகளின் கொடிகளும் ஏற்றப்பட்டு, இந்திய தேசிய கீதத்தோடு—வானத்தில் வெண் புருக்களும், வண்ண வண்ண பலூன்களும் பறக்கவிடப்பட்டு, விழா தொடங்கியது.

வளர்ச்சியுற்றுவரும் நாடுகளுக்கிடையே வாணிபத்துறையில் புதிய வாய்ப்புக்களை ஏற்படுத்தவும், இந்நாடுகளுக்கிடையே உள்ள மூலப் பொருட்களையும், தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தி, புதிய பொருளாதாரக் கூட்டுறவோடு ஒட்டிய தொழில் வணிக வளர்ச்சி பெருகிடவும், தேசிய வருமானம் அதிகரிக்கவும், இந்த வணிகப் பொருட்காட்சி பயன்படும் என்ற நோக்கத்திலே 'ஆசியா 72' ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.









இந்த விழாவினைத் தொடக்கி வைத்த இந்தியப் பிரதமர், பழைய சாம்ராஜ்யங்கள் மறைந்த போதிலும் இன்னும் ஆசிய நாடுகள் பலம் பொருந்திய நாடுகளின் விளையாட்டு மைதானமாகவே இருந்து வருகின்றது என்றும், கண்டங்களில் எல்லாம் மிகப் பெரிய இந்த ஆசியாக் கண்டம், உலக மக்கள் தொகையில் பாதிக்குமேல் உள்ள நாடுகளைக் கொண்ட இவை மிகத் தொன்மையான கலாச்சாரத்தையும், நாகரிகத்தையும் உலகுக்குத் தந்தவைகள். சமயங்கள் எல்லாம் தோன்றியதும் இந்த நாடுகளில் தான். இருந்தபோதிலும் பல சித்தாந்தங்கள் அவர்களுடைய ரத்தத்திலே பரிசோதிக்கப்பட்டு, இன்னும் சுரண்டல்களிலிருந்து அவர்கள் மீட்கப்படவில்லை" என்று தெளிவாகவும், எளிமையாகவும் கூறினார்கள்.

இந்த வணிகக் கண்காட்சியின் நோக்கமாவது; இதில் பங்கேற்கும் நாடுகளை ஒருங்கிணைந்து ஒவ்வொரு நாட்டிலும் ஏற்பட்டுள்ள பொருளாதார முன்னேற்றத்தையும், தொழில் துறையிலும், தொழில் நுட்பத்துறையிலும், அத்தோடு இணைந்து செயல்படுகின்ற விஞ்ஞான வளர்ச்சியையும், ஏற்பட்டுள்ள மாறுதல்களையும் பகிர்ந்து பயன்படச் செய்ய வேண்டும் என்பதுதான்.





வாணிபம் என்பதே பிறருடைய தேவைக்காகவும், நம்முடைய நன்மைக்காகவும் என்பதுதான். இந்த வணிகப் பொருட்காட்சியில் பங்கேற்கும் நாடுகள் இயற்கையிலேயே சிறந்த சாதனங்களையும், பல தொழில்களுக்கு அடிப்படையான மூலப் பொருட்களையும் கொண்டிருப்பதோடு, உற்பத்திக்கு இன்றியமையாதது என்று சொல்லக்கூடிய மக்கள் சக்தியை அதிகமாகப் பெற்றுள்ள நாடுகள். இந்த நாடுகளுக்கு இடையேயுள்ள வாணிபம், வளமும் வளர்ச்சியும் அடைந்தால், அதனால் ஏற்படுகின்ற பயன் இந்த நாடுகளுக்கிடையே பொருளாதார நிலையை உயர்த்துவதோடு மக்களுடைய வாழ்க்கைத் தரத்தையும், தேசிய வருமானத்தையும் வலிவு பெறச் செய்யும் என்பது மிகத் தெளிவான உண்மை.

இந்த வணிகப் பொருட்காட்சி துவக்கப்பெற்று நடக்கின்ற இவ்வாண்டு இந்தியச் சுதந்திரத்தின் வெள்ளிவிழா ஆண்டாகும். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களும், தனியார் துறைத் தொழில் வளர்ச்சி நிறுவனங்களும் இந்த 25 வருட முன்னேற்றத்தை, பொருளாதார வளர்ச்சியை, தொழில் வளர்ச்சியை, தொழில் நுட்ப அபிவிருத்தியை ஏனைய நாடுகளுக்கும் விளக்கி அதனால் பயன்பெறும் வகையில் பங்கேற்று இருப்பது மிகவும் சிறப்பானதாகும்.

டெல்லி மாநகரத்தில் மதுரா என்ற வீதியின் இடப்புறம் 140 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த மிகப்பெரிய வணிகப் பொருட்காட்சி, வெளிநாடுகளுடைய பொருட்காட்சி மண்டபங்கள் ஒருபுறமும், அதையொட்டியுள்ள நீல நிற செயற்கை ஏரியும், அந்த ஏரிக் கரையிலே கலை நிகழ்ச்சி நடத்துவதற்கு என்றுள்ள திறந்த வெளி அரங்கும், இது கடுங்குளிர்க் காலமாதலால் பாதுகாக்கப்பட்ட திரை அரங்கும், அதையொட்டி அமைந்துள்ள ஆடை அலங்கார நிறுவனமும், நாடுகளின் கூட்டு மண்டபமும், பங்கேற்கும் நாடுகளின் கூட்டுத் தொழில் மண்டபமும் அமைந்த பாரதப்பிரதமரின் நேரு மண்டபமும் கண்கொள்ளாக் காட்சிகள்.

இதோ! வணிகப் பொருட்காட்சியின் முதல் நுழைவு வாயில். அங்கே நாம் செல்வதாகச் சற்றுக் கற்பனை செய்து கொள்வோம். உயரமாக ஒளியிட்டு அழைப்பது தமிழகத்தின் ஏற்றமிகு எழில் மண்டபம். 60 அடி உயரத்தில் தமிழ்நாடு என்று ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதப்பட்ட மின்சாரப் பெயர் தாங்கி நிற்கின்ற காட்சி வெகு தொலைவில் இருப்பவர்களுக்கும் எடுப்பாகத் தெரிகின்றது. பொருட்காட்சி மண்டபத்தின் நுழைவு வாயிலில் முதலாவது வரவேற்பது, இராஜஸ்தான் மாநிலத்தின் சித்திரச் சிறப்புகளோடு கூடிய மண்டபம். அதைத் தொடர்ந்து ஆந்திரம், பஞ்சாப், வங்கம், கேரளம், உத்திரப் பிரதேசம், மராட்டியம், ஒரிஸ்ஸா, குஜராத், பீகார் ஆகிய மண்டபங்களைத் தாண்டி, கோவா மண்டபத்தையும் கடந்து, வலது புறம் திரும்பினால் எதிர்கொண்டு அழைப்பது மைசூரும், தமிழகமும்தான். தமிழகத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள மாநிலங்களின் பொருட்காட்சிகள் மைசூரும், மத்தியப் பிரதேசமும், அரியானாவும், இமாசலப் பிரதேசமும்; டில்லி நிர்வாகமும் ஆகும். நாடுகள் ஒருபுறமும், நம் நாட்டில் உள்ள மாநிலங்கள் மற்றொரு புறமும், நாட்டுக்குப் பொதுவான வணிகப் பொருட்களுக்கான மண்டபங்கள் வேறொரு புறமும், இப்படி வாணிபத் துறையில் போட்டியிட்டுக் கொண்டு பொருட்களைத் தன்னகத்தே தாங்கி நிற்கும் காட்சியினைக் காண ஒரு மனிதனுக்கு மூன்று நாட்கள் தேவை. சீரும், சிறப்போடு, சிந்தனையைச் செலவழித்துக் காண வேண்டுமானால் ஐந்து நாட்கள் தேவை. வியாபார நோக்கத்தோடு இவற்றையெல்லாம் சுற்றி வர வேண்டும் என்றால் குறைந்தது 10 நாட்கள் தேவை. இல்லை விளையாட்டாகவே பார்த்துவிட்டு வரலாம் என்றால் ஒரு நாள் போதும்.

தமிழ்நாட்டுப் பொருட்காட்சி மண்டபத்திற்குள் நுழைகிறோம். மண்டபத்தின் இருபுறமும் உயிர் யானைக் குட்டிகள்போல் தோற்றமளிக்கும் கல் யானைகள். படிகளில் ஏறியவுடன் பளிச்சென்று பார்வைக்குப்படுவது தில்லை நடராஜனின் நர்த்தனம். நுழைபவர்கள் யாவரும் ஒரு நிமிடம் நின்று சிந்தித்து ரசித்த பின்புதான் அடுத்த அடியை எடுத்து வைக்க முடியும்—அத்தகைய கம்பீரமுடன் தமிழகத்தின் கலையையும், பண்பாட்டையும் உள் அடக்கியது அந்த அற்புதச் சிலை. இடது பக்கம் உள்ள நுழைவு வாயில் எண்ணூரிலே இருக்கும் 'அசோக் லயலண்ட்ஸின்' மறு பதிப்பு.



மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் தமிழக அரங்கைப் பார்வையிடுகிறார்.

அங்கே உற்பத்தியாகின்ற ஊர்திகளும், அவை ஒட்டிய சாதனங்களும் அடுக்கடுக்காக வைக்கப்பட்டுள்ளன. அதை அடுத்து தொழில் மோட்டார் சைக்கிள் சாதனங்கள், அதைக் கடந்து சென்றால் சுழல்கிறது ஒரு எழில் மிகுந்த மோட்டார் கார். இது சென்னைக்கடுத்த வண்டலூர் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் சிறிய கார். இதையடுத்து அதே தொழிற்சாலையில் உற்பத்தியாகின்ற ஸ்டான்டர்ட் வேன். பின்பு அம்பத்தூரில் உற்பத்தியாகும் உறுதி மிக்க சைக்கிள்கள். விருத்தாசலத்தில் உற்பத்தியாகும் வெண் மண்பாண்டங்கள் (ceramics). அடுத்து இயங்கிக் கொண்டிருக்கும் "டெக்ஸ்டூல்ஸ்" இப்படித் தனி நிறுவனங்களின் சாதனைகளைக் கண்டபின்பு, ஏறு நடைபோட்டு வட்ட வடிவமான முதல் மாடிக்குச் சென்றால் எதிர்கொண்டழைப்பது "திருவாரூர்த் தேர்". மென்மையாகவும், இனிமையாகவும் ஒலிக்கின்ற நாதசுர இசைக்கிடையே மண்டபத்தின் இருபுறமும் ஏழு அடி உயரக் குத்து விளக்குகள் எதிர்கொண்டழைக்க, உள்ளே நுழைந்தவுடன் ஒரே வியப்பு. காரணம் அங்கே வைக்கப்பட்டுள்ள பொருட்களின் நேர்த்தியும், அழகும் தமிழகத்தின் கலாச்சாரமே உருண்டோடி வந்து, பரந்து சிதறிக் கிடப்பது போல் எங்குப் பார்த்தாலும் எழில் மிக்க ஓவியங்களும், சிற்பங்களும் வண்ணக் கைத்தறி ஆடையும், காஞ்சிபுரம் பட்டும், இன்னும் தமிழகத்திலே தயாராகும் எண்ணற்ற கைவினைப் பொருட்களும் கலந்து வைக்கப்பட்டுள்ள காட்சி. பல பல வண்ண மலர்களைத் தூவியது போன்ற ஒரு காட்சி. இதைப் பார்ப்பவர்களுக்கெல்லாம் அவைகளைத் தொட்டுப் பார்க்க வேண்டும் என்ற உணர்ச்சி. கண்ட காட்சியையே திரும்பித் திரும்பிக் காண வேண்டும் என்ற நோக்கத்தில் மேலும் தொடர்ந்து நடக்க முடியாத காட்சி, சிறிது

நோக்கத்தில் மேலும் தொடர்ந்து நடக்க முடியாத காட்சி. சிறிது



தூரம் தாண்டிச் சென்றால் எங்கே நாம் மதுரை மாநகர் வந்து விட்டோமோ என்ற உணர்ச்சி. காரணம் மதுரை மீனாட்சி அம்மன் கோயில் மண்டபச் சிற்பங்களை எல்லாம் ஒருங்கிணைத்து 16 அடி அகலமும், 5 அடி உயரமும் உள்ள சித்திரமாக எழுதிய ஓவியர் (சில்பி)யின் கைவண்ணம். சுற்றுலாத் துறையினர் தொகுத்தளித்துள்ள ஓவியங்களையும், பெரிய புகைப்படங்களையும், பின்னணியாகக் கொண்டு மறுபடியும் நாம் ஏற்றுமதி செய்யும் பொருட்களைக் காண முடிகிறது. தோல்களால் செய்யப்பட்ட பொருட்களும், கிண்டி தொழிற்கூடத்தில் தயாராகும் யந்திரச் சாமான்களும், வேளாண்மைத் துறையினரால் வைக்கப்பட்டுள்ள முந்திரியும், ஏலக்காயும், கிராம்பும், சந்தனமும், தேக்கும், அதை அடுத்து, நெடுங்கடல் கொண்ட தமிழகத்தின் மீன் வளத்தை விளக்குகின்ற மின்சார விசைப்படகுகளும், இடையிடையே தமிழகச் சமுதாயத்திற்குத் தமிழ்நாடு அரசு ஆற்றுகின்ற சமுதாயப்பணிகளை விளக்கும் விளக்கப்படங்களும், புகைப்படங்களும், கடந்த 25 ஆண்டுக்காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதாரத் தொழில் வளர்ச்சியை அப்படியே கண் முன் கொண்டு வந்து காட்டுகின்ற காட்சிகளாகும்.





'ஆசியா 72' ஓர் அற்புதமான வாய்ப்பு: இந்த நாட்டிலே முதன் முதலாகப் பெரும் அளவில் நடத்தப்படுகின்ற முதல் முயற்சி. இதனால் ஏற்படுகின்ற வெற்றிகளும், பயன்களும் நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மிகப் பெரிய வளர்ச்சிமாற்றம் ஏற்படுத்தும் என்பதைக் கண்டவர்க்கும், கேட்டவர்க்கும் வியப்பேதுமில்லை.



# நெடிதுயர்க நாயகமே!

தாயகத்தின் தலைநகராம் தில்லியிலே வளம்பெற்று
நாயகமாய் விளங்கிநின்று நலஞ்சேர்க்கும் ஆசியத்தின்
மூன்றும் பொருட்காட்சி முதல்தரமாய் முகிழ்த்ததனைச்
சான்றோர்கள், பொறியியலார் போற்றிமிகச் சாற்றிடுவார்!

நூற்றிருப தேக்கரிலே நாற்பத்தேழ் நாடுகளும்
ஏற்றமுற இந்தியாவில் இலங்குகின்ற மாளிகைகள்
தனியாரின், அரசினரின் தலைமிளிர்ந்த தொழில்துறைகள்
இனிதாக ஓரிடத்தில் இணைந்திருக்கும் இயல்பதனுள்

ஒருகுடையின் கீழாக உலகெல்லாம் ஒருங்கிணையப்
பெருமைமிகும் அமைதியினைப் பேணிவரும் தாயகத்தில்
வங்கத்தின் கைதூக்கி மாண்புற்ற இவ்வாண்டில்
சிங்களர் காட்சியிது திரண்டதுவும் வேன்றோ?

துணிமணிகள் அழகொளிரத் தொகுத்துரைத்தல் நோக்கமென
அணிபெறும் இக் காட்சியிலே ஆடைகளின் எழிலாக
உடுத்தொளிரும் உலகத்தின் மாதரெலாம் நோக்கிடலாம்!
தொடுத்துரைக்க ஒண்ணாத நேசமயர்தும் பண்பாடு





நாளெல்லாம் கண்டிடலாம்; கன்னிமை நுகர்ந்திடலாம்!
ஆளெல்லாம் தொழில்தோய்மிகு ஆற்றலுற விரைவாக
ஓடுகிற தொடர்வண்டி, மின்கலத்தால் வாழ்கின்ற
ஆடுகிற பின்னலட்டம், அழகான சிறுவண்டி

கொண்டிலங்கும் தும்பார்க்க வனக்கண் கொள்ளாது!
சண்டிகையும் தோன்புடைத்த இயல்பேபோல் அகன்றேகும்
உருசியத்தின் அரங்கினிலும், ஒளிருகிற கலைமணக்க
வருநாட்டோர் வந்திலங்கும் 'அம்சவெளி' மண்டபமும்,

கலைமணத்தில் தொழில்மணமும் கலந்தளிக்கும் மாளிகைகள்
நிலைபெற்ற கூடங்கள் நிறைந்திருக்கும் தில்லியிலே
கலைபாலே கண்பறித்துக் கைவண்ணம் காட்டிவிட்டே
அலைபலைபாய் வளர்ந்துவரும் அருந்தொழிலும் எடுத்துரைக்கத்

தென்னகத்தின் புகழ்பாடும் கூடத்தைத் துன்னிடவே
மன்னுகிற முன்னுள பாங்கையது மாமேடை
மெய்சிலிர்த்தேன்; உள்ளோங்கும் பண்பாட்டின் வியன்பொருளால்
மெய்யுணர்ந்தேன்! பண்பாடும் தொழிலியலும் மேலோங்க

வேண்டுமெனும் கல்லுணர்வு துண்டிடவே வெளிவந்தேன்!
நீண்டபெரும் தமிழ்நாடே, நெடிதுயர்க, நாயகமே!

மனைச ப. கிரன்





தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் 30—11—72 அன்று தமிழ்நாடு அரங்கத்தைச் சுற்றிப் பார்வை யிட்டார். அவருக்கு ரோஜாப்பூ மாலை அணிவித்து, சந்தனம், கல்கண்டு வழங்கித் தமிழ் மணம் கமழ வரவேற்பளிக் கப்பட்டது. தலைமை அமைச்சரை அரங் கத்தின் பல்வேறு பிரிவுகளுக்கும் அழைத் துச் சென்றுர், செய்தி—மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. நாகராசன் அவர்கள்.

ஒவ்வொரு அரங்கமாக ஆர்வத்துடன் பார்வையிட்ட பிரதமரைப் பரவசப்படுத் தியது செந்நெல்மணிகளால் தயாரிக்கப் பட்ட தேர். அதனைத் தொட்டுப் பார்த்த தலைமை அமைச்சர், "இதனை நூலினுல் கோத்தா தைத்துள்ளார்கள்?," என்று கேட்டார். நெல்மணிகள் ஒட்டப்பட்டுள் ளன என்று அவருக்குத் தெரிவிக்கப்பட் டது. அரங்கம் மிகவும் நன்ருக அமைந் துள்ளதாகத் திருமதி இந்திரா காந்தி அவர்கள் பாராட்டினுர்.

தலைமை அமைச்சருக்குத் தமிழ்நாடு அரங்கத்தின் சார்பில் காஞ்சிப் பட்டுப் புடவையினை அன்பளிப்பாக வழங்கினுர் செய்தி—மக்கள் தொடர்பு இயக்குநர்.

3-ஆவது ஆசிய அனைத்து நாட்டு வணி கப் பொருட்காட்சியான இந்த ஆசியா-72 பொருட்காட்சியில் பங்கு பெற்றுள்ள தமிழ்நாடு அரங்கம், தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்ட குழுவின் மேற்பார்வையின் கீழ் அமைக்கப்பட்டதாகும். இந்தக் குழு வின் தலைவர், தமிழ்நாடு அரசின் கல்வித் துறைச் செயலாளர் திரு திரவியம் அவர்கள்; உறுப்பினர்கள், செய்தி, மக்கள் தொடர்புத்துறை இயக்குநரும், தொழில்—வணிகத்துறை இயக்குநரும் ஆவார்கள். தமிழக அரசுத் தலைமைச் செயலாளர் இதில் மிகுந்த அக்கறை காட்டினுர் என்பதும் அவரது சீரிய மேற்பார்வை, அரங்கம் சிறப்பாக அமைய வழிகாட்டி யாக இருந்தது என்பதும் குறிப்பிடத் தக்கவை.



இதன் நிர்வாகப் பொறுப்பு, செய்தி, மக்கள் தொடர்புத் துறை இயக்குநரிடம் இந்த ஆண்டு சனவரித் திங்களில் ஒப் படைக்கப்பட்டது. இந்த அரங்கப் பொது அமைப்பினை 'டிசைன்' செய்தவர் (ஆர்க்கிடெக்ட்) திரு எஸ். முருகேசன். அந்த அமைப்பின்படி அரங்கத்தைத் தமிழகப் பொதுப்பணித் துறையினர் உருவாக்கினர். முழுவதும் இரும்புத் தகடுகள், தூண்களாலான இந்தப் பணி சென்னையில் பொதுப்பணித் துறைத் தொழிற்கூடத்தில் செய்யப்பட்டு டெல்லிக்கு ரெயில் மூலம் எடுத்துச் செல்லப்பட்டது. இந்தப் பணி 1972 ஜூலைத் திங்களில் தொடங்கப்பெற்று அக்டோபர் திங்களில் முடிவுற்றது. அரங்கத்தின் உட்புற அலங்காரத்தைத் திரு வீரேந்திரகண்ணு மேற்கொண்டார்.

இப் பொருட்காட்சியிலுள்ள பல்வேறு அரங்கங்களில் தமிழ்நாடு அரங்கத்தில் மட்டும்தான் அரசுத் துறைகளுடன் தனியார் துறைகளுக்கும் சமவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. டி. வி. எஸ். நிறு வனத்தைத் தவிரத் தமிழகத்தினைச் சேர்ந்த பெரிய நிறுவனங்கள் அனைத்தும் இதில் பங்கு பெற்றுள்ளன.

தமிழ்நாடு அரங்கம், தரைப்பகுதியை யும் சேர்த்து இருதட்டுகள் கொண்டது. தரைப் பகுதியில் தனியார் துறைகளுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. மாடியில் அரசுத் துறைகள் இடம் பெற்றுள்ளன.



# ரூபாய் 10 கோடி வருவாய்!

டெல்லியில் நடைபெறும் ஆசியா-72 பொருட்காட்சியில் தமிழ்நாடு அரங்கு பங்கு பெற்றதன் மூலம் ரூ. 10 கோடி வருவாய் வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

அங்குள்ள தமிழ்நாடு கைத்தறி அரங்கத்தில் மட்டும் தினம் 5 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. பரத நாட்டிய நடனத்தின்போது அணிந்து கொள்ளும் தனித்தன்மை வாய்ந்த பட்டுச் சேலைகளைக் கைத்தறி நிறுவனத்தார் தயார் செய்து "ஊர்வசி", "மாதவி" என்கிற பெயர்களில் விற்பனைக்குக் கொணர்ந்துள்ளனர். இவைகளுக்கு டில்லியிலேயே மிகுந்த தேவை ஏற்பட்டது. அத்துடன் ஐந்து கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகளை வாங்குவதற்கு வெளிநாடுகள் ஒப்பந்தம் செய்துள்ளன.

இதே போன்ற கைவண்ணப் பொருட்கள், டெக்ஸ்டைல் உற்பத்திப் பொருட்கள் போன்றவற்றிற்குப் பல லட்சக் கணக்கில் ஒப்பந்தம் ஆகியுள்ளன. ஆக இவையனைத்தும் சேர்ந்து சுமார் 10 கோடி ரூபாயளவில் அந்நியச் செலாவணி சம்பாதித்துத் தருமென் எதிர்பார்க்கப்படுகிறது.

இது வணிகப் பொருட்காட்சியாதலால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி வாய்ப்புள்ள பொருட்களே (எடுத்துக் காட்டாகக் கைத்தறித் துணிகள், நுட்ப வேலைப்பாடு அமைந்த கைவண்ணப் பொருட்கள், வாழைப்பழம், முந்திரி, தேயிலை, காபி போன்ற பொருட்கள்) காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன. இதனை "ஸ்டேட்ஸ்மென்" போன்ற நாளிதழ்கள் பாராட்டியுள்ளன. "தமிழ்நாடு, மாராட்டியம் ஆகிய இரு மாநிலங்கள்தான் இந்த வணிகப் பொருட்காட்சியின் தத்துவத்தைப் புரிந்து கொண்டுள்ளன" என்று அந்த ஆங்கில நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.





சென்னையிலிருந்தும், ஆந்திரப்
பிரதேசத்திலிருந்தும் வந்துள்ள
பருத்தி ஆடைகள், அரங்கில் தனி
யானதோர் இடத்தைப் பிடித்துக்
கொண்டிருக்கின்றன. வெப்ப
மண்டல நாடுகளில் உள்ளவர்கள்
கோடைகாலத்திலும், ஐரோப்பியர்
கள் வசந்த காலத்திலும் அணிந்து
கொள்வதற்கு ஏற்றவை இந்த
ஆடைகள். இந்த ஆடைகளை
அலங்கரித்து வைத்த ஒருவர் கூறு
கிருர்: ''ஏகப்பட்ட துணி வகை
களை இங்குக் காட்சியாக வைத்து
வெளிநாட்டுப் பார்வையாளர்களைத்
திணறடிக்க விரும்புகிறோம்; இந்தத்
துணியை வாங்குவதா அல்லது
அதை வாங்குவதா என்று அவர்
கள் திக்குமுக்காடிப் போய்விட
வேண்டும்''.

மனிதனுக்கு உடையாகத் தைப்
பதைத் தவிர வேறு பல செயல்
களுக்கும் துணிகள் உபயோகமா
கின்றன என்பதை இந்த அரங்கு
எடுத்துரைக்கிறது. வீடுகளை அலங்
கரிப்பதற்கு உதவும் திரைகள்,
தரை விரிப்புகள், படுக்கை விரிப்பு
கள் போன்ற பற்பல துணி வகை
களும் துணி அரங்கில் காணப்படு
கின்றன.

துணி அரங்கின் மற்ருெரு பிரி
வில் இந்தியத் துணிகளின் வரலாறு
கவினுற எடுத்துக் கூறப்படுகிறது.
இந்தியாவில் முதன் முதலில் துணி
ஆலை ஏற்பட்டது பற்றியும், துணி
ஆலைத் தொழிலில் துணிந்து ஈடு
பட்ட தொழிலதிபர்கள் பற்றியும்
கதர்த் தத்துவம் பற்றியும், கலப்புச்
சேர்க்கை இழைத் துணிகள் பற்றி
யும், இப்பகுதியில் படங்களின்
மூலம் தெளிவாக விளக்கப்பட்
டிருக்கிறது.




# முதல்வரின் கண் சிகிச்சை முகாம் நிதி

## நன்கொடை வழங்கியோர் பட்டியல்

| | ரூ. | காசு. |
|---|---|---|
| முன் இதழ்த் தொடர்ச்சி | 38,49,558 | 84 |
| **30—10—72** | | |
| நிருவாக இயக்குநர், ஸ்ரீவில்லிப்புத்தூர் கூட்டுறவு நூற்பாலைகள், லிமிடெட், ஸ்ரீவில்லிப்புத்தூர். | 2,000 | 00 |
| **31—10—72** | | |
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம்-1. | 100 | 00 |
| செல்வன் ஆர். பாரி, மேற்பார்வை, திரு எம். ராஜலிங்கம், அன்னை இல்லம், 113, சண்முகம் நகர், தாத்தகாபட்டி, சேலம்-6. | 101 | 00 |
| **1—11—72** | | |
| திரு வி. இராமலிங்கம், துணைப்பதிவாளர், மேட்டூர், இருப்பு சேலம். | 200 | 00 |
| திரு எம். அகமது, ஐ.ஏ.எஸ்., சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர். | 185 | 00 |
| **3—11—72** | | |
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம்-1. | 100 | 00 |
| ஷை | 100 | 00 |
| இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவர். | 9,349 | 15 |
| **6—11—72** | | |
| கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர். | 8,421 | 00 |
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம்-1. | 100 | 00 |
| தமிழ்நாடு மின்வாரியப் பொறியாளர் சங்கம், சென்னை-2. | 2,000 | 00 |
| வடசென்னையில் 5—11—72 அன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கிடைத்த தொகை (முதல்வர் அலுவலகம் மூலமாக). | 4 | 00 |
| **7—11—72** | | |
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம். | 50 | 00 |
| **9—11—72** | | |
| சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர். | 50 | 00 |
| திரு ஜி. பெருமாள், எம்.ஏ., முதல்வர், அறிஞர் அண்ணா அரசினர் கல்லூரி, செய்யாறு. | 321 | 00 |
| திரு எம். முனுசாமி, பி. ஏ., ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கீழ் வேளூர், தஞ்சை மாவட்டம். | 35 | 00 |
| திரு எல்.எம். மேனேசஸ், ஐ.ஏ.எஸ்., பால் உற்பத்தி, பால்பண்ணை வளர்ச்சி, ஆணையர், பொறுப்பு, சென்னை-51. | 150 | 00 |
| **10—11—72** | | |
| இளைஞர் மன்றம், 91-வது வட்டம், சென்னை-4. | 50 | 00 |
| தலைவர், வேளாண்மையாளர், சங்கம், மணக்கால் (கிராமம்), லால்குடி வட்டம், திருச்சி. | 50 | 00 |
| **13—11—72** | | |
| சேலம் மாவட்ட ஆட்சியாளர் .. | 43,137 | 00 |
| திரு சி. கே. ரகுநாத், பி. இ., கோட்ட மின் பொறியாளர், சிவகங்கை. | 35 | 25 |
| செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியாளர். | 60 | 00 |
| உதவிப் பதிவாளர், மேட்டூர் .. | 150 | 00 |
| மாயூரம் கூட்டுறவு நில அடமான வங்கி, மாயூரம். | 100 | 00 |
| நிருவாக இயக்குநர், மதுராந்தகம், கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட். | 10,001 | 00 |



தமிழ்நாடு அரங்கத்தின் நுழைவாயிலை அலங்கரிப்பது 3 அடி உயரமுள்ள இரு கல் யானைகள். அதைத் தாண்டியதும் தேர் தொம்பைகள் இருபுறமும் அழகாகத் தொங்குகின்றன. அதையடுத்து, 6 அடி உயரமுள்ள நடராசர் சிலை.

நமது அரங்கத்தில் தரையில் நெல்லை மாவட்டம் குலசேகரப்பட்டணத்தில் செய்யப்பட்ட சணப்பைக் கம்பளமும், மேல் கூரைக்கு வந்தவாசியில் தயாரிக்கப்பட்ட பாயும் வேயப்பட்டுள்ளது. இந்த அமைப்பே குடிசைத் தொழிலுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளதைச் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது.

கீழ்த்தட்டில் தனியார் துறையினரின் பிரிவுகளில் ஊசி முதல் ராட்சத மண்வாரி வரை தமிழகத்தின் தொழில் முன்னேற்றத்தினைக் காணலாம். ஸ்டாண்டர்டு மோட்டார் துறையினரின் "காசெல்" என்ற காரும், அசோக் லேலண்ட் நிறுவனத்தின் ரூபாய் மூன்றரை லட்சம் மதிப்புள்ள மண்வாரி இயந்திரமும், ஒன்றரை லட்சம் ரூபாய் மதிப்புள்ள சுற்றுலா ஊர்தியும், டி. ஐ. சைக்கிள் நிறுவனத்தின் ஏற்றுமதியாகும் சைக்கிளின் மாதிரியும், ஊட்டியை அடுத்த கெட்டியைச் சேர்ந்த ஊசி உற்பத்தித் தொழிற்கூடத்தின் பல்வேறு வகையான ஊசிகளும் (தையல் ஊசி, மருத்துவ ஊசி முதலியன) இன்னும் பல பொருட்களும் இடம் பெற்றிருக்கின்றன.

லட்சுமி தொழிற்கூடத்தினர் வைத்திருந்த இட்லி மாவு அரைவை இயந்திரத்தை வடநாட்டவரும் வெளிநாட்டவரும் வெகு வியப்புடன் பார்வையிட்டனர். அங்கேயே சுமார் ஆயிரம் இயந்திரங்கள் விற்பனையாகி விட்டன. டி. ஐ. சைக்கிள் நிறுவனத்தினர் ஒரு சலுகையை அறிவித்திருந்தனர். அவர்களது சைக்கிளுக்கு அங்கு 'ஆர்டர்' கொடுத்தால் ஒரு சீட்டுத் தருகிறார்கள். அதனைக் கொடுத்து சைக்கிள் வாங்கினால், சாதாரண விலையைவிட ரூபாய் அறுபது குறைவாகத் தந்தால் போதுமானது.

மாடியிலுள்ள அரசினர் துறைகளில் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் பொருட்கள் ஏராளம். தொழில் துறையினர் வைத்திருந்த ஆறு அடி உயர வெண்கலக் குத்துவிளக்கும், தந்தத்தினால் செய்த சிற்பங்களும், காகிதக் கூழினால் தயாரித்த சிலை உருவங்களும் பாராட்டும் வகையிலிருந்தன. தந்தத்தினால் செய்த சிவன்-பார்வதி சிலையினை செக்கோசுலோவாகிய நாட்டினர் ஒருவர், ரூபாய் 6,000-க்கு விலைக்கு வாங்கினார்.

வனவளத் துறையினர் வைத்திருந்த 5 அடி நீளமுள்ள யானைத் தந்தம் பார்வையாளர்களைக் கவர்ந்தது. டான்சியினர் விரைவில் விற்பனைக்கு அளிக்கயிருக்கும் "மொபத்" ஊர்தியும் கம்பீரமாகக் காட்சி அளித்தது. தோலினால் ஆன டைகள், இடைவார்கள், கைப்பைகள், பீங்கான் கோப்பைகள், தட்டுக்கள், அலங்காரப் பொம்மைகள், மீன்வளத் துறையினரின் முத்துக்கள், சங்கு வளையல்கள், மாலைகள், மோதிரங்கள் இப்படி மனத்தைக் கவர்ந்த பொருட்களைப் பற்றி சொல்லிக் கொண்டே போகலாம்.

உற்பத்திப் பொருட்களுடன் தமிழக அரசின் சீர்மிகு திட்டங்கள் பற்றிய படங்களும், விளக்கங்களும் நமது அரங்கில் இடம் பெற்றிருந்தன. முக்கியமானவை, மாண்புமிகு முதல்வர் கலைஞர் வகுத்த திட்டங்களான பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதித் திட்டம், கண் சிகிச்சை முகாம் நிதித்திட்டம், இளைஞர் அணித் திட்டம் ஆகியவை. தமிழ் நாட்டிலுள்ள சுற்றுலாப் பகுதிகளைக் காட்டும் படங்களும் இங்கு இடம் பெற்றிருந்தன.



தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு பி. சபாநாயகம் ஐ.ஏ.எஸ். அவர்களும், கல்வித்துறைச் செயலாளர் திரு க. திரவியம் அவர்களும் தமிழக அரங்கைப் பார்வையிடுகின்றனர்.

ஆசியா-72, பொருட்காட்சியினைச் சமீபத்தில் சுற்றிப் பார்த்து விட்டுச் சென்னைக்கு வந்த ஜெர்மன் நாட்டுப் பொறியாளர் திரு. ரோத்தர் தமிழ்நாடு அரங்கத்தை மிகவும் பாராட்டினார். வெளி நாட்டு அரங்கங்களுக்கு ஈடாக மிகவும் சிறப்பான முறையில் தமிழ்நாடு அரங்கம் உள்ளதென அவர் பூரிப்புடன் தெரிவித்தார். மிகவும் முன்யோசனையுடன் தமிழ்நாட்டு அரங்கினைத் தரை மட்டத்திலிருந்து சுமார் 2½ அடி உயரத்தில் கட்டியதைப் பற்றிப் பெரிதும் வியப்புத் தெரிவித்தார்.

தமிழ் நாட்டின் கலையினையும், கலாச்சாரத்தையும் தொழில் வண்ணத்தையும் கலந்து, கண்டோர் களிக்கும் வண்ணம் அளிக்கும் தமிழ்நாடு அரங்கத்தினை நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு பாராட்டியுள்ளனர். இந்திய மக்களை மட்டுமின்றி, வெளிநாட்டவரின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்த அரங்கம் தமிழ்நாடு அரங்கம் என்றால் மிகையாகாது!

### ஆசியா 72 அஞ்சல் தலை

மூன்றாவது ஆசிய அனைத்து நாட்டுப் பொருட்காட்சி, நவம்பர் 3-ஆம் நாளன்று புதுதில்லியில் துவங்கியதையொட்டி இந்திய அஞ்சல் துறை இரண்டு சிறப்பு அஞ்சல் தலைகளை வெளியிட்டுள்ளது. இந்த அஞ்சல் தலைகள் முறையே 20 காசுக்கும், ரூபாய் 1·45க்கும் விற்கப்பட்டன. இரண்டு அஞ்சல் தலைகளும் ஆரஞ்சு, கருப்பு வண்ணங்களில் அச்சிடப்பட்டுள்ளன. 20 காசு விலை கொண்ட அஞ்சல் தலையில் ஆசிய அனைத்து நாட்டு வணிகப் பொருட்காட்சியின் சின்னம் காணப்படும். ரூபாய் 1·45 விலை கொண்ட அஞ்சல் தலையில், புத்தர் சிலையின் கை ஒன்று இடம் பெற்றுள்ளது.

asia72




# வெண்பாப் போட்டி

## 46. 'காற்று' எனத்தொடங்கி 'மழை' எனமுடித்தல்

● ''காற்று''ப் பயலுக்குக் ''கார்மேக'' மாமகளை
நேற்று மணமுடித்தான் நீள்கடலும்—ஆற்றல்
ககனத்து வீதியில் கல்மலையில் மோத
மகளழுதாள் கண்ணீர் மழை.

—சி. பாலச்சந்திரன், தஞ்சை.

காற்றுக் கடிந்தடிக்கின் நம்சென்னைச் சேரியில்
கீற்றுப் பறந்தோடும் கீழ்வீட்டில்— ஊற்றேடும்;
நேற்றுவரை ?. இந்தநிலை ; நேர்த்தியாம்மூன்றடுக்கில்
ஊற்றட்டும் இன்று மழை.

—ஆ. செல்லபாண்டியன், செய்யாறு.

காற்றுப் புகாதபடி கட்டியணைத் தன்புவளர்
ஊற்றுப் பெருக உளமகிழ்ந்து—போற்றுமெழிற்
காதலராய் வாழ்வதனால் கண்டெடுக்கும் தன்குழவி
ஓதுஞ்சொல் இன்ப மழை.

—பூங்குழலி, பொருனூர்.

காற்றே உயிரானாய் ! கானக் குழலூதி
ஆற்றரிய துன்பம் அளித்திட்டாய்க்—கூற்றுவனாய் !
முல்லைக் கொடிபூத்தும் மோப்புடையார் ஏன்மறந்தார் ?
வல்லார்க்கேன் கண்ணீர் மழை !

—சிவ. கிருட்டிணன், கணியூர்.

காற்றுமூச் சானால் கருவில் உயிர்வளர்க்கும் ;
காற்றே புயலானால் காலனும் !—காற்றவள்
வண்ண மலர்தொட்டால் வான்மணக்கும் : கார்தொட்டால்
மண்மணக்கப் பெய்யும் மழை !

—சா. கந்தசாமி, நெல்லை-5.

காற்று பதரோட்டும் ; காயும் பகலோனின்
கீற்று பனியோட்டும் ; கேள்நோக்கித்—தூற்றல்
புகழோட்டும் ; நிலை பொறுப்பின், நீர்வார்த்து
மகிழ்வூட்டும் என்றும் மழை !

—ந. வடிவு, களக்காடு.

காற்று யலைந்து கடுகாகத் தேய்ந்தாலும்
தூற்றுதா குண்டாமோ ? தூமொழியே !—மாற்றார்
உடலும் வாழ்வும் உழுத்தரின்பார் வைக்குக்
கடலுக்குள் பெய்த மழை.

—புலவர் அ. தங்கவேலு, வாணாபுரம்.

காற்று மருத்துவச்சி ; கார்முகிலே தாயாவாள் ;
போற்றுகின்ற தந்தையோ பொங்குகடல்—ஏற்றமிகு
விண்வெளியில் பேறடைந்து வீடுவரும் நன்மகவே
மண்குளிரப் பெய்யும் மழை.

—க. அருள்மொழி, காரைக்குடி.

காற்றென்றால் தென்றல் ; கலைப்பெருக்கம் காணுகின்ற
ஊற்றென்றால் செந்தமிழர் உள்ளந்தான்—போற்றுகின்ற
சீலத் தமிழுக்குச் செய்கின்ற நிமுயற்சி
பாலையில் பெய்யும் மழை.

—சாந்தகுமார், மதுரை.

---

● பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:
திரு சி. பாலச்சந்திரன்,
மானோஜியப்பா வீதி,
தஞ்சாவூர்.




| | | |
|---|---|---|
| திரு சீனிவாசன், ஆணையாளர், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம். | 50 | 00 |
| திரு எஸ். திருமலையப்பன், பி.ஏ., பி.எல்., பொது மேலாளர், சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், மோகனூர். | 5,000 | 00 |
| **14—11—72** | | |
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம்-1. | 250 | 00 |
| ஷை | 250 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர், தருமபுரி. | 13,676 | 00 |
| **15—11—72** | | |
| சென்னை மாவட்ட ஆட்சியாளர், | 115 | 00 |
| கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை), திண்டுக்கல். | 15 | 00 |
| **16—11—72** | | |
| உதவிப் பதிவாளர், மேட்டூர் .. | 35 | 00 |
| திரு கே. ஆர். மாணிக்கம், எம்.ஏ., எல்.டி., முதல்வர், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, சென்னை-15. | 174 | 00 |
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம்-1, | 125 | 00 |
| **17—11—72** | | |
| துணைப் பதிவாளர், தென்காசி .. | 500 | 00 |
| செயலாளர், திண்டுக்கல், நகரக் கூட்டுறவு வங்கி, திண்டுக்கல். | 50 | 00 |
| உதவிப் பதிவாளர், மேட்டூர் .. | 100 | 00 |
| சென்னை மாவட்ட ஆட்சியாளர், சென்னை. | 275 | 00 |
| தலைவர், மன்னார்குடி நகரக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் லிமிடெட், மன்னார்குடி. | 101 | 00 |
| திரு எஸ். செயராமன், கருவூல அலுவலர், டி.ஓ. காஞ்சிபுரம். | 11 | 55 |
| **20—11—72** | | |
| மின்வாரிய ஊழியர் மாநாட்டில் வசூல் ஆகியது. | 25 | 00 |
| **21—11—72** | | |
| சென்னை மாவட்ட ஆட்சியாளர், சென்னை. | 50 | 00 |
| ஆவணப் பதிவுத் துறைத் தலைமை ஆய்வாளர், சென்னை. | 95 | 00 |
| நிருவாக இயக்குநர், காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பு ஆலை, காஞ்சிபுரம். | 5,001 | 00 |
| ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், காஞ்சிபுரம். | 3,525 | 00 |
| ஜூனியர் சேம்பர், காஞ்சிபுரம் | 101 | 00 |
| காஞ்சிபுரத்தில் வசூலாகியது .. | 83,251 | 00 |
| செல்வி ஜே. பத்மினி, உத்திரமேரூர். | 51 | 00 |
| செல்வி ஜே. பத்மஜா, உத்திரமேரூர். | 51 | 00 |
| காஞ்சியில் நடைபெற்ற விழாவில் வசூலானது. | 2 | 00 |
| மொத்தம் ரூ. | 40,39,287 | 79 |


தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு ரூ. 10-00

அரையாண்டு ரூ. 5-00

தனி இதழ் 40 காசு.

விவரங்களுக்கு :

நிருவாகி,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

# வெண்பாப் போட்டி

காற்றுமழை வெய்யில் கடுங்குளிரில் பாடுபடும்
பாட்டாளி தன்னைப் பணம்படைத்த—கூட்டத்தார்,
ஏய்க்கும்நிலை நீடித்தால் என்றேனும் பெய்துலகை
மாய்க்கும் புதுமை மழை.

— சி. மு. சிவலிங்கம், மதுரை-12.

காற்றுவந்து முத்தமிடக் கார்மேகம் பெய்வதுதான்
நேற்றுவரை நேர்ந்ததுகாண் ! இற்றைநாள்—ஆற்றலினால்
வையகத்தே மாந்தர் வகுத்த அறிவியலே
பெய்யென்றால் பெய்யும் மழை.

— புலவர் ந. அ. அண்ணாமலை, நந்தம்.

' காற்றாய் வருவேன் கலங்காதே ! என்றுரைத்த
மாற்றறியா மன்னவனின் மாற்றத்தின்—மாற்றத்தால்
வண்டுருவ வேல்விழியாள் வாட்டம் மிகப்பெற்றுக்
கொண்டாளே கண்ணில் மழை.

— புலவர் சுப்பிரமணியன், திருப்பத்தூர்.

காற்றழிக்கும் வாழை ; கனலழிக்கும் காட்டுமரம்.
தோற்றழிக்கும் நாட்டைத் துணிவின்மை—ஏற்றழிக்கும்
தொக்கவலி மன்னவனைத் துன்பத்தால் ஆற்றாத
மக்களுக்குக் கண்ணீர் மழை.

— காந்திமதி கோபாலகிருட்டிணன், அரியமங்கலம்.

காற்றடித்த பக்கமெல்லாம் சாயும் கருமுகில்போல்
சோற்றுக்காய்க் கொள்கையில் சோரமேன் ?—நாற்றிசையும்
போற்றுகின்ற நற்கொள்கை போற்றிநீ வாழ்ந்திடலே
ஆற்றும் அமுத மழை !

— புலவர் அ. சுந்தரேசன், மேட்டுப்பாளையம்.

காற்றுயிராய் வாழ்வோர்நற் கல்விநெறி கண்ணாகப்
போற்றிநறுந் தொண்டு புரிந்துபுகழ்—ஏற்றார்
உளம்புகல ஓயா துழைப்பின் உலகம்
வளம்பெருகப் பெய்யும் மழை.

— மு. சின்னுசாமி, வடுகம்.

காற்றில் மிதந்துவரும் கானம் ! கவிநெஞ்சின்
ஊற்றில் உடைப்பெடுக்கும் ஒண்டமிழ் !—சோற்றால்
மடையடைத்த மண்ணில் வரப்பெடுத்த நஞ்சை
மடையுடைக்கப் போதும் மழை.

— கே. டி. அரசு, கொளக்குடி.

காற்றும் பொதுவே கனமழை யும்பொதுவே
போற்றும் நிலமும் பொதுவானால்—கோற்றொடியாய் !
கூலம் பெருகிக் கொலைத்தொழிலும் போயொழிய
ஞாலத்தே பெய்யும் மழை.

— சுப்பிரமணியன், மன்னார்குடி.

காற்றில் பறந்த கழிவிலை கோபுரத்தே
வீற்றிருப்பின் வெற்றிமிக்க வீரமோ ?—ஆற்றலற்றோர்
கூட்டமாகக் கூடியே கூவுகின்ற கூச்சலெல்லாம்
காட்டில் பொழிந்த மழை.

—இ. சிவசுப்பிரமணியன், திருநெல்வேலி-6.

காற்றும் கதிரொளியும் கார்முகிலும் வான்வெளியும்
போற்றும் புவிக்குடைமை யானதுபோல்—சோற்றினையும்
உண்ணத் தடையின்றி ஊர்ப்பொதுவில் வைத்திட்டால்
மண்ணில்பெய் யாதோ மழை ?

— சண்முக. தாயுமானவன், பொன்மலை.

காற்று முனைத்தமிழின் கற்புடைமை சாகுமென்ற
மாற்றுக் குறையா மரகதமே !—சாற்றமுதே !
பொய்யற்ற வாழ்வுப் புனிதமே ! நீயன்றோ
' பெய்யெனப் பெய்யும் மழை ! '

— சோ. தமிழரசு, கல்லல்.

காற்றுவந்து மோதுகையில் கார்மேகம் ஒன்றுகித்
தோற்றுவிக்கும் மாமழையை ; அஃதின்றேல்—ஆற்றலினால்
விண்ணேறி, மேகத்தின் மேற்பனியைப் பெய்திந்த
மண்மீதில் காண்போம் மழை.

— க. கிருட்டிணன், திருப்பூர்.

காற்றுச் சிறிதின்றிக் காசினியில் மக்களினம்
நாற்றிசையும் வாழ்வதுண்டோ நாளுந்தான்—ஏற்றமுடன்
அன்னமும் நீரும் அனைவரும் பெற்றிங்கு
மன்னுதற்கு வேண்டும் மழை.

— ப. குப்புசாமி, பொன்மலை.

காற்றெனும் காளை கருமேகப் பெண்ணணங்கின்
தோற்றத்தில் தன்னெஞ்சைத் தோயவிட்டே ;—ஏற்றதொரு
விண்ணிடத்தே மஞ்சவனின் வேய்தோள் முயங்குங்கால்
மண்ணிடத்தே பெய்யும் மழை !

— ந. செனார்த்தனன், அரக்கோணம்.

காற்றுவரும் தென்றலெனக், காதலரோ வாரார்காண்
தேற்றிடவே யாருமின்றித் தேம்புகிறேன் !—சாற்றக்கேள் !
காய்நிலவைக் காண்பதில்லை ; கண்ணுறக்கம் கொள்வதில்லை !
ஓய்வதில்லை கண்ணீர் மழை.

— புலவர் வ. சிவசங்கரன், கானக்கோயில்பேட்டை.

காற்றுக் கவின்யாப்பாய்க் கைக்கருத்துக் கார்முகிலாய்
ஏற்றும் உணர்ச்சி எழில்துளியாய்ப்—போற்றுதற்(கு)
ஆர்க்கும் புகழ்வயலாய் அம்புவிக்கே தேருள்ளம்
வார்க்கும் கவிதை மழை.

— இளம்பொறை, காளுடுகாத்தான் .

# வெண்பாப் போட்டி

காற்று வரும்பொழுது காத்திருந்து நெற்களத்தில்
தூற்றிப் பதர்நீக்கித் தூய்மையே—போற்றிவரும்
ஏர்உழவர் ஏழையின் ஏக்கத்தைப் போக்குதற்குச்
சீராக வேண்டும் மழை.

— அ. பழனிச்சாமி, சேலம்-6.

காற்று வெயில்சுமக்கும் ; காவில் எழில்சுமக்கும் ;
மாற்றமின்றி எங்கும் மணஞ்சுமக்கும் ;—சீற்றமது
கொண்டால் புயலாம் ; குளிர்சுமந்து பெய்யவைக்கும்
விண்முகிலி னின்று மழை.

— புலவர் ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

காற்றுடன் மின்னல் கடிதாகி மேல்வானில்
ஏற்றமுற ஓங்கும் இடியோசை—நாற்றிசையும்
விண்ணிலே கார்முகில் வீழ்குடைபோல் தாழ்ந்திட்டால்
மண்ணிலே பெய்யும் மழை.

— பழ. கந்தசாமி, பழனி.

காற்றே உயிர்களைக் காப்பது, கண்ணியக்
கூற்றே குறைகளைக் கொல்வது—போற்றிடும்
தன்னல மற்றோரைத் தாங்கத்தான் பெய்யுமே
மன்னுயிர் காக்கும் மழை.

— கா. மு. கண்ணாயிரம், புல்லரம்பாக்கம்.

காற்றுப் புயல்போல் கயவர் செயுங்கொடுமை
மாற்றக் கலைஞர் மலைபோன்ற—ஆற்றலினைக்
காட்டித் தடுத்தமைதி காண்பார்தம் நற்பணியின்
மாட்சிக்கே ஒப்பாம் மழை.

— வி. மு. உலகநாதன், சென்னை-17.

காற்றும் நுழையாக் கடுமைமிகு காவலும்
தோற்றதே என்குழந்தாய் ! தோளுயர்த்திக்—கூற்றும்
பகைவென்று மீள்கென்ற பைந்தமிழ்த்தாய் அன்பை
வகையுடனே வாழ்த்தும் மழை.

— பாரதி சங்கு, அமராவதி நகர்.

காற்றுச் சுகம்நாடிச் சென்னைக் கடற்கரையில்
ஆற்றுவெள்ளம் போல்திரளும் அன்பரெல்லாம்—ஏற்றமழை
இல்லையே என்றுழவர் ஏக்கமுறும் காலத்தும்
தொல்லையென வேண்டார் மழை.

— மா. கா. குருசாமி, அபிராமம்.

காற்றுங் கடலுங் கனலுங் கதிரொளியும்
போற்றும் இடமும் புனலுந்தான்—ஆற்றலில்
பொன்றினும் பொன்றாதே பைந்தமிழ்ப் பாவலர்தம்
நன்றாய நற்பா மழை.

— புலவர் வெ. வா. நடராசன், சென்னை-5.

காற்றுத் திரைதிரும்பும் காலம் வருமெனவே
ஆற்றியிருந் தானவன் அன்பத்தான்—தேற்று
நலம்பெறவே கண்ணொளி நல்கிடஇன் றில்லை
மலர்க்கண்ணிக் கண்ணீர் மழை.

— புலவர் கரு. சுப்பையா, கல்லூரணி.

காற்றின் உறுதுணையும், காணும் புவிப்பொறையும்,
ஆற்றலுறு கற்பின் அருஞ்சிறப்பும் ; —போற்றலுற்றே
செய்யதமிழ் போலமைந்தாள் சீர்சால் கணவற்குப்
' பெய்யெனப் பெய்யும் மழை '.

— வித்துவான் நா. சிவராம முத்துக்குமரவேல், தேனி.

காற்று குளிர்ந்துவரும் ; கார்மேகம் சூழ்ந்துவரும் ;
ஆற்றில் புதுவெள்ளம் அள்ளிவரும் ; —நாற்று
நடுகின்ற காலமது ; நல்லுழவர் ஏற்ற
மடையவே பெய்யும் மழை.

— வை. இரத்தினசாமி, தேத்தாகுடி வடக்கு.

காற்று வருங்கால் கவின்சோலை தள்ளாடும் ;
ஊற்றுப் பெருக்கினால் ஊர்செழிக்கும்—மாற்றிங்குத்
தாளாப் புயல்வறுமை தானெழுந்தால் ஏழையர் கண்
மாளாது பெய்யும் மழை.

— வே. இளம்பரிதி, சிலம்பகம்.

காற்று வருங்கால் கலகலக்கும் வாழ்குடிசை !
ஆற்றொண்ணாத் துன்பம் அடுக்கடுக்காம் !—ஏற்ற
தமிழரசால் தாழ்குடிசை மாறிற்றென் செய்யும்
மமதை பிடித்த மழை.

— மலை. மா. ஆறுமுகம், மணிமங்கலம்.

காற்றில் தலையசைத்துக் காண்போர் களிப்புறவே
நாற்றம் மிகக்கமழும் நாண்மலரே—ஏற்ற
வனமெங்கும் வான்மரங்கள் வைத்திட்டால் நாட்டில்
மனமகிழப் பெய்யும் மழை.

— புலவர் மு. நம்மாழ்வார், கோயம்புத்தூர்-1.

காற்றுக் கருமுகிலைக் கூட்டக் கதிரொளியால்
ஆற்றுநீரும், ஆர்ப்பரிக்கும் ஆழியும்—ஊற்றெனப்
பொங்கியெழும் நீர்நிலையும், பூமிவிட்டே ஆவியாய்
மங்களமாய்ப் பெய்யும் மழை.

— க.ச. சூசை, போச்சம்பள்ளி.

காற்றிலே தென்றல் ! கருத்திலே வள்ளுவம் !
ஊற்றில் கவிதை உயிரூற்று—நாற்றிசையும்
' அண்ணா 'வென் றன்பால் அழைத்திட்ட தெய்வத்தை
எண்ணுங்கால் கண்ணீர் மழை !

— புலவர் ச. மருதமுத்து, உடுமலை.


நாட்டின்
முன்னேற்றத்திலும்
வளமையிலும்
எமது பங்கு
TANSI
டான்ஸி
தொழில் நுட்பத் துறைகளில் உங்கள்
தேவைகளை பணிவுடன் பூர்த்தி செய்கிறது
மலிவானது
உத்திரவாதமானது
வார்ப்பட வேலைகளுக்கும், கட்டுமான கட்டமைப்பு களுக்கும், கருவிமற்றும் உருமாற்றத்திற்கும் மர சாமான்களுக்கும் "டான்ஸி"
விவரங்களுக்கு அணுகவும்:
தொழிற் பட்டறைகளுடன் தொடர்பு கொள்ளுங்கள்
TANSI
தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்


பருத்தி விவசாயிகள் கவனிக்கவும்.
5 A/152 (760)
உங்கள் பயிரை சார் உறுஞ்சி நாசம் விளைவிக்கும் பூச்சிகளிலிருந்து
பாதுகாக்க மெடாஸிஸ்டாக்ஸ்
கடித்து மென்று பயிருக்கு தீங்கிழைக்கும் பூச்சிகளை
பாலிடால்
சிறந்த முறையில் கட்டுப்படுத்துகிறது.
காய்ப் புழுக்-
களுக்கு ஏற்றது விசேஷ பூச்சி மருந்து
மெடாஸிட்காம்பி
அடைப்புகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் உபயோகிக்கும் முறை
களின் படி ..பாலிடால், மெடாஸிஸ்டாக்ஸ்,
மெடாஸிட்காம்பி மருந்துகளை என்றும் உபயோகியுங்கள்.
பருத்திப் பயிரைத்தாக்கும் பூச்சிகளி-
னால் ஏற்படும் நஷ்டத்திற்கு முடிவு
காணவும். பண விரயத்தை தவிர்க்க
BAYER

## மாணவர் அரங்கம்

## செந்தமிழ்ச் செம்மல்கள்

# ஆபிரகாம் பண்டிதர்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தஞ்சையில் இருந்து தமிழிசை வளர்த்த அறிஞர் பெருமக்களுள் ஒருவர் ஆபிரகாம் பண்டிதர்.

திருநெல்வேலி மாவட்டம் சாம்பவர் வடகரையில் 1859-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் இரண்டாம் நாள் முத்துசாமி என்பவரின் மகனாகப் பிறந்தார் ஆபிரகாம். இளமையிலேயே பல கலைகளையும் பயிலும் திறனுடையவராக இருந்தார் இவர். இசைக் கலையிலும் ஓவியக்கலையிலும் மிகுந்த ஆர்வம் காட்டி வந்தார். பள்ளி ஆசிரியராக வேண்டும் என்ற எண்ணத்தினால் திண்டுக்கல்லுக்குச் சென்று அங்கேயிருந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து படித்தார். இங்குப் படிக்கும்பொழுது தக்க சித்த மருத்துவர் ஒருவரிடம் மருத்துவமும், சிறந்த இசையாசிரியர் ஒருவரிடம் இசையினையும் நன்கு பயின்றார்.

ஆபிரகாம் ஆசிரியர் பயிற்சித் தேர்வில் முதன்மையாகத் தேறினார். இவருடைய திறமையினை நன்குணர்ந்த இவருடைய பள்ளித் தலைமையாசிரியர் தம் பள்ளியில் இவரை ஓர் ஆசிரியராக அமர்த்திக் கொண்டார். அப்பொழுது ஆபிரகாமுக்கு வயதுபதினேழு. இந்த வயதிலேயே இவர் மாணவர்களிடம் மிகுந்த நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

ஒரு சமயம், ஆபிரகாம் பண்டிதருடைய மாணவர் ஒருவரின் தந்தை தமது சொந்த ஊரான ஆனைமலைப்பட்டிக்கு இவரை அழைத்துச் சென்றார். ஆனைமலைப்பட்டியை அடுத்து இருப்பது சுருளிமலை.

சுருளிமலையில் கருணானந்த சித்தர் என்பவர் இருந்தார். அந்தக் கருணானந்தச் சித்தரைச் சுருளிமலையில் சந்தித்த ஆபிரகாம் பண்டிதர் அவரது மாணவரானார். அதனால் மருந்து முறைகளை ஆபிரகாம் பண்டிதர் கற்றுக் கொண்டார். சிறந்த சித்த மருத்துவர் என்ற பெயருமெடுத்தார்.

ஆபிரகாம் பண்டிதருக்கு 1882-ஆம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. ஞானவடிவு பொன்னம்மாள் என்ற ஆசிரியையை மணந்து கொண்டார். திருமணமான பின்னர் ஆபிரகாம் திண்டுக்கல்லை விட்டுத் தஞ்சைக்குக் குடியேறினார்.

தஞ்சாவூரில் சில ஆண்டுகள் ஆசிரியர் தொழிலில் ஈடுபட்ட ஆபிரகாம் பண்டிதர் மருத்துவத் தொழிலில் மிகுந்த அக்கறை காட்டினார். தமது ஆசான் பெயரை வைத்துக் 'கருணானந்தர் சஞ்சீவி மருந்துகள்' என்று புகழ்மிக்க மருந்துகளைச் செய்து விற்பனை செய்தார்.

ஆபிரகாம் பண்டிதர் புகழை நாட்டுக்கு நன்குணர்த்தியது "கருணாமிருத சாகரம்" என்ற இசைத் தமிழ் நூலாகும்.

'கருணாமிருத சாகரம்' நூல் 1,346 பக்கங்களை உடையது. இசைத் தமிழில் உள்ள நுண்ணிய கருத்துக்களையும் இந்நூல் விவரிக்கின்றது. இந்நூலை ஆபிரகாம் பண்டிதர் கருணானந்த முனிவருக்குக் காணிக்கையாக்கியிருந்தார்.

1916-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் தஞ்சாவூரில் இசை மாநாடு நடைபெற்றது. இம் மாநாட்டில் இசை பற்றிய ஐயப்பாடுகளையும் வழக்கில் இல்லாத பண்களையும் இசைப் பாடல்களையும் தமது புதல்விகளான மரகத வல்லி, கனக வல்லி ஆகியோரின் துணையோடு வாய்ப்பாட்டிலும் வீணையிலும் ஆபிரகாம் பண்டிதர் பாடிக் காட்டி மெய்ப்பித்தார்.

இருத்தவர் எனக் கருதப்படும் ஆபிரகாம் பண்டிதர் சைவத் திருமுறைகளைக் கற்பதிலும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

தமிழின் முதன்மையைப் பற்றி இவர் எழுதியுள்ளவை ஆராய்ச்சி அறிஞர்களுக்கு விருந்தாகும். 'தமிழே உலகின் முதன் மொழி' என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தவர் ஆபிரகாம் பண்டிதர். 'பிரணவ மந்திரம்' என்று தலைப்பிட்டு முதன்மையான ஆதாரங்களை விளக்கியுள்ளார்.

'ஓம்' என்ற மந்திரச் சொல் தமிழுக்கே உரியது என்பதை விளக்கி ஆபிரகாம் பண்டிதர் எழுதியுள்ள விளக்கம் கற்றறிந்த மக்களால் புகழப்படுவதும் காலத்தால் அழியாததும் ஆகும்.



ஆபிரகாம் பண்டிதர் நிலைநாட்டிய தமிழிசை பற்றிய கருத்துக்களை பரோடா சமஸ்தானத்தின் திவானாக இருந்த வி. பி. மாதவராவ் என்பவர் மிகவும் பாராட்டியுள்ளார்.

ஆபிரகாம் பண்டிதரின் கருணாமிருத சாகரத்திற்குத் திருப்பாதிரிப்புலியூர் சிவசண்முக மெஞ்ஞான சிவாச்சாரியார் என்னும் ஞானியாரடிகளும், சாமிவேதாசலம் என்னும் மறைமலை அடிகளாரும் வழங்கியுள்ள முன்னுரைகளே தனி நூலாக அச்சிடும் தகுதியை உடையனவாகும்.

'ராவ் சாகேப்' என்ற சிறப்புப் பட்டத்தைப்பெற்றிருந்த ஆபிரகாம் பண்டிதர் இசைத் தமிழுக்கு ஆற்றியுள்ள பணிகளை எட்டையாபுரம் மன்னர் பாராட்டிச் சிறப்பித்திருக்கிறார்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழிசைக்கு அருந்தொண்டாற்றியவர்களுள் தலையானவர் ஆவார் ஆபிரகாம் பண்டிதர்.

—நம்பியின் தம்பி



---

# பனிக்கட்டித் தீவுகள்

நிலப்பரப்புகள் எல்லாத் திசைகளிலும் கடலால் சூழப்பட்டுத் தீவுகளாக இருப்பது போல துருவப் பகுதிகளிலும், உயர்ந்த அட்சரேகையிலுள்ள இடங்களிலும் பல நூறு ஆண்டுக் காலமாக நிலையாக இருந்து வரும் பனிக்கட்டித் தீவுகள் உள்ளன. இப் பனிக்கட்டித் தீவுகள் முற்றிலும் பனிக்கட்டியாலானவை. கடலின் நடுவே எக்காலத்திலும் மிதந்து கொண்டிருக்க வல்லன. கடலில் மிதக்கும் பிற பனிக்கட்டிப் பாறைகளிலிருந்தும் இவற்றை எளிதில் வேறுபடுத்தி அறியலாம். கடலில் மிதக்கும் பனிக்கட்டிப் பாறைகள் எளிதில் உடைந்து விடுவனவாகும். மேலும் அவை ஒழுங்கற்ற பலவிதமான உருவங்களைக் கொண்டிருக்கும். அப்பாறைகளின் பெரும்பகுதி கடல் நீரினுள் அமிழ்ந்திருக்கும். எனவே உடையாதிருக்கும் பனிக்கட்டித் தீவுகள் குறிப்பிடத்தக்கன.

பனிக் கட்டித் தீவுகள் ஒரு சில சதுர மைல் பரப்பிலிருந்து 300 சதுர மைல் பரப்பினைக் கொண்டனவாக உள்ளன. கடலில் மிதக்கும் இத்தீவுகள் 20 அடி முதல் 200 அடி வரையான குறுக்குயரத்தைக் கொண்டுள்ளன. ஆங்காங்கே சிறிய சிறிய குன்றுகளை ஒத்த பனிக்கட்டிப் பாறைகளும், அதனிடையே தெளிந்து வளைந்து வழிந்தோடும் தெள்ளிய நீரோடைகளும் காணப்படும். வேனிற் காலங்களில் இந்நீரோடைகளில் நீர்ப் பெருக்கெடுத்தோடும். கடலில் மிதந்தபடியே நிற்கும் இத்தீவுகள், சிற்சில சமயங்களில் காற்றாலும், கடல் நீரோட்டங்களாலும் இங்குமங்குமாக அலைக்கப்பட்டு இழுத்துச் செல்லப்படுகின்றன. சில தீவுகளில் பாறைத் துண்டங்களும், தூசி துகள்களும், தாவர விலங்கின எச்சங்களும் காணப்படுகின்றன. இவற்றைக் கொண்டு இத்தீவுகள் ஒரு காலத்தில் நிலப்பரப்பை ஒட்டி இருந்திருக்குமா என்பது பற்றி அறிஞர்கள் ஆராய்ச்சி நடத்துகின்றனர்.

பனிக்கட்டித் தீவுகள் கிரீன்லாந்திலும், கனடாவை அடுத்த தீவுக் கூட்டங்களிடையேயும் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவற்றில் சில 100 அடிக்கும் மேலான குறுக்குயரத்தைக் கொண்டுள்ளன. இவ்வாறான பருமனுடைய தீவுகள் பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகத் தக்க பருவ நிலையுடன் கூடி வளர்ந்தனவாகும்; அல்லது இவை பனியூழிக் காலத்தில் (Ice Age) தோன்றிய பெரும் பனிக்கட்டிகளின் கரைந்து மீந்த பகுதிகளாகவும் இருக்கலாம். இத்தீவுகளில் சிற்சில சமயங்களில் கப்பல்கள் மோதி உடைந்து விடுவதால் துருவப் பகுதிகளில் இவை போக்குவரத்திற்குத் தடையாக உள்ளன. எனவே முன்கூட்டியே பனிக்கட்டித் தீவுகள், பனிப் பாறைகள் ஆகியவற்றின் நகர்ச்சியையும், அவை செல்லும் திக்கையும், இருக்குமிடத்தையும் கண்டுபிடித்து மாலுமிகளுக்கு எச்சரிக்கின்றனர். இத்தீவுகள் வானிலை ஆராய்ச்சி, புவி பௌதிக ஆராய்ச்சி, கடல் ஆராய்ச்சி, புவி மின்காந்த அலை பற்றிய ஆராய்ச்சி, புவி ஈர்ப்பு விசை பற்றிய ஆராய்ச்சிகளை போன்ற ஆராய்ச்சிகளை நடத்த ஏற்ற இடங்களாக உள்ளன. மற்றும் துருவ பகுதிகளில் உள்ள கனிப்பொருள் வளத்தினைப் பற்றி ஆராய்ச்சி நடத்தவும் இத்தீவுகள் பயன்படுகின்றன. இத்தீவுகளில், மக்களும் குடியேற வாய்ப்புண்டு.

இரா. இராமசாமி,
ஆய்வு மாணக்கன்,
ஞாலவியல் துறை,
மாநிலக் கல்லூரி, சென்னை-5.



# அஞ்சல் தலையில் [illegible]!

நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த எட்டயாபுரத்தில் சின்னச்சாமி அய்யருக்கும் இலட்சுமி அம்மாளுக்கும் 11—12—1882-ல் மகனாகப் பிறந்த சுப்பையா, தன்னுடைய ஏழாவது வயதிலேயே கவிமழை பொழியத் தொடங்கினார். பதினோரு வயதடைந்த பால கவி சுப்பையாவை எட்டயா புரம் சமஸ்தானப் புலவர்கள் சோதித்து வியந்து 'பாரதி' என்ற பட்டத்தினை சூட்டிப் பாராட்டினார்கள்.

நெல்லை இந்துக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் பாலகவி சுப்பையா ஐந்தாம் படிவம் வரை படித்தார். அங்கு அவர் ஒரு சிறந்த மாணவராகத் திகழ்ந்தார். பாலகவி சுப்பையா தன் இளம் வயதிலேயே பெற்றோரை இழந்தார். பின்னர் காசிக்குச் சென்று அங்குத் தன் அத்தையின் அரவணைப்பில் வளர்ந்தார். அவர் காசியிலே வாழ்ந்த காலத்தில் இந்தி மொழியிலும், சமஸ்கிருதத்திலும் தேர்ச்சி பெற்றுப் புகுமுக வகுப்பில் சிறப்புடன் தேர்ச்சி பெற்றார். இன்று மகாகவி பாரதியார் என்றவுடன் நமது கண்முன் தோற்றமளிக்கும் பாரதியாரின் பஞ்சகச்சம், வால்விட்ட தலைப்பாகை, வெட்டரிவாள் மீசை ஆகியன அங்குதான் பழக்கத்திற்குவந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த கீழ்க்கடையத்தில் வாழ்ந்த செல்லப்ப அய்யரின் புதல்வி செல்லம்மாளுக்கும், பாலகவிக்கும் நடைபெற்ற இளம் வயது மணம் பற்றிப் பாரதியாரே அவர் கவிதைகளில் அழகாகப் பாடியிருக்கிறார்.

கவிஞர் காசியிலிருந்து தென்னிந்தியாவுக்குத் திரும்பினார். எட்டயாபுரம் மன்னருக்குத் தோழராக விளங்கினார். எனினும் சமஸ்தான வேலையில் அவருக்கு விருப்பமில்லாததால், மதுரைக்கு வந்து, மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகச் சில காலம் பணியாற்றினார். கவிஞரின் 'தனிமை இரக்கம்' என்ற முதல் பாடல், மதுரையிலிருந்து வெளிவந்த 'விவேக பாநு'வில் வெளிவந்தது. கவிஞருக்குப் பத்திரிகைத் துறையில் ஆர்வம் மிகமிகப் பள்ளிக்கூட வேலையில் விருப்பம் குறைந்து, இறுதியாக, பள்ளி ஆசிரியர் வேலைக்கே முழுக்குப் போட்டுவிட்டுச் சென்னையில் 'சுதேசமித்திரன்' நாளிதழில் உதவி ஆசிரியர்ப் பொறுப்பேற்றுப் பணிபுரிந்தார். பின்னர், 'சக்கரவர்த்தினி' என்ற திங்களிதழின் ஆசிரியப் பொறுப்பேற்றார்.

1905-ல் நடைபெற்ற வங்கப் பிரிவினை எதிர்ப்புக் கிளர்ச்சி, பாரதியாரின் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது என்றால் அது மிகையாகாது. பிரிவினை எதிர்ப்புக் கிளர்ச்சியிலும் சமூக சீர்திருத்தத்திலும் பாரதி தீவிரமாக ஈடுபட்டார். அந்நியர் ஆட்சியின் கீழ் இந்தியா அனுபவிக்கவேண்டியிருந்த இழிநிலைமை, பாரதியாரின் தேச உணர்ச்சிக்கனலை மூட்டி விட்டது. பாரதியார் தீவிரப் புரட்சியாளராகவே மாறி விட்டார்.

1906-ல் காசியில் நடைபெற்ற இந்திய தேசியக் காங்கிரஸ் மாநாட்டிற்குப் பாரதியார் சென்று திரும்பினார். அவர் சென்னைக்கு வந்ததும், காங்கிரஸ் தீவிரவாதிகளின் கருத்துப் பத்திரிகையான 'இந்தியா'வின் பொறுப்பாசிரியராகவும், ஆங்கில வாரப் பத்திரிகையான 'பால பாரதி' யின் ஆசிரியராகவும் பொறுப்பேற்று, மக்களின் உரிமை வேட்கையை வளர்க்க உதவும் வீராவேசக் கட்டுரைகள், கவிதைகள் பலவற்றை எழுதி வெளியிட்டார். இந்தக் காலத்தில்தான் பாரதியாருக்கு வ. உ. சிதம்பரனார், சக்கரைச் செட்டியார் போன்ற பல தீவிர தேசியவாதிகளின் தொடர்பு கிடைத்தது—தொடர்பு கிளைத்து வளர்ந்தது.

தென்னிந்தியாவில் விடுதலை இயக்கம் உச்சக் கட்டத்தை எட்டியது. பிரிட்டிஷாரின் கண்ணோட்டம் பாரதியாரின் நடவடிக்கைகளின் மீது விழுந்தது. அவர், தன் பணி பிரிட்டிஷாரின் அடக்குமுறையால் இடையறுபட்டுப் போகாமல் தொடர்ந்து நடைபெற வேண்டுமே எனும் ஆர்வத்துடிப்பால் புதுச்சேரிக்குச் சென்றார். அங்கிருந்து கொண்டே தொடர்ந்து தம் பணியைச்செய்துவந்தார். பாரதியாரின் 'இந்தியா' பத்திரிகை, பிரிட்டிஷாரைப் படாதபாடு படுத்திவைத்தது. அதன் பயனாக, அந்தப் பத்திரிகை இந்தியாவிற்குள் வரக்கூடாது என்று தடைவிதிக்கப்பெற்றது. இதனால் பத்திரிகை தொடர்ந்து நடைபெற முடியாமல் நிற்க வேண்டியதாயிற்று. பாரதிதாசன் அரவிந்தர், வ. வே. சு. அய்யர் ஆகியோருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு பாரதிக்குக் கிடைத்தது. என்றாலும், புதுச்சேரியில் அரசியல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட மந்தநிலைமை பாரதியாருக்குச் சலிப்பையும், ஒருவித ஏமாற்ற உணர்வையும் உண்டாக்கியது. இலக்கியச் சேவையில் பாரதியார் சற்றுத் தீவிரமாக ஈடுபடும் வாய்ப்பு உருவாயிற்று. சிறந்த பல கவிதைகளையும், 'பாஞ்சாலி சபதம்', 'குயில் பாட்டு'ப் போன்ற சிறந்த நூல்களையும் எழுதினார். இவருடைய





மாணக்கராகவிருந்த பாரதிதாசன் தமிழகத்தில் கவிதைத் துறையில், தனக்கு ஒரு பரம்பரையைத்தோற்றுவித்தார்.

முழுக்க, அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடாமலேயே இருந்துவிட அவரால் முடியவில்லை. தமிழகத்திற்குப் புறப்பட்டு வந்து கொண்டிருந்தார். கடலூர் அருகே பிரிட்டிஷார் அவரைக் கைது செய்து 34 நாட்கள் காவலில் வைத்திருந்து விட்டுப் பின்னர் 'வழக்கில்லை' என்று கூறிவிடுதலை செய்தார்கள்.

பின்னர் பாரதியார் கீழ்க்கடையத்திற்கு வந்தார். திருவனந்தபுரம், எட்டயாபுரம், காரைக்குடி கானாடுகாத்தான் முதலிய பலவேறு ஊர்களுக்கும் அவ்வப்போது சென்று வந்தார். வை.சு. சண்முகம் செட்டியார், சொ. முருகப்பா, ராய. சொக்கலிங்கம் போன்ற செட்டிநாட்டுப் பிரமுகர்களின் தொடர்பும், செட்டிநாட்டு வரவேற்பும் ஓரளவு பொருளுதவியும் பாரதியாருக்குக் கிடைத்தன.

பாரதியாருக்குக் கிராமச் சூழலில் சலிப்பு ஏற்பட்டது. 1919-ல் சென்னைக்குச் சென்றார். ராஜாஜியின் வீட்டில் காந்தியடிகளைச் சந்தித்தார். 1920-ல் மீண்டும் 'சுதேசமித்திரன்' துணை ஆசிரியரானார். பல்வேறு உலகவிஷயங்களைப் பற்றி அவர் ஏராளமான கட்டுரைகளையும், கவிதைகளையும்எழுதிக்குவித்தார். இலக்கிய வானில் எழில்மிகும் ஒரு முழுநிலவாகவே விளங்கினார்.

1921-ஆம் ஆண்டு சூலை, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் யானை மகாகவியை வளைத்துப் பிடித்துத் தரையிலே அடித்தது. அவர் மூர்ச்சையடைந்து யானையின் காலடியிலே கிடந்தார். அச் செய்தியறிந்த குவளைக்கண்ணன், மகாகவியைக் காப்பாற்றிச் சிகிச்சையளித்தார். அதிர்ச்சியால் ஏற்பட்ட நோயினின்றும் அவர் விடுதலை பெற்றார். ஆனால், வயிற்று நோய்க் கடுமையினின்றும் அவர் மீளமுடியவில்லை. 1921 செப்டம்பர் 11-ஆம் நாள் தமிழகக் கவிதை வானில் ஒளிவீசி நின்ற அந்த முழுநிலவு வீழ்ந்து மறைந்தது.

இந்தியத் தபால்-தந்தித் துறை 11—9—1960-ஆம் நாளில் மகாகவி பாரதியாரின் திருவுருவம் பொறித்த 15 காசு விலையுள்ள அஞ்சல் தலையை வெளியிட்டுச் சிறப்புச் செய்தது.

—சாமி பழ

# கால்நடைகளுக்கு வரும் நோயும் நோய்த் தடுப்பும்

மாடு, ஆடு, பன்றி ஆகிய கால்நடைகளையும், மனிதனையும் தாக்கும் ஒரு தொற்று நோய் "ப்ருஸெல்லோசில்". தமிழ் நாட்டில் இந்நோய் கால்நடைகளை எந்த அளவிற்குப் பாதித்திருக்கிறது என்று அறியவும், இந்நோயினைத் தடுக்கும் முறைகளைப் பற்றி ஆராய்ந்தறியவும் தமிழ் நாடு கால்நடை மருத்துவ ஆராய்ச்சிக் குழுவினர் முயற்சித்தனர்.

## ப்ருஸெல் லோசில்

கருச் சிதைவு, கன்று போட்டபின் உறுப்புத் தங்கிவிடுவது (Retention of Placenia) ஆகியவை இந்நோயின் முக்கிய அறிகுறிகள். இந் நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ மலட்டுத் தன்மை அடையக் கூடும். இக் கால்நடைகளுக்குப் பிறக்கும் கன்றுகள் செத்துப் பிறக்கலாம். அல்லது அவை நலிந்து காணப்படலாம். எனவே கால்நடைப் பண்ணைகளில் இந்நோய் தோன்றினால் பேரிழப்பு ஏற்படும்.

### தடுப்பு முறைகள்

இந் நோயினால் அவதியுறும் கால்நடைகளைக் குணப்படுத்த முற்றிலும் பயனளிக்கும் சிகிச்சை இதுவரை கண்டுபிடிக்கப்படாததால், வருமுன் காப்பதே நல்லது. அதற்குக் கீழ்க் கண்ட முறைகளை விவசாயிகள் கடைப்பிடிக்கலாம்.

(1) மாட்டுத் தொழுவம் சுற்றுப்புறம் ஆகியவற்றை பினைல் டெட்டால், போன்ற கிருமி நாசினிகள் கலந்த நீரால் நன்றாகக் கழுவிவிட வேண்டும்.

(2) மாட்டுத் தொழுவத்தின் தரை எப்போதும் உலர்ந்திருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

(3) ஏதேனும் ஒரு மாட்டிற்கு இந்நோய் கண்டிருந்தால், அதை உடனடியாக அப்புறப்படுத்தித் தனியாக வைத்துப் பராமரிக்க வேண்டும்.

(4) மாடுகளை நேரடியாகக் காளை சேர்ப்பதை விடுத்து, அரசு கால்நடை மருத்துவ மனைக்குக் கொண்டு சென்று செயற்கைக் கருத்தரிப்புச் செய்வது நல்லது.

(5) புதிய பசுக்களை வாங்கும்போது இந்நோய்ப் பாதிக்கப்படாத இடங்களிலிருந்து வாங்க வேண்டும்.

(6) கிடேரிக் கன்றுகளுக்கு 6 அல்லது 8 மாதம் நிறைந்ததும் அருகிலுள்ள கால்நடை உதவி மருத்துவர் மூலமாக, "ப்ருஸெல்லோசில்" தடுப்பு ஊசி போட்டுக்கொள்ள வேண்டும்.

(7) பால் கறக்கும் முன்பு மடியையும், அதைச் சுற்றியுள்ள பகுதியையும் டெட்டால் மருந்தால் நன்றாகக் கழுவ வேண்டும்.

### மனிதர்க்கும் இது பரவும்

இந் நோய் கண்ட மாடுகளுடனும், மற்றையக் கால்நடைகளுடனும் நெருங்கிய தொடர்பு

உடையோர் இந் நோயால் பீடிக்கப்பட்டு, அவதியுறுகின்றனர். இந் நோயால் பாதிக்கப்பட்டுள்ள மாடுகளின் பாலைக் காய்ச்சாமல் அருந்துவோருக்கும் இந்த நோய் பரவ ஏதுவாகும். ஆகவே, இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள பசுவின் பாலை மட்டுமல்ல, எந்தப் பசுவின் பாலையும் நன்றாகக் காய்ச்சி அருந்துவதால் மனிதர்களுக்கு இந்நோய் பரவுவதைத் தடுக்க முடியும்.

## அடைப்பான்

கால்நடைகளைத் தாக்கும் கொடிய நோய்களில் அடைப்பான் நோய் முக்கிய இடம் வகிக்கிறது. பசில்லஸ் அந்த்ரசிஸ் ( Bacillus Anthracis ) என்னும் மிக நுண்ணிய கிருமியால் உண்டாகும் இந்த நோய், மனிதர்களுக்குப் பரவக் கூடியது. பெரும்பாலும் ஆடு, மாடுகளே இந்நோயால் பெரிதும் அவதியுறுகின்றன. அடைப்பான் நோயால் பாதிக்கப்படும் கால்நடைகள் பெரும்பாலும் பிழைப்பதில்லை. சிகிச்சைக்குப் போதிய அவகாசம் இருப்பதில்லை. காலையில் மேய்ச்சலுக்குப் போகும் கால்நடைகள் மாலையில் அல்லது மறுநாள் அதிகாலையில் திடீரென இறந்து விடும். சென்னை கால்நடை மருத்துவ ஆராய்ச்சிக் குழு, கால்நடைகளுக்கு இந்நோய் பரவும் முறைகளையும், தடுப்பு முறைகளையும் கண்டறிய ஆராய்ச்சிகள் நடத்தியது.

### நோய் எப்படிப் பரவுகிறது ?

நோய்க் கிருமிகள் நிலத்தில் சூரிய வெளிச்சத்தினால் பாதிக்கப்படாமல் ஸ்போர் ( Spore ) வடிவில் பல ஆண்டுகள் நிலத்தில் காணப்படுகின்றன. இந் நிலத்தில் கால்நடைகள் மேய்ச்சலுக்கு வரும்போது ஸ்போர்டுகளோடு கூடிய பசும் புற் பூண்டுகளை உட்கொள்வதால், ஸ்போர்கள் உட்சென்று அடைப்பான் நோயை உண்டுபண்ணுகின்றன. மேலும் இந் நோயால் இறந்த கால்நடைகளின் எலும்புகளைக் கொண்டு தயாரித்த உரத்தினாலும் எலும்புத் தூளினாலும் இந் நோய் பரவுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### நோயின் அறிகுறிகள்

அடைப்பான் நோயால் அவதியுறும் கால்நடைகள், இறக்குமுன் கடுமையான வயிற்று வலியால் அவதிப்பட்டுத் துள்ளிக் குதித்துச் சாகும். இறந்த பின் வயிறு உப்பிக் காணப்படும். ஆசன வாயிலும், ஏனைய இடங்களிலும் இரத்தம் கருமையான நிறத்தில் வரும்.

### தடுப்பு முறைகள்

இறந்த கால்நடைகளைத் தவறுதலாக அறுப்பதனாலும், கழிவுகளையும், உடலையும் சரியான முறையில் அப்புறப்படுத்தாமல் இருப்பதாலும் அடைப்பான் நோய் எளிதில் பரவுகிறது. அடைப்பான் நோய் கண்டு இறந்த கால்நடைகளைத் தோல் உரிக்காமல் கழிவுப் பொருட்களோடு எரித்த பின்னர், இரத்தம் பட்ட இடங்களில் கிருமி நாசினியைத் தெளிக்க வேண்டும். அல்லது ஊருக்கு அப்பால் 6 அடி ஆழமுள்ள குழி தோண்டி, உடலைச் சுண்ணாம்பு சேர்த்துப் புதைக்க வேண்டும். மற்றக் கால்நடைகளுக்கும் காலம் கடத்தாமல் தடுப்பு ஊசி போட்டுக் கொள்ள வேண்டுவது மிகவும் அவசியமாகும்.

அடைப்பான் நோய்க்கான தடுப்பு ஊசி மருந்துகள், இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை தொற்றுநோய்த் தடுப்பு நிலையத்தில் தயாரிக்கப்படுகின்றன. எனவே அருகாமையிலுள்ள கால்நடை மருத்துவரை அணுகிக் கால்நடைகளுக்குத் தடுப்பு ஊசி போட்டு, இக் கொடிய நோயினின்றும், கால்நடைகளைக் காப்பாற்றிக்கொள்ள முற்படுவோம்.

(சென்னை கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சித்துறை கொடுத்துள்ள தகவல்களிலிருந்து தொகுக்கப்பட்டவை.)

## நேருவும் புதிய இந்தியாவும்

"நேருவும் புதிய இந்தியாவும்" என்ற நடமாடும் பொருட்காட்சி ஆசியா-72 பொருட்காட்சியில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பொருட்காட்சி முதல் முறையாக 1965-ல் நியூயார்க் நகரில் அமைக்கப்பட்டது. பின்னர் இது 13 நாடுகளின் தலைநகரங்களில் அமைக்கப்பட்டு, இப்போது முதல் தடவையாக இந்தியாவுக்குக் கொண்டுவரப்படுகிறது.

இந்தப் பொருட்காட்சி, பண்டித ஜவஹர்லால் நேரு இறந்த ஆறு தினங்களுக்குள்ளாகத் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டது. ஆனால் கடந்த ஏழு ஆண்டுகளில் இந்தப் பொருட் காட்சியில் மேலும் பல பகுதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

நாட்டின் விடுதலை நாள் வெள்ளிவிழாக் கொண்டாடப் படும் இந்த ஆண்டில் ஆசியா-72 கண் காட்சி அமைக்கப்பட்டிருப்பதால், நாட்டுக்கு அருந் தொண்டாற்றிய அந்த உத்தமரைப் பற்றிய கண்காட்சியை ஆசியா-72 கண்காட்சியிலேயே அமைப்பதுதான் ஏற்றது என்று கருதப்படுகிறது. ஆசியா-72 கண்காட்சி அதிகாரிகள், இந்தியாவின் கலாச்சாரம், வளர்ச்சிப் பணிகள் வெளிநாட்டுக் கொள்கைகள் போன்றவற்றை விளக்கும் அம்சங்களையும் "நேருவும் புதிய இந்தியாவும்" கண்காட்சியில் சேர்த்திருக்கிறார்கள். இந்தப் பொருட்காட்சியில் நேருவின் ஒலிப்பதிவு செய்யப்பட்ட பேச்சுகள் ஒலிபரப்பப்படுகிறது. செய்திப் படங்களும் திரையிடப்படுகின்றன.

"நேருவும் புதிய இந்தியாவும்" பொருட் காட்சி, 10,000 சதுர அடி நிலப்பரப்பில், சுமார் 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கும் சிறப்பு அரங்கில் அமைக்கப்பட்டிருக்கிறது. நாள்தோறும் சுமார் 40,000 பேர் இந்தப் பொருட்காட்சியைக் கண்டார்கள். பொருட்காட்சி அமைக்கப்பட்டிருக்கும் அரங்கினை நாட்டின் மிகச் சிறந்த கட்டடக் கலைஞர்கள் அழகு நயத்துடன் வடிவமைத்திருக்கிறார்கள்.

இந்தப் பொருட் காட்சி நியூயார்க் நகரில் அமைக்கப்பட்டபோது நாள்தோறும் 10,000 முதல் 12,000 பேர் இதனைக் காணத் திரண்டு வந்தனர். நேரு பற்றிய இந்தப் பொருட் காட்சி ஆசியா-72 பொருட் காட்சி முடிவடைந்த பின்னரும் அதே இடத்தில் நிரந்தரமாக நடைபெற்றுவரும்.



## குட்டிக் கதைகள்

இராமகிருஷ்ண பரம அம்சரைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? அவர் மக்களுக்காகப் பல நல்ல வழிமுறைகளைக் கூறியிருக்கிறார். வாழ்க்கை எப்படி அமைய வேண்டும் என்றெல்லாம் அவர் சொல்லியிருக்கிறார். பெரிய பெரிய கருத்துக்களை யெல்லாம் மிக எளிய இனிய கதைகளின் மூலம் விளக்கி, மக்களைக் கவர்ந்திருக்கிறார். அவர் சொன்ன குட்டிக் கதைகள் குதூகல மூட்டுவனவாகும். இதோ அவர் சொன்ன அருமையான கதைகள்:

ஒருவன் கிணறு வெட்ட ஆரம்பித்தான். இருபது அடி ஆழம் வரை மிகவும் சிரமப்பட்டுத் தோண்டிப் பார்த்தான். நீர் வரும் அறிகுறியே தென்படவில்லை. அதனால் அவன் மனமுடைந்தான். பிறகு வேறொரு இடத்தில் கிணறு தோண்ட ஆரம்பித்தான். இப்போது முன்னைவிட அதிக ஆழம் அவன் தோண்டினான். உழைப்புத்தான் வீணானதே தவிரத் தண்ணீர் இருப்பதற்கான தடயமே இல்லை. இதனால் மிகவும் ஆத்திரமடைந்த அவன் இனனொர் இடத்தில் கிணறு வெட்ட ஆரம்பித்தான். அங்கும் அவனுக்கு ஏமாற்றமே கிடைத்தது. கடைசியில் வெறுப்படைந்த அவன், கிணறுவெட்டும் எண்ணத்தையே விட்டுவிட்டான்!

இப்படி அவன் இந்த மூன்று இடங்களிலும் சிரமப்பட்டு வெட்டிய ஆழத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால், சுமார் நூறு அடி இருக்கும். இவன் முதலிலேயே இடம் விட்டு இடம் வெட்டாதிருந்தால், தண்ணீர் நிச்சயம் கிடைத்திருக்கும். மனத்திலே உறுதி இல்லாமல், முயற்சியும் இல்லாமல் செய்த செயலுக்குக் கிடைத்த பலன் என்ன? ஏமாற்றம் தான்! 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்!' என்பதற்கிணங்க அவன் பாடுபட்டிருந்தால், கைமேல் பலனை அடைந்திருப்பான். அவசரமும், ஆத்திரமும் உள்ளவர்களுக்கு எப்போதுமே பலன் கிடைக்காது. ஆகவே, இவன் நம்பிக்கைக் குறைவினாலே பயன் பெறாமல் போனான்.

• •

ஒரு நாள் பல மீனவப் பெண்கள் சேர்ந்துகொண்டு சந்தைக்குச் சென்றார்கள். அங்குத் தாங்கள் கொண்டு வந்த மீன்களை விற்று விட்டுத் திரும்பிக்கொண்டிருந்தார்கள். அப்போது இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. மழையும் பிடித்துக்கொண்டது.

மீனவப் பெண்கள் மழையில் நன்றாக நனைந்து விட்டார்கள். அவர்களால் மேலும் நடந்து போக முடியவில்லை. இரவு நேரம் வேறு. போகும் வழியில் ஒரு பூக்காரரர் வீடு இருந்தது. அந்தக் குடிசையில் போய் எல்லாரும் ஒதுங்கினார்கள். அந்தப் பூ வியாபாரி மிகவும் நல்லவர். அவர், குளிரில் நடுங்கும் மீனவப் பெண்களைப் பார்த்துப் பரிதாபப்பட்டார். தம் குடிசையில் உள்ள ஓர் இடத்தில் அவர்கள் படுத்துக் கொள்ள உதவி செய்தார்.

அந்த அறையில் நிறையப் பூக்கூடைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றிலிருந்து பூக்களின் நறுமணம் 'கமகம' வென வீசிக் கொண்டிருந்தது. அந்த அருமையான வாசனை மீனவப் பெண்களுக்குப் பிடிக்கவில்லை! அவர்கள் இடைவிடாமல் மீன் நாற்றத்தையே அனுபவித்துக் கொண்டிருந்தவர்களாதலால், பூ மணம் அவர்களுக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது! அதனால் அவர்களுக்குத் தூக்கம் வரவில்லை. பூ மணம், அவர்களைத் தூங்கவிடாமல், தூக்கத்தைக் கெடுத்துவிட்டதாம்!

அவர்களில் ஒரு கிழவி ஒரு யோசனை சொன்னாள். "இந்தப் பூக்கூடை வாசனை நம்மைத் தூங்கவிடாது. ஆகவே, நாம் தூங்க வேண்டுமானால் அதற்கு ஒரு வழி இருக்கிறது" என்று புதிர் போட்டாள். "என்ன? என்ன?" என்று அனைவரும் கிழவியைச் சொல்லும்படி வற்புறுத்தினர்.

"நம்முடைய மீன் கூடைகளை நமது முகங்களுக்கு முன்னே வைத்துக் கொண்டால், அவற்றிலுள்ள மீன் வாசனையே நமக்கு வந்து கொண்டிருக்கும். அதற்கு முன் பூ வாசனை செல்லாக்காசாகி விடும்" என்றாள் கிழவி.

"ஆமாம். இதுவே நல்ல யோசனை!" என்று அனைவரும் தங்கள் தங்கள் மீன் கூடைகளை முகத்துக்கு முன்னே வைத்துக் கொண்டு படுத்துக் கொண்டார்கள். பிறகு அவர்களுக்கு நிம்மதியான தூக்கம் வந்ததாம் !

இதிலிருந்து என்ன தெரிகிறது?

ஒவ்வொருவருக்கும் எதில் அதிகப் பழக்கமிருக்கிறதோ, அதிலேயே அவர்கள் முழுத் திருப்தியுடையவர்களாய் இருப்பார்கள்.

* * *

ஒரு துறவி பாதையின் ஓரத்திலே, மிகுந்த பக்தியுடன் கண்களை மூடி உட்கார்ந்து கொண்டிருந்தார். அவ்வழியே ஒரு திருடன் வந்துகொண்டிருந்தான். அவன் அந்தத் துறவியைப் பார்த்துவிட்டு, "இங்குக் கண் மூடித் தூங்கும் இவன் ஒரு பக்காத் திருடன், நேற்றிரவு பல வீடுகளில் திருடியிருப்பான். அதனால் தூக்கம் இன்றிக் களைத்து வந்து இப்போது இங்கே உட்கார்ந்தபடியே தூங்குகிறான் போலிருக்கிறது! இங்கே இருந்தால் நம்மையும் காவலர் பிடித்துக் கொள்வார்கள் !" என்று அங்கு நில்லாமல் ஓடிவிட்டான்.

பிறகு, அந்த வழியே ஒரு குடிகாரன் வந்தான். அவன் துறவியைப் பார்த்தான். "அம்மாடியோ! இவன் ஒரு குடுவை நிறையக் கள்ளைக் குடித்துவிட்டு, இப்படி மயங்கிச் சாக்கடையோரத்தில் சாய்ந்து கிடக்கிறான். நான் கூடத்தான் குடித்திருக்கிறேன். இவனைப்போலவா மயங்கிக் கீழே விழுந்து கிடக்கிறேன்? நான் இவனைப்போல உறுதியில்லாமல் இப்படித் தெருவிலே விழுந்து விட மாட்டேன்" என்று பெருமையாக எண்ணிக் கொண்டு அவரை ஏளனமாகப் பார்த்துக்கொண்டே சென்றான்.





கடைசியாக, ஒரு துறவி அந்த வழியே வந்தார். கண்களை மூடி அமைதியாக உட்கார்ந்திருக்கும் துறவியைப் பார்த்தார். உடனே வந்தவர் அவரது காலடியில் விழுந்து வணங்கினார். தம்மை விட அவர் ஒரு சிறந்த துறவி என்று எண்ணி அவரை வழி பட்டுச் சென்றார்.

இதனால், நமக்குத் தெரியும் உண்மை என்ன? மனிதன் எந்தப் பொருளையும், அவன் அவன் இயல்புக்குத் தக்கபடிதான் மதித்துக் கொள்வான்.

* * *

ஒரு கிராமத்திலே ஒரு மடம் இருந்தது. அதில் பல துறவிகள் வசித்துவந்தார்கள். அவர்கள் நாள்தோறும் வீடு வீடாகச் சென்று உணவு கேட்பது வழக்கம். அதன்படி, அவர்களுள் ஒரு துறவி உணவுக்காகத் தெருவில் போய்க் கொண்டிருந்தார்.

அப்போது அந்தத் தெருவிலிருந்த ஒரு பணக்காரர், ஒரு ஏழையைப் பலமாக அடித்துக் கொண்டிருந்தார். துறவி மிகுந்த இரக்க குணம் உள்ளவர். அவர் மனம் உருகி, உடனே அந்தப் பணக்காரரிடம் சென்று ''ஐயா! இந்த ஏழையை அடிக்க வேண்டாம் விட்டு விடுங்கள்!'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். ஆனால் அந்த ஆணவக்காரரோ அவரைக் கோபத்துடன் பார்த்து ''உனக்கு இந்த ஏழையின் மீது அவ்வளவு இரக்கமாயிருந்தால், அவன் தாங்கிக்கொள்ள வேண்டிய அடியை நீ தாங்கிக் கொள்ளேன் பார்க்கலாம்!'' என்று சொல்லி மேலும் துறவியை அடி அடியென்று அடித்தான்.

பாவம்! — துறவி அடியின் வேதனையைப் பொறுக்க முடியாமல் பேச்சு மூச்சு இல்லாமல் கீழே விழுந்துவிட்டார். அவருடைய பரிதாப நிலையைப் பார்த்த ஒருவர், மடத்துக்கு விரைந்து சென்று நடந்ததைச் சொன்னார்.

உடனே, அங்கிருந்த மற்றவர்களெல்லாரும் பதைபதைப்புடன் ஓடி வந்து, அடிபட்ட சாமியாரை மடத்துக்குத் தூக்கிக் கொண்டு வந்தனர். நெடு நேரம் வரை அவருக்கு மயக்கம் தெளியவில்லை. அதனால் எல்லாரும் வருத்தம் மிகுந்தவர்களாய்க் காணப்பட்டனர். பிறகு, துறவிக்குக் கொஞ்சம் கொஞ்சமாக நினைவு வந்தது. அவர் கண்களைத் திறந்து எல்லாரையும் பார்த்தார்.

அப்போது, அவர் அங்கிருக்கும் மற்றவர்களை யார் யாரென்று தெரிந்து கொள்கின்றாரா என்பதை அறிய விரும்பி, அவருக்கு மயக்கம் தெளிவித்த ஒருவர், அவர் முகத்தைப் பார்த்து, ''ஐயா! தங்கள் மயக்கத்தைத் தெளிவித்தவன் யாரென்று தங்களுக்குத் தெரிகிறதா?'' என்று கேட்டார்.

அதற்கு அவர் மெல்லிய குரலில், ''சகோதரனே! என்னை அடித்தவனே எனக்கு மயக்கம் தெளிவித்தான்..!'' என்று மறுமொழி கூறினார். உடனே அங்கிருந்தவர்கள் இதைக் கேட்டு வியந்தனர்.

இவர், பகைவனையும் நண்பனாகக் கருதும் உயர்ந்த எண்ணத்தை உணர்ந்து அனைவரும் பாராட்டினர். அவர் மனம் தெளிந்தவராதலால், தன்னை அடித்தவனும் நண்பனே என்ற சமத்துவ நிலை அவருக்கு உண்டாயிற்று. 'பகைவனை நேசி' என்று ஏசு கூறவில்லையா என்ன?

## வெண்பாப் போட்டி-49.

ஈற்றடி : நிலத்தை நிறைத்ததே நெல்

முடிவு நாள் : 2—1—1973.

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
'தமிழரசு' அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு:

அஞ்சல் அட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.





சந்துரு வயது 5. 'துருதுரு' வென்று துடிப்பாக இயங்கும் இந்தச் சிறுவன் சென்னை அடையாற்றிலுள்ள "லிட்டில் ஆப் சர்வீஸ்" சிறுவர் அனாதை இல்லத்தைச் சேர்ந்தவன்.

அவனையொத்த சிறார்களுக்குக் கிடைக்காத அரிய வாய்ப்பு அவனுக்குச் சென்ற திங்கள் 30-ஆம் நாள் கிட்டியது. அவனும் அந்த இல்லத்தைச் சேர்ந்த 6 வயது சரோஜா, 8 வயது கிட்டி பாபுவும் தமிழ்நாடு அரசு நடத்தும் தாம்பரம் அனாதை இல்லத்தைச் சேர்ந்த 5 வயது கோபாலகிருஷ்ணன், 8 வயது லதா ஆகியோரும் சென்னையிலிருந்து விமானம் மூலம் டெல்லியில் நடைபெறும் 'ஆசியா 72' பொருட் காட்சியைக் காண அழைத்துச் செல்லப்பட்டனர். கடந்த நவம்பர் 30-ஆம் நாளன்று இந்த ஏற்பாட்டினைத் தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்புத் துறை செய்து தந்தது. அவர்கள் விமானத்தில் சென்று வரவும், டெல்லியில் நான்கு நாட்கள் தங்கி 'ஆசியா 72'-ஐக் கண்டு களிக்கவும், ஆன செலவினைச் செக்கஸ்லாவாகியா நாட்டில் பிராக் நகரிலுள்ள 'ஆர்ட்சென்டர்' என்ற கலாச்சார நிறுவனம் ஏற்றுக்கொண்டது.

இவர்களுக்கு மட்டும் ஏன் இந்தத் தனி வாய்ப்பு? 'ஆசியா 72' பொருட்காட்சியினை ஏற்பாடு செய்தவர்கள் இந்தியாவைப் பற்றி இந்தியா '72 என்ற தலைப்பில் நமது நாட்டின் 25-ஆம் ஆண்டு முன்னேற்றத்தினைப் படம் தயாரிக்க விரும்பினார்கள். அதன் பொறுப்பு செக்கஸ்லாவாகியாவைச் சேர்ந்த 'ஆர்ட் சென்டர்' என்ற நிறுவனத்திடமும், அகமதாபாத்தைச் சேர்ந்த 'நேஷனல் டிசைன் சென்டர்' என்ற நிறுவனத்திடமும் ஒப்படைக்கப்பட்டது. இந்த இரு நிறுவனங்களும் சேர்ந்து கூட்டாக இதனைத் தயாரித்தனர்.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் நடைபெற்றது என்றாலும், பெரும் பகுதி, அதாவது சுமார் 60 சதவிகிதம் தமிழ் நாட்டில் நடைபெற்றது. அதுவும் குறிப்பாக மாமல்லபுரம் கடற்கரையில் பெரும்பாலான படப் பிடிப்பு நடந்தது.

இந்தப் படத்தின் கதாநாயகன் ஒரு அனாதைச் சிறுவன். யாருமில்லாத அனாதையாகக் கடற்கரையில் திரியும் அவனை, மற்றச் சிறுவர்கள், அழைத்துச் சென்று அவன் அனாதை அல்ல, அவனைப் பராமரிக்கப் பாதுகாக்க அகன்ற பெரிய நாடும், நாட்டு மக்களும் உள்ளனர்; அதன் பண்பு, கலை, கலாச்சாரம், தொழில் வளம், இயற்கை வளம் எப்படிப்பட்டது என்பதினை எடுத்துக் காட்டுகின்றனர்.

இதில் நடிப்பதற்குத் தொழில் முறை நடிகர்களில்லாமல், உண்மையிலேயே அனாதையான சிறுவர்கள் தேவை என்று விரும்பிக் கேட்டார் செக் நாட்டு ஆர்ட் சென்டரைச் சேர்ந்த பேராசிரியர் ஜரோஸ்லாப் ஃபிரிக். அவர் விருப்பப்படி, அடையாறு, தாம்பரம் ஆகிய பகுதிகளிலுள்ள இந்த அனாதை இல்லத்திலிருந்து சில சிறுவர்-சிறுமிகளை அனுப்ப, செய்தி. மக்கள் தொடர்புத் துறை ஏற்பாடு செய்தது.

துடிப்பும் சுட்டிகையுமாக வுள்ள சந்துருவையும், இந்த 4 சிறுவர் சிறுமிகளையும் தேர்ந்தெடுத்தார் பேராசிரியர்.

இந்தப் படம் 'ஆசியா 72' பொருட்காட்சியில் காட்டப்படுகின்றது. அதனைக் கண்டு மகிழ்வதற்குத்தான் சந்துருவும், அவனுடன் பங்கு பெற்ற இந்த சிறுவர், சிறுமியரும் டெல்லிக்கு அழைத்துச் செல்லப் பட்டனர். இரு அனாதை இல்லங்களின் கண்காணிப்பாளர்களும், செய்தித் துறை அலுவலர் ஒருவரும் உடன் சென்றனர்.

முப்பது நிமிடம் ஓடும் இந்தப் படத்திற்காக 33,000 அடி நீளமுள்ள படச் சுருளும் 30,000 சிலைடுகளும் பயன்படுத்தப்படுகின்றன.

புதிய யுக்தியைக் கையாண்டு இதற்கான பிரத்தியேகத் திரை அரங்கில் படம் காட்டுகின்றனர்.

ஒரே சமயத்தில் 2 திரையில் படம் ஓடுகின்றது. அந்தத்திரைகளைச் சுற்றியுள்ள திரைகளில் 16 சிலைடுகள் காட்டப்படுகின்றன. சிலைடுகளும் படம் சம்பந்தப்பட்டதாகயிருக்கும். எடுத்துக் காட்டாகப், படத்தில் நடனம் ஆடும் காட்சி வந்தால், நடனத்திற்கான சலங்கை, உடையலங்காரம் போன்றவை சிலைடுகள் மூலம் காட்டப்படும்.

இதற்காகக் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பல்வேறு இடங்களில் மொத்தம் 80,000 அடி நீளமுள்ள படச் சுருளில் படம் எடுத்தனர் இந்த நிறுவனத்தார்.

இந்தப் படத்தினைப் பார்க்க, ஒரு ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. நாள்தோறும் சுமார் ஆயிரம் பேர்கள் இதனைக் கண்டு களித்து வருகின்றனர். பொருட்காட்சி முடியும் முன் சுமார் ஒன்றரை இலட்சம் பேர் இதனைக் கண்டு களிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

படத்தையும், பொருட்காட்சியையும் டெல்லி மாநகரைக் கண்டு களித்த சிறுவன் சந்துரு தனது நண்பர்களுடன்— ஆசிரியைகளுடன் டிசம்பர் 5-ஆம்நாள் சென்னை வந்து சேர்ந்தான். அவனைப் பொறுத்த வரை அடையாற்றிலிருந்து ஆசியா-72 சென்று வந்த பயணம் மறக்க முடியாத மகிழ்வான நிகழ்ச்சியாகும். இன்னும் இது போன்ற பல நிகழ்ச்சிகள் அவனது வாழ்வில் நிகழ இது ஒரு நல்ல முன்னோடியாகும்.



ஆசியா '72
தமிழக அரங்கம்

"தமிழ்நாடு அரங்கம், தமிழர்களின் தொன்மைச் சிறப்பு மிக்க பண்பாட்டையும், அண்மைக் காலத்தில் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள மனநிறைவூட்டும் தொழில் வளர்ச்சியையும் படம் பிடித்துக் காட்டுகின்றன".

—பருவா,
பீகார் மாநில ஆளுநர்.

• • •

"வட நாட்டினராகிய நாங்கள் இந்தியக் கலாச்சாரத்தைச் சிறப்பாகத் தெற்கில்தான் காண முடிந்தது. தமிழ்நாடு எங்களுக்குப் பலவற்றை கொடுக்கிறது. தமிழ்நாட்டுக் கலைஞர்களின் திறமை ஈடு இணையற்றது.

—நிட்டிராஜ் சிங்,
தொழில்
மற்றும் நிதி அமைச்சர்,
புது டெல்லி.


இந்த இதழுடன் இலவச இணைப்பு.

வெண்மைப் புரட்சியும் நீலப் புரட்சியும்

அடுத்த இதழுடன் இலவச இணைப்புகள்.

① கல்வி வளர்ப்போம்!

② மரநாட்காட்டி!




# ஆசியா 72 பொருட்காட்சியால் நம் நாட்டுக்கு ஏற்படும் நன்மை என்ன?

நவம்பர் திங்கள் 3-ஆம் நாள் மூன்றுவது ஆசிய வணிக பொருட்காட்சியைத் தலைமையமைச்சர் திருமதி இந்திராகாந்தி துவக்கி வைத்தது, உலக வணிக வரைபடத்தில் இந்தியா இடம் பெறச் செய்வதற்கான முக்கிய நடவடிக்கையாகும்.

ஆசிய, தூரக் கிழக்கு நாடுகளுக்கான பொருளாதாரக் குழு மூன்று ஆண்டுக்கு ஒரு முறை இந்த வணிகப் பொருட் காட்சியை நடத்துகிறது. வட்டாரப் பொருளாதாரக் கூட்டுறவிற்கு உதவும் ஒரு முக்கிய சாதனமாகக் கருதப்படும் இந்த வணிகப் பொருட்காட்சி, ஒரு தனி நிறுவனம் போன்றதாகும். இப்போது இந்தியாவில் நடைபெறுவது மூன்றுவது ஆசியப் வணிகப் பொருட்காட்சியாகும். இதற்கு முன்னர் இரண்டு பொருட் காட்சிகள் பேங்காங்கிலும், டெஹிரானிலும் நடைபெற்றன.

இந்தப் பொருட்காட்சியில் ஏராளமான ஆசிய நாடுகளும், ஆறு கண்டங்களிலிருந்தும் பல்வேறு நாடுகளும் வந்து கலந்து கொண்டுள்ளன. இந்நாடுகள் மொத்த உலக ஏற்றுமதி வணிகத்தில் 65 சதவீதப் பங்கினை பெற்றுள்ளனவாகும். மேலும் இவை யாவும் இந்தியாவின் முக்கிய வணிகப் பங்கு நாடுகளும் ஆகும். இந்திய ஏற்றுமதியில் சுமார் 55 சதவீதம் இந்நாடுகளுக்குச் செல்கின்றன. உடன் வளர்ந்து வரும் சில இலத்தீன் அமெரிக்க நாடுகளும், ஆப்பிரிக்க நாடுகளும் இப் பொருட்காட்சியில் பங்கு கொண்டிருப்பது ஒரு குறிப்பிடத் தக்க செய்தியாகும்.

பொருளாதாரக் கூட்டுறவின் மூலம் அமைதியும் முன்னேற்றமும் காண்பதே இப்பொருட் காட்சியின் குறிக்கோளாகும். இது முற்றும் பொருத்தமான ஒன்றாகும். மேலும், இந்திய விடுதலை வெள்ளி விழா ஆண்டாகிய இந்த ஆண்டின் சிறப்பினை இது மேம்படுத்துவதாக அமைந்துள்ளது.

பொருட்காட்சியில் இந்தியா, நெசவுத் தொழிலை தனது முக்கியப் பகுதியாகக் கொண்டுள்ளது. இந்தியாவில் நெசவுத் தொழில் ஒரு முக்கிய இடம் பெற்றிருப்பதோடு அல்லாமல் தமக்கு இதன் மூலம் கணிசமான அந்நியச் செலாவணியும் கிடைக்கிறது. பண்டைய பெருமை பொருந்திய இத் தொழிலின் பிரமிக்கத்தக்க பல்வேறு பகுதி பொருட் காட்சியில் இடம் பெற்றுள்ளன.

வளர்ந்துவரும் நாடுகளின் விழைவுகளைக் கருத்தில் கொண்டு இப்பொருட்காட்சியின் பயனை நாம் கணக்கிடவேண்டும். இத் நாடுகள் தமது பொருளாதாரத்தை நவீனமாக்குவதன் மூலம் சிறந்த வாழ்க்கைத் தரத்தைப் பெறும் நோக்குடன் கூடியன வாயுள்ளன. இவ்வாறு பொருளாதாரச் சார்புபெறும்போதே இந்நாடுகள் பெற்றிருக்கும் அரசியல் சுதந்தரம் அர்த்தமுள்ள தொன்றுகிறது. இந்தப் பொருளாதார வளர்ச்சி காண்பதில் வணிகம் ஆற்றக் கூடிய பங்கு மிக இன்றியமையாததாகும்.

பத்தாண்டின், வரவிருக்கும் ஆண்டுகளில் வளர்ந்து வரும் நாடுகள் தங்களது பொருளாதார வளர்ச்சியைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஏற்றுமதித் துறையில் வளர்ச்சி செய்வது மிக அவசியமாகும். ஆனால் விரிவடைந்து வரும் உலக ஏற்றுமதியில் முன்னேறிவரும் நாடுகளின் பங்கு அச்சுறுத்தும் வகையில் குறைந்து வருகிறது. உதாரணமாகச், சென்ற பத்தாண்டின் தொடக்க ஆண்டுகளில் மொத்த உலக ஏற்றுமதி வணிகத்தில் இந்நாடுகள் 25 சதவீதப் பங்கினைப் பெற்றிருந்தன. அண்மைக்காலத்தில் இது குறைந்து 17 சதவீதமாகக் இருக்கிறது. ஆகவே, இந்நாடுகள் இறக்குமதிகளைப் பெறுவதற்கும், கடனுதவிகளைத் திருப்புவதற்கும் தேவைப்படும் அந்நியச் செலாவணிக்கான தேவை வளர்ந்து வருகின்றது.

இந்நாடுகள் தமது வளர்ச்சி அனைத்து நாட்டுப் பொருளாதார உதவிகளை இனி எதிர்பார்க்கக் கூடாது. தமக்குத் தேவையான அந்நியச் செலாவணியை இந்நாடுகளே ஈட்டிக்கொள்ள வேண்டும்.

இதற்கான வழிகளில் முக்கியமானது நாடுகள் ஒன்றுக்கு ஒன்று ஒத்துழைப்பதேயாகும். நீண்ட காலமாகவே சில குறுகிய வழியிலான கொள்கைகள் காரணமாக

# அஞ்சலக சேமிப்பு வங்கி மூலம் சேமியுங்கள்!

- எந்த வங்கியும் இதுவரை அளிக்காத அளவுக்கு நடப்புக் கணக்கு— 4 சதவீத வட்டியுடன்
- வேண்டும்போதெல்லாம் பணம் எடுத்துக்கொள்ளலாம்; செலுத்தலாம்; எந்தத் தடையும் இல்லை
- காசோலை வசதிகள் உண்டு
- முற்றிலும் பாதுகாப்பு உடையது
- அஞ்சலகங்கள் அனைத்திலும் இந்த வசதி உண்டு

இப்போது சொல்லுங்கள் சேமிப்பதற்காக
அஞ்சலகச் சேமிப்பு வங்கியை
நான் தேர்ந்தெடுத்தது நியாயம்தானே!





ஆசிரியர், வெளியிடுபவர் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை, அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-2.



கண்கவர் வண்ணங்களில், எண்ணில் அடங்கா டிசைன்களில், சகாய விலையில், காஞ்சீபுரம பட்டுப்புடவைகளை தேர்ந்தெடுக்க சிறந்த இடம்

# கோ-ஆப்டெக்ஸ்

குறளகம், தி. நகர், லஸ், மற்றும் காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி.






வளர்ந்துவரும் நாடுகளிடையே கூட்டுறவு இல்லாமல் போயிற்று. இதனால் வளர்ந்து வரும் நாடுகள் ஒன்றையொன்று போட்டி நாடாகக் கருதி வந்தனவே யொழிய ஒன்றுக்கொன்று உதவிகள் புரிந்து முன்னேற முடியும் என்று நினைக்கவில்லை. அத்துடன் தமது தேவைகளுக்கு மேற்கத்திய நாடுகளை எதிர்நோக்கும் ஒரு மனோபாவமும் இருந்து வந்திருக்கிறது.

இந்நிலையில் வளர்ந்து வரும் நாடுகள் பலவும் பல்வேறு துறைகளிலும் அடைந்திருக்கும் வளர்ச்சியை மற்ற நாடுகள் அறிவதற்கான வாய்ப்பு இல்லாமல் போயிற்று. அதனால் தமது பொது இலக்கை அடைவதில் இந்நாடுகளிடையே ஓரளவு ஒத்துழைப்புக் காணப்பட்டது. இந்த மூன்றுவது ஆசிய வணிகப் பொருட்காட்சி வளர்ந்து வரும் நாடுகள் பல துறைகளிலும் அடைந்துள்ள முன்னேற்றத்தை மற்ற நாடுகள் அறிந்து கொள்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது. ஆகவே ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு வளர்வதற்கான வாய்ப்புகளும் இதன் மூலம் பெருகின்றன.

### தொழில் நுட்ப முன்னேற்றம்

இந்தக் கண்காட்சி மற்றொரு நல்ல பயனையும் அளிக்கக் கூடியதாகும். இதில் பங்கு பெறும் நாடுகளின் உயர்ந்த பட்ச தொழில் நுட்ப ஆற்றல் உலகின் பார்வைக்கு வைக்கப் படுகிறது. அதுபோது செய்யப்படும் விமர்சனத்தைக்கொண்டு வளர்ந்து வரும் நாடுகள் தங்களிடமுள்ள குற்றங்குறைகளையும், பலவீனத்தையும் நீக்கித் தம்மை வலுப்படுத்திக்கொள்வதற்கு ஓர் அரிய வாய்ப்புக் கிடைக்கிறது. உலகத் தொழிற் துறையில் அடையப்பட்டுள்ள முக்கிய நவீனத் தொழில்நுட்ப அம்சங்களையும்இக்கண்காட்சியின் மூலம் அறிய முடியும். வளர்ந்து வரும் நாடுகளின் ஏற்றுமதி அபிவிருத்தி முயற்சிகளுக்கு உள்ள ஒரு முக்கியத் தடை என்னவெனில் இந்நாடுகளுக்கும் முன்னேறிய நாடுகளுக்கும் தொழில் நுட்பத் துறையில் உள்ள இடைவெளியாகும். நமது பிரதமர் சரியாக வலியுறுத்தியுள்ளது போல் முன்னேறிய நாடுகளிலிருந்துதொழில் நுட்பத் திறனைப் பெறுவதோடு முன்னேறிவரும் நாடுகளிடையேயும் தொழில் நுட்பத் திறனை பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதன் மூலம் இந்த இடைவெளியை இட்டு நிரப்புவது வேண்டும்.

பல்வேறு துறைகளிலுமுள்ள நவீன தொழில் நுட்பத் திறனை சேர்த்து வைத்துக் காண்பதற்கான வசதியை ஏற்படுத்தித் தரும் இக்கண்காட்சி பங்கு பெறும் நாடுகளிடையே சமுகமான தொழில் நுட்பத்திறன் போக்குவரத்துக்கு வழிகோலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவைப் பொறுத்த வரை இது மிக முக்கியமான ஓர் அம்சமாகும். இந்தியா ஒரு ஏழை நாடாக இருந்தபோதிலும் தொழில் துறையில் நன்கு முன்னேறிய ஒரு நாடுமாகும். உலகிலுள்ள முக்கியத் தொழில் நாடுகள் பதினைந்தில் இந்தியாவும் இடம் பெற்றுள்ளது. ஆராய்ச்சி அபிவிருத்தி முயற்சிகளில் ஒன்றுபட்டு முன்னேறுவதற்கான புதிய வழிகளை இந்தக் கண்காட்சி ஏற்படுத்தித் தரும்.

> **ஆசியா 72 தமிழக அரங்கு**
>
> "நான் பார்த்த அரங்குகளில் சிறந்த ஒன்றாக விளங்குகிறது. இவ்வரங்கம் அழகாக விளங்குவதுடன் காட்சிப் பொருள்களைத் துல்லியமாக விளக்கும் அருங்காட்சியாகவும் அமைந்துள்ளது. கைவினைப் பொருள்களை விளக்கும் முதல் மாடி, உள்ளங் கவருவதாக உள்ளது. மொத்தத்தில் தமிழ் நாடு அரங்கம், தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை எடுத்துக் காட்டும் அட்டவணையாக விளங்குகிறது."
>
> — எ. கி. பானர்ஜி
> திருவாக இயக்குநர்,
> வாணிகமேம்பாட்டு
> அலுவலர் குழு,
> புது டெல்லி.

### கூட்டு முயற்சிகளுக்கு வாய்ப்புகள்

உலகில் ஏற்றுமதி வர்த்தகத்தை விரிவாக்க வர்த்தகக் கண்காட்சிகள் பெறும் பங்கின் முக்கியத்துவம் வளர்ந்து வருகிறது. பொருட்களின் பரிமாற்றத்திற்கு இந்தப் பொருட்காட்சிகள் வழி வகுக்கின்றன. 'ஆசியா 72' இவ்வகையில் வணிகர்களுக்கிடையே நெருங்கிய நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தி வாணிபத்தை பெருக்கும் என்று நம்பப்படுகிறது. கூட்டு முயற்சிகளில் ஒத்துழைப்பு வளர்ப்பதற்கும் இந்தப் பொருட்காட்சி உதவுகிறது. இந்தியா ஏற்கெனவே மலேயா சிங்கப்பூர், எத்தியோப்பியா முதலான நாடுகளில் கூட்டு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. இந்தியாவும், மற்ற வளர்ந்து வரும் நாடுகளும் பல்வேறு தொழில் துறைகளிலும் அடைந்துள்ள முன்னேற்றத்தை வெளிப்படுத்திக் காண்பிக்கும் இந்த வணிகப் பொருட் காட்சி புதிய கூட்டு முயற்சிகளுக்கான அடிப்படையை வகுப்பதற்கான வாய்ப்புகள்ஏராளமாக உள்ளன.

### நேரடிப் பயன்கள்

இந்தப் பொருட்காட்சியின் மூலம் இந்தியா மூன்று முக்கியப் பயன்களை நேரடியாகப்பெறுகிறது இதன் மூலம் நம் நாட்டுக்கு ஏறத்தாழ 8 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அனைத்து நாட்டு வணிகப் பொருட்சங்கத்தில் இந்தியா உறுப்பினர் தகுதியைப் பெற முடியும். இதற்கு வழிவகுக்கும் வகையில் இந்தியா நிரந்தரப் பொருட்காட்சித் தகுதியினைக் காட்டியுள்ளது. இந்த அனைத்துநாட்டு சங்கத்தில் உறுப்பு நாடாவதன் மூலம் ஓர் ஆண்டில் முறையாக ஐந்து பொருட்காட்சியினையும், ஒரு பொதுப் பொருட்காட்சியினையும் நடத்துவதற்கான வாய்ப்புகள் இந்தியாவுக்குக் கிடைக்கும். இதனால் இந்தியத் தயாரிப்பாளர்களும், வணிகர்களும் உலகத் தொழில்துறையின் புதிய வளர்ச்சிகளை நன்கு அறிந்து கொள்ள முடியும். மூன்றுவதாக இப்பொருட்காட்சியின் மூலம் இந்தியாவுக்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருவதற்கான வாய்ப்புகள் பெருகுகின்றன. இதுநமக்கு ஏராளமான அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தரக்கூடிய வாய்ப்பாகும்.

இவையனைத்தையும் விட இந்தப் பொருட்காட்சி தரும் அரும் பயன் ஒன்றுள்ளது. அது இந்தியர் தொழிற் துறையில் தாம் அடைந்துள்ள வளர்ச்சியை மற்ற நாடுகளோடு ஒப்பிட்டு உறுதி செய்துகொண்டு பொருளாதாரத் தன்னிறைவு அடைய மேற்கொள்ள வேண்டிய பணிகளைத் தெளிவாகக் காட்டுவதாகும்.

உலக வணிக உலகில் நமக்குக் கிடைக்க வேண்டிய வெற்றிகளுக்கான நம்பிக்கையை அளிப்பதுடன் புதிய முயற்சிகள் தொடங்கும் ஊக்கத்தையும் 'ஆசியா '72' பொருட்காட்சி நம் நாட்டுக்கு அளித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.


நல்லது கேட்கின் நலமுறச் சொல்வோம்!
இந்தியாவில் பசுமைப் புரட்சியில் தமிழகத்திற்கு முதலிடம்!
எல்லா
மாநிலங்களுக்கும்
வழிகாட்டியாக அமைந்துள்ள
மாநிலத் திட்டக்குழுவின் பணிகள்
எல்லாச்
சிற்றூர்களுக்கும்
சாலை
இணைப்புகள்!
இவைகளால் உருவாகும் பெரிது நாம் அமைத்திடும் அளவான குடும்பமே!
திட்டமிட்ட குடும்பமே நாட்டின் நலம் வளர்க்கும்!
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!
குடும்ப நலத்துறை, தமிழ்நாடு அரசு.